
சென்னை செங்கை மாவட்ட
செங்குந்த மகாசன சங்கம்

சைதாப்பேட்டை, சென்னை-15



கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901

பதினைந்தாம் ஆண்டு நிறைவு விழா மலர்



19ஆம் நூற்றாண்டின் மாபெரும் கொடை வள்ளல்
ராஜா சர்
சவலை இராமசாமி முதலியார் CIE

சென்னையின் முக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கிறவர் சென்னையின் அடையாளம் சவலை ராமசாமி முதலியார் 👑💥
இந்த
1870 களில் சவலை ராமசாமி முதலியார் பிரிட்டிஷ் ஆட்சி மெட்ராஸ் மாகாணத்தில் மக்களுக்கு உதவியாக இருந்த அறப் பணிகளுக்காக அறியப்பட்டவர்.

சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பார்க் டவுனிலும், திருக்கழுக்குன்றத்தில் சத்திரம் கட்டினார், அதில் வெளியூரிலிருந்து வருபவர்களுக்கு தேவையான அனைத்தையும் இலவசமாக செய்து கொடுத்தார்.

இந்திய நாட்டு பிரிட்டிஷ்காரர்கள் அடிமைப்பட்டு இருந்த காலத்தில் அடிப்படை சுகாதார நிலையம் கூட இல்லாத நிலையில் தனது சொந்த தொலைவில் இவரது முதல் மனைவி ராணி தையல் நாயகி அம்மாள் நிறைவாக மெட்ராஸ் ராயபுரம், திருப்பரங்குன்றம், கடலூர் மற்றும் காஞ்சிபுரம் என பல ஊர்களில் மருத்துவமனை கட்டி கொடுத்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் படிப்பறிவு இல்லாத மக்களுக்கு படிப்பு அறிவை வளர்க்க மெட்ராஸில் ஒரு பெரிய நூலகம் கட்டிக் கொடுத்தார்.

இவர் கடலூரில் குழந்தைகள் சிறப்பு பராமரிப்பு மருத்துவமனை ஒன்றை மக்களுக்காக கட்டிக் கொடுத்தார்.இவர் கட்டி கொடுத்த அனைத்து மருத்துவமனைகளும் இன்று அந்தந்த ஊர் நகராட்சி அமைப்புகளால் இயக்கப்படுகிறது.

1884 ஆம் ஆண்டு சவலை ராமசாமி முதலியார் அவர்களால் மெட்ராஸ் சென்ட்ரல் ரயில்நிலையம் எதிரில் ஒரு பெரிய சத்திரம் கட்டப்பட்டது. இந்த சத்திரம் 1967 ஆம் ஆண்டு வரை சிறப்பாக செயல்பட்டது. அதன்பின் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் ஏ ஜி மற்றும் ஓடி அமைப்புகளால் எடுக்கப்பட்டு தற்போது வரை சில மக்கள் சேவைகளை செய்து வருகிறது.

1902 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் மன்னர் எட்வர்ட் VII மற்றும் ராணி அலெக்ஸாண்ட்ரா ஆகியோரின் முடிசூட்டு விழாவில் மெட்ராஸ் நகரத்தின் பிரதிநிதியாக சவலை ராமசாமி முதலியார் தேர்வு செய்யப்பட்டார் லண்டன் மாநகருக்கு அழைப்பு விடுத்தனர். மன்னர் நோய்வாய்ப்பட்டபோது முடிசூட்டு விழா ஒத்திவைக்கப்பட்டது, பின்னர் அங்கிருந்து ஜுலை மாதம் சவலை ராமசாமி முதலியார் இந்தியாவுக்குத் திரும்பினார், அடுத்த மாதம் மீண்டும் திட்டமிட்டபடி முடிசூட்டு விழாவை மீண்டும் நடைபெற்றது விழாவில் ராஜா சர் சவலை ராமசாமி முதலியார் லண்டன் சென்று கலந்து கொண்டார்.



தென்னிந்தியாவுக்கு மின்சாரம் தரும் NLC நிறுவனத்தை உருவாக்கிய Rao Bahadur டி.எம். ஜம்புலிங்க முதலியார்

இவர் மீது மரியாதை உள்ளவர்களும், செங்குந்தர் சமுதாயத்தை ஒற்றுமை படுத நினைப்பவர்களும், இவர் நினைவு தினத்தன்று இவரின் போட்டோவுக்கு மாலை போட்டு உங்கள் ஊர் செங்குந்தர் சமுதாயத்தை கூட்டி மரியாதை செய்யவும்...

நெய்வேலியில் நிலக்கரி இருப்பதை கண்டுபிடித்து, நெய்வேலி நிலக்கரி சுரங்கங்கம் உருவாக காரணமாக இருந்து, நிறுவனம் உருவாக்க 620 ஏக்கர் நிலம் தானமாக கொடுத்தவர்தான் இந்த ஜம்புலிங்கம் முதலியார்.

1. கடலூர் மாவட்டத்தில் தாலுகா போர்டு மெம்பர் ஆக இருந்துள்ளார் ஒன்பது ஆண்டுகள்
2. கடலூர் மாவட்ட தாலுக்கா போர்டு தலைவராக 6 ஆண்டுகளும்
3. ஜில்லா போர்டு மெம்பர் ஆக மூன்று ஆண்டுகளும்
4. ஜில்லா போர்டு தலைவராக மூன்று ஆண்டுகளும் பதவி வகித்தார்
5. கடலூர் நகராட்சியில் நகர மன்ற உறுப்பினராக மூன்று ஆண்டுகளும் நகர மன்ற தலைவராக மூன்று ஆண்டுகளும்
6. நெல்லிக்குப்பத்தில் பேரூராட்சி தலைவராக 20 ஆண்டுகள் பணிபுரிந்தார் இவை அனைத்தும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிகள்
7. இவரின் நேர்மையான மக்கள் பணியை பாராட்டும் வகையில் ஆங்கிலேய அரசு ராவ் பகதூர்(Rao Bagadhur) பட்டம் கொடுத்தது.

குற்றப் பரம்பரைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மதுரை பிரமலைக் கள்ளர், வேம்பூர் பறையர் மக்களை தென்னார்க்காடு மாவட்டத்தில் அசிஸ் நகர் செட்டிலெமென்ட் என்று உருவாக்கி ஆங்கிலேய அரசு இந்த மக்களை கொடுமைப்படுத்தியது. குற்றப்பரம்பரைச் சட்டத்தில் கைதாகி அசிஸ் நகர் செட்டிலெமென்ட்யில் அடைக்கப்பட்டு இருந்த மக்களுக்கு அடிப்படை வசதி, உணவு கூட இல்லாமல் இருந்த நிலையில் ஜம்புலிங்கம் முதலியார் அங்கு சென்று அவர்களுக்குத் தேவையான அடிப்படை உணவு மற்றும் வசதிகளை செய்து தந்தார்.

தென் ஆற்காடு மாவட்ட படையாட்சி வன்னியர் சமூகத்தின் மீதி போடப்பட்ட குற்றப்பரம்பரை சட்டத்தை எதிர்த்து கடுமையாக போராடி இந்த சட்டத்தை திரும்பப் பெற வைத்தார் ஜம்புலிங்க முதலியார்

சென்னை-செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம்

(துவக்கம் : 1972 - பதிவு எண் 10/1978)

76, கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை 15

ஆ. செல்வராசு,
6, பிள்ளையார் கோயில் தெரு,
மீனாட்சிப்பேட்டை,
குறிஞ்சிப்பாடி - 607 302

பதினைந்தாம் ஆண்டு நிறைவு விழா மலர்

வெளியீட்ட நாள் - 15-5-1988

தொகுப்பாசிரியர்

A. V. இராமநாதன், M.A.,

(பொருளாளர், சென்னை - செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம்)

பொருளடக்கம்

பொருளடக்கம்

புரவலர்கள்

தெரிவித்துக் கொள்கிறேன். இத் தொகை தமிழ்நாடு டிரான்ஸ்போர்ட் டெவலப்மென்ட் பைனான்ஸ் கார்ப்பொரேஷனில் நிரந்தர வைப்பு நிதியாகப் போடப்பட்டுள்ளது.

மலர் மலர்ந்தது ஏன்?

மேற்படி சாதனையை நம் குலப் பெருமக்களுக்கு தெரிவிக்கக் கருதி, பணம் எவர் எவர் கொடுத்து உதவினார்கள் என்ற விவரங்களை ஒரு மலரில் வெளியிடலாம் என்று எண்ணினேன். பெயர்களை மட்டும் பட்டியலாக வெளியிட்டால் மலர் நிறைவு பெறாது என்கிற காரணத்தினால், நம் சமூகத்தில் தோன்றிய புலவர் பெருமக்கள், நம் சமூக மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட நம் குலச் சான்றோர்கள், நம் குலத் தியாகச் செம்மல்கள் முதலியோர் வரலாறுகளையும் செங்குந்த மரபின் சிறப்புகளையும், செங்குந்தர் குல திலகம் புலவர் பேரரசர் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் நூல்களைப் பற்றியும் இம்மலரில் சேர்க்கலாம் என்று எண்ணினேன். இந்த எண்ணத்தின் உந்துதலால்தான் இம்மலர் மலர்ந்தது!

மலரின் இதழ்கள்

எண்ணியாங்கு மலரை உருவாக்குவதில் செயற்பட்டேன். முதன் முதலில் தமிழ்ப் பெரும் புலவர் தமிழ்ச் சான்றோர் திரு. மு.ரா. பெருமாள் முதலியார் B.A. (Hons) L.T. அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து அவரது வரலாற்றை (சுய சரிதத்தை) எழுதிக் கொடுக்கும்படி வேண்டினேன். அவருக்கு உடல்நலம் குன்றி இருப்பதால், அவரைப்பற்றி வேறு ஒருவரை எழுதச் சொல்லி அதனை எனக்கு அனுப்பி வைப்பதாகச் சொன்னார்கள். அதன்படியே புலவர் இ. கோமதி நாயகம் அவர்கள் அவரைப்பற்றி எழுதிய கட்டுரையை எனக்கு அனுப்பி வைத்தார்கள். பிறகு ஒளி அகம் ந.ரா ஆடலரசு அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். தான் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளைப் பற்றி எழுதிக் கொடுப்பதாகவும், மற்றும் டாக்டர் வை. இரத்தின சபாபதி Vidwan B.O.L., M.A. Ph. D. அவர்கள் செங்குந்தகுல ஒளிவிளக்கு ஞானியார் சுவாமிகளின் மாணாக்கர்களில் ஒருவர், அதனால் அவரை ஞானியார் சுவாமிகளைப் பற்றி எழுதச் சொல்லலாம் என்றும் சிவத்திரு கா.சி. தனக்கோடி M.A., Er. மு.பெ. சத்தியவேல்முருகன் பி.இ. முதலியோர் பெயர்களைச் சொல்லி அவர்களின் முகவரிகளையும் கொடுத்து அவர்களையும் அணுகுங்கள் என்று பயனுள்ள யோசனையைக் கூறினார். நான் எடுத்துக் கொண்ட பணிக்கு உதவியாக தக்க சமயத்தில் தக்க யோசனையைச் சொன்னார். தற்போது தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் வித்துவான் திரு. அம்பை இரா. சங்கரனார் அவர்கட்கு கடிதம் எழுதினேன். இப்புலவர் பெருமகனார் அன்பு கூர்ந்து புலவர் எஸ்.கே. இராமராசன் (கம்பராமன்) கவிஞர் ந.கந்தசாமி முதலியவர்களிடமிருந்து கட்டுரைகள் வாங்கி அனுப்பியதோடு மட்டும் அல்லாமல், தானும் வண்ணக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முனிவரைப்பற்றி கட்டுரை எழுதி அனுப்பினார். நான் எடுத்துக் கொண்ட பணிக்கு திரு. ஆடலரசைப் போன்று இவரும் உதவினார். தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கல்விச் சங்கத் தலைவர் திரு. ஆர்.என். சந்தான ராஜ கோபால செங்குந்தர் பெருமுயற்சியால், பொதுச் செயலர் திரு. ச.கு.பா.பழநிவேலு, புலவர் இரா. சண்முகவடிவேல், எம்.ஏ. பி.எட்., புலவர் மாணிக்க கணபதி எம்.ஏ,. பி.ஓ.எல். பி.எட். முதலியோர் எழுதிய கட்டுரைகள் எனக்கு எளிதில் கிடைத்தன. பல் துறைப் புத்தகங்களை எழுதிக் குவிக்கும் திரு. எஸ்.டி. சம்பந்தம் (எழுத்தாளர் உலகில் இவர் வெறும் ''சம்பந்தம்'') என்னை நேரில் வந்து சந்தித்து தான் எழுதிய கட்டுரைகளை என்னிடம் கொடுத்தார்! டாக்டர் கவிஞர் மன்னர்மன்னன் அவர்களை தன் தந்தையார் பாவேந்தர் பாரதிதாசனைப் பற்றியும், பேராசிரியை க. இராஜேஸ்வரி, அம்மையாரை அவர் தந்தை திரு. மா.பா.கந்தசாமி முதலியார், பி.ஏ. பி.இ. அவர்களைப்பற்றியும், திரு. இ.சி. முனுசாமி முதலியார் பி.ஏ. சி.ஏ. ஐஜபி. அவர்களை அவர் தமையனார் திரு. இ.சி. சங்கர் பி.ஏ. (ஹான்ஸ்) அவர்களைப் பற்றியும் ஐ.ஐ.பி. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ. எம்.லிட்., பி.எச்.டி. அவர்களை நம் அருமைத் தலைவர் பத்மஸ்ரீ எம்.பி. நாச்சிமுத்து முதலியார், பி.ஏ. பி.எல். அவர்களைப் பற்றியும், Er. எஸ். தியாகராஜன் பி.ஈ. அவர்களை ஒரு தொழில் அதிபரைப் பற்றியும், புலவர் ஆ.வீரபாகு அவர்களை நிலக்கரி கண்ட நெடுந்தகைச் செல்வரைப் பற்றியும், திரு பி.எஸ். சாம்பசிவம் அவர்களை அவருடைய மைத்துனர் திரு. எம்.பி. புனிதவேலு முதலியார் அவர்களைப் பற்றியும், Er. என். முத்துக்குமார சாமி, பி.ஏ. பி.இ. சி.இ. ஹானர்ஸ், எப்.ஐ.இ. (Ind). அவர்களை அவருடைய மாமனார் புதுவை அ.வெ. முத்தைய முதலியார் அவர்களைப் பற்றியும், திரு. எம்.என். வேதாசலம், பி.ஏ. அவர்களை அவர் தந்தையார் திருமுக்கலார் நடேச முதலியார் பற்றியும், திரு. எம்.பி. பாண்டுரங்கம், எல்.ஈ.ஈ. அவர்களை அவர் தந்தை திரு. எம்.கே. பாலசுந்தரம் அவர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டிக் கொண்டேன். அனைவரும் என் விருப்பத்திற்கிணங்க கட்டுரைகள் எழுதித்

மலர் வாயில்

A. V. இராமநாதன், M.A.
(சங்கப் பொருளாளர்)

சங்கமும் கல்வி நிதியும்

சென்னை-செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம் 26-3-1972 அன்று திருமயிலை அருள்மிகு வெள்ளீசுவரர் ஆலயத்திலுள்ள திருமண மண்டபத்தில் அமரர் திரு. தி.அ. சண்முக முதலியார் (அந்நாள் தலைமைச் சங்கப் பிரசாரகர்) தலைமையிலும், அமரர் திரு. காஞ்சி மணிமொழியார் முன்னிலையிலும் துவக்கப்பட்டது. இப் பெரியார்கள் இருவரும் அந்நாள் தலைமைச் சங்கத் தூண்களாக விளங்கியவர்கள். நமது சங்கம் ஆரம்பித்து 15 ஆண்டுகள் முடிந்துவிட்டன. இத் தருணம் இச்சங்கத்திற்கு வாலிபப் பருவத்தின் நுழை வாயில்! இந்த 15 ஆண்டுகளில் நம் சமூக பெருமக்களிடமிருந்து அவர்களது இல்லத் திருமணங்களின் போதும் மற்ற மங்கள நிகழ்ச்சிகளின் போதும் 30-9-1987 வரை, ரூ. 1,01,225- கல்வி நிதிக்காக வசூலிக்கப்பட்டது. கல்வி நிதி ஒரு இலக்கத்தைத் தாண்டிய சாதனை நான் சங்கத்தின் பொருளாளராக ஆனபின் ஏற்பட்டது என்பதனை அடக்க உணர்வுடன்

காங்கிரசில் இருந்து பிரிந்து சுபாஷ் சந்திரபோஸ் ஆரம்பித்த ''ஃபார்வேர்டு பிளாக்'' என்ற கட்சியில் சேர்ந்தார்.

இதற்கிடையில் 1937 ல் ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் ஆட்சி அமைத்த போது, முதல் அமைச்சரான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாருக்கு ஒரு நிகழ்ச்சியைக் கொடுக்க வேண்டும் எனக் கருதி அவரை அழைத்து வந்து தன்னுடைய வீட்டுக்கு 'காந்தி பீக்' என்ற பெயர் வைக்கும்படி அய்யாச்சாமி முதலியார் அவர்கள் ஏற்பாடு செய்தார். பிறகு ஃபார்வேர்டு பிளாக்கில் சுபாஷுடன் இணைந்த பிற்பாடு, போஸ் இந்தியாவை விட்டுப் புறப்படும் முன்பு சென்னைக்கு வந்து 'காந்தி பீக்' கில் ஒருவார காலம் தங்கியிருந்து, ஒருநாள் மாலை மெரினா கடற்கரையில் இட்லர் இரண்டாவது உலக யுத்தத்தை ஆரம்பித்து விட்டார் என்று சென்னை நகர மக்களுக்குச் சொல்லி விட்டு மறைந்துவிட்டார். திரு. அய்யாச்சாமி முதலியார் தனக்குப் பணி புரிந்த தொண்டனுக்கு தன் சொத்தில் ஒரு பங்கு கொடுத்து தன் மக்களுக்குச் சமமாக நடத்தி இருக்கின்றார் என்பதை நோக்கினால் அவருடைய பெருந்தன்மை தெரியவரும்.

அதுவுமல்லாமல், எனது மாமனாரின் மாமனார் திரு டி.பி. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் ஆங்கிலத்திலும் இன்னும் பதினொரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். 1937 க்கு முன்பு 'வேல்ஸ் இளவரசர்' சென்னை வந்த போது அவருக்கு இலத்தீன் மொழியில் கவிதை இயற்றி வரவேற்பளித்தார். அவருடைய கல்வியின் தரத்தை எடுத்துக் கூற, நம்மிடம் இருக்கும் உயர்திரு பெருமாள் முதலியார் போன்றவர்களால் தான் இயலும். கிருஷ்ணசாமி முதலியார் ஆரம்பத்தில் மாவட்டக் கல்வி அதிகாரி (டி.இ.ஓ) யாக இருந்து பிறகு சென்னை மாநிலக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்து, அதன் பிறகு அனந்தப்பூர் கல்லூரியின் பிரின்சிபாலாக இருந்தார். அப்போது ஆங்கிலத்தில் வல்லுநர்கள் அவரைப் போற்றி மதிப்படைந்தார்கள். அவர் ஆத்திச்சூடி கொன்றை வேந்தன், நாலடியார் முதலிய தமிழ்க் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகம் வெளியிட்டு இருக்கிறது. ஆனால் பிரதிகள் இப்போது கிடைப்பதில்லை.

மேலும், உயர்திரு எம்.எம். தணிகைமலை முதலியார் மாமனார் காஞ்சிபுரம் திரு. அருணாசல முதலியார் அவர்கள் சமூகத்தில் உள்ள நல்ல குடும்பங்கள் ஒன்று சேர வேண்டுமென்ற ஆவல் கொண்டவர். இம்மாதிரி ஆவல் கொண்ட பெருந்தகையாளர்களை இப்போது காண்பது அரிது.

இவைகளை எல்லாம் நான் எடுத்துச் சொல்லக் காரணம் மேற்கூறிய பெரியவர்கள் தேசிய உணர்வுடன் சமுதாய உணர்வுடனும் இருந்தார்கள். மேலும் பெருந்தலைவர்களுடன் ஈடுபாடு கொள்ள முடிந்தது. சமுதாய உணர்வு மாத்திரம் இருந்தால் அவர்கள் கிணற்றுத் தவளைகளாகத் தான் இருக்க முடியும். சமுதாய உணர்வு சமுதாயத்தில் நலிந்த பிரிவினரை முன்னுக்குக் கொண்டு வர இருக்க வேண்டுமேயொழிய தனித்து இயங்குவதாக இருக்கக் கூடாது. நெசவுத் தொழிலைப் பெரும்பான்மையாகக் கொண்ட சமுதாயத்தினர் அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளச் சில விதி முறைகளைக் கடைப் பிடிக்க வேண்டும். ஒன்று புலனடக்கம். இதனால் அவர்கள் குடும்பத்தில் மார்க்கண்டேயன் போன்ற பிள்ளைகள் ஏற்படுவார்கள். இரண்டாவது ''அளவறிந்து வாழ்தல்''. மூன்றாவது இன்றைய சூழ் நிலையில் எவ்வளவுக்கெவ்வளவு அவர்கள் கைத்தறியை விட்டு விலகி வேறு தொழிலுக்குச் செல்ல முடியுமோ, அந்த அளவுக்கு அவர்கள் தங்களைப் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும். ஆதியில் ஒரு சமுதாயத்திற்கு உணவும் அச்சமுதாயத்தின் மானத்தைக் காக்க உடையும் கொடுத்து வந்த மக்கள் அதே தொழிலைச் செய்து கொண்டு இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. சமுதாயம் எந்நேரமும் சுறுசுறுப்பாக இயங்கி வர வேண்டும். இதைத்தான் காலஞ் சென்ற ஜவகர்லால் நேரு அவர்கள். ஒரு சமுதாயம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்றால் அது டைனமிக்காக (Dynamic) இருக்க வேண்டும் என்று சொல்லி வந்திருக்கிறார்கள். கைத்தறி ஆடைகளின் உற்பத்தி குறைந்தால், அவைகளின் விலை ஏற்றம் ஏற்பட்டு அவைகளை உற்பத்தி செய்பவர்கள் வருமானம் அதிகமாகும். அப்போது, நெசவுத் தொழிலைத் தவிர வேறு தொழிலில் ஈடுபட முடியாதவர்கள், அந்தத் தொழிலில் இருந்து கொண்டு அதிக வருமானம் பெற்று அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும். நான்காவது, பெரும்பாலான மக்கள் அர்த்தமற்ற செலவுகள் செய்து வருகிறார்கள். ஒரு பெண் பூப்பெய்தி அதற்காகச் செலவு செய்வது

ஓரளவிற்கு மன நிம்மதியுடன் வாழும் அளவிற்கு இருந்து வருகிறது. ''காதலன் ஒருவனைக் கைப் பிடித்தே அவன் காரியம் யாவிலும் கைகொடுத்து மாதரறங்கள் பழமையைக் காட்டிலும், மாட்சி பெறச் செய்து வாழ்வோமடி' என்ற பாரதியின் வாக்கு மாதர் அறங்கள் முன்னாளில் இருந்தன என்றும் அது இடையில் மாட்சி இழந்தது என்றும், அது மறுபடியும் மாட்சி பெற வேண்டும் என்பதும்தான். பெண் விடுதலை பற்றி அதிக அளவில் பாடிய அந்தக் கவி 'பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லை என்றால், பின் இந்த உலகினில் வாழ்க்கை இல்லை'' ''மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வம் என்றால், மனையாளும் தெய்வம் அன்றோ?'' என்ற கேள்வியை எழுப்பி, ''பெண்டாட்டிதனை அடிமைப்படுத்த வேண்டி, பெண் இனத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?'' என்ற மற்றொரு வினாவினையும் எழுப்பி, 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற ஔவையாரின் வாக்கை ஞாபகப் படுத்தி, தாய்க்கு மேல் இங்கோர் தெய்வம் உண்டோ, தாய் பெண்ணேயல்லவோ? தமக்கை, தங்கை வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணேயன்றோ! மனைவி ஒருத்தியை அடிமைப் படுத்த வேண்டித் தாய்க் குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ? என்று கேட்கின்றார். பெண்மை அடிமையுற்றால், மக்கள் எல்லாம் அடிமையுறுவதில் வியப்பில்லை. ஆகையால் ஒரு சமுதாயம் முன்னுக்கு வர பெண்கள் விடுதலை பல துறைகளில் தேவை. பெண்ணுக்கு விடுதலை என்ற பெயரில், பெண் ஏவல் செய்ய வேண்டும் என்பதில்லை.

கல்வியில் சிறந்த பெரியோர்கள் வாழ்க்கை வரலாற்றில் சில பெரியவர்களுடைய பெயர்கள் அச்சிடப்பட்டுள்ளன. இதில் கணித மேதை இராமானுஜத்தின் பெயரும், அமரர் ராஜாஜி அவர்கள் பெயரும் மற்றும் தமிழ் நாட்டிலும் பிற மாநிலங்ளிலும் கல்வியால் சிறந்தவர்கள் பெயர்களும் அச்சிடப் பட்டிருப்பது போற்றத் தக்கது. இந்த வகையில் 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்ற் வாக்கு என் ஞாபகத்திற்கு வந்து இரண்டு கற்றவர்களின் பெருமைகளைப் பற்றிய செய்தியை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

கணிதமேதை இராமானுஜம் பச்சயப்பன் கல்லூரியில் படித்தார். அப்போது அந்தக் கல்லூரியில் கணிதப் பேராசிரியராக இருந்தவர் என் மாமனார் காலஞ் சென்ற திரு. எஸ்.பி. ஸ்ரீராம் அவர்களுடைய பெரிய தகப்பனார் திரு. சிங்காரவேலு முதலியார் அவர்கள் ஆவார்கள். அப்போது ஆங்கிலப் பேராசிரியராக இருந்தவர் திரு. ஜே.ஆர். கன்னிங்ஹாம் என்ற ஆங்கிலேயர். இராமானுஜம் அவர்கள் கணிதத்தைத் தவிர்த்து, தத்துவப் பாடத்தில் 100 க்கு 10 மதிப்பெண்களும், கிரீக், ரோமானிய சரித்திரப் பாடங்களில் 15 முதல் 20 வரை மதிப்பெண்களும், ஆங்கிலத்தில் 25 மதிப்பெண்களும் பெற்றதனைப் பார்த்த ஆங்கிலப் பேராசியர் இராமானுஜத்தைப் பார்த்து, ''நீ சற்று முன்னேற்றமடைய முடியாதா? (Cant you improve) என்று கணிதப் பேராசிரியர் சிங்காரவேலு முதலியார் அவர்கள் முன்னிலையில் கேட்க, இராமானுஜத்தின் அறிவுக் கூர்மையைச் சரியாகப் புரிந்து கொண்ட கணிதப் பேராசிரியர், இராமானுஜத்தைப் பார்த்து, ''உனக்கு இங்கு பாராட்டுக் கிடைக்காது, நீ நேரடியாக கேம்பிரிட்ஜுடன் தொடர்பு கொள், ''என்று சொல்ல அதே போல் இராமானுஜம் கேம்பிரிட்ஜுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, அவருடைய மேதாவிலாசம் கேம்பிரிட்ஜில் மதிக்கப் பெற்று, இப்போதும் அவர் மனைவிக்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் உதவித் தோகையாகப் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்து வருகிறது. இதைப் பற்றி இந்துப் பத்திரிகை 1987 டிசம்பர் மாதத்தில் ஒரு கட்டுரை எழுதித் தலையங்கத்திலும் குறிப்பிட்டிருக்கிறது.

அதேபோல் சிங்காரவேலு முதலியார் அவர்களின் தம்பியும் என் மாமனாரின் தகப்பனாருமான எஸ்.பி. அய்யாச்சாமி முதலியார் அவர்களின் பெருந் தன்மையையும், நேர்மையையும் பாராட்டிக் காலஞ் சென்ற சக்கரவர்த்தி திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள், அவர் சேலத்தில் பணிபுரியும் போது, எஞ்ஜினியர் அய்யாச்சாமி முதலியார் அவர்களை அவருடன் ஒரு 'மெசானிக்' மெம்பராகச் சேர்த்துக் கொண்டார். எஞ்ஜினியர் அய்யாச்சாமி முதலியார் அவர்கள் பழுத்த தேசியவாதி. சென்னையில் தேசியவாதிகளுக்கு இடமில்லை என்றால், பைகிராப்ஃஸ்ட்ஸ் ரோடில் உள்ள எஞ்சினியர் அய்யாச்சாமி அவர்கள் வீட்டில்தான் கூட்டம் நடக்கும். அப்படி ஒரு கூட்டத்தை இந்தியக் குடியரசின் முதல் தலைவரான இராஜேந்திரப் பிரசாத் அவர்கள் நடத்தியிருக்கிறார். பிறகு பட்டாபி சீத்தாராமையாவுக்கும், சுபாஷ் சந்திர போசுக்கும் இந்திய தேசியக் காங்கிரசின் தலைமைப் பதவிக்குப் போட்டி ஏற்பட ''பட்டாபி சீத்தாராமையா தோல்வியுற்றது தன்னுடைய தோல்வி'' என மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். இது இன உணர்ச்சி காரணமாகச் சொல்லப்பட்டது என்று அறிந்த அய்யாச்சாமி அவர்கள்,

அணிந்துரை

நீதிபதி சாந்தா தங்கவேலு ராமலிங்கம்

சென்னை-செங்கை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் வெளியிடும் மலரை ஆராய்ந்து பார்த்ததில் பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்கள் எவ்வாறு தங்களை பல துறைகளிலும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்துடன் வெளியிடப் பட்டு இருப்பதாக எனக்குத் தோன்றிற்று. இதற்காகப் பொருளுதவி செய்த பெருமக்கள் பாராட்டுதலுக்கு உரியவர்கள் ஆவார்கள்.

இம் மலரில் பெரும்பாலும், சமூகத்தைச் சேர்ந்த புலவர் பெருமக்களின் வரலாறுகளும், அவர்கள் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகளைப் பற்றியும், தமிழில் புலமை பெறாவிட்டாலும் மற்ற விதங்களில் சமூகத்தில் முன்னுக்கு வந்த, சில பெரு மக்கள் சம்பந்தப் பட்ட சில குறிப்புகளும் காணப்படுகின்றன. ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு அச்சமூகத்தின் தாய் மொழியில் அவர்கள் புலமை பெற்றால் மட்டும் போதாது. நாட்டில் முன்னேற்றம் அடைந்த மற்ற சமுதாயங்களுக்குச் சமமாகத் தங்களை மேம்பாடு செய்து கொள்வதில் அவர்கள் அக்கறை காட்ட வேண்டும். ''பாழ் பட்ட பாரத தேசந் தன்னை வாழ்விக்க வந்த மகாத்மா'' என்று பாரதியார் பாடிய போது அவர் மனதில் பிற்பட்ட எல்லா சமுதாயங்களுக்கும் இருந்தன. ஆகையால்தான் 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்று பாடினார்.

பாரத சமுதாயம் பல பிற்பட்ட மற்றும் முற்பட்ட சமுதாயங்களையும் கொண்டுள்ளது. அது வாழ வேண்டும் என்றால் பிற்பட்ட சமுதாயங்களும் வாழ வேண்டும். அதற்கு முற்பட்ட சமுதாயங்கள் ஒத்துழைக்க வேண்டும். இதைத் தான் 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்று ஔவையார் சொல்லி இருக்கிறார். ஒரு மரம் வளர வேண்டுமென்றால், பட்டுப் போகின்ற கிளையை வெட்டி விட்டு செழிப்பாக இருக்கும் கிளைக்குத் தகுந்த ஆதாரம் கொடுக்க வேண்டும் என்பதே இதன் கருத்து.

தனிப்பட்ட மனிதன் பல துறைகளில் முன்னேற்றம் அடைய வேண்டும். அதனால் ஒரு குடும்பம் முன்னேற்றமடையும்; பல குடும்பங்கள் முன்னேற்றம் அடைந்தால், ஓர் ஊர் முன்னேற்றம் அடையும்; பல ஊர்கள் முன்னேற்றம் அடைந்தால் ஒரு நாடு முன்னேற்றம் அடையும். ''தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்'' என்றார் பாரதி. இதைக் கருத்தில் கொண்டுதான் அரசியல் சட்டத்தின் விதி 15 (4) உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த விதியின் கீழ் சமூகத் துறையிலும், கல்வித் துறையிலும் பிற்பட்ட வகுப்பினருக்கு, அரசு ஏதாவது ஒரு தனிச் சலுகை செய்வதால் அது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது ஆகாது என்று சொல்லப் பட்டிருக்கிறது.

பிற்பட்ட இந்த சமுதாயம் பெரும்பாலும் கல்வியில் தேர்ச்சி பெறாமல் இருக்கிறார்கள். இன்றைய நடைமுறையில் கல்வியில் முற்போக்கான சமுதாயம் என்று சொல்வதற்கு ஒரு சமுதாயம், தாய் மொழியில் தேர்ச்சி பெற்றால் மட்டும் போதாது, ஆங்கிலத்திலும் மற்றும் இந்தியிலும் தேர்ச்சி பெற்றால்தான், முன்னுக்கு வர முடியும், இதை மனதில் கொண்டு பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த இந்த சமுதாய மக்கள் தங்கள் பழைய பெருமைகளை எடுத்துக் கூறி, வாளாவிருக்காமல் முன்னுக்கு வந்த பிற சமுதாயங்கள் எப்படி வந்திருக்கின்றன என்பதைக் கருத்தில் கொண்டு நடந்து கொள்ள வேண்டும். இந்த சமுதாயம் பெரும்பாலும் பிற்போக்கு அடைந்ததற்கு காரணம், பெண்களுக்கு சம உரிமை கொடுக்கத் தவறியதோடு அல்லாமல், பெண்களின் கல்வியையே புறக்கணித்துவிட்டதன் காரணமாகத்தான் என்று சொல்லலாம். 'தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை' என்ற ஒரு பழமொழி என் ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு சமுதாயம் முன்னுக்கு வரவேண்டியதற்குப் பெண்கள் தான் காரணம் என்பதோடு அல்லாமல், இந்நாட்டுப் பெண்களின் மனோதத்துவத்தால்தான் இந்நாடு

சென்னை செங்கை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்
15-ஆம் ஆண்டு நிறைவு விழா

வாழ்த்துப்பா

திருச்சிற்றம்பலம்

சீர்வளருஞ் சென்னைசெங் கற்பட் டுள்ள
செங்குந்தப் பெருமக்கள் கண்ட சங்கம்

சீருடனே பத்தோடு ஐந்தாம் ஆண்டைச்
செம்மையுடன் கடந்திட்ட இந்நன் னாளில்

பேர்வளருஞ் செங்குந்தர்க் குழைத்து உயர்ந்த
பெரியோர்கள் அனைவரையும் புகழ்ந்து ஏத்தி

ஆர்வமுடன் அவர்களுக்குப் புகழாம் மாலை
அன்புகூர்ந் தணிவித்தே உயர்ந்த தம்மா!

ஒற்றுமைக்கே எடுத்துக் காட்டாய்
ஓங்கியே வளர்ந்த சங்கம்

அற்றைநாள் தொட்டு வந்த
அருந்தமிழ்க் குந்தர்க் கெல்லாம்

பெற்றநற் றாய்போ ன்ின்று
பெருமைகள் பலவும் செய்து

பெற்றநற் பேற்றைக் கண்டே
பெரிதுளம் மகிழும் அம்மா.

பூமாலை அணிவித்தால் பொழுதில் வாடும்
தன்மைத்தாம் திறங்கண்ட சங்கம் நல்ல

பாமாலை புனைந்தேத்திப் புலவர் யாத்த
பா நலனை யுலகுணர்த்தப் போந்ததின்று

நாமகளும் பூமகளும் இதனைக் கண்டு
நன்றுநன்று எனவாழ்த்த நயந்(து) உவந்த

மாமாலின் திருத்தங்கை மாகாளித் தாய்
மனம்மகிழ்ந்தே வாழ்கவென அருள்செய்வாளே.

அருட்கவி **க. கணேசன்**

தந்தார்கள். யார் யாரைப் பற்றி எழுதினால் கட்டுரைகள் சிறக்குமோ, அவர்களை நேரில் சந்தித்தோ கடிதங்கள் மூலமாகவோ எனது வேண்டுகோளை விடுத்தேன்.

டாக்டர் குமார பத்மநாபன், எம்.ஏ. பி.டி. பி.எச்.டி. அவர்கள் கூத்தரின் மூவர் உலாவைப் பற்றி எழுதிக் கொடுத்ததுமல்லாமல், சில கட்டுரைகளை தமிழ்ப் பேரா சிரியர் என்ற முறையில் திருத்திக் கொடுத்தார். தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன சங்கத் தலைவர் திரு. ஆர்.என். சந்தான ராஜகோபாலன், பொதுச் செயலர் ச.குபா. பழநிவேலு இவர்களின் அனுமதியின் பேரில் தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன சங்கம் வெள்ளி விழா மலரில் வெளி வந்துள்ள சில கட்டுரைகளை (தில்லையாடி வள்ளியம்மை), செங்குந்தர் மரபு விளக்கம், காஞ்சி புராணமும் செங்குந்த மரபினரும்) இம்மலரில் சேர்த்திருக்கிறேன். இம்மலரில் 63 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவைகளை எழுதித் தந்த கைம்மாறு கருதாத புலவர் பெருமக்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலே குறிப்பிடப் பட்டுள்ள கட்டுரையாளர்கள் அனைவரும் இம்மலரின் இதழ்கள்!

மலர் வெளியிடுவதற்கு வேண்டிய பணத்தை எப்படிப் பெறுவது என்ற பிரச் சினை எழுந்தது. 19-7-87 அன்று நடந்த நம் சங்க செயற்குழு கூட்டத்தில், இம்மலரை வெளியிடலாம் என்றும் 1000 பிரதிகளை அச்சிட்டு வெளியிடும் செலவுகளை நம் சமூக மக்களிடமிருந்து விளம்பரங்கள் வாங்கி ஈடுகட்டலாம் என்றும் சங்கப் பணத்திலிரு ந்து எதுவும் செலவிடக்கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டது. எனவே கட்டுரை சேர்ப்பது

மலர் அச்சிட தேவையான பணம்

பணம் சேர்ப்பது என்ற இரு முனைகளில் செயல்பட வேண்டிய நிலை எனக்கு எற்பட்டது. விளம்பரங்கள் சேகரிக்க ஈடுபட்டேன். முதன் முதலாகத் திரு. Dr. ஆர். கோபிநாத், M.A.B.L. Ph.D. ரூ. 75-ம், திரு. பி. இரத்தினவேலு, (சின்னி) ரூ. 1301-ம், கொடுத்தார்கள். ஆரம்பம் மிக நன்று என்று மகிழ்வுற்றேன். திருமயிலை திரு. P.S. சாம்பசிவம், திரு. எம்.பி. பாண்டுரங்கம், திரு. எம். உமாபதி, திருமழிசை, Dr. டி.கே. தேவ ராஜன், திரு. பி. சம்பத், திருநாகேஸ்வரம், திரு. எம். ஆர். ஜீவரத்தின செங்குந்தர் இவர்களது பேருதவியால் ரூ. 36,368/- வசூலித்துள்ளேன். விளம்பரங்கள், வாழ்த்துக்களுடன், பணம் கொடுத்த நம் சமூகப் பெருமக்களுக்கும், பணம் வசூலிப்பதற்கு எனக்கு உறுதுணையாயிருந்த மேற்சொன்னநண்பர்கள் அனைவருக்கும் என் சிரம் தாழ்த்தி கைகூப்பி வணங்கி நன்றி செலுத்தக் கடமைப்பட்டவன் ஆவேன்.

இம்மலருக்கு மாண்புமிகு நீதி அரசர் எஸ்.டி. இராமலிங்கம், பி.ஏ.பி.எல். அவர் களும் திரு. வி. சங்கர சுப்பையன், ஐ.ஏ.எஸ். அவர்களும் திரு.டாக்டர் சி. பால சுப்பிர

அணிந்துரை நல்கியோர்

மணியன், M.A., M.Litt.,Ph. D. அவர்களும் அணிந்துரை நல்கியிருக்கிறார் கள். அருட்கவி க. கணேசன் அவர்கள் வாழ்த்துப்பா படைத்திருக்கின் றார். இவர்களுக்கு என் உளம் கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கையாக்குகின்றேன்.

இம்மலர் அச்சிடப்படும் தருவாயில் பிழைதிருத்தம் செய்ய அளிக்கப்பட்ட பிரதிகள் அனைத்தையும் சரிபார்த்து உதவியவர் திருமயிலை பி.எஸ். சாம்பசிவம் அவர்கள். என் உழைப்பும் அவரது ஒத்துழைப்பும் கொண்டதுதான் இம்மலர். அவரது கைவண்ணம் இம்மலர் முழுவதும் ஊடுருவி இருக்கின்றது. அவருக்கு என் நன்றி உரித்தாகுக.

இம்மலரை நல்ல முறையில் அச்சிட்டுத்தந்த திருமயிலை ராமகிருஷ்ண மடம் சாலையிலுள்ள ரெக்ஸ் பிரிண்டர்ஸ் அச்சகத்தாருக்கும், இம் மலரை வெளியிடுவதற்கு தமக்குச் சொந்தமான ஜெய கௌரி கல்யாண மண்டபத்தை இலவசமாகத் தந்து வேண்டிய ஏற்பாடுகளையும் செய்து உதவிய திரு. பி. பழனியப்ப முதலியார் அவர்களுக் கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மயிலை திரு. பி. இரத்தினவேலு செங்குந்தர் (சின்னி), அவரது மனைவி திருமதி. பரமேஸ்வரி அம்மையார் இருவரும் மனமுவந்து மலர் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்

வள்ளல் தம்பதிகள்

ளும் அனைவருக்கும் பகல் உணவு அளிப்பதற்கும், கட்டுரைகள் வழங்கிய அறிஞர்கள் அனைவருக்கும் பொன்னாடை அணிவிப்பதற்கும் உண்டான செலவை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த வள்ளல் தம்பதிகளை எப்படிப் போற்றுவது!

இம்மலர் பிரதிகள் எல்லா எழுத்தாளர்களுக்கும், விளம்பரங்கள் கொடுத்து உதவிய பேரன்பர்கள் அனைவருக்கும் இலவசமாகக் கொடுக்கப்படும். மற்ற நம் சமூகப் பெருமக்கள் அருள் கூர்ந்து ரூபாய் பத்து அன்பளிப்பாகக் கொடுத்து இம்மலரைப்பெற்றுக் கொள்ளலாம். (ஒரு மலரின் அடக்கவிலை ரூ.30 ஆகிறது)

செங்குந்தகுலப் பெருமக்களே, இனி மலர் உங்கள் கைவசம். மலரின் உட்புகுந்து உலாவந்து மலரின் மணத்தை நுகருங்கள்!

மதிப்புரை

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
பேராசிரியர், தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்
பல்லைக்கழக இணைவகம் சென்னை-600 005.

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே—வாளோடு
முன்தோன்றி மூத்தகுடி''

என்று தமிழ்க் குடியின் பழமையினைப் பாராட்டிப் பேசுவார் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் சேரன் ஐயனாரிதனார். தமிழ்க்குடியில் பழமையான புகழ்மிக்க குடி செங்குந்தருடையதாகும். தமிழ்த் தெய்வமாம் சுப்பிரமணியர் மரபில் வந்த வீரவாகு பரம்பரையினர் செங்குந்தர் எனப்படுதலின், செங்குந்தர் மரபு உபசுப்பிரமணிய மரபு என்றும் கூறப்பட்டது. 'அந்தி சந்தி சபம் மறவாதவர் செங்குந்தர்கள்' என்ற தொடரும், சிவபூசையினை வழிவழியாக மேற்கொண்டு வருபவர்கள் என்ற சிறப்பும் இம் மரபினர்க்கு உண்டு. செங்குந்தரைக் குறிக்கும் பிறிதோர் சொல் கைக்கோளர் என்பதாகும். 'கை' என்றால் ஒழுக்கம். 'கொள்' என்னும் வினையடியிலிருந்து 'கோள்' என்னும் பெயர் அமைந்து, நல்லொழுக்கத்தைக் கோட்பாடாகக் கொண்டு வாழ்பவர்கள் 'கைக்கோளர்' எனப்பட்டனர். வரலாற்றுப் பழமையும் பெருமையும் மிக்க இச் செங்குந்தர் இனம் வழிவழி நெசவுத் தொழிலிலும், தமிழ் கற்பிக்கும் ஆசிரியத் தொழிலிலும் ஈடுபட்டிருந்ததோடு, சோழப் பேரரசர் காலத்தில் படையிலும் பாங்காகப் பெரும் பங்கு கொண்டிருந்தது. ''தெரிஞ்ச கைக்கோளப் படை'' என்ற கல்வெட்டுத் தொடர் செங்குந்தர்படை தூசிப் படை, முன்னணிப் படை (Front-ranking army) என்பதனை உணர்த்தும். 'கைக்கோளன் இல்லாத ஊரில் கவிபாடு'' என்ற பழமொழி, செங்குந்தர்கள் கவிதைத் துறையில் பெற்றிருந்த தலைமைக்குத் தனிச் சான்று பகர்வதாகும். அடுத்து, 'கவிராட்சதன்' என்றும், 'கௌடப் புலவன்' என்றும், 'கவிச் சக்கரவர்த்தி என்றும் பல்வேறு சிறப்புத் தொடர்களால் பாராட்டப் பெறும் செங்குந்த குலச்செம்மல் ஒட்டக்கூத்தர், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய முப்பெரும் சோழ வேந்தர்கள் ஆட்சிக் காலத்தில் ஆசாரியராய், அவைக் களப் புலவராய்ச் சிறப்புறக் கொலுவீற்றிருந்தவரல்லவா? இரட்டைப் புலவர்கள் செங்குந்தர்கள் அல்லரோ? இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சமயத் துறவி - சொற்பொழிவாளர் திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகள், இன்றும் நம்மிடையே நாளும் தமிழால் தமிழிசையால், தமிழ்க் கூத்தால் நற்றமிழ் பரப்பி வரும் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் நம்மவர் என்று சொல்லிக் கொள்வதில் நம் நெஞ்சு நிமிர்கின்றதன்றோ?

சென்னை-செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம் 1972 ஆம் ஆண்டில் தொடக்கம் கண்டது. செங்குந்தர் நிறைந்திருக்கும் சென்னை சைதாப்பேட்டை கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெருவில் தொடங்கப்பெற்ற இச் சங்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றது. எல்லாரும் உவக்கத்திறம்படச் செயலாற்றி வருகின்றது. இவ்வாறு பயனுறு பணிகளை ஆற்றிவரும் இச்சங்கம் என்றும் வாடாத இனிய மணம் பரப்பும் மலர் ஒன்றினை நம் பெருமதிப்பிற்குரிய திரு. ஏ.வி. இராமநாத செங்குந்தர் அவர்களின் தீவிர உழைப்பின் பயனாய் வெளியிட்டுள்ளது.

மலரின் தொடக்கத்திலேயே சங்கச் செயல்முறைகள், குறிக்கோள்கள், நோக்கங்கள் முதலியன இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பக்கத்தில் இந்த நூற்றாண்டின் இணையிலாக் கவிஞனாக வாழ்ந்து மறைந்த புதுவைப் புரட்சிக் குயில் பாவேந்தர் பாரதிதாசனாரின் ''சங்கங்கள்'' என்னும் கவிதை மலர்ந்துள்ளது. ''தாய் தந்தையர் மண்ணில் தாம்பெற்ற பிள்ளைகள் சங்கத்திற்கென்றே என்ற நேயத்தினால் மிக்க நேயத்தினால் நித்தம் வளர்க்க! ''நற்புத்தி புகட்டுக'' என்று அவர் பாடியுள்ளது நமக்குப் பாடமாக அமையவேண்டுவதாகும்.

பாவேந்தர் பாரதிதாசனைப் பற்றி மன்னர் மன்னன் அவர்கள் நன்கு விளக்கி யுள்ளமை நெஞ்சில் நிறுத்த வேண்டியதாகும்.

'செங்குந்தர் பிரபந்தத் திரட்டு' என்ற நூலை 1926 ஆம் ஆண்டில் வள்ளல் சபாபதி முதலியாரும் அவர் தம் இளவல் கல்யாணசுந்தர முதலியார் அவர்களும் இணைந்து வெளியிட்டுள்ள நிகழ்ச்சியும், 1915 ஆம் ஆண்டில் 'செங்குந்த ஜாதி நூல் கோவை' பொன். குமாரசாமி முதலியார் அவர்களால் வெளியிடப் பெற்ற நிகழ்ச்சியும் இம்மலரில் குறிப்பிடப்பட்டுள்ள அரிய செய்திகள்.

பெரும் புலவர்கள் கல்வி வல்லுநர்கள், பொறியியல் வல்லுநர்கள், கைத்தறிக் காவலர்கள், சமயச் சான்றோர், பேராசிரியர்கள், இலக்கிய - இலக்கண சைவ சித்தாந் தப் புலவர்கள் நாடு, இனம், மொழிக்குத் தம்மைத் தியாகம் செய்து பெரியோர்கள் ஆகிய நம் இனப் பெருமக்களைப் பற்றி இம்மலரில் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறியிருப்பது இனத்தைச் சார்ந்த இளைஞர்கள் மேலும் ஊக்கமும் உற்சாகமும் கொள்ள வழிகாட்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

'கல்வெட்டில் கைக்கோளர்' என்னும் தலைப்பில் திரு. பி.டி. பாலாஜி அவர்கள் நம்மினத்தைச் சார்ந்தவர்கள் பழங்காலத்தில் படைவீரர்களாக விளங்கிய தன்மையைத் தக்க கல்வெட்டுச் சான்றுகளுடன் நிறுவியுள்ளார். எந்தெந்தக் கல்வெட்டுக்களில் நம்ம வரைப்பற்றிய குறிப்பு இருக்கிறது என்பதை அவர் தொகுத்துச் சுட்டியுள்ளது பாராட்டற் பாலது; போற்றிக் காத்தற்குரியது.

அன்றியும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் பத்து நாயன்மார்கள் நம்மினத்தைச் சார்ந்தவர் என்று எண்ணும் போது என் உள்ளம் உண்மையிலேயே பெரிதும் பூரிப் படைகிறது. இதனைத் திரு. எஸ்.டி. சம்பந்தம் அவர்கள் நன்கு எடுத்துக் காட்டி யுள்ளார்.

'நமது கோயில்கள்' என்னும் கட்டுரை நம்மினத்தைச் சார்ந்த பெருமக்கள் எத் துணை கோயில் களைக் கட்டி எவ்வளவு பெரிய சமுதாயத் தொண்டு புரிந்துள்ளனர் என் பதை நமக்கு நன்கு விளக்கிக் கூறுகிறது.

வாழ்க்கைக்கு இன்றியமையாத பல நல்ல வழிகளும் அறிவுரைகளும், பழமொழி களும் பொன்மொழிகளும் கூறப்பட்டுள்ள 'வாழ்க்கை நெறி' எனும் தொகுப்பு மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. இது இளைஞர்களுக்கு முன்னேற வழிகாட்டும் என்பது என் உறுதியான கருத்து.

மொத்தத்தில் இம்மலர் அரியதும் அழகியதுமான ஒன்று. சங்கப் பொருளாளர் A.V. இராமநாதன் அவர்கள் நம்குல எழுத்தாளப் பேரறிஞர்கள் பலரை அணுகி அவர் களிடமிருந்து கட்டுரைகளை வாங்கி இம்மலரில் வெளியிட்டுள்ளார். இவரது சீரிய முயற்சி பாராட்டுதற்குறியது.

வளர்க நம்மவர்கள் பணிகள்! வாழ்க நம் பெருமக்கள் தொண்டு!

அணிந்துரை

வே. சங்கரசுப்பையன், I. A. S.

1. சென்னை - செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம் 1972 ஆம் ஆண்டில் தோற்றம் பெற்று நல்ல முறையில் தன் பணியினைச் செய்து வருகிறது. இப்பொழுது இச்சங்கம் அழகிய மலர் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது பற்றி நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இச்சங்கத்தின் நோக்கங்கள், செயல் முறைகள் முதலியன இம்மலரில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. இம்மலரில் அறுபது கட்டுரைகள் உள்ளன. நானூறு பக்க அளவில் இம்மலர் அமைந்துள்ளது.

2. இச்சங்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து நண்பர் சரவண பழனிவேலு அவர்கள் விரிவாக விளக்கியுள்ளார். இந்தச் சங்கம் காலப் போக்கில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த விதத்தைப் பொ.க.சாமிநாதன் அவர்கள் தம் கட்டுரையில் மேலும் தெளிவாக்கியுள்ளார். இச்சங்கத்தின் ஆண்டு விழாக்கள் சீரிய முறையில் நடந்து முடிந்த சிறப்பு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. 'ஒட்டக்கூத்தரின் வாழ்வும் தொண்டும்' என்ற கட்டுரையில் கா.சி. தனக்கோடி அவர்கள் ஒட்டக்கூத்தரின் சிறப்பியல்புகளை நன்கு விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

3. பழங்காலத் தமிழகத்தில் வாழ்ந்த நம் இனத்தைச் சார்ந்த பெரும் புலவர்கள் யார் யார் என்பதை இம்மலர் சுட்டிக் காட்டியுள்ளது பாராட்டுதற்குரியது. கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர், தஞ்சை வாணன் கோவை பாடிய பொய்யா மொழிப் புலவர், படிக்காசுத் தம்பிரான், பகழிக் கூத்தர், இரட்டையர், காங்கேய முனிவர் சிதம்பர சுவாமிகள், கச்சியப்ப முனிவர், கோனேரியப்ப நாவலர், அருணாசல சுவாமிகள் போன்ற நம் இனப் புலவோர் பெயர்களுள் பல நம்மவர் பலருக்குத் தெரியாது. இம்மலர் மூலம் இத்துணை அறிவாற்றல் நிறைந்த சிறந்த பெரும் புலவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை எண்ணும் போது உண்மையிலேயே நாம் அனைவரும் மிக்க பெருமிதம் அடைய வேண்டிய நிலையில் இருக்கிறோம். இது மட்டுமன்றி, அண்மைக் காலத்திலும் சான்றோர் பலர் தோன்றிப் பல துறையிலும் நாட்டுக்கும் மொழிக்கும் இனத்திற்கும் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் தொண்டு செய்து வருகின்றனர் என்பதை இம்மலர் எடுத்துக் காட்டியுள்ளது அங்கை நெல்லியாகும். காட்டாக 'வண்ணக் களஞ்சியம்' காஞ்சி நாகலிங்க முனிவர், தவத்திரு ஞானியாரடிகள், பாவேந்தர் பாரதிதாசனார், சீர்த்தி மிகு செங்குந்தர் குலச் செம்மல் திரு. முருக. கிருபானந்த வாரியார், வழக்கறிஞர் பி.வி. நடராச முதலியார், புதுவை ஆ.வே. முத்தைய முதலியார், வைத்தியர் அண்ணாமலை முதலியார், திருப்பத்தூர் கா.அ. சண்முக முதலியார், வள்ளல் சபாபதியார், காஞ்சி மணிமொழியார், வி.இரத்தின முதலியார், கைத்தறிக் காவலர், பத்மஸ்ரீ எம்.பி. நாச்சி முத்து முதலியார், ஈ.சி. சங்கர் சைவ சித்தாந்தப் புலவர் க. வச்சிரவேல் முதலியார், தமிழ்ப் பெரும் புலவர், மு.ரா. பெருமாள் முதலியார், தில்லையாடி வள்ளியம்மை, தியாகி திருப்பூர்க் குமரன் ஆகியோரைப் பற்றித் தனித்தனியே விளக்கமாகக் கூறப்பட்டுள்ளமை மிகவும் போற்றுதற்குரியது. பலரும் அறிந்து பயன் பெறத்தக்கது மாகும்.


'செங்குந்தர்' பெயர்க்காரணத்தையும் மரபினையும் திரு. செ. தட்சிணாமூர்த்தி அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளார்.

தவத்திரு ஞானியாரடிகளின் பெருமை குறித்துச் சென்னைப் பல்கலைக் கழகச் சைவ சித்தாந்தப் பேராசிரியர் டாக்டர். திரு. வை. இரத்தின சபாபதி அவர்கள் விளக்கியிருப்பது மிக்க அருமையுடைத்து.


கைத்தறிக் காவலர் - அருமைத் தலைவர் எம்.பி. நாச்சி முத்து முதலியார் அவர்களின் அருமை பெருமைகளைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். திரு. சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார்.

ஆடம்பரமாக திருமணச் செலவுகள், ஆடம்பரமான வளைகாப்பு, பிணத்தைப் போற்றுவது முதலியன. ''பிணம் சிங்காரம் அறியாது'' என்று சொல்லிவிட்டு பிணத்தை சிங்காரிக்க ஆயிரக் கணக்கில் ரூபாயைச் செலவிடுகிறார்கள். இதில் முன்னேற்றம் அடைந்ததாக நாம் கருதிக் கொண்டிருக்கும் பிராமணர்களைப் பின் பற்றினால் மிகவும் நல்லது. அவர்கள் பிணத்தைப் போற்றுவது இல்லை. இறந்த 1½ நாழிகைக்குள் அதிவேகமாக அதை அடக்கம் செய்து விடுகிறார்கள். வேகமாக நடப்பவர்களைப் பார்த்து 'என்ன பிராமணப் பிணம் போல நடக்கிறாயே'' என்று கேட்கும் ஒரு வழக்கத்தை மனதில் கொள்ள வேண்டும். ஆரிய நாட்டின சீரிய முயற்சிகளில் ஒன்று ஆடம்பரமின்றிப் பிணத்தை அடக்கம் செய்வது. சீரிய முயற்சியற்ற ஒரு செயல் வரதட்சணை வாங்குவது. அதை மற்ற சமூகத்தினர்கள் கடைப் பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகையால் தான் 'வாழிய செந்தமிழ்' பாடிய பாரதி' ஆரிய நாட்டினர் செய்யும் சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக!'' என்றும் பாடினார், என்று சொல்லி, இந்தச் சமுதாயம் பல விதங்களில் முன்னேற்றம் அடைந்து எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந் நாட்டு மன்னர்' என்ற பாரதியின் கனவை நனவாக்க இந்த வெளியீடு ஒரு முன்னோடியாக அமையும் என்று சொல்லி, இதற்கு பொறுப்பேற்றுக் கொண்ட அனைவருக்கும் என்னுடைய நன்றியறிதலைச் சொல்லி, என்னுடைய அணிந்துரையை முடிக்கிறேன்.


கிரீன் வேஸ் சாலை
சென்னை-28
15-3-1988




P. K. சாமிநாதன், B. Com.
இணைச் செயலாளர்



K. பஞ்சாட்சாரம், M. Sc
துணைத் தலைவர்




S. நித்தியானந்தம்
துணைத் தலைவர்




S.R. சதாசிவம்
துணைத் தலைவர்

சென்னை செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம்


நிர்வாகக் குழுவினர்




S.D. பொன்னுசாமி
தலைவர்



T.S. கணேசன்
துணைத் தலைவர்



சரவண பழநிவேலு
செயலாளர்



A.V. இராமநாதன், M.A.
பொருளாளர்

(XX)

புனிதவேலு முதலியார் குறித்துத் திரு. பி.எஸ். சாம்பசிவம் அவர்களும், சம்பு லிங்க முதலியார் குறித்துப் புலவர் வீரவாகுவும், மு.ரா. பெருமாள் முதலியார் குறித்துப் புலவர் இ.கோமதி நாயகம் அவர்களும், எழுதியுள்ளார்.

'தியாகச் செம்மல்கள் பற்றிய நான் காம் பகுதியில் தில்லையாடி வள்ளி யம்மை, திருப்பூர்க் குமரன் பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. செங் குந்தர் மரபு விளக்கம், செங்குந்தர் நீதி முறை, காஞ்சிப் புராணமும் செங்குந்த மரபினரும், செங்குந்தரும் சைவசித்தாந் தமும், செங்குந்தரும் வீரசைவமும், செங்குந்தர் சிறப்பு முதலிய இன்னோ ரன்ன பயனுறு கட்டுரைகள் மலரிறுதி யில் இடம்பெற்றுள்ளன.

''இதனை இதனால் இவன் முடிக்கும்
என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்''

என்னும் குறளுக்கேற்பத் திரு. ஏ.வி. இராமநாதன் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்ட இப்பணி, குன்றின் மேலிட்ட விளக்காய் ஒளிவீசித் திகழ்கிறது. திரு. ஏ.வி.ஆர். செயற்கரிய செய்பவர்; நல்ல வர்; வல்லவர்; பிறர்க்கென வாழ்பவர். அவர் தொண்டு சிறப்பதாக. மலர் மலர்ந்து மணம் வீசுகின்றது.

சென்னை-செங்கை மாவட்டச் செங்குந்த மகாசன சங்கச் செயலாளர்—சுறுசுறுப்புக்குப் பெயர் போன திரு. சரவண பழநிவேலு அவர்கள் சங்கத்தின் 'தோற்றமும் வளர்ச்சியும்' குறித்த விரிவான விவரங்களைத் தந்துள்ளார். நம் சங்கத்தின் முன்னாள் தலைவர் மதிப்பிற்குரிய பெரியவர் மயிலை. பொ.சி. பாலசுப்பிரமணிய செங்குந்தர் அவர்கள் சங்கத்தின் முதல் பதினைந்து ஆண்டுகளை நினைவுகூர்கின்றார். சங்க வளர்ச்சிக்கு என்றும் உறுதுணையாக விளங்கும் திரு. பொ.க. சாமிநாதன் அவர்கள் ''என் உணர்வும் சங்கத் தொடர்பும்' என்ற தலைப்பில் தம் சீரிய உணர்வுகளுக்கு வடிவம் தந்துள்ளார். ஐந்தாவதாக அமைந்திருப்பது நாம் என்றென்றைக்கும் நினைவில் கொள்ளத்தக்க வகையில் உள்ள கட்டுரையாகும். சென்னை-செங்கை மாவட்டச் செங்குந்த மகாசன சங்கம் நடத்திய ஆண்டு விழாக்களில் தலைமை ஏற்றோர், வாழ்த்துரை வழங்கியோர் முதலிய விவரங்களைப் பெரியவர்—அரியவற்றையெல்லாம் எளிதில் முடிக்க வல்லவர்—திரு ஏ.வி. இராமநாதன் எம்.ஏ. அவர்கள் தந்துள்ளார்கள். இது பயனான பணியாகும். சங்கத்தின் பொருளாதார நிலை குறித்தும் இப் பெரியவரே ஒரு கட்டுரை வழங்கியிருக்கிறார். இவற்றோடு முற்பகுதி முடிவடைகிறது.

இரண்டாம் பகுதியினை இலக்கியப் பகுதி எனலாம். புலவர் பெருமக்கள் வாழ்வும் அவர்தம் படைப்பும் பற்றி அறிஞர் பெருமக்கள் எழுதியுள்ள கட்டுரைகள் இப்பகுதியினை அணிசெய்யக் காணலாம். ''கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் வாழ்வும் தொண்டும்'' குறித்து சிவத்திரு. கா. சி. தனக்கோடி அடிகள் அவர்கள் அழகியதொரு கட்டுரையினை அளித்துள்ளார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தொல்காப்பியப் பதிப்பு ஆய்வறிஞராகத் திகழும் நம்மவர் பலரும் ஏ.எஸ். என்ற சொல்லால் அன்புடனும் மதிப்புடனும் அழைக்கும் பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் உரையாசிரியர் ''தெய்வச் சிலையார்'' குறித்து ஆய்வு நுட்பம் சான்ற கட்டுரையினை வழங்கியுள்ளார். மேற்கு மாம்பலம் எஸ்.டி. சம்பந்தம் அவர்கள் ''படிக்காசுப் புலவர்'', ''இரட்டைப் புலவர்'' ஆகியோர் குறித்து எளிய இனிய தமிழில் இரு கட்டுரைகள் வடித்துள்ளார். வண்ணக் களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முனிவர் செங்குந்த மித்திரனை நிறுவியவர்; பேரறிஞர் வித்துவான் அம்பை சங்கரனார் அவரைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். தவத்திரு ஞானியாரடிகளைப் பற்றிச் சென்னைப் பல்கலைக் கழகச் சைவ சித்தாந்தத் துறைத் தலைவர்பேராசிரியர் வை. இரத்தினசபாபதி அவர்கள் சிந்தனைக்கு விருந்தாக ஒரு கட்டுரையினை ஆக்கி அளித்துள்ளார். நம்மினக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பற்றிய சில குறிப்புகளை அவர்தம் மகனார் கவிஞர் மன்னர்மன்னன் அவர்கள் தந்துள்ளார். 'கீர்த்திமிகு செங்குந்த குலச் செம்மல்' என்ற தலைவர் நம் வணக்கத்திற்குரிய வாரியார் சுவாமிகளைப் பற்றிப் புலவர் ந.ரா. ஆடலரசு கட்டுரை ஒன்று வழங்கியுள்ளார்.

மூன்றாவது பகுதி'' புரவலர்கள்' குறித்ததாகும். சிதம்பரம் காலைசந்திக் கட்டளை தில்லை நாயக முதலியார் குறித்துப் புலவர் அம்பை சங்கரனாரும் திரு. பி.வி. நடராச முதலியார், புதுவை ஆ.வே. முத்தைய முதலியார் குறித்து திரு. என். முத்துக்குமாரசுவாமி அவர்களும், வைத்தியர் அண்ணாமலை முதலியார் குறித்து டாக்டர் ஆர். கோபிநாத் அவர்களும், திருப்பத்தூர் கா.அ. சண்முக முதலியார் குறித்து, அறிவாற்றல் மிக்க தொழிலதிபர் திரு. எஸ். தியாகராசன் பி.ஈ. அவர்களும், திருவாரூர் வள்ளல் சபாபதி முதலியார் குறித்துப் புலவர் இரெ. சண்முகவடிவேல் அவர்களும், முக்கலார் நடேசமுதலியார் குறித்து, முக்கலார் எம்.என். வேதாசல செங்குந்தரும், பா. இரத்தினசபாபதி முதலியார் குறித்துப் புலவர் ஆ. வீரவாகு அவர்களும், அ. தட்சிணாமூர்த்தி முதலியார் குறித்துப் பேரறிஞர்அண்ணா அவர்களுடன் பழகிய மயிலை பி.எஸ். சாம்பசிவம் அவர்களும், காஞ்சி மணிமொழியார் குறித்து மலரின் தொகுப்பாசிரியரும், மா.பா. கந்தசாமி முதலியார் குறித்து ஆங்கிலப் பேராசிரியை க.இராசேசுவரி அம்மையார் அவர்களும், செங்குந்த இளைஞர் பலருக்கு வேலைதந்து கைதூக்கிவிட்ட வி. இரத்தினமுதலியார் குறித்துத் திரு ச.கு.பா. பழநிவேலு அவர்களும், மயிலைப்பெரியவர் எம்.கே. பாலசுந்தரமுதலியார் குறித்து அவர்தம் திருமகனார் எம்.பி. பாண்டுரங்கம் அவர்களும், சான்றோர் சம்பந்த மூர்த்தி முதலியார் குறித்துப் புலவர் மாணிக்க கணபதி அவர்களும், பத்மஸ்ரீஎம்.பி. நாச்சிமுத்து முதலியார் அவர்கள் குறித்து டாக்டர் சி.பா.வும், திரு ஈ.சி. சங்கர் குறித்துத் திரு. ஈ.சி. முனிசாமி முதலியார் அவர்களும், சைதைப் பெரியவர் வள்ளல்


சங்க வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தவர்கள் (தொடர்ச்சி)



ம. மு. தணிகைமலை,
புதுப்பாக்கம்,
உரிமையாளர், விசாலாட்சி
பதிப்பகம், சென்னை-14.



K.R. **ஆராவமுதன்,**
டைரக்டர். புளுமவுண்டன்
சிட்ஸ் பைனான்ஸ் (P)
லிமிடெட், சென்னை1.



P. கிருஷ்ணமூர்த்தி
திருநாகேஸ்வரம்.


அமரர் எம்.பி. புனிதவேலு முதலியார்.
அமரர்.ந.ரா.முருகவேள், எம்.ஏ.எம்.ஓ.எல்
அமரர் எம்.கே. பாலசுந்தர முதலியார்,
திரு. டி.எஸ். கன்னியப்ப முதலியார்,
திருமழிசை.
திரு. டி.எஸ். கணபதி முதலியார் ,,
திரு. டி.எஸ். சுந்தர வடிவேலு முதலியார்
திருமழிசை
திரு. வி. வேதகிரி முதலியார் ,,
திரு.டி.எஸ். சிவானந்த முதலியார், திரு
நாகேஸ்வரம்
திரு. எம்.வி. தேவராஜ முதலியார் ,
திரு. தி.நா. சம்பந்த முதலியார் ,,
திரு.டி. நடராஜ முதலியார் ,,
திரு.டி. நாகப்பன், ,,
திரு.டி.எஸ்.சுப்பிரமணிய முதலியார்,
மயிலை
திரு. எம்.டி. குப்புசாமி முதலியார் ,,
திரு.எம்.எஸ். நீலகண்டன், ,,
திரு. பி.பி. சதாசிவன். எம்.டி. ,,
திரு. கே.வி. வேல் முருகன், மயிலை
திரு. கே. தருமலிங்க முதலியார், சைதை
திரு. கே. மகாலிங்க முதலியார் சைதை
திரு டி.சி. குப்புசாமி முதலியார் சைதை
திரு. எஸ். நடராஜ முதலியார் சைதை
திரு. கே.எஸ். சரவண முதலியார் சைதை
திரு எம்.பி. சேகர் திருக்காரணி

திரு. என். ரத்தினவேலு முதலியார்
திரு. பி. பழனியப்ப முதலியார்
திரு. டி.என். சம்பந்த முதலியார் ,,
திரு. டி.ஏ. கண்ணப்ப முதலியார்
தேனாம்பேட்டை
திரு.க.முருகேச முதலியார்,
தோப்பேட்டை.
திரு. எஸ்.டி. சண்முகநேசன், பழைய
மாம்பலம்.
திரு. எஸ்.வி. நடேச முதலியார் ,,
திரு. எஸ்.கே. சோம சுந்தர முதலியார்,
திருவல்லிக்கேணி
திரு.டி. தணிகாசல முதலியார் ,,
திரு. த. முருகேச முதலியார் ,,
திரு. எஸ். பத்மநாப முதலியார் ,,
திரு.கே.சின்னப்பா முதலியார்
அனகாபுத்தூர்.
திரு. எஸ்.சம்பந்த முதலியார் ,,
திரு. எஸ்.என். சண்முக முதலியார் ,,
திரு. ஏ.வி. மாணிக்க முதலியார்,
ஆலந்தூர்
திரு. எம். ஆறுமுக முதலியார் ,,
திரு. டி.ஆர்.செல்வராஜன், எம்.ஏ. எம்.லிட்
திரு. கே.வி. துரைராஜ், பி.எஸ்.ஸி. பி.எல்.
திரு. எம். சிவகுமார், பி.காம். ஃஎப்.ஸி.ஏ.
திரு. வி.என். ஆறுமுக முதலியார்,
பி.காம். ஃஎப்.ஸி.ஏ
திரு. சி.கே. குமாரசாமி, எம்.ஏ.
திரு. புலவர் மி. ச. நடேசன்.


நம் சங்க வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தவர்கள் (தொடர்ச்சி)




M.B. பாண்டுரங்கன், LEE
திருமயிலை



R. பச்சை, B.A.B.L.,
குரோம்பேட்டை



T.K. தேவராஜன், M.B.B.S.
திருமழிசை



B. சம்பத், B.Sc. B.T.
திருமழிசை




S.V. இராஜாபாதர்
செங்குந்தர்
சைதாப்பேட்டை


நம் சங்க வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தவர்கள் (தொடர்ச்சி)




அமரர் தி. அ. சண்முக முதலியார்




A.B. தண்டாயுதபாணி, B.A. புதுபபாக்கம்
முன்னாள் பொருளாளர்



T.V. கந்தசாமி முதலியார்
திருவல்லிக்கேணி



வித்துவான் அம்பை இரா. சங்கரனா
தஞ்சாவூர்




M. வேதாசலம்
துணைச் செயலாளர்




V. ஞான வேலு
துணைச் செயலாளர்

நம் சங்க வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தவர்கள்




பொ. சி. பால சுப்பிரமண்ய செங்குந்தர், திருமயிலை
(முன்னாள் தலைவர்)



P.S. சாம்பசிவம்
திருமயிலை

திருவாளர்கள் எஸ்.பி. லோகநாத செங்குந்தர், B.Sc., எஸ்.பி. மோகன் செங்குந்தர்
அவர்களது அன்பளிப்பு: ரூ. 1000



திரு. S. P. சண்முக முதலியார் (1901 — 1981)

இவர் 1901ஆம் ஆண்டு செப்டம்பர் 13 ஆம் தேதி திரு. கந்தசாமி முதலியார் திருமதி ஜெகதாம்பாள் தம்பதியர்க்கு மூத்த மகனாகப் பிறந்தார். இவருடன் உடன் பிறந்தோர் ஒரு தம்பியும் இரு தங்கைகளும். இவர் பள்ளி இறுதி வகுப்பு வரை படிப்பை முடித்துக்கொண்டு தன் தந்தை ஆரம்பித்து சிறப்பாக நடத்திவந்த எஸ்.பி. ஷண்முகம் & சன்ஸ் (திருமணம் மற்ற நிகழ்ச்சிகளுக்கு நாற்காலிகள், மற்ற சாமான்கள் வாடகைக்கு கொடுக்கும் நிறுவனம்) என்ற நிறுவனத்தில் 1921 ஆம் ஆண்டு தன்னை இணைத்துக் கொண்டார். அன்றுமுதல் 60 ஆண்டுகள் தனது உழைப்பையும், திறமையையும், வணிக நுண்ணறிவையும் இந்த நிறுவனத்திற்கே அர்ப்பணித்தார். அதன் காரணமாக இந்த நிறுவனம் சென்னையில் முதல்தர நிறுவனம் என்ற முத்திரையைப் பெற்றது. இந்த முதன்மை இன்றும் நிலைத்திருக்கின்றது இவரது இரண்டாவது மகன் திரு. எஸ்.பி. லோகநாதன் அவர்களின் நிர்வாகத்திறமையின் காரணமாக.

1920-30ஆம் ஆண்டுகள் கால கட்டத்தில் செங்குந்த மரபின் செல்வக் குடும்பங்களில் இவரது குடும்பமும் ஒன்று. அன்று குதிரை பூட்டிய கோச் வண்டியை வைத்திருந்த ஒரே குடும்பம் இவரது குடும்பம்தான்! அப்போது பணக்காரர்களின் சின்னம் கோச் வண்டி! பின்னர்தான் மோட்டார் வண்டி வந்தது.

இவர் சென்னை புதுப்பாக்கம் செல்வ விநாயகர் கோயிலின் அறங்காவலராக தொடர்ந்து 30 ஆண்டுகள் பதவி வகித்து சிறிய பிள்ளையார் கோயிலாக இருந்ததை முருகன், துர்க்கை, நவக்கிரக சந்நதிகள் அமைத்து விரிவுபடுத்தினார். திருக்குடமுழுக்கும் நடத்தினார். பின்னர் தன் முதுமையின் காரணமாக இக்கோயில் பொறுப்புக்களை தமிழ்நாடு அரசு அறநிலையத்துறையிடம் ஒப்படைத்துவிட்டார்.

இவர் செல்வத்திலே பிறந்து செல்வச் செழிப்பிலே வாழ்ந்திருந்தாலும் இவரிடம் எத்தீய பழக்க வழக்கங்களும் ஊடுறுவவில்லை. எண்பது ஆண்டுகள் நெறிமுறைகளோடு நிறைவாழ்வு வாழ்ந்த இவர் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு 2 ஆம் தேதி இயற்கையெய்தினார்.

ஒழுக்கமான வாழ்விற்கு இவர் ஓர் எடுத்துக்காட்டு!

திரு ஏ.வி. இராமநாதன், எம்.ஏ., அவர்களது அன்பளிப்பு ரூ. 1001



திருமயிலை அ. வெங்கடாசல முதலியார்
(1897 — 1964)

(பதினாறுசீர்க் கழிநெடிலடி)

திருமயிலைச் **செங்குந்தர் குல திலகம் அமரா**
பதிவேங்க டாசலனுர் சீர்த்திமிக உடையார்

திருவளரும் '**ரிசர்வ்வங்கி**' தனில் முப்பத் தைந்து
வருடங்கள் பணியாற்றி **வெள்ளீசர் கோயில்**

பெருமைமிக ஏழாண்டுக் காலம்அறங் காவல்
தலைவரெனப் பிறங்கிவளர் அருட்பணிகள் ஆற்றிப்

பெற்றிமிகும் அக்கோயில் **உச்சிக்காலத்தும்**
பிரசாதம் ஏழையர்கட் காகும்அறம் வைத்தும்

அருமைமிகு **சேக்கிழார்** சிலையமைத்தும் சென்றார்;
அவர்புதல்வராம் **ஏ.வி. இராமநா** தப்பேர்

அண்ணலும்நற் சதாசிவமும் **வைகாச பூசத்**
திருநாளுக் காகஅறக் கட்டளைவைத் தந்த

அருண்மொழியார்க் கினியவிழா அயர்ஐம்பொன் மேனி
அமைத்தவர்தம் அறச்சிறப்பு காத்துவரு கின்றார்;

அமரர்அம ராபதியார் புகழ்விளங்க இந்த
அரியமலர் அவர்படத்தைத் தாங்கிவரச் செய்தார்.

(பாடல் ஆக்கம்: ஒளியகம் ந.ரா. ஆடலரசு)



திருவாளர் அந்தமான் சேட்
K. பொன்னுசாமி முதலியார்

திருமயிலாப்பூர் திருஓடுக்க லக்ஷ்மண முதலியார் திருமதி லட்சுமி அம்மாள் தம்பதியர்களுக்குப் பிறந்த எட்டு குழந்தைகளில் ஏழாவது குழந்தையாக 1892 ஆம் ஆண்டில் திரு. கே. பொன்னுசாமி முதலியார் மயிலாப்பூரில் பிறந்தார். இவர் ஏழாவது வகுப்பு படிக்க ஆரம்பிக்கு முன்பே இவருடைய தமக்கையின் கணவர் திரு. குள்ள குப்புச்சாமி முதலியார் இவரையும், இவருடைய சகோதரர்கள் - திரு. தங்கவேலு முதலியார் திரு. ஜம்புலிங்க முதலியார் இருவரையும் அந்தமானுக்கு தான் நடத்தும் கடைக்கு உதவியாய் இருப்பதற்காக அழைத்துச் சென்றார். பொன்னுசாமி முதலியார் தன் மைத்துனரோடு இருந்து வியாபார நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டு பிறகு போர்ட் பிளேரில் சிறிய அளவில் வியாபாரம் செய்யத் தொடங்கினார். தன் இடைவிடா உழைப்பாலும், பெரு முயற்சியாலும், வெகுசீக்கிரத்தில் பிரபல வியாபாரியாகவும், பஸ்முதலாளியாகவும் ஆனார்.

திரு. பொன்னுசாமி முதலியார், 1916 இல் அந்தமானிலிருந்து மயிலாப்பூர் வந்து தன்னுடைய தமக்கை மகள் திருமதி மாணிக்கம்மாளை மணம் செய்து கொண்டு அந்தமானுக்குத் திரும்பிச் சென்றார். திருமதி மாணிக்கம்மாள் ஒரு குழந்தைக்குத் தாயானபின் 1920 இல் காலமானார். அவர் பெற்றெடுத்த ஒரே மகன் தான் திருமயிலை - திருநாகேஸ்வரம் பி. கிருஷ்ண மூர்த்தி ஆவார். திரு. பொன்னுசாமி முதலியார் 1921 இல் திருமதி ஞானாம்பாள் அம்மாளை இரண்டாம் தாரமாக மணந்து கொண்டு 6 பிள்ளைகளையும் 5 பெண்களையும் பெற்றெடுத்தார். இவர்களில் திரு. சொக்கலிங்க முதலியாரையும் திரு. இரத்தினவேலு முதலியாரையும், பலர் நன்கு அறிவர்.

திரு. பொன்னுசாமி முதலியார் போர்ட் பிளேர் அருகில் ராஸ் என்ற இடத்தில் நம் சமூகத்தினர் சிலரோடு இணைந்து ஒரு முருகன் கோயிலை நிறுவினார். போர்ட் பிளேரில் ஒரு பள்ளிக்கூடத்தையும் நிறுவினார். திருமயிலை அருள்மிகு வெள்ளீஸ்வரர் கோயில் முகப்பு கருங்கல் மண்டபத்திற்கும், கொடிக்கம்பத்திற்கும் நன்கொடை அளித்துள்ளார்.

இவர் சென்னைக்கு வரும்போதெல்லாம், ''செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்'' என்ற முதுமொழிக்கு எடுத்துக்காட்டாக அவரை நாடி வந்த உறவினர்க்கெல்லாம் தன்னால் இயன்ற பொருளுதவி செய்தார்.

இவரது மனைவியார் திருமதி ஞானாம்பாள் அம்மாள் மிக்க தெய்வ பக்தி உடையவர். அந்தமான் முருகன் கோயிலுக்கு வாரவிழா, மாதவிழா, ஆண்டு விழா என்று பலதிருப் பணிகளைச் செய்து வந்தார்.

அந்தமானிலிருந்து வந்து சென்னையில் தங்கியிருந்த போது மயிலை வெள்ளீஸ்வரர் கோயிலுக்கும், கபாலீஸ்வர் கோயிலுக்கும் தூங்கா விளக்குக்கு தினசரி எண்ணெய் ஊற்றுவார்கள் மேலும் காலையில் வெள்ளீஸ்வரர் திருக்கோயிலுக்கு பூத் தொடுத்துக் கொடுப்பார்கள். இப்படிப்பட்ட ஆழமான பக்திஉடையவர்கள்.

1939 ல் நடந்த இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது அவரது குடும்பத்தினர் அந்தமானிலிருந்து சென்னைக்குத் திரும்பி வந்தார்கள். ஆனால் இவர் மட்டும் அந்தமானிலேயே இருந்து தனியாக வியாபாரத்தைக் கவனித்து வந்தார். 1944 இல் இவர் அந்தமானில் இயற்கை எய்தினார்.

திரு டி.எஸ். சம்பந்த செங்குந்தர். அவர்களது அன்பளிப்பு ரூ. 1001



நாட்டாண்மைப் பெரியவர் அண்ணல் **திரு. தி. சாம்பசிவ செங்குந்தர்**

திரு. தி. சாம்பசிவ செங்குந்தர் அவர்கள் திரு. முனுசாமி செங்குந்தர் வள்ளியம்மாள் தம்பதியர்கட்குத் திருநீர்மலையில் மகனாகப் பிறந்தார். இவருடைய தாய் தந்தையர் இவரின் இளமையிலேயே திருமழிசைக்கு வந்து வாழ்ந்து வந்தனர். இவர் கனகவல்லி அம்மையாரை மணந்து இல்லறம் நடத்தி ஒரு மகனையும் ஒரு பெண்ணையும் பெற்று வாழ்ந்தார்.

இவர் இளவயலோடு உடனாக இருந்து தொழிலை நன்கு கவனித்தவர். கைத்தறி கைலி வாணிபம் செய்து நிரம்பப் பொருள் ஈட்டியவர். சதர்ன் பஸ் சர்வீசைத் தொடங்கியவர்கள், பயிர்த்தொழிலையும் நன்கு கவனித்துவந்தார். இவருக்கு நாட்டாண்மைப் பட்டம் 1958இல் சூட்டப்பட்டது. அதுமுதல் இறுதிக் காலம் வரை திருமழிசை நாட்டாண்மையராக இருந்து வந்தார். இவர் காலத்தில் திருவொற்றியூரில் செங்குந்தர் மரபினருக்குச் சொந்தமான இடத்தை விற்று அதை நம்குலத்தவர்க்கு உரிய நிதியாக வைத்துச் சென்றார்கள். இவர் நம் சமுதாயத்திற்கென்று உள்ள சத்திரங்களைப் புதுப்பித்தார்.

இவர் ஒத்தாண்டேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலராக இருந்து பணிபுரிந்தவர்; அப்பொழுது திருக்கோயிலுக்குக் கருங்கல் தளவரிசை போடப்பட்டது. இவர் காலத்தில் குடமுழுக்கு விழாவும் நடத்தப்பெற்றது. கொடிக் கம்பத்திற்குச் செப்புத் தகடு வேயப்பட்டது. கோவிலுக்கு என்று பூந்தோட்டம் அமைத்தார்.

நம் குலமக்களிடம் அன்பும் பற்றும் உடையவர். அவர்கட்கு உதவி செய்யும் பண்பும் உடையவர். இவர் மாண்புமிகு முன்னாள் முதல்வர் பக்தவச்சல முதலியார், முத்துரங்கமுதலியார் ஆகியோர்களிடம் அரசியல் தொடர்பு உடையவர். இவருடைய ஒரே மகன்தான் இப்போதைய திருமழிசை நாட்டார் திரு. டி.எஸ். சம்பந்த முதலியார் ஆவார்.

திரு. தி. துரைசாமி செங்குந்தர். அன்பளிப்பு ரூ. 1000.



உழைப்பால் உயர்ந்தவர், பெரியவர் **திரு. தி. துரைசாமி செங்குந்தர்**

திருநீர்மலையில் திரு. முனுசாமி செங்குந்தர் திருமதி வள்ளியம்மாள் தம்பதியர்கட்கு மகனாகப் பிறந்தார் திரு. தி. துரைசாமி செங்குந்தர். இவருடைய பெற்றோர்கள் இவரின் இளமையிலேயே திருமழிசைக்கு குடிபெயர்ந்து வாழ்ந்து வந்தனர். திருமழிசை நாட்டின் நாட்டாண்மையாக இருந்து சிறப்புற வாழ்ந்த திரு. தி. சாம்பசிவ செங்குந்தர் இவரது தமையனார். இவர் இளமை முதற்கொண்டே கடின உழைப்பிற்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவர். உழைப்பே உயர்வு தரும் என்பது இவர் வாழ்க்கை நமக்கு உணர்த்தும் நெறியாகும்.

இவர் அந்நாளில் சிங்கப்பூர், மலேயாவில் சிறப்பாக கைத்தறி கைலி வாணிபம் செய்து நிரம்பப் பொருள் ஈட்டினார். அக்கடைகளை அங்குப் பணியாற்றிய சிப்பந்திகளுக்கே தானமாகக் கொடுத்த பெருந்தகையாளர்.

இவரது சிறந்த உழைப்பினால் சுந்தரம் பஸ் போக்குவரத்து சிறப்பாக நல்ல முறையில் இயங்கிக் கொண்டு இருக்கிறது. உழவுத் தொழிலையும் சிறந்த முறையில் செய்து வருகிறார். இவர் அருள்மிகு ஒத்தாண்டேஸ்வரர் திருக்கோயில் இராச கோபுரத் திருப்பணிக் குழுவின் புரவலராக இருந்து அரும்பணியாற்றி வருகிறார்.

இப்பெரியவரின் சிறந்த பணிகளை அவர்தம் பெயரன்மார்கள் நன்கு கவனித்தும் இயக்கிக் கொண்டும் வருகின்றனர்.

இத்தகைய சிறப்பும் பண்பு நலமும் மிக்க பெரியவர் அவர்கள் இளைஞர்கட்கு ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ மேலும் பல்லாண்டு காலம் வாழ வேண்டும்.

வளர்க அவர்தம் தொண்டு; வாழ்க அவர் புகழ்.

திரு. K.S. தங்கவேலு செங்குந்தர் அவர்களது அன்பளிப்பு ரூ.1000/-



திரு. K. S. தங்கவேலு செங்குந்தர்

திரு கே. எஸ். தங்கவேலு செங்குந்தர்.

திருமழிசை ஸ்ரீ ஒத்தாண்டீஸ்வரர் தேவஸ்தான அறங்காவலர் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்று, மிகுந்த சிரத்தையோடு பணியாற்றியிருக்கும் திரு. கே.எஸ். தங்கவேலு முதலியாருக்கு வயது 85. ஆனாலும் பார்வைக்கு 60 வயதுக் குட்பட்டவராகவே காட்சி தருகிறார்.

அவர் இப்போதும் முழு ஆரோக்கியத்துடன் இளைஞர்கள் தோற்றுப்போகும் வண்ணம் சுறுசுறுப்பாகக் காரியமாற்றுவதற்குக் காரணம், அவர் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக யோகாசனப் பயிற்சிகளைச் செய்து வருவதுதான்.

தமிழில் பழமையான இலக்கியங்களை அவர் ஆர்வத்தோடு படித்துள்ளார். இளமைப் பருவத்தில் தான் ஒரு தமிழ்ப் புலவராக வரவேண்டும் என்ற ஆசை அவரது நெஞ்சில் உறுத்திக் கொண்டிருந்ததாம். தேவாரம், திருவாசகம் திருப்புகழ் போன்ற சமய இலக்கியங்களை மனனம் செய்து, அதை மேடைகளில் சரளமாக எடுத்து விளக்கும் ஆற்றல் பெற்றவராக இவர் இருக்கிறார் என்பது வெறும் புகழ்ச்சிக்காக கூறவில்லை. அதுதான் உண்மை.

பொதுநலக் காரியங்களில் இன்றைக்கும் முன் நின்று உழைக்கும் உத்வேகம் கொண்ட தங்கவேலு முதலியாரின் குடும்பம் பழம்பெருமை மிக்கதாகும். இவரது தகப்பனார் கே. சுப்பிரமணிய முதலியார் 'ஏழு ஊர் மணியம்' என்ற சிறப்புப் பெயர் பெற்றவராவார். சுப்பிரமணிய முதலியார் திருமழிசை, பூவிருந்தவல்லி, சென்னை போன்ற வட்டாரங்களில் அந்தக் காலத்தில் மிக்கப் புகழ்பெற்றவராக விளங்கினார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தங்கவேலு முதலியார் சமயப் பணிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டு தற் சமயம் உழைத்து வருகிறார்.

எட்டாவது வகுப்பு வரை படித்துள்ள தங்கவேலு முதலியார் படிப்பை முடித்ததும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டார். அதோடு லுங்கி வர்த்தகத்தையும் துவக்கி நடத்தினார்.

அந்தக் காலத்தில் 100 தறிகளை வைத்து லுங்கி உற்பத்தி செய்து, இலங்கை, சிங்கப்பூர், பினாங்கு ஆகிய வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளார்.

அந்த நாளிலேயே தங்கவேலு முதலியார் வியாபார ரீதியாக அடிக்கடி பல முறை விமானம் மூலம் இலங்கைக்கு சென்று வந்திருக்கிறார். சிங்கப்பூர், பினாங்கு முதலிய நாடுகளுக்கும் பல முறை சென்று வந்துள்ளார்.

இவரது தந்தையார் சமயத்துறை ஈடுபாடு மிக்கவராக இருந்தமையால், தங்கவேலு முதலியாரும் இளமையிலிருந்தே சமய ஈடுபாடு மிக்கவராக வளர்ந்தார்.

பணிவும், அடக்கமும், கொண்டு எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வரும் தங்கவேலு முதலியார், 1970 ஆம் ஆண்டு ஸ்ரீ ஒத்தாண்டேஸ்வரர் தேவஸ்தானத்தின் அறங்காவலர் குழுத்தலைவராகப் பொறுப்பேற்றார்.

அமைதியாக அடுத்தவர்களிடம் பேசும் இந்த ஆத்திகப் பிரமுகர், அறங்காவலர் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னால் ஸ்ரீ ஒத்தாண்டேஸ்வரர் தேவஸ்தானத்து வருமானத்திற்காக இரண்டு கடைகளை அமைத்துள்ளார்.

கலைமகள் வாசகசாலை என்ற திருவள்ளுவர் நூல் நிலையம் ஒன்றைத் திருமழிசையில் ஸ்ரீ ஒத்தாண்டேஸ்வரர் தேவஸ்தானத்தின் மூலம் ஏற்பாடு செய்து இன்று அது சிறப்பாக இயங்கி வருகிறது.

கனிவான பார்வையும், அமைதியான போக்கும் கொண்ட தங்கவேலு முதலியார், சென்னை, செங்கற்பட்டு மாவட்ட கைத்தறித் துணி உற்பத்தியாளர் மத்திய சங்கத்தின் துணைத் தலைவராக இருக்கிறார்.

1926 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்ட தங்கவேலு முதலியாரின் துணைவியாரின் பெயர் வள்ளியம்மாள் என்பதாகும்.

இந்த தம்பதிகளுக்கு ஒரு மகனும், இரண்டு மகள்களும் இருக்கிறார்கள்.

இவர்களுடைய மகன் திரு. டி. பழனிசாமி B,E..DipT.T என்பவர் சென்னை மைய பாலிடெக்னிக்கில் மின்னியல் துறைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

திரு. டி.எஸ். குருசாமி செங்குந்தர் மனைவி திருமதி கண்ணம்மாள் அவர்களின் அன்பளிப்பு ரூ. 500/-



திரு. T. S. குருசாமி செங்குந்தர்


''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'' என்னும் முதுமொழிக்கு ஏற்ப, கடல் கடந்து சென்று, பொருள் மட்டுமின்றி, பெரும் புகழையும் ஈட்டியவர் அமரர் அந்தமான் டி.எஸ். குருசாமி செங்குந்தர் அவர்கள்.

திருபாலைவனம் திரு. சுப்புராய செங்குந்தர், திருமதி முனியம்மாள் தம்பதியர்க்கு 30.11.1908 அன்று மகனாகப் பிறந்தார் திரு. டி.எஸ். குருசாமி அவர்கள். தன் இள வயதிலேயே அந்தமான் சென்று டி.எஸ். குருசாமி அன்ட் சன்ஸ் என்னும் பெயரில் போர்ட் பிளேயரில் வாணிகம் செய்து அந்தமான் மக்களால் ''குருசாமி சேட்'' என அன்புடன் அழைக்கப் பெற்றார்.

அந்தமான் தமிழர் சங்கத்தின் தலைவராக தன் இறுதி மூச்சு வரை பணியாற்றினார். அந்தமான் சேம்பர் ஆஃப் காமர்ஸ் நிர்வாகக் குழு உறுப்பினராகத் தொடர்ந்து பதினைந்து ஆண்டு காலம் இருந்தவர்.

அந்தமானில் வெற்றி மலை முருகன், கோயில், இராதாகிருஷ்ணன் கோயில், சேவா நிகேதன் ஆகியவற்றை நிறுவப் பெரிதும் உதவினார். சென்னையில் ஆலந்தூர் கற்பக வினாயகர் கோயிலில் சுப்பிரமணிய சுவாமி வள்ளி தேவானை சன்னதி அமைத்தவர். சமீபத்தில் அவர் நினைவாக உற்சவர்கள் சிலையும் கொடுக்கப்பட்டுள்ளது. சைதை சுப்பிரமணிய சுவாமி கோயில் திருக்காரணீசுவரர் கோயில் (கோபுர வாசல் கதவு) ஆகியவற்றின் திருப்பணிகளுக்கு பெரிதும் உதவியவர். முருகக் கடவுளிடம் மிகுந்த பக்தி கொண்டவர். இவர் 4.11.1977 அன்று தனது அறுபத்து ஒன்பதாம் அகவையில் சென்னையில் இயற்கை எய்தினார். இவரது பூதவுடல் மறைந்தாலும் இவரது புகழுடல் என்றும் மறையாது.

திரு. தி. சு. சுப்பிரமணிய செங்குந்தர் அன்பளிப்பு ரூ.501-



கண் கொடுத்த கல்வியாளர்
திரு. தி.சு. சுப்பிரமணிய செங்குந்தர்
திருமதி சிவானந்தம்மாள்


உயர்திரு. தி.சு. சுப்பிரமணியச் செங்குந்தர் திரு. மாணிக்கச் செங்குந்தர் அவர்களின் இளவல் ஆவார். இவர் 26.6.1906 அன்று திரு. அ. சுந்தர முதலியாரின் இரண்டாம் மகனாகப் பிறந்தவர். இவர் இல்லாள் சிவானந்தம்மாள்.

இவரும் இவருடன் பிறந்த உடன் பிறந்தோர் மூவரும் சேர்ந்து இவர்தம் தந்தையார் பெயரில் சுந்தரம் அரசு மேனிலைப் பள்ளி நடைபெற கட்டடம், அதற்குரிய இடம் கொடுத்துக் கல்விக் கண் கொடுத்து அறியாமை நோயைப் போக்கப் பேருதவி செய்து இவர்தம் குடும்பத்தைப் புகழ் ஏணியில் ஏறச் செய்தார்.

இப்பள்ளி திருமழிசையில் 21.4.1949 இல் மாண்புமிகு அமைச்சர் அமரர் எம். பக்தவச்சலம் அவர்களால் தொடங்கப் பெற்றது. ஒரு லட்சம் ரூபாய் அளவில் கட்டிய கட்டடம் 6.3.1950 இல் அமரர் மாண்புமிகு பவநகர் மகாராஜா அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது. பள்ளியின் வளர்ச்சிக்கு எப்பொழுது பண உதவி தேவை என்றாலும் அவ்வப்பொழுது கொடுத்து உதவும் பெருமனம் உடையவர். மேல்நிலைப் பள்ளியாக உயர இவரே ரூ.5,000 கொடுத்தார்.

இவரது மகனார் திரு. டி.எஸ். கணேச செங்குந்தர்.

சென்னை செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கத்தின் துணைத் தலைவராக இருந்து பல ஆண்டுகளாகப் பணி புரிந்து வருகிறார்.



திரு. M.P. புனிதவேலு முதலியார் (1916–1977)
திருமதி சகுந்தலா அம்மாள் (1920-1971)

இவர்களைப் பற்றிய தனிக்கட்டுரை இம் மலரில் இடம் பெற்றிருக்கிறது.
அதனை 149 ஆம் பக்கம் காண்க

திரு. வி. வேதகிரி செங்குந்தர். அவர்களது அன்பளிப்பு ரூ. 1000.



திரு. V. வேதகிரி செங்குந்தர் & திருமதி கண்ணம்மாள்

இவர் திட்டமிட்ட உழைப்புக்கு எடுத்துக்காட்டானவர்!

திருமழிசையில் முக்கியமான பிரமுகராகத் திகழும் இவர் 'வேதாசலம் டிரான்ஸ்போர்ட்,' என்ற போக்குவரத்து நிறுவனத்தின் உரிமையாளர்.

1946 ஆம் ஆண்டு படிப்பை முடித்துக் கொண்ட வேதகிரி முதலியார், 1947ம் ஆண்டு தந்தையார் நடத்திவந்த விவசாயத்தைப் பொறுப்பேற்று கவனிக்கத் துவங்கினார்.

1952ஆம் ஆண்டு இவரது தந்தையார் காலமாகிவிடவே, குடும்பப் பொறுப்புக்களை ஏற்று நடத்த வேண்டிய கட்டாயத்திற்கு வேதகிரி முதலியார் ஆளானார்.

1952ஆம் ஆண்டு இவரும் இவரது சகோதரர்களும் சேர்ந்து இவரது தந்தையாரின் நினைவாக 'வேதாசலம் டிரான்ஸ்போர்ட்' என்ற லாரி போக்குவரத்து நிறுவனத்தை உருவாக்கினார்கள்.

இவரது சகோதரர்கள் அப்போது படித்துக் கொண்டிருக்கவே, அனைத்துப் பொறுப்புக்களையும் வேதகிரி முதலியார் தான் ஏற்று அந்தத் தொழிலைச் சீராக, சிறப்பாக நடத்தினார்.

அந்தக் காலக் கட்டத்திலேயே 1953ஆம் ஆண்டிலேயே 'அரிசி ஆலை' ஒன்றையும் இவர் துவக்கினார்.

இவர் லாரி டிரான்ஸ்போர்ட் தொழிலைக் கவனித்துக் கொண்டிருந்தபோது, குடியாத்தம் லட்சுமி சரஸ்வதி டிரான்ஸ்போர்ட் உரிமையாளரான காலம் சென்ற டி.ராஜகோபால் நாயுடுவின் அறிவுரைகளும், ஆசியும், அவரது நடைமுறைகளும் இவருக்கு அந்தத் தொழிலில் மேலும் ஊக்கம் வளரக் காரணமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர், 1960-ல் ஒரு பஸ்ஸை வாங்கி, வேதாசலம் டிரான்ஸ்போர்ட்' என்ற பெயரில் ஒரு பஸ் போக்குவரத்து நிறுவனத்தைத் துவக்கினார். 1966ம் ஆண்டில் இந்த நிறுவனத்தில் 5 பஸ்கள் ஓடிக் கொண்டிருந்தன என்றால், இவரது தொழில் திறமையை நம்மால் ஓரளவு ஊகிக்க முடியும்.

1952ம் ஆண்டிலிருந்து காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு, அந்த இயக்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்து வருகிறார்.

திருமழிசை பேரூராட்சி மன்றத்தின் துணைத்தலைவராக 5 ஆண்டு காலமும், உறுப்பினராக 5 ஆண்டு காலமும் ஆக 10 ஆண்டு காலம் பணியாற்றியுள்ளார்.

முன்னாள் முதல்வர் எம். பக்தவத்சலத்தின் மீது பற்று மிகக் கொண்டவரான வேதகிரி முதலியார், அவரையே தனது அரசியல் ஆசானாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

1947ம் ஆண்டு வேதகிரி முதலியார் திருமணம் செய்துகொண்டார். இவரது துணைவியார் பெயர் கண்ணம்மாள். இந்தத் தம்பதிக்கு மக்கட்செல்வம் 2 ஆண் 2 பெண்.

மூத்தமகன் திரு. டி.வி. சண்முகசுந்தரம், பி.ஈ., எம்.எஸ்ஸி., இளையமகன் திரு. டி.வி. குமார், எம்.டி., டி.டி., மூத்த மகள் திருமதி ஞானசுந்தரியின் கணவர் திரு. டி. பழனிச்சாமி, B.E. Dip. T. T. இளையமகள் திருமதி சுசிலாவின் கணவர் Dr. டி. தணிகாசலம், எம்.எஸ்.எம்.சி.எச் (Uro) எஃப். ஐ.சி.எஸ்.

எளிமை, அன்பு, அடக்கம், கனிவு முதலிய நற்பண்புகளுக்கு உறைவிடமான இவர் வாழ்க பல்லாண்டு!

திரு. டி.கே.எம். தேவராஜ முதலியார் அவர்களது அன்பளிப்பு ரூ. 501



திரு டி.கே.எம். தேவராஜ முதலியார் &
திருமதி தனலட்சுமி அம்மாள்

திரு டி.கே.எம். தேவராஜ முதலியார் திரு கனக மாணிக்க முதலியார் திருமதி தனபாக்கியம் அம்மாள் அவர்களின் இரண்டாவது மகனாக 1917இல் பிறந்தார். இவர் தமது தமையனார் திரு டி.கே. எம். துரைசாமி முதலியார் அவர்களுக்குப் பிறகு 10-6-1976 முதல் திரு நாகேஸ்வரம் நாட்டாண்மைப் பொறுப்பை ஏற்றுச் சிறந்து விளங்குகிறார். இவர் புதுப்பாக்கம் திரு. எஸ்.பி. சண்முக முதலியார் அவர்களின் மூத்த மகள் திருமதி தனலட்சுமி அம்மாளை மணந்து நல்லறமாம் இல்லறத்தை நடத்தி பிள்ளைகள் மூவரையும் திரு.டி. பஞ்சாட்சரம், டாக்டர் டி. குமாரசுவாமி, பிஎஸ்ஸி, எம்.பி. பி.எஸ், டாக்டர் டி. தணிகாசலம், எம்.எஸ், எம்.சி.எச் (Uro) எஃப் ஐ சி.எஸ். பெண்கள் மூவரையும் பெற்று இனிது வாழ்ந்து வருகின்றார்கள்.

திரு. டி.எஸ். சம்பந்த செங்குந்தர் அவர்களது அன்பளிப்பு ரூ. 501



திரு டி.எஸ். சம்பந்த செங்குந்தர் &
திருமதி கற்பகம் அம்மாள்


திரு டி. எஸ். சம்பந்த செங்குந்தர் தன் தந்தை திரு. டி. சாம்பசிவ செங்குந்தர் அவர்களுக்குப் பிறகு 4.2.1985 முதல் திருமழிசை நாட்டாண்மைப் பொறுப்பை ஏற்றுச் சிறந்து விளங்குகிறார். இவர் திருமதி கற்பகம் அம்மாள் அவர்களை மணந்து நல்லறமாம் இல்லறத்தை நடத்தி பிள்ளைகள் திரு டி. எஸ். ஜெயச்சந்திரன், பி.எஸ்ஸி, திரு. டி. எஸ். சண்முகம், திரு. டி. எஸ். உதயசங்கர், பி.ஈ., டி.எஸ். குணசேகரன் எம்.டி.,டி.சி.எச்., எம்.ஆர். சி.பி (Lond) திரு. டி. எஸ். நடராஜன், பி. டெக். ஐவரைப் பெற்று இனிது வாழ்ந்து வருகின்றார்கள்.

இவர் திருமழிசை ஒத்தாண்டேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலராக இருந்து கோவில் இராஜகோபுரம் கட்டுவதற்கு பெருமுயற்சி செய்துவருகிறார்கள். இவர் பஸ் தொழிலையும், பிற தொழில்களையும் நல்ல முறையில் கண்காணித்து வருகின்றார்.

உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் என்னும் கொள்கையைத் தம் தொழிலாளர்களிடம் செயல்படுத்துபவர். முறையாக வேலை செய்யும்படியும் பார்த்துக் கொள்ளும் பாங்கும் உடையவர்கள். தான் படித்த ஆசிரியர் இடத்தில் என்றும் பற்றும் அன்பும் மரியாதையும் உடையவர். கற்றவர்களை மதிப்பவர்.

இவர் லண்டன் போன்ற மேலைநாடுகளுக்குச் சென்று பல்வேறு அனுபவங்களைப் பெற்று வந்தவர்கள். இவர் எளிமையும், அன்பும் அடக்கமும் கொண்ட பண்பாளர்.

திரு. டி.ஏ. கண்ணப்பமுதலியார். அவர்களின் அன்பளிப்பு ரூ. 1000



திரு T. A. கண்ணப்ப முதலியார்

இவர் 28-5-1916 அன்று பிறந்தார். 1934 ஆம் ஆண்டு பள்ளி இறுதி வகுப்பில் (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்வு பெற்றார். பின்னர் சிறிது காலம் சென்னை சிம்சன் கம்பெனியில் கணக்கராகவும், பெஸ்ட் அண்டு கம்பெனியில் எழுத்தராகவும் பணிபுரிந்தார். இந்த வாழ்வில் அவருக்கு திருப்தி ஏற்படவில்லை. எனவே துணிவுடன் 1943 ஆம் ஆண்டு தனியாக சொந்த கைத்தறி லுங்கி வியாபாரத்தைத் தொடங்கினார். சாதாரண லுங்கி வியாபாரியாக அடியெடுத்து வைத்தவர் பெரும் ஏற்றுமதி இறக்குமதி வணிகராக மாறினார். இவரது வணிக நுண்ணறிவின் காரணமாக தான் மேற்கொண்ட வணிகத் துறையில் முன்னேறி பெரும் செல்வந்தரானார். கடல் கடந்த நாடுகளிலெல்லாம் இவருக்கு வணிகத் தொடர்பு ஏற்பட்டது. ஏற்றுமதி இறக்குமதி வாணிபத்தில் வெற்றியைக் குவித்தார். இவரது சாதனைகள் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

கல்கத்தா, சிட்டாகாங், டாக்கா, அப்போதைய கிழக்கு வங்காளம்(தற்போது பங்களாதேஷ்) முதலிய நகரங்களுக்கு லுங்கியை ஏற்றுமதி செய்தார்.

1947 ஆம் ஆண்டுமுதல் 1972 ஆம் ஆண்டுவரையில் ஏடன், ஜெட்டா(சவுதி அரேபியா) அர்கேசா, மொகாதிசே, வட ஆப்பிரிக்கா, மொம்பாசா, நைரோபி, கென்யா, கிழக்கு ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்கு லுங்கி ஏற்றுமதி வாணிபத்தை சிறப்பாகச் செய்தார். இவருக்கும் ஏடன் நகரத்திற்கும் இருந்த தொடர்பின் காரணமாக இவர் ''ஏடன் கண்ணப்பமுதலியார்'' என்றே அழைக்கப்பட்டார்!

தமிழ்நாடு கைத்தறித் தொழில் மற்றும் வணிக சங்கத்தின் நிறுவன அங்கத்தினராக இருந்தார். இச்சங்கத்தின் தலைவராக இரண்டு ஆண்டுகள் இருந்தார்.

1963 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டு வரையில் தென்னக ரயில்வே உபயோகிப் போர் ஆலோசனைக் குழுவின் அங்கத்தினராக இருந்தார்.

1967 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையில் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக்குழுவின் அங்கத்தினராக இருந்தார்.

வணிகத்துறையில் முதன்மை பெற்ற இவர் சென்னை சைதாப்பேட்டை சிவ சுப்பிரமணிய திருக்கோயிலின் அறங்காவலராக 1961 ஆண்டு முதல் 1972 ஆண்டு வரை விளங்கினார்.

வியாபார நிமித்தம் 1956ஆம் ஆண்டு முதல் 1972ஆம் ஆண்டு வரை அரேபிய நாடுகளுக்கும், வடக்கு ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்கும் இவர் பலமுறை மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணம் பிரசித்தம் பெற்றவை. தென்னிந்திய கப்பல்மூலம் ஏற்றுமதியாளர்கள் குழுவிலும் அங்கத்தினராக இருந்தார்.

பல்வேறு பதவிகளை இவர் வகித்தபோதும் தன்முனைப்பு இவரை அண்டியதில்லை. தன்னடக்கமே இவரை உயர்த்தியது. இப்பண்பாளர் வாழ்க பல்லாண்டு.

திரு M.S. தேவராஜ செங்குந்தர் அவர்களது அன்பளிப்பு ரூ 1001/-



அருள்நெறிச் செல்வர் **திரு. M. S. தேவராஜ செங்குந்தர்**
&
திருமதி நவநீதம்மாள்

ஒத்தாண்டேஸ்வரர் திருத்தலமாம் திருமழிசையில் திரு எம்.எஸ். தேவராஜ செங்குந்தர் அவர்கள் திரு. சின்னசாமி செங்குந்தர் தாயார் அமிர்தம் அம்மையார் தம்பதியர்க்கு கடைசிமகனாகப் பிறந்தார்.

இவர் இளமைக்காலம் முதல் தம் சகோதரர்களுடன் உழவுத்தொழிலில் ஈடுபாடு கொண்டு அயராது உழைத்தார். பெரியவர் திரு. தி. துரைசாமி செங்குந்தர் அவர்களின் மகளான நவநீதம் அம்மையாரைத் திருமணம் செய்துகொண்டார்.

இவர் சிறந்த பக்திமான். திருஞானசம்பந்தர் போற்றிய தமிழிசையை நாளும் பாடி மனம் மகிழ்பவர். தேவார திருவாசகப் பாடல்களை மனனம் செயவதில் மிகவும் ஈடுபாடுடையவர். திருமழிசை அருள்மிகு ஒத்தாண்டேஸ்வரர் திருக்கோயில் நிர்வாக அறங்காவலராகக் கடந்த எட்டு ஆண்டு காலமாகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார். இவரது முயற்சியினால் ஒத்தாண்டேஸ்வரர் திருக்கோயிலுக்கு இராசகோபுரத் திருப்பணிக்குழு அமைத்துச் செயல்பட்டு வருகிறார்.

இவர் நல்ல பண்பாளர்; அன்பும் மரியாதையும் காட்டுவதில் குறை இல்லாதவர்; எளிமையானவர்; தன்னை நாடிவரும் பொது நல நோக்குடையோர்கட்கு உதவும் பண்பாளர். இவர் தொடங்கியுள்ள இராசகோபுரத் திருப்பணி நல்ல முறையில் விரைவில் நிறைவேறி திருக்குட முழுக்கு விழாவும் நிகழும் நன்னாளை எதிர் நோக்கியிருக்கின்றார்.

இவரின் முதல் மகன் திரு டி.டி. இராஜசேகரன், பி.ஈ. அவர்கள், ஒரு பொறியியல் பட்டதாரி. அவர் முயற்சியால், ''வசந்தா பஸ் போக்குவரத்தும், எம்.எஸ்.டி. பிரிக்ஸ் என்னும் செங்கல் தொழிலும் மிக நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

வாழ்க திரு. எம்.எஸ். தேவராஜ செங்குந்தர் புகழ்; வளர்க அவர் தொண்டும், அறமும்.

திரு. P. A. ஜம்புலிங்க முதலியார் அவர்களின் அன்பளிப்பு ரூ. 501/-

With the best compliments from:

Grams : ARUMUGAM

Phone : 2299

P. ARUMUGAM & SONS

General Merchant & Commission Agents

PORT BLAIR, ANDAMANS - 744 101

Madras Office :

23, Subramaniya Swamy Koil Street,

SAIDAPET : MADRAS - 600 015.

Grams : PEEASONS

Phone : 442709 - 441591



திரு M.D. பரமசிவம்
திருமதி சுந்தரி அம்மாள்
17, காரணீஸ்வரர் கோயில் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.

திரு. M. D. பரமசிவம் அவர்களின் அன்பளிப்பு ரூ. 501/-

With the best compliments from

PRABHAKAR FINANCE

17, Karaneeswar Koil Street,

Saidapet, Madras-15.

Prop : M. D. Paramasivam

மயிலாப்பூர் ஆறுமுக முதலியார் அவர்களின் அன்பளிப்பு ரூ. 1000/-



திரு. ஆறுமுக முதலியார் &
திருமதி கிளியாம்பாள்

அடக்கத்தின் மறுமதிப்பு என்றால் அது இவர்தான்.

'உள்ளத்தால் எந்த அளவுக்கு பக்குவமடைந்திருந்தால் இந்த அளவிற்கு அவையடக்கமும், தன்னை மிகவும் சாமானியராக மதிக்கும் ஆத்மார்த்தமான உணர்வும் வெளிப்படும்?' இந்தக் கேள்விக்கு திருமழிசையில் ஒரு ஆத்திகப் பிரமுகரைக் கண்டதும் விடை கிடைத்துவிட்டதென்றால், அந்த மனிதர் எத்தனை மகத்தானவராக இருக்க வேண்டும்!

ஆமாம், திருமழிசையில் மயிலாப்பூர் ஆறுமுக முதலியார் என்று அழைக்கப்படும் எம். ஆறுமுக முதலியாரைத்தான் குறிப்பிடுகிறோம். சமயநெறிகளிலே ஊறி, அந்த உணர்வுகளின் பிரதிபலிப்பாக உணர்ச்சி பிழம்பாகத் திகழும் ஆறுமுக முதலியார், சென்னை மயிலாப்பூரில் பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் மாணிக்க முதலியார் என்பதாகும். மாணிக்க முதலியார் நெசவுத் தொழிலை மேற்கொண்டிருந்தவர்.


இளமையிலிருந்தே நெசவுத் தொழிலில் ஈடுபட்டவராதலால், இன்று நெசவுத் தொழிலைப் பற்றிய அனைத்து நுணுக்கங்களும் இவருக்கு கைவந்த கலையாக இருக்கிறது. இவர் தனது 27வது வயதில் தொழிலைக் கருதி மயிலாப்பூரிலிருந்து திருமழிசைக்கு வந்து குடியேறினார்.

'கைத்தறி நெசவுத் துணிகளின் தரங்களை பகுத்துச் சொல்ல சில நுணுக்கமான தொழில் நுட்ப வல்லுனர்கள் தேவை' என இலங்கை அரசு, தமிழக சர்க்காரைக் கேட்டுக் கொண்டது. அதற்காக 21 பேர்கள் அடங்கிய குழுவில் இவரும் 2 மாத காலம் இருந்துள்ளார் என்றால் இவரது தொழில் நுணுக்கம் எத்தகையது என நம்மால் ஊகிக்க முடியும்.

மயிலை கபாலீசுவரர் கோவிலில் நடப்பது போன்ற ஒரு திருமுறை உற்சவத்தை ஒத்தாண்டேஸ்வவரர் கோவிலில் நடத்தவே தன்னை இறைவன் திருமழிசைக்குக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறான் என்று உளமார எண்ணி 1961ஆம் ஆண்டு அந்தத் திருமுறை உற்சவத்தை இவரே மிகச் சிறப்பாக திருமழிசையில் நடத்திப் பார்த்துவிட்டார். அன்றிலிருந்து இன்றுவரை வருடந்தோறும் அந்த உற்சவம் இவரால் சிறப்புகுன்றாமல் நடத்தப்பட்டு வருகிறது. இந்த உற்சவத்திற்குத் தேவையான வருமானத்திற்காக ஒரு வீட்டை வாங்கி, அதை வாடகைக்கு விட்டிருக்கிறார். தேவாரம், திருப்புகழ் போன்ற சமய இலக்கியங்களில் ஈடுபாடுள்ளவர்.

இவரது துணைவியார் பெயர் கிளியாம்பாள். இவரைப் போலவே இவரது துணைவியாரும் சமயப் பணிகளில் அதிக ஈடுபாடுள்ளவராகத் திகழ்கிறார். இந்தத் தம்பதிக்கு குழந்தைச் செல்வம் ஒரே ஒரு மகன், திரு. டி.எ. பன்னீர்செல்வம், பி.ஏ.

திரு. ஏ.கே. லிங்கவேலு முதலியார். அவர்களது அன்பளிப்பு ரூ. 1000.



திரு. A. K. லிங்கவேலு முதலியார்
&
திருமதி திருப்புரசுந்தரி அம்மாள்

''அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள் சேர்ந்த
இன்னா உலகம் புகல்'' —குறள்.

சென்னை—ஆலந்தூர் பிரபல லுங்கி வியாபாரி மறைந்த திரு. கண்ணப்ப முதலியார், திருமதி சடையம்மாளின் புதல்வர்

திரு ஏ.கே. லிங்கவேலு செங்குந்தர்.

அந்தமான் ஏ.கே. தங்கவேலு & பிரதர்ஸ் நிறுவனத்தின் தலைவர்
,, சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ் அமைப்பின் செயலாளர்
,, கிரேய்ன்ஸ் டீலர்ஸ் அஸோஸியேசன் தலைவர்
,, வெற்றிமலை முருகன் தேவஸ்தானம் நிர்வாகக் குழுத்தலைவர்
,, தீவுகளின் ''விஷ்வ இந்து பரிஷத்'' தலைவர்
,, விவேகானந்தா கேந்திராவின் பொருளாளர்
,, இராமகிருஷ்ணா மிஷன்—தலைவர்
,, சின்மையா மிஷன்—பொருளாளர்
,, சேவா நிகேதன் அனாதை நிலையத்தின் சிறப்பு ஆலோசகர்.

ஆலந்தூர் அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயத்தின் , நிர்வாகக் குழு உறுப்பினர்.

திரு. ஏ.கே. லிங்கவேலு அவர்கள் அநேக ஆண்டுகள் தன் தாய்மாமன் திரு. டி.எஸ். குருசாமி முதலியார் அவர்களுடன் இருந்து வாழ்ந்தவர். எப்படி திரு. டி.எஸ். குருசாமி முதலியார் அந்தமான் தீவில் பெயரோடும், புகழோடும் வாழ்ந்து வந்தாரோ அதுபோலவே திரு. ஏ.கே. லிங்கவேலு முதலியார் அவர்களும் கோவில் குளம் கட்டுவது, ஏழை எளியவர்களுக்கு உதவுவது போன்ற பல தரும காரியத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு பல நற்செயல்களைச் செய்து வருகிறார். இவர் திருமதி திருப்புரசுந்தரி அம்மாளை மணந்து கொண்டார். இத்தம்பதியர்க்கு மக்கட் செல்வம் இரு ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும்.

தொடர்ந்து அவர் அறநெறியில் நீடு வாழ வேண்டும்.

திருமதி எஸ்.பி. சந்திரா அம்மாள். அவர்களின் அன்பளிப்பு ரூ. 1000.



திருமதி S. P. சந்திரா அம்மாள்

(கற்பகவல்லி பாலிகா பாடசாலை உரிமையாளர்)
21, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

அம்மையார் அவர்கள் செய்த தொண்டுகள், கொடுத்த நன்கொடைகள் பலப்பல அவைகளில் சிலவற்றைக் கீழே காணலாம்.

அருள்மிகு வெள்ளீஸ்வரர் திருக்கோயில் காமாட்சி அம்பாளுக்கு வைர நெக்லசும் கற்பகாம்பாள் லலிதா ஸஹஸ்ரநாமதிரிசதி நாமாக்களுக்கு காசு மாலையும் கொடுத்துள்ளார்கள். திருக்கழுக்குன்றம் அருள்மிகு கங்கை அம்மன் ஆலயத்திருப்பணிக்கு நன்கொடையும், மயிலாப்பூர் கோலவிழி அம்மன் கோயில், வன்னியர் தேனாம்பேட்டை கருமாரி அம்மன் கோயில், மல்லபுரம் அருள்மிகு ராமன் கோயில் முதலிய கோயில்களுக்கு நன்கொடையும், மயிலை கபாலீஸ்வரர் கும்பாபிஷேக திருப்பணிக்கும், ஒருநாள் பூஜைக்கும் நன்கொடையும் அளித்துள்ளார்கள். துர்கா மண்டலிக்கு (ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை சங்கம்) தங்கத் தாலியும், சபரிநகர் ஸ்ரீ ஐயப்பன் ஆலயத் திருப்பணிக்கு பண உதவியும் செய்துள்ளார்கள்.

வெங்கடரமண ஆயுர்வேதிக் ஆஸ்பத்திரிக்கும், கல்லூரிக்கும் நன்கொடையும் திருமயிலை செங்குந்தர் நற்பணி மன்றத்திற்கு பண உதவியும், செல்லம்மாள் பாலா வித்யாலயாவுக்கு நன்கொடையும், மயிலை வேத அத்யயன பாடசாலைக் குழந்தைகளுக்குப் பண உதவியும் அளித்துள்ளார்கள்.

''பரமன் படைத்த மனத்தையும், பணத்தையும் கொண்டு அவர் திருவடி நிழலில் வாழ்ந்து வருவதாகவும், எல்லாம் அவன் அருள், நாம் எங்கிருந்து வந்தோம், நாம் யார், பரமன் படைப்பில் எத்தனையோ ரகங்கள் உள்ளன, எண்ணிப் பார்த்தால் உலகம் மாயை, ஒரு நாடகமேடை'' என்று தன் மனத்தில் இருப்பதை வெளிப்படையாகக் கூறுகிறார். இவர் தன்னை புல்லுக்கும் தாழ்ந்தவராக எண்ணுகிறார். பெருமைப்பட எதுவுமில்லை என்றும் கூறுகிறார். என்னே இவரது அடக்க உணர்வு! ஈதலால் இசைபட வாழ்க இவர் பல்லாண்டு!



Tamil Nadu Forum for Public Affairs திறப்பு விழாவில் பக்ருதின் அலிஅகமத், பொதுச்செயலர் திரு. இரத்தினவேலு.



Tamil Nadu Vigilance Committee பொன்விழாவில் கவர்னர் ஷா, Executive Member திரு. இரத்தினவேலு.



1979 இல் மயிலை அபய நிலையத்தில் தமிழ்நாடு ஆளுநர் திரு. பட்வாரி எக்சிகுயூட்டிவ் மெம்பர் திரு. இரத்தினவேலு.



ஆழ்கடல் மீன்பிடிப்பு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் நுட்ப தொழிலாளர்களுக்கு நீண்ட கால தவணைமுறையில் Deep Sea Trawlers வாங்க மத்திய சர்க்கார் மூலம் நிதிஉதவி அளித்தமைக்கு Secretary, Fisheries Self Employment Technocrats திரு. பி. இரத்தினவேலு, பிரதம மந்திரி திருமதி. இந்திரா காந்திக்கு *1983* இல் அவர் வீட்டிற்குச் சென்று நன்றி தெரிவித்தார்.



1978இல் சென்னையில் கடுமையான தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டபோது பம்பாயிலுள்ள பஞ்சநிவாரணக் கமிட்டியிலிருந்து நான்கு தண்ணீர் வழங்கும் லாரிகளை வரவழைத்து தொண்டர்களைக் கொண்டு தண்ணீர் வழங்கியிருக்கிறார்.

திரு. இரத்தினவேலு எல்லா அரசியல் தலைவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.



1960இல் எமெர்ஜென்சி ரிலீஃப் அசோசியேஷன் ஆரம்பவிழாவிற்கு ஜனாதிபதி இராதாகிருஷ்ணன் வருகை தந்தார். தலைவர் திரு. டி.எஸ். இராமசாமி அய்யர், செயலர் பி. இரத்தினவேலு உடன் இருக்கின்றனர்.



1962இல் பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்கள் ஆணைப்படி மயிலாப்பூர் தொகுதி தேர்தல் பணியில் முழுமூச்சோடு வேலை செய்தார்.




1972இல் திரு. சி. சுப்பிரமணியம் மத்திய நிதி அமைச்சராக பதவி ஏற்றதைப் பாராட்டி மக்கள் கமிட்டி சார்பாக விருந்தளிக்கப்பட்டது. மக்கள் கமிட்டி கன்வீனர் திரு. பி. இரத்தினவேலு ஆவார்.



ராஜஸ்தானியர்கள் அஸோசியேஷன் தலைவர் ஷியால் அவர்கள் தலைமையில் சென்னை நைனியப்ப நாயக்கன் தெருவில் நவீன குளிர் தண்ணீர் டேங்க்கை 1959இல் அறிஞர் அண்ணா அவர்கள் திறந்து வைத்தார். மயிலை பி. இரத்தின வேலு விழாவினை முன்னிருந்து நடத்தி வைத்தார்.


1960இல் சென்னையில் கடுமையான புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடியிருக்க வசதியும், உணவும் உடையும் தபால் இலாக்கா அமைச்சர் Dr. சுப்பராயன் அவர்களால் கொடுக்க ஏற்பாடு செய்தார்.





1960இல் வேதாரண்யம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எமெர்ஜென்சி ரிலீஃப் அசோசியேஷன் தொண்டர்களின் உதவியோடு இரண்டு மாதம் அங்கு தங்கியிருந்து புயல் நிவாரணப் பணி புரிந்திருக்கிறார்.

1970இல் மருத்துவ உதவி மையம் ஒன்றை அமைத்து நடமாடும் மருத்துவ வண்டியில் டாக்டர்களை அழைத்துச் சென்று பிற்பட்ட கிராமப் பகுதிகளில் மருத்துவ உதவி செய்து வந்தார்.





'திருப்பணித் திலகம்' திருமதி பரமேஸ்வரி இரத்தினவேலு
மயிலை திரு. P. இரத்தினவேலு (சின்னி)

Managing Director, Swagath Marine Products (P) Ltd.
Partner, Easwari Constructions.
General Secretary, Tamil Nadu Forum for Public Affairs
President, Patriots Commemoration Trust
General Secretary, Fisheries Techcrafts self Employment Project

மயிலை அந்தமான் சேட் திரு. கே. பொன்னுசாமி முதலியார் திருமதி ஞானாம்பாள் அம்மையார் தம்பதிகளுக்கு ஐந்தாவது மகனாக மயிலையில் 1933 இல் திரு.பி. இரத்தினவேலு (சின்னி) பிறந்தார். இவர் அந்தமானில் தன் தகப்பனார் நிறுவிய பள்ளியிலும், மயிலையில் சண்முகானந்தா பாடசாலையிலும், பிறகு பி.எஸ். உயர்நிலைப்பள்ளியிலும் கல்வி பயின்றார்.

இவர் 1968 ஆம் ஆண்டில் திருமதி பரமேஸ்வரி அம்மையாரை மணந்து நல்லறமாம் இல்லற வாழ்க்கையை இனிதேநடத்தி வளமுடன் வாழ்ந்து வருகின்றார். திருமதி பரமேஸ்வரி 1958 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தமிழகத்தில் முதல் மாணவியாக வெற்றி பெற்ற பெருமைக்கு உரியவர். இவர் தன் கணவர் திரு. இரத்தினவேலு அவர்களோடு ஒத்துழைத்து கோயில் திருப்பணிகள் பல செய்து கொண்டிருக்கின்றார். இவரது திருப்பணித் தொண்டினைப் பாராட்டி காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராசாரிய சுவாமிகள் 1988 இல் திருக்கோயில் திருப்பணித்திலகம் என்ற பட்டத்தை இவ்வம்மையாருக்கு சூட்டியிருக்கிறார்கள்.

திரு. இரத்தினவேலு அவர்கள் பொதுத் தொண்டு ஆற்றுவதில் மிக்க ஆர்வலர்.



1959 இல் உடல் ஊனமுற்றோர்க்கு எந்த சமூக ஸ்தாபனமும் உதவி செய்ய முன் வராதபோது திரு. இரத்தினவேலு அவர்கள் கிரிப்பிள்ஸ் எய்ட் சொஸைட்டி ஒன்றை ஆரம்பித்து பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் மயிலை எம்.எஸ். இராதாகிருஷ்ணன் என்பவருக்கு (கால் ஊனமுற்றோர்) மூன்று சக்கர சைக்கிள் வண்டி வழங்கினார்.



திருமயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் கோயிலில் ஜனாதிபதி ஜெயில்சிங் வருகைதந்தபோது திரு. இரத்தினவேலு தம்பதிகள் ஜனாதிபதியை அழைத்துச் செல்கின்றனர்.



திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் திரு. இரத்தினவேலு தம்பதிகளுக்கு அருளாசி வழங்குகிறார்.

திரு. இரத்தினவேலு அவர்கள் இளைய தலைமுறையினரும் நம் சமூகப் பெருமக்களும் தான் விரும்பும் சில நெறிகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று விழைகின்றார்.

1. முதலில் இளைய தலைமுறையினர் தங்களை விட வயதில் மூத்தவர்களுக்கு கீழ்ப்படிந்து நடந்து கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும். அப்படி அவர்கள் நடந்தால் பிறகு கட்டளையிடும் பதவி தானாக அவர்களுக்கு வரும்.

2. இந்தியாவிற்கு விடுதலை பெற்றுத்தந்த தியாகிகளின் வரலாறுகளை இளைய தலைமுறையினர். எல்லோரும் படிக்கவேண்டும். அங்ஙனம் சுதந்திரபோராட்ட வீரர்களைப் பற்றியும், தியாகிகளைப் பற்றியும் ஆழ்ந்து படிப்பார்களேயானால் அவர்களுடைய வாழ்க்கை நடைமுறையில், தன்னம்பிக்கை, தன்னடக்கம், தியாகவுணர்வு நல்லொழுக்கம் முதலிய பண்புகள் மிளிரும் என்பது திண்ணம்,


3. நிதி மிகுந்தவர் தன் வருமானத்தில் குறைந்தது பத்து சதவிகித தொகையை ஏழை எளிய மக்களுக்கு செலவிடுவது நலமாகும்.

இப்போது இவரது குறிக்கோள்களில் சில!


1. குன்றத்தூர் அருள்மிகு பொன்னியம்மன் கோயில் அருகாமையிலுள்ள காலி இடத்தில் ஒரு Polytechnic Institute அமைத்தல்.

2. திருமயிலை அருள்மிகு வெள்ளீசுவரர் திருக்கோயில் இராஜகோபுரம் கட்டுதல்.

1957 இல் இலங்கை அரசு தமிழ் ஆட்சி மொழியாக இருந்ததை ரத்து செய்து இலங்கையில் வாழும் தமிழ் மக்களை இரண்டாந்தர குடி மக்களாக ஆக்குவதற்கு திட்டமிட்டது. இதை அறிந்த இலங்கைத்தமிழ் ஐக்கிய கட்சியின் பொதுச்செயலாளர் திரு. வன்னியர் சிங்கம், M.P அவர்கள் தமிழகத்திற்கு வந்து பல தலைவர்களிடம் பேசினார். அப்போது சென்னை நகர பொதுமக்கள் கமிட்டி சார்பில் சோஷலிஸ்ட் தலைவர் திரு. V.R இராதாகிருஷ்ணன் அவர்கள் திரு. P. இரத்தினவேலு அவர்களோடு இணைந்து, சென்னை கோகலேஹாலில் (இலங்கை தமிழர் தினம்) என்று ஒரு நாளை குறிப்பிட்டு பல தலைவர்களை அழைத்துப்பேசும்படி ஏற்பாடு செய்தார். இக்கூட்டத்தில் சிறப்பு சொற்பொழி ஆற்றியவர்கள் திரு. வன்னியர் சிங்கம் கம்யூனிஸ்ட்தலைவர் ப. ஜீவானந்தம் ம.பொ.சிவஞானம், நாவலர் நெடுஞ்செழியன் T. செங்கல்வராயன், N.V. நடராஜன் முதலியோர்.




நம் சமூகத்தினரால் பரிபாலிக்கப்பட்டு வரும் திருக்கோயில்களைப் பழுது பார்த்து, புதிய கோபுரங்கள், மண்டபங்கள் எழுப்பி குடமுழுக்கு விழா நடத்துவதில் இவருக்கு இணை இவரேதான். இத்தொண்டில் இவருடன் இணைந்து செயல்படும் இவரது மனைவி பாராட்டுதலுக்கு உரியவர்.



சென்னை சைதாப்பேட்டையில் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள செங்குந்த விநாயகருக்கு திருக்கோயிலும், இராஜகோபுரமும் கட்டி குடமுழுக்கு விழா இவரது நன்கொடையால் 1988இல் நடைபெற்றது.

குன்றத்தூர் தேவி பொன்னியம்மன் கோயிலை புதுப்பிப்பதற்கும் சிறப்பான முறையில் குடமுழுக்கு விழா நடத்துவதற்கும் பொருள் உதவியும் ஒத்துழைப்பும் அளித்தவர்கள் திரு. இரத்தின வேலு தம்பதிகள்.






1984இல் விண்வெளியில் முதன் முதலாகச் சென்று வெற்றியுடன் திரும்பிய இந்தியர் ராகேஷ்சர்மா அவர்களுடன் திரு. இரத்தினவேலு

உலக சமாதான கமிட்டிக்கு 4 ஆவது முறையாக 1977இல் தேர்ந்தெடுக்கப் பட்ட ரமேஷ் சந்திரா அவர்களை தமிழ் நாடு சமாதான கழகத்தின் சார்பாக பாராட்டு விருந்தில் பி. இரத்தினவேலு, எம். கல்யாணசுந்தரம், சென்னைப் பல் கலைக்கழக துணைவேந்தர் சுந்தரவடி வேலு, மற்றும் பலர்.



திரு. இரத்தினவேலு நம் இந்தியாவிற்கு விடுதலை வாங்கித் தந்த தியாகிகளை கௌரவிக்க எப்போதும் நினைத்துக் கொண்டு இருக்கிறார். தியாகிகள் நினைவுச் சின்னம் ஒன்றை எழுப்ப சிவகங்கையில் 30 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் ஒன்றை ரூ. 60,000-க்கு வாங்கி ஆவன செய்து கொண்டிருக்கிறார்.



தியாகிகள் நினைவுக் கழகம் ஒன்றை நிறுவி, அதன் மூலம் சமூக சீர்திருத்தமும் பொதுத் தொண்டும், செய்தமைக்கு திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களால் 1968-ல் பாராட்டப்பட்டிருக்கிறார்.


இவர் மேற்படி கழகத்தின் செயலாளராக இருந்த போது தூக்கிலிடப்பட்ட 108 சுதந்திரப் போராட்ட தியாகிகள் நினைவாக சென்னை பரங்கிமலை அருகில் 1966இல் 108 மரங்கள் நடும் விழாவில் திருப்பூர்க்குமரன் மனைவி, வாஞ்சிநாதன் மனைவி, திரு. பக்தவத்சலம், திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



1985 இல் முன்னாள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களின் 60 ஆண்டுகள் பொதுச் சேவையைப் பாராட்டி மலர்மாலை அணிவிக்கிறார். திரு. இரத்தினவேலு.

1985 இல் ஜனாதிபதி ஜெயில்சிங் அந்தமான் போர்ட் பிளேயருக்கு வருகை தந்த போது நம் செங்குந்தர் குல வர்த்தகர்களை அறிமுகப்படுத்தியிருக்கிறார்.





ஜனாதிபதி ஜெயில்சிங்கின் விருந்தினராக அந்தமான் தீவுகளுக்கு இந்தியப் போர்க் கப்பல் ஐ.என்.எஸ் விக்ரமில் பிரயாணம் செய்திருக்கிறார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் 125 ஆம் ஆண்டு விழாவின் போது ஜனாதிபதி ஜெயில்சிங், செட்டி நாட்டரசர் முத்தைய செட்டியார், பாதுகாப்பு அமைச்சர் திரு. வெங்கட்ராமன் ஆகிய மூவருக்கும் டாக்டர் பட்டம் வழங்கி விருந்து அளிக்கும்போது திரு. இரத்தினவேலு உடன் இருக்கிறார்.





1987 இல் திரு. ஆர். வெங்கட்ராமன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பிறகு டெல்லி ராஷ்டிரபதி பவனுக்குச் சென்று அவரைப் பாராட்டியிருக்கிறார். உடன் இருப்பவர் ஜானகி வெங்கட்ராமன்.

பின்னர் தலைவர், துணைத் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர் மற்றுமுள்ள செயற்குழு உறுப்பினர்களின் ஆதரவுடன் மேலும் சங்கத்தை தீவிரமாக வளர்ப்பதற்காக சங்கத்தின் பெயர்ப் பலகை திறப்பு விழாவும், கல்வி நிதி ஆரம்ப விழாவும் 13.6.76 அன்று திரு. S.D. பொன்னுசாமி செங்குந்தர் இல்லத்தில் நடந்தது. அன்றைய தினத்திலிருந்து சங்கம் அவரில்லத்திலேயே இயங்கிக் கொண்டு வருகிறது. அன்று அலுவலகப் பெயர்ப் பலகையை திரு. M.T. குப்புசாமி செங்குந்தரும், கல்வி நிதியை அமரர் திரு. M. P. புனிதவேலு செங்குந்தர் ரூ. 501/-ஐ முதன் முதலாகக் கொடுத்தும் துவக்கி வைத்தார்கள். அன்றே ரூ. 2000/-க்கு மேல் கல்வி நிதிக்காக வசூலாகியது. அதுவே இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு திருப்புமுனை என்று கூறினால் மிகையாகாது.

1976 ஜுன் மாதத்திலிருந்து டிசம்பர் மாதத்திற்குள் பல ஆயுள் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள். கல்வி நிதிக்கு பெருந்தொகை வசூலிக்கப்பட்டது. இதற்கு அமரர் திரு. M. P. புனிதவேலு செங்குந்தர் அவர்கள் பெருந்துணையாக இருந்தார்கள்.

முதன் முதலில் திரு. T.S. சுப்பிரமணிய செங்குந்தர் அவர்கள் தம் வீட்டில் நடைபெற்ற திருமணத்தில் ரூ. 250/-ஐ கல்வி நிதியாகக் கொடுத்து ஒரு முன் உதாரணமாக வழிகாட்டினார்கள். அதனையொட்டி திருமண வாழ்த்திதழ் நம் சங்கத்தால் அச்சடிக்கப்பட்டு எல்லாத் திருமணங்களிலும் படித்துக் கொடுக்கப்பட்டு கல்வி நிதிக்கு நன்கொடை வசூலிக்கப்பட்டு வருகிறது. இது நம் மரபினரிடையே ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கி வருவதோடு கல்விநிதி வளர்ச்சிக்கும் பேருதவியாக இருந்து வருகிறது. நம் மாவட்டத்தில் தான் இந்த மாதிரியான நூதன முறை செயல்பட்டு வருகிறது.

1976-ஆம் ஆண்டு இறுதியில் ஈரோட்டில் தலைமைச் சங்க மாநாடு நடைபெறுவதற்கு முன்பு இச்சங்கத்தின் சார்பில் 12.12.76 அன்று ஒரு கருத்தரங்கு எல்லா மாவட்டங்களிலிருந்தும் பேச்சாளர்களை வரவழைத்து மிகச் சீரிய முறையில் சென்னை சைதாப்பேட்டையில் நடைபெற்றது. இதில் தலைமைச் சங்க பொறுப்பாளர்கள் பலரும், பலமாவட்ட செயலாளர்களும் பங்கேற்று சிறப்பித்தனர். இதனையொட்டி முதன் முதலில் ஒரு கருத்தரங்கு மலரும் வெளியிடப்பட்டது. இதன் மூலம் தான் தலைமைச் சங்கத்திற்கும், மற்ற மாவட்டங்களிலுள்ள சங்கங்களுக்கும் நம்முடைய ஏனைய கிராமங்களிலுள்ள நம்முடைய சமூக பெருமக்களுக்கும் நம்முடைய சங்க செயல்பற்றி தெரிய வந்தது.

தலைமைச் சங்கத்தால் ஈரோட்டில் 1976 டிசம்பர் 25, 26 தேதிகளில் நடத்தப்பட்ட மாநாட்டில் நம் சங்க முயற்சியால் நம் சங்கத்தைத் தோற்றுவிப்பதற்கு பெரும் உறுதுணையாய் இருந்த அமரர் திரு. தி. அ. சண்முக செங்குந்தர் அவர்களின் உருவப்படத்தை நமது சங்கத்தால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டு, நம் சங்கத் தலைவர் திரு. P.S. பாலசுப்பிரமணிய செங்குந்தர் அவர்களாலேயே திறந்தும் வைக்கப்பட்டது போற்றுதற்குரியதாகும். தவிர இந்த மாநாட்டில் நம் சங்க உறுப்பினர்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டனர். தலைமைச் சங்க பொறுப்பாளர்கள் நம் சங்க செயல்திறனை அறிந்து நம் சங்க செயற்குழு உறுப்பினர் திரு. தி.ரா. செல்வராசன் செங்குந்தர் அவர்களை தலைமைச் சங்க செயலாளர்களுள் ஒருவராகவும், மற்றும் சிலரை செயற்குழு உறுப்பினர்களாகவும், சங்க செயலாளரை அவர்களால் நியமிக்கப்பட்ட குழுக்களில் ஒரு குழுவிற்கு செயலாளராகவும் நியமித்தனர்.

செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சில கிராமங்களிலுள்ள நம் சமூக மக்களின் விருப்பத்திற்கிணங்க நம் சங்கத்தின் பெயர் சென்னை செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம் என்று மாற்றப்பட்டு 21.7.78 அன்று நம் சங்கத்தைப் பதிவு பெறச் செய்தது ஒரு சிறப்பான முயற்சியாகும். பதிவு செய்வதற்கு நமது செயற்குழு உறுப்பினர் திரு. க. முருகேசன் செங்குந்தர் அவர்கள் பெரும் உறுதுணையாக இருந்தார்.

நம் சங்கத்தின் 7ஆம் ஆண்டு விழா 26.12.79 அன்று சைதாப்பேட்டையில் அருள்மிகு திருக்காரணீசொர்ணாம்பிகை காரணீஸ்வரர் திருமண மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அது சமயம் திருநாகேஸ்வரம் திரு. P. கிருஷ்ணமூர்த்தி செங்குந்தர் அவர்களின் மணிவிழாவும் சேர்த்து கொண்டாடப்பட்டது. சங்கச் சார்பில் இரண்டாவது முறையாக ஒரு மலரும் வெளியிடப்பட்டது. மணி விழா நினைவாக திரு. P. கிருஷ்ணமூர்த்தி செங்குந்தர் ரூ. 1000/- நன்கொடையாகக் கல்வி நிதிக்கு வழங்கினார்கள்.

2. தோற்றமும் - வளர்ச்சியும்

சரவண பழநிவேலு
(செயலாளர், சென்னை செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம்)

நமது சங்கம் 26.3.1972 ஞாயிறு மாலை 6 மணி அளவில் திருமயிலை வெள்ளீசுவரர் ஆலய திருமண மண்டபத்தில் தலைச் சங்க பிரசாரகர் பெரியவர் தி. அ. சண்முக செங்குந்தர் தலைமையில் துவக்கப்பட்டது. திருகாஞ்சி மணிமொழியார் மற்றும் செங்குந்தர் குலப் பெரு மக்கள் பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் சென்னையில் ''சென்னை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம்'' என்று ஒன்றை ஏற்படுத்துவது என்றும், இதில் சென்னை தபால் எண்ணுள்ள சென்னையைச் சுற்றியுள்ள கிராமங்களையும் சேர்த்துக் கொண்டு உறுப்பினர்களைச் சேர்ப்பது என்றும், உறுப்பினர்கள் கட்டணம் ஆண்டுக் கட்டணம் ரூ. 1/- என்றும், ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ. 25/- என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டம் கூடிய அன்றே 20 ஆயுள் உறுப்பினர்கள் சேர்ந்தனர். அக்கூட்டத்தில் திரு. P. S. பாலசுப்பிரமணிய செங்குந்தர் தலைவராகவும், திரு. M. K. பாலசுந்தர செங்குந்தர், திரு. V. N. ஆறுமுக செங்குந்தர் B.Com., F.C.A. ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் திரு. சரவணபழநிவேலு, திரு. T. V. கந்தசாமி செங்குந்தர் ஆகியோர் செயலாளர்களாகவும், திரு. A.V. இராமநாத செங்குந்தர் M.A., அவர்கள் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சங்கத்திற்கு தனி இடம் ஒன்றை ஏற்படுத்தும் வரை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. P. S. பாலசுப்பிரமணிய செங்குந்தர் இல்லத்தில் (10, T.S.V. கோயில் தெரு, மயிலை, சென்னை 600 004-ல்) இயங்கி வர வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சங்க வளர்ச்சிக்காக திரு காஞ்சி மணிமொழியார் திரு. P. V. கிருஷ்ணமூர்த்தி செங்குந்தர் திரு. தி. அ. சண்முக செங்குந்தர் ஆகியோர் தலைமையில் பல கிராமங்களில் சங்க அவசியம் குறித்தும், உறுப்பினர்கள் சேர்ப்பது குறித்தும் பல விளக்கக் கூட்டங்கள் இச்சங்கத்தால் நடத்தப்பட்டு படிப்படியாக உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள். இதில் சொற்பொழிவாற்ற அழைத்த பொழுது அமரர் திரு. ந. ரா. முருகவேள், திரு. டாக்டர் சி.பா. திரு. அம்பைசங்கரனார், திரு. P.S. சாம்பசிவம் போன்றவர்கள், மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். இதில் சோமங்கலம் கிராமத்தில் ஒரு கூட்டம் நடத்திவிட்டு பேருந்து கிடைக்காமையினால் திரு. ந.ரா. முருகவேள் திரு. M.K. பாலசுந்தரம் திரு. P. S. சாம்பசிவம், திரு. சரவண பழநிவேலு போன்றவர்கள் சோமங்கலத்திலிருந்து குன்றத்தூர் வரை நடந்து வந்து அங்கிருந்து பேருந்து பிடித்து சைதாப்பேட்டைக்கு இரவு 11-30 மணிக்கு வந்தடைந்தது ஒரு மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

முதன் முதலாக 7-7-74 அன்று சென்னை சைதாப்பேட்டை திருக்காரணீஸ்வரர் ஆலய மண்டபத்தில் திரு. C. நடராஜ செங்குந்தர் B.A., B.L. தென்னிந்திய செங்குந்தர் மகாசன சங்கத் துணைத் தலைவர் அவர்கள் தலைமையில் நமது சங்க செயற்குழுவினரால் தயாரிக்கப்பட்ட சட்ட திட்டங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டது. அதில் திரு. P.S. பாலசுப்பிரமணிய செங்குந்தர் தலைவராகவும் திரு. M.K. பாலசுந்தர செங்குந்தர், திரு. V.N. ஆறுமுகம் செங்குந்தர், திரு. S.D. பொன்னுசாமி செங்குந்தர், திரு. S.V. இராசாபாதர் செங்குந்தர் திரு. K. தர்மலிங்கம் செங்குந்தர் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் பொதுச் செயலாளராக சரவணபழநிவேலு செங்குந்தரும் செயலாளராக திரு. M. வேதாசல செங்குந்தரும், பொருளாளராக திரு. A.B. தண்டாயுதபாணி செங்குந்தர் B.A. அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

நமது சங்கத்தின் பெரு முயற்சியினால் 1974ம் ஆண்டே நமது சங்கத்தின் சார்பில் தென்னிந்திய செங்குந்த மகாசன சங்க செயற்குழு உறுப்பினர்களாக திரு. S.D. பொன்னுசாமி செங்குந்தர், திரு. S.V. இராசாபாதர் செங்குந்தர் திரு. சரவணபழநிவேலு செங்குந்தர், திரு. T.C. குப்புசாமி செங்குந்தர், திரு. P.S. சாம்பசிவம் செங்குந்தர் ஆகிய ஐவர் சேர்க்கப்பட்டனர்.

சங்கங்கள்

சங்கங்களால் — நல்ல
சங்கங்களால் — மக்கள்
சாதித்தல் கூடும் பெரும் பெருங் காரியம்.

சிங்கங்கள் போல் — இளம்
சிங்கங்கள் போல் — பலம்
சேர்ந்திடும் ஒற்றுமை சார்ந்திட லாலே.

பொங்கும் நிலா — ஒளி
பொங்கும் நிலா — எனப்
பூரிக்கும் நெஞ்சிற் புதுப்புதுக் கோரிக்கை.

மங்கிடுமோ? — உள்ளம்
மங்கிடுமோ? — என்றும்
மங்காது நல்லறிவும்தெளிவும்வரும்.

சங்கங்களே — நல்ல
சங்கங்களே — அந்தச்
சட்டதிட் டங்களை மூச்சென வேகாக்க.

அங்கம் கொள்க! — அதில்
அங்கம் கொள்க! — எனில்
அன்பினை மேற்கொண்டு முன்னின்
றுழைத்திட.

எங்கும் சொல்க! — கொள்கை
எங்கும் சொல்க! — இதில்
ஏது தடை வந்த போதிலும் அஞ்சற்க!

தங்கத்தைப் போல் — கட்டித்
தங்கத்தைப் போல் — மக்கள்
தங்களை எண்ணுக! சங்கங்க ளிற்சேர்க்க!
தங்கத்தைப் போல்...

கொள்கை இல்லார் — ஒரு
கொள்கை இல்லார் — மக்கள்
கூட்டத்தில் இல்லை! சங்கங்களின்
சார்பினைத்

தள்ளுவதோ? — மக்கள்
தள்ளுவதோ? — சங்கத்
தாய்வந்து தாவும் தளிர்க்கைத் தீதென்று

விள்ளுவதோ? — மக்கள்
விள்ளுவதோ? — மக்கள்
வெற்றியெல் லாம்சங்க மேன்மையி
லேஉண்டு

கொள்ளுகவே — வெறி
கொள்ளுகவே — சங்கம்
கூட்டிடவும் கொள்கை நாட்டிடவும் வெறி
கொள்ளுகவே...

ஆதலினால் — உண்மை
ஆதலினால் — சங்கம்
அத்தனையும் அதை ஒத்து நடத்துக!

உள்ளத்திலே — நல்ல
உள்ளத்திலே — எழுத்
தூறி வரும்கொள்கை யாகிய பைம்புனல்.

வெள்ளத்திலே — இன்ப
வெள்ளத்திலே — இந்த
மேதினி மக்கள் நலம்பெறு வாரென்று

தள்ளத் தகாப் — பல
தள்ளத் தகா — நல்ல
சங்கங்கள் எங்கணும் நிறுவுவர் சான்றவர்;

பள்ளத்திலே — இருட்
பள்ளத்திலே — வீழ்ந்த
பஞ்சை கட்கும்சங்கம் நெஞ்சிற் சுடர்
கூட்டும் சங்கங்களால்...

தாய் தந்தையர் — நல்ல
தாய் தந்தையர் — மண்ணில்
தாம்பெற்ற பிள்ளைகள் சங்கத்திற்கே என்ற

நேயத்தினால் — மிக்க
நேயத்தினால் — நித்தம்
நித்தம் வளர்க்க! நற்புத்தி புகட்டுக!

ஆய பொருள் — உண்
டாய பொருள்— முற்றும்
அங்கங் கிருந்திடில் சங்கங்களுக் கென்றே

தூய எண்ணம் — மிகு
தூய எண்ணம் — இங்குத்
தோன்றிடில் இன்பங்கள் தோன்றிடும்
ஞாலத்தில்

—**பாவேந்தர் பாரதி தாசன்**

சென்னை - செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம்

(துவக்கம்: 1972. பதிவு எண் 10/1978)

76, கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை—600 015

I. சங்க செயல் முறைகள்

1. குறிக்கோள்கள், நோக்கங்கள்

1. செங்குந்தர் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற மடைவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

2. செங்குந்தர்கள் பெரும்பாலாக வதியும் சென்னை மாவட்டம், அதோடு செங்கை மாவட்டத்தோடு இணைந்துள்ள சென்னையைச் சார்ந்த சில ஊர்கள் ஆகிய இடங்களிலே செங்குந்தர் கிளைச் சங்கங்கள், செங்குந்தர் இளைஞர் அணிகள் ஏற்படுத்துதல்; அவ்வாறு ஏற்படுத்தும் சங்கங்களை இச்சங்கத்தின் கிளைச் சங்கங்களாக ஒன்று சேர்த்தல்.

3. சென்னை - செங்கை மாவட்டங்களில் செங்குந்தர் மாணவர் சங்கங்கள், மாணவர் இல்லங்கள் அமைத்தல், ஏழை மாணவர்களுக்குச் சாத்தியமான எல்லா முறைகளிலும் உதவ நடவடிக்கை எடுத்தல்.

4. வசதி ஏற்படும்பொழுது சென்னை - செங்கை மாவட்டங்களில் சங்கத்தின் சார்பில் ஒரு பத்திரிகை நடத்துதல்; செங்குந்தர்கள் அந்தஸ்து, சமுதாய, பொருளாதார, கல்வி, அரசியல் முதலிய துறைகளில் அபிவிருத்தி அடைவதற்காக சட்டபூர்வமான நடவடிக்கைகள் மூலம் கிளர்ச்சி செய்தல்.

5. செங்குந்தர் சமூகத்தினரிடையே இருக்கும் கட்சிப் பிளவுகளை இச்சங்கத்தின் மூலம் போக்கி, ஒற்றுமை உண்டாக்குதல்; அவர்கள் அனைவரும் ஒன்றே என்ற உணர்ச்சியை வளர்த்தல்.

6. இச் சங்கத்தின் சொத்துக்களைக் காப்பாற்றவும், பரிபாலிக்கவும் சங்கத்தின் பேரால் ஸ்தாவர, ஜெங்கம (அசையும், அசையா) சொத்துக்களை வாங்கவும், விற்கவும் ஒரு பொறுப்பாட்சியை (Trust Board) ஏற்படுத்துதல்.

7. சமூகத்தவரின் நலனுக்காக பொருள் சேர்த்தல், குறிப்பிட்ட அறக்கட்டளைகளை (Trust) ஏற்படுத்துதல்.

[இவை மேற்படி சங்கத்தின் சட்ட திட்டங்கள் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.]

9.5.76 அன்று நடந்த செயற்குழு கூட்டத்தில், 13.6.76 அன்று காலை மாவட்ட சங்க அலுவலக திறப்பு விழா திரு. S.D. பொன்னுசாமி முதலியார் அவர்கள் இல்லத்தில் அவருடைய முழு ஒப்புதல் பேரிலும் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. மற்றும் அன்றே கல்வி நிதி துவக்க விழாவும் அதே இடத்தில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. 13.6.76 அன்று நடந்த கூட்டத்திற்கு திருக்காரணி திரு. M.P. புனிதவேலு முதலியார் தலைமை தாங்கி கல்விநிதியை துவக்கி வைத்து, அக் கல்வி நிதிக்கு ரூபாய் 501-கொடுத்தார். கல்வி நிதி துவக்குவதற்கு மூலகாரணமாக இருந்தவர் பெருந்தகை திரு. M.P. புனிதவேலு முதலியார் அவர்கள்தான். மற்றும் அவர் தனக்குக் கிடைக்கும் வருடாந்திர வருமானத்தில் கணிசமான அளவிற்கு கல்வி நிதிக்குத் தொகை தருவதாக உறுதி அளித்தார். அவர் இருந்தவரையில் திருமணங்களில் அவரே முன்நின்று கல்வி நிதிக்கு பணம் வசூலித்துக் கொடுத்தார். அவர் எதிர்பாராதவிதமாக 1977-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ஆம் நாள் அகால மரணம் அடைந்தார். அன்னார் மறைவு நம் சங்கத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

நம் சங்கம் முதல் முதலாக எஸ். எஸ்.எல்.சி., மெட்ரிகுலேசன், ஹையர் செகண்டரி ஆகிய தேர்வுகளில் சராசரி 60 மதிப்பெண்கள் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெற்றுள்ள மாணவ மாணவிகளுக்கு 15.10.78 அன்று நடந்த நம் சங்கக் கூட்டத்தில் ஊக்கப் பரிசும், நற்சான்றிதழும் வழங்கப்பட்டது. சில ஏழைப் பிள்ளைகளுக்கும் சொற்ப பண உதவியும் அளிக்கப்பட்டது. இப்பரிசளிப்பு விழா தொடர்ந்து ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றது. இஃது நம் சங்கத்தின் சீரிய கல்விப்பணி.

நம் சங்கத்தின் கல்வி வைப்பு நிதி ரூபாய், 1,00,000-த்தை தாண்டி விட்டது. அதை மேலும் பன்மடங்கு பெருக்குவதற்கு சங்க உறுப்பினர்களும், செயற்குழு உறுப்பினர்களும் சேர்ந்து பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

நான் சங்கத்தின் தலைவனாகத் தொடர்ந்து 15½ ஆண்டுகள் பணியாற்றினேன். இடையில் என் தலைமைக்கு எதிர்ப்புக் குரல் ஒலித்தது! ஒரு சமயம் செயற்குழு கூட்டம் முடிந்து நான் வீட்டிற்கு புறப்பட்டு வரும் பொழுது, ஓர் செயற்குழு உறுப்பினர் என்னை அணுகி ''நீங்கள் தான் எப்பொழுதும் தலைவனாக இருக்க வேண்டுமா?'' என்று கேட்டார். இக்கேள்வியைக் கேட்டு நான் பதட்டப்படவில்லை. தொடர்ந்து நானே தலைமைப் பதவியில் இருப்பதால் இம்மாதிரியான கேள்வி எழுவது இயல்புதானே என்று எடுத்துக் கொண்டேன். கேள்வி கேட்டவரைப் பார்த்து, ''ஐயா நான் தலைவனாக இருப்பதும், இல்லாததும் உங்கள் கையில்தானே இருக்கின்றது, கேள்வி கேட்பதை விட்டு விட்டு என்னை மாற்றுவதற்கான செயலில் ஈடுபடுங்களேன்,'' என்று விடை கூறினேன். அதற்கு அவர் உங்களை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஒரு பேச்சுக்காக சொன்னேன் என்று கூறி சமாளித்தார். நான் பதவி வகித்த அந்த பதினைந்து ஆண்டுகளில் ஒரே ஒருமுறைதான் எதிர்ப்புக்குரல் ஒலித்தது. மற்றபடி உறுப்பினர்கள் என்பாலுள்ள அன்பின் காரணமாக என்னையே தொடர்ந்து தலைமைப் பதவியில் இருக்கச் செய்தார்கள். அவர்கள் அன்புக்கு என் உளங்கனிந்த நன்றியை உரிமையாக்குகின்றேன். என் முதுமையின் காரணமாக நானே பதவி விலகி தற்போது ஒய்வு எடுத்துக் கொண்டேன்.

அந்தப் பதினைந்து ஆண்டுகள் எனக்கு ஒத்துழைப்பு நல்கிய உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன். எனது சங்கப் பணியில் ஏதேனும் நிறை இருந்தால் அதற்குக் காரணம் உறுப்பினர்களின் அன்பும் ஆதரவும், ஒத்துழைப்பும்தான். குறை இருந்தால் அது என்னுடையது. எனக்கு ஒத்துழைப்பு தந்தது போல், தற்போது தலைவராக இருக்கும் திருவாளர் S.D. பொன்னுசாமி முதலியார் அவர்களுக்கும் முழு ஆதரவு அளிக்கும்படி உறுப்பினர்களை வேண்டுகிறேன். சங்கம் வளர்வதற்கு தனி மனிதனின் முயற்சி மட்டும் போதாது. கூட்டு முயற்சிதான் தேவை.

வாழ்க, வளர்க நம் சங்கம்!

நூல்களில் மூன்றுவகை உண்டு. அவை நண்பனுக்கு உரைப்பது போல் இருப்பவை, மனைவி கணவனைத் தன் வயப்படுத்தல் போல் இருப்பவை, ஆசிரியன் மாணவனைக் கண்டித்தல் போல் இருப்பவை.

ஞானியார்.

3. அந்த பதினைந்து ஆண்டுகள்!

பொ. சி. பாலசுப்பிரமணியம்
(முன்னாள் தலைவர், சென்னை செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம்)

1972 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இரண்டாம் வாரத்தில் ஒரு நாள் தலைமைச் சங்க பிரசாரகரும், சைவசமயச் சொற்பொழிவாளருமான திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் என் இல்லத்திற்கு வந்திருந்தார். அவர் என்னிடம் தலைமைச் சங்கம் திருப்திகரமாக செயல்படவில்லை என்று கூறி அதற்குரிய சில காரணங்களை எடுத்துக் கூறினார். ஆதலால் மாவட்ட சங்கங்கள் அமைத்து, அவைகள் எவ்வாறு செயல்பட வேண்டுமென்று விளக்கிக் கூறினார். ஆதலால் உடனடியாக சென்னை மாவட்டக் கிளையை ஆரம்பிப்பதற்கு முக்கியமானவர்களை அழைத்து திருமயிலையில் ஒரு சமூகக் கூட்டம் போடப் போவதாகவும், அக்கூட்டத்தில் என்னை கலந்து கொள்ளுமாறும் கூறிவிட்டு என்னிடம் விடை பெற்றுக் கொண்டார்.

அவர் கூறியபடி 26.3.1972 ஞாயிறு மாலை 6.00 மணியளவில் திருமயிலை வெள்ளீசுவரர் கோயிலிலுள்ள திருமண மண்டபத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு நம் குலப் பிரமுகர்கள் பலர் வந்திருந்தனர். அக் கூட்டத்தை திருவாளர் தி. அ. சண்முக முதலியார் தலைமை தாங்கி நடத்தினார். திரு. பி.சே. மாணிக்கவாசகரும் (மணிமொழியார்) கலந்துக் கொண்டார். தலைவரும், திரு. பி.சே. மாணிக்கவாசகரும், மற்றும் சிலரும், சென்னை மாவட்டசங்கம் ஏன் அமைக்க வேண்டும் என்று எடுத்துக் கூறினார்கள். பின்னர் சென்னை மாவட்ட சங்கம் உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்று ஏகமனதாக அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அதை உருவாக்கி நடத்திச் செல்ல செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அச் செயற்குழுவிற்கு என்னைத் தலைவனாக அறிவித்ததும், எனக்கு எவ்வாறு நடத்திச் செல்லப் போகின்றோம் என்ற அச்சம் ஏற்பட்டது. இருந்தாலும் செயற்குழு உறுப்பினர்களின் உதவியால் செவ்வனே நடத்திச் செல்லலாம் என்று தைரியப்படுத்திக் கொண்டேன்.

பின்னர் நான் தலைமை ஏற்று சில செயற்குழுக் கூட்டங்கள் திருப்திகரமாக நடத்தினேன். செயற்குழு உறுப்பினர்கள் உதவியால் ஆயுள் சந்தாதாரர்களையும், வருட சந்தாதாரர்களையும் சேர்த்தோம். 1973 ஆம் ஆண்டு துவக்கத்திலேயே எனக்கு சில எதிர்பாராத இடையூறுகள் ஏற்பட்டன. அதனால் மாவட்ட சங்க நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல் ஆகிவிட்டது. அச்சமயத்தில் முக்கியமாக திருவாளர்கள் S.V. ராஜாபாதர் முதலியார், S.D. பொன்னுசாமி முதலியார், M. வேதாசல முதலியார், செயலாளர் S. சரவண பழநிவேலு முதலியார் மாவட்ட சங்கத்தை சீரிய முறையில் செயல்பட வைத்திருந்தனர்.

11.8.74 அன்று சென்னை மாவட்ட செங்குந்த மகாசன சங்கத்தின் பேரவைக் கூட்டம் சைதாப்பேட்டை திருக்காரணீசுவரர் கோயில் மண்டபத்தில் நடந்தது. அக்கூட்டத்தில் நம் சங்கத்தின் சட்ட திட்டங்களை பரீசீலித்து ஏற்றுக் கொள்ளப்பட்டு, பொதுத் தேர்தலும் நடந்தது. அக்கூட்டத்தில் நான் பங்கு கொள்ள முடியாமல் போய்விட்டது. இருந்தாலும் என்னை மறுபடியும் தலைவனாக அக்கூட்டத்தில் தேர்ந்தெடுத்தார்கள்.

கிராமங்கள் தோறும் சென்று ஆயுள் சந்தாதாரர்களையும், வருட சந்தாதாரர்களையும் பெருமளவில் சேர்த்தோம். கிராமங்களில் எங்கள் வேண்டுகோளுக்கு மிக்க ஆதரவு இருந்தது. திருமழிசை, திருநாகேஸ்வரம், மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த சில கிராமங்களில் சந்தாதாரர்கள் சேர்ந்த பிறகு, அங்குள்ள அங்கத்தினர்கள் நம் சங்கத்தின் பெயரை சென்னை செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம் என்று மாற்றும்படி வேண்டுகோள் விடுத்தனர். அவர்கள் விருப்பத்திற்கு இணங்கி சங்கத்தின் பெயர் சென்னை - செங்கை மாவட்ட செங்குந்த மகாசனசங்கம் என்று மாற்றப்பட்டது.

மேலும் கொடுப்பவர்களது பெயர்கள் அந்த அறையில் கல்வெட்டில் பொறிக்கப்படும். ஏற்கெனவே நம் மாவட்ட சார்பில் ரூ. 1000/- கொடுப்பதாக வாக்களித்தவர்களும் மற்றவர்களும் விரைவில் பணம் கொடுக்கும்படி வேண்டுகிறோம். 1987, ஜுலையில் நடந்த செயற் குழுவின்போது ஆடிட்டர் திரு. M. சிவகுமார் B.Com., F.C.A. அவர்கள் கட்டட நிதிக்கு ரூ. 1000/- நம் பொருளாளரிடம் கொடுத்து முன் மாதிரியாகத் திகழ்கிறார். அவருக்கு நம்முடைய பாராட்டுக்கள் உரித்தாகுக.

கடந்த 15 ஆண்டுகளாக தலைவராக இருந்து நமக்கெல்லாம் வழிகாட்டி சிறப்பாக செயல்பட்டு இச்சங்கத்தைச் சீரிய முறையில் வளர்த்த பெரியவர் திரு. P.S. பாலசுப்பிரமணிய செங்குந்தர் அவர்களுக்கு நம்முடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவருடைய விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. S.D. பொன்னுசாமி செங்குந்தர் தலைமையில் மேலும் சங்கத்தை வளர்த்துக் கட்டிக் காப்போம் என்கிற உறுதிமொழியினை இந்த 15வது ஆண்டு விழாவில் எடுத்துக் கொள்வோமாக.

வாழ்க செங்குந்தர்! வெல்க செங்குந்தர்!

தீத கற்ற வந்த — நம்
திருக்குறளைப் பாராய்.
நீதி பொது தம்பி—இந்த
நீணிலத்தில் யார்க்கும்.
மா தருக்கும் நீதி — ஆண்
மக்களுக்கும் ஒன்றே.
பச்சை விளக்காகும் — உன்
பகுத்தறிவு தம்பி!
பச்சை விளக்காலே — நல்ல
பாதைபிடி தம்பி!
அச்சமில்லை தம்பி — நல்ல
அறம் இருக்கும்போது!
எச்சரிக்கை கண்டாய் — தம்பி
(எண்பதுடன்) வாழி!
வள்ளுவரின் நாலே — நல்ல
வழியளிக்கும் தம்பி!
குள்ளர் வழிச் சென்று — நீ
குழியில் விழ வேண்டாம்
உள்ள இனத் தார்கள்—உளம்
ஒன்று பட வேண்டும்
தள்ளுக 'பொறாமை' — ஒரு
தாய் வயிற்று மக்கள்
நீக்குக பேராசை — தம்பி
நிகர் எவரும் ஆவார்.
போக்கு சினம் தீச் சொல்— நீ
பொன் அறத்தை வாழ்த்து
சேர்க்கும் அறம் உன்னை — ஒரு
தீங்கும் அற்ற வாழ்வில்
ஊர்க் குழைக்க வேண்டும் —நீ
உண்மையுடன் தம்பி!
நாட்டுக் குழை தம்பி — இந்த
நானி லத்தை எண்ணி!
வீட்டுக் குழை தம்பி — இந்த
மீதிப் பெயர் எண்ணி!

—**பாரதிதாசன்**

கடந்த 9 ஆண்டுகளாக பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 ஆகிய தேர்வுகளில் 60 சதம் அதற்கு மேலும் மதிப்பெண் எடுத்த வர்களுக்கு ஊக்கப் பரிசும், முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது வரும் மாணவ மாணவிகளுக்கு முறையே ரூ. 100/-, ரூ. 75/-, ரூ. 50/-, ரூ. 25/- பரிசுத் தொகையாகவும் அளித்து வருகிறோம். ரூ. 250/- அதற்கு மேலும் கல்வி நிதிக்காக பணம் கொடுத்தவர்கள் பரிந்துரை செய்யும் ஏழை மாணவ மாணவிகளுக்கு கல்வி நிதி ரூ. 250/-க்கு ரூ. 15 வீதம் ஒவ்வொரு ஆண்டும், உபகாரச் சம்பளம் அளித்து வருகிறோம். ஆண்டுதோறும் மயிலை அருள் மெமொரியல் டிரஸ்ட் குழுவினரும் முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது வரும் மாணவ, மாணவிகளுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கி சிறப்பிக்கிறார்கள்.

நமது சங்கத்தில் தான் முதன் முதலில் நம் சமூகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளை அழைத்து ஆண்டு விழாக்களில் கலந்து கொள்ளச் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்று கூறினால் மிகையாகாது. அதேபோல் நம் சங்க ஆண்டு விழாவில் மற்ற மாவட்ட பொறுப்பாளர்களை சொற்பொழிவாற்ற அழைக்கிறோம். அநேகமாக எல்லா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் நம் ஆண்டு விழாக்களில் கலந்து கொண்டு சிறப்பித்திருக்கிறார்கள். இது நமது சிறப்பான முயற்சியாகும்.

திருமயிலையிலும், சைதையிலும், திருநாகேஸ்வரத்திலும், திருமழிசையிலும் கிளைச் சங்கங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருவது நம் சங்கத்தின் முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

1983-ல் பிற்பட்டோர் நலக் குழுவின் முன் திருநாகேஸ்வரத்தைச் சேர்ந்த நம் செயற்குழு உறுப்பினர் திரு. D. நாகப்ப செங்குந்தர் தலைமையில் பெருவாரியான உறுப்பினர்கள் காஞ்சீபுரத்திலும், சென்னையில் மாவட்ட சங்க சார்பில் திரு. P.S. பாலசுப்பிரமணிய செங்குந்தர் தலைமையில் திரு. S.D. பொன்னுசாமி செங்குந்தர், திரு சரவண பழநிவேலு செங்குந்தர் ஆகியோரும் நம் சமூகத்தை மிகவும் பிற்பட்ட சமூகத்தில் சேர்க்க வேண்டுமென்று எடுத்துரைத்தனர். அப்பொழுது திருநாகேஸ்வரம், சைதை மற்றுமுள்ள ஊர்களிலிருந்து பெருவாரியான நம் சமூக மக்கள் வந்திருந்தது போற்றுதர்க்குரியதாகும்.

1981இல் சேலத்தில் நடந்த தென்னிந்திய செங்குந்த மகாசன சங்க பொன் விழாவிலும் அடுத்து 1984ல் காஞ்சீபுரத்தில் நடந்த மாநில மாநாட்டிலும் நம் உறுப்பினர்கள் பெருவாரியாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். நம் முன்னாள் தலைவர் திரு. P.S. பாலசுப்பிரமணிய செங்குந்தர் காஞ்சீபுரம் மாநாட்டில் கொடியேற்றுவித்தார். நமது சங்க செயலாளர் சரவணபழநிவேலு மாநாட்டின் செயலாளருள் ஒருவராக நியமிக்கப்பட்டார். இது நமது சங்க வளர்ச்சியின் முன்னேற்ற அறிகுறியாகும்.

1984 பிப்ரவரியில் நடந்த தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத் தேர்தலில் நமது சங்கத்தைச் சேர்ந்த செயற்குழு உறுப்பினர் திரு. தி.ரா. செல்வராசன். M.A., M.Litt அவர்கள் பொதுச்செயலாளராகவும், சங்கச் செயலாளர் திரு சரவணபழநிவேலு துணைப் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது போற்றுதற்குரியதாகும்.

இன்று நம் சங்கத்தில் 500க்கும் மேற்பட்ட ஆயுள் உறுப்பினர்களும் ரூ. 1 லட்சம் கல்வி நிதியாகவும், உள்ளதற்கு சங்க உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், தலைவர், துணைத் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர் ஆகிய அனைவரின் நன் முயற்சியேயாகும். குறிப்பாக நமது பொருளாளர் திரு. A.V. இராமநாதன் M.A. அவர்களின் சீரிய முயற்சி பாராட்டுதற்குரியது.

நமது சங்க 11ஆவது ஆண்டு விழாவின்போது இம்மலர் நமது சங்கத்தின் மூன்றாவது மலராக வெளிவர இருப்பது முற்றிலும் நமது பொருளாளர் திரு. A. V. இராமநாத செங்குந்தரின் பெரும் முயற்சியேயாகும் என்று சொன்னால் மிகையாகாது.

இத்துடன் நமது பணி முடிந்து விடவில்லை. விரைவில் தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தின் மாநில மாநாட்டை நாம் சீரிய முறையில் நடத்திக் காட்டிடவேண்டும். அதற்கு உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் நல்கிட வேண்டுகிறோம்.

அடுத்து நம் மாவட்ட சார்பில் வள்ளல் சபாபதி ஆங்கிலப் பள்ளி கட்டிடத்தின் ஒரு அறையைக் கட்டிக் கொடுப்பதாக மாநில சங்கத்திற்கு வாக்களித்துள்ளோம். ரூ. 1000/-ம் அதற்கு

4.2.1985ல் செங்குந்தர் பேரவையும் நம் சங்கத்திற்கு கிளைச் சங்கங்களாகத் தோன்றியுள்ளன. இது நம் சங்கத்திற்கு மேலும் வலுவூட்டத்தக்கதாக அமைந்துள்ளது. இப்படிப்பட்ட கிளைச் சங்கங்கள் மற்ற கிராமங்களிலும் நம் மாவட்டத்தின் கீழ் அமைக்கப்பட வேண்டாமா? அதன்மூலம் நம் மாவட்டச் சங்கத்திற்கு மேலும் நாம் வலுவூட்ட வேண்டாமா?

அண்மைக் காலமாக திருமணங்களில் பாராட்டிதழ் படித்துக் கொடுத்து, நிதி வசூலிப்பதில் பெரும் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் நிதி வளர்ச்சியின் முன்பிருந்த வேகம் இல்லை; தேக்கமே ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம், செயற்குழு உறுப்பினர்களிடையே முன்பிருந்த உணர்வும், வேகமும் இல்லாததே. எனவே, அந்தந்த ஊரிலுள்ள ஒவ்வொரு செயற்குழு உறுப்பினர்களும், முன்பைப்போல் உணர்வோடு, சுறுசுறுப்பாக பணியாற்ற சூளுரை கொள்வோமாக!

செங்குந்தர் குலம் மேலும் தழைத்தோங்க, செங்குந்தர் ஒவ்வொருவரும் மேலும் ஒற்றுமையோடு இருக்கப் பாடுபடுவோமாக. அதற்கான உறுதியான உள்ளத்தோடு செயற்படுவோமாக!

செங்குந்தம் வெல்க! செங்குந்தர் வாழ்க!! வளர்க!!!

ஒழுக்கம்

நல்லொழுக்கம் ஒன்றே — பெண்ணே
நல்ல நிலை சேர்க்கும்.
புல் ஒழுக்கம் தீமை — பெண்ணே
பொய் உரைத்தல் தீமை!
இல்லறமே பெண்ணே—இங்கு
நல் லறமென் பார்கள்.
கல்வியுடை யோரே — பெண்ணே
கண்ணுடைய ராவார்.
நன்றி மறவாதே — பெண்ணே
நற்பொறுமை வேண்டும்.
இன்சொல் இனிதாகும் — பெண்ணே
இன்னல் செய்ய வேண்டாம்.
உன்னருமை நாட்டின் — பெண்ணே
உண்மை நிலை காண்பாய்.
இந்நிலத்தின் தொண்டில் — நீ
ஈடுபட வேண்டும்.
(பத்துடனே மூன்று) — நீ
பகுத்தறிவைப் போற்று!
நத்தியிரு பெண்ணே — நீ
நல்ல வரை என்றும்.
சொத்து வரும்என்று — நீ
தோது தவறாதே.
முத்து வரும் என்று — நீ
முறை தவற வேண்டாம்.

—பாவேந்தர் பாரதிதாசன்

சர்க்கரை இல்லையானால் அங்கு எறும்பும் வராது. ஆசையான சர்க்கரை இருந்தால் துன்பங்களான எறும்புகள் வந்து சேரும்.

—வாரியார்.

யொட்டி தலைமைச் சங்கத்தால் முன்பு உதவிபெற்ற ஒரு சிலரும், மற்றும் சிலரும் அவரவர்களால் இயன்ற தொகையைக் கொடுக்க முன்வந்தனர். அதுசமயம் நானும், என் நண்பர் திரு. பி. எஸ். பாலசுப்பிரமணியன் அவர்களும் எங்களால் இயன்ற சிறு காணிக்கையைச் செலுத்தினோம். அரை மணி நேரத்தில் சுமார் ரூ. 50,000-க்கும் மேற்பட்ட தொகை அறிவிக்கப்பட்டது. அதனையொட்டி, சைதையைச் சார்ந்த திரு. எம்.பி. புனிதவேலு முதலியார் அவர்கள் மருத்துவம் அல்லது பொறியியல் படிக்கும் தகுதிவாய்ந்த ஒரு மாணவர் அல்லது மாணவிக்கு அவரது படிப்பை முடிக்கும்வரை ஆகும் செலவை ஆண்டு தோறும் கொடுப்பதாக என்னை அறிவிக்கச் சொல்ல, நான் மேடையேறி அவ்வாறு அறிவித்தேன். அதன்படி ஈரோட்டைச் சார்ந்த ஒருவரின் மகள் கோவை மருத்துவக் கல்லூரியில் அவரது மருத்துவப் படிப்பை முழுவதும் முடிப்பதற்கான நிதி உதவி கொடுக்கப்பட்டது.

1976ஆம் ஆண்டில் ஈரோட்டில் நடைபெற்ற 13வது மாநில மாநாட்டிலே, கொடியேற்றி வைத்து, கூறியதற்கு ஒப்ப காஞ்சீபுரத்திலே தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தின் 14-வது சமூக மகளிர், கைத்தறி, இளைஞர் மாநில மாநாடு 1984ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 4, 5, தேதிகளில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதிலே நம் குல பெருமக்கள் பல மாவட்டங்களிலே இருந்தும் வந்து நேரில் கலந்து கொண்டனர். அப்போது சென்னை-செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கத் தலைவராக இருந்த திரு. பொ. சி. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களும், தலைமைச் சங்கத் தலைவராக இருந்த திரு. எம்.பி. நாச்சிமுத்து முதலியார் அவர்களும், மற்றும் நம் குல பெருமக்கள் சிலர், அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் காஞ்சியின் நீண்ட வீதியிலே ஊர்வலமாக வந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அம்மாநாட்டிலே நம் சங்க முன்னாள் தலைவர் திரு. பொ. சி. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் அடுத்த மாநில மாநாட்டினை சென்னையிலே நடத்துவதாகக் கூறி குந்தர் குலக் கொடியினை ஏற்றிவைத்தார்கள். எனவே, நம் சங்கம் அடுத்த மாநில மாநாட்டினை சென்னையிலே நடத்திக் காட்ட வேண்டிய பெரும் பொறுப்பிலே இன்றுள்ளது. காஞ்சி மாநாட்டிலே எஞ்சிய தொகையினைக் கொண்டு, அங்கு ஒரு திருமண மண்டபம் நிறுவ உள்ளார்கள். அதேபோல் நம் சங்கமும் சென்னையிலே மாநில மாநாட்டை சிறப்பாக நடத்தி, அதிலே மிச்சப்படும் தொகையிலே இங்கு ஒரு நினைவுச் சின்னத்தை நிறுவும் பணியில் நாம் ஈடுபட வேண்டாமா?

ஆரம்ப காலத்தில் செயற் குழுக் கூட்டங்களுக்கு சிற்றுண்டிச் செலவுக்கு கூட சங்க நிதியிலிருந்து பணம் எடுக்கக் கூடாது என்று முடிவெடுத்து, ஒவ்வொரு செயற் குழு கூட்டத்திலும் திரு. டி.எஸ். சுப்பிரமணிய முதலியார் அவர்கள் துண்டேந்தி, கூட்டத்திற்கு வந்திருக்கும் செயற் குழு உறுப்பினர்கள் அவரவர்கள் சக்திக்கு ஏற்றபடி கொடுக்கும் பணத்தை வசூலித்து செயற் குழுக் கூட்டத்திற்கு சிற்றுண்டி வழங்கப்பட்டு வந்தது.

இப்படி கொஞ்சம் கொஞ்சமாக சங்கம் வளர்ந்து, வசூலிக்கும் முதலில் கை வைக்காமல், நிரந்தர வைப்பில் வரக்கூடிய வட்டியில் இருந்து ஆண்டு விழாவினை நடத்தக்கூடிய நிலை ஏற்பட்டபின், ஆண்டு விழாவினைக் கொண்டாட சங்கம் முடிவு செய்து, அதன்படி எஸ்.எஸ்.எல்.சி., அந்த சமயம் பி.யு.சி. தற்போது பிளஸ் 2 ஆகிய தேர்வுகளில் 60 சதம் அல்லது அதற்குமேல் மதிப்பெண்கள் பெறும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பட்டம் போட்ட பாராட்டுப் பத்திரம், ஆங்கிலம்-ஆங்கிலம்-தமிழ் அகராதி, பேனா, பால்-பாயிண்ட் பேனா போன்றவற்றை வழங்கும் விழா முதன் முதலாக 1978 ஆம் ஆண்டு ஆறாவது ஆண்டு விழாவாகத் தொடங்கப்பெற்றது. நம் குல மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டிற்கும் நம் குலத்தைச் சார்ந்த உயர்பதவியில் இருக்கும் ஒருவர், அவரது துணைவியார் ஆகியோரை வரவழைத்து, பரிசளிக்கும் விழா இதுவரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது, இதனால், ஆண்டுக்காண்டு பரிசு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வருவதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியும், பூரிப்பும் அடைய வேண்டியிருக்கிறது.

1984ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் காஞ்சியிலே நடைபெற்ற மாநில மாநாட்டினால் ஏற்பட்ட புத்துணர்ச்சியின் விளைவாக, அதனைத் தொடர்ந்து நம் சங்க எல்லைக்குட்பட்ட திருநாகேஸ்வரம் (குன்றத்தூர்)ல் 1.4.1984 அன்று செங்குந்தர் பேரவைத் துவக்க விழாவும், அதனையொட்டி 13.4.1984அன்று திருமயிலையில் செங்குந்தர் நற்பணி மன்றமும், 14.4.1984ல் சைதையில் செங்குந்தர் பேரவையும், திருமழிசையில்

இடத்தை செங்குந்தர்பேட்டை என்றும் கூறப்படுவதைக் கண்டு பூரிப்படைந் தோம்.

இதேபோல், தலைமைச் சங்கத்தில் முன்பு நிர்வாகியாக இருந்தவரும், அங்கு செல்வோரை ஊக்குவித்து வந்தவருமான திரு. ஆரிமுத்து முதலியார் அவர்கள், அவரது ஊரான வட ஆற்காடு மாவட்டம், செய்யாற்றிற்கு அருகில் உள்ள அசனமாபேட்டை என்ற கிராமத்திற்கு திரு. தி. ரா. செல்வராசன், திரு. சரவண பழநிவேலு, திரு. எம்.கே. பாலசுந்தர முதலியார், மற்றும் சில ரோடு, என்னையும் அழைத்திருந்தார்கள். அங்கு சென்ற போது, அந்த ஊரில் நாவிதன், சலவைத் தொழிலாளி, மளிகைக் கடை, மற்றும் கோயில் ஐயர் போன்றவர்கள் வீடுகளைத் தவிர, மற்ற வீடுகள் அனைத்திலும் செங்குந்தர்களே முழுக்க முழுக்க வசிப்பதையும், அக் கோயில் செங்குந்தர்களால் கட்டப்பட்டது என்ற கல்வெட்டையும் அங்கு கண்டு நாங்கள் அனைவரும் பூரிப்படைந்து வந்தோம்.

திருமழிசை, திருநாகேசுவரம் (குன்றத்தூர்) செயற் குழு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சென்னை செங்குந்த மகாசன சங்கம் என்ற பெயர் சென்னை-செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம் என்று மாற்றியமைக்கப்பட்டது.

தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தின் பதின்மூன்றாவது மாநில சமூக, மாதர், கைத்தறி மாநாடு ஈரோடு, செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியிலே 1976ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25, 26 தேதிகளிலே ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு உற்சாகம் ஊட்டும் வகையில், சைதையிலே சென்னை-செங்கை செங்குந்த மகாசன சங்கத்தின் சார்பில் 12.12.1976லே மாநாட்டிற்கு முன்பாக ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. இது நம் இன வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சியை யொட்டி, ''கருத்தரங்கு மலர்' ஒன்று வெளியிடப்பட்டது. அம்மலரிலே திரு. தி.ரா. செல்வராசன் அவர்கள் ''கண்ணீர்ப் பூக்கள்' என்ற தலைப்பில், ''சேத்துப்பட்டு செங்குந்தர் மாணவர் இல்லம் புலம்பல்'' என்று ஒரு கவிதை எழுதியிருந்தார். இந்தக் கவிதை, இந்த நிகழ்ச்சிக்கு பல மாவட்டங்களிலே இருந்து வந்திருந்த, பல மாவட்டச் சங்க அமைப்பாளர்களைச் சிந்திக்கச் செய்தது. இந்த நிகழ்ச்சியின் மூலம், பல மாவட்டச் சங்கங்கள் புத்துணர்ச்சி பெறவும், சில மாவட்டச் சங்கங்கள் தோன்றவும், தலைமைச் சங்கத்தோடு நம் சங்கம் பெரும் ஈடுபாடு கொள்ளவும் செய்தது.

தலைமைச் சங்கம் அப்போது ஏதோ சங்கமாக செயல்பட்டதே தவிர, எதிலும் எவ்வித தீவிர ஈடுபாடும் கொண்டதாக இல்லை. அப்போதெல்லாம் செயற் குழு என்று கூடினால், எண்ணத்தக்க ஒரு சிலரே வருபவர்களாக இருந்தது. நம் சங்க அமைப்பாளர்களின் புதிய ஈடுபாட்டினால், தலைமைச் சங்கமும் புத்துணர்ச்சி பெற்று, இன்று இந்த அளவுக்கு செயல்பட உறுதுணையாக இருந்தது. நம் சங்க வளர்ச்சியே திரு. தி. ரா. செல்வராசன் அவர்களை தலைமைச் சங்க பொதுச் செயலாளராக ஆக்கும் தகுதியை உண்டாக்கிற்று என்று சொன்னால் மிகையாகாது.

1976 டிசம்பர் திங்கள் 25, 26 தேதிகளில் ஈரோட்டிலே தலைமைச் சங்கம், பதின்மூன்றாவது மாநில மாநாட்டை கூட்டிற்று. காலஞ்சென்ற நம் தலைமைச் சங்கத் தலைவர் திரு. எம்.பி. நாச்சிமுத்து முதலியார் அவர்கள் தலைமையிலே, திரு இ. எம். பாலசுப்பிரமணியம், திரு. ஜே. சுத்தானந்தம், திரு. த. விசுவநாதன் போன்றோர் 'இனி இப்படி ஒரு மாநாட்டை நடத்த முடியுமா?' என்று வியக்கத்தக்க அளவுக்கு அம்மாநாட்டினை சீரும் சிறப்புமாக நடத்திக் காட்டினார்கள். அம்மாநாட்டிலே அடுத்த மாநாட்டினை காஞ்சியிலே நடத்துவதாகக் கூறி, திரு. பி. வேங்கடசுப்பிரமணியன், எம்.ஏ.பி.எல்., அவர்கள் குந்தர் குலக் கொடியை ஏற்றினார்கள். இதிலே மாதர் மாநாடும், கைத்தறி மாநாடும் நடைபெற்றது. அம்மாநாட்டிலே உரையாற்றிய திரு. எஸ். தியாகராசன் அவர்கள், கென்னடியின் வாசகத்தை அதாவது 'நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே, நீ நாட்டிற்கு என்ன செய்தாய்?' என்பதுபோல், 'நம் சங்கம் உனக்கு என்ன செய்தது என்று கேட்பதைவிட, நீ சங்கத்திற்கு என்ன செய்தாய்?'' என்றும், அவரவர்களால் இயன்ற அளவுக்கு பொருளுதவி செய்தால் அல்லவா, சேத்துப்பட்டிலுள்ள கட்டி முடிக்கப்படாத கட்டிடத்தை கட்டிமுடிக்க முடியும் என்று கேட்டார். உடனே, சற்றும் தயங்காமல் உணர்ச்சியால் உந்தப்பட்டு திருநாகேஸ்வரம் (குன்றத்தூர்) செயற் குழு உறுப்பினர் திரு. மயிலை பி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ரூ. 1000/- கொடுப்பதாக அறிவித்தார்கள். அதனை

4. என் உணர்வும், சங்கத் தொடர்பும்

பொ. க. சாமிநாதன், B.Com.,
(விவாதப் பதிப்பாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை)

தலைமைச் செயலகத்தில் பணியில் சேர்ந்து தகுதிகாண் பருவம் (Probation) முடிப்பதற்குள் பெருந் தலைவர் திரு காமராஜ் அவர்களின் நேர்முக உதவியாளனாகப் பணியாற்றும் பேறு பெற்று, அதனைத் தொடர்ந்து பெரியவர் திரு பக்தவத்சலனார், பேரறிஞர் அண்ணா ஆகிய இரண்டு முதலமைச்சர்களிடமும், டாக்டர் நாவலர் அவர்களிடமும் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றேன். அனுபவத்தில் முதிர்ந்த இவர்கள் ஒவ்வொருவரும் விருப்பு வெறுப்பற்று, நாட்டிற்காகப் பணியாற்றினாலும், அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஓரளவாவது இனப்பற்று இருப்பதை என்னால் காண முடிந்தது.

இந்த இனப் பற்று என்னுள்ளும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கொண்டே வந்தது. அதனால், எனக்கு வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம், என்னை அறியாமலேயே நம்மவர்கள் யாராகிலும் என்னை நாடி வந்தால், முடிந்தவரை உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணமும் வளர்ந்து கொண்டே வந்தது.

சென்னை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம் 1972-லே ஆரம்பிக்கப்பட்டதே தவிர, சங்க வளர்ச்சியின் வேகம் மிகவும் குறைந்திருந்தது. ஆயுள் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைவே. இதனை, மேற்படி சங்கத்தின் பெயர்ப் பலகைத் திறப்பு விழா 1976 ஜுன் 13ஆம் தேதி கொண்டாடப் பட்டதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். சைதையில், தற்போதைய சங்கத் தலைவர் திரு. எஸ்.டீ. பொன்னுசாமி முதலியார் அவாகள் இல்லத்தில் 1976 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 13ஆம் நாள் கல்வி நிதித் தொடக்க விழாவும், சங்கப் பெயர்கள் பலகை திறப்பு விழாவும் நடைபெற்றது. அதற்கு வரும்படி சங்கச் செயலாளர் திரு. சரவண பழனிவேலு அவர்கள் என்னை அழைத்தார்கள். அவ்விழாவில் சைதை திரு. எம்.பி. புனிதவேலு முதலியார் அவர்கள் ரூ. 501/- கொடுத்து கல்வி நிதியைத் தொடங்கி வைத்தார்கள். திரு. எம்.டி. குப்புசாமி முதலியார் அவர்கள் சங்கப் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்கள். அதனையொட்டி ஒரு சிலர் கல்வி நிதிக்குப் பணம் கொடுத்து, அன்றே ரூ. 2000 அளவுக்குச் சேர்ந்தது. அப்போது என் மனமும் உந்தப்பட்டு நானும், துணை வணிக வரி அலுவலராகப் பணியாற்றி வரும் என் நண்பர் திரு. பி. எஸ். பாலசுப்பிரமணியமும் மாதா மாதம் ரூ. 50/- வீதம், இருவரும் ரூ. 250 கொடுத்தோம். இந்த விழாவிலே இருந்து தான் இச்சங்கம் புத்துணர்ச்சி பெற்று, பொலிவோடு, வேகமாகச் செயல்படத் தொடங்கியது.

இந்த விழாவிற்கு வந்த என்னை, இச்சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக இருக்க வேண்டுமென்று திரு. சரவண பழநிவேலு அவாகள் பணித்தார்கள். இந்தவகையில், எனக்கு இச்சங்கத்தோடு ஈடுபாடு ஏற்படத் தொடங்கியது.

செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றும்போது, மதுராந்தகத்திலுள்ள செங்குந்த இளைஞர்கள் சிலர் அங்குள்ள கோயில் சுவற்றின் அடிக் கல்லில் அக்கோயில் செங்குந்தர்களால் கட்டப்பெற்றது, செங்குந்தர்களுக்குச் சொந்தமானது என்றும், அதைக் காண வரவேண்டும் என்றும், அதனையொட்டி அங்கு மதுராந்தகம் வட்ட செங்குந்த மகாசன சங்கத்தையும், மற்றும் வாசக சாலையையும் திறந்து வைக்கும்படியும், அதற்கு 27.6.1976 அன்று வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். சங்கத்தை காஞ்சி செங்குந்த மகாசன சங்கத் தலைவர் திரு. எம். சண்முகசுந்தர முதலியார் அவர்களும், வாசக சாலையை நானும் திறந்து வைத்தோம். எங்களுடன் சிறப்புரை ஆற்ற திரு. எம்.கே. பாலசுந்தர முதலியார், திரு. தி. ரா. செல்வராசன், திரு சரவண பழநிவேலு, புலவர் திரு. நா. ரா. முருகவேள் மற்றும் சிலர் வந்திருந்தனர். மதுராந்தகம் சென்றபோது, அங்குள்ள கோயில் சுவற்றின் அடிக்கல்லில் அக்கோயில் செங்குந்தரால் கட்டப்பெற்றது என்றும், அந்த

பதினொன்றும் ஆண்டு விழா

நாள்	:	25-12-1983
இடம்	:	திருநாகேஸ்வரம் செங்குந்தர் ஜவுளி உற்பத்தியாளர் சங்கத் திருமண மண்டபம் குன்றத்தூர் (திருநாகேஸ்வரம்)
வரவேற்புரை	:	திரு. பொ. கு. சாமிநாதன், இணைச் செயலர்.
தலைவர்	:	திரு. பொ. சி. பாலசுப்பிரமணிய முதலியார்
ஆண்டு அறிக்கை வாசித்தவர்	:	திரு. சரவண பழநிவேலு செயலாளர்
வரவு - செலவு கணக்கு வாசித்தவர்	:	திரு. ஏ.வி. இராமநாதன், எம்.ஏ., சங்கப் பொருளாளர்.
வாழ்த்துரை வழங்கியவர்கள்	:	திரு. ஆர். சண்முகசிகாமணி, ஐ.எ.எஸ், செயலர், வணிகவரி, மற்றும் அறநிலையத்துறை, தமிழக அரசு. திரு. கே.ஏ. பழனியப்ப முதலியார், ஈரோடு செங்குந்தர் மகாசன சங்கம் திரு. எம். சண்முகம், எம்.ஏ. எல்.டீ. தலைமை ஆசிரியர், பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம். திரு. தி.ரா. செல்வராசன், பொதுச்செயலாளர், தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம்.
பரிசுகள் வழங்கியவர்	:	திருமதி இந்திரா சண்முக சிகாமணி
நன்றி உரை	:	திரு. டீ.எஸ். சிவானந்தம், துணைச் செயலாளர்.

பன்னிரெண்டாம் ஆண்டு விழா

நாள்	:	20-1-1985
இடம்	:	ஸ்ரீநடராஜா கல்விக்கழக திருமணக் கூடம், திருவல்லிக்கேணி, சென்னை-5.
இறை வணக்கம்	:	இசைச்செல்வி திருமதி ஜானகி சாமிநாதன்
வரவேற்புரை	:	திரு. டீ.வி. கந்தசாமி செங்குந்தர், திருவல்லிக்கேணி.
தலைவர்	:	திரு. பொ.சி. பாலசுப்பிரமணிய செங்குந்தர்.
ஆண்டு அறிக்கை வாசித்தவர்	:	திரு. சரவண பழநிவேலு, சங்கச் செயலாளர்
வரவு - செலவு கணக்கு வாசித்தவர்	:	திரு. ஏ.வி. இராமநாதன், எம்.ஏ., சங்கப் பொருளாளர்
வாழ்த்துரை வழங்கியவர்	:	திரு. டீ. தங்கவேலு, ஐ.ஏ.எஸ், புலவர் திரு. எஸ். சோமசுந்தரம், எம்.ஏ. பி. இட் குடியாத்தம்
பரிசுகள் வழங்கியவர்	:	திருமதி வசந்தா தங்கவேலு
நன்றி உரை	:	திரு. எம். பாலசுந்தர செங்குந்தர், திருவல்லிக்கேணி.

ஒன்பதாம் ஆண்டு விழா

நாள்	:	1-11-1981
இடம்	:	ஜெய கௌரி கல்யாண மண்டபம், சைதாப்பேட்டை, சென்னை-15.
இறைவணக்கம்	:	இசைச் செல்வி திருமதி. ஜானகி சாமிநாதன்
வரவேற்புரை	:	திரு. பொ. க. சாமிநாத முதலியார் இணைச் செயலாளர்
தலைவர்	:	திரு. எம்.கே. பாலசுந்தர முதலியார், உப - தலைவர்
ஆண்டு அறிக்கை வாசித்தவர்	:	திரு. சரவண பழநிவேலு, செயலாளர்.
வரவு - செலவு கணக்கு வாசித்தவர்	:	திரு. ஏ.பி. தண்டாயுதபாணி முதலியார், பி.ஏ., பொருளாளர்
வாழ்த்துரை வழங்கியவர்கள்	:	திரு. டீ.ஏ.எஸ். பிரகாசம், ஐ.ஏ.எஸ், தமிழக அரசின் நிதித்துறையின் கூட்டுச் செயலாளர் திரு. தி. ரா. செல்வராசன், எம்.ஏ., எம். லிட். செயலாளர், தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம் திரு. து. பழனியாண்டி, பொதுச் செயலாளர், திருச்சி மாவட்ட செங்குந்த மகாசன சங்கம் திரு. செல்வராசன் பி.ஏ. பொருளாளர், திருச்சி மாவட்ட செங்குந்த மகாசன சங்கம்
பரிசுகள்வழங்கியவர்	:	திருமதி திருமகள் பிரகாசம்
நன்றி உரை	:	திரு. பொ.சி. சாம்பசிவ முதலியார், திருமயிலை.

பத்தாம் ஆண்டு விழா

நாள்	:	12-12-1982
இடம்	:	ஜெய கௌரி கல்யாண மண்டபம், சைதாப்பேட்டை, சென்னை-15
இறைவணக்கம்	:	இசைச் செல்வி திருமதி ஜானகி சாமிநாதன்
வரவேற்புரை	:	திரு. பொ. க. சாமிநாத முதலியார், இணைச் செயலாளர்
தலைவர்	:	திரு. பொ. சி. பாலசுப்பிரமணிய முதலியார் தலைவர்.
ஆண்டு அறிக்கை வாசித்தவர்	:	திரு. சரவண பழநிவேலு, செயலாளர்
வரவு - செலவு கணக்கு வாசித்தவர்	:	திரு. ஏ.பி. தண்டாயுதபாணி முதலியார், பி.ஏ., பொருளாளர்.
சிறப்புரை ஆற்றியவர்கள்	:	டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் சென்னைப் பல்கலைக் கழக தமிழ்த் துறைத் தலைவர் திரு. சி. காந்திதாஸ், எம்.எ.பி.எல். தலைவர். மதுரை மாவட்ட செங்குந்த மகா சன சங்கம் திரு. தி. ரா. செல்வராசன், எம்.ஏ.எம்.லிட், செயலாளர், தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம்
வாழ்த்துரை, பரிசுகள் வழங்கியவர்	:	திரு. ஆர். சண்முகம், ஐ.ஏ.எஸ். தமிழக அரசு போக்குவரத்துத்துறை ஆணையர் மற்றும் செயலாளர்.
நன்றி உரை	:	திரு. பொ. சி. சாம்பசிவ முதலியார், திருமயிலை.

வாழ்த்துரை
வழங்கியவர்கள் : திரு. ச. கு. பா. பழனிவேலு முதலியார்
பொதுச் செயலாளர், தஞ்சை ஜில்லா, செங்குந்த மகா ஜன கல்விச் சங்கம்

திரு. பா. கி. பொன்னுசாமி முதலியார்
செயலாளர், மாணவர் மன்றம்

திரு. எஸ். டி. சண்முகேச முதலியார், சைதை

திரு. சி. நடராஜ முதலியார், பி.ஏ.பி.எல்., வழக்குரைஞர்

திரு. எம்.ஆர். பெருமாள் முதலியார் எம்.ஏ.எல்.டி.
முன்னாள் தமிழ் வளர்ச்சி இயக்குனர்

திரு. எஸ். தியாகராசன் பி.ஈ.
சதர்ன் அல்லாய் பவுண்டரீஸ் நிர்வாக இயக்குநர்.

திரு. டி.என். சிங்காரவேலு முதலியார்
ஸ்மால்காஸ் கோர்ட் தலைமை நீதிபதி

நன்றி உரை : திரு. சரவண பழநிவேலு, பொதுச் செயலாளர்.

(இந்த 7ஆம் ஆண்டு விழாவோடு திருமயிலை திரு. பி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மணிவிழாவும் சிறப்பாக நடந்தது)

எட்டாம் ஆண்டு விழா

நாள் : 7-12-1980

இடம் : அருள்மிகு வெள்ளீசுவரர் திருமண மண்டபம், திருமயிலை, சென்னை-4.

இறை வணக்கம் : இசைச் செல்வி திருமதி ஜானகி சாமிநாதன்

வரவேற்புரை : திரு. பொ. க. சாமிநாதன், இணைச் செயலாளர்

தலைவர் : திரு. பொ. சி. பாலசுப்பிரமணிய முதலியார்,
சங்கத் தலைவர்

ஆண்டு அறிக்கை
வாசித்தவர் : திரு. சரவண பழநிவேலு, செயலாளர்.

வரவு - செலவு
கணக்கு வாசித்தவர் : திரு. ஏ.பி. தண்டாயுதபாணி, பி.ஏ., பொருளாளர்.

சிறப்புரை ஆற்றியவர் : திரு. தி. சே. பழனிவேலு முதலியார், செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம்

திரு. ஆர். சோமசுந்தரம், எம்.ஏ.பி.எல்.,
விருத்தாசலம், வழக்கறிஞர்

திரு. கே. அன்பழகன், பி.ஏ.பி.எல்., செயலாளர்
பென்னாடம் செங்குந்தர் சங்கம்

திரு. வி. சங்கர சுப்பையன், ஐ.ஏ.எஸ்,
தமிழக அரசின் நிதித்துறையின் கூட்டுச் செயலாளர்

நன்றி உரை : திரு. பொ.சி. சாம்பசிவ முதலியார், திருமயிலை.

5. சென்னை - செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம் நடத்திய ஆண்டு விழாக்களில் தலைமை ஏற்றோர், வாழ்த்துரை வழங்கியோர் முதலிய விவரங்கள்

தொகுப்பு: **A. V. இராமநாதன், M.A.,**

மேற்படி சங்கம் 26-3-1972 அன்று திருமயிலை அருள்மிகு வெள்ளீசுவரர் ஆலய திருமண மண்டபத்தில் தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கப் பிரசாரகர் திரு. தி.அ. சண்முக முதலியார் அவர்கள் தலைமையில் துவக்கப்பட்டது. சென்னை சைதாப்பேட்டையில் 15-10-1978 அன்று முதன் முதலாக ஆண்டு விழா நடத்தப்பட்டது. சங்கம் 26-3-72 அன்று துவங்கி ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு 15-10-1978 அன்று நடந்த ஆண்டு விழா ஆறுவது ஆண்டு விழாவாகக் கருதப் பட்டது.

ஆறுவது ஆண்டு விழா

நாள்	:	15-10-1978
இடம்	:	அஷ்ட இலட்சுமி திருமண மண்டபம், சைதாப்பேட்டை, சென்னை-15.
இறை வணக்கம்	:	திரு. கந்தசாமி & திரு. சரவண முதலியார்
வரவேற்புரை	:	திரு. சரவணபழநிவேலு : செயலாளர்
தலைவர்	:	திரு. எம்.கே. பாலசுந்தர முதலியார் சங்கத் துணைத் தலைவர்
வாழ்த்துரை வழங்கியவர்கள்	:	திரு. ஆர். பிச்சை முதலியார் பி.ஏ.பி.எல். திரு. காஞ்சி எம்.எம். தணிகைமலை முதலியார் திரு. எஸ். பாலசுந்தர முதலியார், சைதை திரு. டி.எஸ். மாணிக்க முதலியார், திருமழிசை திரு. தி.ரா. செல்வராச முதலியார் எம்.ஏ. திரு. பி. கிருஷ்ணமூர்த்தி முதலியார், திருமயிலை
பரிசுகள் வழங்கியவர்	:	திரு எம். சண்முக முதலியார், எம்.ஏ.பி.டி. தலைமை ஆசிரியர், பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.
நன்றி உரை	:	திரு. எம்.கே. பாலசுந்தர் முதலியார்

ஏழாம் ஆண்டு விழா

நாள்	:	16-12-1979
இடம்	:	அருள்மிகு சொர்ணாம்பிகை காரணீசுவர் திருமண மண்டபம் திருக்காரணி, சென்னை—15.
தலைவர்	:	திரு. எம்.கே. பாலசுந்தர முதலியார்
ஆண்டு அறிக்கை வாசித்தவர்	:	திரு. சரவண பழநிவேலு, பொதுச் செயலாளர்
வரவு - செலவு கணக்கு வாசித்தவர்	:	திரு. ஏ.பி. தண்டாயுதபாணி முதலியார், பி.ஏ.

ரூ 500/– முதல் ரூ 999/– வரை கொடுத்தவர்கள் : 34 பேர்

1.	ஜி. தியாகராஜ செங்குந்தர், தண்டையார்பேட்டை	ரூ	804
2.	டாக்டர். ஏ.வி. ஜெய சந்திரன், இராஜா அண்ணாமலைபுரம்	ரூ	802
3.	ஏ.கே. லிங்கவேலு முதலியார், ஆலந்தூர்	ரூ	751
4.	சரவண பழநிவேலு, ஜாபர்கான் பேட்டை	ரூ	750
5.	டாக்டர் பி.பி. சதாசிவம், மயிலாப்பூர்	ரூ	750
6.	டி. ஏழுமலை முதலியார், லப்திகாலனி, ஆழ்வார்பேட்டை	ரூ	603
7.	பி.கே. சாமிநாத முதலியார், ஜேத்நகர்	ரூ	602
8.	ஏ.என். சண்முகம், ஆர்.ஏ. புரம்	ரூ	601
9.	த. முருகேச முதலியார், திருவல்லிக்கேணி	ரூ	553
10.	எஸ்.டி. சண்முகேச முதலியார், சைதாப்பேட்டை	ரூ	552
11.	பி.ஏ. ஜம்புலிங்க முதலியார், சைதாப்பேட்டை	ரூ	551
12.	டி. நடராஜ முதலியார், திருநாகேஸ்வரம்	ரூ	550
13.	எம். வேதாசல முதலியார், தோப்பேட்டை	ரூ	503
14.	பி.டி. இரத்தினவேலு முதலியார், சைதாப்பேட்டை	ரூ	503
15.	டி. சுப்பிரமணிய முதலியார், தியாகராய நகர்	ரூ	502
16.	பி.என். விஸ்வநாத முதலியார், சைதாப்பேட்டை	ரூ	502
17.	டி.எம். சுந்தர முதலியார், மயிலாப்பூர்	ரூ	502
18.	பு.ச. பாலசுப்பிரமணிய முதலியார், ஆர்.ஏ. புரம்	ரூ	501
19.	கே. பி. தரணி முதலியார், குடியாத்தம்	ரூ	501
20.	டி.எஸ். குருசாமி முதலியார், மேற்கு மாம்பலம்	ரூ	501
21.	எம்.டி. பரமசிவ முதலியார், சைதாப்பேட்டை	ரூ	501
22.	எம்.கே. இராமசாமி முதலியார், சைதாப்பேட்டை	ரூ	501
23.	பி.ஏ. கங்காதர முதலியார், சைதாப்பேட்டை	ரூ	501
24.	எம். சாந்தலிங்க முதலியார், பெசன்ட் நகர்	ரூ	501
25.	ஏ.பி. தண்டாயுதபாணி முதலியார், புதுப்பாக்கம்	ரூ	501
26.	டி.எஸ். சுப்பிரமணிய முதலியார், சைதாப்பேட்டை	ரூ	501
27.	கே. சதாசிவ முதலியார், போர்ட் பிளேர்	ரூ	501
28.	ஏ.பி. ஜம்புகேஸ்வரன், கே.கே. நகர்	ரூ	501
29.	எஸ்.பி. மோஹன், புதுப்பாக்கம்	ரூ	501
30.	பி.ஒய். நாதன், திருவல்லிக்கேணி	ரூ	501
31.	டி.எஸ். கணேச முதலியார், திருமழிசை	ரூ	501
32.	வி.என். ஆறுமுக முதலியார், கே.கே. நகர்	ரூ	500
33.	எஸ். கௌரி சங்கர், மேற்கு மாம்பலம்	ரூ	500
34.	கே.பி. ஹரி, கிழக்கு அபிராமபுரம்	ரூ	500
		ரூ	18894

ரூ 250/– முதல் ரூ 499/– வரை கொடுத்தவர்கள் : 98 பேர்

1.	எஸ்.வி. இராஜாபாதர் முதலியார், சைதாப்பேட்டை	ரூ	453
2.	டி.ஜே. தேவராஜ முதலியார், திருநாகேஸ்வரம்	ரூ	452
3.	கே.எஸ். சரவண முதலியார், சைதாப்பேட்டை	ரூ	402
4.	என்.டி. சண்முகம், யு.எஸ்.ஏ.	ரூ	375
5.	என்.டி. உமாமகேஸ்வரன், யு.எஸ்.ஏ.	ரூ	375
6.	என்.டி. ரவிச்சந்திரன், யு.எஸ்.ஏ.	ரூ	375
7.	டி.கே. சச்சிதானந்த முதலியார், திருமழிசை	ரூ	354

ஆயுள் சந்தா

525 ஆயுள் உறுப்பினர்களிட மிருந்து வசூலித்த தொகை (525 × ரூ. 25) ரூ. 13125

கல்வி நிதி

ரூ. 1000/-ம், ரூ. 1000/-க்கு மேலும் கொடுத்தவர்கள்	10 பேர்	ரூ. 12652
ரூ. 500/- முதல் ரூ. 999/- வரையில் கொடுத்தவர்கள்	34பேர்	ரூ. 18894
ரூ. 250/-முதல் ரூ.499வரையில்கொடுத்தவர்கள்	98பேர்	ரூ. 25113
ரூ. 100/- முதல் ரூ. 249-வரையில்கொடுத்தவர்கள்	110பேர்	ரூ. 12440
ரூ. 100/-க்கு குறைவாகக் கொடுத்தவர்கள்	608பேர்	ரூ. 19001
	ஆக	ரூ. 1,01,225

மேலே குறிப்பிட்ட ரூ. 1,01,225-ம் வைப்பு நிதியிலிருந்து கிடைத்த வட்டி, ரூ. 775/-ம் சேர்த்து ரூ. 1,02,000/-ஐ நிரந்தர வைப்பு நிதியாக கீழ்க்கண்டவாறு வைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு ஸ்டேட் கோவாபரேடிவ் வங்கியில் (மயிலாப்பூர் குளக்கரை கிளை)	ரூ. 5000
தமிழ்நாடு டிரான்ஸ்போர்ட், டெவலப் மெண்ட் ஃபைனான்ஸ் கார்ப்பொரேஷனில்	ரூ. 97000
ஆக.	ரூ. 1,02,000

மேலே சொன்ன விவரங்களிலிருந்து நம் சங்க ஆரம்பத்திலிருந்து இன்றுவரையில் செய்துள்ள ஆண்டு விழாச் செலவுகள் சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு உண்டான செலவுகள், திருமண வாழ்த்துகளுக்கு ஃபிரேம் போட்ட செலவுகள் யாவையும் வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்துதான் என்பது தெளிவாகத் தெரியவரும். அதாவது வைப்பு நிதியிலிருந்து வரக்கூடிய வட்டித் தொகையை எடுத்து சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு செலவழிக்கலாமே தவிர, முதலில் கை வைக்கக் கூடாது என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு இச்சங்கம் இதுவரையில் செயலாற்றிக் கொண்டு வருகிறது. இக் கொள்கையை நம் சங்கத்தின் நிர்வாகிகள் எப்போதும் கடைப்பிடிப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆயுள் உறுப்பினர்கள் அனைவருக்கும், கல்வி நிதிக்காக பணம் கொடுத்து உதவியவர்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ரூ 1000/–ம், ரூ 1000/–க்கு மேலும் கொடுத்தவர்கள் : 10 பேர்

திரு/திருமதி.

1.	டி.எஸ். சுப்பிரமணிய முதலியார், மயிலாப்பூர்	ரூ	2252
2.	காமாட்சி துரைசாமி முதலியார், இராஜா அண்ணாமலைபுரம்	ரூ	1553
3.	பி. நடராஜ முதலியார், திருப்பூர்	ரூ	1500
4.	ஜி. கதிர்வேலு முதலியார், தம்புசெட்டித் தெரு	ரூ	1203
5.	எம்.பி. புனிதவேலு முதலியார், சைதாப்பேட்டை	ரூ	1141
6.	பரமேஸ்வரி பி. இரத்தினவேலு, சேன்தோம்	ரூ	1001
7.	எஸ்.பி. பார்வதி, புதுப்பாக்கம்	ரூ	1001
8.	வி. உமா சங்கர், நுங்கம்பாக்கம்	ரூ	1001
9.	பி. கிருஷ்ணமூர்த்தி, திருநாகேஸ்வரம்	ரூ	1000
10.	Dr. எம்.எஸ். ரெங்கையா, சேத்துப்பட்டு	ரூ	1000
		ரூ	12652

6. சங்கத்தின் பொருளாதார நிலை

A. V. இராமநாதன், M.A,

(பொருளாளர், சென்னை செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம்)

நம் சங்கம் 26-3-1972 அன்று திரு மயிலாப்பூர் அருள்மிகு வெள்ளீஸ்வரர் ஆலயத்திலுள்ள திருமண மண்டபத்தில் பெரியவர் திரு. தி. அ. சண்முக முதலியார் தலைமையிலும், திரு. காஞ்சி மணிமொழியார் முன்னிலையிலும் துவக்கப்பட்டது. அப்போது என்னைப் பொருளாளராகத் தேர்ந்தெடுத்து பொருட்காப்பாளருக்கு உண்டான பணிகளை ஏற்று நடத்த கட்டளையிட்டனர்.

முதலில் ஆயுள் உறுப்பினர்களிடமிருந்து ரூ. 25/-ம் தனிப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து ஆண்டு சந்தா ரூ. 1/-ம் வசூலிக்கப்பட்டு வந்தன. அப்போது நான் Accountant General அலுவலகத்தில் Accounts Officer ஆக பணிபுரிந்து வந்தேன். அதனால் நான் என் அலுவலக வேலையாக அடிக்கடி வெளியூர் போக வேண்டியிருந்தது. 7-7-1974 அன்று சென்னை சைதாப்பேட்டை திருக்காரணீஸ்வரர் ஆலய மண்டபத்தில் நடந்த பொதுக்குழு கூட்டத்தில் திரு. ஏ.பி. தண்டாயுதபாணி செங்குந்தர் பி.ஏ., அவர்களைப் பொருளாளராகத் தேர்ந்தெடுத்தனர். 13-6-1976 அன்று சென்னை, சைதாப்பேட்டை கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெரு திரு. எஸ்.டி. பொன்னுசாமி செங்குந்தர் இல்லத்தில் நடந்த கல்வி நிதி ஆரம்ப விழா கூட்டத்தில், அமரர் எம்.பி. புனிதவேலு முதலியார் முதன் முதலாக ரூ. 501- கொடுத்து விழா வைத்துவக்கி வைத்தார். அன்றைய தினத்திலிருந்து நம் மாவட்ட எல்லைக்குள் நம் செங்குந்த குலப் பெருமக்களால் நடத்தும் திருமணத்தின் போது பிள்ளை வீட்டாரிடமிருந்தும், பெண் வீட்டாரிடமிருந்தும் கல்வி நிதிக்காக பணம் வசூலிக்கப்பட்டு வந்தது. 1983 ஆம் ஆண்டிலிருந்து திருமழிசை, திருநாகேஸ்வரம் மற்றும் சில ஊர்கள் உறவின் முறையார் கல்வி நிதிக்காக வசூல் செய்யும் தொகையை நம்மாவட்ட சங்கத்திற்குக் கொடுப்பதை நிறுத்திவிட்டனர். திரு. தண்டாயுதபாணி செங்குந்தர் தன் பொருளாளர் பதவியிலிருந்து 23-1-1983 அன்று விலகிக் கொண்டார். என்னை மறுபடியும் பொருளாளராகத் தேர்ந்தெடுத்தனர். சங்கத்தின் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் நமது சமூகத்தினரின் மேம்பாட்டிற்கு தொண்டு செய்வோர் ஒத்துழைப்பின் பேரில் ஜனவரி 1983 வரையில் ரூ. 50,000/- வசூலிக்கப்பட்டது. இதற்குண்டான வைப்புநிதி இரசீதுகளை திரு. தண்டாயுதபாணி அவர்கள் என்னிடம் பிப்ரவரி 1983இல் கொடுத்தார். எட்டு ஆண்டுகளுக்கு மேலாக பொருளாளராக இருந்து, கணிசமான தொகையை சேமித்து வைத்து அதற்குண்டான வரவு செலவு கணக்குகளை வைத்து இருந்தமைக்கு என்னுடைய நன்றியை திரு. தண்டாயுதபாணி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

1983இலிருந்து கல்வி நிதிக்காக வசூல் செய்வோர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. எனினும் கீழ்க்கண்ட ஆறு சங்க நிர்வாகிகள் ஜனவரி 83இலிருந்து செப்டம்பர் 87 வரையில் ஆயுள் உறுப்பினர்களிடமிருந்தும் நம் சமூகப் பெரு மக்களிடமிருந்தும் ரூ. 51,225/- வசூலித்து என்னிடம் கொடுத்தார்கள்.

1. திரு. பொ. சி. பாலசுப்பிரமணிய செங்குந்தர், முன்னாள் தலைவர்.
2. திரு. எஸ்.டி. பொன்னுசாமி செங்குந்தர், தலைவர்.
3. திரு. எம். வேதாசல செங்குந்தர், முன்னாள் உபதலைவர்
4. திரு. சரவணபழநிவேலு, செயலாளர்.
5. திரு. பி.கே. சாமிநாத செங்குந்தர், இணைச் செயலாளர்.
6. திரு. ஏ.வி. இராமநாதன், பொருளாளர்

திரு. ஏ.பி. தண்டாயுதபாணி என்னிடம் ஒப்படைத்த ரூ. 50,000-மேலே குறிப்பிட்டுள்ள ஆறு சங்க நிர்வாகிகள் வசூலித்த தொகை ரூ. 51,225- ஆக ரூ. 1,01,225-க்கு விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. கல்வி நிதிக்காக ரூ. 100-ம், அதற்கு மேலும் கொடுத்தவர்கள் பெயர்களும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

பதின்மூன்றாம் ஆண்டு விழா

நாள்	:	29-12-1985
இடம்	:	ஜெயகௌரி கல்யாண மண்டபம் சைதாப்பேட்டை, சென்னை-15.
இறை வணக்கம்	:	செல்வி பி.எஸ். தேவிகாராணி
வரவேற்புரை	:	திரு. பொ. க. சாமிநாதன், இணைச் செயலாளர்
தலைவர்	:	திரு. பொ. சி. பாலசுப்பிரமணிய முதலியார்
ஆண்டு அறிக்கை வாசித்தவர்	:	திரு. சரவண பழநிவேலு, செயலாளர்
வரவு - செலவு கணக்கு வாசித்தவர்	:	திரு. ஏ.வி. இராமநாதன், எம்.ஏ., பொருளாளர்.
வாழ்த்துரை வழங்கியவர்கள்	:	திரு. எஸ். சுப்பிரமணியன் பி.ஏ. பி.எல்., துணைச் செயலர், சட்டத்துறை, தமிழ்நாடு தலைமைச் செயலகம் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், எம்.ஏ. எம்.லிட். பி.எச்.டி. தமிழ்த் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம். திரு. எம். சண்முகம், பச்சையப்பன் மேல்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர் காஞ்சிபுரம்.
பரிசுகள் வழங்கியவர்	:	திருமதி பத்மாவதி சுப்பிரமணியம்
நன்றி உரை	:	திரு. பி. பழனியப்ப முதலியார், திருக்காரணி.

பதினான்காம் ஆண்டு விழா

நாள்	:	21-12-1986
இடம்	:	ஜெயகௌரி கல்யாண மண்டபம், சைதாப்பேட்டை, சென்னை-15.
இறை வணக்கம்	:	செல்வி பி. ரேவதி, பி.எஸ்.சி. செல்வி பி. ஜெயஸ்ரீ பி.ஏ.,
வரவேற்புரை	:	திரு. கே. பஞ்சாட்சரம் எம்.எஸ்சி., துணைத் தலைவர்.
தலைவர்	:	திரு. பொ.சி. பாலசுப்பிரமணிய செங்குந்தர்.
ஆண்டு அறிக்கை வாசித்தவர்	:	திரு. சரவண பழநிவேலு, செயலாளர்.
வரவு - செலவு கணக்கு வாசித்தவர்	:	திரு. ஏ.வி. இராமநாதன், எம்.ஏ., பொருளாளர்,
வாழ்த்துரை வழங்கியவர்கள்	:	மாண்புமிகு நீதிபதி திரு. எஸ்.டி. இராமலிங்கம், பி.ஏ.பி.எல். திரு. ஆ. இராஜவேலு செங்குந்தர் தென் ஆற்காடு மாவட்ட செங்குந்த மகாசன சங்க பொதுச் செயலாளர்
பரிசுகள் வழங்கியவர்	:	திருமதி இராஜாமணி தணிகாசலம்
நன்றி உரை	:	திரு. வி. ஞானவேலு செங்குந்தர், துணைச் செயலாளர்.

47.	டி.கே. ஞானப்பிரகாசம், தோப்பேட்டை	ரூ	101
48.	டி.எம். திருநாவுக்கரசு முதலியார்	ரூ	101
48.	பி.ஏ. நமசிவாயம், சைதாப்பேட்டை	ரூ	101
50.	டி.ஆர் சுந்தரமூர்த்தி முதலியார்	ரூ	101
51.	ஏ. கன்னியப்ப முதலியார்	ரூ	101
52.	ஆர். நடராஜ முதலியார், அனகாபுத்தூர்	ரூ	101
53.	டி. பழனிவேலு செங்குந்தர், திருநாகேஸ்வரம்	ரூ	101
54.	ஆர். குப்புசாமி முதலியார்	ரூ	101
55.	டி.கே.எம். தேவராஜ முதலியார், திருநாகேஸ்வரம்	ரூ	101
56.	டி.ஆர். சுந்தர மூர்த்தி முதலியார், சேன்தோம்	ரூ	101
57.	எம். பாலசுந்தரம், அண்ணாநகர்	ரூ	101
58.	டி.கே. ஆறுமுக முதலியார், திருமழிசை	ரூ	101
59.	டி.எஸ். போகலிங்க முதலியார், திருமழிசை	ரூ	101
60.	எஸ். நடராஜ முதலியார், சைதாப்பேட்டை	ரூ	101
61.	டி.எஸ். கிருஷ்ண மூர்த்தி முதலியார், மயிலாப்பூர்	ரூ	101
62.	பி.எம். குப்புசாமி முதலியார்	ரூ	101
63.	வே. கன்னியப்ப முதலியார்	ரூ	101
64.	கே.ஆர். பாலசுப்பிரமணிய முதலியார், சைதாப்பேட்டை	ரூ	101
65.	பி.டி.கே. தில்லை கோவிந்த முதலியார், சிதம்பரம்	ரூ	101
66.	எஸ். ராஜு, சென்னை-34	ரூ	101
67.	எஸ். குப்புசாமி முதலியார், அம்மா பேட்டை	ரூ	101
68.	ஏ. பிரகாச முதலியார், மயிலாப்பூர்	ரூ	101
69.	டி. கங்காதர முதலியார், ஆலந்தூர்	ரூ	101
70.	சி. நாகலிங்க முதலியார், திருநாகேஸ்வரம்	ரூ	101
71.	டி.வி. வேலாயுத முதலியார், சைதாப்பேட்டை	ரூ	101
72.	ஏ. சரவண முதலியார், மயிலாப்பூர்	ரூ	101
73.	பி.கே. பரமசிவம், புதுப்பாக்கம்	ரூ	101
74.	டி.கே. ஆறுமுக முதலியார், திருமழிசை	ரூ	101
75.	எஸ்.பி. சண்முக முதலியார், புதுப்பாக்கம்	ரூ	101
76.	கே. சண்முக முதலியார்	ரூ	101
77.	எஸ். சண்முக முதலியார், தண்டையார் பேட்டை	ரூ	101
78.	எஸ். சத்யநாதன், கஸ்தூரிபாய் நகர்	ரூ	101
79.	கே. இராஜா பாதர் செங்குந்தர், ஆர்.ஏ, புரம்	ரூ	101
80.	ஏ.எம். வேதாசலம், மேற்கு மாம்பலம்	ரூ	101
81.	எஸ்.பி. சண்பகவள்ளி, மயிலாப்பூர்	ரூ	101
82.	புலவர் ப. தங்கவேலு முதலியார், கள்ளக்குறிச்சி	ரூ	101
83.	டி.எஸ். பழனி செங்குந்தர், ஆலந்தூர்	ரூ	101
84.	சி.டி. பரமசிவம், திருநாகேஸ்வரம்	ரூ	101
85.	எஸ். கனகசபை முதலியார், திருநாகேஸ்வரம்	ரூ	101
86.	எம்.எஸ். நீலகண்டன், மயிலாப்பூர்	ரூ	101
87.	வை. ஆறுமுக முதலியார், பன்ருட்டி	ரூ	101
88.	டி.வி. சுப்பிரமண்ய முதலியார், திருமழிசை	ரூ	101
89.	வி.டி. மூர்த்தி, லேம்பர்ட் நகர்	ரூ	101
90.	ஆர்.எஸ். தணிகாசல முதலியார்	ரூ	101
91.	எம். மணி முதலியார், மயிலாப்பூர்	ரூ	101
92.	பி. துரைவேலு, ஆர்.ஏ, புரம்	ரூ	101
93.	எஸ். பாலசுப்பிரமண்ய செங்குந்தர், சைதாப்பேட்டை	ரூ	101

ரூ 100/- முதல் ரூ 249/- வரையில் கொடுத்தவர்கள் : 110 பேர்

1.	எம்.ஏ. ராமசாமி, சேலம்	ரூ	225
2.	எம். திரு. நீலகண்டன், ராகவரெட்டி காலனி	ரூ	202
3.	டி. சுப்பிரமண்ய முதலியார், மயிலாப்பூர்	ரூ	202
4.	எம். சுந்தரராஜன், சேன்தோம்	ரூ	202
5.	எம்.ஜி. வேல்முருகன், அண்ணா நகர்	ரூ	202
6.	சி. மணிவேல் முதலியார், காரணி தோட்டம்	ரூ	202
7.	சௌகார்பேட்டை சமாபுரி முதலியார் குடும்பத்தினர்	ரூ	200
8.	பி. சேகர், மயிலாப்பூர்	ரூ	153
9.	டி.ஆர். கண்ணாயிர முதலியார், திருநாகேஸ்வரம்	ரூ	153
10.	பி.எம். இராஜவேலு செங்குந்தர், மயிலாப்பூர்	ரூ	152
11.	கே.பி. சண்முக முதலியார், சி.ஐ.டி. நகர்	ரூ	152
12.	ஏ.ஆர். தேவராஜ முதலியார், மயிலாப்பூர்	ரூ	152
13.	எஸ்.பி. சபேச முதலியார், புதுப்பாக்கம்	ரூ	152
14.	டி.வி. பால சுந்தர முதலியார், சிந்தாதிரிப் பேட்டை	ரூ	152
15.	டி.எம். ஜம்புலிங்க முதலியார், திருமழிசை	ரூ	151
16.	டி.அண்ணாமலை முதலியார், திருநாகேஸ்வரம்	ரூ	150
17.	கே.எம். சுப்பிரமணிய முதலியார், ஆர்.ஏ.புரம்	ரூ	126
18.	கே. சண்முக முதலியார், சைதாப்பேட்டை	ரூ	126
19.	ஜே. சுப்பிரமணிய முதலியார், சிந்தாதிரிப்பேட்டை	ரூ	125
20.	டி. விஸ்வநாத முதலியார், மயிலாப்பூர்	ரூ	125
21.	என். வேதலிங்க முதலியார், இராயப்பேட்டை	ரூ	125
22.	எம்.கே. நாகலிங்க முதலியார், மூன்றாங்கட்டளை	ரூ	112
23.	ஆர். சுப்பிரமண்ய முதலியார், ஆர். ஏ. புரம்	ரூ	106
24.	வி. சுப்பிரமண்ய முதலியார், சைதாப்பேட்டை	ரூ	105
25.	வி. குருமூர்த்தி, கே.கே. நகர்	ரூ	105
26.	எம். வேதாசல முதலியார்	ரூ	105
27.	ஆர். தணிகாஜல முதலியார், திருநாகேஸ்வரம்	ரூ	102
28.	ஏ. வைதி முதலியார், சைதாப்பேட்டை	ரூ	102
29.	டி.கே. அண்ணாமலை முதலியார், திருமழிசை	ரூ	102
30.	கே. கோபால கிருஷ்ண முதலியார்	ரூ	101
31.	அமிர்தலிங்க முதலியார்	ரூ	101
32.	பி. பழனியப்ப முதலியார்	ரூ	101
33.	பி.ஆர். பாலசுப்பிரமணிய முதலியார், ஆலந்தூர்	ரூ	101
34.	சுப்பையா முதலியார், சென்னை-5	ரூ	101
35.	ஆர். குருசாமி முதலியார். ஜாம்பஜார்	ரூ	101
36.	டி.ஆர். சண்முக முதலியார், சைதாப்பேட்டை	ரூ	101
37.	பி.கே. சிவகுமார், மயிலாப்பூர்	ரூ	101
38.	பி. கார்த்திகேயன், கீழ்படப்பை	ரூ	101
39.	என். சங்கரன், திருவல்லிக்கேணி	ரூ	101
40.	எம். கபாலி முதலியார்	ரூ	101
41.	என். நீலகண்டன் முதலியார்	ரூ	101
42.	முத்தைய முதலியார்	ரூ	101
43.	எம்.எஸ். தேவராஜ முதலியார்	ரூ	101
44.	காஞ்சி கே.எம்.ஏ. தனமுத்து முதலியார், ஐயன்பேட்டை	ரூ	101
45.	ஏ.ஜி. கந்தசாமி, ஆலந்தூர்	ரூ	101
46.	கே. முருகன், சைதாப்பேட்டை	ரூ	101

55.	இராஜேஸ்வரி மாணிக்க முதலியார், இராஜா அண்ணாமலைபுரம்.	ரூ	250
56.	டி.எஸ். மாணிக்க முதலியார். திருமழிசை	ரூ	250
57.	கே.பி. மார்க்கபந்து முதலியார், குடியாத்தம்.	ரூ	250
58.	டி. பாலசுந்தர முதலியார், சைதாப்பேட்டை	ரூ	250
59.	எம். சபாபதி முதலியார், சைதாப்பேட்டை	ரூ	250
60.	எம். பழனிச்சாமி முதலியார், இந்திரா நகர்	ரூ	250
61.	எம். சண்முக முதலியார், காஞ்சிபுரம்	ரூ	250
62.	டி.எஸ். கிருபாகரன், திருமழிசை	ரூ	250
63.	எஸ். வேதாசலம், காஞ்சிபுரம்.	ரூ	250
64.	எஸ். காளத்தி முதலியார், இராஜா அண்ணாமலைபுரம்	ரூ	250
65.	என்.எஸ். தேவராஜ முதலியார், சைதாப்பேட்டை	ரூ	250
66.	என். தணிகாசல முதலியார், மயிலாப்பூர்	ரூ	250
67.	எஸ். சிவஞானம், திருவொற்றியூர்	ரூ	250
68.	ஜி. பாலசுப்பிரமணியம், மேற்கு மாம்பலம்	ரூ	250
69.	பி.பி. நல்லசிவம், மயிலாப்பூர்	ரூ	250
70.	என்.டி. சிவசங்கரன், சேன்தோம்.	ரூ	250
71.	சி.என். சம்பந்தன், மேற்கு தாம்பரம்.	ரூ	250
72.	கே.ஜி. காமாட்சி குருசாமி, செக்ரடேரியட் காலனி	ரூ	250
73.	ஆர். குப்புசாமி, நெய்வேலி	ரூ	250
74.	ஏ.ஆர். இராமச்சந்திர முதலியார், மயிலாப்பூர்	ரூ	250
75.	எஸ்.எம். சிவப்பிரகாச முதலியார், தியாகராய நகர்	ரூ	250
76.	பத்மாவதி விநாயக முதலியார், மேற்கு மாம்பலம்	ரூ	250
77.	ஏ. சுப்பிரமண்ய முதலியார், மயிலாப்பூர்	ரூ	250
78.	ஜி. சண்முகவேலு, சென்னை 1.	ரூ	250
79.	வி. வேதகிரி முதலியார், திருமழிசை	ரூ	250
80.	டாக்டர். கே.வி. மூர்த்தி, மயிலாப்பூர்	ரூ	250
81.	எம்.பி. பாண்டுரங்கன், மயிலாப்பூர்	ரூ	250
82.	ஏ.வி. இராமநாத முதலியார், இராஜா அண்ணாமலைபுரம்	ரூ	250
83.	வி.ஏ. சிவஞானம், கோடம்பாக்கம்	ரூ	250
84.	டி. துரைசாமி முதலியார், திருமழிசை	ரூ	250
85.	டி.டி. சுந்தர முதலியார், திருமழிசை	ரூ	250
86.	எம். பரமசிவ செங்குந்தர், மயிலாப்பூர்	ரூ	250
87.	டி.எஸ். நடராஜ செங்குந்தர், சென்னை-2	ரூ	250
88.	ஏ. அருள்மொழி சிவம், அபிராமபுரம்	ரூ	250
89.	ஆர்.என். சந்தான ராஜகோபாலன், மன்னார்குடி	ரூ	250
90.	எம். ஆறுமுக முதலியார், அண்ணா நகர்	ரூ	250
91.	ஏ.என். தங்கவேலு, திருவல்லிக்கேணி	ரூ	250
92.	பொ.சி. பாலசுப்பிரமண்ய முதலியார், மயிலாப்பூர்	ரூ	250
93.	திருமதி இராஜாமணி தணிகாசலம், மயிலாப்பூர்	ரூ	250
94.	டி.கே. இராஜா பாதர். அண்ணாநகர்	ரூ	250
95.	டி. சண்முக முதலியார், திருவல்லிக்கேணி	ரூ	250
96.	டி. சந்திர சேகரன், புதுடெல்லி	ரூ	250
97.	பி.ஆர். விநாயகம், மயிலாப்பூர்	ரூ	250
98.	கே.எஸ். நீலகண்டன், ஆலந்தூர்	ரூ	250
		ரூ	25113

8. டி. விஸ்வநாத முதலியார், சென்னை 2. ரூ 352
9. டி. இராஜாபாதர் முதலியார், சி.ஐ.டி. காலனி ரூ 352
10. எம். நமசிவாயம், சேத்துப்பட்டு ரூ 351
11. பி.ஆர். சிவநாத முதலியார், மயிலாப்பூர் ரூ 303
12. எம்.டி. சுப்பிரமணிய முதலியார், செயிண்ட் தாமஸ் மவுண்ட் ரூ 303
13. எஸ்.வி. நடேச முதலியார், சைதாப்பேட்டை ரூ 302
14. கே. மகாலிங்க முதலியார், சைதாப்பேட்டை ரூ 301
15. தமிழ்நாடு பவுண்டேஷன், யு.எஸ்.ஏ. ரூ 271
16. பி.எஸ். சாம்பசிவ முதலியார், மயிலாப்பூர் ரூ 255
17. டாக்டர் ஏ.வி. சதாசிவன், அபிராமபுரம் ரூ 253
18. டாக்டர். என். முருகேச முதலியார், புதுவை ரூ 253
19. சாந்தா சோமசுந்தர முதலியார், திருவல்லிக்கேணி ரூ 253
20. ஏ. விஸ்வநாத முதலியார், சைதாப்பேட்டை ரூ 251
21. எஸ். பாலசுந்தர முதலியார், ஜாபர்கான் பேட்டை ரூ 251
22. ஏ.ஆர். பரசுராம முதலியார், ஆலந்தூர் ரூ 251
23. என். ரத்தினவேலு முதலியார், சைதாப்பேட்டை ரூ 251
24. எம். முருகேச முதலியார், புதுவை ரூ 251
25. கே. தர்மலிங்க முதலியார், சைதாப்பேட்டை ரூ 251
26. கே. சண்முக முதலியார், சைதாப்பேட்டை ரூ 251
27. பி. பழனியப்ப முதலியார், சைதாப்பேட்டை ரூ 251
28. டி.எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார், திருமழிசை ரூ 251
29. டி.எம். நடராஜ முதலியார், சைதாப்பேட்டை ரூ 251
30. ஆர். மூர்த்தி, சைதாப்பேட்டை ரூ 251
31. டி.எம். ஜம்புலிங்க முதலியார், குன்றத்தூர் ரூ 251
32. எஸ்.பி. லோகநாதன், புதுப்பாக்கம் ரூ 251
33. எம்.ஆர். தணிகைராஜ், பெரம்பூர் ரூ 251
34. இ. ராஜவேலு, லப்தி காலனி, ஆழ்வார்பேட்டை ரூ 251
35. கே.ஜி. வஜ்ரவேலு, கே.கே. நகர் ரூ 251
36. டி.எஸ். சண்முக சுந்தரம், பெரிய பேட்டை ரூ 251
37. எஸ்.கே. இராமானுஜம், மயிலாப்பூர் ரூ 251
38. கே. இராமச்சந்திரன், ஜாபர்கான் பேட்டை ரூ 251
39. ஏ.என். கண்ணன், சைதாப்பேட்டை ரூ 251
40. ஆர். பிச்சை, குரோம்பேட்டை ரூ 251
41. எஸ். நடராஜன், சைதாப்பேட்டை ரூ 251
42. நல்லி கண்ணன், சைதாப்பேட்டை ரூ 251
43. எஸ்.டி. சந்திரசேகரன், சைதாப்பேட்டை ரூ 251
44. எம். சுப்பராய முதலியார், சென்னை 1 ரூ 251
45. சி.என். நீலகண்டன், நந்தனம் ரூ 251
46. ச. விஸ்வநாத செங்குந்தர், அடையார் ரூ 251
47. எஸ்.கே.எம். இராஜகோபால் செங்குந்தர், நாகவேடு ரூ 251
48. காமாட்சி வைத்தியலிங்க முதலியார், ஆர்.ஏ. புரம் ரூ 250
49. எஸ்.டி. பொன்னுசாமி முதலியார், சைதாப்பேட்டை ரூ 250
50. பொன்னாண்டை சரஸ்வதி பால சுப்பிரமணிய முதலியார், மயிலாப்பூர் ரூ 250
51. எம்.ஏ. வடிவேலு முதலியார், சைதாப்பேட்டை ரூ 250
52. எம்.டி. குப்புசாமி முதலியார், இராஜா அண்ணாமலைபுரம் ரூ 250
53. பி. வடிவேலு முதலியார், திருமழிசை ரூ 250
54. ஏ. ராஜாமணி முதலியார், அண்ணாநகர் ரூ 250

With the best compliments from :

S. RAMANATHAN, B.Sc., B.L.,

ADVOCATE

Residence :
12, Third Street,
Abiramapuram,
Madras 600 018
Phone : 456156

Office :
V Floor.
Mysore Bank Buildings,
(Opposite to High Court)
231, N.S.C. Bose Road,
Phone : 22740 & 26377

எங்களது இனிய வாழ்த்துக்கள்

டாக்டர் ஆர். கோபிநாத், எம்.ஏ., பி.எல். பி.எச்.டி.,

செல்வி ஆர். சியாமளா, பி.ஏ., எம்.எல்.,

வழக்கறிஞர்

51, வைத்தியர் அண்ணமலே தெரு, (மயிலாப்பூர் பி. எஸ். செகண்டரி ஹையர் பள்ளிக்கூடம் எதிரில் உள்ள தெரு) மயிலாப்பூர், சென்னே-600004.

மனமுவந்து கல்வி நிதிக்காக நன்கொடை அளித்தோருக்கும், இம்மலர் வெளியீட்டு குழுவினருக்கும் வாழ்த்துக்கள்

ந. நல்ல தம்பி முதலியார் அண்ட் கம்பெனி

(பூரண உரிமையாளர், எம்.பி. பாண்டுரங்கம், எல்.ஈ.ஈ.,

மரம், ஒரு வியாபாரம்

95, பேசின் பாலச் சாலை,
வள்ளலார் நகர்,
சென்னை 600 021.

கல்வி நிதிக்காக நன்கொடை வழங்கியவர்களுக்கும், அவர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்

எம். கே. பி. டிரஸ்ட்

நிர்வாக அறங்காவலர் — எம். பி. பாண்டுரங்கம், எல்.ஈ.ஈ.,
13/1, தெற்கு மாடவீதி,
திருமயிலை, சென்னை-600 004.
தொலை பேசி எண் : 76434

94.	ஜி. மகாலட்சுமி, சைதாப்பேட்டை	ரூ	101
95.	எம். வேலாயுத முதலியார், அனகாபுத்தூர்	ரூ	101
96.	எம். கதிர்வேலு முதலியார், மேட்டுப்பாளையம்	ரூ	101
97.	வி. முத்துக்குமாரசாமி முதலியார், கானகோயில் பேட்டை	ரூ	101
98.	எஸ். தேவராஜ முதலியார், திருமழிசை	ரூ	101
99.	டி.கே. சுந்தர ராஜ முதலியார், திருமழிசை	ரூ	101
100.	பி.கே. கண்ணப்பன், போரூர்	ரூ	101
101.	பி.எஸ். சண்முக முதலியார், பாம்பே	ரூ	101
102.	நடராஜ முதலியார், குன்றத்தூர்	ரூ	100
103.	டி.எஸ். உமாபதி முதலியார், சைதாப்பேட்டை	ரூ	100
104.	டி.எஸ். மாணிக்க முதலியார், திருநாகேஸ்வரம்	ரூ	100
103.	எம்.ஏ. வீரபத்ர முதலியார், திருநாகேஸ்வரம்	ரூ	100
106.	டி.ஏ. கண்ணப்ப முதலியார்	ரூ	100
107.	ஜி. வேலாயுத முதலியார், திருமழிசை	ரூ	100
108.	சிவப்பிரகாசம், வேலூர்	ரூ	100
109.	எஸ்.பி. சந்திரா அம்மாள், மயிலாப்பூர்	ரூ	100
110.	டி. கங்காதரன், சைதாப்பேட்டை	ரூ	100
		ரூ	12440
	ரூ 100/-க்கு குறைவாகக் கொடுத்தவர்கள் 608 பேர்.	ரூ	19001

பொங்கல் அமிழ்து
பொயில்லை கட்டிக்
கரும்பும் அமிழ்து;
கனி அமிழ்து; முல்லை
யரும்பமிழ்து; தேனமிழ்து;
அப்பம் அமிழ்து
குழந்தை குதலை
மொழியமிழ்து; குன்றப்
பழந்தமிழும் பாட்டும்
அமிழ்து; தமிழ்ப் பண் அமிழ்து
திங்கள் அமிழ்து;
திகழ் ஆவின் பாலமிழ்தே!
வாய்மை அமிழ்து;
மடிசுமந்து பெற்றுவக்கும்
தாய்மை அமிழ்து
தனி இன்ப வீடமிழ்து
தென்றல் அமிழ்து. நறுஞ்
செஃவிள நீரமிழ்து
ஒன்றல்ல எல்லாம்
அமிழ்தென் றுரைக்கலாம்.

—பாரதிதாசன்

நாம் துன்பமின்றி இன்பமாக வாழ வேண்டும் என்றால் மற்றவர்க்கு மனம் வாக்குக் காயங்களால் துன்பம் செய்யக்கூடாது. நன்மையே செய்ய வேண்டும். இது தான் பண்பாடு.

—வாரியார்.

With best compliments from :

VIBCONS SERVICES PVT LTD.

7, Ponnambala Vathiar St.,

Mylapore, MADRAS-600 004.

Phone : 656083
654341 P.P.

Grams : VIBROSTUDY

Telex : TKT No. TDS 040
No. 041 — 6937

Specialists in :

Machinery Maintenance Consultancy,

Vibration Analysis,

Diagnostic Studies,

Site Dynamic Balancing.

WITH THE BEST COMPLIMENTS FROM:

Dr. SHANTHA KRISHNAMURTHY, M.B.B.S. D.G.O.

Regd. No. 15763
Obstetrician & Gynaecologist,
Consultant Gynaecologist, KALYAN NURSING HOME
Phone: Res: 411105.

Clinic: 21, V.S. Mudali St., Saidapet, Madras - 15.

Residence:
Sri R.R. Illam,
37, First Avenue,
Sastri Nagar, Adyar, Madras - 20

WITH THE BEST COMPLIMENTS FROM:

Phone: 411105

V. KRISHNAMURTHI

Sri R.R. Illam
37, First Avenue
Sastri Nagar, Adyar,
Madras - 600 020.

WITH THE BEST COMPLIMENTS FROM:

Sri R. S. Thanikachalam

MURUGAVEL & CO.

TIMBER MERCHANTS

67/1, JONES ROAD, SAIDAPET, MADRAS - 600 015.

WITH THE BEST COMPLIMENTS FROM:

NEELAKANTAN ELECTRICALS

Dealers in: Electrical Goods. Also undertake Electrical Repairs.

PARTNERS - N. KRISHNAN and N. BALASUBRAMANIAN

No. 73, T.S.V. Koil Street, Mylapore, Madras - 600 004.

THE SRI SAITHAI MUTUAL BENEFIT FUND LIMITED

Declared as NIDHI by the Central Government

Regd. No. 8226/80 — Estd. 1980 — Phone No. 440846

Regd. Office : **26, Jones Road, Saidapet, Madras-600 015.**

Working Hours : 8-30 a.m. to 11-30 a.m.
3-00 p.m. to 6-00 p.m.

WEEKLY HOLIDAY TUESDAY

SAVINGS RECURRING DEPOSIT SCHEME

Minimum Rs. 5/-

AMOUNT RECEIVABLE AT THE END OF EACH PERIOD

Monthly:

Deposit	12 months	24 months	36 months	48 months	60 months
5	64/-	137.50	219/-	310/-	412.50
10	128/-	275.00	438/-	620/-	825.00
25	320/-	687.50	1095/-	1550/-	2062.50
50	640/-	1375.00	2190/-	3100/-	4125.00
100	1280/-	2750.00	4380/-	6200/-	8250.00
	13%	14%	14.5%	14.5.%	15%

FIXED DEPOSIT SCHEME

Minimum Deposit Rs.100

Rates of Interest on Fixed Deposits.

Poriod	Rate of Interest
3 months	7%
6 months	10%
12 months	13%
24 months	14%
36 months	15%
48 months	16%

½% Extra Interest on a Single Deposit of Rs. 10,000 and above.
Interest Payable Monthly to all these Fixed deposits.

Savings Deposit Interest 6%

Minimum Rs.5

M.N. VEDACHALAM, B.A.
Manager.

M. PICHAIAPPAN
President

DIRECTORS

1. Sri. M. Pichaiappan
2. Sri. P.S. Subramaniam
3. Sri. V. Sivamani
4. Sri. K. Mahalingam
5. Sri. R. Kandasamy
6. Sri. M. S. Natesan
7. Sri. K. Murugesan
8. Sri. R. Subramaniam
9. Sri. S. Balasundara Mudaliar
10. T.V. Dakshinamurthy
11. S. Palanivelu
12. Sri. T. P. Somasundaram

WITH THE BEST COMPLIMENTS FROM:

Dr. K. V. MURTHY, M.D.

Residence: No. 2, T.S.V. Koil Street, Mylapore, Madras 600 004.

Phone: 76263

WITH THE BEST COMPLIMENTS FROM

Dr. (Mrs.) M. K. SARASWATHI, M.D. D.G.O.

Obstetrician & Gynaecologist.

Residence: No. 2, T.S.V. Koil Street, Mylapore, Madras 600 004.

Phone: 76263

Consulting Hours - 8 A.M. to 10 A.M. and 6 P.M. to 8 P.M. (EXCEPT SUNDAYS)

WITH THE BEST COMPLIMENTS FROM

Dr. RAVINDRAN C.N.

M. D. (GEN. MED)

Clinic:
189, Bharathi Salai,
Royapettah,
Madras - 600 014.
7 to 9 p.m.

Residence:
4, Canal Bank Road,
East Abiramapuram,
Mylapore, Madras - 600 004.
5 to 7 p.m.

WITH THE BEST COMPLIMENTS FROM:

Dr. K. KUPPURAJAN, M.B.B.S.

No.8, C.P. Koil Street,

Mylapore, Madras-4.

Phone No. 71660.

எங்களது நல் வாழ்த்துக்கள்

தொலைபேசி :
இல்லம் : 69260

தந்தி : சர்வமங்களா

சர்வமங்களா

திருமண மண்டபம்

84, பெங்களூர் நெடுஞ்சாலை, திருமழிசை - 602 107

உரிமையாளர்கள் :

டி. எஸ். வடிவேலு செங்குந்தர்

டி. வி. சந்திரசேகரன் செங்குந்தர்

30, கெங்கை கொண்டான் மண்டப வீதி,
திருமழிசை, 602 107

இனி இவரது வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் சிலவற்றைக் காண்போம்.

1. அறிமுகம்

முதற் குலோத்துங்கன் மகன் விக்கிரம சோழன் சோழ நாட்டை ஆண்டு வந்தான். அவன் போர்க் களத்தில் சிறந்த வீரனாகவும், அவைக் களத்தில் சிறந்த கவிஞனாகவும் விளங்கினான். இவன் காலத்தில் கங்கை கொண்ட சோழ புரம் சிறந்த தலைநகரமாக விளங்கியது.

ஒரு நாள் விக்கிரம சோழன் தன் அவையில் இருந்த புலவர்களை நோக்கி, ஒரு வினா எழுப்பினான். அவ்வினாவை அறிந்த புலவர்கள் விடையிறுக்க முடியாது திகைத்தனர். அவ்வினா யாதெனின், 'வாலி திரெளபதியை மூக்கரிந்ததல்லவா மாபாரதம்' என்பதாகும். வாலியாவது திரெளபதியின் மூக்கை அரிவதாவது. இராமாயணத்தில் வருபவன் வாலி; பாரதத்தில் வருபவள் திரெளபதி. ஒன்றுக்கொன்று பொருத்தமில்லையே என்று சிந்தித்திருந்தனர் புலவர் பெருமக்கள். அவையில் சிறிது நேரம் அமைதி நிலவியது; அவ்வமைதிக்குக் காரணம் தக்க மூதறிஞர் யாரேனும் விடை கூறுகின்றார்களா என்பதுதான். ஒருவரும் விடை கூற முன் வராததால் சட்டென்று எழுந்தார் ஓர் இளங்கவிஞர். அவையிலிருந்தோர் அனைவர் கண்களும் அவரையே நோக்கின. அவர் கூறினார்.

'புள்ளிருக்கும் தார்மார்பன் பூம்
புகார் வாழ்களியேம்
சுள்ளிருக்கும் கள்ளையுண்டும் சோர்
விலோம் - உள்ளபடி
சொல்லவா வாலி திரெளபதியை
மூக்கரிந்த
தல்லவா மாபா ரதம்'

இப்பாடலைக் கேட்டதும் அவையிலிருந்த புலவரனைவரும் தம்மை மறந்து செவ்விது! செவ்விது! (சபாஷ், சபாஷ்) என்று கை தட்டித் தம் மகிழ்ச்சியைப் புலப்படுத்தினர். புலமைக்கு வயது வரம்பு உண்டோ? 'கலைமகளை அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால் கல்லும் சொல்லாதோ கவி' என்றனர்.

விக்கிரம சோழன் முன்னாள் இரவு நகர் வலம் சென்ற போது கட்குடியர் இருவர் இவ்வாறு பேசிக்கொண்டதையே நம் கூத்தபிரான் உய்த்துணர்ந்து பாடினார். அப்போது அவர் மிக்க இளைஞராய் இருந்தார். இப்பாடல் பாடியதன் மூலம் வேந்தனின் நன்மதிப்பைப் பெற்றார். அரசவையிலும் ஓரிடத்தைப் பெற்றார்.

2. ஒட்டக்கூத்தர்: பெயர்க்காரணம்

நம் கூத்தபிரான் செங்குந்த மரபினைச் சார்ந்தவர். பெற்றோர் இட்ட பெயர் கூத்தன் என்பது. அம்பலவாணனுக்குரிய பெயர்களில் கூத்தன் என்பதும் ஒன்று. 'கூத்தன் குணம் பரவி பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ' என்பது மணிவாசகனார் திருவாக்கு. செங்குந்தர்கள் தம் நெசவுத் தொழிலுக்காக பயன்படுத்தும் கருவிகளுள் ஒன்று ஈட்டி என்பது. அதற்குக் குந்தம் என்ற வேறு பெயரும் உண்டு. இந்த எளிய செம்மையான குந்தத்தினைப் பயன்படுத்தித் தம் வாழ்க்கையை நடத்தும் இயன்பினராதலால் அவர்கள் செங்குந்தர் எனப் பெயர் பெற்றனர்.

வேளாளர்கள் தம் உழவுத் தொழிலின் மூலம் மக்களுக்கேற்படும் பசியைப் போக்கும் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து தந்தனர் என்றால் நம் செங்குந்தர்கள் தம் நெசவுத் தொழிலின் மூலம் மானங்காக்கும் ஆடையை நெய்து தந்தார்கள். 'உண்பனநாழி உடுப்பன இரண்டே' என்றார் சங்கப் புலவர் நக்கீரர். மக்களுக்கு அடிப்படைத் தேவைகளான உணவையும், உடையையும் இவ்விரு பெரு மரபினரும் ஏற்றுக் கொண்டனர்.

ஒரு சமயம் செங்குந்த மரபினர் சிலர் இவரை அணுகினர். தம் குலத்தின் அடையாளமான ஈட்டியை முதன்மையாகக் கொண்டு தம் குலம், தொழில், பண்பு சிறக்க ஒரு நூல் பாடுமாறு வேண்டினர். நம் கூத்தபிரான், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் கோட்பாடுடைய பண்டைத் தமிழ்ப் புலவர் மரபிலே தோன்றியவராதவால், ஒரு குலத்தை மட்டும் புகழ்ந்து பாடுதலை அவர் விரும்பவில்லை. ஆனால் வந்தவர்கள் மேலும் மேலும் வற்புறுத்தவே, நம் கூத்தபிரான் அவர்களது உள்ள உறுதியைச் சோதிக்க, 'நம் இனத்தவர் எழுபது பேர்களின் தலைகளாகிய குவியலின் மீது அமர்ந்து பாடப் போகின்றேன் சம்மதமா! என்றார். உடனே அவர்கள் எழுபது பேர்களுடைய தலையை அறுத்து ஒரு குவியலாக்கித் தர அவர் அதன் மீதிருந்து பாடலாயினார். பாடுதற்குமுன் தம் இஷ்ட தெய்வமான கலைமகளை நோக்கி,

என்று சிவஞான முனிவர் சிவனடியார்களுக்குக் கூறிய இலக்கணங்களோடு பொருந்தியவராய் நம் கூத்த பிரான் திருநீறும், கண்டிகையும், ஐந்தெழுத்தும் பொருளாகக் கொண்டு, திருவெண்ணீறு சண்ணித்த மேனியராய், திருவைந்தெழுத்தை நவிலும் நாவினராய்க் கண்டிகை தரித்துக் கொண்டு சிவவேடப் பொலிவழகுடன் காட்சி அளித்தார்.

சோழப் பேரரசனாகிய விக்கிரமச் சோழன் காலத்தில் அரசவைக் கவிஞராகவும், இரண்டாம் குலோத்துங்கனுக்கு ஆசிரியராகவும் அரசவையில் அரசவைக் கவிஞராகவும் இரண்டாம் இராச ராசனுக்கும் அரசவைக் கவிஞராகவும் விளங்கினார். மேலும் நம் கூத்தபிரான் மூவரசர் காலத்திலும் கவிச் சக்கரவர்த்தியாகவும் திகழ்ந்தார்.

தாம் அரசவையில் இருந்த காலத்தில், இளம் புலவர்களை வரவேற்று அவர்களுக்கு ஆதரவுநல்கி, அவர்கள் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். ஆனால் போலிப் புலவர்களைக் கண்டிப்பதில் தவறவில்லை. **நமதருமைச் செந்தமிழ் மாசற்ற ஒண்டீழ்ந்தமிழாய் விளங்க வேண்டும் என்பது இவர் கருத்தென்பதை**

'குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன்
ஈங்கில்லை
குரும்பி யளவாய்க் காதைக் குடைந்து
தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்றாய் முடிந்து தலை
இறங்கப் போட்டு வெட்டுதற்கோ கவி
ஒட்டக் கூத்தனில்லை
விளையாட்டாக் கவிதைதனை
விரைத்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும் புலவர்எனத் திரியலாமே'

என்னும் இப் பாடல் தெரிவிக்கின்றது.

பேரரசர் இம்மூவர் பற்றித் தாமே பல நூல்கள் இயற்றியும், புலவர் பிறரைக் கொண்டு இயற்றுவித்தும் புகழைச் சேர்த்தவர். இம்மூவேந்தர் ஒவ்வொருவர் மீதும் ஒவ்வோர் உலாப் பாடிப் பரிசில் பெற்றுள்ளார். இம் மூன்று உலாக்களையும், மூவருலா என்னும் பெயரால் மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி, திராவிட வித்தியா பூஷணம், டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் நன்காய்ந்து பல ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் வெளியிட்டிருக்கின்றார்கள்.

குலோத்துங்க சோழன்மீது பிள்ளைத் தமிழ் ஒன்றும் பாடியுள்ளார். அதுவும் ஐயரவர்களால் வெளிவந்துள்ளது.

இவருக்குக் கவிச்சக்கரவர்த்தி, கவிராக்ஷசன், சருவஞ்ஞ கவி, கௌடப்புலவர் முதலிய பட்டப் பெயர்கள் உண்டு. இவை பின்னர் விளக்கப் பெறும்.

அக்காலத்தில் அரசர்கள் சிறந்த புலவர்களுக்குப் பல்லக்கு, காளம், கொடி குடை முதலிய விருதுகள் வழங்கிச் சிறப்பித்தல் மரபு.

ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் முத்துப் பல்லக்கில் திருவைந்தெழுத்து ஓதி ஏறி உலா வந்தார் எனக் காண்கிறோம். சிவபெருமானே ஆளுடைய பிள்ளையாருக்குத் திருக்கோலக்காவிற் பொற்றாளமும், திருவரத் துறையில் முத்துச் சிவிகை, முத்துக் குடை, முத்துச் சின்னங்கள் முதலியனவும், திருப்பட்டீச்சரத்தில் முத்துப் பந்தரும் அளிக்கப் பெற்றார் என அறிகின்றோம். அதைப் போலவே நம் கூத்தபிரானும் கொடி, காளம், சிவிகை முதலியன அளிக்கப் பெற்றார். அப்போது நம் கூத்தபிரான், 'இவ்விருதுகளைப் பெறுதற்கு யான் உரியேனல்லன்' என்று தம் பணிவுடைமை தோன்றத் தெரிவித்தார்.

தக்கயாகப் பரணி என்னும் நூலின் இறுதியில், 'ஆக்கம் பெருக்கும் மடந்தை வாழியே' என்று திருமகளை வாழ்த்தியிருப்பதால், இவர் பேரரசர்களாலும் பெருஞ் செல்வர்களாலும் நன்கு ஆதரிக்கப் பெற்றார் என்று அறிகின்றோம்.

முதுமைப் பருவத்தும் இவர் கவி பாடத் தவறவில்லை. மிகத் துல்லியமான நினைவாற்றலுடன் இவர் தம் வாழ்நாளின் இறுதிவரை வாழ்ந்தார்.

'தூய வெண்ணீறு துதைந்த பொன்
மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும்
நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்
தனர் வீதியுள்ளே'

என்று தெய்வச் சேக்கிழார் பெருமான், அப்பர் பெருமானை நம் கண் முன்னர் நிறுத்திக் காட்டுவது போன்று., நம் கூத்தபிரானும் தம்முதுமைப் பருவத்தில் சிவப்பழமாகத் திகழ்ந்தார்.

களோடு தோன்றினார். தம் இளமைப் பருவத்தில் காலத்தை வீணாக்காமல் தக்க ஆசிரியர்பால் அக்கால இயல்பின்படி தமிழும் வடமொழியும் ஐயந்திரிபறக் கற்றார். வடநூற் கடலை நிலைகண்டு ணர்ந்தார்; தென் சொற்கடலின் எல்லை தேர்ந்தார். தம் நுண்மான் நுழை புலத் தால் சோழப் பேரவையில் தக்கதோர் இடம் பெற்றார். நாளடைவில் அவைக் களப் புலவராக விளங்கிக் கவிச்சக்கர வர்த்தியாகவும் உயர்ந்தார். பரோபகா ரியாகத் திகழ்ந்து மறைந்தார்.

"Some are born great; some achieve greatness; for some greatness is thrust upon them"— என்பது ஓர் ஆங்கிலப் பொன்மொழி. நம் புலவர் பெருமான் பிறக்கும் பொழுதே புகழோடு பிறக்கவில்லை யானாலும் தம் முயற்சியால் புகழைத் தேடிக்கொண்டார். பின்னர்ப் புகழ் இவரைத் தேடிக்கொண்டு வந்தது.

சூழ்நிலைக் கேற்பப் பொருத்தமாகக் கவி பாடி மக்களை மகிழ்வித்த காரணத் தினால் **ஆசு கவி** யாகத் திகழ்ந்தார். சொல்லின்பம், பொருளின்பங்களோடு கூடிய பாடல்களைக் கருத்துக்கும் செவிக் கும் இன்பமூட்டும் வகையில் பாடியதால் **மதுரகவி**யாக விளங்கினார். சிவபெரு மான் தக்கன் செய்த யாகத்தை வீரபத் திரரைக் கொண்டு அழித்த வரலாற்றை பரக்கப் பாடியதனால் **விஸ்தார கவி** யாகப் போற்றப் பெற்றார். **சித்திர கவி** பாடத் தெரிந்தும் வாய்ப்பு நேராமை யினால் அவர் பாடவில்லை. ஆதலால் நம் கூத்தபிரான், தம் காலத்தில் **நாற்கவி** ராய நம்பியாகக் கவியரசரும் புவி **யரசரும் போற்றும் வண்ணம் திகழ்ந்தார்.**

எழுமையும் தொடர்ந்து வரும் இயல் பினால் நம் பெருமானுக்குக் கல்வியே (வித்யா) கற்புடை மனைவியாகத் திகழ்ந் தாள். இன்பமூட்டும் கவிகளே அம் மனைவியின் மூலம் அவர் பெற்ற பிள்ளை கள் ஆவர். தாம் அரிதின் முயன்று கற் றறிந்த வற்றைத் தக்க மாணாக்கர்க்குப் பாடம் சொல்லிய பண்பே வளமான செல்வமாக அமைந்தது. மேலும், அரச வையிலும் அறிஞர் அவையிலும் ஆணித் தரமாகப் பேசும் சொல்வன்மையே அவர் க்கு வளமூட்டும் செல்வமாகவும் அமைந் தது.

ஒட்டக்கூத்தரின் இயற்பெயர் கூத் தன் என்பது. இவர் **கூத்த முதலியார்** என்றும் வழங்கப் பெற்றார். கூத்தன் என்னும் பெயர் தில்லைத் திருச்சிற்றம் பலத்தே திருநடனம் புரியும் அம்பல வாணன் திருப்பெயர்களுள் ஒன்றாகும். இவர்க்கு இத்திருப்பெயரை இவர் பெற் றோர் இட்டமையால், இவர்கள் பழுத்த சைவச்சமயச் சார்புடையவர்கள் என்பதும் 'மழ விடையார்க்கு வழி வழியாளாய் மணம் செய்குடிப் பிறந்த பழ அடியார்' மரபினைச் சார்ந்தவர் என்பதும் நன்கு விளங்குகின்றன.

இவர் பிறந்த ஊர் மலரி என்பது. இது கீழ்க் காணும் பாடல் மூலம் தெரிய வருகின்றது.

'சென்று செவியளிக்கும் செம்மையவாய்ச்
சிந்தையுள்ளே
நின்றளவில் இன்பம் நிறைப்ப வற்றுள்-
ஒன்று
மலர்இவரும் கூந்தலார் மாதர் நோக்கு;
ஒன்று
மலரிவரும் கூத்தன்தன் வாக்கு'

(தண்டியலங்கார மேற்கோள் செய்யுள்)

'இளமையிற் கல்' என்னும் நியதிக் கிணங்க நம் கூத்தபிரான் தக்க ஆசிரியர் பால் தமிழ் இலக்கண இலக்கியங்களை யும், அக்கால முறைப்படி வட மொழிக் கல்வியையும் ஐயம் திரிபறக் கற்றுப் பெரும் புலவராகத் திகழ்ந்தார். வட மொழியிலுள்ள பல வகையான சொற் களையும், சொற்றொடர்களையும், வட நூற் கருத்துக்களையும் தாம் இயற்றிய பாடல்களிலும், நூல்களிலும் அமைத்துப் பாடுதலில் வல்லவராய் இருந்தார்.

நாள்தோறும் வைகறையில் துயில் நீத்தெழுந்து காலைக் கடன்களை முடித்து சிவபூசை செய்தவுடன், தாம் அரிதின் முயன்று கற்ற கல்வி பாழ் போகாது நெடிது நின்று பலர்க்கும் பயன்படுதல் வேண்டும் என்னும் நன்னோக்குடன், தமிழ் மொழியின்பால் ஆராக் காத லுடைய நன் மாணாக்கரை வரவழைத்து அவர் உளங்கொளும் வகையில் பாடம் சொல்லிக் கொடுப்பார். அதனால் இவர் தொண்ணூறு வயதுக்கு மேலும் வாழ்ந் தார். பாடம் சொல்லி முடித்தபின் பழைய அமுதுதான் உண்பார். எப் பொழுதும் திருவைந்தெழுத்தைப் பிறர் அறியா வண்ணம் நவிலும் நாவினராய் இருந்தார்.

'பேயன்ன புறச்சமயப் பிணக்கு நூல்
வழியனைத்தும் பிழையே அன்றி
வாயன்மை தெளிந்து சைவ சித்தாந்த
வழி தேறி அதீத வாழ்வின்
போயண்மி அஞ்செழுத்தும் திருநீறும்
கண்டிகையும் பொருளாக் கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும்
பெரும்பேறு நான் பெற்றேனால்.

(காஞ்சிப்புராணம்)

II. புலவர் பெருமக்கள்

1. கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் வாழ்வும் தொண்டும்

முதுபெரும்புலவர், திருத்தொண்டர் மாமணி, திருக்குறள்நெறித் தோன்றல்
சிவத்திரு கா. சி. தனக்கோடி அடிகள், எம்.ஏ.
(முன்னாள் முதல்வர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி,
மயிலம், தென்னாற்காடு மாவட்டம்)

துதி

கன்றாடும் கரதலத்துச் சிவகாமி யம்மை
கண்டுகளித் திடத்தில்லைக் கடிநகரிற் கனக
மன்றாடும் கூத்தனைப்போல் இருமொழிக் கும் தலைமை
வாய்ந்துவிறற் புலவர்சிகா மணியாக விளங்கி
என்றாடுங் குலத்தேவர் மூவர் வழிபடஐந் தியற்றியிணை யிலியாகி சருவஞ்ஞனுகி
நின்றாடும் புகழ்க்கூத்தன் கவிச்சக்ரவர்த்தி நேர்மையினை எடுத்துரைக்கும் நீர்மை யன் கொல்யானே:

மான் கன்றினைத் தன் இரு கைகளுள் ஒன்றில் ஏந்திய சிவகாமியம்மை கண்டு களித்திடத் தில்லைத் திருச்சிற்றம்பலத்துள் நடனமாடும் அம்பலவாணனைப் போல் சருவஞ்ஞனாகி, வடமொழி, தென்மொழி என்னும் இருமொழிக்கும் முதன்மை பூண்டு, வெற்றி பொருந்திய புலவர்க் கெல்லாம் தலைவனாக விளங்கிச் சூரிய குலத்தில் தோன்றிய பேரரசர் மூவர் வழிபட, ஐந்திலக்கணங்களும் பொருந்திய நூல்கள் பல இயற்றி ஒப்பற்றவனாகித் தமிழ் கூறு நல்லுலகத்தே தன் புகழை நிலைநாட்டிய கவிச்சக்கரவர்த்தியாகிய **ஒட்டக்கூத்தப் பெருமானின்** அளப்பரிய சிறப்புக்களை என்னால் எடுத்துரைக்க இயலுமோ''

தோற்றுவாய்

கல்வியே கற்புடைப் பெண்டிர் அப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே ஈர்ங்கவியா -சொல் வளம்
மல்லல் வெறுக்கையாம்; மாணவை மண்ணுறுத்தும்
செல்வமும் உண்டு சிலர்க்கு - குமரகுருபரர்

''உண்டாலம்ம இவ்வுலகம்'' என்றார் சங்க காலப் புலவர் ஒருவர். ஆம்! இவ் வுலகம் இன்னும் அழியாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றது. காரணம் என்ன? தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகிய பெரியோர் சிலர் வாழ்ந்து கொண்டிருப்பதால்தான்.

இவ்வுலகில் மக்கள் பிறக்கின்றார்கள்; வளர்கின்றார்கள்; முதிர்கின்றார்கள்; மடிகின்றார்கள்; மடிவதற்கு முன் தம் இனத்தை விட்டுச் செல்கின்றார்கள். கோடிக் கணக்கான பேர் இப்படிப்பட்ட விலங்கு வாழ்வையே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எண்ணுங்கால் இவர்களால் இவர்களுக்கோ இவர்கள் வாழும் நாட்டுக்கோ ஒரு பயனும் இல்லை. ஆனால் ஒரு சிலர்தாம் தாம் பிறந்த காலத்தைக் காட்டிலும் தாம் மறையும் காலத்தில், தாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த நாட்டினை ஒரு படியாகிலும் முன்னேறச் செய்திருக்கின்றார்கள். அவர்கள் தாம் உண்மையாக மக்கள் என்று சொல்லுதற்குரியவர்கள்.

அத்தகைய சான்றோர் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் தாம் நம் ஒட்டக்கூத்தப் பெருமானார். ஆயிரம் பிறைக்கும் மேலாகக் கண்ட நம் கூத்தபிரான் தமது பழுத்த சமய ஒழுக்கத்தாலும், தேர்ந்த தமிழ்ப் புலமையாலும், சீரிய அரசியல் அநுபவத்தாலும் தாம் தோன்றிய காலத்தை விடத் தாம் மறைந்த காலத்தில் தாம் வாழ்ந்த சோழ நாட்டைப் பன்மடங்கு உயர்த்தியிருக்கின்றார்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

என்னும் தெய்வப் புலவரின் பொன்மொழிக் கிணங்க, நம் கவிஞர் பெருமான் பிறக்கும் போதே புகழுக்கேதுவாய குணங்

கொண்டு பாடுவது என்ற சிந்தனையில் சில காலம் ஆழ்ந்திருந்தார். ஒரு நாள் 'தக்கன் வேள்வியை அழித்த அருஞ் செயலைக் குறித்துப் பாடுதல் ஏற்றது' என்ற எண்ணம் எழவே, அதனையே பாடுபொருளாகக் கொண்டு ஓர் அரிய பரணி பாட ஆரம்பித்தார். இராச ராச னும் அதனையறிந்து பெரும் ஆதரவு நல்கினான்.

தக்கன் நான்முகனுக்கு மைந்தன்; தவ வலிமை மிக்கவன்; இவன் மகள் தாட்சாயணி சிவபெருமானைக் கணவ னாக ஏற்றுக் கொண்டாள்; தக்கன் இதனை விரும்பவில்லை; அவன் ஒரு பெரிய வேள்வியை நடத்தினான்; அவ் வேள்விக்குத் தேவர் முனிவர் முதலி யோரை அழைத்திருந்தான்; முழுமுதற் பொருளாகிய சிவபெருமானை அழைக்க வில்லை; வேள்வி தொடர்ந்தது, தாட் சாயணி தன் கணவனாகிய சிவபெருமானின் ருெப்பத்திற்கு மாறாக வேள்விச் சாலைக் விச் சென்றாள். அங்கு அவள் தக்கனால் குவமதிக்கப்பெற்றாள். இதனைப் அபாறாத தாட்சாயணி வேள்வித்தீயில் வீழ்ந்து மறைந்தாள்.

இதனை அறிந்த சிவபெருமான் கோபம் கொண்டு தக்கன் வேள்வியை அழித்து அவன் ஆணவத்தை அடக்க எண்ணினார். உடனே வீரபத்திரக் கட வுளை ஏவினார். வீரபத்திரர் பூதப் படைகளுடன் சென்று தக்கனது வேள் வியை அழித்தார்; அவன் தலையைக் கொய்தார். ஆட்டுக்கடாவின் தலையை வைத்தார். சிவபெருமானை அவமதித்து நடத்திய வேள்விக்கு வந்திருந்த தேவர் களை நன்கு தண்டித்தார்.

இவ்வரலாற்றைப் பொருளாகக் கொண்டு நம் கூத்தபிரான் ஒன்பான் சுவையும் பொருந்த **தக்கயாகப் பரணி** என்னும் அரிய நூல் ஒன்றினைப் பாடி னார். பரணி, என்னும் இலக்கியம் தோற்றவர் பெயரைத் தாங்கிக் கொண்டு பாடப் பெறுவது. கலிங்கத்துப் பரணி, பாசவதைப் பரணி மோகவதைப் பரணி என்பனவற்றை நோக்குக.

இப்பரணியின் சில சிறப்புக் கூறுகள்:

மற்றைப் பரணிகளைப் போலப் பாட்டுடைத் தலைவனுக்கு நன்மை உண் டாக வேண்டும் என்று வாழ்த்தாமல், ஆக்குவித்தோனாகிய இராசராச சோழ னுக்கு நன்மை பெருக வேண்டும் என்று வாழ்த்தியிருத்தல். ஏனெனில் இப்ப ரணிக்குப் பாட்டுடைத் தலைவன் சிவ பெருமான்; அவன் சங்கரன். சங்கரன் என்றால் பிறர்க்கு நன்மைசெய்ப வன் என்பது பொருள். நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துப் பகுதி யில் உமைபங்கன், விநாயகன், முருகன், திருஞானசம்பந்தர் என்னும் இவர்களை மட்டும் வாழ்த்தியிருத்தல். காளியைப் பற்றிக் கூறுமிடத்துக் காடு பாடியது முதலிய பகுதிகளில் யாமளநூலின் முறைப்படி வருணித்திருத்தல். சைவத் தின் ஏற்றம் புலப்படும்படித் திருஞான சம்பந்தர் சமணரை வென்ற வரலாற்றைத் தேவிக்கு நாமகள் கூறியது முகமாகக் கூறியிருத்தல். கூழடுதல் என்னும் பகுதி யில் பேய்கள் கூழை ஆக்கிக் குடித்துப் பாட்டுடைத் தலைவனாகிய சிவபெரு மானை வாழ்த்தாமல், இந்நூலை ஆக்கு வித்த இராசராச சோழனையும் அவன் முன்னோர்களையும் அவர்கள் புரிந்த அருஞ் செயல்களையும் அறப்பணிகளையும் வாழ்த் தியிருத்தல் முதலியனவாம்.

இந்நூலாசிரியராகிய நம் கூத்த பிரான் கொள்கைகளுள் சில; ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தர் முருகக் கடவுளின் திருவவதாரம்; சில என்பதை இரண்டென்னும் பொருளில் வழங்குதல். இது வட நூல் மரபு பற்றியது. வடமொழியில் ஒருமை, இருமை பன்மை என எண் மூவகைப் படும். அது போலவே இவரும் ஒன்று சில, பல என்று கொள்கின்றார்.

இப்பரணியின் மூலம் அறியப்பெறும் அரிய செய்திகளுள் சில: அகத்தியர் யாழ் வாசித்தலில் வல்லவர்; ஆளுடைய பிள்ளையார் பாண்டியனுடைய இரு வகைக் கூனையும் நீக்கியமை: இருதயம் தாமரை மொட்டைப் போலிருத்தல்; கருட லோகம் என ஒன்றுண்டு; காலன் வேறு, எமன் வேறு; கைலை மலை இமய மலையின் ஒரு குவடு; திருமாலின் வடிவம் ஐந்து; தேவி இறைவன் மார்பிலிருத்தல்; வைரவ மதத்தினர் வெப்பு நோயை நீக்கு தற்குச் சங்கர பூசை செய்தல். மரத்திற்கு உயிருண்மை; மாடப் புறா கல்லை உண் ணுதல்; வேதங்கள் மூன்று முதலியனவாம்.

இறைவியின் திருநாம வகைகள்: ஆரணா காரி; அந்திப் போதனையாள்; உடனா குந்திரு; உவண ஊர்தி யூர்வாள்; ஐயை; கடவுள் நீலி; கலையுகைப்பாள்; பத்ர காளி; மாயோள்; மோடி; யோக யாம ளத்தினாள் முதலியன.

திருஞான சம்பந்தர்க்கு வழங்கப் பெற்ற திருப்பெயர்கள்: இமவான் மக ளார் மகன்; ஐயை களிறு; கொச்சைப் பெருமான்; நான் மறையோர் ஏறு,

பாராட்டுதலைப் பெற்று, 'கவிச்சக்கர வர்த்தி' என்னும் பட்டம் வழங்கிச் சிறப் பித்தான்.

மேலும் பல வகையான பரிசல்களை நல்கினான். அவையாவன; படுக்கக் கம் பளம், பரக்கக் குங்குமம், பதிக்கக் கங் கணம், பரிக்கக் குஞ்சரம், கடுக்கக் குண்ட லம், கலிக்கச் சங்கினம், கவிக்குப் பஞ் சரம், கவிக்கத் தொங்கல் என்பனவாம்.

இவை பெற்ற ஒட்டக் கூத்தர் மிகவும் அடக்கமாக வேந்தனை நோக்கி, 'அரசே! முத்துப் பந்தரின் கீழ் உலாவும் குழந்தை யாகிய திருஞானசம்பந்தப் பெருமா னுக்கும், செஞ்சுடர்ச் சினவேல் ஏந்திய முருகற்கும், பொதிய மலையில் தங்கி யுள்ள முனிவர் கோமானாகிய அகத்திய னார்க்கும், செஞ்சடையப்பனாகிய சிவ பெருமானுக்கும், வெண்டாமரை மலரி லிருக்கும் நான்முகனுக்கும் அவர்கள் பாடும் பாடலுக்காகத் தரப்படுகின்ற கொடியும் எக்காளமும், குளிர்ந்த தமிழைப் பாடும் இவ்வேழைத் தமிழ்ப் புலவனுக்குத் தகுமோ என்னும் கருத்தமைய,

'இடுக்கண் புண்படு நிரப்புக் கொண்டுழன்று
இரக்கச் சென்றவின் றெனக்குச் சிங்களம்
திடுக்குற் றஞ்சும்வெஞ் சினத்துச் செம் பியன்
திருக்கைப் பங்கயம் சிறக்கத் தந்தன
படுக்கக் கம்பளம் பரக்கக் குங்குமம்
பதிக்கக் கங்கணம் பரிக்கக் குஞ்சரம்
கடுக்கக் குண்டலம் கலிக்கச் சங்கினம்
கவிக்குப் பஞ்சரம் கவிக்கத் தொங்கலே'

'பத்துக்கொண் டனதிக்கும் பதறிப்போய் முடியப்
பைம்பொன் தாரகை சிந்தப் பகி ரண்டத் திடையே
மத்துக்கொண் டமுதத்தைக் கடையாழித் திருமால்
வடிவாகிப் புவிகைக்கொண் டருள் மானா பரணா
முத்துப்பந் தரில்நிற்கும் குருளைக்கும், சினவேல்
முருகற்கும், பொதியக்கோ முனி வர்க்கும் பதுமக்
கொத்தர்க்கும் சடிலக்குந் தளருக்கும் அல்லால்
கூழைத்தண் தமிழுக்கேன் கொடியும் காளமுமே'

என்ற பாடல்களைப் பாடினார்.

6. பரணி பாடியது (தக்கயாகப் பரணி)

எண்ணும்இரு வேறுலகத் தியற்கைஎனும் குறளை
எதிர் மறுத்தே இருபொருளும் ஒருங்கு பெறும் கூத்தன்
கண்ணுபல குணக்குன்றாம் வரராச ராசன்
கரசிரகம் பிதஞ்செய்யக் கவிஞர் குழாம் களிப்பப்
பண்ணும்இரு மொழிச்சுவைகள் நண்ணு தக்க யாகப்
பரணியினைப் புகழ்ந்திடுகோ! முரணி லதன் கண்ணே
அண்ணுசுவை பலவிளங்க அரியவுரைசெய்த
ஆசிரியன் பெரும்புலமை பேசிடுகோ யானே!

வரராச ராசன் - இரண்டாம் இராச ராசன்; கரசிர கம்பிதம் - தலையை அசைத்துக் கைதட்டித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தல்; இருமொழிக் கலை - வட நூற்கலையும் தமிழ் நூற் சுவையும்; முரணில் - மாறுபடாத, ஆசிரியன் - உரை யாசிரியன்.

இப்பாடல் கவிச்சக்கரவர்த்தியாம் ஒட்டக்கூத்தரைப் பற்றியும், அவர் பாடிய தக்கயாகப் பரணியைப் பற்றியும், அவ் வரிய நூலுக்குச் சீரியதோர் உரை கண்ட உரையாசிரியரைப் பற்றியும் புகழ்ந் துரைக்கின்றது.

'இருவேறு உலகத்தியற்கை திரு வேறு, தெள்ளியர் ஆதலும் வேறு' என்னும் பொதுமறையை எதிர்மறுத்துக் கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் ஒருங்கு பெற்ற கூத்தன், நற்குணக் குன் றாம் இராசராசன் தன் தலையை அசைத்துக் கைதட்டித் தன் மகிழ்வை வெளிப்படுத்தவும், புலவர் குழாம் களி சிறக்கவும், வடமொழி தென்மொழி என்னும் இரு மொழிச் சுவையும் விரவி நடைபெறவும் இயற்றிட, தக்கயாகப் பரணி என்னும் பிரபந்தத்தின் பெருமையினை என்னால் எடுத்துரைக்க ஒல்லுமோ! அல்லது, அந்நூலின் கண்ணே உள்ள சுவை பலவும் தோன்ற, முன்னுக்குப் பின் முரண்படாதபடி அரிய உரை செய்த உரையாசிரியரின் நுண்மாண் நுழை புலத் தினை எடுத்தியம்ப வல்லவனோ யான்?

நம் கூத்தபிரானுக்கு நெடுநாளாகத் தம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய சிவபெரு மான்மீது ஒரு சிறந்த நூல் இயற்ற வேண்டும் என்னும் எண்ணம் இருந்தது. ஆனாலும் எதனைப் பொருளாகக்

அடைவது போல மன்னர்கள் பலரும் சோழ நாட்டுத் தலைநகரில் குழுமியிருந் தனர். கொடை முரசின் பேரொலி எட்டுத்திக்கிலும் பரவியது. எங்கணும் மங்கல முரசங்கள் அதிர்ந்தன. மங்கல மடந்தையர் மனம் மகிழ்ந்தனர். வீர மைந்தர்கள் உளம் களித்தனர். பொங்கு தமிழ்ப் புலவர்கள் தம்தம் புலமை விருந் தளிக்க வாய்ப்பு நேர்ந்ததே என்று அவைக் களமெங்கும் நிறைந்தனர். மன்னன் பிறந்த நாள் தங்கள் வாழ்க்கை வழி திறந்த நாளாகச் சிறையிலிருந்தவர் கருதி மகிழ்ந் தனர்.

நாள்காலையிலேயே வேந்தன் நீராடி வெள்ளாடை உடுத்தி, வெண்ணீறணிந்து வெள்ளணி யணிந்து வெண்சாந்து பூசித் தென் கடல் முத்தும், கீழ்க்கடல் பவழமும் அணிசெய்யத் தங்கள் குலக் கொழுந் தான சிவக் கொழுந்தைப் பணிந்து, மிக்க பொலிவுடன் அத்தாணி மண்டபம் வந் தடைந்தான். அதற்கு முன்னரே தம் குரு நாதராகிய ஒட்டக்கூத்தருக்கு வரிசைகள் பல அனுப்பி வைத்திருந்தான்.

புவியரசரும் கவியரசரும் வாழ்த்துக் கூற, மங்கல மடந்தையர் மலர் சொரிய. மங்கல முரசம் எங்கும் முழங்க, பாடும் பாணரும், ஆடல் மகளிரும் அணி செய்ய வேந்தன் குலோத்துங்கன் அரியணையில் அமர்ந்தான். மேலும் ஆடவரும் மகளி ரும் அவையில் நிறைந்திருந்தனர்.

இப்போது புலவர்கள் தம்தம் புல மையைக் காட்டும் வாய்ப்பு நேர்ந்தது. புலவர்களுள் சிலர் சோழ நாட்டைப் புகழ்ந்தனர். சிலர் சோழன் மரபைப் புகழ்ந்தனர். பலர் சோழ வேந்தனைப் புகழ்ந்தனர். யாவும் கேட்ட சோழப் பேரரசன் யாரோ ஒருவரின் பாராட்டு தலைக் கேட்க ஏக்க முறுவது போல் தெரிந் தது. அவன் கண்கள் அவையைத் துழா வின; ஒரு விநாடி அவையில் அமைதி நிலவியது; மறு விநாடி கணீர் என்ற குரல் எழுந்தது.

'ஆடும் கடைமணி நாவசை யாமல்
அகில மெல்லாம்
நீடுங் குடையில் தரித்த பிரான்......
இவ்வொலியைக் கேட்டவுடனேயே குலோத்துங்கன்

.... என்று நித்தம் நவம்
பாடும் கவிப் பெருமான் ஒட்டக்
கூத்தன் பதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழன் என்றே
என்னைச் சொல்லுவரே.

என்று பாடி முடித்தான். தொடங்கியவர் ஒட்டக்கூத்தர், நிறைவு செய்தவன் பேரரசன் குலோத்துங்கன். ஆசிரியர்க்கு மாணாக்கன் பாலிருந்த மதிப்பும், மாணாக் கனுக்கு ஆசிரியர் பாலிருந்த பக்தியும் இப்பாடலின் மூலம் வெளிப்பட்டதை உணர்ந்த மக்கள் கொண்ட உவகைக்கு ஓர் எல்லையும் உண்டோ!

சோழ வேந்தன் தன் குருநாதருக்கு மேலும் பல பரிசுகளை அளித்துச் சிறப் பித்தான்.

5. கவிச்சக்கரவர்த்தி

இரண்டாம் குலோத்துங்கன் தன் பிறந்த நாளில் தமக்குச் செய்த சிறப்பினை எண்ணி எண்ணி மகிழ்ந்த நம் கூத்தபிரான் அவன் மீது 'பிள்ளைத் தமிழ்' ஒன்று பாடி னார். பாட்டுடைத் தலைவனைக் குழந் தையாக எண்ணி, 'இக் குழந்தையைக் காக்க' என்று பல தெய்வங்களை வேண் டிக் கொள்ளும் காப்புப் பருவமுதல் பத்து பருவங்களால் அத்தலைவனுக்குரிய இயல்புகளும், பெருமைகளும் தோன்றப் பாடப்படும் நூல் பிள்ளைத் தமிழ் எனப் படும். இரண்டாம் குலோத்துங்கன் **பிள்ளைத் தமிழ் மூலம் பிள்ளைத் தமி ழுக்குச் செம்மையான வடிவம் தந்தவர் நம் கூத்தபிரான் ஆவார்.** பிள்ளைத் தமிழ் பாடி முடிந்ததும் அவன் மேல் உலா ஒன்றும் பாடினார். இவற்றை அறிந்தான் குலோத்துங்கன். நல்ல நாளில் அவையைக் கூட்டிப் பிள்ளைத் தமிழையும், உலாவையும் அரங்கேற்றச் செய்தான். நம் கூத்தபிரான் அரங்கேற்றி யருளினார்.

அரங்கேற்றம் முடிந்ததும் குலோத் துங்கன் நம் கூத்த பிரானை வணங்கி 'அரசர் தரும் பொன்னாகிய பொருளோ விரைவில் அழியக்கூடியது: புலவர் தரும் நூலாகிய பொருளோ என்றும் அழியாது தன்னைப் பொருளாக உடையவன் புகழைப் பறைசாற்றி நிற்பது. பிரமன் படைக்கும் உயிர்களின் உடம்பு விரைவில் அழிந்து விடுகின்றது. ஆனால் புலவர் செய்யும் பாடலாகிய உடம்பு என்றும் அழியாது நிலைத்து நிற்கின்றது 'பொன் னாற் பிரயோசனம் பொன் படைத் தார்க்கு உண்டு: அப்பொன் படைத் தோன் தன்னாற் பிரயோசனம் பொன் னுக்கங் கேதுண்டு' நீர் பொன், யான் அப்பொன்னைப் படைத்தவன் என்று பலவாறாகப் புகழ்ந்தான்.

பின்னர், தன்னைப் புவிச்சக்கர வர்த்தியாக்கி அகில உலகமும் புகழச் செய்த தன் ஆசான் ஒட்டக் கூத்தர்க்கு அவையோர் அறிய அவர்தம் ஒருமுகமாக

'தலைவாணி நீயுலகில் இருப்பதுவும்
கல்வியுணர் கவிவல் லோரைத்
தலையாகக் காப்பதுவும் அவர் நாவில்
வாழ்வதும்சத் தியமே அன்றோ
சிலைவாணன் நாவிருந்து ஆயிரம் புயங்
கள்துணிர்தும் உயர் சீவனுற்றான்
தலையாவி கொடுத்திடுஞ்செங் குந்தருயிர்
பெற்றிடநீ தயைசெய் வாயே'

என்னும் அரியதோர் பாடலைப் பாடினார்.

'கலைகட்குத் தெய்வமாகிய அன்னையே, நீ அன்பர்கட்கு அருள் செய்ய இந்நிலவுலகில் தங்கியிருப்பதும், கற்க வேண்டுவனவற்றைக் கற்றுணர்ந்த பாவலரை முதன்மையாகக் காப்பாற்றுவதும், அவர்தம் நாவில் வீற்றிருப்பதுவும் உண்மையல்லவா! வில்வித்தையில் சிறந்த வாணாசூரன் நாவில் நீ இருந்தமையாற்றான் தன் ஆயிரம் தோள்களும் கண்ணனால் வெட்டப்பட்டும் அரிய உயிர் போகாது பிழைத்திருந்தான். ஆதலால், தங்கள் தலையையே யான் பாடுகின்ற பாட்டுக்குப் பரிசாக அளித்ததால் உயிரையும் அளித்த செங்குந்தர் மீளவும் உயிர் பெற்றெழும் வண்ணம் அருள் புரிவாயாக, என்பது மேற்பாடலின் பொருள்.

ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ஒவ்வொரு தலையும் தனக்குரிய உடலோடு சேர்ந்து ஒட்டிக் கொண்டது. எழுபது பாடல்கள் பாடி முடிந்ததும், வெட்டுண்ட எழுபது பேரும் எழுந்தனர். நூலும் ஈட்டி எழுபது என்னுப் பெயர் பெறலாயிற்று. கூந்தருப ஒட்டக் கூத்தர் என்னும் பெயர் பெற்றார்.

தமிழ்ப் பாடல்களுக்காகத் தம் தலையைத் தந்த செங்குந்த மரபினரை வியந்து நம் கூத்தபிரான்,

'நிரை தந்தார் உலகினுக்கே; யாவருக்கும்
அபிமானம் நிலைக்கத் தந்தார்
கலை தந்தார் வணிகருக்குச் சீவனம் செய்
திடவென்றே கையில் தந்தார்
விலை தந்தார் தமிழினுக்குச் செங்குந்தர்
என் கவிக்கு விலையா கத்தான்
தலைதந்தார் எனக்கொட்டக்கூத்தனெனும்
பெயரினையும் தாம்தந் தாரே'

என்னும் பாடலைப் பாடியருளினார்.

இவ்வருஞ் செயல் தொண்டை நாட்டில் திருவாலங்காட்டுக் கடுத்த பழையனூரில் நீலி என்ற பேயின் கணவனுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு வேளாளர் எழுபதின்மர் தீயில் விழுந்து உயிர் துறந்ததை நினைவூட்டுகின்றது.

3. பெற்ற சிறப்புக்கள்

நம் கூத்த பிரான் இளமையிலேயே ஒழுக்கமும், நேர்மையும், எளிமையும், சிவபக்தியும் உடையவராய் இருந்தார். இவருடைய அடக்கத்தையும், புலமையையும் கண்ட விக்கிரம சோழன் இவர்பால் மிக்க அன்புடையவனாகித் தன் அவையில் இருந்த புலவர் குழாத்துக்குத் தலைவராக்கினான். நம் கூத்த பிரானும் அன்று முதல் அரசனது அவைக்களப் புலவர் தலைவரானார்.

முதற் குலோத்துங்கன் காலத்தில் முற்றிலும் முறியடிக்கப்பட்ட கலிங்கர்கள் விக்கிரம சோழன் காலத்தில் மீண்டும் படை எடுத்தனர். இதனையறிந்த விக்கிரம சோழன் கலிங்கத்தின் மேல் படையெடுத்துச் சென்று அதனை வென்றான்.

விக்கிரமன் வாகை மாலை சூடித் தன் நாடு திரும்பியதை அறிந்த ஒட்டக் கூத்தர் அவன் வெற்றியைச் சிறப்பிக்கும் வகையில் ஒரு பரணி பாடினார். 'கலிங்கப் பரணி' என்னும் பெயரினது; 'தென் தமிழ்த் தெய்வப் பரணி' என்று அறிஞர் பெருமக்களால் போற்றப் பெற்ற சிறப்பினையுடையது. கலிங்கத்தில் சூடிய வாகை மாலையோடு விக்கிரமன், நம் கூத்தபிரான் சூட்டிய புகழ் மாலையையும் அணிந்து பொலிவு பெற்றான். பின்னர் இவர் அவன் மீது ஓர் உலாவும் பாடினார்.

தம்மீது உலாப்பாடி முடித்ததையறிந்த விக்கிரம சோழன் அதனைத் தன் அவையில் அரங்கேற்றச் செய்தான். நம் கூத்தபிரானும் அவன் அவையில் அரங்கேற்றினார். அவரது வாக்கு வன்மையையும், சொல்வளமையையும் கண்டுணர்ந்த புலவர் பெருமக்கள் அவரைப் போற்றிப் பாராட்டினர். அரசனும் அவருக்குச் சிறப்புக்கள் பல செய்தான்.

4. ஆசிரியரும் மாணாக்கனும்

நம் கூத்தபிரான் சோழன் இரண்டாம் குலோத்துங்கனுக்கு ஆசிரியராக இருந்தவர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. விக்கிரம சோழனுக்குப் பின் இரண்டாங் குலோத்துங்கன் அரியணை ஏறினான். அவனுக்குப் பிறந்த நாள் வந்தது. விழாவுக்கு வேண்டிய ஏற்பாடுகள் விமரிசையாக நடைபெற்றன. ஆறுகள் பலவும் ஒருமுகமாகக் கடலை

(9) ஈட்டி எழுபது: இந்நூல் தோன்றிய காரணம் முன்னர்க் கூறப் பெற்றது.

10. சான்றோரைப் போற்றும் பண்பு

நம் கூத்த பிரான் சமயம் நேரும் போது தக்க புலவர்களையும் பாராட்டுவதில் தவறியதில்லை. கலிங்கம் வென்ற முதற் குலோத்துங்கன்மீது கவிச் சக்கரவர்த்தி யாகிய செயங்கொண்டார் அரியதொரு பரணி பாடினார். அதற்குக் 'கலிங்கத்துப் பரணி' என்று பெயர். தமிழிலக்கியவுலகில் பாடப்பெற்ற முதற் பரணி இதுவே யாகும். இவ்விலக்கியத்தின் சொற்சுவை பொருட்சுவைகளில் ஊறித் திளைத்த நம் புலவர் பெருமான், தாம் பாடிய குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழில்

'பாடற் பெரும் பரணி தேடற் கருங்கலி
கவிச் சக்ர வர்த்தி பரவச்
செஞ்சேவகஞ் செய்த சோழன் திருப்பெயர'

என்று செயங்கொண்டாரைப் பாராட்டி யிருத்தலிலிருந்து பேரறிஞர் பிறரையும் சமயம் வாய்க்கும் போது பாராட்டுதலில் வல்லவர் என்பதும் புலனாகின்றது.

இதனால் புலமைக் காய்ச்சல் என்பது இவரிடம் ஒரு சிறிதும் இல்லை என்பதும், இவரைப் பற்றியெழுந்த கட்டுக் கதைகள் அத்தனையும் கற்பனையே என்பதும் தெளிவாகின்றன.

11. தாய் மொழியின் பால் பற்று

நம் கூத்தபிரான் இருமொழிப்புலமை மிக்கவராயினும் அன்னைத் தமிழின் பால் அளவற்ற பக்தி பூண்டவர்; அத்தமிழை நன்கு வளர்த்த அகத்தியர் பால் எல்லை யற்ற பேரன்பு பூண்டவர். அகத்திய ருடைய பெருமையைக் கூறுமிடத்து,

முடிதும் எனமறை முதலிய பரவவும்
முறிதும் எனநிசி சரர் குலம் இரியவும்
முரிதும் எனஎழு குலகிரி குலையவும்
முனைதும் எனஎழு புணரிகள்
மறுகவும்
மடிதும்எனமகி தலம்நிலை தளரவும்
மறிதும் எனஅடி சுரபதி வருடவும்
வரதன் ஒருதமிழ் முனிவரன்'
பரணி-40

(1) இதிகாசம் முதலானவை பவிஷ்ய மான எதிர்காலமும் உணர்வன வாதலால், அகத்தியன் முன்னொரு காலத்தில் மகா தவர் அருள் செய்ய வடக்கினின்றும் தற்கு நோக்கிப் போதுகின்ற காலத்தில், 'இவன் வேதாதி சாத்திர மான நம்மை யெல்லாம், ''அநந்தாவை வேதா'' என்னும் கீர்த்தியற மூன்று தமிழாக்கி முடிக்கின் றான் எனவும் (2) நிசிசரர், பிரம ரிஷி யாகிய அகத்தியன் வாரா நின்றான்; அவ னால் நாமெல்லாம் முறிந்து போவோம்' என அவனது சாபம் அஞ்சி யோடவும் (3) பண்டு, விந்த பருவதத்தை மேரு பரு வதம் காணத் தன் ஸ்ரீபாதத்தாற் பாதா ளத்தில் அழுத்திய கதையை நினைந்து உயர்ந்த தலையை யுடைய குல பருவதங் கள் நம்மையும் இப்பிரகாரம் செய்வன் என நினைந்து குலையவும் (4) பண்டு ஓர் அசுரனைச் சுட்டி நம்மையும் உள்ளங் கையிலே கொண்டு நக்கி உதராக்கினியால் தகிப்பித்தான்; இவன் நம்மை எவ்வாறு செய்வானோ என்று எழு கடல்கள் மறுக வும் (5) தவஞ் செய்யாதே தானஞ் செய் யாதே வடதிசைப் பெருங்களத்தாற் சுவர்க்கத்தைத் தொடலாம் படி உயர்ந்த எம்மை ஈசுவரனது ஏவலாலே சமதளமாக் கத் தனியே வருகின்றான்; இனி நாம் கெட்டுப் பொன்னாகாது மண்ணேயா வோம் எனப் பூமி தான் நின்ற நிலையில் தளரவும் (6) பண்டு நகுஷனான கௌரவ குலபதி சுவர்க்க ராச்சியத்து அமரர்க்கர சனாக வீற்றிருந்த இந்திரனுடைய தேவி சசிதேவியைக் கண்டு மோகிப்ப, அவள் பிரம ரிஷிகளே, காவின சிவிகை ஏறி வரலாம் என்ன, அவனும் அகத்திய புலத்தியர்களை அழைத்துக் காவச் சொல்லி ஏறிவர முன் தண்டு காவின அகத்தியன் குறளனதாலின் அவன் முதுகிலே கால்படப், 'பெரும்பாம் பாய் விழுகெனச்' சாபமிட்டதனை நினைத் துப் பூர்வ தேவேந்திரன் பயப்பட்டுத் திருப் பாதங்களை வருடவும், வரங் கொடுக்க வல்லவனாகிச் சமானமின்றி யிருக்கும் அகத்திய மகரிஷி - இவையெல்லாம் வேத கதை.

திருமுருகன் சூரபதுமன் மீது போர் மேற் சென்ற காலை, அவன் தளபதியாகிய வீரவாகு தேவர் போர்க்கோலம் கொண்ட போது தமிழ் மரபுக்கேற்பத் தும்பை மாலையைச் சூடிக் கொண்டார் என்பதனை

'பொதியில் வாழ்முனி புங்கவன்திரு
வாய் மலர்ந்த புராண நூல்
விதியினால் வருதும்பைமாலை விசும்
புதூர மிலைச்சியே'

என்று தமிழ் மரபிற்கேற்பப் பாடிப் பரவி யுள்ளார்.

மேலும், அகத்திய முனிவரை 'ஒரு தமிழ் முனவரன்' என்றும், பொதிய மலை யைத் 'தமிழ்க் குன்று', 'தமிழ்ப் பொதி யில்' என்றும் சொல்லியுள்ளார். 'கோக் கும் தமிழ்க் கொத்தனைத்தும் வாழியே,

9. இயற்றிய நூல்கள்

நம் கூத்தபிரான் இயற்றிய நூல்களாவன: 1. காங்கேயன் நாலாயிரக் கோவை, 2. விக்கிரம சோழனுலா 3. கலிங்கப் பரணி 4. அரும்பைத் தொள்ளாயிரம் 5. குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் 6. குலோத்துங்க சோழனுலா 7. இராசராச சோழனுலா 8. தக்கயாகப் பரணி 9. ஈட்டி எழுபது என்பனவாம்.

(1) காங்கேயன் நாலாயிரக் கோவை: தம்மை இளமையில் வளர்த்து ஆதரித்த புதுவைக் காங்கேயன் மீது பாடப்பெற்ற நூலாகும். இச்செய்தி சோழ மண்டல சதகத்தால் அறியக் கிடக்கின்றது. (நூல் கிடைக்கவில்லை)

(2) விக்கிரம சோழனுலா: இந்நூல் விக்கிரம சோழனைப் பற்றியும், அவன் முன்னோர்களைப் பற்றியும், அவர்கள் செய்த அருஞ் செயல்களைப் பற்றியும் எடுத்தியம்புவது; வரலாற்றாராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவது. விக்கிரமன் உலா வரும்போது பருவ மகளிர் ஏழுவர் கண்டு காமுற்றதாகப் பாடப் பெற்றது. இலக்கியச் சுவை பொருந்திய இந்நூல் ஏழு பருவ மகளிரின் உடல் வளர்ச்சிக்கும், மன வளர்ச்சிக்கும் தக்க வகையில் வருணித்திருப்பது பன்முறை படித்தின்புறுதற்குரியதாகும். 342 கண்ணிகளையுடையது.

(3) கலிங்கப் பரணி: விக்கிரம சோழன் தென் கலிங்க மன்னனாகிய தெலுங்க வீமனைப் போரில் வென்ற செய்தியைப் பாராட்டிப் பாடிய நூலாகும் இது. விக்கிரம சோழன் மீது இவர் இப் பரணியைப் பாடினார் என்பதற்கு,

> 'விரும்பரணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
> பெரும்பரணி கொண்ட பெருமாள்- தரும் புதல்வன்
> கொற்றக் குலோத் துங்கச் சோழன்'

என்று குலோத்துங்க சோழனுலாவிலும்,

> 'செருத்தந் தரித்துக் கலிங்க ரோடத்
> தென் தமிழ்த் தெய்வப்பரணிகொண்டு
> வருத்தந் தவிர்த்துல காண்டபிரான்
> மைந்தர்க்கு மைந்தன் வாழ்த்தினவே

என்ற தக்க யாகப் பரணியின் தாழிசைக்கு (776) உரை வகுத்த பழைய உரையாசிரியர் இப்பரணி பாடினார் ஒட்டக்கூத்தரான கவிச் சக்கரவர்த்திகள். இப்பரணிப் பாட்டுண்டார் விக்கிரம சோழனாவர் என்று குறிப்பிட்டுள்ளமையினாலும் தெரிய வரும். (தற்போது இந்நூலும் கிடைக்கவில்லை)

(4) குலோத்துங்க சோழனுலா: விக்கிரம சோழனின் மகனும் தன் அருமை மாணாக்கனுமான இரண்டாங் குலோத்துங்கன் மீது பாடப் பெற்றதாகும். 387 கண்ணிகளையுடையது.

(5) குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்: உலா பாடிய பின்னரே இவன் மீது இப்பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார். 103 பாடல்கள் உள்ளன. பிள்ளைத் தமிழ் பற்றிய குறிப்புக்கள் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. பிள்ளைத் தமிழ் என்னும் சிற்றிலக்கியத்துக் குரிய உறுப்புகள் பல அமையுமாறு பாடியவர் வைணவப் பெரியார் பெரியாழ்வார் ஆவர். பிள்ளைத் தமிழ் என்னும் இப் பிரபந்தத்திற்கு முதல் முதலாகத் தக்க வடிவம் அமைத்துப் பாடியவர் நம் கூத்தபிரானே யாவார்.

(6) இராச ராச சோழனுலா: நம் கூத்தபிரான் தமது முதுமைப் பருவத்தில் பாடப் பெற்ற நூல் இதுவாகும். அளவாலும் சுவையாலும் மிக்கது; 391 கண்ணிகளை யுடையது. இவ்வுலாவுக்குச் சிறந்த பழைய உரை ஒன்றுண்டு: நம் புலவர் பிரானின் மாணாக்கருள் ஒருவர் எழுதியிருக்கலாம்.

இவ்வுலாக்களின் மூலம் சோழப் பேரரசர்களுடைய குலத்தொன்மை, தலைவர்கள் பெருமை, பள்ளியெழுதல், நீராடித் தம்மை ஒப்பனை செய்து கொள்ளுதல், பட்டத்து யானை மீது அமர்தல், உலா வருதல், உடன் வருவோர், குழாங்கள், அவர்கள் கூற்று என்பன முதலிலும்; ஏழு பருவ மகளிருடைய உணர்ச்சிகளும், செயல்களும், விளையாட்டுக்களும், தலைவர்களைக் கண்டு காமுறுதலும், அவர்கள் அருள் செய்தலும் ஆகிய நிகழ்ச்சிகள் பின்பு கூறப்படுதலும் ஆகிய செய்திகளை அறிகின்றோம்.

(7) தக்கயாகப் பரணி: பதினொரு உறுப்புக்களையும் 814 தாழிசைகளையும் கொண்டது. வீரப்பரணிகளின் போக்கை மாற்றிய புதுப்பரணி; இதற்கு அரிய உரை ஒன்றுள்ளது. இதன் பெருமையும், உரையின் அருமையும் முன்னர்க் காட்டப் பெற்றன.

(8) அரும்பைத் தொள்ளாயிரம்: விக்கிரம சோழனின் படைத்தலைவனும் தில்லை, திருவதிகை முதலிய தலங்களிலுள்ள திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் பல புரிந்தவனுமாகிய அரும்பாக்கிழான் மணவிற்கூத்தன் காலிங்கராயன் மீது பாடப் பெற்ற நூலாகும் இது. 900 பாடல்களை உடையது. கிடைக்கவில்லை.

தலும் பிறவும். உலகு தொகுத்தலாவது யோனியும் யோனி பேதா பேதங்களும் சாதியும் சங்கர சாதியும் தொழிலும் திரட்டுதல். உலகு படைப்பார் என்றது அவாந்தர யுகாந்தங்களிலும் லோகத்தை மீள மீளப் படைப்பாரென்றவாறு. உலகு துடைப்பா ரென்றது லோகமெல்லாவற்றையும் அழிப்பா ரென்றவாறு. அலகு வகுப்பா ரென்றது அளவில்லாத லோகத்தை அளவிடுவார் என்றவாறு. அகில கலைக்கூறுடைய விடுப்பாரென்றது சதுசட்டி கலைஞானமான 64 கலை ஞானங்களுக்கும் வினாவுத்தரம் சொல்லுவாரென்றவாறு. இவை யெல்லாம் செய்வார் மகா காளியான பரமேசுவரியுடைய அடியார் என்றவாறு.

ஏ என்றது தேற்றேகாரம்

எனவே, பிரம்மா விஷ்ணு ருத்திர மகேசுவர சதாசிவாதி தேவர்களும் பிறரெல்லாரும் அவனடியார் என்றவாறு. இதனைப் பிரம்ம யாமளத்திற் கண்டு கொள்க.

மேற்கண்ட பாடல் நல்ல தமிழில் அமைந்துள்ளது. ஆனால் அதன் உரையோ பெரும்பான்மையான வட சொற்களால் அமைந்துள்ளது.

இதனால், வட மொழியின் செல்வாக்கு எந்த அளவுக்கு உரையாசிரியரைக் கவர்ந்துள்ளது என்றும் அவர் காலத்தில் ஓங்கியிருந்தது என்பதும் புலனாகின்றது. ஆனாலும், உரையாசிரியரின் இருமொழிப் புலமை காரணமாக நாம் வடமொழியிலுள்ள அரிய பல நுட்பமான செய்திகளை அறிந்து கொள்கின்றோம். இஃதும் ஓர் நன்மை யல்லவோ?

உரையாசிரியரால் நூலாசிரியர் பெருமை பெற்றார். நூலாசிரியரால் உரையாசிரியர் பெருமை பெற்றார். அந்த அளவுக்குத் தக்கயாகப் பரணி என்னும் இந்நூல் இருவருக்கும் பெருமை சேர்த்திருக்கின்றது.

ஆதலால், நாமும் அன்னை மொழியாம் அருந்தமிழ் தவிர உள் நாட்டு மொழி ஒன்றையும் அயல்நாட்டு மொழி ஒன்றையும் நன்கு பயின்று அன்னைத் தமிழை அரிய பல நூல்களால் ஓங்கச் செய்வோமாக.

8. பட்டமும் பதவியும்

பண்டைக் காலத்தில் வேந்தர்கள், வள்ளல்கள், குறுநில மன்னர்கள் முதலியோர் புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் பல பொருள்களை நல்கியும் பட்டங்கள் அளித்தும் சிறப்பித்ததுண்டு. அது போன்றே நம் கூத்தபிரானும் மூவரசர் காலத்தில் பல பட்டங்களையும், பல சிறப்புக்களையும் பெற்றிருக்கின்றார். நம் கூத்தபிரான் சிவிகை, காளம், சந்திர வட்டக் குடை, கொடி, ஆலவட்டம், சாமரை முதலிய சிறப்புக்களைப் பெற்றிருந்தார். இவையெல்லாம் குலோத்துங்க சோழனாலும் அரசர் பிறராலும் அளிக்கப் பெற்றவை.

சோழர்கள் ஆட்சி தொடர்ச்சியாகத் தமிழ் நாட்டில் சிறந்திருந்த காலத்தில் (1) நம் கூத்தபிரான் இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய வேந்தர் அரசவையில் தொடர்ந்து அவைக்களப் புலவராக விளங்கியதுடன் கவிகளுக்கெல்லாம் பேரரசராக, **கவிச் சக்கரவர்த்தியாக** விளங்கியுள்ளார். (2) இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் என்னும் இவர்கள் ஆட்சியில் அரசியல் அறிவுரையாளராகவும் விளங்கியுள்ளார். (3) காளம் என்பது சின்னம் என வழங்கும் ஒருவகைத் துளைக் கருவி. தெய்வமும், பெரியோரும் உலாவரும் போது அவர்க்கு முன்னே இக் காளத்தை ஊதிச் செல்வது நம் நாட்டில் தொன்று தொட்டு வரும் மரபாகும். காளத்தை விருதாகப் புலவர்கள் பெறும் வழக்கம் மிகப் பழமையானது ஒன்றாகும். நம் புலவரும் காளத்தை விருதாகப் பெற்றிருந்தமையால் **காளக் கவி** என அழைக்கப் பெற்றார். (4) கவிகளை மிடுக்காக மிக எளிதில் விரைந்து பாடியபான்மையினால் **கவிராக்ஷசன்** எனப் பெற்றார். (5) நம் கூத்தர் பிரான் வடமொழியிலும் தென் மொழியிலும் வல்லவர்; இவருடைய நூல்களில் வடமொழித் தொடர்கள் பல காணப்படுகின்றன; மேற்கூறிய இருமொழிப் புலமையுடன் பல கலைகளின் அறிவையும் இவர் பெற்றிருந்த காரணத்தால் இவருக்குச் **சருவஞ்ஞ கவி** என்னும் பட்டப் பெயர் உண்டு. (எல்லாம் அறிந்த புலவர் என்பது இத்தொடரின் பொருளாம்). (6) வடநூன்முறை பற்றிச் செய்யுள் நெறிகள் இருவகைப் படும். அவை **வைதருப்ப நெறி**, **கௌட நெறி** எனப்பெறும். வைதருப்ப நெறி என்பது செறிவு, தெளிவு முதலியன அமையப் பாடுவது. **கௌட நெறிச்** செய்யுள்களோ விசேடமான பொருளை உணர்த்தும் சொல்லாற்றலுடையனவாயும், எதுகை, மோனை முதலியன அமையப் பெற்றனவாயும், உலக இயல்புகளைக் கடந்து அமைக்கப் பெறும் வருணனைகளை உடையனவாயும் அமையப்பாடப் பெறுவன. நம் கூத்தபிரான் கௌட நெறியில் பாடல்களைப் பாடும் இயல்பினராதலால் **கௌடப் புலவர்** எனச் சிறப்பிக்கப் பெற்றார்.

பரசமய கோளரி; பிள்ளையார்; மலையான் முலையாள் அமுதுண்டவர்; வெள்ளி மலைப் பெருமான் மகனார் முதலியன.

அருஞ்சொற்கள் சில; அ - பிரமன்; அருகுதல் - பெருகுதல்; ஏ - இசை;கடுமை- புதுமை; சாமனார் - முருகக் கடவுள்; தாழி-வைகுண்டம்: புனலன் - நாராயணன்; முக்கல் - முழுகச் செய்தல்: வாள் - வார்த்தை; கீர்த்தி

7. உரையாசிரியர்

தக்கயாகப் பரணியின் உரையாசிரியர் யார் என்று தெரியவில்லை. அதனால்

பாரும் விசும்பும் புகழ்தக்க யாகப்
பரணியின்பால்
ஆரும் சுவைபல ஆரும் தெளிய
அணியுரைசெய்
சீரும் சிறப்பும் உடையோய்! இரு
மொழிச் செல்வ! நின்றன்
பேரும் தெரிந்திலன் என்செய்கு
வேனிந்தப் பேதையனே!

என்று தக்கயாகப் பரணியின் உரையாசிரியர் பால் வைத்த பேரன்பினால் தம் கழிவிரக்கம் தோன்றப் பாடுகின்றார் நம் ஐயரவர்கள்.

தக்கயாகப் பரணியின் உரையாசிரியர் இருமொழிப் புலமை மிக்கவர். நம் ஆசிரியரைப் போன்றே சங்க இலக்கியம், ஐம்பெருங் காப்பியம் முதலிய தமிழ் இலக்கியங்களிலும், வடமொழியில் வேதம், ஆகமம், இதிகாசம், புராணம் முதலிய பழைய நூல்களிலும் மிக்க பயிற்சி யுடையவர். நூலாசிரியரின் கருத்தினை அறிந்து உரையெழுதும் இயல்பினை யுடையவர். (எ-டு) பொழில் ஏழு என்பதற்கு ஏழு சோலை எனச் சொல்லுவாரும் உளர். இப்பொருள் காளக் கவிக்குப் பொருந்தாது. 'எங்ஙனம்', அங்ஙனம்' என்னும் சொற்கள் 'எங்ஙனே' 'அங்ஙனே' என்று வந்தன; இவர் வளையாபதியை நினைத்தார் கவியழகு வேண்டி. வளையாபதியில் இவ்வழக் குள்ளது.

ஒரு சொல்லிற்குரிய இரண்டு பொருளையும் சேர்த்தெழுதுதல்; அலகில் - குற்றமும் கணக்குமில்லாத; தனித் துரகம் - தனியே ஒன்றாகிச் சமானமின்றி யிருக்கும் குதிரை; பள்ளி வேலை - கோயிலும் படுக்கையுமான சமுத்திரம்: மாயோள் - மாயா சக்தியாய்க் கரு நிறத்தை உடையவள்.

உலக வழக்கிலுள்ள உவமைகளைக் கூறுதல்: அரசனல்லாதோர் முடியைத் தம் தலையில் வைத்துக் கொள்ளவும் சிங்காதனத்தில் ஏறவும் பெறாதது போல; கானவேட்டுவர் இசை பாடி மிருகங்களை அழைத்துக் கொன்றது போல; நெல்லைப் பெருக்கி யென்றாற் போல; தண்ணீரால் உப்புப் பொருளைக் கழுவினது போல; மத்தியான்ன ஆதித்தன் எல்லாப் பிராணி கட்கும் ஒக்க நிற்குமாப் போல; மாம்பூ பனிக்குக் கருகுகின்றது போல; ராசா வில்லாத தன்னரசு நாட்டிற் கோட்டி போல.

உரையாசிரியர் தம் உரையில் 74 நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார். சில நூல்களுக்கு வழக்கிலுள்ள பெயரைத் தவிர்த்து வேறு பெயர் தந்துள்ளார். தேவாரம் - திருப்பாட்டு; திருக்குறள் - திருவள்ளுவப் பயன்; கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி - நக்கீரர் வாக்கு; பகவத் கீதை - ஸ்ரீகீதை

உரைப் போக்குக்கு ஓர் எடுத்துக் காட்டு: சொல் விளக்கம்: 'பெருமானடி' யென்றது மகாதேவர் திருநாமம். இதிற் கள்ளென்பது தொக்கதென்பாரும், இல்லையென்பாரும் உளர். 'பேய் பேயென்ன வருவாரவரெம் பெருமானடிகளே' (திருக் கடவூர் மயானம், திருஞான. தே.) இத் திருப்பாட்டுணர்க. பெருமானும் அடிகளும் அவரே; பெருமான் என்பது பெம்மான் என்றுமாம். 'பிரமபுரத்துறை பெம்மான்' (திருஞான. தே.சீகாழி) என்னும் ஏகபாதத்திற் கண்டுகொள்க. பெம்மான் என்றது பிராகிருத பாஷை; சிதைந்ததமிழ்; பெருமானடி என்றதில் அடி என்றது முதல் (முதல்வன்); சேவடி என்றதில் அடி யென்றது திருப்பாதம். நச்சினார்க் கினியரும் தேவாரத்தைத் திருப்பாட் டென்றே வழங்குவர். இவர் உரைநயம் பன்முறை படித்து இன்புறற்பாலது.

பெரும்பாலும் மூலத்திலுள்ள தமிழ்ச் சொற்களுக்கு வட சொற்களாலேயே உரை எழுதுதலும், அவ்வாறெழுதுங்கால் அவ்வட சொற்களைத் தமிழ் வடிவாக்கி வழங்குதலும் இவரது சிறப்பியல்பாகும்.

உலகு வகுப்பா ருலகுதொகுப்பா
ருலகு படைப்பா ருலகு துடைப்பார்
அலகு வகுப்பார் அகில கலைக் கூறு
அடைய விரும்பா ருலவுமாரே.

ஷெ பரணி 596

உலகு வகுத்தலாவது சுர, நர, மிருக கிருமி சாதி யோனிகளாக ஆன்மாக்கள் செய்த வினைகள் தோறும் சரீரம் படைத்

காலிங்கராயரான தெய்வச்சிலைப் பெருமான்' எனவும் கல்வெட்டுகளில் காணப் படுகின்றன. சிலை என்பது கல் அல்லது மலை என்ற பொருளைக் குறிக்கும். தெய்வச்சிலை யென்பது தெய்வத் தன்மை பொருந்திய மலை என்ற பொருளைக் குறிக்கும். இறைவன் எழுந்தருளியிருப்பது கைலைமலையாதலின் அம்மலையின் நினைவாகத் தெய்வச்சிலை என்ற பெயர் வைத்துள்ளனரோ என ஓர்ந்து உள்ளவும் இடன் உண்டு. எனினும் இங்ஙனம் கூறுவதெல்லாம் ஆராய்தற்குரியதேயாம்[3].

இவ்வாறு கூறியவர் கு. சுந்தரமூர்த்தி. தெய்வ மலையெனக் கயிலைக்குக் கூறும் வழக்கில்லை. அகத்தியரைக் கூறும்போது 'தெய்வ மால் வரைக்குறுமுனி' என்று கூறுதல் உண்டு. இதில் தெய்வமால்வரை என்பது பொதியமலையைக் குறிக்கும். மலையைக் குறிக்க வரை, பொருப்பு, வெற்பு, விலங்கல், போலும் சொற்கள் பெருவழக்காக உள்ளனவே தவிரச் சிலை என்னும் சொல் பெருவழக்காக இல்லை. அதனால் மலையைக் குறித்து வந்ததாகக் கொள்வதினும் வில்லைக் குறித்து வந்ததாகக் கொள்வது சிறக்கும் என்னலாம். அதனால் திருமால் பெயராகவோ முருகன் பெயராகவோ இது அமைந்திருத்தல் வேண்டும். திருக்கோயில்களில் இராமன் சிலைக்கே வில் காணப்படுகிறது. திருமால் சிலையில் சங்கு சக்கரமேயுண்டு. ஆனால் சில இடங்களில் முருகன் சிலை வேலின்றி வில்லுடன் காட்சி தருவதைக் காணலாம். நெய்வேலியைச் சார்ந்த ஊர் வில்லுடையான்பட்டு[4] என்பதொன்று உண்டு. அவ்வூர் முருகன் கையில் வில் உண்டு. இக் கருத்தையும் கொண்டு பார்க்கின் மேலும் விளங்கும்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் சிற்றூர்களில் நாகரிகமில்லாத மக்களிடையே 'பொக்கிலை' என்ற பெயர் பெண்களுக்கு வழங்கி வருதலைக் காணலாம். பொற்சிலை என்பது பொக்கிலை எனத் திரிந்ததாகக் கொள்ளலாம். பொக்கிலையம்மன் எனச் சிறு தெய்வமும் கொள்வர் அவர். இது கொண்டும் சிலையென முடியும் இயற்பெயர் உண்டு எனக் கொண்டு அவ்வகையில் தெய்வச்சிலையார் என்பதும் ஆம் எனக் கொள்ளலாம்.

3. காலம்:

தெய்வச்சிலையார் காலம்பற்றி, கு. சுந்தரமூர்த்தி கூறும் கருத்தே ஏற்புடையதாம்.

இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் கருத்துகளோடு ஒத்தும் மாறுபட்டும் இருத்தலின் அம் மூவர்க்கும் பிற்பட்டவராவர். நச்சினார்க்கினியர் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று கூறுவர். அதனால் இவர் காலம் 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி அல்லது இடைப் பகுதியாக ஆகலாம். கல்வெட்டுச்சான்றுகளாகச்சுந்தரமூர்த்தி காட்டுவன வருமாறு:—

''கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கொங்கு நாட்டில் அரசப் பிரதிநிதியாயிருந்த சடையவர்மன் சுந்தரபாண்டியனது ஆட்சியின் 3-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று (கி.பி. 1280) திருச்சிராப்பள்ளி மாவட்டத்துள்ள திருமழபாடியிலுள்ளது. அதில், ''அரையன் தெய்வச்சிலையாரான எடுத்த கையழகியான்'' என்று ஒருவர் குறிப்பிடப் பட்டுள்ளார். அவர் பாண்டி மண்டலத்துக்காவூர்க் கூற்றத்து வளமர் ஆன வேம்பநல்லூர் என்னும் ஊரினர்.''

''கி.பி. 14-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் சடையவர்மன் வீரபாண்டியன் 30-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மன்னார் கோயிலில் உள்ளது. இதன் காலம் கி.பி. 1326 ஆகும். இதில் இளையாழ்வார் தெய்வச்சிலைப் பெருமாள் ஆன விக்கிர பாண்டிய காலிங்கராயர்'' என்று ஒருவர் குறிப்பிடப் பெறுகிறார். இவற்றால் தெய்வச்சிலையார் என்ற பெயர் வழக்குண்மை 13-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 14 -ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருந்தது என்பது பெறப்படுகிறது. எனவே, இவர் காலம் கி.பி. 14 -ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம் எனத் துணிதலில் இழுக்கில்லையென்க.''[5]

3. கு. சுந்தரமூர்த்தி, சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை, கழகப் பதிப்பு, 1979, ஆராய்ச்சி முன்னுரை, ப. 9.
4. வில்லுடையான்பட்டு வேலுடையான்பட்டு எனவும் வேலரான்பட்டு எனவும் வழங்கப்படுகின்றது. சிலை வில்லுடையதாதலின் வில்லுடையான்பட்டு என்பதே முதற்பெயராம்.
5. ஆராய்ச்சி முன்னுரை, தொல். சொல். தெய்வச்சிலையார் உரை, கழகப் பதிப்பு (1979), பக். 10,11.

2. தெய்வச் சிலையார்*

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார்
தொல்காப்பியப் பதிப்பு ஆய்வறிஞர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை-113.

1. அறிமுகம் :

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய சான்றோர்கள் பலர். இளம்பூரணரைத் தவிர ஏனையோருடைய உரைகள் தொல்காப்பியத்தின் எல்லாப் பிரிவுகளுக்கும் கிடைக்கவில்லை. அவ்வகையில் தெய்வச் சிலையார் எழுதிய உரை தொல்காப்பியச் சொல்லதிகாரந்துக்கு மட்டுமே கிடைக்கிறது. இவருடைய வரலாறு முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லையென்றாலும், இவர் நெசவுத் தொழில் செய்து வந்தவர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

நெசவுத் தொழில் செய்பவர்களைப் பொதுவாகச் 'சாலியர்' என்று கூறினாலும் சைவசமயம் பேணுபவர்கள் செங்குந்தர்கள் எனப் பெற்றார்கள். தெய்வச் சிலையார் 'சிவயநம' என்ற மந்திரத்தை முன்னாக வைத்து, மந்திரப் பொருளை வரையறை செய்த காரணத்தால் 'செங்குந்தர்' எனக் கொள்ளக் கிடக்கிறது.

2. பெயர்க்காரணம் :

தெய்வச்சிலையார் என்னும் பெயர்ப் பொருள் தெய்வத்தன்மையுடைய வில்லுடையார் என்பதாகும். இராமனது வில் தெய்வச் சிலையான் என வழங்கற்பாட்டிற் குரியவன் என்னலாம். ஆனால் அத்தகைய வழக்கு இராமனுக்கு இருந்ததாக அறியக் கூடவில்லை. தெய்வத்தன்மையுடையதே. அதனால் இராமபிரானே தெய்வமாகிய வில்லுடையார் எனவும் தெய்வச்சிலையார் என்பதற்குப் பொருள் கொள்ளலாம். அவ்வில் முருகன் கையில் வில் உண்டு. தேவர் தேவன் ஒருவனின் மாற்று வடிவம். தேவர் சிலர் முருகனுக்குப் படைக்கலன்களாயினர் எனக் கந்தபுராணம் கூறும். இந்த வகையில் தெய்வச் சிலையார் முருகன் பெயராகவும் ஆகலாம். எனினும் முருகனுக்கும் அவ்வாறு வழங்கியதாகத் தெரியவில்லை.

> பவ்வத் திரையுலவு புல்லாணி கைதொ
> ழுவேன்
> தெய்வச் சிலையார்க்குஎன் சிந்தை
> நோய் செப்புமினே
> (பெரிய திருமொழி 9.4.3)

எனத் திருமங்கையாழ்வார் பாடலில் திருப்புல்லாணித் திருமாலுக்குரிய பெயராக வந்துளது. தெய்வச் சிலையார் விறலிவிடு தூது, தெய்வச்சிலைப் பெருமாள் வாகனமாலை, தெய்வச் சிலையான் திருப்புகழ், தெய்வச்சிலையான் வண்ண விருத்தம் ஆகியவை திருமாலைப்பற்றிய நூல்களாகும்.[1]

தெய்வச்சிலையார் என்னும் சொல் கல்வெட்டுகளிற் காணப்படுகின்றது. தெய்வச்சிலையான் என்றோ தெய்வச்சிலையார் என்றோ இல்லாமல் தெய்வச்சிலை என்றும் வழங்கி வந்தது என்பதும் அறியப்படுகின்றது. கி.பி. 15 ஆம் நூற்றாண்டினரான காளமேகப் புலவர் சித்திர மடல் என்னும் நூலை யியற்றியுள்ளார். அந்நூல் பாவை என்னும் ஊரிலிருந்த வள்ளல்மீது பாடப்பட்டது. அவ்வள்ளல் தெய்வச்சிலைப் பெருமாள், தெய்வச் சிலைத்தாதா என வழங்கப்பட்டவராகத் தெரிகிறது.[2]

தெய்வச்சிலையார் என்ற பெயர் தமிழ்நாட்டில் பலருக்கு இருந்ததென்பது கல்வெட்டுகள் மூலம் தெரிகிறது. அரையன் தெய்வச் சிலையான் எடுத்த கையழகியான் எனவும், 'விக்கிரம பாண்டியன்

---

* சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 27—12—1987 நடத்திய கருத்தரங்கில் படிக்கப் பெற்றது.

1. மு. வை. அரவிந்தன், உரையாசிரியர்கள் ப. 148, மணிவாசகர் நூலகம், சிதம்பரம் (1968).
2. மு. அருணாசலம்பிள்ளை, தமிழ் இலக்கிய வரலாறு 11-ஆம் நூற்றாண்டு,

லேயே தமிழையும் வடமொழியையும் கசடறக் கற்றார். உரிய பருவத்தில் சோழர் பேரரசின் பேரவையில் இடம் பெற்றார். தம் புலமையாலும், அறிவுத் திறத்தாலும் விரைவிலேயே அவைக்களப் புலவர் தலைவரானார். பின்னர்க் கவிச்சக்கரவர்த்தியானார். கொடி, காளம், சிவிகை முதலிய விருதுகளைப் பெற்றார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் முதுமொழிக் கிணங்கச் செந்தமிழ்ப் புலவரும், வடநூற் கவிஞரும் போற்றும் வகையில் தம் புலமையை நிலை நாட்டினார். தாமும் சிறந்த புலவரைப் பாராட்டினார். தக்க மாணாக்கர் பலரை உருவாக்கினார். தம் பெயர் என்றென்றும் நிலைத்து நிற்கும் வகையில் வட நூன் முறையும் தமிழ் நூற்றுறையும் பொருந்தத் தக்கயாகப் பரணி, மூவருலா முதலிய சிறந்த நூல்களைப் படைத்தார்.

பேரரசர் மூவர் காலத்திலும் வாழ்ந்து, அப்பர் பெருமானைப் போல் சிவப்பழமாகத் திகழ்ந்தார். மலை மகளும், கலை மகளும், அலை மகளும் ஒருங்கே அருள் பாலிக்க உடல் நலத்தோடும், பொருள் வளத்தோடும், புலமைச் செழுமையோடும் திகழ்ந்தார். சைவத்தையும் தமிழையும் தம் இரு கண்ணெனப் போற்றினார். அடியார் நேயமும், ஆலய வழிபாடும், சிவாகமப் பயிற்சியும், திருமுறை யோதுதலுமே தம் முதுமைப் பருவத்துக்குரிய உறுதுணையாகக் கொண்டார்.

தம் முதுமைப் பருவத்தில் இராசராசன் விருப்பப்படி உறத்தையிற்றானே தங்கியிருந்து தமது 97-ஆவது அகவையில் சிவபெருமான் திருவடி நீழலையடைந்தார். அவர் சித்தி யடைந்த நாள் ஒரு ஆவணித் திங்கள், உத்தராடநாண்மீன். ஆண்டு தோறும் இந்நன்னாளில் நம் கூத்தபிரானுக்கு மதுரை, கமலை உறந்தை, காஞ்சி மயிலை முதலிய நகரங்களில் விழா எடுக்கின்றார்கள்.

வாழ்க நம் கூத்த பிரான்; வாழ்க அவர்தம் தொண்டு.

'ஆக்கம் பெருக்கும் மடந்தை வாழியே
ஆற்றங் கரைச்சொற் கிழத்தி வாழியே
கோக்கும் தமிழ்க்கொத் தனைத்தும் வாழியே
கூத்தன் கவிச்சக்ர வர்த்தி வாழியே'

'வாழி தமிழ்ச் சொற் றெரிந்த நூற்றுறை
வாழி தமிழ்க் கொத் தனைத்து மார்க்கமும்
வாழி திசைக்கப் புறத்து நாற்கவி
வாழி கவிச்சக் ரவர்த்தி கூத்தனே'

—பரணி

துணை புரிந்த நூல்கள்:

1. தக்கயாகப் பரணி—மூலமும் உரையும் டாக்டர் ஐயரவர்கள்
2. மூவருலா — ,, ,,
3. ஒட்டக்கூத்தர் — ச.கு. கணபதி ஐயர் எம்.ஏ.
4. கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் - —டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் எம்.ஏ. பி. எச்டி;

பாலமில்லாத நதியைக் கடக்க நினைத்த ஒருவன் காளைமாட்டை நதியில் நீந்தவிட்டு அதன் வாலைப் பற்றிக் கொண்டு அக்கரை சேர்ந்தான். மற்றொருவன் சங்கிலியோடே பிடித்த நாயினை நதியில் நீந்தவிட்டு அதன் வாலைப் பிடித்துப் போக இருவரும் நதியில் மூழ்கிப் போனார்கள். அதுபோல, சிறியோரைத் துணைக் கொண்டால் பிறவியலையாற்றைக் கடக்க முடியாது ''பெரியோரைத் துணைக்கொள்'' என்றார் ஔவைப் பிராட்டியார்.

—வாரியார்

மனத்தையும் சரீரத்தையும் பெற்ற நாம் மறுபடியும் பிறவாமலிருக்கச் சிறிது முயற்சி செய்ய வேண்டியது அறிவுள்ள மனிதப் பிறவிக்கு இயற்கை. பொருளிருந்தும் துன்பப்படுகிறவர்களைப் பார்க்கிறோம். உணவிருந்தும் பசியுடன் வருந்துகிறவர்களைப் பார்க்கிறோம். இதற்கெல்லாம் காரணம் தாங்களே.

—ஞானியார் சுவாமிகள்

அச்சம் தவிர்ந்தது வாழ்வு — நல்
அன்பின் விளைவது வாழ்வு.
மச்சினில் வாழ்பவ ரேனும் — அவர்
மானத்தில் வாழ்வது வாழ்வு.

—பாவேந்தர் பாரதிதாசன்

என்றும் 'வாழி தமிழ்ச் சொற் றெரிந்த நூற்றுறை; வாழி தமிழ்க் கொத்தனைத்து மார்க்கமும்; வாழி திசைக்கப் புறத்து நாற்கவி' என்றும் வாழ்த்தியிருத்தலால் நம் கூத்தபிரானுக்கு அன்னை மொழியின் பாலுள்ள அளவற்ற பக்தியும், அதன் வளர்ச்சியில் இவர் கொண்ட பற்றும் நனி விளங்கும்.

போர் செய்யச் சென்ற வீரபத்திர தேவர் காஞ்சியில் சிவபெருமானுக்கு நீழல் செய்யும் மாமரத்தின் தளிரைத் தம் செவியில் அணிந்தனர் என்று கூறியிருத்தலால், ஏலவார் குழலாள் உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற காலகாலனாகிய கம்பன் எம்மான் மீதும், காஞ்சிபுரத்திலுள்ள அடியார்கள் மீதும், காஞ்சிபுரத்தின் மீதும் இப்பெருமானுக்குள்ள பேரன்பு தெள்ளிதின் விளங்கும்.

12. வாக்கினிமையும் வாக்கு வன்மையும்

நம் கூத்தபிரான் கலை மகளின் திருவருளைப் பரிபூரணமாகப் பெற்றவர். அதனால் இவர் வாக்கினிமையும் வாக்கு வன்மையும் பெற்றிருந்தார்.

வாக்கினிமைக்கு

'சென்று செவியளக்கும் செம்மையவாய்ச்
சிந்தையுள்ளே
நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள்-
ஒன்று
மலர் இவரும் கூந்தலார் மாதர் நோக்கு
ஒன்று
மலரிவரும் கூத்தன்றன் வாக்கு.

செவியினை அளவிடும் செம்மையை உடையனவாய் மனத்தில் தங்கிய மாத்திரத்தில் எல்லையற்ற இன்பத்தினை நிறையச் செய்வனவற்றுள் ஒன்று மலர்கள் பொருந்திய கூந்தலையுடைய அழகிய பெண்களின் கண்கள்; ஒன்று மலரி என்னும் ஊரில் பிறந்த கூத்தன் என்னும் இயற்பெயருடைய புலவனது கவியாகும்.

வாக்கு வன்மைக்கு

காசுக்குக் கம்பன்; கருணைக் கருணகிரி
ஆசுக்குக் காளமுகில் ஆவனே; - தேசு
மிகு
ஊழுக்குக் கூத்தன்; உவக்கப் புகழேந்தி;
கூழுக்கிங் கவ்வையெனக் கூறு.

இத்தனிப் பாடலில் நம் கூத்தபிரான், 'தேசுமிகு ஊழுக்குக் கூத்தன்' என்று சிறப்பிக்கப் பெறுகின்றார். அதாவது நம் கூத்தபிரான் பிறரை வாழ்த்தினாலும், வைதாலும் ஊழிற்பெருவலி போலத் தக்க சமயத்தில் தன் பலனைக் கொடுக்கும் என்பதாகும்.

13. சமகாலப் புலவர்கள்

நம்பி காளியார், நெற்குன்ற வாண முதலியார், தமிழ்த் தண்டியாசிரியர், தக்கயாகப் பரணி உரையாசிரியர், தொல்காப்பியத்துக்கு உரைகண்ட பேராசிரியர் முதலானோர்.

14. ஆதரித்தவர்

விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராசன் ஆகிய பேரரசர் மூவரும், திரிபுவனச் சோமன், புதுவைக் காங்கேயன், திருச்சிற்றம்பலமுடையான் பெருமாள் நம்பி முதலியோர். திரிபுவனச் சோமனைப் புகழ்ந்துரைக்கும் பாடல் வருமாறு:— இது பன்முறை படித்து இன்புறுதற்குரியதாகும்.

'நிழலருமை வெய்யலிலே நின்றறிமின்,
ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்-
பழகுதமிழ்ச்
சொல்லருமை ஆரியத்தில், சோமன்
கொடையருமை
புல்லரிடத்தே யறிமின் போய்'
—தனிப்பாடல்.

15. காலம்

நம் கூத்தபிரான் வாழ்ந்த காலம் பேரரசர் மூவர் ஆட்சி செய்த காலம். பேரரசர் எவ்வாறு பொழுது போக்கினர் என்பதைக்

'கலையினொடும் கவிவாணர் கவியினொடும்
இசையினொடும் காதல் மாதர்
முலையினொடும் மனுநீதி முறையினொடும்
மறையினொடும் பொழுது போக்கி'

என்று செயங்கொண்டார் தாம் பாடிய கலிங்கத்துப் பரணியின் தாழிசையொன்றின் மூலம் அறியலாம். நாட்டில் எங்கும் அமைதி நிலவியது. மக்கள் பசியும், பிணியும், பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க வாழ்ந்தனர். இக்காலம் தமிழகத்தின் பொற்காலமாக விளங்கியது. சமயம், இலக்கியம், கலை முதலானவை செழித்தன; கற்கோயில்களும், சொற் கோயில்களும் எழுந்தன. இத்தகு சீரும் சிறப்பும் மிக்க காலத்தில்தான் நம் கூத்தபிரான் செல்வமும் செல்வாக்கும் பெருக வாழ்ந்தார்.

16. நிறைவுரை

நம் கூத்தபிரான் தமிழகத்தின் தொல்பெரும் சமயமான சைவ சமயத்தில் தோன்றினார். சிங்கம் எனத் திகழ் செங்குந்தர் மரபில் பிறந்தார். இளமையி

அப்பொழுது, ஒரு தடவை படிக்காசுப் புலவர் நடராஜ தரிசனத்துக்காக தில்லையம்பதி சென்றிருந்தார். அன்று கோயிலுக்கு எவரோ ஒரு செல்வப் பிரமுகர் வந்திருந்தார். அங்கிருந்த சூழ்நிலையைக் கொண்டே ஒருவாறு உணர்ந்து கொண்டார் புலவர்.

அம்பலக் கூத்தனின் சந்நிதிக்கு நேரே இருந்த அச்செல்வப் பிரபுவுக்கு, சிதம்பரேஸ்வர தீட்சதர் அங்கிருந்த சிலவற்றைக் காட்டி விளக்கிக் கொண்டிருந்தார். என்ன இவர் இப்படி தப்புத் தப்பாக விளக்கிக் கொண்டிருக்கிறாரே! படிக்காசுப் புலவருக்கு மனம் பொறுக்கவில்லை. உடனே தாமே சென்று அத்தீட்சதரை இடைமறித்து விளக்கத் தொடங்கினார்.

'சோதிலிங்கம் இருக்குமிடம் விசுக்திஸ்தானமாகக் கொள்ளவேண்டும். அதற்குத் தெற்கில் திருச்சிற்றம்பலம் என்னும் மகாசபை உள்ளது. அங்கே பிரம்மா விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவம் இவர்களுக்கென ஐந்து திருப்பீடங்கள் உள்ளன. அவற்றின் ஐந்து படிகளும் பஞ்சாட்சரம் எனப்படும் ஐந்து திரு அட்சரங்களைக் குறிப்பிடுகின்றன. சபையின் கதவு அவித்தை எனப்படும்....'' என்றெல்லாம் வெகு அழகாகவும் ஆணித்தரமாகவும் விளக்கிக் கொண்டு போனார்.

அதுகேட்ட அச் செல்வப் பிரபு மிகவும் அக மகிழ்ந்து போனார். அன்புடன் அப்புலவரைப் பற்றி விசாரித்து அறிந்தார். பிறகு ஆயிரக்கால் மண்டபத்திலே தன்னை வந்து சந்தித்துச் செல்லும்படி மிகவும் விநயத்துடன் வேண்டிக் கொண்டு புறப்பட்டார்.

அதன்பிறகுதான் படிக்காசுப் புலவர் அச் செல்வப் பிரபுவைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டார்.

அவர் இராமநாதபுர சமஸ்தானத்தின் அதிபதி திருமலை சேதுபதி என மறு நாமம் பூண்ட இரகுநாத சேதுபதியாவார். அவ்வப்பொழுது தில்லையம்பதிக்கு வருவார்; பொன்னம்பலவாணனைத் தரிசித்துப் போவார்.

படிக்காசுப் புலவர் சுவாமி தரிசனம் செய்து திருச்சுற்று முடித்து, மண்டபத்தில் அமர்ந்து ஜபம் செய்து எழுந்தபொழுது, அச்சமஸ்தானாதிபதி சொல்லிச் சென்றது நினைவுக்கு வந்தது. உடனே அவரைக் காண ஆயிரக்கால் மண்டபத்துக்கேகினார்.

அங்கு அவருக்கு அன்பு மிகுந்த வரவேற்பு காத்திருந்தது. படிக்காசுப் புலவரை அங்கு அமரச் செய்து, அவர் முன் தட்டுத் தட்டாக பழங்களும் புஷ்பங்களும் வாசனைத் திரவியங்களுமாக வைத்து வரவேற்றனர். அப்பொழுது சமஸ்தானாதிபதி படிக்காசுப் புலவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். அத்துடன் அந்நாள் தொடங்கி அவரை - புலவரை - சமஸ்தான வித்துவானாக இருந்து வரும்படியும் கேட்டுக் கொண்டார்.

சேதுபதியின் மனமுவந்த வரவேற்பில் மிகவும் மகிழ்ந்தவராய், அவர் வேண்டுகோளுக்கு இணங்கி இராமதநாதபுர சமஸ்தான வித்துவானாக விளங்கினார். படிக்காசுப்புலவர். அநேக ஆண்டுகள் அங்கு தங்கியிருந்து, அநேக அருமையான வெண்பாக்களைப் பாடி அரசரை மகிழ்வித்தார்.

பிறகு அச்சமஸ்தானத்தின் உள்பூசலைப் புலவர் விரும்பினாரில்லை. அதனால் அங்கிருந்து பிரிந்து அந்நாட்டிலிருந்த வல்லை நகரத்தை அடைந்தார். அங்கு வள்ளல் காளத்தி பூபதி இருந்தார். கற்றாரைக் கற்றாரே காமுறுவர்! அவர் இலக்கிய ரசிகர்; அத்துடன் மிகுந்த தயாள குணமுடையவர்.

படிக்காசுப் புலவர் அவரிடம் சென்று

பெற்றாளொ ருபிள்ளையென் மனை
யாட்டிப் பிள்ளைக்குப்பால்
பற்றாது கஞ்சிகு டிக்குந்தர மல்ல
யாயிரக்கச்
சிற்றாள மில்லை யிவ்வெல்லா வருத்த
முந்தீர வொரு
கற்றாதர வல்லையோ வல்லைமா
நகர்க் காளத்தியே!

எனும் செய்யுளைப் பாடி மகிழ்வித்தார். உடனே அவர் மனமுவந்து விலையுயர்ந்த சம்மானமளித்து, அங்கேயே சிலகாலம் தங்கியிருக்கும் படி வேண்டிக் கொண்டார்.

அந்நாளில் மாமண்டூரிலிருந்து படிக்காசுப் புலவருக்கு அன்பான அழைப்பு வந்தது.

அங்கு, கறுப்ப முதலியார் என்பவர் கல்வி மிக்க செல்வவான். அவர் அவ்வூர் கொடை வள்ளல் கஸ்தூரி முதலியாரின் திருக்குமரான். பரம்பரைச் செல்வந்தராக இருந்ததோடு மிக்க அறிவாளராகவும் விளங்கினார். அவர் படிக்காசுப் புலவரைத் தருவித்து, சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்து அங்கு தங்க வைத்துக் கொண்டார்.

அவ்வப்பொழுது தமிழ் இலக்கியங்களைப்பற்றியும், சங்கத் தமிழ் பற்றி

3. படிக்காசுப் புலவர்

S. T. சம்பந்தம் — மேற்கு மாம்பலம்



படிக்காசுப் புலவர்

புகழ்பெற்ற தொண்டை மண்டலத்திலே, சற்றேறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்குமுன், பொற்களத்தூர் எனும் தலத்திலே தோன்றியவர் படிக்காசுப் புலவர்.

இவர் நவவீரர் வழிவந்த செங்குந்த மரபைச் சார்ந்தவர். இவரது தகப்பனார் ஒரு பெரிய கல்விமான். அதனால் ஆரம்பத்தில் தகப்பனாரே இவருக்குக் குருவாக அமைந்திருந்தார்.

இவருக்குப் படிக்காசுப் புலவர் என்ற நாமம் பல ஆண்டுகளுக்குப் பிறகே வந்தது. இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் யாது என்று சரியாகத் தெரியவில்லை. இருந்தும், இவர்களுக்குக் குல தெய்வம் சிக்கல் சிங்காரவேலன் ஆதலால், இவருடைய பெயர் சிங்காரவேலன் ஆகும் என்று சொல்வோரும் உண்டு.

ஒரு தடவை இக்குடும்பத்தினர் சிக்கில் சிங்காரவேலனுக்குப் பூஜை போட்டு விட்டு திரும்புங்கால் திருவாரூர் வந்தனர். அங்கு தியாகேசனைத் தரிசித்ததுமே இளவல் படிக்காசுப் புலவர் மனம் தளர்ந்துப்போனார். உடனே

தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தோறும் பேசுந் தோறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
இனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி!

என்ற நெஞ்சையள்ளும் திருவாசக அடிகளை கோகிலகானமாகக் குழைந்து பாடினார்.

அப்பொழுது, வைத்தியநாத நாவலர், கோயில் திருச்சுற்று முடிந்து, முன் மண்டபத்தில் அமர்ந்திருந்தார். அவர் அவ்வூர் பிரபல வித்வத் சிரோன்மணி வன்மீக நாத தேசிகரின் தவப்புதல்வர். பக்தியில் தோய்ந்த பெருங் கல்விமான் அவர்.

இத் திருவாசகப் பதிகத்தின் சுநாதம் இழைந்து தண்ணெனத் துவண்ட தளிர்க் காற்றில் தத்தித் தவழ்ந்து வந்து அவர் செவிகளில் புகுந்தது. உடனே எழுந்து விட்டார். அவரது பாதங்கள் அவரைத் தியாகேசன் சந்நிதிக்கு அழைத்துச் சென்றன. அங்கு படிக்காசுப் புலவர் உளங் கனிந்து பாடிக் கொண்டிருந்ததைக் கண்டு உளங்கனிந்து போனார்.

அவ்விளவலின் முக தீட்சண்யத்தையும் கண்களின் கனிவையும் கண்ட தேசிகர், அவரது பெற்றோர்களைக் கண்டு பேசினார். 'இவன் இங்கு தங்கிப் பாடம் கற்கட்டுமே' என்றார். அவர்களும் சம்மதித்தனர்.

இவ்வண்ணம் குருவே தேடி வந்த சிஷ்யனாக அமைந்தார் படிக்காசுப் புலவர்.

அநேக ஆண்டுகள் அவரிடம் கல்வி கற்று, பலசாத்திரங்கள் பயின்று ஊர் திரும்பினார் படிக்காசுப் புலவர். பிறகு இல்லறம் புகுந்து இனிதே இருந்தார். அந்நாளில் தொண்டை மண்டலத்திலிருந்த புலவர்கள் அனைவரும் இவரைத் தேடி வருவர்; அளவளாவி மகிழ்வர்.

(இ) சமயம்.

முப்பொருள் உண்மை சைவசித்தாந்தக் கொள்கை; அதாவது பதி, பசு, பாசம் என்னும் மூன்று பொருள்களும் என்றும் உள்ள பொருள்கள். பதி பசுவுடனும் பாசப் பொருளுடனும் கலந்திருக்கும். பசு பாசத்தால் கட்டுப்பட்டிருக்கும். பாசம் பசுவைக் கட்டுவதோடு நிற்கும் பதியிடம் செல்லாது. இக்கருத்தைத் தெய்வச்சிலையார் ''மன்னாப் பொருளும் அன்ன வியற்றே'' (கிளவி. 32) என்னும் சூத்திரத்தில்,

'வேதாகமத்துணிவு ஒருவர்க்கு உணர்த்துமிடத்து
உலகும் உயிரும் பரமும் அனாதி, பதியும் பசுவும் பாச
மும் அனாதி எனவரும். உலகும் உயிரும் பரமும்
பசுவும் பொருந்தும் பொருள் ஆனவாறும், பாசமும்
பதியும் இவற்றொடு பொருந்தாப்
பொருள் ஆனவாறும் காண்க''

என எழுதியிருப்பதாலும்,

''பெயர்நிலைக் கிளவி ஆஅகுநவும்'' (எச்ச. 47) என்னும் சூத்திரத்தில், மந்திரப் பொருள்வயின் ஆஅகுநவும் என்பதற்கு.

''மண்ணைச் சுமந்தகன்றானும் வரத ராசன் மகன்தானும்
எண்ணிய வரகாலி மூன்றும் இரண்டு மரமும் ஓர்யாறும்
திண்ண மறிய வல்லார்க்குச் சிவகதியைப் பெறலாமே''

இதனுள் மண்ணைச் சுமந்தவன் -ந; வரதராசன் மகன்- ம; வரகாலி மூன்று -சி; இரண்டு மரம்-வா; ஓர்யாறு-ய எனக் கூற நமச்சிவாய எனப் பொருளாயிற்று''[9] என எழுதியிருப்பதாலும், தெய்வச்சிலையார் சைவர் என்பர். பிற சமயத்தாராகக் கொள்வதற்குரிய சிறந்த குறிப்புகள் உரைமூலம் காணக் கிடைக்கவில்லை. வரலாற்றுக்கான வேறு குறிப்புகளும் கிடைக்கப் பெறவில்லை.

---

9. இவ்விளக்கம் விளக்கமாக இல்லை.

பாரபட்சமில்லாத அன்னை மக்களின் உடல் நிலைக்கு ஏற்ப உணவு தருகின்றாள். தாயின் கருணைமீது குறை கூறலாமா? இதுபோல் ஆன்மாக்கள் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப சுகதுக்கங்களை இறைவன் தருகின்றான். ஆதலால் துன்பத்தை நுகர்கின்றவர்கள் இறைவனை நோவலாமா?

—வாரியார்

தென்றல் முன் விளக்குபோல் அணைந்தும் அணையாமலும் உள்ள மனத்தினையுடையவர் மத்திமர். வாடைக் காற்றின் முன் தீபம் அணைவது போன்ற தன்மையுடையவர் அதமர். சுவரில் சித்திர தீபம் போல் அசையாமலிருக்கின்ற தன்மையுடையவர் உத்தமர்.

—ஞானியார் சுவாமிகள்

''தமிழுக்கும் அமுதென்று பேர் — அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்''

—பாரதிதாசன்

தண்ணீரில் பஞ்சை வைத்தவுடன் பஞ்சு தண்ணீரை இழுத்துக் கொள்கின்றது. கல்லைத் தண்ணீரில் வைத்தால் அது நீரை இழுப்பதில்லை. அது போல் கடின சித்தம் உடையவர்கள் கடவுள் கருணையைப் பெறுகின்றார்களில்லை. இரக்கமுள்ள சாதுக்கள் கடவுளின் கருணையைப் பெறுகின்றனர்.

—வாரியார்

4. வரலாறு

(அ) ஊர்

தெய்வச்சிலையார் வரலாறு அறிதற்கு யாதொரு சான்றும் இல்லை. மேலே காட்டிய இரண்டு கல்வெட்டுகளில் தெய்வச்சிலையார் என்ற பெயருடையார் பாண்டி மண்டலத்தில் இருந்தவராகத் தெரிதலின் இவரும் பாண்டி மண்டலத்தவரோ என ஊகிக்க இடனுண்டு என்பர் சுந்தரமூர்த்தி.[6] ஆனால் இவர் ஊரை ஊகித்துக் கூறவில்லை.

''ஆகுபெயர்ச் சூத்திரவுரையில் பிறந்தவழிக் கூறல் என்பதற்கு வேளாண்காணி என்பது அவ்விடத்தில் தோன்றிய ஆடையை யுணர்த்தும் என்கின்றார் தெய்வச்சிலையார் ஆதலின் இவர் சோழநாட்டில் நாகப்பட்டினத்துக்கு தெற்கே உள்ள வேளாண்காணி என்னும் ஊரிலோ, அதற்கு அருகிலோ பிறந்திருக்கலாம்'' என்பர் மு.வை. அரவிந்தன்[7].

முன்னவர் கருத்தினும் பின்னவர் கருத்து ஏற்புடையதாகலாம். ஒரு நாட்டில் வழங்கும் பெயர் பிற நாடுகளில் சிறப்பு நோக்கி வைக்கப்படலாம். திருநெல்வேலிப் பகுதியில் மிகுதியாக வழங்கும் பெயரைச் சென்னைப் பகுதியில் உள்ளோர் அப்பெயருடையார் சிறப்பின் காரணமாகத் தம் மக்கட்கு வழங்குதல் உண்டல்லவா?

பிறந்தவழிக் கூறல் என்பதற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார், வேறு ஒருவர் ஆகிய யாவரும் குழிப்பாடி நேரிது என்னும் உதாரணமே காட்டத் தெய்வச்சிலையார் மட்டும் வேளா(ண்)காணி எனக் காட்டியதால் பிறந்த ஊர்ப் பற்று காரணமாகக் காட்டினார் எனக் கொள்ளலாம்.

(ஆ) குலம்

தெய்வச்சிலையாரை வடமொழி பயின்ற அந்தணர் என்பர் மு.வை. அரவிந்தன்[8]. அதற்கு அவர் கூறும் காரணம்' ''தலைமை பற்றிய வழக்கிற்குப் பார்ப்பார் வேதம் என்று உதாரணம் காட்டுவதும், சொல் ஏன்பதற்கு வேதம் எனப் பொருள் உரைப்பதும், தொல்காப்பியம் செய்தான் வைதிக முனிவன் எனக் கூறுவதும் ஆம்'' என்பர்.

வடமொழி பயின்றவர் என்பதற்குப் பல சான்றுகள் உரையில் காணலாம். வைதீக முனிவன் என்றது சைனரோ பௌத்தரோ அல்லர் என்பதற்காகக் கூறப்பட்டதேயன்றித் தாம் அந்தணர் என்பதனாற் கூறப்பட்டதன்று. பார்ப்பார் வேதம் என்றது தொல்காப்பியர் 'அந்தணர் மறை' என்றது போல்வது. தலைமையைப் பார்ப்பார்க்குக் கொடுத்துக் காட்டியதாலேயே தெய்வச் சிலையார் பார்ப்பாராகிவிட முடியாது. சொல் என்பதற்கு வேதம் எனக் கொண்டது இக்காலத்தும் தமிழராயினார் ஆரிய மொழிக்கு உயர்வு தருவது போல்வது.

குலம் சொல்ல வேண்டுவதன்று; சொல்ல வேண்டுமெனின் நெசவுத் தொழிற் குலத்தார் என்னலாம்.

''வினையே செய்வது'' (வேற். ம. 29) என்னும் சூத்திரத்தில் தொழில் முதல்நிலைகள் எட்டும் வந்ததற்கு உதாரணமாக வனைந்தான் என்பதையே காட்டி விளக்கம் எழுதினர் இளம்பூரணர் முதலியோர். தெய்வச்சிலையார் மட்டில் வனைந்தான் என்பதைக் காட்டாமல் நெய்தான் என்பதைக் காட்டி விளக்கம் எழுதினார். நெய்தல் தொழிலுக்குச் சாலியன் கருத்தா என எழுதினார். அவ்விடத்தில் ''ஆடையை நெய்து முடித்தான் படமரத்தினின்றும் வாங்குதல் நீக்கம்'' என்னும் ஒரு கருத்தும் எழுதியுள்ளார். நெய்து கொண்டே வரும்போது நெய்யப்படும் ஆடையைச் சுற்றும் மரத்துக்குப் படமரம் எனப்பெயர். படைமரம் என்பது படமரம் என வந்தது. படமரம் என்பது நெசவாளனுக்கே விளங்கக் கூடியது.

வினைமுதல் உரைக்கும் கிளவி என்பதற்கு ''சாலியனாற் செய்யப்பட்ட ஆடையைச் சாலியன் என்பது'' (வேற். ம. 31) எனக் காட்டுதலும் காண்க.

நெசவாளர்கள் பல பிரிவினர். அவருள் கைக்கோளர் அல்லது செங்குந்தர், சாலியர் என்பவர் பெரும்பிரிவினர். அதனால் தெய்வச் சிலையார் நெசவாளர்களாகிய செங்குந்தராவர் என்னலாம்.

---

6. மேற்படி, ப. 11.
7. உரையாசிரியர்கள், ப. 148.
8. மேற்படி, ப. 149.

களுக்கு முங்குவதற்கென்றே அச்செல்வ வத்தை அவர்களுக்கு அளித்துள்ளான். என்றே எண்ணவேண்டும் என்றும் கூறி னார்.

மற்றவர்களும் தங்கள் வருமானத் தில் ஓரளவை தம்மைவிடத் தாழ்ந்தோர் கள் உதவிக்கென ஒதுக்கி வைக்க வேண் டும் என்று வலியுறுத்தினார். மற்றும் இறைவன் வழிபாட்டை மறக்காமல் நாள்தோறும் செய்து வரவேண்டும் என்றும், அவரவர் ஊரிலுள்ள ஆலய யங்களுக்கு வேண்டிய பொருள் உதவி செய்து செம்மையுற வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார். அது கேட்டு மக்களெல்லாம் மனத்தளவில் உயர்ந்தனர்; சிறந்தனர், மற்றவர்க்கு முன்மாதிரியாக நடக்கத் தொடங்கினர்.

அதன்பிறகு ஆதினத்தின் ஆக்ஞைப் படி வைத்தீஸ்வரர் சந்நிதி அடைந்து அக் கடவுளின் கட்டளையை நடத்திக் கொண்டு படிக்காசுத் தம்பிரான் என அதிகப் பிரபலமாய் வாழ்ந்தார்.

படிக்காசுப் புலவர் இவ்வளவு சீரும் சிறப்புமாக நாடே போற்றும் வண்ணம் வைத்தீஸ்வரன் கோயிலை நிர்வகித்து வந்தும் இறுதி நாட்களில் அவர் மனம் என்னவோ தில்லையம்பதியையே நாடியது.

அங்கு தமக்கென ஒரு திருமடம் வகுத்துத் தங்கி கடவுள் தொண்டு செய்து வந்தார்.

அத்துடன் நாளுக்கு நாள் அநேக நன் மாணுக்கர்கள் அவரிடம் வந்து சேர்ந்து விட்டனர். அவர்களுக்கெல்லாம் தமிழ் இலக்கியம் இலக்கணம் கற்பித்த தோடு, ஞானோபதேசமும் செய்து வந்தார்.

நாளாக ஆக படிக்காசுப் புலவர் வாரம் ஒருநாள் மௌன விரதம் பூண்டு வாழ்ந்தார். அதுபோலவே, அநேக காலம் செல்வத்தையே கையால் தொடாமல் வாழ்ந்து வந்தார். இப்படியெல்லாம் கடுமையான விரதங்களைக் கடைப்பிடித்து வந்து, விசேடமான ஒரு மன பக்குவத்தை அடைந்து வந்தார் படிக்காசுப் புலவர்.

இறுதி நாட்களில் படிக்காசுப் புலவ ருடன் தங்கி அவருக்கு உதவியாயிருந்து வந்தவர் தில்லைச் செங்குந்த மரபி னரைச் சார்ந்த கனகசபை முதலியாரா வார். தன் இறுதிக் காலத்தைப் புலவர் அவரிடம் சூசகமாக சொல்லியிருப்பாரோ என்னவோ! முதலியார் ஏதேதோ ஏற் பாடு செய்து கொண்டிருந்த வேளையில், படிக்காசுப் புலவரது ஜீவன் எனும் பொற் பறவை பொன்னுடற் கூட்டிலிருந்து விடு பட்டு ஆனந்தமயமான தூய வெளியில் கலந்து மறைந்தது.

அப்பொழுது அவரது இறுதிச் சடங்கை ஏற்று நடத்த யாராரோ முன் வந்தனர். ஆனால் தில்லையம்பதி வாழ் செங்குந்த மரபினரே சொந்தங் கொண் டாடி முன்வந்து அவருக்கான கிரியை களையெல்லாம் முறைப்படி ஒருங்கே செய்து முடித்தனர்.

கடைசி நாளன்று படிக்காசுப் புல வருக்கு மிகவும் ஏற்புடைத்தான அன்ன தானத்தை அதுவரை யாருமே கண்டிராத மிகவும் பெரிய அளவில் ஏற்பாடு செய்து மகிழ்ந்தனர்.

எள் வேண்டும் என்று கொள் விதைப் பதுபோல திருச்சி ரயில் நிலையத்தில் மதுரைக்கு டிக்கட் எடுத்து விழுப்புரம் போகும் ரயிலில் ஏறுவது போல இன்பம் வேண்டும் என்று எண்ணுகிற நாம் துன்ப விதைகளையே தூவுகின்றோம். துன்பவிதை தூவினால் இன்பம் எப்படி விளையும்?

—வாரியார்

மனம் பரிசுத்தமடைந்தால் ஞானம் வரும். ஞானம் தோன்றின் பிறப்பு அறும். பிறப்பு நீங்கினால் முத்தி அடைவோம்.

—ஞானியார் சுவாமிகள்

திருவள்ளுவரின் திருக்குறள் தன்னைக்
கசடறக் கற்க; கற்றே
இசையொடுதமிழர் இனிது வாழ்கவே.

—பாவேந்தர் பாரதிதாசன்

அன்று அவ்வாலயத்தில் சாயரட்சை பூஜை வெகுவிமரிசையாக நடந்தேறியது அது கண்டுகளித்த படிக்காசுப் புலவர்—

சின்னஞ் சிறுபிள்ளை செங்கோட்டுப்
பிள்ளை சிவந்த பிள்ளை
பொன்னன் மணிப்பிள்ளை பூலோக
மெங்கும் புகழும் பிள்ளை
சொன்னெஞ் சுழல்கின்ற சூரனைக்
கொன்ற சொக்கேசர் பிள்ளை
வன்னக் கிளிப்பிள்ளை செந்திற்குறத்
திக்கு மாப்பிள்ளையே!

என்று பாடி மகிழ்ந்தார்.

மற்றும் பல சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு தண்டலை எனும் பதியை அடைந்தார் படிக்காசுப் புலவர். அங்கிருந்த செங்குந்த மக்கள் அவருக்கு அமோக வரவேற்பளித்தனர். அவருக்கெனத் தனி மாளிகையொன்றை ஒழித்துவிட்டு தங்கச் செய்தனர். அவ்வூர் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க பத்தே நாட்களில் 'தண்டலையார் சதகம் எனும் அழகிய பிரபந்தத்தைப் பாடி முடித்தார். அதன் அரங்கேற்றத்தை அவ்வூர் கோயிலின் பெருமண்டபத்திலே வைத்துக் கொண்டனர்.

அதுவரை கட்கத்தில் ஓலைச் சுவடியை அடக்கிக் கொண்டு, வற்றிய உடலுடன் நடந்துவரும் புலவர்களையே கண்டிருந்த அவ்வூர்மக்கள் படிக்காசுப் புலவரைக் கண்டதும் வியந்து போயினர். அவரைப் போன்ற ஒரு கம்பீரமான புலவரை அவர்கள் அப்போது தான் முதன் முறையாகப் பார்க்கின்றனர்.

அங்கிருந்து அரியலூருக்குப் புறப்பட்டார் படிக்காசுப் புலவர். அவ்வூர் செங்குந்த மரபினரின் வேண்டுகோளுக்கு இணங்க புலவர் அங்கு சென்றதால் மேலான வரவேற்புக்கு ஏற்பாடு செய்திருந்தனர். மக்கள் அனைவரும் ஒன்று சேர வந்து நகர எல்லையிலிருந்தே மேள வாத்திய மூழக்கத்துடன் புலவரை அழைத்துச் சென்றனர். அவருக்கென அமைத்த இடம் ஒரு பெரிய கொலு மண்டபம் போல் விளங்கியது. விண்ணதிரும் கரவொலிக்கிடையே படிக்காசுப் புலவரை ஆசனத்தில் அமரச் செய்து மாலை மரியாதை செய்தனர். ஊர்ப் பெரியவர் அழகான வரவேற்புரை வழங்கிய பிறகு, முன் ஏற்பாட்டின்படி பெரிய புராணப் பேருரை நிகழ்த்தப் புகுந்தார் படிக்காசுப் புலவர். பல நாட்கள் தொடர்ந்து நடந்தது; மக்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

அங்கிருந்து கொங்கு நாட்டிற்குச் சென்றார். கொங்கு நாட்டுப் புலவர்கள், சந்தக்கவி பாடுவதில் தாங்கள்தாம் சிறந்தோர் என்று எண்ணிக் கர்வம் கொண்டிருந்தனர்.. வெளிநாட்டுப் புலவர் வந்திருப்பதையறிந்து 'சதஸ்' கூட்டினார்கள். படிக்காசுப் புலவரைப்பற்றி அவர்கள் கேள்விப்பட்டிருந்தாலும், அன்று தான் அவரை நேரில் சந்திக்கின்றனர்.

முதலில் அவரிடம் சாங்கோபாங்கமாக அளவளாவி மகிழ்ந்து பிறகு சந்தக் கவியில் வந்து முடிந்தது பேச்சு. 'அதற்கென்ன! பாடுகிறனே' என்று சொல்லி கடல்மடை திறந்தாற்போல் வெகு அழகான சந்தக்கவிகளை ஒன்றன் பின் ஒன்றாகப் பாடிக்காட்டினார் புலவர். அதுகேட்டு அக்கொங்கு நாட்டுப் புலவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டனர். 'இவரிடம் நம் பாச்சா பலிக்காது' என்ற பார்வைதான் அது!

பிறகு 'ஏன் நீங்களும் சில பாடலாமே என்றார் படிக்காசுப் புலவர். 'பரவாயில்லை,! பரவாயில்லை! என்று பின் வாங்கினர் அப்புலவர்கள். அதன்பிறகு கேட்க வேண்டுமா? படிக்காசுப் புலவருக்கு அமோக மரியாதைகள் நடந்தன.

அங்கு சில நாட்கள் தங்கியிருந்து தலயாத்திரை செய்து முடித்து நேரே சோழ நாடு திரும்பி, தருமபுரத்தையடைந்தார் புலவர். தருமபுர ஆதீன கர்த்தா அவரை அன்புடன் வரவேற்றார். அங்கு சில காலம் அணுக்கத் தொண்டராய் பணியாற்றினார் படிக்காசுப் புலவர்.

அக்காலத்தில் படிக்காசுப் புலவர் ஆற்றிய தமிழ் இலக்கியப் பணி அநேகம்! அநேகம்! அங்கிருந்த புலவர்களையும் உதவிக்கு வைத்துக் கொண்டு பழைய ஓலைச் சுவடிகளிலிருந்து அரும் பெரும் புராதன நூல்களையெல்லாம் பெயர்த்து எழுதி அநேக அருமையான நூல்களையெல்லாம் வெளிக் கொண்டு வந்தார். ஆதீனத்தின் நிர்வாகத்திலும் அமோக சீர்திருத்தங்களைப் புகுத்தி செம்மையுற அமைத்தார்.

அச் சோணாட்டுச் செங்குந்த மரபினரும், படிக்காசுப் புலவரை அடிக்கடி அழைத்து வைத்து, அவர்கள் வீட்டுச் சுபகாரியங்களையெல்லாம் செம்மையுற நடத்தி வந்தனர். அவ்வப்பொழுது அவர்களுக்கு அநேக அறிவுரை வழங்கி வந்தார் புலவர்.

செல்வம் படைத்தவர்கள், அச் செல்வத்துக்குத் தாம் தர்மகர்த்தாவென்றே எண்ண வேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்தி வந்தார். இறைவன் மற்றவர்

கூத்தனே என்று கரங்கூப்பித் தன் உக் கற்றவர்க்கு கொண்டு போனார். அவ் வளவுதான் தெரியும் படிக்காசுப் புல வருக்கு! அப்படியே மெய்மறந்து போனார்.

அங்கே தாருகா வனத்தில் கொண்ட சீற்றம் தணிந்த சிவனார், தண்மை எழில் ரசம் வழிய, ஞானமயமான சிற் சபையில் எழுந்தருளி, ஒரு சரணத்தைக் குஞ்சிபாத மாக்கித் தூக்கியும், அத்திரு வில் சாற்றிய திருச் சிலம்பு ஒலிக்கவும் ஆனந்த நடனம் ஆடுகின்றார். உடல் சிலிர்க்கின்றது படிக்காசுப் புலவருக்கு!

கண்களைத்திறந்த பொழுது சந் நிதியில் நடராஜப் பெருமானின் குமிழ் சிரிப்பு அவரை ஆட்கொள்கிறது. பக்கத் திலுள்ள சிவகாமி வல்லியின் கருணை முகம் கண்டு, தன்பனிக்கும் கண்களைத் துடைத்துக் கொள்கிறார். உடனே—

பொல்லாத மூர்க்கருக் கெத்தனை
தான்புத்தி போதித்தலும்
நல்லார்க் குண்டான குணம் வருமோ
நடு ராத்திரியிற்
சல்லாப் புடவை குளிர் தாங்குமோ
நடுச் சந்தைதனிற்
செல்லாப் பணம் செல்லுமோ தில்லை
வாழுஞ் சிதம்பரனே!
வேல் கொடுத்தாய் திருச்செந்தூரார்க்
கம்மியின்மீது வைக்கக்
கால் கொடுத்தாய் நின் மணவாள
னுக்குக் கவண்யார்க்குப்
பால் கொடுத்தாய் மதவேளுக்கு
மூவர் பயப்படச்செங்
கோல் கொடுத்தா யன்னையே யெனக்
கேதுங் கொடுத்திலையே

எனப் பாடி முடித்தார்.

படிக்காசுப் புலவரின் மனப் பக்கு வத்திற்கும் அவரது பாட்டுக்கும் உருகிய பரமேட்டி, தொண்டரின் அன்பின் திறத்திற்கு உவந்து பஞ்சாட்சரப்படி மீது ஐந்து பொற்காசுகளை வைத்தருளினார். அவை அவருக்குத்தான் என்பதையும் சூசகமாகக் குறிப்பிட்டார். படிக்காசுப் புலவர் போற்றிப் பணிந்து அன்னையின் அருட் செயலை நினைந்தேத்தி ஆனந்தங் கொண்டார்.

அங்கிருந்த அனைவரும் அதைப் பார்த்து வியப்புறும் நிலையில் புலவரே சென்று தன் இரு கரங்களாலும் அப் பொற்காசுகளை எடுத்து தன் சிரசின் மீது வைத்துக் கொண்டாடிப் பணிந்து வந் தார். அன்று முதல்தான் அவர் படிக் காசுப் புலவர் என யாவரும் புகழ்ந்து போற்றத் திகழ்ந்து நின்றார். அப் பொழுது அவரது உடல் புல்லரித்து புளகாங்கித முற்றது.

அங்கிருந்து நேரே காயற்பட்ட ணத்தை அடைந்தார் படிக்காசுப்புலவர். அங்கு சீதக்காதி எனும் முஸ்லீம் பிரபு இருந்தார். அவர் கல்வி கேள்விகளில் சிறந்தவர்; பெருங்கொடை வள்ளல். தமிழ்ப் புலவர்களை வெகுவாக ஆதரித்து வந்தார் அவர். அப்பிரபுவைக் கண்டு,

நேசித்து வந்தகவி ராசர்தங் கட்கு
நித்த நித்தம்
பூசிக்கு நின் கைப்போருளொன்று
மேமற்றப் புலவர் பொருள்
வேசிக்குஞ் சந்துநடப் பார்க்கும்
வேசிக்கு வேலை செயும்
தாசிக்கு மாகுங்கண்டாய் சீதக்காதி
தயா நிதியே!

என்று அவர் பெருமையை வியந்து பாடி னார். சீதக்காதி மிகவும் மகிழ்ந்து, புலவரை அங்கேயே தங்கவைத்துக் கொண்டார். அப்பொழுது அன்னாரின் ஈகையைக் கண்டு வியந்து,

ஓர் தட்டிலே பொன்னு மோர் தட்
டிலே நெல்லு மொக்கவிற்கும்
கார்கட்டிய பஞ்ச காலத்திலே தங்கள்
காரியப்பேர்
ஆர்தட்டினுந் தட்டு வாராம லேயன்ன
தானத்துக்கு
மார்தட்டிய துரைமால் சீதக்காதி வரோ
தயனே!

என அப்பிரபுவின் மேலான குணத்தைச் சிறப்பித்து படிகாசுப் புலவர் பாடியருளி னார்.

அங்கு சில காலம் தங்கியிருந்து, பிறகு திருச்செந்தூரை வந்தடைந்தார். பேர லைகளும் சிற்றலைகளுமாக எழுந்து மோதி ஆர்ப்பரிக்கும் கடற்கரையிலே காற்றுவாங்கிக் களித்து நிற்கும் முருகப் பெருமானைத் தரிசித்து மகிழ்ந்தார்.

அங்கு படிக்காசுப் புலவர் நமஸ்கார மண்டபத்தில் அமர்ந்து செவ்வேளின் நாம ஜெபம் செய்து கொண்டிருந்த பொழுது, அவர் மனக் கண்முன், கந்த புராணமே கண்காட்சியாக விரியத் தொடங்கியது. பால முருகனின் வீர தீர பராக்கிரம செயல்களையெல்லாம் கண்டு மகிழ்ந்தார். வீரவாகு வந்தார். அவர்துள்ளம் நடையில்தான் எத்தனை எத்தனை மிடுக்கு! இறுதியில் சூரசம் ஹாரம் முடிந்து முருகனுக்குத் திருமணம் நடந்தேறியது.

யும் அவரிடம் அளவளாவி மகிழ்ந்தார். ஒட்டக்கூத்தரின் தக்கயாகப் பரணியின் மீது அவருக்கொரு தனி ஆர்வம். அதனால் படிக்காசுப் புலவரை விட்டு அதைப் படிக்கச் செய்து விளக்கஉரை கேட்டு அகமகிழ்ந்தார்.

படிக்காசுப் புலவர் அங்கு தங்கியிருக்கிறார் என்று கேள்விப்பட்டு, அந்தப் பக்கத்திலிருந்த புலவர்களும் அவ்வப்பொழுது அவரிடம் வந்து அளவளாவத் தொடங்கினர். அப்பொழுது புறநானூறும், அகநானூறும், தொல்காப்பியமும் அங்கு அவரவர் வாயில் நுழைந்து கொஞ்சி விளையாடியது. கறுப்ப முதலியார், அவர்கள் பேச்சில் மூழ்கி அநேக தடவை உண்ணச் செல்வதற்குக்கூட மறந்து போயுள்ளார்!

ஒரு நாள் மாலை இருவரும் பூங்காவில் உலவிக் கொண்டிருந்த பொழுது 'தங்களிடம் ஒரு வேண்டுகோள்' என்றார் முதலியார். 'அது என்ன அப்படிச் சொல்கிறீர்கள்! தாங்கள் கட்டளையிடுங்கள். நான் சித்தமாயிருக்கிறேன்.'' என்று பணிவன்போடு பதிலளித்தார் புலவர்.

'தாங்கள் இதுவரை எத்தனையோ அருமையான வெண்பாக்கள் பாடியுள்ளீர்கள். நானும் கேட்டு மிகவும் ரசித்திருக்கிறேன். ஆனால் தாங்கள் இதுவரை பிரபந்தமாக ஏதும் செய்யவில்லையே என்ற வருத்தம் எனக்குண்டு...'' என்று தொடங்கினார் கறுப்ப முதலியார்.

''ஓ! செய்தால் போயிற்று. தங்களையொத்த செல்வப் பிரபுவின் ஆதரவு இருக்கும்பொழுது அதுமாதிரி ஒரு பிரபந்தம் செய்வது மிகவும் எளிதாகி விடுமே!' என்றார் புலவர்.

''ஆகா! மிக்க மகிழ்ச்சி! தொண்டை மண்டலத்தைப் பற்றி ஒரு பிரபந்தம் பாடுங்கள். அதற்குத் தொண்டைமண்டல சதகம் என்ற பெயர் வைத்துவிடுவோம்' என்றார்.

மறுநாளிலிருந்தே தொண்டை மண்டல சதகம் எழுதத் தொடங்கிவிட்டார் புலவர். அதற்காகப் பல பழைய நூல்களைப் பார்வையிட வேண்டியிருந்தது. அவையனைத்தையும் எங்கெங்கிருந்தோ முதலியாரே தருவித்துக் கொடுத்தார். ஒவ்வொன்றையும் மிகவும் ஆழ்ந்து யோசித்து எழுதினார் படிக்காசுப் புலவர். தகுதியான வார்த்தைகள் பதங்கள், ஆங்காங்கு தானே வந்து விழுந்தன. இவ்வண்ணம் எழிலான நூல் ஒன்றை இரு பதே தினங்களில் எழுதி முடித்தார் புலவர்.

இத்தனை விரைவிலே, தனது கனவு எழிலார்ந்த வகையில் உருவாகி முடிவு பெறும் என்று கறுப்ப முதலியார் எதிர்பார்க்கவேயில்லை. படிக்காசுப் புலவரிடம் இத்தனைத் திறமை பொதிந்து கிடக்கிறது என்பதை எண்ணிப் பார்த்த போது, முதலியாரின் இதயம் ஆனந்தக் களிப்பால் விம்மியது!

அத் தொண்டைமண்டல சதகத்தில் அரங்கேற்றத்தை பெரும் விழாவாகவே ஏற்பாடு செய்து விட்டார் முதலியார். ஊரே விழாக் கோலம் பூண்டது.

படிக்காசுப் புலவர் தொண்டைமண்டல சதக அரங்கேற்றத்தை முடித்த பொழுது, அன்று சொல்லிய வாக்கின்படி புலவருக்கு மலர் மாரி பொழிந்தார் கறுப்ப முதலியார். அத்துடன் அநேக பொற்காசுகளும் வழங்கினார்.

அரங்கேற்றம் முடிந்து ஊர்வலம் வருங்கால் படிக்காசுப் புலவர் அமர்ந்திருந்த பல்லக்கை, தானே சுமந்து மிகவும் கௌரவித்தார் முதலியார்.

காவைவென் றிடுகத் தூரி கண்மணி
கறுப்ப னென்று
மாவை யம்பதி யான்றொண்டை
மண்டல சதகங்கேட்டு
நாவலர் புகழ்ந்து மெச்ச நவநிதி
பொழுந்து நன்றாய்ப்
பூவுல கெங்கும் போற்றப் புகழ்நிலை
நிறுத்தினானே!

என்று கறுப்ப முதலியாரைப் பற்றி படிக்காசுப் புலவரும் மிகவும் புகழ்ந்து பாடியுள்ளார்.

அதன் பிறகு கறுப்ப முதலியாரிடமிருந்து பிரியாவிடை பெற்று, சிவ தரிசனம் செய்ய எண்ணி பல தலங்களுக்குச் சென்றார். ஆங்காங்கு வெண்பாக்கள் பல பாடி அத்தலத்தின் கண் எழுந்தருளியிருந்த சிவ நாதருக்கும் அவ்வூர் செங்குந்த மக்களுக்கும் பெருமை தேடி வைத்தார். கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புத்தானே!

வழியில் சிதம்பரம் வந்து சேர்ந்தார் புலவர். அப்பொழுது அவருக்கு என்றும் இல்லாத மனப் புளகிதம் ஏற்பட்டது. நேரே கோயிலுக்குச் சென்று, கனகசபாபதியைத் தரிசித்தார். மனம் நெகிழ்ந்து கண்களை மூடி பரவசமடைந்து ஆனந்த

4. இரட்டைப் புலவர்

S. T. சம்பந்தம் — மேற்கு மாம்பலம்



இரட்டைப் புலவர்

சோழவள நாட்டிலே அமிலாந்துறை என்பது பாடல் பெற்ற பெரும் சிவத்தல மாகும். இரட்டையர் எனப்படும் இப் புலவர்கள் அவ்வூரில் தெய்வ பக்தியுடன் வீரஉணர்வும் ஒருங்கே பெற்ற செங்குந்தர் மரபினில் தோன்றியவர்கள்.

இவர்கள் இரட்டைக் குழந்தைகளா கவே பிறந்த சகோதரர்கள் என்று எண் ணுபவர் அநேகர். அது சரியல்ல.

சிவனடி மறவாச் செல்வர்களாகத் திகழ்ந்த இவ்விரு புலவர்களும் நெருங்கிய உறவினர் ஆவார்கள். அவர்களில் ஒருவர் அத்தை மகன்; மற்றொருவர் அம்மான் மகன்.

இவர்களது பெயர் முறையே இளஞ் சூரியார், முதுசூரியரென்று, தமிழ் நாவலர் சரிதையில் தெரியவருகிறது.

ஆனால் இருவருக்கும் பொதுப் பெயராய் 'இரட்டையர்' என்று அமைந்து விட்டதால், அவர்களுக்கிருந்த தனிப் பெயர் - வழக்கில் இல்லாமல் மறைந்தே போய்விட்டது.

முதலில் அத்தைக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. சில நாட்களுக்குள் அக்குழந்தைக்குக் கண்பார்வையில்லை என்பது தெரிய வந்தது; மிகவும் வருந் தினார்கள்.

அடுத்தாற் போல் அம்மானுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அது பிறந்த பொழுதே முடம் என்று தெரிந்து விட்டது. அனைவரும் ஏக குடும்பமாக வாழ்ந்த காலம் அது. அனைவரும் இரு குழந்தைகளுக்கும் இப்படியும் நேருமா என்று வருந்தினார்கள்.

உடனே தங்கள் குலதெய்வத்திற் குப் பூஜை போட்டுக் குறிகேட்டார்கள். 'வருந்த வேண்டாம், அவர்கள் சிறந்து வாழ்வார்கள். உங்களுக்கும் பெருமை தேடித் தருவார்கள்' என்ற அருள் வாக்குக் கிடைத்தது. அதன்பிறகு தான் அவர்கள் மன அமைதி பெற்றார்கள்.

சிறுவயதிலிருந்தே இவ்விரு குழந்தை களும், ஒருவர்க் கொருவர் மிகவும் நெருங் கிப் பழகி அன்பாய் வளர்ந்தார்கள். கலை வாணியின் கடாட்சமும் அவர்களுக்கு எளிதில் கிடைத்தது.

இளமைக் காலத்திலேயே இவர் களின் தாய் தந்தையர் உயிர் நீத்த மைக்கும் பெரிதும் வருந்தினர். அவர் களுக்குத் தாங்கள் இயற்ற வேண்டிய கடன்களை முடித்துத் தலயாத்திரை புறப்பட்டனர்.

இவர்களுக்குள்ள ஒற்றுமையால் குருடராயுள்ளவர் மேல் முடமாயுள்ள வர் முதுகிலோ அல்லது தோளிலோ - ஏறிக் கொண்டு உலவத் தொடங்கினர். அதனால் இவர்கள் இரண்டுபேர்களாயி ருந்தும்—இரட்டைப் புலவர் என்று ஒருமை யிலேயே அழைக்கப்பட்டனர்.

முடவர், பாட்டின் முதல் பகுதியைப் பாட குருடர் அப்பாட்டின் இரண்டாம் பகுதியைப் பாடி முடிப்பார்; இருவரும் வரகவியாகவே விளங்கினர்.

முதன் முதலாக, பூலோக கைலாய மெனவும் கோயிலெனவும் புகழ்பெற்று

விளங்கும் தில்லையம்பதிக்குப் புறப்பட்டார்கள். வழியில் கண்ணில் படும் இனிய காட்சிகளையெல்லாம் முடவர் விளக்கிக் கொண்டே போனார். குருடர் அதுகேட்டு மகிழ்வெய்து கொண்டே சென்றார். எப்பொழுதும் அறையில் ஒரு வேட்டியும், மேலே ஒரு துண்டுமாக மிகவும் எளிமையாகவே காட்சியளிப்பார்கள்.

இரட்டையர் கொள்ளிடக் கரையை அடைந்த பொழுது பலபலவென்று விடிந்து கொண்டிருந்தது. அதைக்கடந்து தான் தில்லைம்பதி சேரவேண்டும். படகுத் துறையிலிருந்து அப்பொழுது தான் முதல்படகு புறப்படவிருந்தது. இவ்விரட்டையரைப் பார்த்ததும் அப் படகுக்காரனுக்கு எப்படி இருந்ததோ! 'போணி' ஆகாது என்று எண்ணினான் போலும்! அவர்களைப் படகில் ஏற்றிக் கொள்ள மறுத்துவிட்டான்.

அதற்காக அவர்கள் சினந்தார்களில்லை. ஒதுப்புறமான ஓரிடத்தில் அமர்ந்துவிட்டார்கள். அப்பொழுது அப் படகுக் காரனைப் பார்த்து ஏதோ குசுகுசு வென்று பேசிக் கொண்டார்கள். ஏதேனும் பாடல் பாடியிருப்பார்களோ!

அதற்குள் நன்றாய் விடிந்துவிடவே யார் யாரோ வந்தார்கள்; அக்கரைக்குச் செல்லப் படகு ஏறினார்கள்.

அப்பொழுது காழியிலிருந்து செல்வப் பிரமுகர் ஒருவர் வந்தார். அவர் அங்கிருந்த ஐநூறு கைத்தறிகளுக்கு அதிபர். ஆள்வைத்து துணி நெய்து ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார். அவர் இரட்டையருக்கு முன்பே நன்கு அறிமுகமானவராதலால், 'சிதம்பரத்திற்குத்தானே செல்ல வேண்டும், வாருங்களேன்; முதற் படகிலேயே சென்று விடுவோம்' என்று அழைத்தார்.

அப்பொழுது தான் அப்படகுக்காரனின் கூற்றை அவர்கள் அச்செல்வப் பிரமுகரிடம் கூறவேண்டியதாயிற்று. 'அப்படியா சொன்னான் அவன்' என்று கடிந்து அவர்களை வற்புறுத்தி அழைத்துக் கொண்டு படகுத் துறைக்கு வந்தார்.

அதற்குள் படகில் ஏறியவர்கள் அவசரப்படுத்தவே படகு புறப்பட்டு விட்டது. ஆனால் சற்று தூரம் சென்றதும் அதுதானே திரும்பி வந்து விட்டதே! மறுபடியும் முயற்சித்தான் அப் படகுக்காரன். ஆனால் நகரவில்லையே படகு! அனைவரும் வியப்புற்று விக்கித்த வேளையில் அச்செல்வப் பிரமுகர் வந்தார்.

இவர்கள் இரட்டைப் புலவர் என்பதை அரியாயோ? இவர்களுக்கு இடம் மறுத்தாயாமே? இப்பொழுது படகு நகர மறுக்கிறது பார்த்தாயா? என்ன காரியம் செய்தாய்? என்று படகுக் காரனைக் கடிந்து கொண்டார். படகுக் காரனுக்கு ஒன்றுமே பதில் சொல்லத் தோன்றவில்லை

பிறகு இரட்டையரும் அப்பிரமுகரும் படகில் ஏற, எவ்வித சிரமம் இன்றி அப் படகு தானே நகர்ந்தது. அதிசிக்கிரத்தில் அக்கரையை அடைந்தது. படகுக் காரன் இரட்டயரை விழுந்து வணங்கினான். மன்னிப்பும் கேட்டுக் கொண்டான். இனி மேல் முதல் போணியாக கட்டணமில்லாமலேயே ஒருவரை நீ ஏற்றிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உனக்குச் செல்வம் சேரும் 'என்று சொல்லி வாங்க மறுத்த அவனிடம் தங்கள் கட்டணத்தையும் செலுத்திச் சென்றார்கள்.

அவனும் அவ்வண்ணமே நடந்து வந்து சீக்கிரத்திலேயே சிறந்த செல்வச் சீமானானான். புலவர் வாக்குப் பொய்த்து போகுமா?

இரட்டைப் புலவர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கிறார்கள் என்று அறிந்ததும், அவர்களைத் தரிசிக்கவும் அவர்களது திருவாக்கை கேட்பதற்கென்றும் திரள் திரளாக மக்கள் வந்து குழுமி விட்டனர்.

இரட்டையர் நடராஜப் பெருமானை வாயாறப் பாடித் தொழுது மகிழ்ந்தார்கள்.


பிறகு இரட்டையர் திருச் சுற்றை முடித்துக் கொண்டு ஆடல் வல்லானை மீண்டும் துதித்தெழுந்து ஒரு வெண்பா பாடிப் பிரிந்தார்கள்.

அப்பொழுது அத்தில்லையம்பதியிலுள்ள செங்குந்தச்செல்வர்கள் குழுவாய் வந்து இரட்டையரைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களை வற்புறுத்தி அழைத்துச் சென்று தங்கள் சித்திர மாளிகையிலே தங்கச் செய்து மிகவும் உபசரித்தார்கள். அப்பொழுது சிதம்பரத்திற்குத் தாங்கள் ஒரு கலம்பகம் இயற்றியருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

உடனே அவர்கள் திருப்பாதிரிப் புலியூர் கலம்பகத்திற்கு நூல் சாற்றி பார்க்க, நல்ல பதிலே கிடைத்தது. பிறகு சில நாட்கள் அங்கேயே தங்கி, பதினெட்டு உறுப்புகளும் இயைந்த கலம்பகமாக அமைத்தார்கள் அதை. அதைப் படியெடுக்க அவ்வூர்ப் புலவர்கள் பலர் மனமுவந்து உதவி செய்தார்கள்.

5. வண்ணக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முனிவர்

வித்துவான் அம்பை. இரா. சங்கரன்
(பேரகராதித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 005)



வண்ணக்களஞ்சியம்
காஞ்சி நாகலிங்க முனிவர்

யான் மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் (1939-41) இரண்டு ஆண்டுகள் இளம்புலவர் வகுப்பில் படித்தேன். பின்னர் அக்கல்லூரியின் முதல் எழுத்தராக ஈராண்டுகள் (1941-1943) பணியாற்றினேன். அவ்வமயம் 1943 ஜனவரித் திங்களில் ஒரு நாள் என் வாழ்க்கையின் புனித நாளாகும். வண்ணக் களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முனிவரவர்கள் திருவாவடுதுறை சென்று சென்னை திரும்பும்போது புதுவை வந்து அங்கு உயர்திரு. ஆ.வே. முத்தையா முதலியார் அவர்களைக் கண்ட பின்னர் மயிலம் வந்தார்கள். அங்கு எழுந்தருளிய தோன்றாத் துணையாம் முருகப்பெருமானை வணங்கிய பின்னர் தோன்றும் துணையாய பதினெட்டாம் பட்டம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகளையும் கண்டு பேசி மகிழ்ந்தார்கள். அவ்வமயம் என் நல்லூழால் முனிவரவர்களைக் காண நேர்ந்தது. யான் செங்குந்தமித்திரன் வாயிலாக முனிவரவர்களின் பெருமையினை முன்னரே அறிந்திருந்தேன். ஆதலின் யான்பெற்ற மகிழ்ச்சிக்கோர் எல்லையில்லை. முனிவரவர்கள் சந்நிதானம் அவர்களிடம் விடைபெற்று மடாலயத்திலிருந்து வெளிவந்த பின்னர் யான் அவர்களோடு உரையாடிக் கொண்டே என் குடிலுக்கு அழைத்து வந்தேன். அப்பொழுது அவர்கள் கூறிய அமுத மொழிகள் இன்னும் என் செவிகளில் எதிரொலிக்கின்றன. அவர்களுக்கு அப்பொழுது எழுபத்தொன்பது வயது இருக்கும். இருப்பினும் அவரது எழுச்சியூட்டும் சைவப் பற்றும் இனப்பற்றும் என்னை மிகவும் ஊக்கின. தாம் செய்த அரும்பெரும் செயல்களையெல்லாம் விளக்கி என்னையும் அவ்வாறு மேம்பட்டுத் திகழவேண்டும் என வாழ்த்தியருளினார்கள். அன்று முழுவதும் எனக்கு உபதேசம் செய்தார்கள் என்றே கூறலாம். அவர்கள் ஆசி உண்மையிலேயே எனக்கு மிக்க பயனைத் தந்தது என்பதை இன்றும் நினைந்து நினைந்து இன்புறுகிறேன். அத் தொடர்பால் தான் அம்முனிவர்பிரானின் வரலாறு பற்றி சென்னை—செங்கை மாவட்ட செங்குந்த மகாஜன சங்க மலரில் எழுதும்பேறு இறையருளால் கிடைத்துள்ளது என்று எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். முனிவர் வரலாறு வருங்கால இளைஞருலகிற்கு எழுச்சியூட்டத் தக்க சிறந்த வாய்ப்பாயிருக்குமென்று கருதுகின்றேன். ஆதலின் அவர்கள் வரலாறு பற்றி இனி ஆய்வோமாக.

''தொண்டை நன்னாடு சான்றோருடைத்து'' என்னும் முதுமொழிக்கேற்ப நாகலிங்க முனிவரையும் தமிழுலகிற்கு அளித்தபேறு கல்வியிற்கரையிலாத காஞ்சி மாநகரையே சாரும். காஞ்சிபுரத்தை அடுத்தே பேட்டை என்று வழங்கும் பல சிற்றூர்களுள் ஒன்று ஏக்கனாம்பேட்டை என்பதாகும். அவ்வேக்கனாம் பேட்டையை அடுத்தே பிரதாபராயன்பேட்டை என்னும் ஒரு பகுதியுமிருந்தது. அப்பிரதாபராயன் என்பவர் நம்முனிவரின் மூதாதையருள் ஒருவராவர். அவர் அக்காலத்து

ஆங்கு எழுந்தருளியிருந்த மீனாட்சி சமேதரான சோமசுந்தரக் கடவுளைத் தரிசிப்பதற்கு முன், உடல் சுத்தம் செய்து கொள்ள பொற்றாமரைத் திருக்குளத்துக்குச் சென்றார்கள். முடவர் மேலண்டைப் படித்துறையில் இருக்க, குருடர் கீழ்ப்படித்துறையிலிருந்து, தாங்கள் உடுத்திருந்த பழைய ஆடையை அவிழ்த்து நனைத்துத் துவைப்பாராயினர். அவ்வாடைகளை அலசி யெடுத்துப் பிழியும் வேளையில் தற் செயலாய் அவை அவர் கையினின்று நழுவி நீரில் விழுந்து அமிழ்ந்தன. அது கண்ட முடவர்,

''அம்பிலே தோய்த்திட்ட டடுத்தடுத்து நாமதனைத்
தப்பினா னம்மையது தப்பாதோ—''

என்று பாடிப் பரிகசித்தார். அது கேட்ட குருடர் வெட்கி,

''—அப்படியே
யானலுங் கந்தை யதினுமோ ராயிரங் கண்
போனால் மயிர் போச்சுப் போ.''

என்று பாடினார். அப்போது முடவர் சற்று வருந்தி,

''கண்ணா யிரமுடைய கந்தையே யானாலுந்
தண்ணார் குளிரையுடன் றாங்காதோ''

எனப்பாட, அது கேட்ட குருடர்,

''—எண்ணாதீர்
இக்கலிங்கம் போனலென் னேகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்க முண்டே துணை''

எனப் பாடி முடித்து படிக்கரையில் உட்கார்ந்தார்.

என்ன ஆச்சரியம்! உடனே நீரில் அமிழ்ந்த அக் கந்தைத்துணிகள் நூதனப் பட்டாடையாகி சரிகைக் கரை பளபளக்க மேலெழும்பி அவர்களுக்கருகாமையில் மிதந்து வந்தன! என்னே! சொக்கலிங்கப் பெருமானின் திருவுள்ளம்! உடனே அவைகளை யெடுத்துப் பிழிந்து உலர்த்தி இருவரும் உடுத்திக் கொண்டார்கள்.

அப்பொழுது அப்பக்கம் சென்றவர்கள் எல்லாம் இரட்டையரைப் பார்த்துப் பார்த்து வியப்புற்றனர். இவர்கள் படித்துறையில் இறங்கியபொழுது கந்தல் துணியை உடுத்திருந்ததைப் பார்த்தவர்களாயிற்றே அவர்கள்!

அதற்குள், இரட்டையருக்குப் பொற்றாமரையில் ஆடை மாறிய செய்தி எங்கும் எட்டி விட்டது. அவர்களைத் தரிசிக்கவும், அவர்களிடம் ஆசி பெறவும் திரள் திரளாக மக்கள் வரத் தொடங்கி விட்டனர். திருக்கோயிலில் அன்று ஒரே நெரிசல்.

இரட்டையர் சோமசுந்தரப் பெருமானைத் தரிசித்துக் கொண்டு, அம்மை மீனாட்சி சந்நிதிக்கு வர முடியாமல் திகைத்தார்கள். மக்கள் கூட்டம் அவர்களுக்கு வழி விட்டால்தானே! பிறகு முன்னின்ற சிலர், மக்களை விலகச் செய்து இரட்டையருக்கு வழி செய்து கொடுத்தார்கள்.

அம்மையின் திருப்பாதங்களில் தங்கள் மனத்தைப் பதித்து வணங்கி யெழுந்தார்கள். அவர்கள் கண்களில் நீர் பனித்தது. பிறகு அவர்களுக்குக் கோயில் பிரசாதம் வழங்கப்பட்டது. அதைப் பெற்றுக் கொண்டு அவர்கள் வெளியேற மக்கள் இடங்கொடுக்கவில்லை.

அன்புடன் அழைத்துச் சென்று, மண்டபத்தில் அமரச் செய்து, இறைவன் மேல் நாலு பதிகம் பாடும்படி வேண்டிக் கொண்டார்கள். அன்புக்குண்டோ அடைக்கும் தாழ்!

திருவாலவாயின் பெருமையையும், மீனாட்சி சொக்கநாதனின் மகிமையையும் பாடினார்கள்! அவற்றை ஆளுக்குப் பாதியாகப் பாடிய விதத்தைக் கண்டு மக்கள் வியப்புற்றுப் போனார்கள். மக்கள் இரட்டையர் மீது மலர் மழை பொழிந்தனுப்பினார். இரட்டையர் சென்ற இடமெல்லாம் இப்படித்தான் என்றாலும், அவர்கள் அதை அதிகம் விரும்பினார்களில்லை. அவர்கள் எண்ணமெல்லாம் எப்பொழுதும் இறைவன் பாலே இருந்து வந்தது.

தெய்வீகப் புலமை வாய்ந்த இரட்டைப் புலவர், செங்குந்த மரபில் தோன்றியவராதலால், அம் மரபினரை மிகவும் சிறப்பித்தனர். சென்றவிடமெல்லாம் இவர்களுக்குச் செங்குந்த மரபினர்கள் மிகவும் உதவியாயிருந்தார்கள். அத்துடன் இரட்டையருக்கு அளவற்ற சம்மானமளித்து மிகவும் சிறப்பித்தார்கள்.

இவ்வண்ணம் அளவற்ற பாக்கள் பாடி பல அற்புதங்களை விளைவித்து, இறுதியில் வயோதிக நிலையில் தாங்கள் பிறந்த ஊராகிய அமிலாந்துறைக்கே திரும்பினார்கள். அப்பொழுது அவர்களது உறவினர் என்று அங்கு ஒருவருமே இல்லை. ஆனால் ஆங்கிருந்த செங்குந்த மாரபினரே இரட்டையருக்கு மிகவும் உதவியாயிருந்து தொண்டு புரிந்து வந்தனர்.

இருவரும் ஒரே நாளில் ஒரே வேளையில் சிவபெருமானின் திருப்பதத்தை யடைந்த நிகழ்ச்சி மிகவும் வியத்தகு செயலாகும்.

வழியில் ஓர் ஊரில் மரத்தினடியில் அமர்ந்து இரட்டையர், ஒருவர் மாற்றி ஒருவர் பாடிக் களித்தார்கள். அப்பொழுது அவ்வூர் பெரியோர் சிலர் அங்கு வந்து அவர்கள் பாட்டைக் கேட்டு மகிழ்ந்து, அந்தக் காலத்தில் ஒட்டக்கூத்தர் கூட எங்கள் ஊருக்கு வந்து சென்றிருக்கிறார். அவர் எங்கள் மரபைச் சார்ந்தவர் என்று சொல்லிப் பெருமைப் பட்டுக் கொண்டார்கள்.

''அப்படியென்றால் நீங்களும் எங்கள் மரபைச் சார்ந்தவர்தாம்' என்று இரட்டையர் சொல்ல, ஓ! நீங்களும் செங்குந்தர் மரபினர்தானா!' என்று வியந்து கேட்டு சீக்கிரத்தில் ஊரைக் கூட்டி விட்டார்கள். இரட்டைப் புலவரை அழைத்துச் சென்று அனைத்து மரியாதைகளும் செய்தார்கள்.

அங்கிருந்த இரண்டொரு செங்குந்தப் புலவர்கள் அவர்களுடன் தமிழ் இலக்கியங்களை பற்றி அளவளாவி மகிழ்ந்தார்கள்.

ஒரு தடவை இரட்டையர் பாட்டில் மகிழ்ந்த பாண்டிய மன்னன், விலைமதிப்பற்ற சம்மானம் அளித்து அவர்களை மகிழ்வித்தான். அவர்கள் மறுத்தும், மன்னன் வெகுவாக வற்புறுத்தவே, அவையனைத்தையும் மூட்டையாய் கட்டிச் சுமந்து கொண்டு புறப்பட்டார்கள்.

அவ்வூர் எல்லையைக் கடந்து சென்று கொண்டிருக்கையில், முடவருக்கு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டது. உடனே, அங்கிருந்த ஒரு பிள்ளையார் கோயிலினுள் நுழைந்து அவருக்குப் பின்னால் பாதுகாப்பாக அந்த மூட்டையை வைத்துவிட்டு வயல் பக்கம் சென்றார்கள்.

திரும்பி வரச் சற்று நேரம் ஆகிவிட்டது. சென்று மூட்டையை எடுக்கப் போனார்கள். அதற்குள் எவனோ வந்து அதில் கை வைத்து விட்டிருந்தான். மூட்டை அவிழ்ந்து கிடந்தது. அதிலிருந்த முக்கிய பொருள்களைக் காணோம்.

சற்று நேரம் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்த அவர்கள், ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்கள்போல் தலை நிமிர்ந்து, அப்பிள்ளையாரைச் சற்று நோக்கினார்கள். உடனே,

தம்பியோ பெண் திருடி, தாயாருடன்
பிறந்த
வம்பனோ நெய்திருடும் மாமாயன்—

என்று முடவர் பாட, அதைத் தொடர்ந்து குருடரும்

—நம்பியவிம்
மூத்தவனோ நம்பான் முடிச்சவிழ்ப்பா
னென்செயலாங்
கோத்திரத்துக் குள்ள குணம்.

என்று நிந்தா ஸ்துதியாகப் பாடி முடித்தார்.

பிறகு அந்த மூட்டையை நன்றாக முடிந்து, தலைக்கு வைத்துக் கொண்டு அப்படியே தூங்கிப் போய் விட்டார்கள். வெகு நேரங் கழித்து கண் விழித்துப் பார்த்தபொழுது அந்த மூட்டை சற்று பெரியதாய் இருந்ததைக் கண்டு வியப்புற்றார்கள். உடனே அதை அவிழ்த்துப் பார்க்க, காணாமற்போன பொருள்களோடு, வேறு விலையுயர்ந்த பொருள்களும் அதில் திணிக்கப்பட்டிருந்தன. எல்லாம் இப்பிள்ளையார் வேலையாய்த் தானிருக்கும் என்று எள்ளி நகையாடினார்கள்.

பிறகு கையிலிருந்த பொருளை விற்றுப் பணமாக்கி, அவ்வூரிலிருந்த வறியோர்க்கு ஆளுக்குக் கொஞ்சமாகக் கொடுத்து மகிழ்ந்தார்கள். அவர்கள்தாம் எப்பொழுதும் பொருளைச் சேர்த்து வைத்துக் கொள்வதில்லையே!

அதன்பிறகு திருவாலவாய் என்னும் மதுரையம்பதிக்குப் புறப்பட்டார்கள். காட்டின் வழியே சென்ற பொழுது அங்கு அநேக குருந்த மரங்கள் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தார்கள். அவைகளைக் கண்டதுமே அவர்களுக்கு மணிவாசகப் பெருமானின் நினைவு வந்துவிட்டது. இறைவன் மணிவாசகரை ஆட்கொண்டது இந்த குருந்த மரத்தடியில் தானே! உடனே ஒரு குருந்த மரத்தடியில் அமர்ந்து, அவர் பெருமையைப் பாடி உருகிப் போனார்கள்.

அப்பொழுதடித்த குளிர்காற்று சில்லெனத் தவழ்ந்து வந்தது. உடனே அம்மரம் சலசலத்து, அவர்கள் மீது நீர்த் துளிகளைத் தெளித்தன. எல்லாம் வல்ல இறைவனே அவர்களை அவ்வண்ணம் ஆசீர்வதிப்பதாக எண்ணி மகிழ்ந்தார்கள்.

அப்பொழுது அவர்கள் வழி தெரியாமல் சற்று திகைத்தார்கள். எங்கோ தொலை தூரத்தில் யாழ் ஏந்திய பாணர்கள் மதுரகானமாகத் திருப்பள்ளியெழுச்சி பாடி வரும் ஓசை கேட்டது. இதோ அவர்கள் அண்மையிலேயே வந்துவிட்டார்களே! அவர்கள் மதுரையம்பதிக்குச் செல்வதையறிந்து இரட்டையரும் அவர்களுடன் சேர்ந்து நடந்து திருவாலவாய் வந்து சேர்ந்தார்கள்.

பிறகு நடராஜ சந்நிதியில் அது வெகு விமரிசையாக அரங்கேறியது. தில்லைத் தீட்சதர்களும் இரட்டையருக்குத் தகுந்த மரியாதை செய்து அனுப்பி வைத்தார்கள்.

அன்பர்கள் பலர் அவர்களுக்குச் சிவிகை தருகிறேன் என்றார்கள். உதவிக்கு கூடவே ஆள் அனுப்புகிறேன் என்றார்கள். அனைத்தையும் அவர்கள் மறுத்தார்கள். ஏழ்மையான எளிய வாழ்க்கையையே இரட்டையர் மேற்கொண்டனர்.

வாழ்நாள் முழுவதுமே தல யாத்திரையிலேயே கழித்தார்கள். சேர்ந்தாற்போல் சில ஆண்டுகள் ஓரிடத்தில் தங்கினார்கள் என்றில்லை. அவர்களுக்குத் திருமணம் நடந்ததாகவும் தெரியவில்லை. இறைவனைத் தொழுவதும் கவி பாடுவதுமாகவே காலந் தள்ளினார்கள்.

பிறகு இரட்டைப் புலவர் சிதம்பரத்தை விட்டு நேரே திருவாமாத்தூர் எனும் தலத்தை அடைந்தார்கள். அங்கெழுந்தருளியுள்ள அழகிய நாதரைத் தரிசித்து சில நாட்கள் தங்கினார்கள்.

அதற்குள் இரட்டைப் புலவர்கள் சிதம்பரத்தில் கலம்பகம் பாடியருளிய செய்தி அவ்வூர் மக்களுக்கு எட்டிவிட்டது உடனே அவ்வூர்ப் பெருமான் மீதும் ஒரு கலம்பகம் பாடியருளும்படி கேட்டுக் கொண்டார்கள். என்ன செய்வது! எங்கு சென்றாலும் மக்களின் அன்புத் தொல்லை தான்!

அவ்வூர் மக்கள் வேண்டுகோளுக் கிணங்க திருவாமாத்தூர் கலம்பகம்' பாடி அதை ஒரு நல்ல நாளில் அரங்கேற்றத் தொடங்கினார்கள்.

அப்பிரபந்தத்திலுள்ள ஒரு பாடலில் பம்பையாற்றிக்கு மேற்கரையிலுள்ள கோயிலென்று கூறியிருப்பதை அச்சபையில் உள்ளோர் கேட்டு நகைக்கத் தொடங்கிவிட்டார்கள். இத்திருக்கோயில் பம்பையாற்றின் கீழ்க்கரையிலிருப்பதை, இவ்விருவருள் கண்ணில்லார் காணாவிடினும், முடவராவது சரியாகப் பார்த்தெழுதக்கூடாதா? என்று முணுமுணுக்கத் தொடங்கினார்கள்.

அதுகேட்ட இரட்டையர் உடனே அவ்வரங்கேற்றத்தை நிறுத்தி 'நமது வாக்கில் விளக்கிவித்தருளிய திருவருட் செயலையுணர்ந்த பிறகே இப்பிரபந்தத்தை அரங்கேற்றி முடிப்போம்' என அச்சபையிலிருந்து எழுந்து சென்று விட்டார்கள்.

நமது வாக்கிலிருந்து தப்பிதம் வருவதானால் அது எம் பெருமானுக்கல்லவா இழுக்காகும் என்று அன்றிரவு உணவு அருந்தாமல் கூடப் படுத்துவிட்டார்கள்.

ஆனால் அன்றிரவு என்ன நேர்ந்தது தெரியுமா? சிவபெருமான் திருவருளால் சப்த மேகங்களும் ஆகாயத்தில் ஆரவாரித்துக் திரண்டு வந்தன. வானமே கிழிந்தாற்போல் மழை கொட்டு கொட்டென கொட்டியது. எங்கும் ஒரே வெள்ளக்காடு. இரட்டையருக்குத் தூக்கமே இல்லை.

அருணன் உதயமாவதற்கு முன் பம்பையாறு பாதை மாறி ஓடி 'மேற்கரைக் கோயில்' என இரட்டையர் பாடியிருந்ததை மெய்ப்பித்துவிட்டதே! வேலை முடிந்ததும் வந்த மழை இருந்த இடம் தெரியாமல் மறைந்தது.

அதுகண்ட அவ்வூர் மக்கள், இரட்டையரைப் பணிந்து, மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். உங்களை மன்னிப்பதற்கு ஒன்றுமில்லை. இறைவன் திருவிளையாட்டை எண்ணி ஏற்றம் பெறுங்கள்' எனக் கூறி அன்றே அக்கலம்பகத்தை அரங்கேற்றி முடித்துப் பிரிந்தார்கள்.

அவ்வூர் செல்வந்தர் அளித்த சம்மானத்தை மறுத்துப் புறப்பட்டார்கள்.

இரட்டையர் இறைவன் புகழைப் பாடிக் கொண்டே நெடுகச் சென்றார்கள். இடையிலுள்ள நாங்கூர் எனும் தலத்தையடைந்தபொழுது அவர்களுக்கு நல்ல பசி ஏற்பட்டது. அவர்கள்தாம் எவரிடமும் கரம் நீட்டுவதில்லையே! அதனால்

அத்தலப் பெருமானைக் குறித்து முடவர்.

தேங்கு புகழ் நாங்கூர்ச் சிவனேயல்
லாளியம்மா
நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ—

எனப் பாடி முடித்தார். உடனே குருடர்

— போங்காணும்
கூறுசங்கு தோன்முரசு கோ ட்டோசை
யல்லாமற்
சோறு கண்ட மூளியார் சொல்.

என்று அப்பாடலை முடித்தார்.

அப்பொழுது எதிர் கொண்டு வந்து கொண்டிருந்த ஒருவர் அவர்களை முன்பே அறிந்தவரைப் போல் அன்பாகப் பேசி, அங்கிருந்த ஒரு வீட்டின் திண்ணையில் அவர்களை அமரச் செய்து உணவு படைத்து மறைந்து போனார். 'ஈசா!' என்னே உன் கருணை!' என்று வியந்து சென்றார்கள்.

அரசரிடமிருந்து பெற்ற பட்டப்பெயர் பிரதாபராயர் என்பதாகும். அப்பிரதாப ராயன்பேட்டை என்பது தற்போது ஏக்க னாம்பேட்டையின் ஒரு தெருப்பெயராக விளங்கிவருகிறது. அத்தகைய சிறப்புப் பொருந்திய கால்வழியில் சரவணப் பெருமாள் முதலியார் என்பவருக்கும் மனோன்மணியம்மையார் என்னும் மாதரசியாருக்கும் சிறந்த மகவாய் இரத்தாட்சி ஆண்டு ஐப்பசித் திங்கள் ஆறாம் நாளில் (1864 அக்டோபர்) நம் முனிவர்பிரான் தோன்றியருளினார்.

முனிவர் இளமையிலேயே தம் தந்தையாரை இழந்துவிட்டார். ஆதலின் பாட்டியார் வீட்டிலேயே ஐயம்பேட்டையில் தங்கிக் கல்விபயின்று வந்தார். முனிவருக்கு முதன் முதல் கல்வி பயிற்றுவித்த ஆசிரியர் சிவஞானமுனிவரது மாணாக்கர் பரம்பரையில் வந்த முத்துக் குமாரதேசிகரின் மாணவராய வீரசைவர் கச்சபாலய தேசிகர் ஆவார். பின்னர் வள்ளுவப்பாக்கம் சீனிவாச முதலியார் ஆசிரியராயிருந்தார். தம் பன்னிரெண்டாம்வயதில் முனிவர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தார். அப்பொழுதுதான் முனிவரின் சிறிய தந்தையார் புஜங்கராவ் முதலியாரால் பேணி வளர்க்கப்பெற்று முனிவர் சென்னை சேர்ந்தார். புஜங்கராவ் முதலியார் மயிலாப்பூரில் வாழ்ந்ததால் அங்கேயே நன்கு படித்து முன்னேற வாய்ப்பிருந்தது. முன்னை நல்லூழினால் முனிவர் பிரானுக்கு ஆங்கிலம் படிக்க நாட்டம் செல்லவில்லை. தமிழைப் படித்து முன்னேற ஆர்வம் மிக்கோங்கியதால் சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார் அவர்களிடம் தமிழ் நூல்களை முறையாகப் பாடம் கேட்டார். திருமயிலை சண்முகம்பிள்ளை அவர்களிடம் இராமாயணமும் இராயபுரம் ஐக்காராவ் முதலியார் என்னும் கிறித்தவரிடம் நன்னூலும் பயின்றார். திருவண்ணாமலை ஆதீனம் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளிடம் சிவதத்துவ விவேகம் பாடம் கேட்டார். அப்பொழுது உடன் பயின்றவர் திருவாவடுதுறை ஆதீனத்தில் பின்னர் சந்நிதானமாய் வந்த அம்பலவாண தேசிக சுவாமிகள் ஆவர். தம் இருபத்தோராவது வயதில் காஞ்சிபுரம் உபயவேதாந்தம் முத்துக் கச்சபேசுவர சிவாச்சாரிய சுவாமிகளிடம் சமய விசேடதீட்சைகள் பெற்றார். அப்போது உடன் தீட்சைப் பெற்றவர் சூளை சோமசுந்தர நாயகர் ஆவர். இருபத்தைந்தாம் வயதில் திருவாமாத்தூரில் தண்டபாணி சுவாமிகளிடம் கௌமாரதீக்கை பெற்றார். பூஜங்கராவ் முதலியார் காமாட்சி அம்மை என்னும் மாதரசியாரை நம்முனிவருக்கு வாழ்க்கைத் துணையாக ஏற்படுத்தினார். பின்னர் இல்லறம் பேணி நல்லறம் காத்து நம்முனிவர்பிரான் வாழ்ந்து வரலானார்.

இவர்கள் குடும்பத்திற்கு என உழைக்காமல் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவே விளங்கினார்கள். அதனால் பொது மக்கள் இவருக்கு வறுமைத்துன்பம் வராதபடி காத்துக் கொண்டார்கள். அது காரணமாக இவர்கள் தொண்டு பலவாறு ஓங்கிப் பரந்ததென்று கூறலாம். முதன் முதலில் இவர்களைச் சைவத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்த சபை சென்னை அருணாசலம் வீதியில் திருமழிசை தணிகாசல முதலியார் வீட்டில் ஏற்பட்ட சைவசித்தாந்த சபையே யாகும். அது கோடக நல்லூர் சுந்தரசுவாமிகளைக் கொண்டு தொடங்கப் பெற்றது. திருமயிலை தணிகாசல முதலியார் இச் சபையில் பல புராணப் பிரசங்கங்கள் செய்து வந்தார். இதுவே சென்னையில் ஏற்பட்ட முதற் சைவசபை என்னலாம். அதில் நம் முனிவர் பிரான் மிக நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார்.

பின்னர் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் என்று ஒரு சைவசபை தற்போதும் சிறப்புற விளங்கிக் கொண்டிருக்கிறது. அதன் ஆரம்ப காலத்தில் அதனை வளர்த்த பெருமை நம் முனிவரையும் சாரும். அதன் நூல் நிலையத்தைச் செம்மைப் படுத்திச் சிவஞான சுவாமிகள் நூல் நிலையம் எனப்பெயர் வைத்தார். புதுக்கோட்டை நீதிபதியாக விருந்த தாமோதரம் பிள்ளை அவர்களுக்கு ஒரு சீட்டுக்கவி எழுதி அனுப்பி அதன் மூலம் பல நூல்களை நம்முனிவர் பெற்றார். மற்றும் பலரிடமிருந்தும் நூல்களைப் பெற்று அந்நூல் நிலையத்தைச் சிறப்புறச் செய்தார்.

சென்னை அருணாசலேசுவரர் வசந்த மண்டபத்தில் மெய்கண்டான் சந்தான சபை என்று ஒரு சபை நிறுவப்பெற்றது. இதற்குப் பூவை கலியாணசுந்தர முதலியார் தலைவராகவும் நம்முனிவர் துணைத் தலைவராகவுமிருந்து வளர்த்தனர். திருமுறைகள் பயிற்றுவித்தல், புராணச் சொற்பொழிவுகள் நடத்துவித்தல், சாத்திரப் பாடல்கள் நடத்துதல், திருக்கோயில் வழிபாட்டின் முன்னேற்றம் முதலியன அச்சபையால் ஏற்பட்ட பயன்கள். தேவார பாடசாலை, மெய்கண்டான் கல்லூரி முதலியனவும் இச்சபையின் ஆதரவில் நிகழ்ந்தன.

உடன்படவில்லை. அதுபற்றித் திரு.வி.க. அவர்களே எழுதிய எழுத்தைக் காண லாம்.

''ஞானியார் மடத்துத் தலைமை யும் சிவிகையூர்தலும் இன்ன பிறவும் சுவாமிகளை வெளியூர் செல்லாதவாறு தகைந்து வந்தன. அவைகள் சுவாமிகளைச் சிறைப்படுத்தின என்றே சொல்லுவேன். இலங்கை, மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகள் சுவாமிகளின் தமிழைப் பருக எவ்வளவு விழைந்தன என்பதை யான் அறிவேன். 1941 ஆம் ஆண்டு அன்பர் இராமசாமி நாயுடு என்பவர் தென்னாப்பிரிக்காவினின்றும் சென்னை போந்தனர். அவர் சுவாமிகளையும் என் னையும் தென்னாப்பிரிக்காவுக்கு அழைத் துச் செல்ல விரும்பினார். சுவாமிகளைக் காண நாயுடுவும் யானும் காஞ்சி சென் றோம். சுவாமிகளைக் கண்டோம். நாயுடு சுவாமிகளிடம் தமது கருத்தைத் தெரி வித்தனர். எனக்குள்ள தடைகளை முதலி யார் சொல்வார் என்ற பதில் சுவாமி களிடத்திலிருந்து பிறந்தது'.

அடிகளாரின் திருவுருவப் பொலிவை யும் பல்வேறு சிறப்புக்களையும் குறித் துத் தமிழ்ப் பெரியார் திரு. வி.க. அவர்கள் அழகு தமிழில் எழுதியுள்ள பாராட்டுரையிலிருந்து சில பகுதிகளைக் காணலாம்.

''.......முருகன் சேவடி வருடி உரு கும் ஈரநெஞ்சும், அவன் புகழ் பேசி இனிக் கும் நன்னாவும், தண்மை பொழியும் செவ்விய நோக்கும், வெண்ணீறு துதை யும் நெற்றியும், மாணிக்கக் குழை பிறங்குஞ் செவியும், பொன்னொளிரும் மணிமார்பும், கருமைக்கதிர் விரிக்குந் திருமேனியும் 'சண்முகா-சண்முகா' என்று நீறளிக்கும் நீண்ட கையுங் கொண்ட அடிகளின் திருவோலக்கப் பொலிவு என் னுள்ளத்தில் ஓவியமெனப் படிந்து நிற் கிறது. அஃது எவர் உள்ளத்தையுங் கவரும்: எவர்க்கும் எளிதில் இன்பூட்டும் ....

......ஞானியார் சுவாமிகள் மாணாக் கருக்குப் பாடஞ் சொல்லும்போதும், சொற்பொழிவு நிகழ்த்தும் போதும் தொல் காப்பியனாராகவும், நக்கீரராகவும், திரு வள்ளுவராகவும், இளங்கோ அடிகளாக வும், கச்சியப்பராகவும் கம்பராகவும், சேக்கிழாராகவும், வியாசராகவும், நீல கண்டராகவும், சிவஞான முனிவராக வும், பிறராகவும் முறை முறையே விளங்கி விளங்கி இலக்கிய இலக்கணச் சாத்திர நுட்பங்களை வெளியிடுவதைக் கேட்டுக் கேட்டுப் புலவரானவர் பலர். பழம் புலவர் பலரும் ஞானியார் ஒருவரிடம் விளங்குதல் வியப்பன்றோ?......

....சுவாமிகளின் பேச்சுத்திறனை எதற்கு ஒப்பிடுவது? கடல் மடைத் திறப்புக்கா—வெண்கலக் கோட்டை யில் அரசுவா புகுதலுக்கா—பெரும் புய லுக்கா—ஓயா மழைக்கா? எதற்கு— எதற்கு ஒப்பிடுவது? பலர் பலவாறு கூறுப.

திருப் பாதிரிப்புலியூரில் வீற்றிருந்து அடியவர்க்கருள் புரியும் கோவலடிகள் கருமைபூத்த ஒரு பொறுமை மலை. அம்மலையினுச்சியில் — மூளையில்-கலை மேகங்கள் பொழிந்த அறிவு மழை நீர், தேங்கித் தேங்கிப் புரண்டு திரண்டு பன்முகங் கொண்டெழுந்து முட்டி முடுகி, வாயின் வழியே முழங்கி விரைந்து இடை யீடில்லாச் சொற்றொடர் அருவியாக இழிந்து, பலதிறச் சுவை நுட்பப் பொருள் கள் மிதந்து சுழல, அன்பு வெள்ளப் பெருக் காய்ப் பரவிப் பரந்து, அருள் அலை கொழித்துக் கொழித்து ஓடும். நீர் பருகப் போந்த புலி, கரடி, யானை, மான், பசு முதலியன அருவி முழக்கிலெழும் இன்னொலி கேட்டு, அதில் ஈடுபட்டுத் தன் தன் பகைமை மறந்து மயங்கி நிற்கும். கரை நீராடுவோர் வெள்ளத்தி லுறும் மின் விசையால் பிணி நீங்கப் பெறுவர். ஞானியார் சுவாமிகள் பேச்சால் விளைந்த நலன் அளிப்பரிது....

.....தமிழ் நாட்டிலே பலவிடங் களிலே பலதிற விழாக்கள் ஞானியார் தலைமையிலே நடைபெறும். அவ்விழாக்க ளில் என் ஒலிபெறாதன மிகச் சிலவாயி ருக்கும். சுவாமிகள் தலைமையில் யான் பேசிய பொருள் வகைகள் பலதிறம். அவைகளையெல்லாம் சுவாமிகளின் முடி வுரை அணிசெய்யும்.......

....யான் இளமை தொட்டு ஞானி யார் சுவாமிகளை (காலில் விழுந்து) வணங்கி வந்தேன். ஒருவரை ஒருவர் (காலில் விழுந்து) வணங்குதல் கூடா தென்று சிலர் பேசுவர். அவருள் ஒருவர், 'நீங்கள் ஏன் ஞானியாரை மட்டும் வணங் குகிறீர்' என்று கேட்டார். அதற்கு, ஞானியாரை வணங்கும் பழக்கம் எனக்கு இன்று ஏற்பட்டதன்று. அஃது ஏற்பட்டு நீண்டகாலமாயிற்று. அதை வலிந்து நிறுத்தப் புகுவது ஆணவமாகும் என்று பதிலிறுத்தேன்......

திரு. வி. க. வைப் போலவே அண்ணா மலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராயிருந்த முதுபெரும்

6. தவத்திரு ஞானியாரடிகள்

Dr. V. RATHINASABAPATHY.
Vidwan, B.O.L., M.A., Ph.D.
Profersor and Head.
Department of Saiva Siddhanta, University of Madras, MADRAS-600 005.



தவத்திரு ஞானியாரடிகள்

தமிழகம், கும்பகோணத்தை அடுத்த திருநாகேச்சுரத்தில், வீரசைவச் செங்குந்த மரபில், அண்ணாமலை-பார்வதி என்பவர்களின் தவப்பேறாக, ஸ்ரீமுக ஆண்டு, வைகாசித் திங்கள், 4 ஆம் நாள், வியாழக்கிழமை (17.5.1873) இரவு 10.30 மணியளவில், பிறந்த ஆண்மகவுக்குப் பழநியாண்டி என்ற பெயரிடப் பெற்றது.

திருக்கயிலாய பரம்பரை, திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில் நான்காம் குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக பரமசிவ மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளைக் குருவாகக் கொண்டு போற்றி வந்த அண்ணாமலை-பார்வதி தம்பதியர் அடிக்கடி திருப்பாதிரிப்புலியூர் வந்து குருநாதரை வணங்கிச் செல்லுவதுண்டு. அவ்வாறு ஒருமுறை வந்த போது, ''உங்கள் குழந்தை பழநியாண்டி இனி எமக்குரிய பிள்ளை. அப்பிள்ளையை இங்கே கொண்டுவந்து சேர்த்துவிடுக'' என்ற ஆணை பிறந்தது. அதன்படியே குழந்தை பழநியாண்டியை ஆறாம் மாதத்திலேயே குருபாதத்தில் சேர்ப்பித்து விட்டார்கள். குருநாதர் ஆணைப்படிச் சில காலம் அப்பெற்றோர்கள் திருப்பாதிரிப்புலியூர்த் திருமடத்தில் தங்கியிருந்தார்கள்.

தமிழ், சமஸ்கிருதம் ஆகியவைகளை மரபுநெறியில் நின்று ஆசிரியரிடம் பதினேழு ஆண்டுகளும், தெலுங்கு மொழியை நான்காண்டுகளும், ஆங்கிலத்தை ஏழு ஆண்டுகளும் துறைபோகக் கற்றார்.

விரோதி ஆண்டு, கார்த்திகைத் திங்கள் 7 ஆம் நாள், வியாழக்கிழமை, (20.11.89) திருக்கயிலாய பரம்பரை, திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர்த் திருமடத்தில், ஐந்தாம் குருமூர்த்திகளாக, தம் 17 ஆம் அகவையில், அருளாட்சிப் பொறுப்பில் அமர்ந்தருளியபோது, மரபுப்படி, சிவசண்முக மெய்ஞ்ஞான சிவசாரிய சுவாமிகள் எனப் பெற்றார்.

52 ஆண்டுகள் குருபீடத்தில் அருளாட்சி நடத்தி, சைவமும் தமிழும் தழைத்தோங்க, சிவிகையூர்ந்து, தமிழகம் முழுவதும் சென்று, சொற்பொழிவின் மூலமும், அணுகியிருந்து கூறும் அறவுரையின் மூலமும் அனைவர் உள்ளத்திலும் 'ஞானியார் அடிகள்' என்று போற்றிக் கொண்டாடப்பெற்ற அடிகள் விஷு ஆண்டு, தைத்திங்கள் பூச நன்னாளில் (31.1.1942) தமது 69 ஆம் அகவையில் சித்தி அடைந்தார்கள்.

மரபு ஒழுக்கத்தில் மாறாது வாழ்ந்தவர்கள் ஞானியார் சுவாமிகள். சிவிகையூர்ந்து செல்வதைத் தவிர்த்து, கார் முதலியவற்றில் செல்ல வேண்டும் என்று திரு.வி.க. போன்றவர்கள் பன்முறையும் வேண்டிக் கொண்டபோது, சுவாமிகள் மரபு நெறியிலிருந்து மாறிச் செல்ல

தலைச் சங்கம் உருவாவதற்கு அடிப்படைக் காரணம் என்னலாம். அதற்கு ஆணி வேராயிருந்தவர் முனிபுங்கவரேயாவார். சங்கத்தை நிறுவி யதோடல்லாமல் செங்குந்த மித்திரன் என்னும் இதழினையும் தொடங்கி தாமே அதன் ஆசிரியராகவும் 1927 ஜனவரி முதல் தொண்டாற்றி மேலோங்கச் செய்தார். இதற்கு முன்னர் ''தொழிற்கல்வி'' என்னும் இதழினைநடத்தி வெற்றி கண்டவர்கள். 'செங்குந்தன்' என்னும் இதழினையும் தொடங்கி சிறிது காலம் நடத்தி வந்தார். அந்த அனுபவம் பின்னர் தொடங்கிய செங்குந்தமித்திரனுக்கு மிகவும் உறுதுணையாயிருந்தது.

முனிவர் சைவம், தமிழ், இன முன்னேற்றம் குறித்துத் தமிழகம் முழுவதும் எட்டுமுறை பயணம் செய்திருக்கிறார். அப்பொழுது அவருக்கு அங்கங்கு நிகழ்ந்த சிறப்புக்களைப் பற்றியெல்லாம் முனிவர் முத்து விழா மலரில் சிறக்கக் காணலாம். துறவு பூண்டபின் 1926ல் முனிவர் காசி யாத்திரையை மேற்கொள்ளலானார். ''கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'' ஆதலின் சென்னையிலிருந்து காசி சென்று திரும்பிவரும் வரை அங்கங்கு அன்பர்கள் அவர்களை வரவேற்று உபசரித்து வழியனுப்பி வைத்தார்கள். அதைப் போன்றே இராமேச்சுர யாத்திரையை மேற்கொண்டபோது பாஸ்கர சேதுபதி அவர்கள் எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துக் கொண்டார்கள். முனிவரவர்கள் வாழ்ந்த காலம் ஒரு பொற்காலம் என்று கூறலாம். தமிழ், சைவப் பெரியார்கள் கணக்கற்றோர் வாழ்ந்து நம் நாட்டின் பெருமையை உலகுக்கறியச் செய்தகாலமாகும். அவர்களுடன் வாழ்ந்து உரையாடி, பங்கேற்றுத் தொண்டாற்றிய பெருமை நம்முனிவர் பிரானுக்குண்டு. முனிவர் காலத்து வாழ்ந்த பெரியார்கள் சிலரையாவது ஈண்டுக் குறிப்பிடின் நலமென்று கருதுகின்றேன்.

திருப்புகழ் தண்டபாணி சுவாமிகள், பூண்டி அரங்கநாத முதலியார், ஊற்றுமலை கந்தசாமிக் கவிராயர், சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள், காஞ்சிபுரம் நல்லக்கம்ப முதலியார், சிதம்பரம் தில்லை நாயக முதலியார், சூளை சோமசுந்தர நாயகர், சூரிய நாராயண சாத்திரியார், மதுரை சபாபதி முதலியார், சபாபதி நாவலர், செந்தில் நாதையர், பூவை கலியாணசுந்தர முதலியார், திருகோடக நல்லூர் சுந்தரசுவாமிகள், திருமயிலை தணிகாசல முதலியார், யாழ்ப்பாணம் தாமோதரம் பிள்ளை, கா.நமச்சிவாய முதலியார், சிவஞானம் பிள்ளை கா.ர. கோவிந்தராச முதலியார், நீதிபதி டி.வி. சேஷகிரி அய்யர், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், ஐயம்பேட்டை சூரப்ப முதலியார், சென்னை இராமலிங்கத் தம்பிரான், மோசூர் கந்தசாமி முதலியார், நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், ஐயம்பேட்டை காளப்ப முதலியார், காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், சென்னைச் சபாபதி முதலியார், சிதம்பரம் திருவருட்பா இராமலிங்க சுவாமிகள், திருமழிசை வயித்திலிங்கத் தேவர், அவர் குமாரர் முத்துசாமி முதலியார், பூசை கந்தசாமி முதலியார், காஞ்சி கச்சபேசுவர தேசிகர், சதாசிவ தேசிகர், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள், மழவை மகாலிங்கையர், ஒற்றைத் தெரு தனிப்பாடல் வேலாயுத முதலியார், சோணாசல பாரதி, வெண்பாப் புலி வேலுசாமிப் பிள்ளை, பாஸ்கர சேதுபதி, அம்பலவாண தேசிக சுவாமிகள், பாண்டித்துரைத் தேவர், திருப்பனந்தாள் காசிமடம் காசிவாசி சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள், சிதம்பரம் மௌன மடம் செல்லப்ப சுவாமிகள், சபாபதி சுவாமிகள், மறைமலையடிகள், ஜெ. எம். நல்லசாமிப் பிள்ளை, திருவிதாங்கூர் பொன்னம்பலம் பிள்ளை, ஏகாம்பர யோகிகள், காஞ்சி ஆலாலசுந்தரம் பிள்ளை முதலிய கணக்கற்ற பெரியோர்களாவர்.

நம் முனிவர் பிரானுக்கு மயிலேறும் பெருமாள், தணிகைராயன், சரவணப் பெருமாள் எனப் புதல்வர் மூவரும் கஜவல்லி என்னும் பெண்மணி ஒருவரும் இறையருளால் இல்லறச் செல்வங்களாக வாய்த்தனர். பேரன், பெயர்த்திகளும் முனிவரின் மாணாக்கர் பரம்பரையினரும் அவர்கள் அடியொற்றி அவர் விட்டுச் சென்ற தொண்டினைச் செய்து கொண்டிருக்கின்றனர்.

முனிவர் பெருமானின் முத்துவிழா 1944 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முதல் நாளில் சென்னை கோகலே மண்டபத்தில் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. அறிஞர் பெருமக்கள் பலரும் கலந்து முனிவரவர்களின் தொண்டுகள் பற்றி வாயாரப் புகழ்ந்தார்கள். முத்துவிழா மலரும் வெளியிடப்பட்டது.

1950 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் ஒன்பதாம் நாள் தம் எண்பத்தாறாம் வயதில் முனிவர் பிரான் தணிகைப் பெருமான் திருவடிநீழலை யெய்தினார்கள். அவர்கள் பூதவுடல் மறைந்தாலும் அவர்கள் தொண்டு நூல்கள், வடிவாகவும் சபைகள் உருவாகவும் இப்பூவுலகில் என்றுமிருந்து அப்பெருமான் பெருமையைப் பறை சாற்றிக் கொண்டிருக்குமென்பது உறுதி.

வாழ்க கச்சியடிகள் புகழ். வாழ்க உலகெலாம்.

மேலும் நம்முனிவர் செங்குந்தப் புலவர் சங்கம் என ஒன்று ஏற்படுத்திப் பல புலவர்களை ஊக்கியதோடு செங்குந்தர் பிரபந்தங்கள் பலவும் பலருக்குப் போதிக்கப்பட்டன. அத்துடன் அமையாது அச்சமூக நூல் பலவற்றையும் அச்சிடும் பணியையும் அச்சங்கம் மேற்கொண்டது. செங்குந்தர் சங்கப் பட்டயம் என ஒரு நூல் எழுதி 1896ல் அந்நிறுவனம் வெளியிட்டது. இப்பட்டயம் மூலம் அக்காலத்துப் பல ஊர்களில் செங்குந்த குருமார்கள் ஆதீனம் இருந்த வரலாறு உணர முடிகிறது. சைவசித்தாந்த மகா சமாஜத்திலும் அதன் தொடக்க காலத்தில் பூவை கலியாணசுந்தர யதீந்திரர் அவர்களுடன் தொடர்பு பெற்றதால் மிகச் சிறந்த தொண்டுகளாற்றியுள்ளார்கள்.

முனிவர் தம் காலத்து மிகவும் அருகியுள்ள சைவ நூல்களையெல்லாம் வெளிக்கொண்டுவந்த பெருமையைப் பெற்றவர். பதிப்பகம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் அந்நூல்களை வெளிவரச் செய்தார். திருவாவடுதுறை ஆதீனத்தார் உதவி பெற்று மெய்கண்ட சாத்திரம் பதினான்கையும் ஒரு சேரத் தொகுத்து வெளியிட்ட பெருமை முனிவரையே சாரும். பாண்டித்துரைத் தேவர் விருப்பப்படி சிவஞான போதச் சிற்றுரையை மிகச் சிறந்த வெளியீட்டாக வெளியிட்டார். திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் ஆகிய இரு நூல்களையும் திருப்பனந்தாள் காசி மடத் தலைவர் காசிவாசி சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் துணை கொண்டு வெளியிட்டார். மேலும் சிவப்பிரகாசத்தைக் காஞ்சி சிதம்பர முனிவர் உரையுடன் வெளியிட்டார். சீகாழித்தல புராணம், தாயுமானவர் பாடல் குறிப்புரையுடன், பன்னிருதிருமுறை பண்முறையுடன், காஞ்சிப் புராணம், காஞ்சிக் கட்டளைக் கலித்துறைப் புராணம், திருப்புகழ்ப் பன்னிரு திருமுறைத் திரட்டு, திருமுறைத் திரட்டு, திருவாவடுதுறை ஆதீன வரலாறு, கச்சியப்ப முனிவர் இயற்றிய தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதி, கச்சியானந்தருத்திரேசர் பதிற்றுப் பத்து, சுந்தரர் தேவாரம் வரலாற்று முறைப்படி, காரனேஷன் தமிழகராதி, செங்குந்தர் பிரபந்தத்திரட்டு, (ஒருபாவுண்மை உபதேசம் வீட்டு நெறியுண்மை, பஞ்சாக்கர அனுபூதி, உபதேச சித்தாந்த விளக்கம், ஒருபா ஒருபது, முத்திமுடிவு, கச்சியானந்த ருத்திரேசர் பதிகம், சிவஞான யோகிகள் தோத்திரம் முதலிய நூல்களடங்கிய) சரவண தேசிகர் சாத்திரத்திரட்டு, ஒருபா உண்மை உபதேசம் முதற் பதிப்பு, விநாயக புராணம், ஆச்சா புரத் தலபுராணம் முதலிய கணக்கற்ற நூல்களை வெளியிட்டு சைவத்திற்கும் தமிழுக்கும் அப்பெரியார் செய்த தொண்டுகளைக் கணக்கிட முடியாது. இவை தவிர,

தாமே சில பெருமை மிக்க நூல்களையும் இயற்றித் தமிழுலகுக்கு அளித்துள்ளார். திருத்தணிகை வண்ண மஞ்சரி என்னும் நூல் தம் வழிபடு கடவுளாம் திருத்தணிகை முருகன் மீது வண்ணச் சந்தப்பாக்களால் பாடியதாகும். தென் கடம்பந்துறைப் பதிற்றுப் பத்தந்தாதி, வடபழநி மயிலேறும் பெருமாள் மாலை, வடபழநி இரட்டை மணிமாலை, திருவாமாத்தூர் வண்ணங்கள், திருவெறும்பியூர்ப் புராணம் முதலியனவாம்.

திருவாமாத்தூர் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், முனிவரியற்றிய திருத்தணிகை வண்ண மஞ்சரியைப் பார்த்து மகிழ்ந்து ''வண்ணக் களஞ்சியம்'' என்னும் பட்டத்தினைச் சூட்டி மகிழ்ந்தார்கள். மெய்கண்ட சாத்திரத்தை ஒரு சேர வெளியிட்டதால் மிகவும் மகிழ்ந்து திருவாவடுதுறை மகா சந்நிதானமாயிருந்த அம்பலவாண பண்டார சந்நிதிகள் முனிவர் பிரானுக்கு ''மெய்கண்ட சாத்திரப் பிரசாரகர்'' என்னும் பட்டம் சூட்டினார்கள். இது கருதியே காஞ்சிபுரத்திலும் நிகழ்ந்த ஒரு பாராட்டுக் கூட்டத்தில் முனிவருக்குக் ''காஞ்சி மகாநாட்டு வித்தியாப் பிரசாரகர்'' என்னும் பட்டமும் சூட்டிச் சிறப்புச் செய்யப் பெற்றது. காஞ்சிபுரம் ஞானப் பிரகாச சுவாமிகளிடத்துத் துறவு பெற்றார்கள். அவ்வமயம் அச்சுவாமிகள் முனிவருக்கு நாகலிங்க முதலியார் என்னும் பெயரை மாற்றி நாகலிங்க முனிவர் என வழங்கப்பெறும் மரபை உண்டாக்கினார்கள். மேலும் ''கச்சியடிகள்'' என்ற பட்டமும் அவர்களால் முனிவருக்கு அளிக்கப்பட்டது.

தாம் பிறந்த இனம் மேலோங்க வேண்டும் என்னும் அருள் மேலீட்டால் அங்கங்கு செல்லும் இடங்களில் எல்லாம் செங்குந்தர் சங்கங்களை நிறுவத் தூண்டியும் பல இடங்களில் தாமே ஆரம்பித்தும் வைத்தார்கள். பின்னர் சென்னையிலும் செங்குந்தப் புலவர் சங்கம் ஆரம்பித்ததோடு செங்குந்தர் பிரபந்தத் திரட்டையும் வெளியிட்டார்கள். அந்நூல்களைப் பாடமாகவும் நடத்தினார்கள். அதன் காரணமாகவே எழுச்சி மீதூரப் பெற்று 29.4.1927ல் கூடிய செங்குந்தர் மாநாட்டின் பயனாக தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம் உருவாயிற்று. திருவாரூர் வள்ளலார் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் ஆதரவுடன் செங்குந்தர் பிரபந்தத் திரட்டு 1926ல் வெளிவந்ததே

பாவேந்தர் வாழ்க்கைக் குறிப்புகள்

1891—ஏப்ரல் 29, புதன் இரவு 10.15 மணிக்குப் புதுவையில் சுப்புரத்தினம் பிறந்தார். தந்தை கனகசபை. தாய், இலக்குமி.

1895—ஆசிரியர் திருப்புளிசாமி அய்யாவிடம் தொடக்கக் கல்வி. இளம் வயதிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்றார். பாட்டிசைப் பதிலும் நடிப்பிலும் ஊரில் நற்பெயர் பெற்றார். பத்தாம் வயதிலேயே சுப்புரத்தினத்தைப் பெற்றதால் புகழ் பெற்றது புதுவை.

1908—புதுவை அருகில் உள்ள சாரம் முதுபெரும் புலவர் (மகா வித்துவான்) பு.அ. பெரியசாமியிடமும், பின்னர், பெரும்புலவர் பங்காரு பத்தரிடமும், தமிழ் இலக்கண-இலக்கியங்களையும், சித்தாந்த வேதாந்த பாடங்களையும் கசடறக் கற்றார். மாநிலத்திலேயே முதல் மாணவராகச் சிறப்புற்றார். புலவர் சுப்பு ரத்தினத்தை, வேணு (வல்லூறு) நாயகர் வீட்டுத் திருமணத்தில் பாரதியார் காணும் பேறு பெற்றார். பாரதியாரின் தேர்வுத் 'தராசி'ல் நின்றார்; வென்றார். நட்பு முற்றியது; பாரதியாரின் எளிய தமிழ், புலமை மிடுக்கேறிய சுப்புரத்தினத்தைப் பற்றியது.

1909—கல்வி அதிகாரி கையார் உதவியால், காரைக்கால் சார்ந்த நிரவியில் ஆசிரியப் பணி ஏற்றல்.

1910—வ.உ.சி.யின் நாட்டு விடுதலை ஆர்வத்தால் கனிந்திருந்த புலவர்—பாரதியார், வ.வே.சு., டாக்டர், வரதராசுலு, அரவிந்தர் போன்றோர்க்குப் புகலிடம் அளித்தல், தம் பெற்றோர்க்குத் தெரியாமல் மேல் துண்டில், வடித்த சோறு கொடுத்தல், ஓரோர் அமையங்களில் செலவுக்குப் பணம் தருதல். துப்பறிவாளர்களின் வேட்டையிலிருந்து தப்ப உதவல். பாரதியாரின் 'இந்தியா' ஏட்டை மறைமுகமாகப் பதிப்பித்துத் தருதல். ஆஷ் கலெக்டரைச் சுட்ட துப்பாக்கி பாவேந்தர் அனுப்பியதே.

1918—பாரதியாருடன் நெருங்கிப் பழகி அறிந்த உணர்வில், சாதி, மதம் கருதாத தெளிந்த உறுதியான கருத்துடன் தேசிய, தெய்வப் பாடல்களைப் பழகு தமிழில் எழுதுதல். புதுவை - தமிழக ஏடுகளில், புதுவை கே.எஸ். ஆர்; K.S.R., கண்டெழுதுவோன். கிறுக்கன், கிண்டல்காரன், கே. எஸ். பாரதிதாசன், என்ற பெயர்களில், பாடல், கட்டுரை, கதை, மடல்கள் எழுதுதல், 10 ஆண்டுக் காலம் பாரதியார்க்கு உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும் தோழனாய் இருந்தார்.

1919—திருபுவனையில் ஆசிரியராக இருக்கையில் பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயல்பட்டார் என்று குற்றம் சாட்டி 1¼ ஆண்டு சிறைபிடித்த புதுவை அரசு, தவறுணர்ந்து விடுதலை செய்தது. வேலை நீக்க வழக்கில் புலவர் வென்று மீண்டும் பணியில் சேர்தல்.

1920—இந்திய விடுதலை அறப்போராட்டத்தில் பங்கேற்றல். புவனகிரி பெருமாத்தூர் பரதேசி முதலியார் மகள் பழனி அம்மையை மணத்தல். தம் தோளில் கதர்த் துணியைச் சுமந்து தெருத் தெருவாய் விற்றல்.

1921—பாரதியார் மறைவு.

1922—கே.எஸ். பாரதிதாசன் என்ற புனைபெயரைத் தொடர்ந்து பயன்படுத்தி, 'தேச சேவகன்', 'துய்ப்ளேச்சு', 'புதுவை கலைமகள்' தேசோபகாரி, 'தேசபக்தன்', 'ஆனந்தபோதினி' 'சுதேசமித்திரன்' இதழ்களில் தொடர்ந்து பாடல், கட்டுரை, கதை எழுதுதல்.

1924—சோவியத்நாட்டு மாவீரர் இலெனின் இழப்பிற்குப் பாடல்.

1926—ஸ்ரீ மயிலம் சுப்ரமணியர் துதியமுது-நூலால் சிந்துக்குத் தக்தையாதல்.

1928—சுயமரியாதை இயக்கத்தில் பெரியார் ஈ.வே.ராவுடன் இணைதல். தாமும் தம் குடும்பமும் பகுத்தறிவுக் கொள்கையை மேற்கொள்ளல். குடும்பத் திருமணங்களில் தாலியைத் தவிர்த்தல்.

7. பாவேந்தர் பாரதிதாசன்....சில குறிப்புகள்

வழங்குபவர் : டாக்டர் கவிஞர் மன்னர் மன்னன்



பாவேந்தர் பாரதிதாசன்

பிரஞ்சு இந்தியப் பகுதிகளாக விளங்கிய புதுவை மாநிலத்தின் தலைநகரான புதுவை நகரின் புகழ்பெற்ற மளிகை வணிகராகவும், ஏற்றுமதி வணிகராகவும் திகழ்ந்த கனகசபை முதலியாரின் மகனாய்த் தோன்றியவர் சுப்புரத்தினம். கனகசபை இயற்றமிழிலும் நாடகத் தமிழிலும் பற்று மிக்கவர். சுப்புரத்தினம் தாம் பள்ளியில் பயிலும் காலத்திலேயே அகவல் முதலிய வகையில் கவிதை எழுதும் ஆற்றல் பெற்றிருந்தார். கூர்ந்த அறிவும் கல்வியில் மிகுந்த நாட்டமும் உடைய சுப்புரத்தினம், தம் தந்தையாரின் பெயர்ப்பகுதியான 'கனக' என்பதைத் தம்பெயருடன் இணைத்தே ஒப்பமிடும் வழக்கம் உடையவர். ஆசிரியப் பணியை ஏற்ற நாள் முதற்கொண்டு அதனின்று விலகும் வரை, ஆசிரியர்களின் நலன் கருதி உரிமைக்குரல் கொடுத்து அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தந்தார். மாணவர்களுக்கு அன்புடனும் பரிவுடனும் பாடங்களைக் கற்பிப்பதில் புதிய உத்திகளைக் கையாண்டு வெற்றிபெற்றார் சுப்புரத்தினம்.

பாரதிதாசனாக அவர் தம்மைப் புலப்படுத்திக் கொண்ட பின்னர், அவர் பல துறை வல்லுநராகப் பொலிந்திருக்கிறார் என்பதை விளக்கச் சில குறிப்புகள் தருவோம்.

இதழ்களை நடத்தியதும், இதழ்களுக்கு எழுதியதும் பாரதிதாசனார் வாழ்க்கையில் மிகப் பெரிய தொண்டாகும். திரைப்பட உரையாடல்-பாடல்- கதை இவர் எழுதியுள்ளார். தேசிய விடுதலைப் போராட்ட இயக்கத்திலும், சமுதாய சீர்திருத்த எழுச்சி இயக்கத்திலும் ஈடுபட்டுள்ளார். புதுவைச் சட்டமன்ற உறுப்பினரானார். அதற்கு முன்பு புதுவையில் சீரான ஆட்சி நிலவிடக் கொடுங்கோலர்களின் பிடியிலிருந்து மக்கள் விடுபடப் போராடியிருக்கிறார். ஏறத்தாழ 64 நூல்கள் வெளியிட்டிருக்கிறார். பல கோடி இருக்கும் இவர் எழுதியுள்ள கவிதை வரிகள்!

பாரதியின் புகழ் பரப்பியதைப் பெருமையாய்க் கொண்டு பாடுபட்ட பாரதிதாசன், தந்தை பெரியாரின் கொள்கையைப் பரப்புவதில் முழு வெற்றி பெற்றவர். தம் குடும்பத்தைப் பற்றிய கவலை எடுத்துக் கொள்ள மாட்டார். ஆனால் சமுதாய மக்களின் மேம்பாட்டுக்காக அல்லும் பகலும் உழைத்தவர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்—பெண் உரிமை—தமிழ் மொழி மேம்பாடு - தமிழின மக்கள் மேம்பாடு கருதி இவர் ஏற்றுக் கொண்ட தொல்லைகள் கணக்கற்றவை.

தம் கொள்கையினை ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்கமாட்டார். நகைச் சுவை இவரின் உரையாடலினிடையே சிறந்த கருத்திருக்கும். சிறுமை கண்டு சீறுவார். பிறரின் பெருமை கண்டு பாராட்டுவார்.

துணிவு இவரின் முத்திரை. தொலைநோக்கு இவருக்கு மிக உண்டு.

பாரதிதாசனாரின் முழு வடிவத்தைக்காண, இவரின் படைப்புக்களை ஆழ்ந்து படிப்பது ஒன்றே வழியாகும். பாவேந்தரின் வாழ்க்கைக் குறிப்புகள் சிலவற்றை இங்கே தருகிறேன்.

களில் 'குடியரசு' இதழையும் தொடங்கி வைத்தவர்கள்.

தஞ்சை, கரந்தையில் வாழ்ந்த வழக்கறிஞர் த.வே. உமா மகேசுவரம் பிள்ளையவர்கள் மூலமாக, திருவையாற்றிலுள்ள சமஸ்கிருதக் கல்லூரியை, சமஸ்கிருதம் தமிழ் என்ற இருமொழிக் கல்லூரியாக அமைய அரும்பாடுபட்டவர் ஞானியார் அடிகள். 1933ல் ஞானியாரடிகள் தம் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாப் பேரவையில் உமாமகேசுவரம் பிள்ளையவர்களுக்குச் 'செந்தமிழ்ப் புரவலர்' என்ற பட்டமளித்துச் சிறப்பித்தார்கள். கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றுவதற்கு ஒரு காரணராயிருந்த சுவாமிகள் உமாமகேசுவரம் பிள்ளையவர்களுக்குத் 'தமிழவேள்' என்ற பட்டத்தையும், சங்கப் புலவர் வேங்கடாசலம் பிள்ளையவர்களுக்குக் 'கவியரசு' என்ற பட்டத்தையும் வழங்கினார்கள்.

ஞானியாரடிகள் தம் மறைவு குறித்துச் சுந்தர சண்முகனார் எழுதிய கவிதையொன்றினைக் காட்டி இதனை முடிக்கிறேன்.

''ஞானி ஞானி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
ஞானி ஒருவனும் அல்லன்
வாணியும் உண்டு ஈண்டு அறிவு சிறந்
தோனே''

தவத்திரு ஞானியாரடிகள்

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் நாற்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு நாடறிந்த நாவலர். தலைவர்கள் எல்லாம் போற்றும் தமிழறிஞர். இப்போது எந்தெந்த அடிப்படைகளில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் போற்றப்படுகிறாரோ அந்தந்த அடிப்படைக்காகவும், அதற்கும் மேற்பட்ட புலமை, தவம் - இரு காரணங்களுக்காகவும். திரு. வி. க. போன்றவர்களே தனது திருவடிகளில் வீழ்ந்து வணங்கும் சிறப்பு பெற்றிருந்தார்.

நான் பார்த்து பல்லக்கில் பவனி வந்த சிவப்பழம் ஞானியார் சுவாமிகள். அக்கால மரபுப்படி எந்த இடத்திற்கும் அவர் பல்லக்கிலன்றி வேறு எதிலும் பயணம் செய்யமாட்டார்.

நல்ல பருமனான உடல், பால் வடியும் முகம், காதில் குண்டலங்கள், திருநீறு நிறைந்த நெற்றி, கழுத்தில் வீர சைவர்களுக்கு உரிய சிவலிங்கம், கண்டவரை எல்லாம் கவரும் கருணை விழிகள், பேசுவதற்கு என்றே சற்றுப் பிதுங்கியிருக்கும் உதடுகள். அந்தத் திருவுருவத்தைப் பார்த்த யாருக்கும் மணிவாசகர் போன்றவர்களுக்கு சிவபெருமான் இப்படிப்பட்ட வடிவில்தான் வந்து ஆட்கொண்டிருக்க வேண்டும் என்று 'சட்'டென்று தோன்றும்.

ஞானியார் சுவாமிகள் பேச்சினை பெரும்புலவர்கள் முதல் கட்டத் தொழிலாளர் வரை எல்லாரும் ஆர்வமுடன் வந்து கேட்பார்கள். புலவர்கள் எல்லாம் போற்றும்படியும் பாமரர்கள் எல்லாம் புரிந்து கொள்ளும்படியும் எல்லாக் கருத்துக்களையும் எளிமையாக விளக்கிச் சொல்வார்.

அந்த எளிமை கலந்த இனிமையிலே தமிழ்த் தேனும் தத்துவப் பாலும் இருக்கும்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. தமக்கு தமிழார்வமும் அறிவும் வந்ததற்குக் காரணம், சென்னையிலே வந்து, ஏழை எளிய மக்கள் வாழும் பகுதியிலும் ஞானியார் சுவாமிகள் செய்த சொற்பொழிவுகளைக் கேட்டமையால்தான் என்று எழுதியிருப்பது இதற்குச் சான்று.

எவ்வளவு கடினமான பாடல்களை மிக எளிய முறையில், சந்தி பிரித்து படிக்காத பாமரர்களும் ஆழ்ந்த பொருள்களை அறிந்து கொள்ளும்படி மணிக்கணக்காகச் சொற்பொழிவுகளைச் செய்த வேறு ஒருவரைத் தமிழக வரலாறு காண முடியாது. இதனால் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழுக்கும் சைவத்திற்கும் எவரிடமும் எள்ளளவும் மனக்கசப்பை ஏற்படுத்தாமல் ஒரு பெரிய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர் ஞானியார் சுவாமிகள்.

நன்றி: ''முத்தாரம்'' 29-5-87''

புலவர்—மகா மகோபாத்தியாய—பண்டித மணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் பகர்ந்துள்ள பாராட்டுரையினைக் காணலாம்.

"உயர்திரு ஞானியாரடிகளை யான் பல ஆண்டுகளாக அறிவேன். அவர்களுடைய தமிழ் மொழிப் பயிற்சியும் வடமொழி அறிவும் சைவ சித்தாந்த நூல் உணர்ச்சியும் தமிழ் உலகத்திற்குப் பல்லாண்டுகளாகப் பயன்பட்டு வந்தன. சொற்பொழிவாற்றும் திறமையும் மாணவர்களுக்குத் தெளிவு பெறப் பாடஞ் சொல்லும் வன்மையும் நன்கு வாய்க்கப் பெற்றவர்கள். அரிய பொருள் எனினும் பேசுவோரது சோர்வினால் சிறப்புறுவதில்லை யென்பதும், பேசுவோரது சொல் வன்மையால் எளிய பொருளும் மக்களால் பெரிதும் மதிக்கப்படும் என்பதும் நம் அனுபவத்திற் கண்டனவாம். சிறிய பொருளையும் மிக விரிவாக எழுதுவதற்கும் பேசுதற்கும் ஆங்கில மொழி தகுதியுடையதென்று பலர் கூறக் கேட்டிருக்கிறேன்.

திரு. ஞானியாரடிகளுடைய சொற்பொழிவைக் கேட்டபின், அத்தகுதி, மொழிக்கு உரியதன்று என்பதும் பேசுவோரைப் பற்றிய தென்பதும் அறிந்து கொள்ளலானேன். அடிகள் ஒரு பொருளைப்பற்றி விரிவுரை நிகழ்த்துங்கால் அது மிகக் குறுகிய கால எல்லயில் முடிக்கத் தக்கதாயினும் அதனைத் தம் மதி வன்மையால் பலவாறு வகுத்து வகுத்துக் கேட்பவர் மனம் சலியா வண்ணம் மீக நீண்ட நேரம் விளக்கிப் பேசுவார்கள். இவ்வியல்பு அடிகளுக்கே சிறந்த தொன்றாக அமைந்திருந்தது. வரலாற்றுப் பகுதிகளை எடுத்து விளக்குங்கால் அவற்றில் அமைந்துள்ள அறநிலை, நீதி, உலகியல் முதலியவற்றை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுவார்கள். எத்திறத்து மக்களையும் தம் உரை வன்மையால் பிணித்துத் தம் வயப்படுத்தும் ஆற்றல் அடிகளிடத்து மிக்கிருந்தது. அரிய சொற்பொழிவாயினும் கால நீட்டிப்பில் கேட்பவர் சோர்வடைதல் இயல்பு. இவ்வியல்பு அடிகளுடைய சொற்பொழிவைக் கேட்பவர்கள்பால் காண்டல் அரிதாகும். சமயநிலையில் அடிகள் வீர சைவராயினும் சித்தாந்த சைவம் முதலியவற்றில் கேட்பவர் மனம் பதியும் வண்ணம் பேசுதலில் மிகவும் சதுரப்பாடுடையவர்கள்.

கடவுள் பக்தியும் சிறப்பாக முருகப் பெருமானிடத்துப் பேரன்பும் உடையவர்கள். கல்வியறிவுடையோரை நன்கு மதித்து அளவளாவும் இனிய குணம் உடையவர்கள். தமிழ் மொழியில் பேரார்வத்தையும் சைவ சமயப்பற்றையும் தமிழ் மக்களுக்கு விளைத்து வந்த இவர்தம் அரிய சொற்பொழிவுகள், இத் தமிழ் நாட்டில் நிகழாத இடம் இல்லையென்றே சொல்லலாம். மடாதிபதிகள் செய்ய வேண்டிய அரிய செயல்களெல்லாம் திரு. ஞானியாரிடத்து நன்கு காணப்பட்டன. இக் காலத்துள்ள மற்றைய மடாதிபதிகள் இவர்கள் முறையைப் பின்பற்றுவார்களாயின், தமிழ் உலகிற்கே சிறந்த பயன் விளையும். இவர்கள் ஒழுகிய நெறி ஏனயோருக்குச் சிறந்த வழி காட்டியாக உள்ளதென்று கூறலாம்.

இவர்களிடத்துக் கல்வி பயின்ற மாணவர் பலரும், சொற்பொழிவு கேட்ட அன்பர்கள் பலரும், இவர்கள்பாற் கொண்டுள்ள பேரன்பு அளவிடுந் தரத்ததன்று. அதற்குக் காரணம் இவர்களுடைய அருட்குண நிலையே யாகும். இவர்கள் இழப்பு ஈடு செய்ய முடியாததொன்றென்றே கூறலாம். இத்தகைய பெரியார் ஒருவரை இனிக் காண்டல் எஞ்ஞான்று கூடுங்கொல்! திருவருள் துணை செய்தல் வேண்டும்.....

பட்டி, தொட்டிகளில் எல்லாம் சென்று தமிழையும் சைவத்தையும் பரப்பி வந்த ஞானியாரடிகள் பாலவநத்தம் ஜமீன்தாரரான பாண்டித்துரைத் தேவரவர்கள் தம் மடாலயம் வந்தபோது, மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற வேண்டுகோள் விடுத்து, அதனை 24.5.1901ல் பாண்டித்துரைத் தேவர் மூலம் மதுரையில் நிறுவினார்.

1903ல் தம் திருமடத்துக்கு வந்த பாண்டித்துரைத் தேவரவர்களைக் கொண்டு, தம் திருமடத்தில் 'வாணி விலாச சபை' என்ற சபையைத்தொடங்கி, வாரந்தோறும் சொற்பொழிவு செய்து வந்தார்கள்.

தென்னாற்காடு மாவட்ட முனிசீபாக இருந்த திரு. ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை, மறைமலையடிகள், சதாசிவம் பிள்ளை, முதலியவர்களைக் கொண்டு, சைவசித்தாந்தக் கொள்கையை நூல்கள் மூலமாகவும் விளக்கவுரை மூலமாகவும், தலை நகராக சென்று இருந்து பணியாற்றும் நிறுவனமாக, சைவசித்தாந்த மகாசமாஜம் என்பதை 7.7.1905ல் தம் திருமடத்திலேயே தொடக்கி வைத்தார்கள். சமாஜத்தின் இதழாகச் 'சித்தாந்தம்' என்பதைத் தொடங்கி வைத்த ஞானியார் அடிகளே பெரியார் ஈ.வெ.ரா. அவர்

1929—'குடியரசு', 'பகுத்தறிவு' ஏடுகளில் பாடல், கட்டுரை, கதை எழுதுதல்; குடும்பக் கட்டுப்பாடு பற்றி இந்தியாவிலே முதன் முதல் பாட்டெழுதிய முதல் பாவலர் என்ற சிறப்புப் பெறல்.

1930—பாரதியின் புதுவை வருகைக்கு முன்னும் பின்னும் இவர் பாடிய, சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்; தொண்டர் நடைப்பாட்டு; கதர் இராட்டினப் பாட்டு நூல் வடிவில் வெளியிடப்பட்டன. தொடர்ந்து சஞ்சீவி பர்வதத்தின் சாரல்; தாழ்த்தப்பட்டார் சமத்துவப் பாட்டு நூல்களை ம. நோயேல் வெளியிடல். டிசம்பர் 10ல் 'புதுவை முரசு' கிழமை ஏட்டின் ஆசிரியர் பொறுப்பேற்றல்.

1931—'புதுவை முரசு' (5.1.31) ஏட்டில் செவ்வாய் உலக யாத்திரை கட்டுரை வரைதல். சுயமரியாதைச் சுடர் என்ற 10 பாடல்களைக் கொண்ட நூலைக் 'கிண்டற்காரன்' என்ற பெயரில் வெளியிடல். (குத்தூசி குருசாமிக்கு இந்நூல் படைப்பு) பள்ளி ஆண்டு விழாவில் 'சிந்தா மணி' என்ற முத்தமிழ் நாடகம் எழுதி இயக்குதல்.

1932—வெளியார் நாடகங்கட்கும், தன்மான, பொதுவுடைமைக் கூட்டங்களுக்கும் பாட்டெழுதித் தருதல்.

1933—ம. சிங்காரவேலர் தலைமையில் சென்னை ஓயிட்சு நினைவுக் கட்டடத்தில் (31-1-33) நடந்த நாத்திகர் மாநாட்டில் கலந்து கொண்டு வருகைப் பதிவேட்டில் 'நான்ஒரு நிரந்தரமான நாத்திகன்' என்று எழுதிக் கையெழுத்திடல்.

1934—மாமல்லபுரத்திற்கு முழுநிலா இரவில் தோழர் ப. ஜீவானந்தம், குருசாமி, குஞ்சிதம், நயினா சுப்பிரமணியம், மயிலை, சீனி. வேங்கடசாமி, மாயூரம் நடராசன், சாமி சிதம்பரனார், எஸ்.வி. இலிங்கம், நாராண துரைக்கண்ணனுடன் படகில் செல்லல்: 'மாபலிபுரச் செலவு—பாடல் பிறந்தது. 9.9.34-ல் இரணியன் அல்லது இணையற்ற வீரன் நாடகம் பெரியார் தலைமையில் நடைபெறல். (குருசாமி இரணியன்-திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம்-பிரகலாதன்)

1935—இந்தியாவின் முதல் பாட்டேடான—'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' தொடக்கம். இதற்கு உறுதுணையாக இருந்தவர். எஸ். ஆர். சுப்பிரமணியம் (சர்வோதயத் தலைவர்.)

1936—பெங்களூரில் பதினான்கு நாள் தங்கி (1-4-36) 'தேசிங்குராஜன்' வரலாற்றை அட்கின்சு குழுமத்தார்க்கு 'இஸ் மாஸ்டர் வாய்ஸ்' இசைத்தட்டுகளைப் பதித்தல்.

1937—புரட்சிக்கவி—குறுங்காவியம் வெளியிடல். 'பாலாமணி அல்லது பக்காத் திருடன்' திரைப்படத்திற்குக் கதை. உரையாடல், பாடல் எழுதுதல், இதில் நடித்தவர்கள்; தி.க. சண்முகம் உடன் பிறந்தோர் அனைவரும்.

1938—பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியைக் குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி வெளியிட்டனர். பொருளுதவி செய்தவர் கடலூர் தி.கி. நாராயணசாமி (நாயுடு), தமிழிலக்கியத்திலேயே பெரும் புரட்சியை உண்டாக்கியதால், பெரியார், ''தன்மான இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர்'' என்று பாராட்டினார். டாக்டர். மாசிலாமணியார் நடத்திய 'தமிழரசு' இதழில் தொடர்ந்து எழுதுதல். 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்ற பாடலை அச்சுக் கோத்தவர் பின்னாளில் சிறப்புற்ற எழுத்தாளர் 'விந்தன்'.

1939 'கவி காளமேகம்'—திரைப்படத்திற்குத் கதை—உரையாடல் பாடல் எழுதுதல். இரணியன் அல்லது இணையற்ற வீரன் நூல் வடிவில் வருதல்.

1941—எதிர்பாராத முத்தம்—காவியம். காஞ்சி பொன்னப்பரின் வானம் பாடி நூற்பதிப்புக் கழகத்தில் வெளியிடல். இதற்கு மேலட்டை ஓவியம் இராய் சௌத்திரி.

1942—குடும்ப விளக்கு I வெளியிடல். இந்தியப் போராட்ட எழுச்சியை மறைமுகமாக ஊக்குவித்தல். இரண்டாம் உலகப்போரை- இட்லரை எதிர்த்தல். பல ஏடுகட்கும் எழுதுதல்.

கொள்ளும் நியமத்தைக் கடைப் பிடித்து வருகிறார்.

உருவான பணிகள்:

வாரியார் சுவாமிகள், ஈடும் எடுப்பு மற்ற இன்னிசை விரிவுரைகளையாற்றி, மக்கள் மகிழ்ச்சியும் எழுச்சியும் ஊக்கமும் ஒழுக்கமும் பெறச் செய்வதோடு, எத்தனையோ பல உருவான நிலையான திருப்பணிகளையும் நிறைவேற்றி வருகிறார்கள். ஊக்கமிக்க ஏழை எளிய மக்கள் பலர் சிறந்த கல்வி நலம் பெறுவதற்கும் உதவி வருகிறார்கள். எத்தனையோ அருள் நெறி விளக்கநூல்களை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். ''திருப்புகழமிர்தம்'' எனும் திங்கள் வெளியீட்டின் மூலம் அவர்கள் ஆற்றியுள்ள தெய்வீக இலக்கியப் பணிகள் ஏராளம்! ஏராளம்!

வழிபடு தெய்வம்:

பொதுவாக இறையுணர்வையும், சிறப்பாகச் சைவ சமயத் தெளிவையும் ஊட்டி வந்தாலும், குறிப்பாகத் தாம் பிறந்த செங்குந்த மரபினரின் குலதெய்வமாகிய முருகப் பெருமானின் புகழை வெகுவாகப் பரப்பி அவரையே தம் வழிபடு மூர்த்தியாக (உபாசனா மூர்த்தியாக) கொண்டுள்ளமையால் அவர் பெயருக்கு முன்னால் 'திருமுருக' என்னும் அடைமொழி இடம் பெற்றுவிட்டது.

திருப்பணி செய்த திருவூர்கள்:

தாம் பிறந்த ஊராகிய காங்கேய நல்லூரிலும், திருச்சியை அடுத்துள்ள வயலூரிலும், சிறப்பாக வடலூரிலும், மற்றும் சமயபுரம், அவிநாசி, ஈரோடு, காஞ்சிபுரம், சென்னை குயப்பேட்டை, வள்ளிமலை முதலிய பல இடங்களிலும் அவர்கள் தனி ஒருவராக முயன்று செய்துள்ள திருக்கோயிற்றிருப்பணிகளும், காங்கேய நல்லூரிலும், திருப்பராய்த்துறை இராமகிருஷ்ணகுடிலுக்கும் அவர்கள் கல்விப் பணிக்காகச் செய்துள்ள ஏராளமான பணிகள் என்றும் நிலையாக இருக்கக் கூடியன. எல்லாவற்றையும் ஒரு குத்து மதிப்பாகக் கணக்கிட்டால்கூட ஒருகோடி வெண்பொற் காசுகளுக்கு மேலாக இருக்கும்.

கடவுட்கொடை:

வாரியாருடைய சொற்பொழிவு இசையோடு கூடியது; நகைச்சுவைமிக்கது; மற்ற எல்லாச் சுவைகளும் உடையது. ஆழ்ந்த பல அரிய பெரிய கருத்துக்களை எளிமையாக விளக்கி எல்லோருடைய மனத்திலும் பதிய வைக்கக் கூடியது; மக்கள் தம் வாழ்வில் பெறவேண்டிய திருத்தங்களைப் பெற்று உயருமாறு செய்யும் ஆற்றலுடையது; இலக்கிய நயங்களைச் சுவையுடன் வாரி வாரி வழங்குவது; மக்களைச் சிரிக்க வைப்பதைப் போலவே உள்ளம் கசிந்து உருகி அழும்படியும் செய்யக் கூடியது; எவர் மனமும் புண்படாதவகையில் இடித்தும் புகழ்ந்தும் மக்களைத் திருத்தி ஏற்றமுறச் செய்வது; இது அவருக்கென்றே அமைந்த தனிப்பாணியாக, அருட்கொடையாக இருப்பது:

''கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க்
கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்''

என்னும் திருக்குறள் மொழிக்கு முழுதும் ஒத்ததாக விளங்குவது, பொதுமக்கள் மட்டுமின்றி, கற்றாரும் கலைஞரும் வியந்து போற்றும் வகையில் எண்ணற்ற பாடல்களையும் கிளைக் கதைகளையும் சுவைபடக் கடல் மடை திறந்ததுபோல் பொங்கி வழியச் செய்வது; தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளையும் சிறப்பாகத் திருப்புகழ் முதலிய அருணகிரிநாதர் பாடல்களையும், வள்ளலார் அருட்பாக்களையும் மற்றும் பல பிரபந்தப் பாடல்களையும் புராணக் கவிதைகளையும், தனிப் பாடல்களையும் சற்றும் தயக்கமின்றிப் புதைவாணமென எடுத்துக் கூறித் தெய்வ மணங்கமழச் செய்யும் திறத்தது; நேரமும் சூழலும் மறந்து ஆயிரக் கணக்கான மக்கள் அங்காந்து மகிழ்ந்து ஈடுபடும்படி செய்யக்கூடியது. எந்த ஒரு குறிப்பும் நூலும் எதிரில் இல்லாமலே ஏதோ ஒரு விசையை முடுக்கி விட்டது போல அடுக்கடுக்கான சுவைகளுடன் ஆற்று நீர் பூரித்துப் பெருகிப் பாய்ந்து பல்வேறு நடையிற் பயின்று வருவது போல இசை நுணுக்கங்களுடன் இயல்வது; இஃதோர் கடவுட் கொடை (god's gift) என்று இவர்தம் சொற்பொழிவின் சிறப்பை முடிப்பதே சரியாகும்.

அரிய இயல்பும் பழக்கங்களும்:

இனி, வாரியார் சுவாமிகளின் அரிய சில பழக்கவழக்கங்களைப் பற்றி யேனும் எண்ணிப் பார்ப்பது எல்லோருக்கும் நல்லது. எந்நேரமாயினும் நாடோறும் வழிபாடு செய்யாமல்—முருகப் பெருமானைப் பூசிக்காமல்—உண்பதில்லை. தமக்கு வரும் கடிதங்கள் எல்லாவற்றுக்கும், அவற்றை யார் எழுதியிருந்தாலும் உடனுக்குடன் பெரும்பாலும் தம் திருக்கரத்தாலேயே விடை எழுதுவார். நாடறிந்த அவருக்கு வரும் திருமண அழைப்பு போன்றவை

8. சீர்த்திமிகு செங்குந்த குலச் செம்மல்

திருமுருக கிருபானந்தவாரியார்

ஓவியகம் : ந.ரா. ஆடலரசு, சைதை, சென்னை-15



திருமுருக கிருபானந்தவாரியார்

உலகளாவிய புகழ்:

உலகெங்குமுள்ள தமிழ் மக்கள் அனைவரும் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளை நன்கறிவர். தமிழகத்தின் சிற்றூர் பேரூர்களிலும், பட்டி தொட்டிகளிலும் அவருடைய வெண்கலக்குரல் கடந்த ஐம்பதாண்டுகட்கும் மேலாக ஒலித்து வருகின்றது. இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும், ஈழநாட்டிலும், மலேயா சிங்கப்பூர் பர்மா ஆப்பிரிக்கா அமெரிக்கா இங்கிலாந்து பிரான்சு முதலிய வெளிநாடுகளிலும் அவருடைய இன்னிசை விரிவுரைகள் நடந்துள்ளன. ''எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே எந்தைநின தருட்புகழை இயம்பிடல் வேண்டும்'' என்று வடலூர் வள்ளலார் வேண்டியுள்ளது போல, நம் வாரியார் சுவாமிகள் உலகெங்கும் சென்று இறைவன் அருட்புகழை இயம்பிவருகிறார். அவருடைய அரிய பெரிய சுவைமிக்க உரைகளைக் கேட்டு எண்ணற்ற மக்கள் மகிழ்ந்து வருவதோடு, தம் வாழ்வில் அருளுணர்வும், ஒழுக்கமும், திருத்தமும் எய்தி உயர்வடைந்து வருகின்றனர்.

போற்றுதலுக்குரிய நம் வாரியார் பராபவ ஆண்டு ஆவணித்திங்கள் 9 ஆம் நாள் (25-8-1906) வேலூரை அடுத்துள்ள காங்கேயநல்லூரில் சிவத்திரு. மல்லையதாஸ் பாகவதர் அவர்கட்கும் திருமதி. கனகவல்லி அம்மைக்கும் மதுசூதனசிவம் என்பவருக்கு இளவலாகப் பிறந்தார். இவருக்குப் பின் திருமாமணாளசிவம், திருப்புகழ்மணி என்பவர்கள் பிறந்தனர். பரம்பரையாக அனைவருமே இன்னிசை விரிவுரைகள் (கதா கலாட்சேபங்கள்) செய்யும் ஆற்றல் பெற்றவர்கள் வாரியாருக்கு அவர் தந்தையே மூன்று வயது முதல் எழுத்தறிவித்து, இளமையிலேயே இலக்கண, இலக்கியங்களிற் தேர்ச்சி பெறச் செய்ததோடு, இசைக் கலையிலும் பயிற்சி அளித்து இன்னிசை விரிவுரைகளை நிகழ்த்துமாறு செய்தார். 12 வயதிலேயே, பதினாயிரம் அருட்பாடல்கள் மனப்பாடம் ஆயின. முறையாகப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து பயிலாத நம் வாரியார் சுவாமிகள் 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்னும்படி விளங்குகின்றார். பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் அவ்வப்போது இவரை விரிவுரை செய்யுமாறு அழைத்துப் பேராசிரியர்களும், மாணவர்களும் கேட்டு மகிழ்கின்றனர். தம்முடைய 13வது வயதில் ஆனைக்குனியில் வசித்த திரு. வரதாச்சாரியாரிடம், சிந்தாதிரிப் பேட்டையிலிருந்து நடந்து சென்று நாடோறும் வீணைப்பயிற்சி பெற்றுக் கொண்டார். வீணையைச் சுமந்து கொண்டு கடற்கரைக்குச் சென்று சாதனை செய்வார்.

'கிருபானந்தவாரி' என்ற பெயருடன் விளங்கிய இவருக்கு 12 வயதிலேயே தீக்கை செய்து 'வாமதேவசிவம்' என்ற தீட்சாநாமம் சூட்டப்பட்டது. அக்கால வழக்கப்படி 19 வயதிலேயே திரு. அமிர்தவல்லி அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். 1936 ஆம் ஆண்டு வயலூர் வள்ளற்பெருமானை தேவியருடன் எழுந்தருளச் செய்து 'ஆத்மார்த்த' பூசை மேற்கொண்டார். அதுமுதல் எந்நேரமாயினும் பூசை முடித்தே உணவு

1962—சென்னையில் மீண்டும் 'குயில்' கிழமை ஏடு (15-4-62) அனைத்துலகக் கவிஞர் மன்றத் தோற்றம், கண்ணகி புரட்சிக் காப்பியம் மணிமேகலை வெண்பா வெளியிடல். தமிழ் எழுத்தாளர் சங்கம் சார்பில் இராசாசி பொன்னாடை அணிவித்துக் கேடயம் வழங்கல்.

1963—தோழர் ப. ஜீவானந்தம் மறைவு குறித்துப் 'புகழ் உடம்பிற்குப் புகழ்மாலை' பாடல் எழுதுதல். சீனப் படையெடுப்பை எதிர்த்து அனைத்திந்திய மக்களை வீறு கொண்டெழப் பாடல்கள் எழுதுதல், பன் மணித்திரள் நூல் வெளியீடு. 72-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா. வழக்கறிஞர் வி.பி. இராமன் தலைமையில் நடைபெற்றது. 'பாரதியார் வரலாறு' திரைப்படம் எடுக்கத் திட்டமிட்டு எழுதி முடித்தல். இராசிபுரத்தில் புலவர் அரங்கசாமி கூட்டிய கவிஞர்கள் மாநாட்டில் தலைமை ஏற்றல்.

1964—பாரதியார் வரலாற்றுத் திரைப் படத்திற்குத் தீவிர முயற்சி. சென்னைப் பொது மருத்துவ மனையில் ஏப்ரல் 21-இல் இயற்கை எய்தல். மறுநாள் புதுவை கடற்கரையில் உடல் அடக்கம். வாழ்ந்த காலம் 72 ஆண்டு 11 மாதம் 28 நாள்.

1965—ஏப்ரல் 21. புதுவை கடற்கரை சார்ந்த பாப்பம்மா கோயில் இடுகாட்டில் பாரதிதாசன் நினைவு மண்டபம், புதுவை நகராட்சியினரால் எழுப்பப்பட்டது.

1968—சென்னையில் நிகழ்ந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டிப் பாவேந்தரின் முழு உருவச்சிலை, கடற்கரையில் திறந்து வைக்கப்பெற்றது.

1970—மார்ச். கவிஞரின் 'பிசிராந்தையார்' நாடக நூலுக்கு சாகித்ய அகாதமி ரூ. 5000 பரிசு வழங்கியது.

1971—ஏப்ரல் 29 பாவேந்தரின் பிறந்தநாள் விழா புதுவை அரசு விழாவாகக் கொண்டாடப் பெற்றது. ஒவ்வோராண்டும் அரசு விழா நிகழ்கிறது. பாவேந்தர் வாழ்ந்த பெருமாள் கோயில் தெரு 95ஆம் எண் இல்லம் அரசுடைமையாயிற்று. அங்கே புரட்சிக் கவிஞர் நினைவு நூலகம்—காட்சிக் கூடம் நடந்து வருகிறது.

1972—ஏப்ரல் 29, பாவேந்தரின் முழு உருவச்சிலை புதுவை அரசினரால் திறந்து வைக்கப்பெற்றது.

1977—முதல் தமிழக அரசு ''பாவேந்தர் விருது'' வழங்கி வருகிறது.

1982—திருச்சியில் பாவேந்தர் பெயரால் 'பாரதிதாசன் பல்கலைக் கழகம்'' நிறுவியுள்ளது தமிழக அரசு.

1985—பாரதிதாசனாரின் விரிவான வாழ்க்கை வரலாறு—''கறுப்புக்குயிலின் நெருப்புக் குரல்''—மன்னர் மன்னன் எழுதி வெளியிட்டமை.

1986—இந்த நூலுக்குத் தமிழக அரசின் முதற்பரிசு வழங்கப் பெற்றமை.

அஷ்ட வீரட்டங்கள்

1.	திருக்கண்டியூர்	பிரமன் சிரங்கொய்தது
2.	திருக்கோவலூர்	அந்தநா சூரனைச் சங்காத்தது
3.	திரு அதிகை	திரிபுரத்தை எரித்தது
4.	திருப்பரியலூர்	தக்கன் சிரங் கொய்தது
5.	திருவிற்குடி	சலந்தராசுரனைச் சங்கரித்தது
6.	வழுவூர் (வைப்புத்தலம்)	யானையை உரித்தது
7.	திருக்குறுக்கை	காமனை எரித்தது
8.	திருக்கடவூர்	யமனை உதைத்தது

1943—பாண்டியன் பரிசு—காவியம் வெளியிடல்.

1944—'இன்ப இரவு' (புரட்சிக்கவி) முத்தமிழ் நாடகம் அரங்கேற்றம். இருண்ட வீடு, காதல் நினைவுகள், நல்ல தீர்ப்பு (நாடகம்) அழகின் சிரிப்பு ஆகிய நூல்கள் ஒன்றன் பின் ஒன்றாய் வெளியிடல். 'சுலோசனா' என்ற திரைப்படத்திற்குத் கதை, உரையாடல் பாட்டு எழுதுதல். குடும்பவிளக்கு II வெளியிடல், செட்டி நாடு முழுதும் இலக்கியச் சொற்பொழிவு நடத்திப் பகுத்தறிவு இயக்கத்தைக் காலூன்றச் செய்தல். கலைவாணர் என்.எஸ்.கே. வுக்காக 'எதிர்பாராத முத்தம்'—நாடகமாகத் தீட்டித் தருதல், 'கற்கண்டு' 'பொறுமை கடலினும் பெரிது' இணைத்து என்னல் நூல் வெளியிடல்.

1945—தமிழியக்கம் (ஒரே இரவில் எழுதியது). 'எது இசை' நூல்கள் வெளியிடல்.

1946—'முல்லை' இதழ் தொடங்கப்பட்டது. அமைதி—ஊமை நாடகம் வெளியிடல். (29-7-46) பாவேந்தர் 'புரட்சிக்கவி' என்று போற்றப்பட்டு ரூ. 25000 கொண்ட பொற்கிழியை, நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பொன்னாடை அணிவித்து, அறிஞர் அண்ணா வழங்கினார். தமிழகப் பேரறிஞர்கள் அனைவரும் வாழ்த்திப் பேசினர். 8-11-46-ல் முப்பத்தேழாண்டு தமிழாசிரியர் பணிக்குப்பின் பள்ளியிலிருந்து ஓய்வு பெறுதல்.

1947—ஒரு ரூபாய் விலையில் எழில் ஏடான குயில் 1, 2 மாத வெளியீடு. 'சௌமியன்' நாடக நூல், பாரதிதாசன் ஆத்திசூடி வெளியிடுதல், சென்னையில் 'குயில்' இதழ்: 'ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி' திரைப்படக் கதை, உரையாடல், பாட்டு எழுதல். இசையமுது வெளியிடல், புதுவையிலிருந்து 'குயில்' வெளியிடுதல்.

1948—காதலா கடமையா? காவியம்; முல்லைக்காடு, இந்தி எதிர்ப்புப் பாடல்கள், படித்த பெண்கள் (உரை நாடகம்) கடல் மேற்குமிழிகள் காவியம்; குடும்ப விளக்கு III; திராவிடர் திருப்பாடல், அகத்தியன் விட்ட கரடி நூல் வெளியிடல். 'குயில்' மாத ஏட்டிற்குத் தடை; நாளேடாக்கல். 'கருஞ்சிறுத்தை' உருவாதல்.

1949—பாரதிதாசன் கவிதைகள் 2 ஆம் தொகுதி; சேர தாண்டவம் (முத்தமிழ் நாடகம்); தமிழச்சியின் கத்தி காவியம், ஏற்றப்பாட்டு, வெளியிடல்.

1950—குடும்ப விளக்கு IV; குடும்ப விளக்கு V வெளியிடல்.

1951—அமிழ்து எது?, கழைக் கூத்தியின் காதல்—வெளியிடல்.

1952—'வளையாபதி' திரைப்படம் கதை, உரையாடல், பாட்டு. இசையமுது இரண்டாம் தொகுதி வெளியிடல்.

1954—பொங்கல் வாழ்த்துக் குவியல்; கவிஞர் பேசுகிறார் சொற்பொழிவு நூல் வெளிவரல், குளித்தலையில் ஆட்சி மொழிக் குழுவிற்குத் தலைமை ஏற்றல்.

1955—புதுவைச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றியுற்று அவைத் தலைமை ஏற்றல். பாரதிதாசன் கதைகள், பாரதிதாசன் கவிதைகள்—மூன்றாம் தொகுதி வெளியிடல்.

1956—தேனருவி-இசைப் பாடல் தொகுதி வெளியிடல்.

1958—தாயின்மேல் ஆணை; இளைஞர் இலக்கியம் வெளியிடல். தமிழகப் புலவர் குழுவின் சிறப்புறுப்பினராதல். 'குயில்' கிழமை ஏடாக வெளிவருதல்.

1959—பாரதிதாசன் நாடகங்கள்; குறிஞ்சித் திட்டு காவியம் வெளியிடல் பிசிராந்தையார் முத்தமிழ் நாடகம் தொடர்தல்; 1-11-59 முதல் திருக்குறளுக்கு வள்ளுவர் உள்ளம் என்ற உரை விளக்கம் எழுதுதல்.

1961—சென்னையில் குடி அமர்தல்; பாண்டியன் பரிசு—திரைப்படம் எடுக்கத் திட்டமிடல். செக் நாட்டு அறிஞர் பேரா. கமில் சுவலபில், செக் மொழியில் பெயர்த்த பாவேந்தரின் பாடல்களைக் கொண்ட நூலைப் பெறுதல்.

எல்லாவற்றுக்கும் வெண்பா யாப்பில் தவறாமல் வாழ்த்துப்பா எழுதியனுப்புவார். காட்சிக்கு எளியராய் இன்னார் இனியார், ஏழை செல்வர் என்று கருதாமல் எல்லோரிடமும் கலந்துரையாடி இனிது பழகுவார். உதவி என்று வருகிறவர்கள் யாராயினும் இயன்ற உதவிகளை இன் முகத்தோடு செய்வார். இயலாதாயின் தம் நிலையை இனிது விளக்கி ஆறுதல் சொல்லி அனுப்பிவைப்பார். பரிவுரை (சிபாரிசு) நாடி வருபவர்கள் யாராயிருப்பினும், எவருக்காயினும் மறுக்காமல் தயங்காமல் தம்கைப்படக் கடிதம் எழுதிக் கொடுத்து நலம் செய்வார். அவரால் வேலை பெற்றோர், கல்விக் கூடங்களில் இடம் பெற்றோர் எண்ணிறந்தோராவர். "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்றபடி தம் உற்றார் உறவினர் நண்பர்கள் பலருக்கும் பேராதரவு செய்து வருவது அவருடைய இயல்பாகும். நாடோறும் பல்வேறு இடங்களுக்குச் செல்லும் நிலையில் இருந்தும், ஆங்காங்கு உள்ளவர்கள் "வாரியார் தமக்கே உரியவர்! தம்மிடமே மிக்க அன்புரிமை பாராட்டுபவர்", என்று கருதி மகிழும்படி கலந்து பழகுவார். எல்லோரையும் அவரவரிடமுள்ள நலங்களைச் சொல்லிக் கஞ்சத்தனமோ வஞ்சமோ இன்றித் தனித்தும் கூட்டத்திலும்

"பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமை நோற்பதொன் றுண்டு— பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்"

என்னும் முதுமொழிக்கேற்ப வாயார மனமாரப் புகழ்ந்து போற்றி மகிழ்வார். கற்றவர்கள் சொற்பொழிவாற்றுபவர்களை ஊக்கப்படுத்திப் பாராட்டி வாய்ப்புகள் பெற்று முன்னேற உதவுவார். செல்வந்தர்கள் எப்படிப்பட்டவராயினும் மனமுவந்து முன் வந்து நற்பணிகளுக்கு உதவுமாறு, புகழ்ந்து பேசியும், கருத்துக்களை விளக்கியும், பணிகளினால் கிடைக்கும் பயன், புகழ், புண்ணியங்களை எடுத்துக்கூறியும், இயக்கி விடுவார். இவ்வகையில் அவர் திறமை ஒப்பற்றதாகும். அதனாலேயே நாடெங்கும் நூற்றுக்கணக்கான கோயிற்றிருப்பணிகளும் கல்விப் பணிகளும் அவர் தலைமையிலும், ஆதரவிலும், முன்னிலையிலும் எப்போதுமே நடைபெற்று நிறைவேறி வருகின்றன.

செங்குந்தர்:

இவ்வளவு சிறப்புகளும், இன்னும் எவ்வளவோ தகுதிகளும் உடைய இவர், நம் செங்குந்தர் குலத்தைச் சேர்ந்தவர் என்பது பலருக்குத் தெரியாது. தம் பெருமை தாமறியாத் தக்கவராகிய இவரும் தம் குலம் முதலிய பெருமைகளைச் சொல்லிக் கொள்வதில்லை! 'ஒன்றே குலம் ஒருவனே தேவனும்'' ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் நம்பழந் தமிழ் முன்னோர் நெறியிலேயே இருந்து வருபவர், எனினும் தத்தம் மரபைச் சேர்ந்த தக்கவர்களை அவ்வம்மரபினர்கள் போற்றிப் பாராட்டி மகிழ்வது கடமையும் இயல்புமாகும்.

அவ்வகையில் அமைந்ததே இச் சிறிய கட்டுரை.

ஞானியாரடிகள்:

இவ்வகையில், கடந்த நூற்றாண்டின் இறுதியிலும் இந் நூற்றாண்டின் முற்பகுதியிலும் "சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க நாடெங்கும் ஞானசம்பந்தரைப் போலச் சிவிகையூர்ந்து சென்று அரும்பெருந் தொண்டுகளை ஆற்றிய திருக்கோவலூராதீனம், திருப்பாதிரிப் புலியூர் ஞானியாரடிகளும், நம் செங்குந்த மரபைச் சேர்ந்தவர் என்பதைப் பலர் அறியமாட்டார்கள். அவர்களைப் பற்றிய ஒரு கட்டுரையும் இம்மலரில் இடம் பெற்றிருக்கிறது.

செங்குந்தர் சிறப்பும்,

நற்குடிப்பிறப்பும்:

மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரிய நம் வாரியார் சுவாமிகள், "தொண்டவள நாடு சான்றோருடைத்து" என்னும் ஆன்றோர் மொழியை மெய்ப்பிக்கும் வகையில் நம் காலத்தில் வடாற்காடு மாவட்டம் இராயவேலூரை அடுத்துள்ள சாங்கேய நல்லூரில், முருகப் பெருமானுடைய உடன் தோன்றல்களாகக் கந்தபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "வீரவாகு தேவர் முதலிய ஒன்பது வீரர்கள் மரபில் தோன்றிக்" கைக்கோளர் என்னும் கொள்கை மறவர்களாகச் சிறந்து, மக்கள் மானம் காக்கும் நுட்பமான நெசவுத் தொழிலையும், உயிர்காக்கும் உணவு நல்கும் வேளாண் தொழிலையும் உடையவர்களாக வளர்ந்து சோழப் பேரரசர்களின் மெய்க்காவலர்களாக விளங்கிச் செங்குந்தர் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற

நன் மரபில், வழிவழியாகக் கல்வியும், இசைக் கலையும் வல்லவர்களாய்ச் சமய விளக்கச் சொற்பொழிவாற்றிப் புகழ் பெற்ற நற்குடியில், சிவத்திரு மல்லையதாஸ் பாகவதருக்கும் திருமதி கனகவல்லி அம்மைக்கும் அருந்தவப் புதல்வராக 1906 ஆகஸ்டு மாதம், பராபவ, ஆவணி 9ஆம் நாள் பிறந்தார். இவருடன் பிறந்தவர்களில் மூத்தவர் அமரர் மதுசூதன சிவம்; இளையவர்கள் திருமாமணாள சிவம், திருப்புகழ்மணி முதலியோர். இவர்களும் இன்னிசை விரிவுரை நிகழ்த்தும் ஆற்றல் பெற்றவர்களே.

வாரியாருக்குரிய பட்டங்கள்:

வாரியார் சுவாமிகளுக்கு அவ்வப்போது தக்கோர் பலர் பற்பல பட்டங்களை வழங்கி மகிழ்ந்துள்ளனர். அவற்றுள் சில வருமாறு:

மதுரை ஆதீனம் சூட்டிய பட்டம் ''அருள் மொழி அரசு''

தருமை ஆதீனம் — ''அமுதமொழிக் கொண்டல்''

காஞ்சி காமகோடி பீடம்—''சரஸ்வதி கடாக்ஷாமிர்தம்''

அகோபிலமடம் ஜீயர்—''ஷட்பதாநந்தர்''

ரிஷிகேசம் சிவானந்தர்—''ப்ரவசன சாம்ராட்''

,, — ''திருப்புகழ் ஜோதி''

தமிழக அரசு—''கலைமாமணி''

தமிழிசைச்சங்கத்தார்—''இசைப்பேரறிஞர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார்— ''டாக்டர்''

மற்றும் முத்தமிழ்வள்ளல், ஞானக்கதிரவன், அமுதப்பெருங்கடல், பிரசங்க சக்ரவர்த்தி, சொற்பொழிவுக்கடல், முத்தமிழ் ரத்னாகரம், சொல்மாரிவாரி, திருப்பணிச்சரபம், திருப்பணிச் சக்கரவர்த்தி, தருமமூர்த்தி எனப் பல பட்டங்கள் வழங்கப்பட்டன. இந்தியத் தலைநகராகிய டெல்லியிலுள்ள ''சங்கீத அகாடமி''யும் ''Fellowship'' எனும் தேசிய விருதினைக் கொடுத்துள்ளது.

மக்களால் அவர் 64-வது நாயனார் என்று போற்றப்படுகிறார், அவருடைய 80 ஆம் ஆண்டு நிறைவு முத்து விழா மதுரையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காங்கேயநல்லூரில் அவருடைய வெண்கலச் சிலையும் நிறுவப்பட்டது.

வாழ்க வாரியார்!

வாரியார் புகழ் விரிப்பிற்பெருகும், தொகுப்பின் எஞ்சும் ஆதலினாலும், இது அவர்களுடைய வரலாற்றைக் கூறுவதல்ல, பொதுவாக அவர்களின் பொற்புகளைக் குறிப்பிட்டுப் போற்றும் சிறு கட்டுரையே ஆதலினாலும் இத்துடன் நிறைவு செய்கின்றேன்.

வாரியார் நம் மரபினர் என்பதும், அவர் காலத்தில் நாம் வாழ்கிறோம் என்பதும் மிகவும் மகிழ்ச்சிக்குரிய, நினைந்து நினைந்து பெருமிதம் கொள்ளத்தக்க செய்தியாகும்.

வாழ்க வாரியார் சுவாமிகள்!

விளங்குக அவர் தொண்டுகள்!

வளர்க செங்குந்தர் புகழ்!

வெல்க செங்குந்த மகாஜன சபையின் நன்முயற்சிகள்!

பஞ்ச பூத ஸ்தலங்கள்

1.	காஞ்சிபுரம்	பிருதிவி ஸ்தலம்	மண்
2.	திருவண்ணாமலை	அக்னி ஸ்தலம்	நெருப்பு
3.	திருவானைக்கா	அப்பு ஸ்தலம்	நீர்
4.	காளஹஸ்தி	வாயு ஸ்தலம்	காற்று
5.	சிதம்பரம்	ஆகாசத்தலம்	வெளி

ஆறு படை வீடு

1.	திருத்தணி	4.	திருப்பரங்குன்றம்
2.	பழனி	5.	திருச்செந்தூர்
3.	பழமுதிர்சோலை	6.	சுவாமிமலை

ESTD. 1972

போன் : 512958

புளூ மவுண்டன் சிட்ஸ் & பைனான்ஸ் (பி) லிமிடெட்

200, தம்பு செட்டி தெரு, சென்னை-600 001

கீழ்க்கண்ட புதிய மாதாந்திர சீட்டுகளை மத்திய சிட் பண்டு சட்டம் 1982ஐ அனுசரித்து நடத்தி வருகிறோம்.

சீட்டின் மதிப்பு ரூ.	மாதச்சந்தா ரூ.	மொத்த மாதங்கள்
2,000	80	25
5,000	200	25
10,000	400	25
25,000	625	40
50,000	1250	40
50,000	2000	25
1,00,000	2000	50

எங்கள் சிறப்பு திட்டம்

சீட்டில் சேர்பவர்க்கு சீட்டின் மதிப்பில் அரை சதவீதத்திற்கு சமமான மதிப்புள்ள பரிசுப் பொருள்களை வழங்கி வருகிறோம்.

சந்தாதாரர்களின் தேவைக்கு ஏற்ப சீட்டு குருப்புகள் அவ்வப்பொழுது துவங்கப்படும்.

K.R. ARVAMUHTAON
Executive Director

S. சபாபதி முதலியார்
Director-In-Charge

M.S. ரெங்கையா B.A.,
தலைவர்

நல்வாழ்த்துக்கள்

என். ரத்தினவேல் முதலியார்

நூல், லுங்கி வியாபாரம்

நெ. 21, சுப்ரமணிய முதலித் தெரு,
திருக்காரணி, சைதாப்பேட்டை, சென்னை 600 015.

எங்களிடம் உயர்தரமான முறையில் சலவை, கலர் நூல்கள் 80, 60, 40 நூல் வகையறாக்களும், லுங்கிகளும் குறைந்த விலையில் சில்லரையாகவும் மொத்தமாகவும் கிடைக்கும்.



திருமதி ஜானகி சாமிநாதன

நல்வாழ்த்துக்கள்

திருமதி ஜானகி சாமிநாதன்

சென்னை வானொலி, தொலைக்காட்சி நிலையத்தின ரால் அங்கீகரிக்கப்பட்ட கலைஞர். தமிழ் நாடு பூராவிலும் பல கோயில்களில், திருமண வைபவங்களில் இன்னிசை நிகழ்ச்சிகள் நடத்தியிருத்தல். சென்னை தமிழ் இசைச் சங்கம் நடத்திய தேவாரப் போட்டியில் தமிழ் நாட்டில் முதல் முறையாக, முதல் பெண்ணாகத் தேர்ந்தெடுக்கப் பெற்று ரூ. 1000/- பரிசு பெற்றிருத் தல். தமிழ் இசை, கர்நாடக இசை, தேவாரப் பண்ணிசை மட்டும் தனித்தனியே முழு நேர நிகழ்ச்சி யாக நடத்த முடியும். தேவைக்குத் தொடர்பு கொள்க :- இசைச் செல்வி திருமதி ஜானகி சாமி நாதன், 6, இரண்டாம் குறுக்குத் தெரு, ஜெத் நகர், சென்னை - 600 028. தொலைபேசி : 71866

With the best compliments from:

Dr. T. K. DEVARAJAN, M.B. B.S.,

Clinic : 13, High Road, Thirumazhisai, Madras 600 107.

Consulting Hours : All days : Morning 9-00 A.M. to 12 Noon.
Evening 6-00 P.M. to 9 P.M.

Residence : 30, Easwaran Koil Street, Thirumazhisai-602 107.

With the best compliments from


Sri Vinayaga Medicals

ஸ்ரீ விநாயகா மெடிகல்ஸ்

63/C, ஜட்ஜ் செல்லப்ப நாயக்கர் தெரு, பூவிருந்தவல்லி, சென்னை-56.

Prop : K. MANOKARAN

Residence : 24, Easwaran Koil Street, Thirumazhisai-602 107



திரு. T. S. சுப்ரமணிய செங்குந்தர்



திருமதி லட்சுமி அம்மாள்

திரு. T. S சுப்ரமணிய செங்குந்தர், நிர்வாகஸ்தர், வேலவர் பளையகாட் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட், தலைவர், தமிழ் நாடு கைத்தறி வியாபாரிகள் சங்கம்

தலைவர், மயிலை நற்பணி மன்றம்

கமிட்டி மெம்பர் : சென்னை செங்கை மாவட்ட செங்குந்தர் மகா ஜன சங்கம்

பொருளாளர் : தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

மெம்பர் : சமுதாய பொருளாதார மன்றம்

32, டி.எஸ்.வி. கோயில் தெரு, மயிலாப்பூர்.

டெலிபோன் நெ: 76887

With the best compliments from

RATHNAM BLUE METALS

Blue Metal Suppliers

No. 1, Tank Square Street,

Saidapet, Madras-15. Phone : 446375

With the best compliments from

KARPAGAM TIMBER DEPOT

Timber, Plywood & Masinet Merchants,

No. 30, Ramakrishna Mutt Road, (Brodies Road)

Mylapore, Madras-4.

Proprietor : K. T. MUNUSWAMY

Residence : 12, St. Mary's Road, Raja Annamalai Puram, Madras-600 028.



திரு. T. K. அண்ணமலை செங்குந்தர்

நல்வாழ்த்துக்கள்

டி.கே. அண்ணமலை செங்குந்தர்,

தலைவர், நகர ஜனதா கட்சி,

35, தெற்கு மாட வீதி

திருமழிசை-602 107

நல்வாழ்த்துக்கள்

வே. மணி வேதாசலம் செங்குந்தர்,

அறங்காவலர், ஸ்ரீ ஒத்தாண்டேஸ்வரர் திருக்கோயில்,

26, கெங்கை கொண்டான் மண்டப வீதி,

திருமழிசை 602 107.

யும் ஏற்பட்டது. நான் கல்லூரியிலேயே முதலாவதாக வந்ததால் ஃபி.ஏ. வகுப்பில் மேற்கொண்டு மூன்று ஸ்காலர்ஷிப்புக்கு (I) Government scholarship at Rs. 15 p.m. for 24 months when sovereign was sold at Rs. 13-50 (II) Henry Strokes scholarship and (III) John Bruce Nortan Scholarship) தகுதி உடையவனானேன். அந்த சமயம் பச்சையப்பாஸ் ட்ரஸ்ட் போர்ட் சேர்மனாய் இருந்த கோபதி நாராயணசாமி செட்டி எனக்கு மேற்கண்ட மூன்று ஸ்காலர்ஷிப்களில் ஏதாவது ஒன்றைக் கொடுத்து விட்டு காலேஜ் ஸ்காலர்ஷிப்பை நிறுத்திவிடலாமென்று சொன்னாராம். ஆனால் பி.வி.என். அவரிடம் சண்டை போட்டு காலேஜ் ஸ்காலர்ஷிப்புடன் கவர்மெண்ட் ஸ்காலர்ஷிப்பையும் வாங்கிக் கொடுத்தார்.—In effect I was earning while studying. நான் அடுத்த சனிக்கிழமை அவரைப் பார்க்கச் சென்றபோது, தனக்கும் ஜி.என். செட்டிக்கும் நடந்த சண்டையைப் பற்றி சொன்னதல்லாமல் என்னை புஸ்தகங்கள் வாங்க பணம் வேண்டுமென்று பச்சையப்பாஸ் ட்ரஸ்ட் போர்டுக்கு ஒரு அப்ளிகேஷன் கொடுக்கச் சொன்னார். அந்த சமயம் என் மனதுக்குத் தோன்றிய பெரிய தொகை ரூ. 50/ கேட்டு எழுதிக் கொடுத்தேன். அடுத்த மீட்டிங்கில் அந்தத் தொகைக்கு சாங்ஷன் வாங்கிக் கொடுத்தார்.

நான் ஃபி.ஏ. வகுப்பிலும் முதலிலேயே இருந்தேன். 1931ல் ஃபி.ஏ. யூனிவர்சிடி பரீட்சையில் (among Pachaiyappa's students) முதலில் வந்து Macdonald Gold Medal (3½ sovereigns in weight) P.V.N. கையாலேயே (அந்த சமயம் அவர் பச்சையப்பாஸ் ட்ரஸ்ட் போர்டு பிரஸிடெண்ட்) வாங்கினேன். என்னைவிட அவர் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைந்தார்.

மறுபடி மேற்கொண்டு ஃபி.ஈ., படிக்க விரும்பினேன். திரு. பி.வி.என். அப்ளிகேஷன் போடச் சொன்னார். அந்த காலத்தில் மதறாஸ் பிரஸிடென்சியில் (Orissa to Tinnevelly and Mangalore to Madras) ஒரே ஒரு என்ஜினியரிங் காலேஜ் கிண்டியில்தான் இருந்தது. அதற்கு உண்டான இடம் 60. அதில் சிலோன், மலேஷியா, கூர்க் போன்ற வெளியூர்களுக்கு சுமார் 10 இடங்கள் ஒதுக்கீடு உண்டு. அந்த வருஷம் (1931 மே) வந்த அப்ளிகேஷன் 563. இதில் 1. District-war representation and 2. communal representation for (a) Muslims, (b) Christians, (c) Anglo Indians, (d) Brahmins, (e) other non-Brahmins and (f) Backward classes etc. பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்.

அந்த சமயத்தில் திரு. பி.வி. என். ஜஸ்டிஸ் பார்ட்டியில் ஒரு பிரதான உருப்பினராகவும், கார்பொரேஷன் கவுன்சிலராகவும் இருந்தார். என்ஜினீயரிங் காலேஜ் செலக்ஷன் கமிட்டியில் ஒரு மெம்பராக இருந்த சைதாப்பேட்டை முனிசிபல் சேர்மென் அப்துல் ரசாக் என்பவரிடம் சொல்லி எனக்கு ஒரு இடத்தை ஏற்பாடு செய்தார். அந்த சமயத்தில் பி.வி.என். நெருங்கிய உறவினரின் மருமகன் ஒருவருக்கும் இடம் வேண்டியிருந்தது. திரு. அப்துல் ரசாக் ஒரே ஜாதியில் இருவருக்கு இடம் கொடுக்க முடியாது. உங்களுக்கு மிகவும் பிடித்த ஒருவரின் பெயரை மாத்திரம் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டார். ஆனால் விடாமல் பி.வி.என். அவரிடம் வாதித்து இருவருக்குமே என்ஜினீயரிங் காலேஜில் இடம் பிடித்துக் கொடுத்தார். (அந்த மற்றவர் குடியாத்தம் திரு. வி.சி. நடேசன், ஃபி.ஏ.பி.ஈ) நான் என்ஜினியரிங் காலேஜில் நன்றாகப் படித்து, ஹானர்ஸ்சில் பாஸ் செய்து பரிசுகள் பெற்றதையும் கண்டு மகிழ்ந்தார்.

ராயபுரம் மணிகார் செளல்ட்ரியில் ட்ரஸ்டியாகவும் இருந்தார். ஜஸ்டிஸ் பார்டி எலெக்ஷன், கார்பொரேஷன் கவுன்ஸில் எலெக்ஷன் வந்தால் அவர் வீடு ஒரு கல்யாண சத்திரம் போலிருக்கும். பார்ட்டிக்காக வேலை செய்பவர்கள் எல்லோருக்கும் சாப்பாடு நடக்கும். அந்த நாட்களிலெல்லாம் பார்டி ஃபண்ட்ஸ் என்று ஒன்று கிடையாது. அந்த தொகுதியிலுள்ளவர்களே செலவுகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும். அதனால் அவர் சொத்துக்களை எல்லாம் விற்க வேண்டிய நிலையும் வந்ததுண்டு. அவர் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் முதல் தலைவராக 29.4.1927 முதல் 20.1.1929 வரை இருந்து பெரும்பணி ஆற்றியிருக்கிறார். அவர் 1938ல் காலமானார். அவர் நினைவு என்றும் என் மனதை விட்டு அகன்றதில்லை.

அரக்கு உருகினால் தங்கம் உருகும். தங்கம் உருகினால் மணி அதில் பதிந்துவிடும். அதுபோல உள்ளம் உருகி உயிர் உருகி சிவத்துடன் ஒன்றுபட வேண்டும்.

—**வாரியார்**

2. நானறிந்த திரு. பி. வி. நடராஜ முதலியார், B.A.,B.L.

N. முத்துக்குமாரசுவாமி, B.A., B.E., CE (Hons) F.I.E. (Ind)

(Retd) S.E. (Civil) T.N.E.B.



திரு. பி. வி. நடராஜ முதலியார்

நான் கடலூரில் (தென் ஆற்காடு மாவட்டம்) முனிசிபல் ஹைஸ்கூலில் படித்து 1927ல் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் தேறிய பின் மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்தேன். அப்போது கடலூரில் கல்லூரி ஒன்றும் கிடையாது. அந்த சமயத்தில் (ஜூன் 1927) சொந்தக்காரர் ஒருவர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். அவர் ஒரு தேவஸ்தான விவகாரங்கள் விஷயமாய் கடலூரில் கேம்ப் செய்திருந்த இந்து அறநிலைய ஆணையாளர் திரு. பி.வி. நடராஜ முதலியாரைக் காண வந்திருந்தார். என் மேல் படிப்பு விஷயமாய் அவரைக் கலந்த போது என்னையும் என் தகப்பனார் திரு. கே. நடராஜ முதலியாரையும் அழைத்துக் கொண்டு போய் திரு. பி.வி.என். இடம் அறிமுகம் செய்து வைத்தார். திரு. பி.வி.என். என்னிடம் பரிவு கொண்டு தான் சென்னை திரும்பியதும் என்னை தங்கள் வீட்டில் கொண்டு வந்து விடும்படியும் மேற்கொண்டு நடக்க வேண்டியவைகளைத் தான் கவனித்துக் கொள்வதாயும் என் தகப்பனாரிடம் சொன்னார். அதன்படியே என்னை அவர் வீட்டில் விட்டு விட்டு என் தகப்பனார் கடலூர் திரும்பி விட்டார்.

அப்பொழுது பச்சையப்பன் கல்லூரியில் பிரின்ஸிபாலாக இருந்தவர் ப்ரொஃபெஸர் எம். ரத்னசாமி, மிகவும் கண்டிப்பானவர். காலேஜ் அட்மிஷன் எல்லாம் அநேகமாய் முடிந்து விட்ட சமயம். திரு. பி. வி. நடராஜ முதலியாரின் (பச்சையப்பன் ட்ரஸ்டி போர்ட் மெம்பர்) உத்தரவின் பேரில் இன்டர்மீடியட் கோர்ஸில் முதல் குருப்பில் ஒரு இடம் ஒதுக்கிக் கொடுத்தார். அடுத்த ட்ரஸ்ட் போர்ட் மீட்டிங்கில் எனக்கு (1) பிற்பட்ட வகுப்பு ஸ்காலர்ஷிப் (50% of fees) and (2) Pachaiyappa's Trust ஸ்காலர்ஷிப் (50% of fees)) வாங்கித் தந்தார். மொத்தத்தில் ஸ்பெஷல் ஃபீஸ் தவிர காலேஜ் ஃபீஸ் கிடையாது. மேற்கொண்டு ஃப்ரீ போர்டிங் & லாட்ஜிங் நடத்தும் மணலி சின்னைய முதலியார் சாரிடீஸ் ஹாஸ்டலில் ஒரு இடம் வாங்கிக் கொடுத்தார். அது கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் நான் படித்த பழைய பச்சையப்பன் காலேஜ் சமீபத்தில் உள்ளது. என் மாதிரியே பல பேர் அவரால் பலனடைந்திருக்கிறார்கள். செங்குந்தர் என்று சொன்னாலே போதும். உடனே முன்னின்று உதவி செய்தார். செங்குந்தரல்லாதவர்களுக்கும் உதவி செய்திருக்கிறார்.

அவர் உத்தரவுப் பிரகாரம் ஒவ்வொரு சனி ஞாயிறுகளிலும் அவர் வீட்டிற்குப் போய் என் படிப்பு முன்னேற்றத்தைப் பற்றி சொல்லிவிட்டு வருவதுண்டு. அவர் என்னை அவர் பிள்ளைகளில் ஒருவராகவே பாவித்தார்.

நான் இண்டர்மீடியேட் பரீட்சையில் (1929) முதல் வகுப்பில் கல்லூரியில் முதல்வனாக வெற்றி பெற்றதில் பி.வி. என்.னுக்கு மிக்க மகிழ்ச்சியும் பெருமை

III. புரவலர்கள்

1. சிதம்பரம் காலைசந்திக்கட்டளை தில்லை நாயக முதலியார்

தொகுப்பு: அம்பை இரா. சங்கரன்

சிதம்பரம் என வழங்கும் தில்லை நகரை அறியாத தமிழர் ஒருவரும் இரார். சைவர்களுக்கு முதன்மையான தலம் தில்லையேயாகும். அங்கு ஐந்தொழிற் கூத்தாடியருளும் நடராசப் பெருமானுக்கு அன்றாடம் நடக்கும் ஆறுகால பூசைகளில் முதன்மையாகக் கருதப்படும் காலை சந்திப்பூசை தென்னாட்டிலுள்ள செங்குந்தப் பெருமக்களால் சிதம்பரம் வெல்லப் பிறந்தான் முதலியார் குடும்பத்தவர் மூலமாகத் தொன்று தொட்டுச் செய்யப்பட்டு வருகிறது. பல நூற்றாண்டுகட்கு முன்னரே இக்காலை சந்திப் பூசையைச் செங்குந்தர்கள் ஏற்றுக் கொண்டு ஆண்டு தோறும் தலைக்கட்டுக்கு இவ்வளவு பொருள் தர வேண்டுமென்று கட்டுப்பாடான ஏற்பாடுகள் செய்து அக்காலத்தில் தில்லையில் செங்குந்த மரபில் தக்கோராய் விளங்கிய வெல்லப் பிறந்தான் முதலியாரும் அவர் வழிவருவோரும் மேற்படி ஏற்பாட்டின் படி பொருள் தண்டி இப்பூசையை நடத்தி வரவேண்டும் எனத் திட்டம் வகுத்து வைத்தார்கள். இப்பொறுப்புள்ள பெருஞ் சிவத் தொண்டை ஏற்றுக் கொண்ட பெரியார் குடும்பத்தில் அறுபது ஆண்டுகளுக்கு முன் தில்லைநாயக முதலியார் என்னும் பெரியார் ஒருவர் தோன்றினார். இவர் இப்போது மேற்படி காலை சந்திக் கட்டளையை நடத்தி வரும் சிதம்பரநாத முதலியாரது பெரிய தந்தையாராவார்.

சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகளின் மாணவராய இவர் தமிழ்த்தாய்க்கும் சைவத்திற்கும் இளமையிலிருந்தே தொண்டாற்றி வந்தார். பல சைவ சித்தாந்தக் கூட்டங்களிலும் அரிய சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். இவர் தமிழறிஞர் பலராலும் பாராட்டப்பெற்றவர்.

சிதம்பரத்தில் செந்தமிழ்ச் சங்கம் என்னும் ஒரு தமிழ்க் கழகம் நிறுவி அதன் துணைத் தலைவராகவிருந்து, பல மாணவர்கட்குப் பாடஞ் சொல்லி வந்ததோடு சென்னை அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட தமிழகராதிக் குழுவின் கௌரவ உறுப்பினராகவும் இருந்து வந்தார். மேலும் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் பண்டித வகுப்பில் நாடோறும் ஒன்றிரண்டு மணி நேரம் ஊதியமின்றிப் பாடஞ் சொல்லி வந்தார்.

தில்லைநாயக முதலியார் சிதம்பரம் குமரவேள் மும்மணிக் கோவை யென்னும் அரிய சித்தாந்தக் கருத்துக்களடங்கிய நூலொன்று இயற்றியுள்ளார். இந்நூல் திருவாங்கூர் பொன்னம்பலம்பிள்ளை, தில்லைத் தீட்சிதர்கள், மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் ஆகிய பெரியோர்களாற் பாராட்டப் பெற்றிருக்கிறது.

திருநாரையூர் முத்துக் குமரபிள்ளை, வேலூர் ஊரீஸ் கல்லூரித் தமிழாசிரியர் சி.எஸ். இராஜாப்பிள்ளை, காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலை பள்ளி தமிழாசிரியர் ஏகாம்பர ஐயர் என்னும் வீரசைவர் நாவலர் கலாசாலை யாசிரியர்களான வேங்கடாசலம்பிள்ளை, கிருட்டினமூர்த்தி ஐயர் முதலிய பலர் நமது முதலியாருடைய மாணாக்கர்களாவர். தமது குடும்பத்து முன்னோர்களைப் போலவே தில்லை நாயக முதலியாரும் புலவர்களையும் அடியார்களையும் அன்போடு போற்றியும் ஆதரித்தும் வந்தார்.

காஞ்சி நாகலிங்க முனிவர் முத்து விழா மலரிலிருந்து எடுக்கப் பெற்றது.

WITH THE BEST COMPLIMENTS FROM:

M. KAVIARASU, M.Tech.

RATHI ESTATES

Phone: 441912

12, MADLEY ROAD, T.NAGAR,
MADRAS-600 017.

WITH THE BEST COMPLIMENTS FROM:

G. SIVALINGAM

SHRI GANESHJI ENGLISH TYPEWRITING INSTITUTE

No. 26/1, T. S. V. KOIL ST., MYLAPORE, MADRAS-4.

"Every duty is holy, and devotion to duty is the highest form of the worship of God."

—Swami Vivekananda

அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே.

—தாயுமானவர்

WITH THE BEST COMPLIMENTS FROM:

SRI KANNAN TEXTILES

Stockist: All kinds of Shirtings, Suitings, Sarees, Dhoties Mill & Handloom varieties, 2×1, 2×2 polyester blouse pieces etc.

Phone 76791,

K. RAVISANKAR & N.K. RAMESH

ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ்

(சித்ரகுளம் எதிரில்)

நெ. 1, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்,
சென்னை-600 004

உளங்கனிந்த நல் வாழ்த்துக்கள்

டி. என். கண்ணன் நியூஸ் மார்ட்

27, கிழக்கு மாட வீதி,
மயிலாப்பூர்,
சென்னை-4

3. புதுவை ஆ. வே. முத்தைய முதலியார்

N. முத்துக்குமாரசுவாமி, B.A., B.E. CE (Hons) F.I.E. (Ind)

&

Dr. **கவிஞர் மன்னர் மன்னன்**



புதுவை ஆ. வே. முத்தைய முதலியார்

முப்பதாண்டுக்கும் மேலாகப் புதுச்சேரி அரசின் பல்வேறு முக்கிய பதவிகளில் பணிபுரிந்து, முதல் தமிழனாக அரசின் தலைமைச் செயலராக அமர்ந்து புகழ் பெற்றவர் ஆ.வே. முத்தைய முதலியார் அவர்கள்.

ஆலப்பாக்கத்திலும் புதுவையிலும் பல்வேறு அறப்பணிகள் நிறுவிய ஆனந்த முதலியாரின் பேரனாக - வேலாயுத முதலியார் மகனாக 7.10.1879-ல் தோன்றிய முத்தையனார், சட்டக் கல்வி பயின்றவர். பிரஞ்சு, தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிச் செம்மல்.

அன்னிபெசண்ட் அம்மையாரின்தியோசாபிகல் சொசைட்டியின் தென்னகப் பிரிவுச் செயலராகப் பொறுப்பேற்றார் என்றால் முத்தையனாருக்கு இருந்த ஆன்மிகத் தொண்டு வேட்கை எத்துணை என்பதை அறிந்து கொள்ள முடிகிறது அல்லவா?

அரவிந்தரின் அணுக்கத் தொண்டராகவும் அவர் விளங்கினார். ரமணரிஷியுடனும், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகளாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். தாம் எடுத்துச் சொல்லும் கருத்துக்களைத் தம் வாழ்க்கை நெறியாய்ச் செயல்படுத்திக் காட்டிய திண்மையாளர் முத்தையனார். உயிர்க் கொலை விரும்பாமல் காலணியாகத் தோலணிகள் அணியாமல் மரத்தாலான மிதியடிகளையே அணிந்தார். தமிழ்ப் பற்றுமிக்கவர். பாவேந்தர் பாரதிதாசனாரின் சமுதாயத் தொண்டிற்கு உறுதுணையாக விளங்கிய முத்தையனார், பாவேந்தரின் அரசியல் ஆசான் என்றே கூறலாம்.

செங்குந்தர்குல மக்களின் நலனில் மிகுந்த அக்கரை கொண்டு, 1927-ல் நிறுவப்பட்ட செங்குந்த மகாஜனசங்கத்தின் இரண்டாவது தலைவராகவும் பொறுப்பேற்றார். முதல் தலைவராக அக்காலத்தில் தண்டையார்பேட்டை பி. வி. நடராஜ முதலியார் பொறுப்பேற்றிருந்தார். (அவர் இந்து அறநிலையக்குழுவின் ஆணையர். சென்னை மாநகராட்சி உறுப்பினர்)

முத்தையனாரின் அரசு நிர்வாகத் திறனையும், சமுதாயத் தொண்டினையும் பாராட்டும் எண்ணங்கொண்ட பிரஞ்சு அரசு, அன்னாருக்கு (Chevalier De La Legion D 'Honneur) என்ற மிக உயர்ந்த விருதினை வழங்கிற்று. (இது 'சர்' பட்டம் போன்ற மிகச் சிறந்த தகுதியுள்ளது).

விமான வசதியில்லாத காலத்தில் பிரான்சிற்கும், மற்றும் மேலைநாட்டுக்

5. திருப்பத்தூர் கா. அ. சண்முக முதலியார்
(1884 - 1978)

S. தியாகராஜன், B.E.
(Managing Director, Southern Alloy Foundries (P) Ltd Madras-10)



திருப்பத்தூர் கா அ. சண்முக முதலியார்

மனிதனின் மாபெரும் முதல் கண்டு பிடிப்பு நெருப்பு. பிறகு காலம் செல்லச் செல்லக் கற்களைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டான். உலோகங்களைக் கண்டுபிடித்தான். மிருகங்களைப் பழக்கக் கற்றுக் கொண்டான். உணவிற்காகப் பயிரிடும் அறிவைப் பெற்றான்.

மனிதன் நாகரீக வளர்ச்சி அடைய தன்னை இலைகளாலும் கொடிகளாலும் மரப் பட்டைகளாலும் மறைத்துக் கொண்டான். உணவிற்காகப் பயிரிடும் அறிவைப் பெற்றவன் உடைக்காகவும் செடிகளை வளர்க்கக் கற்றுக் கொண்டான். எனவே பழங்காலம் தொட்டே வேளாண்மைத் தொழிலுக்கு அடுத்தபடியாக நெய்தல் தொழில் விளங்கி வந்திருக்கின்றது.

தொழிற் புரட்சிக்கு வித்திட்டது நீராவி இயந்திரம். பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் அச்சுத் தொழில், வார்ப்படத் தொழில் ஆகியவை தொடங்கப்பட்டன. மேல் நாடுகளில் நூல்நூற்பதற்கும் ஆடைகள் நெய்வதற்கும் இயந்திரங்கள் பயன் படுத்தப்பட்டன.

இந்தியாவில் வங்காளத்தில் 1830 ஆம் ஆண்டு நூல்நூற்பதற்கு ஒரு தொழிற்சாலை தொடங்கப்பட்டது. பம்பாய் நகரத்தில் 1854 ஆம் ஆண்டு சி.கன். தவார்ஸ் மில் தொடங்கப்பட்டது. பிறகு பல மில்கள்—குறிப்பாகப் பம்பாய், குஜராத், வங்காளம் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டன. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் கோயம்புத்தூரில் நூற்பு ஆலைகளைத் தொடங்கினார்கள்.

1924 ஆம் ஆண்டு கோவையில் தொடங்கப்பட்ட ஸ்ரீரங்க விலாஸ் மில்லில் திரு. கா. அ. சண்முக முதலியார் பங்குதாரராகச் சேர்ந்து டைரக்டராகவும் ஆனார். பிறகு பயனீர் மில்லிலும் சேர்ந்து டைரக்டர் பதவி வகித்தார். திருப்பூர் ஸ்ரீராமலிங்க சூடாம்பிகை மில்லில் பொருளீடு செய்து அதைத் தொடக்க ஆவன செய்தார். அந்த மில்லில் பல ஆண்டுக் காலம் டைரக்டராகவும் இருந்தார்.

நூற்பு ஆலைகளின் தொடர்பு இருந்ததின் காரணமாக நூல் வியாபாரத்தை குடியேற்றத்தில் தொடங்கினார். அவ்வூர்ப் பிரமுகர்கள் பலரோடு சேர்ந்து "கலைமகள் பருத்தி அறவை ஆலை (Ginning Factory)யைத் தொடங்குவதற்குப் பாடுபட்டார். அவ்வூர்ப் பகுதியில் ஒரு நூற்பு ஆலையைத் தொடங்கினால் நல்ல இலாபம் வரும் என்று அறிந்த நம் பெரியார் 1937 ஆம் ஆண்டு ஏழு இலட்சம் ரூபாய் முதலில் 'திருமகள் மில்ஸ் லிமிடெட்' என்ற மில்லைத் தொடங்கினார்.

குணப்படுத்த முடியாது. டாக்டர்களால் கைவிடப்பட்ட குழந்தைகளின் தாய்மார் கள் நம் வைத்தியரை அணுகுவார்கள். இவர் சிறிதும் சிரமமின்றி அக்குழந்தை களின், நோய்களைச் சில மூலிகைகளைக் கொண்டு குணப்படுத்தி விடுவார். பல நாட்களில் தாய்மார்கள் விடியற்காலை 5.00 மணிக்கு முன்பே தம்குழந்தைகளை அழைத்துக் கொண்டு வைத்தியர் வீட் டிற்கு வந்து விடுவார்கள். அவர் அந்த நேரத்திலிருந்தே குழந்தைகளுக்கு மருந்து கொடுப்பதில் முனைந்து விடுவார். சில நாட்களில் பல்துலக்குவதற்குக் கூட அவ ருக்கு நேரம் இருக்காது, காபி, டிபன் சாப்பிடவும் முடியாது; அவ்வளவு நோயா ளிகளின் கூட்டம்.

ஒரு குழந்தையின் தாயாரிடம் 'உன் புள்ளைக்கு என்ன உடம்பு?' என்று கேட்பார். தாயார் 'புள்ளை ராத்திரி பூராவும் அழுது கொண்டே இருந்தது' என்பாள். என்ன நோய் என்று அத்தா யால் சொல்லத் தெரியாது. நம் வைத்தி யர் குழந்தையை உற்றுப் பார்ப்பார். (சில குழந்தைகளின் நாடித் துடிப்பை மட்டும் பரிசோதிப்பார்.) பிறகு ஒரு மருந்து புட்டியை குழந்தையின் தாயிடம் கொடுத்து 'தேன் கொண்டு வந்திருக்கி றாயா?' என்று கேட்பார். அத்தாய் 'ஆம்' என்று சொன்னதும் ஒரு சந்தனக் கல்லைக் கொடுத்து தேனையும், சிறிது மருந்தையும் குழைத்து குழந்தையின் நாக் கில் தடவு' என்று சொல்லிவிட்டு இன் னொரு குழந்தையைக் கவனிக்கச் செல் வார். இவ்வாறு காலை 5.00 மணிக்கு ஆரம்பித்த தன் தொழிலை, மதியம் 12.00 மணி வரை தொடர்ந்து செய் வார். ஒரு நாளைக்கு 50க்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மருந்து கொடுப்பார். அவர் உதவிக்கு யாரையும் வைத்துக் கொள்ளவில்லை. குழந்தைகளை அழைத்து வரும் தாய்மார்களே அவருக்கு உதவி செய்வார்கள். தாய்மார்கள் அவர் வீட்டி லிருந்து போகும்போது வெற்றிலை பாக் கோடு நாலணா, எட்டணா (அக்கா லத்து நாணயப்படி) கொடுப்பார்கள். சிலர் கொடுக்காமலும் போய்விடுவார் கள். இருந்தாலும் வைத்தியர், தன் தொழிலை அயராது, ஓய்வின்றி 45 ஆண்டுகட்கு மேலாகச் சிறப்பாக நடத்தி வந்தார்.

இன்றைய தினமும் பல தாய்மார்கள் கீழ்க்கண்டவாறு வைத்தியரைப் புகழ்ந்து சொல்லக் கேட்கலாம். "அன்று என் குழந்தை கடும் நோயால் வாடியபோது அண்ணாமலை முதலியார் மட்டும் வைத் தியம் செய்யாதிருந்தால் என் குழந்தை பிழைத்து இருக்கமாட்டான். இப்போது என் குழந்தை வளர்ந்து பெரியவனாகி நல்ல நிலையில் உள்ளான்"

அவருடைய பூதஉடல் 1958 ஆம் ஆண்டில் மறைந்தது. ஆனால் அவர் புகழ் உடம்பு பலர் கண்முன் இன்றும் நிலவி வருகிறது.

வைத்தியர் அண்ணாமலை முதலி யார் மைலாப்பூர் அருள்மிகு வெள்ளீஸ் வரர் கோயில் அறங்காவலராக 1933 முதல் 1935 வரை இருந்து தெய்வத் தொண்டு புரிந்திருக்கிறார். அவர் அறங் காவலராக இருந்தபோதுதான் மேற்படி கோயிலில் 10நாள் பிரம்மோற்சவம் (வைகாசிப் பெருவிழா) முதன் முதலில் 1933இல் துவக்கப்பட்டது.

இவருக்கு 2 பிள்ளைகளும், 10 பெண்களும் பிறந்தனர். அவருடைய பிள்ளைகள், பெண்கள், பேரன், பேத்தி கள், கொள்ளு பேரன், பேத்திகள் ஆல் போல் தழைத்து மயிலாப்பூர், திரு மழிசை, குன்றத்தூர், சைதாப்பேட்டை முதலிய இடங்களில் இனிதே வாழ்கின் றனர். அவர்களில் 6 பேர் டாக்டர்களாக வும், 8 பேர் என்ஜினீயர்களாகவும் 3 பேர் வழக்கறிஞர்களாகவும் 27 பேர் பட்டதாரிகளாகவும் இருக்கின்றனர்.

அவர் மக்களுக்குச் செய்த சேவையைப் பாராட்டும் வகையில், சென்னை மாநக ராட்சி ஆட்சியாளர்கள், மைலாப்பூர் பி.எஸ். மேல் நிலைப்பள்ளிக்கு எதிரிலுள்ள தெருவுக்கு 'வைத்தியர் அண்ணாமலைத் தெரு' என்று பெயர் சூட்டி, அவரை என்றும் மறவாதிருக்கச் செய்திருக்கின் றனர்.

சப்த ஸ்தான க்ஷேத்திரங்கள்

1. திருவையாறு
2. திருப்பழனம்
3. திருச்சோற்றுத்துறை
4. திருவேதிகுடி
5. திருக்கண்டியூர்
6. திருப்பூந்துருத்தி
7. திருநெய்த்தானம்

4. வைத்தியர் அண்ணாமலை முதலியார்

Dr. R. கோபிநாத், M.A., B.L., Ph.D.



வைத்தியர் அண்ணாமலை முதலியார்

செங்கற்பட்டு மாவட்டத்தில் கூடு வாஞ்சேரிக்கு அருகில் நந்திவரம் என்கிற கிராமத்தில் வேதகிரி முதலியார் என்பவர் நெசவுத் தொழில் செய்து வந்தார். அவரது மனைவி வேலாத்தம்மாள்; இத் தம்பதிகளுக்கு ஆறு குழந்தைகள் பிறந்தனர்; இரண்டாவது மகனாக 1880 ஆம் ஆண்டில் அண்ணாமலை என்பவர் பிறந்தார். அவர்தான் பிற்காலத்தில் சென்னையிலே - குறிப்பாக மையிலாப்பூரிலே — மிகவும் புகழோடு ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்து வந்த வைத்தியர் அண்ணாமலை முதலியார் ஆவர்.

அண்ணாமலை முதலியார், எழும்பூர் புதுப்பேட்டையைச் சார்ந்த திரு. அப்பாசாமி முதலியார் அவர்களின் மகள் திருமதி கமலாம்பாளை 1905 ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டு நந்திவரத்தில் சிறிது காலம் குடித்தனம் செய்து வந்தார். 1908 ஆம் ஆண்டு அவர் நந்திவரத்திலிருந்து தன் மனைவியோடு சென்னைக்கு வந்தார். எழும்பூர் - புதுப்பேட்டையில் வாழ்ந்து வந்த தன் மாமனார் வீட்டில் தங்கி, மாமனார் செய்து வந்த வைத்தியத் தொழிலைத் தானும் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்ததோடு எந்த நோய்க்கு எந்த மருந்து கொடுக்க வேண்டும், எப்படி மருந்துகள் தயாரிக்க வேண்டும் என்பன பற்றித் தெளிவாகக் கற்றறிந்தார். பிறகு புதுப்பேட்டையிலிருந்து மயிலாப்பூருக்கு வந்து முதன் முதலாக ஆடம் தெருவிலுள்ள திருவாளர் தட்சிணாமூர்த்தி முதலியார் அவர்கள் வீட்டில் குடி புகுந்து வைத்தியத் தொழிலை 1909 ஆம் ஆண்டில் தொடங்கினார்.

அவர், காலையில் தன் வீட்டிற்கு வரும் நோயாளிகளை நன்கு கவனித்து தக்க மருந்துகள் கொடுத்து அனுப்புவார்; மாலையில் சென்னை கந்தசாமி கோயிலுக்கு அருகே இருக்கும் மருந்து கடைகளுக்கும், திருவல்லிக்கேணி ஜாம் பஜாரிலுள்ள மருந்து கடைகளுக்கும் சென்று மருந்துகள் தயாரிப்பதற்கு வேண்டிய சுக்கு, மிளகு, திப்பிலி போன்ற மூலப் பொருள்களையும், மூலிகைகளையும் பச்சிலைகளையும் வாங்கி வந்து பல மருந்துகளைத் தானே தயாரிப்பார். இவர் நாகபஸ்பம், செந்தூரம், வெள்ளெண்ணைய், மாந்தெண்ணைய், மாந்த கஷாயம், பாலேந்திர மெழுகு, கஸ்தூரி மெழுகு முதலிய மருந்துகள் தயாரிப்பதில் நிபுணர். நாகபஸ்பம் மூலச் சூட்டிற்கும், செந்தூரம் ஜுரம் முதலிய நோய்களுக்கும், வெள்ளெண்ணைய் கீல் பிடிப்பு, முட்டி வீக்கம் முதலிய நோய்களுக்கும், மாந்தெண்ணைய், மாந்த கஷாயம் குழந்தைகளின் இழுப்புக்கும், மார்சளிக்கும், பாலேந்திர மெழுகு குழந்தைகள் ஈன்றெடுத்த தாய்மார்களுக்கும், கஸ்தூரி மெழுகு சீதளத்தைப் போக்குவதற்கும் அவரால் தயாரிக்கப்பட்ட கைகண்ட மருந்துகளாகும்.

வைத்தியர் அண்ணாமலை முதலியார் குழந்தைகளின் நோய்களைப் போக்குவதில் நிபுணர். குழந்தைகளுக்கு வரும் சில நோய்களை ஆங்கில முறைப்படி

கும் பயணம் சென்ற முத்தையனார், தாமே சைவ உணவு தயாரித்து உண்ணும் பழக்கம் கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். 1935-ல், தாமே விரும்பி, அரசின் தலைமைச் செயலர் பதவியினின்று விலகி, அரவிந்த ஆசிரமவாசியாக மாறினார்.

1955-ஆம் ஆண்டு ஜூன் 23-ல் இவர் மறைவுற்றார். பிரஞ்சு ஆட்சியினின்று புதுவை மாநிலம் விடுபட்டு இந்தியத் தாயகத்துடன் இணைந்தபின் நடக்க இருந்த பொதுத்தேர்தலில் மக்கள் முன்னணி வேட்பாளராக இவர் வேட்பு மனு கொடுத்தபின் மறைவுற்றார். அவருக்குப் பதிலாகப் பாரதிதாசன், போட்டியிட்டு வெற்றிபெற்றுத் தான் புதுவை சட்டப் பேரவை உறுப்பினரானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முத்தைய முதலியாரின் மூத்த புதல்வர் டாக்டர் பாலபாஸ்கரன், தம் மருத்துவத் தொழிலில் சிறந்தும், மருத்துவத்துறை இயக்குநராகவும் புகழ் பெற்றவர். இளைய புதல்வர் ஆனந்த பாஸ்கரன் பிரஞ்சுப் பேராசிரியர், மகள், ஜெயலட்சுமி அம்மையார், தமிழ்நாடு மின்வாரியப் பொறியாளர், திரு முத்துக் குமாரசாமி அவர்களின் அன்புமிக்க இல்லத்தரசியாக விளங்குகிறார்.

---

18 சித்தர்கள் சமாதியமர்ந்த தலங்கள்

	தலங்கள்	சித்தர்கள்
1.	சேது	பதஞ்சலி முனிவர்
2.	அனந்த சயனம் (திருவனந்தபுரம்)	கும்ப முனிவர்
3.	மதுரை	சுந்தரானந்த தேவர்
4.	அழகர்கோயில்	இராம தேவர்
5.	திருப்பரங்குன்றம்	மச்ச முனிவர்
6.	பழநி	போகர்
7.	ஸ்ரீரங்கம்	சட்ட முனிவர்
8.	கரூர்	கரூர்த்தேவர்
9.	திருவாரூர்	கமல முனிவர்
10.	எட்டகுடி	வான்மீகர்
11.	மாயவரம்	குதம்பை சித்தர்
12.	வைதீஸ்வரன் கோயில்	தன்வந்திரி
13.	சிதம்பரம்	திருமூலர்
14.	திருவண்ணாமலை	இடைக்காட்டு சித்தர்
15.	விருத்தாசலம்	பாம்பாட்டி சித்தர்
16.	திருப்பதி	கொங்கணவர்
17.	பேரூர்	கோரக்கர்
18.	களி	நந்தீசர்

நவ வீரர்கள்

1. வீரபாகு தேவர் (மாணிக்க வல்லியின் மகன்)
2. வீரகேசரி (முத்து வல்லியின் மகன்)
3. வீர மகேந்திரர் (புட்பராக வல்லியின் மகன்)
4. வீர மகேஸ்வரர் (கோமேதக வல்லியின் மகன்)
5. வீரபுரந்தரார் (வைடூரியவல்லியின் மகன்)
6. வீராக்கதர் (வைர வல்லியின் மகன்)
7. வீர மார்த்தாண்டர் (மரகத வல்லியின் மகன்)
8. வீராந்தகர் (பவள வல்லியின் மகன்)
7. வீரதீரர் (இந்திர நில வல்லியின் மகன்)

இதைத்தான் நம் வள்ளலார் 'செங்குந்தர் பிரபந்தத் திரட்டு' வாயிலாக நல்லோர் துணை கொண்டு நலமுற வெளியிட்டார்கள்.

செங்குந்தர் குலப் புலவர்கள் யாவர்?

அவர்தம் நூல்கள் எவை?

அவை கூறுவது எவற்றை?

என்பவைகளை அறிய அந்நூல் பெரிதும் உதவிற்று. சமூக வரலாறு சொல்லியாயிற்று. | நம்மவர்க்கு நம் பெருமைகளையும் உரிமைகளையும் உணர்த்தும் கடமையைச் செய்தாயிற்று!

இனி என்ன?

செங்குந்தமித்திரன் :

ஒரு நூல் தந்துவைத்தால் ஒரு முறை படிப்பார்கள். அந்த நேரத்து உணர்ச்சிதான் எஞ்சும். பின்னர் பழைய படி 'நமக்கென்ன' வந்து விடக்கூடாதே! தொடர்ந்து உணர்வூட்டிக் கொண்டிருக்க ஒரு இதழ் வந்து கொண்டேயிருக்க வழி செய்ய எண்ணினார்கள்.

1927 ஆம் ஆண்டில் 'செங்குந்த மித்திரன்' என்ற இதழைத் துவக்குவதில் முன்னின்றார்கள். காஞ்சி நாகலிங்க முனிவர் ஆசிரியராக அமைந்தார்கள். திரு. தி. அ. சண்முக முதலியார், திரு. மா.க. கனகசபை முதலியார் ஆகியோரும் மற்றும் பல பெருமக்களும் கொண்ட துணைக் குழுவும் அமைக்கப்பெற்றது. திங்கள் தோறும் வெளிவந்து கொண்டிருந்தது. இன்றுவரை தொடர்ந்து இதழ் வெளிவந்து ஊக்க மூட்டிக் கொண்டிருக்கிறது.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்:

இனியென்ன? உணர்ச்சியூட்ட பிரபந்தத் திரட்டு தந்தாயிற்று. திங்கள் தோறும் உணர்ச்சியை எழுச்சியாக்க செங்குந்தமித்திரனைத் தந்தாயிற்று. அமைப்பு ஒன்று உருவாக வேண்டும். அதன் வாயிலாகப் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்களும் இணையும் நல்ல பொற் சங்கிலி ஒன்றை உருவாக்கவேண்டும். அதில் மணியும் முத்தும் பவளமும் வைரமும் வைடூரியமும் வைத்துப் பொருத்த வேண்டும். கண்ணுக்கினிய பொன்மணிக் கோவை ஒன்று உருவாக்கவேண்டும் என்று திட்டமிட்டவண்ணம் செயல்பட்டார்கள்.

வைரம் இருந்து ஒளிவீசிக் கொண்டு தான் இருந்தது. மாணிக்கம் எங்கோ ஓரிடத்துக்குள் மங்காத ஒளியை வீசிக் கொண்டுதான் இருந்தது.

பொன்னுக்கென்ன பெரும்புகழோடு ஓரிடத்தில் இருந்து வரத்தான் செய்தது.

ஆனால் எல்லாம் கூடி வரவேண்டுமே? பொற்கொல்லர் ஒருவர் புனைந்து வைக்க வேண்டுமே! அப்போதுதானே, நாலுபேர் மெச்சும் நன்கலம் அமையும்? பொற்கொல்லர்தான் நம் வள்ளல் சபாபதியார். வைர வைடூரியங்களாக வந்தமைந்தனர் சான்றோர். செங்குந்த மகாஜன சங்கம் என்ற நவரத்தினமாலை நல்ல படி உருவாயிற்று.

1927 ஆம் ஆண்டில் ஏப்ரல் 29ஆம் நாளில்தான் நம் தலைச்சங்கம் உருவாயிற்று.

மயிலை எஸ். குழந்தைவேல் முதலியார் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் திரு. பி. வி. நடராஜ முதலியார், அவர்கள் தலைவர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.எ.எல்.டி. அவர்கள் அமைச்சர் என்றும் தலைச்சங்கம் அமைந்தது. பல்வேறு பகுதிப் பெருமக்களும் பொறுப்பாளர்களாக அமைந்தனர். எல்லோரையும் இணைத்து அழகான நவரத்தின மாலையை ஆக்கியளித்தார் பொற்கொல்லர் நம் வள்ளலார்.

தலைச் சங்கம் அமைக்கப்பெற்றது. அதன் மூலம் ஆங்காங்கே மாநாடுகள் மாண்புற நடைபெற்றன. பல்வேறு தீர்மானங்கள். அதன் வாயிலாகப் பல்வேறு நன்மைகள். எல்லாமே நம் சமூக முன்னேற்றத்திற்காகத்தான்.

கல்விக்கண் திறப்போம்:

'கற்றவர் நிறைந்த சமூகத்தில்
மற்றவை யாவும் தாமே வந்து
நிறையும்'

இதுதான் உண்மை நிலை.

நம் சபாபதியார் படித்ததென்னவோ ஆறாம் வகுப்புவரைதான். ஆனால் அவர் மனத்தில் இருந்த குறிக்கோளோ நம் மக்கள் யாவருமே பட்டதாரிகளாகவும் முதுநிலைப் பட்டதாரிகளாகவும், பொறியியலார்களாகவும், மருத்துவ மேல்நிலையாளராகவும் ஆகவேண்டும் என்பதுதான்.

குழந்தைப்பேறு வாய்க்கப்பெறாதவர்கள் தான் குழந்தையின் அருமையுணர்ந்தவர்களாக இருப்பார்கள். செல்வத்தின்

தெரியாத நேரம்.

அப்போதுதான் காலதேவன், காலங் காலமாகக் கலங்கிக் கிடந்த சமுதாயத் துக்கு ஒரு கலங்கரை விளக்கத்தைக் காட்டினான்.

கலங்கள் தனித்தனியே கடலில் தத்தளித்துக் கொண்டு, எங்கிருந்து வந் தோம்? எங்கே போகப் போகிறோம்? என்பது தெரியாமல் தவித்துக் கொண் டிருந்த நேரத்தில் கண்ணில் தெரிந்தது அந்தக் கலங்கரை விளக்கம்.

காலதேவன் காட்டிய அந்தக் கலங்கரை விளக்கந்தான் வள்ளல் சபா பதி முதலியார் அவர்கள் ஆவார்கள்.

நாகப்ப முதலியார்

கமலாம்பாள் அம்மையார்

இல்லறங்காத்து இனிதாகப் பெற்ற மகன் தான் நம் சபாபதியார்.

கலங்கரை விளக்கமாக இருந்து சமூ கத்துக்குக் கரையைக் காட்டிக் கரை யேற்றி விட்டவர்கள்.

சமூக முன்னேற்றத்தில் சிந்தை கொண்டு உழைக்கப் புறப்படுவோர் சிறந்த சிந்தனையாளராக இருக்க வேண் டும். பொறுமையென்னும் அணிகல னைப் பூணவேண்டும். உறக்கமெனும் ஓய்வகற்றி உழைக்க வேண்டும். கனிவு; துணிவு; பணிவு இவை அகத்தமுந்த வேண்டும். வள்ளல் சபாபதியாரிடம் இக் குணங்கள் ஏராளமாகவே இருந்தன.

குடும்பத்தைப் பேணும் வகையில் தொழில் பெருக்கி நல்ல வருவாயை நல்கும்படி செய்துவைத்தார்.

பின்னர் சபாபதியாரின் கவனம் செங்குந்தர் சமூகத்தின்பால் சென்றது.

வாணிகத்தின் பொருட்டு வள்ளலார் இலங்கை முதலிய பல்வேறு இடங்களுக் கும் செல்லும் வாய்ப்பு பெற்றபோது, வகையாக ஏற்பட்ட எண்ணமே, செங் குந்தர் சமூக முன்னேற்றத்துக்கான தொண்டு புரியும் எண்ணமாகும்.

அங்கங்கு வாழ்ந்த செங்குந்தர் கள் முன்னேற வேண்டும் என்ற முனைப் பில் இருந்தார்கள் என்றாலும் எல்லோ ரையும் இணைக்கவும் தலைமை யேற்று நடத்திச் செல்லவும் ஒரு தலைவர் தேவைப்பட்டார்.

வள்ளலார் உள்ளமும் இச்சமூகத்தை எவ்வாறேனும் முன்னேற்றத் துடித்துக் கொண்டிருந்தது.

பொருள் வைத்தசேரி ஊட்டிய புத்துணர்வு

பொருள் வைத்தசேரியில் ஒரு மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் வலங்கை மான் கந்தசாமி முதலியார் உள்ளிட்ட பல்வேறு பெருமக்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

உரைகள் அனைத்துமே உற்சாக மூட்டி உணர்ச்சியைத் தூண்டும் உன்ன தச் சொற்பொழிவுகள்.

அம்மாநாட்டில் நம் சபாபதியார் கலந்து கொண்டார். அங்கே நம் வள்ள லார் உள்ளம் உணர்ச்சிப் பள்ளமாக மாறிற்று.

பல்வேறு சமூகத் தலைவர்களின் அறிமுகம் கிட்டியது. சரி, நாம் இச்சமூ கத்தை முன்னேற்ற முனைந்தால், எவ் வெவரின் தொண்டினை எவ்வெவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம், என்பதற்கான விவரத்தையும் தம் மனத்தில் பதிய வைத்துக் கொண்டார்.

செங்குந்தர் பிரபந்தத் திரட்டு

*1915*ஆம் ஆண்டில் பொன். குமார சாமி முதலியார் அவர்களால் செங்குந்த ஜாதி நூல் கோவை வெளியிடப் பெற் றது.

1926 ஆம் ஆண்டில் நம் வள்ளலார் அவர்களும் அவர்தம் சகோதரர் கல்யாண சுந்தர முதலியார் அவர்களும் இணைந்து காஞ்சி நாகலிங்க முனிவரின் துணை கொண்டு செங்குந்தர் பிரபந்தத் திரட்டு என்ற நூலினை வெளியிட்டார்கள்.


இந்நூல் நம்மவர் கொண்டிருந்த தாழ்வுணர்ச்சியை நீக்க உதவும் என்பது வள்ளலார் உள்ளம்.

நம் மக்கள் 'தாமுண்டு தம் தொழி லுண்டு வருவாயுண்டு வாயுண்டு வயி றுண்டு' என்று அவரவர் வாழ்க்கையை அவரவர் முயற்சியில் வாழ்ந்து கொண் டிருந்த நாளில், 'நாம்யார்?' என்பதை நமக்கே உணர்த்தும் நூலாக இது அமைந் தது.

''பழம்பெருமை சொல்வதிலோர் மகிமையில்லை'' என்பதுதான் பாரதியின் வாக்கு என்றாலும் அளவோடு - நமக்கு எழுச்சியூட்ட—நம்மைப் பற்றி நாமே உணரும் வகையில்—சற்றே நம் வரலாற்றை அறிந்து கொள்வது நல்லதேயாகும்.

6. வள்ளல் சபாபதியார்

—புலவர் இரெ. சண்முக வடிவேல், எம்.ஏ., பி.எட்., திருவாரூர்



வள்ளல் சபாபதியார்

காலத்தின் கோலம்

காலம் வினோதமானது.

உயர உயரப் போய் உச்சியில் நிற்கும் சமூகத்தைக் கீழே ஒருநாள் இறக்கி வைக்கும்.

கீழே இறங்கிவந்து, நாம் யார்? என்பதே தெரியாமல் தவிக்கும் அச்சமூகத்தின் கையில் 'இதோ பார் உன் தலைவன்!' என்று ஒருவனைக் காட்டும்.

அந்த ஒளிவிளக்கின் பின்னால் சமூகம் ஓடி வரும். ஒளிவிளக்கு இருளகற்றி ஒப்பற்ற எதிர்காலத்தின் கையில் சமூகத்தை ஒப்படைக்கும். அப்போது விடியலின் வெளிச்சத்தில் தன்னை அறிந்த சமுதாயம் தலை நிமிர்ந்து பீடு நடை போட்டு முன்னேறும்.

செங்குந்தர் சமூகம் ஒரு காலத்தில் ஆளும் இனமாக இருந்திருக்கலாம்.

நவவீரர்கள் உதித்திருக்கலாம்!

குந்தப்படை கொண்டு நாட்டையும் ஆண்டிருக்கலாம்!

ஆனால்,

பின்னர் அவர்களின் நிலைமை என்ன?

தனித்தனிக் குழுக்களாக வாழ்ந்தனர்.

ஒரு குழுவும் இன்னொரு குழுவும் தொடர்பின்றித் தனித்தனியாக வாழ்ந்தது.

பரந்த இவ்வுலகில் தன்னைத்தானே சுருக்கிக் கொள்ளும் நத்தையைப் போல் நம் சமூகம் இருந்தது.

எல்லோரும் செங்குந்தர்கள்தான்!

ஆனாலும்

திருச்செங்கோட்டில் இருக்கும் செங்குந்தரோடு திருவாரூரில் இருக்கும் செங்குந்தர் உறவு கொள்ளத் தயங்குவார்! ஒதுங்கி நின்று விலகிடுவார்!

இதுதான் நம்முடைய நிலை.

போக்குவரத்து வசதியில்லாத நாளில் வேண்டுமானால் இது பொருத்தமாக இருந்திருக்கலாம்.

ஆனால்,

நினைத்தபோது நினைத்தவர்களுடன் நேரில் பேசுவது போன்ற தொலைபேசி வசதிகள் வாய்த்திருக்கும் நாளில் பேருந்து, தொடர்வண்டி, விமான வசதிகள் நிறைந்த நாளில் இவ்வாறு வாழ்தல் ஏன்?

சிறுசிறு குழுக்களாக வலிமையற்று வாழ்வதைவிட எல்லோரும் கூடி ஏற்றம் பெற வாழலாமே!

ஆம், வாழலாந்தான்.

எல்லோரையும் கூட்டி வைப்பது யார்?

முதல் முயற்சி செய்து முனைந்து நின்று உழைப்பதுதான் யார்?

1937 ஆம் ஆண்டிலிருந்து 1965 ஆம் ஆண்டு வரை திருமகள் மில்லின் நிருவாகத் தலைவராக இருந்தார். இவருடைய நிருவாகத்திறனைப் பலரும் பாராட்டினர். ஆங்கில மொழி பயிலாதவர். ஆனால் உயர்ந்த அறிவுத்திறன் உள்ளவர். உற்பத்திக் கணக்குகள் அவருக்கு மனப்பாடம். எந்த பஞ்சை எந்த விலைக்கு வாங்குவது? அன்றைய நூல் விலையில் எந்த எண்ணிக்கை நூல் உற்பத்தி செய்தால் கூடுதல் இலாபம் கிடைக்கும் என்பதைச் சில நிமிடங்களில் கூறி முடிவெடுக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். படித்த, பட்டம் பெற்றவர்கள் பல நாட்கள் கணக்குப் போட்டுப் பார்த்து எடுக்கும் முடிவை இவர் சில நிமிடங்களில் சொல்வதைப் பார்த்து வல்லுனர்கள் ஆச்சர்யம் அடைவார்களாம். என்னுடைய உறவினர் சிலர் இந்த மில்லோடு தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் எல்லாம் இவர் திறமையைப் பற்றிப் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். நான் இவரைச் சந்தித்திருந்தாலும் அதிகப் பழக்கம் கிடையாது.

இங்கர்சால் என்ற மேனாட்டு அறிஞன் சொன்னானாம். ''கல்லூரிகள் கூழாங்கற்களைப் பளபளப்பாக்கும். ஆனால் வைரங்களை மங்க அடித்துவிடும்'' என்று. நமது பெரியவர் உண்மையான இயற்கை வைரம். அதிர்ஷ்ட வசமாக கல்லூரியில் நுழையவில்லை. எனவே முழுமையான ஒளியுடன் விளங்க முடிந்தது. அறிவிற்கு ஆங்கில மொழி வேண்டும் என்ற கொள்கையை உடைத்தெரிந்தவர் நம் சண்முக முதலியார் அவர்கள். எனக்குத் தெரிந்தவரையில் இந்த நூற்றாண்டின் முற் பகுதியில் வாழ்ந்த நம் குலத்தைச் சார்ந்த மிகப் பெரும் தொழிலதிபர் இவர்.

இவருடைய பொது வாழ்க்கை, தேச விடுதலை இயக்கத்தில் ஈடுபாடு, காங்கிரஸ் இயக்கப் பணி, கல்விப் பணி, வேதாந்தப் பாடசாலைப் பணி மேலும் கோயில் திருப்பணிகள் இவையெல்லாம் இவருடைய பெருமையை பறை சாற்றுகின்றன. இவருடைய தமிழ் அறிவு வியக்கத்தக்கது. அனாயாசமாக கவி இயற்றும் இவர் திறமையைப் பலர் போற்றக் கேட்டிருக்கின்றேன். நான் மிகச் சிறுவனாக இருந்தகாலத்தே இவர் இயற்றிய ''நளாயணி வெண்பா'' என்ற நூல் எங்கள் வீட்டில் இருந்தது. நான் அதைப் படித்திருக்கின்றேன்.

இவருடைய 'குலப்பணி' நம் எல்லோருக்கும் தெரிந்ததே. பல மாநாடுகளில் பங்கு பெற்றதோடு சுமார் 20 ஆண்டுகள் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவராக இருந்து பணி ஆற்றியிருக்கின்றார். இவரது புகழ் வளர்க!

இவ்வரலாற்றை எழுதுவதற்கு எனக்கு உதவி புரிந்த கா.அ.ஷ. பத்மனாபன் அவர்களுக்கும், பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியத்திற்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கண்ணபிரானுக்கும், சிசுபாலனுக்கும் பெண்ணால் பகையுண்டாயிற்று. பாண்டவர்களுக்கும், கௌரவர்க்கும் பொன் — பொருள்களால் பகையுண்டாயிற்று. துரோணருக்கும் துருபதனுக்கும் வாக்கினால் பகை விளைந்தது. எலிக்கும் பூனைக்கும், பாம்புக்கும், கீரிக்கும், பகைக்குக் காரணம் வேறு ஒன்றுங்கிடையாது. பிறப்புதான் காரணம். பூசாரிக்கும் பிரமதத்தனுக்கும் பகைமை குற்றத்தால் விளைந்தது.

—வாரியார்

மக்கள் இல்லாத வீடு பாழானது
நண்பர்கள் இல்லாத திசை பாழானது.
கல்விஞானம் இல்லாதவனுடைய உள்ளம் பாழானது.
உடன் பிறப்பில்லாதவனுடைய உடம்பு பாழானது.
கற்புள்ள மனைவியில்லாதவனுடைய வாழ்வு பாழானது.
வறுமையுள்ளவனுக்கு எல்லாமே பாழ் என்று அறிக.

—வாரியார்

அருமை வறுமையாளர்களால்தான் நன்கு ணரப் பெறும்.

சாப்பாட்டின் பெருமையை பசித்த வயிறு படைத்தவர்கள் தான் நன்றாக அறிவார்கள்.

அப்படித்தான் நம் வள்ளலார், குடும்பச் சூழல் காரணமாக ஆறாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திக் கொண்டவர்கள். அவர்கள் உள்ளம் கல்வி முன்னேற்றத்தை எண்ணி ஏங்கியது. எல்லோரும் கற்றவர்களாகி நம் சமூகம் படித்த சமூகம் என்ற பெருமையில் திகழ வேண்டும் என்று கருதினார்கள்.

ஏழைப் பாட்டாளி மக்கள் எவ்வாறு கற்றிட இயலும்?

குழந்தை வீட்டில் இருந்தால் கை வேலைக்கு உதவுவான் என்று எண்ணுவார்கள்.

படிக்க வைக்கும் எண்ணமே இருந்தாலும் பணப் பிரச்சினை அதை முறியடிக்கும்.

இதை நன்குணர்ந்த நம் வள்ளலார் செல்வரை அணுகினார்கள். செல்வத்தை அருள் உள்ளத்தோடு கொடுத்திடுமாறு கனியப் பேசினார்கள்.

செல்வர் சிலர் 'சிடுசிடு'த்தனர்.

சிலரோ, 'ஏன் இந்த வீண் வேலை?' என்றனர்.

'வாங்கும் பணம் வழி முறையோடு செலவிடப் படுமா?' என்று வினாவெழுப்பித் தடுக்க முயன்றனர். ஏசல், இழிமொழி, தடை முயற்சி இவைகளை யெல்லாம் தம் தொண்டுக்கு எருவாக்கிக் கொண்டு தழைத்த உள்ளத்தோடு தாளாண்மையில் ஈடுபட்டு வென்றார் நம் சபாபதியார். நிதியொன்றை உருவாக்கி வைத்தார்.

அதனால் பல்வேறு மக்களும் பயன் கண்டு முன்னேறினர்.

சமூக முன்னேற்றத்தின் அடிப்படையே கல்வி முன்னேற்றத்தில்தான் அமைந்திருக்கிறது என்று, நன்குணர்ந்த நம் நாகப்பர் செல்வர், நல்ல தொண்டாற்றி நமக்கெல்லாம் வழிகாட்டியுள்ளார்.

மாணவர் இல்லம்:

ஒரு மாணவர் இல்லத்தை சென்னையில் அமைத்து வளரச் செய்தால் அதன் மூலம் மாணவர்தம் உண்டி உறையுள் செலவு குறையும். அதனால் ஏழைகள் பலர் கல்விபெற்று உயர்ந்திடும் நன்னிலை பிறக்கும் என்று கருதினார். அவர்களின் ஆழ்ந்த தொண்டுள்ளத்தின் அவா இன்னும் நிறைவேறாமல் இருப்பது நமக்கொரு பெருங் குறையே.

உண்டியல் வைப்போம்; உயர்வினை அடைவோம்:

செல்வரை அண்டுவதும் செல்வத்தைப் பெறுவதும் எப்போதும் நடைபெறாது.

எல்லார்க்கும் உதவும் எண்ணம் வர வேண்டும்.

'நானும் உதவினேன்' என்று நம்மவர் யாவரும் கருதவேண்டும்.

அப்போதுதான் தொண்டு முழுமை பெறும். சமூகமும் தாமாகவே உதவிக் கொண்டு தரமுயர்த்தப்பாடுபடும். இது அவர்களின் மனவேகம்.

வாணிக நிறுவனங்கள், கம்பெனிகள், துணி உற்பத்தியாளர்கள் யாவரிடமும் உண்டியல் தந்து அவ்வப்போது சேமிக்கச் செய்து ஆண்டுக்கொருமுறை அதனைச் சேகரித்துக் கல்வி நிதியில் சேர்த்தார்கள்.

இவ்வாறு தேனீபோல சிறுகச் சேர்த்தாலும் எளியவர்கள் மனமுவந்து தருவதால் தேனினும் இனிய அத்தொகையைச் சேர்த்து செங்குந்த குல இளைஞர்களின் கல்விக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்கள்.

உயர்ந்து நின்று சமூகத்தை உயர்த்தினார்:

தலைச் சங்கம் அமைத்தது, கல்வி நிதி சேர்த்தது; உண்டியல் வைக்கச் செய்தது என்று குலத்துக்கு உயர்வளிக்கக் கொள்ளை கொள்ளையாய் நன்மைகள் செய்திருந்தாலும் அவர்கள் நம்மவர்கள் எவ்வாறெல்லாம் பலதுறைகளிலும் முன்னேற வேண்டும் என்பதைத் தானே ஒழுகி நின்று காட்டினார்கள்.

'செல்வத்துப் பயனே ஈதல்'

என்பதற்கேற்பத் தம் செல்வத்தைப் பலர்க்கும் பயன்படுமாறு ஈத்துவந்தார்கள்.

திருவாரூர்த் தியாகராச சாமி திருக்கோயிலின் தேவாசிரிய மண்டபத்தைப் புதுப்பித்தார்கள்.

பக்த காட்சித் திருவிழாவினைத் தம் உபயமாக நடத்தித் தந்தார்கள்.

திருவாரூர் மடப்புரத்திலுள்ள பெருமாள் கோவிலைச் செங்குந்தர்களின் கோயிலாக ஆக்கப் பெருமுயற்சி செய்தார்கள். பெரும் வழக்குகளில் வாதாடி வெற்றி கண்டு வந்தார்கள். தாம் அரை வேலி நிலமும் தம் சகோதரர் அரை வேலி நிலமும் தந்து கோயில் சிறக்க நற்பணியாற்றினார்கள். இன்றும் அத் திருக்கோயில் நம்மவர்களால் பேணிப் பாதுகாக்கப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் திருக்குடமுழுக்கு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

வைத்தீஸ்வரன் கோவிலில் செங்குந்தர் திருமடம் ஒன்று இருந்து வருகிறது. நம்மவர்கள் சென்றால் அங்குத் தங்கியிருந்து வழிபாடியற்றி இறையருள் பெற்றுய்ய வசதியாக அம்மடம் உதவி வருகிறது. திருமருகல் நாட்டார் அதனைக் கட்டி வைத்தார்கள். கீழவீதியில் அது இருந்து வருகிறது.

அங்கு இருந்து கவனித்து வந்த அன்பர் ஒருவர் நாளடைவில் அம்மடத்தைத் தம்முடையதாகவே ஆக்கிக் கொண்டதோடன்றி செங்குந்தர்கள் தங்கச் சென்றால் தங்கவிடாமல் அவர்களை மதிப்புக் குறைவாகவும் நடத்தத் தொடங்கினார்.

வள்ளல் சபாபதியார் இதனைக் கேள்வியுற்றதும் பெரிதும் மனவருத்தங் கொண்டார்கள். உடனடியாக அங்குச் சென்று அவ்வம்பரை அகற்றினார்கள்.

'இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவான்' என்ற பழமொழியை மெய்யாக்கி வந்த அந்தக் காவலர் வெளியேற்றப்பட்டார். இன்று நமக்குப் பேருதவியாக அம்மடம் திருமருகல் நாட்டாரால் நடத்தப்பெற்று வருகிறது.

நம்மவர்கள் நம் சொத்தையும் கூட உரிமையோடு பயன்படுத்தத் தவறுவதால் தான் இக்கேடு நிகழ்ந்தது.

உரிமைப் பொருளை ஏன் இழக்க வேண்டும்? சீறிவரும் சிங்கமாக இருந்து நமக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறார் நம் சபாபதி வள்ளல்.

நகரமன்றத் தலைவர் நம் சபாபதியார்:

நம்மவர்கள் எவ்வாறு வாழவேண்டும் என்பதை நம் வள்ளலாரின் வாழ்வின்படி ஒவ்வொன்றும் நமக்கு எடுத்துக்காட்டிக் கொண்டே வரும்.

திருவாரூரில் நகரமன்றத் தலைவர் எவர் வரவேண்டுமானாலும் அவர் நம் சபாபதியார் ஆதரவை நாடிப் பெற்றால் தான் முடியும் என்ற பெருமிதமான நிலையை உருவாக்கி வைத்திருந்தார்.

'King Maker' என்பதுபோல் இவர்கள் 'Chairman Maker' ஆகத் திகழ்ந்தார்கள்.

ஒரு வாய்ப்பில் அவர்களே நகர மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

தலைவராக வந்தபின் நகர மன்றத் தலைவர்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்கு அவரொரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள்.

திருவாரூரில் நிலையாக அமைந்திருக்கிற நற்பணிகள் எதுவானாலும் அது நம் வள்ளலார் பெயரை நினைவூட்டும் வகையில் அமைந்திருப்பது அவரின் செயலாற்றும் திறமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஒரு சுருங்கிய கட்டுரையில் அவரால் திருவாரூர் பெற்ற நன்மைகளை எடுத்துரைத்துவிட முடியாது.

கற்றுக் கொள்வோம்:

நடுத்தரக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் திறமையால் தம் வருவாயைப் பெருக்கி மேல்நிலையடைந்தார்.

லோகாம்பாள் அம்மையாரைத் துணையாகக் கொண்டு இல்லற வேள்வியை இனிதே புரிந்தார். சிறந்த மக்களை இல்லறப் பயனாய் ஈன்றெடுத்தார்.

பெற்ற மக்களைப் பேரறிவாளராக உருவாக்கினார்.

தம்மாற்றல் கொண்டு தாமும் தம் குடும்பமும் இனிதாக வாழ்ந்தால் போதும் என்று எண்ணவில்லை.

தம்முடைய ஆற்றலால் தம் சமூகம் பயன்பெற உழைத்தார்.

தம்மை மேலும் மேலும் உயர்த்திக் கொண்டார். உயரத்தில் நின்று கொண்டு கீழே இருப்பவர்களையும் மேலே அழைத்துக் கொண்டார்.

தலைவரை எண்ணித் தவங்கிடந்த சமுதாயத்துக்குத் தலைவராய் அமைந்து, தகுதியோடும் திறமையோடும் அரும் பணிகள் ஆற்றிச் சமுதாயத்தை உயர்த்தினார்.

ஆவன செய்தனர். அவர் காலத்திற்குப் பிறகு அந்த நிலைமை மாறி மாடவீதியும் குறைந்து விட்டது. அது பற்றிக் கேட்பார் ஒருவருமில்லை.

1942ஆம் ஆண்டு இரண்டாவது உலக மகாயுத்தம் வந்தபோது மக்கள் சென்னையை விட்டு வெளியூர் சென்றதால் அருள்மிகு காரணீஸ்வரர் கோவில் விழாக்கள் சரிவர நடைபெறவில்லை. அதனால் என் தந்தையார் சண்டை நிலைமை அமைதியானதும் 1947ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பவித்ர உற்சவம் செய்து கோவில் பூசை முறைகளை ஒழுங்குபடுத்தினார்.

1947ஆம் ஆண்டு இவர் இப்பொழுதுள்ள கோவில் மார்க்கெட்டை ரூ. 24,000-க்கு சேலம் மாணிக்க முதலியார் மகனான இராசரத்தின முதலியாரிடமிருந்து வாங்கினார். இதை வாங்குவதற்கு அவர் பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமன்று. எத்தனை நடை அவர் சேத்துப்பட்டுக்கு நடந்திருப்பார்? அது ஆண்டவனுக்கே வெளிச்சம். இதன் வரும்படி தான் இப்பொழுது கோவிலுக்குப் பெருந்தொகையான வரும்படியாக இருக்கிறது.

இவர் நம் செங்குந்த குலத்தாரால் நடத்தப்பெற்ற அருள்மிகு காரணீஸ்வரர் கோவிலுக்குப் பலவகையிலும் தொண்டு செய்து வந்தார். இத்துடன் நம் செங்குந்த குல மக்கள் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார்.

(எனக்கு செய்திகளைத் திரட்டித் தந்தவர் என்னுடைய அருமைத் தம்பி Dr. எம்.என். மாசிலாமணி M. A., Rcap அவர்களாவார்)

பலாப்பழத்தை அறுக்காமல் அதில் எத்தனை சுளைகள் இருக்கின்றன என்பதை அறிய என்ன செய்ய வேண்டும்.

பலாப்பழத்திலுள்ள காம்பைச் சுற்றியுள்ள முதல் சுற்றின் முட்களின் எண்ணிக்கையை ஆறால்பெருக்கி ஐந்தால் வகுத்தால் பலாச்சுளைகளின் எண்ணிக்கை வரும்.

பூசணிக்காயில் எத்தனை விதைகள் இருக்கிறதென்று கண்டுபிடிக்க கீழ்க்கண்ட கணக்கைப் போடவும்.

கீற்றுக்கள் $3 \times 6 \times 5 \times 3$ விதைகள்

$$\frac{\text{கீற்றுக்கள் } 3 \times 6 \times 5}{2} \times 3 \text{ விதைகள்}$$

வைணவ முக்கியக் கோவில்கள் (8)

1. நாங்குனேரி
2. திருவரங்கம் (ஸ்ரீரங்கம்)
3. னைனி சாரண்யம்
4. திருப்பதி
5. புஷ்கரம்
6. சாலக்கிராமம்
7. நர நாராயணாஸ்ரமம்
8. ஸ்ரீ முஷ்ணம்

பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்வாயாக - இப்படி வாழ்த்துகிறார்கள் பெரியவர்கள். பதினாறு பேறுகள் கீழ்வருவன:

1. மனை
2. மனைவி
3. மக்கள்
4. தாய்
5. நட்பு
6. நிலம்
7. மாடு
8. கல்வி
9. கேள்வி
10. அறிவு
11. ஒழுக்கம்
12. வலிமை
13. ஏவல்
14. பொன்
15. மணி
16. புகழ்

கண்டு திருக்காரணி செங்குந்த சபையார் இவருக்கு 1938ஆம் ஆண்டில் தர்ம கர்த்தர் பதவியை அளித்தனர். அப் பதவியை அவர் 1947 வரை வகித்துச் செம்மையாகச் செயலாற்றியவர். என் தந்தையார் மிகவும் முயற்சி செய்து தென்னாடு முழுவதும் சென்று பணம் திரட்டி 1938ஆம் ஆண்டு அருள்மிகு காரணீஸ்வரர் கோவிலில் இலட்சதீப உற்சவம் செய்து வைத்தார். இதற்காக இவரை இக்கிராமத்திலுள்ள பெரியவர் களும் பக்கத்துக் கிராமத்திலுள்ள பெரிய வர்களும் பாராட்டிப் புகழாரம் சூட்டி னார்கள்.

அஸ்திவாரத்திலிருந்து பதும கமலம் செய்து முடித்து விடா முயற்சியுடன் கோபுரத்திற்குக் கருங்கல் கட்டடம் முடிய அயராது உழைத்து அருள்மிகு காரணீஸ்வரப் பெருமான் திருவருளால் 1941ஆம் ஆண்டு கோபுரத்தை (கருங் கல் தளவரிசை வரை) முடித்தார். இதற்குக் கூட இருந்து உதவியவர்கள் சேப்பான் வைத்தியலிங்க முதலியாரும் என் சிறிய தந்தை முக்கலார் மாணிக்க முதலியாரும் நானும் ஆவோம். சேப் பான் வைத்தியலிங்க முதலியார் மேல் விட்டக் கற்களை மாமல்லபுரத்திலிருந்து கொண்டுவர வண்டி கொடுத்து உதவி னார். நானும் என் சிறிய தந்தை மாணிக்க முதலியாரும் மாமல்லபுரத்தி லிருந்து கொண்டு கற்களை ஏற்றிய னுப்ப அவ்வப்போது வேண்டிய ஏற் பாடுகளைச் செய்தோம். விட்டக் கற்கள் கொண்டு வரும் பணியில் கடைசியாக உறுதுணையாக இருந்தவர் அப்போது சென்னை Race Course groundஇல் முகாமிட் டிருந்த American Contingentஇன் மேஜரா வார்.


கோபுரம் கட்டும்போது ஆச்சரிய மான செய்தி ஒன்று நடந்ததை இங் குக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. Gannon Dunkerly Co., இல், இஞ்சினிய ராக இருந்த வெள்ளையர் ஒருவர் கோவிலுக்குக் கல்தூக்குவதற்கு பாரந் தாங்கி (Crane) கொடுத்து உதவி னார். அவருக்கும் கல் வேலை செய்த ஸ்தபதியாருக்கும் ஒரு கல்லை கோபு ரத்தின் மேல் ஏற்றுவது பற்றி சர்ச்சை ஏற்பட்டது. கோபுரத்தில் ஏற்றப்பட இருக்கும் கல்லில் தேரை இருக்கிறது ஏற்றவேண்டாம் என்று ஸ்தபதியார் கூற அதை இஞ்சினீயர் மறுக்க அக் கல் இரண்டாகப் பிளக்கப்பட்டது. பிளக் கப்பட்டதும் ஸ்தபதியார் சொன்னபடி அதில் தேரை இருந்தது. அதனால் இஞ் சினியர் தான் கூறியபடி ஸ்தபதியாருக்கு உடனே ரூ. 1000-க்குக் காசோலை கொடுத்தார். அந்தக் காசோலையை அந்த ஸ்தபதியார் கோபுரத் திருப்பணி உண்டியலிலேயே சேர்த்துவிட்டார். என்னே ஸ்தபதியாரின் திருப்பணி உள்ளம்.!

மற்றொரு சம்பவம் என் தந்தை யாரைப் பற்றியது. கோயில் உட்புற மாக உள்ள கோபுர வாசற்படி மேல் விட்டக் கல்லை மேலே ஏற்றிக் கொண்டி ருந்தார்கள். அப்பொழுது என்னுடைய தந்தையார் கீழே நின்று கொண்டு பார்வையிட்டுக் கொண்டிருந்தார். கல்லில் கட்டியிருந்த கயிற்றில் ஒவ்வொரு பிரி யாக இரண்டு பிரிகளும் அறுந்துவிட்டு ஒரே பிரியில்தான் அந்தக் கல் தாங்கிக் கொண்டிருந்தது. அங்குள்ளவர் பலர் சொல்லியும் கேளாமல் என் தந்தையார் கோபுரத்துக் கடியில் நின்றிருந்தவர் வில கவேயில்லை. கல் மேலே போய் நின் றால்தான் அந்த இடத்தைவிட்டு நகரு வேன் என்றும் சொன்னார். ஆண்ட வன் திருவருளால் அக் கல் ஒரே பிரியில் மேலேறிச் சரியான இடத்தில் நின்றது. பிறகுதான் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். என்ன இருந்தாலும் இவருக் குத் திடசித்தமும் மனோதைர்யமும் கடவுட்பக்தியும் அதிகம். அதனால்தான் இக்காரியத்தைச் சாதித்தார் என்று அங் கிருந்தவர்கள் அவரைப் பாராட்டினார்கள். கடவுள் அருள்தான், அக்கல் மேலேறியது என்று என் தந்தையார் சொல்வார்கள். ஈசன் செயலை யார் அறிவார்?

அக்காலத்தில் அருள்மிகு காரணீஸ் வரர் உலாவரும் மாடவீதி காரணீஸ் வரர் கோயில் தெரு, வாத்தியார் சுப்பராய முதலி தெரு, கூத்தாடும் பிள் ளையார் கோயில் தெரு, ஜோன்ஸ் சாலை, ஜூனிஸ் சாலை பஜார் சாலை மறுபடி யும் காரணீஸ்வரர் கோவில் தெரு வழி யாக உற்சவ மூர்த்திகள் கோவிலை வந்து அடையும் திருவிழாக் காலங்களில், இரண்டு இரயில்வே கேட்டுக்களிலு முள்ள வண்டித் தொடர் தொட்டுக் கொண்டு செல்லும் மின்சாரக் கம்பி களை அகற்றிவிடுவார்கள் இரயில்வே அதிகாரிகள். இவர் இரயில்வே அதிகாரி களுடன் தொடர்பு கொண்டு அனேக கடிதங்கள் எழுதி அந்த இரண்டு கேட்டு களுக்கும் (ஜோன்ஸ்ரோட் கேட்; பஜார் ரோட் கேட்) மேலேயுள்ள சுமார் 50 அல்லது 60 அடி நீளமுள்ள மின்சாரக் கம்பிகளை நிரந்தரமாக நீக்கிவிடும்படி கோரிக்கை விடுத்தார். இரயில்வே அதி காரிகளும் அதற்கு ஒப்புதல் அளித்து

7. திரு. முக்கலார் நடேச முதலியார்
(1893 - 1956)

முக்கலார் N. வேதாசல செங்குந்தர், B.A.
(Welfare Asst. (Retd) Office of the Accountant General, Madras)



திரு. முக்கலார் நடேச முதலியார்

என் தந்தையார் திருமுக்கலார் எம். நடேச முதலியார் அவர்கள் 1893-ஆம் ஆண்டு, திருமுக்கலார் முருகேச முதயாருக்கும் தையல் நாயகி அம்மாளுக்கும் தலைமகனாகத் தோன்றினார். இளமையிலேயே அவர் கல்வியில் சிறந்து விளங்கினார். சிறு வயதிலிருந்தே அவர் கடவுள் பக்தியுடையவராய் இருந்தார். சென்னை சைதாப்பேட்டை மாதிரி உயர் நிலைப் பள்ளியில் மெட்ரிகுலேஷன் வரையில் படித்தார். 16-ஆம் வயதிலேயே முதல்தர மாணவராகத் திகழ்ந்தார். அவர் கணக்குப் பாடத்தில் 100க்கு 100 மதிப்பெண்கள் வாங்கிப் பள்ளிக்கும் புகழ் தேடித்தந்தார்.

அவர் பாரி அண்டு கம்பெனியில் (Parry & Co) வேலைக்கு அமர்ந்து படிப்படியாக முன்னேறி Mr. Wonfar என்ற டைரக்டரின் மதிப்புக் குரியவராகி Accounts Departmantல் Provident Fund Manager ஆகப் பதவியில் அமர்த்தப் பட்டார். அவருக்குக் கம்பெனியில் உள்ள மேலதிகாரிகளிட மிருந்து நல்லபெயர் கிடைத்தது. அச்சமயம் நம் செங்குந்த குலத்தைச் சேர்ந்த 25க்கும் அதிகமான நபர்களை அக் கம்பெனியில் வேலைக்கு அமர்த்தி அவர்களை ஊக்குவித்தார்.

சிறு வயதிலிருந்தே கடவுள் பக்தி உடையவராய் இருந்ததால் 1905ஆம் வருடம் திருக்காரணி அருள்மிகு காரணீஸ்வரர் கோவில் கோபுரம் கட்ட அஸ்திவாரம் போடப்பட்டு 1914ஆம் வருடம் (அஸ்திவாரம் முடிந்து) கும்பாபிஷேகம் நடந்தபோது இருபது வயதே நிறைந்த திரு. முக்கலார் நடேச முதலியாருக்குக் கும்பாபிஷேகம் நடத்தும் பொறுப்பைசெங்குந்த சபையாரால் கொடுக்கப்பட்டது. அதை அவர் தனது தம்பி முக்கலார் எம். தங்கவேலு முதலியாரின் துணையுடன் கும்பாபிஷேக காரியங்களைத் திறம்படச் செய்து முடித்தார்.

1919 முதல் 1923 ஆம் ஆண்டு வரை அருள்மிகு காரணீஸ்வரர் கோயிலுக்குத் தர்மகர்த்தாவாக இருந்த பெரங்களத்தூர் நாகப்ப முதலியார் (Revenue Inspector) திருமதி இராஜாம்பாள் அம்மாள் அவர்களின் மகளான சொர்ணாம்பாள் அம்மாளை இல்வாழ்க்கைத் துணையாகக் கொண்டு இல்வாழ்கையில் கடவுள் தொண்டையும் செய்து வந்தார். இவருக்கு நான்கு மகன்களும் ஒரு மகளும் உண்டு.

கோவில் தொடர்பு உடையவராகவும் ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற எண்ணத்துடனும் திரு. முக்கலார் நடேச முதலியார் இருப்பது

செங்குந்தர் குலத்தில் பிறந்த நாம், 67½ ஆண்டுகள் வாழ்ந்து மறைந்த வள்ளல் சபாபதியாரை, நமக்கொரு வழிகாட்டியாகக் கொள்வோம்.

நாம் ஈடுபட்டிருக்கும் துறையில் நம் ஆற்றலைப் பெருக்கி மேலும் மேலும் உயர்வோம்.

'செங்குந்தர் ஒருவர் உயர்ந்துள்ளார்,' என்று யாவரும் செங்குந்தர் குல மாண்பை வியந்திட வைப்போம்.

உயரச் செல்லும் நாம் கீழே இருக்கும் நம் சமூகத்தாரையும் உயர்த்திடப் பாடுபடுவோம்.

நுண்ணறிவு மிக்கவர்களாக இயற்கையாகவே நம் செங்குந்தர் சமூகம் அமைந்திருக்கிறது.

நுண்ணறிவைச் செயல் திறனாக மாற்றிக் கொண்டு நம் குலம் தழைக்கத் தொண்டுள்ளத்தோடு பாடுபடுவோம் என்பதை ஒரு சூளுரையாக ஏற்போம். உயர்வது எப்படி? உயர்த்துவது எப்படி? என்பதை வள்ளல் சபாபதியார் வாழ்வின் மூலம் கற்போம்.

பழங்காலச் செங்குந்தப் புலவர்கள்

1. கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்
2. பொய்யா மொழிப்புலவர் (தஞ்சைவாணன் கோவை இயற்றியவர்)
3. படிக்காசுத் தம்பிரான்
4. பகழிக்கூத்தர்
5. இரட்டையர்
6. உரிச்சொல் நிகண்டுரைத்த காங்கேய முனிவர்
7. சிதம்பர சுவாமிகள்
8. கச்சியப்ப முனிவர்
9. கோனேரியப்ப நாவலர்
10. பிறைசை அருணாசல சுவாமிகள்.

நீ இரவில் படுக்கும்போது, "நாம் இன்று காலை கண் விழித்து எழுந்தது முதல், இப்போது கண்ணுறங்கப் படுக்கும் இதுவரை என்ன என்ன நன்மைகள் புரிந்தோம்? நம்மால் இன்று யாருக்கு என்ன பயன் உண்டாயிற்று? மனத்தாலே வாக்காலே காயத்தாலே நாம் இன்று செய்த நலங்கள் யாவை?" என்று எண்ணு.

ஒரு வியாபாரி கடையை மூடும்போது வாரவு செலவு பார்த்து இருப்புத் திட்டம் கட்டுவதுபோல், நீ கண்ணை மூடி உறங்கு முன் நீ செய்த புண்ணிய பாவங்களை நினைத்துப் பார்த்து புண்ணியந்தான் இருப்புத் திட்டம் எனக்கொள்.

—வாரியார்

பெண்கட்குக் கல்வி வேண்டும்
குடித்தனம் பேணுவதற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்
மக்களைப் பேணுதற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்
உலகினைப் பேணுதற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்
கல்வியைப் பேணுவதற்கே?

—பாரதிதாசன்

8. திரு. பா. இரத்தின சபாபதி முதலியார்

புலவர் ஆ. வீரவாகு, குரோம்பேட்டை



திரு. பா. இரததின சபாபதி முதலியார்

தொண்டை நாடு - அருவா நாடு, அருவா வடதலை நாடு, வேங்கை நாடு என்ற பல பகுதிகளைத் தன்னகத்தே கொண்டது. சங்க காலத்துத் தொண்டைமான் இளந்திரையன் என்ற மன்னன் ஆண்டதாக மணிமேகலை கூறுகின்றது. தொண்டை நாடு சான்றோர் உடைத்து என்பது தனிப்பாடல். சவ்வாது மலையில் சந்தனக் காடுகள் நிரம்ப உண்டு. இத்தகைய இயற்கைக் கவின் கவிந்த பகுதியே வடார்க்காடு மாவட்டமாகும். இதன்கண் வேலூர், திருப்பத்தூர், குடியேற்றம், செய்யாறு, காஞ்சிபுரம் போன்ற ஊர்களில் ஒன்று ஆரணி என்பதாகும். இங்கு பட்டுத் தொழிலும் உழவுத் தொழிலும் தோல் பதனிடும் தொழிலும் சிறப்புற நடைபெறுகின்றது. புன்செய்ப் பயிறும் மிகுதி. இவ்வாறு பல நலங்களும் ஒருங்கே யுடையது தொண்டை நாடு.

இந் நாட்டின் கண்ணே நடுநாயகமாக இலங்கும் ஆரணி என்ற பேரூரில் நமது மதிப்பிற்கும் மரியாதைக்கும் தொலை நோக்குக் கண்ணோட்டத்திற்கும் உரியரான பகுத்தறியும் சிந்தனை தோய்ந்த நம் பெரியார் திரு. பா. இரத்தின சபாபதி முதலியாரவர்கள் 1894 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாளில் பாலசுந்தர முதலியாருக்கும் அமிர்தம் அம்மையாருக்கும் அருமகவாகத் தோன்றினார்.

இவர்கள் நெசவுத் தொழில் செய்து வந்த குடும்பத்தில் பிறந்தார்கள். தங்கள் ஊரிலேயே தொடக்கக் கல்வியைப் படித்து முடித்தார்கள். மேற்கொண்டு தொடர்ந்து படிக்க ஆரணியில் வாய்ப்பு இல்லை. காஞ்சிபுரத்தில் மேற்படிப்பு படிக்கும் வாய்ப்பு இருந்தது. அதனால் காஞ்சிக்கு வந்தார். தம் தந்தையாருக்கு நண்பரான குழந்தைவேல் முதலியார் இல்லத்தில் வந்து தங்கினார். பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து மேல் படிப்பைத் தொடர்ந்தார். எஸ். எஸ். எல்.சி. படிப்பை முடித்தார். சிறந்த தேற்சியையும் நிறைந்த மதிப்பெண்களையும் பெற்றார்.

நம் பெரியாருக்கு சென்னை துறைமுகத்தில் கஸ்டம் ஹவுசில் பணிவாய்ப்பு அமையப் பெற்றதால், காஞ்சியை விடுத்து ஆலந்தூருக்கு வந்து சேர்ந்தார். பணியில் அமர்ந்து தம் கடமைகளைக் கண்ணும் கருத்துமாக நிறைவேற்றி வந்தார். தமது நண்பரோடும், தம்மோடு பணியாற்றும் பிற அலுவலர்களோடும் நயமாகப் பழகுவார். தம்மோடு பழகும் அண்டை வீட்டாரோடும் தெருவாரோடும் இனிதே பழகி வந்தார். உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கண் இடுக்கண் களைவதே நட்பாம் என்ற முதுமொழிக் கேற்ப நண்பர்கட்கு வரும் இடையூற்றினை இடுக்கண்களைக் களைந்து உதவுவது அவர்தம் இயல்பு. அற்றார்க்கும் அலந்தார்க்கும் உதவி ஆறுதல் அளிக்கும் இயல்பினர். உற்றுழி உதவுவார்; உறுபொருள் தருவார். தன்னை நேசித்தார் தம் நேயத்தை மேன்மேலும் வளர்த்துக் கொள்வார். அலுவலாளரிடத்தும் உடன் பணியாற்றுவாரிடத்

வாழ்க அப்பெருமகனாரின் நினைவு. அவரைப் பின்பற்றி இன்றுள்ள செங்குந்த குலப் பெரு மக்கள் ''தட்சிணாமூர்த்தி முதலியார்களாக'' மாறினால், நமது செங்குந்தர் இனம் வாழும்; வளரும்.

திரு. தட்சிணாமூர்த்தி முதலியார் அவர்கள் மயிலாப்பூரிலுள்ள அருள்மிகு வெள்ளீசுவரர் கோயில் அறங்காவலராக 1933 முதல் 1935 வரையிலும் பிறகு 1937முதல் 1948 வரையிலும் இருந்துவந்து கோயில் வளர்ச்சிக்குரிய அநேக ஆக்க வேலைகள் செய்திருக்கிறார். அவர் அறங்காவலராக இருக்கும்பொழுது தான் 1933 ஆம் ஆண்டிலே 10 நாள் பிரம்மோற்சவம் (வைகாசிப் பெருவிழா) துவக்கப்பட்டது.

---

1. குரோதமும் அழுக்காறும் உள்ளவனுக்குச் செல்வம் இல்லை.
2. இம்சிக்கின்றவனுக்கு நண்பன் இல்லை.
3. குரூரனுக்குப் பெண் இல்லை.
4. சுகியாக இருப்பவனுக்குக் கல்வி இல்லை.
5. காமிக்கு வெட்கம் இல்லை.
6. சோம்பேறிக்குப் பணம் இல்லை.
7. உறுதியில்லாதவனுக்கு ஒன்றுமேயில்லை.

—வாரியார்.

அன்பும் அருளும் அறிவிற்கு அடையாளம். அறிவுள்ளவன் அன்பும் அருளும் உடையவன். சிற்றறிவு உடையது உயிர். பேரறிவு உடையது கடவுள். அன்பை வளர்க்க அறிவு வளரும். அறிவு வளரக் கடவுளை நெருங்குவோம்.

—ஞானியார் சுவாமிகள்

1. கற்பிக்கப்பட்டபின் சீடன் குருவைக் கவனிக்க மாட்டான்.
2. திருமணம் ஆனவன் தாயைக் கவனிக்கமாட்டான்.
3. ஆசையற்றவன் பெண்ணைக் கவனிக்க மாட்டான்
4. பயனை அடைந்தவன் உதவி செய்தவனைக் கவனிக்கமாட்டான்.
5. கரையை யடைந்தவன் படகைக் கவனிக்கமாட்டான்.
6. நோய் நீங்கினவன் மருத்துவனைக் கவனிக்கமாட்டான்.

—வாரியார்

அறிவு வளர வளர இன்பம். ஆசை வளர வளர துன்பம். இன்பத்தை வளர்க்க வேண்டுபவன் அறிவை வெளியே பொறிகள் வழியே செலுத்தாமல், உள்ளே இருக்கும் கடவுளிடத்துச் செலுத்துதல் வேண்டும்

—ஞானியார் சுவாமிகள்

பஞ்ச சபைகள்

1.	திருவாலங்காடு	இரத்தின சபை
2.	சிதம்பரம்	கனக சபை
3.	மதுரை	ரஜித சபை
4.	திருநெல்வேலி	தாமிர சபை
5.	திருக்குற்றாலம்	சித்திர சபை

9. செங்குந்த இளைஞர்களுக்கு வாழ்வளித்த செம்மல்

P. S. சாம்பசிவம், (Secretary, T. S. S. Nidhi Ltd., Mylapore)



திருவாளர் அ. தட்சிணாமூர்த்தி முதலியார்

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் திருமயிலையில் ஆடம் தெருவில் வாழ்ந்து வந்தவர் செங்குந்த இனத்தைச் சேர்ந்த திரு அ. தட்சிணாமூர்த்தி முதலியார் என்னும் பெருந்தகையார். அவர் *9-12-1894* அன்று பிறந்தார். அந்தக் காலத்தில் பத்தாவது வகுப்பு வரை படித்து நடுவண் அரசு இலாகாவான இந்தியத் தபால் தந்தி இலாகாவில் போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் அலுவலகத்தில் (Postmaster genenral's office, Madras) *1913* ஆம் ஆண்டில் எழுத்தர் பணியில் அமர்ந்தார். படிப்படியாகப் பதவி உயர்வுபெற்று மூத்த தலைமை எழுத்தராகச் சிறப்பாகப் பணியாற்றி 1954 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டியவர் *16-4-1954* அன்று அகால மரணமுற்றார். அன்னாரது மறைவு அவர் குடும்பத்திற்கு மட்டும் இன்றி செங்குந்தர் இனத்திற்கே பேரிழப்பு.

அவர் அரசுப் பணி புரிந்த காலத்தில் தமது இனத்தைச் சேர்ந்த செங்குந்த இளைஞர்களுக்குத் தனது இலாகாவில் வேலை வாங்கித் தருவதில் முன்னோடியாகத் திகழ்ந்தார். படித்த செங்குந்த இளைஞர்களுக்கு வேலை வாங்கித்தந்து அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்பதனையே தன் வாழ்க்கையின் குறிக்கோளாக அப்பெருந்தகையார் கொண்டிருந்தார். அக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு முனைந்து பாடுபட்டார். தனது பதவியையும் செல்வாக்கையும் பயன்படுத்தி இந்திய தபால் தந்தி இலாகாவில் செங்குந்த இளைஞர்களுக்கு வேலை வாங்கித் தந்து வாழ்வளித்தார். அவ்விதம் வாழ்வளிக்கப்பட்ட செங்குந்த இளைஞர்கள் குறைந்தது இருபது நபர்கள் இருப்பார்கள். இப்பெருந்தகையாரின் இச்சீரிய செயலுக்கு அவரது இனப்பற்று தான் காரணம். தனது இனத்தாரை உயர்த்துவதையே குறிக்கோளாகவும் கடமையாகவும் கொண்டிருந்தார். எத்தகைய கைம்மாறும் கருதாது அவர் இத்தகைய பேருதவியைச் செய்து கொண்டிருந்தார். உதவியை வலியச் சென்று செய்தது, அவரது தனிப்பெருமை. தன் சமுதாயம் உயர்வடைய இந்த மகத்தான தொண்டினை அவர் செய்த காலகட்டம் 1940 ஆம் ஆண்டு முதல் 1950 ஆம் ஆண்டு வரை எனக் கொள்ளலாம்.

தான் பெற்றுள்ள பதவியின் காரணமாக மற்றவருக்கு உதவக்கூடிய நிலையிலுள்ளவர்கள் தன் இனத்தாருக்கு உதவியவர்கள் யார் என்று கணக்கெடுத்தால் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே தேறுவார்கள். அத்தகைய விரல்விட்டு எண்ணக் கூடியவர்களில் ஒருவராக சிறப்புற்று விளங்கியவர் நமது பெருந்தகையார் திரு. அ. தட்சிணாமூர்த்தி முதலியார். செங்குந்தர் சமுதாயம் உயர்வடைய வேண்டும் என்ற பெருநோக்குடன் செங்குந்த இளைஞர்களுக்கு வாழ்வளித்தார். அவர்களை உயர்த்தியதின் காரணமாக செங்குந்த மரபினரின் நினைவில் அவரும் உயர்ந்தார்.

புனைந்துள்ளனர். ''ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமை யும் ஏமாப் புடைத்து'' என்று வள்ளு வர் பெருமான் வாயார மொழிந்துள் ளார். இவற்றை எல்லாம் நம் கட்டுரை நாயகர் இரத்தின சபாபதியார் எண் ணிப் பார்த்தார். தம்மிடம் ஒப்படைக் கப் பெற்ற செல்வத்தை கலைக்கூடம் அமைக்க அயராத பெரு முயற்சி எடுத் துக் கொண்டார். சைதாப்பேட்டை பழைய மாம்பலம் நெடும் பாதையில் பத்து மனைகள் வாங்கினார். 1956ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 'சி. அன்ன பூரணி அம்மாள் நடு நிலைப்பள்ளி' என்ற பெயரால் ஒரு பள்ளியைத் துவக்கி னார்.

அப்போது நாற்பது மாணவர்க ளோடு தொடங்கப் பெற்ற தொடக் கப் பள்ளி இன்று (1986-87இல்) ஈராயி ரம் பிள்ளைகள் படிக்கும் நடுநிலைப் பள்ளியாகத் தோற்றம் பெற்றுள்ளது. தொடக்கத்தின்கண் ஆண் ஆசிரியர் ஒருவரும் பெண் ஆசிரியை மூவருமாகத் தொடக்கப் பெற்ற பள்ளி இன்று (1986-87இல்) நாற்பத்தைந்து ஆசிரியை களைக் கொண்ட பெரும் பள்ளியாக உருமாற்றம் பெற்றுள்ளது. இப்பள்ளி இவ்வளவு ஏற்றம் பெற பொருளுதவி தந்து ஊக்கமூட்டி உறுதுணை புரிந்த பெருந்தகையார் முன்னே குறித்த திருமதி. அன்னபூரணி அம்மையார் ஆவர்.

திரு. பா. இரத்தின சபாபதி முதலி யாரும் தன்னலமின்றி அரும்பாடுபட்டு ஒப்புரவாண்மையோடு ஞான விளக்கான பள்ளியைத் தோற்றுவித்தார்கள். அவர்கள் பள்ளியின் தாளாளராக ஏறக்குறைய இருபது ஆண்டுகள் கண்ணும் கருத்து மாக நிறுவகித்து வந்ததால் பள்ளி சீரிய முறையில் உயர்வு பெற்றுள்ளது.

பத்து மனை நிலத்தில் முதன்மை யான பெருங் கட்டிடத்தை இரத்தின சபாபதி முதலியார் கட்டிக் கொடுத்தார். சில ஆண்டுகள் கழிந்த பிறகு தெற்கு சரகக் கட்டிடத்தை இரத்தின சபாபதி முதலியார் சகோதரி திருமதி தனபாக்கி யம் அம்மாளும், தனபாக்கியம் அம் மாளின் கணவர் திரு. மாணிக்க முதலியார் அவர்களும் கட்டிக் கொடுத்தனர். அவ் வாறே வடக்கு சரகக் கட்டிடத்தை திரு. ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள் கொடை யுள்ளத்தோடு கட்டித் தந்தார்கள். இவ் வாறு பள்ளி நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்து ஆல் போல் தழைத்து அருகுபோல் வேரூன்றிப் பொலிந்து மிளிர்கின்றது.

மேலும் முதலியார் அவர்களுடைய வீடு (திருமயிலாப்பூர், செங்கழுநீர் பிள்ளையார் கோவில் தெருவிலுள்ள பதினோராம் எண் வீடு) நான்கு நூறாயிரம் வெண் பொற்காசுகள் பெறுமானமுடையது. தான் வாழ்ந்து மகிழ்ந்த அவ்வீட்டினைத் தன் பெயரால் அறக்கட்டளை நிறுவி படிக்கும் ஒரு நூறு ஏழை மாணாக்கர்கட்கு அறக்கூழ்ச்சாலை அமைத்து மதிய உணவு படைக்கும் ஏற்பாட்டினைச் செய்து சாசனம் படைத்தார்கள்.

''ஊருணி நீர் நிறைந் தற்றே உலக வாம்
பேரறி வாளன் திரு'' என்ற பொய்யா மொழியார் திருவாக்கின்படி திருமதி அன்ன பூரணி அம்மையார், திரு இரத்தின சபாபதி முதலியார் செல்வம் பலருக்கும் பயன்பட்டு பெருவிளைவை நல்குகின்றன.

இன்சொல் விளை நிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்பு நீர் பாய்ச்சி அறக்கதிர் ஈறும் தன்
பைங்கூழ்ச் சிறுகாலைச் செய். என்ற அற நெறிச்சார வெண்பாப்படி நம் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பெரியார் திரு. இரத்தின சபாபதி முதலியார் அவர்கள் அறம் என்ற கதிர் கொடுக்கும் கல்விப் பயிரைச் செய்து சமுதாயப் பண்பை வளர் துள்ளார்கள். அவர்கள் 1975 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ஆம் நாள் இறைவன் திருவடி நிழலை அடைந்தனர். அவர் களது உருவச்சிலை. மேற்படி பள்ளி யின் திறந்த வெளி அரங்கில் 1980 ஆம் ஆண்டில் சென்னைப் பலகலைக் கழகத் தின் முன்னாள் துணை வேந்தர், நெ. து. சுந்தர வடிவேலு, எம். ஏ. எல். டி., அவர் களால் திறந்து வைக்கப்பட்டது.

திரு பா. இரத்தின சபாபதி முதலி யார் வாழ்க்கை வரலாற்றினை திருவாளர் கள் த. முனுசாமி முதலியார், த. சுப்பிர மணிய முதலியார் சொல்லக் கேட்டு எழுதி யது.

உலகத்தார் தினமும் தவறாது செய்ய வேண்டியவை மூன்று: அவை ஏதேனும் ஒரு நல்ல நூலைப் படித்தல்; பெரியர் ஒருவருடன் கூடிப் பழகல்; ஏதேனும் ஒரு சிறு தானம் செய்தல்.

—ஞானியார் சுவாமிகள்

தும் உடன் பிறப்பினராக நடந்து கொள்வார். நல்ல ஆலோசனை கூறி அவர்களை நெறிப் படுத்துவார். நண்பர்கட்கு இடர்ப்பாடு நேரும் போது பொருள் கொடுத்துதவுவார். வட்டியில்லாக் கடனும் கொடுப்பார். கொடுத்த கடனைக் கேட்கவும் மாட்டார். வாங்கியோர் திருப்பித் தரவில்லை எனினும், அதற்காகப் பகைத்துக் கொள்ளவும் மாட்டார். இவ்வாறு பணியும் கடப்பாடும் ஆற்றி இனிது வாழ்ந்து வந்தார்.

சென்னை தங்கசாலைப் பகுதியில் செல்வச் செழிப்புள்ள 'தேங்காய்க்கார வீடு' என்று ஒன்று உள்ளது. இவ்வீட்டைச் சார்ந்த மாணிக்க முதலியார்-பார்வதி அம்மாள் இவர்களது மகள் குப்பம்மாள் என்ற மங்கை நல்லாளுக்கும் நமது இரத்தினசபாபதி முதலியாருக்கும் 20-1-1919 அன்று சீரும் சிறப்புமாகத் திருமணம் நடந்தது.

நம் அன்பிற்குரிய பெரியார் இல்லறத்தை நல்லறமாக பொறுப்போடு நடத்தி வந்தார்கள். அம்மையார் குப்பம்மாளும் வளளுவர் கூறிய வழி தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாது வாழ்வாங்கு வாழ்ந்தார்கள். அங்ஙனம் வாழ்ந்து வருங்கால் குழந்தைச் செல்வம் பேறு நேராதவர்களாக இருந்தனர்.

திருமதி குப்பம்மாளுக்கு மூத்த சகோதரி அன்னபூரணி அம்மாள் என்பவர். அந்த அம்மையாருக்கும் குழந்தைப்பேறு இல்லாது போயிற்று. அவர்கள் ஏழை செங்குந்த நெசவாளிகளின் குழந்தைகளும் பிற இன மக்களும் கல்வி நலம் பெற வேண்டுமென விழைந்தனர். தங்கள் வீடு, மனை, செல்வம் அனைத்தும் ஏழை மக்களுக்காகக் கல்விக் கூடம் அமைக்க அளிக்கலாம் என்ற பெருந்தன்மையான முடிவிற்கு வந்தனர். அம்மையார் அன்னபூரணியும் தம் குடும்பத்திலுள்ள உற்றார் மற்றோர் அனைவரையும் கலந்து ஆராய்ந்தார். அனைவருடைய மன உடன்பாடுகளையும் பெற்றுக் கொண்டார். தங்கள் குடும்ப மாப்பிள்ளையான இரத்தின சபாபதி முதலியாரை அணுகினர். தங்கள் கருத்தை எடுத்து மொழிந்து சைதாப்பேட்டையில் பள்ளி ஒன்று அமைத்து ஏழைப் பிள்ளைகளைப் படிப்பாளியாக மாற்ற முயலவேண்டும். அப்பொறுப்பைத் தங்களிடம் ஒப்படைக்கின்றோம் என்று கூறி அவர் தமக்கு உள்ள சொத்து அனைத்தையும் கல்வி அறக் கட்டளைக்காக சாசனம் செய்து உரிமைப் படுத்திக் கொடுத்தனர். அவரிடம் உறுதி மொழியும் பெற்றுக் கொண்டனர்.

திரு. இரத்தின சபாபதி முதலியார் தம்மிடம் ஒப்படைத்த கல்வி அறக் கொடை சொத்துக்கள் பலரிடம் சிக்கிக் கொண்டிருந்தன. "பிள்ளையில்லாத சொத்துதானே" ஏமாற்றலாம் என எண்ணி இருந்தனர். குடிக்கூலிக்கு இருந்தவர்களை வீட்டை விட்டு அகற்ற பெரு முயற்சி எடுத்துக் கொண்டார்கள். செல்வக் குடும்பங்களை எதிர்த்து அற மன்றத்தில் போராடினார். தமக்கு உரிமைப் படுத்திய தன் மூத்த மாமியார் தம் சொத்து பலபேர் வசம் சிக்கிக் கொண்டது. திரு அன்னபூரணி அம்மையாருக்கும் தமக்கும் பின் சந்ததி பிள்ளை இல்லாத காரணத்தால் பொருளை வீட்டினைப் பற்றியவர்கள் அனைவரும் தம் சொத்து என உரிமை கொண்டாட முனைந்தனர். அதனால் அச் சொத்துக்களை அகப் படுத்தி கல்வி அறக் கட்டளையை நிறைவேற்ற நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து வாதாடி சொத்துக்கள் அனைத்தையும் கையகப் படுத்தி ஒன்று சேர்த்துத் தொகுத்தார்கள். இவருக்கு உறுதுணையாகவும், ஆலோசகராகவும் இருந்தவர் காலஞ்சென்ற காஞ்சிபுரம் அட்வகேட் திரு. நடராஜ செங்குந்தர் ஆவார்.

"பள்ளி இல்லாத ஊரை எரியினுக்கு ஊட்ட வேண்டும்," என்றும் "அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல். அன்ன யாவினும் புண்ணியங் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்" என்றும் பாரதியார் கூறினார். அன்ன தானத்திலும் அவுஷ தானத்திலும் அபய தானத்திலும் முதன்மையானது ஞான தானம்! எங்ஙனம் எனில் கூறுதும். அன்ன தானம் அற்றைப் பொழுதோடு மறக்கக் கூடியது. அவுஷ தானம் நோயும் பிணியும் அகலும் வரை நினைவு கூரத் தக்கது. அபயதானம் உதவிய அன்றே மறக்கும் தன்மையது; ஞானதானமோ வாழ்நாள் முழுதும் நினைந்து நினைந்து சிந்திக்கத் தக்கது. தன்னம்பிக்கை அளிக்கக் கூடியது. பகுத்தறியும் சிந்தனையை அளிக்க வல்லது. வாழ்க்கைக்கு வழி காட்டுவது; மானத்தோடு வயறு வளர்க்க உதவுவது; நெறியறிந்து செல்லவும் நெறியல்லா நெறிகளை அகற்றவும் உதவ வல்லது ஞான தானம். அதனால் தான் அறிஞர்களும் சான்றோர்களும் கல்வி அறக் கொடையை மிகுதியும் போற்றிப்

10. காஞ்சி மணி மொழியார்

A. V. இராமநாதன், M. A.
(Accounts Officer (Retd), Office of the Accountant General, Madras)



காஞ்சி மணி மொழியார்

கச்சித் திருநகர் - பல்லவர் பெருநகர் எம்பெருமான் கோயில் - ஈசன் கோயில் என எண்ணற்ற தேவாலயங்கள் நிறைந்த அழகு நகர் - அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த அரியநகர் - அந்தத் திருநகரில் தான் காஞ்சி மணிமொழியார் தோன்றினார்.

காஞ்சிபுரத்தில் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் மிகப் பெரிய மொத்த வாணிப ஜவுளிக்கடை ஒன்று இருந்தது. அந்தக் கடையின் உரிமையாளராய் - பெரும் புகழ்பெற்ற பெருஞ் செல்வராய்த் திகழ்ந்தவர் பிரமநகர் செங்கல்வராய முதலியார் அவர்கள். சென்ற நூற்றாண்டில், காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையம் மண்டபத் தெருவில் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர் பூசை. நமச்சிவாயப் புலவரிடத்தில் முறையாகத் தமிழ் நூல்களைக் கற்றுணர்ந்த பெருமை படைத்தவர் செங்கல்வராயனார். திருக்குறள், திருவாசகம் ஆகிய இரு நூல்களையும் அவர் தன் கண்களென எண்ணிப் போற்றி வாழ்ந்தார். அறிவுச் செல்வமும், பொருட் செல்வமும் ஒருங்கே அமையப் பெற்றிருந்த அப்பெருந்தகையார், அரசாலை அம்மையார் என்னும் நற்குணச் செல்வியாரை மணந்து, இல்லற வாழ்வை நல்லறப் பாதையில் நன்கினிது நடத்தி வந்தார். அன்பும் இனிமையும் பொருந்தி வாழ்ந்த அந்தத் தம்பதிகளுக்குப் பெண் மகள் ஒருவரும், ஆண்மக்கள் எழுவருமாக எட்டுப் பேர் மக்களாகப் பிறந்தனர். அந்த எண்மரில் எட்டாவது பிள்ளையாகவும் கடைசிப் பிள்ளையாகவும் 9-5-1900 அன்று பிறந்தவரே காஞ்சி மணிமொழியார் அவர்கள். மாணிக்க வாசகம் என்று தாய் - தந்தையர் வைத்த பெயரை மணிமொழியார்' என்று அவரே மாற்றி வைத்துக் கொண்டார். இதிலிருந்து அவரது தமிழ்ப் பற்றை யாவரும் நன்கு உணரலாம்.

மணிமொழியார் எஸ்.எஸ்.எல்.சி வகுப்பு வரையில் காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். எஸ்.எஸ்.எல்.சி இறுதித் தேர்வில் கணக்குப் பாடத்தில் 100 க்கு 100 வாங்கித் தேர்ச்சி பெற்றார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. பொதுவாக எல்லாப் பாடங்களிலும் சிறந்து விளங்கிய மணிமொழியார், தமிழ்ப் பாடத்தில் தலை சிறந்த மாணவராக விளங்கினார். தமிழார்வத்தின் மிகுதியால் அந்தப் பள்ளியில் அப்போது தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய தமிழ்ப் பேரறிஞர் வெண்பாப்புலி வேலுசாமிப் பிள்ளையிடம் வகுப்பில் தமிழ் கற்றதோடு நில்லாமல் மாலை வேளைகளில் அன்னாரின் இல்லத்திற்கே சென்று முறைப்படி தமிழ் நூல்கள் பலவற்றைக் கற்று அறிந்து தேர்ச்சி பெற்றார்

பள்ளியிற் படித்துக் கொண்டிருந்த போதே மாணவர் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகத் தமது பொதுப்பணிக்கான நுழை வாயிலில் பிரவேசித்தார் மணிமொழியார். பத்தாவது வகுப்பில்

களின் இரண்டாவது மகளாகிய அபிராமி அம்மையே மணிமொழியாரின் வாழ்க்கைத் துணைவி யாக அமையும் பேறு பெற்றவர். 3-9-1939 இல் திருச்சி திருவானைக்காவில் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்தர் மூன்றாவது மாதர் மாநாட்டின் திறப்பாளராக இருந்து அம்மாநாட்டை வெற்றியுற நடத்தி வைத்தவர் அந்த அம்மையார் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும். மணிமொழியாருக்குப் பிறந்த மக்கள் ஐவர். அவர்களுள் ஆண்கள் மூவர் பெண்கள் இருவர். மணிமொழியார் 1972 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். தமிழகம், சங்க காலத்தில் பெற்றிருந்த வலிவையும் பொலிவையும் சர்வதேசப் புகழையும் மீண்டும் பெற்று ஓங்கி வளர்வதற்குரிய எல்லா முயற்சிகளையும் தமிழ் மக்கள் செய்ய வேண்டும் என்பதே அவருடைய கடைசி விருப்பம்.

வளர்க மணிமொழியார் தொண்டு!

(இக்கட்டுரை காஞ்சி மணிமொழியார் 71 ஆம் ஆண்டு பிறந்த நாள் மலரிலிருந்து தொகுத்து எழுதப்பட்டது)

ஒரு மனிதனை வெளித்தோற்றத்தை மட்டும் கண்டு நல்லவனென்றோ தீயவனென்றோ உறுதி செய்துவிடாதே. உள்ளத்தின் பண்பைக் கண்டு முடிவு செய்.

பலாப்பழம் முள்ளு முள்ளாக மேலே தோற்றமளிக்கும். உள்ளுக்குள் சுவையுள்ள சுளைகள் பல உண்டு. வீணை கோணல்—ஆனால் இனிய நாதமுண்டு.

எட்டிப்பழம் மேலே பளபளவென்றிருக்கும். தொட்டாலே கசக்கும், நாவற்பழம் கருமை; ஆனால் இனிக்கும். பாம்புக்குட்டி பளபளவென்றிருக்கும்; கொடிய விடத்தைத் தரும். அம்பு நேராக இருக்கும்; உயிரை வாங்கும்.

—வாரியார்

1. பார்த்துக் கெட்டது பிள்ளை
2. பார்க்காது கெட்டது பயிர்
3. இட்டுக் கெட்டது காது
4. இடாது கெட்டது கண்.
5. கேட்டுக் கெட்டது குடும்பம்
6. கேளாது கெட்டது கடன்
7. உண்டு கெட்டது வயிறு
8. உண்ணாது கெட்டது உறவு.

1. தயவு தாட்சண்யம் பார்க்காது பிள்ளைகளைக் கண்டித்து வளர்க்க வேண்டும்.

3. சதா குச்சியிட்டுக் காதைக் குடையக் கூடாது.

4. கண்ணுக்கு மையிட்டால் குளிர்ச்சியுண்டாகும்.

5. பிறர் கூறும் கோள்களுக்குக் காது கொடுத்தால் குடும்பம் அழிந்துவிடும்.

6. கடன் வாங்கினவனை அடிக்கடி கேட்கவேண்டும்.

7. அளவுக்கு மேல் உண்டால் வயிறு கெட்டுவிடும்.

8. தனக்கு எத்தனை பெருமையிருந்தாலும் உறவினர் ஏழையாயிருப்பினும் நலந்தீங்குகளில் உறவினர் வீடுகட்குச் சென்று உண்ண வேண்டும்.

—வாரியார்

வாங்குவதற்கான எல்லா முயற்சிகளையும் மணிமொழியார் முன்னின்று முடித்து வைத்தார். பெருந் தொகையையும் தன் முயற்சியால் திரட்டிக் கொடுத்தார். விடுதி கட்டும் வேலை பெரும் பகுதி முடிந் திருக்கிறது. இக்கட்டடத்தை பூர்த்தி செய்வது நம் சமூகத்தினரின் தலையாய கடமையாகும்.

1929 முதல் 'செங்குந்த மித்திரன்' மாத வெளியீட்டின் துணையாசிரியராக விளங்கி அதன் செழிப்புக்கும் சிறப்புக்கும் உறுதுணை புரிந்து வந்த மணிமொழியார் 1934 முதல் அதன் ஆசிரியராகவே அமர்த் தப்பட்டு 1941 வரை அந்தப் பணியைச் செவ்விதின் நிறைவேற்றி வந்தார். மித்தி ரன் வாசகர்களால் மிக விரும்பிப் படிக்கப் பட்ட ஒரு பகுதி ''மானசீகத் தபால்'' என்பதாகும். இந்தப் பகுதியில், பாமர மக்கள், அரசியல் தலைவர்களுக்கும் பெரிய அதிகாரிகளுக்கும் முதன்மையான அமைச் சர்களுக்கும் எழுதுவது போன்ற பல கற் பனைக் கடிதங்களை ''மாவன்னா'' என்னும் புனை பெயரில் அவர் தீட்டி வந்தார். அந்தக் கடிதங்களை இன்றைக் குப் படித்தாலும் இனிய சுவை தருவன வாக அமைந்துள்ளன.

1938 இல் முகிழ்ந்த இந்தி எதிர்ப்புப் போர்ப்படைக்கு தன்னை ஒரு சேனா வீர ராக்கிக் கொண்டவர் மணிமொழியார். அவர் குடியிருந்த பவழக்காரத் தெரு இல்லத்திலிருந்தே மாபெரும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றைத் திரட்டி நடத்தித் தமிழர்களின் பாராட்டுதல்களைப் பெற் றார். சென்னையில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு ஊர்வலமே அதுதான்! அது முதல் எண்ணற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தி விளக்க மளித்தார்.

1937 இல் 'யங் கிரிட்டிக்ஸ் அசோசி யேஷன்' Young Critics Association அமைப் பின் சார்பில் 'நவயுகம்' என்ற ஒரு வார ஏட்டைத் துவக்கி, அதற்கு பேரறிஞர் அண்ணா அவர்களை ஆசிரிய ராக்கி சமுதாய மறுமலர்ச்சிக்கான எழுத் துச் சேவையினைப் புரிந்தவர் காஞ்சி மணி மொழியார். அதனை அடுத்து 'போர் வாள்' என்ற வார ஏட்டினைத் துவக்கி, தமிழ்காத்து தமிழகத்தை வாழ்விக்கப் புறப்பட்ட தி.மு. கழகத்திற்கான அறி வாயுதங்களை வடித்துக் கொடுக்கின்ற பணிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண் டார்.

17-7-1948 ஆம் ஆண்டு அன்று சென்னை செயிண்ட் மேரி மண்டபத்தில் மறைமலை அடிகளார் தலைமையில் கூடிய வரலாற்றுச் சிறப்புடைய இந்தி எதிர்ப் பாளர் மாநாட்டின் செயலாளராக இருந்து அம் மாநாட்டினை வெற்றிகரமாக்கிய பெருமை நமது மணிமொழியாளரையே சாரும். அம் மாநாட்டில்தான் பெரியார், அண்ணா, புரட்சிக் கவி பாரதிதாசன், மறைமலை அடிகளார், தமிழ்த் தென்றல் திரு. வி.க. ரெவரண்ட் அருள் தங்கையா, ம.பொ. சிவஞானம் முதலிய பல தரப் பட்ட கருத்தினைக்கொண்டவர்களும் தமிழ் உணர்வால் ஒன்றாக இணைந்து நின்ற காட்சியினைத் தமிழகம் கண்டது. இதற்கு மணிமொழியார் உழைப்பும் பேரூக்கமும் தான் காரணமென்றால் மிகையாகாது.

1949இல் சென்னை பிராட்வேயில் அரசியல் தலைவர்களையும், தமிழ்ப் புல வர்களையும் ஒருங்கிணைத்து இவர் நடத் திக்காட்டிய 'திருவள்ளுவர் மாநாடு'ம் வரலாற்றுச் சிறப்புக்குரிய ஒன்றாகும்.

இப்படி சுயமரியாதை இயக்கம் தொடங்கிய காலம் மூதல் இவர் சுமார் ஐம்பது ஆண்டுகட்கு மேலாக தமிழ் மொழிக்கும் - அதிலும் சிறப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்கும் புரிந்து வந்துள்ள சேவைகளும் - பயணத் திற்கிடையே அவர் ஏற்றுக் கொண்ட கஷ்ட நஷ்டங்களும் தியாகங்களும், நன்றிக் கடனுடன் செங்குந்தர் அனைவரும் நினைவு கூர வேண்டிய ஒன்றாகும்.

1962ஆம் ஆண்டு பொதுத் தேர்த லில் தி.மு. கழகம் 50 இடங்களைச் சட்ட மன்றத்தில் பெற்று எதிர்கட்சியாக பணி யாற்றிய போது மணிமொழியார் சென்னை தியாகராய நகரின் பிரதிநிதியாக வீற் றிருந்து சட்டமன்றத்தில் சிறப்பு மிகு பணிகள் பல ஆற்றியுள்ளார். நெசவாளர் பிரச்சினையானாலும் கழகப் பிரச்சினையா னாலும் அல்லது தன்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய தொகுதி வாழ் மக்களுடைய பிரச்சினையானாலும் அங்கே மணிமொழி யாரின் குரல் கட்டாயம் ஒலிக்கும். பேரறிஞர் அண்ணா அவர்களின் பெரு மதிப்புக்குப் பாத்திரமானவர்களிலே மிக மிக முக்கியமானவர் மணிமொழியார் அவர்கள் ஆவர்.

காஞ்சிபுரத்தில் மணிமொழியார் அறுவை (ஜவுளி) வாணிபத்தில் ஈடுபட் டிருந்தபோது, 1923 இல் அவருடைய திரு மணம் நடைபெற்றது. காஞ்சிபுரத்தி லிருந்து 13 கல் தொலைவிலிருக்கும் பெரு நகர் என்னும் சிற்றூரைச் சார்ந்த திரு. வாளர் வி.ஆ. கனகசபை முதலியார் அவர்

அவருடைய எழுத்தாற்றலையும் கண்டு மட்டிலா மகிழ்ச்சியடைந்த நம் சமுகத் தலைவர்கள், ஆசிரியப் பணியிலிருந்து விலகி செங்குந்தர் சமுக முன்னேற்ற இயக்கத்தின் முழு நேரப் பேச்சாளராகத் தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொள்ளும்படி 1928 முதலே அவரை வற்புறுத்தத் தொடங்கிவிட்டார்கள். 1930 இல் அவர்களுடைய அன்பான கட்டளையை மறுக்க முடியாமல் ஆசிரியர் வேலையிலிருந்து விலகி, தென்னிந்திய செங்குந்த மகா ஜன சங்கத்தின் முழு நேரப் பிரசாரராகப் பணியையேற்றுக் கொண்டார். அதுமுதல் அவருடைய சமூகத்தொண்டு முன்னிலும் பன்மடங்கு விரிவாக நடைபெறலாயிற்று. 1928 முதல் 1938 வரை செங்குந்த மக்களின் முன்னேற்றத்திற்காக நாடெங்கும் சுற்றிச் சுழன்று அவர் புரிந்த வீர முழக்கங்களாலும், நடத்திய பொதுக் கூட்டங்களாலும், செங்குந்தர் இயக்கம் ஓங்கி வளர்ந்து செழித்துச் சிறந்து விளங்கலாயிற்று. பி.செ, மாணிக்க வாசக முதலியார் என்கிற பெயரால் அப்போது நாட்டிற்கு அறிமுகமாயிருந்த காஞ்சி மணிமொழியார், இந்தத் துறையில் அவரோடு தோளோடு தோள் சேர்த்து நின்று பணியாற்றிய சென்னை சேத்துப்பட்டுப் பேராசிரியர் ம. சண்முக சுந்தர முதலியார், எம்.ஏ.எல்.டி. சென்னை திருவல்லிக்கேணி தி.அ. சண்முக முதலியார் சென்னை கோடம்பாக்கம் மா.அ. கனகசபை முதலியார் ஆகிய நால்வருமே செங்குந்தர் சமூக முன்னேற்றப் பிரசாரத்தில் பிறர் எவரையும் விட மிக அதிகமாக ஈடுபட்டவர்கள் ஆவார்கள். அந்தக் காலத்தில் செங்குந்தர் சமூக நால்வர் என்றே இவர்கள் நம் சமூகத்து மக்களால் பாசத்தோடும் பரிவோடும் அழைக்கப்பட்டு வந்தார்கள். செங்குந்தர் குல மக்கள் வாழ்கிற ஊர்கள் ஒவ்வொன்றிற்கும். குறைந்தது ஒருமுறையாவது இந்நால்வரும் சென்று வந்திருப்பார்கள் என்பதில் துளியும் ஐயமில்லை. 1932 இல் மணிமொழியார் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கைச் செங்குந்தர் மாநாட்டில் கொடியேற்றி வைக்கச் சென்றபோது, இலங்கை முழுதும் இரண்டுமாத காலம் சுற்றுப் பயணம் செய்து ஏராளமான கூட்டங்களில் சொற்பொழிவாற்றி விட்டு வந்தார்.

செங்குந்தர் சமூகப் பொதுக் கூட்டங்களிலெல்லாம், மணிமொழியார் நம் மக்கள் கல்வியில் முன்னேற வேண்டிதயன் இன்றியமையாமையை வற்புறுத்துவார். காலத்திற்கு ஒவ்வாத சடங்கு சம்பிரதாயங்களையும், அறிவுக்குப் பொருந்தாத மூட நம்பிக்கைகளையும் விலக்கித் தீர வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துப் பேசுவார். தத்தம் ஊருக்குள்ளாகவே பெண் கொள்ளல் - கொடுத்தல் ஆகாது என்பதையும், வெவ்வேறு மாவட்டங்களில் உள்ளவர்களுடனும் திருமண உறவு கொள்ளல் வேண்டும் என்பதையும் வலியுறுத்திச் சொல்வார்.

தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்கத்தின் செயலாளராக விளங்கியபோது இவர் நடத்திய பல்வேறு ஆக்கப் பணிகளில் தலைசிறந்தது செங்குந்தர் கல்வி நிதி என்னும் அமைப்பை உருவாக்கிய தேயாகும். நம் சமுகத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய பட்டதாரிகள் மட்டுமே இருந்த அந்தக் காலத்தில் நம் சமுகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளித்து அவர்களுடைய கல்வியின் முன்னேற்றத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதற்காகவே மணிமொழியார் மற்றோர் செயலாளராகிய பேராசிரியர் சண்முக சுந்தரனாருடன் இணைந்து நின்று இந்த அமைப்பை ஏற்படுத்தினார்கள். இதற்காக 1929-30 ஆம் ஆண்டுகளில் 'லாட்டரித் திட்டம்' ஒன்றை ஏற்பாடு செய்து நாடெங்கும் பெருமுயற்சி செய்து லாட்டரிச் சீட்டுகளை விற்றுப் பதினெட்டாயிரம் ரூபாய் திரட்டினார் அந்தச் செயல் வீரர். பரிசுத் தொகைகளும் செலவும் போக எஞ்சிய பணம் முழுவதும் வங்கியில் போடப்பட்டு, நாளடைவில் மேலும் பலருடைய நன்கொடைகள் அந்தத் தொகையோடு சேர்க்கப்பட்டு கிடைக்கும் வட்டியிலிருந்து 1935 முதல் ஆண்டு தோறும் நம்குல ஏழை மாணவ மாணவிகட்கு உபகாரச் சம்பளமாக அளிக்கப்பட்டு வருகிறது.

நம் இயக்கத்துக்கு அவர் செய்துள்ள மிகச் சிறந்த—எல்லாவற்றிற்கும் மேலான—என்றென்றும் போற்றிப் பாராட்டத்தக்க பணி - மாணவர் விடுதி ஒன்று அமைப்பதற்காக அவர் மேற்கொண்ட முயற்சியேயாகும். அவர் செங்குந்த மித்திரன் ஆசிரியராக இருந்தபோது மாணவர் விடுதி' அமைக்க வேண்டியதின் அவசியம் பற்றி அடுக்கடுக்கான காரணங்களை ஒவ்வொரு இதழிலும் தவறாமல் வலியுறுத்தி எழுதி வந்ததால் நம் சமூகப் பெரியவர்களும் அந்தக் கருத்து மிகச் சிறந்த ஒன்று என ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாயிற்று. சங்கத்தைத் துவக்கிய தலைவர்களில் முக்கியமான திருவாரூர் சபாபதி முதலியார் அவர்கள் பேரால் 'வள்ளல் சபாபதி முதலியார் மாணவர் விடுதி' கட்டுவதென முடிவெடுக்கப்பட்டது. தி.மு. கழகத்துக்குச் சொந்தமாக இருந்த பெரிய திடல் ஒன்றை

படித்துக் கொண்டிருந்த போதே மிக்க எதிர்ப்புகளுக்கிடையே 1918 ஆம் ஆண்டில் தமிழ் இளைஞர் சங்கம் ஒன்றையும் சர். பி. தியாகராசர் வாசகசாலை' ஒன்றையும் தொடங்கி 1930 வரை அவற்றின் செயலாளராக இருந்து தமிழ்ப் பணிக்குத் தன்னைக் கூர்மைப் படுத்திக் கொண்டார். 'கச்சிக் கலாவல்லித் தமிழ்ச் சங்கம்' என்ற ஒன்றினையும் நூல் நிலையம் ஒன்றினையும் துவக்கி அவற்றின் மூலம் பலரும் போற்றி வியந்திடும் வண்ணம் சொற்பொழிவுகளாற்றி பகுத்தறிவுக் கருத்துக்களையும் அறிவியல் விளக்கங்களையும் குறள் சிறப்புக்களையும் பொதுமக்களின் பரிசீலனைக்கு அளித்து வந்தார். இப்படியாக மணிமொழியார் அவர்களின் பொது வாழ்வு பள்ளிக்கூடப் பருவத்திலேயே ஆரம்பமாகிவிட்டது.

மணிமொழியார் எஸ்.எஸ்.எல்.சி வகுப்பிற் பயின்று கொண்டிருந்த போதே அவருடைய மூத்த அண்ணன் திருவாளர் பி.செ. முருகேச முதலியார் இறந்து விட்டதாலும், அதற்கு இரண்டு ஆண்டுகட்கு முன்னரே அவருடைய தந்தையார் இறந்து விட்டதாலும் அந்த வகுப்போடு தன் கல்வியை முடித்துக் கொண்டு, குடும்பத்தின் ஜவுளிக் கடையைத் தொடர்ந்து நடத்த வேண்டிய ஒரு சூழ்நிலைக்கு ஆளானார். 1919 முதல் 1923 வரையில் அந்த வாணிபத்தை உயர்ந்த முறையில் நடத்தி வந்த அவர், 1922 இல் அந்த வாணிப வளர்ச்சிக்காக பர்மா சென்று இரங்கூன், மந்தாலை முதலிய பல பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்தார். பலவேறு காரணங்களால் 1924 இல் வாணிபத்தை நிறுத்தி விட்ட அவர், அதே ஆண்டில் வாலாஜாபாத்தில் உள்ள இந்துமத பாடசாலையில் ஆசிரியப் பணியை ஏற்று, 1927 வரையில் அதை சீரிய முறையில் நடத்தி வந்தார். 1927 முதல் 1930 வரை காஞ்சிபுரத்தில் உள்ள பச்சையப்பன் கிளைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

அந்தப் பருவத்தில் தான் திராவிட இயக்க வளர்ச்சிப் பணியில் மட்டற்ற உற்சாகத்துடன் உழைத்து வரத் தலைப் பட்டார். பனகல் அரசர், சர். ஆர்க்காடு இராமசாமி, சுரேந்திரநாத், டி.வி. சுப்பிர மணியம், ஜே. என். கண்ணப்பர் போன்ற அக்காலப் பிரமுகர்களை வைத்து பகுத் த்றிவுப் பிரசாரப் பொதுக் கூட்டங்களை நடத்தி வந்தார். 1930 க்குப் பிறகு ஆசிரி யப் பொறுப்பிலிருந்து விலகிய நமது மணி மொழியார் முழுநேரப் பொது வாழ்வில் ஈடுபட்டார். தமிழகம் என்று மட்டுமல்லா மல் அவர் யாழ்ப்பாணம், மலேயா, சிங் கப்பூர் முதலிய நாடுகளுக்கெல்லாம் சுற்றுப் பயணம் செய்து தமிழ், தமிழர் மேன்மை, தமிழர் முன்னேற்றம் அதற்கான வழி முறைகள் பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

காஞ்சி மணிமொழியார் நம் (செங்குந்தர்) சமுதாயத்தைச் சேர்ந்தவர். நம் சமுதாயம் 60 ஆண்டுகட்கு முன்பு, கல்வித் துறையிலும், பொருளாதார நிலையிலும் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பதைக் கண்ட நம் சமூகப் பெரியார்கள் பலர் ஒன்று சேர்ந்து 1927 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சென்னை நகரில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என்னும் ஓர் அமைப்பை உருவாக்கினார்; அதன் வாயிலாக நாடெங்கிலும் உள்ள செங்குந்தர்களை ஒன்று திரட்டி முன்னேற்றமுறச் செய்யும் மாபெரும் தொண்டில் ஈடுபடலானார்கள். இந்த அரிய முயற்சியை அறிந்த மணி மொழியார் தனது ஒய்வு நாட்களிளெல்லாம் செங்குந்தர்கள் வதியும் சிற்றூர்களுக்கும், பேரூர்களுக்கும் சென்று, செங்குந்தர் சங்கங்கள் நிறுவியும், ஏராளமான பொதுக் கூட்டங்கள் கூட்டி விரிவுரையாற்றியும் நம் சமூக முன்னேற்றத்திற்காக அரும் பணியாற்றினார். 1928 - 29 ஆம் ஆண்டுகளில் அவருடைய இந்தத் தொண்டு பன்மடங்கு தீவிரமாகவும் வேகமாகவும் நடைபெற்றது. 21-1-1929 இல் ஈரோட்டில் கூடிய தென்னிந்திய செங்குந்த மகா ஜன சங்க நிர்வாகக் குழுவின் கூட்டத்தில் அச்சங்கத்தின் இரண்டு செயலாளர்களில் ஒருவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, மூன்று ஆண்டுகள் அந்தப் பணியைத் திறம்பட நடத்தி வந்தார். அச்சங்கத்தார் நடத்தி வருகின்ற செங்குந்த மித்திரன் என்னும் மாத இதழுக்கு 24-2-1929 இல் அவர் துணை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அந்தச் சமயத்தில் அந்த இதழின் ஆசிரியராக இருந்தவர், பிற்காலத்தில் காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியின் முதல்வராக ஒளிவீசித் திகழ்ந்த பேராசிரியர் ம. சண்முக சுந்தர முதலியார், எம்.ஏ.எல். டி அவர்கள் ஆவார். செங்குந்த மித்திரன் துணை யாசிரியராக இருந்தபோது அந்த இதழில் மணிமொழியார் அவர்களால் தீட்டப்பட்டு வந்த கட்டுரைகள் சுண்டிச் சோர்ந்த நரம்புகளுக்கும் சுறுசுறுப்பூட்டும் 'டானிக்'குகளாகவும் தளர்ந்த தேகத்திற்கு வன்மையூட்டும் உயிரோவியங்களாகவும் விளங்கின.

பொது நலப் பணியாற்றுவதில் அவருக்கு இருந்த பேரார்வத்தையும், கடல் மடை திறந்தாற் போல் சொன்மாரி பொழியவல்ல அவருடைய பேச்சுத் திறமையையும், பேரறிஞர்களையும் கவரவல்ல

12. திரு. V. இரத்தின முதலியார், B.A., B.L.

ச. கு. பா. பழனிவேலு,
(பொதுச் செயலாளர் தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கல்விச் சங்கம்)



திரு. V. இரத்தின முதலியார்

திருமயிலாடுதுறையின் பகுதியாம் கூறைநாடு என்ற பழம் பதியில் திருமணப் புடவைகளையும், வேட்டிகளையும் பட்டினும் நூலினும் பாங்குடன் நெய்து பிற இடங்கட்கு அனுப்பி வணிகத் தொடர்பு கொண்டிருந்த செங்குந்த குடியில், கோடி அறுவை வணிகத்தால் கோடி வீடென்ற புகழ் பெற்ற குடும்பத்தில் வீரப்ப முதலியார் அவர்கட்கும் அவர் தம் வீட்டரசிரியார் மாரிமுத்தம்மாள் அவர்கட்கும் நற்றவப் பயனால் 22-11-1903 ஆம் ஆண்டு தோன்றிய ஆண்மகவே இரத்தினம் என்ற பெயர் வளர்ந்துவாழ்ந்த நமது அருமை அன்பராவார்.

இரத்தினம் ஒளி மிகுவதற்கு அது பல கல் தச்சர்களினால் கடையப்படுவது நாமறிந்த உண்மை. நமது இரத்தின மணி தனது அறிவொளி திக்கெட்டும் வீசுவதற்கு குடும்பத்தில் பற்பல இடர்பாடுகளை அனுபவித்து கருத்தூன்றி பயின்று அவ்வட்டாரத்தில் ஏன் தஞ்சை மாவட்டத்திலுள்ள செங்குந்தர்களிடையே முதலாவது பட்டதாரியாகவும், வழக்கறிஞராகவும் திகழ்ந்தார்.

இவர் முதலில் திருமணம் செய்து கொண்ட இவர் தம் மூத்த மனைவியார், ஒரு பெண் மகவை ஈன்று பின் உயிர் நீத்தார். அடுத்து தமது தமக்கையார் மகள் இராசாம்பாள் அவர்களை மணந்து நல்லற மக்கள் பலரை பெற்று தக்க கல்வி பயிற்றுவித்து சிறப்பான வாழ்க்கை நடாத்தி வந்தார்கள்.

சென்னையில் 1928ஆம் ஆண்டு முதல் 1935ஆம் ஆண்டுவரை வழக்கறிஞராக பணியாற்றினார். பின்னர் 1955 ஆம் ஆண்டு வரை இருபது ஆண்டு காலம் நம் மாநிலத்திலும், மன்னார்குடி, வேலூர், விருத்தாசலம் மற்றும் கேரள மாநிலத்தில், பல்வேறு நகரங்களிலும் மாவட்ட முன்சீப் ஆகவும், உதவி நீதிபதியாகவும், தொண்டாற்றினார். அன்றைய அரசு இவருடைய அரும் பணிகளை கூர்ந்து கவனித்து 1958ஆம் ஆண்டில் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவராக பணியாற்றும் வாய்ப்பினை அளித்து மகிழ்ந்தது.

1963ஆம் ஆண்டில் ஓய்வு பெற்று "உழைப்பிலா உடல் உளுத்துவிடும்", என்னும் ஆன்றோர் மொழிக்கிணங்க 1964 முதல் 1982 வரையில் சென்னை உயர்நீதி மன்றத்தில் மீண்டும் வழக்குரைஞராக பணியாற்றி வந்தார்.

இவர்கள் தெய்வப் பணியில் சிறப்பாக பணியாற்றும் அன்பர். தருமையாதீன மகாசந்நிதானங்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவர்கள். தங்கள் குடும்பத்தின் அறக் கட்டளைகளை சிறப்புடன் நடாத்தி வந்து பிறகு தனது சகோதரர்களிடம் முழுப் பொறுப்பையும் ஒப்படைத்த பெருந்தகையாளர் ஆவார். இவர்கள் எளிமையான வாழ்க்கையும், இனிய பேச்சும்,

கல்வி நிறுவனங்களுக்கும் நம் சமூகத்திற்கும் தன்னாலியன்றவற்றை இறுதிவரை செய்தார்.

இவர் பணி செய்த நாட்களில் இவரது நேர்மை, சாந்தம், தூய்மை, தெய்வ பக்தி முதலிய நற்பண்புகள் எல்லோரையும் கவர்ந்ததால், பலரும் இவரிடம் அன்பு கொண்டிருந்தனர். இவருடைய தொண்டு புரியும் மனப்பாங்கு எல்லோரையும் கவர்ந்தது. தன் பதவியின் அதிகாரத்தைத் தன் குடும்பத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளாமல் பெருந்தன்மையுடன் ஏழை பணக்காரர் என்று வித்தியாசம் பாராமல் எல்லாருக்கும் உதவினார்.

கொடுத்தலும் இன் சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப்படும்.

என்பதற்கு உதாரணமாக சுற்றத்தாரும் உற்றாரும் இவரைச் சார்ந்திருந்தனர். செங்குந்தர் குலத்தில் பல குடும்பங்களுக்கும் பல இளைஞர்களுக்கும் உதவியுள்ளார். வட ஆற்காடு தென்னாற்காடு போன்ற மாவட்டங்களில் இவர் உதவி பெற்ற பல விவசாயக் குடும்பங்கள் இன்றும் இவரை நினைவுபடுத்திக் கூறுகின்றன. அதுபோல் இவர் உதவிபெற்ற பல தகுதியுள்ள இளைஞர்கள் இன்றும் மின் வாரியத்தில் வேலை புரிகிறார்கள். அவர்களும் இவரைப் பற்றி நன்றியுடனும் மரியாதையுடனும் நினைவு கூர்கிறார்கள்.

பண்புடையவர்கள் என்று தெரிந்தால் உயர்வு தாழ்வு பாராமல், நெருக்கமாகப் பழகுவார், பழகுவதற்கு இனியவர்.

'அன்பின் வழியது உயிர் நிலை' என்பதற்கேற்ப நண்பர்களிடமும், பண்புடையவர்களிடமும், மிகவும் அன்பு செலுத்தியவர். கொடுத்த வாக்கு பிறழாதவர். 'பயனில் சொல் பாராட்டல்' பழக்கம் சிறிதும் இல்லாதவர். இரட்டுற பேசி பிறரை ஏமாற்றுவதும் இவரிடம் கிடையாது. 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' இருந்ததால் பலரும் இவரை மதித்து போற்றினர்.

இவர் எளியோரிடம் பரிவுடன் இருந்ததோடு தானும் எளிய வாழ்க்கையை விரும்பி மேற்கொண்டார்; கர்வமின்மை, மனிதத் தன்மை ஆகிய குணங்கள் இவரிடம் ஒளிவீசின. 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பதற்குச் சான்றாக இவர் வாழ்க்கை அமைந்திருந்தது. எளிமை குணமுடையவராதலால், பலரும் இவரை நெருங்கித் தம் கஷ்டங்களைப் பற்றிக் கூற முடிந்தது. அவைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு ஆறுதல் கூறி தன் பதவியினால் செய்யக்கூடிய உதவிகளைச் செய்தார். இவர் ராமகிருஷ்ணா பள்ளிகளின் கரஸ்பாண்டெண்ட் ஆக இருந்தபோது ஆசிரியர்கள் தங்கள் பணிசார்ந்த பிரச்னைகளையும் கஷ்டங்களையும் விரிவாகக் கூற முன் வந்தனர். அவர்களுடன் கலந்தாலோசித்து அவர்களுக்கு உதவும் வகையில் முடிவெடுக்க சுவாமிஜீகளிடமும் நிலைமையை விவரித்து ஆலோசித்து ஆசிரியர்களுக்கு உதவிவந்தார். ஆசிரியர்கள், மாணவர்களின் நலத்தில் இவர் கொண்டிருந்த அக்கரை, பொறுப்புணர்ச்சி, அவர்கள் இவர் மீது கொண்டிருந்த மதிப்பு அன்பு ஆகியவற்றைக் கண்ட சுவாமிஜீகளும் இவருடன் மிகவும் ஒத்துழைத்தார்கள். ஆசிரியர் நலனில் இத்தனை அக்கரைக் கொண்ட தாளாளர் Correspondent திரு. கந்தசாமி முதலியாருக்குப் பிறகு இல்லை என்று இன்றும் இராமகிருஷ்ணா பள்ளி ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

இவர் அரசு பணியிலிருந்ததால் அரசியலில் பங்கேற்க முடியவில்லையாயினும் முன்பிருந்த நீதிக் கட்சி (ஜஸ்டிஸ் பார்ட்டி) இடம் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார். அந்தக் கட்சியின் முக்கிய நிர்வாகிகளான சர். பி.டி. ராஜன் சண்டே அப்சர்வர் பால சுப்பிரமணியன் முதலியோர் இவருக்கு நெருங்கிய நண்பர்கள். பார்ப்பனர் அல்லாதாரும் முன்னுக்கு வரவேண்டும் என்னும் ஆர்வம் கொண்டிருந்தவர் இவர்.

திரு. கந்தசாமி முதலியார் தன் மாமன் மகளையே திருமணம் புரிந்து கொண்டு இல்லறம் நடத்தினார். இவருக்கு 3 பெண்கள் ஒரு பிள்ளை; பெண்கள் மூவரையும் பட்டதாரிகளாக்கினார். கடைசி மகள் தற்பொழுது இராணி மேரிக் கல்லூரியில் இயற்பியல் துறையில் பேராசிரியையாகப் பணியாற்றி வருகிறார். மூத்த மகள், அரசு கல்வி இலாகாவில் ஆங்கிலத் துறைப் பேராசிரியை யாக இருந்தவர். மின் பொறியாளர் திரு. எஸ்.பி. அய்யாசாமி முதலியாரின் மகன் அரசு மன நோய் மருத்துவ துறையில் சிவில் சர்ஜனாக இருந்து வந்த டாக்டர் எஸ்.பி. சிவக்கொழுந்து அவர்களுக்கு மூத்த மகளை மணம் செய்து கொடுத்தார். ஒரே மகன் திரு. கே. பாலகிருஷ்ணன் பொறியியல் கல்வித் துறையில் பி.ஈ. பட்டம் பெற்று டான்ஸியில் பணி புரிந்து வருகிறார்.

திரு. கந்தசாமி முதலியாரின் வாழ்க்கை மற்றவர்கள் எல்லோருக்கும் எடுத்துக் காட்டாக இருக்கும்படி அமைந்தன. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற வாக்கை தன் குறிக்கோளாகக் கொண்டு தன் வாழ்நாளை எல்லாம், மற்றவர்களுக்குச் சேவை செய்ய அர்ப்பணித்த பெருமை அவரைச் சார்ந்தது. இது பலரும் பின் பற்றக் கூடியது.

படிப்பு முடிந்த அந்த ஆண்டு இவருடைய தகப்பனார் காலமாகிவிடவே குடும்பப் பொறுப்பை தான் ஏற்று நடத்த வேண்டி இருந்தது. அப்பொழுது சென்னை மின்சார இலாகாவில் இளநிலை (ஜுனியர்) பொறியாளராக 4 வருடம் பணி புரிந்தார் பின்னர் உதவி பொறியாளராக (Assistant Engineer) பதவி உயர்வு பெற்று, திண்டுக்கல்லில் பணியாற்றினார். இவர் திறமைக்கும் உழைப்புக்கும் பதவி உயர்வு மேலும் கிடைத்து. Divisional Engineer ஆக மதுரைக்குச் சென்றார்.

திரு. கந்தசாமி முதலியார் பணி புரிந்த நாட்கள் இன்றையன போலன்றி, சென்னை மாநிலம் முழுவதும் மின்சாரம் சப்ளை செய்ய வேண்டிய ஆரம்ப நாட்கள். மின்சார உற்பத்தி செய்ய Thermal station களும் பைகாரா, மேட்டூர் போன்ற நீர்த் தேக்கங்கள் அருகில் உற்பத்தி நிலையங்களும் அமைக்க வேண்டிய ஆரம்பக் கட்டம். அது மட்டுமின்றி மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் தாங்கிச் செல்லும் மின் கம்பிகள் இழுத்து, அவைகளைத் தாங்கும் கம்பங்கள் நட்டு பல இடங்களுக்கு மின்சார இணைப்பைத் தர வேண்டிய தலை நாட்கள் அவை. சிறிது கவனக் குறைவு ஏற்படினும் வேலை செய்பவர்கள் (Labour force) உயிர் நஷ்டம் ஏற்படக் கூடிய வாய்ப்பிருந்தது. வேலை சிறப்பாக நடைபெற வேண்டுமென்றும், மின்சார இலாகாவிற்கு நஷ்டமின்றி பணிகள் சீக்கிரம் முடிவடைய வேண்டுமென்றும் தானே தனது பணிப் பகுதியில் (Work area) ஒவ்வொரு இடத்திலும் மேற்பார்வைப் பார்த்துக் கடுமையாக உழைத்து வந்தார். Divisional Engineer ஆக இருந்த பொழுது அயராது உழைத்து தமிழகத்தின் மின்சார வளர்ச்சிக்கு அடிகோலியவர்களில் கந்தசாமி முதலியாரும் ஒருவர் ஆவர். பருத்தி ஆலைகளுக்கும், துணிகள் உற்பத்தி செய்யும் ஆலைகளுக்கும், மற்றும் சிறிய அளவில் துவங்கி இருந்த தொழிற்சாலைகளுக்கும் தன்னால் இயன்ற அளவு விரைவில் மின்சார இணைப்பைக் கொடுத்து உதவினார்.

இவர் 1945 ஆம் ஆண்டு மேற்பொறியாளராகப் (Superintending Engineer) பதவி உயர்வு பெற்றார். இது சமயம் மின்சார உற்பத்தி பெருமளவில் செய்ய பைகாரா மோயர் முதலிய திட்டங்களுக்கு (Projects) அரசாங்கம் மின்சார இலாகாவிற்கு அனுமதி அளித்தது. இதில் மோயர் திட்டத்திற்குத் (Moyar Project) தானே பொறுப்பாக நின்று plant erection முற்றும் தானே மேற்பார்வைவிட்டு, மின் உற்பத்தி செவ்வனே நடைபெற இரவும் பகலும் அயராது உழைத்தார். இதுமட்டுமின்றி மேற்பொறியாளர்கள் மின்சார distribution and சப்ளையையும் மேற்பார்வை செய்ய வேண்டியிருந்தது. அப்பொழுது சென்னை மாநிலத்திற்கு நான்கு மேற்பொறியாளர்கள்தான் (superintending Engineers) இருந்தனர். அதனால் ஒவ்வொரு மேற்பொறியாளரும் 4 அல்லது 5 மாவட்டங்களுக்குமின்சப்ளை செய்வதைக் கண்காணிக்க வேண்டியிந்ருதது. கந்தசாமி முதலியார் தான் பொறியாளராக இருந்த சமயம், பொதுப் பணிகளுக்குப் பயன்படும் வகையில் மிகவும் உதவி செய்திருக்கிறார். தங்கள் வயல்களிலுள்ள பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கேட்டு வந்த சில சிறு விவசாயிகள் முதல் பெரு நிலச்சுவான்தாரர்கள் வரை அனைவருக்கும் எவ்வித பேதமுமின்றி அவர்களுக்கு மின் இணைப்பு கொடுத்து உதவியிருக்கிறார். மேலும் பொது இடங்களான கோயில்கள், பூங்காக்கள், நூல் நிலையங்கள் முதலிய இடங்களுக்கு முக்கியத்துவம் தந்து மின் இணைப்பு கொடுத்து வந்தார்) இவர் 1951 ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று Chief Operating Engineer அக சென்னையில் 5 வருடம் பணியாற்றி ஒய்வு பெற்றார்.

திரு. கந்தசாமி முதலியார் பொறியாளராக இருந்த ஆண்டுகளில் அவரது சிறப்பான அம்சம் அவரது (Service mindedness) தொண்டு செய்யும் மனப்பண்பே ஆகும். இவர் பொருட்கள் உற்பத்தி பெருக தொழிற் சாலைகளுக்கும், உணவு உற்பத்திப்பெருக பம்பு செட்டுகளுக்கும் தெய்வீகம் தழைக்க கோயில்களுக்கும் இவர் அதிக அளவு மின் இணைப்புகள் கொடுத்து நாடு வளம் பெற அடிகோலியவர் ஆவார்.

இவரின் நேர்மையும் கண்ணியமும் அப்பொழுது இரயில்வே அமைச்சராக இருந்த திரு. ஓ.வி. அளகேசன் அவர்களைக் கவர்ந்தன. கந்தசாமி முதலியாரின் திறமையும், பணியும் இரயில்வே இலாகாவிற்குப் பயன்படவேண்டுமென்று நினைத்த திரு. அளகேசன் அவர்கள் இவர் மின்சார இலாக்காவிலிருந்து ஒய்வுபெற்ற பின் இவரை ரெயில்வே கமிஷன் மெம்பராக 3 வருடம் செயல்பட அமர்த்தினார்.

இதற்குப் பிறகு மயிலாப்பூர் இராமகிருஷ்ண மிஷன், கந்தசாமி முதலியாரை தியாகராய நகரிலுள்ள அதன் உயர்நிலைப் பள்ளிக்கு Honorary Correspondent ஆக பணியேற்கும் படிக் கேட்டுக் கொண்டது. தனக்கு சிறுவயதில் உதவி செய்த ராம கிருஷ்ணா நிலையத்திற்குத் தன் கடமையைச் செய்ய வேண்டு மென்பதற்காக இந்தப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு தனது வாழ்நாளின் இறுதி வரை பணியாற்றினார். ஆகவே தன் வாழ் நாள் முழுவதும் மற்றவர்களுக்கும்,

11. திரு. மா. பா. கந்தசாமி முதலியார், பி.ஏ., பி.ஈ.,

(முன்னாள் சீஃப் ஆபரேடிங் எஞ்சினியர், எம்.ஈ.எஸ்)

அவர்களது வாழ்க்கையும் சமுதாயப் பணியும்

ஆங்கிலப் பேராசிரியை க. இராஜேஸ்வரி அம்மையார், எம்.ஏ.



திரு. மா.பா. கந்தசாமி முதலியார்

''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்'' என்ற வாக்குக்கும் மற்றும் ''உடைய ரெனப் படுவது ஊக்கம் உடைமை'' என்ற வள்ளுவர் வாக்குக்கும் உதாரணமாக ஊக்கமும், உயர்ந்த எண்ணங்களும், மற்றவர் துயர் துடைக்கும் பண்பும் நிறைந்த அருள் வாழ்க்கையாக அமைந்தது திரு. மா. பா. கந்தசாமி முதலியார் அவர்களது இவ்வுலக வாழ்க்கை. அறநெறி தவறாமலும் நேர்மையும், தூய்மையும், வாய்மையும் உள்ள டங்கி மற்றவர்களுக்கு வழிகாட்டும் தீபச் சுடர் போல் வாய்ந்தது அவர் வாழ்க்கை. தன் னலம் கருதாது எல்லோருக்கும் தன் னாலியன்ற உதவியை கடைசி வரை செய்து அனைவரது நன் மதிப்பையும் நன் றியையும் பெற்றிருந்தார் அவர். அவர் சார்வரி ஆண்டு ஆவணித் திங்கள் 12 ஆம் நாள் (27-8-1900) திங்கட் கிழமை அன்று திருவாளர் மா. பாலசுப்ரமணிய முதலி யார் அவர்கட்கும் திருமதி எல்லம்மாள் அவர்கட்கும் மகனாய்ப் பிறந்தார். செங் கற்பட்டு மாவட்டம், வந்தவாசி வட்டத் தைச் சார்ந்த உத்திரமேரூர் கிராமத்தைச் சார்ந்தவர். அவரது குடும்பம் மிகுந்த தெய்வ பக்தி உள்ள குடும்பம். அவர் தந்தை 7 வயதாக இருக்கும் பொழுது இளம்பிள்ளை வாயுவால் பீடிக்கப்பட்டு வேறு சிகிச்சை பயன் படாது டாக்டர் களும் கைவிட்ட நிலையில் பாட்டனார் திரு கலிதீர்த்த முதலியார் தன் பூஜை அறையில் தன் மகனை கிடத்தி முருகனைப்பிரார்த் தனை செய்து அப்பிள்ளையின் பிணியைத் தீர்த்தருளச் செய்தார். அப்படிப் பட்ட தெய்வீகக் குடும்பத்தில் தோன்றியவர் கந்தசாமி முதலியார்; அவரும் தன் வாழ் நாள் முழுவதும் தெய்வப் பணிகளும், தெய்வ வழிபாடுகளும் சிறிதும் தவறாமல் செய்து வந்தார்.

அவர் சிறுவயதில் மயிலை இராம கிருஷ்ணா உயர்நிலைப் பள்ளியின் மாண வர் விடுதியிலிருந்து கல்வி பயின்றார். இவருடைய தந்தையார் திரு. பாலசுப்பிர மணிய முதலியார் அரசாங்கப் பள்ளியில் ஆசிரியராக இருந்து(முன்பு மதராஸ் இராஜ தானியில் சேர்ந்திருந்த) குண்டூர், ஓங் கோல், விசாகப்பட்டிணம் முதலிய இடங் களில் வேலை பார்த்தார்; பிறகு பள்ளி ஆய்வாளராக Inspector of Schools பதவி உயர்வு கிடைத்தபின் செங்கல்பட்டு மாவட்டத்தில் பணிபுரிந்தார். இவர் தன் பணியின் காரணமாக பல இடங்களுக்கு மாற்றலாகி வந்ததால், தன் மகனை இராமகிருஷ்ண மாணவ விடுதியிலிருந்து கல்வி பயிலச் செய்தார். திரு. கந்தசாமி முதலியார் கல்வியில் மிகவும் ஊக்கமுடைய வராய் இருந்ததால் எஸ்.எஸ்.எல்.சி பரீ க்ஷையில் தேர்வு பெற்று மாநிலக் கல்லூ ரியில் பி.ஏ. பட்டம் பெற்று, பிறகு பொறியியல் கல்லூரியில் 5 ஆண்டு படித்து பி.ஈ. பட்டமும் பெற்றார்.

சமரசமான வாழ்க்கை ஆற்றிய பணி களும் மறக்க இயலாத பண்புகளாகும். அரியலூர் ரயில் விபத்தில் பாதிக்கப் பட்ட குடும்பத்தினருக்கு உதவித் தொகை நிர்ணயம் செய்ய அரசு தரப்பு அதிகாரியாக நியமனம் பெற்று சிறப்புற் றார்.

தான் பிறந்த சமூகத்திற்கு தன் னால் ஆன உதவிகளைச் செய்யத் தவறிய தும் இல்லை. சென்னையில் 1927ஆம் ஆண்டு தொடங்கிய நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்துடன் தொடர்பு கொண்டு அவ்வப்பொழுது நம் குல மக்களுக்கு குறிப்பாக ஏழை நெசவாளர்கட்கு ஏற்படும் இன்னல் களை அரசினருக்கு இதமாக எடுத்துக் கூறி வெற்றி பல கண்டவர். பிற்பட்ட நலக் குழுவை சந்தித்து அக்காலத்தில் நம் குலத்தினருக்கு தக்க உதவிகளைப் பெற உதவியாக இருந்தார். தொடக்க முதல் நிர்வாகக் குழுவில் அங்கத்தின ராக பணியாற்றி வந்தார்கள். 1982 வரையில் தலைமைச் சங்க செயற்குழு வில் கலந்து கொண்டார்கள். தலைச் சங்க சட்டதிட்டங்களை திருத்தம் செய்யக்கூடிய கூட்டத்தில் ஆற்றிய பணியே இறுதியானதாகும் என் நினைத்து வருந்துகிறோம். பின்னர் இல் லத்தில் இருந்தபடியே அறிவுரைகள் வழங்கி வந்தார்கள். 1932 முதல் 1935 வரை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் செயலாளராக பணியாற்றி யது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று தமிழகத்தில் தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கல்விச் சங்கம் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் நமது பெரியார் அவர்களே முதன்மையானவர் என்பதை தெரிவித்துக் கொள்ளக் கட மைப்பட்டுள்ளோம். தொடக்க முதல் உறுப்பினராகவும் பின்னர் தொடர்ந்து துணைத் தலைவராகவும், செயலாற்றி வந்தார்கள். அவருடைய அறிவுரை களும் ஊக்கமும் சங்கத்தின் வளர்ச்சிக்கு பேருதவியாக இருந்தது. பெரியார் அவர்கள் கலந்து கொள்ளாத நமது சமூக மாநாடுகளும், செயற்குழு கூட்டங் களும் இல்லையென்றே கூறலாம்.

ஒற்றுமைத் திருமணத்தை தஞ்சை மாவட்டத்தில் முதன் முதலாக செய லாற்றிய செம்மலாவார். வேலூரில் மூத்த மகனுக்கு பெண் கொண்டதும் தன் மகளை பாண்டிச்சேரியில் கொடுத் ததும் அதற்கு எடுத்துக்காட்டுகளாகும். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங் கத்தின் வளர்ச்சியிலும், தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கல்விச் சங்க வளர்ச் சிக்கும் அயராது உழைத்த செம்மல் நமது பெரியார் ஆவார்கள். அன்னாரை பின்பற்றி நம்குலப் பிரமுகர்களும் அரசுப் பணியில் உள்ள தக்க பெரியோர்களும் முன்வரவேண்டும் என்று விரும்புகிறோம்.

இத்தகு சிறப்பியல்புகளைக் கொண்டு செம்மையான வாழ்க்கை நடாத்திய பெரி யார் அவர்கள் 5.6.83 அன்று அம்பலக் கூத்தன் இணையடிகளை சேர்ந்தனர். அவர் நம் சமூக மக்களுக்கு ஆற்றிய தொண்டு என்றும் மறக்க முடியாது.

(நன்றி: செங்குந்த மித்திரன் ஜூலை 1983 இதழ்)

இராக் காலத்திற்கு வேண்டியதைப் பகலில் தேடி வைத்துக்கொள்.

மழைக் காலத்திற்கு வேண்டியதை மற்றைக் காலத்தில் தேடி வைத்துக் கொள்.

முதுமைக்கு வேண்டியதை இளமையில் தேடிக்கொள்.

மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடிக்கொள்.

—வாரியார்

உடம்பை உயிர் செலுத்துகின்றது. உயிரை இறைவன் செலுத்துகின்றான் காரை டிரைவர் செலுத்துகின்றான். டிரைவரை எஜமான் செலுத்துகின்றான் என்பது போல் உணர்க.

—வாரியார்

13. திரு. M.K. பாலசுந்தர முதலியார், (M. K. B.)

M. B. பாண்டுரங்கன், L.E.E.



திரு. M.K. பாலசுந்தர முதலியாா

சென்னை செங்கல்பட்டு மாவட்டத்தில் மேலூர் என்ற கிராமத்தில் மீஞ்சூர் தடத்தில் அருள்மிகு மணங்கீஸ்வரர் ஆலயம் ஒன்று உள்ளது. மணங்கீஸ்வரரின் அம்பாள் பெயர் திருவுடையம்மன். வெள்ளிக்கிழமையும் பௌர்ணமியும் சேர்ந்து வரும் நன்னாளில் அருள்மிகு திருவுடையம்மனையும், திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு வடிவுடை அம்மனையும், திருமுல்லை வாயலில் குடிகொண்டிருக்கும் அருள்மிகு கொடிஇடை அம்மனையும் முறையே காலையிலும், மதியத்திலும், மாலையிலும் தரிசித்தல் சாலச் சிறந்தது என்று பகர்வர் சைவச் சமய ஆன்மீகப் பெருமக்கள்,

மேற்குறிப்பிட்ட மணங்கீஸ்வரரைக் குல தெய்வமாகக் கொண்ட குடும்பத்தில் தோன்றியவர் நம்குலத் தொண்டராகிய பாலசுந்தரனார் அவர்கள். மணங்கீஸ்வரரைக் குலதெய்வமாகக் கொண்டதால் அவர்கள் வீடு 'மணங்கம் வீடு' என்று அழைக்கப்பட்டது. அத்துடன் மணங்கம் என்னும் சொல் அக்குடும்பத்தைச் சார்ந்தவர்களின் பெயருக்கு முன்னாலும் சேர்த்து வழங்கப்பட்டது.

பாலசுந்தரனார் அவர்களின் தந்தையார் பெயர் மணங்கம் குழந்தைவேலு; தாயார் பெயர் கற்பகாம்பாள். அவர்களின் மூத்த புதல்வராக திருமயிலாப்பூரில் 1907 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் தேதி பிறந்தார் பாலசுந்தரனார்.

பாலசுந்தரனாருக்கு இளம் பருவத்திலேயே தாம் தோன்றிய குலத்தினருக்காகப் பாடுபட வேண்டும் என்னும் உணர்வு மேலோங்கி இருந்தது. எனவே, தமது இருபதாவது வயதில் 'திருமயிலை செங்குந்தர் வாலிபர் சங்கம்' என்னும் ஓர் அமைப்பினைத் தோற்றுவித்தார். அத்துடன் அச்சங்கத்தின் செயலாளராகவும் தாமே இருந்து பணியாற்றிவந்தார்.

அச்சங்கத்தின் அமைப்புக்காகப் பாடுபட்டவர்களில் ஒருவர் தற்போது நம்மிடையே வாழும் மகான் யோகி வேதாத்திரி அவர்கள்.

அதன்பின், 1927 ஆம் ஆண்டு முதல் தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அச்சங்கத்தின் கல்வி அறக்கட்டளை ஆகியவற்றின் செயற்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார் பாலசுந்தரனார். தமது இறுதிக் காலம் வரை தமது குலத்தினருக்காகச் சற்றும் அயராது உழைத்து வந்தார்.

அடுத்து 1973 ஆம் ஆண்டு சென்னை செங்கை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதன் துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டு பெருந்தொண்டு ஆற்றி வந்தார் நமது மணங்கம் பாலசுந்தர முதலியார் அவர்கள். நெருங்கிய நண்பர்களாலும், அன்பர்களாலும் அன்புடன் 'மணங்கம் வீட்டு பாலு' என்றே அழைக்கப்பட்டார் அவர்.

தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்கத்தின் சார்பில் தமது பெயரில் எம்.கே.பி. என்னும் அறக்கட்டளை ஒன்றையும் ஏற்படுத்தி அதன் மூலம் உயர்கல்வி பயிலும் ஏழை எளிய குல மாணவர்கள் ஆண்டுதோறும் ரூ. 200 உதவித் தொகையாகப் பெறும் ஒரு வாய்ப்பினையும் அமைத்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கு நாமெல்லோரும் செனகாவின் கூற்றினை நினைவு கொள்ள வேண்டும். ''உதவி பெற்றவனுக்கு நன்றி உணர்ச்சி இல்லாவிடில் அது அவன் குற்றம்; அவனுக்கு நன்றி உணர்ச்சி இருக்காது என்னும் யூகத்தில் உதவி செய்யாமல் இருந்து விட்டால் அது நம் குற்றம். நன்றியறிதலுள்ள ஒரு மனிதனைத் தேடிக் கண்டு பிடிக்க, ஆயிரம் நன்றி கெட்டவர்களுக்கு உதவி செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும்'' என்று திரு. செனகா அவர்கள் கூறி இருக்கிறார்கள். அவர் கருத்துக்கேற்ப கைம்மாறு கருதாது நம் செங்குந்தர் குலத்தவர் முன்னேற்றத்திற்கு அயராது தம் வாழ்நாள் முழுக்கப் பாடுபட்டவர் பெரியவர் பாலசுந்தரனார்.

அடுத்து, ஏழை எளிய நடுத்தர மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையின் அவசரத் தேவைகளுக்கு அநியாய வட்டி வாங்கும் மார்வாடிகளையே நாட வேண்டி இருந்தது. அத்தகையவர்களுக்குச் சீரிய முறையில் உதவ வேண்டும் என்று பாலசுந்தரனாரின் மனத்தில் தோன்றியது. அதன் பயனாகத் தோற்றுவிக்கப்பட்டதே திருமயிலை சாசுவத சகாயநிதி என்னும் அமைப்பு. ஆரம்பக் கட்டத்தில் ஏழை எளிய மக்களுக்கு நிதி உதவி செய்யும் வகையில் தாமே ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தினார்; அதன் மூலம் ஏழை எளியவர்களுக்கு பணம் நியாய வட்டியிலும், சுலபத் தவணைகள் மூலம் கடனைத் திருப்பிச் செலுத்தும் வகையிலும் கிடைக்க வழிகோலினார்.

பாலசுந்தரனார் அவர்கள் தொடக்கத்தில் 13 ஆண்டு காலம் மயிலை இந்து சாசுவத நிதியில் இயக்குநராகப் பணிபுரிந்து வந்தார்; அவ்வனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு தனது மைத்துனர் திரு. கே.எல். வேதாசல முதலியார் அவர்களுடன் இணைந்து 1973 ஆம் ஆண்டு திருமயிலை சாசுவத சகாயநிதி என்னும் அமைப்பினைத் தானே தலைமைப் பொறுப்பை ஏற்றுத் துவக்கினார். அவ்வமைப்பு நாளது வரையில் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

இதேபோல சைதாப்பேட்டையிலும் 'ஸ்ரீ சைதை மியூச்சுவல் பெனிபிட் பண்டு' என்று ஒரு நிறுவனத்தைத் துவக்க பெரிதும் உதவினார். அந்நிறுவனமும் நாளது வரையில் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு பாலசுந்தரனார் அவர்கள் நம் சமுதாய மக்கள் பலவகைகளில் பயன் பெறும் வகையில் பல தொண்டுகள் செய்துள்ளார்.

நம் சமுதாய மக்களுக்காக அவர் கூறிச் சென்ற அறிவுரையை நாம் என்றென்றும் மனத்தில் கொண்டு முன்னேற ஆவன செய்ய வேண்டும். அவர் கூறிய

அறிவுரை:

''நம் சமுதாயம் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால் அரசியலில் நாம் செல்வாக்குப் பெறவேண்டும். நமக்குள் இருக்கும் கட்சி வேறுபாடுகளைக் களைந்தெறிய வேண்டும். நாமனைவரும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்னும் ஒருமித்த உணர்ச்சியைக் காட்ட வேண்டும். உயர் பதவிகளில் இருக்கும் நம்மவர்கள் சமுதாய உணர்ச்சியுடனும் இருக்க வேண்டும்; அத்துடன் தங்கள் பதவி விதிகளை மீறாமலேயே நம் குல மக்களுக்கு உரிய வாய்ப்புகளைப் பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டும். நமது வலிமை எல்லாம் ஒன்றுபட்டு ஒரே சக்தியாகத் திரண்டால்தான் ஆட்சியாளரும் நம்மவர்களுக்கு உரிய உயர்ந்த பதவிகளைக் கொடுப்பார்கள்; உரிய நேரத்தில் உரத்த குரல் கொடுத்தால்தான் நாம் பெற வேண்டியதைப் பெற முடியும்''

திரு. மணங்கம் பாலு அவர்கள் 16-8-1984 ஆம் ஆண்டு இந்நிலவுலக வாழ்க்கையை நீத்து இறைவன் திருவடியை அடைந்தார்கள். அவர் காட்டிய வழியில் நாமும் நடந்து, நம் சமுதாயம் முன்னேற பாடுபடவேண்டும். அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபட்டால்தான் நம் சமுதாயம் உயர்வு பெறும்.

திரு. மணங்கம் பாலு அவர்கள் தன்னுடைய 30வது வயதில் திரு. காரைக்கால் உலோகநாத முதலியார் அவர்களின் மகள் திருமதி. ருக்மணி அம்மையாரை திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு ஒரு மகனும் (திரு. எம்.பி. பாண்டுரங்கன், எல்.ஈ.ஈ.) இரண்டு பெண்களும் (திருமதி பிரேமாவதி, திருமதி சாந்தகுமாரி) உள்ளனர்.

ருந்தது. எனவே E.C. சங்கர் அவர்கள் சிம்லாவுக்குச் சென்று அங்குள்ள பர்மா அரசாங்கத்தில் வணிக இலாக்காவில் பழைய பதவித் தகுதியில் சேர்ந்தார். சில நாள் விடுப்பு எடுத்து1943இல் சென்னைக்கு வந்து திருமணம் செய்து கொண்டார். சென்னை தலைமைச் செயலகத்தில் கண்காணிப்பாளராக இருந்த திரு. கே. சண்முக முதலியாரின் மகள் இராஜேஸ்வரி அம்மையாரை மணம் புரிந்தார். திருமணத்திற்குப் பின் தன் மனைவி இராஜேஸ்வரி அம்மாளுடன் E.C. சங்கர் சிம்லாவுக்கு திரும்பிச் சென்றார். அங்கே சில மாதங்களுக்கு பணியாற்றியபின் அவர் புதுடில்லிக்கு மாற்றப்பட்டார். புதுடில்லியில் பர்மா அரசின் வணிக இலாகாவின் ஒரு பகுதி செயல்பட்டுக் கொண்டிருந்தது. 1943 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எங்களது தந்தையார் E.L. கந்தசாமி முதலியார் சென்னை மயிலாப்பூரில் இறந்தார்.

1945ஆம் ஆண்டு பர்மா பிரிட்டிஷ் வசம் திரும்பவும் வந்தது. பர்மா அரசும் சிம்லாவிலிருந்து தனது தாய்நாடான பர்மாவிற்கே குடிபெயர்ந்தது, 1946 ஆம் ஆண்டில். எனவே சங்கர் அவர்களும் பர்மாவுக்கே திரும்பிச் சென்று அங்குள்ள வணிக இலாகாவில் பழைய பதவியையே ஏற்று 1947 ஆண்டு வரை பணிபுரிந்தார். 1948 ஆம் ஆண்டின் முற்பகுதியிலேயே பர்மாவுக்கு விடுதலை அளிக்கும் நிலை ஏற்பட்டதால் இந்தியாவுக்கு மாற்றலாகி அங்கேயே பணிபுரியும் ஏற்பாட்டினை சங்கர் அவர்கள் முயற்சித்து செய்து கொண்டார்கள். எனவே புதுடில்லியில் இந்திய வணிக இலாகாவில் சங்கர் அவர்கள் பணியில் சேர்ந்தார். இந்த இலாகாவில் சேர்ந்த சில நாட்களிலேயே புதிய பதவி அவரை நாடி வந்தது. லண்டனில் இந்திய அய் கமிஷன் அலுவலகத்தில் வழங்கு பொருள் இலாகாவில் பதவியேற்று இரண்டு ஆண்டுகள் இந்திய அரசு பாராட்டும் அளவுக்கு திறமையாக பணிபுரிந்தார். பின்னர் அவர் இந்திய அயலுறவுத் துறைக்கு (Indian Foreign Service) மாற்றப்பட்டு இரங்கூனில் உள்ள இந்தியத் தூதரிடம் பணி ஏற்குமாறு பணிக்கப்பட்டார். அங்கும் அவர்க்கு அளிக்கப்பட்டது வணிகத் துறைதான். முதல் வணிகச் செயலாளர் என்ற பதவியை ஏற்றார். இரங்கூனில் இருக்கும் போது 1953 ஆம் ஆண்டு சங்கர் அவர்கள் ஒரு கண்டத்திலிருந்து தப்பினார். ஆங்சான் என்ற பர்மிய ராணுவத் தளபதி அரசாங்கத்தைக் கவிழ்க்க சதிசெய்த போது துப்பாக்கிக் குண்டுகள் சரமாரியாக வெடிக்கப்பட்டன. சங்கர் அவர்கள் இந்த நிகழ்ச்சியால் தாக்குண்டு மயிரிழையில் உயிர் தப்பினார். பின்னர் உடல் நிலை காரணமாக அயலுறவுத் துறையிலிருந்து உள்துறைக்கு மாற்றம் கோரினார். அவரது கோரிக்கை எற்கப்பட்டு புதுடில்லிக்கு மாற்றப்பட்டு வணிக இலாகாவின் உதவிச் செயலாளராக பதவி ஏற்றார். பின்னர் ஓர் ஆண்டிற்குள் சென்னைக்கு இறக்குமதி ஏற்றுமதி இணை முதன்மை கட்டுப்பாட்டு அலுவலராக மாற்றப்பட்டார். இப்பதவியில் அவர் கடைப்பிடித்த கண்டிப்பு அவரிடமிருந்து வியாபாரிகளை தொலை தூரத்தில் வைத்தது. அவருடைய நேர்மையும் நாணயமும் பிரசித்தம் பெற்றன.

சங்கர் அவர்கள் சென்னையிலுள்ள வணிக கட்டுப்பாடு வட்டார அலுவலகத்தின் பொறுப்பை ஏற்றார். இந்திய வணிக கொள்கையின்படி பல நாடுகளுடன் வணிக ஒப்பந்தங்கள் ஏற்பட திறமையுடன் பணிபுரிந்தார். நம் சமூக இளைஞர்கள் பலரை தன் அலுவலகத்தில் வேலைக்கு அமர்த்தினார்.

1954 ஆம் ஆண்டு பிரான்சு நாட்டு ஆதிக்கத்தில் இருந்த பாண்டிச்சேரி, காரைக்கால், ஏனம் முதலிய பிரதேசங்கள் விடுதலை பெற்றன. இந்திய அரசின் ஆணையின் பேரில் சங்கர் அவர்கள் வணிக கட்டுப்பாடு அலுவலகத்தை பாண்டிச்சேரியில் அமைப்பதற்காக பணிக்கப்பட்டார். இறக்குமதி ஏற்றுமதி முதன்மைக் கட்டுப்பாட்டு அலுவலராக நியமிக்கப்பட்டார். அவர் பாண்டிச்சேரியில் இருந்தபோது நான் விடுப்பில் சென்று சில நாட்கள் அவர் வீட்டில் தங்கியிருந்தேன். அச்சமயம் ஓர் நாள், பெரிய வைர வியாபாரி ஒருவர் அவர் வீட்டிற்கு வந்தார். சைகோன் நாட்டிலிருந்து வைரம் இறக்குமதி செய்வதற்கு துரிதமாக உரிமம் வழங்குவதற்காக அவரைப் பார்க்க வந்தார். வந்தவர் என் தமையனாரிடம் ஒரு பெட்டியை அளித்து அதனைத் திறந்தார். அப்பெட்டியைத் திறந்தவுடன் அதனுள் வைரக் கற்கள் ஒளி வீசின. எனது தமையனார் பதட்டப்படாது அப்பெட்டியினை மூடிவிட்டு காவல் துறைக்கு தகவல் கொடுப்பதற்காக தொலைபேசியை எடுத்தார். வைர வியாபாரி நடு நடுங்கி தன்னை மன்னிக்குமாறு என் தமையனார் முன் மண்டியிட்டார். என் தமையனார் அவனை மன்னித்து வீட்டை விட்டு விரட்டினார்.

களுக்கான வாய்மொழித் தேர்வு (Viva Voce) இரண்டு மாதங்கள் கழித்து இரங்கூனில் நடைபெற்றது. அத்தேர்விலும் E.C. சங்கர் இடம்பெற்றார். தான் ஒரு I.C.S. ஆக ஆவது உறுதி என இன்பக் கனவு கண்டார். ஆனால் இங்கே அவரது விதி விளையாடிற்று. அதனை அரசியல் விதி என்றும் சொல்லலாம்! 1.4.1937 அன்று பர்மாவும் இந்தியாவும் பிரிக்கப் பட்டன. பர்மா தனி அரசியல் நாடாக மலர்ந்தது. E.C. சங்கர் பர்மா அரசாங்கத்திடமிருந்து தனது I.C.S. தேர்வின் மதிப்பெண்களைப் பெற்றார். அதனைப் பார்த்து I.C.S. தேர்வில் வெற்றி பெற்ற ஒன்பது பர்மா நாட்டுக்காரர்களில் தான் ஒருவர்தான் முதன்மை நிலை பெற்ற இந்தியர் என்பதனைத் தெரிந்து கொண்டார். வாய்மொழித் தேர்வில் (300 மதிப்பெண்களுக்கு அவருக்கு மதிப் பெண்களே கொடுக்கப்படவில்லை! (அவருடைய பெயருக்கெதிரே மதிப்பெண் 'Nil' என்று குறிக்கப்பட்டு விட்டது) எனவே புதுடில்லியில் நடந்த எழுத்துத் தேர்வில் 900க்கு அவருக்குக் கிடைத்த 800க்கு மேற்பட்ட மதிப் பெண்கள் பயனற்றுப்போயின. அவர் I.C.S. தேர்வில் வெற்றி வாய்ப்பை இழந்தார்! I.C.S.க்குப் பதிலாக Burma Civil Sevice என்று பர்மா அரசு உருவாக்கியது. பர்மாக்காரர்களை ஊக்குவிப்பதற்காக B.C.S. ஐ பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்படுத்தியது. இரண்டு பர்மாக்காரர் களையும் ஒரு ஆங்கிலோ - பர்மாக்காரரையும் B.C.S. பதவிக்குத் தேர்ந்தெடுத்தார்கள். E.C. சங்கர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. எனவே பர்மா-இந்தியா அரசியல் பிரிவினை காரணமாக சங்கர் பலிகடாவாக ஆக்கப்பட்டார்! அவரது I.C.S. கனவு சிதைந்தது.

எனினும் பிரிட்டிஷ் அரசாங்கம் E.C. சங்கருக்குப் பரிவு காட்டியது. பர்மியத் தலைமைச் செயலகத்தில் பாதுகாப்பு இலாகாவில் சங்கர் அவர்களை இள நிலை அதிகாரியாக நியமித்தது. அடுத்த ஓர் ஆண்டிற்குள் நீதித்துறை பணித் தொகுதிக்கு அவர் அதே நிலைமையில் மாற்றப்பட்டார். 1940 ஆம் ஆண்டு இறுதியில் பர்மாவின் வணிக இயல் துறையில் முக்கிய பொறுப்பு அளிக்கப் பட்டது. சங்கர் அவர்கள் பொருளியல் பட்டதாரி என்பதாலும், வணிக நிலவியல், குறிப்பாக பிரிட்டிஷ் வல்லரசின் நிலவியலில் பற்று கொண்டவர் என்பதாலும் தனக்கு அளிக்கப்பட்ட பொறுப்பை ஏற்றுக் கொண்டு திறம்பட பணிபுரிந்தார். அவரது திறமையினால் பர்மாவின் அயல் நாட்டு வர்த்தக உறவுகள் செழித்தோங்கின. அவரது ஆற்றல் குறிப்பிட்ட இலாகாவால் பாராட்டப்பட்டது.

இடையில் இரண்டாவது உலகப் போர் குறுக்கிட்டது. 1941, டிசம்பர் மாதத்தில் ஜப்பான் தனது இரண்டாவது போர்முனையை ஏற்படுத்தியது. அமெரிக்காவைச் சேர்ந்த பிலிப்பைன்ஸ் நகரத்திலுள்ள Pearl Harbour இல் குண்டு வீச்சு. சிங்கப்பூரிலிருந்த இரு பிரிட்டிஷ் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. எனவே உடனே பிரிட்டன் ஜப்பான் மீது போர் தொடுத்தது. இது பர்மாவை பாதித்தது. 1942 பிப்ரவரி மாதத்தில் இரங்கூன் நகரத்திலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர். சிங்கப்பூர் வீழ்ச்சியாலும் ஜப்பான் கடற்படையின் தாக்குதலாலும் இரங்கூன் நகரத்தை காலி செய்ய வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாயிற்று. பர்மாவின் தலைமைச் செயலக ஊழியர்களுடன் சங்கர் அவர்களும் பர்மாவின் வடகோடியிலுள்ள மிட்கினா என்ற நகரத்திற்கு இரங்கூன் நகரத்தை விட்டு வெளியேறினார்கள். நாகாலந்திலுள்ள திமாப்பூர் நகரத்தைச் சேர்வதற்கு காடுகளும் மலைகளும் சேர்ந்த 120 கல் தொலை தூரத்தைக் கடக்க வேண்டியதாயிற்று. இயம்ப இயலாத இன்னல்களை ஏற்றுக்கொண்டு அகதிகளாக தன் பயணத்தை தொடர்ந்து செல்லும்போது இறைவன் அருளால் ஓர் இடத்தில் சங்கர் அவர்கள் தன் தமையனார் E.C. மோகனன் அவர்களைச் சந்தித்தார். எதிர்பாராதவிதமாக ஆண்டவனால் சேர்ப்பிக்கப்பட்ட எனது அண்ணன்மார்கள் தங்களது நெடும் பயணத்தை உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராது தொடர்ந்தனர், சொல்லொணாத் துயரங்களுக்கிடையே, வழியில் சங்கர் அவர்களுக்கு வயிற்றுப் போக்கு கண்டது. அவரால் நடக்க இயலாத நிலை. வழிப்போக்கர்களில் ஒரு நல்ல உள்ளம் படைத்தவர் சில மாத்திரைகளைக் கொடுக்க அவற்றைச் சாப்பிட்டு சில நேரம் ஓய்வெடுத்துக் கொண்டார். பின்னர் மோகனன் அவர்கள் சங்கர் அவர்களைத் தன் தோள்களின்மேல் தூக்கிக் கொண்டு பயணத்தைத் தொடங்கினார். ஒரு விதமாக இந்திய எல்லைக்குள் அடியெடுத்து வைத்தனர். சில நாட்கள் திமாப்பூரில் தங்கியிருந்து அங்கிருந்து கல்கத்தா மூலம் சென்னை வந்து சேர்ந்தனர்.

பர்மா அரசாங்கம் இந்தியாவிலுள்ள சிம்லா நகரத்தில் செயல்பட்டுக் கொண்டி

16. செங்குந்த மரபில் வெற்றியிலே தோல்வி கண்ட ஒரே I.C.S.!

E. C. முனுசாமி முதலியார், B.A., C.A.I.I.B. நங்கநல்லூர்.



E. C. சங்கர்

செங்குந்த மரபின் ஒரே I.C.S. என்ற புகழுக்குரியவர் என் தமையனார் திரு. E.C. சங்கர் B.A. (Hons). அவருக்கு முன்னும் பின்னும் இம் மரபில் ஒரு I.C.S. கூட உருவாகவில்லை. இந்தப் புகழேந்தி 3.10.1914 அன்று இரங்கூனில் பிறந்தார். இவரது தந்தையார் E.C. கந்தசாமி முதலியார். அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் பேரரசால் வழங்கப்பட்ட சிறப்புப் பட்டங்களில் ஒன்றான எம்.ஆர்.ஏ.எஸ். என்ற பட்டத்தைப் பெற்ற பெருமைக்குரியவர் ஈ.எல். கந்தசாமி முதலியார். இவரது மூதாதையர்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் பழவேற்காட்டிற்கு அடுத்த எருக்கம் என்னும் கிராமத்தில் வாழ்ந்து வந்தார்கள். கந்தசாமி முதலியாருக்கு எருக்கம் கிராமத்தில் போதிய வருமானம் கிடைக்காததால், அவர் தன் மனைவியோடு திருமழிசைக்கு குடியேறினார்கள். திருமழிசை வாழ்க்கையும் கந்தசாமி முதலியாருக்கு திருப்தி அளிக்கவில்லை. அவர் அங்கே இருந்தால் தான் முன்னுக்கு வரமுடியாது என்று நினைத்து ''திறை கடலோடியும் திரவியம் தேடு'' என்ற முது மொழிக்கு ஏற்ப தன் குடும்பத்துடன் இரங்கூனுக்குப் போனார். அங்கே அவர் American Baptist Mission Press என்ற நிறுவனத்தில் வேலைக்கு அமர்ந்தார். அவரது இரங்கூன் வாழ்க்கை வளமாக இருந்தது. இவர் இரங்கூனில் நல்ல நிலையில் இருப்பதைக் கண்ட நம் சமூக மக்கள் பலர் இரங்கூனுக்குப் போகத் தலைப்பட்டனர். இரங்கூனில் இவர் வீடுதான் அவர்களுக்கு முதல் புகலிடம்.

இரங்கூனில் தான் கந்தசாமி முதலியாரின் எட்டாவது குழந்தையாக நமது மரபின் ஒரே I.C.S. திரு E.C. சங்கர் பிறந்தார்! இரங்கூன் American Baptist Mission உயர்நிலைப் பள்ளியில் அவரது பள்ளிப் படிப்பு சிறப்பாக முடிந்தது. பர்மா கல்விக்குழு நடத்திய பள்ளி இறுதித் தேர்வில் இவர் ஆங்கிலம், பூகோளம், வரலாறு முதலியவற்றில் சிறப்பு மதிப்பெண்கள் பெற்று தேர்வில் வெற்றி பெற்றார். இதன் காரணமாக அவருக்கு கல்லூரிப் படிப்பிற்காக படிப்புதவித் தொகை வழங்கப்பட்டது. அப்போது இரங்கூனில் இரண்டே இரண்டு கல்லூரிகள்தான் இரங்கூன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்தன. ஒன்று அரசினர் கல்லூரி. மற்றொன்று அமெரிக்கன் பேப்டிஸ்ட் மிஷனைச் சேர்ந்த ஜட்சன் கல்லூரி. இரண்டாவதாகக் கூறப்பட்ட கல்லூரியில் E.C. சங்கர் நான்கு ஆண்டுகள் (இரண்டு ஆண்டுகள் இன்டர்மீடியட் வகுப்பிலும் இரண்டு ஆண்டுகள் பி.ஏ. வகுப்பிலும்) படித்து இரங்கூன் பல்கலைக்கழகத்தின் பி.ஏ. பட்டதாரி ஆனார். ஆங்கிலத்திலும் பொருளாதாரத்திலும் சிறப்பு மதிப்பெண்கள் பெற்றார். அடுத்து ஓர் ஆண்டு அவர் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்து பொருளாதாரத்தில் B.A. (Hons) பட்டம் பெற்றார்.

1937ம் ஆண்டு ஏப்ரல் மாதம் E.C. சங்கர் புதுடில்லியில் I.C.S. தேர்வு எழுதினார். தேர்வில் வெற்றி பெற்றவர்

இல்லை. மேலும் 'சென்டெக்ஸ்' நிறுவனத் தொழிலாளர்கள் தமக்கென 'நாச்சிமுத்து நகர்' கண்டுள்ளனர். குடியிருப்புகளில் குடியேறியுள்ளனர். அவர்கள் வாழ்வு ,பிற நெசவுத் தொழிலாளர் வாழ்விற்கெல்லாம் முன்மாதிரியாய் அமைந்திருக்கக் காண லாம்

திருப்பத்தூர் பெரியவர் கா.அ. ஷண்முக முதலியார் அவர்களைத் தொடர்ந்து தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவராகப் பல் லாண்டுக்காலம் பதவி வகித்த நம் தலை வர் நாச்சிமுத்து அவர்கள் நம் குந்தர் குலம் விளங்க, உயர, முன்னேற அல் லும் பகலும் அரும்பாடுபட்டார். அவர் எந்தநேரமும் செங்குந்தர் குல வளர்ச்சி பற்றியும் முன்னேற்றம் பற்றியும் சிந் தித்தார். செங்குந்தர் ஒவ்வொருவருக்கும் தனிப்படவும் உதவி செய்திருக்கிறார்; அமைப்புகளுக்கும் உதவி செய்திருக்கிறார். அவருக்கு மைய அரசாங்கம், மாநில அரசாங்கம் ஆகிய இரண்டிலும் நல்ல செல்வாக்கு இருந்தது. கைத்தறித் துறைக்கு அவர் செய்த தொண்டினைப் பாராட்டி மைய அரசு 'பத்மஸ்ரீ' விருது வழங்கிற்று. இன்றைய பாரதத்தின் குடியர சுத் தலைவர் மேதகு. ஆர். வெங்கட் ராமன் அவர்கள் நம் தலைவர் அவர் களை நன்கு அறிவார்கள். இவர்கள் மாட்டு பெருமதிப்பு வைத்திருப்பவர். 'கைத்தறி' என்றாலே நாச்சிமுத்து என்று எண்ணுபவர். அதன் விளைவே மைய அரசின் விருதாகும்.

'செங்குந்த மித்திரன்' வளர்ச்சி குறித்து அடிக்கடி தொடர்புடையாரிடத் துப் பேசுவார்கள். செங்குந்த மகாஜன செயற்குழுக் கூட்டங்களில் தம் அறிவின் முதிர்ச்சியால் எழுந்த கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துக் கூறுவார்கள். நல்ல சிந்தனைத் தெளிவும் நிதானமும் அவர் பேச்சில் துலங்கும். அவர் குந்தர் குலம் முன்னேற எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஏராளமாகும். அவருடைய ஒரு கண் செங்குந்தர் குல முன்னேற் றம்; பிறிதொரு கண் கைத்தறி வளர்ச்சி. இவ்விரு துறையில் அயராது உழைத்த அந்த நல்லவர் பெரியவர் 27.6.1987 அன்று நம்மைவிட்டு மறைந்து விட்டார் கள். ஆனால் அவர்தம் உயர்ந்த தொண் டால் என்றும் நம் நினைவில் வாழ் வார்கள் என்பது உறுதி.

கொட்டு முரசே!

எல்லார்க்கும் நல்லின்பம்
எல்லார்க்கும் செல்வங்கள்
எட்டும் விளைந்த தென்று
கொட்டு முரசே - வாழ்வில்
கட்டுத் தொலைந்த தென்று
கொட்டு முரசே!

இல்லாமை என்னும் பிணி
இல்லாமல் கல்வி நலம்
எல்லார்க்கும் என்று சொல்லிக்
கொட்டு முரசே - வாழ்வில்
பொல்லாங்கு தீர்ந்த தென்று
கொட்டு முரசே!


சான்றாண்மை இவ்வுலகில்
தோன்றத் துளிர்த்த தமிழ்
மூன்றும் செழித்த தென்று
கொட்டு முரசே - வாழ்வில்
ஊன்றிய புகழ் சொல்லிக்
கொட்டு முரசே!

ஈன்ற புறந் தருதல்
தாயின் கடன்! உழைத்தல்
எல்லார்க்கும் கடனென்று
கொட்டு முரசே - வாழ்வில்
தேன்மழை பெய்ததென்று
கொட்டு முரசே!

—பாரதிதாசன்

15. நம் அருமைத் தலைவர் பத்மஸ்ரீ எம். பி. நாச்சிமுத்து முதலியார், B.A.B.L.,

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், M.A., M, Litt., Ph.D
தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்.



எம. பி. நாச்சிமுதது முதலியாா

''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்பது வள்ளுவம். நிலையற்ற இவ்வுலகில் நிலைத்து நிற்பது புகழ் என்பர் சான்றோர். இவ் நில்லா வுலகின் நிலைமை தூக்கி, நம் முன்னோர்கள் தாங்கள் மறைந்தும், தங்கள் திருப்பெயர் மறையா வண்ணம் அரிய பெரிய செயல்களை ஆற்றி விட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் பொன்னுடல் மறையினும் அவர்களுடைய புகழுடம்பு மறையாமல் வாழ்வதனைக் காண்கிறோம். அத்தகைய பெருமைக்குரிய பெரியோர்களுள் ஒருவர் சென்னிமலை தந்த சீரிய செங்குந்தர் எம்.பி. நாச்சிமுத்து அவர்களாவர்.

'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்'' என்று ஒரு சிலரே அவ்வப்போது உலகில் வாழ்ந்து வருகின்றனர். அத்தகைய நல்லவர்களுள் நம்மவர்களுள் நம் நாச்சிமுத்து முதலியார் அவர்கள் தலை சிறந்தவராவர். அவருக்கென ஒரு வீடு உண்டு. ஆனால் அதை அவர் கவனித்தார் என்று சொல்ல முடியாது. அவருக்கெனப் பிள்ளைகள் உள்ளனர். அவர்களைக் கவனித்து வளர்த்தார் எனச் சொல்ல முடியாது. ஆனால் அவர் தம் வாழ்நாள் முழுவதும் கைத்தறியினைக் கட்டிக் காத்துநின்றார் என்பதும், கைத்தறித் தொழிலைப் பேணி வளர்த்தார் என்பதும் நாட்டு மக்கள் அனைவரும் நன்கறிந்த செய்தியாகும். அவர் ''கைத்தறிக் காவலர்'' என்று அனைவராலும் அன்போடு அழைக்கப் பெற்றார். ஒவ்வொரு செங்குந்தர் மாநாட்டிலும் கைத்தறித் தொழில் நசிக்கப்பெறாது பாதுகாக்கப்பெற வேண்டுமென்று அவர் எழுப்பிய முழக்கம் இன்னும் எவர் காதிலும் ஒலித்துக் கொண்டிருக்கும்.

அவர் தொடக்க நாள் முதல் ஒரு சிறந்த தேசீயவாதி; தூய கதராடைகளையே விரும்பி அணிந்தவர். அவர் ஆடைகள் தூய்மையாய் வெள்ளையாய் விளங்கியமை போன்றே, அவர் உள்ளமும் தூய்மையாய், உண்மையாய் விளங்கியது. நாடு விடுதலை பெற வேண்டுமென்று வேணவாக் கொண்டிருந்தார். நாடு விடுதலை பெற்றபின்னும், நாடு பெற்றது அரசியல் விடுதலைதான் என்று தெளிந்து சமூக விடுதலைக்கு, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடு பட்டார். காந்திய நெறிகளில் ஆழ்ந்த பற்றும், அந்நெறியினைப் பின்பற்றுவதில் ஆர்வமும் கொண்டு வாழ்ந்த அவர் வாழ்க்கை எளிமைக்கோர் எடுத்துக் காட்டு எனலாம்.

இன்று 'சென்டெக்ஸ்' என்றால் உலகம் எங்கும் தெரியும் பெயராக அது விளங்குகின்றது. படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் உலகப் புகழ் வாய்ந்து விளங்குகின்றன! சென்டெக்ஸ் பொருள்களுடன் போட்டி போட்டு வெல்லும் வேறு நிறுவனப் பொருள்கள்

சிக்கல், திருமருகல், சுந்தரப் பெருமாள் கோயில் அகிய அனைத்து மாநாடு களிலும் பங்குற்று சமூக நலனுக்கு அளப் பரிய செயல்களை ஆற்றியுள்ளனர். மஞ்சை ஊராட்சி மன்றத் தலைவராக அமர்ந்து பொது நலப் பணிகள் பற்பல ஆற்றியுள்ளனர்; அவர்களது பணிகளை விரிகின் பெருகும்; தொகுப்பின் எஞ்சும்!

ஆன்மீகத்தில் சம்பந்தமூர்த்தி:

ஆன்மீகத்தோடு இவர்களை இணைத் துப்பார்த்தால் அதனோடு ஒன்றியவர் எனின் மிகையாகாது; 'தந்தையை ஒப்பர் மக்கள்' என்னும் முதுமொழிக்கு ஏற்ற வர்; 'கருவிலே திருவுடையார்' என்ற பழமொழிக்கு உகந்தவர். தானும் நின்று, மற்றவரையும் நிற்கவைப்பர்; இளமையி லேயே திருஞான சம்பந்தர் சபையில் அங்கம் வகித்து சமயப் பணியைத் துவக் கிக் கொண்டவர்; சைவ மாநாடுகளில் கலந்து கொண்டவர்; சமயப் பேருரை களையும், சாத்திரங்களையும் கேட்டு ணர்ந்தவர்; எத்தனை மணியானாலும் அலுக்காமல்-அசையாமல் அமர்ந்து சொல் வதைக் கேட்பதும், பிறர்க்கு சொல்வதி லும் இவருக்கு இணை இவரே! இலங் கைக் கம்பெனியில் இருந்தபோது அனை வரையும் திருமுறைகள் படிக்கச் செய் தவர்; பெரியோர்களைக் கொண்டு சொற் பொழிவும் நிகழ்த்தச் செய்தனர். தவத் திரு ஞானியார் சுவாமிகளின் தலைமை யில் திருஞான சம்பந்த சபையின் வெள்ளி விழாவினை நடத்தினர்.

நாள்தோறும் தேவாரத் திருமுறை களை நியமமாகப் படித்தால் ஓராண் டில் முழுமையும் நிறைவு செய்ய லாம் என்பதை உணர்த்தியவர். திரு முறையில் நல்ல பயிற்சி; நல்ல மனனம். மகாவித்துவான் தண்டபாணி தேசிகரைக் கொண்டு குறள் கூறும் சமய நுண்மை களை எல்லோரும் உணருமாறு செய்தவர்.

கோடை வகுப்பு என்ற அமைப் பில் ஈரோடு ஞானசம்பந்த முதலியார், சித்தாந்தமணி வச்சிரவேல் முதலியார் போன்றவர்களைக் கொண்டு தோத்திர சாத்திரப் பாடல்களை நடத்திப் பலரும் பயன் கொள்ளச் செய்வர்; பயில்வோ ருக்கு தங்க வசதியும், உணவும் தந்து மகிழ்வர்.

மஞ்சை குமரன் கோவில், கருவேலி திருக்கோயில்களின் அறங்காவலராக இருந்து பணியாற்றியவர்; தந்தையார்க்கு தளி எடுத்து, நாட்பூசையும், குருபூசை யும் செய்து வழிபடுபவர். திருஞான சம்பந்தரின் குருபூசையினை திருவிழா என நடத்துவர். தில்லையம்பலத்தை திரு நாட்களில் மட்டுமல்லாது அடிக்கடி வழிபடு பவர்; திருக்கார்த்திகைக்கு திருவண்ணா மலை செல்வர்; மலைவலம் வந்து சோணசைலமாலை படிப்பர்; மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக வழிபாடு நிகழ்த்தியவர். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வழிபடுவார். அவரது ஆன்மீக நெறியினை அளவில் மிகுத்துச் சொல்ல வில்லை; அனைத்தும் அனைவருக்கும் தெரிந்த செய்திதான்!

கல்விப் பணி:

அப்பா மாசிலாமணி முதலியார் அவர்களின் தொடர்பினைப் பெற்றவர் களில் இவரும் ஒருவர். அவர்களின் நல் தொடர்பால் கல்விப் பணியில் ஆர்வம் ஏற்பட்டது; தங்கள் ஊரிலேயே ஒரு பள்ளி அமைக்க வேண்டும் என எண்ணி, மஞ்சை சான்றோர்களின் ஆதரவையும் அன்பையும் ஒருங்கிணைத்து, மஞ்சை கிராம நல சங்கத்தின் சார்பில் குமரன் கல்வி நிலையங்களைத் தோற்றுவித்தனர். அதன் தாளாளராக அமைந்து நற்பணி புரிகின்றனர். குழந்தைகளுக்கு நல் அறிவினைப் புகட்ட தேவார வகுப்பி னையும், நீதிநூல் வகுப்பினையும் நடத்த ஏற்பாடு செய்துள்ளார். பல அறக்கட்ட ளைகள் நிறுவி, பலவிதமான பரிசுக ளைத் தந்து மாணவர்களின் ஊக்கத்தை யும், ஒழுக்கத்தையும் கல்வியையும் வளர்த்து வருகிறார்கள். ஆசிரியர்களை அரவணைத்துச் செல்லும் பாங்கு பாராட்டுதற்குரியது. பல்வேறு துறை களில் பயிலும் நமது சமூக கல்லூரி உயர்நிலைப் பள்ளி, துவக்கப் பள்ளி மாணவர்கட்கும் நம் சமூகம் அல்லாத ஏனைய மாணவர்கட்கும் பல்லாற்றா னும் உதவி வருகிறார்கள். அவர்களின் உதவியால் முன்னேறிய மாணவர்கள் நன்னிலையில் உள்ளதை நாம் பார்க்கின் றோம். எங்கு சென்றாலும் அவரது புகழ் ஒளிர்கிறது; கேட்பதற்கு செவிக் கோர் இன்பம் தருகிறது, நினைப்பதற்கு நெஞ்சம் இனிக்கிறது.

வாழ்த்துவோம்! வளர்வோம்!

இத்தகு பீடுடை பெருமகனாரின் போற்றற்கரிய பண்புகள் இன்னும் எத்தனையோ உள! சிவபூசைச் செல்வர்; நல்லார்; தமிழ்ச் சைவப் பெருந் தகையாளர்; நன்னிதியம் பெற்றவர்; நற்சார்பும் பெற்றவர்; நானிலம் போற்ற வாழ்ந்தவர். இவர் 27-7-1987 இரவு இறைவன் திருவடிகளை அடைந்தார். அவர்தம் அடிச்சுவட்டைப் பின்பற்றி வளர்வதில் நமக்குப் பெருமை உண்டு; புகழும் உண்டு.

களைக் கேட்டு, ''கதரார்டையே உடுத்துவது- விடுதலைக்குப் பாடுபடும் காங்கிரஸ் இயக்கத்தில் பங்கு கொள்வது'' என மஞ்சைப் பெரியோர்கள் உறுதி கொண்டபோது சிறு பருவத்திலேயே தானும் ஒருவராக அவர்களுடன் இணைந்தது கண்டு அனைவரும் பாராட்டினர். இத்தகு தேசீய உணர்வு பிற்காலத்தில் கதர்போர்டிலும், கைநெசவுத் தொழிற்சாலையிலும் உறுப்பினராக அமைந்து, கதர் வளர்ச்சிக்கு பாடுபட அடிப்படையாக அமைந்தது. இவ்வாறு நமது சம்பந்தமூர்த்தியார் பள்ளிப் பருவத்திலேயே பல்துறையிலும் சிறந்தோங்கி செழித்து வளர்ந்தார்.

இல்லற மாண்பு:

இருபத்திரண்டாம் அகவையில் திருமணம்; துணைவியார் திரு. பட்டினம் வீ. குருசாமி முதலியாரின் திருமகளார் விசாலாட்சி அம்மையார்; அம்மையார் அவர்கள் சிவனுக்கு ஏற்ற உமையாக—நாரணனுக்கு ஏற்ற நாரணியாக-வள்ளுவர்க்கு ஏற்ற வாசுகியாக நமது சான்றோருக்கு அமைந்தது அனைவரும் அறிந்ததே! தனது கணவனார் கருதும் இனிய அரிய செயல்களுக்கெல்லாம் முழுக்க முழுக்க முழுமனதுடன் துணையாக இருந்து செயலாற்றி வருபவர்; தமையனார் செய்யும் நல்ல செயல்கள் அனைத்துக்கும் தம்பியர் இருவரும் தோளோடு தோளாக இருந்தனர்; வருந்தி வந்தவர் அரும்பசி களைவர்; விருந்து போற்றும் நற்பண்பினர்; தெரிந்தவர்-தெரியாதவர்; அறிந்தவர் - அறியாதவர் என நாடோறும் அவர்களின் இல்லத்துக்கு வந்த வண்ணமே இருப்பர். அனைவரையும் இன்முகத்தோடு வரவேற்று உபசரித்து மகிழ்வர்; அடியவர்களாயின் குடும்பத்துடன் மகேஸ்வர பூசை செய்து, வழிபாடாற்றி அறுசுவையில் நால்வகைத் திறத்தில் இன்னமுதூட்டும் இயல்பினை இன்றும் அவர்கள் இல்லத்தில் கண்டு மகிழலாம். இவர்களின் இல்லற மாண்பு பெரிய புராண இல்லற மாண்பினை நமக்குக் காட்டி நிற்கிறது.

தொழில் திறம்:

பெரும்புகழும் பெருமையும் நிறைந்து விளங்குவது நமது மதராஸ் பளயகாட் கம்பெனி; அதன் தொழில் வளர்ச்சிக்குப் பாடுபட்ட உத்தம பெருஞ்சான்றோர்கள் பற்பலர்; நமது சம்பந்த மூர்த்தியும் அவர்களுள் ஒருவராக அமைந்து திகழ்கிறார்; வள்ளல் டி.என். சபாபதி முதலியார், முருகைய முதலியார், அமிர்தலிங்க முதலியார், முத்துக் குமாரசாமி முதலியார் போன்றவர்களை வழிகாட்டியாகக் கொண்டனர்; திரு அண்ணாமலை முதலியார் அவர்களை தோழமையாகக் கொண்டனர். சாதாரண நிலையில் அலுவல் பார்த்தபோதும், இலங்கைக் கம்பெனியில் பொறுப்பான பணியாற்றியபோதும், மேலாண்மையின் போதும் எளிய நிலையில் அமர்ந்து யார் மனதும் சுளிக்காமல் தன் கடமையினைச் செய்து கம்பெனிக்குப் பெருமை சேர்த்தனர்.


சமூகத் தொண்டு

ஆரூர் வள்ளலும், நம் சான்றோர்களும் உருவாக்கிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் முன்னேற்றத்தில் பற்பல நிலையில் பங்குகொண்டனர்; செங்குந்தமித்திரன் அச்சகத்தின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைந்தனர்; மாநிலச் சங்கச் செயலராக அமைந்து, பல்லாண்டுகள் பணியாற்றியவர்; திருவாரூர் - மாநில மாநாட்டில் வள்ளலாரின் பணிகளுக்கு நெருக்கமாக இருந்தவர்; குறிஞ்சிப்பாடி மாநாட்டில் வள்ளலாரின் மகனார் தெட்சணாமூர்த்தி முதலியாரும் நமது சம்பந்தமூர்த்தியாரும் முன்கூட்டியே சென்று அம்மாநாட்டின் சிறப்பான வெற்றிக்கு உழைத்தனர்; இவரது அரும்பெருஞ் செயலாற்றலைக் கண்ட வள்ளலார், ''நற்செயல்கள் பலவற்றை இனிதாற்றிட உன்னிடமே எல்லாவகை ஆற்றலும் அமைந்துள்ளது; நான் செய்த செயல்களைத் தொடர்ந்து செய்து, நம் சமூகத்தை உயர்த்துக'' என்று பல்லோர் முன்னிலையில் அகமலரப் பாராட்டி, வாழ்த்துகளை வழங்கி, மாநிலத் தலைமைப் பொறுப்பை இவர்களிடம் ஒப்படைத்தனர். தலைமைப் பொறுப்பில் அமைந்த போது, திருத்தணி மாநில மாநாட்டில் அதன் தலைவராக இருந்து, நல்ல கருத்துகளை வழங்கிப் பாராட்டினைப் பெற்றனர். குடியாத்தம் கா.அ. சண்முக முதலியார் அவர்கள் தலைமைப் பொறுப்பினை ஏற்கும்போது - நமது சான்றோரைப் பார்த்து, ''நீங்கள் துணைத் தலைவராக இருந்தால், நான் தலைமைப் பொறுப்பினை ஏற்கிறேன்' என்று கூறியதை எண்ணிப் பார்க்கையில் நமது சான்றோரிடம் மிகப் பெரியவர்கள் எத்துணை பாசம் வைத்துள்ளார்கள் என அறிய முடிகிறது.

தஞ்சை ஜில்லா செங்குந்தர் கல்விச் சங்கம் தோன்றிய நாள் தொட்டு அதன் துணைத் தலைவர் பொறுப்பில் இருந்து வருகிறார்கள். கூறை நாட்டு முதல் மாநாட்டில் குலக் கொடியினை ஏற்றி, அரியதொரு சொற்பெருக்காற்றினர்;

14. சான்றோர் சம்பந்தமூர்த்தி

[புலவர் மாணிக்க கணபதி, M.A., B.O.L., B.Ed., மன்னார்குடி.]



சான்றோர் சம்பந்தமூர்த்தி

மாண்பார் மஞ்சக்கொல்லை:

அமிழ்தினுமினிய தமிழ்மொழி தளர்நடை பயில்வது தண்டமிழ்நாடு; பொன்னி எனப் போற்றப் பெறும் காவிரிபாயும் சோழ வளநாடு; சோழ நன்னாட்டில் கற்றார் பயில் நாகைக்கு- செல்வக் கடல் நாகைக்கு அருகில் குலவி நிலவுவது நமது மஞ்சக்கொல்லை; குமரன் குடி கொண்ட கோவிலைப் பெற்றது; சிவநெறி நிற்கும் செந்நெறியாளர்கள் நிறைந்தது; அறநெறி நிற்கும் அன்பர்களைக் கொண்டது; ஆன்ற பண்பாளர்களைப் பெற்றது; நீற்றெழில் மேனியராய் நிற்பர்; நித்தமும் சிவன் கழலே சிந்திப்பர்; நல்லன எல்லாம் நன்கு ஆற்றுபவர் உளர்; அடியார் தமக்கு உண்டி தருவார்; நால்வர் குருபூசையும் நடக்கும்; இத்தகு மாண்பமைந்த மஞ்சக்கொல்லையில் செங்குந்தர் குலம் மணக்க—குடி மணக்க— சைவநெறி மணக்க—நால்வரின் நற்றமிழ் மணக்க- தீந்தமிழின் திறமணக்க-ஊரார் போற்ற- உற்றாரும் மற்றாரும் போற்ற பிறந்தவர் நமது சான்றோர் சம்பந்தமூர்த்தி!

பெருமைமிகு பெற்றோர்:

பிறர்நலம் பேணும் பெற்றியார்; தன்னலம் கருதா தவச் சீலர்; உயர்வாணிகத்தால் பெரும் பொருள் ஈட்டியவர்; அறம்பலவும் இனிதாற்றியவர்; சிவஞான ஒளிபரவ பெருநிதியம் அருளியவர்; மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகப் பேணியவர்; மன்னிய புகழ் கொண்டவர்; மறைகள் காணா இன்னமுதாம் பரசிவத்தோடு ஒன்றிய திருவுடையார் இராமசாமி முதலியார்; அவர்தம் இனிய நல்வாழ்க்கைத் துணைவியார் தைலம்மையார். இவர்கள் மரபோங்க — அறமோங்க சௌமிய ஆண்டு கார்த்திகைத் திங்கள் நான்காம் நாள் (19.11.1909) மூத்த புதல்வராகத் தோன்றியவர் நமது சம்பந்த மூர்த்தியார். நல்அன்புடை இராம. திருநாவுக்கரசரும், இனிய பண்புடை இராம. மாணிக்கமும் தம்பியர்களாகத் தோன்றினர்; அருமை சகோதரிகள் மூவர் பிறந்தனர்; முந்தையர் மரபு காத்து வருகின்றனர்.

பள்ளிக் கல்வியும் பன்முக அறிவும்:

தம் துவக்கக் கல்வியை மஞ்சக்கொல்லயிலேயே பயின்றனர்;தொடர்ந்து நாகை தேசீய உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தனர்; மெட்ரிக்குலேஷன் தேர்ந்தனர்; அக்காலை மஞ்சையில் வதிந்த பெரும்புலவர் சாமிநாத பண்டிதரிடத்து இலக்கிய - இலக்கணப் பாடங்களாகக் கேட்டு, ஆங்கிலத்தோடு அருந்தமிழின் அறிவினையும் பெற்றனர்.

பள்ளிப் பருவத்திலேயே வரவு செலவு கணக்கினைத் தெரிந்தனர்; நூற்பதில் வல்லவரானார்; மஞ்சை திருஞானசம்பந்தர் சபையில் பங்கு கொண்டு அதன் வளர்ச்சிக்கு உழைத்தனர்; இலக்கிய சமயச் சான்றோர் பலரின் பொழிவினைக் கேட்டனர்; திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகளிடத்தில் இளமை முதற்கொண்டே பழகியவர்; அவரது பொழிவினைத் தொடர்ந்து கேட்பதில் மகிழ்ச்சி அடைவார்; அவர்களிடம் சாத்திரப் பாடம் கேட்டனர். பற்பல சித்தாந்த மாநாடுகளில் கலந்து பயன் உற்றவர்.

தேசீய உணர்வு பெருகியிருந்த காலம்; தேசீயத் தலைவர்களின் உரை

இந்நிகழ்ச்சி என் தமையனாரின் நேர் மைக்கும் நாணயத்திற்கும் ஒரு சிறப் பான எடுத்துக்காட்டு. அவர் நினைத்தி ருந்தால் அவர் வகித்த பதவிகளின் மூலம் இலட்சாதிபதியாக ஆகியிருக்க லாம். ஆனால் அந்த உத்தமர் கையூட் டுப் பெறாது கண்ணியமாக காலமெல் லாம் வாழ்ந்தார்.

இரண்டு ஆண்டுகள் கழித்து அவர் சென்னைக்கு Collectr of Customs ஆக மாற்றப்பட்டார். இப்பதவியிலும் இவரின் நேர்மையின் காரணமாக வியா பாரிகளால் இவரை வெல்ல முடிய வில்லை! 1960 ஆம் ஆண்டு இவர் புது டில்லிக்கு அழைக்கப்பட்டு சென்னையில் அரசு வணிகக் கழகத்தின் (State Trading Corporation) வட்டார அலுவலகத்தை அமைக்கும்படி உத்தரவிடப்பட்டார். இவர் உருவாக்கிய அமைப்பு அப்போதிய அமைச்சர் டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், இந்திய தொழில், வணிகத் துறை செய லாளர் H.V.R. அய்யங்கார் போன்றவர் களால் பாராட்டப்பட்டது. இந்த அலு வலகத்தை அமைத்தபோதும் எனது தமையனார் நமது சமுகத்தினர் பல ருக்கு வேலை கொடுத்து வாழ்வளித் தார்.

அரசு வணிகக் கழகத்தில் மூன் றாண்டுகள் பணி புரிந்த பின்னர், E.C. சங்கர் அவர்கள் உலோகம் மற் றும் கனிப்பொருள்கள் வணிகக் கழகம் Metals and Minerals Trading Corporation என்ற அமைப்பினை உருவாக்கும்படி பணிக்கப்பட்டார். இந்த அமைப்பிலும் சங்கர் அவர்கள் நம் மரபினர் பலருக்கு வேலை கொடுத்து வாழ்வளித்தார். 1969ஆம் ஆண்டு வாக்கில் அவர் காயர் போர்டு தலைவராக (Chairman, Coir Board) நியமிக்கப்பட்டார். பின்னர் கார்டமம் போர்டு தலைவராகவும் (Chairman, Cardamam Board) நியமிக்கப்பட்டார். தனது உடல் நலம் சரியில்லாத காரணத் தால் அவர் 1972ஆம் ஆண்டு தன் விருப் பப்படி ஓய்வு பெற்றார். அவர் 1974 ஆம் ஆண்டுவரை பணியில் இருந்திருக் கலாம். என்ன செய்வது; அவரது உடல் நிலை அவருடைய பணிக் காலத்தைக் குறைத்துவிட்டது.

ஓய்வு பெற்ற பின்னும் சங்கர் அவர்கள் தன் வீட்டில் முடங்கிக் கிடக்கவில்லை. மூன்று ஆண்டுகள் ஓய் வுக்குப்பின், 1977 ஆம் ஆண்டு சென் னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரை யாளராகச் சேர்ந்தார். இந்திய வணிகக் கட்டுப்பாடு, பரிமாற்றம் கட்டுப்பாடு (Incian Trade Control and Exchange Control) என்கிற பொருள் பற்றி பல்கலைக் கழக மாணவர்களுக்குக் கற்பித்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் MBA படிப்பை புகுத்துவதற்கு சங்கர் அவர்கள் உந்துதலாக இருந்தார். தன் உடல் நலிவுற்ற நிலையிலும் அவர் விரிவுரை யாளராகப் பணிபுரிந்தார். 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் வாரத்தில் அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டு கோடம்பாக்கம் விஜயா மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டார். அந்த நிலையிலும் அவர் தன் மாணவர்களின் பரிட்சைத் தாள்களை மருத்துவமனையிலேயே திருத் திக் கொண்டிருந்தார். அவர் உடல் நல மின்மையும் அவரது கடமை உணர்ச்சி யைக் கட்டுப்படுத்தவில்லை! அதே மார்ச் மாதம் 21 ஆம் தேதி சங்கர் இறந்தார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவை களின் உருவமான ஒருவரின் வாழ்வு முடிந்தது! அவரது மனைவியையும், மூன்று பிள்ளைகளையும், இரண்டு மகள் களையும் கதறவிட்டு சங்கர் மறைந் தார். அவரது இரண்டாவது மகளும் இரு பிள்ளைகளும் அமெரிக்காவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவரது மனைவியும் கடைசி மகனும் சென்னையில் வாழ்கிறார்கள்.

எனது தமையனார் E.C. சங்கர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை என் நினைவில் உள்ளவற்றை மேலே எழுதியுள்ளேன். முழுமையும் எழுதப்பட வில்லை. அவரது அறிவு, ஆற்றல், அவர் இரங்கூனிலும் இந்தியாவிலும் வகித்த உயர் பதவிகள், அவரது வாய்மையும், தூய்மையும், நேர்மையும் நமது சமூக முன்னேற்றத்தில் அவர் பங்கு முதலிய வற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தால் நமது மரபில் அவருக்கு இணையாக வேறு ஒருவரைக் காண்பது அரிது! I.C.S. தேர்வில் வெற்றிபெற்ற ஒரே செங்குந்தன் என்கிற பெருமைக்குரியவர் E.C. சங்கர். ஆனால் அந்தோ வெற்றி யில் தோல்வியைத்தான் கண்டார்! அவர் I.C.S. ஆக தேர்வு பெறவில்லை. வாய்க்கு எட்டிய I.C.S. பட்டம் அவர் கைக்கு எட்டவில்லை! I.C.S. தேர்வில் அவர் பெற்ற வெற்றி விழலுக்கு இறைத்த நீராயிற்று. இதனை அவரது விதியின் சதி என்று சொல்வதா அல்லது அந்தக் காலத்து அரசியல் சதியின் விளைவு என்று சொல்வதா? முடிவை வாசகர் களுக்கே விட்டுவிடுகிறேன்.

(திரு E.C. முனுசாமி முதலியார் ஆங்கி லத்தில் எழுதிய கட்டுரையை தமி ழாக்கம் செய்தவர் திரு. பி.எஸ். சாம்பசிவம் அவர்கள்)

17. பெயருக்கேற்ற புனிதர்!

P. S. சாம்பசிவம், செயலர், T.S.S. நிதி (LTD) திருமயிலை

ரோஜா மலரை எந்தப் பெயர் வைத்து அழைத்தாலும் அதனுடைய மணம் மாறாது என்ற சொல் வழக்கினை யாவரும் அறிவார்கள். இது மலருக்குப் பொருந்தும். மனிதர்களுக்குப் பொருந்துமா? மனிதர்களின் பெயரை மாற்றி அழைத்தாலும் அவர்களின் குணம் மாறுமா? மனிதர்கள் தங்களின் பெயருக்கேற்ப குணங்களைக் கொண்டிருக்கிறார்களா? இல்லை என்பதே பதில். சத்யசீலன் என்று ஒருவருக்குப் பெயர் இருக்கும். அவருக்கும் சத்தியத்திற்கும் தொடர்பே இருக்காது! கருணாகரன் என்று பெயர் இருக்கும். அவரிடத்தில் கருணை இருக்காது! நற்குணன் என்று பெயர் இருக்கும். அவரிடத்தில் நற்குணங்களைக் காண்பது அரிது! அன்பழகன் என்று பெயர் இருக்கும். அவரிடத்தில் அன்பும் இருக்காது, அழகும் இருக்காது! கண்ணாயிரம் என்று பெயர் இருக்கும். அவரது கண்பார்வை மந்தமாக இருக்கும்! இவ்விதம் அடுக்கிக்கொண்டே போகலாம். பெயருக்கேற்ற குணங்களைக் கொண்ட மனிதர்கள் மிக மிகச் சிலரே. அச் சிலரில் ஒருவர்தான் சென்னை திருக்காரணி எம்.பி. புனிதவேலு முதலியார் அவர்கள். இவர் புனித வாழ்வு வாழ்வார் என்று எதிர்பார்த்து இவரது பெற்றோர்கள் இவர்க்கு புனிதவேலு என்று நிச்சயமாக பெயர் வைத்திருக்கமாட்டார்கள். அவர்கள் வைத்த பெயர் நட்சத்திர பெயராகத்தான் இருக்கும். ஆனால் பெற்றோர் இட்ட பெயருக்கேற்ப புனிதவாழ்வுவாழ்ந்த பெருமை புனிதவேலு முதலியாருக்கு உண்டு! இவரது பெயரிலே முதற் பாதி புனிதம்! ஆனால் இவர் வாழ்ந்த முழு வாழ்வு புனிதவாழ்வு!

திருமிகு புனிதவேலு முதலியார் பிறந்த தேதி 31-10-1916. சென்னை சைதை மாடல் உயர்நிலைப் பள்ளியில் படித்து, பச்சையப்பன் கல்லூரியில் இண்டர் படிப்புடன் தனது படிப்பை முடித்துக் கொண்டார். அவர் நாட்டமெல்லாம் வாணிபத்தில்! ''வியாபார அறிவு'' தான் (Business acumen) அவரது ரத்த ஓட்டம். அதன் காரணமாக அவர் தொட்ட எந்த வியாபாரமும் துலங்கிற்று. அவரது முகராசியும் கைராசியும் அவர் ஈடு பட்ட பல்வேறு வாணிபத்திலும் அவரை உயர்த்தின என்று சொன்னால் அது பாதி உண்மை. அவரது திறமையும் ''வியாபார அறிவும்'', நாநயமும், நாணயமும், இடைவிடா உழைப்பும் எல்லாம் சேர்ந்து அவருக்கு வணிகத் துறையில் மேன்மையான இடத்தை அளித்தன என்பது தான் முழு உண்மை. அவர் திட்டமிட்டுச் செயல்படுவார். அதன் காரணமாக வெற்றி காண்பார். தான் எடுத்த காரியத்தை முடிப்பதற்கு ஓய்வின்றி எல்லா முயற்சிகளிலும் ஈடுபடுவார். வாகை சூடுவார். முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு இவர் ஓர் எடுத்துக்காட்டு! இவர் வியாபாரத்துறையில் ஒரே பாதையில் செல்லவில்லை. இவரது ''வியாபார அறிவுத் திறத்தினால் மொத்த நூல் வியாபாரத்தில் தொடங்கி எண்ணெய் ஆலை நடத்தி, பின்னர் இயந்திர உறுப்புகள் விற்பனை நிலையங்களை நிறுவி தன்னை ஒரு வணிகக் கோமானாக Business Magnate நிலை நாட்டிக்கொண்டார். இந்த மகத்தான சாதனையை அவர் தனிமனிதராக இருந்து தனது சொந்த முயற்சியில் செய்தார்! சங்கர் டிரேடிங் கம்பெனி, சேலம் டிரேடிங் கம்பெனி, எம்.பி.பி. இண்டஸ்டிரீஸ் முதலிய நிறுவனங்கள் அவரது திறமையையும் புகழையும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

திரு. புனிதவேலு முதலியார் அவர்கள் வசதியான குடும்பத்தில்தான் பிறந்தார். தான் வாணிபத்தில் நுழையும் போது எளிய நிலை தான். ஆனால் படிப்படியாக வளர்ச்சியுற்று மிகவும் வளமான நிலையை உருவாக்கிக் கொண்டார். தனது திறமையால், ஆற்றலால். அவரது வெற்றியின் ரகசியம் தான் என்ன? அவருடைய வளர்ச்சிக்குக் காரணம் அவரது கடின உழைப்பும், நேர்மையும், நாணயமும்தான். பிறர்க்குக் கெடுதல் செய்யாமல் நெளிவு சுளிவுடன் வியாபாரம் செய்வதையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். எனவே இவர் துறையில் இவருக்கு எதிரிகளே கிடையாது. பிறர் இவரை நம்பும்படி நடந்து கொண்டதே இவரது தனித்தன்மை. இவரும் வாழ்ந்தார். மற்றவரையும் வாழவைத்தார்! கொள்ளை லாபம் இவரது குறிக்கோ

உயர்ந்த வகுப்பு நான்காம் வகுப்பு. ஆனால், அக்காலத்தில் முதலிரண்டு ஆண்டுப் படிப்பைச் சின்ன அறிவிலி என்றும் பெரிய அறிவிலி என்றும் சொல்வது வழக்கம். அந்த இரண்டாண்டுகளுக்குப் பின்னரே முதல் வகுப்பிற்கு மாணவர் அனுப்பப்படுவர். அறிவிலி வகுப்பில் மாணவர்க்கு எழுத்தறிவூட்டும் வழக்கம் இல்லை. பள்ளிக்குச் சரியாக வருவதற்கும் ஒழுக்கக் கட்டுப்பாட்டை வளர்ப்பதற்குமே அவ்விரண்டாண்டுகள் பயன்பட்டன.

அந்தப் பள்ளியில் முதலாம் வகுப்புக்குச் சென்ற பின்னரே திரு. முதலியாருக்குத் தமிழ் எழுத்துக்கள் கற்பிக்கப்பட்டன. திரு முதலியார் மணலில் எழுதித் தமிழ் எழுத்துக் கற்றார். அவர் மூன்றாம் வகுப்பு முடித்து நான்காம் வகுப்பிற்குச் சென்ற ஆண்டில் அந்தப் பள்ளியை மாவட்டக் கழகம் (District Board) நடுநிலைப் பள்ளியாய் மாற்றியது. அப்போதெல்லாம் நடுநிலைப் பள்ளியில் நான்காம் வகுப்பு முதல் மூன்றாம் படிவம் வரையில் இருக்கும். நடுநிலைப் பள்ளி தொடங்கப்பட்ட நேரத்தில் ஐந்தாம் வகுப்பில் மாணவர் மிகக் குறைவாய் இருந்ததால், ஏழே நாள் நான்காம் வகுப்பில் இருந்த முதலியார் ஐந்தாம் வகுப்பிற்கு மாற்றப்பட்டார். அந்த வகுப்பில்தான் அவருக்கு ஆங்கில எழுத்துக்கள் கற்பிக்கப்பட்டன. அந்த வகுப்பிலும் திரு. முதலியாரே முதல் மாணவராயிருந்தார். அடுத்த ஆண்டு அவர் முதற்படிவத்திற்கு மாற்றப்பட்டார். அவருடைய வறுமை நிலையை முன்னரே அறிந்திருந்த தலைமையாசிரியர் அவருக்கு அரசாங்க உபகாரச் சம்பளம் (government scholarship) வாங்கிக் கொடுத்தார். அந்த ஆண்டு முதல் திரு. முதலியார் B.A. (Hons) முடிக்கும் வரையிலும் தொடர்ந்து உபகாரச் சம்பளம் பெற்றார்.

திரு. முதலியார் முதற்படிவத்தை முடித்தவுடன், போதுமான மாணவர் இல்லாமையால் நடுநிலைப் பள்ளி மூடப்பட்டது. முதலியாரின் அன்னையார் மனந்தளராமலும் செலவைப் பொருட்படுத்தாமலும் அவரைக் கோவை நகருக்கு அனுப்பிப் படிக்க வைத்தார்.

கோவை அரசினர் கல்லூரியுடன் சேர்ந்த உயர்நிலைப் பள்ளியில் திரு முதலியார் இரண்டாம் படிவத்திற் சேர்ந்து இடைநிலை வகுப்பு (Intermediate Class) வரையில் படித்தார். (அப்போது அந்தக் கல்லூரியில் இடைநிலை வகுப்பே மிக உயர்ந்த வகுப்பு.) எல்லா வகுப்புகளிலும் எல்லாப் பாடங்களிலும் திரு. முதலியாரே முதல் மாணவராயிருந்தார். ஆண்டுதோறும் அளிக்கப்பட்ட எல்லாப் பரிசுகளையும் முதலியாரே பெற்றார். (கணக்கு ஒன்றில் மட்டும் முதலியார் நூற்றுக்கு நூறு வாங்கியதில்லை.) படிப்பில் மட்டுமன்றி ஒழுக்கத்திலும் முதலியார் உயர்ந்தவராயிருந்ததால் அதற்குரிய பரிசையும் அவரே பெற்றார். ஆசிரியர்கள் அவர்பால் பேரன்பு கொண்டிருந்தார்கள்.

ஐந்தாம் படிவத்தில் படிக்கும் போதே சர் வால்டர் ஸ்காட் என்னும் புகழ்பெற்ற ஆசிரியரின் ஆங்கில நாவல்களைப் படிக்கத் தொடங்கிய முதலியார் ஆறாம் படிவம் முடிக்குமுன் ஸ்காட்டின் நாவல்களுள் ஏறக்குறைய எல்லாவற்றையும் படித்து விட்டார். அன்று தோன்றிய ஆங்கில ஆர்வம் இன்றுவரையில் தொடர்ந்துள்ளது. திரு. முதலியார் படித்துள்ள ஆங்கில உரைநடை நூல்கள் எண்ணற்றவை. அம்மொழியில் நன்றாகப் பேசவும் அதைக் காட்டிலும் நன்றாக எழுதவும் அவர் ஆற்றல் பெற்றவர். அன்றியும், தமிழாசிரியர் பண்டித அ. கந்தசாமி பிள்ளையின்பால் பெருமதிப்பு வைத்திருந்த முதலியாருக்குத் தமிழ்ப் பற்று மிகுந்தது. தமிழ்ச் செய்யுள்களை மனப்பாடம் செய்வதில் திரு. முதலியாருக்கு மிகுந்த ஆர்வம் பிறந்தது. அன்றியும், அவரே, ஆசிரியப்பா, வெண்பா, விருத்தம் ஆகிய செய்யுள்களைப் பாடத் தொடங்கினார்.

கோவைக் கல்லூரியில் திரு. முதலியாரைப் படிக்க வைக்க அவர்தம் அன்னையார் பட்ட துன்பங்களையெல்லாம் அவர் இன்று குறிப்பிடும் பொழுதும் கண்ணீர் மல்கி நிற்கிறார். தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்'' என்று கடவுளைக் குறிப்பிடுவார்கள். ஆனால், மு.ரா.பெ. அவர்களைப் பொறுத்த அளவில் தாயாகி, தந்தையாகி, தெய்வமாகி, எல்லாமாகி நின்றவர் அவர்தம் அன்னையார் பெரியக்காள் அம்மையார் ஆவார்.

கோவைக் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் முதல் வகுப்பில் தேர்வு பெற்றபின் மு.ரா. பெ. மேலே என்ன செய்வது என்று திகைத்து நின்றார். அவருள்ளம் உயர் கல்வியை நாடியது; குடும்பச் சூழலோ ஏதேனும் பணிக்குச் செல்ல வேண்டும் என்னும் எண்ணத்தைத்

20. தமிழ்ப் பெரும் புலவர்
திரு. மு.ரா. பெருமாள் முதலியார், B.A. (Hons)

புலவர் இ. கோமதி நாயகம்



திரு. மு. ரா. பெருமாள் முதலியார்

தமிழுக்குத் தொண்டு செய்த சான்
றோர் பலராவர். அச் சான்றோருள்
தனித் தமிழ் பயின்று, தமிழாசிரியராய்ப்
பணியாற்றி, மொழித் தொண்டு புரிந்
தோர் சிலர். மற்றுஞ் சிலர் அறிவியல்,
வரலாறு, சட்டம், தத்துவம், பொறியி
யல் முதலிய துறைகளிற் பயிற்சி பெற்ற
வராயினும், தமிழ்க் காதல் கொண்டு,
தமிழ் பயின்று, தமிழ்த் தொண்டாற்றி
னர், இன்றும் ஆற்றுகின்றனர். அத்த
கைய சான்றோருள் திரு. மு.ரா. பெருமாள்
முதலியாரும் ஒருவர். இவர் உயர்நிலைப்
பள்ளி ஆங்கில ஆசிரியராகவும், வரலாற்
றாசிரியராகவும், ஆசிரியக் கல்லூரிப் பேரா
சிரியராகவும், அதன் முதல்வராகவும் பணி
யாற்றியவர். ஆயினும், ஒல்லும் வகை
யால் நற்றமிழ்த் தொண்டாற்றும் சான்
றோராகவும் வாழ்ந்து வருகிறார். உழை
பால் உயர்ந்த இப்பெரியாரின் வாழ்க்கை
பிறருக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்
குகிறது.

திரு. பெருமாள் முதலியார் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். அம்மாவட்டத்தின் மேற்கெல்லையாய் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதி வெள்ளிங்கிரி மலை எனப்படும்; (சிறுவாணிக்கு அடுத்த பகுதி). வெள்ளிங்கிரி மலையின் நீழலில் தொண்டாமுத்தூர், முத்திபாளையம், குளத்துப்பாளையம் என்னும் மூன்றூர்கள் ஆய்த எழுத்துப் போல அமைந்துள்ளன. திரு. மு.ரா. பெருமாள் முதலியார் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ஒன்பதாம் நாள் முத்திபாளையத்தில் பிறந்தார். அவ்வூரில் செங்குந்தர் மட்டும் வாழ்ந்து வருகின்றனர். முதலியாரின் குடும்பம் அன்று வறுமைக் கோட்டிற்குக் கீழ்ப்பட்டது. அன்று முப்பதே வீடுகள் கொண்ட முத்திபாளையத்தில் நிலமில்லாத குடும்பம் நான்கு. அவற்றுள் திரு. முதலியாரின் குடும்பமும் ஒன்று. மற்ற மூன்று குடும்பத்தினரும் நெசவுத் தொழில் செய்து ஒருவாறு வயிற்றைக் கழுவி வந்தனர்.

திரு. முதலியாரின் தந்தையார்
இராமசாமி முதலியார் குடும்பப் பொறுப்
பற்றவர். ஆதலால் பொறுப்பு முழுதும்
தாயார் பெரியக்காள் தலையில் விழுந்
தது. முதலியாரின் தந்தையார் இரண்
டாம் வகுப்புப் படித்தவர். தாயார் எழுத்
தறிவற்றவர். எனினும், அவர் இயல்
பான அறிவும் செயல்திறனும் பெற்ற
வர். பிட்டு (இட்டிலி) சுட்டு விற்றும்,
அண்மைச் சிற்றூர்களில் சில்லறையாகச்
சோளம் கேழ்வரகு போன்ற தானியங்
களை வாங்கிச் சந்தையில் மொத்த
மாய் விற்று பாக்கைச் சில்லறையாக
வாங்கிக் கோவைக்குக் கொண்டு போய்
மொத்தமாய் விற்றும் குடும்பத்தைக்
காப்பாற்றி வந்தார். அவரைக் கண்டு
முத்திபாளையத்தில் வேறு சில பெண்டி
ரும் அத்தகைய வாணிகத்தில் ஈடுபட்ட
னர்.

முதலியார் அவர்களின் தொடக்கக்
கல்வி தொண்டாமுத்தூரில் தொடங்
கியது. அங்கிருந்த பள்ளியில் மிக

19. சித்தாந்த சிகாமணி க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி.

முன்னுள் ஆசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.

இவர் செங்குந்த மரபினர். இன்றைய தமிழகத்தின் தலைமைப் புலவர்களில் ஒருவர். சைவசமய மெய்ந்நூல்களின் (சாத்திரங்கள் - தத்துவ நூல்கள்) வரம்பு கண்டவர் - ஏனைய சமய உண்மைகளையும் நன்கறிந்தவர். திருமுறைகளிலும் ஆழ்ந்த பயிற்சியுடையவர். ஆங்கிலமும் வடமொழியும் கற்றறிந்தவர். தமிழிலக்கியங்களிலும் சிறந்த அறிஞர். இப்பெற்றிநோக்கி இவரைச் சைவ சித்தாந்த மகாசமாசம் தன் விழாவுக்குத் தலைவராக விரும்பி ஏற்ற தென்னின் இவர் திறத்திற்கு வேறு சான்றுகள் வேண்டாம். இவர் மாட்சிகள் பல. அவற்றில் சிறந்த ஒன்று, கற்றவல்லார் அவைக்கண் இவர் தாமறிந்துள்ள அரும்பெறல் மெய்ந்நூற் கருத்துக்களை எல்லாம் மிகத் தெளிவாகக் கேட்பவர் உள்ளம் மகிழுமாறு இனிதாக விளக்குதல் ஆம். இவர் பால் சிவஞானபோதம், சித்தியார் முதலிய அருள் நூல்களைப் பாடங்கேட்டார் பலர்.

காஞ்சிபுரத்தில் மெய்கண்டார் கழகங் கண்டவர்களில் ஒருவர். அக் கழகப் பணிகளை எல்லாம் தம்மை ஒத்த அரும் புலவர் அருணைவடிவேல் முதலியார், சிவநெறியின் அயர் விலாத் திருத்தொண்டர் புலவர் திருநஞானசம்பந்த முதலியார் முதலிய சிவநேசர்களுடன் சிறப்பாக நடத்தி வருபவர். அன்றியும்,

கிழமைதோறும் திருக்காஞ்சிக் கோவில்களில் வாரவழிபாடு நடத்தியும், சொற்பொழிவுகளாற்றியும் நூல்கள், சிறுநூல்கள், விளம்பரங்கள் வெளியிட்டும் ஆண்டு விழாக்கள், மாநாடுகள் நடத்தியும் ஆயிரக் கணக்கான காஞ்சி அன்பர்கட்கும் வெளியூரவர்கட்கும் சிவநேயம், தமிழ் நேயங்களை வளர்த்துவரும் காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகத்தின் உயிர் போல்வார்.

இவர் அடிகள்பால் (மறைமலை அடிகள்) கொண்ட பெருமதிப்பும், பேரன்பும் எல்லையற்றன. அதனால் தம் கழக விழாவுக்கு அடிகளைத் தலைவராக்கி மகிழ்ந்தார்.

மறைமலையடிகளின் மகனார் வித்துவான் மறை-திருநாவுக்கரசு எழுதிய ''மறைமலையடிகள் வரலாறு'' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது

நல்ல உணவுகளை உண்பதனால் உடல் வளரும்.
நல்ல நூல்களைப் படிப்பதனால் உனது உணர்ச்சி வளரும்.
நல்ல உள்ளத்துடன் சதா இறைவனை நினைப்பதனால் உனது உயிர் வளரும்.
ஆதலினால் உடம்பையும், உணர்ச்சியையும், உயிரையும் வளர்த்துக் கொள்.

—**வாரியார்**

நீ இறைவனுடைய கருணையைப் பெறவேண்டுமானால் அதற்கு வழி ஒன்று உண்டு. அது வெறும் வணக்கமும் வழிபாடும் மட்டுமன்று;

துன்பமுற்றுத் துடிக்கின்ற உயிர்களிடம் நீ கருணை செய்; அவைகளின் துன்பத்தை நீக்கு; நீ பிற உயிர்களிடம் கருணை செய்தால் கடவுள் உன்னிடம் கருணை செய்வார். கருணையால் கருணையைப் பெறலாம். இதனை ஒருபொழுதும் மறவாதே

—**வாரியார்**

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்

—**திருமூலர்**

1932-33 ஆம் ஆண்டில் ஆர்ட்பீயன் போர்போட்டு நெய்வேலி கிராமத்தில் சுமார் 280 அடி ஆழம் போர்வெல் போட்டதில் தண்ணீருடன் பழுப்பு நிலக்கரி வந்தது. அதனால் நிலத்தடியில் பழுப்பு நிலக்கரி இருப்பது தெரிய வந்தது. அதனை மாநில மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி பழுப்பு நிலக் கரிதான் என உறுதி செய்யப் பட்டது. ஆய்வு செய்ய வந்த அலுவலர் கட்குத் தங்க தக்க ஏற்பாடு செய்து கரி எடுக்க உதவினார்கள்.

அவர்கள் பொதுப் பணிப் பொறுப்புக் களை ஏற்று நிருவாகம் செய்தபோது பல இன மக்களுக்கும் வேலை வாய்ப்பு அளித்து எண்ணிறைந்த குடும்பங்களுக்கு வாழ்வு அளித்தார்கள். செங்குந்தப் பெருமக் களுக்குத் தறி நெசவு ஆசிரியர் வாய்ப்பு அளித்து உதவினார்கள். பிற பணிவாய்ப் பும் அளித்துள்ளார். பாடலீஸ்வரர்கோயில் நிருவாகத்திற்கும் உறுதுணை புரிந்தார் கள்.

தில்லை ஆதிதிராவிடத் தலைவர்கள் சுவாமி சகஜா நந்தாவிற்கு பள்ளி துவக்கவும் பல உதவி புரிந்தார்கள். நெய்வேலி மந் தாரக் குப்பத்து உப்பு நிலங்களை விளை நிலமாக மாற்றி உணவுப் பொருளை விளை வித்தார்கள்.

புவனகிரியில் வெள்ளாற்றிற்கு பாலம் அமைக்க எங்கள் தாதா சிங்கார வேல் சுவாமிகள் முயன்றார்கள். அம்முயற்சியை அரசினை அணுகி வெற்றியுறச் செய்து பாலம் கட்ட உறுதுணை புரிந்தார்கள்; வட்டார மக்கள் பெரிதும் அகமகிழச் செய் தார்.

பல நிலைப் பள்ளிகளை பல்வேறு இடங்களிலும் அமைத்தார்கள். 1943 இல் புலவர் வகுப்பு படித்து வந்த நாள் தாத்தா சிங்காரவேல் சுவாமிகள் தூண்டுதலின் பேரில் சம்புலிங்க முதலியாரைச் சென்று கண்டேன். அளவாளாவி மகிழ்ந்தேன். அப்போது தன் நிலத்தில் உழவுப் பணி நடப்பதை அறிந்துவர ஆள் ஒருவரை அனுப்பினார். சில நாழிகை கழித்துப் பிறிதொருவரையும் அனுப்பினார். யான் சற்று உற்றுக் கவனித்து மயங்கினேன். என் போக்கைக் கண்ட முதலியார் விளக்கம் அளித்தார். செய்தி ஒன்றன் உண் மையை சரிபார்த்து உறுதி செய்ய ஒற்றர் ஒருவர் போனால் போதாது பிறிதொரு ஒற்றரையும் அனுப்பிப் பார்த்து, இருவர் கூற்றும் ஒற்றுமை உடையதாக இருப்பின் செய்தி உண்மை என முடிவு செய்தல் வேண்டும் எனக் கூறி 'ஒற்று ஒற்றித் தந்த பொருளையும் மற்றுமோர் ஒற்றினான் ஒற்றிக் கொளல்'' என்ற குறளை எடுத்துக் காட்டினார். இச்செய்தி விளக்கத்தை அறிந்தபோதுதான் அவர்கள் எவ்வளவு நினைவாற்றலும், சிந்தனைத் தெளிவும் திருக்குறள் ஈடுபாடும் உடையவர்கள் என அறிந்து பெருமகிழ்வு எய்தினேன். அவர் கள் 1970 அக்டோபர் திங்கள் 28 ஆம் நாள் புகழுடம்பு பெற்று பெருமிதமுற் றார்கள். நிலக்கரியைக் கண்டுணர்த்திய பெருந்தகையால் இன்று நெய்வேலிச் சுரங்கமும், நகரமைப்பும், வளர்ச்சியும் சொல்லும் தரத்ததன்று. ஆயிரங்கோடி செல்வம் அங்கே தாராளமாகப் புழக்கத் தில் உள்ளது. மக்கள் வறுமை அகன்று வளமாகவும் மனநிறைவும் மகிழ்ச்சியும் உடையவர்களாகத் துலங்குகின்றனர்.

கரி - மின்சாரம் - எரு வகைகள் - குடிதண்ணீர் - பாண்ட வகைகள் என ஏராள பொருள் பெருக்கமும் தொழில் பெருக்கமும் உடையதாக சென்னைப் பட்டினத்தை வென்று விளங்குகின்றது.

அத்தகைய வளர்ச்சிக்கு விதை ஊன்றிய வித்தகர் நமது கைக்கோளர் பெருந்தகை என அறிந்த போது வழிபெரு வகை மீதூர்கின்றது; கேட்கும் போது நெஞ்சம் உருகாதிருக்க இயலுமா?

''ஊருணி நீர் நிறைந் தற்றே உலக வாம் பேரறிவாளன் திரு'' என அறிந்து விம்மதம் உறுகின்றோம். வாழ்க திரு சம்புலிங்க முதலியார் எனப் போற்றி பெருமிதம் கொள்வோமாக.

அறம் ஒன்றுதான் அழிவில்லாதது. மண் விண் கடல் கதிர் மதி முதலிய அனைத்தும் அழிந்து போகும். அறம் என்றும் அழிவற்றது. தேன் தான் கெடாது. தன்னில் விழுந்த பொருள்களையும் கெடாமல் காப்பது போல், அறம் என்ற ஒன்று தான் எப்போதும் அழிவற்றதாகி நின்று, அறம் புரிவோரையும் அழிவின்றிக் காத்தருளு கின்றது. பலர் அறிய வேண்டும் என்றோ, புகழுக்காகவோ, பயன் கருதியோ செய்வது அறம் ஆகாது. இரகசியமாகப் பயன் கருதாமல் கடமையுணர்ச்சியுடன் செய்வதே சிறந்த அறமாகும்.

—**வாரியார்**

18. நிலக்கரி கண்ட நெடுந்தகைச் செல்வர் சம்புலிங்க முதலியார்

புலவர் ஆ. வீரவாகு குரோம்பேட்டை

தமிழ்நாடு முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்த பாலையும் மருதமும் நெய்தலும் கலந்த கலவை கூடிய கலம்பக வண்ணத்தது. இதன்கண் பண்டைக் காலத்து நடுநாடு என்ற அங்கமும் அதனுள் அடங்கியதே; அது இப்போது தென்னாற்காடு மாவட்டம் என்ற பெயரைப் பெற்று எழிலோடு விளங்குகிறது.

இதன் தலைநகர் கடலூர் என்பது. கடலூரும் பண்ருட்டியும் அமைந்த நெடுஞ் சாலையிடையேதான் திருக்கண்டீச்சரம் என்ற பேரூர் உள்ளது. கிழக்கே பாதிரிப் புலியூரும் மேற்கே திருவதிகை வீரட்டான மும் தெற்கே திருமாணிக் குழியும்அமைந்த நகரின் நடுவணதாக இவ்வூர் அமைந் துள்ளது. இவ்வூர் சுந்தர மூர்த்தி நாய னாரால் பாடப் பெற்ற தலப்பெருமை உடையது. நாவரசரும் மெய்க்கண்டாரும் அருணந்திச் சிவமும் இந்த ஊரினை அடுத் தவர்களே!

இவ்வூர் மருத நிலமும் நன்செய் புன் செய் பரப்புடையது. கரும்பும் நெல்லும் கவின் பெற செழித்துள்ளது. தென்னஞ் சோலையும் பனைமரமும் மாமரமும் பலாமரமும் முந்திரிக் காடுகளும் சோலை களாகக் காட்சி வழங்கும். யாண்டும் ஏரியும் குளமும் கெடிலமும் தென் பெண்ணையாறும் தவழ்ந்தோடுகின்றன. உழவும் நெய்தல் தொழிலும் சிறக்கப் பெற்றது. கரும்பு சாறுபிழியும் கரும் பாலை பிரஞ்சுக் காரரால் நிறுவப்பெற்று நடந்து வருகின்றது. நெல்லிக் குப்பம் அண்மையில் உள்ளது.

இந்த செழுமையும் கொழுமையும் வாய்ந்த பேரூரின்கண்ணே மாசிலாமணி முதலியாருக்கு அருமகவாக நம் நன்மதிப் புக்குரிய பெரியார் சம்புலிங்க முதலியார் 1889 ஆண்டு பிறந்தார். திருப்பாதிரிப் புலியூர் புது நகரில் நகர் நடுவண்கண் அமைந்த கிருத்துவ மிஷன் உயர்நிலைப் பள்ளியில் படித்து அறிவிளக்கம் பெற்றார். தவத்திரு ஞானியாரடிகளிடத்துத் திருக் குறள் போன்ற நூல்களைக் கற்று மூதறி ஞர் ஆனார். நீதிக் கட்சியில் சேர்ந்து பனகல் அரசர், ஏ.டி. பன்னீர் செல்வம் - தியாகராயச் செட்டியார் - பெரியார் போன்ற பெரியார்களோடு தொடர்பு கொண்டார்.

நல்ல நிருவாகம் செய்யும் திறலினர்; அனைவரையும் தன்பால் கவர்ந்திழுக்கும் சூழ்வினையாளர். தகைசான்ற மாண்பினர்- அறிஞரையும் கவரும் நெடிய உருவினர். தலைப்பாகையணிந்த வெள்ளுடை வேந் தர். எப்போதும் இனிய எளிய அருங் குணச் செல்வர். ஒப்புரவு செய்யும் பொது நலத் தொண்டர். சமுதாயப் பணியாளர்.

முதற்கண் நெல்லிக் குப்பம் பேரூ ராட்சித் தலைவராக 20 ஆண்டுகள் பணி செய்தார். அவ்வூரினைச் செம்மைப் படுத் தினார். கரும்பு ஆலையை நன்கு வளரு மாறு சூழ்நிலையை உருவாக்கினார். ஏழை எளியோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கச் செய்தார். பின்னர் தாலுக்கா போர்டு உறுப்பினராக 9 ஆண்டுகள் பொதுப்பணி புரிந்தார். மாவட்ட அற நிலையத் தலைவராக விளங்கினார்கள். பின்னர் ஜில்லா போர்டு உறுப்பினராக 14 ஆண்டுகள் இருந்தார். ஜில்லாபோர்டு துணைத் தலைவராக 3 ஆண்டுகள் இருந் தார். தென்னாற்காடு ஜில்லா போர்டு தலைவராக 6 ஆண்டுகள் பணிபுரிந்து சீரிய தொண்டாற்றினார். அப்போது கடலூர் நகராட்சி உறுப்பினராக 3 ஆண் டும் நகராட்சித் தலைவராக 3 ஆண்டும் நிருவாகம் செய்தார்கள். அப்போது இர யில்வே போர்டு அட்வைசரி கமிட்டி உறுப் பினராக மூன்றாண்டுகள் பணிபுரிந்தார். தென்னாற்காடு கூட்டுறவு வங்கி டைரக் டராக 5 ஆண்டுகள் பணிபுரிந்தார். அண் ணாமலைப் பல்கலைக்கழக செனட்டு உறுப்பினராக ஒருமுறை விளங்கினார். இப்பணிகளில் இருந்தபோது பல மக்க ளுக்கு வேலை வாய்ப்பு அளித்துதவி னார்கள்.

வில்லன் (Villain) என்ற ஆங்கிலச் சொல் பொருந்தும் அளவிற்கு வேறு தமிழ்ச் சொல் பொருந்தாது, புனிதரின் மறைவிற்கு! நல்லவர்களுக்குக் கிடைக்கும் பரிசு இதுதானா? கொடுமை! கொடுமை. மனம் ஆறுதல் அடையவில்லை. புனிதர் புனிதவேலு முதலியாரின் அகால மரணம் செங்குந்தர் சங்கத்திற்கும், சமூகத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. ஆனால் வசதி படைத்த செங்குந்த குலப் பெருமக்கள் புனிதர் புனிதவேலு முதலியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றினால் செங்குந்தர் மரபு செழிக்கும். எல்லோருக்கும் உதவி புரிய வேண்டும் என்பதில்லை. அவரவர்கள் அவரவர்களுடைய செழுங்கிளைகளைத் தாங்கினாலே போதுமானது. வசதி படைத்தவர்கள் வசதி குறைந்தவர்களுக்கு உதவ வேண்டும் என்பதுதானே புனிதர் புனிதவேலு முதலியார் காட்டிய பாதை. அந்தப் பாதையைப் பின்பற்றுவதுதான் அவருக்கு நினைவுச்சின்னமாக விளங்கும். ஆனல் சைதை திருக்காரணீசுவரர் திருக்கோவிலின் எழில் மிகு ராஜகோபுரமே பெருந்தகை புனிதவேலு முதலியாருக்கு நினைவுச்சின்னம் என்பது சைதை செங்குந்த குலப் பெருமக்களுக்கு மட்டும் தான் தெரியும்! ஆம் காரணீசுவரர் கோவிலின் கோபுரத்திருப்பணிக்கு தன் உதவியாலும், உழைப்பாலும், செல்வாக்காலும் பெருமளவு நன்கொடை வசூலித்துத் தந்த பெருமை திரு புனிதவேலு முதலியாரையே சாரும். கோபுரத் திருப்பணி ஒல்லும் வகையெல்லாம் சிறப்புற நடைபெற முழுமுதற் காரணமாக இருந்தவரே இப்புனிதர் தான்.

இப் புனிதரைப் பற்றி நினைக்கும் போது இவரின்

கட்டான உடல்!
வெள்ளிய பல் வரிசை!
பிறரை ஈர்க்கும் புன்னகை!
அயரா உழைப்பு!
இல்லார்க்கு ஈத்துவக்கும் பண்பு!
வெள்ளுடைத் தோற்றம்!
வாழு, வாழவிடு என்னும் பேருள்ளம்!

நம் மனக்கண்முன் நிழலாடுகின்றன. பெயருக்கேற்ற இப்புனிதரின் புகழ் வாழ்க!

ஆண்டவனை வழிபடுவதைக் காட்டிலும் அடியாரை வழிபடுவது சிறந்தது. ஆண்டவனை வழிபடுவோருக்கு ஒரு பலன். அடியாரை வழிபடுவோர்க்கு இரட்டைப் பலன். ஏன்? அடியார்கள் உள்ளக் கோயிலில் ஆண்டவன் உறைகின்றான். ஆதலின் அடியார் வழிபாடு உயர்ந்தது என்றுணர்க.

ஆண்டவனுக்குத் தந்த ஒன்று அடியார்க்குச் சேராது. அடியார்க்குத் தந்தது ஆண்டவனைச் சேரும். அஞ்சல் தலைமை நிலையத்தில் இட்ட அஞ்சல் அஞ்சல் பெட்டிக்கு வராது. அஞ்சல் பெட்டியில் இட்ட அஞ்சல் தலைமை நிலையத்துக்குச் சேர்ந்துவிடும். அஞ்சல் தலைமை நிலையம் இறைவன். அஞ்சல் பெட்டி அடியார்கள் என்றுணர்க.

ஆண்டவனுக்குச் செய்யும் வழிபாடு ஆராதனை எனப்படும். அடியார்க்குச் செய்யும் வழிபாடு சமாராதனை எனப்படும். சம் - ஆராதனை - சமாராதனை. சம் - நன்றாக, ஆராதனை - வழிபாடு. நன்றாக வழிபட்டது சமாராதனை.

ஆதலால் காதலால் அடியார்க்குச் செய்யும் வழிபாடு மிகமிகச் சிறந்த பயனை நல்கும்.

—வாரியார்

பிறை தொழுக என்றல்

தையல் இடத்தர் திருச்சடை மீதில் தரித்த பிறை
மெய்யிது எவர்க்கும் தொழக்கிடையா மழுவெண்டலைமான்
கையதினில் பரி மோரூரில் மாம்பலங்காரார் வெற்பில்
செய்ய மலர்க்குழலாய் குவிப்பாய் உன் செழுங்காமே.

படிக்காசுப் புலவர்

ளல்ல. ''வருகின்ற லாபத்தைப் பற்றித் திருப்தி இருக்க வேண்டும். நம்மிலும் கீழ் நிலையில் உள்ளவரைப் பார்த்து மன நிறைவு கொள்ள வேண்டும். அதே வேளை யில் மேலே உயர வேண்டும் என்ற முயற்சி யும் கொள்ள வேண்டும்'' என்பதே இவரது வணிகப் பொன்மொழி. புனித மொழியும் கூட!

தனது வாழ்க்கை மகத்தான வளமை நிலை அடைந்தபின், திரு. புனிதவேலு முதலியார் தான் கடந்துவந்த பாதையை ஒரு கணம் திரும்பிப்பார்த்தார்! பின், தான் பிறந்த செங்குந்த இனத்தைப் பார்த்தார். வளமுடன் வாழ்பவர்களில் எத்தனை பேர் திரும்பிப்பார்க்கிறார்கள்? பாராதவர் களே பெரும்பான்மையோர். விதிவிலக் காக திரும்பிப்பார்ப்பவர்கள் ஒரு சிலரே. அந்த விதிவிலக்கிலே ஒருவர் நமது முதலி யார் அவர்கள். திரும்பிப் பார்த்ததின் காரணமாக தான் பிறந்த சமூகத்திற்கு ஏதேனும் நன்மை செய்ய வேண்டும் என்ற நன்னோக்கத்தால் உந்தப்பட்டு, சென்னை-செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம், தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம் முதலிய சங்கங்களில் ஈடுபாடு கொண்டார். தனது சமூக முன்னேற்றத் திற்கு தன்னாலான உதவியைச் செய்ய வேண்டும் என்று உறுதிபூண்டார். சென்னை-செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கத்தின் சார்பில் 13-6-76 அன்று கல்வி நிதி ஆரம்ப விழா நடைபெற்றது. திருமிகு புனிதவேலு முதலியார் ரூ.501 ஐ முதன் முதலாகக் கொடுத்து கல்வி நிதியைத் துவக்கிவைத்து தனது புனித குணத்தை புலப்படுத்தினர். அதோடு அவர் அமைய வில்லை. 1976 ஜன் மாதத்திலிருந்து டிசம் பர் மாதத்திற்குள் கல்விநிதிக்கு பெருந் தொகை வசூலிக்கப்பட்டது. இதற்கு பெருந்தகை புனிதவேலு முதலியார் பெருந்துணையாக இருந்தார்கள். 1976 டிசம்பர் திங்கள் 25, 26 தேதி களில் ஈரோட்டிலே தென்னிந்திய மகா சன சங்கத்தின் பதின்மூன்றாவது மாநில மாநாடு சீரும் சிறப்புடனும் நடை பெற்றது. அம்மாநாட்டில் மருத்துவம் அல்லது பொறியியல் படிக்கும் தகுதி வாய்ந்த ஒரு மாணவர் அல்லது மாண விக்கு அவரது படிப்பை முடிக்கும் வரை ஆகும் செலவை ஆண்டுதோறும் கொடுப் பதாக பெருந்தகை புனிதவேலு முதலி யார் அவர்கள் முன்வந்தார். அதன்படி ஈரோட்டைச் சார்ந்த ஒருவரின் மகள் கோவை மருத்துவக் கல்லூரியில் அவரது மருத்துவப் படிப்பை முழுவதும் முடிப் பதற்காக நிதி உதவி கொடுக்கப்பட்டது. இச் செயலின் மூலம் புனிதவேலு முதலி யார் அவர்கள்,

''ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு''

என்னும் திருக்குறளுக்கு எடுத்துக்காட் டாக விளங்கினார். அவரது மனைவி சகுந்தலா அம்மையார் பெயரில் 'சகுந்தலா டிரஸ்ட்' நிறுவி ஏழை எளிய மாணவர் களுக்கு ஆண்டுதோறும் ரூ.3000 உதவி செய்ய வழி வகுத்தார் பெருந்தகை புனித வேலர். சேர்த்த செல்வத்தை யெல்லாம் தானே அனுபவிக்க வேண்டும் என்று எண்ணாது அதில் ஒரு பகுதியையாவது, ஏழை எளியோர்க்கு, வசதி குறைந்தவர் களுக்கு அளித்து உதவ வேண்டும் என்ற கருணை உள்ளம் படைத்தவர். அதிக மாக சம்பாதித்தால் அதிகமாக கொடுக் கலாம் என்று சொல்லுவார். பிறர் நலம் கருதும் இப் பெருந்தகையாளர் ''செல் வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்'' என்ற முதுமொழியை தம் வாழ்நாளெல் லாம் கடைப்பிடித்தார். இதற்கு உறு துணையாக இவரது மனைவி திருமதி சகுந்தலா அம்மையாரும் இருந்தார்கள். செல்வம் படைத்து செழுங்கிளை தாங் குதலில் இத்தம்பதிகளுக்கு நிகர் இத்தம் பதிகள்தான். சமுதாயத்தில் ஈயாத செல் வந்தர்கள் தான் ஏராளம், ஏராளம்! வசதி படைத்தும் பிறர் நலம் பேணாது தன் சுக போக வாழ்வு ஒன்றினையே கருதுபவர்கள் மலிந்து கிடக்கும் இந்த சமுதாயத்திலே தாமும் வளமாக வாழ்ந்து பிறரையும் வாழவைத்த தெய்வங்கள்தான் இத் தம்பதியர்கள் என்று கூறின் அது மிகை படக் கூறியதாகாது. இந்தப் பாலைவன ரோஜாக்கள் நம் வணக்கத்திற்குரியவர் கள்!

நல்லவர்கள் நீடு வாழ்வதில்லை! ஆம், இந்தப் பாலைவன ரோஜாக்களில் ஒரு ரோஜா 1971இல் பட்டுப்போய்விட் டது. திருமதி சகுந்தலா அம்மையார் தனது ஐம்பதாவது வயதில் 1971 ஆம் ஆண்டு அகால மரணமடைந்தார். இரண் டாவது ரோஜா கொடூரமாக கசக்கிப் பிழியப்பட்டது. 1977 ஆம் ஆண்டில், 8.1.77 அன்று புண்ணியவான் புனித வேலு முதலியார் எதிர்பாராத விதமாக கொடூரமான சாலை விபத்தில் இறந்தார். தனது அன்பு மனைவியைப் பின் தொடர்ந்து இவரும் அகால மரண மடைந்தார். வாழ்வாங்கு வாழ்ந்த இப் புனிதருக்கா கொடூர விபத்தின் மூலம் சாவு ஏற்பட வேண்டும்? நினைத்தாலே நெஞ்சம் பதறுகின்றது. அவருக்கு இயற் கையான அமைதியான சாவு ஏற்பட்டி ருக்கவேண்டும். அதுதான் நியாயம். ஆனால் விதி அவர் விஷயத்தில் வில்ல னாக (கொடியவனாக) மாறிவிட்டது!

தூண்டியது. இந்நிலையில் கோவைக் கல்லூரியில் இவர்பால் பேரன்பு கொண்டிருந்த வரலாற்று ஆசிரியர் இவரை பி.ஏ. ஆனர்ஸ்' படிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். அவ்வற்புறுத்தலோடு நிற்காமல் திருச்சியில் உள்ள தூய சூசையப்பர் கல்லூரியில் அந்நாள் பொருளாதாரப் பேராசிரியராயிருந்த அருள் தந்தை கார்ட்டி என்பவரை அணுகுவதற்கான பரிந்துரைக் கடிதமும், வழிச் செலவுக்குப் பணமும் கொடுத்து அனுப்பி வைத்தார் அவ்வாசிரியர் பெருமகனார்.

கோவையிலிருந்து திருச்சி வந்த திரு. மு.ரா. பெ. திருச்சித் தூய சூசையப்பர் கல்லூரியில் சேர்ந்து பி.ஏ. ஆனர்ஸ் பட்டப் படிப்புப் பயின்றார். மு.ரா. பெ.யின் தாயார் முதலிரண்டாண்டுகள் அவரது கல்வி செலவை ஒருவாறு சமாளித்தார். மூன்றாம் ஆண்டு அவ்வாறு செய்ய இயலவில்லை. அதனால், தொண்டாமுத்தூரில் வங்கி நடத்திய சரவணபவ முதலியாரிடம் திரு. முதலியார் கடன் பெற்றுப் படிப்பைத் தொடர்ந்தார். இறுதியாண்டு படிக்கும்பொழுது திரு. முதலியார் வயிற்றுக் கோளாறினால் பெரிதும் துன்பப்பட்டார். எனினும், அவருக்கேயுரிய படிப்பாற்றலால், 1933இல் பி.ஏ.(ஆனர்ஸ்) பட்டம் பெற்றார். அரசியல் பாடத்தில் மாகாண முதன்மை பெற்று இராஜா சர். எஸ். இராமசாமி முதலியார் தங்கப் பதக்கத்தையும் வென்றார்.

வயிற்று நோயோடு போராடி இத்தகைய கல்வித் தகுதியைப் பெற்றவர் இரண்டாண்டுகள் வேலையில்லாத் திண்டாட்டம்' என்னும் சமுதாய நோயோடும் போராடினார். 1935 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முதல் கோவையை அடுத்த சூலூரில் நடுநிலைப் பள்ளி ஆசிரியராகப் பணியேற்றார். ஆசிரியப் பயிற்சி பெறாத நிலையில் திங்களொன்றுக்கு ரூ. 25 ஊதியத்தில் ஓராண்டு பணிபுரிந்தார்.

1936 ஆம் ஆண்டு சென்னை-சைதாப்பேட்டை ஆசிரியக் கல்லூரியில் L.T. படிப்பதற்காகச் சேர்ந்தார். அப்போது திருமணஞ் செய்து கொண்டார். மனைவி L.T. படிப்பதற்கு அவர்தம் பயிற்சியை யார் பணம் பயன்பட்டது. பயிற்சியை முடித்த பிறகு, திருவண்ணாமலை, வேலூர் ஆகிய ஊர்களில் உதவியாசிரியராக ஆறாண்டு பணிபுரிந்தார். பின்னர் 1943-இல் ஈரோட்டில் மகாசன உயர் நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்று நான்கு ஆண்டுகள் பணிபுரிந்தார்.

1947-ஆம் ஆண்டு சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்று யாவரும் போற்றும் வண்ணம் பணியாற்றினார். 1949-ஆம் ஆண்டு மாவட்டக் கல்வி அலுவலர் பதவிக்கு அரசுப் பணித் தேர்வாணையத்தால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குரிய ஆறு திங்கட் பயிற்சிக்குப் பின், 1950 ஆம் ஆண்டு சூன் திங்களில் திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தின் கல்வி அலுவலராகப் பொறுப்பேற்றார்.

1951-ஆம் ஆண்டு, சென்னையிலுள்ள பொதுக் கல்வி இயக்குநரகத்தைப் பணியிடமாகக் கொண்டு, 'தமிழ் நாட்டுக்கும் மேற்குக் கடற்கரைக்கும் உரிய முதியோர் கல்வி அலுவலர்'' பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 1955 சூனில் பதவியுயர்வு பெற்றுச் சென்னை சைதாப்பேட்டையிலுள்ள பழம் புகழ் வாய்ந்த ஆசிரியக் கல்லூரியின் முதல்வராகப் பணியேற்றார். 1965-ஆம் ஆண்டு வரை அக்கல்லூரியின் திறமிக்க முதல்வராக இருந்து, 1965 டிசம்பர் முதல் 1967 மே வரை புதுவைப் பொதுக்கல்வி இயக்குநராகப் பணியாற்றினார். பின்னர் மீண்டும் 1967 சூனில் சைதைக் கல்லூரிக்கே திரும்பி வந்தார். அக்காலத்தில் தான், முதன்முதலில் ஆசிரியக் கல்லூரியில் தமிழ் மொழியை எல்லாப் பாடங்களுக்கும் பயிற்று மொழியாக்கினார். இது தமிழகக் கல்வி வரலாற்றில் இடம் பெறத் தக்க பெரும் சாதனை ஆகும். (அதற்கான பணிகளை 1961 இலேயே முடித்து வைத்திருந்தார். எனினும், பல்கலைக் கழக எதிர்ப்பால் அப்போது அம்முயற்சி நிறைவேறவில்லை)

பதினோராண்டு காலம் ஆசிரியக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றிய போது திரு. மு.ரா. பெ.யின் நிர்வாகத் திறனும், கல்வித்துறை அனுபவமும் நன்கு வெளிப்பட்டன. அவர் முதல்வராயிருந்த காலத்தை ஆசிரியக் கல்லூரியின் பொற்காலம் என்று இன்றும் பேசுகின்றனர். அத்தகைய செய்திகளை நன்கறிந்திருந்த அந்நாளைய தமிழ் நாட்டு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ் வளர்ச்சிக்காகத் தனித் துறை ஒன்றை உண்டாக்கி, திரு மு.ரா. பெ. அவர்களை அத்துறையின் இயக்குநர் ஆக்கியதோடமையால் கல்வித்துறையின் துணைச் செயலாளராகவும் நியமித்தார்கள். அதன் பின்னர், அண்ணா காலத்தில் சென்னை மாநகரில் நிகழ்ந்த இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் அமைப்புச் செயலாளராகவும் நியமிக்கப்

நினைவு மண்டபம்:

வள்ளியம்மையின் உயிர்த் தியாகத்தைப் பாராட்டி நன்றி தெரிவிக்கும் முறையில் ''வள்ளியம்மை மண்டபம்'' ஒன்றை நிறுவுவது என்று தென்னாப்பிரிக்க இந்தியர்கள் முடிவு செய்தனர். ஆனால் அதனைச் செயல்படுத்தவில்லை. அதுபற்றி காந்தியடிகள் தமது 'தென்னாப்பிரிக்கச் சத்தியாகிரகம்' எனும் நூலில் குறிப்பிட்டுவிட்டு, கூறிய சொற்கள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சிறப்பினைப் பெற்றதாகும்.

அவர் சொன்னார்,

''மண்டபம் கல்லினாலும், காரையினாலும் கட்டினால்தான் என்ன? கட்டப்படாவிட்டால்தான் என்ன? வள்ளியம்மை தொண்டு அழியாதது. தன் கரங்களினாலேயே, சேவை என்னும் கோவிலை அவள் எழுப்பினாள். அவளுடைய மாண்புமிக்க உருவம் பலர் இதயத்தில் நிரந்தரமாகப் பதிந்து இருக்கிறது. இந்தியா உள்ளவரையில், தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரக சரித்திரத்தில் வள்ளியம்மை பெயரும் நீங்கா இடம் பெற்றிருக்கும்.

—காந்தி நூல்கள் முதல்தொகுதி,
பக்கம் 370

ஆம்; இன்றும் அவளது பெயர் நிலைத்து நிற்கத்தான் செய்கின்றது.

முடிவுரை:

அன்று காந்தியடிகள் தென்னாப்பிரிக்க இந்தியர்கள் 'வள்ளியம்மை மண்டபம்' கட்டப்படாதது குறித்து,

'மண்டபம் கட்டினால்தான் என்ன?
கட்டப்படா விட்டால்தான் என்ன?''

என்று வருந்திக் கூறினார். இன்று தமிழக அரசு அவள் தாயார் பிறந்த தில்லையாடிக்கு வள்ளியம்மை நகர் என்று பெயரிட்டும் வள்ளியம்மைக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பியும் வள்ளியம்மையின் தியாகத்திற்குப் பெருமை ஏற்படுத்தியிருக்கிறது. தில்லையாடியில் வள்ளியம்மை உயர்நிலைப் பள்ளி ஒன்றும் சிறப்பாக இயங்கி வருகிறது.

(தில்லையாடி தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறையிலிருந்து பொறையார் செல்லும் மார்க்கத்தில் திருக்கடையூரிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் இருக்கிறது)

வாழ்க வள்ளியம்மை!
வெல்க அவள்தம் தியாகம்!

(இக்கட்டுரை தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன சங்கம் 13-12-1970 அன்று வெளியிட்டுள்ள வெள்ளிவிழா மலரிலிருந்து எடுக்கப்பட்டது)

நன்மை செய்தோர்க்குத் தீமை செய்பவர்கள் பாவிகள். தீமை செய்தோர்க்குத் தீமை செய்பவர்கள் தீரர்கள். பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொண்டு ஒதுங்கிப் போகின்றவர்கள் உத்தமர்கள். தீமை செய்தவர்க்கும் நன்மை செய்பவர்கள் உத்தமோத்தமர்கள். தீமை செய்தவர்களைப் பொறுத்துக் கொண்டு நன்மை செய்வதுடன் நிற்காமல், அவர்களின் பாவமன்னிப்புக்காக இறைவனிடம் முறையிடுவார்கள் சான்றோர்கள். இத்தகைய சான்றோர்களின் பொருட்டே கடல் பொங்காமலும், பூமி நடுங்காமலும் உலகம் நிலைபெற்று இருக்கின்றது.

—வாரியார்

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே

—திருமூலர்

அவன் கொடுத்த தலையால் அவனை வணங்க வேண்டும். அவன் கொடுத்த வாயால் அவனை வாழ்த்த வேண்டும். அவன் கொடுத்த கரங்களால் அவனைக் கூப்பித் தொழ வேண்டும். அவன் கொடுத்த நெஞ்சால் அவனை நினைக்க வேண்டும். அவன் கொடுத்த கால்களால் அவன் திருக்கோயிலைச் சூழ வேண்டும். அவன் தான் நம் உறவு. நம் உடம்பு, வாழ்வு, ஏனையவற்றையும் கொடுத்த தலைவனை மறப்பது நன்றிகொன்ற பாவமாகும். நன்றிக் கடனைச் செலுத்துவதுதான் வழிபாடாகும்.

—வாரியார்

அப்போது காந்தியடிகளும், அவரது நண்பர் 'போலக்'கும் அவளைப் பார்க்க அங்கு வந்தனர். அப்பொழுது அவள் மயக்கம் போட்டு விழக்கூடிய நிலையில் இருந்தாள். வள்ளியம்மையின் தாயார் விரைவாக மகளை வீட்டில் கொண்டு போய்ச் சேர்க்கும் ஆவலில் இருந்தார். ஒரு சமுக்காளத்தை விரித்து அதில் வள்ளியம்மையைப் படுக்க வைத்து, வள்ளியம்மையின் தாயாரும், 'போலக்'கும், காந்தியடிகளும் மெதுவாகத் தூக்கிவந்தார்கள். தம்மால் இவ்வாறு வள்ளியம்மையும், அவள் தாயாரும் கவலையும் பரபரப்பும் அடைய வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டு விட்டதே என்று காந்தியடிகள் கவலைப் பட்டார். வள்ளியம்மை குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே விடுதலை ஆகியிரா விட்டால் சிறைச்சாலையிலேயே இறக்கும் படி நேர்ந்திருக்கும் என்பது திண்ணம்.

தியாகக் குடும்பம்:

வள்ளியம்மையை வீட்டிற்கு அழைத்து வருவதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான், அவள் தந்தையார் மருத்துவமனையில் இரண சிகிச்சை செய்யப் பெற்றுக் குணமாகி வீட்டிற்கு வந்திருந்தார். அவர்க்கு நோய் மட்டும் ஏற்படாமலிருந்தால் அவரும் தம் மகளோடும், மனைவியோடும் சேர்ந்து சிறை சென்றிருப்பார், என்றாலும் அவர்களுக்கும் முன்பே, அவர் ஒரு முறை சிறை சென்று திரும்பியவர்தான். எனவே வள்ளியம்மையின் குடும்பமே ஒரு தியாகக் குடும்பம் என்பதில் ஐயமில்லை.

உயிர்த்தியாகம்:

வள்ளியம்மை நல்ல உயரமான, அழகான பெண். ஆகவே உடல் நோயினால் அவள் மெலிந்து கிடந்தபோது அவளைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது. அவளின் அந்த அவல நிலையைக் காந்தியடிகளே,

''நான் அவளைப் பார்த்தபோது படுத்த படுக்கையாகவே இருந்தாள். உயரமானவளாகையால் மெலிந்து, நலிந்து இருந்த அவள் உடல் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தது.''
-காந்தி நூல்கள் முதல்தொகுதி, பக்கம்369

என்று குறிப்பிடுகிறார். வள்ளியம்மையை அவளது வீட்டிலேயே போய்ப் பார்த்த காந்தியடிகளுக்கு மிகுந்த வருத்தமாக இருந்தது.

''வள்ளியம்மா! நீ சிறை சென்றதற்காக வருந்துகிறாயா?'' என்று அடிகள் கேட்டார்.

''வருத்தமா? இப்போதுகூட இன்னொரு தடவை கைது செய்யப்பட்டால் நான் சிறைக்குச் செல்லத் தயார்'' என்றாள் அந்த வீராங்கனை.

''அதனால் நீ இறந்து போவதாக இருந்தால் என்ன செய்வாய்?''

''அதை நான் பொருட்படுத்தவே மாட்டேன். தாய் நாட்டிற்காக உயிரைக் கொடுக்க விரும்பாதவர்கள் யார் இருப்பார்கள்?''

—காந்தி நூல்கள் முதல்தொகுதி,
பக்கம் 369-70

காந்தியடிகளுக்கும் வள்ளியம்மைக்கும் இவ்வுரையாடல் நடைபெற்ற சில நாட்கள் கழித்து 22-2-1914 அன்று வள்ளியம்மை இவ்வுலக வாழ்வை நீத்து வானுலகு அடைந்துவிட்டாள். ஆம்; எலும்பாலும், தோலாலும் ஆன உடம்பை விட்டுப் புகழுடம்பைப் பெற்று விட்டாள்.

காந்தியடிகள் இரங்கல் உரை:

காந்தியடிகள் வள்ளியம்மை இறந்ததும் 'இந்தியன் ஒப்பினியன்' என்னும் இதழில்

''இந்தியாவின் புனித மகள் ஒருத்தியை இழந்துவிட்டதற்காக வருந்துகிறோம். ஏன்? எதற்கு? என்று கேட்காமல் தனது கடமையுணர்ந்து ஆற்றிய காரிகை அவள். மாதர்களுக்கு அணிகலன்களான துன்பத்தைச் சகிக்கும் மனோபலம் தன்மானம், நல்லொழுக்கம் ஆகியவற்றிற்கு இன்னுதாரணமாகத் திகழ்ந்தவள். அவளுடைய உதாரணம் இந்திய சமுதாயத்தில் வீணாகப் போகாது என்று நம்புகிறேன்.''

என்று அவள் இறந்ததற்காக வருந்தியும் அவளது தியாகத்தைப் புகழ்ந்தும் எழுதியுள்ளார்.

வள்ளியம்மையைப் பற்றிக் குறிப்பிட நேர்ந்தபொழுதெல்லாம் காந்தியடிகளின் உள்ளம் நெகிழ்ந்துவிடும். ''ஒரு வேளை என்னுடைய தமையனாரின் (இலட்சுமிதாஸ் காந்தி) மரணத்தைக் காட்டிலும், வள்ளியம்மையின் மரணம் எனக்குப் பேரிடியாக இருக்கலாம்.'' என்று ஒரு முறை அவர் குறிப்பிட்டுள்ளார்.

தோற்றமும் வளர்ச்சியும்:

வள்ளியம்மையின் தந்தையார் ஆர். முனுசாமி முதலியார். இவர் புதுச்சேரி முதலியார். ஜோகன்ஸ்பர்க்கில் தின்பண்டங்களும், பலசரக்குகளும் விற்பனை செய்யும் கடை வைத்திருந்தார்.

தாயார் மங்களத்தம்மாள் என்று அழைக்கப்பட்ட ஜானகியாவர். இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள தில்லையாடி கிராமத்தில் பிறந்தவர். இருவரும் நமது செங்குந்தர் குலத்துதித்தத் தூயவர்கள்; தியாகச் செம்மல்கள். நமது வள்ளியம்மை அவ்விருவருக்கும் ஜோகன்ஸ்பர்க்கில் 1898ஆம் ஆண்டு மூத்த மகளாக பிறந்தாள். அவளுடைய இளம் வயதில் அவர்களுடைய குடும்பம் நாகரிகமான குடும்பமாகத்தானிருந்தது. வள்ளியம்மையும் பெற்றோரால் நாகரிகமான முறையிலேயே வளர்க்கப் பெற்றாள். அவள் அங்கிருந்த அரசினர் பள்ளியில் படித்தாள்.

உள்ளக் கொதிப்பு:

அப்பொழுது வள்ளியம்மைக்கு வயது பதினாறுதான் ஆகியிருந்தது. உலகத்தைச் சரியாகக்கூட புரிந்து கொள்ள இயலாத இளமைப்பருவம் அது. அவ்வளவாகக் கல்வியறிவும் பெற்றவள் அல்லள். சத்தியாகிரகம் என்றால், அது என்ன என்றே அறியாதவள் என்றாலும் அந்த வயதிலே அந்த இளநங்கையின் உள்ளமும் கொதித்தெழும்படியாக, தென்னாப்பிரிக்க நீதிமன்றம் ''தென்னாப்பிரிக்காவில் இந்திய முறைப்படி நடைப்பெற்ற திருமணங்கள் செல்லா'' என்று அறிவித்தது. எனவேதான் வள்ளியம்மையின் உள்ளம் நெருப்பாயிற்று. சொற்கள் கனலைக் கக்கின.

''இந்த முடிவை ஏற்றுக் கொள்வதானால் என்னுடைய தாய் என்னுடைய தந்தைக்குக் கட்டிய மனைவி ஆக மாட்டாளே! நான் முறைப்படி பிறந்த மகள் ஆகமாட்டேனே?'' என்றெல்லாம் எண்ணிய வள்ளியம்மையின் நெஞ்சம் வெடித்துவிடும்போல் இருந்தது.

இந்தியர்கள் திரண்டனர்:

இந்தியர்களுடைய மானமே இப்புதிய சட்டத்தினால் அழிந்துபடும் நிலை ஏற்பட்டது. எனவே இந்தியர்கள் அனைவரும் ஒன்று திரண்டனர்; தம் உயிர் கொடுத்தேனும் மானம்காக்க முன் வந்தனர்; சத்தியாகிரகப் பேரணி நடத்த திட்டமிட்டனர்.

வள்ளியம்மையின் தந்தையார் அச்சமயம் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். ஆகவே அவரை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு, வள்ளியம்மையும் அவள் தாயாரும் இந்த அநியாய சட்டத்தை எதிர்த்து முறியடிக்க வரிந்து கட்டிக் கொண்டு அமைதிப்போர் புரிய புறப்பட்டனர்.

போரில் குதித்தாள்:

அன்று 1913ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 29 ஆம் நாள், ''ஜோகன்ஸ்பர்க்கிலிருந்து' ''நியூகாசி'' லுக்குப் புறப்பட்ட சத்தியாகிரகப் பெண்கள் பேரணியில் சேர்ந்து கொண்டனர். வீராங்கனை வள்ளியம்மையும் அவள் தாயாரும் அவள் இளநங்கையாக இருந்தாலும் அணியில் நடந்து சென்றதுடன் தனது கடமை முடிந்துவிட்டதாக எண்ணவில்லை. சார்லஸ்டவுன், டண்டி, லேடிஸ்மித், மாரிட்ஸ்பர்க், டர்பன் போன்ற முக்கியமான இடங்களில் எல்லாம் சத்தியாகிரகப்படையினர் தங்கிச்சென்றபோது, அந்த அந்த ஊர்களில் எல்லாம் தன்னால் இயன்ற மட்டும் தொண்டுகள் செய்தாள்.

சிறைப்பட்டாள்:

அவள் சென்ற குழு கைது செய்யப்படவில்லை. எனவே மீண்டும் 'நீயூகாசிலி' லிருந்து புறப்பட்டு அவளது குழு 'டிரான்ஸ்வாலு'க்குள் நுழைந்தது. அப்பொழுது அந்நாட்டு அரசினர், அவளையும் அவளது அன்னையையும், மற்ற பெண்களையும் 'வால்க்ஸ்ரஸ்ட்' என்ற இடத்தில் 1913 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 22 ஆம் நாள் கைது செய்தனர். அவர்களுக்கு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதித்து 'மாரிட்ஸ்பர்க்' சிறையில் அடைத்து வைத்தனர்.

உடல்நலம் கெட்டாள்:

சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட உடனேயே வள்ளியம்மையின் உடல் நலம் பாதிக்கப்பட்டுவிட்டது. சிறைக்குள் படுத்த படுக்கையாக இருந்தாள். இடையே காந்தியடிகளுக்கும் 'ஸ்மட்சு'க்கும் ஏற்பட்ட தற்காலிக உடன்பாட்டின்படி அவளுடைய தண்டனை முடிவதற்கு முன்னமேயே 1914 ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள், 11-ஆம் நாள் அன்று விடுதலையானாள். அச்சமயமோ அவளுக்கு மிகக்கடும் நோய்.

பரிதாப நிலை:

விடுதலை பெற்ற வள்ளியம்மை தள்ளாடி சிறையின் வாயிற்புறம் வந்தாள்.

IV. தியாகச் செம்மல்கள்

1. தில்லையாடி வள்ளியம்மை

ஆக்கூர் சு. இராமலிங்கம்



தில்லையாடி வள்ளியமமை

முன்னுரை:

உலக நாடுகள் பல; அவற்றுள் தென்னாப்பிரிக்காவும் ஒன்று. தமிழர்களாகிய நாம் அந்நாட்டை நினைக்கின்றபோது நம் கண்முன்னே அந்நாட்டு நிறவெறிக் கொடுமையின் கோரத்தாண்டவம் தோன்றுகின்றது; அக்கொடுமைகளைக் களைந்தெறியத் தென்னாப்பிரிக்க அரசை எதிர்த்து சத்தியாக்கிரகப் போர் நடத்திய காந்தியடிகள் தோன்றுகின்றார்; அச்சத்தியாகிரகப் போரில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு உயிர்த்தியாகம் புரிந்த தில்லையாடி வள்ளியம்மை தோன்றுகின்றார். ஆம்; காந்தியடிகள் நடத்திய தென்னாப்பிரிக்கச் சத்தியாகிரக போராட்டச் சரித்திரத்தில் வள்ளியம்மையின் தியாகம் முதலிடம் பெறும் சிறப்பு வாய்ந்தது எனலாம்!

காந்தியடிகள் உள்ளம்:

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய பல போராட்டங்களில் அஞ்சா நெஞ்சுடன் ஆருயிர் ஈந்தவர்கள் பலர். என்றாலும் வள்ளியம்மையைப் போன்று அவர் உள்ளத்தை தொட்டவர்கள் யாருமிலர். இதனைக் காந்தியடிகள் உள்ளமே நமக்குத் தெளிவுபடுத்துகின்றது. அவர் சொல்லுகிறார்:

'தென்னாப்பிரிக்காவில் எவருடைய தியாகம் ஆண்டவனுக்கு உகந்ததாய் இருந்தது; பயனளித்தது; என்று ஒருவரும் சொல்ல முடியாது. ஆனால் வள்ளியம்மையின் தியாகமும், மற்ற சகோதரிகளின் தியாகமும் பயனைப் பெற்றன என்பது நிச்சயம்.''

—காந்தி நூல்கள் முதல் தொகுதி பக்கம் 371.

அவரே மேலும் சொல்லுகிறார்:

''வள்ளியம்மை பிறந்த இடம் ஜோகன்ஸ்பார்க், நான் இங்கே பேசும் போது அந்த இளம் பெண்ணின் உருவம் என் கண்முன்னால் நிற்கிறது. சத்திய லட்சியத்திற்காக வள்ளியம்மை உயிர்த்தியாகம் செய்தாள். லட்சியத்தில் குருட்டு நம்பிக்கை கொண்டவள். எனக்குத் தெரிந்துள்ள அளவுக்கு அவளுக்கு விஷயங்கள் தெரியா. சாத்வீக எதிர்ப்பு என்ன என்பதை அவள் அறியாள். இதனால் தன் சமூகம் என்ன நன்மையை அடையும் என்பதும் வள்ளியம்மைக்குத் தெரியாது. தன் நாட்டு மக்களின் எல்லையற்ற உற்சாகத்தினால் பரவசம் அடைந்தாள்; சிறை புகுந்தாள்; நோயுற்று உடல்நிலை பாழாகி வெளியே வந்தாள்; சில தினங்களில் மாண்டாள்.''

—காந்திநூல்கள் முதல்தொகுதி பக்கம்491

எனவே வள்ளியம்மையின் தியாக வரலாற்றை நாம் அறிந்து போற்றுதல் நம்முடைய தலையாயக் கடமைகளுள் ஒன்றாகும்.

அருள் கூர்ந்து கல்வி நிதிக்காக நன்கொடை கொடுத்தவர்களுக்கும் மலர் வெளியிட்டுக் குழுவினருக்கும் உளமார்ந்த நல் வாழ்த்துக்கள்

அருள் மெமொரியல் டிரஸ்ட்,

32, ஆடம் தெரு, திருமயிலை,

சென்னை -600 004.

எம்.பி. பாண்டுரங்கம், எம். ஏ. ஏ.
நிர்வாக அறங்காவலர்.

கே.வி. துரைராஜ், பி. எஸ்ஸி. பிஎல்.
செயலாளர்.

For Beautiful Modern Building Construction Work and Renovation of Old Buildings

Er. J. GANESH, B.E. AMIE,

Please Contact :

CONSULTINT & BUILDING CONTRACTOR

"LAKSHMI BHAVAN"
197, Ramakrishna Mutt Road,
Raja Annamalaipuram,
Madras-6000 028.

WITH BEST COMPLIMENTS FROM:

SRI MURUGAN TUTORIAL INSTITUTE

Regional Office :
416-A, Mount Road,
NANDANAM,
Madras-600 035.
Phone: 44 57 62

Head Office:
RISHIVANDIYAM - 606 205
Phone: P.C.O. Extn. No. 1
Branch Office:
MADRAS - 600 024.
Phone: 42 64 80

WITH THE BEST COMPLIMENTS FROM:

MILCO ICE CREAM

29, Ramakrishna Mutt Road,

Madras-4.

Phone : 71552

இப்போது "அனைவரும் படிக்க, "அகநானூறு - நூற்றிருபது செய்யுள்" என்னும் நூலை இயற்றி இருக்கிறார். அதற்கு அணிந்துரை எழுதியுள்ள அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி திரு. முதலியாரை மிகப் புகழ்ந்துள்ளார். இவ்வாறு, இருமொழிப் புலமையாளராக, தண்டமிழ்த் தொண்டராக, தமிழ் உணர்வு மிக்கவராக, கல்வி வல்லுநராக விளங்குகிறார், இப்பெரியார்.

ஆசிரியக் கல்லூரியின் முதல்வராக இருந்த பொழுது தமிழைப் பயிற்சிமொழியாக்கியதற்காக, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் "தமிழ்ப் பெரும் புலவர்" என்னும் பட்டத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் 27.7.1967 அன்று திரு. முதலியார் அவர்களுக்கு வழங்கினார்கள். தமிழகப் புலவர் குழு, தனது 25-ஆம் ஆண்டு நிறைவையொட்டி இவருக்குத் 'தமிழ்ச் சான்றோர்' என்னும் பட்டத்தை வழங்கியுள்ளது. அன்றியும், அரசுத் தமிழ் வளர்ச்சித் துறை இவருக்குச் 'சொல்லாக்க வல்லுநர்' என்னும் பட்டத்தையும் அளித்துள்ளது.

இப்பெரியார் தம் அன்பு மனையாட்டி தனலக்குமி அம்மையாருடனும், தம் இரண்டாம் மகள், மருமகன், பேரன், பேத்தியுடனும் சென்னையில் வாழ்ந்து வருகிறார். எழுபத்தெட்டு வயதான இப்பெரியார்தம் தொண்டு தமிழகத்திற்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதே யாவருடைய வேண்டுதலும் விழைவும் ஆகும். திரு. முதலியார் அவர்களுடைய வாழ்வையும் குறிக்கோளையும் எண்ணும்போது அமெரிக்கப் புலவர் ஒருவருடைய கவிதை நமது நினைவுக்கு வருகிறது:

"The woods are lovely dark and deep
But I have promises to keep
And miles to go before I sleep
And miles to go before I neep

(Robert Frost)

"அடர்ந்தநிழல் தருவனத்தின் அழகுறங்க
அழைத்திடுமால்
படர்ந்தபல துறைகளிலென் பணிகளினும்
முடியவிலை
தொடர்ந்துவளர் பெருவழிநான்
துயிலுமுனர்ச் செலவுளதே
தொடர்ந்துவளர் பெருவழிநான் துயிலு
முனர்ச் செலவுளதே"

(திரு. மு. ரா. பெ.)

பழைய மாணவர் திரு. சி. நடராசன் பின்வருமாறு கூறுகிறார்: நெடிய இனிய தோற்றமும் அதற்கேற்ற உயர் குணமும் உடையவர். அச்சம் என்பதை அறியாதவர்; உண்மையே பேசுபவர்; நேர்மையாய் நடப்பவர். கல்வியறிவும் செயல் திறனும் மிக்கவர்; மாணவர்களின் நண்பர், அமைச்சர், ஆசிரியர். மாணவர்களும் ஆசிரியர்களும் அவரை எப்போது வேண்டுமானாலும் அணுகி, எந்த உதவியையும் கேட்கலாம். கேட்கும் உதவி நியாயமானதாகவும் தம்மால் செய்ய இயன்றதாகவும் இருந்தால் அதனை உடனே செய்து விடுவார். அவர்தாம் ஆசிரியக் கல்லூரி முதல்வராயிருந்த திரு. மு.ரா. பெருமாள் முதலியார்.

சப்த விடங்கள்

1. திருவாரூர்	வீதி விடங்கர்	அசபா நடனம்
2. திருநள்ளாறு	நக விடங்கர்	உன்மத்த நடனம்
3. திருநாகைக் காரோணம்	சுந்தர விடங்கர்	வீசி நடனம்
4. திருக்காறாயில்	ஆதி விடங்கர்	குக்குட நடனம்
5. திருக்கோளிலி	அவனி விடங்கர்	பிருங்க நடனம்
6. திருவாய்மூர்	நீல விடங்கர்	கமல நடனம்
7. திருமறைக்காடு	புவனி விடங்கர்	ஹஸ்த பாத நடனம்

சருகுகளைக் குவித்துத் தீமூட்டினால் பனிதானே விலகிவிடும். அதுபோல பக்தி செய்வோர்க்கு இறையருள் வெளிப்பட்டால் வினை விலகும்.

—வாரியார்.

பட்டுத் திரு. முதலியார் திறம்படச் செயல்புரிந்தார்.

நடுநிலைப் பள்ளியில் பயிற்சிபெறா ஆசிரியராக 1935-ஆம் ஆண்டு தம் கல்விப் பணியைத் தொடங்கிய திரு. முதலியார் அவர்கள் தமிழ் வளர்ச்சி இயக்குநர் பதவிவரை கல்வித் துறையில் பல்வேறு பதவிகளை ஏற்றுச் செயற்பட்டு, 1969-ஆம் ஆண்டு மேத் திங்கள் 31ஆம் நாள் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

அரசாங்கத்தின் சட்டப்படி அவர் ஓய்வு பெற்றுள்ளாரேயன்றி, தமிழ் மொழித் துறைக்கும், மொழி பெயர்ப்புத் துறைக்கும், இலக்கியத் துறைக்கும் தம்மால் இயன்ற பணிகளை இன்றும் செய்து கொண்டு வருகிறார்.

தமிழார்வம் மிக்க முதலியார் அக்காலத்திய தமிழறிஞர் பெருமக்களான ஞானியாரடிகள், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, வ.ஆ. அய்யா நாயக்கர், முத்து சு. மாணிக்கவாசக முதலியார், சச்சிதானந்தம் பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை டாக்டர் மா. ராசமாணிக்கனார், டாக்டர் ஏ.சி. செட்டியார், டாக்டர் மு.வ., பாவேந்தர் பாரதிதாசனார் முதலியோருடன் நெருங்கிப் பழகியும், மறைமலையடிகள், திரு.வி.க. போன்ற தண்டமிழ்ச் சான்றோர்களின் பேருரைகளைப் பல்கால் கேட்டும் தம் தமிழ் அறிவை வளர்த்துக் கொண்டார். ஆதலால் யாப்பு மரபு மாறாமல் பாப்புனையும் ஆற்றலையும், தமிழைக் கற்றுத் துறை போயவர்களும் பாராட்டும் வண்ணம் உரைநடை எழுதும் ஆற்றலையும் பெற்றார். தாய்மொழியாகிய தமிழ்ப் புலமைக்கு இணையாக ஆங்கிலத்திலும் திரு. முதலியாரவர்கள் தேர்ச்சி பெற்றவர் என்பதை முன்னரே கண்டோம்.

இவ்வாறு இருமொழிப் புலமையும் மிக்க இப்பெரியாருக்குச் சவால் விடுவது போல, ஒரு நிகழ்ச்சி நடந்தது. 1947-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் மோர்லண்டு என்பவரும் சாட்டர்ஜி என்பவரும் எழுதிய A Short History of India என்னும் வரலாற்று நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்க விழைந்தது. அம்மொழி பெயர்ப்பைச் செய்ய விரும்புவோர் அந்நூலின் முதல் அதிகாரத்தை மொழி பெயர்த்துப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என்று பல்கலைக்கழகம் அறிவித்தது. அப்போட்டிக்கான நடுவர் குழுவில் ரா.பி. சேதுப்பிள்ளை, மகாலிங்க ஐயர், இராமச்சந்திர தீட்சதர் ஆகிய அறிஞர் பெருமக்கள் இருந்தார்கள். 93 பேர் கலந்து கொண்ட அப்போட்டியில் திரு. மு.ரா.பெ. அவர்கள் வென்று நின்றார். அவரே அந்நூலை மொழி பெயர்க்க நியமிக்கப்பெற்றார் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

அவ்வெற்றி திரு. முதலியார் அவர்களுக்கு மொழிபெயர்ப்பில் பேரார்வத்தை உண்டாக்கியது. மினுமசானியினுடைய 'நமது இந்தியா' (Our India—1953) நீலகண்ட சாத்திரியாருடைய 'தென்னிந்திய வரலாறு' (A History of South India) ''தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள்'' (Foreign Notices of South India) பொருளாதார நூலான ''வேலை-செல்வம்-கூலி'' (Work, Wealth and Wages,) ரட்யார்டு கிப்ளிங் எழுதிய ஆங்கிலக் கதைகள், யுனெஸ்கோக் கூரியர்க்காக நூற்றுக் கணக்கான ஆங்கிலக் கட்டுரைகள் போன்றவை திரு. மு.ரா.பெ. அவர்களின் மொழி பெயர்ப்புத் திறனுக்குச் சான்று பகர்கின்றன.

சங்க இலக்கியத்தின் சால்பை உணர்ந்த இப்பெரியார் அவற்றைப் பெரிதும் விரும்பிக் கற்றார். தாம் பெற்ற அவ்வின்பத்தினைத் தமிழ்கூறு நல்லுலகத்தின் சராசரித் தமிழ் அறிவுடைய மக்களும் பெறவேண்டும் என உளங் கொண்டார். குறுந்தொகை, நற்றிணை ஆகிய நூல்களில் உள்ள பாடல்களின் பொருள் விளக்கத்தை இனிய எளிய ஆசிரியப் பாக்களாகச் செய்து ''எளிய சொற்களில் இனிய குறுந்தொகை'' ''இன்றைய சொற்களில் அன்றைய நற்றிணை'' என்னும் பெயர்களில் நூலாக வெளியிட்டுள்ளார். எவ்விதப் பொருட் பயனும் கருதாது அருட்பயனாகவே இவற்றைத் தமிழ் உலகுக்கு அளித்துள்ளார். ''இன்றைய சொற்களில் அன்றைய நற்றிணை'' என்னும் நூலுக்கு அணிந்துரையெழுதிய சங்க நூல் வல்லுநரான புலியூர்க் கேசிகனார் பின்வருமாறு கூறுகிறார்:

''. . . . .பழைய செய்யுளானது மெருகிட்ட பொன்னணி போலப் புத்தொளி பெற்றுத் தோன்றுகின்றது எனக் கண்டு வியக்கின்றோம். மூலச் செய்யுளின் பொருள் நயம், உவமைச் செவ்வி, உணர்வு முகிழ்ப்புப் போல்வன அனைத்தையுமே தம்புது வடிவமைப்பிலும் செறிவாகப் பேராசிரியர், சொல்லிச் செல்வதைக் காணுகின்றோம்.''

எடுக்க வேண்டும். இப்பொழுது அப்படிச் செய்தால் இவர் உயிர் தப்புதல் அரிது, ஆதலின் பொறுத்துப் பார்ப்போம்'' என்று உதவி டாக்டரை கவனிக்கும் படிக் கூறிவிட்டு, ராமனாயர், சுந்தரம் இவர்களைக் கவனித்து எலும்புகள் முறிந்த பல இடங்களுக்கும் மிகச் சிரமப்பட்டுக் கட்டுகள் போடலானார் அந்த டாக்டர், கட்டுகள் போட்டு படுக்கையில் சேர்க்க நீண்ட நேரம் கழிந்தது. அப்பால் அம் மருத்துவர் நம் குமரனை வந்து கவனிக்க லானார்.

குமரனின் இறுதி:

ஆனால் நிலைமை மிஞ்சி விட்டது. டாக்டர் அளவற்ற துயரங் கொண்டார், தன்னால் இந்த உத்தம தொண்டரின் உயிரைக் தங்க வைக்க முடியவில்லையே! என்று கண்ணீ விட்டுப் புலம்பினார். குமரன் மறுலோகத்துக்குப் புறப்பட்டு விட்டான். அந்தச் சமயம் ஒரு போலீஸ் காரன் கை விலங்குகால் விலங்குகளைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனையில் வந்து நின்றான். டாக்டர், இது என்னவென்று கேட்டார். குமரன், ராமனாயர், சுந்தரம் மூவரும் தப்பியோடி விடுவார்கள். ஆகை யால் அவர்களுக்குக் கைகால்களில் விலங்கு போட்டு வைக்கும்படியாக இன்ஸ்பெக் டர் உத்தரவு என்றான் அந்தப் போலீஸ் காரன்.

காவலரின் கயமைத்தனம்:

குமரனோ எமலோகம் போய்க் கொண்டிருக்கிறான். மற்ற இருவரின் உடம்பெல்லாம் எலும்பு முறிந்து கட்டு கள் போடப்பட்டு படுக்கையில் மயங் கிக் கிடக்கிறார்கள் இந்த நிலையில் இவர்களுக்குக் கை விலங்கு கால் விலங்கு! ஆஹா! என்ன ஆச்சரியம்! இதை ஆச்ச ரியம் என்பதா? அநியாயம் என்பதா? அக்கிரமென்பதா?—ஆணவமென்பதா?

விசாரணை என்னும் கேலிக்கூத்து:

நடு வீதியில் நானூறுபேர் பார்க்க அடித்து நொறுக்கப்பட்ட குமரனின் உடல் மறுநாள் அறுத்துப் பரிசோதிக்கப் பெற்றது. எதற்கு? அவனுக்கு மரணம் எப்படி நேர்ந்தது என்பதை அறிய! இந்தக் கேலிக் கூத்தான நாடகம் நடந்தபின், அறுத்துச் சிதைவுற்ற குமார சாமியின் உடல் உறவினர்பால் ஒப்ப டைக்கப்பட்டது. உறவினரும் ஒரு சிலர் தாம் வந்திருந்தனர். அவர் அந்தத் தியா கச் செம்மலின் பொன்னுடலை ஒரு துப்பட்டியைத் தொட்டில் போல் முடிந்து அதை மூங்கில் கழியில் கோர்த்து அதில் கிடத்தி இருவர் சுமந்து சென்றனர், மயானத்திற்கு அதுவும் ஒரு சிறு சந்து வழியாக, அவ்வளவு போலீஸ் அட்ட காசம். அன்று அந்தப் போலீஸ் அதி காரி குமரன் முதலிய தொண்டர்களை வதைவதை புரிந்தபின், திருப்பூர் வீதிகளில் அவன் செய்த அட்டூழியம் கொஞ்ச நஞ்சமல்ல, வீடுகள் மேல் பறந்த தேசீயக் கொடிகளையெல்லாம் பிடுங்கிக் கிழித் தெறிந்தான். திண்ணைகள் சுவர் களில் மாட்டியிருந்த தேசத் தலைவர் படங்களையெல்லாம் உடைத்து நொறுக் கினான். வீதியில் வருவோர் போவோர் களை விழியுருட்டிப் பல்கடித்து விஷப் பாம்பு போல் சீறிக் கர்ஜித்தான். அந் தப் பேயாட்டத்தை முழுதும் ஆ! யாரே விளக்க வல்லார். இவ்வளவு ஆட்டூழியங் கள் புரிந்த அந்தப் புண்ணிய புருஷன் அன்று அடங்காத மகிழ்ச்சி கொண்டிருக் கலாம். ஆனால் அவனுக்கு இந்த உல கத்தில் உள்ள பெருமை என்ன? நம் குமரனுக்கோ?

''வதை புரிந்த பேர்களுக்கு
மகிழ்ச்சி கொஞ்சநேரம்
வாதை பொறுத்தோர்களுக்கோ
மதிப்பென்றும் பாரும்!''

வாழ்க திருப்பூர்க் குமரனின் திருநாமம்!

பத்துப் பொன்மொழிகள்

1. உணவு தேடுவதோடு உணர்வுந் தேடு.
2. மாசிலா மனமே ஈசன் கோயில்.
3. பயிருக்கு முள் வேலி; பணத்துக்குத் தருமம் வேலி; வேலும் மயிலும் உயிருக்கு உறுதி
4. பாலுந் தேனும் உடலுக்கு உறுதி; வசமாகும்.
5. உளம் வசமானால் உலகம் வசமாகும்.
6. ஒருமை உணர்வு இருமையுந் தரும்.
7. ஆறுதலையமலன் ஆறுதலையருள்வான்.
8. எல்லா உயிரும் ஈசன் கோயில்.
9. அயர்ச்சியில்லா முயற்சி உயர்ச்சி தரும்.
10. வேலையுடையவனிடத்தில் வேலை கேள்.

—வாரியார்

போலீஸ் பாய்ச்சல்:

ஆனாலும் அவன் அடிக்கடி அணி வரிசையிலிருந்து முந்துகிறான். பிரதான ரோடில் வந்து கொண்டிருக்கிறது தொண்டர் கூட்டம். அங்கங்கே இருமருங்கிலும் மக்கள் நின்று மகிழ்ச்சியோடு பார்க்கின்றனர், போலீஸ் நிலையம் 60 அடித் தூரத்தில் உள்ளது, அங்கே இரண்டு எமன்களும் 30 கிங்கரர்களும் தடியும் கையுமாக வெறி கொண்டு நிற்கிறார்கள். மக்கள் அவர்களைக் கண்டு அதிர்ச்சியுற்றனர். தொண்டர்களையும் போலீசாரையும் மாறி மாறிப் பார்க்கின்றனர்; திகிலடைந்து திகைக்கிறார்கள். ஜெயமுண்டு பயமில்லை மனமே! என்று கோஷம் எழும்புகிறது தொண்டரிடையே. போலீஸ் நிலையம் 50 அடி தூரம். தடியும் கையுமாய் நின்ற வெறி நாய்கள் பாய்கின்றன. ஜனங்கள் பயந்து தூரமாக ஒதுங்கி ஓடுகின்றனர். அடி சரமாரியாக விழுகின்றன. ரத்தப்பெருக்கு, தொண்டர்களின் முன்னே நின்ற குமரனின் மண்டையில் பலமான அடி; ராட்சச அடி. அவன் தொண்டர் யாவர்க்கு முன்னே நின்றபடியால் போலீஸ் மிருகங்கள் பல ஒன்றாக நின்று அவனைத் தாக்குகின்றன. ஒரு கோடியோன் ஓங்கியடித்த அடியால் நம் குமரனின் மண்டை இடதுபுறம் பிளந்து விட்டது அங்கு மண்டையோடு துண்டாக உடைந்து மேலே நீட்டி நின்றது. மேலும் ஒரு கொடும்பேய் அடித்த அடியால் அந்த ஓடு மண்டையுள் பாய்ந்து மூளையைத் துளைத்துவிட்டது.

மண்டை சிதறல்:

கொடியைக் கீழே போடு! கீழே போடு! என்ற இரைச்சலோடு அடி விழுகிறது. ஆனால் எத்தனை அடி விழுந்தும் குமரன் கொடியை மட்டும் விடவில்லை. அவன் மண்டையின் ஓடு உடைந்து ஓடு மூளையைத் துளைத்து உள்ளே புகுந்து விட்டதால் இப்பொழுது அவன் தடுமாறினான். தடுமாறி அப்படியே நிலத்தில் சாய்ந்தான்; மூர்ச்சையடைந்து விட்டான். பிடித்த கொடியை மட்டும் விட்டானில்லை. அடுத்த நின்ற ராமன்நாயர் என்ற இளைஞர் மீது போலீஸ் பாய்ந்தது. தடிவீச்சு அள்வில்லை. அவ்விளைஞனது விலா எலும்பு நொறுங்கியது. பலமான ஒரு அடியால் காதும் தொலைந்தது. மேலெல்லாம் ரத்தப் பெருக்கு. அவனும் நிலம் சாய்ந்தான். இப்படி ஒவ்வொரு தொண்டரையும் அடித்து வீழ்த்தி ரத்தவெள்ளத்தில் மூழ்கடித்துவிட்டு, கடைசியாகத் தலைமை தாங்கி நின்ற பி.எஸ். சுந்தரம் என்ற வீரன் மீது பாய்ந்தனர். நீ தான் தலைவனா? நீ தான் வெள்ளையனை துரத்துக்கிறவனு? நீ தானே ஊரில் தொண்டர்களைத் தூண்டிவிடுகிறவன்? என்று வசை மாரி பொழிந்து கொண்டு தாக்கினார்கள். முதலில் அவர் கால்களிரண்டும் முறிந்தன. கீழே விழுந்தார். அதற்கு மேலும் போலீஸ் அதிகாரி சளைக்கவில்லை; அவன் வாயும் கையும் ஓயவில்லை. கீழே விழுந்த அவர் உடல் சிதையும்படி பல அடிகள் போட்டான். 19 இடங்களில் எலும்புகள் முறிந்துவிட்டன.

தொண்டர் படையினர் பதின்மரில் குமரன், ராமன் நாயர், சுந்தரம் மூவரும் மூர்ச்சையாகிக் கிழே கிடந்தனர். போலீஸ் மிருகங்கள் மற்றுமுள்ள, தொண்டர்களையும் கை சலிக்க அடித்து வீழ்த்தினர் இப்பொழுது அந்த ரத்த வெறி கொண்ட காட்டேறிகள் சற்று ஓய்வு கொண்டன.

அப்பால், குமரன், ராமனாயர், சுந்தரம் மூவரையும் விடுத்து அடிபட்டுக் கிடந்த மற்ற எழுவரையும் கால்களைப் பிடித்து தரதரவென்று இழுத்துக் கொண்டு போய் பக்கத்தில் சந்துகளிலும், பொந்துகளிலும் எறிந்துவிட்டனர்,

மருத்துவமனையில்:

அதன்மேல், குமரன் முதலிய மூவரையும் ஒரு வண்டியில் விறகுக் கட்டைகளைப் போல் தூக்கிப் போட்டனர், பேர்ட்டு மருத்துவமனைக்குக் கொண்டு போய் அங்கு தாழ்வாரத்தில் தூக்கி எறிந்துவிட்டுப் போய்விட்டனர்.

பின்னர் காவல் நிலையம் வந்து பொய் வழக்குச் சோடனையானது. குமரன் முதலிய தொண்டர்கள் போலீஸாரைக் கல்லால் அடித்ததாகவும், அதனால் ஏற்பட்ட பொது ஜனக் குழப்பம் கட்டுக்கடங்காமல் போனதால், தடியடி செய்து மூவரையும் கைது ஆக்கி சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்து விட்டதாகவும் வழக்கு சோடித்துக் கொண்டனர்.

இங்கே மருத்துவமனையில் டாக்டர் இந்த மூவரையும் கவனிக்கலானார். அந்த டாக்டர் தங்கமானவர். பெயர் கோபால மேனோன். அவர் மூவரையும் கவனித்தார். குமரனின் நிலை மிக அபாயகரமாயிருந்தது. ''ரத்தம் ஏராளமாய் சேதமாகியிருக்கிறது, இவர் தலையில் ஓடு உடைந்து மண்டையுள் நுழைந்து மூளையைச் சிதைத்து விட்டது. அறுவைச் சிகிச்சை செய்துதான் அந்த

சட்ட மறுப்புச் செய்யப்புகும் தொண்டர்கள் நிச்சயமாக மரணத்துடன் விளையாட நேரிடும். போலீசாரின் குண்டுகள் நம் உடல்களைச் சல்லடைக் கண்கள் போல் துளைக்க நேரலாம். துப்பாக்கி முனையில் செருகப்பட்டுள்ள ஈட்டிகள் நம் சதையைக் கிழித்து, நமது குடல்களை வெளிப்படுத்தக் கூடும். போலீசாரின் கைகளிலுள்ள பூண் போட்ட குண்டாந்தடிகள் நமது மண்டையைப் பிளக்கும். உடம்பிலுள்ள எலும்புகளை நொறுக்கும். என்ன நடக்கும் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நம்மைப் போலீசார் சிரமம் இன்றி கைது செய்துவிட மாட்டார்கள். நம்மைத் தொலைத்து எறிவதே அவர்களது திட்டம் என்பதை நாம் நன்கு அறிவோம். உங்கள் மனதில் பீதியை உண்டாக்கி, நீங்கள் இங்கிருந்து பின்னடைந்து ஓடிவிடும்படி செய்ய நான் முயற்சி செய்வதாக நினைக்க மாட்டீர்கள் என்று நம்புகின்றேன்.

''ஆனால் நமக்கு வர இருக்கும் ஆபத்தைப் பற்றி நன்கு விளக்கி விடுவதும், எச்சரிப்பதும் தலைவன் என்ற முறையில் என் கடமையாகிறது. அதற்காகவே இவற்றைச் சொன்னேன். மேலும் கேளுங்கள்! நாமோ நிராயுதபாணிகள். அஹிம்சையே நமது விரதம். எதிரிகளை எதிர்த்தடிக்க நமக்கு உரிமை இல்லை. எதிர்த்தடிக்கும் எண்ணம் கூட நம் மனதில் எழக் கூடாது. அது மட்டுமா? அவர்களை எதிரிகள் என்று கூட கருதக் கூடாது. நம்மைச் சித்திரவதை செய்தால், அதற்காக அவர்கள்மீது கோபதாபம்கூட காட்டக் கூடாது.

இன்றைய இயக்கத்தில் கலந்து கொள்ளும்படி யாரையும் நான் வற்புறுத்தவில்லை. இதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுவது என் கடமை. முடிவாக ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். இன்று நடக்கும் போராட்டத்தில் கலந்து கொள்ளாமல், விலகிவிட யாரேனும் விரும்பினால், மனம் கூசாமல், வெட்கப்படாமல் அதை என்னிடம் அறிவிக்கலாம். தொண்டர் படையில் சேர்ந்த பின்பு பின்வாங்கலாமா? அவ்வாறு செய்தால் ஊரிலே நமக்கு என்ன மதிப்பு இருக்கும்? என்றெல்லாம் எண்ணித் தயங்க வேண்டாம்.

''எல்லாவற்றையும் ஆர அமரச் சிந்தித்துப் பாருங்கள். அதற்காக ஒரு ஐந்து நிமிட அவகாசமளிக்கிறேன். அவகாச முடிவில் கூச்சமோ, தயக்கமோ கொள்ளாமல் ஒவ்வொருவரும் தமது முடிவை எனக்கு அறிவியுங்கள்'' என்று கூறி முடித்தார்.

தொண்டர்களின் வீரம்:

ஐந்து நிமிட அவகாசம் தீர்ந்தது. படையில் இருந்து விலகிக் கொள்ள யாரும் முன் வரவில்லை. எல்லோரும் ஊக்கம் மிகுந்து உற்சாகத்துடன் தென்பட்டனர். 'ஜயமுண்டு பயமில்லை; முன் வைத்த காலைப் பின் வைக்கமாட்டோம்' என்று முழக்கம் செய்தனர்.

அந்த வீட்டு (மங்கள விலாஸ் மாளிகையின்) மாதரசிகள் மனங்கனிந்து முன் வந்து, இவர்களுக்குத் திலகமிட்டு ஹாரத்தி சுற்றி திருஷ்டி கழித்தனர். மனமார வாழ்த்தி வழி அனுப்பினர். தெய்வ வணக்கத்தை முடித்துக் கொண்டு மகாத்மா காந்திக்கு ஜே! என்று கோஷமிட்டுக் கொண்டு புறப்பட்டனர்.

தொண்டர் படையின் மிடுக்கு:

''நானில மொருங்குநவில்
மேனில மதாகும்
பானுவின் விளங்குபுகழ்
பாரத நன்னாடு
ஊனுயிர் தனிலுமிக
உன்னத மிதெ'' ன்றே
தோள் நிமிர்வுடன் குமர
தொண்டர் நடக்கின்றார்.
ஓர்சிறு பறவையின்
உறுபசி தவிர்க்க
சீர்பெறு தனதுடல்
சிதைவுற அரிந்தே
ஆர்வமொ டளித் தொளிர்
அறத்தவர் உறைந்த
பேர்பெரிய நாடிசை
பிறங்கநடக் கின்றார்!

இப்படி மிடுக்கு நடைபோட்டு அடுத்து வரும் அபாயத்தை அலட்சியப்படுத்திக் கொண்டு, புது மாப்பிள்ளைகள் ஊர் வலம் வருவதுபோல் வருகிறார்கள் தொண்டர்கள்.

குமரனின் வேகம்:

பிரதான வீதியிலே தொண்டர் படை வந்து கொண்டிருக்கிறது. வீதியின் இருமருங்கிலும் கூடிநின்ற மக்கள் ஆனந்த ஆரவாரம் செய்கின்றனர், தொண்டர் படையின் முன்னணியில் நம் குமாரசாமி தேசீயக் கொடியைப் பிடித்துக் கொண்டு நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையுமாக நடக்கின்றான். மற்ற தொண்டர்களை விட நம் குமரன் முன்னே முன்னே விரைகின்றான். தலைமை தாங்கும் சுந்தரம் வரிசையில் கலந்து செல்லுமாறு எச்சரிக்கிறார்.

அன்று காலையில்தான் ஒரு தொண்டர் படை சட்டத்தை மீறி ஊர்வலம் வரப் போகிறது. இச் செய்தி ஊரெல்லாம் பரவுகிறது. அவ்வூரில் போலீஸ் அதிகாரி யாக இருந்தவன் ஒரு மூர்க்கன். மனி தாபிமானமே இல்லாதவன். காட்டு விலங்கினும் கொடியோன். ஆங்கில அரசைத் தாங்கிக் காப்பதாய் மனக் கோட்டை கட்டும் மதம் பிடித்த மிருகம். அவன் தேசத் தொண்டர்க ளைக் கண்டாலே சீறுவான், சினப் பான். தடியைக் காட்டி உருட்டி விழிப் பான். தேளுக்கு அதிகாரம் வந்த கதைதான் அவன் நிலை. அவன் பெயர் மகமது. சென்ற ஒரு வார காலமாக இவன் அட்டகாசம் ஊரில் சொல்ல முடியாது.

''சிப்பாயைக் கண்டஞ்சுவார் - ஊர்ச்
சேவகன் வருதல் கண்டு வீட்டில்
ஒளிப்பார்''

என்னும் பாரதி பாட்டு நூற்றுக்கு நூறு மெய்யாகத் தோன்றியது அவ்வூரில். நீண்ட காலமாகத் தேசம் தேசமென்று பரிவு காட்டியவர்கள் பலர் தளர்ச்சி கொண்டனர்.

ஆனால் தேச பக்தியில் உரமேறி நின்ற சில வாலிபர்கள் இதற்குப் புறம் பாய் நின்றனர், எப்படியும் சட்டத்தை மீறி ஊர்வலம் நடத்துவதாய்த் தீர் மானித்து விட்டனர். இவர்களுக்குத் தலைமை தாங்கியவர் சுந்தரம் என்னும் வீரர். இவர் ஒரு வீராங்கனையின் புதல்வர். பர்மாவிலிருந்து காந்தீய சேவைக்காக (தன் உத்தியோகத்தை விட்டு விட்டு) தாயுடன் இந்தியா வந்து நாட்டுக்கே அற்பணமானவர். இவர் தலைமையில் ஒன்பது தொண்டர்கள் சேர்ந்தனர். அவர்களில் ஒருவன் நம் குமாரசாமி. குமாரசாமி இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்வதென்று தீர்மானித்து விட்டான். குடும்பத்தினர் திடுக்கிட்ட னர். எவ்வளவோ சொல்லினர். தள் ளாத வயதுள்ள தாயார் கண்கலங்கி பிரமை பிடித்து நின்றார்.

ஊரவர் வருத்தம்:

அவனுடைய கடை முதலாளிகள் இச் செய்தி யறிந்து கவலைப்பட்டனர். தங்கமான குணம் படைத்த தன் கடை ஊழியன் இப்படி பெரிய ஆபத்தான செய லில் நுழைகிறானே என்று அவர்கள் அளவற்ற கவலையுற்றனர். அவர்களில் ஒருவர்,

ஏனுங்க மாப்பிள்ளை நம்ம கொமுரு இப்படிச் சட்டத்தை மீறிச் சத்தியாக் கிரஹம் செய்யப் போறானாமே, இவனுக் கெதுக்குங்க இந்தக் காரியம்? பெரிய புள்ளிகளெல்லாம் பின் வாங்கி ஊட்டுளே பதுங்கி கிடக்கதுங்க. இந்தச் சின்னப் பசங்க இப்படிப் புறப்படலாமா? இதென்ன சாமான்யப் போராட்டமா? செங்கோலுக்கு முன்னே சங்கீதமா என் பார்களே அதுபோல இந்தச் சிறுவ னுங்க அந்த ஆணவம் பிடிச்ச போலீஸ் அதிகாரிகளுக்கு முன்னாலே போய் அடிபட்டுச் சாவதா? இதென்னங்க மாப் பிள்ளை பெரிய சங்கடமாயிருக்குது, எனக்குண்ணா ராத்திரியெல்லாம் தூக்க மேயில்லை!

அதேங் கேக்கறீங்க மாமா! இந்தக் காந்தி வந்து ஏராளமான பேருக்கு பைத்தியத்தை உண்டாக்கிப்பிட்டாருங்க! பசங்களையெல்லாம் கெடுத்துப் போட் டாருங்க! அடிபடறது, ஜெயிலுக்குப் போறது இதெல்லாம் என்ன வெளை யாட்டா! வெள்ளைக்காரன் அவ்வளவு லேசுபட்டவனா? அவன் எப்படிப் போவானுங்க! காந்தி பெரியவர்தான்! நமக்கு ஒண்ணும் புரியலீங்க!

இப்படி, திருப்பூர் நகரம் பூரா வும் பலவாறாகப் பேசுவது மிகுந்தது.

தடையை மீறி ஊர்வலம்:

10-2-32-ல் திருப்பூரில் தேசாபிமா னங் கொண்ட ஒரு பிரமுகரின் இல்லத் தின் முன்பு தொண்டர்கள் வந்து குவிந் தனர்; 10 பேர் சட்டத்தை மீறி ஊர் வலம் புறப்படத் தயாராயினர். அச்சம யம் அத் தொண்டர் படைக்குத் தலை மை தாங்கிய பி.எஸ். சுந்தரம் என் னும் வீரர் பிரான் தொண்டர்களை நோக்கிப் பின் வருமாறு எச்சரிக்கலாயி னார்.

தலைவர் எச்சரிக்கை

''நமது திருப்பூரிலே சென்ற ஒரு வாரகாலமாக ஆயுதம் தாங்கிய போலீஸ் படை பவனி வந்து கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் செய்து வரும் ஆர்ப்பாட்டங்களைப் பற்றி என்னை விட நீங்கள் தாம் நன்கு அறிந் தவர்கள். அத்தகைய போலீஸ் இன்று நம்மீது பாய்ந்து, கொடுமை பல நமக்கு இழைப்பது உறுதி. மேலும் இதுமாதிரி சட்ட மறுப்பு கோஷ்டி மீண்டும் புறப் படாதிருக்கச் செய்யும் நோக்கத்துடன் மக்கள் மனதில் பயத்தை உண்டு பண் ணுவதற்காகவே, முன்னோடிகளான நம்மை மிகக் கோரமாகச் சித்திரவதை செய் வார்கள் என்பதும் உறுதி. எனவே இன்று

பேசுவார்கள். அங்கே "யதார்த்தவாதி வெகுஜன விரோதி" என்ற பட்டமும் "வெல்லா வழக்கை விலை வாங்கி வெல்விக்கும் வல்லாள கண்டன்" என்ற பட்டமும் பெற்றோர் சிலர் இருப்பர்.

இத்தகைய பெருமையும் சிறுமையும் வாய்ந்த செங்குந்த குலத்திலே தான் நம் குமாரசாமி வந்து அவதரித்தான். இளமையில் பள்ளிக்கு அனுப்பப்பட்டான். அங்கு 5 ஆண்டுகள் கழிந்தன. எழுதவும் படிக்கவும், கணக்கும் சிறிது கற்றான். அதற்குள் வறுமைப் பேயின் அட்டகாசம், வீட்டிலேயிருந்து தொழில் பழகினான். தாறு சுற்றல், பாவடியில் பாத்தோய்வோர்க்குச் சிற்றாள் வேலை.

வேலை தேடி அலைதல் :

அப்பால், நாளடைவில் தறியில் பழகுதல். பையன் வளர்ந்தான். 17 வயதில் திருமணம். 14 வயதுச் சிறுமியான ராமாயம்மாள் (திருப்பூரில் உறவினர் வீட்டுப்பெண்) உள்ளூர்த் தறித் தொழிலில் கூலி கட்டுப்படியாகவில்லை. தன் மாமன் வாழ்ந்த பள்ளிபாளையம் சென்றான். அங்கே பட்டு நெசவு பயின்றான். திருச்செங்கோடு சென்றான். எங்கு சென்றும், தறித் தொழிலில் வருமானம் போதவில்லை. முடிவில் பஞ்சு அரவைத் தொழிலுக்குப் பேர் போன திருப்பூரையடைந்தான். முதலாளிகள் கூட்டாக நடத்திய ஒரு பஞ்சு வர்த்தக நிறுவனத்தில் சம்பளத்திற்கமர்ந்தான். ஊக்கத்துடனும், கருத்துடனும் தொழிலைச் செய்து வந்தான். இப்படி ஏழு ஆண்டுகள் கழியலாயின. வாழ்க்கையில் பல நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்துப் பலரும் பாராட்டும் பண்பு கொண்டான்.

தேசீயப் பற்று :

ஊரில் பக்தர் கூட்டம், பஜனைக் கூடங்களில் சேர்ந்து ஒழுகினான், பத்திரிக்கைகளை ஊன்றிப் படித்துத் தேசீயச் செய்திகளைத் தெரிந்து கொண்டான். காந்தியடிகளின் சத்யாக்கிரக இயக்கம் அப்பொழுது நாட்டில் தீவிரங் கொண்டிருந்தது. அது பாலர் முதல் முதியோர் வரை எல்லோர் மனதையும் காந்தம் போல் ஈர்த்தது. கதர், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு இவற்றின் பிரச்சாரம் ஊரெல்லாம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. தேசபக்தர்கள் சிறைக்கும், தடியடிக்கும், கசையடிக்கும், தூக்கு மேடைக்கும், துப்பாக்கி முனைக்கும் இரையாகிக் கொண்டு வந்தனர். நம் குமாரசாமியை இச் சம்பவங்கள் கவர்ந்தன. இவனும் இவ்வியக்கங்களில் ஈடுபடத் துடித்தான். குடும்ப நிலை இடந்தரவில்லை. தந்தை காலமாகி விட்டார். தாய்க்கும் வயது அதிகம். உடன் பிறந்தோர் பலர். 1930இல் இராஜாஜி வேதாரண்யம் பாதயாத்திரை சென்று உப்புச் சத்தியாக்கிரஹம் செய்தார். அதில் சேர்ந்து கொள்ள ஆத்திரப்பட்டான். குடும்ப நிலையும், உற்றார் உறவினர் தடங்களும் தடுத்து விட்டன. இப்பொழுது (1932) மீண்டும் காந்தியடிகள் போர் தொடங்கிவிட்டார். ஊரெல்லாம் அல்லோல கல்லோலப்படுகிறது. நாடு முற்றிலும் போர் முழக்கம். பாலர் முதல் விருத்தர் வரை இந்தப் போர் வெறி விடவில்லை. சத்தியம், அஹிம்சை வழியில் சாரை சாரையாகத் தேச பக்தர் கூடுகிறார்கள். ஊர்வலம் வருகிறார்கள். சட்டத்தை மீறுகிறார்கள். தடியடி விழுகிறது, மண்டை உடைகிறது, சிறைச்சாலைகள் நிரம்புகின்றன. கசையடி, ரத்தப் பெருக்கு, துப்பாக்கிச்சூடு, அன்னிய சர்க்கார் ஆன மட்டும் தாக்குகிறது. பந்து அடிக்க அடிக்க எகிறுவது போல் தேசபக்தர் மேலும் மேலும் எழுகிறார்கள். ரண பேரிகை முழக்குகிறார்கள்.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில்லையே!

"இரும்புக் கம்பிச் சிறையினுள்ளே
இழுத் தடைத்துப் பூட்டினும்
எரிக்கும் வெயில் பசியில் நோயில் நிறுத்தி வைத்து வாட்டினும்,
கரும்பைப் போலே கரமும், காலும்
நறுக்கித் துண்டு காட்டினும்
கலங்க மாட்டோம் ஆங்கிலேயக்
கவர்மென்டே நீ காணுவாய்"

என்று போர் முழக்கம் வானைப் பிளக்கிறது. அமெரிக்கா, ஐரோப்பா முதலிய பல தேசப் பத்திரிகைக்காரர்களும், வந்து குவிகிறார்கள். இங்கு நடக்கும் திமிர் தண்டமான ஆட்சியின் அடாவடித்தனத்தைப் பிரசுரித்து உலகெல்லாம் பரக்க விடுகிறார்கள். உலகில் பேரறிஞர் பலரும் பதைக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சியைக் கண்டித்து அறிக்கைகள் விடுகிறார்கள்.

போர்க்களம் புகுதல்:

10-1-32 தேதி திருப்பூர் நகரம் கிடுகிடுவென்று அதிர்ந்து நடுங்குகிறது.

ஆம்! குமரன் குடிசையில் பிறந்தவன்தான்! ஏழை நெசவாளியின் புதல்வன்தான்! பள்ளிப் படிப்பில் குறைந்தவன்தான்! ஊரூராய்த் தொழில் தேடி அலைந்தவன்தான். ஆனாலும் அவன் உள்ளத்தே தோன்றிய சுதந்திரக் கனல் பொங்கியெழுந்து அண்டத்தை அளாவி அன்னிய ஏகாதிபத்தியத்தையே சுட்டுப் பொசுக்கி விட்டதல்லவா? அவன்

அவன், வீர சுதந்திரம் வேண்டி நின்றான்

அவன், ''புகழும் நல்லறமுமே யன்றி, எல்லாம் பொய் என்று கண்டான்'

அவன், ''மானுட ஜென்மம் பெறுவதற் கரிது'' என்றுணர்ந்தான்.

அவன், ''பிறந்தவர் யாரும் இறப்பது உறுதி'' என்று தெரிந்து கொண்டான்.

ஆக புறப்பட்டான் போருக்கு!

காந்தீய சக்தி காந்தம் போல் அவனை ஈர்த்தது. சத்தியாக் கிரக மந்திரம் தலைக் கேறியது, பிடித்தது பைத்தியம்.

குமரன் பிறந்த குலம்:

தியாகி குமரன் 1904 ஆம் ஆண்டு பிறந்தான்; ஈரோடு தாலுகா சென்னிமலை என்னும் சிறுநகரில். அவ்வூர் செங்குந்த முதலிமார்கள் நிறைந்த பதி; தொழில் நெசவு, நெசவுத் தொழிலாளர் நிலை சென்ற 80 ஆண்டுகளுக்கு முன் சொல்ல வேண்டுவதில்லை. சாணேறும்! முழஞ் சறுக்கும்! அன்றாட காட்சிகள்!

அன்னிய ஆட்சி நாட்டில் மிடுக்கு நடை போட்டுக் கொண்டிருந்தது. ஏழு ஆயிரம் மைலுக்கப்பால், லங்காசயரிலிருந்தும், மான்செஸ்டரிலிருந்தும் உற்பத்தியான வண்ண வண்ணமான மில் துணிகள் நம் நாட்டில் தெருக்கள் தோறும், வீதிகள் தோறும் கொண்டு வந்து குவித்து நம் செல்வங்களைக் கொள்ளையடித்தார்கள் பிரித்தானியர். நம் நாட்டுக் கைத்தறிக்காரன் ஐயா என்று புலம்பித் தவித்தான். ஆண்டில் சில மாதங்களில் துணிகள் விலை போகும். சில மாதங்களில் வியாபாரம் முடங்கிப் போகும். அப்போது குடும்பத்தோடு கூலி வேலைக்கு அலைவான். இவன் காவடியில் பண்ணாங்கு துணியை போர்த்து, மயிலிறகைக் கட்டிக் கொண்டு ஊரூராய் வேல் வேல்! வெற்றிவேல்! என்று பாடிக் காடு காடாய் புறப்பட்டு விடுவான்.

இந்த நிலையை அந்த நாளில் ஈரோட்டு இராமசாமிப் பெரியார், தேசீயத்தில் ஈடுபட்டுக் கொண்டு இருந்த போது மேடைகளில் பேசும் பொழுது நெசவுகாரர்க்கு நூல் ஆறு மாதம், வேல் ஆறு மாதம் என்று நகைச்சுவை ததும்பப் பேசுவார். பஞ்ச காலத்தில் நெசவாளராகிய கைக்கோளர் எவ்வளவு துன்பப்பட்டார்களென்பதை

''கைக்கோளத் தம்பிகள் விற்காததை
விற்று
காலமல்லாப் பஞ்ச காலத்திலே
கடன் அதிகமாய்ப் பட்டு புடவை மரமும்
விற்று
கைநிறைய மயிலிறகைக் கொண்டார்
களே''

என்று நூறு ஆண்டுக்கு முன் ஒரு புலவர் பாடியுள்ளார்.

இப்படியெல்லாம் நம் செங்குந்த மக்கள் வறுமையில் துன்புற்றாலும், கல்வியில் தளர மாட்டார்கள். திண்ணைப் பள்ளிகள் ஏற்படுத்தித் தம் பிள்ளைகளை கொஞ்சமாவது படித்தவனாகச் செய்வார்கள். எவ்வளவு வறுமை வந்தாலும் தம் குடும்பத்தில் ஒரு பையனையாவது கொஞ்சம் படிக்க வைக்காமல் விடார். அப்படி அபூர்வமாய்த் தம் குடும்பத்தில் படித்தவனைச் செல்லமாகவும், பெருமையாகவும் ''பள்ளி கூடத்தான்'' என்று சாவளவும் பேர் சொல்லும்படி செய்து விடுவார்கள். அவனும் பஞ்ச பாண்டவர் வனவாசம், பவளக்கொடி மாலை, நல்லதங்காள் கதை, முதலிய அம்மானை புத்தகங்களை அம்மா மார்கள் கூடிக் கேட்கும்படி படித்துக் காட்டி படிப்பாளி எனப் பேர் பெறுவான்.


அண்ணும் இண்ணும் கேப்பைக்களி அடை மழைக்கும் கேப்பைகளி என்ற நிலையிலும், பைசா முயற் கொம்பாயிருக்கும் நிலையிலும்,

பத்தும் நூறும் செலவழிக்கப் பரபரப்பார்கள் நம் செங்குந்த மக்கள். தேர்திருவிழா, கண்ணாளம், காதுகுத்தல் முதலிய காரியங்களை மிக ஆடம்பரமாகத்தான் கொண்டாடுவார்கள், அதிலே லோபத்தனம் சிறிதும் காட்டமாட்டார்கள், கூத்து நாடகங்களில் வெகு ஊக்கங் காட்டுவார்கள். ''கைக்கோளர் முதல் கண்ணு வலிக்குக் கட்டாது'' என்னும் முதுமொழி இவர்களுக்குப் பெரும் கசப்பாயிருக்கும். சம்பாதிப்பதற்கு இரண்டு கைகளும், செலவழிப்பதற்கு இருபது கைகளும் இல்லையே என்று ஏங்குவார்கள்.

இவர்களுக்கு ஊர்க் கூட்டம், நாட்டுக் கூட்டம் என்ற அமைப்புகள் உண்டு. அதில் தீராத நியாயமும் தீரும்படிப்

2(a) திருப்பூர்க் குமரன்

கவிஞர் ந. கந்தசாமி, இராசிபுரம்



திருப்பூர்க குமரன்

பேரும் பெருமையும்:

திருப்பூர்க் குமரன்! என்ன கவர்ச்சியான வார்த்தை! எவ்வளவு பொருள் பதிந்த சொற்றொடர்! அம்மம்மா! இந்த வார்த்தைக்குள்ள மதிப்பும், மரியாதையும் எந்த வார்த்தைக்குண்டு? திருப்பூர் என்ற சொல்லும், குமரன் என்ற சொல்லும் தமிழில் நீண்ட நெடுங்காலமாயிருக்கின்ற சொற்கள் தாம். ஆனாலும் 1932-ஆம் ஆண்டிலிருந்து இச் சொற்கள் இரண்டும் சேர்ந்து ஒரு புதிய சொல்லாகப் பொழிவு பெற்று, புகழ் பெற்று தமிழர் நெஞ்சகத்தே ஒளி மிகுந்த தீபம் போல் நீங்காமல் நிலை பெற்று விளங்குகின்றதன்றோ? குமரன் வாலிபர் சங்கம், குமரன் வாசக சாலை, குமரன் சொசைட்டி, குமரன் பாடசாலை, குமரன் நிலையம், இப்படி எத்தனை எத்தனை நிறுவனங்கள்! கதர்க் குல்லாய் தரித்து, காலருடன் கூடிய கதர்ச் சட்டையணிந்து உறுதியும், கனிவுங் கொண்ட பார்வையோடு சாந்தமான பசுப்போல தோற்றமும், இரும்பு போல நெஞ்சுறுதியும் கொண்ட ஒரு இளைஞனின் திருவுருவப் படம் எத்தனை இடத்தில்! மன்னர் மாளிகையில், ஏழை மக்களின் குடிலில், எண்ணற்ற பொது நிலையங்களில், நிறுவனங்களில் தெய்வத் திருவுருவம் போல் பார்த்துப் பரவசப் படும்படி திகழ்கிறது.

இப்படி நாட்டில் எட்டுத் திக்கும், பதினாறு கோணமும் போற்றிப் புகழப் படும் இந்த இளைஞன் யார்? எந்த ஊர்? எந்த நாடு? இவன் படித்தவனா?

பாருக்குள் வீடுகள் மாடுகள் ஆடுகள்
பணமும் கொண்ட பெரியவனா?

இல்லை! அவன் ஏழை நெசவாளி! தந்தை நாச்சிமுத்து, தாய் கருப்பாயி, ஊர் கொங்கு நாட்டில் குமரன் கோயில் கொண்டுள்ள சென்னிமலை. அவன் படிப்பு ஐந்தாம் வகுப்பு வரை.

இன்று நாட்டில் சுதந்திரம் வந்து 40 ஆண்டுகளாகின்றன. இவ்வாண்டுகளில் இந்நாட்டில் ஏராளமான கல்விச் சாலைகள், தொழிற்சாலைகள், மருத்துவ மனைகள், மலை போன்ற அணைக் கட்டுகள், நீண்ட நெடிய போக்குவரத்து பாதை வசதிகள், விவசாய வளர்ச்சி, விஞ்ஞான முன்னேற்றம், அவை காரணமாய்ப் பற்பல புதிய புதிய தொழில்கள், இன்னும் எவ்வளவோ தேவைகளென்றாலும் இப்பொழுது காணும் இவையெல்லாம் எப்படிப் பெருகின? நாம் கண்ட சுதந்திரத்தால்! அந்தச் சுதந்திரம் இந்த நாட்டிற்கு எங்ஙனம் தோன்றியது? நினைத்துப் பார்ப்போம்! திருப்பூர் குமரனால்! திருப்பூர் குமரனால்! திருப்பூர் குமரன் போன்றோர் தியாகத் தீயில் குதித்து உடல், பொருள், ஆவி அனைத்தையும் துச்சமாகத் துறந்ததாலல்லவா மேலே கூறிய இவையெல்லாம்!

தெள்ளிய ஆலின் சிறு பழத்தொரு விதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன்
சினையினும்
நுண்ணிதே ஆயினும், அண்ணல் யானை
அணி, தேர், புரவி, ஆட்பெரும்
படையொடு
மன்னர்க் கிருக்க நிழலாகுமே!

2 (b) திருப்பூத் தியாகி

கவிஞர் ந. கந்தசாமி, இராசிபுரம்

1. சுதந்திரப் போரின் நாள்களிலே
சொல்லிடும் பரத நாட்டினிலே
விதந்தரும் துன்பம் பலபார்த்த
வீரர்கள் சரிதம் மிக உளவே
அதம் புரிந் திடும் அயல் ஆட்சியிலே
அன்றொரு நாளில் திருப்பூரில்
மதம்பெறும் அந்தக் கொடியவரால்
மாண்டதோர் வீரன் வரலாறு

2. கொடியினைப் பிடித்தான் மனமதுதான்
குமுறியே துடித்தான் ஊர்வலத்தே
இடியினைப் பிடித்தான் குரலினிலே
இணையறத் தொனித்தான், மூர்க்கர்கள்தாம்
விடியினைக் கொடுத்தார், அவர் முகத்தில்
அறைந்தது போலே இவன் கொடியை
முடிமிசைப் பிடித்தான் உடல் உயிரும்
முழுவதுங் கொடுத்தான் முடிவுறவே.

3. கருப்பாய் மகனும் குமரனடா! - இந்தக்
கருப்பாய் மகனும் குமரனடா!
நெருப்பாய் அவனை எதிர்த்தவனோ - தெற்கு
நெடுங்கட லிடையோர் அசுரனடா!
விருப்பாய் இவனை எதிர்த்தவனோ - மேற்கு
விரிகடற் செம்பட்டை மசுரனடா!
இருப்பாய் இவன்தான் சேர்த்தபொருள்
இணையறு சுதந்திரச் செல்வமடா!
(கருப்பாய் - பார்வதி, கருப்பாய் - குமரனின் தாய்)

4. ஓட்டமும் நடையும் காட்டிவிட்டான் - தியாக
உச்சியில் எகிறப் போட்டியிட்டான்
பாட்டையும் பழமையும் மறந்துவிட்டான் - செயல்ப்
பாட்டினி லேஇவன் விரைந்து விட்டான்
நீட்டியே கொடியைப் பிடித்துவிட்டான் - அவன்
நெஞ்சுரம் முழுதும் திரட்டிவிட்டான் - எருமை
மாட்டுறும் எமனை வெருட்டி விட்டான் - அவன்
மருண்டிடவே விழி உருட்டி விட்டான்

5. தாய்தந்தை யரை மறந்துவிட்டான் - வாய்ச்
சமர்த்தர்கள் உறவைத் துறந்துவிட்டான்
பேய்தந்ததுவாம் அச்சமெனும்
பீடையின் கழுத்தை முறித்துவிட்டான்
நாய் தந்தது போல் அயலரசு
நல்கிடும் சலிகை தனை விரும்பும்
நோய் கண்டவரை இகழ்வாக - இவன்
நோக்கிடவும் முகம் மறுத்து விட்டான்

6. திருப்பூர் என்றிடு பெயரினைத்தான் - உலகம்
சிறப்புடன் ஓதிடப் புகழ் இணைத்தான்
விருப்பூர் தமிழ்நிலம் சிறப்புறவே - இவன்
வெள்ளமாய் உதிரம் கொடுத்து விட்டான்
கருப்பூர் அன்னிய ஆட்சியின் மேல் - நாம்
கல்லொடு முள்ளையும் குவித்திடவே
உரப்போடெமக்கு உணர்வளித்தான் - இவனும்
உரத்தோ டுதிரம் உயிர் கொடுத்தான்.

செங்குந்தர் பேரரசு முறை

காஞ்சீபுரம் மகாநாடு

சிவபுரநாடு (திசைநாடு)	தொந்திபுரநாடு (திசைநாடு)	விரிஞ்சிபுரநாடு (திசைநாடு)	சோளிங்கபுரநாடு (திசைநாடு)
1. சிவபுரம்	1. தொந்திபுரம்	1. விரிஞ்சிபுரம்	1. சோளிங்கபுரம்
2. மேல்படப்பை, கீழ்படப்பை, ஆத்தஞ்சேரி	2. முருகமங்கலம்	2. ஆமூர்	2. திருத்தணிகை
3. மானாம்பதி, செம்பாக்கம், மூணத்தொன்று அகரம்.	3. திருவாமாத்தூர்	3. வாணியம்பாடி	3. தெளிநாடு
4. முன்னூர், பரமேசுர மங்கலம், மதுராந்தகம்	4. திருவண்ணாமலை	4. கொரட்டை	4. நெறிநாடு
5. திண்டிவனம்	5. செங்குறிஞ்சி	5. தருமபுரி	5. திருவடிநாடு
6. வக்கரைப்பத்து	6. கச்சித்தரல்	6. பவானி	6. திருமழிசை*
7. திருவக்கரை, புதுச்சேரி ஒழுகரை	7. சேலம்	7. தாரமங்கலம்	7. கொந்தம்பாக்கம்
8. திரிபுவனம், நல்லாத்தூர்	8. திட்டக்குடி	8. ஏழாநாடு	8. திருக்காளத்தி
9. திருப்பாரலூர்	9. திருமலைப்பாடி	9. புகழாரை	9. தொண்டமாநாடு
10. இடையாத்தூர் திருவெண்ணைநல்லூர்	10. திருக்கோவல்	10. பூரதிரை	10. வரைநாடு
11. பனமுலை, அனதபுரம்	11. திருநாகேசுவரம்	11. திருச்செங்கோடு	11. வெங்கட்டகிரி
12. வழுதிலைப்பட்டு	12. திருச்செம்பள்ளி	12. வையாபுரி	12. திருப்பதி
13. மாப்பரை, வரமாசூர்	13. சீர்காழி	13. அவினாசி	13. ஜெகந்நாதம்
14. பட்டணம், கருங்குழி	14. மாப்பிள்ளைக்குப்பம்	14. நஞ்சுண்டகுடி	14. சீட்டம்பள்ளி
15. மன்னார்கோவில்	15. தேவூர்	15. வகவங்கபாளையம்	15. செம்புரம்
16. பாளையம்	16. காட்டூர், போலகம்	16. கருவூர்	16. வரதகிரி
17. குப்பர்க்கம் (குவாகம்)	17. திருமருகல்,	17. நாமக்கல்	17. சந்திரகிரி
18. ஜெம்பை, திருவரங்கம்	18. நல்லாச்சேரி	18. காங்கேயம்	18. காசி

*திருமழிசை நாட்டைச் சேர்ந்த 18 ஊர்கள்

1. திருமழிசை	2. வடதிருநாகேஸ்வரம்	3. திருமயிலாப்பூர்	4. திருக்காரணி
5. மாம்பலம்பேட்டை	6. தோப்பேட்டை	7. திருவல்லிக்கேணி	8. சென்னைப்பட்டினம்
9. சிந்தாதிரிப்பேட்டை	10. எழும்பூர்	11. புதுப்பேட்டை	12. ஆலந்தூர்
13. அனகாபுத்தூர்	14. திருநீர்மலை	15. மூன்றாங்கட்டளை	16. மேப்பூர்
	17. பம்மல்	18. காரணீஸ்வரன்பேட்டை	

வேறு என்று சொல்லமாட்டார்கள் என்றும் விளம்புகின்றார்.

''மால்வேறு சிவன்வே றென்ன
வழுத்திட வண்மை போல
வேல்வேறு குந்தம் வேறென்
றிருபொருள் விளம்பார் மேலோர்
-(பாட்டு 42)

கைக்கோளர் :

நம் செங்குந்தர்க்குக் கைக்கோளர் என்னும் பெயரும் வழங்கி வருகின்றது. இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகட்கு முன்னர் சேந்தன் திவாகரரால் இயற்றப் பட்டுள்ள நிகண்டு நூலில்,

''செங்குந்தப் படையர் சேனைத் தலைவர்
தந்து வாயர் காருகர் கைக்கோளர்''

என்று செங்குந்தர், சேனைத்தலைவர், தந்துவாயர், காருகர், கைக்கோளர் ஆகிய ஐந்து பெயர்களும் ஒரு வகுப்பாரையே குறிக்கின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஐந்து பெயர்களுள் ''காருகர்'' என்னும் பெயரை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூர் எடுத்த காதையில்,

''பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக் கையும்''

என்று எடுத்தாளப்பட்டிருக்கக் காண் கிறோம். அன்றியும் இக்காலத்தே நம்மில் பல்லோர் நெசவுத் தொழிலையே கொண்டு வாழ்வது போல, அக்காலத்திலேயும் நம் மவர் ''காருகர்'' என்னும் பெயரோடு காவிரிப்பூம்பட்டினத்தில் நெசவுத் தொழிலை மேற்கொண்டொழுகினார் என் பதையும், அவர்கட்குத் தனி குடியிருப்பு கள் இருந்தன என்பதையும் இச்சிலப்பதி காரவடிகள் உணர்த்தக் காணலாம்.

கைக்கோளர் என்னும் சொல்லுக்கு சிறந்த கொள்கைகளைக் கைக் கொண்ட வர் என்றும், கையுழைப்பைக் கொண்டு வாழ்வு நடாத்தியவர் என்றும் கூறலாம். வீரவாகு தேவர் என்பதின் வேறு பெயர் தான் கைக்கோளர் என்றும் சிலர் கூறு கின்றனர். இதற்குக் காரணம் குந்தத் தைக் கைக்கொண்டமையால் இருக்கலாம்.

முதலியார் :

நம்மை முதலியார் என்னும் பட்டப் பெயராலும் வழங்குபவர் இதற்குரிய காரணத்தை ஈட்டி எழுபது நமக்கு விளக்கிக் கூறுகிறது.

சூலத்தையும் மழுவாயுதத்தையும் தமது கைகளிலுடைய பரமசிவன்: இந் திரன் - நான்முகன் - திருமால் முதலிய தேவர்கள் யாவருக்கும் முதன்மையாக ஆதியில் எழுந்தருளி வந்தத் தன்மையால் அப்பரமசிவனுக்கு முதலியார் என்றொரு பெயர் வந்தது. ஆதலால் அவர் மரபில் வந்த செங்குந்தர் சந்ததியார்க்கும் முதலி யார் என்ற பெயர் வந்தது.

''இந்திரன் அயன்மாறேவர் யாவர்க்கு முதன்மையாக
வந்தபான் மையினாற் சூல மழுப் படையத்த னார்க்கு
முந்திய நாமந் தானு முதலியார் ஆகை யாற்செங்
குந்தர்சந் ததிக்கும் அப்பேர் முதலியர் என்று கூறும்''
- (பாட்டு 29)

முடிவுரை:

இவ்வரலாறு, நாம் செங்குந்தர் என்னும் பெயர் பெற்ற வரலாற்றையும், நம்மைக் கைக்கோளர் என்றும் முதலி யார் என்றும் வழங்குவதற்குரிய காரணத் தையும், நாம் கயிலாயப் பரம்பரையினர் என்பதையும், வீரவாகுத் தேவர் வழி வந்த வர்கள் என்பதையும், நாம் செங்குந்தப் பேரரசு அமைத்து நல்லாட்சி புரிந்தவர் கள் என்பதையும் தெற்றெனத் தெளி வாக்கும் அன்றோ?

குறிப்பு:

(இவ்வரலாறு 1926-ல் ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களால் பதிப் பிக்கப் பெற்று, செங்குந்த மகாஜன சங்க நிறுவனர் திரு தி. நா. சபாபதி முதலி யார் அவர்களால் வெளியிடப் பெற்ற ''செங்குந்தர் பிரபந்தத்திரட்டு'' எனும் நூலையும்,

திரு. வித்துவான் தி. பட்டுச்சாமி ஓது வார் அவர்களால் எழுதப்பெற்று, திருப் பனந்தாள் ஸ்ரீ காசிமடம் வெளியிட்டுள்ள ''கந்தபுராண வசனம்'' எனும் நூலையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றது)

பெயர் வழங்கி வருக'' என்று திருவாய் மலர்ந்தருளி மயில் வாகனத்தோடு மறைந்தருளினார்.

முசுகுந்த மன்னன் அந்நவ வீரர்களையும் தன் கருவூர் என்னும் தலைநகர்க்கு அழைத்து வந்து, அவர்களுக்குத் தனித்தனி அரண்மனைகள் கட்டித்தந்து குடியேற்றி, அவர்களுக்குத் தமது உறவினர்களிடத்துச் சிறுமியர்களாய்ப் பிறந்திருந்த தேவர்களின் குமாரிகளைத் திருமணம் செய்து கொடுத்தான்.

வீரவாகுத் தேவர் தமது மனைவியாகிய புட்பகந்தியிடத்தில் சித்திரவல்லி எனும் ஒரு பெண் மகவையும், அனகன், சனகன் எனும் இரு ஆண் மகவையும் பெற்றார். இவ்வாறே மற்றைய வீரர்களும் தத்தமது மனைவியர்களிடத்து ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றெட்டு ஆண் மகவையும், பல பெண் மகவையும் பெற்றார்கள். இவர்களோடு அனகன், சனகன், ஆகிய இருவரும் சேர மொத்தம் ஆயிரத்துத் தொள்ளாயிரவர்'' ஆவர். ''தில்லை மூவாயிரவர்'' என்பது போல் இவர்கள் ''ஆயிரத்துத் தொள்ளாயிரவர்'' என்க. இம்மக்கள் ஆயிரத்துத் தொளாயிரவரும், இலக்கத்தொன்பதின் மரும் முசுகுந்த வேந்தனோடும் மண்ணுலக அரசர்களையெல்லாம் வென்று அம்மன்னனுக்குச் ''சக்கரவர்த்தி'' என்னும் சிறப்புப் பெயரையும், தாங்கள் அவனுக்குப் ''படைத்துணைவர்'' என்னும் பெரும் புகழையும் நிலை பெறச் செய்தனர்.

பின்னர் வீரவாகுத் தேவர் சிவபெருமான் ஆணையின்படி தம்மகள் சித்திரவல்லியை முசுகுந்தச் சக்கரவர்த்திக்குத் திருமணம் செய்து கொடுக்க, அவ்விருவர்க்கும் ''அங்கிவன்மன்'' என்னும் ஒரு நற்புத்திரன் தோன்றினான்.

செங்குந்த அரசு:

முசுகுந்தனும் வீரவாகு தேவர் முதலியவர்களும் தாங்கள் இனி இம்மண்ணுலகில் இருத்தல் கூடாது, முருகக் கடவுளின் திருவடிகளை அடைதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து அதற்கும் முன்னாக அங்கிவன்மனைக் கருவூர்க்கரசனாகவும் வீரவாகுவின் மகனாகிய அனகனை காஞ்சிபுரத்திற்கரசனாகவும் முடிசூட்டி அரசாட்சியை ஒப்படைக்க வேண்டும் என்றும் கருதினார்கள். அவ்வாறே ஒரு நல்ல நாளில் காஞ்சிபுரத்தில் அனகனுக்கும், கருவூரில் அங்கிவன்மனுக்கும் முடிசூட்டிச் சிறப்பித்தனர்.

வீரவாகுத்தேவர் முதலிய நவ வீரர்களின் மக்களாகிய அனகன், சனகன் உள்ளிட்ட ஆயிரத்துத் தொள்ளாயிரவருள் அனகன் அரசனாக வீற்றிருக்க, மற்றவர் அவனுக்குத் துணைவர்களாக இருந்து செங்குந்தப் பேரசு ஒன்றை நிறுவினர். அவ்வரசுக்குத் தலைநகராக காஞ்சிபுரம் என்னும் மகாநாடும், திசை நாடுகளாக கிழக்கே சிவபுரம், தெற்கே தொந்திபுரம் மேற்கே விரிஞ்சிபுரம், வடக்கே சோளிங்கபுரம் என்னும் நான்கு நாடுகளும், ஒவ்வொரு நாட்டிற்கும் பதினேழு, பதினேழு கிளை நாடுகளாக மொத்தம் எழுபத்திரண்டு கிளை நாடுகள் அமைந்து சிறந்து விளங்கின. அந்த எழுபத்திரண்டு நாடுகளிலும் சனகன் முதலிய செங்குந்தத் தலைவர்கள் சிற்றரசர்களாக இருந்து செங்குந்தப் பேரரசை நிலைபெறச் செய்தனர். (எழுபத்திரண்டு கிளைநாடுகளின் விவரம் இக்கட்டுரையின் இறுதியில் இணைக்கப் பட்டுள்ளது)

குந்தப்படை பற்றி

இனி உமாதேவியார்தான் நவவீரர்கட்குக் குந்தப்படையைத் தந்தனர் என்தை ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபதில்,

''ஆதிநாள் உமையவள்
அளித்த குந்தமே''
- (பாட்டு-26)

''வலம்பிரி யாத செவ்வேட்
குறுதுணை யாக மண்ணுட்
குலம்பெற வந்தா ரென்றங்
கொடியுமை தந்த ஈட்டி''
- (பாட்டு - 16)

மேலும் அக்கூத்தர் பிரானே அந்நூலில், குந்தப் படையின் சிறப்பை,

''பூமாலை கடப்பம் தாமம்
பூண்மணித் தெரியல் செய்ய
பாமாலை தன்னைக் கைகொள்
முதலியர் பங்கதாக்கி
மாமாலை யொல்லார் காலில்
வழிதுழிக் குடரின் மாலை
தேமாலை யாகச் சூடுங்
செங்குந்தம் போலு முண்டோ?
-(பாட்டு 43)

என்ற பாட்டாலும், முருகக் கடவுள் கையில் வேற்படையும், நவவீரர் பெற்ற குந்தப் படையும் வேறல்ல என்றும், சான்றோர்கள் எப்படி சிவன் வேறு, மால் வேறு என்று பிரித்து வணங்கமாட்டார்களோ, அத்தன்மைபோல் முருகவேள் தாங்கிய வேல் வேறு நவவீரர் தாங்கிய குந்தம்

அவ்வியர்வையினின்றும், இறைவனின் திருவருளால் ஓர் இலக்கம் வீரர்கள் தோன்றினார்கள். பின்னர் நெடுங்காலம் அந் நவசக்திகள் கருவுற்ற நிலையிலேயே இருந்து நந்தி கணத் தலைவர்களேயே அக் கருவினுள் ஏற்றுப்பாரம் தாங்காமல் வருந்த, சிவபெருமான் அது கண்டு உமா தேவியிடம் கூற உமாதேவியும் மனமிரங்கி அருள் செய்ய, அந்நவசக்திகள் ஒவ்வொருவரும் ஒரு காளை போன்ற வீரரை உந்தியின் வழியாகப் பெற்றெடுத்தார்கள். அந் நவ வீரர்களின் தலைவர்தாம் வீரவாகு தேவர். அந் நவ வீரர்கட்கும் உமா தேவியார் தனித் தனியாகக் 'குந்தம்' ஒன்று கொடுத்து வாழ்த்தினர். சிவ பெருமான் அவர்கள் அனைவர்க்கும் தனித்தனியாக வாள் ஒன்றும் கொடுத்து, நவவீரர்களே! நீங்கள் ஓரிலக்கம் மைந்தர்களோடும் கூடி நாம் தோற்றுவித்துள்ள ஆறுமுகக் கடவுளுக்கு நீங்காதத் துணைவராகப் பணி செய்து வாழ்வீர்களாக'' என்று பணிந்தருளினார்.

கந்தவேளும் நவவீரர்களும்:

பின்னர் சிவபெருமான் உமாதேவியாரை அழைத்துக் கொண்டு சரவணப் பொய்கையை அடைய, அங்கே அறுமுகக் கடவுள் ஆறுதிருவுருவங்களாய் தாமரை மலர்களில் இருக்க, அவ்வாறு திருமுகங்களையும் உமாதேவியார் தன்னிரு கைகளாலும் அன்போடு எடுத்துத் தழுவ, அவ்வாறு திருவுருவங்களும் ஒன்று சேர்ந்து, ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் சேர்ந்த ஒரு திருவுருவாக மாறியது. அவ்வறுமுகக் கடவுளை உமாதேவியார் மார்போடணைத்து, உச்சி மோந்து, பாலூட்டி வளர்த்து மகிழ்ந்திருந்தனர்.

அம்முருகக் கடவுளை முன்கூறிய இலக்கத்தொன்பது வீரர்களும் அடைந்து அவர் பணித்த கட்டளைகளை ஏற்று பற்பல வீரச் செயல்களைப் புரிந்து வாழ்ந்திருந்தனர்.

முருகக் கடவுள் சூரபன்மன், சிங்கமுகன், தாரகாசூரன் ஆகியோர்களை, நவவீரர் துணை கொண்டு வதம் செய்து தேவர்கட்கெல்லாம் வாழ்வு தந்து, தெய்வானையையும், வள்ளியம்மையையும் திருமணம் கொண்டு கந்தவெற்பில் இனிதிருந்தார்.

முசுகுந்த சக்கரவர்த்தி:

அக்காலை முசுமுகச் சோழன் என்பான் வசிட்ட முனிவர் அறிவுரைப்படி முருகக் கடவுளையடைய 'சஷ்டி' விரதத்தை முறைப்படி நோற்று காத்தச் சிறப்பால், முருகக் கடவுள் அவனது முருக பக்தியை மெச்சித் தம் நவவீரர்களோடும் மயில்மீது வந்து காட்சி தந்து ''உனக்கு வேண்டியவற்றைக் கூறுவாய்'' என்றருள முசுமுகச் சோழன் அறுமுகக் கடவுள் திருவடிகளிற் பணிந்து, ''நான் என் முன்னோர்களைப் போல சக்கரவர்த்திப் பதவி பெற்று பூமியிலே வாழ இவ்வீரவாகுத் தேவர் முதலிய துணைவர்களை அடியேனுக்கு உறவினர்களாகவும், படைத் துணைவர்களாகவும் தந்தருள வேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

முருகக் கடவுள் அது கேட்டு நவவீரர்களைப் பார்த்து ''நீங்கள் யாவரும் இவ்வரசன்பாற் சென்று சிலகாலம் இவன் உறவினர்களாயும், படைத்துணைவர்களாயும் இருக்கக் கடவீர்கள்'' என்று பணித்தருளினார்.

வீரவாகுத் தேவர் முதலியோர் முருகக் கடவுள் திருவடிகளைப் பணிந்து ''எங்கள் முதல்வனே உங்கள் ஏவலின் கீழ் சூரபன்மன் முதலிய அசுரர்களை எல்லாம் ஒழித்து வெற்றி கொண்டிருக்கும் நாங்கள் இம்மானிட அரசரை அடைந்து அவரால் பணிக்கப்படும் தொழில்களைச் செய்ய மாட்டோம்'' என்று கூறி மறுத்தனர்.

செங்குந்தர் மரபு

இம் மறுப்புரையைக் கேட்ட முருகக் கடவுள் கோபமடைந்து ''வீரர்காள்! நீங்கள் நமது கட்டளையை மறுத்ததனால், இதுவே காரணமாக நீங்கள் யாவரும் மானிட வடிவினராகி இவ்வேந்தன்பால் சேனைகளாக இருந்து காலத்தினைக் கழிக்கக் கடவீர்களாக'' என்று கூற, அப்போதே அந் நவவீரர்களும் மானிட வடிவமடைந்தனர். அவர்களைப் பார்த்து செவ்வேள் குமரன், 'நமது' துணைவர்காள், நாம் பணித்த வண்ணமே சில காலம் இம் மானிட வடிவினராய் செங்குந்த மன்னர் என்னும் பெயரோடு, இவ்வேந்தனின் சேனைத் தலைவராகி, உங்கள் பரம்பரையை மண்ணுலகில் பெருக வைத்து, பின்னர் நம்மை நோற்று தேவர் வடிவாகி நம்பால் வரக்கடவீர்களாக'' என்று பணித்தருளி, முசுமுகச் சோழனைப் பார்த்து, ''சோழனே! இவ்வீரர்கள் குந்தப் படையினைக் கையிற் கொண்டு உன் சேனைகளுக்குக் காப்பாளர்களாக இருப்பார்களாதலால், இதுமுதல் இவர்கட்கு 'செங்குந்த மன்னர்' என்றும் சேனைத் தலைவர் என்றும் பெயர் வழங்குக. இவர்களை நீ உனக்குற்றத் துணைவர்களாகவும், உறவினர்களாகவும் கலக்கப் பெறுதலால் நின் பெயரோடு இவர்கள் படைப் பெயரும் கலந்து இனி 'முசுகுந்தன்' என்று உன்

2. செங்குந்தர் மரபு - விளக்கம்

தொகுத்தவர்: செ. தெட்சிணாமூர்த்தி

செங்குந்த குலத்தினர் கயிலாய மரபினராவர். நந்தி கணவமிசத்தவர்; என்றும் உப சுப்பிரமணிய மரபினர் என்றும் கூறுவதுண்டு. நம் மரபினர் சிறப்புக்களை எல்லாம் பற்றிக் கந்தபுராணம், பிரமாண்ட புராணம், திருவாரூர் லீலை, ஏழாயிரப் பிரபந்தம், வல்லான் காவியம், ஈட்டி எழுபது போன்ற புராண வரலாற்று இலக்கியங்கள் விரிவாகக் கூறுகின்றன.

செங்குந்தர்:

செங்குந்தர் என்னும் சொல்லுக்குச் செம்மை பொருந்திய குந்தப் படையுடையவர் என்பது பொருளாகும். குந்தம் என்பதும் வேல் என்பதும் ஒன்றே.

இறைவன் அருள்:

முன்னொரு காலத்தில் சிவபெருமான் உமாதேவியாரோடு கயிலாயத்தில் வீற்றிருந்தபோது சூரபன்மன், சிங்கமுகன், தாரகாசூரன் போன்ற அசுரர்கள் இழைத்த கொடுமைகளைத் தாங்கமாட்டாமல் அல்லற்பட்டு, ஆற்றாது திருமால், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்கள் எல்லாம் ஒருங்குகூடி அவரைக் காண வந்தனர். அவர்கள் எல்லாம் இறைவனை வணங்கி வாழ்த்தி, ''எம்பெருமானே! நாங்கள் எல்லாம் சூரபன்மன் முதலிய அசுரர்கள் இழைத்துவரும் கொடுமைகளால் நாளும் வருந்துகின்றோம். இனி எங்கள் வருத்தமெல்லாம் தீர தேவரீர் அருளியவாறு ஒரு திருக்குமாரரை தந்தருள்க'' என்று விண்ணப்பம் செய்தனர்.

சிவபெருமான் அவர்களை நோக்கி ''நீவிர் இனி வருந்தாது ஒழிமின். யாம் ஒரு புதல்வனைத் தருவோம்'' என்று திருவாய் மலர்ந்தருளி, தமது பழைய ஆறு முகங்களைக் கொண்டு அத்திருமுகங்களின் நெற்றிக்கண் தோறும் ஒவ்வோர் தீப்பொறியைத் தோற்றுவித்தருள அவ்வாறும் தேவர்களும் நெருங்கவொண்ணா வெம்மையை உடையனவாய் உலகெங்கும் பரந்தன. அத்தீப்பொறிகளின் வெம்மையைக் கண்டு அவர் அருகில் வீற்றிருந்த உமாதேவியாரும் அஞ்சி, உளங்கலங்கி தமது திருக்கோயிலினுள்ளே ஓடினார். அவ்வாறு அவர் ஓடியபோது அவரது திருவடிகளை அணி செய்த சிலம்பின் மணிகள் ஒன்றோடொன்று மோதி ஒன்பது மணிகளைச் சிந்தின.

முருகக் கடவுள் தோற்றம்:

சிவபெருமான் பின்னர் ஒரு திருமுகம் கொண்டு அந்த ஆறு தீப்பொறிகளையும் அருகிலழைத்து வாயு தேவனையும், அக்கினி தேவனையும் நோக்கி ''நீங்கள் இருவரும் இப்பொறிகளைக் கொண்டு போய்ச் சரவணப் பொய்கையில் சேர்ப்பீர்களாக'' என்று பணித்தருள, வாயு தேவன் அவற்றின் வெம்மையைத் தாங்க இயலாமையால் அக்கினி தேவனிடம் கொடுக்க அவனும் தாங்கமாட்டாமையால் கங்கையில் கொண்டுவிட கங்கை அவற்றைச் சரவண பொய்கையில் கொண்டுபோய்ச் சேர்த்தது. அப்பொய்கையில் அவ்வாறு பொறிகளும் ஆறு ஆண்குழந்தைகளாய்த் தாமரை மலர்களில் 'திருவவதாரம்' செய்தன. கார்த்திகை மகளிர் அறுவர் அக்குழந்தைகளைப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்தனர்.

நவசக்திகள்:

முன் தீப்பொறிகளின் வெம்மைக்கு ஆற்றாது ஓடிய உமாதேவியார் மீண்டும் சிவபெருமான் முன்னர் வர, அவர் சிலம்பினின்றும் உதிர்ந்த நவரத்தினங்களிலும் அவரது திருவுருவம் தெரிய அவ்வுருவங்களைச் சிவபெருமான் ''வாருங்கள்'' என்றழைக்க ஒவ்வொரு ரத்தினத்தின்றும் ஒவ்வோர் சக்தியாக நவசக்திகள் தோன்றினார்கள். அந்நவசக்திகளும் பெருமானிடத்தே விருப்பம் வைத்தமையால், இருடிப் பத்தினிகளைப் போல அப்போதே கருவுற்றார்கள். இதனைக் கண்ட உமாதேவியார் அந்நவசக்திகள் மீது கோபம் கொண்டு ''நீங்கள் இங்கு எமக்கு மாறுபட்டு நடந்தமையால் நீங்கள் பல காலம் இக்கரு வெளிப்படாமல் இருக்கக் கடவீர்களாக'' என்று சாபமிட்டார்.

நவவீரர் தோற்றம்:

அச்சாபத்தைப் பெற்ற நவசக்திகளும் அஞ்சி, நடுங்கி உடல் வியர்த்தார்கள்.

நிறுத்தினார். அத்தகைய அறச்செயலுக்குத் துணை நின்றவர்கள் வீரவாகு உள்ளிட்ட நவ வீரர்கள்.

மேலும் சோழ மன்னர்களுக்கும் புலிச் சின்னம் கொடிச்சின்னமாக விளங்கியிருந்தது. நமது முன்னோர்களாகிய நவ வீரர்கள் முசுகுந்த சோழ மன்னனுக்கு படைத் துணைவர்களாகவும் உறவினர்களாகவும் விளங்கி, அம்மன்னனை 'சக்கரவர்த்தி' எனும் நிலைக்கும் உயர்த்தியவர்கள். முசுகுந்தனின் மகனும், வீரவாகு தேவரின் மகள் (சித்திரவல்லி) வயிற்றுப் பெயரனும் ஆகிய அங்கிவன்மனும், வீரவாகு தேவர்க்கு புட்பகந்தியிடத்துத் தோன்றிய மகன் அனகனும் முறையே கருவூரிலும் காஞ்சிபுரத்திலும் அரசு வீற்றிருந்து பேரரசு நடாத்தியுள்ளனர்.

இவ்வாறு செங்குந்தர் மரபு, சோழ மரபு ஆகிய இரண்டிற்கும் புலிக்கொடி உரியதாய் இருந்தது. இதனை 'ஈட்டி எழுபது' எனும் நூலில் ஒட்டக்கூத்தர்,

''கலிக்குறும் படுவள வனுக்குங் காதுசூர்
வலிக்குறும் படுதனி வாகைக் குந்தர்க்கும்
பலிக்குநற் புகழெலாம் பாதி யாதலாற்
புலிக்கொடி மரபிரண் டினுக்கும் போந்த
தால்''
(பாட்டு எண் 37)

என்று சிறப்பித்துப் பாடுகிறார். மேலும் இக்கருத்தினையே,

''சோழன் மரபினுக்குச் சொல்லத் தகுந்தகுமே
வாழும் புலிக்கொடியை வையகத்தில் - சூழுறவால்
குந்தன் மரபினுக்குங் கூறத் தகுந்தகுமே
அந்தக் கொடியினையே யாம்''

என்னும் இவ்வெண்பாவும் போற்றிச் சிறப்பிக்கின்றது.

எனவே புலிச்சின்னம் நாம் முருகவேளிடத்துப் பெற்ற பரிசுப் பொருள்; அன்றியும் செங்குந்தர், சோழர் எனும் இரு மரபுக்கும் உரிய சின்னம். நாமும் முற்காலத்தில் அரசச் செல்வத்தைப் பெற்று இந்த அவனியை ஆண்டவர்கள். இக்குறிப்புக்களையும் கொண்டே நாம் நமது கொடியில் புலிச்சின்னத்தையும் பொறித்துள்ளோம்.

வெண்மை நிறம்:

கொடியின் நிறம் வெண்மை. வெண்மை என்பது தூய்மையைக் குறிக்கும். கலைமகள் 'வெள்ளைக் கலையுடுத்து வெண்டாமரையில் வீற்றிருப்பவள்' என்று கவிஞர்களால் பாராட்டப் பெறுகிறார்.

சிவபெருமான் வெண்ணீறு அணிந்த மேனியனே. எனவே நாம், உடலில் தூய்மையும், உள்ளத்தில் தூய்மையும் ஆன்மாவில் தூய்மையும் கொண்டு விளங்க வேண்டும் என்பதை அறிவுறுத்தவே நமது கொடியை வெண்மை நிறத்தில் தேர்ந்தெடுத்துள்ளோம்.

நமது கடமை:

நமது இக்கொடியை நாம் போற்றி வணங்குதல் வேண்டும். நமது சங்கக் கூட்டங்களும், மாநாடுகளும் விழாக்களும் நடைபெறுகின்றபோழ்து, நம்மவரில் ஒருவர் இக்கொடியை ஏற்றி வைத்த பின்னரே, மற்றைய நிகழ்ச்சிகள் நடைபெறுதல் வேண்டும். கொடியை ஏற்றியதும் கொடிக்கு முன்னாலேயே நாம் அனைவரும் ஒழுங்குற நின்று ஓர் உறுதிமொழி எடுததுக்கொள்ளுதலும் நன்று.


சினம் மிகவும் தீயது. ஒருவன் பொன்னையும் பொருளையும் நிலபுலன்களையும் ஆடுமாடுகளையும் மனைவி மக்களையும் காக்கவில்லையானாலும் தன்னைக் காக்க வேண்டும். தன்னைக் காக்க வேண்டுமானால் சினத்தைக் காக்க வேண்டும். கோபம் பாபத்துக்கு அஞ்சாது. சினத்தால் மனத்தில் மயக்கம் வரும். செய்வன தவிர்வன தெரியாது. பேச்சு வரம்பு கடந்து விடும். இத்தகைய சினம் ஆறுதல் வேண்டும். அது ஆறுவதற்கு மூன்று வழிகள் உண்டு.

1. சினம் வந்தால் உடனே கண்ணாடியை எடுத்துப் பார். உன் முகம் உனக்கே பார்க்கச்சகிக்காது.
2. எங்கே சினம் வருகின்றதோ? அந்த இடத்தை விட்டு அப்புறம் போக வேண்டும்.
3. எந்தப் பொருளிலும் ஆசை வைக்கக் கூடாது. ஆசையால்தான் கோபம் வருகின்றது.

—வாரியார்

V. செங்குந்தர் மாண்பு

1. நமது கொடி வரலாறு



நமது கொடி

நமது செங்குந்தர்க்குரிய கொடி, வெள்ளை நிறத் துணியில் நடுவே குந்தப் படையும், அதன் வலப்புறம் சேவலும், இடப்புறம் புலியும், சின்னங்களாக அமைந்து பட்டொளி வீசி பறக்கக் காணலாம். கொடியின் இச்சின்னங்களும், நிறமும் நம் மியக்கத்தின் குறிக்கோள்களை தெற்றென விளக்குவன. அவற்றை நாம் ஒவ்வொருவரும் அறிந்து அக்கொடியை நம்முயிரே போல வணங்கிப் போற்றுதல் நமது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

குந்தச் சின்னம்:

குந்தம் என்பது ஈட்டி. அது முற்காலத்தில் நமது முந்தையோர்களான கயிலாயப் பரம்பரையில் வந்த, வீரவாகு தேவர் உள்ளிட்ட நவவீரர்கள் கைகளில் திகழ்ந்து சூரபன்மன், சிங்கமுகன், தாரகாசுரன் முதலிய அசுரர்களை அழித்தும், பிற வேந்தர்களை வென்றும், முருகவேளின் அன்புக்குப் பாத்திரமான முசுகுந்தச் சோழனை சக்கரவர்த்தியாமாறு உலகெங்கும் வலம் வந்து எதிர்த்தவர்களையெல்லாம் அழித் தொழித்த வீரமும், நிறைந்த சிறப்பினையுடையது. உமையம்மையால் நவவீரர்களுக்கும் கொடுக்கப்பட்டது. எனவே நாம் வீரவாகுத் தேவர் வழிவந்தோர் என்பதையும், கயிலாயப் பரம்பரையினர் என்பதையும் விளக்குவதற்காக இக் குந்தச் சின்னம் நம் கொடியில் நடுநாயகமாக விளங்குகின்றது.

சேவற் சின்னம்:

சேவல் என்பது பறப்பனவற்றுள் ஆண் பாலைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல். ஆனால் இங்கு நாம் கோழிச் சேவலைக் குறிப்பிடுகின்றோம். கந்தவேள் சூரபத்மனைக் கொல்வதற்காகத் தம் வேலாயுதத்தை அவன் மேல் எறிய அவன் அவ் வேலுக்கு அஞ்சியோடி கடலுக்குள் சென்று, மாமரமாய் நிற்க, அவ்வேல் அம் மரத்தை இரண்டாகப் பிளந்தது. மரத்தின் ஒரு பகுதி கோழிச் சேவலாகவும் மறு பகுதி மயிலாகவும் மாறி முருகக் கடவுளை நோக்கிச் சீறி பாய்ந்து வந்தன. முருகன் அவ்விரண்டையும் பார்த்து தம்மருட் கண்களால் திருக்குறிப்புக் காட்ட, அவை சீற்றமடங்கி அவரருகில் வந்து நின்றன. வந்ததும் மயிலின் மீது தான் அமர்ந்து கொண்டு, சேவலை நோக்கித் தம் கொடியில் ஏறி அமர்ந்து கொள்க என அவ்வாறை அச்சேவல் ஏறி அமர்ந்தது. அதனாலேயே முருகக் கடவுள் 'சேவற் கொடியோன்' எனப்பட்டார்.

சேவல் முருகவேள் கொடியின் சின்னம். நாம் முருகவேளின் தம்பிமார். எனவே இச்சேவல் நமக்குரியதாயிற்று.

புலிச்சின்னம்:

சூரபன்மனுக்குரியது புலிக்கொடி. முருகக் கடவுள் அவனை வென்றதும், தாம் அவனை வெல்வதற்குத் துணை செய்த வீரவாகு தேவருக்கு அச்சூரனின் புலிக்கொடியை பரிசாக அளித்தார். நாட்டில் அறத்திற்கு அழிவு நேர்கின்றபோது தெய்வம் தலையிட்டு அறத்தை நிலை நிறுத்தும். அதன்படி சூரபன்மன் முதலிய அசுரர்கள் ஆட்சியால் நாட்டில் அதர்மம் தலைதூக்கி நின்றபோது, முருகக் கடவுள் அவ்வதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை

3. செங்குந்தர் நீதி முறை

A. துரைசாமி, B.A., B.L.
வழக்கறிஞர், சேலம்

உலகில் மனிதன் ஒற்றுமையாக வாழ நீதி நெறியும் முறையானதென்று அமைய வேண்டுவது இன்றியமையாத தொன்றாகும். செங்குந்தரின் மேம்பாடுகளுக்கு அவர்களின் நீதி முறை செம்மையான தொன்றாக இருந்ததும் ஒரு காரணமாகும்.

செங்குந்தர்களின் குலத்தொழில் ஆதி காலந்தொட்டு நெசவுத் தொழில் என்பது யாவரும் அறிந்ததே. நெசவுத்தொழிலில் ஈடுபட்டிருந்த செங்குந்தர்களுக்கு அவர்களின் பொது இடமாக அமைந்தது பாவடியாகும். பாவடி என்பது பாவு செய்யும் பரவலான இடம். தினசரி காலையில் பாவு செய்ய மேற்படி இடம் பயன்படும். பிறகு ஒவ்வொரு பொது நிகழ்ச்சிகளையும் அங்கு செய்து வருவர். பாவடியே செங்குந்தரின் வாழ்க்கைக்கு உயிர்நாடி. அத்தகைய பாவடியில் அமர்ந்து பொது மக்கள் அனைவரும் சேர்ந்து கலந்து பேசி முறையான ஒரு முடிவையே ஒவ்வொரு சிறு தகராறுகளிலும் பெரு வழக்குகளிலும் முடிவு செய்வர். செங்குந்தர்கள் தங்களுக்குள்ளேயே அவ்வாறான வழக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ஒரு நெறி முறையையே வகுத்திருந்தனர். தற்போதுள்ளது போல் அவர்களும் நீதியை முறையாகக் கையாண்டனர். அத்தகைய நீதிமுறையைக் காண்போம்.

செங்குந்தர் நீதிமுறைக்குத் தக்கபடியும் வாழ்க்கை முறைக்குத் தக்கபடியும் ஊர், மேலூர், நாடு, மேல் நாடு, மகா நாடு, என்று ஐந்து பிரிவாகக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு ஊரிலும் ஊர்க்காரியங்களைக் கவனிக்கவும் நீதி செலுத்துவதற்கும் குடிமகன், காரியக்காரர், பெரிய தனக்காரர், நாட்டாண்மைக்காரர் என்பார் உளர்.

ஊர் நியாத்தில் கலந்துகொண்டு தன் கருத்தைத் தெரிவிக்க ஒவ்வொரு வயது வந்த குடிமகனுக்கும் உரிமையுண்டு.

குடிமக்களில் திருமாணமானவர்கள் காரியக்காரராகத் தேர்ந்தெடுக்கப்படத் தக்கத்தகுதி படைத்தவர்கள். குழந்தைகள் பெற்று பொறுப்புள்ளவர்கள் பெரியதனக் காரர்களாகத் தேர்ந்தெடுக்கத் தக்க தகுதி படைத்தவர்கள். ஊருக்குத் தக்கபடி ஒரு ஆண்டுக்கு ஒரு முறையோ இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையோ ஊர்ப் பொதுக் கூட்டத்தில் பெரும்பாலானவர்கள் கூடி காரியக்காரர்களையும், பெரிய தனக்காரர், நாட்டாண்மைக்காரர் ஆகியவர்களையும் தேர்ந்தெடுத்து வெற்றிலைப் பாக்கு கொடுத்து நியமிப்பார்கள். அவ்வாறாக நியமிக்கப்பட்ட காரியக்காரர் காரர்களும் பெரியதனக்காரர்களும் நாட்டாண்மைக்காரர்களும் அடங்கிய ஊர்ப் பொதுமக்களின் கூட்டத்தில் ஒருவர் வழக்கு முறையிட்டால், ஊரரரால் நியமிக்கப்பட்ட சங்கோதி என்றழைக்கப் படும் பொது ஊழியர் எதிர் பரப்பார் - பிரதிவாதியிடம் சென்று இன்னார் அவர் பேரில் வழக்கு தொடர்ந்திருக்கிறார் என்று அறிவித்து மேலும் குறிப்பிட்ட காலத்தில் அந்த வழக்கு குறித்து நியாயம் பேசி முடிவு செய்ய ஊர்க்கூட்டம் கூட இருப்பது பற்றியும் அறிவித்து ஊரிலும் பாவடிகளிலும் கூவி பறை சாற்றி விடுவார் குறித்த தேதியில் ஊர்க்கூட்டம் கூடியபின் அக்கூட்டத்தில் பெரியதனக் காரர்கள், காரியக்காரர்கள், குடி மக்கள் சங்கோதி ஆகியவர்கள் முன்னிலையில் வாதியும் பிரதி வாதியும் அவரவர் வழக்கு விவரத்தை முறையிடலாம். பின்னர் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டுத் தீர்ப்பு கூறப்படும். தீர்ப்பில் வாதி பிரதிவாதிகள் பேரில் கூறப்படும் அபராதமோ அல்லது தண்டனையோ கடுமையானதாக தென் பட்டால் அவர்கள் ஊர் பொதுமக்கள் முன்பு மேற்படி தண்டனை என்னால் தாங்க முடியாது, சற்று குறையுங்கள் என்று மிகவும் வணக்கத்துடன் கேட்டுக் கொண்டால் அவர்கள் மீண்டும் கலந்து ஆலோசித்து தண்டனையையோ அபராதத்தையோ குறைத்து மறுதீர்ப்பு வழங்குவதும் உண்டு. அப்படி அபராதத்தைக் குறைக்கும்படி கேட்டுக் கொள்ளுவதற்குச் சபையைக் கண்டு கொள்ளுதல் என்று பெயர்.

அந்தப்படி கூறப்படும் தீர்ப்பின் பேரில் அப்பீல் செய்துகொள்ள தீர்ப்பினால் பாதிக்கப் பட்டவருக்கு உரிமை உண்டு. அவர் அப்பீல் செய்து கொள்ளும் உரிமையை அப்போதே (முடிவு சொன்ன அப்போதே) தெரிவித்துக் கொள்ளுதல் மேவுதல் என்றழைக்கப்படும்.

சிறிது சிக்கலான வழக்காக இருப்பின் மேலூர்க்காரர்களையும் முறைப்படி அழைத்து மேலூர் காரியக்காரர், பெரியதனக்காரர்கள், அனுபவமிக்க குடிமக்கள் ஆகியவர் களையும் வைத்துக்கொண்டு நியாயம் பேசி முடிவெடுத்தலும் (தீர்ப்புக்கூறுதல்) உண்டு.

மேற்படி தீர்ப்பின் பேரில் குறிப்பிட்ட காலாவதிக்குள் அந்த ஊர் எந்த நாட்டின் கீழ் உள்ளதோ அந்த நாட்டில் சங்கோதி, காரியக்காரர், பெரியதனக்காரர், நாட்டாண்மைக்காரர் ஆகியவர்களிடம் முறையிட்டு அப்பீல் விசாரிக்கச் செய்ய வேண்டியது. பிறகு நாட்டிலிருந்து அப்பீல் பிரதிவாதிக்கும் தீர்ப்பு கூறிய ஊருக்கும் சங்கோதி மூலம் அறிவிப்பு கொடுக்கப்படும். அதன் பிறகு சம்பந்தப் பட்ட ஊர், மேலூர் முதலியவைகளின் பிரதிநிதிகளையும், மற்றும் அந்த நாட்டின் கீழ் உள்ள ஊர் பிரதிநிதிகளையும் அழைத்து குறித்த தினத்தில் நாடு கூடும். அந்த நாட்டில் அப்பீலுக்குச் சம்பந்தப் பட்ட தீர்ப்பின் வழக்கு பற்றி ஆதிமுதல் கேட்கப்பட்டு விசாரித்து நாட்டில் தீர்ப்பு கூறப்படும்.

நாட்டின் தீர்ப்பில் ஏற்பட்ட முடிவுபடி அந்த நாட்டின் கீழுள்ள அனைத்து கிராமங்களிலும் அதே போன்ற வழக்குகளில் அதே போன்ற முடிவு அமுலுக்கு வரும்.

நாட்டின் தீர்ப்பை முடிவானதாக ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் மகாநாட்டுக்கு அப்பீல் செய்ய பாதிக்கப்பட்டவருக்கும், நாட்டுத் தீர்ப்பு ஊர்த் தீர்ப்பை மாற்றியிருந்தால் முதல் தீர்ப்பு வழங்கிய ஊருக்கும் உரிமையுண்டு.

நாட்டில் நியாயம் பேசுவதானால் சிக்கலான வழக்குகள் மேல் நாடுகளையும், மற்ற சக நாடுகளையும் கலந்தோ அல்லது அவற்றின் பிரதிநிதிகளையும் அழைத்தோ நியாயம் பேசி முடிவு செய்து தீர்ப்பு கூறுவதும் உண்டு.

நாட்டின் தீர்ப்பின் பேரில் அப்பீல் செய்து கொள்வதென்றால் தீர்ப்பினால் பாதிக்கப்பட்டவர்கள் மேவுதல் கேட்டுப் பெற வேண்டும். குறிப்பிட்ட கால வரையறைக்குள் மகாநாட்டுக்கு அப்பீல் செய்துவிடவேண்டும்.

மகாநாட்டுக்கு ஒவ்வொரு ஊரிலிருந்தும் நாட்டிலிருந்தும் பிரதிநிதிகள் உண்டு. மகாநாட்டுக்கும் காரியக்காரர்கள், பெரியதனக்காரர்கள். நாட்டாண்மைக்காரர்கள் உண்டு.

மகாநாட்டில் நியாயம் கொடுத்துவிட்டால் இரு பார்ட்டிகளுக்கும் தீர்ப்புக்குச் சம்பந்தப்பட்ட ஊருக்கும் நாட்டுக்கும் முறைப்படி தெரிவித்து ஒரு குறிப்பிட்ட தினத்தில் மற்ற ஊர் பிரதிநிதிகளும் நாட்டுப் பிரதிநிதிகளும் அடங்கிய மகாநாட்டுக் கூட்டத்தில் மீண்டும் மேற்படி வழக்கும், ஊர்த்தீர்ப்பும் நாட்டுத் தீர்ப்பும் விவாதிக்கப்பட்டு ஆராயப்பட்டு தீர்ப்பளிப்பார்கள் அத்தகைய மகாநாட்டுக் கூட்டத்திற்கு மற்ற மகாநாட்டுப் பிரதிநிதிகளும் அழைக்கப்படலாம்.

மகாநாட்டின் தீர்ப்புகளும், அனுசரிக்கப்பட்ட முறைகளும் அதன் கீழுள்ள நாடுகள் ஊர்கள் ஆகிய அனைத்திலும் பின்பற்றப்படும்.

இவ்வாறு செங்குந்தர்கள் தங்களுக்குள் ஏற்பட்டு வந்த சிறு பூசல்களையும் தகராறுகளையும் மற்றெல்லா வித சச்சரவுகளையும் தீர்த்து வந்திருக்கின்றனர் என்பது இப்போதும் சில ஊர்களிலும் நாடுகளிலும், மகாநாடுகளிலும் கையாளும் முறைகளிலிருந்தும் தெரியவருகிறது. மேற்கண்ட முறைகளை நாம் பின்பற்றினால் நீதி மன்றங்களுக்குச் சென்று பல வேறுபட்ட இன்னல்களுக்கு ஆளாக வேண்டியதில்லை என்பதும் நம்முள் ஒற்றுமை வளரும் என்பதும் திண்ணம்.

விலங்குகட்கும் மனிதனுக்கும் உண்பது, உறங்குவது. உலாவுவது, மக்களைப் பெறுவது எல்லாம் பொதுவாக அமைந்துள்ளன. தெய்வ உணர்ச்சியே விலங்குகளுக்கும் மனிதனுக்கும் இடையே இட்ட எல்லைக்கல். (பிரிக்கும் நிலை)

—திருமுருக கிருபானந்த வாரியார்

5. காஞ்சிப் புராணமும் செங்குந்த மரபினரும்

வி. திருஞான சம்பந்த முதலியார், காஞ்சிபுரம்

''ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.''

சீரும் சிறப்பும் வாய்ந்த ''தெண்ணீர் வயிற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என ஔவைப்பிராட்டியார் புகழ்ந்த அற்புதத் தொண்டை நாட்டின் தலைநகராக விளங்குவது தேசமெல்லாம் புகழ்ந்தாடுங் கச்சித்'' திருநகரமாகும். இந்நகரத்தின் தெய்வீகத் தொன்மை உண்மை வரலாறுகளை விளக்கமாக எடுத்துக் கூறும் நூல் காஞ்சிப் புராணமாகும். காஞ்சி + புராணம் = காஞ்சியைப் பற்றிய பழைய வரலாறு கூறும் நூல் என்பது இதன் பொருள் காஞ்சி—ஒரு வகை மரம்.

ஒரு காலத்தில் காஞ்சி வனமாக இருந்த நிலத்தை திருத்தி நகரமாக்கி பல்வேறிடங்களிலிருந்தும் மக்களைக் கொண்டு வந்து குடியேற்றிப் பெருநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவன் கருணாகர தொண்டைமான் ஆதலின் இந்நாடு தொண்டைமான் நாடு, தொண்டை நாடெனப் பெயர் பெற்றது என்ப. சோழர்கள் ஆட்சிக் காலத்தில், தொண்டை நாடும், நடு நாடும் கிளை நாடுகளாக இருந்திருக்கின்றன. அதற்கான அடையாளங்கள் ஊர்ப் பெயர்களாகவும் நிலப் பெயர்களாகவும், கோயில்களும் இன்றும் விளங்குகின்றன. ஆகவே சோழ நாட்டிற்கும், தொண்டை நாட்டிற்கும் தொடர்பிருந்திருக்கிறது.

சைவ சமயத்தவர்கள், முப்பொருள்கள் போலவும், சிவபிரானின் முக்கண்கள் போலவும், எண்ணி மகிழத்தக்க சிவ புராணங்கள் கந்த புராணமும், திருவிளையாடற் புராணமும் பெரிய புராணமும் ஆகும். இம்மூன்று புராணங்களிலும் கூறப்பட்டுள்ள உண்மை வரலாறுகளின் சாரமே காஞ்சிப் புராணமாகும். இக் காஞ்சிப் புராணத்தின் முதற்காண்டம் திருவாவடுதுறை ஆதீனம் மாதவச் சிவஞான சுவாமிகள் இயற்றியது. இவர் கட்டளைப்படி இவரது முதன் மாணவர் கச்சியப்ப முனிவர் இரண்டாங் காண்டம் இயற்றினார். இக் காண்டத்தில் காஞ்சியைச் சேர்ந்த சிவ தலங்கள் 16,000 என்று காணப்பெறுகின்றன. இவைகள் நாளாவட்டத்தில் பல கோயில்கள் இருந்த இடமே தெரியாமல் மறைந்து இப்போது ஏறத்தாழ 270 கோயில்கள் இருக்கின்றன. இவைகளையே முதற் காண்டத்தில் மாதவச் சிவஞான சுவாமிகள் விளக்கமாகப் பல படலங்களில் கூறியிருக்கிறார்கள். காஞ்சிப் புராணத்துட் காணப்படும் சிவ தலங்கள் கீழ்க் கூறப்படும் எல்லைகளுக்குட் பட்டனவேயாகும்.

கீழ்க்கெல்லை பழைய சிவபுரம் சிவபுர நாடாகவுள்ளது. இந்நகரில் பெரும் பாகம் செங்குந்தர்கள் சிறப்புடன் வாழ்கின்றார்கள். இங்கு ஒரு சிறு குன்று இருக்கின்றது. அதன் மேல் பழைய சிவாலயம் ஒன்று சோழர்களால் கட்டப்பட்டுள்ளது. இதனாலேயே இவ்வூருக்குப் பழைய சிவபுரம் என்ற பெயர் அமைந்துள்ளது. தெற்கெல்லை சேயாற்றின் வடகரையிலுள்ள திருவோத்தூராகும். இங்கும் பெரும்பாகம் செங்குந்தர்கள் நிலக்கிழார்களாகவும், வியாபாரிகளாகவும் ஏராளமாக வாழ்கின்றார்கள். இங்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கினார். இவ்வற்புதத் தேவாரப் பதிகம் பெற்ற சிவதலம், செங்குந்த மரபினர்கள் அறங்காவலர்களாக இருந்து பரிபாலனம் செய்யப் பெறுகின்றது. மேற்கெல்லை தாமல் திருப்புக்குழியாகும். இங்கும் செங்குந்த மரபினர்கள் வளமாக வாழ்கின்றார்கள். வடவெல்லை பழைய பாலாற்றின் கரையிலுள்ள திருமாற்பேறு ஆகும். இங்கும் செங்குந்த மரபினர்களே வாழ்கின்றார்கள். இது தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலம். செங்குந்த மரபினர்களாலேயே பரிபாலனஞ் செய்யப்பெறுகின்றது. இந்நான்கெல்லைக் குட்பட்ட சிவாலயங்கள் முதற்காண்டத்தில் 67 படலங்களால் விளக்கமாகக் கூறப் பெற்றுள்ளன. இச்சிவதலங்களை,

ஆத்தூர்	முக்தீஸ்வரர் கோயில்	கைக்கோளர், கைக்கோள முதலிகளைப் பற்றிக் கூறுகிறது.
குன்னத்தூர்	திருநாகேஸ்வரர் கோயில்	கைக்கோளருக்கு பரிவட்ட மரியாதை
திருவானைக்கோயில்	திருவாலிஸ்வரர் கோயில்	கைக்கோள முதலி தானமாக நிலத்தை அளித்தல்.
புலிப்பரகோயில்	வியாகிரபுதேஸ்வரர் கோயில்	ஆண்டுக்கு ஒரு தறிக்கு 2 பணம் வரி.
திருவெண்ணைநல்லூர்	கிரிபபுரிஸ்வரர் கோயில்	இங்குள்ள கைக்கோளர்கள், சங்கு பல்லக்கினை உபயோகிக்க அனுமதித்தல்.
பிரம்மதேசம்	பிரம்புரிஸ்வரர் கோயில்	,,
திருவாமாத்தூர்	அபிராமேஸ்வரர் கோயில்	,,
நெற்குன்றம்	பாழடைந்த கோயில்	காணியாட்சி உரிமையானது 30 பணத்திற்கு கைக்கோளருக்கு விற்கப்பட்டது.
எலவானாலூர்	கிராமநாதேஸ்வரர் கோயில்	கைக்கோள முதலிபற்றியது
விருதாசலம்	விருத்திகிரிஸ்வரர்கோயில்	கைக்கோளர் கொடுக்க வேண்டிய வரி பற்றிக் கூறுகிறது.
குகையூர்	பஞ்சாட்ஷேஸ்வரர் கோயில்	கைக்கோளருக்கு நிலம் தானமாக அளிக்கப்பட்டமை.
வட ஆற்காடு		
திருவத்தியூர்	வேதபுரிஸ்வரர் கோயில்	ஆண்டுக்கு 100 பணம் வரியாக கைக்கோளர் மீது விதிக்கப்பட்டது.
வாஞர்	பிரம்மபுரிஸ்வரர்கோயில்	கோயிலின் சார்பாக கைக்கோளர் நிலத்தை வாங்குதல்.
சேலம்		
அரகல்	காமேஸ்வரர் கோயில்	கைக்கோளர் மற்றும் சிலர் கிராமத்தை அப்படியே கட்டுகுத்தகைக்குக் எடுத்து கொள்ளுதல்

சம்புவராயர் காலம்

செங்கற்பட்டு புலிப்பரக்கோயில்	வியாகிபுதேஸ்வரர் கோயில்	கைக்கோளர் செலுத்த வேண்டிய தறி வரியைக் கூறுகிறது.
திருவானைக்கோயில்	திருவாலிஸ்வரர் கோயில்	ஒரு கிராமமானது சர்வமான்யமாக கைக்கோளருக்கு அளிக்கப்பட்டது.
,,	,,	கைக்கோளர்கள் தங்கள் வரியை கோயிலில் திருவிழா கொண்டாட அளித்தனர்.

ஒய்சாலர் காலம்

குன்னத்தூர்	குன்றபுரீஸ்வரர்கோயில்	விளக்கிற்கு 12 பணம் தானமாக அளித்தமை.

ராஷ்டிரட காலம்

ஜம்பை	பாறையின் மீது	கைக்கோளர், வைகும்பர் அரசருக்கு மெய்க்காப்பாளராக இருந்ததை கூறுகிறது.

செப்பேடு (தேதி இல்லை)

தற்போது சென்னை அருங்காட்சியகத்திலுள்ளது - அரிய நாயக முதலி என்பவர் தன்னுடைய 12 வேலி நிலத்தினை சென்னை சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள ஒரு கைக்கோளரிடம் அடமானம் வைத்து 100 வராகன் பெறப்பட்டதாக கூறுகிறது.

பாண்டியர் காலம்

செங்கற்பட்டு		
திருக்கச்சியூர்	கச்சபேஸ்வரர் கோயில்	ஒவ்வொரு தறிக்கும் ஆண்டு வரி 6 பணம்
,,	,,	புண்ணியம் என்னும் கிராமத்தை கைக்கோளரும், கைக்கோள முதலிகளும் வாங்குதல்
சிறுதாவூர்	பாழடைந்த சிவன் கோயில்	கோயிலுக்கு நிலத்தை தானம் அளித்தல்
கொளத்தூர்	பாழடைந்த சிவன் கோயில்	கைக்கோள முதலி விளக்கு எரிக்க தானம்
தென் ஆற்காடு		
சித்தலிங்கமடம்	வியாகிரபாதிஸ்வரர் கோயில்	வில்வலம் ஈன்னும் கிராமத்தை வாங்கி கோயிலுக்கு தானம் ஆளித்தல்
வாரஞ்சரம்	பசுபதேஸ்வரர் கோயில்	கோயிலுக்கு கூடுதல் கட்டுமான இடங்களைச் சேர்த்தல்
வட ஆற்காடு		
இடைப்பாரை	வேதியப்பன் கோயில்	ஒவ்வொரு கைக்கோளர் குடும் பத்திற்கும் 14பணம் வரி விதித்தல்
தஞ்சை		
மனக்கால்	அகஸ்யேஸ்வரர் கோயில்	கடவுள் சிலைகளைக் கோயிலில் நிறுவுதல்
திருநெல்வேலி		
கிரியம்புரம்	அரிகேசநாதர் கோயில்	மானபூஷண தெரிந்த கைக் கோளர், அபிமானபூஷண தெரிந்த கைக்கோளர்
குத்தாலம்	குத்தாலநாத சுவாமி கோயில்	சந்திபூஜை நடத்த கைக்கோளர் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடு
சோழபுரம்	விக்கிரம பாண்டியேஸ்வரர்	கைக்கோளர் ஒருவரை கோயில் நிர்வாகியாக நியமித்தல்
சேர்மாதேவி	அம்மநாதஸ்வாமி கோயில்	அபிமானபூஷண தெரிந்த கைக் கோளர்
ராமநாதபுரம்		
திருக்கலக்குடி	கொகோளநாத குகைக் கோயில்	மேல்வாரத்திற்கு விளைநிலத்தை குத்தகைக்கு கைக்கோளருக்குக் கொடுத்தல்

விஜயநகர காலம்

செங்கற்பட்டு		
திருக்கழுக்குன்றம்	பக்தவட்சலேஸ்வரர் கோயில்	ஊருக்குள்வரும் பொருட்களுக் கும் வெளியே போகும் பொருட் களுக்கும் ஆண்டுக்கு 70 பணம் வரி
நெரும்பூர்	திருவாலிஸ்வரர் கோயில்	ஒவ்வொரு தறிக்கும் ஆண்டுக்கு 2 பணம் வரி
திருக்கச்சியூர்	மருதீஸ்வரர் கோயில்	மாதத்திற்கு தறிக்கு $\frac{1}{4}$ பணம் வரி

வசிக்கும் கைக்கோளர்கள் சங்கு மற்றும் பல்லக்கினை உபயோகிக்க அரசரால் அனுமதிக்கப்பட்டனர். அக்காலத்தில் சங்கினையும் பல்லக்கினையும் உபயோகிக்க அனுமதிக்கப்பட்டால், அது அவர்களுக்கு சமூகத்தில் அளிக்கப்படும் மரியாதையாகவே கருதப்பட்டது. கி.பி. 1485-86 ஆம் ஆண்டு இதே மரியாதையானது வழுதிளம்பட்டுராஜ்ய கைக்கோளருக்கும், கி.பி. 1503-04ல் பெண்ணை ஆற்றங்கரையில் அமைந்துள்ள மூன்று ஊர்களிகளிலுள்ள கைக்கோளர்களுக்கும், கி.பி. 1552-இல் திருவாமாத்தூரிலுள்ள கைக்கோளருக்கும் அளிக்கப்பட்டதாக கல்வெட்டுகள் கூறுகின்றன. இவ்வாறு பல்வேறு காலங்களில் சிறந்து விளங்கிய இக் கைகோளர்களின் சிறப்பு இன்றளவும் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

கைக்கோளர்களைப் பற்றிய கல்வெட்டுக்களில் முக்கியமானவை சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன

இடம்	கோயில்	கூறும் செய்தியின் சுருக்கமான குறிப்பு
	சோழர் காலம்	
செங்கற்பட்டு		
திருப்பாச்சூர்	வாசேஸ்வரர் கோயில்	தங்க ஆபரணம் தானம்
தென் ஆற்காடு		
உடையார் குடி	அநன்தீசுவர சுவாமிகள் கோயில்	முத்து பரல்களால் ஆன குடை தானம்
வட ஆற்காடு		
உக்கல்	வைத்தியநாத சுவாமி கோயில்	வீரசோழதெரிந்த கைக்கோளர் படை
தஞ்சை		
கும்பகோணம்	நாகேசுவரர் கோயில்	,,
திருவிடைமருதூர்	மகாலிங்க சுவாமி கோயில்	கைக்கோளர் பெரும்படை
,,	,,	சிங்காளந்தகதெரிந்த கைக்கோளர் படை
தில்லாஸ்தானம்	கிரிடாதானேசுவரர் கோயில்	சமரகேசரி தெரிந்த கைக்கோளர் படை
,,	,,	விக்கிரமசிங்கதெரிந்த கைக்கோளர் படை
திருப்பாலனூர்	ஆபத்சயேசுவரர் கோயில்	அருள்மொழி தெரிந்த கைக்கோளர் படை
திருவெங்காடு	சுவேதாரண்யேசுவரர் கோயில்	பார்வதிசேகர தெரிந்த கைக்கோளர் படை
,,	,,	கோயிலுக்கு தங்க ஆபரணம் தானம்
கோட்டூர்	கொழுந்தீசுவரசுவாமி கோயில்	கோதண்டராம தெரிந்த கைக்கோளர் படை
பெருங்குடி	அகஸ்தியேஸ்வரர் கோயில்	தீபம் எரிக்க 2 காசு இனாம்.
புதுக்கோட்டை		
குடுமியார்மலை	மேலைக்கோயில்	மூன்று படை பொற்கோயில் கைக்கோளர்

அளிக்கப்பட்டன. மேலும் கி.பி. 1532 ஆம் ஆண்டு கண்ணன் என்னும் கைக்கோளர் சேலத்தில் கரிவரதராஜபெருமாள் கோவிலில் புதியதாக தேர்த் திருவிழாவினை புகுத்தியதற்காக அவருக்கும் அவருடைய சந்ததியினருக்கும் ஒரு வீடும், ஒரு தறியும் சிறிது நிலமும் மற்றும் கோயிலில் சிலமரியாதைகளும் அளிக்க அக்கோயில் நிர்வாகத்தினரால் முடிவு செய்யப்பட்டது. இதேபோல் செங்கற்பட்டு குன்றத்தூரிலுள்ள திருநாகேஸ்வரர் கோயிலுக்கு தானம் செய்த ஒரு கைகோளருக்கு விஜய நகர காலத்தில் பரிவட்ட மரியாதையினை கோயிலார் அளித்து, தானம் அளித்தோரை கௌரவித்தனர்.

கைக்கோளர்கள் கோயில் நிர்வாகத்திலும் தங்களை சோழர் காலம் முதற்கொண்டே ஈடுபடுத்திக் கொண்டனர். இருந்தாலும், பாண்டியர்களது காலத்தில் கி.பி. 1573ஆம் ஆண்டு திருநெல்வேலி, சோழபுரத்திலுள்ள விக்கரம பாண்டியேஸ்வரர் கோயிலுக்கு, ஒரு கைக்கோளர் நிர்வாகியாக நியமிக்கப்பட்டார் என்பதை ஒரு கற்சாசனம் கூறுகிறது. இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் கோயில் ஸ்தானிகரோடு ஒன்றுபட்டு கோயில் செம்மையாக விளங்க வழிவகை வகுத்தனர்.

இவ்வாறு நாட்டிற்கு நற்பணி ஆற்றிவந்த கைக்கோளர்களுக்கு மன்னரது ஆசி எப்போதும் இருந்து வந்தது. உதாரணமாக கி.பி. 1601 ஆம் ஆண்டு செங்கற்பட்டு மானாமதியிலுள்ள திருக்காரீஸ்வரர் கோயில் நிர்வாகத்திலிருந்த கைக்கோளருக்கும் மற்றும் அவ்வூரில் வசிக்கும் சில வியாபாரிகளுக்கும் இடையே கோயில் நிர்வாகச் சம்பந்தமாக தகராறு ஏற்பட்டது. இதன் விளைவாக கைக்கோளர்கள் அக்கோயில் பொறுப்பு அனைத்தையும் விடுத்து அவ்வூரை விட்டே செல்ல ஆயுத்தமாயினர். ஆனால், இவ்விஷயத்தில் மன்னர் உடனடியாகத் தலையிட்டு கைக்கோளர்களை, 'ஊரை விட்டு வெளியேற வேண்டாம்' என்று கேட்டுக் கொண்டதோடு, 'வியாபாரிகள் இனி இக்கோயில் நிர்வாகத்தில் தலையிடக்கூடாது' என்றும் ஆணைப் பிறப்பித்தார். (விஜயநகர காலம்)

மற்றொரு சமயம், குடுமியாமலையிலுள்ள சிகரநாதஸ்வாமி கோயிலுக்கு மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் நிலமானது வரி நீக்கி தானமாக அளிக்கப்பட்டது. ஆனால் 125 ஆண்டுகள் கழித்து மாரவர்மன் குலசேகர பாண்டியன் ஆட்சிக்கு வந்தபோது, கோயிலாரிடம் சோழன் வரி நீக்கி தானம் அளித்த நிலத்திற்கு வரி மீண்டும் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தினான். ஆனால் இதை எதிர்த்து கோயில் நிர்வாகத்தோடு, கைக்கோளரும் சேர்ந்து ஒரு பெரிய மகாநாடு நடத்தி பாண்டிய மன்னனின் நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்தனர். இதன் விளைவாக பாண்டிய மன்னர், நிலத்தின் மீது புதியதாக விதித்த வரியினை ரத்து செய்தார்.

அக்காலத்தில் கைக்கோளர்கள் மட்டும் அல்லாது கைக்கோள முதலிகளும் இருந்துள்ளனர். இக்கைக்கோள முதலிகளைப் பற்றிய கல்வெட்டுகள் பெரும்பாலும் பாண்டிய மற்றும் விஜயநகர பேரரசு காலங்களை சார்ந்தவையாகவே காணப்படுகின்றன. 'முதலி' என்பது 'தலைவர்' (Chief) அல்லது 'பெரியோர்' என்னும் பொருளைக் கொடுக்கக்கூடியதாகும். ஆக இதிலிருந்து கைக்கோளர்கள் அரசரின் கீழ் சிறு தலைவர்களாகவும் பணியாற்றி உள்ளனர் என்பது நன்கு புலனாகிறது. இக்கைக்கோள முதலிகள் பெரியோர்கள் ஆதலால் கோவில் நிர்வாகத்திலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

கைக்கோளர்கள் அக்காலத்திலேயே தங்கள் சமூகத்தில் ஒருவித ஒற்றுமையுடன் கூடிய சமூக அமைப்பின் கீழ் வாழ்ந்ததாகத் தெரிகிறது. சமூகத்தில் தங்களைச் சார்ந்த ஒருவரைத் தலைவராக ஏற்று, அவர் கீழ் வாழ்ந்தனர். இத்தலைவர், கைக்கோளர்களின் முதல் குடிமகன் என அழைக்கப்பட்டார். அம்பாசமுத்திரம், மேலச் சேவலிலுள்ள ஆதித்யவருணேஸ்வரர் கோயிலுக்கு அவ்வூரிலுள்ள கைக்கோளர்களின் முதல் குடிகணக்காளராக நியமிக்கப்பட்டதாக கி.பி. 1506 ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று கூறுகிறது. கைக்கோளர்கள் பெரிதும் கோயிலினை ஒட்டிய பகுதிகளிலேயே வாழ்ந்தனர். கோயிலுக்கு வேண்டிய பாதுகாப்பு மற்றும் துணிகளை இவர்களே அளித்து வந்தனர். மேலும் இவர்களுக்கென தனியானதொரு வீதி மாடம்பாக்கத்தில் (செங்கல்பட்டு ஜில்லா) இருந்ததற்கான சான்றுகள் இவ்வூரிலுள்ள தேனுபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டில் உள்ளது. சில சமயம் ஒரு கிராமத்தையே கைக்கோளர்கள் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட சம்பவங்களையும் கல்வெட்டுகளின் மூலம் காணமுடிகிறது.

சமூகத்தில் கைக்கோளருக்கென தனி மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்பட்டது. காஞ்சி மற்றும் விரிஞ்சிபுரத்தில்

கோவில்களிலும் கிடைக்கின்றன. விசேஷ சந்தி பூஜைகளையும் இச்சமூகத்தைச் சார்ந்த மக்கள் பல ஆலயங்களுக்குச் செய்துள்ளனர். கி.பி. 1274ம் ஆண்டு திருநெல்வேலி, குத்தாலத்திலுள்ள குத்தாலநாத சுவாமி கோவிலில் காலாமுக்களதோழன் சந்தியும், கி.பி. 1354ஆம் ஆண்டு திருவடனையிலுள்ள ஒரு சிவன் கோவிலில் கொல்லாதேனித்தான் சந்தியும் செய்ய சில நிலங்களில் விளையும் நெல் தானமாக கொடுக்கப்பட்டது. ஒரு நந்தவனம் அமைக்க நிலமானது ஒரு கைக்கோள சேனாதிபதியிடமிருந்து வாங்கி அம்பாசமுத்திரத்திலுள்ள அம்மநாத சுவாமி கோயிலுக்கு அளிக்கப்பட்டது. இந் நந்தவனத்தில் மலர்ந்த மலர்கள் இக்கோயிலில் பல்வேறு பூஜைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன.

கோயில் திருவிழாக்களில் பங்கு:

அடுத்து, கோயில் திருவிழாக்களிலும் இம்மக்களின் பங்கு கணிசமான அளவிற்கு உள்ளது குறிப்பிடத் தக்கது. குலோத்துங்க சோழன் காலத்தில் மூன்று படைக் கைக்கோளர்கள் குடுமியாமலையிலிருக்கும் ஒரு கோயிலுக்கு ஒரு கிராமத்தையே தானமாக அளித்தனர். அதோடு தானமிட்ட கிராமத்தில், எல்லாரிடமிருந்தும் ஒரு குறிப்பிட்ட தொகையை, படையின் கணக்காளரே வசூல் செய்து, அக்கோயில் மார்கழி, மாசி, பங்குனி ஆகிய மூன்று மாதங்களில் திருவிழாக்கள் நடத்த வழிவகைகள் செய்தனர். இதே போல அளிக்கப்பட்ட ஒரு தானமானது, குடுமியாமலையிலுள்ள சிகரநாதசுவாமி கோயில் திருவிழா நடத்த வழி கோலியது. புரட்டாசி மாத திருவிழாவிற்காக 44 பணம் தானமாக அளிக்கப்பட்ட விவரம், ஆத்தூர் முத்தேஸ்வரர் கோயிலில் கிடைக்கிறது. சோழ அரசர் ராஜாதிராஜா தேவர் காலத்தில் தென் ஆற்காடு மாவட்டம், திருவறையனை நல்லழரிலுள்ள சுவாமி ஒப்பொருவருமில்லாதவர் கோயிலில் ஐப்பசி மாத திருவிழா கொண்டாட கொல்லூர் என்னும் கிராமத்திலிருந்து வசூலிக்கப்படும் வரிகள் தானமாக இவ்வூரிலுள்ள கைக்கோளர்களால் அளிக்கப்பட்டன. மேலும் கி.பி. 1532ல் சேலம், அரகல் என்னும் இடத்திலுள்ள கரிவரதராஜ பெருமாள் கோயிலில் புதியதாக தேர் செய்து ஒரு திருவிழாவினையே இச்சமூகத்தைச் சார்ந்த கண்ணன் என்பவரால் புகுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

இதுபோன்று அமைக்கப்படும் திருவிழாக்கள் சில சமயங்களில் கொண்டாடத் தவறினால், அதற்காகக் கோயில் நிர்வாகத்தினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க படை வீரர்களாகப் பணிபுரிந்த கைக்கோளர்கள் அரசருக்கு உதவி புரிந்தனர். உதாரணமாக சோமூர் என்னுமிடத்திலுள்ள ஒரு கோயிலில் முதல் ராஜராஜ சோழர் ஆட்சிக் காலத்தில் சூரிய கிரகணத்தன்று சுவாமியின் திருவீதி உலா நடத்தத் தவறியதற்காக அக்கோயிலின் நிர்வாகத்தினர் அபராதமாக ஒரு தொகையினை அரசுக்குச் செலுத்த நேர்ந்தது குறிப்பிடத்தக்கது. இந்தத் தொகையைக் கோயிலாரிடமிருந்து வசூலிக்க கைக்கோளர் படை பெரிதும் வருவாய்த் துறைக்கு உதவி புரிந்தது.

திடீரென, கோயிலைப் பழுதுபார்த்து புதுப்பிக்கத் தேவைப்படுமேயானால் இக்குலமக்கள் அதற்குப் பெரிதும் உதவி அளித்து வந்தனர். உதாரணமாக திருக்கோவிலூரில் அமைந்துள்ள மற்றொரு கோவிலான திருவிக்கிரமன் கோயிலை ஒட்டி வாழ்ந்த கைக்கோளர்கள் தறிவரிபணத்தைக் கோயிலைப் பழுது பார்க்க கி.பி. 1445 ஆம் ஆண்டு அரசர் ஆணையின் பேரில், அக் கோயிலாரிடமே செலுத்தினர். இதே போல், விழுப்புரத்திலுள்ள திருபுராந்தகேஸ்வரர் கோயிலைச் சுற்றி வாழ்ந்த குலமக்கள் கோயிலின் செலவுக்காக தாங்கள் அரசருக்குச் செலுத்த வேண்டிய வரிப் பணத்தை கோயிலுக்கே அளித்து வந்தனர்.

இம் மக்களின் தெய்வீகத் தொண்டு குறிப்பிடத்தக்கது. தஞ்சாவூர் ஆபத்சஹாயேஸ்வரர் கோயிலில் பணிபுரியும் பிராமணர்களுக்கு உதவி புரியும் பொருட்டு, அங்கு வசிக்கும் சில கைக்கோளர்கள் விளை நிலங்கள் சிலவற்றை தானமாக இப்பிராமண பெருமக்களுக்கு அளித்ததாக சோழ காலத்திய கல்வெட்டொன்று கூறுகிறது. இந் நிலங்களின் மூலம் கிடைக்கும் அனைத்து லாபங்களும் அப்பிராமணர்களை அடைய எல்லா வழிவகைகளையும் செய்தனர்.

இவ்வாறு கோயில்களுக்குச் சிறப்பான வகையில் தொண்டு புரிந்த கைக்கோளர்களுக்கு சில சலுகைகளும் மரியாதைகளும் அளிக்கப்பட்டன. ஏற்கனவே கூறியவாறு கி.பி. 1507 ஆம் ஆண்டு அம்பாசமுத்திரத்தில் பூதளவீர ராம பிள்ளையார் கோயிலைக் கட்டியதால், அக் கைக்கோளர்களுக்கு பரம்பரையாக அக் கோயிலில் மாலை மரியாதையும் மற்றும் சில சலுகைகளும்

கப்பட்டது. கைக்கோளர்களைப் போலவே செட்டியார் மற்றும் வாணியர் மூலமும் அரசுக்கு நல்ல வருவாய் கிடைத்தது. இம் மூன்று சமூகத்தினரும் ஒரு பேரரசின் பொருளாதாரத்தின் அடித்தளமாக விளங்கினர் என்று கூறினால் அது மிகை ஆகாது.

நிர்வாகத்திற்கு எதிர்ப்பினை அமைதியான முறையில் தெரிவித்த பாங்கு:

சில சமயங்களில் நிர்வாகத்தினர் விதிக்கும் வரி அதிகமானது எனத் தெரிந்தால், அதற்கு அனைத்து கைக்கோளரும் ஒருமித்து, தங்களது எதிர்ப்பினை அமைதியான முறையில் தெரிவித்து, நிர்வாகத்தினர் தாம் செய்த தவறினை திருத்திக் கொள்ள வாய்ப்பளித்தனர். இப்படிப்பட்ட சம்பவம் விஜயநகர அரசர் அரியணை உடையார் (கி.பி. 1377-1404) காலத்தில் திண்டிவனத்திலுள்ள ஓலக்கூரில் நடந்தது. அங்கு வாழ்ந்த கைக்கோளர்கள் அவ்வூர் நிர்வாகத்தினர் விதித்த வரியினைக் கட்ட முடியாமல் அனைவரும் ஊரினை விட்டு வெளியேறி விட்டார்கள். இதன் காரணமாக கைக்கோளர் வரிப் பணத்தால் செம்மையாக நடந்து வந்த இவ்வூர் கோயிலின் வருமானம் பெரிதும் குறைந்து, கோயிலில் பூசை தொடர்ந்து நடத்தமுடியாமல் மூடப்பட்டு விட்டது. இதையறிந்த நிர்வாகத்தினர் உடனே கைக்கோளர்களை அழைத்து அவர்களுக்குச் சில சலுகைகளை அளித்து மறுபடியும் அவர்களை பழைய ஊரிலேயே குடியேறுமாறு செய்தனர்.

கோயில் நிர்வாகத்தில் பங்கேற்றமை:

கைக்கோளர்கள் நிர்வாகப் பொறுப்பிலும் தங்களது ஆதிக்கத்தை வளர்த்து வந்தனர். உதாரணமாக புதுக்கோட்டை, குடுமியாமலையிலுள்ள மேலைக் கோயிலுக்கு தினம் தேவையான பொருட்களைக் கொடுக்க இரண்டு பிரதிநிதிகள் மூன்று படைபொற்கோயில் கைக்கோளர் பார்வையின் கீழ் நியமிக்கப்பட்டார்கள்.

கோயில்கள் கட்டுவதில் பங்கு:

கைக்கோளர் அனைவருமே தங்கள் நிலைக்கேற்ப கோயில்களுக்கு பல்வேறு வகைகளில் உதவி புரிந்து வந்துள்ளனர் என்பதை பல கற்சாசனங்கள் நிரூபிக்கின்றன. கி.பி. 1507 ஆம் ஆண்டு, திருநெல்வேலி அம்பாசமுத்திரத்திலுள்ள லட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலைச் சுற்றி வசிக்கும் கைக்கோளர்கள் வேளகுறிச்சி என்னும் இடத்தில் புதியதாக பூதன வீரராம பிள்ளையார் கோயில் மற்றும் அன்ன வினோதீஸ்வரர் கோயில்களை முழுவதுமாகக் கட்டினர். இதற்கு முந்தைய காலமாகிய கி.பி. 1130 ஆம் ஆண்டு பொள்ளாட்சி தாலுக்காவிலுள்ள ஆதிபுரீஸ்வரர் கோவிலிலுள்ள ஒரு மண்டபத்தில் வாயிலை இரு கைக்கோள சகோதரர்கள் கட்டியுள்ளனர். இது போல ஏற்கனவே உள்ள கோயில்களிலும் புதியதாக பல கட்டிட கோப்புகள் சேர்க்கப்பட்டதோடு சில கற்சிலைகளையும் இக்குல மக்கள் அங்கு நிறுவியுள்ளனர். அதோடு, சுவாமிக்கு அணிவிக்க சில ஆபரணங்களையும் சிலர் அளித்துள்ளனர். திருப்பாதரிலுள்ள அருள்மிகு வாகீஸ்வரர் கோயிலில் குடி கொண்டுள்ள பனைமுலைநாச்சியாருக்கு காது, கழுத்து அணிகலன்கள் செய்ய 9 கழஞ்சு பொன் கன்னனராசு என்னும் ஒரு கைக்கோளரால் அளிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் 19,908 முத்துப் பரல்களாலான ஒரு குடையுடன், 25¾ கழஞ்சு எடையுள்ள ஒரு தங்க ஆபரணமும் தானமாக உடையார்குடியிலுள்ள கோயிலுக்கு ஓர் ஊரைச் சார்ந்த கைக்கோளர்களால் தானமாக அளிக்கப்பட்டன.

கோயிலுக்கு பலவகை உபயங்கள்:

கோயில்களைக் கட்டியது மட்டும் அல்லாது பூஜை வழிபாட்டிற்கும் பல்வேறு உபயங்களைச் செய்துள்ளனர். கி.பி. 1247ஆம் ஆண்டு திருக்கோவிலூரிலுள்ள ஒப்பில்லா மணீஸ்வரர் கோவிலுக்கு கூத்தன் என்னும் ஒரு கைக்கோளரால் அபிஷேகத்திற்கு பயன்படுத்த ஒரு பாத்திரம் நன்கொடையாக அளிக்கப்பட்டது. தஞ்சாவூரில் திருவெங்காடு என்னும் இடத்திலுள்ள ஒரு கோயிலுக்கு ஒரு நிலத்தை வாங்கி அதை அக்கோயில் வழிபாட்டுச் செலவிற்காக தானமாக ஒரு கைக்கோளரால் கொடுக்கப்பட்டது. மேலும் ஆலயங்களில் தீபங்களை ஏற்றி வைப்பதற்காகவும் கைக்கோளர்கள் அவர்களது பொருளாதாரத்திற்கு ஏற்ப உதவி செய்து வந்தனர். தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஜம்பை என்னுமிடத்திலுள்ள ஒரு சிவன் கோவிலில் விளக்கு எரிவிக்க 15 கழஞ்சு பொன் தானமாக அளிக்கப்பட்டது. இதேபோல 12 பணம் கி.பி. 1336ல் ஈரோடு, குன்னத்தூரிலுள்ள குன்றபுரீஸ்வரர் கோவிலில் விளக்கேற்ற அளிக்கப்பட்டது. திருத்தணி, ராமகிருஷ்ணராஜபேட்டையிலுள்ள விசாலேஸ்வரர் கோயிலில் குறிப்பாக அந்தி தீபம் ஏற்றும் செலவிற்காக நஞ்சை நிலமானது தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இது போன்ற விவரங்கள் மற்ற

4. கல்வெட்டில் கைக்கோளர்

பி.டி. பாலாஜி, எம்.ஏ., எம்.பில்.

கைக்கோளர்கள், படை வீரர்களாகவும், நெசவாளர்களாகவும் இருந்து வந்தவர்கள். இவர்கள் கந்தபுராணத்தில் வரும் வீரபாகுவின் மரபினைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகின்றனர். இவர்களைப் பற்றிய கல்வெட்டுகள் நமக்கு சோழர்கள் காலம் முதற் கொண்டு தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கிடைக்கின்றன. இருந்தாலும், மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் தான் சற்று அதிகமாக இவர்களைப் பற்றிய கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

படையில் பங்கேற்றமை:

கை+கோள், கோள்=வலிமை. அதாவது போர்க்காலங்களில் அரசர்களுக்குத் தங்கள் வலிமை மூலம் உதவி செய்வதே கைக்கோளரின் வேலை. அவர்களுக்கு கைக்கோள்படை அல்லது உதவிப்படை என்று பெயர். வேண்டும்போது அரசர்களால் அழைக்கும்போது சென்று உதவும் படை என்பதாம். அவர்களின் பரம்பரைத் தொழில் நெசவுத் தொழில். அத்துடன் அவர்கள் போர்க் கலப் பயிற்சியும் பெற்றிருந்தனர் என்பது வரலாற்று உண்மை. கைக்கோளர் என்பது கல்வெட்டுக்களில் கல் தச்சர்களால் தவறாக எளிமையை ஒட்டி 'கைக்கோலர்' என்று கல்வெட்டுக்களில் பொறித்திருக்க வேண்டும். கைக்கோளர் என்பதே சரியான சொல்.

படைப்பிரிவின் பெயர்கள்:

பெரும்பாலும் ஆட்சியில் இருந்த அல்லது இருக்கும் மன்னனின் பெயரிலோ அவனது சிறப்புப் பெயர்களாலோ இப்பிரிவுகள் அழைக்கப்பட்டன. உதாரணமாக மேற்கண்ட படைப்பிரிவுகளில் சமரகேசரி, விக்கிரம சிங்கம், வீரசோழர் போன்றவை முதலாம் பராந்தக சோழனின் பட்டப் பெயர்களாகும். அருள்மொழி என்பது, முதலாம் இராஜராஜ சோழனின் இயற்பெயராகும். வீர ராஜேந்திரன் எனபது மற்றொரு சோழ அரசனின் பெயராகும். இவ்வாறு ஆட்சியில் இருக்கும் அல்லது இருந்த மன்னர்களுக்கு பெருமைசேர்க்கும் வகையில் இக் கைக்கோளர் பிரிவுகள் பல்வேறு காலங்களில் வழங்கப் பட்டதை கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

நினைவுச் சின்னங்களும் மான்யமும்:

இக் கைக்கோளர் படையானது, போர்க் காலங்களில் ஒரு முன்னணிப் படையாக விளங்கியது. போரில் உயிர் துறந்த கைக்கோளர்களின் ஞாபகார்த்தமாக அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டன. அது மட்டும் அல்லாது இறந்த கைக்கோளரின் சந்ததியாருக்கும், நல்வாழ்வுக்கென தனியாக நிலமும் தானமாக அளிக்கப்பட்டது. இவர்கள், அரசருக்கு எல்லாவகையிலும் நெருங்கி அவரது நல்லாசியைப் பெற்றிருந்தனர்.

தறிக்கு வரியும் தனிநபர் வரியும்:

இரண்டாம் சுந்தர பாண்டியன் காலத்தில், ஒரு தறிக்கு, வருடத்திற்கு ஆறு பணம் வரியாக வசூலிக்கப்பட்டது. பின்பு, விஜயநகர பேராட்சியில் அரிஹரராயர் காலத்தில் இவ்வரியானது 4 பணமாகியது. ஆனால் இதே பேரரசில் இந்நான்கு பணமானது இரண்டாகப் பிரிந்து, 2 பணம் ஒவ்வொரு தறிக்கும், 2 பணம் ஒவ்வொரு கைக்கோள நபர் மீதும் மன்னர் புக்கன்னன் காலத்தில் விதிக்கப்பட்டது. இவ்வரி திட்டத்தின் படி தறி அல்லாத ஒரு கைக்கோளர் குடும்பத்தைச் சார்ந்த ஒவ்வொரு நபரும், வரி செலுத்த வேண்டியதாயிற்று. இதனால் அரசிற்கு நல்ல வருவாய் கிடைத்தது.

வரி விதிப்பு:

மேலும் விற்பனைக்காக பட்டினத்திற்குள் எடுத்துச் செல்லும் நெய்த துணிகளின் மீதும், பட்டினத்திலிருந்து தங்கள் ஊருக்கு எடுத்து வரும் பொருட்களின் மீதும் வரி விதிக்கப்பட்டது. உதாரணமாக கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் விஜயநகர பேராட்சியில் திருக்கழுக்குன்றத்தில் ஒரு வருடத்திற்கு 70 பணமானது இவ்வகை வரியாக கைக்கோளரிடமிருந்து **வசூலிக்**

ஞாயிறுதோறும் காலை 7 மணி முதல் 11 மணி வரை நான்கு ஐந்து கோயில்களாக வைத்துக் காஞ்சி மெய்கண்டார் கழகத்தினர் மூன்றாண்டுகளுக்குள் வழிபாடு செய்து முடிக்கின்றனர்.

இத் திருக்கோயில்களில் தேவாரம் பெற்ற சிவத்தலங்கள் ஐந்து அவை:

1. திருக்கச்சியேகம்பம்
2. திருக்கச்சி நெறிக்காரைக்காடு
3. திருக்கச்சிமேற்றளி
4. திருக்கச்சியனேகதங்காவதம்
5. திருக்கச்சிஓணகாந்தன்றளி

என்பனவாகும். ஏனையவை புராணத் தலங்கள். இவற்றுள் காஞ்சிப் புராணப்படி முக்கியமான தலங்கள் மூன்று. அவை:—

1. திருக்கச்சி ஏகாம்பரநாதர் கோயில். இதற்கு 12 தேவாரத் திருப்பதிகங்கள் இருக்கின்றன. பன்னிரு திருமுறைகளிலும் போற்றப் பெறுவதும் இதுவேயாகும். இங்குக் காமாட்சியம்மையார் கம்பாநதியில் மணலை இலிங்கமாக வைத்துப் பூசித்தனர். அதுவே பிருதுவி இலிங்கமாக மூலத் தானத்தில் எழுந்தருளியிருப்பது. இதுவே அகில லோகதுக்கும் பிருதிவித்தலம். தீண்டாத் திருமேனி. 2. திருக்கச்சபேசம். இது திருமால் ஆமை வடிவங்கொண்ட காலத்தில் பூசித்துப் பேறு பெற்றது. கச்சபம்-ஆமை. சரசுவதியும் இங்குப் பூசித்திருக்கிறார். 3. திருக்காயா ரோகணம் இது வேகவதியாற்றின் வடகரையிலிருக்கிறது. இது மண்டபத் தெருவாரைச் சேர்ந்த தேவஸ்தானம்.

காஞ்சிப்புராண ஆசிரியர்: தமிழ்ச் சிவஞானமா பாடியத் தலைவர் மாதவச் சிவஞான சுவாமிகளாவார். மேலும் இவர் பிள்ளைத் தமிழ் நூல்கள், யமக அந்தாதி, திரிபந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, முதலிய பிரபந்த நூல்களும், தருக்கம், இலக்கணம், உரைநடை, பிறமதகண்டன உரைநடை நூல்களும் இயற்றியிருக்கிறார். சிவஞான சுவாமிகள் 12 மாணவர்களுக்கு இலக்கண இலக்கிய ஞான நூல்களைப் போதித்துத் திருவாடுதுறைக் கிளை மடாலயத்தில் எழுந்தருளி இருந்திருக்கிறார்கள். பன்னிரு மாணவர்கள்.

1. திருத்தணிகை கச்சியப்ப முனிவர். இவர் சுவாமிகளுக்கு முதன் மாணவர். விநாயக புராணம், தணிகைப் புராணம், பேரூர்ப் புராணம், திருவானைக்காப் புராணம், பூவாரூர்ப் புராணம் முதலியவற்றை இயற்றியவர் இவரே. கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டு விடு தூது, அந்தாதிகள், பதிகங்கள் இயற்றியிருக்கிறார்.

2. தொட்டிக் கலை சுப்பிரமணிய முனிவர். கலைசைச் சிலேடை வெண்பா ஆசிரியர்.

3. திருப்பாதிரிப் புலியூர் நிரம்ப வழகிய தேசிகர்.

4. காஞ்சிச் சரவணப்பத்தர். இவர் மத்தூர் சாமிநாத முதலியாரின் மூன்றாவது பாட்டனார், ஞான நூல்கள் செய்தவர். செங்குந்தர்.

5. இராமநாதபுரம் சோமசுந்தர முதலியார்.

6. காஞ்சிச் சிதம்பரநாத முனிவர். செங்குந்தர்.

7. திருமுக்கூடல் சந்திரசேகர முதலியார்.

8. காவாந்தண்டலம் அடைக்கலம் காத்த முதலியார்.

9. காஞ்சி முத்துக்குமார தேசிகர். செங்குந்தர்.

10. இலக்கணம் சிதம்பரநாத முதலியார்.

11. அட்டாவதானம் சபாபதி முதலியார். செங்குந்தர், சென்னை.

12. சிவபூஜை சபாபதி முதலியார் காஞ்சிபுரம்.

ஆளுடைய பிள்ளையார்பாளையத்தில் சாலை வீதியில் மணியப்ப முதலியார் என்று ஒருவர் பிரபலமாக வாழ்ந்திருந்தார். நல்ல தனவந்தர். இவர் மாதவச் சிவஞான சுவாமிகளை எல்லா வகையிலும் பேராதரவு கொடுத்துப் பெரிதும் போற்றி ஆதரித்தவர். சுவாமிகளுக்குத் தனியே ஒரு திருக்குளம் எடுத்து அதில் குளிக்கும்படி ஏற்பாடு செய்திருந்தார். இதில் வேறு யாவரும் குளித்தல் செய்யாதபடி காவல் புரிந்திருந்தார். மேலும் சுவாமிகள் சிவபூசை செய்வதற்கு ஒரு தனி மண்டபமும், நிட்டை கூடுவதற்குக் குகை அறைகளும் கட்டிக் கொடுத்தார். அவைகள் இன்றும் மணியப்பன் குளம், மணியப்பன் மண்டபம் என்று வழங்கி வருகின்றன. இவற்றின் கிழக்கே கூப்பிடு தூரத்தில் திருவாவடுதுறை ஆதீனக் கிளை மடாலயமிருக்கிறது.

இங்கு மெய்கண்ட தேவ நாயனார், கச்சியப்ப முனிவர், சிவஞான முனிவர் சந்நிதிகளும், சிவஞான சுவாமிகள்

இறைவனின் திட்ட வரிசையில் இந்தப் பயிற்சிக்களத்திற்கு என தனித்த மேன்மைகள் உண்டு. குலங்களைப் பொறுத்தவரை பெரும்பான்மையின தொழிலின் அடிப்படையிலேயே பெயர் பெறுவதைக் காணலாம்—கருமான் என்றால் கரிய இரும்பினை நீட்டி மடக்கி அடித்துத் தருபவன் என்பதைப் போல. ஒரு சில அவ்வக் குலப் பண்புகளைக் கொண்டு பெயர் ஏற்பதும் உண்டு. வேள் என்றால் உபசரித்தல் என்று பொருள். வேளாளர் எனின் உபசரித்தலைத்தன் குணமாக உடையவர் என ஆகும். செட்டி என்றால் பொருளில், காசில், பணத்தில் செட்டு உடையவர் என்று பொருள் தருவதை ஓர்க.

இங்ஙனம் பண்பின் அடிப்படையில் பெயர் பெற்ற குலங்களில் செங்குந்த குலம் சிறப்பின் மிக்கது. எவ்வாறெனின் ஓரோர் குணங்களை, ஓரோர் பண்புகளை என்றில்லாமல் எல்லா பண்புகளையும் ஒரு சேரத் தொகுத்துக் கூறும் சொல்லாகிய செம்மை என்ற சொல் இக்குலத்திற்கு அடையாக நிற்பது இக்குலத்தின் ஏற்றத்திற்குப் பறைசாற்றும்.

தமிழில் உள்ள லட்சக் கணக்கான சொற்களிலெல்லாம் மிகச் சிறந்த சிகரமான சொல் செம்மை என்பதாகும். அதனால்தான் தமிழின் சிறப்பைத் திறப்பாக எடுத்துக் காட்ட செம் + தமிழ் என்று சேர்த்து செந்தமிழ் என்றனர் பெரியோர். அது மட்டுமல்ல, இறைவனைத் திருவள்ளுவர் கூறும் போது செம்பொருள் என்பார்.

''பிறப்பென்னும் பேதைமை நீங்கச்
சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு''

என்பது குறள். எனவே 'செம்' என்கின்ற அடைச்சொல் சொல்லெல்லாவற்றுள்ளும் தலையாயது; பெருமை மிக்கது.

செம்மை என்பது என்றும் மாறாது நிலைத்து நிற்பது என்ற பொருளையும் தருவது. இறைவன் என்றும் உள்ளவன்; எனவே செம்பொருள். அதுபோல் என்றும் நிலைத்து நிற்கக் கூடிய பண்புகளை உடையவன் செங்குந்தன். (குந்தன் = தூய்மையானவன்)

இது மட்டுமல்லாமல் செங்குந்த குலத்திற்கு மற்றும் ஒரு பெயர் உண்டு. அது கைக்கோளன் என்பது. இதுவும் பண்பின் அடிப்படையிலேயே அமைந்த பெயர். பலர் இதனைத் தொழிலின் காரணமாக எழுந்த பெயர் என்று மயங்குவர். தறிக்கோளைக் கையில் உடையவன் என்று அவர்கள் பொருள் கொள்கின்றனர். ஆனால் குறிக்கோளைக் கையில் உடையவன் என்பதே அதற்குச் சரியான பொருள்.

தமிழில் கை என்ற சொல்லிற்கு ஒழுக்கம் என்ற பொருள் உண்டு என்பதனை அறிஞர் அறிவர். மாணிக்க வாசகர் இறைவனைப் பக்திப் பரவசத்துடன் பாடி மகிழ்கிறபோது கீழ்வருமாறு பாடுகிறார்:

'மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்
விரை யார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை
யாயென்னைக் கண்டுகொள்ளே'

இப் பாடலில் பொங்கித் ததும்பும் பக்தியும் பத்தரின் மெய்ப்பாடுகளையும் ஊன்றிப் பாருங்கள். அத்தகைய பத்தரொழுக்கத்திலிருந்து சிறிதும் நழுவி விடமாட்டேன் என்று மாணிக்கவாசகர் கூறும் போது 'கைதான் நெகிழவிடேன்' என்பதைக் காண்க. இங்கே 'கை' என்பது ஒழுக்கத்தைக் குறித்து நிற்பது தெளிக. இதனை இன்னும் விரிவாக பண்டித மணி கதிரேசஞ் செட்டியாரின் கதிர் மணி விளக்கத்தில் கண்டுணர்க.

எனவே கை என்பது ஒழுக்கத்தை, ஒழுக்கத்தையே தம் கோளாக உடையவர் என்பதால் கைக்கோளர் என்ற பெயர் பெற்றார் செங்குந்தர். இங்ஙனம் வழங்குகின்ற இரண்டு பெயர்களிலும் பண்பே மேலோங்கி இருப்பதை உணர்க. இத்தகைய பெருமை உடைய குலத்தினர் தங்கள் பண்பை நிலை நிறுத்திய வரலாறுகள் பல. செங்குந்தருக்கும் செந்தமிழுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. செந்தமிழுக்கும் செம்பொருளாம் சிவத்திற்கும் உள்ள தொடர்பும் மிக நெருங்கியது. செம்பொருள் சிவனுக்கும் செம்பொருள் துணிவான சைவசித்தாந்தத்திற்கும் உள்ள தொடர்பை விளக்க வேண்டுவதில்லை. இவையாவும் செம்மை என்ற ஒரே அடைச் சொல் பெற்று உலவுவதே இவற்றிற்கு இடையே உள்ள நெருங்கிய தொடர்பை விளக்கும். ஆகவே செங்குந்தருக்கும் தமிழர்தம் தனிக் கடவுள் கொள்கையாம் சைவசித்தாந்தத்திற்கும் இடையே இயல்பான இயைபு உண்டு.

இறைவனின் திட்ட வரிசையில் இந்தப் பயிற்சிக்களத்திற்கு என தனித்த மேன்மைகள் உண்டு. குலங்களைப் பொறுத்தவரை பெரும்பான்மையின தொழிலின் அடிப்படையிலேயே பெயர் பெறுவதைக் காணலாம்—கருமான் என்றால் கரிய இரும்பினை நீட்டி மடக்கி அடித்துத் தருபவன் என்பதைப் போல. ஒரு சில அவ்வக் குலப் பண்புகளைக் கொண்டு பெயர் ஏற்பதும் உண்டு. வேள் என்றால் உபசரித்தல் என்று பொருள். வேளாளர் எனின் உபசரித்தலைத்தன் குணமாக உடையவர் என ஆகும். செட்டி என்றால் பொருளில், காசில், பணத்தில் செட்டு உடையவர் என்று பொருள் தருவதை ஓர்க.

இங்ஙனம் பண்பின் அடிப்படையில் பெயர் பெற்ற குலங்களில் செங்குந்த குலம் சிறப்பின் மிக்கது. எவ்வாறெனின் ஓரோர் குணங்களை, ஓரோர் பண்புகளை என்றில்லாமல் எல்லா பண்புகளையும் ஒரு சேரத் தொகுத்துக் கூறும் சொல்லாகிய செம்மை என்ற சொல் இக் குலத்திற்கு அடையாக நிற்பது இக் குலத்தின் ஏற்றத்திற்குப் பறைசாற்றும்.

தமிழில் உள்ள லட்சக் கணக்கான சொற்களிலெல்லாம் மிகச் சிறந்த சிகரமான சொல் செம்மை என்பதாகும். அதனால்தான் தமிழின் சிறப்பைத் திறப்பாக எடுத்துக் காட்ட செம் + தமிழ் என்று சேர்த்து செந்தமிழ் என்றனர் பெரியோர். அது மட்டுமல்ல, இறைவனைத் திருவள்ளுவர் கூறும் போது செம்பொருள் என்பார்.

''பிறப்பென்னும் பேதைமை நீங்கச்
சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு''

என்பது குறள். எனவே 'செம்' என்கின்ற அடைச்சொல் சொல்லெல்லாவற்றுள்ளும் தலையாயது; பெருமை மிக்கது.

செம்மை என்பது என்றும் மாறாது நிலைத்து நிற்பது என்ற பொருளையும் தருவது. இறைவன் என்றும் உள்ளவன்; எனவே செம்பொருள். அதுபோல் என்றும் நிலைத்து நிற்கக் கூடிய பண்புகளை உடையவன் செங்குந்தன். (குந்தன் = தூய்மையானவன்)

இது மட்டுமல்லாமல் செங்குந்த குலத்திற்கு மற்றும் ஒரு பெயர் உண்டு. அது கைக்கோளன் என்பது. இதுவும் பண்பின் அடிப்படையிலேயே அமைந்த பெயர். பலர் இதனைத் தொழிலின் காரணமாக எழுந்த பெயர் என்று மயங்குவர். தறிக்கோளைக் கையில் உடையவன் என்று அவர்கள் பொருள் கொள்கின்றனர். ஆனால் குறிக்கோளைக் கையில் உடையவன் என்பதே அதற்குச் சரியான பொருள்.

தமிழில் கை என்ற சொல்லிற்கு ஒழுக்கம் என்ற பொருள் உண்டு என்பதனை அறிஞர் அறிவர். மாணிக்கவாசகர் இறைவனைப் பக்திப் பரவசத்துடன் பாடி மகிழ்கிறபோது கீழ்வருமாறு பாடுகிறார்:

'மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்
விரை யார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை
யாயென்னைக் கண்டுகொள்ளே'

இப் பாடலில் பொங்கித் ததும்பும் பக்தியும் பத்தரின் மெய்ப்பாடுகளையும் ஊன்றிப் பாருங்கள். அத்தகைய பத்தரொழுக்கத்திலிருந்து சிறிதும் நழுவிவிடமாட்டேன் என்று மாணிக்கவாசகர் கூறும் போது 'கைதான் நெகிழவிடேன்' என்பதைக் காண்க. இங்கே 'கை' என்பது ஒழுக்கத்தைக் குறித்து நிற்பது தெளிக. இதனை இன்னும் விரிவாக பண்டித மணி கதிரேசஞ் செட்டியாரின் கதிர் மணி விளக்கத்தில் கண்டுணர்க.

எனவே கை என்பது ஒழுக்கத்தை, ஒழுக்கத்தையே தம் கோளாக உடையவர் என்பதால் கைக்கோளர் என்ற பெயர் பெற்றார் செங்குந்தர். இங்ஙனம் வழங்குகின்ற இரண்டு பெயர்களிலும் பண்பே மேலோங்கி இருப்பதை உணர்க. இத்தகைய பெருமை உடைய குலத்தினர் தங்கள் பண்பை நிலை நிறுத்திய வரலாறுகள் பல. செங்குந்தருக்கும் செந்தமிழுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. செந்தமிழுக்கும் செம்பொருளாம் சிவத்திற்கும் உள்ள தொடர்பும் மிக நெருங்கியது. செம்பொருள் சிவனுக்கும் செம்பொருள் துணிவான சைவசித்தாந்தத்திற்கும் உள்ள தொடர்பை விளக்க வேண்டுவதில்லை. இவையாவும் செம்மை என்ற ஒரே அடைச் சொல் பெற்று உலவுவதே இவற்றிற்கு இடையே உள்ள நெருங்கிய தொடர்பை விளக்கும். ஆகவே செங்குந்தருக்கும் தமிழர்தம் தனிக் கடவுள் கொள்கையாம் சைவசித்தாந்தத்திற்கும் இடையே இயல்பான இயைபு உண்டு.

மிலர். இவர்களிடையே பிறந்த தமிழ்க் கவிச் சான்றோர்கள் பலர். அவர்கள் யாவரும் சாதியை மோதியும் பாடியிருக்கிறார்கள்; மோதிய வேகத்திலே குலத்தைக் கோதியும் பாடியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நீண்ட பட்டியலிடுவது ஈண்டைக் கேலாத வேலை. மேலே காட்டிய ஒன்றிரண்டு காட்டுகளைக் கொண்டு மற்றவற்றையும் தெளிக.

இனி, இப்போது நம்முன் எழுகின்ற கேள்வி இதுதான். ஒன்றுக்கு ஒன்று மாறாக, முன்னுக்குப் பின் முரணாக நம் மூதறிஞர்கள் கூறக் காரணம் என்ன? ஏன் இப்படி குழப்படி செய்தார்கள்?

இந்தக் கேள்வியை ஒட்டி சிந்தனையை ஓட்டினால் ஓர் உண்மை புலப்படும். அதாவது முன்னோர்கள் ஒருக்காலும் குழப்பவில்லை; குழம்பியவர்கள் நாம்தான் என்பது விளங்கும். அவர்கள் உயிரின் மாட்சிமைகளைச் சாதியிலிருந்து சரியாகப் பிரித்துப் பார்த்துப் பாராட்டினார்கள்; காரணம் உயிருக்குச் சாதியில்லை என்பதனால். அதேநேரம் உடலின் செய்கைகளில் குலத்தைக் கோத்துச் சொன்னார்கள்; காரணம் உடலுக்குச் சாதி உண்டு என்பதனால். ஒருவனது செய்கை உடலைப் பற்றி வருவது. எனவே ஒருவனது செய்கைக்குச் சாதீபற்றிச் சிறப்போதினார்கள். ஒருவனது எண்ணம் உயிரைப் பற்றியது. எனவே ஒருவனது எண்ணத்தின் மாட்சிமையை எடுத்தோதும் போது சாதியைத் தகர்த்தெறிந்தார்கள்.

சைவசித்தாந்தம் சாதியைப் பற்றி எடுத்துக் கூறும் போது மிகச் சரியாக 'சாதி என்பது சூழலை' என்று எடுத்து ஓதுகிறது. ஒரு வேதியன் வாழ்வில் கெட்டலைந்தான் என்று வைத்துக்கொள்வோம். அப்படிக் கெடுவானா என்று ஐயுறக் கூடாது. பரிபாடலில் ஓரிடத்தில் 'விரிநூலந்தணர் விழவு தொடங்கப் புரிநூலந்தணர் பொலங்கலம் ஏற்ப' என்று வருவதே இதற்குச் சான்று. அதாவது நூல்களையெல்லாம் விரிவாக எடுத்துப் பயின்ற அந்தணர் என்று முதல் வரியில் குறிப்பிட்ட ஆசிரியர் அப்படிப் பயிலாதவர்களும் அவர்களில் உண்டு என்று அடுத்த வரியில் கூறும்போது அவர்களைப் 'புரிநூலந்தணர்' என்று குறிப்பிட்டார். அதாவது அந்தணன் என்பதற்கு அடையாளமாக நூலை மட்டும் அணிந்தவன் என்பது அதற்குப் பொருள். எனவே சங்க காலத்திலேயே 'காலையிலே வேதம் கல்லாத் தலைமகனாகத்' திரிந்தழிந்த அந்தணர்களும் உண்டு என்பது உறுதியாகிறது. அப்படித் திரிந்த அந்தணர்களை மற்ற அந்தணர்கள் விட்டு ஒதுக்க மனம் வருமா? அவர்களை கும்பம், பாத்திரம் போன்றவற்றை வேள்விக் கருமங்களில் ஏந்திவரும் குற்றேவல்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதாக மேற்படி பரிபாடல் குறிப்பு தருகிறது.

இனி கெட்டழிந்த வேதியன் வீட்டை விட்டு, நாட்டை விட்டு உழன்று திரிந்தாலும் ஓரிடத்தில் அந்தணர்கள் கூடி நின்று வேதம் ஓதுகிறார்கள் என்றால் சற்று நின்று பக்தியுடன் கேட்கிறான்; தான் முறைதவறிவிட்டதை எண்ணி சிறிது நேரம் மனம் மறுகுகிறான். வேத ஒலியைக் கேட்டவுடன் அவனை நிறுத்தியது எது? அவன் காது. அவனுடைய காது வேத ஒலி நிறைந்த சூழலிலேயே இளவயதில் பழகியது. எனவே அவனை வேதஒலி கேட்கும் போது தடுத்து நிறுத்துகிறது.

இங்ஙனமே ஒவ்வொருவருக்கும் அவரவர் இளவயதுச் சூழலின் பாதிப்பு உண்டு. அந்தச் சூழல் தான் அவரவரை உருவாக்குவது. அந்தச் சூழல் தான் சாதி. இதில் நல்ல சூழலும் உண்டு, கெட்ட சூழலும் உண்டு. இதை எண்ணித் தான் 'குலத்தளவே யாகுங் குணம்' என்று பாடி வைத்தார்கள்.

இங்ஙனம் ஒவ்வொரு சாதியும் ஒவ்வொரு வகையான சூழலை உருவாக்கித் தருவது. ஒவ்வொன்றும் அதனதன் தன்மையில் மேன்மையே. ஒவ்வொன்றும் இறைவன் ஆன்மாவைப் பயிற்றுவிக்கின்ற பயிற்சிக் களம். அதனால்தான், பட்டினத்தார்.

'முந்து பிறவா நிலனுமில்லை, அவ்வயின்
இறவா நிலனுமில்லை'

என்றும்,

''யாரும் யாவையும் எனக்குத்
தனித்தனித்
தாயராகியும் தந்தையராகியும்
வந்திலாதவரில்லை யானவர்
தந்தையராகியும் தாயராகியும்
வந்திராததும் இல்லை''

என்றும் பாடினார். இவ்வண்ணம் விரியும் பல பயிற்சிக் களங்களில் ஒன்றுதான் செங்குந்தச் சூழல் அல்லது செங்குந்தக் குலம் என்பது.

6. செங்குந்தரும் சைவ சித்தாந்தமும்

'சித்தாந்தக் கவிமணி'
மு. பெ. சத்தியவேல் முருகன், B.E.

உயிரில் ஆண் உயிர், பெண் உயிர், ஆனை உயிர், பூனை உயிர், எறும்புயிர், எலி உயிர் என்றெல்லாம் பேதம் ஏது? அது எத்துணை உண்மையோ அத்துணை உண்மை உயிரில் செட்டியார் உயிர், முதலியார் உயிர், ஐயர் உயிர், ஹரிஜன் உயிர் என்று பேதம் கிடையாது என்பதும். உடம்பைச் சுற்றிய புடவை பல வண்ணங்களில் பேதப் படுவதே போல் உயிரைச் சுற்றிய உடம்பு பல ஜாதி பேதங்களைக் கொள்கிறதேயொழிய வேறில்லை. எனவே உடம்புக்குத்தான் சாதி; உயிருக்கில்லை.

இனி சாதியைப் பற்றி நம் பெரியோர்கள் கூற்றினை ஆராய்ந்து பார்த்தோமானால் நமக்கு மிஞ்சுவது குழப்பமே. திருவள்ளுவர் முதற்கொண்டு மகாகவி பாரதி வரை அனைவருடைய கவிக் கூற்றுகளையும் அலசி ஆராய்ந்து பாருங்கள்; மேற்படி குழப்பமே கூத்தாடும். 'அந்தணர் என்பர் அறவோர்' என்ற திருவள்ளுவர் கூற்றைப் படித்தவுடன் மறையவர் குலத்தினரை நன்றாக மட்டம் தட்டிவிட்டார், வள்ளுவர் என மன மகிழ்வோர் பலர். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறளைப் பேசி புரட்சி மத்தாப்புக் கொளுத்தாத பேச்சாளரே இல்லையென லாம். இவர்களெல்லாம் உயர்ந்த குடிப் பிறப்பைப் பாராட்டி வள்ளுவர் 'குடிமை' என்ற ஓர் அதிகாரமே வைத்துள்ளதை அறியாதவர்கள்; இல்லையேல் மக்களை அறிய விடாதவர்கள். குடிமை அதிகாரத்தில் வரும் மூன்று குறள்களைக் கருத்தூன்றிப் படியுங்கள்.

சலம்பற்றிச் சால்பில செய்யார்மாசற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்
நலத்தின்கண் நாரின்மை தோன்றின்
அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.
நிலத்திற் கிடந்தமை கால்காட்டும்
காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

இது மட்டும் அல்ல. உயர்ந்த குடிப் பிறப்பை உயர்த்திப் பேசும் 'குடிசெயல் வகை' என்னும் மற்றுமோர் அதிகாரமும் உண்டு.

திருவள்ளுவர் ஒரு புறம் இருக்கட்டும். திக்கெட்டும் புகழ் பரப்பிய தமிழ் மூதாட்டியாம் ஔவையாரைப் போலச் சாதியைச் சாடியவர் உண்டா? 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று அடித்துக் கூறி அவையாவை என்று புது விளக்கம் கொடுத்த பெருமாட்டியா யிற்றே. ஆனால் அவரே பிறிதோரிடத்தில் 'குலத்தளவே யாகுங் குணம்' என்று கூறியிருப்பது முன்னொடு பின் முரணாகத் தோன்ற வில்லையா?

இனி மகாகவி பாரதியை எடுத்துக் கொள்வோம். 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று படுத்துத் தவழும் குழந்தையை எடுத்துச் சொல்லித் தந்தவர், சுயசரிதை எழுதும் போது 'பார்ப்பனக் குலம் கெட்டழி வெய்திய, பாழடைந்த கலியுகமாதலால்' என்று பாடுவதைப் பாருங்கள். ஒரு காலத்தில் பார்ப்பனக் குலம் உயர்ந்தது தான் என்ற அவரது எண்ணம் அதிலே இழையோடுவதை யார் மறுக்க இயலும்? சுப்பராம தீட்சிதர் என்பாரைப் பாராட்ட வந்த பாரதியார் அவரைப் "போற்றுதற்குரிய புனிதவான் குலத்தில்" தோன்றியதாகக் கூறிக் களிக்கின்றார். காரைக்குடி செட்டிப் பெருமக்களை வாழ்த்திப் பாடவந்த பாரதியார் 'குலமுயர நகருயர, நாடுயர உழைக்கின்றார் கோடி மேன்மை, நிலவுற இச்சங்கத்தார் பல்லூழி வாழ்ந்தொளிர்க நிலத்தின் மீதே' என்று பாடுவதையும் காண்க. குலத்தைச் சாடிய மகாகவி 'குலமுயர இச்சங்கத்தார் உழைக்கின்றார், கோடி மேன்மை நிலவட்டும்' என்று ஆசி கூறிப் பாடுவதேன்? குழப்பம்தான் மிஞ்சுகிறது.

திருவள்ளுவரிலிருந்து மகாகவி பாரதி வரை என்று மேலே எடுத்துக் கொண்டதன் காரணம் முதலவர்க்கு முன்னும் பின்னவர்க்குப் பின்னும் மக்கள் மனத்தைத் திறப்பாகவும், சிறப்பாகவும் கவர்ந்த மக்கள் கவி வேறு யாரு

நடராசப் பெருமானை எழுந்தருள வைத்துப் பூசித்து வருகிறார்கள். ஆகவே காஞ்சிப் புராணம் செங்குந்த மரபினர் களாலேயே தோற்றுவிக்கப்பெற்று எல்லோரும் இன்றும் படித்து இன்புறத் தக்க சிவஞான சித்தாந்தக் கருவூல நூலாகத் திகழ்கின்றதென்பதை நன்குணரலாம்.

நான் காஞ்சிப் புராணத்தினுள் இனிக்கக் கிடைக்கும் கவிகளையோ, கவி நயங்களையோ பொருட் சிறப்புக் களையோ, கற்பனைத் திறன்களையோ, சித்தாந்த சாத்திரக் கருத்துக்களை கற்பனை வளங்கில் இணைத்துக் காட்டும் அருஞ்செயல்களையோ எடுத்துக் காட்டாமல், காஞ்சிப் புராணம் பற்றி அநேகர் அறியாது சிதைந்து போகத்தக்க நிலையிலிருக்கின்ற உண்மையான செவிவழிச் செய்திகளையும் நேரில் அறியத் தக்கனவற்றையும், செங்குந்த மரபினர்கள் இந்நாளிலேனும் சிந்தையிற்கொள்ள வேண்டிய சில புண்ணிய தொண்டுகளையும், சீரிய பண்புடைமை, கல்விப் புலமை, சைவ சித்தாந்த சாத்திரங்களைக் கற்றுப்பெற்ற உறுதியான தெய்வ நம்பிக்கை, திருமுறைகளினிடத்தில் கலங்காத அன்பு, சிவனடியார்களைச் சிவனாகவே பாவித்து வழிபட்ட சிறப்புடைமை ஆகியனவற்றைச் செங்குந்த மரபினர்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்ற நன்னோக்கத்தாலேயே இதனை மட்டும் கூறுகின்றேன்.

செங்குந்த மரபில், கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தப் புலவர் பெருமானும், தெய்வக்கவிமணிகள் இரட்டைப் புலவர் பெருமக்களும், அருட்கவி படிக்காசுத் தம்பிரான் சுவாமிகளும் பழங்காலத்தில் இருந்தார்கள். பிற்காலத்தில் அட்டாவதானம், சென்னைச் சபாபதி முதலியார், காஞ்சி வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முனிவர், மகா வித்துவான் காஞ்சி, சபாபதி முதலியார், திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர், ஞானியார் மடாலயத் தலைவர் சிவஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், காஞ்சி பூசை நமசிவாய முதலியார் முதலானவர்கள் இருந்திருக்கிறார்கள்.

மேலும் செங்குந்த மரபினர்கள் பல வழிகளில் சிறந்தவர்களாய் ஐந்து கண்டங்களிலும் பரவியிருந்து, கல்வி, சமய ஞானம், தெய்வ வழிபாடு, சிறந்த பண்புடைமை, வாணிபம், தொழில் முதலியனவற்றால் மேம்பாடடைந்து அரசாங்கத்தில் உத்தியோகத்தினர்களாகவும், பலர் இன்றுமிருந்து வருகிறார்கள். மேலும் புண்ணிய வாய்ப்புடையவர்களாய்ச் செங்குந்த மரபிற் பிறந்த இளைஞர்கள், படிக்கும் மாணவர்கள் இன்றும் தாய் தந்தையர்களிடத்தில், ஆசிரியர்களிடத்தில், பெரியோர்களிடத்தில் சிறந்த பண்பாட்டுடன் நடந்து, சொல் மீறாமல் அடக்கமுடையவர்களாய், தெய்வ வழிபாட்டில் சிறந்தவர்களாய் மரபு கடவாமல் வாழ்ந்து வருகிறார்கள்.

சைவ சமய குரவர்களில் முதற் குரவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், சைவ சந்தான குரவர்களில் முதற்குரவர் மெய்கண்ட தேவ நாயனாரும், மக்களுக்கு இரண்டு உண்மைகளை உபதேசித்திருக்கிறார்கள். அவை 1. சிவநடியார்களைச் சிவன் எனவே கொண்டு தொண்டு செய்து வழிபடுதல். 2. சிவாலயங்களுக்குச் சென்று வழிபடுதல் என்பனவாகும். இவைகள்தாம் உலகத்தில் உண்மைகளாக இருக்குமானால் குடத்திலிருக்கின்ற எலும்பு பூம்பாவை என்ற பெண்ணுருவாக வரட்டும் என்று திருஞானசம்பந்தர் பணித்துத் திருப்பதிகம் பாடினார்.

1. உருத்திர பல்கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே போதியோ, பூம்பாவாய்'

2. ஆதிரை நாள்காணாதே போதியோ பூம்பாவாய் என்றலுமே குடம் உடைந்து பூம்பாவை 12 வயதுடைய பெண்ணாக உருக்கொண்டு வந்து நின்றது. மெய்கண்ட தேவ நாயனார், முடிந்த உபதேசமாகச்

''செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங் கழீஇ அன்டரொடுமரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன்எனத் தொழுமே

என்று முடிந்த சூத்திரமான 12வது சூத்திரத்தைச் சிவஞான போதத்தில் தந்தருளினார். ஆகவே பொதுவாக எல்லாரும் சிறப்பாகச் செங்குந்த மரபினர்களும், இவ்விரண்டு உண்மைகளையும் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகக் கொண்டு நின்று நிலவி வாழ்வார்களாக.

———

சக்கர விநாயகர் தோத்திரமாக "விகட சக்கர ஆரணந் தொடர்வரும் வித்தக" என்று தொடங்கும் பாடலையும் சொல் லிப் பொருள் விளக்கம், யமக அடிகளின் யாப்பின் சிறப்பு, உரைவளம், கருத் துரை வகைகளை எடுத்துக் கூறினார்கள். அடுத்துச் சபாபதி தோத்திரப் பாட லாக அமைந்துள்ள "சங்கேந்தும் மலர்க் குடங்கைப் புத்தேளும் மறைக்கோவும் தழல்கால் சூலம்" என்ற தோத்திரப் பாடல்களில் முதற்பாடலை எடுத்தியம்பி னார்கள். அவ்வரங்கேற்றப் பேரவையில் அமர்ந்திருந்த புலவரொருவர் எழுந்து நின்று, முன்னெல்லாம் புராணம் பாடிய வர்கள் முதலில் விநாயகரையும், தலத் துச் சிவபிரான் அம்மையார், முருகர், சபாபதி, சிவகாமியம்மையார், நால் வர் முதலியவர்களையல்லவா கடவுள் வாழ்த்து வரிசையில் அமைத்துப் பாடி யிருக்கிறார்கள். தாங்கள் மட்டும் முறை மாறி முதலில் சபாபதி தோத்ரம் அமைத்திருக்கிறீர்களே இதற்கு விடை தந்தருள வேண்டும் அதன் மேல் அரங் கேற்றத்துக்குச் செல்லலாம் என்று சொல்லி அமர்ந்தனர். சுவாமிகள் அப்போதே அவையைப் பார்த்து இதற்கு நல்ல தொரு விடை நாளைக்கு இவ்விடத் திலேயே இந்நேரத்தில் அளிக்கப் பெறும் என்றார்கள். சபையும் அமைதி யாகக் கலைந்தது. பின்பு சுவாமிகள் மடாலயம் வந்து மணியப்ப முதலியாரை அழைத்துச் சென்னையில் விநாயக புரா ணம் பாடிக் கொண்டிருக்கும் என் மாணவர் கச்சியப்பனை நாளைக்குள் இங்கு அழைத்து வரவேண்டும் என் றார்கள். அப்போதே மணியப்ப முதலி யார் பல அன்பர்களையும் விளித்துச் சென்னையிலிருக்கும் கச்சியப்ப முனிவர் பெருமானை நாளைக்குள் அழைத்து வர வேண்டியது உங்கள் பொறுப்பாக இருக் கட்டும் என்று சொல்லி ஏற்பாடுகளை விரைந்து செய்யலாயினார்.

காஞ்சியிலிருக்கும் பல தொண்டர் கள் திரளாகப் போய் பல்வேறிடங்க ளில் சிலர் சிலராக இருந்து கொண்டு கச்சியப்ப முனிவரை அழைத்து நிகழ்ச்சி யைச் சொல்லி தோளின் மேலமர்த்தி மாறி மாறிச் சுமந்து முனிவர் பெரு மானை அழைத்து வந்து சேர்த்துவிட்ட னர். மறுநாள் குறிப்பிட்ட இடத்துக் குக் குறிப்பிட்ட நேரத்தில் சிவஞான சுவாமிகள் கச்சியப்ப முனிவர் முதலிய மாணவர்கள், புலவர்கள் மற்றும் பல ருடன் சென்று ஆயிரக்கால் மண்டபத் தில் அமர்ந்தனர். வினாவுக்கு விடை சொல்லும் நாளாதலின் மேலும் பல ரும் அதிகமாகக் கூடியிருந்தனர். அவ் வேளையில் சிவஞான சுவாமிகள் நேற் றெழுந்த வினாவுக்கு விடை பகர்வா யாக என்று கச்சியப்ப முனிவரைப் பணித்தனர்.

கச்சியப்ப முனிவர் சபையிலுள்ள சிலரை அழைத்து விடை சொல்லுமுன் கடவுள் வணக்கம் செய்வது நல்லது. இந்தத் திருக்கோயில் ஓதுவாரை அழைத்து திருமுறை ஓதச் சொல்லுங் கள் என்று பணித்தனர். ஓதுவாரை அழைத்துத் திருமுறை ஓதச் செய்தார் கள். வந்து அமர்ந்த ஓதுவார் "திருச் சிற்றம்பலம்" என்று மரபுப்படி சொல்லி "கரவாடும் வன்னெஞ்சர்க்கரி யானைக் கரவார்பால், விரவாடும் பெருமானை விடை ஏறும் வித்தகனை" என்று தொடங்கி பாடுவாராயினர். கச்சியப்ப முனிவர் சபையோரைப் பார்த்து, திரு முறை ஓதுவதை நிறுத்தச் சொல்லுங் கள் என்றார். சபையோர் ஏன் நிறுத் தச் சொல்லுகிறீர்கள் என்று பணிவாகக் கேட்டனர். அதற்கு முனிவர் பெரு மான், திருமுறை ஓதுவார் "கச்சியம் பலம்" என்று முதலில் இந்நகரைக் குறிப் பிட்டுச் சொல்லாமல், எவ்வளவோ தூரத் திலிருக்கின்ற திருச்சிற்றம்பலத்தை முத லில் சொல்லிப் பாடுகிறாரே அப்படிப் பாடலாமா என்றனர். முதலில் திருச்சிற் றம்பலம் என்று சொல்லித்தான் திரு முறை ஓதுவது சைவ மரபு என்று அங் குள்ளோர் கூறினார். அம்மரபு பற்றித் தான் இங்கும் சபாநாயகர் வணக்கம் முதலில் அமைக்கப்பட்டுள்ளது என்று கச்சியப்ப முனிவர் கூறினார். அங்குள் ளோர் பக்தியின் முதிர்ந்த அறிஞர் பெருமக்களாதலின் நுணுக்கமான விடை யின் விளக்கத்தை நன்குணர்ந்து எல் லோரும் ஒன்று சேர்ந்து அரங்கேற்றம் மேலே செய்யலாம் என்று சொல்லி மௌன மாக இருந்தனர். பின் காஞ்சி புரா ணம் பல மாதங்களில் அரங்கேற்றம் செய்யப் பெற்று ஒரு நாள் பூர்த்தி யடைந்தது.

செங்குந்த மரபினரான மணியப்ப முதலியார் சிவஞான சுவாமிகளுக்கும் கச்சியப்ப முனிவர் முதலிய மாணவர் களுக்கும், காஞ்சி புராணம் அரங்கேற் றம் செய்வதற்கும், சிவஞான மாபாடி யம் எழுதுவதற்குமான உபகரணங்களை உடனிருந்து தேடிக் கொடுத்த சிவத் தொண்டுகள் என்றென்றும் செங்குந்த மரபினர்கள் மனதில் பதிந்திருக்க வேண் டுவனவாகும். இவர் வழிவந்த குடும் பத்தினர் பெருகி இன்றும் சாலை வீதியில் வாழ்ந்து வருகிறார்கள். இவர் கள் ஆன்மார்த்த பூசையில் ஆனந்த

காலத்திலேயே பரிபூரணமடைந்த கச்சியப்ப முனிவரின் சமாது நிலைய மண்டபமும் இருக்கின்றன. திருவேகாம்பரநாதர் திருக்கோயிலுக்குச் செல்ல இயலாத நாட்களில் இவர்கள் வழிப்படுவதற்காக ஏகாம்பரநாதர் என்ற பெயருடன் ஒரு சிவலிங்கம் எழுந்தருளிய கோயிலும் தனியே இருக்கிறது.

இம் மடாலயத்தில் சுவாமிகள் 12 மாணவர்களுடன் எழுந்தருளியிருந்த காலங்களில் ஒரு தவசிப் பிள்ளை சுவாமிகளுக்குத் தொண்டு செய்து கொண்டிருந்தார். அவர் பெயர் பூப்பிள்ளை என்பது. இவருக்குச் சுவாமிகள் ஒரு கட்டளையிட்டிருந்தார்கள். அது செங்குந்த மரபினர் வாழும் தெருக்களில் மட்டும் தினமும் ஒவ்வொரு தெருவாகப் போய் ஏழு செங்குந்தர்கள் வீடுகளில் மட்டும் ஏழு பிடி அரிசியை வாங்கி வந்து அதனைத் தனிப் பாத்திரத்தில் இட்டு அமுது சமைத்துச் சிவபூசை நிவேதனத்துக்குக் கொண்டு வந்து படைக்க வேண்டுமென்பதாகும். அக்கட்டளையின்படியே தினமும் தவறாது செய்து வந்தார். ஒரு நாள் ஒரு தெருவில் முதல் வீடாகப் பார்த்துத் தவசிப்பிள்ளை சென்றபோது அவ்வீட்டம்மையார் சுவாமிக்கு இன்று நமது அமுது படியாகவே இருக்க வேண்டும், வேறிடங்களில் வாங்காதீர்கள். என்று சொல்லிப் பாத்திரம் நிரம்ப அரிசியைக் கொண்டு வந்து கொடுத்து நிரப்பி விட்டார்கள். மறுக்கமுடியாத நிலையில் தவசிப்பிள்ளை அப்படியே கொண்டு வந்து திருவமுதமைத்து அதை நிவேதித்து அதனைச் சுவாமிகள் உணவு கொள்ளச் செய்தனர். பின் மாலையில் அநுட்டானம் முடித்துத் தியான நிட்டை கூடுவது சுவாமிகள் வழக்கம். அன்று சுவாமிகளுக்கு நிட்டை கூடவில்லை. சுவாமிகள் தவசிப்பிள்ளையை அழைத்து இன்று 7 வீட்டுப் பிடியரிசியில் ஏதேனும் மாறுதலுண்டோ எனக் கேட்டார்கள். உடனே தவசிப்பிள்ளை நடந்ததைச் சொன்னார். அன்று முதல் சுவாமிகள் கட்டாய உத்திரவாகத் தவசிப்பிள்ளைக்கு அப்படி செய்யாதே என்று கட்டளையிட்டருளினார்கள். தவசிப்பிள்ளையும் அன்று முதல் கட்டளையை மீறாமல் நடந்து வந்தார்.

செங்குந்த மரபினர்களும் சிறப்பாக மணியப்ப முதலியாரும் கேட்டுக் கொண்டதால்தான் சுவாமிகள் காஞ்சிப் புராணம் பாடினார்கள். மணியப்ப முதலியார் வேண்டுகோளின்படி காஞ்சிப் புராணம் பாடினேன் என்று சுவாமிகள் ஒரு செய்யுளில் அவர் பெயரை அமைத்திருந்தார்கள். அதனை அறிந்த மணியப்ப முதலியார் இச் சிறியேனை இப் பெரிய காஞ்சிப் புராணத்தில் வைத்துப் பாடியது அடியேனுக்குத் தகாததாகும். எப்படியும் பெயரை எடுத்து விட வேண்டுமென்று தாழ்மையுடன் வணங்கிக் கேட்டுக் கொண்டார். பின் சுவாமிகள் ''நூல் செய்தற்குக் காரணம்'' என்று தலைப்பு அமைத்த செய்யுளில் ''மணியப்பன்'' என்று வைத்துப் பாடிய அவரது பெயரை முழுதும் எடுத்துவிடுவது நன்றியறிதலுடைமையாகாதென்று கருதி,

''பொருவில் கச்சிய புராணம்
வண்டமிழினிற்புகலென்று
இருநிலம்புகழ் மணி
மதிற்கச்சியேகம்பர்
திருவருட் குரியான்றவர் கூறிய
சிறப்பால்
உரிமையுற் றெழுமாசையா
லுரைத்திடலுற்றேன்''

என்று மாற்றி மணி என்ற நினைவுச் சொல்லமையப் பாடினார். இதனால் மணியப்ப முதலியார் செங்குந்த மரபினருக்கு அழியாப் புகழையும், புண்ணியத்தையும் தேடிக் கொடுத்திருக்கிறார் என்பது புலனாகின்றது.

மணியப்ப முதலியார் மடாலயம் என்று கட்டிக் கொடுத்தார். அதுவே இன்றும் திருவாடுதுறைக்கிளை மடாலயமாக இருந்து வருகிறது. இங்கு, சிவஞான சுவாமிகள் இருந்தெழுதிய திண்ணை, மண்டபம் இவ்விரண்டும் பாஷியத்திண்ணை பாஷிய மண்டபம் என்ற பெயரால் அழைக்கப் பெறுகின்றன.

காஞ்சிப் புராணம் செய்து முடித்த சுவாமிகள் திருவேகம்பநாதர் சந்நிதியில் அரங்கேற்றம் செய்ய நினைத்து மணியப்ப முதலியாரை அழைத்துக் காஞ்சிப்புராணம் அரங்கேற்றம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யப் பணித்தார்கள். மணியப்ப முதலியார் ஏற்ற ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கி ஆயிரக்கால் மண்டபத்தை அலங்கரித்து, வெளியூர் உள்ளூர்ப் புலவர் பெருமக்களையும் பொதுமக்களையும் சேர அழைத்து சபையைக் கூட்டிச் சுவாமிகளிடம் தெரிவித்தனர். சிவஞானச் சுவாமிகள் அப்போது உடனிருந்த மாணவர்களுடனும் புலவர் திலகங்களுடனும் ஆயிரக்கால் மண்டபம் சென்று அமர்ந்தனர். காஞ்சிப் புராண அரங்கேற்ற விழா தொடங்கியது. சிவஞான சுவாமிகள் பொது விநாயகர் தோத்திரப் பாடலையும், சிறப்பாகத் தலவிநாயகர் விகட

இதனை தில்லை நடராஜப் பெருமான் உலகறியச் செய்த வரலாறு ஒன்று உண்டு.

சைவசித்தாந்த சாத்திரங்கள் மொத்தம் பதினான்கு. அதில் எட்டு நூல்களை உமாபதி சிவம் என்கின்ற சிவாச்சாரியப் பெருமானார் இயற்றினார். அவை சித்தாந்த அட்டகம் என வழங்கும். ஒவ்வொரு நூலும் ஞானக் களஞ்சியம். அதில் கொடிக்கவி என்ற நூல் பிறந்ததே ஒரு வரலாராகும்.

உமாபதி சிவாச்சாரியார் பிறப்பால் அந்தணர். தில்லை அம்பலவனைத் தீண்டி வழிபாடு ஆற்றும் பேறு பெற்றவர். ஆகமத்தில் ஒன்றான பௌட்கராகமத்திற்கு வடமொழியில் பேருரை வகுத்த பண்டிதர். அவர்தம் துதி நலத்தையும் மதிநலத்தையும் பாராட்டி அவர் காலத்தில் ஆட்சியில் இருந்த மன்னன் பல விருதுகளை அளித்திருந்தான். அந்த விருதுகளில் பல்லக்கும் பரிவாரமும் பகல் விளக்கும் அடங்கும். அதாவது பகலாயிருப்பினும் அவரைச் சுமந்து கொண்டு பல்லக்கு போகுமிடங்களிலெல்லாம் முன்னால் தீவட்டி ஒன்று மரியாதை காரணமாக எடுத்துச் செல்லப்படும்.

ஒருமுறை இந்த விருதுகளோடு தில்லையில் சென்று கொண்டிருந்த போது அங்கே ஒரு வீதியில் ஒரு வீட்டின் புறத்திண்ணையில் அமர்ந்து அருகமர்ந்த அன்பர்களுக்கு சிவஞான போதத்தின் சீரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்த மறைஞானசிவம் என்னும் சந்தான குரவரில் ஒருவர் கண்டார். உமாபதி சிவாச்சாரியாரின் பக்குவ நிலையையும் அவரை ஆட்கொள்ளும் தருணம் வாய்த்ததையும் எண்ணிய அந்த வித்தகச் சித்தர் உமாபதி சிவாச்சாரியார் காதில் படும்படி பட்ட கட்டையில் பகல்குருடு போகுது பார்' என்று கூறினார். பல்லக்கில் சென்று கொண்டிருந்த உமாபதி சிவாச்சாரியார் உடனே மரத்தினால் ஆன பல்லக்கைத் தொட்டுப் பார்த்தார். இதைப் பட்டகட்டை என்றார் அந்தப் பெரியவர் என்று உணர்ந்தார். ''பகல் குருடு' என்று கூறினாரே என்று சிந்தித்த அவர் திரைச்சீலையை விலக்கிப் பார்த்தவுடன் முன் செல்கின்ற பகல் தீவட்டியைப் பார்த்தார். ஓ, பகலிலேயே விளக்கு எடுத்துப் போவதால் பகல் குருடு என்றார் போலும் என உணர்ந்தார்.

சொன்னவர் பெரிய ஞானி என்று உணர்ந்தார். அவர்முன் தான்கொண்ட பெருமிதங்களையும் படாடோபங்களையும் வெறுத்தார். உடனே பல்லக்கினை நிறுத்தி இறங்கி மறைஞான சிவத்தை நோக்கி ஓடி வந்தார். மறைஞான சிவம் அருள் பழுத்த அடியார். அவர் உமாபதி சிவத்தைச் சற்றும் கவனியாமல் விருட்டென்று வெளியே புறப்பட்டார். உமாபதி சிவமோ தன்னை மறந்தவராய் காந்தம் செல்லும் திசையில் எல்லாம் கரியிரும்பு வலிந்தோடுவதே போல் மறைஞான சிவம் செல்லும் இடங்கள் தோறும் பின் தொடர்ந்து பயபக்தியுடன் சென்று கொண்டிருந்தார். இங்கே கவனத்தில் கொள்ள வேண்டியது என்னவெனின் மறைஞான சிவம் குலத்தால் வேளாளர். உமாபதி சிவமோ அந்தணர். ஒரு வேளாளர் பின் புகழ்பெற்ற அந்தணர் திரிந்து சென்ற காட்சி அக்காலத்திய தில்லை வாழ் மக்களிடையே என்ன பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் என்று விளக்கவும் வேண்டுமோ?

மறைஞான சிவம் நேரே செங்குந்தர் வாழ்கின்ற வீதியொன்றில் சென்றார். ஒரு வீட்டின் வாயிலில் நின்று கையைத் தட்டினார். உள்ளே இருந்த செங்குந்தர் வெளியில் வந்து நின்றவுடன் அவரிடம் கையேந்தினார். ஒரு ஞானி கையேந்தியதைக் கண்ட செங்குந்தர் வீட்டிற்குள் சென்று பார்த்தார். உணவு தயாராய் இல்லை. நூலைத் தோய்த்தெடுப்பதற்காக வைத்துள்ள அரிசிக் கஞ்சி இருப்பதைக் கண்டவர் உடனே அதனைக் கொணர்ந்து ஏந்தி நின்ற மறைஞான சிவத்தின் கையில் பெய்தார். அதனை மறைஞான சிவம் அமுதாக எண்ணி உறிஞ்சி அருந்தினார். அருந்தியபோது முழங்கை வழியே கஞ்சி வழிந்தது. வழிந்த கஞ்சியினை உமாபதி சிவம் சிவாமுதமாக எண்ணி தன் கையேந்தி உண்டார். ஊற்றியது செங்குந்தர் வீட்டுக் கஞ்சி; ஏந்தியவர் வேளாளர்; வேளாளர் கைவழியே உறிஞ்சியுண்டவர் அந்தணர்.

இதுவரை ஏறிட்டுப் பார்க்காத மறைஞான சிவம் இப்போது உமாபதி சிவத்தை ஏறிட்டுப் பார்த்தார். தன் சொல் கேட்டு தனக்கு உடைமையான பல்லக்கினையும் விருதுகளையும் ஒதுக்கி விட்டு வந்தான்; அப்போது இவனுடைய எனது என்னும் பற்று இவனை விட்டு விலகியது. இப்போது குலம் பாராது செங்குந்தர் வீட்டுக் கஞ்சியை, என் எச்சிற்பட்ட கஞ்சியை, தான் ஒரு அந்தணன் என்ற செருக்குணர்வு நீங்கி உண்டான்; இப்போது இவனுடைய

கிறான். அவனே செங்குந்தன். உலகில் பிறந்திறந்துழலும் அனைத்துயிர்களும் இறுதியில் சத்துவகுண வாதியாக - கைகோளனாக மாறியே தீர வேண்டும்.

கைகோளனாம் பிறவியே - மாயை என்ற யானையைத் தன் வசப்படுத்தி, ஞானம் என்ற செங்குந்தத்தால் ஆசைகளாகிய பகைகளை வெட்டியெறியும் வாய்மைத் தொழிலையும், உலகத்தவர் ஒழுக்கமாகிய மானத்தைக் காக்கும் ஆடை நெய்தலையும் தம் தொழிலாகக் கொண்டு வாழும் செங்குந்தனாம் பிறவியே — மீண்டும் மீண்டும் பிறப்பிற் செலுத்தும் ஆசையை அடிப்படையாகக் கொண்ட வியாபார வழிபாட்டைக் கொள்ளாது வீடும் வேண்டாத வீரம் அமைந்த வீரசைவ வழிபாட்டைத் தம் வாழ்நெறியாகக் கொண்டு வாழும் வீர சைவக் கைகோளனாம் பிறவியே அனைத்துயிர்களும் கொள்ளும் இறுதிப் பிறவி. இப்பிறப்பில்தான் வாய்மை என்பது முழு அளவில் பயிற்சிக்குள்ளாக்கப் பெறுவதோடு சமயத் துறையிலும் கற்புடைமை வலியுறுத்தப் பெறுகிறது. இப்பிறப்பில் வந்தவனும் அவனுடைய அகவாழ்வும் சமய வாழ்வும் முறையே செங்குந்தன், கைகோளன் என்றும் வீர சைவம் என்றும் நிலைபெற்றன.

உலகில் பெரியது எது?

ஞானத் தாயாகிய தமிழ்க் கிழவியும், ஞான பண்டிதனாகிய தமிழ்க் குழவியும் ஒரு சமயம் சந்திக்க நேர்ந்தது. ''தாயே! உலகில் பெரியது எது?'' என்று வினவினார் ஞானபண்டித சுவாமி.

''பெரியது கேட்கின் எரிதவழ் வேலாய், பெரிது பெரிது புவனம் பெரிது'' என்றார் ஔவைப்பிராட்டியார்.

முருகப் பெருமான் அதனைக் கேட்டு, ''ஓ! புவனந்தான் பெரியதோ '' என்றார்.

''புவனமோ நான்முகன் படைப்பு'' என்று தமிழ்க் கிழவி கூறினார்.

''அப்படியானால் நான்முகந்தான் பெரியவனோ?'' என்று வினவினார் முருகவேள்.

''இல்லை நான்முகனோ கரியமால் உந்தியில் வந்தோன்'' என்று தமிழ்ப் பாட்டி கூறினார்.

''ஓ! அப்படியானால் கரியமால் பெரியவரோ?'' என்று கேட்டார், தமிழ்க் கடவுள்.

''இல்லை, இல்லை. கரியமாலோ அலைகடல் துயின்றோன்'' என்றார் ஔவையார்.

''அலைகடல் பெரியது என்று கூறுகின்றாயோ?'' என்று கேட்டார் செந்தமிழ்ப்பிரியர்

''இல்லை, கடலையும் குறுமுனி உண்டாரே'' என்று ஔவையார் கூறியதும், ''குறுமுனி பெரியவரோ?'' என்று கேட்டார் முருகவேள்.

''இல்லை. குறுமுனியோ கலசதத்திற் பிறந்தோன்'' என்று ஔவையார் கூறினார்.

''கலசம் பெரியதோ?''

''கலசமோ புவியிற் சிறுமண்''

''புவி பெரியதோ?''

''புவியும் உலகைத் தாங்கும் அரவினுக்கு ஒரு தலைப் பாரம் தானே?''

''அப்படியா? அரவமாகிய ஆதிசேடன்தான் பெரியவனோ?''

''அதுவும் இல்லை. அந்த அரவம் உமையவள் சிறு விரல் மோதிரம்தான்''

''பின்னே பெரியவர் யார்? உமையவள் பெரியவளோ?'' என்று வினவினார் வேலவர்

''அப்படியும் இல்லை. ஏனெனில் உமை இறைவர் பாகத்து ஒடுக்கம்''

''அவ்வாறாயின். இறைவர்தாமே பெரியவர்?'' என்றார் இளம்பூரணர்.

''இல்லை, இல்லை. இறைவரோ, தொண்டருள்ளத்து ஒடுக்கம், தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே'' என்றார் ஔவையார்.

உலகிலே எல்லாவற்றைக் காட்டிலும் பெரிது அடியார் பெருமையே!

—வாரியார்

''உயர்ந்தது எது? இழிந்தது எது?''

ஒரு பொருளைக் கொடு என்று இரப்பது இழிந்தது. அவ்வாறு இரந்தோர்க்கு 'ஈயேன்' என மறுத்தலோ அதனினும் இழிவு.

கேட்பதற்கு முன்னே குறிப்பறிந்து, தானே விரும்பிக் கொடுத்தல் உயர்ந்தது; அவ்வாறு கொடுப்பினும் 'கொள்ளேம்' என்பது அதனினும் உயர்ந்தது.

—புறநானூறு

யங்களிலும் கைகோளர்கள் ஆடை தயாரிப்பதைத் தொழிலாகக் கொண்டிருந்தார்கள். உணவும் உடையுமே மானத்தைக் காக்க வல்லவை. பிற ஒருவரின் உதவியின்றியுங் கூட உணவு கிடைப்பதற்கு வழி உண்டு (பழம் முதலியன) ஆனால் உடையானது செய்யப் பெற வேண்டிய ஒன்றே. செங்குந்தர்கள்-கைகோளர்கள் எந்த ஒன்றையும் பண்பாட்டின் அடிப்படையிலேயே நல்லொழுக்கத்தின் அடிப்படையிலேயே காணும் அல்லது எந்த ஒன்றிலும் நடக்குந் தனித்தன்மை வாய்ந்தவர்களாகையால் ஆடையானது புறவுடலில் அமையப்பெறும் மானத்தை மட்டும் காப்பதாக அமையக்கூடாது; உயிர்களின் அகவொழுக்கத்தினையும் அதனுள் அமைந்த மானத்தையும் அவ்வாடை காப்பாற்றும் தன்மை உடையதாக இருத்தல் வேண்டும் என்ற உள்நோக்கத்துடனேயே உலக மக்களுக்கு துணி நெய்து கொடுக்கத் தொடங்கினார்கள். ''செய்யுந் தொழிலெல்லாம் சீர் தூக்கின் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை'' என்ற முதுமொழி தோன்றியது. 'ஒழுக்கம்' என்று சொல்லப்பெறும் உயிரின் மானத்தைக் காப்பதை அடிப்படைப்பொருளாக வைத்துப் புறமானத்தைக் காப்பதை மேற்போக்கான பொருளெனக் காட்டியதாலேயே நெய்யுந் தொழில் உயர்வு பெற்றது. இதனாலேயே காலம், மொழி, சாதி, சமயம் முதலிய அனைத்திற்கும் அப்பாற்பட்டு விளங்கும் ஆகாயநாதன் ஆகிய தில்லைத் திருக்கூத்தப் பெருமானுக்குரிய திருக்கொடியாடையானது கைகோளராலேயே நெய்யப் பெறுதல் வேண்டும் என்பதும் மரபாயிற்று. பஞ்சானது ஆடையாகும் வரை உள்ள அனைத்துச் சிறு தொழில்களிலும் செங்குந்தக் குடும்பம் வாய்மை நெறி மாறாது கடவுளுணர்வோடு செய்து முடித்தலைக் காணலாம். திருவள்ளுவர் இறையுள்ளத்துடனேயே நெய்தல் தொழிலைச் செய்து வந்ததை அவர் வரலாறு கொண்டே தெளியலாம்.

வீரசைவம்:

முதலியார் என்ற பெயருடைய சாதியினர் பலவகையினர். அவர்கள் விஷ்ணு முதலிய பல தெய்வங்களையும் வணங்குபவர். ஆனால் 'செங்குந்தர்' வீர சைவத்தையே தம் சமயமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். திருவள்ளுவர், நக்கீரர் போன்றவர்களை வீரசைவர்கள் எனக் குறிக்கும் வழக்கம் காணப்பெறுகிறது. இஷ்டலிங்க வழிபாடும் முருகனைச் சங்கமராகக் கொண்டு வழிபடும் வழக்கமும் கொண்டு விளங்குகின்றனர்.

வீர சைவம் இஷ்டலிங்க வழிபாட்டைக் கொண்டது. இஷ்டிலிங்கம் என்பது இஷ்டலிங்கம் என மருவியது. மருவியது மட்டுமல்லாமல் மாறுபட்ட முறையிலும் பொருள் கூறப் பெறுகிறது. பக்தன் எதை எதை விரும்புகிறானோ - இஷ்டப்படுகிறானோ அதைக் கொடுப்பது இஷ்டலிங்கம் எனப் பொருள் கூறப்பெறுகிறது. அஷ்டோத்ர அர்ச்சனை செய்தால் இறைவன் ஐந்து காணி நிலம் கொடுப்பான் என்ற வியாபார முறை வீரசைவம் வெறுத்த ஒரு வழிபாட்டு நிலை. இஷ்டி—பார்க்கப்பெறுவது. நம்முள்ளே இருக்கும் சிவ கலையையும், சீவ கலையையும் இணைத்து நம் கையில் நம் குருவானவர் கொடுக்கின்றார். நம்மால் பார்க்கப் பெறாமல் இருந்த அவைகள் நம்மால் பார்க்கப் பெறுகின்றன. ஆகையால் இஷ்டிலிங்கம் எனப் பெறுகிறது. தன்னுள் இருந்து, தன்னைக் காக்கும் தன் தலைவனையன்றி வேறு கடவுளர்களை வணங்குதல் இல்லை என்ற வாய்மையை கொண்டு ஒழுகுபவர்களே செங்குந்தர்; அவர்தம் சமயமே வீரசைவம். செல்வம் பெருக வேண்டும் என்றோ கீர்த்தி பெருக வேண்டும் என்றோ கொண்டாடப்பெறும் எந்த வகையான வழிபாட்டு முறைகளும் செங்குந்தர் குடும்பங்களிற் காணப்பெறுதல் இல்லை.

வாழ்வியற் பயன்:

வாழ்வின் முடிந்த முடிவு இறைவன்ற தாளை அடைந்து இன்பப் பேற்றை எய்துவதே. உயிர்கள் பல வாறான பிறப்புக்களில் பிறந்து, இறந்து முடிவில் முக்குண இயல்புகளை உணரும் மானிடப் பிறப்பை எய்துகின்றன. முக்குண இயல்புகளின் முதிர்ச்சியை முன்னிட்டே பிறவிச் செயல்கள் அமைகின்றன. ஒருவன் முக்குண இயல்பிற் கீழ்ப்பட்ட நிலையிற் பிறந்தாலும் சத்துவ குண இயல்பை மிகுவித்துக் கொண்டால் தான், அந்நெறியில் நின்று, இறைவனை அடைந்து பேரின்பம் துய்க்க முடியும். சத்துவ குணத்தை-அதன் மேன்மையை—உணர்ந்த ஒருவன் எவ்வாறாகப் பிறந்தாலும், சத்துவ குணத்தை மிகுதிப்படுத்த எண்ணித் தொழிற்படுவானேயானால் கைகோளனாகிறான். வாய்மை என்ற பண்பை முதலாக வைத்து நல்லொழுக்கத்தை வளர்த்துக் கொள்ளுவதன் மூலம் சத்துவ குண மேம்பாட்டை வலியுறுத்திக் கொள்ளு

வழக்கம் எனக் கல்வெட்டுக்களால் தெரிய வருகிறது. இவ்வகைப் போர் வீரர் களுக்கு இருவகைத் திறமை வேண்டும். யானையின் மேலிருத்தலும், குந்தப் படையேந்திப் போர் புரிதலும் திறமை யாளராதல் வேண்டும். யானையைத் தனக்கு அடங்கி நடக்குமாறு செய்வதோ டன்றி, போர் செய்யுமாறு அதனைச் செயற்படுத்தவும் வேண்டும். யானையை அடக்குவது என்பது மந்திர மொழியைக் காப்பதாலேயே என்பது அறிஞர்களின் உள்ளக் கிடக்கை. மந்திர மொழியைக் காப்பதாயின் அவர்கள் அக வொழுக் கத்திற் சிறந்து விளங்குதல் வேண்டும்.

படைக் கருவிகளில், 'செம்மை' என்ற பண்புச் சொல்லைச் சேர்த்துச் சொல் லும் மரபு காணப்பெறவில்லை. படைக் கலம் ஏந்தி போர்த்தலைமை வகிக்கும் படைத் தலைவர்கள் அனைவர்க்கும் 'முதலிகள்' என்ற பெயர் உரிமையுடை யதே. ஆயினும் குந்தந் தாங்குதல், யானையை ஏவல் கொள்ளுதல். ஆகிய இரண்டுமே 'வாய்மொழி' எனப்பெறும் ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண் டதே. வாய்மை முதலாகிய நல்லொழுக் கங்களிற் சிறந்து, ஆன்மீக நெறியில் முதுமை பெற்றவர்களே யானையேறிக் குந்தப் போர் செய்வதற்கேற்றவர், அதனாலேயே 'செம்மை' என்ற அடை மொழிச் சொல் சேர்க்கப் பெற்று 'செங் குந்தர்' என வழங்கப் பெறுவோராயி னர் முதலியாராக ஆவதற்கு வீரம் ஒன்று போதும். புறத்து வீரம் மட்டுமே யல்லாமல் நல்லொழுக்கம், வாய்மை தவறாமை முதலிய பல உயர்பண்புக ளடங்கிய அக வீரத்திலும் சிறந்திருந் தால்தான் செங்குந்தராக முடியும். இக் கருத்தைப் பின் வந்த 'கைகோளர்' என்ற சொல் வலிமைப் படுத்தியது.

கைகோள் — ஒழுக்கம். கைகோளர் என்பார் படைத் தலைவராயிருத்தலோடு நல்லொழுக்கத் தலைவர் என்பதையும் உணர்த்தியது. 'கைகோளர்' வாய்மை முதலிய நல்லொழுக்கங்களில் தவறாத தலைமையுடையவர் என்பது கல்வெட்டுக் களால் தெரிய வரும் பொருள். இவர்கள் அரசனுடைய அகப்பரிவாரத்தைச் சார்ந் தவர்களாக இருந்தார்களென்பதையும் கல்வெட்டுக்களே உணர்த்துகின்றன. ''இத்தனை நூறு கைக்கோளர்களை அகப் பரிவாரமாகக் கொண்டிருக்கிறேன் நான்'' என்று பெருமையாகப் பேசிக்கொள்ளும் அரச வாக்கியங்களை நாம் கல்வெட்டுக்க ளால் அறிகிறோம். ஒழுக்கத்தை அடிப் படையாகக் கொண்டு சபதம் செய்ய வல்லவர்களாய் யானையேறி குந்தப் படை தாங்கிப் போர் புரிபவர்களே கைகோளர், செங்குந்தர் எனப் பெற்ற னர். வாய்மொழியே அவர்களின் உயிர்ப் பண்பு. 'வாய்மைக்குடி' என்று திருவள்ளு வர் குறிப்பது இச் செங்குந்தக்குடி எனக் கொள்ளினும் இழுக்கில்லை. ஒரு செங்குந்தன் சபதஞ் செய்தால் அது அனைத்துச் செங்குந்தர்களையும் சாரும். ஒரு குழுவினராகவே அவர்கள் செயல் படுவர். பழையனூர் நீலி வரலாற்றில் இத்தகைய குடிமைப் பண்பைப் பார்க் கிறோம். ஒருவன் உயிர் போனால் எங் கள் எழுபதுபேர் உயிர்களைத் தருகி றோம் என்று கூறியவர்கள்; கூறியவாறே கொடுத்தவர்கள்.

மேலே குறிப்பிடப் பெற்றவைகளி லிருந்து சில உண்மைகளைக் கொள்ள லாம்.

1. செங்குந்தர் : அறத்தை உணர்ந்து, வாய்மையையே நடுநிலையெனத் தாங்கி, அகவீரத் தலைவராய், குந்தந் தாங்கிக் குஞ்சரமிவர்ந்து போர் மேற்கொள்பவர்.

2. கைகோளர் : வாய்மை முதலி யவற்றோடு நம்பிக்கைக்கு நிலைக்கள மாக உள்ள பலவகை ஒழுக்கங்களுக் குத் தலைவராதலின், அரசனால் ஆராய்ந் தெடுத்து அகப் பரிவாரமாக அமைக்கப் பெற்றவர். இவர்கள் குழுவாகச் சபதம் செய்தல், குழுவாகச் சேர்ந்து வாய்மை யைக் காத்தல் முதலிய பண்புகளோடு யானையேறிப் போர் செய்தலையும் மேற்கொண்டிருத்தலால் 'அத்திகோசத் தார்' எனவும் வழங்கப்பெற்றனர். அத்தி —யானை; கோசம்—குழு.

திருநெல்வேலிப் பகுதியில் 'பிள்ளை' என வழங்கப்பெறும் இனத்தாருக்கும் இவ்வாய்மையே அடிப்படைப் பண்பு என்பதையும் இங்கே இணைத்துக் காணுதல் வேண்டும். எனவே முதலியார் என்ற சொல் தாமஸ குணத்தின் அடிப் படையில் வீரத்தை நிலை நாட்டுவதாக அமையலாம். ஆனால் சாத்துவிதக் குணத்தை அடிப்படையாகக் கொண்ட காரணத்தால் வாய்மை முதலிய நல் லொழுக்கங்கள் வளர, அவற்றின் அடிப் படையில் செய்யும் வீரவொழுக்கத்தி னரே 'செங்குந்தர்' எனப் பெற்றார். கைக்கோளர் என்பதும் இவ்வடிப்படை யில் அமைந்த பெயரே.

தொழில்:

குந்தம் ஏந்திப் போரிடுந் தொழில் மேற்கொண்ட காலத்திலும், பிற அமை

மலர்ச்சியும், அக்குணத்தை அடிப்படையாகக்கொண்ட கொள்கைகளின் வளர்ச்சியும், அக்கொள்கைகளைச் செயற்படுத்தும் செயல் வளர்ச்சியும் ஆகிய இவற்றை அடிப்படையாகக் கொண்ட சாதியின் உணர்வு அமையப் பெற வேண்டும் என்பது அனைத்துத் தத்துவ நெறியார்களின் ஒருமித்த கோட்பாடு.

குடிமை:

திருவள்ளுவர் 'குடிமை' முதலாகப் பதின்மூன்று அதிகாரங்கள் கூறியுள்ளார். அவற்றை 'ஒழிபியல்' என்ற தனிப் பிரிவிற் காணலாம். குடிப்பிறப்பு என்பதை இற்பிறப்பு என்றும் வாய்மைக்குடி என்றும் விளக்கிக் காட்டுகின்றார். தொல்காப்பியத்திலும் ''குடிமை'' என்பது காணப் பெறுகிறது. தொல்காப்பியத்திற் காணப்பெறும் ''பிறப்பு'' என்பதற்குச் சாதிமுறைகளில் அமைந்த பெரும் பிரிவுகளாகிய பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்பவைகளையும், 'குடிமை' என்பதற்கு அப்பெரும் பிரிவுகளில் அடங்கிய 'முதலியார்' 'நாடார்', 'பிள்ளை' என்பன போன்ற சிறு பிரிவுகளையும் எடுத்துக் காட்டுகின்றனர். திருமணம் போன்ற நிகழ்ச்சிகளிற் ''பிறப்பு''; ''குடிமை'' முதலிய பத்துக் குணங்கள் இயைய வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். பிறப்பு என்பது சாதியைக் குறிக்குமாயின் குடிமை என்பது எது? மணமக்களின் உடல், உள்ளத்து அமைப்புக்கள் எந்தக் குணத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பதையும் ஆராய்தல் வேண்டும். மணமகன் சத்துவ குண மேம்பாடு உள்ளவனாயின் மணப்பெண்ணும் அவ்வாறே அமைதல் வேண்டும். மணப்பெண் சத்துவகுண மேம்பாடு உள்ளவளாக, மணமகன் தாமச குண மேம்பாடு உள்ளவனாக அமைவானேயானால் அவர்கள் இல் வாழ்க்கை நரகமயமானதே. 'குடிமை' என்பதை வரையறுக்கும் திருவள்ளுவர் சத்துவகுண அடிப்படையிலேயே ஒருவன் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். பிறப்பால் ஒருவன் உயர்ந்த குடிமை இல்லாதவனாக அமையலாம். அவன் தன் முயற்சியால் தாமச குணத்தை அடிமைப் படுத்தி, சத்துவ குணத்தை வளர்த்து, தன் பிறப்பால் அமைந்த சாதியைக் களைந்து, குணத்தால் உயர்ந்த குடிமையுடையவன் ஆக முடியும். இதனாலேயே 'குடிமை' என்பதற்கு விளக்கஞ் சொல்ல முற்பட்ட திருவள்ளுவர் 'ஒழுக்கம் உடைமை குடிமை' என்று விளக்கம் எழுதி காட்டுவாராயினர்.

முதலியாரும் செங்குந்தரும்:

திருக்கைலாயத்திலிருந்து புறப்பட்டு எங்கள் குடி இவ்வாறாக நிலவுலகம் வந்து, வளர்ந்து, பெருமை பெற்றது என்பதை நான் இங்கே எழுதப் போவதில்லை. அதுவே செங்குந்தர்களின் மரபு வழி என்றாலும் அக்கருத்தை ஒப்புவார் எவரேனும் செங்குந்த மரபினர்களிலேயே உள்ளனரா? எனில் ஐயமே.

முதலியார், செங்குந்தர் என்ற இரு சொற்களும் குறிக்கும் பொருள் நிலைகளில் வேறுபாடு உண்டு. முதலியார் என்பது செங்குந்தர்களின் தெருத்திண்ணை. ஆனால் அவர்களுடைய பூஜை அறையே செங்குந்தம் (அ) செங்குந்தர். பலதரப்பட்ட மக்களும் அவர்களைச் சுட்டிக் காட்டுவதற்காகத் தெருத்திண்ணைப் பக்கத்துச் சுவர்களில் மாட்டப் பெற்றிருக்கும் பெயர்ப் பலகை வரையில் அவர் முதலியார்தான். ஆனால் முதலியாரே செங்குந்தர் அல்லர். அந் நிலையிலிருந்து பல படிகளைக் கடந்து, தனி நிலைபெற்று வாழும் தன்மையரே செங்குந்தர்.

'முதலி' என்பது படைத் தலைவர்களுக்கு அளிக்கப்பெறும் பெயர் என்பது வரலாற்றாலும், கல்வெட்டாலும் அறியப் பெறும் சான்று. முருகனுக்குப் படைத் தலைமை பூண்ட காரணத்தால் இவர்கள் 'முதலிகள்' எனப் பெற்றனர் என்பது வரலாறு. திவாகர நிகண்டு என்னும் நூலில்.

''செங்குந்தப் படையர் சேனைத்
தலைவர்
தந்துவாயர் காருகர் கைக்கோளர்''

எனவரும் மக்கட் பெயர்த் தொகுதி வரியிலிருந்து சில உண்மைகளை நாம் அறியலாம். இவ்வடிப்படையில் ஆராய்ச்சியை நிகழ்த்திய அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் காலஞ் சென்ற இரா. இராகவையங்கார் அவர்கள் கோசர்களே 'செங்குந்தர்' என்ற முடிவுக்கு வந்தார். 'குசன்' என்று சொல்லப் பெறும் கௌசிக முனிவன் என்ற விசுவாமித்திர முனிவன் வழிவழி வந்தவரே கோசர். அவர்களே கோளர், கைகோளர் என்று கூறும் கருத்தை நாம் மேலும் ஆராய வேண்டும். எனினும் சில பெயரொப்புமைகளை உளங்கொள்ள வேண்டும்.

'குந்தம்' என்பது திருமால், பீமன் முதலாயினோர்க்கு உரியதாகச் சொல்லப்பெறும் ஒருவகைப் படைக்கலம். யானையின் மேலிருந்து போரிடுபவர்கள் குந்தப் படையேந்திப் போரிடுதல்

7. செங்குந்தரும் வீர சைவமும்

Dr. வை. இரத்தின சபாபதி, வித்துவான், B.O.L., M.A., Ph.D.

முன்னுரை

சமரசம் வேண்டும் என்றும் சாதி பேதமற்ற ஒரு மனித சமுதாயம் உருவாக வேண்டும் என்றும் தத்துவ நெறியார்களும் சமயச் சிந்தனையாளர்களும் கூறிவரும் இந்நாளில் செங்குந்தர் எனத் தனிச் சாதியொன்றையும் வீரசைவம் என்ற ஒரு தனிச் சமயத்தையும் இணைத்து எழுதுவது என்பது உலக ஒருமைச் சிந்தனையாளர்களுக்கு முரண் எனத் தோன்றும். உலக வளர்ச்சியையும் அறிவு வளர்ச்சியையும் இணைத்துப் பார்க்கும்போது, வேற்றுமைகளை வேண்டாம் என்று மறுக்கும் போதே வேறொரு வகையான வேற்றுமையை உண்டாக்கி விடுகிறோம் அல்லது உண்டாகக் காரணமாக நிற்கிறோம் என்ற உண்மை புலப்படுவதை உணரலாம். வேற்றுமைகள் அழிய வேண்டும் என்று பாடுபட்ட அருளாளர்களிடத்திலெல்லாம் ஒரு வகை வேற்றுமை அதே சமயத்தில் வற்புறுத்தப் பெறுவதை நாம் காணலாம். எடுத்துக் காட்டாக, வடலூர் வள்ளற் பெருமானை எடுத்துக் கொள்ளலாம். சாதி சமய வேற்றுமைகள் முற்றும் அழிய வேண்டும் என்று பாடுபட்டதோடு மட்டும் நில்லாமல் அருளமுதம் வழங்கியருளிய அப்பேராளர் மேற்கொண்ட திருப்பணிகளின் விளைவாகத் தோன்றிய கருத்தென்ன? சன்மார்க்கிகள், சன்மார்க்கிகள் அல்லாதார் என்ற வேறுபாடு. எத்தகைய ஒரு கருத்து வாதத்தை எடுத்துக் கொண்டாலும் அதை ஒத்துக் கொள்பவர் ஒரு சாதி; ஒத்துக் கொள்ளாதவர் வேறு ஒரு சாதி எனப்பிரிவுபடும் நிலை இல்லாமல் இல்லை. அருளாளர்களும் சிந்தனையாளர்களும் கண்டித்த வேறுபாடுகளெல்லாம் பிறப்பையோ உருவத்தையோ அடிப்படையாகக் கொண்ட சாதி வேறுபாடுகளையே காலப் போக்கில் பிறப்பும் தொழிலும் இணையவே அவை காரணமாக எழும் சாதிப் பாகுபாடுகளையும் கண்டித்துரைக்க வேண்டிய நிலைமை உண்டாயிற்று. மனித இனத்தின் சில அடிப்படைப் பண்புகளை ஆதாரமாக வைத்து ஆராய்ந்து, அவ்வடிப்படைப் பண்புகளின் மேலமைந்த வளர்ச்சிப் பண்புகளை நடுநாயகமாகக் கொண்டமைக்கப் பெற்ற சாதிப் பாகுபாட்டினை நாம் முற்றுமே ஒதுக்குதல் இயலாதது.

சாதியின் அடிப்படை

மனிதனுடைய செயல்களுக்கெல்லாம் அடிப்படையாக இருப்பவை மூன்று குணங்கள். சத்துவ குணம், இராசத குணம், தாமத குணம் என்ற அம்மூன்று குணங்களின் பரிணாம அமைப்பினைக் கொண்டே மனிதனின் சிந்தனை, விருப்பம், செயல்கள் முதலியன இயக்கங் கொள்ளுகின்றன. கடவுட் பக்தி, நல்லொழுக்கம், தீயவைகளை நினைத்தல். சொல்லுதல் செய்யாதிருத்தல், புலாலுண்ணாமை முதலியவைகளெல்லாம் சத்துவ குணத்தின் சிறப்பினாலேயே. இவற்றிற்கு நேர்மாறான செயல்களெல்லாம் தாமதம் என்ற குணத்தினால் இடைநின்ற இராசத குணம் என்பது செயற்படுத்துங் குணம். சத்துவ குணத்தோடு சேர்ந்துள்ள இராசத குணம் உயர்ந்த நெறிகளை அல்லது ஒழுக்கங்களை மேற்கொள்ளத் துணை செய்யும். அவ்விராசத குணமே தாமத குணத்தோடு இயையுமானால் நன்மைக்கு மாறான செயல்களில் ஒருவனை ஈடுபடுத்தி நிற்கும். 'இணையற்ற நாடு' என்ற ஒரு நாட்டை அமைக்க வேண்டும் என்று கருதி அந்நாட்டைக் கொள்கையளவில் உருவாக்கிக் காட்டிய கிரேக்கத் தத்துவஞானி பிளேட்டோவும் மக்கட் சமுதாயத்தை இம்மூன்று குண அடிப்படையிலேயே பிரித்து வகைப்படுத்திக் காட்டினான். இந்திய நாட்டிலும் இத்தகைய மூன்று குணங்களை அடிப்படையாகக் கொண்டே பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற நால்வகைச் சாதிகளை உண்டாக்கினர். ஒரே முனிவருக்குப் பிறந்த இரு பிள்ளைகளில் ஒருவன் கடவுளை நம்பலாம்; ஏனையவன் கடவுளை வெறுக்கலாம். பிறப்பால் இருவரும் ஒரு மரபினரேயாயினும் சாதி முறையில் அவர்கள் இருவேறு வகுப்பினர். சத்துவ குண

கோலத்தை விட சீலம் மாறியும் நிற்பது கருதத்தக்கது. அதை உயர்த்துவது நமது கடமை.

திருவள்ளுவர் கூறினார்: ''எவன் ஒருவன் தன் குலத்தினை உயரச் செய்யக் கடவேன் என்று அதற்கேற்ற வினைகளில் ஈடுபடுகின்றானோ அவனுக்கு நான் துணை என்று இறைவன் கச்சை வரிந்து கட்டிக் கொண்டு ஓடி வருவான்'' அந்தக் குறள் வருமாறு:

'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்
(தற்றுதல்-இறுக உடுத்தல் என்பது உரை)

எனவே அவரவர் தத்தம் குலங்கள் உயர்வதற்காகப் பாடுபடுவது தவறல்ல என்பது திருவள்ளுவர் கொடுத்த தீர்ப்பு. ஆனால் இங்கே ஒன்றை நினைவில் கொள்ளுதல் தகும். அதுதான் ஜன நாயகம் என்பது. ஜன நாயகத்தில் ஒருவருக்குள்ள உரிமையைப் பற்றி ஒரு அறிஞர் கூறும் போது அது உன் தடியின் முனையில் முடிவது என்றார். அதைப் போலத் தான் குல உயர்வுக்காகப் பாடுபடுவதும். ஒரு குலத்தின் உயர்வு என்றால் மற்ற குலத்தின் தாழ்வு என்று பொருளல்ல. ஒரு குலத்தின் உயர்ச்சிக்கான முயற்சி மற்ற குலத்தின் உயர்ச்சிக்கான முயற்சியை இழக்காமல், இடையூறு செய்யாமல் பார்த்துக் கொண்டு ஈடுபட்டால் 'குடிசெயல் வகை' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறிய அனைத்துப் பெருமைகளும் நம் தாய்த் திருநாட்டை மேவுவது ஒருதலை.

சிறந்ததொரு பயிற்சிக்களமாம்
செங்குந்த குலம் வாழ்க!
செம்மைநலம் சிறந்தொளிரும்
சைவசித்தாந்தம் வாழ்க!

மக்கள் இல்லாத வீடு பாழானது.
நண்பர்கள் இல்லாத திசை பாழானது.
கல்வி ஞானம் இல்லாதவனுடைய உள்ளம் பாழானது.
உடன் பிறப்பில்லாதவனுடைய உடம்பு பாழானது.
கற்புள்ள மனைவியில்லாதவனுடைய வாழ்வு பாழானது.
வறுமையுள்ளவனுக்கு எல்லாமே பாழ் என்று அறிக.

—வாரியார்

தேங்காய் உடைப்பதன் காரணம்: தேங்காய்க்கு மேலே உள்ள பச்சை மட்டை மாயாமலம்; உரித்து எடுக்கின்ற நார்கள் கன்மமலம்; சந்நிதியில் உடைத்து எடுக்கின்ற ஓடு ஆணவமலம். இந்த மூன்றும் நீங்கினால் வெண்மையான பருப்பு வெளிப்படுகிறது. இறைவனிடத்தில், ''மும்மலத்தை நீக்கி, சுத்த சத்துவ சித்தத்தை அருள வேண்டும்'' என்று குறிப்பிடுவதுவே தேங்காய் உடைப்பதன் உட்பொருள்.

கற்பூரம் எரிப்பதன் காரணம்; கற்பூரம் நெருப்பில் எரிந்து கரியோ சாம்பலோ இல்லாமல் மறைந்து விடுகிறது. அதுபோல் ஆன்மா இறைவனுடைய அருட்ஜோதியில் கரைந்து ஒன்றுபட வேண்டும் என்ற குறிப்பைக் கற்பூரம் உணர்த்துகின்றது.

' தீதணையாக் கர்ப்பூர தீபமென நான்கண்ட
ஜோதியுடன் ஒன்றித் துரிசறுவது எந்நாளோ'' — தாயுமானவர்.

—வாரியார்.

பேச்சுக்கு எட்டு அம்சங்கள் உண்டு; அஷ்டாங்க யோகம் என்றும், அஷ்ட புஷ்பம் என்றும் கூறுவதுபோல், பேச்சும் எட்டுவித உறுப்புக்களை உடையது.

பேச்சுக்கு உண்மை, நன்மை, அன்பு, நிதானம், இனிமை, ஆழம், சமயமறிதல், சபையறிதல் என்ற இந்த எட்டுத் தன்மைகள் அமைதல் வேண்டும்.

1. உண்மையே பேசுக
2. நன்மையே பேசுக
3. அன்பாகப் பேசுக
4. நிதானமாகப் பேசுக
5. இனிமையாகப் பேசுக.
6. ஆழமுடையதாக சிந்தித்துப் பேசுக
7. சமயம் அறிந்து பேசுக
8. சபையறிந்து பேசுக

பேசுவதெல்லாம் பேச்சாகாது. பேச்சு ஒரு சிறந்த கலை.

—வாரியார்

யான் என்னும் பற்று நீங்கியது. யான் எனது என்னும் பற்றுக்கள் நீங்கிய இவன் தீக்கைக்கு உரியவன் என்று எண்ணி மறைஞான சிவம் உமாபதி சிவத்திற்கு உடனே பரிசதீட்சை கொடுத் தருளினார். அது மட்டுமா? கேட்டறி யாத கேள்வியாக சித்தாந்த நுட்பங்க ளையெல்லாம் உமாபதிசிவம் மறை ஞான சிவத்திடம் பெற்றார். சாத்தி ரத்தை இதுவரை ஓதிவந்த அந்தணர் நேத்திரத்தில் நேராக நெற்றிக் கண் நிமலனைக் கண்டார். ஆனந்தங் கொண் டார். தமக்கு இப்பேறளித்த மறை ஞான சிவத்தையே குரு முதல்வராக வந்தித்தார்; வழிபட்டார்.

இதற்கிடையே செய்தி காட்டுத் தீயாகப் பரவியது. தில்லை வாழந்தணர் கள் உமாபதி சிவத்தைப் புறகு என ஒதுக்கி வைத்துவிட்டார்கள். இதுவும் இறைவன் செயல் என எள்ளளவும் வருத்தமின்றி கையில் பூஜைப் பெட்ட கத்தோடு தில்லையின் மருங்கில் உள்ள கொற்றவன் குடியில் ஓரிடத்தில் தங்கி சித்தாந்த நூல்களைச் செய்து கொண்டு வந்தார் உமாபதி சிவம். வருடம் கழிந்தது. ஆனித் திருமஞ் சன நாள் உற்சவம் எய்தியது. உற் சவத்தின் பொருட்டுக் கொடியேற்றம் செய்தல் வழக்கம். தில்லை வாழந்தணர் கள் கொடித் தூணில் கொடியேற்றுவ தற்கு எத்துணை முயற்சி எடுத்தும் பலனில்லை; கொடி ஏறவில்லை. இது ஏதோ ஒரு தெய்வக் குற்றத்தால் நேர்ந் தது என உணர்ந்த தில்லை வாழந்த ணர்கள் கற்றாலின் மனம் போலக் கசிந்துருகி வழிபட்டார்கள். உருக்கத்தின் முறுக்கத்தில் உமைகாண கொடுகொட்டி ஆடிய கூத்தன் ஒலிக் குறிப்பை வானில் அருவாய் எழுப்பினான். ''நாம் கொற்ற வன்குடியில் வாழ்கின்ற உமாபதிசிவத் தின் பூஜைப் பெட்டகத்தினை இடமாக தேர்ந்தெடுத்து இருந்து வருகிறோம். எனவே உமாபதி சிவம் இங்கே வந் தால்—உமாபதி சிவம் வந்து இங்கே கொடியேற்றம் நிகழ்த்தினால்—நாமும் இங்கே எழுந்தருளுவோம்'' என்ற விண் ணொலியை உருவிலியாக எம்பெருமான் எழுப்பியதைக் கேட்ட தில்லைவாழந் தணர்கள் தம் தவற்றினை உணர்ந் தார்கள். உமாபதி சிவத்தினை பெருமை யோடு கொணர்ந்தார்கள். கொடியேற்றி யருளும்படி குறையிரந்தார்கள்.

உமாபதிசிவம் சொன்னார்: செங்குந் தர் குலத்தினர் ஊற்றிய கஞ்சியை உண்டதனால் என்னைப் புறகெனப் புறந்தள்ளினீர்கள். அந்தக் குலத்தினை எளிதாக எண்ணித் தவறு செய்தீர் கள். எனவே இங்கே தில்லையில் கொடி யேற்றம் நிகழ வேண்டுமானால் கொடி யினை முதலில் செங்குந்த குலத்தினரி டம் கொடுங்கள். அவர்கள் தரப் பெற் றுக் கொடியேற்றுவோம்' என்று அருளி னார். அதன்படி தில்லைவாழ் செங் குந்த மரபினரிடம் கொடி அளிக்கப் பெற்றது. அவர்கள் கொடியினை எடுத்து மாடமறுகு நான்கையும் திருமுறைகள் ஓதி வலம் வந்து உமாபதி சிவத்திடம் ஒப்படைத்தார்கள். அதன்பின் உமாபதி சிவம் கொடிக்கவி பாடினார். அக்கவிகள் மொத்தம் நான்கேதான். கவி ஒன்றிற்கு கால்பகுதியாக நான்காம் கவியின் முடி வில் கொடி ஏறியது என்பது வரலாறு.

இந்த வரலாற்றின் வழி கூத்தரசப் பெருமான் செங்குந்தரின் சிறப்பை, அக் குலத்தின் மேன்மையை உலகறியச் செய்தான் என்பது வெளிப்படை. தில் லையில் தீட்சிதர்கள் நடுவே ஏறி யுள்ள கொடி செங்குந்தர்கள் ஏற்றி வைத்த கொடி என்பதை விட செங் குந்த குலத்திற்கு வேறு சிறப்பு என்ன வேண்டும்?

அதனால் தானோ என்னவோ சைவ சித்தாந்த ஞாயிறுகளாகத் திகழ்ந்த பலரும் செங்குந்த மரபினைச் சேர்ந்த வர்களாய் இருந்தார்கள்; இன்னும் இருக்கிறார்கள். வட மொழிக் கடலை யும் தென்மொழிக் கடலையும் நிலை கண்டுணர்ந்த சைவசித்தாந்த திவாகரர் மறைந்த ஞானியார் சுவாமிகள் ஒரு செங்குந்தர். இன்று நாடோறும் நாடெங் கும் சைவ சித்தாந்தத்தைப் பரப்பி வரும் நடமாடும் அருணகிரி நாதராம் வாரியார் சுவாமிகள் செங்குந்த மரபினர். இங்ங னம் ஞானியார் சுவாமிகளிலிருந்து வாரி யார் சுவாமிகள் வரை இடைப்பட்ட பெரியோர்கள் காஞ்சிபுரம் பேராசிரியர் வச்சிரவேலு முதலியார், சிதம்பரம் பேராசிரியர் வெள்ளைவாரணனார், சென்னை புலவரேறு, ந.ரா. முருகவேள் எனப் பலரையும் பட்டியலிடலாம். ஆனால் இடம் அதற்கு ஒரு தடையாக விரிகிறது. உய்த்துணர்ந்து கொள்க; கொண்டால் சைவசித்தாந்தம் செங்குந் தரின் பரம்பரைச் சொத்து என்பது தெற்றென விளங்கும்.

அதுமட்டுமா? தமிழுக்காகத் தம் இன்னுயிரை ஈந்ததல்லவா இந்தக் குலம். ஈட்டியெழுபதைக் கற்றுணர்ந்தார் இதனை அறிவர். அத்துணை மேன்மை படைத்த இந்தக் குலம் மற்றெல்லாக் குலங்களைப் போலவே காலத்தால் கோலம் மாறியும்

8. செங்குந்தர் சிறப்பு

By

A. V. இராமநாதன், M.A.

நாவினால் மழுவெடுத்த ஞானப் பிரகாச வள்ளலார் நம் செங்குந்தரின் குலப்பெருமை, வீரம், இறைவனிடம் பக்தி, அடியார் பக்தி முதலிய பல் வகைப் பண்புகளையும் பாராட்டிப் பாடி இருக்கின்றார். அவர் தெரிவிக்கும் செய்திகள் மிகச் சிறந்தவையாயும், பண்டைப் பெருமையை ஞாபக மூட்டுவன வாயுமுள்ளன. அவைகளுள் சிலவற்றைக் கீழே காண்க.

1. நஞ்சு அயிலும் சிவன் மைந்தர் (சிவகுமாரர்கள் செங்குந்தர்கள்)
2. அறுமா முகவனுக்குப் பாழி மிகும் நம்பியர் (முருகவேள் தம்பியர் செங்குந்தர்கள்)
3. முசுகுந்தச் சக்கரவர்த்தியின் உறவினர்கள் செங்குந்தர்கள்.
4. சீறு புலிக் கொடியுடைய செய வேந்தர் (சீறுபுலிக் கொடியுடையோர் செங்குந்தப் படையாளர்)
5. ஆரூரில் விடங்கரைக் கொண்டு அமைத்திட்ட அன்பாளர் (திரு ஆரூரில் விடங்க ஈசரைத் தாபித்தவர்கள் செங்குந்தர்கள்)
6. தேர் ஊறும் தில்லையிலே கொடியேற்றும் திருவாளர் (தில்லையில் நடராஜன் கோயிலில் கொடியேற்றும் உரிமை உடையோர் செங்குந்தர்கள்)
7. கழுக்குன்றில் சம்பாதிக்கு அமுது ஊட்டும் கைக்கோளர் (திருக்கழுக்குன்றத்தில் கழுகுக்கு அமுது கொடுப்பவர்கள் செங்குந்தர்கள்)
8. காளிவலக் கைத்தாளம் பறித்து ஆர்த்த கைக்கோளர் (திரு ஆலங்காட்டில் சிவனோடு நாட்டியம் ஆடித் தோற்றுப்போன காளியின் கைத்தாளம் பறித்தவர்கள் செங்குந்தர்கள்)
9. முன்பு சூர் வேர் அறுத்த முனை வீரர் (சூரனை வென்றவர்கள் செங்குந்தர்கள்)
10. மட்டு அலர் ஆர் அணி சோழன் துணையாளர் (ஆத்திமாலை அணிந்த சோழனுக்குத் துணையாயிருந்தவர்கள் செங்குந்தர்கள்)
11. முத்திக்கா மகம் புரிந்த முனிவரனுக்கு இடர் ஆற்றும் அத்திக்கார் ஊர்திமுதல் அமரர்தமைப்புறம் கண்ட சத்தித்தாவு ஒரு குந்தப் படையாளர் (முத்திக்காக யாகம் செய்த முனிவனை வருத்திய தேவர்களை, அடக்கியவர்கள் செங்குந்தர்கள்)
12. நகம் படைத்த ஒரு மாது தந்த வய நற்படையார் (நகம் மலை; உமாதேவி கொடுத்த படை வீரர்கள் செங்குந்தர்கள்)
13. காளி எண்கையும் அழப்பிடித்து விண் கடாவி அங்கி முகற்காய்ந்தவர் (காளியை விண்ணில் எறிந்து, அவளை ஏவிய அக்கினமுக அசுரனைக் கொன்றவர்கள் செங்குந்தர்கள்)
14. அன்பர் சூழ் ஏழுவிடங்கம் ஆதிய அரும் தல ஆதிபம் அடைந்துள்ளோர் (சப்த விடங்கத் தலங்களுக்கும் முருகன் திருத்தலங்களுக்கும் அதிபர்களாயிருந்தவர்கள் செங்குந்தர்கள்)
15. வேதனைச் சிறையில் இட்டு விட்டவர் (பிரமனைச் சிறையில் இட்டவர்கள் செங்குந்தர்கள்)

மேலே கூறிய சிறப்புகள் அனைத்துக்கும் வரலாறுகள் உள்ளன. அவைகளை கந்தபுராணம், ஈட்டி எழுபது முதலிய நூல்களில் காணலாம்.

''ஆரூரில் விடங்கரைக் கொண்டு அமைத்திட்ட அன்பாளர்,'' ''தேரூறும் தில்லையிலே கொடியேற்றும் திருவாளர்'' இவ்விரண்டு வரலாறுகளை இம்மலரில் வேறு இடத்தில் காணலாம்.

(இச்செய்திகள், நம் மரபினரின் பெருமைகளை விரிவாகக் கூறுகின்ற வீர நாராயண விஜயம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது)

ராலும் சோழ அரசனுடையது ஆகையால் அஃது சற்றும் ஏறாதிருக்கக் கண்ட அவ்வரசன் வருந்தி, அடியேன் யாதோர் தவறும் இன்றி அரசு செலுத்தி வருகையில் இவ்விதமாகத் துவசாரோகணம் தடைபட வேண்டிய காரணம் என்னையா? எம்பெருமானே! அதை அறிவிக்க வேண்டும் என்று துதித்துக் கண்கலுழ்ந்து நின்றான்.

அக்கால் நடராசப் பெருமான் திருவுளம் இரங்கி, ஓ வளவ, நமது தீக்ஷதர்கள் உமாபதி இடத்தில் அசுத்தமெண்ணித் துரத்தி விட்டதை நீ கவனிக்காமையால் இவ்வித இடையூறு நேர்ந்தது. இப்போதே கொற்றவன்குடிக்குச் சென்று அவனையும் அவன் ஆசிரியனுக்குக் கூழ்வார்த்த செங்குந்தர்களையும் அழைத்து வந்து ஏற்றுவித்தால் ஏறும் என்று அசரீரி வாக்கு அருளினார்.

அதுகேட்ட திரியம்பகச் சோழன் ஆனந்த பரவசமாய்த் தில்லைவாழ் அந்தணர்களுடன் சென்று உமாபதி சிவாசாரியாரையும் செங்குந்தத் தலைவர்களையும் நடேசப் பெருமான் திருஅருள் பாட்டினைக் கூறி அழைத்து வந்து துவசாரோகணம் செய்வித்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்க, அதற்குச் செங்குந்தர்கள் சம்மதித்தார்கள். ஆயினும் அதுவரையில் அவ்வரசனால் அவ்வுற்சவத்திற்கெனச் செலவு செய்துள்ள பொருள் தொகை எவ்வளவோ அவ்வளவையும் அவனுக்குக் கொடுத்துவிட்டு அவனது பட்டுக்கொடியை விலக்கித் தங்கள் காவிக் கொடியை நிறுத்தி உமாபதி சிவத்தால் ''கொடிக்கவி'' என ஓர் பிரபந்தம் பாடுவித்து அம்மகோற்சவத்தை மிகவும் அற்புதத்தோடு நிறைவேற்றினார்கள்.

அன்றுமுதல் இன்றுகாறும் அத்துவசாரோகண மகோற்சவம் இச்செங்குந்தர் குல திலகர்களாலேயே நிறைவேறி வருகின்றது என்பது உண்மையாகும்.

இவ்வுலகின் கணெல்லாத்தலங்களினும் உள்ள சிவகலைகள் யாவும் அர்த்தசாமத்தில் வந்து ஒடுங்குவதற்குரிய முத்தித்தலமாகிய அத்தலைமைத்தலத்தில்,

''உலகோர் மெச்சப் பொருந்துதிருச்
சிற்றம்பலந்தன்னைச்
செம்பொன்னான் மேயுங்கை
யுற்ற வர்த்தசாமத்திலுள் வாயில்-
தெற்றி
புனை முத்திரையதனைப்
போடுங்கை''

என்ற ஆன்றோர் வாக்கின்படி நாளது காறும் அவர்கள் செய்து வரும் அர்த்தசாம பூசை, காலசந்திபூசை, துவசாரோகண மகோற்சவம், சூரசம்மார மகோற்சவம் முதலிய கயிங்கரியங்களையும், ஏனைய பல தலங்களினும் அவர்கள் பூர்வநடாத்தியும் நாளது காறும் நடாத்திக் கொண்டும் உள்ள கயிங்கரியங்களையும், அவர்களுடைய பிரதாபங்களைப் பற்றியும் அவர்கள் செய்துவரும் சிவபுண்ணியங்களைப் பற்றியும் ஆங்காங்கு செப்பேடுகளினும் சிலைகளினும் பொறித்துத் தாபித்துள்ளனர்.

—மூலம் 1895ம் ஆண்டு ஸ்ரீகாரணீசுரம் திரு. தி. தருமலிங்க முதலியார் அவர்களால் சென்னை இந்து தியலாஜிகல் அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்ட ஒட்டக்கூத்தர் சரித்திரம் இரண்டாம் பதிப்பு பக்கம்: 109, 110, 111.

படிக்காசுப் புலவர் மோரூர்ப் பாம்பலங்காரர் வருக்கைக்கோவையைப் பாடியருளி, பாடுவித்தோனாகிய குமாரசாமிக் காங்கேயன் அவையில் அரங்கேற்றினார். அரங்கேற்றத்தில் புலவர் படிக்காசர் அந்நூலில் பொதிந்துள்ள நயங்கள் பலவற்றையும் விரிவாகக் கூறும் போது குமாரசாமிக் காங்கேயனின் மடிமிசையமர்ந்திருந்த அவன் புதல்வியாகிய சிறுமி படிக்காசுப் புலவரைப் பார்த்த வண்ணமாய் புன்னகை செய்துகொண்டேயிருந்தனள். அதனைக் கண்ணுற்ற அவள் தந்தை 'ஏனம்மா, அவரை ஓயாமல் பார்த்தவாறு புன்னகை செய்கிறாய்' என வினவினார். அதற்குச் சிறுமி, அப்பா அவர்பாட்டு அழகாய் இருந்தது அதை இப்போது சொல்லச் சொல்லே என்று புகழ்ந்தனள். இதனைச் செவிமடுத்த பாவலர் படிக்காசர், ஆகா! இக் கொங்கு நாட்டிலே குழந்தைகளும் கவி பாடும் போலும்! என்று வியந்து, அச்சிறுமி கூறிய சொற்றொடர்களை,

அப்பா அவர்பாட் டழகாய் இருந்ததை
இப்போது சொல்லச் சொல்லே!

என்று அலகிட்டு தளைப்பிரித்துக்காட்டி, இது இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை இரண்டும் விரவி வந்த ஒருகுறள் வெண்பாவாகும் என்று விளக்கினார். அதுகேட்டு அவையோர் அனைவரும் பேருவகையில் மூழ்கினர்.

11. தேரூரும் தில்லையிலே கொடியேற்றும் திருவாளர்

தொகுப்பு : ச. கு. பா. பழநிவேலு
(பொதுச் செயலாளர், தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கல்விச் சங்கம்)

பூர்வம் தில்லைவாழ் அந்தணருளும் சந்தானகுரவருளும் ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் காலத்தில் அத்தில்லையில் அரசாண்டிருந்த திரியம்பகச் சோழராசன் சிவாசாரியாரது பத்திமையையும் அதனால் விளங்கும் தெய்வீகத்தன்மைகளையும் நன்கு உணர்ந்து அவரிடத்தில் தனக்குற்ற மெய்அன்பின் மேம்பாட்டால் சிவிகை-கவிகை-திருச்சின்னம்- சாமரம்-பகற்றீவட்டி என்னும் இவைகளை விருதாகக் கொடுத்து உபசரித்து வந்தான்.

அந்நாளில் ஓர் நாள் உமாபதி சிவம் தாம் அக்கால் ஏற்றுள்ள கட்டளையாகிய ஸ்ரீநடராசப் பெருமானது உச்சிக்கால பூசையை முடிக்குமாறு அச்சின்னங்களோடு சென்று முடித்துவிட்டுச் சிவிகை மீதாரோகணித்து, வெண்கொற்றக்குடை நிழல் தரவும் திருச்சின்னமுதவும் வெண்சாமரை இரட்டவும் பகல் தீவட்டி பிடித்து வரவும் நமது மாளிகை நோக்கிச் செல்லுகையில், எதிர்பட்டு எழுந்தருளிவரும் சந்தானகுரவருள் ஒருவரும் அவதாச்சிரமியுமாகிய மறைஞானசிவம் அவர் வருகின்ற ஆடம்பரத்தைக் கண்ணுற்று, ஏன் ஐயா பகல் குருடரே! என்று உரத்துக் கூவினர்.

அதுகேட்ட உமாபதி சிவம் திடுக்கிட்டுத் திடீரென்று சிவிகையினின்றும் இழிந்து தண்டாகாரமாகப் பணிந்து எழுந்து அவரைப் பின் தொடர்ந்து செல்ல, அவரோடும் வார்த்தையாடிக் கொண்டு சென்ற மறைஞான சிவத்தார்க்குத் தீபனம் உண்டாக, அக்கால் தாம் சென்று கொண்டிருந்த இடம் செங்குந்தர் வீதியாய் இருப்பதைக் கண்டு உமாபதிசிவத்தை நோக்கி, சிவகுமார அனுசர்கள் ஆகிய செங்குந்தர்கள் வீதி இது, ஆகையால் இவர்களிடத்து நம்பசியைத் தீர்த்துக் கொள்ளுவோமாயின் சிவப்பிரசாதமாகும் என்று கூறி, அங்கு நூல்பாவை விரித்துக் கொண்டிருந்த செங்குந்தர்களிடம் சென்று ஆகாரம் தருமின்கள் எனக் கேட்டனர்.

அதுகேட்ட செங்குந்தர்கள் துணுக்குற்று, சுவாமிகளே! தேவரீர் அடியேங்கள் குடிலுக்கு எழுந்தருளின் அறுசுவையோடும் கூடிய அமுது படைக்க ஆவலுடையோம் ஆயினோம் என்று கூறினார்கள். அது வினவிய மறைஞானசம்பந்தர் அங்குச் செங்குந்தர்கள் நூல் தோய்ப்பதற்காகக் கொணர்ந்து வைத்திருந்த புல்லரிசிக் கூழினை நோக்கி இதை பார்க்கத் தடையாது என்று வினவ, அதற்கு அவர்கள்-அந்தோ! இது நாங்கள் நூல் தோய்ப்பதற்காகக் கொணர்ந்த உப்பற்ற புல்லரிசிக்கூழ் என்று ஓத அதற்கு அவர் நீங்கள் கரத்தால் பரிசித்த யாவும் தேவா அமுதத்தினுஞ் சிறந்த சிவப்பிரசாதமாகும் ஆகையால் இன்னும் தடைகூறாது முகந்து பெய்யும் என்று கட்டளையிட, அவர்கள் கட்டளையை மறக்கக் கூடாதவர்களாகி அவ்வாறே முகந்தவர் கரத்திற் பெய்தார்கள். அதை அவர் உண்ணுகையில் அவர் முழங்கையிரண்டிலும் வழிந்த கூழை அருகிலிருந்த உமாபதி சிவாசாரியர் தமது கைகளை ஏந்திப் பிடித்து மாறி மாறி உண்டனர்.

அத்தருணத்தில் அங்கு வழியே எழுந்தருளிய ஏனைய தீக்ஷதர்களில் சிலர் அதனைக் கண்ணுற்று அருவருத்துச் செல்ல, அப்பால் தமது ஆசிரியரை அரிதில் பிரிந்து இல் அடைந்த உமாபதி சிவம் தமது வழக்கப்படி மறுதினம் உச்சிக்கால பூசைக்குச் சபை நோக்கிப் போக, முன்னம் மறைஞான சம்பந்தரின் முழங்கையால் வடிந்த கூழைக் குடிக்கையிற் கண்ட தீஷதர்கள் அவரைச் சபைக்குட் செல்லவொட்டாது தடுக்க, உடனே அவர் சிதம்பரத்திற்கடுத்த கொற்றவன்குடி என்னும் ஊரிற்சென்று வசித்து தமது ஆன்மார்த்தமாய் உள்ள சபா நாயகரைத் தினமும் மனத்தால் பூசித்துக் கொண்டிருந்தார்.

அப்பால் சிலநாட்கள் சென்றபின் ஆனித்திருமஞ்சன மகோற்சவம் நேரிட, அதின் துவசாரோகண உற்சவம் அவ்வூ

யாகிய கூழைப் படையிலும், நடுநிலைப் படையாகிய பேரணியிலும் நின்று போர் புரியும் ஆற்றலுடன் பகைவர் சேனையை இரு பக்கங்களிலும் சென்று வளைத்துப் பொரும் கைகோட்படை வீரராகவும் சிறந்து விளங்கினார்கள். அதுபற்றியே சோழர் கல்வெட்டுகளில் 'கைக்கோளர்' என்ற பெயராற் குறிக்கப் பெற்றுள்ளனர்.

கைக்கோளர் என்னும் சொல் பகைவர் சேனையை இருபக்கங்களிலும் சூழ்ந்து வளைத்துப் போர் புரியும் படைவீரர் என்னும் பொருளில் வழங்கப் பெறுவதாகும். இவ்வாறு சோழமன்னர்களோடு உறவு முறைத் தொடர்பும், மன்னர்களின் நம்பிக்கையும் பெற்ற கைக்கோளராகிய செங்குந்தர்கள் முசுகுந்த சக்கரவர்த்தி காலமுதல் மூன்றாம் இராசேந்திரன் ஆட்சி புரிந்த காலம் வரை சோழ மன்னர்களின் நம்பிக்கைக் குரிய உறுதுணைவராய்ச் சோழர் ஆட்சியில் படைத் தலைமைப் பணி புரிந்து பகைவர்களை வென்று நம் தமிழகத்தைப் பாதுகாத்துப் பேணியும், நம் நாட்டுத் திருக்கோயிற் பணிக்கும், நல்லறங்கள் பலவற்றிற்கும் நிலங்களையும் பொன்னையும் அறக் கொடையாக உளமுவந்து வழங்கியும் வீரத்திலும் ஈகையிலும் சிறந்து விளங்கினார்கள்.

இச் செய்தி சோழ மன்னர்களால் வரையப்பட்ட கல்வெட்டுகள் பலவற்றாலும் அறியப்படும் வரலாற்று உண்மையாகும். செந்தமிழ்க் கடவுளாகிய கந்தவேளின் தம்பிமார்களாகிய வீரவாகு தேவர் முதலிய இலக்கத் தொன்பது வீரர்களின் மரபில் தோன்றி, முசுகுந்தன் முதலிய சோழ மன்னர்களுக்கு எக்காலத்தும் மாறுபடாத உறுதுணையாய் நின்று, பகைவரை வென்றடக்கித் தமிழகத்தினையும், தமிழ் நாட்டுத் திருக்கோயில்களையும், அறநிலையங்களையும் தம் உயிரினும் சிறந்தனவாகக் கொண்டு, பாதுகாத்த பெருமை செங்குந்தர்களாகிய கைக்கோளப் படை வீரர்க்குரிய தனிச் சிறப்பாகும்.

நெற்றியில் திருநீறு ஏன் தரிக்க வேண்டும்?

குடியிருக்கும் வீட்டுக்கு வெள்ளை பூசுவதுபோல், அறிவு-ஞானம்-இறை குடியிருப்பதால் நெற்றியில் திருவெண்ணீறு புனைதல் வேண்டும்.

மேலும் சாணத்துக்கு-சாம்பலுக்கு விஷக்கிருமிகளைப் போக்கும் ஆற்றல் உண்டு தண்ணீரை ஈர்க்கும். நம் வாழ்வும் முடிவில் ஒரு பிடி சாம்பல்தான் என்பதனை உணர்த்தவும் உதவுகிறது. ஆகையால் அறிஞர்கள் இவ்வுயரிய பயன்களைக் கருதி, திருநீறு அணிந்து வந்தனர். நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன் திருமேனி முழுதும் சுடலைப் பொடியினைப் பூசிப் பொலிகிறான். ''நீறில்லா நெற்றி பாழ்'' ஔவையார்

—வாரியார்

பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்கள்

ஜோதிர்லிங்கம்	இடம்	மாநிலம்
சோமநாத்	விராவல் அருகில்	குஜராத்
விஸ்வநாதம்	காசி	உத்திரபிரதேசம்
திருக்கேதாரம்	இமயமலை அடிவாரம்	உத்திரபிரதேசம்
மகாகாளம்	உஜ்ஜயினி	மத்தியபிரதேசம்
ஓம்காரம்	உஜ்ஜயினி அருகில் நர்மதை ஆற்றங்கரையில்	மத்தியபிரதேசம்
த்ரியம்பகம்	நாசிக் அருகில் கோதாவரி உற்பத்தியாகும் இடம்	மகாராஷ்டிரம்
பீமசங்கரம்	பூனாவுக்கு அருகில்	மகாராஷ்டிரம்
கிருஷ்ணேஸ்வரம்	எல்லோராவுக்கு அருகில்	மகாராஷ்டிரம்
வைத்யநாதம்	பாலியில் நார்தேட் அருகில்	மகாராஷ்டிரம்
நாகேஸ்வரம்	தாருகாவனம்	மகாராஷ்டிரம்
மல்லிகார்ஜுனம்	ஸ்ரீசைலம்	ஆந்திர மாநிலம்
ராமநாதம்	ராமேஸ்வரம்	தமிழ் நாடு

திருமால் வழிபட்டு என்னிடம் தரப் பெற்றது. ஆகவே, அவரது இசைவு வேண்டும்', என்றான். அது கேட்ட முசுகுந்த மன்னன் திருமாலை யடைந்து வழிபட்டுச் சோமாஸ்கந்த மூர்த்தியைத் தான் பெறுவதற்கு இசைவு பெற்ற தாக இந்திரனிடம் தெரிவித்தான்.

அதுகேட்ட இந்திரன் அன்று ஈன்ற கன்றினைப் பிரிய நேர்ந்த தாய்ப் பசுவைப் போன்று வருந்தினான். சூழ்ச்சி யால் தெய்வத்தச்சனைக் கொண்டு தன் னிடமுள்ள சோமாஸ்கந்த மூர்த்தியைப் போன்று ஒரு திருவுருவம் அமைக்கச் செய்து, அதனை முசுகுந்தனிடம் தந் தான். அதனைக் கண்ட முசுகுந்தன் தனக்கு அருள் செய்தமூர்த்தி அதுவன்று எனத் திருவருட் குறிப்பால் உணர்ந்து, திருமால் வழிபட்ட மூர்த்தமே தனக்கு வேண்டுமென்றான்.

இந்திரன் அதுபோன்றே ஒன்றன் பின் ஒன்றாக, ஆறு திருவுருவங்களைத் தெய்வத் தச்சனைக் கொண்டு செய்து கொடுத்தான். முசுகுந்தன் ஒவ்வொன்றை யும் தனித்தனியே பார்த்து யான் கேட்ட திருவுருவம் இவற்றுள் ஒன்றும் இல்லை என்றான்.

பின்னர்த் தான் வழிபாடு செய்த சோமாஸ்கந்த மூர்த்தியை முசுகுந்தனி டம் கொடுத்தான். அதுபோன்று செய்த ஆறு திருமேனிகளையும் அவனிடமே கொடுத்து, ''இத்திருவுருவங்களைப் பூவுல கிற்கு கொண்டு சென்று வழிபடுவா யாக'' எனக் கூறினான். அம்மூர்த்திக ளைப் பெற்றுக் கொண்ட முசுகுந்தன், திருமால் வழிபட்டதும் இந்திரனாற் பூசிக் கப் பெற்றதுமாகிய சோமாஸ்கந்த மூர்த்தத்தைத் **திருவாரூர்த் திருக்கோயிலில் எழுந்தருளச் செய்து** நாள் வழி பாடும் திருவிழாக்களும் நடைபெற ஏற்பாடு செய்தான். அவ்வாறே ஏனைய ஆறு திருமேனிகளையும் நாகப்பட்டி னம், திருநள்ளாறு, திருக்காறாயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக் காடு ஆகிய திருக்கோயில்களில் எழுந் தருளவித்து, நாட்பூசனையும் திருவிழாக் களும் நிகழ ஏற்பாடு செய்தான்.

இந்திரன் தான் வழிபட்ட சோமாஸ்கந்த மூர்த்தியை முசுகுந்தனி டம் கொடுத்தபின், தான் வழிபாடு செய்யத் தவறியதால் பொன்னாடு பொலி விழந்தது. இந்திரன் புலையுருவங் கொண்டான். **திருவாரூரில் வீதிவிடங்கப் பெருமான்** என்னும் சோமாஸ்கந்த மூர்த்திக்கு நிகழும் பெருவிழாவிற் பறை யறைந்து புலையுரு நீங்கினான். பழைய உருப்பெற்று விண்ணுலகம் சென்று வானவர்க்கு வேந்தனாய் அமர்ந்து ஆட்சி புரிந்தான்.

விண்ணுலகினின்றும் தான் கொண ர்ந்த வீதி விடங்கப் பெருமானைத் திருவாரூரில் வழிபட்டிருந்த முசுகுந்த மாமன்னன், தன் தலைநகராகிய கருவூ ரில் தன் மகன் அங்கிவன்மனுக்கு முடி சூட்டிக் கயிலாயத்தை யடைந்து, சிவ பெருமான் திருவடி நீழலில் அமர்ந்து பேரின்பமுற்றான். அவனுக்குத் துணை யாய் வந்த வீரவாகு முதலிய இலக் கத்து ஒன்பது வீரர்களும் கந்தவேளை எண்ணித் தவம் புரிந்து, கந்த வெற்பி னையடைந்து, முருகவேளின் திரு வருளின்பத்தில் திளைத்திருந்தார்கள். இச் செய்தி கந்த புராணம் தட்ச காண் டம் கந்தவிரதப் படலத்தில் விரித்து ரைக்கப் பெற்றுள்ளது.

மேற்குறித்த கந்த புராணச் செய்தி யினைக் கூர்ந்து நோக்குங்கால் முருகப் பெருமானுக்குத் தம்பியரான வீரவாகு தேவர் முதலான இலக்கத் தொன்பது வீரர்களும் சோழர் குலத்தோன்றலாகிய முசுகுந்த மாமன்னனுக்குப் படைத்துணை வராக முருகப் பெருமானால் அளிக்கப் பெற்று மானிடவுருவந்தாங்கி முசுகுந்த மன்னனுடன் சோழ நாட்டில் தங்கிய வர்கள் என்பதும், முசுகுந்த மாமன்ன னின் நன்மதிப்புக்குரியராய் உறையூரை அடுத்துள்ள கருவூரில் மன்னன் அளித்த மாளிகைகளில் தங்கியிருந்து மன்னனு டன் மணவுறவு கொண்டு, மன்னவர் மகளிரை மணந்து, வாழ்ந்தவர்கள் என்ப தும், முசுகுந்தன் மண்ணுலகத்து ஏனைய மன்னர்களோடும், விண்ணுலகில் அசுரர் களோடும் நிகழ்த்திய போர்களில் படை முதலிகளாகச் சென்று, பகைவரொடு பொருது, சோழ மன்னனுக்கு வாகை மாலை சூட்டிய பெருவீரர்கள் என்ப தும் நன்கு விளங்கும்.

இவ்வாறு முசுகுந்தனுக்குப் போர் களில் உடனிருந்து உதவிய வீரவாகு முதலிய இலக்கத் தொன்பது வீரர்களின் வழித் தோன்றல்களே செங்குந்த மரபி னர் ஆவர். இவர்கள் போரிற் குந்தம் (ஈட்டி) என்னும் படையினை ஏந்திப் பகைவர்களை எதிர்நின்று போர்செய்து, வெற்றி பெறும் பெருவீரராகி விளங் கினமையால் செங்குந்தர் என அழைக் கப்பெற்றனர்.

இவர்கள் முன்னணிப் படையாகிய தார்ப் படையிலும், பின்னணிப் படை

ஞான நாயகனாகிய முருகப்பெருமான் அவர்களை நோக்கி, நீங்கள் நம் மொழிக்கு உடன்படாது மறுத்து உரைத்தமையால், மானிடவுருவினை அடைந்து முசுகுந்தனுடைய சேனை வீரராய்ப் பூவுலகினை யடைந்து போர் செய்து பின்னர்த் தவம் புரிந்து தேவர்கள் புகழ நம்பால் வருவீராக'' எனப் பணித்தருளினார்.

முருகப் பெருமான் கூறிய மொழிகளைக் கேட்டு நடுங்கிய வீரவாகுதேவர் முதலிய இலக்கத்து ஒன்பது வீரர்களும், 'அடியேங்கள் செய்த பிழையினைப் பொறுத்து அருள்புரிதல் வேண்டும்' என வேண்டி வணங்கிப் பின்பு முசுகுந்த மன்னனுக்குத் துணையாய்ச் சென்றனர்.

முசுகுந்தன் தன் தலைநகராகிய கருவூரில் அவ்வீரர்கள் தங்கியிருத்தற்கு ஏற்ற மாட மாளிகைகளை அமைத்துக் கொடுத்து, அவர்கட்கு மன்னவர் குலத்துக் கன்னியரை மணம் புரிவித்தான். அவ்வீரர்களுள் முதல்வரான வீரவாகு தேவர் புட்பகந்தி என்னும் கன்னியை மணந்து சித்திரவல்லி, அனகன், சனகன் என்னும் மக்களைப் பெற்றார். தம் மகளாகிய சித்திரவல்லியை முசுகுந்த மன்னற்கு மணஞ் செய்து கொடுத்தார். இவ்வாறே ஏனைய வீரர்களும் மன்னவர் கன்னியரை மணந்து, தம் பெண்களை மன்னவகுமரர்க்கு மணஞ் செய்து கொடுத்தும், மன்னவர் மகளிரைத் தம் மைந்தர்க்கு மணம் புரிவித்தும், முசுகுந்தச் சக்கரவர்த்தியின் படைத் தலைவராயிருந்து பகைவரை எதிர்த்துப் பொருது, வாகை சூடி நாட்டினைப் பாதுகாத்து வந்தனர்.

அக்காலத்தில் வலாசுரன் என்னும் அசுரன் தேவேந்திரனை எதிர்த்துப் போர்புரிய வந்தான். வானுலக வேந்தனாகிய இந்திரன் மண்ணுலக மன்னவனாகிய முசுகுந்தச் சக்கரவர்த்தியைத் தனக்குப் படைத் துணையாக வேண்டி அழைத்தான். இந்திரனுக்குப் போரில் உடனிருந்து உதவி புரிதல் வேண்டி முசுகுந்தன், இலக்கத்தொன்பது வீரர்கள் முதலிய தன் சேனையுடன் விண்ணுலகு சென்று அசுரர்களைப் பொருது வென்றான்.

தன் பெரும் பகைவனாகிய வலாசுரனைப் போரில் வென்ற இந்திரன் தனக்குப் போரில் வெற்றியுண்டாகத் துணை புரிந்த முசுகுந்த மாமன்னனைத் தன் அரண்மனைக்கு அழைத்து, அன்புடன் உபசரித்தான்.

திருமால் தமக்கு மகப்பேறு வேண்டிப் பூசனை புரிந்ததும், அவரால் தனக்கு அளிக்கப் பெற்றதும் ஆகிய சோமாஸ்கந்த மூர்த்தியை இந்திரன் நாள்தோறும் பூசனை புரிந்து வந்தான். அவ்வாறு பூசனை புரிந்து கொண்டிருந்த போது ஒரு நாள் உடனிருந்த முசுகுந்த மாமன்னனுக்கு ஒரு நினைவு வந்தது.

எல்லாம் வல்ல சிவபெருமான் தம் திருமைந்தராகிய முருகப் பெருமானும் தன்னிற்பிரிவில்லா உமாதேவியும் திருக் கயிலாய மலையில் உடனமர்ந்து அருள் புரியும் தெய்வக் காட்சி நினைவுக்கு வந்தது.

(சஹ + உமா + ஸ்கந்த: சோமாஸ்கந்தர்—உமையோடும், கந்தனோடும் கூடிய சிவபெருமான் என்பது பொருள். சிவபெருமான் ஒருபாலும், உமாதேவியார் மற்றொருபாலும் இருக்க, அவ்விருவர்க்கும் இடையில் கந்தன் தங்கியிருக்கும் கோலமே—சோமாஸ்கந்த வடிவம் என்பது.)

முசுகுந்த மன்னன் அத்தகைய தெய்வக் காட்சியினை இந்திரனால் வழிபடப்பெறும் சோமாஸ்கந்த மூர்த்தியிற் கண்டு அளவிலா மகிழ்ச்சியடைந்தான்.

அத்திருமேனியை அவன் உற்று நோக்கியபோது ''நீ என்னைப் பூவுலகத்திற்குக் கொண்டு சென்று பூசனை புரிவாயாக'' என்றதோர் அருள்மொழியினை இந்திரன் செவியிற்கேளாதவாறு சிவபெருமான் முசுகுந்த மன்னனுக்கு உணர்த்தியருளினார். அவ்வாறே செய்ய எண்ணிய முசுகுந்த மன்னன் நெஞ்சம் நெக்குருகி, அம்மூர்த்தியைத் துதித்துப் போற்றினான்.

சிவபூசனை முடித்தெழுந்த இந்திரன், போரில் தனக்கு உதவி புரிந்த முசுகுந்தனை நோக்கி, ''போர்த் துணை புரிந்த உனக்கு ஒரு பரிசு அளிக்க விரும்புகிறேன். உனக்கு வேண்டுவது யாது?'' என வினவினான். அதுகேட்ட முசுகுந்தன்: 'அப்பனும், சேயும் அம்மையும்' என எழுந்தருளியுள்ள இந்தச் சோமாஸ்கந்த மூர்த்தியை எனக்கு அளித்தாயானால் யான் அம் மூர்த்தியை எடுத்துச் சென்று, பூவுலகிற் பூசனை செய்ய வாய்ப்பாகும்'' என முசுகுந்தன் தன் விருப்பத்தை எடுத்துரைத்தான்.

அதனைக் கேட்ட இந்திரன், 'இத்திருவுருவம் எனக்குச் சொந்தமானது அன்று.

10. ஆரூரில் விடங்கரைக் கொண்டு அமைத்திட்ட அன்பாளர்

(முசுகுந்தச் சக்கரவர்த்தியும் - செங்குந்தரும்)

புலவர் சொ. முருகேசனார்

சோழர் குலத்தில் தோன்றிய முசுகுந்த மாமன்னன் வானவர் தலைவனாகிய இந்திரன் வேண்டுகோட்கு இணங்கிப் படைத் துணையாகச் சென்று அசுரர்களை எதிர்த்துப் போர் செய்தான். இந்திரனுக்குத் தோற்று முதலில் ஓடிய அசுரர்கள் ஒன்று கூடி, வஞ்சனையால் இருள்படலத்தை யுண்டாக்கி, முசுகுந்தனுடைய கண்ணும் மனமும் இருளடையும் படி செய்தனர். அப்பொழுது இந்திரன் பெரிய பூதம் ஒன்றையனுப்பி முசுகுந்த மன்னனுக்குத் துணை செய்யும்படி கட்டளையிட்டான். அப்பூதம் அசுரர் அனுப்பிய இருட் படலத்தைப் போக்கி, முசுகுந்த மன்னனுக்கு மந்திரவலியும் ஒளியும் தந்து காப்பாற்றியது. அதன்பின் முசுகுந்த மன்னன் அசுரர் சேனையை வென்று இந்திரனுக்கு வெற்றி கிடைக்கச் செய்தான்.

போரில் முசுகுந்தனுக்கு உதவி புரிந்த பூதத்தை நோக்கி இந்திரன் முசுகுந்த மன்னனுடைய தலை நகரங்களுள் ஒன்றாகிய புகார் நகர் என்னும் காவிரிப்பூம்பட்டினத்தில் தங்கியிருந்து உதவிபுரியும்படி கூறினான். அந்தப் பூதம் சோழர் தலைநகராகிய புகார் நகரத்தில் நான்கு தெருக்கள்கூடும் சதுக்கத்தில் தங்கியிருந்து, தீயோரைத் தண்டித்து நல்லோரைப் பாதுகாத்து வந்தது. வீரர்களுக்கு வெற்றியுண்டாகியது. அது சதுக்கப்பூதம் எனப் பெயர் பெற்றது.

இச்செய்தி சிலப்பதிகாரம் இந்திர விழவூரெடுத்த காதை, கடலாடு காதை ஆகியவற்றுக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரைப் பகுதியாலும், அவ்வுரையிற் காட்டப் பெற்றுள்ள மேற்கோட் செய்யுளாலும் நன்கு விளங்கும்.

விதூமன் என்னும் கந்தருவன் தான் பெற்ற சாபத்தால் முசுவாக (குரங்காக) பிறந்தான். ஒரு நாள் அக் குரங்கு வில்வ மரத்தின் மேலிருந்து அதன் கீழிருந்த சிவலிங்கத் திருவுருவத்தின் மேல் படுமாறு வில்வ இலைகளைப் பறித்துப் போட்டது. அதனை அருச்சனையாக ஏற்றருளிய சிவபெருமான் அம்முசுவினைச் சூரிய வமிசத்துத் திலீபன் என்னும் மன்னனுக்கு மகனாகப் பிறக்குமாறு அருள் புரிந்தார்.

அவ்வாறே மன்னன் மகனாகப் பிறந்த அந்தக் குரங்கு சிவபெருமானை நினைந்து வழிபட்டது. தனக்கு முன்னைப் பிறப்பின் நினைவு மறவாதிருக்க, குரங்கு முகமே இப்பிறவியிலும் தமக்கு இருக்க வேண்டுமென வேண்டிக் கொண்டது. இறைவன் அவ்வாறே அருள் புரிந்தார். அதனால் அவன் முசுகுந்தன் என்னும் பெயர் பெற்று விளங்கினான்.

விசித்திரவதி என்னும் பெண்ணை மணந்து கொண்ட முசுகுந்தன், வசிட்ட முனிவரை வணங்கி அவர் பணித்த வண்ணம் கந்தப் பெருமானைப் பல்லாண்டுகள் வழிபாடுசெய்து கந்தவிரதத்தை இனிது நிறைவேற்றினான். அந்நிலையில் ஆறுமுகச் செவ்வேளாகிய முருகப் பெருமான் முசுகுந்தனுக்கு அருள் செய்யும் பொருட்டு, மயில் மீதமர்ந்து தம் தம்பியராகிய வீரவாகு தேவர் முதலிய இலக்கத்து ஒன்பது வீரர்களும், தேவர்களும், பூதகணங்களும் புடை சூழ முசுகுந்தன் முன் எழுந்தருளி, ''நீ விரும்பிய வரங்களைக் கேட்பாயாக' எனத் திருவாய் மொழிந்தருளினார்.

முருகப் பெருமானைக் கண்ணாரக் காணும் பேறு பெற்ற முசுகுந்த மாமன்னன், 'வீரவாகு தேவர் முதலாகவுள்ள இவ்வீரர்களை அடியேனுக்குப் படைத் துணையாக வந்து உதவும்படி அருள் புரிதல் வேண்டும்' என வேண்டிக் கொண்டான். 'அவ்வாறே தருவோம்' என அருளிய கந்தப் பெருமான், வீரவாகு முதலிய வீரர்களை நோக்கி, ''நீங்கள் என்பால் பேரன்புடைய இம்முசுகுந்தன் பால் சென்று, படைத் துணை புரிவீர்களாக'' எனப் பணித்தருளினார். அது கேட்ட வீரர்கள், ''அசுரர்களையழித்துத் தேவர்கட்குத் துணை புரிந்த யாங்கள் மனிதனாகிய முசுகுந்தனுக்கு ஏவல் செய்யும் படை வீரராய் இருக்க உடன்படமாட்டோம்' என மறுத்துரைத்தார்கள்.

9. செங்குந்தர் சமூகமாட்சியும் - ஆங்கிலக் கும்பினிச் சர்க்கார் ஆட்சியும்

(பழம் பாடல்)

சீமைதனில் ஒருதீவு கும்பினி, செங்குந்தர்
சேசமெல்லாம் செழிக்கச்
சென்னப்பட் டணம்லார்டு கெவர்னர்பட் டம்மாறும்,
செங்குந்தர் லார்டுபட்டம்
சேனைதலை முறைகண்ட போதிலும் மாறாது
தேசப்பிர சித்தமாகும்
சீரான கவர்னரவர் எழுவரே; நாடாளும்
செங்குந்த கவர்னர் எழுவர்

தாமச மிலாமலே கலெக்ட்டர், பெருதனம்
தரணிதனில் ஜட்ஜ்நிகராம்
தக்கபுகழ் நாட்டாண்மை தருகாரியக்காரர்
தாசீல் தாரராகும்
தறித்திண்ணை சிங்கா தனத்தினெதிர் மன்னர்முன்
தகுகன்னி நடனமிடவும்,
சாரட்டுக் குதிரைமுதல் வீதியில் உலாவுமே
தன்னுகமை பாவுகுதிரை

மாமேவு நாடேழு சங்கோதி டபாய்த்தனம்
மற்றுசங் கோதிகள் சவான்
வரிசைபெறு துரைகளவர் தீர்ப்புகள் அநீதமாம்
வண்மையுள பாவடிதனில்
வரும்பிராது தீர்ப்புகள் அணுவும் நூல்சாயாது
வாய்மொழி சிலாசாசனம்
வகையான முன்தண்டு கும்பினிக் குண்டங்கே
வாய்த்த தறி முன்தண்டுதான்

நேமமாய் அச்சபையில் உண்டு கைக்கோ லங்கே,
நீடிய குறிக்கோலதாம்
நேரிடில் தப்பிதம் தண்டணைகள் அபராதம்
நேரிலிதுவே சமானம்
நெறியான கும்பினித் துரைகள் செய்யும் நீதியும்,
நெடிய செங் குந்ததுரைகள்
நீதியும் பார்த்திட அதிகமாம் புகழ்கொண்ட
நிசமான செங்குந்தமே!

குறிப்பு: இப்பாடல் கொங்குக் கீழ்க்கரை நாட்டுச் செங்குந்த சமூக நிர்வாக அமைப் பையும், 1857 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி அமைப்பையும் ஒப்பிட்டு அக்காலத்தில் பாடப்பட்டுள்ளது. (ஓலைச் சுவடியிலிருந்து) ஜீ. குமரேசன், எம்.ஏ. இராசிபுரம், சேலம்.

யதும் வாழ்க்கையில் அநுபவபூர்வமாக பயனளித்த நெறிமுறைகளையும் விளக்கியுள்ளேன். இளைஞர்கள் அன்போடும் பண்போடும் வளர்ந்து உன்னத வாழ்க்கை வாழ்ந்து சமூக மேம்பாட்டிற்கும் உதவ மனமார ஆசீர்வதிக்கிறேன்.

கடைசியாக ஒரு ஆசை. மேல்நாட்டினர்—குறிப்பாக அமெரிக்காவில்—தனவந்தர்கள் சமூக சேவை நிமித்தம் கல்விக்காகவும் பொதுஜன நன்மைக்காகவும் அறக்கட்டளைகளை நிறுவியுள்ளனர். Ford Foundation, Rockefeller Foundation, Carnegie Foundation இன்னும் பற்பல இந்தியாவைச் சேர்ந்த Hinduja குடும்பத்தினர் இலண்டனைமையமாகக் கொண்டு அறக்கட்டளைகள் ஏற்படுத்தியுள்ளனர். இந்தியாவிலும் இந்திய தொழிலதிபர்களும் நம் நாட்டில் இதைப் போல செய்துள்ளனர். தவிர, நம் மாநிலத்தில் சில இனத்தார் தங்களுடைய சமூகத்தினரின் நலனுக்காக நிதி திரட்டி உதவி வருகிறார்கள். அவ்விதமே நமது இனத்தாரில் ஆண்டவன் அருளால் செல்வந்தர்களாகவுள்ளவர்கள் தனியாகவோ, கூட்டமைப்புவைத்தோ, கைத்தறியையே நம்பி வறுமையில் உழலும் மக்களுடைய சந்ததிகளுக்கு கல்வி மேம்பாட்டுக்கு பொருளுதவி தந்து அவர்களின் முன்னேற்றத்திற்கும் வளமான வாழ்க்கைக்கும் வகை செய்ய முன்வரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். நமது சங்கம் ஓரளவிற்கு இப்பணியை சிறப்பாக நடத்தி வருகிறது. இது கடலில் கரைத்த பெருங்காயம் அளவில்; மேலும் பன்மடங்கு சிறப்புறச் செய்ய வாய்ப்பு உள்ளது. செம்மை மனம் கொண்ட செல்வந்தர்களின் ஒத்துழைப்பினால் பன்மடங்கு விரிவாக நடத்த முடியும். அவ்வுதவியை தாராளமாக தருவார்களென நம்புகிறேன். என் அபிலாஷை நிறைவேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கின் விளங்கும் விளக்கவர் தாமே.

—**திருமூலர்**

திருப்தி

குச்சு வீட்டில் வாழ்கின்றவன் மச்சு வீட்டில் வாழ்கின்றவனைக் கண்டு இவன் எவ்வளவு சுகமாக வாழ்கின்றான் என்று நெடுமூச்சு விடுகின்றான். மச்சு வீட்டிலே வாழ்பவன் (ஏர் கண்டிஷன் அறை) குளிர்ந்த அறை இல்லையே என்று எண்ணி இதயம் புண்ணாகிறான். அதிருப்தி மனிதனை அழித்துவிடும். திருப்தி மனிதனை வாழ வைக்கும்.

ஆகவே அறிவு படைத்த நாம், நம்மினும் உயர் நிலையில் இருப்பவரைக் கண்டு அதிருப்தியடையாமல் நம்மினும் அவல நிலையிலே உள்ளவரைக் கண்டு திருப்தியடைய வேண்டும். இதுதான் திருப்திக்குத் தக்கவழி.

''தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்றக மகிழ்க''

என்று இந்தக் கருத்தை அழகாக உபதேசிக்கின்றார் குமரகுருபரர்.

இந்தப் பாடல் மிக்க அருமையானது, இதில் ஒரு விளக்கமுந் தருகிறார். கல்வி விஷயத்தில் மட்டும் அப்படியிருக்கக் கூடாது.

கல்வி குறைந்தவன் தம்மினுங் குறைந்த கல்வியுடையானைக் கண்டு திருப்தி அடையக் கூடாது. தம்மினும் மேலான கல்வியாளரைக் கண்டு நாம் நன்கு கல்வி பயில வில்லையே என்று கருத்தழிந்து மேலும் மேலும் கல்வி நலத்தைப் பெறுதல் வேண்டும்.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினும்
கற்றோரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று.

—**வாரியார்**

தும் சீடர்களுக்கும் பக்தர்களுக்கும் போதித்த உபதேசம் "Love thy neighbour as thyself" இந்த தத்துவத்தை இந்து மதத்திலும்''மக்கள் சேவை மகேசன் சேவை'யென்றும், திருமூலனார் 'நடமாடும் கோவில் நம்பர்க்கொன்றீயல் படமாடும் கோவில் பகவற்கதாமே'' என்று அருளியுள்ளார். "Service of man is worship of god'

எத்தனையோ ஜென்மங்கள் (மணிவாசகர் இயம்பியபடி புல்லாகி, பூடாகி, புழுவாகி, மரமாகி, பல்விருகமாகி, பறவையாய், பாம்பாகி, etc.) எடுத்த பிறகு பூர்வ ஜென்ம புண்ணியத்தின் பலனாக நர ஜென்மம் வாய்த்திருக்கிறது. மனிதனுக்கு மாத்திரம் மனசு என்னும் சாதனம் கடவுளால் வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் பயனுள்ளதாக பிரயோகிக்க வேண்டும். ஏழைகளுக்கு இரங்க வேண்டும். பிரதி பலன் நோக்காமல் துன்பப்படுபவர்களின் துன்பத்தைத் துடைக்க முயலவேண்டும். அவரவர்கள் வசதிக்கேற்ப பொருளுதவியோ, சரீர உதவியோ, கடைசி பட்சத்தில் இரண்டும் சாத்தியப் படாதவர்கள் உபசார வார்த்தைகளாலோ, அன்புடன் பச்சாதாபத்துடன் செயல்படவேண்டிம். அதுதான் கடைத் தேற்றும் தர்மம், மறு ஜென்மத்தில் மேலான பிறவியைக் கொடுக்கும் கருவி. ஆங்கிலக்கவிதை ''Abu Ben Adam & the Angel ஞாபகத்திற்கு வருகிறது. மேல்நிலைப் பள்ளிப் பாடப் புத்தகத்தில் உள்ளது. அதனுடைய சாராம்சம் பரலோகத்திலுள்ள தேவன் தன் தூதனை பூலோகத்துக்கு அனுப்பி தேவனை நேசிக்கிறவர்களுடைய பட்டியலைத் தயாரித்துக் கொணரும்படி ஆணையிடுகிறார். பலரை சந்தித்து பல பேர்களை பதிவு செய்து கொண்டு கடைசியாக ஆபுபென் ஆதாமிடம் வந்து கடவுளை நேசிக்கிறாயா என வினவுகிறான். யார் கடவுள் என்று எனக்குத் தெரியாது. அவரைப் பார்த்ததில்லை. தெரியாதவரை எப்படி நேசிப்பது என பதிலளித்தான். தேவதூதன் அப்படியானால் யாரை தேசிக்கிறாய் என வினவ, என் பெற்றோர், குடும்பத்திலுள்ள பந்துக்கள், அண்டை அயலிலுள்ளவர்கள் எல்லாரையும் நேசிக்கிறேன். யாரும் எனக்கு விரோதியில்லை. ஏல்லாரும் எனது நண்பர்களே. எனது அன்புக்குடையவர்களே. அவர்களைத்தான் நான் நேசிக்கிறேன் என, தேவதூதன் உன் பெயரை பட்டியலில் எழுத இயலாது என்றான். ஆபூ, மனிதர்களை நேசிப்பவன் என்று என்பெயரை பதிவு செய்து கொள்ளுங்கள் என்று வினயமாக வேண்டிக் கொண்டான். தூதனும் ஒப்புக்கொண்டு பதிவு செய்தான்.' மறுநாள் தேவதூதன் ஆபுவிடம் வந்தான். என்ன விஷயம் என வினவ தேவன் உன்பெயரை பட்டியலில் முதல் எழுதும்படி பணித்தார் தேவன், என்று சொல்லி புத்தகத்தைக் காண்பித்தான். நான் பள்ளியில் படித்த காலத்தில் ஆங்கிலத்திலும் சரி, தமிழிலும் சரி, பாட புத்தகங்களில் அறநெறியை பிஞ்சு மனங்களில் பதியக் கூடிய வகையில் பாடங்கள் எழுதப்பட்டிருந்தன. சான்றோர்களுடைய சரித்திரங்கள்: மதத் தலைவர்களின் வாழ்க்கை. ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நன்னெறி, நாலடியார், நீதிநெறி விளக்கம், நளவெண்பா, குசேலோபாக்கியானம் இவைகளிலிருந்து பாடல்கள், இதுபோன்ற புத்தியை நல்வழியில் செலுத்தும் அம்சங்கள் அமைந்திருந்தன. அதனால் சிறு வயதிலேயே குழந்தைகள் சிறுவர் சிறுமியர் உள்ளங்களில் நல்லெண்ணங்களை உதயமாக்க வழிவகுத்தன. உபாத்தியாயர்களும் சொல்லும் செயலும் ஒன்று பட்டவர்களாக மாணாக்கர்களுக்கு வழிகாட்டிகளாக இருந்தனர். அதனால் சமூகத்தில் இன்று மலிந்து கிடக்கும் குறைபாடுகள் அன்று இந்த அளவுக்கு காணப்படவில்லை. தர்மத்தை மதித்து நடப்போமானால் தர்மம் நம்மை ரட்சிக்கும் எனும் மனப்பான்மை அந்தரங்கமாக பெரும்பாலான மக்களிடம் பதிவாகியிருந்தது. இதன் உண்மையையும் வாழ்க்கையில் அநுபவபூர்வமாக நான் உணர்ந்திருக்கிறேன்.

தற்கால பாடப் புத்தகங்களின் அமைப்பு வேறு. போதாத குறைக்கு அபத்தமான ஆபாசமான சினிமாப் படங்களும் தொலைக்காட்சிப் படங்களும் நிகழ்ச்சிகளும் இளம் மனங்களை மாசு படுத்துகின்றன. இத்தகைய விஷ வாயுவுக்கு மாற்று என்ன? பெற்றோருடைய கூடிய வரையில் அப்பழுக்கற்ற சீரிய வாழ்க்கை முறையும், நன்னடத்தையும், நற்பண்புகளை புகட்டக்கூடிய நூல்களையும் புராண இதிகாச இலக்கியங்களையும் வாசித்து கூடிய வரையில் அவைகளின் படிப்பினையை உணர்ந்து பின்பற்றுவதே. எனக்கு பயன்தந்தவை திருக்குறளும், ராமாயணமும், மகா பாரதமும். வானதி பதிப்பகத்தில் இரண்டு காவியங்களும் பாரதப் பெரியோர் ராஜாஜி அவர்களால் எளிய வசன நடையில் சிறியோர்களுக்கென்றே எழுதப்பட்டு யாவரும் வாங்கக் கூடிய மலிவு விலையில் கிடைக்கின்றன. இளைஞர்கள் இந்நூல்களைப் பக்தி சிரத்தையுடன் வாசித்துப் பயன் பெருவாராக.

நமது குலமக்களின் இளைய தலைமுறையினருக்கு என் சிற்றறிவிற்கு எட்டி

கிருஷ்ண பரமஹம்சர் அருளியுள்ளார்கள். லௌகிகத்திலும் லட்சியத்தை அடைய இந்த படிப்பினை நூற்றுக்குநூறு பொருந்தும். லட்சிய குறிக்கோளும் திடச் சித்தமும், வைராக்கியமும், உழைப்பும் சேர்ந்தால் எந்த இடையூறும் தகர்த் தெரிந்து லட்சியத்தை அடையலாம். ''தெய்வத்தால் ஆகாது என்னும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்'' ''எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியார் திண்ணியராகப் பெறின்.''

ராபர்ட் புரூஸ் என்று ஒரு அரசன் இருந்தான். அடுத்த ராஜயத்தின் மீது பலமுறை படையெடுத்தும் வெற்றி காணாது மனச்சோர்வடைந்து மல்லாந்து படுத்துக் கொண்டிருக்கையில் சிலந்தி சுவரில் கூடு கட்டுவதை கவனித்தான். பதினாறுதரம் தன் முயற்சி வீணானது. பதினேழாவது முறை வெற்றி அடைந்தது. தோல்வியில் மனம் சிதிலமடையாமல் விடா முயற்சியின் பலனை அறிந்து மறுபடியும் போர்தொடுத்து வெற்றி பெற்றான். நமது நாட்டின் மீது முகமது கஜினி பதினாறு தடவை படையெடுத்து தோல்வியுற்று பதினேழாம் தடவை வெற்றிபெற்றது இந்திய சரித்திரம். படித்தவர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

எத்துறையிலும் பாண்டித்யம் அடைய பாட புத்தகங்களையே நம்பி இருத்தல் முறையன்று. ஆங்கிலத்தில் எல்லாத் துறைகளிலும் uptodate developments & Researsch அடங்கிய நூல்கள் உள்ளன. புத்தகாலயங்களில் கிடைக்கும். அவைகளைப் படித்துக் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். அந்நூல்களின் முழுப்பயனைப் பெற ஆங்கிலத்தில் தேர்ச்சி மிகவும் முக்கியம். தேசப்பற்று என்பதை தவறான முறையில் புரிந்துகொண்டு ஆங்கிலத்தைப் புறக்கணித்தது சாபக் கேடு. ஆங்கிலம் உலகமொழி. ஜப்பான், ஜெர்மனி இதர முன்னேற்றமடைந்த நாடுகளில் ஆங்கிலத்தைக் கட்டாயப் பாடமாக அமைத்திருக்கின்றனர். ஆகையால் முன்னேற அவாவுள்ள மாணவர்கள் ஆங்கிலத்தை கசடறக்கற்க வேண்டும். மற்றும் ஓய்வு நேரம் கிடைக்கும் போதெல்லாம் பொது அறிவூட்டும் நூல்களையும் வாசித்து பொது அறிவை வளர்க்க வேண்டும். பிற்கால வாழ்க்கையில் இதன் உபயோகம் புலப்படும்.

''வித்யா வினயசம்பன்னா'' என்பது வேதவாக்கு. வித்தை பயிலும் போது தன்னையறியாமல் ஒருவித அகங்காரம் தலைதூக்க வாய்ப்புண்டு. திடீர் பணக்காரர்களிடம் உதயமாகும் ஆணவம் போன்ற வியாதியை ஒத்தது. கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு'' எனும் மூதுரையை மனதில் கொண்டு கர்வம், தற்புகழ்ச்சி, பிறரை இகழ்தல் போன்ற குற்றங்களை அகற்றி எல்லாருடனும் பணிவுடனும், அன்புடனும் பண்புடனும் தன்னடக்கமுடனும் பழகக் கற்றுக் கொள்ள வேண்டும். அமரர் அறிஞர் அண்ணா பண்பாட்டிற்கு சிகரமாகத் திகழ்ந்தார். டெல்லி சட்டசபை உறுப்பினராக இருந்த போது எந்த விவாதத்தில் கலந்த பொழுதும் தன் கருத்துக்கு மாறுபட்டவர்களை தரக் குறைவான வார்த்தைகளால் பேசியதில்லை. அப்படியே தினசரி வாழ்க்கையிலும் பண்பாட்டின் திலகமாக வாழ்ந்தார். பாராட்டத்தக்கவும் பின்பற்றவும் அருகதையுடைய குணம் படைத்தவர். அமரர் சத்தியமூர்த்தியும் இத்தகையவரே. இப்பொழுது சட்டசபையில் கைகலப்பு கூட ஏற்படுவதைக்காண தலை குனிய வேண்டியிருக்கிறது.

''மாதுர் தேவோ பவ -பிதுர் தேவோ பவ'' இது வேதவாக்கு. ஔவையார் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' 'தந்தை தாய்ப் பேண்' என்று அருளியிருக்கிறார். இந்த அடிப்படையைக் கடைப்பிடித்து நம்குல இளைஞர்கள், பெற்றெடுத்து அன்புடனும் ஆதரவுடனும் பேணி, பல தியாகங்களைச் செய்து வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தையரை வயோதிகப் பருவத்தில் கைவிடக்கூடாது. பண்பின் முதற்படி பெற்றோரை பாசத்துடன் பராமரித்தல். அதுவே தர்மத்திலெல்லாம் தலைசிறந்த தர்மம். ஆதி சங்கரர், பட்டினத்துப் பிள்ளையார் போன்ற முற்றும் துறந்த துறவிகளும் தாயின் அந்திய காலத்தில் உடனிருந்து அந்திமக்கிரியைகளை மாண்டவருடைய ஆத்ம சாந்திக்காக செய்துள்ளார்களென்றால் பெற்றோருடைய அருமை பெருமைகளுக்கு வேறு சான்று தேவையில்லை.

மற்றொரு நற்பண்பு சிறியோர் பெரியோர் யாவரும் வளர்த்துக் கொள்ள வேண்டியது கடவுள் நம்பிக்கை 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' 'நம்பினோர் கெடுவதில்லை, இது நான்குமறை தீர்ப்பு'. ஆலயவழிபாடு, நாம் வழிபடும் தெய்வத்தின்விக்கிரகத்திற்கு வீட்டில் பூசை செய்தல், மானசீகமாகத் தெய்வத்தை மனதில் உருவகமாக்கி பிரார்த்தித்தல் எல்லாம் சுத்தசித்தியோடு செய்தல் கடவுளின் அநுக்கிரகத்தைப் பெறும் விதிமுறைகளே. இதைத்தவிர இதற்கும் மேம்பட்ட வழி ஒன்று உண்டு. அதுதான் பகவான் இயேசு நாதர் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்த

துறையில் இதர நாடுகளுக்கு முன்னோடியாயிருக்குமென்பது நமது Patriot Saint சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு. அவர் கணிப்பில் இப்பொழுது நிகழ்ந்து கொண்டிருக்கும் அவலங்களெல்லாம்அமை திக்கு முன் புயல் போன்றது; புயல் அகன்று அமைதி நிலவும் என்றார். அம்மகானுடைய சத்தியவாக்கு நிறைவேறுவது நிச்சயம். இந்த மாற்றம் இளம்தலைமுறையினர் கையில்தான் உள்ளது என்று திட்ட வட்டமாகக் கூறியுள்ளார். ஆதலால் எல்லா யுவர்களும் யுவதிகளும் மேற்கூறியபடி அவாவுறுதல் சுவாமிகளினுடைய சத்தியவாக்கை நிறைவேற்றும் சின்னம் என்று கொள்ளலாம்.

ஆசையை யதார்த்தமாக்க இளைஞர் ஒவ்வொருவருக்கும் ஒரு லட்சியம் அவசியம். சிறந்த டாக்டராக வேண்டும், பொறியாளராக வேண்டும், தொழிலதிபராக வேண்டும், வழக்கறிஞராக வேண்டும், நெறிமுறை தவறதா மந்திரியாக வேண்டும்; கணிதமேதையாக வேண்டும் இன்னும் பற்பல அவரவர்களுக்கு நாட்டமுள்ள துறையில் உன்னதநிலை அடைய வேண்டுமென்ற அவா மனதில் வேரூன்றி, உணர்ச்சியினால் உந்தப்பட்டு செயல்பட வேண்டும். உணர்ச்சி வேகம் எழுவதற்கு கல்வியே அடிப்படை; உயர்தர கல்வியின்றி எத்துறையிலும் முன்னேற முயல்வது ஊமைக் கனவாக முடியும்!

செல்வத்திலும் செல்வாக்கிலும்மட்டுமேயல்லாமல் தத்தம் துறைகளில் பேரும் புகழும் பெற்றவர்கள் சிலரின் பட்டியலைக் கீழே காணலாம்.

தமிழ் நாட்டுப் பிரமுகர்கள்

அமரர் முத்துசாமி அய்யர் (சென்னை உயர்நீதிமன்ற முதல் இந்திய நீதிபதி) (சட்டம்)
அமரர் ராமானுஜம் - கணித மேதை (உலகப் புகழ்பெற்றவர்) (கணிதம்)
அமரர் சி.வி. ராமன் - விஞ்ஞானி - ஆராய்ச்சியாளர்(உலகப்புகழ்பெற்றவர்) (விஞ்ஞானம்)
அமரர் ராஜாஜி-முதல் இந்திய கவர்னர்ஜெனரல்-தியாகி (அரசியல்)
அமரர் ஆற்காடு ராமசாமி முதலியார் - (அரசியல்)
அமரர் ஆற்காடு லட்சுமணசாமி முதலியார் - பெண் மருத்துவம் (உலகப் பிரசித்தி பெற்றவர்) (மருத்துவம், கல்வி)
அமரர் சத்தியமூர்த்தி - தேசபக்தர், சிறந்த பேச்சாளர்-தியாகி(அரசியல்)
அமரர் அறிஞர் அண்ணா - தமிழ்நாடு முதல்வர் - தலைசிறந்த பேச்சாளர்(பொது ஜனப்பணி)


பிற மாநில பிரமுகர்கள்

அமரர் எம்.விஸ்வேஸ்வரையா — கிருஷ்ணராஜசாகர் கல் அணையை இந்தியாவில் முதல் முதல் கட்டியவர் - மைசூர் மாநிலத்திற்கு முதல் முதல் மின்சாரம் வழங்கியவர் - மைசூர் மகாராஜாவுக்கு திவான் — (பொறியியல்) உலகப்பிரசித்தி பெற்றவர்.
அமரர் பி.ஆர். அம்பேத்கர் — சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் - தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதி (சமூக சேவை)
அமரர் ராதாகிருஷ்ணன் — தத்துவமேதை - ஜனாதிபதி—(உலகப்பிரசித்திபெற்றவர்) (கல்வித் துறை)
அமரர் கே.எம்.முன்ஷி—பாரத வித்யாபவனின் ஸ்தாபகர் - மத்திய அரசு மந்திரி உத்திரப்பிரதேச கவர்னர் (உலகப்பிரசித்தி பெற்றவர்) (கலாசாரம்)

தொழிலதிபர்கள்

டாடா, பிர்லா, பஜாஜ், கிர்லாஸ்கர் முதலியோர்.

இவர்களுக்கு கல்வி அடிப்படை ஆதாரமாக இருந்து பின்னர், அவர்களுடைய அறிவுத் திறனும் பயிற்சியும், முயற்சியும் அவரவர்கள் துறையில் பரிமளிக்க உதவியது. ஒவ்வொரு இளைஞனும் தன் மனதிற்கிசைந்த ஒருவரை லட்சிய புருஷனாக ஏற்றுக் கொண்டு முழு மூச்சுடன் உழைத்து லட்சியத்தை அடைய முயற்சிக்க வேண்டும் லட்சியத்தின் ஆர்வம் முக்கியம். இதை தளரவிடக்கூடாது. காதலன் காதலியினிடமும் உலோபி பணத்தினிடமும், நீரில் மூழ்கியவன் உயிரின்மீது உள்ள உணர்ச்சி வேகம் வேண்டும் கடவுளை காண்பதற்கு என ஸ்ரீ ராம



திரு. N. தணிகாசல முதலியார், B.E.
10—6—1900



திருமதி ராஜாமணி அமமையார்
3—10—1911

37, தென்கூர் செல்வ விநாயகர் கோயில் தெரு, திருமயிலாப்பூர், சென்னை-4

எல்லாம் வல்ல முருகப் பெருமான் திருவடி மலர்களை சிந்தை செய்து வரும் செங்குந்தர் குலத்திலே தோன்றிய திருவினார், 1008க்கு மேலாக பிறை கண்டவர், மயிலைப் பெருமகனார், 65 ஆண்டுகட்கு முன்னே பி.ஈ. பட்டம் பெற்று பழைய சென்னை இராஜதானியில் பொறியாளராக இருந்து அரும்பெரும் பணிகளை ஆற்றியவர். பழைய ஆந்திரப்பிரதேசத்தில் தலைமைப் பொறியாராக இருந்தவர். தன் தவப்பயனால் நன் மக்களைப் பெற்றெடுத்தவர் (ஒருவர் பொறியாளர், இருவர் அமெரிக்காவில் வாழும் தலைசிறந்த டாக்டர்கள் இருவர். அமெரிக்காவில் பணியாற்றும் சார்டர்ட்டு அக்கவுண் டன்ட்ஸ்) தன் நீண்ட அனுபவங்களைக் கொண்டு நம் இளைய தலைமுறையினருக்கு கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெளிவாகக் கூறுகிறார். அவருடைய கருத்துக்களைச் சிரமேற்கொண்டு நம் சமூக மக்கள் நடப்பார்களாக!

தொகுப்பாசிரியர்.

13. நம் குலப் பெரியவர் Er. N. தணிகாசல முதலியார், B.E. அவர்கள் இளைய தலைமுறையினருக்கு விடுக்கும் செய்தி

இன்று ஒவ்வொருவர்மனத்திலும் வாழ்க் கையில் முன்னேற வேண்டும் என்ற அவா மேலொங்கியிருக்கிறது. நாட்டின் தற் சமய சூழ்நிலையில் பெற்றோர்களும் பிள்ளை பெண்களும் இப்படி ஆசைப்படு வது நியாயமே. மகாத்மா காந்தி பாடு பட்டு தனது உயிரையே பணயமாக வைத்து நமக்குச் சுதந்திரம் வாங்கித் தந்து, சுதந் தர இந்தியாவில் பாலும் தேனும் வழிந் தோட வேண்டும்; இந்திய மக்கள் சீரும் சிறப்புமாக ஆனந்தமாக மனநிறைவு டனும் சாந்தியுடனும் வாழவேண்டுமென் றும் விரும்பினார். ஆனால் அதற்கு நேர்மா றான சூழ்நிலை நிலவுகிறது. வகுப்பு வாதம், வன்முறை, கட்டுக்கடங்காத விலைவாசி உயர்வு, ஊழல், லஞ்சம் பெரும் பான்மையோரிடம் வறுமை தலைவிரித் தாடுகிறது. இந்நிலைக்கு விடிவு உண்டா? நிச்சயமாக உண்டு. எதிர்காலத்தில் பொரு ளாதார மேம்பாட்டிலும் ஆன்மிகத்துறை யிலும் செல்வச் செழிப்பிலும் திகழும் மேற்கத்திய நாடுகளும் ஆச்சரியப்படும் நிலையில் நம்நாடு உயரும்; ஆன் மீகத்

12. சென்னை சபாபதி முதலியார் வீட்டுத் திருமணத்திற்கு வருகை தந்த அருட்பெருஞ் ஜோதி இராமலிங்க சுவாமிகள்

தொகுப்பு : T. S. மணிவேல், B.Sc., சைதாப்பேட்டை.

செங்குந்த மரபினராகிய சென்னை சபாபதி முதலியார், வள்ளல் இராமலிங்க சுவாமிகளைத் தம் வீட்டுத் திருமணத்திற்கு அழைத்திருந்தார். அவ்வழைப்பிற்கிணங்க சுவாமிகள் வந்திருந்தார். ஆனால் திரு மண வீட்டினுள் நுழையாது வெளியே சிறிது நேரம் இருந்து பார்த்தார். ஆங்குள்ள அனைவரும் விலையுயர்ந்த சொக்காய் சரிகைத் தலைப்பாகை, அங்க வஸ்திரம் அணிதல் முதலிய ஆடம்பரங் களில் கருத்தைச் செலுத்துவோராகவும், அம்மாதிரி ஆடம்பரங்களோடு வரு வோர்க்கே அதிக மரியாதை .செலுத்து வோராகவும் இருத்தலை உணர்ந்தார். தான் அவ்வாறு சட்டை, தலைப்பாகை முதலிய ஆடை அலங்காரங்களின்றிச் சென்றால் வாயிற் சேவகன் திருமண இல்லத்திற்குள் நுழையவிடான் என் றெண்ணி எதிர் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டார். அதனையறிந்த அவ்வீட்டிற்குரியவர் சபாபதி முதலியா ருக்கு சுவாமிகள் வருகையைப் பற்றித் தகவல் அனுப்பினார். எதிர்பாராத வகையில் நிகழ்ந்தவற்றிற்காக வருந்திய முதலியார் சுவாமிகளைப் பணிந்து திரு மணத்திற்கு வருமாறு அழைத்தார். அதுசமயம் வள்ளல் இராமலிங்க சுவாமி கள்,

‘‘சோடில்லை, மேல் வெள்ளைச்
சொக்காயிலை நல்ல சோமனில்லை
பாடில்லை கையிற் பணமில்லை
தேகப் பருமனில்லை
வீடில்லை யாதொரு வீறாப்புமில்லை
விவாகமது
நாடில்லை நீ நெஞ்சமே
எந்தவாறினி நண்ணுவையே?’’

என்று பாடி உரிய தலைவருக்குச் சில உண்மைகளைப் புகட்டினார்.

(ஆதாரம்: திருவருட் பிரகாச வள்ளலார் திவ்ய சரித்திரம்—பகுதி 29
ஐந்தாம் திருமுறை
—சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்க வெளியீடு)

பண்பாடு

‘‘எனக்கு அக்கம் பக்கத்தில் குடியிருப்பவர் கூடத் தெரியாது’’; ‘‘இந்த ஊரில் யாரையுமே எனக்குத் தெரியாது; என்னையும் யாருக்கும் தெரியாது’’ - இப்படிப்பட்ட வார்த்தைகளை வெட்கமில்லாமல் பேசுகிறார்கள். இது மனித குலத்திற்கு எவ்வளவு இழிவான - புறம்பான - முரணான - கருத்து என்பதை நாம் சிந்திக்க அறிய வேண்டும். தன்னந்தனியே இருந்து வாழ்ந்து மறைகின்ற மனிதன் இவ் உலகத்திற்குத் தேவையில்லை என்று கடுமையாகவும் கூறி விடலாம். ‘‘நாம் உண்டு; நமது வேலை உண்டு; எதையும் நாம் காதில் போட்டுக் கொள்ளக்கூடாது’’ இப்படிப் பேசுகிற பிறவிகளும் இருக்கத்தான் செய்கின்றன. இப்படிப் பேசப்படுகின்ற வார்த்தைகளை நாம் எளிதாகக் கருதிக் தள்ளிவிடவும் கூடாது. மிகச் சிறிய கருத்துக்கள் போல் இவைகள் தோன்றினாலும் சமுதாயத்தை அரித்து விடுகின்ற வேர்ப்புழுக்கள் இவைகளன்றோ. இத்தகைய வேர்ப் புழுக்கள் போன்ற தம்மை கொண்ட மக்களை மக்களிடையே வாழ விடுதலும் ஆபத்து என்று கூறுதல் தவறாகி விடாது. தனித்து வாழ்கின்றவன் நகைத்து மகிழ்ந்து வாழ்தல் என்பது முடியாதன்றோ? அப்படிப்பட்டவனுக்கு இந்த உலகம் என்ன பயனுள்ளதாக இருக்கப் போகின்றது? அவனும் தான் இந்த உலகத்தினை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? இருளில் கிடப்பவன் எதற்குச் சமம்? அவன் எதைச் செய்ய முடியும்? எதைக் காண முடியும்? ‘இருட்டறையில் இருப்பவன் குருடன்’ என்பது உலகப் பழ மொழியன்றோ?

நன்றி: **திருக்குறளில் நகைச்சுவை**

VI. இலக்கியப் பூங்கா

1. கவிதாசார்வபௌமர், கௌடநெறி புலவர், கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

அமுதகவி K. P. அறிவானந்தம், குன்றத்தூர், சென்னை-69.

எழுசீர் விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஒட்டக்கூத் தர்ரெனவே ஓர்முறை உரைத்திட
உள்ளத்தில் வீரம் பொங்கும்
ஒட்டக்கூத் தர்ரெனவே மறுமுறை உரைத்திட
உயர்வான கவிதை பொங்கும்
ஒட்டக்கூத் தர்ரெனவே மீண்டும் உரைத்திட
உயர்சைவப் பொருள்வி ளங்கும்
ஒட்டக்கூத் தர்ரெனவே ஓயாமல் நினைப்போர்க்கு
ஓங்கும்ஞா னம்து லங்கும். 1

ஒட்டங்கள் வைத்தேதான் பாடுவா ராதலால்
உற்றபெயர் வந்த தென்பார்
ஒட்டவைத் தாரங்கு உடலொடு சிரங்களை
உறுபெயர் பெற்றா ரென்பார்
திட்டமாய்க் காரணம் காண்கிலம் என்றாலும்
திருப்பெயர் உரைத்த வுடனே
ஒட்டவைக் கும்நமது உள்ளங்க ளைத்தமிழில்
உயர்ந்தபொருள் அதுவே யாகும் 2

சர்வத்தை யும்பாடும் ஆற்றலது பெற்றதால்
சர்வக்ஞ கவிஞ ரென்பர்
கர்வமுற் றோர்மருள விரைந்துகவி பாடலால்
*கவிராட்ச னென்று ரைப்பர்
மர்மமாய்க் கவிபல மறைபொருள் கொண்டதால்
மகிழ்கௌடப் புலவ ரென்பர்
பர்வதம் போலுயர் ஒட்டக்கூத் தர்போல
பவனிவந் தவர்கள் யாரோ? 3

மூன்றுதலை முறைகண்டு முதுபெரும் புலவராய்
முழுவாழ்வு பெற்ற சான்றோர்
கோன்முறை மாறினும் நான்மாற லில்லையென
கொற்றங்கள் கண்ட பெரியார்
வான்முட்டும் புகழ்கொண்ட சோணாட்டு மன்னவர்கள்
வணங்கிடும் பெருமை பெற்றார்
ஏன்இன்னும் விளக்கங்கள்! சோழபிதா மகனாக
இலங்கிய பீஷ்ம ரன்றோ? 4

* கவிராட்சன் : கவிராட்சசன் என்பதன் மரூஉ

28

அவரது பொன்னார் திருவடிகளைத் தமது மனதில் துணையாக விருத்தி முதலில், விநாயகர் காப்புக்கூறி, பின்,

''பூவார் புவனையிற் சோமன் றரும்பழி
போனபின்பு
நாவாணர் போற்றிய நாடகங்
கேட்ப நலமுடனே
யாவணர் செங்குந்த ராயிரத்
தெண்டலை கொய்திரத்தப்
பாவாடை யிட்டதுலகமெல்லாம்
புகழ் பாலித்ததே''

எனப்பாயிரம் சொல்லி, அதன்பின்,

மங்கலவாழ்த்து, பிரபந்தம் கேட்டோர் சிறப்பு, சிவாலய பரிபாலனச் சிறப்பு, வம்சாவழிச்சிறப்பு, குந்தப்படைச் சிறப்பு, புலிக்கொடி பெற்றது, தேவர்கள் சிறை மீட்டது, ஈட்டிப்படைச் சிறப்பு, சைவசமய பரிபாலனம், கொடைச்சிறப்பு முசுகுந்த சக்கரவர்த்திக்குப் படைத் துணையானது, காலனுக்கு ஓலையனுப்பியது, தேயங்கள் பலவற்றை வென்றது, பழுவூர் வீரநாராயணர் சிறப்பு, இன்னும் பல வீரர் சிறப்பு, வல்லானை வென்றது, வல்லான் மனைவிக்கு மாங்கலியப் பிச்சை கொடுத்தது, மெய்த்தலை கொடுத்தது, சிரச்சிங்காதனச் சிறப்பு, முதலிய செங்குந்தர் சிறப்புக்கள் பலவற்றையும் விளக்கி எழுபது பாடல்களால் பாடி, ஈட்டி எழுபது என்னும் பெயர் கொண்ட நூலைச் செய்து முடித்து தம் இட்ட தெய்வமாகிய கலைமகளை மனமுருகி தியானித்து,

கலைவாணி நியுலகி விருப்பதுவும்
கல்வியுணர் கவி வல்லோரை
நிலையாகப் புரப்பதுவு மவர்நாவில்
வாழ்வதுவு நிசமேயன்றோ!
சிலைவாண னாவிருந்தா யிரம்புயங்கள்
துணிந்தும் உயர் சீவனுற்றான்
தலையாவி கொடுத்திடுஞ் செங்குந்
தருயிர்
பெற்றிட நீ தயை செய்வாயே!

என்னும் அருமைப் பாடலைக் கூறிப் பிரார்த்தித்தனர். கூத்தரின், பிரார்த்தனையின் கால விசேடமோ? அல்லது அவரின் பரிபக்குவ வாக்கு நிலைமையின் பான்மையோ? ''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்''
என்ற மூதுரையின் தத்துவமோ? தமிழ் தெய்வத்தின் தண்ணருளோ? செங்குந்தர்களின் உண்மை வழிபாடோ? தலைப் பிள்ளைகளது ஆன்மதியாகத்தின் அரும் பெருந்திறனோ? அல்லது செய்தற்கரிய இவர்களது செய்கையை உலகம் வியந்து மகிழ்ந்து பேசவோ? யாதோ? முன்னம் அவ்வுடம்பை விட்டு அறுபட்ட சிரங்கள் தாமே சென்று மீண்டும் அவ்வுடம்போடு சேர்ந்து பொருந்த மாண்ட பிள்ளைகள் அனைவரும் பண்டுபோல் உயிர் பெற்றெழுந்தனர். கண்டாரனைவரும் அதிசயித்தனர். எத்தகையோர்க்கும் அற்புதத்தை விளைவிக்கும், இத்தினக்காட்சி புதுமை! புதுமை!! எனக் கொண்டாடினர். சகலகலாவல்லியின் திருவருட் பேறு பெற்றவர்க்கு எதுதான் சாத்தியமாகாது?

இவ்வளவே, ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது, பாடிய வரலாறாகத் தெரிந்தவை. இவ்வரலாற்றால் செங்குந்தர்கள் தமிழின் பால் வைத்திருந்த பேரபிமானமும், பிரபந்தம் பெறுவதில் காட்டிய பெரு விருப்பமும் இணையற்ற சூரத்தன்மையும், மனத்துணிவும், ஆத்மதியாகமும் விளங்குவதுடன், ஒட்டக் கூத்தருடைய அருட்கவித் திறனும், பெரும் புலமைச் செம்மையும், வாக் சக்தியும், கோதற்ற குணநலமும், மாசற்ற மனநிலையும், உரம் பெற்ற உண்மைப்பக்தியும், தேசுபெற்ற தெய்வ சிந்தனையும், ஊன்றிய உறுதிப்பாடும், சாரதா தேவியின் தண்ணருள் சித்தியும், மற்றும் இவரது உத்தமகுணவிசேடங்களும் நன்கு விளங்கும்.

இதுபற்றிப் புலவர் புராணம் கூறுவது

வெட்டத்தாம் இருகூறாகி
விழுந்தவர் தம்மையெல்லாம்
கிட்டப்பார்த்திருந் தோர் மெச்சக்
கிளர்ந்த வேலவனைப் போற்றும்
இட்டத்தால் பழைய வண்ணம்
இலங்கிடச் செய்து விட்டான்
ஒட்டக் கூத்தன் எனும் நாமம்
உலக முற்றுரைத்ததன்றே.

(தண்டபாணி சுவாமி)

மேற்கூறிய வீர வரலாற்றை உள்ளடக்கி கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர், செங்குந்தப் பெருமக்களுக்கு இருக்கும் வேறு பல தியாகங்களையும் பெருமைகளையும் கூறி ஒரு தனிப் பாடல் வழங்கியுள்ளார்.

நிலைதந்தார் உலகினுக்கும் யாவருக்கும்
மானமதை நிலைக்கத் தந்தார்
கலைதந்தார் வணிகருக்கும் சீவனம்செய்
திடவென்றே கையில் தந்தார்.
விலைதந்தார் தமிழினுக்கு. செங்குந்தர்
என் கவிக்கே விலையாகத் தந்தலை
தந்தார் எனக்கும் ஒட்டக்கூத்தனெனப்
பெயரினையும் தாம் தந்தாரே!

செங்குந்தர் உலகுக்கும், சமூகத்துக்கும், தமிழுக்கும் தமிழ்ப் புலவர்க்கும் தந்தவைகளைப் பட்டியலிட்டுக் காட்டும் இச் சந்தனச் சிந்துப் பாடல், சிந்தையில் மணக்கும் செந்தமிழ்க் கீதமாகும்.

அங்ஙனமாயின், நாம் அவர்கள் கருத்துக்கு முற்றிலும் இணங்க வேண்டுவது தான் முறை என்று தீர்மானித்து திருமுகத்திற் குறித்தவாறு அந்தந்த நாட்டிற்குரிய பங்காசார வீதப்படி அவரவர் மனதை உறுதி செய்து கொண்டு தத்தம் தலைப்பிள்ளைகளது சிரங்களை, முருகனடி வாழ்த்திச்' சேதித்து அவைகளை வண்டிகளில் ஏற்றி உறையூரின் கண்ணுள்ள சோழர் பிரானது அரண்மனைக்குக் கொண்டு வந்து சேர்த்து ஆலூர்ச் செங்குந்தர்களுடன் கலந்து கொண்டனர்.

ஆலூர் செங்குந்தர்கள் அனுப்பிய திருமுகம் பெற்றவர்களுள் திருமலைராயன் பட்டினத்தையடுத்த ஒரு நாட்டாரொழிய ஏனைய நாட்டாரெல்லாம் கொண்டு வந்த சிரங்களைத் தக்கதொரு இடத்தில் சேர்த்து 'ஆயிரத் தெண்மர் சிரங்கள்' சரியாக இருக்கின்றனவா எனப் பரிசோதித்துச் சரிகண்டு கூத்தருக்குத் தங்கள் வருகையையும், தலைப் பொதியினையும், விவரப்பட அறிவித்து அவர் உத்திரவுக்கு எதிர்பார்த்திருந்தனர்.

புலவர் கட்டளை

இஃதறிந்த கவிச்சக்கரவர்த்தி கூத்தர் 'கைக்கோளர்' எனும், செங்குந்த மக்களின் தீரத்துக்கும், சொற்றவறாத வாய்மைக்கும், பிரபந்தம் பெறுவதால் மரபிற்கு உண்டாகும் பெருமைக்கும், அது பெறுதற்காக அவர்கள் துணிந்த அருஞ்செய்கைக்கும், தியாக புத்திக்கும், பெருமித குணத்துக்கும், உற்சாகச் செயலுக்கும் மிக வியந்து அகமகிழ்ந்து அவர்களை நோக்கி! 'நீங்கள் கொணர்ந்துள்ள அரும் பெருஞ் சிரங்களை இத்தமிழ் நாடனைத்தையும் தன்னடிப்படுத்திக் குடிகளை ஒரு குடைக்கீழ் அரசுபுரியும் இவ்வுறந்தை வேந்தனது அழகிய சபா மண்டப வாயினில் ஒழுங்கு பெறச் சிங்காதனம் போல் அடுக்கி, இரத்தப் பாவாடை விரித்து அலங்கரித்து வைமின், நாம் அவ்விடத்து வருகின்றோம்' என்று கட்டளை இட்டனர்.

செங்குந்தர்கள் சிரச்சிங்காதனம் அமைத்து இரத்தப்பாவாடை விரித்தது

கவிச் சக்கரவர்த்தியின் கட்டளையைச் சிரசாகக் கொண்ட செங்குந்தர்கள் அவர் தம் உத்திரவின் வண்ணமே அரசனது சபா மண்டப வாயிலையடைந்து அங்குள்ளார் யாரும் அஞ்சி நடுங்கிப் பிரமித்து அதிசயிக்கும் படியாக ஆயிரத் தெண்மர்களது அருஞ்சிரங்களை வரிசைபடச் சிங்காதனம் போல் அழகு பெற அலங்கரித்து, இரத்தப் பாவாடை விரித்துக் கூத்தர்தம் அரிய வரவுக்கு எதிர்பார்த்திருந்தனர்.

பிரபந்தம் பாடியதைச் சோழனும் பிறருங் கேட்டு மகிழ்ந்தாரென்பது

முன்னமேயே, தமது சமஸ்தானத்துப் புலவர் பெருமானாகிய ஒட்டக்கூத்தர், தம்மிடத்து ஆலூர்ச் செங்குந்தருக்கும், தமக்கும் நடந்த சம்பாஷணைகளையும், அதுபற்றித் தாம் ''ஈட்டி எழுபது'' என்னும் பிரபந்தம் பாடுவதாக ஒப்புக் கொண்டதையும், அது பாடுங் காலத்தையும், விவரப்பட அறிவித்துத் தமது சம்மதத்தையும் பெற்றிருந்தனரானதால், அவர் குறிப்பிட்ட அரிய நாள் அந்நாளாயிருந்ததினால், ''குலோத்துங்க சோழன்'', அருட் கவியாகிய கூத்தரால் நடை பெற இருக்கும் தெய்வீக சம்பவத்தைக் காண்பான் வேண்டித் தமது மந்திரி, பிரதானியர், பந்து வருக்கம், வித்துவசனர், கடை காப்பாளர், கருமாதிகாரர், நிமித்திகப் புலவர் ஆகிய தமக்குரிய பரிவாரத்தினருடனும், மற்றும் தம்மைப் பின் தொடர்ந்த நகர மக்களுடனும், சபா மண்டபத்தை அடைந்து தமக்கென அமைக்கப் பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தனர். பின் தொடர்ந்த பலரும் அவரவர் அந்தஸ்துக்குரிய இருக்கைகளில் வீற்றிருந்தனர்.

பிரபந்தம் பாடத் தொடங்கியதும், முடித்ததும்.

ஆலூர்ச் செங்குந்தர்கட்கு, ஆசனம் அமைக்குமாறு ஆணையிட்டுச் சென்ற கூத்தர் ஸ்நானம் செய்து, சபம், தவம், பிரார்த்தனை, ஸ்தோத்திரம் முதலிய தமது நித்திய கர்மாநுஷ்டங்களை விதிப்படி முடித்துக் கொண்டு, உபாசன மூர்த்தியை உள்ளன்புடன் பூசித்து, வணங்கித் தொழுது, தமது கோரிக்கையை யாதோர் இடையூறுமின்றி இனிது நிறைவேற்றித் தருமாறு பிரார்த்தித்து, நமஸ்கரித்து, விடை பெற்று அப்பூஜா கோலத்துடன் தமக்குரிய விருது வரிசைகளோடு மங்கல வாத்தியம் முழங்கச் சபா மண்டபத்திற்கு எழுந்தருளினர். இங்ஙனம் எழுந்தருளிய புலவர் பெருமான் தமது ஆன்மார்த்தக் கடவுளை அன்புருக அகத்தே வணங்கித் தலைத்தவிசை வலம் வந்து தொழுது, முருகவேளை முழுமனதுடன் வாழ்த்தி, அரசன் அவைக்களத்தில் தமக்கென அமைத்துள்ள ஆயிரத்தெண்மரது சிரச்சிங்காதனத்தின் மீது எழுந்தருளி, பதுமாசனமிட்டு வீற்றிருந்து இனிக் கூறப்புகும் நூல், தன்மை சிறிது நன்மை பெருகுமாறு இருகரங்களையும் தமது சிரத்தின் மீது கூப்பி, நாமகளை நாவார நலம் பெறத்துதித்து,

பொழுது சோழர்க்கு இராஜதானியாக இருந்த உறையூரடைந்து, இராசராச சோழனைக் கண்டு, புவனையில் ஆவூர்ச் செங்குந்தர்கட்கும், தமக்கும் நடந்த சம்பாஷணைகளையும், தமக்காகச் சோமன் காட்டிய அரிய செயலையும், இனித்தாம் நடாத்தப்புகும் அரிய காரியத்தையும், அது நடைபெறுங் காலத்தையும் விவரமாக விளம்பினர். புதுமையும் ஆதிசயமுமாயுள்ள இவ்வருஞ் செயலைக் கேட்ட வேந்தன் வியந்த சிந்தையனாய்க் கவிப் பெருமானின் புலமைத் திருவிளையாடலுக்குப் பெரிதுங் களித்து அத் தெய்வீகம் நிகழும் சுபதினத்தை எதிர் பார்த்திருந்தனன்.

சபை கூட்டி ஆலோசித்தது.

கூத்தர் பால் விடை பெற்றுச்சென்ற செங்குந்தர்கள் இனி, ஆக வேண்டியிருக்கும் பெரு விஷயத்திற்காக ஓர் மகா சபை கூட்டி அதில், பிரபந்தம் பெற விருக்கும் விருப்பத்தையும், அது பாடுவோரின் பெரும் புலமையையும், பாடுதற்காக அவர் பரிசாக விரும்பும் தலைப் பிள்ளைகள் சிரமும், அவைகளைத் தருவதாகத் தாங்கள் சம்மதித்திருப்பதையும் அத் தலைகள் இன்ன காலத்தில், இன்ன இடத்தில், கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்ற விவரத்தையும், பிரபந்தம் பாட நிச்சயித்துள்ள நன்னாளையும் பற்பல வாறு ஆலோசித்து முடிவாக ஏகமனதாய்ச் சம்மதித்துத் தீர்மானஞ் செய்து அத்தீர்மானத்தின் சுருக்கத்தை ஒரு திருமுகத்தில் விவரப்பட எழுதித் தங்களை ஒத்த நாட்டினர் பலர்க்கும் தூதுவர் மூலம் அனுப்பி வைத்தனர்.

திருமுகம் பெற்ற ஒவ்வொரு நாட்டாரும், திருமுகத்திற் கண்டுள்ள விஷயத்திற்கு அதிசயித்தவர்களாய் சிலர், இவ்வுலகந் தோன்றிய நாள் முதலாக இத்தகைய விந்தையான செய்தியைத் தாம் கேட்டதேயில்லையென்றும், பிரபந்தம் பாடுதற்குப் பரிசாகப் புலவர்கள், பொன், பொருள், பூமி, வண்டி, வாகனம், விருது முதலிய வரிசைகளைக் கேட்பது வழக்கமென்றும், கவிச் சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தரைப் போல், 'தலைப்பிள்ளைகள் ஆயிரத்தெண்மர் சிரங்களைப் பிரபந்தம் பாடுதற்குப் பரிசாகக் கேட்பதைக்' கண்டதேயில்லை என்றும், இது புதுமையினும் புதுமை! அதிசயத்திலும் அதிசயம்!! என்றனர்; வேறு சிலர், இதில் இன்னொன்று நோக்கிக் கவனிக்க வேண்டும். அது— 'ஆவூர்ச் செங்குந்தர்கள் சாமானியர்களல்லர். கல்வி, கேள்வி, அறிவு, சீலம், தவம், விரதம், வாய்மை, ஈகை, அன்பு, பரிவு முதலிய விஷயங்களில் நல்ல பயிற்சியும், தேறிய அநுபவமும் பெற்ற வர்கள், இத்தகைய அறிவின் மிக்கார் தாங்கள் ஒருங்கு கூடி இவ் விஷயத்தை நமக்கு அறிவித்ததிலிருந்து, அவர்கள் பிரஸ்தாபச் செய்தியை நன்கு ஆலோசிக் காமலா! ஒரு முடிவுக்கு வந்திருப்பர்? என்றனர்; மற்றுஞ் சிலர், இவ்வுலகினர் என்றும் கேட்டிராத ஒரு அதிசய சம்பவத்தைத் தமிழ்நாட்டு மக்கள் கேட்டுத் தமிழுக்காகவே ஒரு மரபார், அல்லது ஜாதியார் அரிதினும் அரிதாகியதும், உளந்திடுக்கிடச் செய்ய வல்லதும், ஆலோசனைக்கு இடந்தருவது மாகிய பெரியதொரு காரியத்தை வெகு எளிதாகச் செய்யத் துணிந்தது ஆச்சரியம்! ஆச்சரியம்!! என்று மூக்கின்மீது விரல் வைத்து வியக்கும்படிச் செய்விக்கக் கருதியே இதற்கு உடன்பட்டிருக்க வேண்டுமெனக் கருதுவதே பொருந்தும் என்றனர்.

பின்னுஞ்சிலர், ''பாடல் பெற்றுப் பலர் மெச்ச வாழ்வது'' பண்டைய வழக்கு. அவ்வழக்கம் நமது தமிழகத்தில் எல்லாப் பிரபுகளிடத்தும், செவ்வவான்களிடத்தும் நிலை பெற்றிருந்ததாகத் தெரிகிறது. இதற்குச் சான்று சங்க இலக்கியங்களில் வேண்டுமானவை காணலாம். இந்நலங்கருதியே அவர்கள் இசைந்திருக்க வேண்டும். அல்லாமல் தமிழின் பெருமை சாமான்யமானதோ? அதன் உயர்வும், தன்மையும், சிறப்பும், மதிப்பும், யாவரே கணிக்கவல்லார்?

குமுண வள்ளல் தலை கொடுக்க விசைந்ததும், கடையெழு வள்ளல்களில் அதிகமானெடுமானஞ்சி சாவா உடம்பு தருவதாகிய அருநெல்லிக் கனியைத் தான் உண்ணாது தமிழ் மூதாட்டிக் களித்ததும், பாரிவள்ளல் இரவலர்க்குத் தன் முந்நூறு ஊர்களையும், பல உடமைகளையும் கொடுத்ததன்றித்தானும் அவர்கள் விரும்பிய பரிசுப் பொருளாகச் சென்றதும், கணிகண்ணன் பின் காமரும், பூங்கச்சிப் பெருமாள் பாம்பணை சுற்றித் தொடர்ந்ததும், கூலிமுதுகில் சோறுண விரும்பிய புலவர்க்கு அவ்வாறே சோறிட்டதும், வடுகநாத முதலியார் பிணமூடி வைத்துப் புலவர்க்கு விருந்திட்டு உபசரித்தும், இன்னும் விளம்புதற்கரிய விம்மிதங்களையுடையதன்றோ? தமிழ். இத்தகைய அருந்தமிழுக்கு ஆங்காங்குள்ள நாடுகளில், நம்மவர் சிலர், சில சிரங்களை அளிப்பது நம் மரபினுக்கே அழியாப் புகழை அளிக்குமென்ற காரணம் ஒன்று பற்றியே அவர்கள் இக்காரியத்திற்கு இசைந்திருக்க வேண்டும். அங்ஙனம் கொள்வதுதான் சிறப்பாகக் காண்கிறது.

பிரபந்தங்களேயாக அவர்களது சரிதை முன்னிலையில் வருணித்துப் பாடுதல் இயல்பு. ஒரு குலத்தினை அக்குலத்தினர் வேண்டுகோளாலேனும், தன்னிச்சை யாலேனும் வறிதே வருணித்தல் யாது பயன்?

தம்மைத்தாமே பாடிக்கொண்டார் கள் என்னும் அபவாதத்தையும் நமது குலத்திற்கு விளைவிக்க மாட்டேன். ''வேளாளர் ஏர் பூட்டாவிட்டால் வேதி யராதியோர் வேரற்றுப் போவார்'' என்றும்; ''வன்னியர் சிலையேந்தாவிட் டால் வையக முற்றும் வரம்பற்றுச் சிதை யும்'' என்றும், கற்பனை செய்து பாடுவது எனது வழக்கமன்று. உள்ளதையே கள்ளமின்றிக் கூறி யாவரையும் உறுதிக் கொள்ளச் செய்வேன். தங்குலத்தில் அபி மானமும், பிற குலத்தில் பகையும் வகிப் பவன்யானன்று. எனது இயல்பு இவ் வண்ணமாயினும், ''உலை வாயை மூட லாம், ஊர் வாயை மூடுதல் அரிது''. மேலும், சோழ வேந்தர்களால் எனக்குக் கிடைத்துள்ள செல்வம் எண்ணிலவா யிருத்தலின், எனக்குப் பொருளாசை யுமில்லை. இதனை இவ்வுலகமே உணர்த் தும், ஒவ்வொரு சமயத்தாரும், தத்தம் சமயத்தையே மேலெனக் கூறி வாதித்தல் போல, ஒவ்வொரு சாதியாரும் தத்தம் சாதியையே மேலாகக் கூறி வாதித்தல் வழக்கு. அவ்வழக்கு முடிவில் இழுக்கா மென்றதற்குச் சான்று அவ்வக் குலத் தினது தொழில் விகற்பமேயாம். இத் தகைய சமயத்தையும், சாதியையும் பற்றி ஓர் பிரபந்தம் கூறுமிடத்து அப்பிரபந் தத்தால் யாதேனும் ஓர் அற்புதம் விளை யின் அதுவே, இவையெல்லாவற்றினும் மேலெனக் கொள்ளும் சிறப்புடைய தன்றோ? அடியேன் நவ வீரர் பரம்பரை யாகிய செங்குந்தர் மரபில் தோன்றி யுள்ளேன்: என் வாக்கில் சத்திய லட்சு மியும், சாரதா தேவியும் சாஸ்வதமாகக் குடி கொண்டிருக்கின்றனர். இது முற்றும் உண்மையே. உறுதியறிய வேண்டுமாகில் அத்தேவியார்களின் சகஸ்ரநாம அர்ச் சனையின் பொருட்டு நங்குலத் தலைப் பிள்ளைகள் ஆயிரத் தெண்மர் சிரங்களைப் பரிசாகத் தருவிரேல், நமது ஆயுதமாகிய ஈட்டியைச் சுட்டி ''ஈட்டியெழுபது'' என் னும், ஓர் பிரபந்தம் பாடி முடித்து இவ் வுலகினரை அதிசயிக்கச் செய்கிறேன் என்றனர்.

சம்மதமும் உறுதி வாக்கும்

இவ்வாறு ஒட்டக்கூத்தர் தந்து வாயரின் தலைப் பிள்ளைகளின் தலைப் பரிசு வேண்டியதைச் செவியுற்ற செங் குந்தர்கள், இதுவரையும் எவராலும், சொல்லப்படாததும், புலவர்களால் கேட் கப்படாததுமான அபூர்வமும், அதிசய விஷயமுமாய் இருப்பதற்கு வெகு வியப் பும், மிகுதிகைப்புங் கொண்டவர்களாய்ச் செய்வது இன்னதெனத் தோன்றாது மௌனமாய் இருந்தனர். இது கண்ட புலவர் பெருமானாகிய கூத்தர், தமது மரபின் முன்னோரது சீரிய வீரம், திறம், வாய்மை, கல்வி, அருள், அன்பு, ஈகை, வள்ளன்மை, ஆகிய அருஞ் செயல்கள் பல வற்றை அவர்கள் அகந்தனில் அழுந்திப் பதியுமாறு வெகு உருக்கமும், உற்சாக முந்தோன்ற வெகு விளக்கமாக விவரித்துக் கூறினர்.

சொல்வோரது தன்மை, பெருமை, சிறப்பு, தூயமனம், சொல்லுறுதி ஆகிய வைகளால், கேட்போரது மனம் மலர்ந்து விஷயத்தை மதித்து ஏற்றுக் கொள்வது உலகியல்பு. ஆனதால், கூத்தரது அருண் மேவிய உள்ளத்திருந் துண்டான கல்வி நலங் கலந்த அமுதவாக்கும், வீரஞ் செறிந்த விரிந்த சொற் பெருக்கமும், உல குள்ளளவும் நின்று நிலவிச் செங்குந்தரது ஏற்றம் விளக்க வல்லதுமான அரிய வர லாறுகளும், பிரபந்தம் பெறும் பெரு நோக்குடைய ஆவூர்ச் செங்குந்தரது மனதின் கண் தைத்து, நினைத்தற்கும், செய்தற்கும், துணிதற்கும் அருமையான பெருஞ் செயலைச் செய்து முடிப்பதென் னும் உணர்ச்சியும் வேகமும் உண்டாக்கி அவர்களை ஒரு முகமாக இணங்கும்படிச் செய்தன.

''விரைந்து தொழில் கேட்குஞாலம்
நிரந்தினது
சொல்லுதல் வல்லார்ப்பெறின்''

என்பதும் தேவர் திருவள்ளுவர் அநுபவ வாக்கன்றோ?

இங்ஙனம் புத்துயிரும், புதியதோர் உணர்ச்சியும், செங்குந்தர்களது ஜீவ நாடிகளில் பளீரெனப் பரவியதால், அவர் கள் ஒருங்கு சேர்ந்து ஆலோசித்துத் தலைப் பிள்ளைகளது அருஞ் சிரங்களைப் பிரபந்தம் பாடுதற்குப் பரிசாகத் தரு வதில் ஒரு முகமாகி ஊக்க மேற் கொண்டு, கூத்தரிடத்தே ஓர் நன்னாளையும், இடத் தையும், குறித்துக் கொண்டு அவரிடத்து விடைபெற்றுச் சென்றனர்.

உறையூரடைந்து சோழனுக்கு அறிவித்தது

பின்பு கூத்தர், தமது அருமை நண்பரும், தமிழறிந்து தகுந்த கொடை தரும் வள்ளலும், தமிழ் வளர்க்குந் தருவும் பிரபுவுமாகிய திரிபுவனத்துச் சோமன் பால் அரிதில் விடை பெற்று அப்

வளாவி இருந்தனர். இங்ஙனம் இருக்கும் இடையில், செங்குந்தர்கள் கூத்தரை நோக்கி அருந்தமிழுணர்ந்த பெரும் புலவரேறே! வேளாளர்க்கு 'ஏரெழுபதும்' வன்னியர்க்குச் 'சிலையெழுபதும்'', செட்டிகட்கு 'இசையாயிரமும்' அவரவர் மரபின் இயல்பை விளக்குவதாயிருக்கின்றன. அதுபோல் நம்மரபினர்க்கும் தாங்களும் ஒருநூல் செய்து நமது குலவளத்தைச் சிறப்பிக்க வேண்டுமென்று வேண்ட, புலவர், அவர்களை நோக்கி குந்த குலச் செல்வர்காள்! ''இயற்கையிலேயே பல சிறப்புடன் கூடி விளங்கும் நமது குல மேன்மையைப் பற்றிப் பாடுவிக்க வேண்டில், நம்மிலும் உயர்ந்த மரபினன் ஒருவனால் பாடுவித்தல் அழகு. நம்மில் தாழ்ந்தோனால் பாடுவித்துக் கொள்ளுதல் அழகல்ல. ஆகவே, நம்மை நாமே சிறக்கப்பாடிக் கொள்வது அதனிலும் குறைவன்றோ? இதனை நீங்கள் நன்கு ஆலோசித்து அறிமின்'' என்று கூறி அவர்களிடத்து விடை பெற்றுக் கொண்டு தங் காரியத்தின் மேற் சென்றனர்.

செங்குந்தர்கள் சினங்கொண்டது

கருதிய கருமம் கைகூடாது போனதற்குப் பெரிதும் வருந்திய செங்குந்தர்கள் முடிவில், கடுஞ்சினங் கொண்டவர்களாகி 'இப்புலவன் நமது மரபினனாக விருந்தும், நமது பிரபாவத்தை விளக்கவல்ல ஒரு பிரபந்தம் பாடித் தரும்படி கேட்டுக் கொண்டால், நம்மின் மேலான வருணத்தான் ஒருவனைக் கொண்டு பாடல் பெறும்படி கூறிவிட்டானல்லவா? இவ்வுலகில், 'புன்கவிகளாயுள்ளோர் வெளிப்படின், அவர்களைத்தன் வீரவாளால் பொன்றுவிப்பேன்' என்றோர் வெற்றிக் கொடித் தம்பம் நாட்டித்தான் கற்றுள்ள கல்வியின் மாத்திரம் அபிமானம் வைத்துள்ள இவன், தான் பிறந்துள்ள குலத்திற் சற்றும் அபிமானம் இல்லாதவனாக இருக்கிறான். இத்தகையனை நாம் இவ்வுலகில் இராதபடி கொன்று விடுவதே சரியென்று தங்களுக்குள் நிச்சயித்தவர்களாய் உடனே, வளை, தடி, வாள் முதலிய ஆயுதங்களேந்தி அவர் இருக்கும் இடத்தை நாடி வந்தனர். இது கண்ட கூத்தர் திடுக்குற்றுப் பயத்தால் சோமன் பால் ஓடி அடைக்கலம் புகுந்தனர் என்ப.

இது ''தமிழ் நாவலர் சரிதையில்'' பழிகாரர் தொடர்ந்த போது, சோமன் வாசலிலே ஓடிச் சொன்ன கவி என்னுந் தலைப்பின் கீழ்,

''அடையென்பார் தள்ளென்பா ரன்
பொன்றில் லாமற்
புடையென்பார் தங்கடைக்கே போகேங்-
கொடையென்றால்
முந்துஞ்சோமா! புவனை முன்னவனே!
நின் கடைக்கீழ்
வந்துய்ஞ்சோ மாதலான் மற்று''.

என வருவதால் அறியப்படும்.

சோமனது அருஞ்செயல்

கல்வியருமையும், கற்றோர் பெருமையும், நன்குணர்ந்த சோமன், தன்பால் அடைக்கலம் புகுந்த புலவர் பெருமானைக் காத்தல் வேண்டித் தன் ஒரு மகனைப் பேழையுள் அடக்கி, அதனைப் பழிகாரர்க்குக் காட்டி 'இதனுள் உள்ள புலவரை நும் விருப்பத்தின் படி செய்மின்' என்றளிக்க, சோமன் மனையைச் சூழ்ந்து நின்ற அப்பழிகாரர் அதனைப் பெற்றுத் தனித்த விடத்துக்குக் கொண்டு போய் திறந்து பார்க்க அதனுள் புலவரின்றிச் சோமன் இளமகன் இருக்கக் கண்டு சோமனது வண்மைக்கும், தியாக புத்திக்கும் மிக வியந்து அப்பிள்ளையுடன் திரும்பிச் சோமனது சமூகத்தையடைந்து அவனது அரும்பெருங் குணங்களைப் புகழ்ந்து அம்மட்டோடு நில்லாது, மறைத்து வைத்துள்ள கூத்தரை தம் வசம் தருமாறு வெகுவாக நெருங்கி வேண்டினர். அங்ஙனம் தம்மை நெருங்கி நின்ற அப்பழிகாரரைச் சோமன் நோக்கி, ''நீங்கள் புலவர் விரும்பியவாறு செய்தால் பாடுவார்'' என்று உரைத்தனர். இஃதறிந்த கூத்தர் நிகழ்ந்த விஷய முணர்ந்தவராய்ச் சோமனது பெருமித குணத்திற்கும் அருஞ் செயலுக்கும், தம்மீது வைத்திருக்கும் பேரபிமானத்திற்கும் மிக வியந்து மகிழ்ந்து சோமனைப் புகழ்ந்து பாடினர் அது—

—''துன்னு புகழ்ச்
சோமா! திரிபுவனத் தோன்றலே! நின்
புகழை யாமா ருரைக்க வினி'' (தமிழ்
நாவலர் சரிதை]

எனவரும் செய்யுளென்ப.

பிரபந்தம் பாடத் தலைப்பரிசு கேட்டது.

பின்னர், மறைந்து நின்ற கூத்தர், தம்மைக் கொல்ல வந்த பழிகாரர் எதிரே தோன்றி அவர்களை நோக்கிச் சீலம் நிறைந்த செங்குந்தத் தலைவர்காள்! அடியேன் புகழ்வதைப் பொறுமையுடன் கேண்மின். பெரும் புலவராயுள்ளோர் தேவர்களையும், அரசர்களையும் அபிமானத்தாலேனும், பொருள் விருப்பத்தாலேனும் தனியே, புராணங்களேயாகப்

2. ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபது பாடிய வரலாறு

கோவை சி. கு. நாராயணசாமி முதலியார்

ஒட்டக்கூத்தர் துதி

''கல்விக் கரசு கவிராஜ சிங்கங் கலைச் சலதி
வில்விக்கும் வாட்கை யபயர் சஞ்சீவி விமல முத்தி
புல்விக்கு மாகமப் பொக்கசம் வேதப்புயல் கமலச்
செல்விக்குச் சேயொட்டக் கூத்தனல்லாற் புவிசெப்பரிதே''

முன்னுரை

ஈட்டியெழுப தென்பது ''கவிச்சக்கர வர்த்தி'' என்று உலகம் புகழக் கீர்த்தி வகித்திலங்கிய ஒட்டக்கூத்தர் தம் மரபினராகிய செங்குந்தர்களின் வேண்டுகோளின்படி தலைப்பிள்ளைகள் ஆயிரத்தெண்மர் சிரங்களை ஆசனமாகப் பெற்று அதன்மீது எழுந்தருளி தங்குலத்திற்குரிய ஆயுதமாகிய ஈட்டியைச் சுட்டிப் பாடியதோர் பிரபந்தமாம். தெய்வீகம் விளங்கப்பாடிய இத்திவ்யப் பிரபந்தத்தின் உண்மைக்குரிய வரலாறு இக்காலத்துப் பல்வகை வேறுபாடுகளுடன் வழங்கப் படுகிறது. இவற்றின் உண்மைச் செய்தியை அறிய விரும்புகின்றவர்களுக்கு மெத்தப் பிரயாசையாகவே இருக்கின்றது. இக்குறையை நிவர்த்திக்கவே நாம் இப்பொழுது இங்கு முன் வந்ததென்க. செங்குந்த மரபினர் பெருமையாதிய விசேடங்கள் அன்னார்க்குரிய சிறந்த நூல்களாம் 'கந்த புராணம்', செங்குந்த புராணம்' வீரநாராயணர் விஜயம், 'ஈட்டியெழுபது' முதலிய நூல்களில் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைக் காண விரும்புவோர் அவ்வந்நூல்களில் கண்டுகொள்க.

இனி, ஈட்டி யெழுபது பாடிய வரலாறும், அதனைப் பாடினார் பெருஞ் சிறப்பும் பாடப்பட்ட இடமும், காலமும், அதனைக் கேட்டிருந்த சோழன் இன்னான் என்பதும் ஆதிய விஷயங்களே இதன் கீழ் விவரிக்கப்படும்.

புலவர் சிறப்பு

கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சோழ தேசத்தைப் பல்வகைச் சிறப்புடன் செங்கோல் செலுத்திய சோழ மன்னர் பலருள், கி.பி. 1118 முதல் 1200 ஆண்டுகள் வரை அரசு செலுத்திய 'விக்கிரமன்' தொடங்கி 'இராசராசன்' இறுதியாகக் கூறப்படும் மூவரசர் காலத்திலே தான், ஒட்டக் கூத்தர் ஒப்புயர்வற்ற சிறப்புடைப்புலவர் என யாவரும் போற்றிப் பணிந்து புகழ்ந் தோத விளங்கினரர். இவர் இங்ஙனம் மேம்பட்டுச் சிறந்ததற்குக் காரணம் பல உண்டெனினும் புலமை ஆற்றலும், வித்துவ சமர்த்துமே முதன்மையானதெனக் கூறுதல் பொருந்தும். இங்ஙனம் கூறுதற்குத் தம்மை அபிமானித்துக் காத்த சோழ மன்னர்களை இவர் பன்முறை அருந்தமிழில் இன்சொற்றொடரில் பாமாலைகள் பல புனைந்து சூட்டி மகிழ்வித்ததேயாம். இது ஈட்டி யெழுபதென்னும் நூலில்:

''தென்னனைச் சேரனைச் சிறுமை சொல்லவும் மன்னனை வளவனை மகிழ்ந்து பாடவும்''

என வருவதால், இவர் தமிழ் மூவேந்தருள் சோழனையே உயர்த்திப் பாடினார் என்பதுணரப்படும். இங்ஙனம் சோழ மன்னர் அன்பிற்கும், அபிமானத்திற்கும் பெரிதும் உரியவராய் அவர்களால் அரசர்க்கொத்த பல வரிசைகளையும் குறைவரச் சிறக்கப் பெற்றுக் ''கவிப் பெருமான்'' என்ற பெரும் பட்டத்தையும் அடைந்து விளங்கினர் என்ப.

சோமன்மனையில் செங்குந்தர்கள்

நாமகள் நல்லருள் பெற்ற வரகவியாகிய ஒட்டக்கூத்தர் ஒரு சமயத்தில் கும்பகோணத்துக்கும், திருவிடைமருதூர்க்கும் இடையிலுள்ள 'திரிபுவனம்' என்னும் திருத்தலத்தின் கண்ணுள்ள தமது பெரு நண்பரும், தமிழறிந்து அதற்கேற்ற கொடைதரும் வள்ளலுமாகிய ''சோமன்'' என்னும் பிரபுவைக் காண வந்திருந்தனர். இவர் நல்வரவையுணர்ந்த ஆவூர்ச் செங்குந்தர்கள் கூத்தர்பால் பாடல் பெற்றுப் பெருமை பெற வேண்டுமென்னும் பேராவலுடன் புலவர் பெருமானை அவர்க்குரிய மரியாதையுடன் வந்து கண்டு கொண்டனர். கூத்தரும், அவர்கள் வரவிற்கு ஆனந்தங்கொண்டு அள

கூத்தரைச் சுற்றிபல சுவையான கதையுண்டு
குறைகளும் சொல்வ துண்டு
ஆத்திரம் கொண்டன்று காழ்ப்புணர்ச்சி யால்சிலர்
அவிழ்த்தபொய் யுரைக ளுண்டு
ஏத்திய அவரது கவிச்சுடர் ஒளியிலே
எல்லாமே வீழ்ந்த திங்கு
காத்திடு வோமந்த கவித்திறம் தன்னைவீண்
கதைகளை விட்டொழிப்போம் 5

தக்கதொரு செருக்களப் பரணிகள் பலவற்றைத்
தமிழ்ப்புலவர் தந்த துண்டு
தக்கயா கப்பரணி போலொரு நூலினைத்
தந்தவர் யாவ ருண்டு?
தக்கதிமி தாளமுடன் மிக்கசுவை காட்டிடும்
சந்தங்கள் பலவும் கொண்டு
எக்காள மிடுகின்ற ஏற்றமிகு நடைகண்டு
எல்லவரும் வியத்த லுண்டு 6

சரித்திரச் சான்றுகள் தமிழிலே இல்லையெனச்
சங்கடம் கொண்ட பேர்கள்
வரித்திடத் தக்கதோர் வரலாற்றி னுண்மைகளை
வகையுடன் தான மைத்து
தரித்திடும் பெண்டிரின் எழுபருவ நிலைகளைத்
தரமாக எடுத்து ரைத்து
விரித்திடும் மூவருலா கண்டவர் தமிழினில்
வித்தகம் காண்ப ரன்றோ? 7

இன்னின்ன பிரபந்தம் இன்னவர் தான் முதலில்
இயற்றிய தென்று ரைப்பார்
அன்னவர் வரிசையில் கூத்தர்தந் திட்டதோர்
அரியபிர பந்தம் சொல்வார்
தன்மனங் கவர்ந்திட்ட குலோத்துங் கனின்மீது
தகுதியால் பாடி வைத்த
என்றுமே நிலைபெற்ற பிள்ளைத்த மிழ்க்கிணை
எந்நாளும் இல்லை யென்போம் 8

தன்குலப் புகழ்தன்னைத் தானேயே பாடுதல்
தரமல்ல என்று ரைத்துச்
சென்னிபல அறுத்திட்டுச் செங்குந்தர் தந்திட்ட
சிரச்சிங்கா தனம் அமர்ந்து
வன்மைசார் குந்தத்தை ஈட்டியெழு பதுவென்று
வலிமையாய்ப் பாடித் தந்து
அன்னையாம் கலைவாணி அருளாலே உயிர்ப்பித்த
அற்புதம் வேறெங் குண்டு? 9

கலைமகள் தம்நாவில் வாழ்ந்ததால் திருக்கோயில்
கட்டியே அங்கு வாழ்ந்தார்
அலைமகள் அருளாலே முடிமன்னர் மூவரின்
அரசவைக் கவிஞ ரானார்
மலைமகள் மாகாளி தீப்பந்தம் ஏந்திடும்
மகத்தான பெருமை பெற்றார்
தலைமகன் பெயர்சொல்லி தேவியர் மூவரின்
திருவருள் பெற்று வாழ்வோம். 10

படைக்குரிய உரிமையும் பெருமையும் கூறப்பட்டது. தந்தைக்குரிய வெள்ளி மலை மட்டுமல்ல, மைந்தனுக்குரிய படைவீடுகளிலும் குந்தத்திற்கு உரிமை என்பதை அறியலாம்.

18

குந்த மகிமைச் சிறப்பு

தேடுவார் வலமாய் வந்து தெரிசிப்பார் சென்னிமீது
சூடுவார் மலரே தூவித் தொழுதகை கூப்பி நிற்பார்
பாடுவார் காவென் றெம்மைப் பரிவினா னந்தமாக
ஆடுவார் குகன்கைச் செவ்வேற் கருள் துணைக் குந்தமென்றே

உலகினுள்ளார் முருகக் கடவுள் கையின் கண்ணுள்ள சிவந்த வேலாயுதத்திற்குத் துணையாக இச் செங்குந்தம் எனக் கருதி எங்குள்ளது அப்படை என்று தேடுவார். தங்கள் கண்களால் கண்டு வலமாக வந்து வணங்குவார். மலர்களால் அர்ச்சனை புரிந்து தலை மீது அணிந்து கொள்வார். பாதத்தில் வீழ்ந்து பரவி இருகை கூப்பி எதிராக நிற்பார். எம்மைக் காக்க வேண்டுமென்று அதன் புகழைப் பாடுவார். பின்னும் ஆசையோடும் ஆனந்தமாக ஆடுவார்.

19

காளி கைத்தாளம் பறித்த சிறப்பு

ஆலங் காட்டினி லரனுட னன்று வாதாடும்
கோலங் காட்டிய காளிதன் கொற்றம் போய்வெள்கப்
பாலங் காட்டிய பன்மணித் தாளமே பறித்துச்
சிலங் காட்டிய குந்தர்நற் பெருமையார் தெரிப்பார்.

திருவாலங்காட்டில் காளிக்கும் சிவ பிரானுக்கும் இடையே நடைபெற்ற நடனப் போட்டியில் காளியால் சபையில் தோற்றம் தர முடியாத நிலையில் சிவன் நின்று வென்றார். தோல்வி கண்ட காளி வெட்கி நிற்கும்போது, அம்மையின் கைத்தாளம் பறித்தவர் செங்குந்தர் என்னும் செய்தி இப்பாட்டில் காட்டப்பட்டுள்ளது. இறைவன் நீதியை நிலைநாட்ட எங்கெங்கே செயல் மேற்கொள்கின்றாரோ, அங்கெல்லாம் துணை நிற்கும் பணி செங்குந்தர் பெருமக்களுடையதாக இருக்கக் காண்கின்றோம்.

20

செங்குந்தம் தம்மை எதிர்க்கும் பகைவரை சுவர்க்கம் புகுத்தும்

செங்களம் பொருதிய திருந்த லாருர
வங்கமே மண்மிசை யாக்கி யாவியைச்
செங்கதிர் வழியிடைச் செலுத்தித் தேவர்க
டங்களை வான்புகத் தருஞ்செங் குந்தமே.

போர்க்காலத்தில் வந்து தம்மோடு எதிர்த்து யுத்தம் செய்த, பகைவர்களாகிய அரக்கர்களது வலிய உடலை மண் மீது விழச் செய்து, உயிரைச் சூரியன் மார்பின் வழியாகச் சுவர்க்க லோகப் பதவியை யடைவித்துத் தேவர்களை யெல்லாம் வானுலகத்தில் என்றும் நிலை பெற்றிருக்கச் செய்யும் செங்குந்தம்.

தவத்துக்கு இடையூறு செய்வார் யாரேனும் அவரை செங்குந்தர் வருத்துவர் என்பது.

பரகதி வேள்வி பண்ணுமிருடிதன் பான்மை பாரா
வரகதி தந்தை யேவு மமரரை மடிய நூறி
யிரதமோ டிவுளி வேழ மியாகதா னத்துக் கீந்து
சிரமணி மகுடம் பெற்ற செங்குந்தர் போலுமுண்டோ? 21

மூதண்ட முனிவர் மோட்சமடைய வேள்வி செய்தார். வேள்வியின் வைராக்கியம் கண்ட பிரமன் முதலிய தேவர் பொறாமை கொண்டு யாகத்தைத் தடுக்க சூழ்ச்சி செய்தனர். ஒன்றும் பலிக்காமல் போகவே தம் பரிவாரத்தோடு சென்று மூதண்ட முனிவர் மேல் போர் தொடுத்தான். அதுகண்ட முருகக் கடவுள் நவ வீரரை ஏவி யுத்த களத்தில் மூதண்ட முனிவர்க்கு வெற்றியை உண்டாக்கினார். வீரவாகு தேவர் யுத்தத்தில் தோல்வியடைந்த தேவர்களின் திரவியமனைத்தும் மூதண்ட முனிவரின் யாக சாலைக்குத் தானமாகக் கொடுத்து அவர்கள் அணிந்திருந்த இரத்தின கிரீடங்களைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். பின்பு மூதண்ட முனிவர் யாகத்தை முடித்து விரும்பிய பயனைப் பெற்றார்.

சம்பாதிக்கமுதளிக்கும் சிறப்பு

அம்பாழி மூழ்கியொரு கற்ப மெலாங்
கிடைக்கினுமென் னழலி னின்று
வெம்பாமே வெளிக்காலுண் டுட்காலை
வெளியில்விடா திருந்தா லென்னே
வம்பாரு மிதழியணி வேணியனார்
வேதமலை வலம்வந் தீண்டுஞ்
சம்பாதிக் கமுதளிக்குஞ் சயக்குந்தம்
போல்வினவத் தாரா வன்றே. 22

சிங்கமுகாசுரன் முதலிய தேவர் பகையாகிய யாவரையும் நாசம் செய்து பின்னர் எக்காலத்தும் பகை இல்லாததாக வீரத் தன்மை செய்து வைத்த சிறப்பு வீரவாகு தேவர் முதலிய ஒன்பது வீரர்களது கையில் உள்ள செங்குந்தப் படையேயாம்.

சூரபதுமன் முன் சென்மத்தில் அன்னமும், கருடனும் துன்பத்தையடைய, மயிலையும் சேவலையும் தூண்டிக் கலகம் விளைவித்தான். பிரமன் விட்டுணு முதலியோர் சென்று முருகனிடம் முறையிட்டனர். முருகப் பெருமான் தம் பரிசனர்கள் வழியே அவனை அழைத்து 'நீவிர் நெடுநீர் பெருநிலத்தில் பாவ நிருதர் குலத்துதித்துத் தேவர்க்கு இடுக்கண் செய்வீர் எம் பூவிலை வேலால் தொலைந்து நற்கதிபெறுவீர், என்றருளினான். அவனோ நிருதர் குலத்துத் தோன்றினும் நின் அன்பு அகலா நெஞ்சம் வேண்டும் என்றும் உம் வேல் பட்டிறக்கும் வேளை, மயிலாகி கொடியாகி உமக்கிருக்க வேண்டும் என்று இருவரம் கேட்டான். அவ்விரண்டு வரமும் முருகப் பெருமான் நல்கிப் பகையையும் தம் பக்கமிருக்கும் சிறப்பு தந்து பாலித்த தன்மையை முன்பகை யாவையும் முடித்து என்று கூறினார்.

திருக்கைலை முதலிய இடங்களைக்காக்கும் சிறப்பு

வெள்ளிமால் வரைசூழ் காப்பு மிளிர்மணிச்
சிகரக் காப்பும்
பள்ளிமால் வரையின் காப்பும் பைம்பொனு
பரணக் காப்பும்
வள்ளிதாக் கைக்கொ ளென்று மகிழ்நீற்றுக்
காப்பு மிட்டுத்
தெள்ளிதா யுமையா டந்த செங்குந்தம்
போலு முண்டோ? 15

உயர்ந்த வெள்ளியங்கிரியைச் சூழ்ந்து காக்கின்ற காவலும், உச்சியில் ரத்தினங்கள் இழைத்த கொலுமண்டபக் காவலும், அந்தப்புரத்தை உடைய மகா மேருவின் காவலும், பசும்பொன்னாலும், மணிகளாலும் செய்த ஆபரணங்களாலும் வளப்பமாகக் கைக்கொள்ளுங்கள் என்று உமாதேவியார் நவவீரர்களை அழைத்து மகிழ்ச்சியோடு திருநீற்றுக் காப்புமிட்டுத் தெளிவாகக் கொடுக்கப் பெற்ற இச்செங்குந்தம் போல இவ்வுலகத்தில் வேறுண்டோ?

வெள்ளியங்கிரி முதலாய இடங்களைக் காக்கும் பெரும் பொறுப்பை உமாதேவியார் முறைப்படி திருநீற்றுக் காப்பு செய்து செங்குந்தர்க்கே வழங்கியுள்ளார்.

செங்குந்தர் சிவமரபினர் உமையவளால் கைவேல் பெற்றவர்

சலம்பிரி யாதசூட்டுச் சாவற்கே தனமெஞ்
ஞான்றும்
வலம்பிரி யாத செவ்வேட் குறுதுணையாக
மன்னுட்
குலம்பெற வந்தா ரென்றங் கொடியுமை
தந்த வீட்டி
நலம்பெறு மிந்தக் குந்தர் பரிசுபோ
னாட்டி லுண்டோ? 16

தன்னினத்தில் ஒன்றையொன்று காணில் பகையால் கோப நீங்காத உச்சிக் கொண்டையினையுடைய சேவற் கொடியானது எக்காலத்தும் வலப் பக்கத்தே விட்டுப் பிரியாத சுப்பிரமணியக் கடவுளுக்கு மிகுந்த துணையாகவும், நிலை பெற்ற கைலாய பரம்பரைக் குலம் விளக்கம் பெற வந்தனர் என்று மகிழ்ந்து, கொடி போன்ற உமா தேவியார் கொடுத்த கைவேல் சிறப்பு கொண்ட இச் செங்குந்தர் பெருமை போல, இந் நாட்டில் வேறில்லை.

முருகப் பெருமான் தன் வலப்பக்கத்தே சேவற் கொடியைக் கொண்டுள்ளார். சேவற்கொடி எவ்வாறு அப்பெருமானை விட்டு நீங்குவதில்லையோ அது போன்றே இவ்வினத்தாரும் முருகப் பெருமானை விட்டு நீங்குவதில்லை. தன் குமாரனைக் காக்கும் இவ்வினத்தார்க்கு, தாய் மகிழ்ந்து கைவேல் கொடுத்துச் சிறப்பித்தாள்.

அறுபடை வீட்டின் குந்தச் சிறப்பு

பருப்பத மேரகம் பரங்குன் றம்பழம்
பொருப்பத மாவினன்குடி செந்திற்
பொது
விருப்பெனக் குன்றுதோ றாடலா மெனும்
திருப்பதி தமிலமர் செய்ய குந்தமே. 17

முருகப் பெருமானின் ஆறு படை வீடுகள் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவேரகம், திருவாவினன்குடி, குன்றுதோறாடல், பழமுதிர்சோலை, என்பனவாம். திருவேரகம் என்பது சுவாமிமலையைக் குறிக்கும். பழமுதிர்சோலை மதுரைக்கருகே உள்ள கள்ளழகர் கோயிலாகும். திருவாவினன்குடி பழனி மலைக் கடிவாரத்தே உள்ள திருக்கோயில்.

இவ்வாறு படை வீட்டில் அமர் செய்யும் குந்தம் என்பதால், முருகனுக்குரிமையான மூவிரு தலங்களிலும் குந்தப்

யும் மனத்துட் கொண்டு யுத்த களத்தில் தாரகனைத் தன் கைக் குந்தத்தால் தாக்கிக் கொன்றார்.

9

பானுகோபன் வதைச் சிறப்பு

பூட்டிய தேரோடும் பொலிந்த பானுவை
மீட்டிய தொட்டிலி னிறுக்கு மைந்தனை
மூட்டிய சமரிடை முடித்து மாசறத்
தீட்டிய வீரர்கைச் சிறந்த குந்தமே.

சூரபதுமனின் பிள்ளை பானுகோபன். இவன் குழந்தைப் பருவத்தில் தன்மீது சூரிய ஒளி தாக்கிட கோபித்தான். ஏழு குதிரைகள் பூட்டிய தேரோடு சூரியனைத் தன் நவமணித் தொட்டிலோடு சேர்த்துக் கட்டினான். அத்தகைய பானுகோபனை யுத்த களத்தில் சங்காரம் செய்து, அவுணர்களின் குற்றம் நீங்க, புகழை நன்றாக எழுதி வைத்தது நவ வீரர் கையில் பிடித்த சிறப்பு மிக்க குந்தமாகும்.

10

சிங்கமுகனைக் கொன்று கடம்ப மாலை அணிந்த சிறப்பு

பங்கமி லரிமுகப் பஃற லைக்கிளை
மங்கவே நூறியோர் வாகை மாலையை
யெங்கள் வேற்படை தனக்கென்று சூட்டி
யொண
செங்கடம் பணியுமால் செய்ய குந்தமே.

இரத்தத்தால் சிவந்த குந்தமானது பங்கமிலா வரம் பெற்ற சிங்கமுகாசுரனுடைய பல தலைகளாகிய கிளைகள் கெடும்படி அழித்து, வெற்றி மாலையை முருகக் கடவுளின் வேலாயுதத்திற்கே தக்கதெனத் தந்து தான் செங்கடப்ப மாலையைச் சூட்டிக் கொள்ளும்.

11

சூரபதுமனைக் கொன்று புலிக்கொடி பெற்ற சிறப்பு

வனப்புறு மிளவலும் வரச்செவ் வேற்குகன்
கனப்பக லாறினில் கலாப மேறியே
யினப்புகழ் சேவலங் கொடிதற் கேற்றுவெஞ்
சினப்புலி கொடிதரச் செறிசெங் குந்தமே.

அழகு பொருந்திய இளவலாகிய வீரவாகு தேவர் முதலிய நவவீரர்களும் தம்மைச் சூழ்ந்து வர, சிவந்த வேலாயுதத்தை உடைய முருகப் பெருமான் ஆறு நாட்களில் சூரபதுமனை சங்காரம் செய்ய, அவன் கடலில் தலைகீழாக பாமர வடிவங்கொள்ள அதைத் தன் வேலினால் இரு பிளவாக்க அவ்விரு பிளவும் மயிலும் கோழியுமாகி வர, மயிலை வாகனமாகவும், தன்னினத்தைப் புகழா நின்ற கோழியைக் கொடியாகவும் கொள்ள சூரபதுமன் தன் கையில் கொண்டிருந்த புலிக் கொடியைச் செங்குந்தர் வசம் கொடுக்கப் பெற்றுக் கொண்டனர்.

12

தேவர்கள் சிறை நீக்கிய சிறப்பு

குறையினைக் கடவுளர் கூறக் கேட்டவர்
துறையினை நிறுவியே சூர்த டிந்துநான்
மறையினை வழுவற வளர்த்துத் தேவர்
தம்
சிறையினை மீட்டது திருச்செங் குந்தமே.

தேவர்கள் சூரனால் துன்பப்படும் தம் நிலையை முருகப் பெருமானிடம் எடுத்துரைக்கக் கேட்டு, பகையை அழித்து ஒவ்வொருவருக்கும் அவ்வவர் தம் பழைய நிலையைத் தந்து, வீர மகேந்திர புரத்தினின்றும் சிறைமீட்டு, நால்வகை வேதத்தையும் குற்றமற வளர்வித்த புகழைக்கொண்டது அழகிய செங்குந்தமாகும்.

13

தேவேந்திரனுக்குப் பொன்னுலகச்சீர் நிலைபெறச் செய்தது செங்குந்தமே என்பதை விளக்கியது

தாருவும் சுரபியுந் தவள வேழமும்
தாருடைப் புரவியுஞ் சசியுங் கைம்மிசைப்
போருடை வச்சிர வாளும் பொன்னகர்ச்
சீருறும் படியவுண் செறிசெங் குந்தமே.

அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், பாரிஜாதம், மந்தாரம் ஆகிய பஞ்ச தாருக்களும், காமதேனுவும் வெள்ளி ஐராவதமும் சதங்கைமாலை முதலிய பல மாலைகளையுடைய உச்சைச்சிரவம் என்னும் குதிரையும் இந்திராணியும் கையின்கண் தாங்கிய பகைவர் போர் உடைக்கும் வச்சிராயுதமும், பொன்னுலகத்தில் அரசிருத்தன் முதலிய பல சிறப்புகளும் மீண்டும் தேவேந்திரன் பெற்று இருக்கும்படி சூரபதுமனையும் அவுணர்களையும் அழித்தது செங்குந்தமே.

14

நவவீரர்கள் தேவர்பகையாவையும் ஒழித்தனர் என்பதை விளக்கியது

முன்பகை யாவையு முடித்துக் கூரெயிற்
றன்பகை யாவையுந் தடிந்து சந்ததம்
பின்பகை யில்லதாப் பெற்றி செய்ததா
மொன்பதி னோர்கரத் தொளிருங் குந்தமே.

பழைய பகையாகிய சூரபதுமனைக் கொன்று அவனுக்குக் கொடுத்த வரத்தை நிறைவேற்றி, கூரிய பற்களையுடைய

தில் இருந்த, (உமையவள் வழங்கிய) ஈட்டிப் படையின் பெருமையை எம் மால் சொல்ல முடியாது. இருந்தும் ஒருவாறு முயல்கின்றோம். அவ்வீரர்கள் செய்த போரைக் கண்டு கழுகின் கூட்டங் களும் பருந்தின் கூட்டங்களும் ஆகா யத்தில் வட்டமிட்டுப் பறந்தன. துர்க் கையும் காளியும் கண்டு அஞ்சும்படி அவுணர்களின் பெருங்கூத்தாட்டம் கெட் டது. அவ்வவுணர்களின் கொழுத்த பிணக் குப்பையைக் கண்டு பேய்க்கூட்டங் கள் தங்கள் சிவந்த வாயை உடைய சிறிய குழந்தையோடும் வாய் திறந்தன.

படைத் தொழிலுக்குரிய கருவிகள் இரு வகைப்படும். ஒன்று கையில் வைத்தே பொருவது;? மற்றொன்று வீசி எறிந்து பொருவது. குந்தம் என்பது கையில் வைத் திருந்தே பொருவதாகும். அதற்கான கைப்பிடியோடு அமையப் பெற்றிருக்கும். கைவேல், ஈட்டி, சவளம் என்ற பெய ரில் இக்கருவி வழங்கப்படுகிறது.

இவ்விரு வகைக் கருவிகளைத்தான் வட நூலார் அஸ்திரம் சஸ்திரம் என்று குறித்தனர். அஸ்திரம் வீசி எறிவது; சஸ்திரம் கையில் கொண்டு பொருவது. குந்தம் சஸ்திரக் கருவி. சிவந்த குந்தக் கருவியைக் கைகொண்டமையாலே இவ் வினத்தார்க்குச் செங்குந்தர் என்ற பெயர் ஏற்பட்டது.

6

ஓதிய வேள்வியி னுவப்ப நாரதன்
போதவே தகர்தனைப் பொங்கு தீத்தர
வேதனைப் படுப்பதை விரைந்து கட்டியே
சேதனக் குதவின திருச்செங் குந்தமே.

நாரத முனிவர் சிவபிரானை எண்ணி யாகம் ஒன்று செய்தார். வேள் வித் தீயிலிருந்து தகர் ஒன்று தோன்றி யது. தோன்றிய ஆடானது ''யாகத் தில் எம்மினம் பலவற்றையும் கொல் கின்றமையால் இவ்வுலகத்தவரை யான் கொல்வேன்.'' என்று, ஊழிக் காற்றும் இடியும் ஒருருக் கொண்டு வந்தது போல ஓடித் திரிந்து உயிர்களை வருத் தியது. இந்நிலை கண்ட நாரதரும் மற்றைய முனிவர்களும் திருக்கைலாயம் அடைந்து குமரக் கடவுளை வணங்கி அவ்வாட்டின் கொடுமை கூறிச் சரண் அடைந்தனர். குமரக் கடவுள் அபயம் தந்து, தம் பரிவாரத்துள் வீரவாகு தேவரை நோக்கி 'நீர் சென்று உல கைக் கலக்கி ஆடும் ஆட்டை விரைவில் கொணர்க' என்று கட்டளை பிறப்பித் தார். வீரவாகு தேவர் உலக முழுதும் தேடிக்காணாமல் பிரமபதத்தைக் கிட்டி அங்கு கண்டு ஆட்டின் கோட்டைப் பிடித் திழுத்துக் கொண்டு வந்தார். அவ் வாட்டை முருகக் கடவுள் தமது வாகன மாக்கிக் கொண்டார். நாரதமுனியும் வேள்வியைச் செய்து முடித்தார்.

ஆட்டை அடக்கிய பெருமை வீர வாகு தேவரின் கையிலுள்ள குந்தப் படையையே சாரும்.

பிரமனைச் சிறையிட்ட சிறப்பு

பொதிய மால்வரைக் குறுமுனி தேறவும்
பொருள் சொன்ன
மதியை யாறென வுடையவோர் மூவிரு
வதனத்தான்
கதியை யாற்றியுங் குணத்தொடு பழகியுங்
காணா
விதியை மேலவர் நடுங்கிடத் தளையிடு
மிளிர்குந்தம். 7

திருக்கைலாய மலையில் பிரமன், விஷ்ணு முதலிய தேவர்கள் சிவபெரு மானை வணங்கி விடை பெற்று வந்த னர். வாசலில் இலக்கத் தொன்பதின் மர் சூழ நின்றிருந்த சண்முகப் பெரு மான் பிரமனை நோக்கி 'இங்கே வருக' என்றழைக்க அவன் அவரை வணங்காது நின்றனன். அது கண்ட குமரன் பிரம்மனிடம் 'உமது தொழில் யாது?' என்று கேட்டார். சிருட்டித் தொழில் எனக் கேட்ட முருகன் புன் முறுவல் புரிந்து 'உலக முழுதும் படைப் பது உண்மையாயின் பிரணவப் பொருள் யாதெனத் தெரியுமா?' என்றார். பிரமன் பொருள் அறியாது திகைத்தான். பிர மனை நோக்கிப் ''பிரணவப் பொருளே தெரியாது எவ்வாறு படைப்புத் தொழி லைப் புரிகிறீர்?'' எனக் கேட்டு, தலை யில் குட்டி வீரவாகு தேவரைக் கொண்டு கந்தகிரியில் சிறை வைத்தார். பின் தானே படைப்புக் கடவுள் ஆனார். வந்த தேவர்கள் நடுங்கி ஓடினர்.

8

தாரகன் வதைச்சிறப்பு

வனமுறு வாசமா வைகல் விட்டியா
சனமுற விண்ணிடந் தனிவை குந்தமும்
இனனுறு பங்கய மூவர்க் கெய்தவே
சினமுறு தாரகற் செறிசெங் குந்தமே.

சூரபத்மன் கொடுஞ்செயலால் இந்தி ரன், திருமால், பிரமன் மூவரும் தங்கள் பதவியை இழந்தார்கள். தம்பிமார்களா கிய தாரகன், சிங்கமுகாசுரன் இவர்க ளின் பலத்தோடு மூவுலகங்களையும் சூரன் கலக்கினான். செங்குந்தர் குலத் தில் தோன்றிய வீரவாகு தேவர், முருகன் திருநாமத்தையும் சேவடியை

அக்கினிப் பொறிக்கு ஆற்றாதோடிய பார்வதி இவயைனைத்தையும் அறிந்து 'எம்பிரானுக்குக் குமரன் என்னிடத்தே தோன்றா வண்ணம் செய்த இத்தேவர்களின் பத்தினிகளுக்குப் புதல்வர்கள் இல்லாதொழிக' என்று சாபம் கொடுத்தார். பின் சிவனோடு சென்று சேர்ந்தார். உமாதேவியார் ஓடியபோது அவருடைய திருவடிச் சிலம்பினின்று சிதறிய ரத்தினங்கள் சிவபெருமான் திருமுன்பு நின்றன. அவைகளில் உமாதேவியார் திருவுருவம் தோன்றியது. சிவபெருமான் அவைகளை வருக என அழைக்க ஒவ்வோர் ரத்தினங்களிலும் ஒவ்வோர் சக்தியாக நவசக்திகள் தோன்றின.

அந் நவசக்திகள் சிவபெருமான் மேல் விருப்பம் கொண்டமையால் கருப்பங் கொண்டன. பார்வதி தேவி கோபம் கொண்டு 'நீங்கள் பலகாலம் இக் கருப்பத்தோடு இருங்கள்' என்று சாபம் தந்தார். நவசக்திகள் அஞ்சி நடுங்கி வியர்த்துப்போக, அவ்வியர்வையினின்றும் தேவ தேவர் திருவருளினால் ஒரிலக்க வீரர்கள் உதித்தார்கள். அவர்கள் சிவனைச் சென்று தொழ 'நீவிர் யாவரும் எம் குமாரனான முருகனுக்குப் படைவீரராவீர்' என்று அருள் வழங்கினார்.

பார்வதி தேவியின் சாபம் பெற்ற தேவ மாதர்கள் கருப்ப பாரம் தாங்காது உமா தேவியையும், சிவபெருமானையும் துதித்தனர். ஐயன் அன்னையின் திருமுகம் நோக்கி 'உமையே! இவர்கள் பட்ட துன்பம் போதும். புதல்வர்களைப் பெற அருள் புரிக' என்றார். அம்மை அவ்வாறே செய்ய மாணிக்கவல்லியிடத்து வீரவாகுவும், மௌத்திக வல்லியிடத்து வீரகேசரியும், புட்பராக வல்லியிடத்து வீர மகேந்திரரும், கோமேதக வல்லியிடத்து வீர மகேச்சுரரும், வைடூரிய வல்லியிடத்து வீர புரந்திரரும், வைர வல்லியிடத்து வீர ராக்கதரும், மரகத வல்லியிடத்து வீர மார்த்தாண்டரும், பவளவல்லியிடத்து வீராந்தகரும், இந்திரநீல வல்லியிடத்து வீரதீரரும் அவதரித்தார்கள். நவ வீரர்களும் சிவபிரானைச் சென்று துதித்தனர். அப்பன் அம்மை இவர்கள் நம் மைந்தர்களாகிய இவர்கள் அறிவும் ஆற்றலும் மானமும் ஒழுக்கமும் மிக்குடையவர்கள். இவர்கள் புதியவர்கள் அல்லர். நந்தி கணத் தலைவர்கள் என்று கூறினார். நவ வீரர்களிடம் "நீவிர், அறுமுகக் கடவுளை நீங்காது தொண்டு செய்க" என்று ஆணையிட்டார். பார்வதி தேவியின் அருளினால் அந்நவ வீரர்கள் தோன்றும் போதே மேலான வீரத்தோடும், முகத்தில் மெல்லிய மீசையோடும் தோன்றினர்.

பின்னர் சிவபெருமான் உமா தேவியாரை நோக்கி 'சரவணப் பொய்கையில் தேவர் துயர் நீக்கத் தோன்றியுள்ள கந்தவேளை அழைத்து வருவோம்' என்றனர். உமாதேவி அப்பொய்கையில் இறங்கி ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களோடும் சேர்ந்த ஒரு திருவுருவமாகச் செய்தார். உச்சி மோந்தார். அன்பின் பெருக்கால் அம்மை தனங்களில் பால் சுரக்க, மணிக் கிண்ணத்தில் எடுத்து வழங்கினார். கார்த்திகைப் பெண்கள் வந்து வணங்கினர். உங்களால் இவன் வளர்க்கப் பெற்றமையால் இவனுக்குக் 'கார்த்திகேயன்' என்னும் பெயர் வழங்கும். உங்கள் நாளாகிய கிருத்திகை நாளில் இவனைப் பூசித்தோர்க்கு விரும்பியவற்றைத் தந்தருள்வான் என்று வரம் தந்தார். சரவணப் பொய்கையில் மீனுருக் கொண்டிருந்த பராசர முனிவருடைய ஆறு புத்திரர்களுக்கும் சாபம் நீங்க அருள் வழங்கிச் சிவன் சிறப்பு புரிந்தார்.

சிவபெருமான் அனைவர்க்கும் விடை தந்து அனுப்பி விட்டு உமையோடும் குமரனோடும் திருக்கைலை அடைந்தார். அப்போது ஒரிலக்கத்து ஒன்பது பேரும் கந்தக் கடவுளின் திருவடி தொழுது அவரை அகவாது சூழ்ந்திருந்தனர். இது புராணம்!

அவ்வீரவாகுவின் மரபில் தோன்றியோர் செங்குந்தப் பெருமக்களாதலின், அவ்வீரவாகு தேவர் தோன்றிய வரலாற்றுச் சிறப்பை இவ்விடத்தே நினைவு கூர்ந்தார். இவ்வரலாற்றினை உச்சிமேல் வைத்துப் புலவர் போற்றும் கச்சியப்பச் சிவாச்சாரியாரின் கந்த புராணச் செந்தமிழ் நூலில் மேலும் சிறக்கக் காணலாம்.

குந்தப் படைச் சிறப்பு

பிறந்தவொன் பதின்மர்குந்தப் பெருமை
யாம் பேசமாட்டோம்

பறந்தன கழுகும் பாறும் பயிரய காளியஞ்ச
மறந்தகு மவுணர ராட்ட மடங்கினமகிழ்ச்சி
யால்வாய்

திறந்தன வலகை யீட்டஞ் செய்யவாய்ச்
சிறுவரோடே. **5**

இவ்விதம் உதித்த வீரவாகுதேவர் முதலிய நவ வீரர்களுடைய திருக்கரத்

3
செங்குந்தத் தலைவர்கள் சிவத்தலங்களைப் பரிபாலனம் புரியும் பாங்கு

விடங்கமே ழாதி வீதி விடங்கமா ரூர்வெண் காடும்
நடங்கொளுந் தில்லை மூதூர் பஞ்சநன் னதிசாய்க் காடும்
இடங்கொள்மா காளமேழு மிடைமரு தூர் செங்காடும்
தொடங்கிய தரும வாட்சிச் செங்குந்தர் தொகுதி வாழி.

வீதி விடங்கப் பெருமான் என்றும் தியாகராசர் எழுந்தருளியுள்ள திருவாரூர் முதலான ஏழு சிவத்தலங்களும், திருவெண் காடும், இறைவன் நடனமிடும் சிதம்பரமும், திருவையாறும், திருச் சாய்க்காடும் இடமகன்ற மாகாளமென்னும் சப்த சிவத் தலங்களும், திருவிடைமருதூரும் திருச்செங்காடும் ஆகிய இச் சிவத் தலங்களுக்கு ஆதி முதல் தர்மகர்த்தாவாக இருந்து பரிபாலனம் புரிந்து வருகின்ற செங்குந்தர் கூட்டங்கள் வாழ்க.

முதலடியில் சுட்டப் பெற்ற ஏழு சிவத்தலங்கள் திருவாரூர், திருக்காரோணம், திருநள்ளாறு, திருக்காறாயில், திருக்கோளரியூர், திருவான்மியூர், திருமறைக்காடு என்பனவாம்.

4

பாத நூபுரத்தில் தேவி சாயைகண் டமலன் கொண்ட
காதலால் கருப்பமாகுங் கதிர்நவ மணிமா தர்க்கண்
மேதகு வீரத்தோடு மென்மீசை யோடும் வந்த
மாதவ வீரவாகுத் தலைவரித் தலைவர் மாதோ.

உமா தேவியாரின் பாதச் சிலம்பில் உதிர்ந்த நவமணிகளில் அப்பார்வதியின் திருவுருவத்தைக் கண்ணுற்று சிவபெருமான் கொண்டருளிய இச்சையால் கருவுற்ற ஒளியுடைய நவரத்தினப் பெயர் கொண்ட மகளிர்களிடத்தில் மேம்பாடமைந்த வீரத்தன்மையுடனும் மிருதுவாகிய மீசையுடனும் உதித்த பெருந்தவமுடைய வீரவாகு தேவர் முதலிய நவவீரர்களின் மரபினர் இச் செங்குந்தத் தலைவர்கள்.

இப்பாட்டு சுட்டும் சரித்திர வரலாறு:

பூர்வத்தில் விட்டுணு, பிரமன், உருத்திரன், முதலிய தேவர்கள் எல்லாரும் சூரபன்மன் சிங்கமுகன், தாரகன் முதலிய அவுணர்களால் துன்பமுற்று, திருக்கைலையில் எழுந்தருளிய சிவபெருமானை வணங்கி "எம்பெருமானே! அடியேம் இது நாள்காறும் சூரன் முதலிய அசுரர்களால் மிக வருந்தினோம். எங்களைக் காக்க உமக்கொப்பாக ஒரு திருக்குமாரரைப் பெற்றுத் தர வேண்டும்' என்று வேண்டினர்.

அப்போது சிவபெருமான் நீங்கள் வருந்தாதீர்; ஒரு புதல்வனைத் தருவோம் என்று திருவாய் மலர்ந்து தமது பழைய ஆறு திருமுகங்களில் நெற்றிக் கண்தோறும் ஒவ்வோர் அக்னிப் பொறியைத் தோற்றுவித்தருளினார். அப்பொறிகள் தேவர்கள் யாவரும் நெருங்க முடியாதபடி மிக்க வெம்மையோடு அண்ட பகிரண்டமெலாம் நடுங்க உலகமெங்கும் பரந்தன. உமாதேவியாரும் இவ்வெப்பத்தைத் தாங்க முடியாமல் தன் திருவடிகளிலுள்ள நவரத்தினச் சிலம்புகள் ஒன்றோடொன்று புலம்பித்தாக்க தமது திருக்கோயிலுள்ளே ஓடினார்.

இந்நிலை கண்டு தேவர்கள் பிதாவே! அசுரர்களைக் கொல்ல ஒரு குமாரரை வேண்டினோம். நீங்களோ அக்கினியைக் கிருபை புரிந்தீர். ஒரு கணத்தில் அந்நெருப்பை மாற்றாது விடுவீராயின் உலகத்தையே அது அழித்துவிடும். உமது பாதமே சரண் என்று விண்ணப்பம் செய்தார்கள்.

சிவபெருமான் வாயுதேவனையும் அக்கினித் தேவனையும் அழைத்து 'நீங்கள் இப்பொறிகளைத் தாங்கிச் சென்று கங்கையில் விடுங்கள். அக்கங்கை இவ்வனற் பொறிகளைச் சரவணப் பொய்கையில் சென்றுய்க்கும்' என அருளினார். அவ்வாறே அவர்கள் அப்பொறிகளைக் கங்கையில் விட, அக்கங்கை அவைகளைச் சரவணப் பொய்கையில் கொண்டு சேர்த்தது.

அருவமும் உருவமும் அநாதியாயும் ஒன்றாயும் பலவாயும், பரப்பிரம்மமாயும் நின்ற சோதிப் பிழம்பே திருமேனியாக, கருணை வெள்ளம் பாய ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்டு உலகம் உய்ய முருகனாய்த் திருவவதாரம் புரிந்தது.

சரவணப் பொய்கையில் முருகக் கடவுள் புரியும் திருவிளையாடல்களைக் கண்டு விட்டுணு முதலிய தேவர்கள் கார்த்திகை மகளிர்களை அனுப்பி திருமுலைப்பால் தந்து துயில் செய்து துதிக்கச் செய்தனர்.

3. ஒட்டக்கூத்தர் பாடிய "ஈட்டி எழுபது" மூலமும் விளக்கமும்

புலவரேறு பெ. வேலு, M.A., B.Ed., தாரமங்கலம்

கடவுள் வாழ்த்து

நாட்டிலுயர் செங்குந்த நாயகர்மீ திற்சிறந்த
ஈட்டி யெழுப தினைப்பாடக்—கோட்டில்
பருமா வரையதனிற் பாரத நூல் தீட்டும்
கரிமா முகன்கழலே காப்பு.

உலகத்திலுள்ளோரால் போற்றப் படுகின்ற மேலான புகழை உடைய செங்குந்தத் தலைவர்கள் மீது, பல சிறப்புக்களும் அமைந்த ஈட்டியெழுபது என்னும் நூலினைப் பாட, தனது ஒரு கொம்பினால் பருத்துயர்ந்த மேருமலையில் பாரத நூலை எழுதி வைத்த அழகிய யானை முக விநாயகக் கடவுளினது திருவடிகளே துணை நிற்கும்.

பாயிரம்

பூவார் புவனையிற் சோமன் றரும்பழி போனபின்பு
நாவாணர் போற்றிய நாடகங் கேட்ப நலமுடனே
யாவாணர் செங்குந்த ராயிரத் தெண்டலை கொய்திரத்தப்
பாவாடை யிட்ட துலகமெல் லாம்புகழ் பாலித்ததே.

ஆவூரில் நலமிக்க செல்வத்துடனே வாழ்ந்த செங்குந்தத் தலைவர்கள், அழகமைந்த புவனை என்னும் பட்டினத்தில் சோமாசியாண்டார் என்பவரால் நேர்ந்த பழி நீங்கிய பின்னர், பெரும் புலவர்களால் போற்றப் படுகின்ற ஈட்டி எழுபது எனும் நூலை, ''கூத்தன்'' என்னும் என்னால் பாடக் கேட்பதற்காக தங்களில் ஆயிரத் தெட்டு பேர்களது தலைகளைக் கொய்து இரத்தப் பாவாடையிட்டமை உலகம் முழுதும் புகழ் பாலிக்கத் தக்க தொன்றாகும்.

மங்கல வாழ்த்து

பூதலம் வாழ்க குந்தர் பொலிவுடன் விளங்க நான்கு
வேதமெந் நாளு மோங்க வேதியர் பசுக்கள் பல்க
மாதவர் வளவன் செங்கோல் வளமை குன்றாது நிற்க
ஓதமே யறையும் பொன்னி யுறந்தையுஞ் சிறக்க மாதோ. 1

எல்லா வளமும் பெற்று உலகம் மென் மேலும் வாழ்க. செங்குந்தத் தலைவர்கள் பொலிவு பெற்று நீடூழி வாழ்க. நான்கு வேதங்களும் எக்காலமும் ஓங்குக. செந்தண்மை மிக்க அந்தணர் பசுக்கள் பல்குக. சோழ மன்னனின் செங்கோல் வளம் குறையாது பெருகி நிற்க. கடல் போலக் காவிரியும், அக்காவிரியால் உறையூரும் சிறப்புப் பெருக.

நூல் கேட்டோர் சிறப்பு

கோட்கவி கொண்டு மாக்கள் கொடுந்தமிழ் கூறநீத்துத்
தாட்கவிப் புதிய வாட்டந் தலைக்கடை துரந்து சாட
வாட்கவி கொண்ட மன்னன் வளவனு மகிழ நாமே
நாட்கவி பாடு நாட்போ லிருப்பது பெரிய நாடே. 2

புல்லிய கவி வாணர் முன்னோரது மேற்கோளாகிய பழமொழிப் பொருளைக் கொண்டு சில பிரபந்தங்களைப் பாடி வந்து அரங்கேற்றும் கொடுந்தமிழை நீக்கி, அப்போலிக் கவிகளைத் தலைவாயில் அளவும் துரத்திச் சாடும்படி, வாள் போன்ற என்னைக் கவிச் சக்கரவர்த்தியாகக் கொண்டிருக்கும் குலோத்துங்கன் மிக மகிழ்ந்து கேட்க, கூத்தனாகிய நாமே நாடோறும் பாடும் இம்மகிழ்ச்சிகரமான நாளைப்போல சோழ நாடு சிறப்புற்றுள்ளது.

ஒரு கற்ப காலமெல்லாம் சமுத்திரத்தில் மூழ்கித் தவஞ் செய்திருக்கக் கிடைக்கினும் யாது பிரயோசனத்தைத் தரும். பஞ்சாக்கினி மத்தியில் நின்று சரீரம் புழுங்காமல் வெளியில் உலாவுகின்ற காற்றை ஆகாரமாகக் கொண்டு உள்ளிருந்து இடை பிங்கலையின் வழியாகப் பன்னிரண்டங்குலம் செல்லாநின்ற காற்றைக் கும்பித்துச் சுழிமுனையில் செலுத்தி யோகஞ் செய்து ஒரு கற்ப காலமிருந்தாலும் யாது பிரயோசனத்தைத் தரும். வாசனை பொருந்திய கொன்றை மாலையைத் தரித்த சடாமகுடத்தை உடைய வேதகிரியார் வாழுகின்ற திருக்கழுக்குன்றத்தை வலமாக வந்து நெருங்கிய சம்பு, ஆதி என்னும் கழுகுகளுக்குத் தினம் அன்னத்தைக் கொடுத்து மோட்ச கதியை அடைவிக்கும் வெற்றி பொருந்திய நவ வீரர்களது செங்குந்தம் போலக் கேட்டவுடன் கொடுக்க மாட்டாதன மற்றைத் தவங்கள்.

செங்குந்தத் தலைவர்களின் சைவ சமய பரிபாலனச் சிறப்பு.

உருக்கொடு பணியாதாரை யுளத்திலைந்
தெழுத்தை யுன்னிப்
பெருக்கொடு தவளநீற்றைப் பேணியே
பணியா தாரைத்
தருக்கொடு நின்று கண்ணீர்த் ததும்ப
முன்னா டாதாரைத்
திருக்கோயில் வலம் வாராரைச் சினத்தொடு
பொருஞ்செங் குந்தம் 23

சிவபெருமானை உள்ளத்தே உருக்கத்தோடு வணங்காதவரை, ஐந்தெழுத்தினைத் தமது உள்ளத்தில் தியானித்து வெள்ளிய திருநீற்றை மிகுதியாக விருப்பத்தோடு திருமேனியில் தரித்துக் கொள்ளதாரை, தவச் செருக்கோடு எதிராக நின்று ஆனந்தக் கண்ணீர் ததும்ப நடனம் செய்யாதவரை, சிவாலயங்களை வலம் செய்யாதாரை, கோபத்தோடு சங்காரம் செய்து விடுகின்ற குந்தப் படையைக் கொண்டவர்கள் இச் செங்குந்தப் பெருமக்கள்.

செங்குந்தம் அடியார்களுக்குச் சிவலோகத்தை ஆளவைக்கும் சிறப்பு

கூவிளை யிதழி தும்பை கொண்டருச் சித்த
பேர்க்கும்
மூவர்தம் பாடலோதி முன்னின்று பணிந்த
பேர்க்கும்
ஆவலோ டைந்தெ ழுத்தை யகத்துள்ளே
நினைத்த பேர்க்கும்
தேவர்நா டாள வைக்குந் திருக்கை வேற்று
ணைச் செங்குந்தம். 24

சிவபெருமானை வில்வத் தளிர்களும் கொன்றை மலர்களும் கொண்டு அருச்சனை செய்த அடியார்களையும் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவரால் சொல்லிய தேவாரத் திருமுறைப் பாடலை தோத்திரம் செய்து எதிராக நின்று வணங்கின அடியார்களையும், ஆசையோடு ஐந்தெழுத்தை உள்ளத்தில் தியானித்த அடியார்களையும், முருகக் கடவுளின் அழகிய கையில் நிலைபெற்ற வேலாயுதத்தைத் துணையாகக் கொண்ட செங்குந்தம் தேவர் நாட்டை ஆளவைக்கும்.

25
குந்தப்படைக்கு ஒப்பின்மை கூறியது.

ஆலமார் மிடற்றா ராடுமாடலே யாட
லம்மை
ஏலவார் குழலா ளங்கைத் தாளமே
தாளமேந்தும்
சூலமா குவதன் னான்கைச் சூலமே சூல
மற்றிக்
கோலம் வாழ் வீரர் கையில் குந்தமே
குந்தமாகும்.

விடம் பொருந்திய கண்டத்தினையுடைய சதாசிவ மூர்த்தி ஊழிக்காலத்தே செய்யும் நடனமே நடனம். அதே காலத்தில் மயிர்ச் சாந்து பூசிய நீண்ட கூந்தலையுடைய தாயாகிய ஞானசக்தி அந்நடனத்துக்கேற்ப தன் கையால் கொட்டுகின்ற தாளமே தாளம். அச் சிவபெருமான் தன் கையில் கொண்டுள்ள சூலமே சூலமாகும். அது போலவே அழகுமிக்க நவ வீரர்கள் கையில் கொண்டுள்ள குந்தமே குந்தமாகும்.

26
குந்தப்படை செந்தமிழ் நூல் கொண்ட சிறப்பு

ஆதிநா ளுமையவ ளளித்த குந்தமே
சாதிநா லுவப்புடன் றலைக்கொள் குந்தமே
காதிமே லவரையுங் கல்லுங் குந்தமே
கோதினம் பாடவே கொள்ளுங் குந்தமே.

நம்மால் கூறப்படும் குற்றமற்ற பாடல்களை ஏற்றுக் கொள்ளும் குந்தம், முன்னாளில் உமா தேவியாலே வீரவாகு தேவர் முதலிய நவ வீரர்களுக்கு வழங்கப்பட்ட குந்தமாகும். அந்நாளில் நின்ற நான்கு பிரிவு மக்களும் தங்கள் தலைமீது வைத்துக் கொள்ளும் குந்தமாகும். தன்னை வணங்காதவரைக் கோபித்து உலகில் நிலைபெறாது அழிக்கும் குந்தமாகும்.

27

கொடைச் சிறப்பு

கருதலர் பொடிபடக் கருதுங் குந்தமே
விருதுடைச் சூர்முடி வெட்டுங் குந்தமே
பொருதனிப் புலிக்கொடி புனையுங் குந்தமே
தருதலத் தருவெனத் தருஞ்செங் குந்தமே.

வீரத்திற்கு அடையாளமாக புலிக் கொடியை அலங்காரமாகத் தரித்துக் கொள்ளும் செங்குந்தமானது பகைவர் முடியினைப் பொடிபடச் செய்து காட்டும். விருதுகள் பல பெற்ற சூரபதுமன் முதலிய அவுணர்களின் தலையை வெட்டிய செங்குந்தம் அடுத்தவர்க்குக் கொடுத்தலில் கற்பகமே மண்ணுலகில் வந்தது போல வழங்கும்.

28

பெறுதற்கரிய துணை கொண்ட சிறப்பு

கைலைமால் வரையையும் காக்குங் குந்தமே
அயிலைநற் றுணையென வாக்குங் குந்தமே
வெயிலைமன் மணிகளின் மிளிருங் குந்தமே
மயிலைவா கனமென வாக்குங் குந்தமே.

செங்குந்தமானது உயர்ந்த திருக் கைலை மலை முதலாய சிவபெருமானின் இடங்களையெல்லாம் காக்கும். முருகப் பெருமானின் வேலாயுதத்தைத் தனக்குத் துணையாக ஆக்கும். ஒளி பொருந்திய நவரத்தினங்களைப் போல ஒளிரும். சூர பதுமனாகிய மயிலை முருகக் கடவுளுக்கு வாகனமாக மிளிர வைக்கும்.

29

செங்குந்தர்க்கு முதலியார் என்னும் பட்டம் வந்தமைக்கான காரணம்

இந்திர னயன்மா றேவர் யாவர்க்கு முதன்மையாக
வந்தபான் மையினாற் சூல மழுப்படையத்தனார்க்கு
முந்திய நாமந் தானு முதலிய ராகையாற்செங்
குந்தர்சந் ததிக்கு மப்பேர் முதலிய ரென்று கூறும்.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் புரியும் பிரமன் விஷ்ணு உருத்திரன் என்கின்ற மும்மூர்த்திகளுள் சிவனே முதலில் தோன்றியதால் முதலியர் எனும் பெயர் சிவனுக்குண்டு. அம் முதல்வனார் வழியில் தோன்றிய இனத்தாராகையால் இவர்க்கும் முதலியர் என்னும் பெயர் பொருந்துவதாயிற்று. முதலியர் என்பதுதான் தற்போது முதலியார் என்று வழங்கப்படுகிறது.

30

முசுகுந்தன் நவவீரரைப் பெற்ற சிறப்பு

முந்தை நோன்பினான் முருக வேண் முசு
குந்த னுக்கொன்பான் குமர ரைத்தர
வந்த வீரரிவ் வகிலம் வென்றிசை
தந்த குந்தரித் தகுசெங் குந்தமே.

முசுகுந்தச் சோழன் சஷ்டி விரதத்தினை முறையாகச் செய்து நிற்க, முருகக் கடவுள் தமது இளவல்களாகிய நவ வீரர்களைப் படைத் துணைவர்களாகத் தந்தார். அவ்வீரர்கள் உலகிலுள்ள அரசர்களை எல்லாம் வெற்றி கொண்டு அம் முசுகுந்தச் சோழனுக்குச் 'சக்கரவர்த்தி' என்னும் பெரும் புகழை நிலை பெறச் செய்தார்கள். அத்தகைய பெரும் புகழ் தந்தோர் வழி வந்தவர்களே இச் செங்குந்தர்.

ஒரு காலத்தில் விதூமன் என்னும் கந்தருவன் சுகுமாரி என்னும் இருடி பத்தினியை விழைந்தான். அவள் கோபம் கொண்டு முசு ஆகுமாறு சாபம் தந்தாள். குரங்கு முகமடைந்த அவன்கைலை மலையில் உள்ள சோலையை அடைந்தான். அங்குள்ள குரங்குக் கூட்டம் வந்தவனை அரசனாக ஏற்றுக் கொண்டது.

ஒரு நாள் தன்னையறியாமல் வில்வ மரத்தின் மேலேறி வில்வத் தளிர்களை உருவி பூமியில் போட்டுக் கொண்டிருந்தான். அத் தளிர்கள் யாவும் அம்மரத்தடியில் எழுந்தருளியிருந்த சோமாஸ்கந்தர் திருமுடியில் அர்ச்சனைப் பத்திரமாகக் குவிந்தது. அதனைக் கண்ட உமாபதி விதூமனைப் பார்த்து நீ அபுத்தி பூர்வமாகச் செய்திட்ட அர்ச்சனைப் பேற்றால் சூரிய குலத்தில் பிறந்து எண்பத்தீராயிர வருஷ காலம் ஏகச் சக்கரவர்த்தியாய் ஆள்க என்று அருள் பாலித்தார். விதூகன் முசுமுகச் சோழன் என்னும் பெயரோடு சோணாட்டில் அவதரித்துக் கருவூரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்தான்.

முசுமுகச் சோழன் தன் முன்னோர்களைப் போலத் தானும் திக் விஜயம் செய்ய எண்ணி, அதற்குத் தக்க துணைகளைப் பெறவேண்டி வசிட்ட முனிவர் உபதேசப்படி சஷ்டி விரதத்தை முறைப்படி செய்து வந்தான்.

இவ்விரதத்தின் பயனாக முருகப் பெருமான் என்பான் வீரரோடு மயில் மீது வந்து அம்மன்னனுக்குக் காட்சி தந்து, மன்னன் கேட்டபடி வீரவாகு தேவர் முதலிய தேவர்களைப் படைத் துணைவராகத் தந்தார். நவவீரர்கள்

வத்தை உடையவன், வணங்காத பகைவர்களுக்குச் சிங்கம் போன்றவன், இளம் பருவப் பெண்களுக்குக் கரும்பு வில்லையுடைய மன்மதன் போன்றவன், புகழுக்குப் பொன் மலையை ஒப்பவன். நெற்பயிர் வளரும் வயலின் வரம்பில் வெள்ளிய சங்கினங்கள் முத்துக்களை ஈனும் வளம் மிக்க களந்தை நகருக்கரசன் கையிலுள்ள குந்தத்தினது புகழைப்போல எங்கும் கண்டதில்லை.

களந்தை என்னும் ஊர் தொண்டை நாட்டிலுள்ள பொன் விளைந்த களத்தூர்.

இக்களந்தையரசன் பொன் விளைந்த களத்தூரை ஆண்டுவந்த மதிமான் என்னும் மன்னனுக்கு மகனாகத் தோன்றியவன். சிறந்த சிவபக்தி கொண்டவன். இவனுக்கு மகுடாபிஷேகம் செய்ய எல்லா மன்னர்களுக்கும் திருமுகம் அனுப்பப்பட்டது. குறுநில மன்னனாகிய காட்டுரான் மட்டும் வந்து விழாவில் கலந்து கொள்ளவில்லை. அவனைப் புறங்கண்டு வெற்றிவாகை சூடிய பிறகே மதிமான் தன் மகனுக்கு மகுடாபிஷேகம் செய்வித்தான் என்று வல்லான் காவியம் தேவ காட்சிச் சருக்கம் கூறும். இக்களந்தை மன்னனே திருத்தொண்டர் அறுபத்து மூவருள் ஒருவரான, கூற்றுவ நாயனார் சந்ததியில் வந்தவர் என்றும் கூறுவர்.

ஆர்கொண்ட வேல்கூற்றன் களந்தைகோன் அடியேன் என்று ஆளுடைநம்பியும் 'கோதை நெடுவேல் களப்பானாகிய கூற்றுவனே' என்று நம்பியாண்டார் நம்பிகளும் இவ்வரசனைக் குறித்துள்ளார்கள்.

51

புற்றிடங்கொண்டான் சிறப்பு

கற்றிடங் கொண்டவர் கவின்சொற் கொள்ளுமே
யுற்றிடங் கொண்டபேர்க் குலகை நல்குமே
வெற்றிடங் கொண்டமே வலரைவீட்டுமே
புற்றிடங் கொண்டவன் பொலிகைக் குந்தமே

புற்றிடங் கொண்டான் என்னும் செங்குந்தத் தலைவனது கையில் தாங்கிய பொலிவு பெற்ற செங்குந்தமானது கற்ற புலவர்களின் அழகு மிக்க பாடல்களைச் சூட்டிக்கொள்ளும். சரணாகதி அடைவோர்க்கு இவ்வுலகத்தையே கொடுக்கும். மாறுபட்ட பகைவர்களை வென்று நாசம் புரியும்.

இப்பாட்டில் குறிக்கப்படும் புற்றிடங் கொண்டான் என்பவன் திருவாரூர்ப் பூங்கோயில் தியாகராசப் பெருமான் வழி வழி அடிமை.

திருவாரூரில் அரசச் செல்வத்துடன் வாழ்ந்து வந்தவன் புற்றிடங்கொண்டான். இவன் தந்தையும் இப்பெயரையே பெற்றவன். சிறந்த சிவபக்தி மேலோன். பல புலவர்களால் பாராட்டப் பெற்றவன். நீதிமான், அங்க தேசத்து அரசனைக் கலிங்க மன்னன் முறையின்றித் துன் புறுத்தினான். அங்க நாட்டு மன்னன் புற்றிடங் கொண்டானிடம் முறையிட கலிங்கத்தை வென்று முறையிட்ட மன்னனுக்கே கொடுத்துதவினான். வல்லான் காவியம் தேவசாட்சிச் சருக்கத்தில் இவ் வரலாறு வருகிறது.

52

கோளாந்தகன் சிறப்பு

மூளா வடவைச் சிகரகிரி முடிகம் பிக்கு மாருதஞ்செந்
தாளான் மடங்கவொரு கூற்றந் தனிமும் மதிகாய்ச் சிறுமூரல்
வேளாருயிரைப் பேர்க்க வனற்கண்ணும் விளங்கு முருத்திரனே
கோளாந்தக னெண்டோளான் கைக்குந்தம் வாகைக் குந்தமே.

சதா காலமும் மூண்டெரியும் வடவா முகாக்கினியும், எண்திக்கு மலைச் சிகரங்களும் நடுங்க எமனை உதைத்த சிவந்த பாதமும், திரிபுரத்தை எரித்த புன்முறுவலும் மன்மதனின் உயிர் போக்கிய அக்கினி விழியும் கொண்ட உருத்திரனுக்கு நிகரான கோளாந்தகன் என்னும் சேங் குந்தத் தலைவன் கையிலுள்ள குந்தமே வெற்றி பொருந்திய குந்தமாகும்.

வடவா முகாக்கினி-கடலின் கண்ணுள்ள பெண் குதிரை முகம் போன்ற அக்கினி. மார்க்கண்டனுக்காக மறலியை உதைத்ததும், புன்முறுவல் செய்து புரம் மூன்றை எரித்தது, நெற்றிக் கண்ணால் மாரன் உயிரை அழித்தது ஆகிய முச்செயல்களை உருத்திரனுக்குக் குறிப்பிடுகின்றார். இப்பெருமானைப் போன்ற கோளாந்தகனும் பகைவர்களை அழிப்பதில் வல்லவன். இவன் கொடுங் குன்றத்தை ஆண்ட மன்னன் மதிநாதனின் புதல்வன். வேத விற்பன்னன். வில்லாற்றல் மல்லாற்றல் இரண்டிலும் சிறந்தவன். வடபுலத்தரசன் உணங்கனை மல்யுத்தத்தில் வெற்றி கண்டவன்.

டத்தார் தான் பராந்தகச் சோழன் வல்லான் என்னும் இரட்டனை வென்று சோழ நாட்டில் தம் அரசாட்சியை நிலை பெறச் செய்தனர் என்பது வல்லான் காவியம் வீர நாராயணச் சருக்கத்தில் சொல்லப்படும் செய்தி.

48

கச்சித் தனியன் சிறப்பு

இனி மாநிலத்திற் கண்டதில்லை கேட்டி
ருத்தலன்றிப் பெரும்
பனிமால் வரையு மைநாக முன்பின்
படைதா னெடுத்தாலு
முனிமாறுண்டோ நடுநின்று முடிப்பான்
கச்சித் தனியன் வட்டத்
தனிமா நிழற்கீழ்ச் செங்குந்தஞ் சரணா
கதிக்கு வைகுந்தம்.

யாதொரு நியாயங்களையும் நடுவு நிலைமையாக நின்று முடிவு செய்யும் பொருட்டுக் காஞ்சீபுரத்தில் ஒப்பற்ற மாமரத்தினது வட்டமான நிழலின்கண் இருந்து நடத்தும் தெய்வ சிம்மாசன கர்த்தராகிய செங்குந்தத் தலைவர் ஆயிரத்துத் தொளாயிரவருள் ஒருவனாகிய கச்சித் தனியன் என்பவன் பகைவர்கள் கண்டவுடன் சரணாகதி அடையச் செய்யும் குந்தம் கைக் கொண்டு இருப்பதால், குளிர்ச்சியைத் தரும் பெரிய பர்வதராசனும் மைநாகமும் முன்னும் பின்னும் படையெடுத்து வந்தாலும் கோபிப்பது உண்டோ? இம்மாவீரனது பெரும் புகழைக் கேட்டிருத்தலேயன்றி இப்போது இவ்வுலகத்தில் யாரிடத்தும் கண்டதில்லை.

காஞ்சீபுரம் என்ற பெருநாட்டில் இருந்தரசு செய்துவரும் கச்சித் தனியன் என்பவன் செங்குந்தத் தலைவர் ஆயிரத்துத் தொளாயிரவருள் ஒருவன். இவன் பதும வண்ணன் என்னும் மன்னனுக்கு ஒரே புத்திரனாக வந்தவன். தனியன் இளவரசனாக இருக்கும் போதே பதும வண்ணன் இறைவனடி சேர்ந்தான். அது கண்ட மறுபுலத்தரசர் இவன்மேல் படை எடுத்துவர அவர்களைப் போரில் புறங் கண்டு வெற்றி மாலைசூடி காஞ்சி மாவடியின்கீழ் தேவ சிங்காதனத்திலிருந்து நீண்ட நாள் அரசாண்டு வந்தான். வல்லான் காவியத்தில் தேவ சாட்சிச் சருக்கம் இவ்வரலாற்றை எடுத்துக் கூறும்.

49

ஒற்றியூரான் சிறப்பு

உடலமண் மேலுயிர் விண்மேலால்லா
ரொடுங்கவுதிரமொடு
குடருங் கொழுவுங் கழுகோடுங் கொள்ளை
கொள்ளப் பரிந்தூட்டு
மடல்வெண் டாழை முகமலர வாரிவாரித்
திரைக் கரத்தால்
கடல் வெண்டாளமே யெறிவு மொற்றி
யூரன் கைக்குந்தம்

மடலையுடைய தாழையினது வெண் மலரின் முகமானது மலரும்படி கடலானது அலைகளாகிய கைகளினால் வெள்ளிய முத்தங்களை வாரி வாரி வீசுகின்ற வளப்பம் பொருந்திய ஒற்றியூரனது கையின் கண்ணுள்ள குந்தமானது பகைவர்கள் உடலை மண்ணின் மீதும் உயிரை விண்ணின் மீதும் விட்டு அவர் தம் உதிரத்தையும் குடரையும் கொழுப்பையும் கழுகும் பருந்தும் காக்கையும் கொள்ளை கொண்டு உண்ண ஆசையோடு உண்டாக்கும்.

இத் திருவொற்றியூரன், ஆதிபுரியில் எழுந்தருளிய விநாயகப் பெருமானுக்கு ஆலயம் சமைப்பித்துத் தம் குலப் பெயரால் அம்மூர்த்தியை நாளும் வழிபட்டு வந்தான் எனத் தெரிகிறது.

இவ்வொற்றியூரன் சுதனகன் என்னும் வேந்தனுக்கு மகனாகப் பிறந்தவன். இவன் மாணிக்கத் தியாகருக்குத் தனியாக ஒரு நந்தவனம் அமைத்து அதில் உற்பத்தியாகும் புஷ்பங்களை எடுத்துக் காலை உச்சி மாலை வேளைகளில் பெருமானை அர்ச்சித்து வந்தான். அந்நாளில் அனலன் என்னும் ஓர் அரசன் அந்த நந்தவனத்தில் வந்து சேர்ந்து பல உயிர்களுக்குத் துன்பத்தை விளைவித்தான். அதுகண்ட ஒற்றியூரன் அவ்வனலனைத் தன் கைக் குந்தத்தினால் கொன்று உலகிற்குக் க்ஷேமத்தை உண்டாக்கினான் என்பதனை வல்லான் காவியம் தேவசாட்சிச் சருக்கம்.

50

களத்தூர் அரசன் புகழ்

தளர்ந்த வர்க்குத் திருவுருவம்
தன்னை யடையார்க் கொருசிங்கம்
இளந்தைய வர்க்குச் சிலைவேணல்
இசையாற் பொற்பூ தரமேயாம்
வளர்ந்த சாலி வரம்பினில் வால்
வளைகண் முத்தந் தரும் வளங்கூர்
களந்தை யாதி நகரரசன்
கைகுந்தம் போற் காணோமே.

தளர்ந்துவந்து தன்னை அடைந்தவர்களுக்கு முகமலர்ச்சியோடு அழகிய உரு

44

குந்தத்தின் குதூகலம்

பற்றினும் பற்றுஞ் சென்னி பறிக்கினும்
பறிக்கும் பாசம்
எற்றினும் எற்றுங் கூற்றை யீரினும் ஈரும்
வாரிச்
சுற்றினும் சுற்றும் அண்டம் துகளெழச்
செயினும் செயும்
மற்றினும் குந்தம் போற்ரு திருப்ப
வருளரோ மண்மேல்.

நவ வீரர்கள் கையிலுள்ள குந்தமானது இயமனையே பிடிக்க வேண்டுமானாலும் பிடிக்கும். அவன் தலையைப் பறிக்க வேண்டுமானாலும் பறிக்கும். அவன் பாசத்தைப் பிடுங்கி எறிய வேண்டுமானாலும் எறியும். அவனையே பிளக்க வேண்டுமானாலும் பிளக்கும். அவனை எடுத்துக் கரகரவென்று சுழற்ற வேண்டுமானாலும் சுழற்றும். அண்டங்களைத் துகளெழச் செய்ய வேண்டுமானாலும் செய்யும். இத்தகைய செயல் புரியும் குந்தத்தை இவ்வுலகில் போற்றாதவருண்டோ?

45

குந்தத்தின் வீரம்

போற்றியோ போற்றி யென்று புதுமலர்
தூவிச்சீற்ற
மாற்றியே வந்தி யாம லடையலர் வாழ்ந்
திருந்தால்
காற்றென வூழித் தீயிற் கடலெனக்
கொடிய கோபக்
கூற்றெனத் திரிந்து சோரிக் குளித்துடன்
களிக்கும்குந்தம்.

பகைவர்கள் தனது கோபங்களை மாற்றிக் கொண்டு புதிய மலர்களால் அர்ச்சித்துப் போற்றியோ போற்றி என்று வணங்காது வாழ்ந்திருந்தால் குந்தப் படை ஊழிக் காலத்தைப் போலவும், கடலைப் போலவும், இயமனைப் போலவும், கோபம் கொண்டு அவர்கள் எங்குளர் என்று தேடி அப்பகைவர்களைக் குத்தி அவருடலினின்றும் பெருகும் இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் களிப்படையும்.

அடையலர்—பகைவர்.

46

பழுவூர் வீரன் சிறப்பு

சூட்டும் வீர வாகுவெனச் சொல்லும்
பழுவூர் வீரனமர்
மூட்டுங் கால மூழி வெள்ள மூடுங் கால
மாகாதோ
வேட்டங் காலில் வீழாதார் மேலுமுளரோ
வீதியுலா
யீட்டுங் காலங் குந்தங்கண்டெழுமே கழுகு
பருந்துகளும்.

முடிசூட்டப் படுகின்ற வீரவாகு தேவருக்கு ஒப்பானவனென்று சொல்லப் படும் வழுவூரில் வாழும் வீரன் என்னும் செங்குந்தத் தலைவன் யுத்தமாகிய நெருப்பை மூளுவிக்குங் காலமானது ஊழிக் காலத்து வெள்ளத்தினால் மூடப்படுகின்ற சர்வ சம்ஹார காலமாகுமோ? அவன் காலில் வந்துவீழ்ந்து வணங்காதார் பின்னும் உயிரோடு வாழ்வாரோ? வீதியில் பவனி வருங்காலத்து அவன் கையிலுள்ள குந்தத்தைக் கண்டு கழுகினங்களும் பருந்துக் கூட்டங்களும் ஆகாயத்தில் எழுந்து வட்டமிடும்.

பழுவூர் என்னும் அட்ட வீரட்ட தலங்களில் ஒன்றான திருப்பழுவூரில் சிறந்த ஆற்றல் கொண்டவனாக செங்குந்தர் குலத்தில் தோன்றி வாழ்ந்தவன் வீரன் என்பவனாவான்.

47

பழுவை நாராயணன்

காராமுருவ மொழிந்து பொன்னின்
கவினார் பழுவை வளம்பதியில்
நாராயணனே விக்கிரம நாராயணனா
மென்னாதார்
வாராவழி வந்தோ மென்றே வாயிற்
புல்லைக் கவ்வி வந்தச்
சேரார் சேரா நின்றுதொழ செய்யு
மன்னான் செங்குந்தம்

மேகம் போன்ற இருள் நிறத்தை விட்டு பொன் போன்ற அழகிய உருவத்தைக் கொண்டு வளம் மிக்க பழுவை என்னும் நகரத்தில் வாழும் நாராயணன் என்னும் செங்குந்தத் தலைவனே திருவிக்கிர அவதாரம் செய்த நாராயணனாம் என்று கருதாத பகைவர்கள். போருக்கு வரத்தகாத இடத்து வந்தோமென்று வாயிற் புல்லைக் கவ்விக் கொண்டு எதிராக வந்து தளர்ந்து தொழும்படி அவன் கையிலுள்ள சிவந்த குந்தமானது செய்யும்.

பழுவூரில் வாழ்ந்த நாராயணன் சிறப்பை இப்பாடல் பகர்கின்றது. மண்ணுலக மன்னன் விண்ணக இறைவர்க்கு நிகரானவன் என்னும் கருத்தமைய இப்பாடல் அமைந்துள்ளது.

முன் பாட்டில் உரைத்த வீரன் என்பவனும் இப்பாட்டில் கூறிய நாராயணன் என்பவனும் சோழ நாட்டுத் திருப்பழுவூரில் அரசாண்ட கோமதி என்னும் மன்னனுக்கு இரட்டைப் பிள்ளைகளாகத் தோன்றியவர். இவர்களை இராம லட்சுமணர், சூர பதுமன் சம்பாதி என்பது போல வீர நாராயணன் என்றே உலகம் அழைத்தது. இவ் வீர நாராயணக் கூட்

39

திறை வாங்கும் சிறப்பு

செங்கோ னடத்தும் வளவனிட்ட சிங்கா
தனத்தி லினிதிருந்த
நங்கோன் கவியே கவியென்று நாட்டிக்
கவிபுன் களைகளைந்து
வங்கோ டீழங் கன்னாட மாராட்டிரங் குச்
சரஞ்சீனங்
கொங்கோ டெங்குந்தரத் திறையே
கொள்ளு மின்னார்செங்குந்தம்

கையில் தாங்கிய குந்தமானது மனு நீதி வழாது செங்கோல் நடத்திய சோழ ராசனால் இடப்பட்ட சிங்காதனத்தில் இனிது வீற்றிருந்து கூத்தனால் சொல் லப்பட்ட கவியே கவியென்று உலகில் நிலைபெற வைத்து மற்றைப் புன்கவி களாகிய களைகளை அறவே களைந்து வங்கம் ஈழம் கன்னடம் மராட்டிரம் குச்சரம், சீனம், கொங்கம் முதலிய ஐம்பத்தாறு தேசங்களும் திறை கொடுக் கப்பெற்று அரசாட்சி செய்த்து.

என்றும் ஏத்தப்படும் பெருஞ் சிறப்பு கொண்ட கூத்தன் கவியே கவி. ஏனைய புன்கவிகளைக் களைக என் றும் கூறப்பட்டது.

40

செங்குந்தர் மரபுக்கும் சோழன் மரபுக்கும் கொடி புலிக் கொடியே

கலிக்குறும் படுவள வனுக்கும் காதுசூர்
பலிக்குறும் படுதனி வாகைக் குந்தர்க்கும்
பலிக்குநற் புகழெலாம் பாதி யாதலாற்
புலிக்கொடி மரபிரண் டினுக்கும் போந்த
தால்.

ஏழைமை எங்கிருந்தாலும் அதனை ஒட்டும் இனிய பணி சோழனுடையது என்பதால் கொடைச் சிறப்பை சோழர்க்கு வழங்கினார். சூரபதுமனை அழித்தமை யால் வாகைபெற்ற செங்குந்தர்க்கு வீர மாகிய படைச் சிறப்பைத் தந்தார். புகழ் இருவர்க்கும் பாதி பாதியாகவே போய்ச் சேருகின்றபடியால் கொடியும் பொதுவாகவே அமைந்து விடுகிறது என்று கொடிச் சிறப்பு காட்டப்பட்டது.

41

செங்குந்தர் சோழனுக்கு உரிமையாம் சிறப்பு

தென்னனைச் சேரனைச் சிறுமை சொல்
லவும்
மன்னனை வளவனை மகிழ்ந்து பாடவும்
பன்னருஞ் சாரதி படைத்த பான்மைபோல்
ஒன்னலர்க் குள்ளினத் துற்ற குந்தமே.

பாண்டியனையும் சேரனையும் பழித்து அவர்களைச் சிறுமையாகச் சொல்லவும், இராசாதிராசன் என்னும் சோழனாகிய தன்னை மகிழ்ச்சியோடு புகழ்ந்து பாடவும் சொல்லுதற்கரிய கீர்த்தி யினையுடைய ஒட்டக் கூத்தன் என்னும் புலவனாகிய என்னைத் தன்னினத்தில் படைத்த தன்மை போல பகைவர்களைச் செயம் பண்ணுதற்குத் தன்னினத்துள்ளே பொருந்திய செங்குந்தர்களைப் படைத் தான்.

42

வேலும் குந்தமும் வேறில்லை

சேல்வேறு புலிவே றாகுஞ் சேதுவி னள
வாய்ச் சென்னி
கோல்வே றில்லாம லோச்சிக் கன்னியே
கொள்வனென்றே
மால்வேறு சிவன்வே றென்ன வழுத்திடா
வன்மைபோல
வேல்வேறு குந்தம்வே றென்றிரு பொருள்
விளம்பார் மேலோர்.

மீன் கொடியும் புலிக் கொடியும் கொண்டு பாண்டியனும் சோழனும் அர சாண்ட இமய முதல் சேது வரை முசு குந்தச் சக்கரவர்த்தி ஆண்டு கன்னியா குமரியையும் கைக்கொண்டான். திரு மால் வேறு சிவன் வேறு என்று பிரித் துப் பார்க்க முடியாதவாறு போல, முரு கக் கடவுள் கையிலுள்ள வேலாயுதம் வேறு நவ வீரர்கள் கையிலுள்ள குந்தம் வேறு என்று இருபொருள் சொல்ல மாட்டார்கள் பெரியோர்கள்.

43

குந்தப் பெருமை

பூமாலை கடப்பந் தாமம் பூண்மணித்
தெரியல் செய்ய
பாமாலை தன்னைக் கைக்கொள் முதலியர்
பங்கதாக்கி
மாமாலை யொல்லார் காலில் வழிதுழிக்
குடரின் மாலை
தோமாலை யாகச் சூடுஞ் செங்குந்தம்
போலுமுண்டோ.

பூமாலை, கடப்ப மாலை, சந்திரா ரங்கள், இரத்தினாரங்கள் புலவராலியற் றிய குற்றம் நீங்கிய செவ்விதாகிய, பாமாலைகள் இவைகளையெல்லாம் கையிற் கொண்ட முதலியார்கள் பக்கம் நின்று, மயக்கத்தை யுடைய பகைவர்களின் சந் ததிகளின் குடர் மாலைகளைத் தேன் பொருந்திய மலர் மாலையாகத் தான் தரித்துக் கொள்ளும் செவ்விய குந்தம் போலும் உலகத்தில் உண்டோ?

ஆழமும் நீளமும் உடைய கடலைத் தாண்டுவதற்குக் கப்பலில் சென்று திருச் செந்தூர் திருப்பதியில் சுபன் என்னும் செங்குந்தத் தலைவனைத் துணையாகக் கொண்டு மேலான செல்வத்தோடு வாழ்ந்த இராசராசனாகிய தங்கள் சோழ மன்னனுக்குப் பகைவனாக இருந்த யாழ்ப்பாண தேச மன்னனை ஒரு நாளில் செயம்கொண்டுஅங்குள்ள பொருள் களைக் கப்பமாகக் கைக் கொண்டு வந்தவர் செங்குந்தராவார்.

35

கௌதன் உச்சினியை வென்ற சிறப்பு

மச்சநா டுடைய கோமேல் வங்கநா டாளு
மன்னன்
குற்சா வரசற் காகச் சமர மேற்கொண்டு
கொற்றக்
கைச்சலி யாமற் கொல்லுங் காலையில்
கௌத னென்பான்
உச்சினி தொடகிப் போர்செய் குந்தம்
போலுலகிலுண்டோ?

வங்க நாட்டையாளுகின்ற அரசனா னவன் குச்சர தேசத்து அரசன் நிமித்தம் மச்சதேசத்து அரசன் மேல் யுத்தத்தை மேற்கொண்டு வெற்றி பொருந்திய தன் கைச் சலிப்பின்றி அழித்த நேரத்தில் கௌதன் என்னும் செங்குந்தத் தலை வன் கோபம் மீறி உச்சினி தேசம் தொடங்கி அவர்கள் தேசங்களை எல் லாம் நாசம் பண்ணி அடங்கச் செய் தான்.

பிறருக்குத் துணை புரியும் பான்மை யில் செயல்பட்டது செங்குந்தம் என்பது தெரிவிக்கப்பட்டது.

36

படைமருதன் சிறக்கையானை வென்ற சிறப்பு

இடைமரு தூரில் சாப மேந்திய சிறக்கை
யானை
புடைமரு தடியின் வீழப் பொருதியே
புறங்கொடாது
விடைமழு வுடையான் பாதமென் கமலத்
தில் சேர்த்த
படைமரு தன்கைக் குந்தம் போலினிப்
பாரிலுண்டோ?

திருவிடைமருதூரிலே அரசாட்சி செய்து கொண்டிருந்த படை மருதன் என்னும் செங்குந்தத் தலைவன் கையில் வில்லும் பாணமும் ஏந்தி யுத்த சன்னத் தனாக வந்த சிறக்கையான் என்னும் பகைவனைப் புறங்கொடுத்து ஓடாமல் செய்து மருதமரத்தினடியில் விழும்படி யுத்தம் செய்து, இடப வாகனமும் மழு வாயுதமும் உடையானாகிய பரமசிவ னது மிருதுவான தாமரை மலர் போன்ற திருவடியில் சேர்த்தான். படை மருத னுக்குத் துணையாக நின்ற குந்தம் போல் உலகில் வேறுண்டோ?

37

வங்க தேயம் வென்ற சிறப்பு

கூளிபா றின மிடங் கொண்டு சுற்றவே
காளிசா தகரெலாங் களத்தி லாடவே
வாளிதொட் டெழுமொரு வங்கக்
கோவை முன்
றோளிணை யாற்பொருந் துங்கைக்
குந்தமே.

கழுகுகளும் பருந்துகளும் இடமும் வலமுமாகச் சுற்றி வரவும் காளியும் அவளது பரிவாரங்களும் யுத்தகளத்தில் நடனம் செய்யவும் பாணப் பிரயோகங் களைச் செய்த ஒரு வங்க தேசத்தர சனை ஆதியில் செங்குந்தத் தலைவர்கள் தமது இரண்டு தோள்களினாலும் பொருது செயம் கொண்டது இப்பெருமை பொருந் திய செங்குந்தம்.

38

செங்குந்தர்க்கு எங்கும் எதிரின்மைச் சிறப்பு

வானைவென் றுவரிசூழ்ந்த மண்ணை
வென்றவுணரான
கானைவென் றம்புராசிக் கடலைவென்
றருங்கலிங்கன்
சேனைவென் றலங்கன் மார்பஞ் செறியுமா
மடங்கல் வையக்
கோனைவென் றரியவாகைக் கொண்டென
திரியுங் குந்தம்.

இச் செங்குந்தமானது வானுலகப் பகைவரை வென்று, கடலால் சூழப் பட்டுள்ள நிலவுலக மாற்றலரை வென்று, அவுணர்களாம் காட்டை வென்று அம்பு ராசி என்னும் கடலை வென்று, வெல்லு தற்கரிய கலிங்க தேசத்து அரசனோடு அவனது நால்வகைச் சேனையை வென்று, மார்பினிடத்து வெற்றிமாலை பொருந் திய பெரிய சிங்கத்தை யொத்தவை யைக் கோன் என்னும் அரசனை வென்று, கிடைத்தற்கரிய அவ்வெற்றி மாலையை மேற்கொண்டதென்று யாவரும் சொல்ல உலகமெங்கும் சஞ்சரிக்கும்.

சென்ற இடமெல்லாம் செயமன்றி வேறில்லை என்னும் சிறப்பு செங்குந் தத்திற்குண்டு என்னும் செய்தி கூறப் பட்டது.

ஆழமும் நீளமும் உடைய கடலைத் தாண்டுவதற்குக் கப்பலில் சென்று திருச்செந்தூர் திருப்பதியில் சுபன் என்னும் செங்குந்தத் தலைவனைத் துணையாகக் கொண்டு மேலான செல்வத்தோடு வாழ்ந்த இராசராசனாகிய தங்கள் சோழ மன்னனுக்குப் பகைவனாக இருந்த யாழ்ப்பாண தேச மன்னனை ஒரு நாளில் செயம்கொண்டுஅங்குள்ள பொருள்களைக் கப்பமாகக் கைக் கொண்டு வந்தவர் செங்குந்தராவார்.

35

கௌதன் உச்சினியை வென்ற சிறப்பு

மச்சநா டுடைய கோமேல் வங்கநா டாளு
மன்னன்
குற்சா வரசற் காகச் சமர மேற்கொண்டு
கொற்றக்
கைச்சலி யாமற் கொல்லுங் காலையில்
கௌத னென்பான்
உச்சினி தொடகிப் போர்செய் குந்தம்
போலுலகிலுண்டோ?

வங்க நாட்டையாளுகின்ற அரசனானவன் குச்சர தேசத்து அரசன் நிமித்தம் மச்சதேசத்து அரசன் மேல் யுத்தத்தை மேற்கொண்டு வெற்றி பொருந்திய தன் கைச் சலிப்பின்றி அழித்த நேரத்தில் கௌதன் என்னும் செங்குந்தத் தலைவன் கோபம் மீறி உச்சினி தேசம் தொடங்கி அவர்கள் தேசங்களை எல்லாம் நாசம் பண்ணி அடங்கச் செய்தான்.

பிறருக்குத் துணை புரியும் பான்மையில் செயல் பட்டது செங்குந்தம் என்பது தெரிவிக்கப்பட்டது.

36

படைமருதன் சிறக்கையானை வென்ற சிறப்பு

இடைமரு தூரில் சாப மேந்திய சிறக்கை
யானை
புடைமரு தடியின் வீழப் பொருதியே
புறங்கொடாது
விடைமழு வுடையான் பாதமென் கமலத்
தில் சேர்த்த
படைமரு தன்கைக் குந்தம் போலினிப்
பாரிலுண்டோ?

திருவிடைமருதூரிலே அரசாட்சி செய்து கொண்டிருந்த படை மருதன் என்னும் செங்குந்தத் தலைவன் கையில் வில்லும் பாணமும் ஏந்தி யுத்த சன்னத்தனாக வந்த சிறக்கையான் என்னும் பகைவனைப் புறங்கொடுத்து ஓடாமல் செய்து மருதமரத்தினடியில் விழும்படி யுத்தம் செய்து, இடப வாகனமும் மழு வாயுதமும் உடையானாகிய பரமசிவனது மிருதுவான தாமரை மலர் போன்ற திருவடியில் சேர்த்தான். படை மருதனுக்குத் துணையாக நின்ற குந்தம் போல் உலகில் வேறுண்டோ?

37

வங்க தேயம் வென்ற சிறப்பு

கூளிபா றின மிடங் கொண்டு சுற்றவே
காளிசா தகரெலாங் களத்தி லாடவே
வாளிதொட் டெழுமொரு வங்கக்
கோவை முன்
றோளிணை யாற்பொருந் துங்கைக்
குந்தமே.

கழுகுகளும் பருந்துகளும் இடமும் வலமுமாகச் சுற்றி வரவும் காளியும் அவளது பரிவாரங்களும் யுத்தகளத்தில் நடனம் செய்யவும் பாணப் பிரயோகங்களைச் செய்த ஒரு வங்க தேசத்தரசனை ஆதியில் செங்குந்தத் தலைவர்கள் தமது இரண்டு தோள்களினாலும் பொருது செயம் கொண்டது இப்பெருமை பொருந்திய செங்குந்தம்.

38

செங்குந்தர்க்கு எங்கும் எதிரின்மைச் சிறப்பு

வானைவென் றுவரிசூழ்ந்த மண்ணை
வென்றவுணரான
கானைவென் றம்புராசிக் கடலைவென்
றருங்கலிங்கன்
சேனைவென் றலங்கன் மார்பஞ் செறியுமா
மடங்கல் வையக்
கோனைவென் றரியவாகைக் கொண்டென
திரியுங் குந்தம்.

இச் செங்குந்தமானது வானுலகப் பகைவரை வென்று, கடலால் சூழப்பட்டுள்ள நிலவுலக மாற்றலரை வென்று, அவுணர்களாம் காட்டை வென்று அம்புராசி என்னும் கடலை வென்று, வெல்லுதற்கரிய கலிங்க தேசத்து அரசனோடு அவனது நால்வகைச் சேனையை வென்று, மார்பினிடத்து வெற்றிமாலை பொருந்திய பெரிய சிங்கத்தை யொத்தவையைக் கோன் என்னும் அரசனை வென்று, கிடைத்தற்கரிய அவ்வெற்றி மாலையை மேற்கொண்டதென்று யாவரும் சொல்ல உலகமெங்கும் சஞ்சரிக்கும்.

சென்ற இடமெல்லாம் செயமன்றி வேறில்லை என்னும் சிறப்பு செங்குந்தத்திற்குண்டு என்னும் செய்தி கூறப்பட்டது.

யாகிய சித்திரவல்லியை மணந்து சுற்றத்தோடு சிறப்பாக ஆட்சி புரிய பூவுலகம் வந்தார்.

வரும்போது இந்திராணி அம்மையார் தாம் அருமையாகப் போற்றி வளர்த்த கிளிப்பிள்ளை ஒன்றை சித்திரவல்லிக்குப் பரிசாகக் கொடுத்தார். பூலோகத்தில் பழைய நிலை பெற்று ஆட்சி புரிந்து கொண்டிருக்கும் போது சித்திரவல்லியிடம் இருந்த கிளிப்பிள்ளை மேல் இமயதர்மன் மனைவிக்கு ஆசை வந்தது. காலதூதர் மூலமாக அக்கிள்ளை யைத் தன்னிடம் வரவழைத்துக் கொண்டார். கிள்ளையைக் காணாது வருத்தமடைந்த சித்திரவல்லியைத் தேற்ற தூதுவர்களைப் பல இடங்களுக்கும் அனுப்பினார். இயமன் தேவியிடம் கிள்ளை இருப்பது அறிந்து வீரவாகு தேவர் நமனுக்கொரு திருமுகம் எழுதினார்.

அத்திருமுகம் 'சமனாவதி நகருக்கு அதிபனாகிய நமனாருக்கு வீரரில் வீரனாகிய வீரவாகு தேவன் அறிவிப்பது யாதெனில், முசுகுந்தச் சக்கரவர்த்தி மனைவியும் எனது புத்திரியுமாகிய சித்திரவல்லி அம்மையார் வளர்த்து வந்த தேவலோகக் கிளிப்பிள்ளையைப் பிடித்துப் போனதாகத் தெரிகிறது. அதனை இக்கணமே கொண்டு வந்து சேர்த்திடுக' என்று எழுதி ஒரு தூதனிடம் கொடுத்து யமலோகம் அனுப்பினர்.

திருமுகம் பெற்ற தூதுவன் சமனாவதிநகர் சென்று இயமன் கையில் தர, அதுகண்டு கலங்கிய இயமன் மனைவியிடம் சென்று கிளிப்பிள்ளையைக் கொடுத்துவிட வேண்டினான். அவள் யாதுஞ் சொல்லாது, கிளியையும் விடாது இருக்கவே தூதன் வறிதே திரும்பினான்.

செய்தி கேட்ட வீரவாகு தன் தம்பியர்களோடு சென்று எமனை வளைத்து வென்று கிளிப்பிள்ளையை வாங்கிக் கொடுத்து உபச்சாரம் பல செய்தனுப்பினான். கிளிப்பிள்ளையை மீண்டும் கொணர்ந்து தன் திருமகளாரிடம் கொடுத்து மகிழச் செய்தது குந்தத்தைக் கையில் கொண்ட வீரவாகு உள்ளிட்ட நவ வீரர்களின் சிறப்பேயாகும்.

33

செங்குந்தத் தலைவர்கள் கேரள தேசத்தரசனை வென்றமை கூறியது

வடிவே லெடுத்த மனுதுங்க
 வளவன் றேவி வெதுப்பாற
முடிவேள் வயிற்செந் தீத்தருநாள்
 முளைமாங் கனிக்கா குடநாட்டைச்
செடிவே ரறுத்துச் சிறையிட்டுச்
 சென்னி வியப்பத் திறைபோலக்
கொடிவாண் முரசு களிறுபரி
 யிரதங் கொடுக்குஞ் செங்குந்தம்.

கொல்லன் உலையில் வடித்தெடுத்த வேலைக்கையில் தாங்கிய மனுநீதி தவறாத பெருமையுடைய முசுகுந்த சோழன் மனைவியாகிய சித்திரவல்லி அம்மையார், கேரள தேசத்தரசன் செய்வித்த யாக்காகினி தந்த சந்தான மாங்கனி கிடையாததால் கொண்ட கோபம் நீங்க வீரவாகு தேவரது தம்பிமார்கள் குடநாட்டிலுள்ள அம்மாமரத்தை வேரோடு பிடுங்கிக் கொண்டுவந்து தங்கள் மன்னனாகிய சோழராசன் ஆச்சரியம் அடையும்படி கேரள மன்னனையும் சிறையிட்டுக் கொடி வாள் பேரிகை யானை குதிரை தேர் இவைகளைத் திறையாகக் கொண்டு வந்து கொடுக்கும்படி செய்தது இச் செங்குந்தம்.

முசுகுந்தச் சக்கரவர்த்தியின் மனைவியாராகிய சித்திரவல்லி கர்ப்பமடைந்த காலத்தே இனிய காய் கனி கிழங்குகளை உண்ண ஆசையுற்றாள். மன்னன் தூதுவர்களை மலையாள நாட்டிற்கனுப்பினான். மலையாள மன்னன் அவர்களை மதிக்காமல் அனுப்பிவிட்டான். இது கண்ட சக்கரவர்த்தி வீரவாகு தேவர் முதலிய வீரர்களை அனுப்பினார். நால்வகைப் பகைப் படையோடு சென்ற நவவீரர்கள் ஒரு பகல் நேரத்தில் பதினெண் மலையாளங்களையும் போரில் வென்று காய் கிழங்குகளைக் கொண்டு வந்து சேர்த்ததோடு மட்டுமல்லாது தோற்ற மன்னர்களின் சிரங்களையும் கொண்டு வந்து சேர்த்தனர்.

34

சுபன் யாழ்ப்பாண தேயம் வென்றது

ஆழநீள் கடற்கு மாங்கோ ரம்பி மேற்
 சென்றே யப்பாற்
சூழ்திருச் செந்தூ ருற்ற சுபனென்பான்
 றுணையாய்க்
 கொண்டு
வாழிரா சாதிராச மன்னவன் மருவ
 லான்றன்
ஈழநா டொருநா டன்னிற் றிறைகொண்
 டீன்டுற்ற குந்தம்

மானிடன் பக்கம் சென்று தொழில் புரிய மறுக்கவே, முருகப் பெருமானின் கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளாகி மானிடப் பிறப்பெடுத்தனர். செங்குந்தர் என்னும் பெயர் தாங்கி இவர்கள் மன்ன னுக்குப் பணிபுரிந்தனர். இச் செங்குந்த ரைத் துணையாகப் பெற்றமையால் மன்ன னுக்கு முசுகுந்தன் எனும் பெயர் வழங்கலாயிற்று.

இவ்விதம் இருக்கின்ற போதுதான் வீரவாகு தேவர் புட்ப கந்தியை மணந்து சித்திரவல்லி என்னும் பெண் மகவையும் அனகன் சனகன் என்னும் ஆண் மகவை யும் ஈன்றெடுத்தார். இவ்வாறே ஏனைய வீரர்களுக்கும் பிள்ளைகள் தோன்றி, பெரும் புகழை எங்கும் நிலைபெறச் செய்தனர்.

31

தியாகராசப் பெருமானைப் பூமியிற் கொணர்ந்த சிறப்பு

விண்டு மார்பத் திடையிருத்தி வேலைக்
கௌரி பணிமாறப்
பண்டுபூசித் திடுங்காலை யாகண்டலன்
போய்ப் பாற்கடலின்
வண்டுழாய்மா யனைவணங்கி வானிற்
பழிச்சும் தியாகரை மேற்
கொண்டு போந்து பாரின் முசு குந்தற்
குதவுஞ் செங்குந்தம்

முன் காலத்தில் திருமால் தியாக ராசரைத் தன் மார்பின்கண் எழுந்தரு ளச் செய்து பாற்கடலில் பிறந்த இலக் குமி பணியும்படி பூசித்திருந்தார். இந் திரன் வாற்கலி என்னும் அசுரனால் துன்ப மடைந்து துழாய் மாலை அணிந்த மாயனை வணங்கினான். அவரால் அத் துன்பத்தை நீக்கிக் கொண்டதுமன்றி அவரிடமிருந்த தியாகரையும் பெற்று சுவர்க்கத்தில் கொண்டுபோய் பூசித்து வந்தான்.

அப்போது வலன் என்னும் அவு ணன் இந்திரனை எதிர்த்தான். அவ்வல னைப் புறம்காண முடியாமையால் இந்திரன் முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு அறிவித்தான். முசுகுந்தன் வீரவாகு தலைமையில் சேனை அனுப்பி வலனை வெல்லச் செய்தான். இவ்வுதவிக்கு மகிழ்ந்த இந்திரன் நவ வீரர்களைப் பார்த்து நீங்கள் செய்த நன்றிக்கு என்பா லுள்ள பொருள்களில் வேண்டுவனவற் றைக் கேளுங்கள் கொடுப்பேன் என்று கூற, அவர்கள் அவ்விந்திரன் வசம் ஆன் மார்த்தமாக உள்ள தியாகரைக் கேட்ட னர். அதைக் கொடுக்க மனமில்லாத இந்திரன் விசுவகர்மாவை அழைத்து ஆறு தியாகரைச் செய்வித்து ஒவ்வொன் றாகக் கொடுக்க, அது அல்ல அது அல்ல என்று மறுத்து, மூல விக்கிரகத் தைக் கேட்டனர். அப்போது மறுக்க முடியாத நிலையில் அவன் ஆன்மார்த்த மூர்த்தியை வழங்கினான். நவவீரர்கள் அதனைக் கொண்டு வந்து முசுகுந்த மன்னனிடம் தந்தனர். அம்மன்னர் பிரா னால் திருவாரூர் முதலிய சத்தத் தலங் களில் அவை ஸ்தாபிக்கப்பெற்றன. அச்செயலைச் செய்த பெருமை செங்குந் தத்திற்கே உரியது.

32

செங்குந்தத் தலைவர்கள் கிளிப்பிள்ளையின் பொருட்டு இயமனுக்குத் திருமுகம் அளித்த சிறப்பு

பிள்ளை யாருயிர்க் குறுந்துணை யாத்தனிப்
பேறெய்துங்
கிள்ளை யாரிவண் கொடுவரு கென்றுடலங்
கீறிக்
கொள் ளையாருயிரெரி நரகுறவடுங்
கூற்றுயிர் நனிசோர
வள்ளி யாவரு நடுங்கத் தந்திருமுகமே
செலுத்துவொண்குந்தம்.

யாவரும் நடுநடுங்கும்படி வீரத்தைச் செலுத்தி உலகிலுள்ள உயிர்களை எரிநர கில் சேர்த்துக் கொல்லுகின்ற இயம னுக்கு, அவனுயிரும் பதைபதைக்கும் படியாக, ''முசுகுந்தச் சக்கரவர்த்தி மனைவியும் வீரவாகு தேவருடைய பெண் ணுமாகிய சித்திரவல்லி அம்மையார் வளர்த்த தன்னுயிர்க்கு மிக்க துணை யாக இருந்த ஒப்பற்றத் தவப் பேற்றை யுடைய கிளிப்பிள்ளையை உமது தூது வர் திருடிப் போயினதாகக் கேட் டோம். அதை இந்நிமிடமே இங்கு கொண்டுவர வேண்டும்'' என்று திருமுகம் அனுப்பியவர் செங்குந்தப் பெருமக்களா வர்.

பூவுலகில் முசுகுந்தச் சக்கரவர்த்தி அரசாண்டு கொண்டிருக்கும்போது ஒரு பிரளயம் உண்டாகி எல்லாம் அழிந்து போயின. சக்கரவரர்த்தி தன் துணை வரோடு கிளியுருக் கொண்டு சுவர்க்கம் சேர்ந்தார்.

ஒருநாள் கைலை மலையடைந்து உமாபதியை வணங்கி நின்றார். யாது வேண்டும் எனக் கேட்ட இறைவனிடம் தன் குறையை எடுத்துரைத்தான். சிவ பிரான் பழைய நிலை பெற்றுச் சிறக்க என வாழ்த்த, மீண்டும் சிறக்க ஆள எமக்கொரு பத்தினி வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இறைவன் ஆணைப்படி வீரவாகு தேவரின் செல்வி

53
புலியூர்ப் பள்ளிகொண்டான் சிறப்பு

புண்ட ரீகமே குவளையே தளவமேபூமாவே
பிண்டி யேபெறும் சித்தசன் றன்குணம்
பிழையாவென்
கண்ட வீரகண் டன்புலியூர்த்தனி காத்
தேசீர்
கொண்ட பள்ளிகொண்டான் கரதலத்
திடை கொளுங் குந்தம்.

பகைவர்களைப் புறங்கண்ட வீர கண்டா மணியையுடையோனாகிய சிதம் பரம் எனும் நகரத்தே தனியாட்சி செய்து காத்து பல சிறப்புகளைக் கொண்ட பள்ளி கொண்டான் என்னும் செங்குந்தத் தலை வன் கைச் செங்குந்தம் மன்மதன் கை யிலுள்ள தாமரை, நீலோற்பலம், முல்லை மாம்பூ, அசோகம் ஆகிய ஐந்து பாணங் களும் பெற்ற நினைப்பூட்டல், பசலை செய்தல், உணவை நீக்கல், கிடக்கச் செய் தல், கொல்லுதல் ஆகித ஐந்து குணங்கள் போல, போரை நினைப்பூட்டல் தோள், தினவுறுத்தல், துன்புறுவித்தல், மூர்ச்சை யுறுவித்தல், கொல்லல் ஆகிய ஐந்து குணங்களையும் செய்விக்கும்.

மன்மதன் கை மலர்கள் ஐந்து. அதன் தொழில்களும் ஐந்து. பள்ளிகொண்டானின் கைக்குந்தம் ஒன்று. ஆனால் அதன் தொழில்களோ ஐந்து என்று பெருமை தோன்றக் காட்டினார்.

இம்மன்னன் சிதம்பரத்தை யாண்ட விடங்கன் என்பானின் திருமகன். சிதம் பரம் நடராசப் பெருமான் திருக்கருணை யோடு ஆந்திர தேசத்து மன்னன் சிரத் தாமனைப் புறங்கண்டான். அம்மன்ன னுக்குச் சுவர்க்கப் பதவி நல்கி பகையின்றி ஆண்டான் என்று வல்லான் காவியம் தேவ சாட்சி சுருக்கம் கூறுகிறது.

54
பிணவன் கிறப்பு

குணமார் தருமத் தெவ்வேந்தர் குலக்கோள
ரியே குலத்தருவே
தணவா வண்மைச் சகம்பேசச் சகமே
தாங்கும் பூதரமே
பிணவா வென்று பகராய்வாய் பிளந்து
சோரிப் பெரும்பூதக்
கணம்வாய் நிரப்புங் குந்தம்போல்
காணோங் கேளோங் கற்றோரே.

வியூகம் அமைத்து நால்வகைச் சேனைகளால் யுத்தம் புரியும் பகையாகிய யானைகளுக்குச் சிங்கம் போன்றவனே! கொடுத்தலில் பஞ்ச தாருவுக்கு ஒப்பா னவனே! எப்போதும் நீங்காத வளமிக்க இவ்வுலகைத் தாங்கும் குணக்குன்றே! பிணவன் என்னும் அரசனே! என்றெல் லாம் சொல்லித் துதியாதவர் வாயைப் பிளந்து பெருகிடும் இரத்தத்தைப் பூத கணங்களின் வாயில் நிரப்பும் செங்குந்தத் தலைவனைப் போலும் வீரனைப் புலவர் களாகிய யாம் கண்ணாற் கண்டது மில்லை. காதாற் கேட்டதுமில்லை.

இப்பிணவன் கடம்பூரை ஆண்ட கதம்பன் என்பவனின் புதல்வன். ஒரு நாள் சோலைக் காட்சி காணச் சென்ற பிணவன், ஒரு முயலைத் துரத்தி வரும் வேடராசனைக் கண்டான். முயலை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று வேட ராசனைக் கேட்டுக் கொண்டான். அதற்கு இணங்காத மன்னன் மேல் கோபம்கொண்டு போர் செய்து வென்றான். முயலுக்குக் கருணை காட்டிய முடி மன்னன் பிணவன் வீரத்திலும் சிறந்தோன் என்பதை வல்லான் காவியம் தேவசாட்சிச் சருக்கம் கூறும்.

55
கண்டியூரன் சிறப்பு

மிண்டிடா மண் மேவலீர் விளம்பிடாம
லோருமின்
றெண்டிடாமல் வாழ்வதெங்ஙன் சூரபன்
மன் பட்டிடக்
கண்ட வீரவாகு தேவர் கால்வருங்
குலத்துமன்
வண்டுலாவு கண்டியூரன் வயிரவாகு
குந்தமே.

பகைவர்களே! சூரபதுமனைக் கொன்ற வீரவாகு தேவரின் சந்ததி வழி யாக வந்த வண்டுகள் பாடும் கடப்ப மாலை யையுடைய கண்டியூரன் கையிலுள்ள அழகிய குந்தத்தை எதிர்க்காமலும், வீணான வம்பு வார்த்தைகள் பேசாமலும் இருங்கள். அவனுக்கு அடிமை செய்யா திருப்பது யாங்ஙனம்? ஆகையால் வணங் கிப் பிழைத்துக் கொள்ளுங்கள்.

இப்பாட்டில் வரும் கண்டியூரன் என் பவன் அட்ட வீரத்தலத்திலொன்றாகிய திருக்கண்டியூரை அராசண்ட விபுலன் என்னும் வேந்தன் மகனாவான். மதுகை யான் என்றும் இவனை அழைப்பர். கண்டியூருக்கு வடக்கே ஒரு காட்டில் பிரம ராக்கதன் என்னும் ஒரு கொடியவன் இருந்தான். அவனைத் தன் குந்தப் படையால் வெற்றி கண்டு விண்ணுலக னுப்பினான்.

வீரவாகு தேவர் கால் வருங்குலத்து மன் என்று செங்குந்தர் குடியின் பிறப்பு, வளர்ச்சியினைக் குறிக்கின்றார். வீரவாகு தேவர் தொடங்கி முசுகுந்த சக்கரவர்த்தி

வழிகால் கொண்டு எழுபத்திரண்டு நாடு களில் பரவி எழுபத்திரண்டு சிற்றரசர் களாகச் சிறந்து கிளைவிட்ட பெரும் இனத் தார் செங்குந்தராவார். கிழக்கே சிவ புரமும், தெற்கே தொந்திபுரமும் மேற்கே விரிஞ்சிபுரமும் வடக்கே சோழ சிங்கபுரமும் இக் குடிக்குரிய நாடுகளாக விளங்கின. விரிஞ்சிபுர நாட்டின் கிளை நாடுகளில் ஒன்று தான் திருமழிசை.

56

முதுகுன்ற மணியன் சிறப்பு

மூத்த முதுகுன்ற குரிசின் முதிரு மணவைப் பாராளன்
பாத்த னென்னு மணியன் கைக்குந்தங் கொடுத்துப் பகரவே
பூத்த மார்பத் தார்பறித்துப் பூழிபடவே வீழ்ந்திறைஞ்சிக்
கோத்து செங்கை மலர்கூப்பிக் குறுகார் சிறுகி வரக்கண்டான்.

முதுகுன்றத்தில் வாழ்ந்த மன்னனும் மணவை என்னும் நகரத்தில் வாழ்ந்த மன்னனும் பகைவர்களால் துன்பமடைந்து முதுமையில் அர்ச்சுனனுக்குச் சமமான மணியன் என்னும் பிள்ளை கையில் செங் குந்தம் கொடுத்து வெற்றி பெறுக என்று சொன்ன மாத்திரத்தில், பகைவர் தங்கள் பரந்த மார்பில் உள்ள வெற்றி மாலை களைக் கழற்றி எறிந்து, புழுதி உடலில் படும்படியாக மண்ணில் வீழ்ந்து வணங்கி தாமரை மலர் போன்ற தமதிரு கைகளை யும் குவித்துக் கொள்ள வீரம் காட்டி னான்.

இப்பாட்டில் சொல்லப்படும் முது குன்ற மணியன் என்பவன் திருமுதுக் குன்றமாகிய விருத்தாசலத்தை ஆண்ட மன்னன். பாராயணன் என்பானது திரு மகன். இளமையிலேயே பட்டத்துக்கு வந்தவன். மணவூர் தேச மன்னன் வேண்டு கோட்படி மாளவ தேசத்து அரசன் மேல் படையெடுத்துச் சென்று வென் றவன் எனும் செய்திகளை வல்லான் காவியம் தேவசாட்சி சருக்கம் கூறும்.

57

தஞ்சை வேம்பன் சிறப்பு

பஞ்சம் வெம்பத் தரும்பனையே நாவான் மிகவே பாடாது
தஞ்சை வேம்பனைப் புகழ்ந்தே மதுமுன் செய்த தவமேயாம்
எஞ்ச வெளிதோ ஊழியுருத்திரன் கைக் கொளு மூவிலைவேலே
வஞ்ச மாயை அவதரித்த திவன் கைக்குந்த வரவாமல்.

ஏழைகளின் வறுமை நீங்கக் கொக்கு கின்ற பனைமாலையையுடைய சேரனை எமது நாவால் பாடோம். தஞ்சை வேம் பன் என்னும் தலைவனைப் பாடுவோம். அது யாம் செய்த தவம். அத்தவத்தைக் குறைவுபடச் சொல்லல் எளிதோ? இவன் கையிலுள்ள வஞ்சமே உருவமான மாயை அவதாரம் செய்து வந்த குந்தத்தின் வர வானது ஊழிக் காலத்து உருத்திரன் கையிலுள்ள மூவிலை வடிவத்தைப் போன்ற முத்தலைச் சூலாயுதமே.

இப்பாட்டில் கூறப்பட்ட வேம்பன் என்பான் தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டவன். திருவையாற்றில் வசித்த குமரன் என்பானின் திருமகன். ஐயாறப் பனின் தரும பரிபாலனக் கூட்டத் தலை வன். பராந்தகச் சோழன் நீதி மன்றத் தில் முதல் மந்திரியாக இருந்தவன். வல் லான் என்னும் இரட்டனை வென்று வாகை சூடிய பன்னிருவருள் ஒருவன் என்று வல்லான் காவியம் வீரநாராயணச் சருக்கம் கூறுகிறது.

58

மங்கலியப் பிச்சையிட்ட சிறப்பு

வல்லான்றன் திருத்தேவி மங்கலியம் பிழையாமன் மடிதா னேற்றிங்
கெல்லோரு மங்கலியப் பிட்சையிடு மெனத்தாள்வீழ்ந் திரப்ப வேண்டிக்
கொல்லாமல் விடுதல்புக ழெனக்கருதி யோகற்பின் கொண்ட வாய்மை
நல்லார்க ளிருந்தவையின் புகழ்கைக்கோ காத்ததுகொ னஞ்செஞ் குந்தம்

சோழ ராசனோடு மாறுபட்டு வீரன் நாராயணன் முதலிய செங்குந்தத் தலை வர்கள் பன்னிருவரால் தோல்வியடைந்து, அவர்கள் கையில் அகப்பட்டுத் தன் உயிர் கொடுக்க இருந்த வல்லான் என்னும் அரசனது மனைவி அனங்கவல்லி என்பவள் அச் சமயத்தில் முந்தானையேற்று நான் அமங்கலியாகாமல் நீவிரெல்லாரும் மங் கலியப் பிச்சை கொடுக்க வேண்டும் என்று அவர்கள் பாதத்தில் வீழ்ந்து வணங்க, செங்குந்தத் தலைவர்கள் அவ்வல்லானுக்கு உயிர் கொடுத்துக் காத்தது புகழ் எனக் கருதியோ அல்லது கற்பினது உண்மை யையே மேற்கொண்டொழுகிய மாதர் கள் இருந்த சபையின்கண் தம்மைத் துதிப்பதற்கோ அறியேன்.

தன் கணவனைக் கொல்ல செங் குந்தத் தலைவர்கள் முற்பட்டபோது என் உடன் பிறந்தவர் நீங்கள், யானுங் கள் சகோதரி. என் மங்கல நாண் அறு படலாமா என்று கேட்பாள். அவ்வாறு

களாக உலா விளங்குகின்றது. முதனிலையில் பாட்டுடைத் தலைவனுடைய குடிப் பிறப்பு, பெருமை, நீராடுதல், ஊர்திகளில் செல்லுதல், உடன் வருவோர் இயல்புகள் ஆகியவைக் கூறப்படும். இப். ப்குதியைத் தத்துவராயர் குழகன் என்று கூறுவர்.

''குடிநெறி, மரபுகொளல், கொடை, விடியல்
நன்னீராடல், நல்லணி அணிதல்,
தொன்னக ரெதிர்கொளல், நன்னெடு வீதியின்
மதகளி நூர்தல் முதனிலை யாகும்.''

என்று பன்னிரு பாட்டியலில் கூறப்படுகிறது. பின்னெழு நிலையில் ஏழு பருவ மகளிரின் இயல்புகளும், அவர்களுடைய சிற்றில், பாவை, கழங்கு, அம்மானை, ஊசல், கிளி, யாழ், புனலாட்டு, பொழில் விளையாட்டு, மது நுகர்தல் ஆகிய செய்திகளும் கூறப்படும்.

''சிற்றில் பாவை கழங்கம் மனையே
பொற்புறு மூசல் பைங்கிளி யாழே
பைம் புனலாட்டே பொழில் விளை யாட்டே
நன்மது நுகர்தல் இன்ன பிறவும்
அவரவர்க்குரிய நீரும் என்ப''

என்று பன்னிரு பாட்டியலில் கூறுகின்றார். அத்துடன் பெண்களின் வயதும், ஆடவரின் வயதும் பருவங்களின் வயதும், ஆடவரின் வயதும் பருவங்களுக்கென்று வரையறுத்துக் கூறப்படுகின்றன. இவ்விதமாக இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு பல உலா இலக்கியங்கள் தோன்றினும் ஒவ்வோர் உலாவும் அதனை இயற்றிய ஆசிரியருடைய புலமை, கற்பனை, வாழ்ந்த காலம், மேற்கொண்டொழுகிய சமயம் ஆகியவைகளுக் கேற்பச் சிறிது வேறுபட்டுத் தோன்றுகின்றன.

பெயர் பெறும் முறை:

உலா இலக்கியங்கள் பவனி, பவனி உலா, உலாப்புறம், உலாமாலை, திருத் தேர் உலா எனப் பல்வேறு வகையாகப் பெயர் பெறும். உலா நூல்கள் பாட்டுடைத் தலைவனின் ஊரின் பெயராலும் (திருவாரூர் உலா, பேரூர் உலா), பாட்டுடைத் தலைவனின் இயற்பெயராலும் (திருக்குற்றால நாதர் உலா, காளத்தி நாதர் உலா), பாட்டுடைத் தலைவனின் ஊர்ப் பெயர், இயற் பெயர் ஆகிய இரண்டின் பெயராலும் (குன்றக்குடி சண்முக நாதர் உலா, கயத்தாற்று அரசன் உலா) பெயர் பெறுவதுண்டு.

உலாக் காணும் மகளிர்:

காப்பிய ஆசிரியர்கள் தங்கள் காப்பியத் தலைவனைப் பற்றிக் கூறும் பொழுது அழகிலும், அறிவிலும் வீரத்திலும், கலைப் பயிற்சியிலும் பிறவற்றிலும் அவன் சிறந்தவன் என்று கூறிக் காப்பியம் செய்வது மரபு. திருத்தக்க தேவரும், கம்பரும், சேக்கிழாரும் 'தன்னேரில்லாத தலைமகனை' வைத்தே தங்கள் காப்பியத்தை இயற்றியுள்ளனர். அங்ஙனமே உலா ஆசிரியர்களும் தங்கள் தலைமகனுக்குப் பெருமை சேர்க்கும் முகத்தான் எழு பருவ மகளிரும் அவன் மீது காதல் கொண்டனராகப் பாடியுள்ளனர். ஆயினும், தங்கள் கணவனைத் தெய்வமாகப் போற்றும் குலமகளிரை இவ்வாறு மாற்றான் ஒருவன் உலாவருவதைக் கண்டு மையல் கொண்டதாகப் பாடுவது பெண்களின் ஒழுக்கத்திற்குப் பொருத்தமாக இல்லை. மேலும் அக்காலச் சமுதாயச் சூழ்நிலையில் குலமகளிர், விலைமகளிர் என இருபிரிவினர் இருந்தனர். அவர்களுள் வரைவின் மகளிரே உலாக் கண்டு காமுறுவதற்கு உரியவராயினர். இக் கருத்தை அணி செய்யும் வகையில் நச்சினார்க்கினியரின் தொல்காப்பிய சூத்திர விளக்கமும் (புறத்-இயல்-நூற்பா-30) அமைந்துள்ளது. உதயணன் உலா வந்த காலத்தில் விலைமகளிரே அவன் மீது மையல் கொண்டனர் என்று கொங்குவேளிர் பாடியுள்ளதும் இங்கு நினைவு கூரத்தக்கது. இதற்கு ஏற்பவே, உலா இலக்கணம் கூறும் இலக்கண விளக்கப் பாட்டியல் சூத்திரத்தில் 'இழைபுனை நல்லாரிவர் மணிமறுகின்' என்பதில் 'மறுகு' என்பதற்குப் 'பரத்தையர் வீதியை' என்று உரைகாரர் விளக்கம் கூறியுள்ளதும் கருதத்தக்கது. இப்பொது மகளிரையே சைவ இலக்கியங்களும், பிற்காலத் தல புராணங்களும் உருத்திரக் கணிகையர் என்றும், கல்வெட்டுகள் 'தனிப் பெண்டிர்' என்றும் கூறுகின்றன. எனவே உலாவில் கூறப்படும் எழு பருவ மகளிரும் பொது மகளிரேயாம் என்று ந.வீ. செயராமன் தனது உலா இலக்கியங்கள் (பக் 35) என்னும் நூலில் குறிப்பிடுவது பொருத்தமே.

ஆன்மாக்கள் அனைவரும் (பெண்டிர் மட்டுமன்றி ஆடவருமே) நாயகிகள், இறைவன் ஒருவனே தனி நாயகன். ஆதலால், அந்த நாயகன் மாட்டு எல்லாப் பெண்களும் காதல் கொண்டார்கள்; என்று சொல்வதில் பிழை நேராது. சமய மரபில் இறைவனிடத்து அனைவரும் காதல் கொள்ளலாம் என்பது ஒப்புக் கொண்ட உலக வழக்கு என்று

4. கூத்தரின் மூவர் உலா

டாக்டர் குமார. பத்மநாபன், எம்.ஏ., பி.டி பி.எச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர், S. I. V. E. T. கல்லூரி, சென்னை.

உலாவின் தோற்ற வளர்ச்சி

தொல்காப்பியர் காலத்தில் வித்திடப் பெற்ற சிற்றிலக்கியங்கள், நூற்றாண்டு தோறும் பலவகைகளில் வளர்ந்து இன்று சிறந்து விளங்குகின்றன. தொல்காப்பியப் புறத்திணை இயலில்,

''குழவி மருங்கினும் கிழவதாகும்''
''ஊளரொடு தோற்றமும் உரித் தென
மொழிப
வழக்கொடு சிவணிய வகைமையான''

என்னும் இரு நூற்பாக்களும் பிள்ளைத் தமிழ், உலா, ஆகிய இலக்கியக் கருவைக் கொண்டு உள்ளன. ஆனால்,

''விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே''

என்னும் நூற்பா, அனைத்து வகைச் சிற்றிலக்கியங்கட்கும் கருவாக அமைந்துள்ளதென்பர். புறத்துறையின் கூறுபாடுகள் பிற்காலத்தில் வளர்ந்தது போலவே அகத்துறையும் வளர்ந்தது. புறமும் அகமும் கூடிய ஒன்றே உலாவாகும். இத்தகைய உலா பெருங்கதை, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் முதலான நூல்களில் வளர்ந்து பிற்காலத்தே உலா எனத் தனித்ததொரு இலக்கியமாகத் தழைத்தது.

பெருங்கதையில், உதயணன் முடிதனை, மணம்புரி நாள்களில் கண்டோர் காதல் கொள்ளுமாறு வீதி உலா வருகின்றான். மகளிர் அவன்பால் மால் கொண்டு, மயங்குகின்றனர். சீவக சிந்தாமணியில் திருத்தக்கதேவர் சீவகன் உலா வருங்கால் காமுற்று நின்ற மகளிர் நிலையினைப் பல பாடல்களில் கூறி இருக்கின்றார். கம்பராமாயணத்தில் இராமன் உலா வந்த பொழுது மகளிர் அனைவரும் காமுற்றதைக் கம்பர் கூறியுள்ளார். தேவாரத்தில், திருநாவுக்கரசர் திருவாரூர் இறைவன் தொண்டர் குழாம் புடைசூழ உலாவரும் காட்சியையும், திருக்குறுக்கை வீரட்டத்தில் இறைவன் ஏழு நாட்கள் திருத்தாண்டவர் கோலத்தோடு வீதியில் உலா வந்ததையும் பற்றிப் பாடியிருக்கிறார். முதல் உலாவான திருக்கயிலாய ஞான உலாவிலும் இத்தகைய காட்சியைப் படம் பிடித்துக் காட்டுவர் சேரமான் பெருமான்.

உலாவின் இலக்கணம்:

இறைவனோ, உலகம் போற்றும் பெருமகனோ, அரசனோ கரி, தேர், பரி ஆகியவற்றுள் யாதானும் ஓர் ஊர்தியில் ஏறி, உடன் வருவோர் சூழ, மங்கல இன்னியங்கள் ஒலிக்க, வீதியில் பவனி வருவதாகவும், அப்பொழுது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் ஆகிய ஏழு பருவ மகளிரும் அவனைக் கண்டு காதல் கொண்டு வாடுவதாகவும் புலவர்களால் கற்பனைச் செறிவுடன் கலிவெண்பாவால் பாடப் பெறும் ஒருவகைச் சிற்றிலக்கியமே உலா. இதன் இலக்கணமாகப் பொய்கையார் பன்னிரு பாட்டியலில்,

''பாட்டுடைத் தலைவ னுலாட்புற
வியற்கையும்
ஒத்த காமத் திணையாள் வேட்கையும்
கலியொலி தழுவிய வெள்ளடி யியலால்
திரிபின்றி நடப்பது கலிவெண் பாட்டே''
(நூற்பா 214)

என்றும், குணவீரப் பண்டிதர் வெண்பாப் பாட்டியலில்

''திறந்தெரிந்த பேதை முதலெழுவர்
செய்கை
மறந்தயர வந்தான் மறுகென் றறைந்த
கவி
வெண்பா உலாவாம்....''
(நூற்பா 27)

என்றும் கூறியுள்ளனர். மேலும், சிதம்பரப் பாட்டியல் இலக்கண விளக்கம், பிரபந்த தீபிகை, தொன்னூல் விளக்கம், முத்து வீரியம் முதலான பாட்டியல் நூல்களும் உலா இலக்கணத்தைப் பற்றிக் கூறுகின்றன.

'முன்னிலை, பின்னெழுநிலை உலா வெண்கலி, (பண்-47) என்று இரு பிரிவு

குந்தத் தலைவர் சிறப்பு

செந்தமிழ்க் காகபோந்து சிவந்தபா வாடையாக
நந்தமக் கிடுங் காலெந்த நகரமு முளம் வியந்த
அந்தரத் தமரர் வாழ்த்தி அணிமலர் மாரி பெய்தார்
இந்தசெங் குந்தர் பெற்ற இசையெவர் பெற்றூரம்மா.

குற்றமிலா இவ் வீட்டியெழுபது என்னும் நூலைப் பெறும் பொருட்டு கூத்தனாகிய நமக்கு சிரச்சிங்காதனமும் இரத்தப் பாவாடையும் இட்டதை அறிந்த எந்நகரத்தாரும் பெரிதும் மகிழ்வு கொண்டனர்.

இந்நிகழ்ச்சி கண்டு தேவர்கள் நீடூழி வாழ்க என்று வாழ்த்தி மலர்மாரி பொழிந்தனர். இத்தகு புகழைப் பெற்ற செங்குந்தர் போல வேறு எவர் பெற்றார்?

செந்தமிழுக்காகத் தியாகம் செய்த சிறப்பை அந்தரத்துத் தேவரும் போற்றினர். இந்தச் சிறப்பு வேறு எவர்க்கு உண்டு?

குந்தத்தின் பெருமை கூறற் பாலார் சிறப்பு

அம்பர்நாட் டமர்ந்த குந்த மயனரியரன் மூன்றென்னும்
உம்பர் தாமறிய வேண்டு முயர்ந்தமுத் தமிழினாலே
கும்பசம் பவனே தேர்ந்து கூறவே வேண்டு மல்லால்
இம்பர் யாங்கூற வேண்டு மெவர் மற்றுங் கூறுவாரே.

திருக்கைலாய மென்னும் அந்த உலகில் எழுந்தருளியுள்ள நவ வீரர்கள் கையின் கண்ணுள்ள குந்தத்தின் பெருமையை அயன் அரி அரன் என்னும் மும் மூர்த்திகளே அறியவேண்டும். அல்லது அகத்தியனே ஆராய்ந்து முத்தமிழால் சொல்ல வேண்டும். அல்லது அம்பலக் கூத்தனாகிய யாம் சொல்ல வேண்டும். இஃதன்றி வேறு யார் கூறமுடியும்?

தெய்வீகத் தன்மை பொருந்திய குந்தத்தின் பெருமையைத் தெய்வீகக் கவிகளால் மட்டுமே சொல்ல முடியும். அத்தன்மையோர் தேவலோகத்துப்பெரும் புலவர்களும், அகத்திய மாமணியும், உயர்ந்தோங்கிய சிறப்பு கொண்ட ஒட்டக் கூத்தனும் மட்டுமே யாவர்.

அன்னதானம்

ஔவைப் பிராட்டியார் நமக்கு உபதேசிக்க வந்த போது முதலில் ''அறஞ்செய விரும்பு'' என்று வற்புறுத்தியுள்ளார். அந்த அறமாவது பலதிறப்பட்டுள்ளது. இவற்றில் தானம், தருமம் என்ற இருவகை சிறந்து விளங்குகின்றன. இந்த இருவகையில் முதலாவதாக நின்ற தானத்தில் பூதானம், கோதானம், வஸ்திரதானம், கன்னிகா தானம், சுவர்ண தானம், எனப் பல கிளைகளுண்டு. இவற்றுள் தலை சிறந்து விளங்குவது அன்னதானம் ஒன்றேயாகும்.

உயிர்கள் அன்னத்தைத் தான் முக்கிய ஆதாரமாகக் கொண்டு வாழ்கின்றன பசித்தோருக்கு அன்னத்தைக் கொடுத்தால் உயிரைக் கொடுத்தது போலாகும்.

—வாரியார்

உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே

—திருமூலர்

படம் ஆடும் கோயில் பகவற்(கு) ஒன் றீயின்
நடம் ஆடும் கோயில் நம்பர்க்கங்(கு) ஆகா
நடம் ஆடும் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படம் ஆடும் கோயில் பகபற்க(து) ஆமே.

—திருமூலர்

சிரக்கம்பனம் பண்ணுங்கள் என்று தங்கள் வீரத்தைக் காட்டுதற்கே தலையரிந்து சிங்காதனமிட்டனர் இச் செங்குந்தர்.

திருமாலும் காண அரிய திருவடியை, செங்குந்தர் தங்கள் நெஞ்சத்தில் அடக்கிக் கொண்டதோடு மட்டுமன்று அவனருளும் பெற்றவர் என்பது இப்பாடல் உணர்த்துகிறது.

66

பிரமகத்தி யொழித்த சிறப்பு

விண்டு வேதனு நாடரி தாகிய விமலன்
பண்டு தாருகப் பிரமகத்திப் பழிபோகக்
கொண்டு தாமெனக் கடுகியே குடிவழித் தொன்மை
கண்டு தாங்கழுத் தரிந்தது கவின்கவின் குந்தம்.

பிரமனும் தேடிக் காண அரிதாகிய பரமசிவனுக்கு முன்பு தாருக வனத்தில் உண்டான பிரமகத்திப் பழியை அழகிய செங்குந்தத் தலைவர்கள் அறிந்து அதை நீக்க வந்தவர் தாமே எனக்கருதி விரைந்து சென்று தங்கள் தலையை அரிந்து கொண்டது மிகவும் அற்புதமானதாகும்.

ஐந்து தலை கொண்ட பிரமன் கர்வத்தை அடக்க அவனுடைய ஐந்தாவது தலை கொய்தமையால் இறைவனுக்குப் பழி வந்தது. அப்பழி நீக்கக் கையிலுள்ள கபாலத்தில் இரத்தத்தை நிரப்பிய கடவுள் வர்க்கத்தவருள் நவ வீரரும் ஒருவர் என்பதால் குடிவழித் தொன்மைச் சிறப்பு சுட்டப்பட்டது.

67

குந்தப் பூசைச் சிறப்பு

தவந்தனிச் செய்வதென் றலைச் சிங்காதனம்
உவந்தபர வாடையிட் டோடுஞ் சோரிமேல்
நவந்தனிற் பாடிய நங் கவித்திறஞ்
சிவந்திடச் செய்தது திருச்செங் குந்தமே.

செங்குந்தத் தலைவர்கள் உவப்போடு ஆயிரத் தெட்டுத் தலைகளை வெட்டிச் சிங்காதனம் செய்து இரத்தப் பாவாடையிட்டு அதனின்றும் ஓடும்இரத்த வெள்ளத்தின் மீதிருந்து புதுமையாகப் பாடிய நமது கவியினது மகத்துவம் பெருமைப்படச் செய்தது இச் செங்குந்தம். ஆகவே உலகோரே! இச் செங்குந்தத்தை வழிபடாது பாசபந்தம் முதலியன துறந்து தனியாக இருந்து தவஞ் செய்ய வேண்டுவதென்ன?

சிரச்சிங்காதனம் செய்து முடித்து இறந்தவர் உயிர் பெற்றெழுந்தனர் என்பதால் இந்நூல் தெய்வீகம் கொண்டது என்பது புலனாகும். ஆகவே இது பாடவே தவம் வந்து சேரும்.

68

குந்தத் திறச் சிறப்பு

வீணுக்கே றாத வாய்மை விளம்பிடா வெற்றி யாளர்
ஆணுக் கே றாய்ப் பிறந்தோ ரடுபுலிப் பதாகை மன்னர்
நாணுக் கே றாத சாப நாட்டியே யிறுத்த மாறன்
மாணுக் கே றாத மாற்றா ரடைத்திட மருவுங் குந்தம்

வீணான வல்லமையை தம் வாயால் எடுத்துச் சொல்லாத வெற்றிப் பாட்டினை உடையவரும், ஆண்களுக்கே உரிய சிங்கம் போன்ற வலிமையோடு தோன்றி புலிக் கொடியைக் கொண்டவரும் ஆகிய செங்குந்த அரசர்கள் கையின்கண்ணுள்ள பகைவர்களைச் சரணாகதி அடைய வைக்கும் குந்தம், நாணேற்றி விடுதற்கு வளையாத இராமபிரானின் கைவேலை விட பெருமை மிக்கது.

69

உலகம் புகழ்ந்த சிறப்பு

வட்டமா ரவையுழை வந்த மேலவர்
இட்ட பாவாடை கண்டிசை பெறாது மண்
முட்டவந் துயிர் பெறீஇ மொய்த்துளேமெனக்
கட்டுள குந்தர்சீர் கழறி யேத்தினார்.

வட்டமான இச் சபையின்கண் வந்த மேலவர் இச் செங்குந்தத் தலைவர் பிரபந்தம் கேட்க அம்பலக் கூத்தனாகிய நமக்குச் செய்வித்த சிரச்சிங்காதனத்தோடு இரத்தப் பாவாடையைக் கண்டு, நாம் இவ்வுலக முழுதும் பல குலங்களில் பிறந்து வந்தும் இத்தகைய புகழைக் கொள்ளாது உயிர் மட்டும் தரித்து இருக்கின்றோமே, இது ஏன் என்று சொல்லி செங்குந்தர் சிறப்புக்களை எடுத்துச் சொல்லித் துதித்தனர்.

உலகில் உள்ள ஏனைய மக்கள் செங்குந்தர்களைப் பாராட்டினர். ஏனெனில் நூலொன்று உருவாக தங்களையே தியாகம் செய்த சிறப்பு நோக்கி, எனக் காரணத்தோடு கூறப்பட்டது. இப் பெருமை நமக்கு இல்லையே என்ற ஏக்கமும் தெரிகிறது.

தான் வெட்டினோம் என்று தங்கள் தலைகளை வெட்டிக் கொண்டனர். அது கண்ட சோழன் இப்பழி நம்மையே சாரும். உயிரைப் போக்கிக் கொள்வதே நீதியாம் என்று உடைவாளைக் கையில் எடுத்தான். அத்தருணம் அறுமுகக் கடவுள் எழுந்தருளி மன்னவனே! உன்னால் சரீரம் நீங்கி உயிர் விட்டவர்கள் பிழைப்பார்கள். நீ சிறிதும் அச்சம் அடைய வேண்டாம் என்றுரைத்து மறைந்தார். மாண்டவர் பன்னிருவரும் மீண்டனர். மன்னவன் இத்தியாகச் செம்மல்களுக்கு வரிசைகள் நல்கினான். வல்லானை வென்ற பன்னிரு வீரர்களும் முருகப் பெருமான் திருவருளை எண்ணி வணங்கிய பின் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றனர்.

61

சாவான் கல் சிறப்பு

பைந்தமிழ்க் காவலர் பகரும் பாடலார்
கந்தவே டான்மகிழ் கைலைக் காவலார்
வந்தவீ ரப்படைத் தலைவர் வந்துழிச்
சிந்தவே கழுத்துடற் செகுத்த குந்தமே.

செந்தமிழ்ப் புலவர்களால் செய்த பாடலைப் பொருந்திய முருகக் கடவுள் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் திருக் கைலாய மலைக்குக் காவலராகிய நவ வீரர்கள் சந்ததியில் வந்த வீரம்மிக்க செங்குந்தத் தலைவர்கள், சமயம் வந்த போது தமது உயிரையும் ஒரு பொருளாக எண்ணாமல் கைக்குந்தத்தால் தம் உடலினின்றும் கழுத்து சிந்தும்படி அரிந்தவராவார்.

62

புலிக் கொடி நிலையிட்ட சிறப்பு

தில்லை மூதூர் நடஞ்செய்யும் ஆலயத்
தொல்லையிற் பொறித்திடு முழுவை முத்திரை
யெல்லையி னாவலொன் பதின்மர்க் காக்கியொார்
வல்லயிற் றுணையோடு மருவுங் குந்தமே.

நடராசப் பெருமான் திருநடனம் புரிகின்ற சிதம்பரம் நகரத்தில் பழமைக் காலத்தில் அரசாட்சி செய்து வந்த நவ வீரர்களது கொடியில் தீட்டிய புலி முத்திரையானது அளவிலா விரிவு கொண்ட நாவலந் தீவு முழுமையும் செல்லும்படி செய்வித்தது. அச் செய்வித்தது எதுவெனில் ஒப்பற்ற வல்லமை கொண்ட வேலின் துணையாகிய செங்குந்தமே.

நவ வீரருள் ஒருவர் சிதம்பரம் கோவில் தரும பரிபாலனம் புரியவேண்டி அவ்வூரை ஆண்டு வந்தார் என்பது செய்தி.

63

பரணி கொண்ட சிறப்பு

எந்தையா மம்மை பாகத்திறைவனை வணங்கி யாமே
பைந்தமிழ்ப் பரணி செய்த பாடலோ டந்தமாக
வந்தமா மடவா ராட யரியணை இருந்த வீரர்
குந்தமே குந்தம் வேறு குந்தமும் உளதோ கூற

உமையொரு பாகத்திறைவனாம் எம் தந்தையை வணங்கி யானே பைந் தமிழால் கூறிய பரணி என்னும் பிரபந்தப் பாடலை, அபிநய இலக்கணத்தோடு அழகிய மாதர்கள் நர்த்தனம் செய்ய சிங்காதனத்தில் எழுந்தருளி இருந்து கேட்டு மகிழ்ந்த செங்குந்தத் தலைவர்கள் கையிலுள்ள குந்தமே குந்தம். இதற்கு நிகராக வேறு குந்தம் உலகில் உளதோ?

64

சிரச் சிங்காதனச் சிறப்பு

வரச்சிங் காதன வளவர் தம்பிரான்
தரச்சிங் காதனந் தன்னி லேறியே
துரைச்சிங் காதனந் தொழுங்க வீக்கிடும்
சிரச்சிங் காதனச் சீர்செங் குந்தமே.

முசுகுந்த மன்னன் பெரும் தவம் செய்து பெற்ற சிங்காதனத்தை உடைய சோழராசர்களுக்கெல்லாம் தலைவனாகிய குலோத்துங்கன், சிங்காதனத் துரைகள் வணங்க வீற்றிருந்த கவிஞனாகிய எனக்கு ஆயிரத்தெட்டுத் தலைகளாகிய சிங்காதன மிட்டுச் சிறப்பு செய்தோர் செங்குந்தத் தலைவராவார்.

சோழ பரம்பரை முசுகுந்தன் செய்த பெருந்தவத்தால் உருவானது. அதில் வந்த குலோத்துங்கன் கூத்தருக்குச் சிங்காதன வரிசை செய்து சிறப்பித்தான். அம் மன்னன் தந்த சிங்காதனத்தைவிட, செங்குந்தர் தந்தது சிறப்பானது என்பது கூத்தர் கருத்து.

65

சிரச் சிங்காதனக் காரணச் சிறப்பு

வேட்டுமானுடரி தாய வேணியர்
சூட்டுதாள் வாரிசத் துணைக ளேத்தியே
யாட்டுக சென்னியை யலர்த்தி யேயெனக்
காட்டுதற் கேயரி கவின்கைக் குந்தமே.

திருமாலானவர் திருவடிகளைக் காண வராக அவதாரம் செய்து பூமியைப் பிளந்து தேடியும் காணுதற்கரிய சடாமுடியை உடைய பரமசிவன் தாமரை போன்ற திருவடிகளைத் தோத்திரம் செய்து உலகத்தாரை பார்த்து நீங்கள் முகமலர்ந்து

மங்கலியப் பிச்சை கேட்டதும், வீரனின் ஓங்கிய கரம் நின்றது.

இரட்டன் மரபார் இன்றைக்கும் தங்கள் கல்யாண காலத்தில் இச் சரித்திரம் விளங்க பன்னிரு குடுவைப் பொங்கல் வைத்து வழிபாடு புரிகின்றனர்.

59
உயிர்க் கொடை சிறப்பு

எல்லாக்கா லத்தினுமொன் றேற்பவருக் கில்லையெனுஞ்
சொல்லானது கற்றுஞ் சொல்லறியா ரேந்து குந்தம்
வல்லானைக் கொல்லாமன் மனைவிக்கு மங்கலியம்
உல்லாசத் துடனளிக்கும் முதலியதொன் றறிந்தேமால்.

இச் செங்குந்தத் தலைவர்கள் எக்காலத்தும் கேட்பவருக்கு ஒரு பொருளை இல்லை என்று சொல்லும் சொல்லை நாவினால் சொல்ல அறியாதவர். இது வல்லான் என்னும் கொடிய துட்டன் பிடிபட்டபோது அவன் மனைவி அனங்கவல்லி இரந்து கேட்க அவனைக் கொல்லாமல் மகிழ்ச்சியோடு உயிர்ப் பிச்சை கொடுத்த செயலினால் அறிந்து கொள்ளலாம்.

60
மெய்த்தலை கொடுத்த சிறப்பு

முத்தமி ழிராசரா சேந்திரன் முன்னமே
சுத்தவீ ரத்திறந் துலங்கு தற்கொரு
பொய்த்தலை கொடுத்தலிற் புகழ்பெறா தென
மெய்த்தலை கொடுத்தன வீரக் குந்தமே.

குந்தப் படையை உடைய வீர நாராயணன் என்னும் செங்குந்தத் தலைவர்கள் முத்தமிழிலும் வல்ல இராசராசேந்திரனாகிய பராந்தகச் சோழன் முன்பு தூய்மையான தங்கள் வீரம் துலங்க வல்லானின் ஒரு பொய்யான தலையையா கொடுப்பது என்று கருதி தங்களிருவருடைய மெய்யான தலைகளையே கொடுத்தனர்.

58, 59, 60 ஆம் பாடல்களில் உள்ள வரலாறு.

வட நாட்டில் நல்லூர் என்னும் நகரத்தில் போகன் என்னும் இரட்டனுக்கு மகனாகப் பிறந்தவன் வல்லான். வரங்கள் பல தவம் செய்து பெற்றவன். பல ஊர்களில் வாழ்ந்து இறுதியில் தென்னாட்டில் கடம்பூர் வந்தான். ஆழமான அகழியின் மத்தியில் இரும்புத் தூண் நாட்டி அதன்மேல் கோட்டை கட்டி வாழ்ந்தான். எல்லாருக்கும் துன்பமே புரிந்தவன். சோழ மன்னன் பராந்தகனுக்கு அடங்காதவன். அனங்கவல்லி என்னும் மங்கை நல்லாளை மணந்து வந்தவன்.

இவனை அடக்க பழுவை வீரன் முதலிய பன்னிருவர் துணையைச் சோழன் நாடினான். அவ்வீரர்கள் வல்லானை வென்று வருவதாகச் சோழன் சபையில் சபதம் செய்து கொண்டனர். தங்களுக்குள் எவரேனும் இறந்துபோனால் மற்றையரும் உயிர் வாழ்வதில்லை என்று கட்டுப்பாடும் செய்து கொண்டனர்.

வல்லானை அடக்கப் புறப்பட்ட அவர்களுள் கச்சித் தனியன் துர்க்காதேவிக்கும் ஒற்றியூரன் காளிதேவிக்கும் பலியாயினர். முதுகுன்ற மணியனும் கோளாந்தகனும் தாமே உயிர் நீங்கி அகழியைக் கடக்கத் தெப்பமாயினர். புற்றிடங்கொண்டான் செந்நாய்களுக்கும், களந்தையான் புலிக் கூட்டங்களுக்கும் புலியூர்ப் பள்ளி கொண்டான் சிங்கங்களுக்கும் துணிந்து ஆகாரமாயினர். பிணவன் தன்னுயிரை விட்டு அக்கினியாற்றைக் கடந்து செல்ல தெப்பமாயினான். கண்டியூரன் ஏரியிலுள்ள முதலைகளுக்கு தனது மாமிசம் உணவாக ஏரியைக் கடக்க தோல் துருத்தியாக உபயோகப்பட உயிர் துறந்தான். தஞ்சை வேம்பன் வழவழப்பான தூணில் மணலும் இரத்தமும் பூசி மற்றிருவர் ஏறிச் செல்ல துணிந்து உயிரைக் கொடுத்தான். எஞ்சிய பழுவை வீரன் நாராயணன் என்னும் இருவரும் அத்தூணின் வழியாகச் சென்று வல்லான் மார்பை இடமாகக் கொண்டனர். அப்போது அவன் செயலற்றிருந்தான்.

அது கண்ட வல்லான் மனைவியாகிய அனங்கவல்லி தனது கணவனைக் கொல்ல மார்பில் ஏறியுள்ள வீரர்களை நோக்கி மாங்கலியப் பிச்சைக் கொடுத்துதவ வேண்டும் என்று முந்தானையைக் கையிற் கொண்டு நின்றாள். உடனே வீர நாராயணர் அவள் விரும்பியபடியே மாங்கலியப் பிச்சை கொடுத்தருளி வல்லானுக்கு வேண்டிய நல்லறிவு புகட்டி அவனை அவன் பிறந்த ஊருக்குப் போகும்படி கட்டளையும் கொடுத்தனர். பிறகு வல்லானும் அவன் மனைவியும் அவ்வீரர்களை வாழ்த்தி வணங்கி மகிழ்வுடன் தங்கள் ஊர் போய்ச் சேர்ந்தனர். வெற்றி கண்ட வீர நாராயணர் பராந்தகச் சோழன் மன்றம் வந்தனர்.

மன்னன் அவ்வீரர்களைப் பார்த்து என் பகைவனாகிய விக்கலன் தலையை எவ்வாறு கொய்தீர்! என்று கேட்டான். உடனே அவ்வீரர் இருவரும் இவ்வாறு

வழிகால் கொண்டு எழுபத்திரண்டு நாடு களில் பரவி எழுபத்திரண்டு சிற்றரசர் களாகச் சிறந்து கிளைவிட்ட பெரும் இனத் தார் செங்குந்தராவார். கிழக்கே சிவ புரமும், தெற்கே தொந்திபுரமும் மேற்கே விரிஞ்சிபுரமும் வடக்கே சோழ சிங்கபுரமும் இக் குடிக்குரிய நாடுகளாக விளங்கின. விரிஞ்சிபுர நாட்டின் கிளை நாடுகளில் ஒன்று தான் திருமழிசை.

56

முதுகுன்ற மணியன் சிறப்பு

மூத்த முதுகுன்ற குரிசின் முதிரு மணவைப் பாராளன்
பாத்த னென்னு மணியன் கைக்குந்தங் கொடுத்துப் பகரவே
பூத்த மார்பத் தார்பறித்துப் பூழிபடவே வீழ்ந்திறைஞ்சிக்
கோத்து செங்கை மலர்கூப்பிக் குறுகார் சிறுகி வரக்கண்டான்.

முதுகுன்றத்தில் வாழ்ந்த மன்னனும் மணவை என்னும் நகரத்தில் வாழ்ந்த மன்னனும் பகைவர்களால் துன்பமடைந்து முதுமையில் அர்ச்சுனனுக்குச் சமமான மணியன் என்னும் பிள்ளை கையில் செங் குந்தம் கொடுத்து வெற்றி பெறுக என்று சொன்ன மாத்திரத்தில், பகைவர் தங்கள் பரந்த மார்பில் உள்ள வெற்றி மாலை களைக் கழற்றி எறிந்து, புழுதி உடலில் படும்படியாக மண்ணில் வீழ்ந்து வணங்கி தாமரை மலர் போன்ற தமதிரு கைகளை யும் குவித்துக் கொள்ள வீரம் காட்டி னான்.

இப்பாட்டில் சொல்லப்படும் முது குன்ற மணியன் என்பவன் திருமுதுக் குன்றமாகிய விருத்தாசலத்தை ஆண்ட மன்னன். பாராயணன் என்பானது திரு மகன். இளமையிலேயே பட்டத்துக்கு வந்தவன். மணவூர் தேச மன்னன் வேண்டு கோட்படி மாளவ தேசத்து அரசன் மேல் படையெடுத்துச் சென்று வென் றவன் எனும் செய்திகளை வல்லான் காவியம் தேவசாட்சி சருக்கம் கூறும்.

57

தஞ்சை வேம்பன் சிறப்பு

பஞ்சம் வெம்பத் தரும்பனையே நாவான் மிகவே பாடாது
தஞ்சை வேம்பனைப் புகழ்ந்தே மதுமுன் செய்த தவமேயாம்
எஞ்ச வெளிதோ ஊழியுருத்திரன் கைக் கொளு மூவிலைவேலே
வஞ்ச மாயை அவதரித்த திவன் கைக்குந்த வரவாமல்.

ஏழைகளின் வறுமை நீங்கக் கொக்கு கின்ற பனைமாலையையுடைய சேரனை எமது நாவால் பாடோம். தஞ்சை வேம் பன் என்னும் தலைவனைப் பாடுவோம். அது யாம் செய்த தவம். அத்தவத்தைக் குறைவுபடச் சொல்லல் எளிதோ? இவன் கையிலுள்ள வஞ்சமே உருவமான மாயை அவதாரம் செய்து வந்த குந்தத்தின் வர வானது ஊழிக் காலத்து உருத்திரன் கையிலுள்ள மூவிலை வடிவத்தைப் போன்ற முத்தலைச் சூலாயுதமே.

இப்பாட்டில் கூறப்பட்ட வேம்பன் என்பான் தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டவன். திருவையாற்றில் வசித்த குமரன் என்பானின் திருமகன். ஐயாறப் பனின் தரும பரிபாலனக் கூட்டத் தலை வன். பராந்தகச் சோழன் நீதி மன்றத் தில் முதல் மந்திரியாக இருந்தவன். வல் லான் என்னும் இரட்டனை வென்று வாகை சூடிய பன்னிருவருள் ஒருவன் என்று வல்லான் காவியம் வீரநாராயணச் சருக்கம் கூறுகிறது.

58

மங்கலியப் பிச்சையிட்ட சிறப்பு

வல்லான்றன் திருத்தேவி மங்கலியம் பிழையாமன் மடிதா னேற்றிங்
கெல்லோரு மங்கலியப் பிட்சையிடு மெனத்தாள்வீழ்ந் திரப்ப வேண்டிக்
கொல்லாமல் விடுதல்புக ழெனக்கருதி யோகற்பின் கொண்ட வாய்மை
நல்லார்க ளிருந்தவையின் புகழ்கைக்கோ காத்ததுகொ னஞ்செஞ் குந்தம்

சோழ ராசனோடு மாறுபட்டு வீரன் நாராயணன் முதலிய செங்குந்தத் தலை வர்கள் பன்னிருவரால் தோல்வியடைந்து, அவர்கள் கையில் அகப்பட்டுத் தன் உயிர் கொடுக்க இருந்த வல்லான் என்னும் அரசனது மனைவி அனங்கவல்லி என்பவள் அச் சமயத்தில் முந்தானையேற்று நான் அமங்கலியாகாமல் நீவிரெல்லாரும் மங் கலியப் பிச்சை கொடுக்க வேண்டும் என்று அவர்கள் பாதத்தில் வீழ்ந்து வணங்க, செங்குந்தத் தலைவர்கள் அவ்வல்லானுக்கு உயிர் கொடுத்துக் காத்தது புகழ் எனக் கருதியோ அல்லது கற்பினது உண்மை யையே மேற்கொண்டொழுகிய மாதர் கள் இருந்த சபையின்கண் தம்மைத் துதிப்பதற்கோ அறியேன்.

தன் கணவனைக் கொல்ல செங் குந்தத் தலைவர்கள் முற்பட்டபோது என் உடன் பிறந்தவர் நீங்கள், யானுங் கள் சகோதரி. என் மங்கல நாண் அறு படலாமா என்று கேட்பாள். அவ்வாறு

6. தக்கயாகப் பரணி

புலவர் S. K. இராமராசன் (கம்பராமன்)
ஆசிரியர், பேரகராதித்துறை, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-5.

தமிழ் மொழி காலத்துக்கேற்பப் புதுப் புது இலக்கியங்களைப் பெற்று வளர்ந்து வந்துள்ளது. இங்ஙனம் புதியதாகத் தோன்றும் இலக்கியத்தை 'விருந்து' என்பர்.

தொல்காப்பியர் ''விருந்து தானே புது வது கிளந்தயாப்பின் மேற்றே'' என்றார். இதற்கு உரை வழங்கிய பேராசிரியர் ''புதுவது கிளந்த யாப்பின் மேற்று என்றது என்னையெனின் புதியதாகத் தாம் வேண்டியவாற்றால் பல செய்யுளும் தொடர்ந்து வரச் செய்வது. அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளும் என உணர்க. கலம்பகம் முதலாயினவும் சொல்லும்'' என்று விளக்கினார்.

இங்ஙனம் விருந்தாகத் தோன்றிய இலக்கியம் 96 வகைப்படும். அவற்றுள் பரணி என்பது தலை சிறந்த இலக்கியமாகும்.

விருந்தாகத் தோன்றிய இலக்கியங்களுள் அந்தாதி, கலம்பகம் உலா முதலிய இலக்கியங்கள் கணக்கற்றுள்ளன. ஆனால் பரணி மட்டும் விரல்விட்டு எண்ணலாம்படி மிகமிகக் குறைவாயுள்ளது.

இங்ஙனம் பரணியிலக்கியம் சிலவே இருப்பது ஏன் என்று ஐயம் தோன்றும். மற்றைய இலக்கியம் பாடுவது எளிது. பரணிபாடுவது கடினம். ஆதலால் சில பரணிகளே தோன்றின. இதுபற்றி,

ஆயிரம் புலவோரில் ஒருவன் ப்ரபந்தக்கவி
அவராயி ரர்க்குள் ஒருவன்
அந்தாதி தூதுலா பரணி கோவைக்கமகன்

என்று ஒரு தனிப் பாடல் குறிக்கும். பெரும்பரணி என்று கூத்தரே குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில் கூறினார்.

பரணி ஆனையாயிரம் அமரிடை வென்றமானவன் மீது பாடப் பட்டு வந்தது. இந்நெறியை மாற்றிக் கடவுள் மீது பரணிபாடியவர் ஒட்டக்கூத்தர்.

சிவபெருமானை அவமதித்த தக்கன் வேள்வியைத் தகர்த்த வீரபத்திரரின் மறக் கருணையைப் பாடுவது தக்கயாகப் பரணி. இந்நூல் 814 தாழிசைகளைக் கொண்டது.

இந்நூலில் வடமொழிச் சொற்கள் நிரம்ப உள்ளன. இதனால் இப்புலவர் பிரானின் வடமொழிப் புலமையை நாம் தெரிந்து கொள்ளலாம்.

தக்கயாகப் பரணிக்கு அமைந்த உரை திட்ப நுட்பம் செறிந்தது. இவ்வுரையை நன்கு பயின்றால் தமிழ்ப் புலமையும் பல்கலைப் புலமையும் பெறலாம். இந்நூல் விளக்கம் பெற்றது இவ்வுரையாலேயே எனலாம்.

பாலைவனம்; அதில் ஒரு கோயில்; அதில் காளியம்மை வீற்றிருக்கிறாள். அவளைச் சுற்றிலும் பேய்கள்; அப்பேய்கள் உணவின்றி உணர்வின்றி வாடுகின்றன. அவை தேவியிடம் தங்கள் பசியைக் கூறிப் புலம்புகின்றன. அப்போது ஒரு பேய் வந்து தக்கயாகம் அழிந்ததைக் கூறுகின்றது. அங்கு போனால் போர் வீரர்களின் தசை கிடைக்கும். உண்டு மகிழலாம் என்று கருதி அவை யாகசாலைக்குப் போய்த் தசையைக் கூழாக்கி உண்டு மகிழ்கின்றன. வயிறு நிரம்பிய பின் பேய்கள் சோழ மன்னனை வாழ்த்துகின்றன. இதுவே பரணியின் கருப்பொருள்.

பரணியைப் பாடுபவர் மகளிர். ஆகையால் தொடக்கத்தில் பரணியைப் பாட மகளிரைக் கதவு திறந்து வாருங்கள் என்று பாடுவது மரபு. இப்பகுதியைக் கடைதிறப்பு என்று கூறுவர்.

போர்ப் பாடல் மகளிரால் பாட இயலுமா என்று ஐயுற்று கடைதிறப்புக்கு வேறு விளக்கம் தந்தவர் சிலர்.

10. களங்காட்டல்:

இப் பகுதியில் சிவபெருமான் உமா தேவியோடு எழுந்தருளிப் போர்க் களத் திருந்த பேய்களைச் சுட்டிக் காட்டி, இவற்றுள் இறந்த இன்ன தேவர் இன்ன பேயாக ஆயினர் என்று புலப்படுத்தி னார்; அது கேட்டு தேவி தான் சினம் தணிந்ததோடு, சினம் தணிந்தருள சிவ பெருமானையும் வேண்டுதலும், அவர் இரங்கித் தம்மை இகழ்ந்த தக்கனுக்கு ஆட்டுக் கடாத் தலையையும் உயிரை யும், பிற தேவர்களுக்கு உயிரையும் உரிய பதவிகளையும் அளித் தருளி னார்.

அவற்றைப் பெற்ற தேவர்கள் இறை வனை வலம் வந்து வணங்கி வீரபத்திர ரையும் வாழ்த்தித் தத்தம் இடம் சென் றனர். இவையனைத்தும் இப்பகுதியில் கூறப்படுகின்றன.

11. வாழ்த்து:

இப்பகுதியில் ஆசிரியர் தம்மை ஆத ரித்து வந்த இராசராசனையும், மறைய வரையும், திருமகள் கலைமகள் ஆகியவர் களையும் வாழ்த்துகின்றார்.

புராணங்களிலும், வேறு நூல்களி லும், கூறப்பட்டிருக்கும் தக்கயாக சங் காரக் கதையினின்றும் இந்நூலில் கூறப் பட்டுள்ள கதைப்போக்கு வேறுபட்டுள் ளது குறிப்பிடத் தக்கது. இந்த வேறு பாட்டிற்கு ஆதாரமாக உள்ள முதல் நூல் எது என்பது விளங்க வில்லை என்று உ.வே. சாமிநாத ஐயரும் குறிப்பிட்டிருப்ப தும் இங்கு மனம் கொள்ளத்தக்கது. இது ஆய்வுக்குரிய ஒன்று.

அடுத்து, இந்நூலில் கூறப்பட்டுள்ள ஆளுடையப் பிள்ளையார் சமணரை வாதில் வென்ற வரலாறு இதற்கு முற் பட்ட நூலான சேக்கிழாரின் பெரிய புராணத்திலும் கூறப்படவில்லை. இதுவும் ஆய்வுக்குரிய ஒன்று.

பிற பரணி நூல்களுக்கும் இத் தக்கயாகப் பரணிக்கும் பெருத்த வேறு பாடுகள் உண்டு. இவ்வாறு அமைத்திருப் பது கூத்தரின் தனித்தன்மையைக் காட்டு கிறது எனலாம். வேறுபாடுகள்:-

(1) மற்றப் பரணிகளைப் போலப் பாட்டுடைத் தலைவனுக்கு நன்மை உண் டாக வேண்டுமென்று வாழ்த்தாமல் ஆக்குவித்தோனுக்கு நன்மை உண்டாகும் படித் தெய்வங்களை வாழ்த்தி இருத்தல்.

(2) உமாபாகர், விநாயகர், முருகர், திருஞானசம்பந்தர் என்னும் இவர்களை மட்டும் வாழ்த்தி இருத்தல்.

(3) நூல் உறுப்புக்களின் பிறழ்ச்சி

(4) காடு பாடியது முதலியவற் றில் யாமள நூலின் முறைப்படி வருணித் திருத்தல்.

(5) சைவத்தின் பெருமை புலப் படும்படி திருஞான சம்பந்தர் சைனரை வென்ற கதையைத் தேவிக்கு நாமகள் கூறியது முகமாகப் புதியதாக விளங்கக் கூறியிருத்தல்.

(6) கூழடுதல் என்னும் உறுப்பில் பேய்கள் கூழையாக்கிக் குடித்துப் பாட்டு டைத் தலைவனை வாழ்த்தாமல் இந் நூலை ஆக்குவித்த இராசராசனையும் அவன் முன்னோர்களையும், அவர்களு டைய நற்செய்கைகளையும் வாழ்த்து தலைக் கூறியிருத்தல்.

(7) களங் காட்டுதலில் காளி பேய்களுக்குக் களங் காட்டியதாகக் கூறி யது போலன்றிக் கதைத் தொடர்பு புலப்படத் தேவிக்குச் சிவபெருமான் காட்டியதாகக் கூறியிருத்தல்.

(8) ஆக்குவித்தோனிடத்துள்ள பேரன் பால் அவனைத் தனியே இறுதியிலும் வாழ்த்தி இருத்தல்:

இந்நூலின் சுவையான பகுதிகள்: கடைதிறப்பு முற்றும், ஆளுடைய பிள்ளை யார் சரித்திரப் பகுதியும் பேய் முறைப் பாடு பகுதியில் கீழ்க் குறிப்பிட்ட பாடல் களும்.

276-86; 324-32: 389-95; 448-54; 537-59; 604-12; 621-34; 644-50; 652-62; 671-81; 703-5; 713-4; 762-8; 772-7; 780-93.

அணுவில் அணுவினை ஆதிப் பிரானை
அணுவில் அணுவை ஆயிரம் கூறிட்டு
அணுவில் அணுவை அணுகவல் லார்க்கு
அணுவின் அணுவை அணுகலும் ஆமே.

—திருமூலர்

தேவமங்கையர், உருத்திரக் கணிகையர், இராசராசபுரத்து வீதிப் பெண்கள், அங்கே வந்து குடிபுகுந்த பெண்கள், வித்தியாதரப் பெண்கள், நீராமகளிர், நாகக் கன்னியர், சக்கரவாளம் பொதிகை மேரு இமயம் உதயகிரி என்பவற்றி லுள்ள அரமகளிர் என்பவர்களாம்.

இப் பகுதியால் தேவி, இராசராச புரீசர், அகத்தியர், தெய்வ மகளிர், சோழவரசன் முதலியவர்களுடைய பெரு மையும், நதிகள், மேரு முதலியவற்றின் உயர்வும் புலப்படுகின்றன.

இதன் ஈற்றிலுள்ள நான்கு தாழி சைகளால் தக்கயாக சங்காரத்தில் தேவர் கள் தோற்ற செய்தியைப் பாடுவதற் காகக் கடைதிறமின் என்று கூறுமுகத் தால் கடை திறப்பு இத்தன்மையது என்பதை ஆசிரியர் விளக்குகிறார்.

3. காடு பாடியது:

இப் பகுதியில் தேவி கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் பாலை வனத்தின் வெம்மை, வாம மார்க்கத் தாருடைய செயல்கள், காளியின் கோயி லைச் சூழ்ந்துள்ள சோலைகளின் பெருமை, யோகினிகள் முதலியோருடைய பெருமை, பைரவர்களின் செயல்கள் ஆகியன கூறப் படுகின்றன.

4. தேவியைப் பாடியது:

இப்பகுதியில் காளியின் பெருமையும், பூசைக்குரிய வாசனைப் பொருள்களும் விரித்துக் கூறப்படுகின்றன.

5. பேய்களைப் பாடியது:

இப்பகுதியில் பேய்களின் உருவ வருணனையும் அவற்றின் பசி மிகுதி யும் விளக்கப்படுகின்றன.

6. கோயிலைப் பாடியது:

இப்பகுதியில் காளிக் கோயில் வரு ணனையும், அக் கோயிலிலுள்ள ஆலமரத் தின் பெருமையும். தேவியின் அமளி யான அரவரசின் பெருமையும், தேவி வீற்றிருக்கும் சிறப்பும், தேவியின் பஞ்சா யுதங்களின் செயல்களும், தேவி திரு மேனியின் அழகும், தேவி ஆளுடைப் பிள்ளையார் சமணரை வாதில் வென்ற கதையைச் சொல்லும்படிக் கலைமகளைப் பணித்தலும், அவ்வாறே கலைமகள் அக்கதையைச் சொல்லுதலும், தேவி கேட்டு மகிழ்ந்து கலைமகளுக்கு அருள் செய்தலும் கூறப்படுகின்றன. அத்துடன் இக் கதையைக் கூறிய நாமகளைத் தன் முன் இருக்கும்படி துர்க்கை அருளி னள் என்னும் முகத்தால் நாமகளின் பெருமையையும் தமக்கு நாமகள் பாலுள்ள அன்பையும் ஆசிரியர் புலப் படுத்துகின்றார்.

7. பேய் முறைப்பாடு: (பேய்கள் தங்கள் குறையை நீக்கிக் கொள்ள விண்ணப்பித் தலாம்):

இப் பகுதியில் காளியிடம் உணவு பெறாது பலராலும் வஞ்சிக்கப்பட்ட தைப் பேய்கள் முறையிடுதலும், தாங்கள் கண்ட கனுக்களைக் கூறுதலும், அது சமயம் தக்கன் யாகத்தை அழித்ததற்குப் படைபோன பூத கணங்களோடு முன்பு சென்றிருந்த பேயொன்று ஓடிவந்து, பேய்களை எல்லாம் தன்னுடன் வரக் கூவி மிக்க விரைவாக உணவின் ஆசை யால் தக்கன் யாகசாலைக்கு மிக விரைந்தோட, காளி அதனைப் பிடித்து வரச் செய்து தேவர்கள் தக்கன் யாகத் தில் அழிந்த வரலாற்றைக் கூறும்படிக் கட்டளையிட அவ்வாறே அது சொல் லத் தொடங்கியதும் கூறப்படுகின்றது.

8. காளிக்குக் கூளி கூறியது:

இதில் தக்கயாக சங்காரம் விரிவா கக் கூறப்படுகிறது. இப்பகுதி பேய் காளிக்குக் கூறுவதாக அமைவதாம்.

தக்கன் சிவனை மதியாமல் வேத விதிக்கு மாறாக யாகம் செய்யத் தொடங் கியதும். அதற்கு வந்த அவன் மகள் (சிவன் மனைவி) தாட்சாயணி தக்கன் முதலியோரால் அவமதிக்கப் பெற்றதும் தேவி சினந்து சென்றதும், அது தெரிந்த சிவபெருமான் வீரபத்திரரை அவ்வேள் வியை அழித்துவிட்டு வரும்படி ஏவிய தும், அவர் அங்ஙனமே பூத கணங்களு டன் சென்று தக்கனுக்கு உதவ வந்த தேவர்களோடு போர் செய்து கொன்று யாகத்தை சிதைத்ததும் இறந்த தேவர் கள் பேயானதும் விரிவாகக் கூறப்படுகின் றன.

9. கூழ் அடுதலும் இடுதலும்:

இப் பகுதியில் கதையைக் கேட்ட காளி, யாகசாலைக்குச் சென்று கூழடும் படி பேய்களுக்குக் கட்டளையிடுதலும், அவ்வாறே பேய்கள் அக்களத்தில் இறந் தவர்களுடைய தசை முதலியவற்றைக் கொண்டு கூழ் சமைத்துக் காளிக்குப் படைத்துப் பிற பேய்களுக்கு இட்டுத் தாமும் உண்ணுதலும், பின்பு களித்து இரண்டாம் இராசராசனையும், அவன் முன்னோர்களையும் வாழ்த்துதலும் கூறப் படுகின்றன.

5. தக்கயாகப் பரணி - ஓர் அறிமுகம்

டாக்டர் குமார. பத்மநாபன், M.A., B.T. Ph.D
தமிழ்ப் பேராசிரியர், எஸ்.ஐ.வி.இ.டி., கல்லூரி, சென்னை.

பரணி என்பது தமிழிலுள்ள 96 வகை இலக்கிய வகைகளுள் ஒன்று. போரில் ஆயிரம் யானைகளை வென்ற வீரனைப் பற்றி கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, முதலிய பல உறுப்புகள் மூல மாக அவனுடைய சிறப்புக்களைப் பல படப் புறப் பொருள் அமைதி தோன்றப் பாடப் படுவது. இது கலித் தாழிசை என்னும் பா வகையால் பாடப்படுவது. பெரும் போர் புரிந்து வெற்றி பெற்ற வீரனைச் சிறப்பித்துப் பாடுவதையும், பரணி என்பர். இலக்கிய இலக்கண நூல் களால் இதனை அறியலாம்.

இப்பரணி நூல் அரசர்கள் மேல் பாடப்படுவதோடு தெய்வங்கள் மீதும், தத்தம் ஆசிரியர் மீது அறிஞர்கள் இயற்றி இருக்கின்றனர்.

இந்நூல் பிற இலக்கியங்கள் போலப் பாட்டுடைத் தலைவன் பெயருடன் வழங் காமல் தோற்றோருடைய பெயருடன் சார்ந்தே வழங்கப்படும். தோற்றோரை யும் பெருமைப் படுத்தும் நோக்கத்து டன் இம் மரபைக் கைக் கொண்டனர் போலும்.

பரணி நட்சத்திரம் வெற்றியின் சம் பந்தமுடையது. இதனை, 'பரணி பிறந்தான் தரணி ஆள்வான்' என்னும் பழமொழியாலும், 'பரணியான் பாரவன்' என்னும் நன்னூல் சூத்திர (150 மயிலை நாதர்) மேற்கோளும், 'பரணி நாட் பிறந்தான்' (சீவக 1813) என்பதற்கு, 'பரணி யானை பிறந்த நாளாதலின் அதுபோலப் பகையை இவன் மதியான்' என்று நச்சினார்க்கினியர் எழுதிய விசேட உரையும் தெளிவு படுத்தும்.

தக்கயாகப் பரணி ஒட்டக் கூத்த ரால் இயற்றப்பட்டது. தக்கன் சிவபெரு மானை அவமதித்துச் செய்யப் புகுந்த யாகத்தை வீரபத்திரக் கடவுள் அழித்து, அவனுக்கு உதவி புரிய வந்த அனைத்து தேவர்களையும் அழித்து வென்று அவனுடைய தலையையும் துண்டித்த வரலாற்றைப் பொருளாக அமையப்பாடப் பட்டது இந்நூல்.

சீகாழியில் ஒட்டக்கூத்தர் சில காலம் இருந்திருக்க வேண்டும். ''கம்ப னென்றுந் தாதனென்றுங் காழியொட்டக் கூத்தரென்றும்'' என்னும் தனிப் பாட லும் இதை உறுதிப் படுத்துகிறது. எனவேதான் தன் நூலில் பைரவக் கடவுள் காப்பும், உமாபாகர் வாழ்த்தும், ஆளுடைப் பிள்ளையார் வாழ்த்தும் அவர் சமணரை வாதில் வென்ற வரலா றும் கூறியுள்ளார்.

காலத்தால் முற்பட்டது ஜெயங் கொண்டாரின் கலிங்கத்துப் பரணி. பின் தோன்றிய தக்கயாகப் பரணி கலிங்கத்துப் பரணியினின்றும் வேறு பட்டுத் தோன்றுகிறது. கலிங்கத்துப் பரணிக்கு முன்னுள்ள பரணிகளின் அமைப்பையோ ''பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி'' என்பதைப் பின்பற் றியோ இந்நூல் இயற்றப் பெற்றிருக்க வேண்டும்.

இந்நூல் வைரவக் கடவுள் வாழ்த்து முதலாக வாழ்த்து ஈறாகப் பதினேரு உறுப்புக்களைக் கொண்டுள்ளது.

1. கடவுள் வாழ்த்து:

இப்பகுதியில் ஆசிரியர் முதலில் உமாபாகரையும், பின் முறையே விநா யகர், முருகர், ஆளுடைப் பிள்ளையார் ஆகியவர்களைச் சோழனுக்கு வெற்றி உண்டாக வேண்டுமென்று வாழ்த்தி ஒன்பதாம் தாழிசையில் பொதுவியல் வாழ்த்துக் கூறி இருக்கிறார்.

2. கடை திறப்பு: (வாயில் கதவு களைத் திறத்தல்):

இப் பகுதியில் வீரபத்திரருடைய வெற்றியைப் பாடுதற்குப் பலவகை மகளிரைக் கதவு திறக்கும்படி விளித் தல் கூறப்படுகின்றது. அம் மகளிராவர் தேவியின் அடியார்களாகிய பெண்கள்

பாங்கு சிறப்புடைத்தாம். அவற்றுள் ஒருசில;

''பிறந்தணிய கிள்ளை
பெருத்தாயர் கொங்கை மறந்தணிய
செவ்வி மடமான்;
புறந்தணியத் தோகைதொடா மந்தை;
பாகைத் தொடைபோல முல்லைத்
தொடையலேபோல இடைபோய தூய
எயிற்றாள்;
எம்பாவை எங்கொல்லிப் பாவை
எனப்பாடும் அம்பாவை பாடும்
படியறிவாள்.''

பிற இலக்கியங்களின் தாக்கம்:

''மதிலே அகழாக வாங்கி, அகழே
மதிலா வெழா நிற்க வைத்துப்—புது
மலர்செய்
வாவியைச் செய்குன்ற மாக்கியச் செய்
குன்றை
வாவிய தாக வெனவகுத்து''

என்னும் கண்ணிகள்,

''கோட்டை கடித்தகழி என்றாக்கிக்
குன்றக ழாக்கித் - தெவ்வர்,
நாட்டை மாதிக்குங் கடாக்
களிற் றான்நந்தி''

என்னும் நந்திக் கலம்பகத் தொடரை ஒத்திருப்பது இங்கு மனங் கொள்ளத் தக்கது.

உலா அமைப்பு:

முதல் 33 கண்ணிகளால் உலகத் தோற்றம் முதல் உலகம் காத்த பல் வேறு வேந்தர் சிறப்பும் சோழ வேந்தர்களின் வழி முறையும் அவரவர்கள் செய்த போரும் வெற்றியும் கொடைச் சிறப்பும் பிறவும் வரலாற்றுச் செய்தியுடன் விளக்கப்படுகின்றன. இராசராசனின் மனைவி பற்றிய சிறப்புகள் அதன்பின் 39 கண்ணிகள் வரை விளக்கப் படுகின்றன. 40-48 வரை வேந்தன் தன் தேவியுடன் விடியலில் துயிலெ ழுந்து காலைக்கடன் முடித்து, வழி பாடுகள் செய்து உலாவருதற் பொருட்டு வேழமேற் கொண்டான் என்பன கூறப் படுகின்றன. 49-69 கண்ணிகளில் வேந் தன் உலாவரும் சிறப்பும் கோலமும் விளக்கப்படுகின்றன. 70-114 கண்ணி களால் உலாவரும் சிறப்பினைக் கண்டு மகிழ்ச்சி கொண்ட பெண்கள் பலபடப் பாராட்டுவன கூறப்படுகின்றன. 115-390 வரை பேதை முதல் பேரி ளம் பெண் ஈருக உள்ள பெண்கள் மனங் கொள்ளாமல் கொள்ள' உலாவந்த சிறப்புகள் விளக்கப்படுகின்றன.

பொதுவாக உலா இலக்கியங்கள் மூலம் நாம் பலவற்றை அறிய இய லும். வரலாற்றுக்கு உறுதுணையாக அமைந்த நிகழ்ச்சிகளும் இடம் பெறுவ துண்டு. உலாத் தலைவனின் வீரம், சிறப்பு, கொடை செங்கோல். அவனது முன்னோர் வரலாறு,'' ஆகியவையும் அறிய முடிகிறது. ஓரளவு அக்காலச் சூழ்நிலையையும், மக்கள் பண்பாட்டை யும் அறியவும் இவ்வகை நூல்கள் துணை செய்கின்றன எனலாம்.

முருகனின் அதிசயக் கோலங்கள்

முருகரை ஆறுதலைகளுடன் பன்னிரு கைகளுடன் நாம் பார்த்திருக்கிறோம். ஐந்து தலைகளுடன் நான்கு தலைகளுடன் முருகர் இருக்கிறார் என்றால் அது அதிசய மல்லவா!

ஆறுதலைகளுடன் பன்னிரு கைகளுடன் மயில்மேல் அமர்ந்த கோலத்தில் மயிலை, மதுராந்தகம், எட்டுக்குடி, எண்கண், பொரவச்சேரி, நாகை, எனப் பல தலங்களில் முருகரைக் காணலாம்.

அவினாசி வட்டம், புஞ்செய் புளியம்பட்டி மேட்டுப் பாளையம் சாலையில் 8 கி.மீ. தொலைவிலுள்ள இரும்பறைக்கு வடக்கில் 3 கி.மீ. தொலைவில் ஓதிமலையில் 5 முகங்களும் 8 கரங்களும் கூடிய ஓர் அற்புதமான முருகரைக் காணலாம். இம்முருகர் குமார சுப்பிரமணியன் என்ற திருப்பெயரோடு திகழ்கிறார்.

திண்டுக்கல்லிலிருந்து தெற்கே 15 கி.மீ. தூரத்தில் சின்னாளம்பட்டி என்ற ஒரு சிற்றூர் உள்ளது. இந்த ஊரின் மையத்தில் ஓர் பாலசுப்பிரமணியன் திருக்கோயில் உள்ளது. இங்கு நான்கு தலைகளுடன் மயில்மேல் அமர்ந்த கோலத்துடன் தெற்கு பார்த்து முருகர் வீற்றிருக்கிறார். முருகர் சிறிது காலம் நான்முகனுக்குப் பதில் படைப்பு தொழில் ஏற்றிருந்தார் அல்லவா! அதை உணர்த்தும் திருக்கோலமே இதுவாகும்.

விக்கிரம சோழன் உலா அமைப்பு:

இது 342 கண்ணிகளைக் கொண்டது. 1-23 கண்ணிகள் வரை சோழர்களின் முன்னோர்களில் சிறந்தவர்களை எடுத்துக் கூறுகின்றன. 24-27 முதல் முதல் குலோத்துங்கன் சிறப்பும் செயலும் கூறப்படுகின்றன. 28-35 வரை விக்கிரம சோழன் பிறப்பும் சிறப்பும், அரசு புரியும் ஆண்மையும் பிறவும் விளக்கப்படுகின்றன. அதன்பின் 52 வரை பள்ளி எழுச்சி, நீராடல், தெய்வ வணக்கம், கொடை, அணிபுனைதல், உலாவிற்குப் புறப்படல் ஆகியவைப் பற்றிக் கூறப்படுகின்றன. 64 வரை பட்டத்து யானையின் சிறப்பு பலபடப் புனைந்துரைக்கப்படுகிறது. அதன்பின் யானை மீது அமர்ந்து பவனி வருவதும், உடன் வருவோர் தொகையும் 90 வரை கூறப்படுகின்றன. பவனி காணும் பரத்தையர் கூட்டம், அவர்கள் கூறுவதும் அதன் பின்னர் வருகின்றன. பின்னர் எழுவகைப் பெண்டிர் வனப்பும், பண்பும் செயலும் காதலும் மயக்கும் முறையே விளக்கப்படுகின்றன. கடைசியாக பாங்கியர் பலர் ஏங்கி நின்று தந் தலைவியைக் காத்தருளுமாறு வேண்ட விக்கிரமன் உலாப் போந்தான் என்று முடிக்கிறார்.

குலோத்துங்கன் சோழன் உலா:

'தேர் மேவும்' என்று இவ்வுலாவில் முதற்சீர் அமைந்துள்ளது பத்துவிதப் பொருத்தமும் அமைய விளங்குகிறது.

இவ்வுலாவில் கண்ணிகள் யாவும் அடி ஏதுகை அமைந்துள்ளன. அடிதோறும் மூன்றாம் சீரின் மோனை அமைந்துள்ளன. சில அடிக்ளின் நான்காம் சீரிலும் அமைந்துள்ளன. மலைபத்தும் தலைபத்தும் எனவும் (10). முறைவிட்ட, சிறைவிட்ட எனவும் (33) கைம் மழை, மைம் மழை எனவும் (100) எனச் சிறந்த எதுகை அமைந்த கண்ணிகள் பல. எழுந்த விழுந்த எனவும் (96) சென்றாள் நின்றாள் எனவும் (160), மாலைப் பகைவியை காலைத் துணைவியை எனவும் சில அடிகளில் அடிமுரண் அமைந்துள்ளது. இவ்வுலாவில் இயைபுத் தொடையும், அளபெடையும் அமைவதற்கான வாய்ப்பில்லை.

சந்த அமைப்புப் பகுதி: (வரி 309-314)

> ஒருத னடியின் மடிய உபய
> மருது பொருத வயவன்-விருதன்
> விலையி லமுத மதன விமலை
> முலையின் முழுகு முருகன்-வலைய
> கனக சயில வெயிலி கணவன்
> அனக னதுல னமலன்.

என்ற வரிகளில் தனன தனன என்ற சந்தம் அமைந்துள்ளதைக் காணலாம்.

பொருள் காண்டற்கரியசொற்கள் அமைந்த பகுதி:

சக்கரவர்த்தி என்ற பெயருக்கும், கௌடக்கவி என்ற பெயருக்கும் ஏற்ப இவ்வுலாவில் பொருள் காண்டற்கரிய சொற்கள் பல காணக் கிடக்கின்றன. ''பேரிளம் பெண்ணொருத்தி சோலையென வந்து தோன்றினாள்'' என்னும் பகுதியை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். இதில் சோலையிலுள்ள பொருள்களெல்லாம் அவள் உருவில் இருப்பனவாக ஆய்ந்து கொள்ளுமாறு அருமையாகக் கூறுகிறார் (வரி 695-712)

அமைப்பு முறை:

இவ்வுலா 387 கண்ணிகளைக் கொண்டுள்ளது. 1-28 கண்ணிகள் இரண்டாம் குலோத்துங்கனின் முன்னோர் பெருமைகளைக் கூறுகின்றன. 29-32 வரை அவன் பெருமையும், முடிசூடிய சிறப்பும் பற்றிக் கூறுகின்றன. 33-58 வரை அவன் அரசு புரியும் முறை, அவனும் அவன் தேவியும் தில்லை நடராஜனின் தரிசனம் கண்டு தொழுதது, தில்லை நகரைத் திருத்தித்திருக் கோயில் திருப்பணிகள் புரிந்தது ஆகியவை கூறப்படுகின்றன. அதன்பின் 59-76 வரை நீராடல் ஆடையுடுத்தல் அணிகலன் புனைதல் ஆகியவை விளக்கப்படுகின்றன. 77-100 வரை பட்டத்து யானையின் சிறப்பு அதன் மேலேறி உலா வரும் சிறப்பு ஆகியவை உணர்த்தப்படுகின்றன. 101-122 வரை அவன் உலாவைக் கண்டு மகளிர் அவன் மேற்காதல் கொண்டு மயங்கி நின்ற நிலையும், நெருக்கமும் கூறிய கூற்றும் விளக்கப்படுகின்றன. அதன்பின் 140 வரை பேதையின் பருவச் செயல், 177 வரை பெதும்பையின் செயல், 227 மங்கையின் செயல், 262 வரை மடந்தையின் செயல் 300 வரை அரிவையின் செயல். 340 வரை தெரிவையின் செயல், 385 வரை பேரிளம்பெண் செயல் ஆகியவைக் கூறப்படுகின்றன. கடைசியாக ''தையலார்.....போலராய் மன்றேற.... ஒரு குடையான் போந்தா னுலா'' என்று முடிகிறது.

இராசராசன் உலா:

புயல் என்னும் மங்கலச் சொல்லால் இவ்வுலா தொடங்குகிறது. 391 கண்ணிகளால் ஆனது.

இவ்வுலாவில் பேதைப் பருவத்தாளை வருணித்திருக்கும் கற்பனைப்

மு. அருணாசலம் சேயூர் முருகன் உலா முன்னுரையில் குறிப்பிடுவதையும் இங்கு மனங்கொள்ளத் தக்கது.

மூவர் உலாவும் அவற்றின் சிறப்பும்:

ஒட்டக்கூத்தர் இயற்றிய நூல்களுள் மூவருலா குறிப்பிடத் தக்கன. கூத்தர் விக்கிரம சோழன் காலத்தில் அவனுடைய அரசவைப் புலவராகவும், இரண்டாம் குலோத்துங்கனுக்கு ஆசிரியராகவும், அவனுக்கும் அவன் குமாரன் இரண்டாம் இராசராசனுக்கும் அரசவைப் புலவராகவும் இருந்து பல புலவர்களை ஆதரித்தும் பல நூல்களை இயற்றியும், இயற்றுவித்தும் விளங்கினார். அக் காலத்தில் அம்மூவருள் ஒவ்வொருவர் மீதும் ஒவ்வோர் உலா இயற்றினார். இரண்டாம் குலோத்துங்கன் மீது ஒரு பிள்ளைத் தமிழும் இயற்றினார்.

கூத்தர் இயற்றிய உலா மூன்றனுள் முன்னிற்பது விக்கிரம சோழன் உலா; அடுத்தது குலோத்துங்கன் உலா. மூன்றாவது இராசராசன் உலா. இம் முறையாக நிற்பதற்குக் காரணம் தந்தை உலா, மைந்தருலா என்னும் முறைமை பற்றியே என்க. மூவருலாவில் இராசராசன் உலாவே ஏனையிரண்டினும் அளவாலும் சுவையாலும் சிறந்து விளங்குவது; அடுத்த சிறப்பினை உடையது விக்கிரம சோழன் உலா. மூன்றாவதாக மதிக்கப்படுவது குலோத்துங்கன் உலாவேயாம்.

பிள்ளைத் தமிழில் அம்புலிப் பருவம் பாடுவது அரிது; அதுபோல உலாவில் பெதும்பைப் பருவத்தை விளக்கிப் பாடுவது அரிதென்பர்.

''காசினியிற் பிள்ளைக் கவிக்கு அம்புலி
புலியாம்
பேசுமுலாவிற் பெதும்பை புலி''

என்னும் கவி இதனை உணர்த்தும்.

உலாவில் பெதும்பைப் பருவச் சிறப்பு மிகவும் நுண்மையாக விளக்க வேண்டிய தொன்று. கூத்தரின் மூவருலாவிலும் பெதும்பைப் பருவ வருணனையை எடுத்தாய்ந்தால் எது சிறந்தது என்பது விளங்கும். விக்கிரம சோழன் உலா 29 கண்ணிகளாலும் (134-162), குலோத்துங்கன் உலா 37 கண்ணிகளாலும் (141-177) இராசராசன் உலா 41 கண்ணிகளாலும் (133-173) பெதும்பைப் பருவம் வருணிக்கப்படுகின்றன. பெதும்பைப் பருவத்திற்குரிய பண்பு ஒன்றையும் கூறவில்லை குலோத்துங்கன் உலாவில். விக்கிரம சோழன் உலாவில் பெதும்பைப் பருவத்திற்குரிய மழலை வார்த்தையைக் கிளிக்குக் கொடுத்துக் குழலோசைபோல இன்பந் தரும் சொற்களைப் பேசக் கற்றுக் கொண்டாள் என்பது முதல் பல பண்புகளை விவரித்துக் கூறுகிறார். இராசராசன் உலாவில் அதனிம் சிறப்பாகச் சொற்சுவை, பொருட்சுவை தோன்றும்படிப் பெதும்பைப் பருவத்தை வருணிக்கின்றார். உலா முழுவதையும் ஆராய்ந்து பார்த்தால் இராசராசன் உலாவே பல்லாற்றானும் சிறப்புற்று விளங்குவதைக் காணலாம். குலோத்துங்கனே கூத்தருக்குச் சிறந்த மன்னன். இது வரலாறு கூறுவது. என்றாலும் உலாவில் சிறந்து விளங்குவது இராசராசன் உலாவே.

விக்கிரம சோழன் உலா:

பத்துப் பொருத்தமும் அமைய சீர் தந்த என்ற மங்கல முதற் சீருடன் விக்கிரம சோழன் உலாவைத் தொடங்குகிறார் கூத்தர்.

இவ்வுலா, கலிவெண்பாவால் ஆகியது. வெண்டளை பெற்று இரண்டாமடி தனிச் சொற்பெற்று, இவ்விரண்டடி ஒரெதுகையாகி முடிவிற் சிந்தடி பெற்று இறுதியில் 'மலர்' என்ற வாய்பாட்டால் முற்றுப் பெற்றது. மோனை அடிதோறும் மூன்றாஞ் சீரிலாவது நான்காஞ் சீரிலாவது பொருந்தி இருக்கின்றார். எதுகையும் மோனையும் இல்லாத கண்ணிகளே இவ்வுலாவில் இல்லை எனலாம்.

கூத்தரின் கற்பனைத் திறத்திற்கு சிறந்ததொரு எடுத்துக் காட்டு மடந்தைப் பருவத்தாள், பவனி கண்டு காதல் கொண்ட காட்சி. அதனை 218 முதல் 222 வரையிலுள்ள கண்ணிகளில் 'தொழுதாள்....அயர்ந்தாள்'' என்பதாக வருணிக்கிறார். படித்து இன்புற வேண்டிய பகுதி இது.

''தொழுதாள் அயர்ந்தாள் துளங்கினாள்
சோர்ந்தாள்
அழுதாள் ஒருதமியள் ஆனாள்-
பழுதிலாக்
காக்குந் துகிலும் இலங்கு பொலன்கலையும்
போக்கு நிதம்பம் புனைகென்று-வீக்கும்
மணிக்கச்சுந் தம்முடைய வான்தூசுங்
கொங்கை
பணிக்கக் கடைக்கண்கள் பாரா-அணிக்
கமைந்த
குன்றாத நித்திலக் கோவையும் பொன்னி
றத்த
பொன்றாத பட்டும் புனைகென்று-நின்று
கொடுத்தன; கொங்கைகளுங் கொண்டன;
தானும்
அடுத்தனர் தோள்மேல் அயர்ந்தாள்.''

''கலிங்கம் எறிந்த கருணாகரன்றன்
களப்போர் பாடத்திறமினோ'' என்று
கலிங்கத்துப் பரணி பாடும்.

தடக்கை உகிரால் இரணியனைத்
தாம் அங்கு இடந்த கதைபாட
....தகைபொற் கபாடம் திறமினோ
என்று இரணியவதைப் பரணி பேசும்.

''வண்ணமுறு பொன்னிநதிக்கரையின்மேவி
வளமருளும் சத்திரத்தான் கொடிய
பாவி
தன்னகத்தைச் சிதைத்தாண்ட பரணி
பாடத்
தாழ்குழவீர்! கடைதிறந்து வம்மின்
வம்மின்''
என்று மதங்கத்துப் பரணி கூறும்.

மயிலா யிறக்கின் அயிர்ப்பிக்கும்
வறுங்கண் என்று வாசவனார்
குயிலாய் இறந்த கதை பாடக்
கோலக் கபாடம் திறமினோ
என்று தக்கயாகப் பரணி நயமுறக்கூறும்.

பரணியின் கடை திறப்பில் சிருங்கார ரசம் வெள்ளமிட்டோடும். கலிங்கத்துப் பரணியைப் படித்தவர்கள் இதனை நன்குணர்வர். ஆனால் ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் சிருங்கார ரசத்தை அளவாகக் காண்பிக்கிறார். மற்றைய பரணியில் கவிஞர்கள் மண்ணுலக மகளிரைப் பரணியைப் பாட எழுப்புவர். கூத்தர் தம் பரணியில் மண்ணுலக மகளிரையும் விண்ணுலக மகளிரையும் வித்தியாதர மகளிரையும் எழுப்புகிறார். கூத்தர் தேவலோகப் பெண்களை எழுப்புவது சுவைமிக்கது.

தேவலோக மகளிர்களின் கூந்தல்கள் மிகமிகக் கவர்ச்சியுடையன. அதனால் தேவர்களின் உயிரும் உணர்வும் அந்தக் கூந்தல்களில் ஒடுங்கிவிட்டன. அம்மகளிர் பொய்கைகளில் நீராடியபின் நனைந்த குழலைப் பிழிகின்றனர். அப்போது கூந்தலில் உள்ள உயிரும் உணர்வும் வெளிப்பட்டன என்கிறார் (உரையாசிரியர் வேறுபொருள் கூறி அதுவே சிறந்தது என்பர்)

உருகும் சுரர் உயிருண்டன
உணர்வுண்டன ஒழுகத்
திருகும் குழல் அரமங்கையர்
திறமின் கடை திறமின்
என்று கற்பனை வளம்பெறப் பேசுகின்றார்.

பாற்கடலில் நஞ்சு தோன்றிற்று. அதனைச் சிவபெருமான் உண்டான். நஞ்சையடுத்து அமுதம் தோன்றிற்று. அதனைத் தேவர்கள் உண்டனர். இவற்றால் வருந்திய நஞ்சும் அமுதும் ஒன்று கூடி ஆலோசித்தன. நம்மை எவரும் உண்ணாதபடி நாம் தக்க இடம் தேடுவோம் என்று முடிவு கட்டி மகளிர்பால் சேர்ந்தன என்கிறார் கூத்தர்.

அரனும் ஏனையிமையவரும் உண்பரென
அஞ்சி நஞ்சும் அமுதமும் உடன்
திரை மகோததியைவிட இருந்தனைய
தெய்வ மாதர் கடை திறமினோ
என்று கம்பீரமாகப் பாடுகின்றனர்.

உரையாசிரியர் ''நஞ்சு கண்களாகவும் அமுதம் குயங்களாகவும் கொள்க. கண்களின் அருகு மகாதேவர்க்குப் போதல் அரிது எனவும் குயம் (கொங்கை) தேவர்களுக்குத் தீண்டல் அரிது'' எனவும் விளக்கினார்.

ஒவ்வொரு பரணியிலும் காளி வீற்றிருக்கும் காட்டைப் (காடு-பாலை நிலம்) புலவர்கள் விவரித்துப் பாடுவர். பாலை நிலத்தின் வெப்பம், கானல் நீர், சருகு முதலியவற்றைப் பாடுவது மரபு. பாலையின் வெப்பத்தால் உலகமே நிலை குலைந்தது என்று நயமுறப் பாடுவர்.

பாலை நிலத்தின் வெப்பம் பொறாமலே கங்கை நதி சிவபிரான் சடையில் மறைந்துள்ளது என்று கவிச்சக்கரவர்த்தி நயமாகப் பேசுகிறார்.

ஈடுபடும் இறைமகள் பொறாமைகொல்
இது பொறாமைகொள் இறைவர்தம்
காடுபடுசடை யூடும் உருவு
கரந்து வருவது கங்கையே.

என்கிறார். இப்பாடலில் நயமாக மகளிர் மனோபாவத்தை விளக்குகின்றார். தான் தலையிலிருப்பது உமைக்கு மனம் பொருந்தாது. ஆதலால் கங்கை மறைந்து வாழ்கின்றாளா? அன்றிப் பாலைவெப்பத்தாலா? என்று வினவுகின்றார். பாலை வெப்பமும் மாற்றாள் மன வெப்பமும் சமமானது என்று கவிஞர் ஒரு உள்ளுறையை அமைத்துள்ளார்.

தேவி அக்கானகத்தே கோயில் கொண்டுள்ளாள். அத்தேவியைப் பக்தியுடன் வருணிக்கின்றார். இப்பகுதியைச் சங்கராசாரியார் பாடிய சௌந்தரியலகரியுடன் ஒப்பிட்டு ஆராயவேண்டும்.

தேவிசிலம்புகட்கு ஆதாரமான திருவடிகளை யுடையவள். வேதங்களுக்கு ஆதாரமாயுள்ளவள். பிறையை அணிந்த சடையைக் கொண்ட சடையை உடையவள். அசுரர்கள் அழியவும் தேவர்கள் வாழவும் அமுதம் வழங்கியவள்.

'மேவார் நேரே தூண்வயிறு
வாய்த்த பிரானே'

எனவும் கூத்தர் குலோத்துங்கனை விளித்துப் போற்றும் பாடற் பகுதிகள், திருமாலடியார்கள் காத்தற் கடவுளாகிய திருமாலை உள முருகிப் போற்றும் முன்னிலைப் பரவல் போன்று அமைந்திருத்தலைக் கூர்ந்து நோக்குங்கால் திருமாலாகிய காத்தற் கடவுள் வழிபாட்டில் ஒட்டக்கூத்தர்க்குள்ள பெருமதிப்பும் ஈடுபாடும் இனிது புலனாகும்.

சிறு வீடு கட்டி விளையாடும் மகளிர் தம் சிற்றிலை அழிக்க வரும் குழந்தையாகிய குலோத்துங்கனை நோக்கி, திருமாலாகிய அக்குழந்தை இராமாவதாரத்திற் செய்த வீரச் செயல்களையும் சோழ நாட்டு ஆட்சியை மேற்கொண்டு, பகைவர் தேயமாகிய இலங்கையிலும் மகோதையிலும் மதுரையிலும் காம்பிலியிலும் இனி செய்யவிருக்கும் வெற்றிச் செயல்களையும் எடுத்துரைத்து ''செயற்கரிய செய்யும் பேராற்றல் படைத்த உனக்குச் சிறுமியர்களாகிய யாம் கட்டிய சிறிய வீட்டினைச் சிதைத்தல் ஏற்புடையதன்று'' என இரந்து வேண்டுவதாக அமைந்தது.

''முன் மிதிலை வில்லிற
முரித்திசை தரித்தாய்
முழங்கு கடலேழு
முனியும்படி முனிந்தாய்
இன்மது ரமுத்தமிழு
நான் மறையு முன்னால்
எடுத்த முகிலே
யெதிரிலாத பெருமாளே
வன்மதிலி லங்கை
யெயிலன்றுதியர் கோமான்
மகோதை யெயிலன்று
மதின் மண்ணைநகரன்று
தென்மதுரை யன்று
வடகம்பிலியு மன்றுன்
சேவடிகளா லெமது
சிற்றில் சிதையேலே''

எனவரும் இச்செழும் பாடலாகும். இவ்வாறு நவில்தொறும் சுவைதரும் இனிய பாடல்கள் பல இப்பிள்ளைத் தமிழில் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் கண் ஆசிரியர் தம் காலத்துக்கு முன் நிகழ்ந்த தமிழக வரலாற்றுச் செய்திகளையும் சோழமன்னர்கள் செய்த வீரச் செயல்களையும் பாட்டுடைத் தலைவனாகிய குலோத்துங்கன் செய்த வெற்றிச் செயல்களையும் தில்லைத் திருப்பணியையும் அம்பலவாணர்பால் அவன் கொண்டிருந்த பேரன்பின் திறத்தையும் ஆங்காங்கே குறித்துள்ளார். சோழன் கரிகாற் பெருவளத்தான் தன்னைப் புகழ்ந்து பட்டினப் பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்க்கு பதினாறு நூறாயிரம் பொன்னை அளித்த தோடமையாது, தான் இமயமலையிற் புலியிலச் சினையைப் பொறித்து மீளுங் காலத்துத் தன்னை எதிர்த்துப் போர் செய்து தோல்வியுற்ற மகத நாட்டரசன் பணிந்து தந்த திறைப் பொருளாய்ப் பொன்னினும் நவமணியினும் இயன்ற தூண்களையுடையதாய்க் காவிரிப்பூம்பட்டிணத்தில் நிலை பெற்றிருந்த பட்டி மண்டபத்தினைப் பரிசலாக அளித்துப் பாராட்டிய திறத்தினை, அவன் மரபின் வழிவந்த குலோத்துங்கன் மேல் வைத்துப் போற்றும் முறையில்,

''அன்று கவிக்கு வியந்து
நயந்து தரும் பரிசிற் கொருபோ
ராழியில் வந்து தராதல
நின்று புகாரிலனைத் துலகுஞ்
சென்று கவிக்கு மகத்தது
தூண் வயிரத்தினு முத்தினுமெய்
செய்ததோர் பொற்றிரு மண்டபம்
நல்கிய செயகுல நாயகமே''

எனவும்,

''நாவலனே கிடையா
நற்றிரு மண்டபம் நின்
பாவலனே கவரப்பண்டு
டனித்தவனே''

எனவும் வரும் தொடர்களிற் கூத்தர் குறிப்பிட்டுள்ளமை காணலாம்.

சோழன் செங்கணான் பொய்கையார் பாடிய களவழிக் கவிதையினைக் கேட்டுச் சேரன்கணைக் காலிரும் பொறையைச் சிறையினின்றும் விடுவித்த செய்தியையும், அச்சோழன் வழியினனாகிய குலோத்துங்கன் தன்னை நாடி வந்த கோடியராகிய கூத்தரும் நல்லிசைப் பாணரும் பெரும்புலவரும் விறலியரும் இரவலராம் இடும்பை நீங்கிப் புரவலராய்ப் புகழ்படைப்ப வரையாது வழங்கும் பெருவண்மையினை யுடையனாய் அன்னோர்க்குச் சேமநிதியாகத்திகழுஞ் சீர்த்தியையும்

''பாடிய பொய்கை களவழி கேட்டுப்
பழம்படியே யடிப்படிந்து
வாடிய பொறையினைச் சிறைமீட்ட
மன்னவன் ஒரு திரு மருகன்
கோடியர் புலவர் விறலியர் பாணர்
குலகிரிகளங்குறை நிறையத்
தேடிய நிதியங் குலோத்துங்க சோழன்
உருட்டுக சிறு தேரே''

என இந்நூலின் இறுதிப் பாடலில் உள முருகிப் பாராட்டுகின்றார். கல்வியிற் சிறந்த புலவர் பெருமக்களைத் தன் சுற்றமெனக் கொண்டு ஆதரித்துப்

குறிப்புக்களை தன்னகத்தே கொண்டு சொற்பொலிவும் பொருட் பொலிவும் பெற்றுச் சிறந்து விளங்குகின்றது. இந் நூற் பாடல்களிற் சில செல்லரிக்கப்பட்டு பொருளுரை வியலாதவாறு சிதைந்துள் ளன. ஒட்டக் கூத்தரது செஞ் சொற் புலமைக்கு இலக்கியமாயமைந்த இப் பிள்ளைத் தமிழ் ஏடுகளை ஒப்பு நோக்கி ஆராய்ந்து வெளியிட்ட பெருமை, திருவை யாற்று அரசர் கல்லூரி விரிவுரையாளராயி ருந்து மறைந்த தஞ்சைப் பெரும் புலவர் எல். உலகநாதம் பிள்ளையவர்களுக்கு உரியதாகும்.

இப்பொழுது நமக்கு கிடைத்துள்ள பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்களுக்குள்ளே காலத்தாலும் கருத்துச் செறிவாலும் முற் பட்டதாகிய இப்பிள்ளைத் தமிழின் முதற் கண்ணதாகிய காப்புப் பருவத்தில் திரு மாலைப்பற்றிய காப்புச் செய்யுள் இடம் பெறவில்லை. பிற்காலச் சான்றோர் பலரும் தாம் இயற்றிய பிள்ளைத் தமிழில் முதற் கண்ணதாகிய காப்புப் பருவத் தொடக்கத்தில் காத்தற் கடவு ளாகிய திருமாலைக் குறித்த காப்புப் பாடலையே பாடியுள்ளார்கள். புலவர் பலரும் மேற்கொண்டுள்ள இம்முறைக்கு மாருக இப்பிள்ளைத்தமிழின் காப்புப் பருவத்தில் திருமாலைப் பற்றிய காப்புச் செய்யுளை இன்றிக் கணபதி சிவபெரு மான் முதலிய ஏனைத் தெய்வங்களைப் பற்றிய காப்புக்களே இடம் பெற்றுள்ளன. கூத்தர் பாடிய இப்பிள்ளைத் தமிழின் காப்புப் பருவத்தில் திருமாலைக் குறித்த காப்புப் பாடல் இடம் பெருமைக்குரிய காரணம் ஈண்டுக் கூர்ந்து நோக்கத்தகுவ தாகும்.

''திருவுடை மன்னரைக் காணின் திரு மாலைக் கண்டேனே'' எனவரும் நம் மாழ்வார் அருளிச் செயலின் வண்ணம் உலக பாலகுருவாய் நின்று நாடாளும் வேந்தனாகிய குலோத்துங்க சோழனைத் திருமாலின் அவதாரமாகவே கொண்டு ஒட்டக்கூத்தர் இப்பிள்ளைத் தமிழைப் பாடியுள்ளார். இந்நூலின் செய்யுட்கள் பலவற்றில் திருமாலின் செயல்கள் பல வற்றைக் குலோத்துங்கன் செயல்களாகக் கொண்டு போற்றியிருத்தலால் இக்குறிப் பினை நன்கு உணரலாம். எனவே திரு மாலின் அவதாரமாகிய குலோத்துங் கனைக் காத்தருள்க என்று அத்திரு மாலையே வேண்டுதல் மிகையென எண் ணியே திருமாலைப் பற்றிய காப்புச் செய் யுளை இப்பிள்ளைத் தமிழின் காப்புப் பருவத்தில் ஆசிரியர் அமைத்திலர் எனக் கருதுதல் பொருத்தமுடையதாகும்.

இரண்டாங் குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்தி 'பூ மன்னு பாவை', 'பூ மன்னு பதுமம்', 'பூ மன்னு யாணர்' எனப் 'பூமன்னு' என்னும் மங்கலமொழியை முதலாகக் கொண்டு தொடங்குவது போன்றே, அவனைப் பாட்டுடைத் தலை வனாகக் கொண்டு கூத்தர் பாடிய இப் பிள்ளைத் தமிழும் 'பூ மன்னு' என் பதனை முதலாகக் கொண்டு தொடங்கு கின்றது.

''பூ மன்னு பொழிலேழுங்
கடலேழுங் கடவுட்
பொருப்பேழு மெனநிலவு
மதுரைக்கும் புகார்க்கும்
கோமன்னன் புவனதரன்
விக்கிரம சோழன்
குலமதலை குலோத்துங்க
சோழனை காத்தளிக்க
தேமன்னு தாமரையாள்
மகிழ்ந்திருக்கு மார்பிற்
றிருமாலு நான் முகனும்
இருமருங்குஞ் சிறந்து
மாமன்னு மணிவரையும்
பொன்வரையுங் கிளைத்த
மாணிக்க வரையனைய
வானிடைக் கற்பகமே''

எனச் சிவபெருமானைப் போற்றுவதாக அமைந்த காப்புப் பருவ முதற் பாடலில் 'தேமன்னு தாமரையாள் மகிழ்ந்திருக்கும் மார்பின் திருமால்' எனக் காத்தற் கடவு ளாகிய திருமாலைப்பற்றிய குறிப்பு சார்த்து வகையால் முதற் கண் இடம் பெற் றுள்ளமை உணர்ந்து மகிழத் தகுவதாகும் பாட்டுடைத் தலைவனாகிய குலோத்துங் கனைப் பாராட்டப் போந்த ஆசிரியர், திரு வுடை மன்னனாகிய அவன், திருமாலாகிய தன் தொன்மை நிலையிற் செய்த செயல் களையும் அவன்மேல் ஏற்றிப் போற்றும் நிலையில் இப் பிள்ளைத் தமிழைப் பாடி யுள்ளார். இக்கருத்தமைந்த பாடல்கள், 'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவைநிலை'
(தொல் - புறம்)
எனப் பண்டையோர் குறித்த 'பூவை நிலை' என்னும் புறப்பொருள் துறை யினை அடியொற்றி அமைந்தனவாம்.

'குருகுலோத்தமர் தூதா
மாபூதா தாரா
கோலபேய்க் குழலாலே
மால்சூழ் கோபாலா'

எனவும்,

'முருகுவாய்த்த துழாயே
சூழ் தோளா வாயா
முளரிமேற்குடி வாழ்வான்
கேள்வா தாலேலோ'

எனவும்,

செய்தி தமிழ் நாவலர் சரிதையிற் காணப் படும் பழம் பாடலால் அறியப்படும் இரண்டாங் குலோத்துங்கனது அவைக்களப் புலவராகிய கூத்தர், ஒருநாள் அரசவையில் மன்னனது ஓலக்கச் சிறப்பினைக் கண்டு மகிழ்ந்து எவ்வுயிர்க்கும் துன்பம் நேராதவாறு அரசு புரியும் அவனது செங்கோன் முறையைப் பாராட்டும் கருத்துடன்

''ஆடுங் கடைமணி நாவசையாமல்
அகிலமெல்லாம்
நீடுங்குடையிற் றரித்தபிரான்''

எனப் பாடத் தொடங்கினராக, அது கேட்ட குலோத்துங்கன் அவர் பாடிய பாடற் பகுதியைத் தொடர்ந்து, ''என்று நித்தநவம் பாடுங் கவிப் பெருமாள் ஒட்டக்கூத்தன் பதாம் புயத்தைச் சூடுங் குலோத்துங்க சோழனென்றேயெனைச் சொல்லுவரே'' என ஒட்டிப்பாடி அப்பாடலை நிறைவு செய்தான் என்பது அப்பழம் பாடலைப் பற்றிய செய்தி குறிப்பாகும்.

இங்ஙனம் தமிழறிவுறுத்திய ஆசிரியராகிய தம்பால் நிறைந்த பேரன்பும் பணிவுமுடையவனாய் ஒழுகிய இரண்டாங் குலோத்துங்கனைப் பிள்ளைப் பருவ முதற் கொண்டு நன்குணர்ந்த ஒட்டக்கூத்தர், குழந்தைப் பருவ முதற் கொண்டு அவன் பால் தோன்றி வளர்ந்த பண்பு நலன்களைப் பாராட்டி மகிழும் நிலையிற் பாடிய பிரபந்தம் குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்' என்பதாகும். கூத்தர் பாட்டுடைத் தலைவனாகிய குலோத்துங்கனைக் குழந்தையாகக் கண்டே இப் பிள்ளைத் தமிழைப் பாடியுள்ளார் என்பது

''ஆலின் முகிற்றொகை யண்ட மகண்டமு
நிற்க நிறுத்தியதற்
கப்புறமேகலி குப்புற நூறி
யதற்கென வம்மனுநூல்
வேலி யமைத்தவன் மன்னவர் மன்னவன்
மேதினியாள் கணவன்
விக்கிரம சோழன் வரைத்திரு மார்பில்
விளங்கு கவுத்துவமே''

என விக்கிரம சோழன் மார்பில் தவழ்ந்து விளையாடும் குழந்தையாக குலோத்துங்கனை குறித்துப் பாராட்டுதலாற் புலனாம். மக்கள் குழந்தைகளாக வளரும் பருவத்தே அவர்கள் பால் அமைந்த பெருமிதப் பண்புகளைப் பலரும் கண்டு காமுற்றதாகச் செய்யுள் செய்யும் மரபு தொல்காப்பியனார் காலத்திற்கு முன்னிருந்து தொடர்ந்துவரும் இலக்கிய மரபாகும். இம்மரபு,

'குழவி மருங்கினும் கிழவதாகும்'
(தொல் - புறத் - 84)

என வரும் சூத்திரத்தால் உய்த்துணரப் படும். 'குழவிப் பருத்தும் காமப்பகுதி உரியதாகும்' என்பது இதன் பொருள், குழவி - குழந்தை. இச்சூத்திரத்தில் 'குழவி மருங்கின் என்றமையால், தெய்வக்குழவி யின்மையின் மக்கட் குழவியாகிய ஒரு மருங்கே கொள்க' எனவும் 'ஒரு திங்களிற் குழவியைப் பற்றிக் கடவுள் காக்க என்று கூறுதலானும், பாராட்டுமிடத்துச் செங்கீரையும் தாலும் சப்பாணியும் முத்தமும் வரவுரைத்தலும் அம்புலியும் சிறுபறையும் சிறு தேரும் எனப் பெயரிட்டு வழங்குதலானும்' இதனை வேறு கூறினார் எனவும் குழவிப் பருவம் கழிந்தோர் அதனை வேண்டிய காலும் அக்குழவிப் பருவமே கருதிப் பாடுக என்றற்குக் கிழவதாகும் என்றார். எனவும் இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம், கூத்தர் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத் தமிழாகிய இலக்கியத்தைக் கருத்திற் கொண்டு கூறப்பெற்றதெனத் தெரிகிறது. புலவர்களாற் பாடுவதற்கேற்ற ஒழுகலாறுகிய பாடாண்திணை பற்றிய பிள்ளைத் தமிழ் பிரபந்தத்தை மக்களுக்குரிய தாய் நச்சினார்க்கினியர் கொண்டராயினும், 'காமப் பகுதி கடவுளும் வரையார்' என்ற சூத்திரத்தையடுத்துக் 'குழவி மருங்கினும் கிழவதாகும்' என்ற இச்சூத்திரம் அமைந்திருத்தலால், மக்களாகிய குழந்தைகளுக்கேயன்றித் தெய்வக் குழந்தைக்கும் பிள்ளைத்தமிழ் பாடும் முறை பொருத்தமுடையதேயெனக் கொள்ளுதற்கும் இடமுண்டு.

காத்தற் கடவுளாகிய திருமால் கண்ணபிரானாக அவதரித்தருளிய நிலையில் தெய்வக் குழந்தையாகிய அதன் பிள்ளைப் பருவச் செயலை ஆய்ச்சி உள்ளமுவந்து போற்றுவனவாகப் பெரியாழ்வார் அருளிச் செய்த தாலப் பருவம், அம்புலிப் பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம் முதலிய தலைப்புக்களில் அமைந்த பாடற் பகுதிகள் தெய்வக்குழந்தையைக் குறித்துப் பாடப்பெறும் பிள்ளைத் தமிழுக்கு மூல இலக்கியமாக அமைந்திருத்தல் இங்கு நினைக்கத் தருவதாகும்.

இனி, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழின் அமைப்பினை ஒரு சிறிது நோக்குவோம். இந்நூல், காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை (வருகை) அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர், எனப் பத்துப் பருவங்களையுடையதாய் நூற்றுமூன்று பாடல்களால் இயன்றதாகும். இந்நூல், தமிழக வரலாற்று ஆராய்ச்சிக்கு இன்றியமையாத

7. முதற்குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்

பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார், சிதம்பரம்

இந்நூல் முதற்குலோத்துங்க சோழன் பேரனும் விக்கிரம சோழன் மகனும் ஆகிய இரண்டாங் குலோத்துங்கனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவனது பிள்ளைப் பருவத்து இயல்பினைப் புனைந்து போற்றும் முறையிற் கவிஞர் பெருமானாகிய ஒட்டக்கூத்தராற் பாடப் பெற்றதாகும்.

கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் கி.பி. 1118 முதல் கி.பி. 1163 வரை ஆட்சி புரிந்த விக்கிரம சோழன். இரண்டாங் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய சோழ - மன்னர் மூவரது ஆட்சிக் காலத்திலும் அன்னோரது அவைக்களப் புலவராக விளங்கியவர். அம்மூவரைக் குறித்தும் மூன்று உலாக்கள் பாடியவர்; சோழ வேந்தர் அவையினைச் 'செய்ய தமிழ் முழங்கும் தெய்வப் பொதியிலாய்'ச் செய்த செந்தமிழ்ப் பெரும் புலவர்; தமிழ் இலக்கண இலக்கியங்களிலே மட்டுமின்றி வடமொழி நூல்களிலும் நிரம்பிய பயிற்சி வாய்ந்தவர்; விக்கிரம சோழன் ஆட்சியில் அவனது அவைக்களப் புலவராக அமர்ந்து அவன் மைந்தன் இரண்டாங் குலோத்துங்கனுக்கு ஆசிரியராய் உயர்ந்து அவன் மகன் இரண்டாம் இராசராசன் ஆட்சியிற் சைவம் வளர்க்கும் தனிப்பெரும் புலவராய்த் திகழ்ந்து புரவலர்களாலும் போற்றப் பெற்றவர்.

விக்கிரம சோழன் வேங்கி நாட்டின் அரசப் பிரதிநிதியாயிருந்த பொழுது தென் கலிங்க மன்னனாகிய வீமனொடு போர் செய்து வாகைசூடிய வெற்றிச் செயலைப் பாராட்டிப் போற்றும் முறையில் ஒட்டக்கூத்தர் தென் கலிங்கப்பரணி என்னும் பனுவலைப் பாடியுள்ளார். இச் செய்தி,

செருத்தந் தரித்துக் கலிங்க ரோடத்
 தென்தமிழ்த் தெய்வப்பரணி கொண்டு
வருத்தந் தவிர்த்துல காண்ட பிரான்
 மைந்தற்கு மைந்தனை வாழ்த்தினவே'
(தக்க - 9 பா 49)

என வரும் தக்கயாகப் பரணித் தாழிசையாலும் ''இப்பரணி பாடினார் ஒட்டக்கூத்தரான கவிச்சக்கரவர்த்திகள் இப்பரணி பாட்டுண்டார் விக்கிரம சோழ வேந்தர்'' எனவரும் அதன் உரை விளக்கத்தாலும் உய்த்துணரப்படும். கூத்தர், விக்கிரம சோழனது வெற்றியைப் பாராட்டித் தாம் பாடிய பரணி யென்னும் இப்பிரபந்தம், தென்றமிழாகிய தெய்வத்தின் திருவருளால் தோன்றிய தென்பார். அதனைத் 'தென்தமிழ்த் தெய்வப் பரணி' எனச் சிறப்பித்தார். விக்கிரம சோழன்மீது பாடப்பட்ட இப்பரணி முதற் குலோத்துங்கனது வெற்றியைச் சிறப்பித்துச் சயங்கொண்டார் பாடிய கலிங்கத்து பரணியின் வேறாகும். இங்ஙனம் விக்கிரம சோழன் கலிங்கம் வென்று பரணிகொண்ட வெற்றித்திறத்தை,

''விரும்பரணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெரும்பரணி கொண்ட பெருமாள்—— தரும்புதல்வன்
கொற்றுக் குலோத்துங்க சோழன்''

எனக் குலோத்துங்க சோழனுலாவிலும்,

''தரணியொடு கவிகை தங்கக் கலிங்கப்
பரணி புனைந்த பரிதி - முரணிப்
புரந்தர னேமி பொருவ வகில
துரந்தான் விக்கிரம சோழன்''

என விக்கிரம சோழனுலாவிலும்,

''பாவகன் வளைத்தெழு கலிங்கமும் விழுங்கப்
பகட்டணி துணித்தொரு
 பெரும்பரணி கொள்ளும்
சேவகன் அபங்கன் அகளங்கன் மதலாய் நின்
சேவடிகளா லெமது சிற்றில் சிதையேலே''

எனக் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழிலும் கூத்தர் தெளிவாகக் குறித்துள்ளார். விக்கிரம சோழனது அவைக்களப் புலவராய் விளங்கிய கூத்தர். அவன் மைந்தன் இரண்டாங் குலோத்துங்கனைப் பிள்ளைப் பருவ முதல் அன்புடன் பேணிப் போற்றி அவனுக்கு ஆசிரியராக விளங்கி அவனுக்குத் தமிழறிவுறுத்தியவராவர். இச்

வேலெடுத்திலர்; அம்பு தொட்டிலர்
முயலகன்பெரு வெரிந்மிசைக்
காலெடுத்திலர்; அகிலமுஞ்சுடு
கையெடுத்திலர் ஐயரே
விழித்த தில்லை நுதற்றிருக்கண்;
மிடற்றிலாலமும் மேல் எழக்
கொழித்ததில்லை; இருந்தவா விது
என்று நாயகி கூறியே

என்று சந்தநயமுறப் பாடுகிறார் கவிச் சக்கரவர்த்தி.

பெருமான் சினமின்றியிருப்பதைக் கண்ட தேவிபிரானின் திருமேனியினின்று பிரிந்து போகின்றாள். அப்போது சக்தி யில்லாத சிவத்தின் நிலையைக் கவி ஞர் பிரான் நயமுறப் பேசுகின்றார்.

சிவபிரான் அணிந்த பாம்புகள் சீற்றத்துடன் உயிர்த்தன. இறைவன் கழுத்திலிருந்த நஞ்சு கசந்தது. ஊழியின் முடிவில் பெருமான் நீராடும் பொய்கை யாயிருந்த கனல் வெப்பம் தந்தது.

இறைவன் சடையிலுள்ள மதியம் தீயைக் கொட்டிற்று. கங்கையின் புனல் வெப்பமுற்றது. இதுவரை பெருமானுக்கு அழகு தந்த கொன்றை மலர் நெருப் பாயிற்று. இக்கருத்தைக் கூறும் ஒட்டக் கூத்தரின் புலமையை ஆழ்ந்து சிந் திக்க வேண்டும்.

இங்கு கவிச் சக்கரவர்த்தி மேற் கொண்ட கவிதையின் நடை அதிசய மானதாகும். இத்தகைய நடைவேறு எந்தக் கவிஞருக்கும் அமையவில்லை என்றால் அது மிகையாகாது. பாடலைப் பார்ப்போம்.

பைத்த பூணும் உயிர்ப்ப ழன்றன;
பண்டை யுண்டியும் அவ்வழிக்
கைத்தது; ஊழியில் ஆடும் மஞ்சனமும்
கிளர்நீறு கனன்றதே.
மதியம் அன்றொரு தீவிளைந்து
வளைந்து கொண்டது; கங்கைமா
நதியும் வீசிய சீகரங்களின்
வந்து வந்து நலிந்ததே.
சூடும் மஞ்சன ஆறு சுட்டது;
கண்ணி சுட்டது; பண்டு தாம்
ஆடும் மஞ்சனமும் கொதித்தது;
இருப்பரோ தனி ஐயரே.

இத்தகைய பாடல்களை மகா காவியங் களில்தான் காண இயலும். மல்லிகை சிறியது. ஆனால் அதன் மணம் உல கையே மயக்குகின்றது. அதுபோல் இத்தாழிசைகள் கவிதைகளின் நயம் உணர்ந்தவர்களைப் பரவசமாக்கும். இவை கவிதைத் தேவியின் மணிமுடி.

இறைவன் அப்போது சீற்றங் கொண்டனன். அச்சீற்றத்தில் வீரபத்தி ரன் தோன்றுகின்றான். தேவர்கள் வாழ வேண்டும் என்று கருதிய பெருமான் ஆலகால விடத்தைக் கழுத்தில் அடக்கி னான். இப்போது பெருமான் தேவர்கள் பால் கோபம் கொண்டான். அதனால் பெருமானின் கட்டளைக்கு அடங்கியி ருந்த விடமே வீரபத்திரராகத் தோன்றி யது போலிருந்தது.

பெருமானின் சீற்றத்தில் தோன்றிய வீரபத்திரன் தக்கன் யாகத்தை நிர்மூல மாக்குகின்றான். தேவர்கள் அழிகின்றனர். பிறகு இறந்த தேவர்கள் சிவபிரான் திருவருளால் உயிர்பெறுகின்றனர்.

இங்ஙனம் தக்கயாக வரலாற்றைக் கூளி கூறிற்று. உடனே பாலை நிலக் கொற்றவையும் பசியால் வாடிய பேய் களும் தக்கனின் யாகசாலைக்குச் செல் கின்றன. அங்கு மலைபோல் குவிந்த தசைத் திரளைக் கூழாக்கி, முதலில் காளிக்குப் படைத்து விட்டுப் பேய்கள் உண்டு பூரிக்கின்றன.

கூழ் குடித்த பேய்கள் முதலாம் இராசராச சோழ தேவரையும் இரண் டாம் குலோத்துங்க சோழ தேவரையும் வாழ்த்துகின்றன.

தாராக அண்டம் தொடுத்தணிந்தார்
தமக்கிடம் போதத் தமனியத்தில்
சீராச ராசீச் சரம்சமைத்த

தெய்வப் பெருமாளை வாழ்த்தினவே
(தெய்வப் பெருமாள்-முதலாம் இராசராச சோழ தேவர்)

நீடிய எண்டிசை நிழல் வாய்ப்ப
நேரிய தெக்கிண மேருவென்னப்
பீடிகை தில்லை வனத்தமைத்த

பெரிய பெருமாளை வாழ்த்தினவே
(பெரிய பெருமாள்-இரண்டாம் குலோத் துங்க சோழ தேவர்)

தமிழ்நாட்டில் சிறப்புற்ற கவிச் சக்கரவர்த்திகளுள் ஒருவர் ஒட்டக் கூத்தர். இப்புலவர்பெருமான் சிறந்த சிவானுபூதிச் செல்வர். இவர் திருஞான சம்பந்தர் வரலாற்றில் முக்கியமான மதுராவிஜயத்தை அழகாகப் பாடியவர். அப்புலவர் பெருமானின் புலமையைத் தமிழகம் உணரத் திருவிழாக்கள் நடாத்த வேண்டும். ஒட்டக்கூத்தருக்கு நினைவா லயங்கள் அங்கங்கே தோன்ற வேண்டும்.

வாழிய கூத்தர்; வாழிய செந்தமிழ்!

சுவாலை போல் அப்பேயின் சடைக் கற்றைகள் சிவந்து மேல் நோக்கியுள்ளன.

வாய் எழப் புகைந்து கீழ்
வயிற்றெரிந்து மண்டு செந்
தியெழக் கொளுந்தியன்ன
குஞ்சி வெஞ் சிரத்தவே

பசியை நெருப்பாக்கி சடையைச் சுவாலையாக்கிய கற்பனைத்திறம் அதிசயமானது. நினைந்து நினைந்து மகிழத் தக்கது.

பசியால் வாடிய பேய்கள் தேவியிடம் முறையிடுகின்றன. ''நாங்கள் பசியால் வாடுகின்றோம். சிவபிரான் முப்புரத்தை அழித்தான். அவர் கையிலுள்ள வேலாலோ வாளாலோ முப்புரத்து அசுரர்களைக் கொன்றிருந்தால் நாங்கள் அவர்கள் உடலிலிருந்து வடியும் குருதியுண்டு வயிற்றை நிரப்பியிருப்போம். பெருமான் முப்புரத்தை நெற்றிக்கண் நெருப்பால் எரித்தனரே! நாங்கள் ஏமாந்து போனோம்'' என்று கூறுகின்றன. அழகான கற்பனை. பாடல் இரக்கவுணர்வை எழுப்புகிறது.

கூறு ஆக்குதற்கு வாளிலரோ?
குத்தி நூக்க வேலிலரோ?
நீறாக்குவதென் முப்புரத்தில்
உள்ள வெள்ள நிருதரையே

பசியின் மிகுதியால் திருமால் பூமியை உண்டான். அகத்திய முனிவன் கடலையுண்டான். உன் கணவனாகிய பெருமான் நஞ்சையுண்டான், பிச்சையேற்றும் உண்டான். நாங்கள் இவற்றை உண்ணோம். உன் அடிமையாகிய நாங்கள் அவற்றை உண்டால் உனக்கு இழிவல்லவா? என்று பேய்கள் புலம்புகின்றன.

வையம் உண்ணோம்; கடல் மடோம்
மற்றும் புவனம் முற்றும் போய்
ஐயம் உண்ணோம் கடல் நஞ்சு
குடியோம் உங்கள் அடியோமே

செம்பாகமான இக்கவிதையில் அற்புதமான கற்பனையுள்ளது.

''அம்மையே! நீ உன் மூத்த பிள்ளைக்கு எல்லாப் பயிற்றையும் எல்லாக் கனியையும் எல்லாக் கிழங்கையும் எல்லாத் தேனையும் கொடுத்தாய். எம்மையோ வயிற்றுப் பசியால் வாடவிட்டாய். இது முறையோ முறையோ'' என்று போய் பேய்கள் நயமாகப் பேசுகின்றன. இக் கருத்தை,

எப்பயிறும் எக்கனியும்
எக்கிழங்கும் எத்தேனும்
தொப்பையொரு பெருவயிற்றுப்
பிள்ளைக்குச் சுமத்துதியே

என்று நயமாகக் குறிப்பிடுகின்றது. நாங்கள் வெறும் வயிற்றோடு வாடும் போது நீ உன் பிள்ளையின் வயிற்றில் உணவைச் சுமத்துகிறாயே. உன் கருணைக்கு முறையோ இது என்பது இசை எச்சம்.

இப்படி நயமான கருத்துகள் பலவற்றை இந்நூலில் யாண்டும் பார்க்கலாம்.

இப்படிப் பேய்கள் முறையிடும் போது தக்கயாகத்தில் தேவர்கள் அழிந்ததை நேரில் கண்ட ஒரு பேய் ஓடி வந்து நிகழ்ந்ததைக் கூறுகின்றது.

தக்கன் சிவபிரானை மதியாமல் வேள்வி செய்கிறான். அந்த வேள்விக்கு எல்லாத் தேவர்களும் செல்கின்றனர். இதனைக் கண்ட பராசக்தி அந்த வேள்விக்குப் போக விரும்புகின்றாள். சிவபிரான்பால் வேள்விச்சாலைக்குத்தான் செல்ல வேண்டும் என்று விண்ணப்பிக்கிறாள்.

சிவபிரான் 'உன் தந்தையாகிய தக்கன் என்னை மதிக்கவில்லை. ஆகையால் நீ வேள்விக்குப் போக வேண்டா! என்று கூறுகிறார்.

தேவி 'என் தந்தையின் குற்றத்தைப் பொறுத்தருள்க' என்று விண்ணப்பிக்கிறாள். பெருமான் விருப்பமின்றி விடை வழங்குகின்றார்.

தேவி யாகசாலைக்குச் செல்கின்றாள். அங்கு தக்கனோ உறவினர்களோ பராசக்தியை வரவேற்கவில்லை. தேவி தந்தையையும் சினந்து யேசுகின்றாள். மதிப்பில்லா இடத்தில் இருப்பதை வெறுத்த தேவி கயிலைக்கு மீள்கின்றாள்.

தேவி தன்னைத் தக்கனும் உற்றார் உறவினரும் மதியாத கொடுமையை எடுத்துக் கூறினாள். பெருமான் தேவியின் மனம் வருந்துமோ என்று கருதி அவர்கள்பால் சீற்றம் கொண்டிலர்.

சிவபிரான் சீற்றம் கொள்ளாமலிருந்ததை இரண்டு தாழிசைகளில் கூத்தர் நயமாகக் கூறுகின்றார். பெருமான் வேலை எடுக்கவில்லை. வில்லில் அம்பைத் தொடுக்கவில்லை. முயலகன்முதுகின் மேல் வைத்த திருவடியை எடுக்கவில்லை. பெருமானின் நெற்றிக்கண் திறக்கவில்லை. திருக்கழுத்திலுள்ள நஞ்சு வெளிப்படவில்லை. இது கண்ட தேவிக்கு நாணம் உண்டாயிற்றாம். இக்கருத்தை,

இக் கருத்தை வடமொழியும் தென் மொழியும் கலந்த மணிப் பிரவாள நடையில் வழங்குகிறார் கூத்தர். (சந் தப் பாடல் பாடும் போது புலவருக்கு வடமொழி அபயம் தருகிறது).

தமர நூபு ராதார சரணி, ஆரணாகாரி
தருண வாணி லாவீசு சடில மோலி
மாகாளி
அமரர் வாழ்வு வாழ்வாக அவுணர் வாழ்வு
பாழாக
அருளுமோகி னீயாகி அமுத பானம்
ஈவாளே

இப்பாடலில் சில தமிழ்ச் சொற்களே உள்ளன மற்றவை யாவும் வடசொற் களே. அச்சொற்கள் யாவும் வடமொழி எழுத்துக் கலவாத சொற்கள். பதங்க ளைப் பிரித்துப் படிக்கவும் ஓசைப் பண்பை அறியவும் நன்கு பழகிக் கொண்டால் இப்பாடல் தேனாக அமு தாக இனிக்கும்.

தமர நூபுர ஆதார சரணி, ஆரண ஆகாரி, தருண வாள் நிலா வீசு(ம்) சடில(ம்) மோலி, மாகாளி, அமரர் வாழ்வு வாழ் வாக அவுணர் வாழ்வு பாழாக அரு ளும் மோகினீ ஆகி அமுதபானம் ஈவாளே எனப்பதத்தைப் பிரித்துப் பொருள் உணர்ந்து பாடலை இசை யுடன் பாடினால் கூத்தரின் புலமை புலனாகும்.

வடமொழியில் உள்ள காதம் பரியை நன்கு பயின்ற செந்நாவுடைய கூத்தரால் தான் இத்தகைய உன்னதமான பாடல் புனையமுடியும்.

உரையாசிரியர் கூத்தருக்குக் காதம் பரியில் புலமையுண்டு என்பதை உணர்த்த (கடை திறப்பு 22 ஆம் தாழிசையில்) தருணரவி கிரண புஞ்ச ரஞ்சித படலம் என்னும் (காதம்பரி) தொடரை மேற் கோள் காட்டுகிறார்.

தேவி காட்டின்கண் கற்புக்கு அடை யாளமான முல்லையை வளர்க்கிறாள். அது நன்கு வளர்ந்து வானத்தில் உள்ள சந்திரனைத் தொடுகிறது. அந்த மதியில் உள்ள மான் 'இம்முல்லை தேவியால் வளர்க்கப்படுவது' என்று அறிந்து தளிரை உண்ணாது என அதிநவிற்சியாகக் கூறுகி றார் கவிஞர். பாடல் அலங்கரிக்கப் பெற்ற யானைபோல் கம்பீரமாக நடக் கிறது. நின்று நிதானித்து இசையுடன் படிக்க வேண்டும்.

நுதிக்கோடு கூர்கலை
உகைப்பாள் விடாமுல்லை
நூறாயிரங்கிளை கொடு
ஏறாவிசும்பு இவர்
மதிக்கோடு தைவர
எழுந்தண் கொழுந்துகளை
வாயா எனக் கொண்டு
மேயாது மான்மறியே

தேவியின் கைப்பட்டால் சிறுமுல்லை வானை அளாவும் என்னும் கருத்து நுட்பமானது.

தேவி வளர்க்கின்ற மாதவிக் கொடி கள் நன்றாக வளர்ந்து சூரியனுடைய தேரையே தொடுகின்றன; முட்டுகின் றன. ஆனால் சூரிய வெப்பத்தால் அக்கொடிகள் கருகா. அதன் மொட்டு கள் வாடா. பூங்கொத்துகள் சிதையா. இக்கருத்தை,

வாரும் சடாடவி
முடித்தேவர் தம் தேவி
வன்மான் உகைத்த கொடி
மென்மாதவிக் கொடிகள்
ஊரும் பகல் தேரை
முட்டுவன கட்டுவன
உருகா கொழுந்து முகை
கருகா செழுந்துணரே

என்று அற்புதமாகப் பாடுகின்றார்.

இங்ஙனம் இப்புலவர் பிரான் உலக இயல்பைக் கடந்து வருணனைகளை அமைப்பதால் இவரைக் கௌடப் புல வர் எனப் புலவர் உலகம் பேசும்.

தேவியின் திருவருள் பெற்றவரை எவரும் துன்புறுத்தமாட்டார்கள். பக்தர் கள் முல்லைக் கொடி போலவும் மாதவிக் கொடி போலவும் மெல்லியராக இருப் பினும் அவருக்கு எத்தீங்கும் நேராது என்பதை விளக்கவே இங்ஙனம் கூறி னர். உயர்ந்த கவிஞர்களின் இதயம் உணர்வது அரிது.

இங்ஙனம் பாட்டின் கருத்தைக் காண்பதற்குத் தொல்காப்பியர் குறிப் பால் உணர்த்திய உள்ளுறையை இலக் கணத்தைத் தெளிவாக அறிதல் வேண் டும்.

தேவியின் பரிவாரங்களான பேய் கள் நிரம்பவுள்ளன. அவைகளைத் தேவி (ஏதோ ஒரு காரணம் கருதி) பட்டி னியால் வாடச் செய்கிறாள்.

அப்பேய்களின் வயிற்றுப் பசித் தீபற்றி எரிகின்றது. அந்த நெருப்பின்

நமது கோயில்கள்

11. நம் செங்குந்தப் பெருமக்களால் பரிபாலிக்கப்பட்டு வரும் நம் மாவட்ட சங்கத்தின் எல்லைக்குள் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்கள்

(a) திருமழிசை அருள்மிகு ஒத்தாண்டேசுவரர் திருக்கோயில்

மக்கள் தம் அன்பைக் கொட்டுவதற்கும் துன்பத்தைப் போக்கிக் கொள்வதற்கும், இன்னலைக் குறைத்துக் கொள்வதற்கும், தங்கள் துன்பச்சுமையை இறக்குவதற்கும் உரிய இடம்தான் திருக்கோயில்கள்.

மக்களின் ஒற்றுமையின், ஒருமைப் பாட்டின் சின்னமாகத் திகழ்வதுதான் திருக்கோயில்கள்.

அத்தகைய திருக்கோவில்களில் ஒன்றுதான் திருமழிசை ஒத்தாண்டேசுவரர் திருக்கோயிலாகும்.

அக்கோவிலில் குடிகொண்டிருக்கும் இறைவன் திருப்பெயர் ஒத்தாண்ட ஈச்சுரர்; இறைவி திருப்பெயர் குளிர்ந்த நாயகி அம்மன் என்பர்.

மனோனுகூலேசுவரர் என்றும் சீதனாம்பிகை என்றும் வட மொழியில் அத்தெய்வங்களை இப்பெயர் இட்டு அழைப்பர்.

இத்திருக்கோவில் சோழர் காலக் கோவில் என்பதற்கு இதன்கண் உள்ள கல்வெட்டும் தலபுராணமும் சான்றாகும்.

சோழர்காலக் கோவில் என்பதற்கு இத்தலத்தில் இறைவன் காட்சி தந்து வெட்டுண்ட கையை மீண்டும் அவன் அருளால் பெற்றவன் சோழன் கரிபெருவளவன் என்பர். கரிகால் பெருவளத்தான் என்றும் கரிகாற் சோழன் என்றும் அழைப்பது காவிரிக்கு, கல்லணை கட்டியவன் பெயரேயாகும். அவன் பெயரைத் தலப் பெருமை நினைவு படுத்துவதால் இது சோழர் காலக்கோயில் என்க.

யானை படுத்திருப்பது போன்று யானை முதுகு போன்று மூலத்தான அடிபீடம் அமைய மேல் கோபுரம் அமைந்துள்ளதால் இதை கஜப் பிரஷ்டம் என்றும் களிற்று நிலை என்றும் கூறுவர். இத்தகைய அமைப்பு சோழர் கால அமைப்பாகும் என்பதால் இது சோழர் காலத்தது என்க. இது போன்ற அமைப்புடையதே திருவேற்காடு வேதபுரீசுவரர், திருமுல்லைவாயில் மாசிலாமணி ஈசுவரர் திருக்கோயில்களாகும்.

கோயில் தலபுராணம்

கரிபெருவளவன் சிவதரிசனத்தின் பொருட்டு யானையின் மீதமர்ந்து, திருமழிசை என்னும் புவிசாரம் நிறைந்த சிவதலத்தில் வருங்கால், இறைவன் அவ்வரசனை ஆட்கொள்ள வேண்டி யானை அடிசிக்கிய ஊனாங் கொடியின் கீழ், அரசனது உடைவாள் வெட்டுப்பட்டு தான் தோன்றியாய் வெளிப்பட்டவர். இத்தலம் அறுபத்து நான்கு சுயம்புலிங்க மூர்த்தங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

ஊனாங் கொடியை வெட்டிய உடைவாள் அரு உருவ வடிவாகிய லிங்கத்தின் மீதுபட இரத்தம் கசிய, அதைக் கண்ட சோழன் தன் கையை வெட்டிக் கொள்ள, அன்பின் மிகுதியைக் கண்ட ஈசன் ஒத்து ஆட்கொள்ள, கை தந்து காட்சி தந்தார். அதனால் இத்தலத்தில் ஈசன் பெயர் ஒத்து ஆண்டவர் ஒத்தாண்டேசுவரர் என்று அழைப்பர்.

கீழ்வரும் பாடல்கள் இத்தலத்தின் பெருமையை உணர்த்துவதைக் காண்மின்.

''காண்பார்க்குங் காணலாந் தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாங் காதலாற்— காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்
காதியாய் நின்ற வரன்

10. அறுபத்துமூவரில் பத்துப் பேர்

எஸ்.டி. சம்பந்தம், மேற்கு மாம்பலம்.

பெரிய சிவன் கோயில்களில், வரிசை யாக அறுபத்து மூன்று நாயன்மார்கள் நின்றுள்ள சந்நிதியை நீங்கள் அவசியம் பார்த்திருக்கலாம்.

திருமயிலாப்பூரில் அறுபத்து மூவர் விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டு வருவதையும் நீங்கள் அறிவீர்கள்.

இந்த அறுபத்து மூன்று நாயன்மார் களில், பத்து நாயன்மார்கள் நம் **செங்குந்த** மரபைச் சார்ந்தவர்கள் என்பதை யறிய நீங்கள் வியப்புறலாம். ஆனால் அது உண்மை!

வித்வசிரோன்மணியாகிய புகழேந்திப் புலவர் வேளாண் மரபினைச் சார்ந்த வராயினும், செங்குந்த மரபினரைப் பற்றிச் செய்துள்ள **திருக்கை வழக் கத்தில்** பதின்மரைக் குறித்துள்ளார்.

இதுபோலவே மகா கவியாகிய கம்பர் வேளாண்மரபினரைச் சன்மா னித்துப் பாடிய திருக்கை வழக்கத்தில் எண்மரைக் (செங்குந்தரை) குறித்துள் ளார்.

இவ்விருவரும் கூறிய பிரபந்தத்தில் குற்றங் கற்பிப்பதற்கு எவராலாகும்?

பதின்மர் துதி

மலர் வீழ்த்தயானைகரந் துணித்தோர்
வேதமந்திர மாப்பகர்ந்தோர் நீற்று
ண்மை கொண்டோர்.

வலமை பெறுமாரூரர் முன்படர்ந்தோர்
வாவியினாற் கண் பெற்றோர் மாதே
வன்றா.

ணிலவுமுடி யெனப் பூண்டோ ராதிரைக்
கணீனிதிய மளிப்போர் புற்றீப மெரிப்
போர்பாப்

பலமூவேந்தர்க்குரைப் போர் முதளிப்
போர் குந்தப்படைக்குலத்திலவதரித்த
பதின்மரையும் பணிவாம்.

—புகழேந்தி

1. சிவகாமியாண்டார் கொண்டு வந்த பள்ளித் தாமத்தைப் பறித்து தறிய யானையைத் தடிந்த **எறிபக்தநாயனாரும்**

2. வேத தாற்பரியங்கள் அனைத் தையும் மூவாயிரம் திருமந்திரமாகத் திருவாய் மலர்ந்த **திருமூல நாயனாரும்**

3. திருவெண்ணீறின் உண்மையைக் கடைப்பிடியாக் கொண்டிருந்த **மெய்ப் பொருள் நாயனாரும்.**

4. ஆளுடைய நம்பிகள் திருக்க யிலைக் கெழுந்தருளுவதுணர்ந்து யோகத் தால் அவரைத் தியானித்துக் கொண்டு அவர்க்குமுன் சென்றருளிய பெருமிழலைக் **குறும்ப நாயனாரும்.**

5. சமணர்களுடன் வாதிட்டுக் குளந் தோண்டிக் கண்பெற்றுக் கொண்ட **தண்டி யடிகள் நாயினாரும்**

6. சிவ பெருமான் திருவடி சூட்டப் பெற்றமையையே முடியாகக் கொண்டு உலகாண்ட **கூற்றுவநாயனாரும்.**

7. பிரதிர திருவாதிரை நட்சத் திரத்தினன்றும் சிவனடியார்கட்குப் பொரு ளளித்து வந்த **நரசிங்கமுனையனாய நாய னாரும்**

8. தமிழில் கோவைபாடி மூவேந் தற்கும் பொருளுணர்த்தி வந்த **காரியர் நாயனாரும்**

9. சிவனடியார்க் கமுதளித்துவந்த **இடங்கழி நாயனாரும்**

10. கணம்புல்லெரித்து சிதைநீட்டி முத்தி பெற்ற **கணம் புல்லர் நாயனாரும்**

என்று சொல்லத்தக்க செங்குந்தர் குலத்தில் அவதரித்த இப்பதின்மரையும் வணங்குவோம்; வழிபடுவோம்.

தன் உள்ளப்பாட்டினை எத்துணை அழகாக - அருமையாக - வெளியிட்டிருக்கிறார் பாருங்கள்!

ஊர் சுற்றிக் கொண்டு வந்த மன்னன் புலவரின் செய்யுளை தன் மனதுக்குள்ளேயே சொல்லிக் கொண்டுவந்தான். புலவரின் வறுமைநிலை அரசனின் உள்ளத்தை வெகுவாக உருக்கியது. தான் விரும்பிய உவமையும் பாட்டில் இருத்தலைக் கண்டான். அவனுக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கே உண்டாகியது. பேரறிவு நிரம்பப் பெற்ற புலவரும் இவ்வாறு வறுமையில் வாடுகிறாரே என்று வருந்தினான்.

அரண்மனை திரும்பியதும் பாண்டிய மன்னன் - பலபலவென்று விடிவதற்குள் - ஆள் அனுப்பி அச் சத்திமுற்றப் புலவரை அழைத்துவரச் செய்தான். அப்பொழுது தான் தனக்கு போர்வை போர்த்தியது - அந்நாட்டு மன்னனே என்று அறிந்து பெரு மகிழ்ச்சி எய்தினார் புலவர்.

அவருடைய அழுக்காடைகளைக் களையச் செய்து நல்லாடைகளைப் புனையச் செய்தான் மன்னன். அணிகலன்களைப் பூட்டினான். அறுசுவைப் பொருள்களோடு இனிய விருந்து செய்தான் திரண்ட செல்வத்துடன் சத்திமுற்றப் புலவரைப் பல்லக்கில் ஏற்றி அனுப்பி வைத்தான்.

இந்த சத்திமுற்றப் புலவர் யாரோ என்று எண்ணிவிடாதீர்கள். அவர் நமக்கெல்லாம் தூ......ர உறவாகும்.! அவர் நமது செங்குந்த மரபினைச் சார்ந்தவர்!

கும்பமேளா (பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை) நடைபெறும் இடங்கள்:

1 பிரயாக் (அலகாபாத் - கங்கை, யமுனை, சரஸ்வதி சங்கமம்)
2 ஹரித்துவார் (கங்கை)
3 நாசிக்—பஞ்சவடி (கோதாவரி)
4 உஜ்ஜெயின் (சிப்ரா)

(இவை அமிர்த கலசத்திலிருந்து சில நீர்த்துளிகள் விழுந்த இடங்கள்)

ஏழுமலைகள் (திருப்பதி)

1. சேஷாத்திரி
2. நாராயணாத்திரி
3. வேங்கடாத்ரி
4. அஞ்சனாத்ரி
5. ரிஷிபாத்ரி
6. கருடாத்ரி
7. கிரீடாத்ரி

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழும் ஆறே.

—திருமூலர்

அண்டம் எழுகோடி பிண்டம் எழுகோடி
தெண்திரை சூழ்ந்த திசைகள் எழுகோடி
எண்திசை சூழ்ந்த இரங்கம் எழுகோடி
அண்டன் நடம்செயும் ஆலயம் தானே.

—திருமூலர்

அவை அனைத்தும் மன்னன் மனதிற்கு ஏற்புடையதாக அமையவில்லையே!

அரசன் அன்று சற்று முன்னிரவு வேளையிலேயே மாறு வேடத்துடன் நகர் பரிசோதனைக்குப் புறப்பட்டுவிட்டான். நன்றாய் மழைபெய்து நின்ற நேரம் அது; ஆனால் இன்னும் துவானம் நிற்கவில்லை. ஆங்காங்கு சொட்டு சொட்டென்று சொட்டிக் கொண்டிருந்தன.

அப்பொழுது பசும் வயல்களைச் சார்ந்த தேர் முட்டியின் அண்மையில், சோழ வளநாட்டுச் சத்திமுற்றப் புலவர் மழைச் சாரலிலிருந்து ஒதுங்கி ஒண்டிக் கொண்டு அமர்ந்திருந்தார். அப்படியே படுக்கலாம் அவர்! ஆனால் அந்தக் குளிர் காற்றில் தூக்கம் வந்தால்தானே!

அப்பொழுது நாரைகள் சில வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வரிசையாகப் பறந்து சென்றதைக் கண்டார். உடனே அவர் வாயிலிருந்து செய்யுள் ஒன்று புறப் பட்டது.

''நாராய்! நாராய்! செங்கால் நாராய்! என்று துவக்கினார்.

அந்தப்பக்கமாக வந்த பாண்டிய மன்னன் அது கேட்டு, யாரோ நாரையைப் பற்றிப் பாடுகிறாரே! ஆரம்பமே வெகு நன்றாய் இருக்கிறதே! செங்கால் நாராய்! ஆகா! எத்தனை அழகான வருணனை! என்று வியந்து, அவரது பாட்டு முழுவதையும் கேட்டு மகிழ சற்று மறைவாய் நின்றான்.

அடுத்தாற் போல், 'பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன, பவளக் கூர்வாய் செங்கால் நாராய்'' என்று பாடினார் புலவர்.

அது கேட்ட பாண்டிய மன்னன் 'ஆகா! சரியான உபமானம்!' என்று உள்ளுக்குள்ளே துள்ளிக் குதித்தான். 'பனங்கிழங்கு பிளந்தாற் போன்ற பவளக் கூர் வாய்! ஆகா! இதைவிட வேறு எப்படிச் சொல்லமுடியும். அன்று முழுவதும் அவன் மனம் உளைத்துக் கொண்டிருந்ததற்கு இப்பொழுது சரியான உவமை கிடைத்து விட்டதே! மகிழ்ச்சியால் உடல் விம்மியது!

புலவர் தொடர்ந்து பாடினார்.—
'நீயுநின் மனைவியும் தென்திசைக்குமரி
ஆடி வட திசைக் கேகுவீ ராயின்'

பாண்டிய மன்னன் தன் செவிப் புலனை முள் முனையில் வைத்துக்கொண்டு கேட்டுக் கொண்டிருந்தான்.

'எம்மூர்ச் சத்திமுற்ற வாவியுள் தங்கி
நனை சுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக்
கண்டே

எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை இன்றி வாடையின் மெலிந்து

அதுகேட்ட மன்னன் 'ஐயையோ'! என்று தன் கரங்களைப் பிசைந்து கொண்டான். ஆடையில்லையாமே! அவன் மனம் கரைந்தது. புலவர் தொடர்ந்தார்.
'கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீ இல்''

தொடர்ந்து மன்னனால் அவரது அவல நிலையைக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. மடமடவென்று தன் உயர்ந்த போர்வையை உருவினான். விரைவாக அப்புலவரிடம் சென்றான். அதற்குள் அவர்

'பேழையுள் இருக்கும் பாம்பென
உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனன் எனுமே''
என்று பாடி முடித்தார்.

சத்திமுற்றப் புலவர் இப்படிப்பாடி முடித்ததும் பாண்டிய மன்னன் புலவர் மீது தன் போர்வையைப் போர்த்தி அவரது குளிரைப் போக்கியதும் சரியாக இருந்தது.

புலவர் வியப்புற்றார். இறைவன் கருணையை எண்ணினார். 'என் குளிரைப் போக்கிய தங்களுக்கு, இறைவன் பேரருளால் நீண்ட ஆயுளும் வற்றாத செல்வமும் பெருகட்டும்' என்று வாழ்த்தி அமைதியானார்.

சத்திமுற்றப் புலவர் பாடிய அப் பாட்டை இப்பொழுது முழுவதும் படித்துப் பாருங்கள்! ஒரு தடவைக்கு இரு தடவையாகப் படித்து சோகத்தில் சுகம் காணுங்கள்!

''நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நீயுநின் மனைவியும் தென் திசைக்குமரி
ஆடி வடதிசைக் கேகுவீ ராயின்
எம்மூர்ச் சத்திமுற்ற வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக்
கண்டே
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇல்
பேழையுள் இருக்கும் பாம்பென
உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனன் எனுமே'

9. நாரை விடு தூது

N. விஜயகுமார், பி.ஏ,. திருமயிலை.

சோழ நாடு என்றுமே வளம் பொருந்தியதுதான். ஆனால் அப்பொழுது வானம் பொய்த்தது. ஆறு வரண்டது; வயல் காய்ந்தது. சத்திமுற்றத்திலிருந்த அனைவருமே வறுமையினால் வாடினர்.

அதன்பிறகு அவ்வூரிலிருந்த அந்தப் புலவர் மாத்திரம் எப்படிச் செழிப்பாக இருக்க முடியும்?

அவருடைய பெயர் இன்னது என்று தெரியவில்லை. அவரை அனைவரும் அன்பாய் சத்திமுற்ற புலவர் என்றே அழைத்து வந்தனர்.

சத்திமுற்றப் புலவர் இலக்கண இலக்கியங்களையும் சங்க நூல்களையும் வழுவறப் பயின்று அவைகளில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார். ஆனால், நாமகளும் ஸ்ரீமகளும் ஒத்திருப்பதில்லை என்பார்களே! அது உண்மையாயிருக்குமோ? கல்வியிற் சிறந்த அவர் செல்வத்தில் சிறந்தாரில்லையே! வறுமையில் அல்லவா வாடிக் கொண்டிருந்தார்!

செல்வம் திரட்டி வர ஊரைவிட்டுப் புறப்பட்டார். பிரியாவிடை கொடுத்தனுப்பினாள் மனைவி. கிழிந்த உடையுடன் வறுமையின் கோலமாகவே நடந்தார்.

அந்நாளில் மதுரையின் அரியணையில் அமர்ந்திருந்த பாண்டிய மன்னன் புலவர்களின் வறுமைக்கு ஓர் கூற்றுவனாய் விளங்கினான். அவர்களுடைய வறுமையைக் களைந்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பான் அப்பாண்டிய மன்னன்.

அதனால் சத்திமுற்றப் புலவர் மதுரையை அடைந்து தமது வறுமையைக் களைய எண்ணினார். அதனால் சிரமத்தைப் பாராமல் நெடுக நடந்து காடுகளையும் மலைகளையும் கடந்து கூடலை அடைந்தார். தமது வறுமை நோய் தொலைந்ததென்று உள்ளங் களித்தார்.

சத்திமுற்றத்தில் புலவரைப் பிரிந்த அவர் மனைவியோ தறிநெய்யும் தன் உறவினர் இல்லங்களுக்குச் சென்று அவர்களுக்கு உதவியாயிருந்து காலம் கடத்தி வந்தாள். நாட்கள் சென்றன. வெளியூர் சென்ற புலவரைப் பற்றி ஒருவித தகவலும் இல்லையே என்று எண்ணி அடிக்கடி ஆழ்ந்த சோகப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள்.

மதுரையை அடைந்த புலவர் அரண்மனை வாயிலை அடைந்து வாயிற் காவலரைக் கண்டார்.

அவர்களைப் பார்த்து ''நீங்கள் பூவேந்தன்பாற் சென்று புன்னாட்டில்இருந்து பாவேந்தன் ஒருவன் வந்துள்ளான் என்று தெரியப்படுத்துங்கள்'' என்று கூறினார். புலவரின் தோற்றம் மிகத் தாழ்வாகவும் ஆடைகள் கிழிந்தும் இருத்தலைக் கண்ட வாயிற் காவலர் எள்ளி நகையாடினர். ''உன்னுடைய திருக்கோலம் மன்னனைக் காண்டற்கு ஏற்றதன்று'' என்று கூறி புலவரை அனுப்பிவிட்டனர்.

எத்தனையோ சிறப்புக்களைப் பெறலாம் என்று எண்ணி வந்த புலவரின் எண்ணம் மண்ணாகி உள்ளம் புண்ணாயிற்று.

அவர் அந்த மாபெரும் மதுரையில் சுற்றித்திரிந்தார்; கண்டவிடங்களில் உண்டார். கண்ட இடங்களில் படுத்துறங்கினார்.

அப்பாண்டிய மன்னன் மிகுந்த ரசிக உள்ளம் படைத்தவன். ஒரு நாள் வயல் பக்கம் சென்ற மன்னன் அங்கிருந்த சில நாரைகளைக் கண்டான். அதன் சிவந்த கால்கள், வெண்மையான உடற்சிறகுகள், நீண்ட அலகு அத்தனையும் அவன் மனதைக் கவர்ந்தன. அதன் நீண்ட அலகுக்கு எதனை உவமையாகக் கூறலாம் என்று ஆழ்ந்து யோசித்துக்கொண்டே அரண்மனை திரும்பினான். அங்கிருந்த புலவர்களிடம் தன் உள்ளக் கிடக்கையை வெளியிட்டான். அவர்கள் ஏதேதோ உவமையாகக் கூறினர்கள். ஆனால்

8. "இரட்டைத் தாழ்ப்பாள்" திறக்கப்பட்டது!

P. S. சாம்பசிவம்,
அறங்காவலர் குழுத் தலைவர், அருள்மிகு வெள்ளீசுவரர் திருக்கோயில், திருமயிலை.

''ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்'' என்ற தொடரை கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரைத் தாழ்த்திப் பேசுவதற்கே பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் இந்த வாசகம் ஒட்டக் கூத்தருக்குப் பெருமை சேர்ப்பதாகும் என்பதை உணர்த்தினார் தமிழறிஞர் டாக்டர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள்.

திருமயிலை வெள்ளீசுவரர் திருக்கோயிலில் ஆண்டுதோறும் ஆவணித் திங்களிலே ஒட்டக்கூத்தர் விழா நடைபெறுகின்றது. 12.9.1986 அன்று நடைபெற்ற ஒட்டக்கூத்தர் விழாவில் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்குநராக இருக்கும் டாக்டர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் ''ஒட்டக்கூத்தரின் கவிநயம்'' என்ற தலைப்பிலே சிறப்பானதோர் சொற்பொழிவாற்றினார். காழ்ப்புணர்ச்சியின் காரணமாக ஒட்டக் கூத்தரைப் பற்றி கூறப்பட்டு வரும் கட்டுக் கதைகளையெல்லாம் மறுத்து ஒட்டக்கூத்தரின் பெருமைகளைப் புலப்படுத்தினார். ஒட்டக்கூத்தரின் கவிநயங்களைப் புரிந்து கொள்வதற்கு ஒரு தாழ்ப்பாளைத் திறந்தால் மட்டும் போதாது; அவரின் கவிதைகளை ஒரு முறைக்கு இருமுறை படிக்க வேண்டும்; இரண்டாவது தாழ்ப்பாளைத் திறந்தால் தான் கூத்தரின் கவிதைகளினுள்ளே புகமுடியும் என்று கூறினார். ''ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்'' என்பதற்கு இதுதான் உண்மையான உட்பொருள். இந்தப் பழமொழி ஒட்டக் கூத்தரின் கவிதைகளின் சிறப்பைத்தான் குறிக்கிறதே தவிர கூத்தர் பெருமானை தாழ்த்துவதற்கு அல்ல என்றும் அறுதியிட்டுக் கூறினார். இக்கருத்து புலவரேறு வரத நஞ்சையா பிள்ளை அவர்களால் கூறப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இரட்டைத் தாழ்ப்பாளின்'' உண்மையான பொருள், பொருத்தமான பொருள் திறக்கப்பட்டது 12.9.1986 அன்று!

சொற் சிலம்பம்

96 புலவர்கள் கூட்டம் தருமபுரி மாவட்டத்திலே நடந்தது. 95 புலவர்கள் வந்து விட்டார்கள். ஒரே ஒரு புலவர் கடைமடை என்ற ஊரிலே இருந்து வந்த புலவர் கடைசியாக வந்தார். உடனே மடாதிபதி அவரைப் பார்த்து ''வாரும் கடை மடையரே' என்றார். கடைமடை என்ற ஊரைச் சேர்ந்தவரே என்று அர்த்தம். கடைசியாக வந்த மடையரே என்றும் அர்த்தம். மடாதிபதி அந்தப் புலவரைப் பார்த்து ''வாரும் கடை மடையரே'' என்றார். புலவரும் இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு, ''வணக்கம், மடத் தலைவரே'', என்று சொன்னார்.

ஒரு புலவன் சாகக் கிடக்கிறான். செத்தாலும் குறும்பு போகாது புலவருக்கு. அவர், சாகக் கிடந்த போது வைத்தியர் வந்து பார்த்துவிட்டு, 'இவர் பிழைக்கமாட்டார் இனி பாலைத் துணியிலே துளி துளியாக விடுங்கள்' என்றார். அதே மாதிரி அவர் பெண் கொடுத்தாள். கொடுத்தவுடனே, புலவர் முகத்தைச் சுளித்தார். 'அப்பா பால் கசக்கிறதா?' என்றாள். அவர், 'பால் கசக்கலே, துணியும் கசக்கலே' என்றாராம். துணி அவ்வளவு அழுக்காக இருந்தது!

போற்றிய குலோத்துங்கனை, ''கற்றவர் குடி புடைசூழ் கற்பக இளவனமே'' என இவ்வாசிரியர் பாராட்டி யழைத்தல். கற்ற பெரும்புலவர் வாழ்க்கை வளர்ச்சியில் இவர் கொண்டிருந்த பேரார்வத்தினை நன்கு புலப்படுத்தல் காணலாம்.

பாட்டுடைத் தலைவனாகிய இரண்டாங் குலோத்துங்கனின் பாட்டனாகிய முதற் குலோத்துங்கனையும், அவனது கலிங்க வெற்றியைப் புகழ்ந்து பாடிய கவிச்சக்கரவர்த்தி சயங்கொண்டாரையும் அவராற் பாடப் பெற்ற கலிங்கத்துப் பரணியையும் ஒட்டக்கூத்தர் உயர்த்துப் பாராட்டும் முறையில் அமைந்தது.

''பாடற் பெரும் பரணி தேடற்கருங்கவி
கவிச்சக்கரவர்த்தி பரவச்
செஞ்சேவகங் கொண்ட சோழன் திருப் பெயர்
செங்கீரையாடி யருளே''

என வரும் பாடற்பகுதியாகும்.

இவ்வாறு தம் காலத்தும் தமக்கு முன்னரும் வாழ்ந்து தமிழ் வளர்த்த பெரும் புலவர்களையும், அவர்களின் ஆணை வழி நின்று தமிழகத்தை ஆட்சி புரிந்த பேரரசர்களையும், நாட்டின் நலங்கருதி அருஞ்செயல்கள் பல புரிந்த பெருமக்களையும் உளமாரப் பாராட்டித் தமிழ் மொழியையும் தமிழ் நாட்டின் அரசியல், கலை, நாகரிகம் ஆகிய நற்பண்புகளையும் தம் புலமைத்திறத்தாற் போற்றி வளர்த்த அருளாளர் ஒட்டக் கூத்தர் என்பது, அவர் இயற்றிய பிள்ளைத்தமிழ் முதலிய செந்தமிழ்ப் பனுவல்களால் நன்கு புலனாதல் காணலாம். செவிக்கினிய செந்திறத்த இன்னோசையினையும் சிந்தையுள்ளே நிலை பெற்று அளவில்லாத இன்பம் பயக்கும் நற்பொருள்களையும் உடைய கூத்தர் நூல்களைத் தமிழ் மக்கள் கற்றுப் பயன் கொள்வார்களாக.

தல விருட்சங்கள்

நம் தமிழகத்தில் ஆலயங்களில் தல விருட்சங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. சான்றாகச் சில ஆலயங்களில் உள்ள தல விருட்சங்கள் மட்டும் கீழே குறிக்கப்படுகின்றது.

1. வன்னிமரம் — அருள்மிகு மருந்தீஸ்வரர் ஆலயம், திருவான்மியூர், சென்னை
2. வேலமரம் — அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயம், திருவேற்காடு, சென்னை.
3. பனைமரம் — அருள்மிகு பட்டீஸ்வரர் ஆலயம், பேரூர், கோவை
4. வில்வமரம் — அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் கோயில், திருநாராயணபுரம், திருச்சி.
5. பாதிரிமரம் — அருள்மிகு புற்றிடங் கொண்டேஸ்வரர் ஆலயம், அம்மாப் பேட்டை, தஞ்சை மாவட்டம்.
6. வாழை மரம் — அருள்மிகு ரத்தினகிரீஸ்வரர் ஆலயம், திருமருகல்.
7. புன்னைமரம் — அருள்மிகு கபாலீசுவரர் ஆலயம், திருமயிலை, சென்னை.
8. ஆத்திமரம் — அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயம், எண்கண், தஞ்சை மாவட்டம்.
9. மகிழமரம் — அருள்மிகு திருக்கோகர்ணம் கோயில், புதுக்கோட்டை மாவட்டம்
10. புளியமரம் — அருள்மிகு திருமலைக் குமாரசாமி ஆலயம், திருநெல்வேலி மாவட்டம்.
11. வேப்பமரம் — அருள்மிகு வைத்தியநாத சுவாமி ஆலயம், புள்ளிருக்கு, வேலூர்
12. மாமரம் — அருள்மிகு ஏகாம்பரநாதர் ஆலயம், காஞ்சிபுரம்.
13. குருந்தைமரம் — அருள்மிகு வெள்ளீசுவரர் ஆலயம், திருமயிலை, சென்னை.

அணுவில் அவனும் அவனுள் அணுவும்
கணுவற நின்ற கலப்ப(து) உணரார்
இணை இலி ஈசன் அவன் எங்கும் ஆகித்
தணவற நின்றான் சராசரம் தானே

—திருமூலர்

''வேழமிவர்ந்து வரும் சோழற் கன்று
விடையினது
பாழி யெருத்த மிவர்ந்தொரு கைதந்து
பார்மழிசை
வாழு மொத்தாண்டர் குளிர்ந்தாளு
மையுடன் வான்மகிழ
சூழுமடியவர் போற்றிட நின்றாரைச்
சொன்மின்களே.

''உம்பர்புகழ் மாமழிசை ஒத்தாண்ட
ஈச்சுரனை
தும்பிமுக னைத்தந்த தொல்லோனை
இம்மகியில்
மாதங்க மூர்ந்த வளவன்கை தந்தானை
மாதங்கங் கொண்டோனை வாழ்த்து.

மூலவர் சிறப்பு

இறைவன், அருவம், அரு உருவம், உருவம் என்னும் முப்பொருளாய் மூவடிவாய் விளங்குபவன். உருவமே இல்லாது இருப்பது அருவம்; உருவமும் அன்றி அருவமும் அன்றி விளங்கும் லிங்க வடிவம் அரு உருவம்; நம்மைப் போன்று ஐம்பொறிகளோடு உருவத்தோடு விளங்குவது உருவம்.

இத்தகைய மூன்று நிலைகளில் பின்னிரண்டு நிலைகளோடுத் தோன்றி மூன்று நிலைக்கும் உரிய திருக்கோவிலாக விளங்குவது இதன் சிறப்பாகும்.

தல விருட்சம்

ஆதியில் மரங்கள் சூழ்ந்த சோலையில் இயற்கைச் சூழலில் இறைவனை எழுந்தருளச் செய்து வணங்கி வந்தனர். பின் அங்குக் கோயில் எழுப்பப்பட்டது. முன்பு எந்த மரத்தின் கீழ் இறைவன் அமர்ந்திருந்தாரோ அதுவே அத்தலத்தின் தல விருட்சமாகப் பின்பு அமைந்தது என்பர். அந்த வகையில் இக்கோயிலின் தல விருட்சம் வில்வமரமாகும். வில்வ மரம் மருந்தாகப் பயன்பட்டு உடல் நோயைப் போக்குவது போன்று இத்தலத்தின் இறைவனும் உளநோயைப் போக்குபவன் என்று போற்றப்படுகிறார்.

கோவிலின் பிற சிறப்புகள்

கோயில் எதிரில் அழகான திருக்குளம் அமைந்துள்ளது. இது ஊருக்கே ஓர் அழகைத் தந்து கொண்டிருக்கிறது. வருவோரைத் தன் பக்கம் இழுக்கும் அழகுத் தன்மை இதன்பால் உள்ளது.

'ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே' என்பதன் தத்துவமாக விளங்குபவர் ஆடல் அரசர் என்னும் நடராசர். அவர் உருவம் இக்கோவிலில் உற்சவ மூர்த்தியாக உள்ளது. அந்த நடராசர் கண் நோக்கு அவர் திருப்பாதத்தைப் பார்ப்பது போன்று உள்ளது. இது போன்ற அமைப்புடைய உற்சவ மூர்த்தியை வேறு இடத்தில் காண்பது அரிதாகும். இதில் அடங்கி உள்ள தத்துவம் பிறவிப் பெருங்கடல் நீந்த இறைவன் அடி சேர்க, இடைவிடாது நினைக்க என்பதை உணர்த்துவது என்க. அடுத்து இறைவன் அருளைப்பெற அவன் திருப்பாதத்தைக் கண்டு, நினைந்து வணங்கு என்பதையும் இறைவி என்றால் அவள் திருமுகத்தைக் கண்டு நினைந்து வணங்கு என்பதையும் நினைவூட்டுவதாக இவ்வுருவம் அமைந்துள்ளது.

சிறப்பிற்குரிய அழகான ரிஷபநாயகர் இக்கோயிலில் உள்ளது மற்றொரு சிறப்பாகும்.

இது தேவையான அளவுடைய திருக்கோயிலாகத்திகழ்கின்றது. மிகப் பெரிய கோயிலும் அன்று; சிறிய கோயிலும் அன்று; நடுத்தரமான கோயில் என்றே சொல்லலாம். தற்பொழுது இத்திருக்கோயிலுக்கு இராசகோபுரம் கட்டுவதற்கு செங்குந்தப் பெருமக்கள் முயன்று அடித்தளம் வரை போட்டுள்ளனர். இது விரைவில் இராச கோபுரத்தோடு தோன்றித் திகழும்.

இக்கோவிலில் பங்குனி உத்திரப் பெருவிழாவும் கந்த சஷ்டி லட்சார்ச்சனை விழாவும், சூரசம்கார விழாவும், ஆடிப் பூர லட்சார்ச்சனை விழாவும், ஐப்பசியில் அன்னாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மேலும் மாதத்திற்கு இருமுறை பிரதோஷ விழாவும், சிறப்புச் சமயச் சொற்பொழிவுடன் நடைபெறுவது குறிப்பிடத் தக்கதாகும்.

12. வாழ்க்கை நெறி

சென்னை திருமயிலாப்பூரில் தெற்கு மாட வீதியில் அருள்மிகு காமாட்சி அம்பாள் உடனுறை வெள்ளீசுவரர் ஆலயம் ஒன்று இருக்கிறது. இவ்வாலயம் நம் செங்குந்த மரபினரால் சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்டு இன்றளவும் நம் சமூகத்தாராலேயே பரிபாலிக்கப்பட்டு வருகிறது. இப்போது இவ்வாலயத்தின் அறங்காவலர்கள் குழுத் தலைவர் திரு பி.எஸ். சாம்பசிவம் அவர்கள் ''வாழ்க்கை நெறி'' என்ற தலைப்பில் 14-1-1983 முதற்கொண்டு தினசரி ஒரு பொன்மொழியினை கரும் பலகையில் எழுதுவித்து பக்தர்களின் கண்களில் நன்கு படும் இடத்தில் வைக்கும் அரிய ஏற்பாட்டினைச் செய்திருக்கிறார். இந்த ஏற்பாட்டின் நோக்கம் தான் என்ன? மாந்தர்கள் ஆலயத்தின் உள்ளும் புறமும் வலம் வந்தால் மட்டும் போதுமா? பக்தி நெறியுடன் அறநெறியையும் கடைப் பிடித்தால் தான் மனிதர்கள் மனிதர்களாக வாழ முடியும். இல்லையெனில் விலங்கு மனப்பான்மைதான் மேலோங்கி நிற்கும். வாழ்க்கை பற்றிய ஆராய்ச்சியற்ற வாழ்க்கை, வாழத் தகுந்ததல்ல. எது நல்லது, எது தீயது, எது ஆகும் நெறி, எது ஆகா நெறி, எது பண்பு, எது நல்லொழுக்கம் என்பனவற்றையெல்லாம் தெரிந்துகொண்டு அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்தால் தான் மனிதன் மனிதனாக வாழ முடியும். இவற்றையெல்லாம் அறிஞர்கள் அருளாளர், கள், வழங்கியுள்ள பொன்மொழிகளின் மூலம் தான் தெரிந்து கொள்ள முடியும். எனவே தான் இவ்வாலயத்தில் பொன்மொழிகள் நாள் தவறாது தொடர்ந்து எழுதப் படுகிறது. ஆலயத்தில் வலம் வருவதால் மட்டும் ஆண்டவன் எல்லா பக்தர்களையும் ஏற்றுக் கொள்ள மாட்டான். அவர்களில் ஒழுக்க சீலர்களையும் அறநெறியில் ஒழுகு பவர்களை மட்டும் தான் ஆண்டவன் ஏற்றுக் கொள்வான். ஆலயத்திற்கு வரும் பக்தர் கள் பொன் மொழிகளைப் படித்து வாழ்க்கை நெறியினை உணர்ந்து பயன் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இச்சீரிய நற்பணி தொடர்கிறது. இவ்வாலயத்தில் ஐந்து ஆண்டுகளாக எழுதப்பட்ட பொன்மொழிகளில் சிலவற்றை கீழே காணலாம்.

பதிப்பாசிரியர்

1. உயிருக்கு உறு துணையாக இருப்பது இறைவன் திருநாமத்தை எப்போதும் உச்சரிப்பதே.

2. பழி பாவங்களைத் தவிர ஏனையவற்றிற்கு மனிதன் அஞ்சத் தேவையில்லை.

3. நீ உயர்வடைய வேண்டுமானால் உன்னை மிகவும் தாழ்ந்தவனாகவே எப்போதும் கருது.

4. படிப்பிருந்தால் மட்டும் போதாது; பண்பாடு வேண்டும். பண்பாடு உள்ளவன்தான் 'மனிதன்' எனப்படுவான்.

5. நேர்மையற்றதைச் செய்ய வேண்டாம். உண்மையற்றதைப் பேச வேண்டாம்.

6. நன்றி மூன்று வகை: இதயத்தில் உணர்தல், சொல்லால் கூறுதல், பதிலுக்கு உதவி செய்தல்.

7. கீழே விழுந்தவனைக் கண்டு சிரிக்க வேண்டாம்; உன் பாதையும் வழுக்கல் நிறைந்தது.

8. உண்மைக்காக எதையும் துறக்கலாம்; ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்கலாகாது.

திருவார் திரு. அமிர்தானந்த அடிகளார்

Dr. A. V. சதாசிவன், சிவில் சர்ஜன் (ஓய்வு)

இவ்வடிகளாரின் இயற்பெயர் சைதாப் பேட்டை தெள்ளி மாணிக்க முதலியார் என்பது. சென்ற நூற்றாண்டின் பிற் பகுதியில் பிறந்த இவர் மெட்ரிகுலேஷன் வரை படித்தார். அந்நாளில் செங் குந்தர் சமூகத்தில் சென்னை செங்கைப் பகுதியில் முதன்முதலாக பி.ஏ. பட்டம் பெற்று, ரெவின்யூ போர்டில் மேலா ளராகப் பணியாற்றிய திரு ராவ் சாகிப் இரத்தின முதலியார் சகோதரியைத் திரு மணம் செய்து கொண்டு பல இடங் களுக்குச் சென்று பல்வேறு பணிகளை மேற் கொண்டார். குறிப்பாக இரங் கூனில் அஞ்சல் துறையிலும் புதுச் சேரி யில் பஞ்சாலையிலும், கடலூர் மஞ்சக் குப்பத்தில் ஆசிரியராகவும் பணியாற்றி னார். பல இடங்களுக்குச் சென்றது, ஆன்மீக குருவை நாடியே என்று பின்னர் தெரியவந்தது. கடைசியாக தேவகோட்டை ஞான சுந்தர சுவாமிகள் திரு. மாணிக்க முதலியாருக்கு குருவாக விளங்கினார். திரு முதலியார் திருமயிலைக்குத் திரும்பி வந்து பல ஆண்டுகள் தன் குருநாதருக்கு குரு பூசை நடத்தினார். அவரைப் பின் பற்றியவர்கள் அவரை அமிர்தானந்த அடிகளார் என்று அன்பாக அழைத்தனர்.

அடிகளாருக்கு கோயிலின் முன்பு, ஆடு, கோழி முதலியவைகளை உயிர்ப்பலி கொடுப்பது மிகவும் மனவேதனையைத் தந்தது. திருமயிலையில் எழுந்தருளி யிருக்கும் அருள்மிகு முண்டகக் கண்ணி யம்மன் கோயில் (முண்டகம் - தாமரை) முன்பாக உயிர்ப்பலி கொடுப்பதைக் கண் ணுற்றார். அம்மன் கோயில் சுற்றுப்புறத் தில் ஒரு விநாயகர் கோயிலை அமைத்து அக்கோயிலில் தான் இருந்து கொண்டு பாமர மக்களை நல்வழிப்படுத்தி உயிர்ப் பலியைத் தடுக்கலாம் என்று எண்ணினார். பல எதிர்ப்புகளுக்கிடையே அருள் மிகு முண்டகக் கண்ணி அம்மன் கோயில் சுற்றுப் பிரகாரத்தில் தென் மேற்குப் பகுதியில் அருள் மிகு நிர்த்தன விநாயகர் ஆலயம் ஒன்றை நிறுவினார். (நிர்த் தனம் - ஏழ்மை) விநாயகர் நின்ற கோலம். நர்த்தனம் அல்லது ஆடிய கோலம் அல்ல. இவ்வாலயத்தில் ஜீவ காருண்ய ஒழுக்கம் ஓதிய திரு அருட்பிரகாச வள்ளலார் இரா மலிங்க அடிகளுக்கு ஒரு தனிக் கோயிலும் எழுப்பப்பட்டது. விநாயகருக்கும் வள்ள லாருக்கும் கோயில்கள் கட்டப்பட்ட பிறகு உயிர்ப்பலி கொடுப்பது கணிசமாகக் குறைந்தது. உயிர்ப்பலி தடுப்புச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு பலி கொடுப்பது அறவே நின்றது. அடிகளாருக்குப் பிறகு அருள்மிகு ஞானஜோதி நிர்த்தன விநா யகர் திருக்கோயில் அவரது முக்கிய சீட ரான திரு. அப்பாதுரை நாயக்கர் அவர்கள் குடும்பத்தாரால் நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

திருவார் திரு. அமிர்தானந்த அடிக ளார் தான் முக்தி அடையும் நாளையும் நேரத்தையும் முன் கூட்டியே தெரிவித் திருக்கிறார்! குறித்த நேரத்தில் முக்கிய சீடர்களும், நெருங்கிய உறவினர்களும் அடிகளார் பக்கத்தில் இருந்தபோது நிஷ் டைகூடி திருவருளில் கலந்தார். 1930 ஆம் ஆண்டு மகா கந்தர் சஷ்டி நன்னாளில் திங்கட்கிழமை காலை 7-00 மணி அளவில் இறைவனடி சேர்ந்தார். அடிகளாருக்கு கடைசி வரை அனுசரணையாக இருந்தவர் அவரது மருமகன் திருமயிலை திரு. அமரா பதி வெங்கடாசல முதலியார் அவர்கள்.

கோபம்

இரண்டு பணியாட்கள் தங்கள் தங்கள் எஜமானர்களைப் பற்றிக் பேசிக்கொண்
டார்களாம். ஒருவன் மற்றவனைப் பார்த்து, ''உங்கள் எஜமானருக்கு அடிக்கடி
கோபம் வருமோ?'' என்று கேட்டான். அதற்கு மற்றவன், ''என்னுடைய எஜ
மானருக்கு ஒரு நாளைக்கு இரண்டு தடவை கோபம் வரும்'' என்று சொன்னானாம்.
சொல்லிய பிறகு திருப்பி அவன் நண்பனை நோக்கி. ''உன்னுடைய எஜமானருக்கு எப்
பொழுது கோபம் வரும்?'' என்றான். அதற்கு இரண்டாவது ஆள் பின் வருமாறு
சொன்னான். என் எஜமானருக்கு ஆண்டுக்கு இரண்டு தடவைதான் கோபம் வரும்''
என்றான். ''ஆகா எவ்வளவு நல்லவர் அவர்!'' என்று மகிழ்ச்சியடைந்தான். முன்ன
வன் தொடர்ந்து பேசினான். ''என் எஜமானருக்கு ஆண்டுக்கு இரண்டு தடவைதான்
கோபம் வரும். ஆனால் ஒரு தடவை வந்தால், ஆறு மாதம் இருக்கும்'' என்று சொன்
னானாம். இப்படிப்பட்ட பிறவிகள் இருந்தாலும் இருக்கலாம். வாழ்க்கையில் மனி
தனை இன்பம் நுகரவிடாமல் செய்வது கோபம் என்று கொண்டாலும், உயர்ந்த நற்
குணங்களையும் கொல்லுகின்றதே என்று எண்ணி அறியும்போதுதான் நாம் எவ்வளவு
தெரிந்து தெளிந்து வாழ வேண்டுமென்பது புலனாகின்றது.

நன்றி: திருக்குறளில் நகைச் சுவை.

(e) சைதாப்பேட்டை செங்குந்தகோட்டம் அருள்மிகு சுப்பிரமண்யசுவாமி திருக்கோயில்

சென்னை மாநகரின் சிறப்பு மிகுந்த பகுதிகளுள் ஒன்றான சைதாப்பேட்டையின் மேற்குப் பகுதியில் பஸ் நிலையத்திலிருந்து முக்கால் கிலோ மீட்டர் தொலைவிலும் இரயில் நிலையத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவிலும் வாத்தியார் சுப்பராய முதலி தெருவில் அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது.

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயில் கட்டப்பட்டது என்று கூறுகின்றனர். முதலில் இங்கு செங்குந்த விநாயகர் கோயில் மட்டுமே இருந்தது என்றும் பின்னர் முருகனுக்கு உரிய திருக்கோயிலாக மாறியது என்றும் கூறுகின்றனர்.

மூர்த்தி: வள்ளி தெய்வயானை உடனுறையும் சிவசுப்பிரமணிய சுவாமிக்குத் தனி சந்நிதி உள்ளது.

மற்ற சந்நிதிகள்: விநாயகர், அம்பாள், காசிவிசுவநாதர், விசாலாட்சி, பழனியாண்டி, அருணகிரி நாதர், நவக்கிரகங்கள் ஆகிய மூர்த்திகளுக்குத் தனி சந்நிதிகள் உள்ளன.

திருவிழாக்கள்: ஆண்டுதோறும் மாசித் திங்களில் பிரம்மோற்சவம் 12 நாள் நடைபெறுகிறது. 13 ஆவது நாள் வள்ளி கல்யாணம் நடைபெறுகிறது. ஐப்பசித் திங்களில் கந்தர் சஷ்டி உற்சவமும் சூரசம்ஹார உற்சவமும் நடைபெற்று மறுநாள் தெய்வயானை திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகிறது ஆனித் திங்களில் அருணகிரி நாதர் உற்சவம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

நூல்:- இங்குள்ள முருகன் மீது சுத்தானந்த பாரதியார் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார்.

பிற செய்திகள்:- 1980-81ஆம் ஆண்டிற்கானதூய்மை செம்மை ஆகிய வற்றுக்கான மயிலாப்பூர் ஆகாடமியின் பதக்கத்தையும், சிறப்பு விருதையும் இக்கோயில் பெற்றுள்ளது.

இக் கோயிலில் தல விருட்சமாக வில்வ மரம் உள்ளது.

(f) திருவல்லிக்கேணி செங்குந்த கோட்டம் அருள்மிகு கற்பக விநாயகர் சிவசுப்பிரமண்ய சுவாமி தேவஸ்தானம்

இத் தேவஸ்தானம் திருவல்லிக்கேணி ஜாம் பஜார் பகுதியில் நெசவாளர் தெருவில் அமைந்துள்ளது.

இத் தேவஸ்தானத்திற்காக 1803 ஆம் ஆண்டு சென்னை ஆளுனரிடமிருந்து நிலம் பெற்று ஒரு வருடத்திற்கு ஒரு ரூபாய் வீதம் வாடகை கொடுக்கப்பட்டு வருகிறது. திருவல்லிக் கேணிப் பகுதியில் வாழ்ந்து வந்த செங்குந்த குலப்பெரு மக்களால் 1803 ஆம் ஆண்டில் இக்கோயில் ஸ்தாபிக்கப்பட்டு நம் குல மக்களாலேயே இன்றும் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

மூர்த்திகள்: அருள்மிகு சிவ சுப்ரமண்ய சுவாமி, அருள்மிகு வள்ளி, தெய்வயானை.

திருவிழாக்கள்: ஆண்டு தோறும் ஐப்பசித் திங்களில் சஷ்டி ஆறு நாட்கள் உற்சவமும், சூரசம்ஹாரம், திருக்கல்யாண உற்சவமும், வைகாசித் திங்களில் விசாக உற்சவமும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

சீர்புகழும் சென்னை புரி திருவல்லிக் கேணி நகர் செங்குந்தர் வீதி வாழும் சிவனருள் பாலனே சிவ சுப்பிரமணியனே - என்று பாடியிருக்கிறார் அருட்கவி சேது ராமன் அவர்கள்.

இக்கோயிலில் ஒரு வில்வமரம் வெகு நாட்களாக இருக்கிறது.

சுற்றுக் கோயில்களாகவும் செங்குந்த மரபினர்களின் தனிக் கோயில்களாகவும் திருக்காரணீச்சுவரர் கோயில் தெருவில் தேரடிக் கருகில் உள்ள ஞானவிநாயகர், வாத்தியார் சுப்பராய முதலி தெருவில் உள்ள செல்வ விநாயகர், கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெரு கூத்தாடும் விநாயகர், காரணித் தோட்டம் விநாயகர் கோயில்கள் உள்ளன.

200 ஆண்டுகளுக்கு முன் குருலிங்க சாமி என்னும் வீர சைவ மகான் இக்கோயிலை வழிபட்டுப் பேரருளாளராக விளங்கியிருக்கிறார். அவருடைய சமாதிக் கோயில் தேரடிக்கருகில் இருக்கிறது.

தல வரலாறு

இந்திரன் தன்னிடமிருந்த தெய்வப் பசுவாகிய காமதேனுவை ஒரு மண்டல காலம் வதிஷ்டர்பின் அனுப்பி வைத்தார். இப்பசு வதிஷ்ட முனிவர் பூஜைக்கு இடையூறு செய்ததால் முனிவர் கோபம்கொண்டு காட்டுப் பசுவாகப் போகக் கடவாய் என்று சபித்தார் இதை அறிந்த இந்திரன் தன் வாகனமாகிய கார் என்னும் மேகங்களை அழைத்து மயிலை நகருக்கும் திருவான் மியூருக்கும் நடு மத்தியில் மேற்கே சில கடிகை தூரத்தில் மழை பெய்து குளிர்ச்சி செய்யும்படி கட்டளையிட்டார். அவ்விடத்தில் குறுஞ்சோலைகள் ஓங்கிவளர்ந்து செழித்து வந்தன. இச்சோலைக்குள் இந்திரன் தங்கி ஒரு சிவலிங்கத்தை நிறுவி அதற்கு மேற்புறத்தில் தடாகம் ஒன்று உண்டாக்கி நாடோறும் காலம் தவறாது பூசித்து வந்தான். சில நாள் சென்றபின் சிவபிரான் கருணை கூர்ந்து இந்திரன் முன் பிரசன்னமாகி காட்டுப் பசுவின் சாபத்தை நீக்கி தெய்வப் பசுவாக மாற்றி இந்திரனிடம் ஒப்படைத்தார். பிறகு இந்திரன் வேண்டுகோளுக்கிணங்க கரிய மேகங்களால் சூழப்பட்டு கார் வரிஷித்து குளிர்ச்சி அடையச் செய்த இந்தப் பகுதிக்கு காரணி என வழங்கவும் அங்கு கோயில் கொண்டெழுந்தருளிய சிவனுக்கு காரணீச்சுவரர் என வழங்கவும் மேற்கு புறத்தில் நிர்மாணித்த தீர்த்தத்திற்கு கோபதி சரஸ் என வழங்கவும் சிவனருள் கிடைத்தது.

சோழர்கள் சந்திர வமிசத்தைச் சார்ந்தவர்கள். இவ்வமிசத்தில் உதித்த ஆதித்த சோழன் தன் மகன் குலோத்துங்க சோழனை இளவரசனாக்கினான். குலோத்துங்கன் ஒரு நாள் வேட்டைக்கேகிய வனத்தில் ஒரு ரிஷி கன்னிகையைக் கண்டு மோகம் கொண்டு அக்கன்னிகைக்கு ஆதொண்டை பூமாலை சூட்டி காந்தர்வ விவாகம் செய்து கொண்டான். இவர்களுக்குப் பிறந்தவர்தான் ஆதொண்ட சக்கரவர்த்தி. இவர் சோழ இராஜ்யத்தின் வட பாகத்தை ஆண்டு கொண்டிருந்த போது பல தெய்வத் தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தார். இவர் சைதை எனும் ஊரில் சையீந்நிஸ்வரரை தெரிசித்து வரும் வழியில் ஸ்ரீ சிவசைதன்னிய முனிவரைத் தரிசிக்க நேர்ந்தது. ஆதொண்டர் முனிவரை வணங்கி இவ்வடியேனுக்குப் புண்ணியம் நிறைந்த சிவமூர்த்தங்கள் எங்குளதோ அவைகளைச் சொல்வீரானால் யான் அங்கு சென்று ஆன்மகோடிகள் உய்யும் பொருட்டு திருப்பணிகள் முடிப்பேன் என்றார். முனிவர் இந்திரன் முன்னொரு காலத்தில் காரணியில் லிங்கப் பிரதிஷ்டை செய்த இடத்தைக் காட்டி, அங்கு தெய்வத் திருப்பணிகள் செய்வாய் என்று ஆசி கூறினார். அதன்படியே ஆதொண்டர் அச்சிவபிரானுக்கு விதிப்படிக்குக் கர்ப்பக் கிரகம், அந்தராளம் அர்த்த மண்டபம், மகா மண்டபங்களும் கட்டி வைத்தும் சுற்று மதில்களும் எழுப்பி மற்ற திருப்பணிகளும் செய்து வைத்தார். அவ்வெல்லைக்குள் உத்தம பக்த ஜனங்களைக் குடியேற்றியும் அவர்களுக்கு வேண்டிய சுகாதார வசதிகளை ஏற்படுத்தியும் தானும் கிரமப்படி காரணீசுவரரை நித்தம் தரிசித்து வந்தார். இது புராண வரலாறு.

திருவிழாக்கள் :

பிரதிவருடம் சித்திரை மாதம் சுக்கிலபக்ஷம் பஞ்சமி திதியும் மிருக சீரிடம் நட்சத்திரத்தில் பிரம்மோற்சவம் ஆரம்பித்து சதுர்த்தசி திதியில் பூர்த்தியாகிறது. பிரம்மோற்சவம் 10 நாட்கள் வெகு விமரிசையாக நடக்கிறது. ஐந்தாம் நாள் இரவு வெள்ளி ரிஷபோத்ஸவ தரிசனமும் எட்டாம் நாள் பகல் அறுபத்து மூன்று நாயன்மார்களோடு பஞ்ச மூர்த்திகள் தரிசனமும் கிடைத்தற்கரிய அரிய பேறாகும்.

நூல்:

இம் மூர்த்திகளைப் பற்றி ஸ்ரீ காரணீஸ்வரர் இரட்டை மணிமாலை என்ற நூலில் 20 பாடல்களும் ஸ்ரீ காரணி சொர்ணாம்பாள் நவமணிமாலை என்ற நூலில் ஒன்பது பாடல்களும் ஒரு வாழ்த்துப் பாவும் உள்ளன.

தானம் கொடுக்க முன் வந்த போது சுக்கிரனாகிய அசுர குரு அவனைத் தடுத்தார். அப்படியிருந்தும் மாவலி மன்னன் தாரை வார்த்துக் கொடுக்க முயன்றபோது, தாரை வார்க்கும் கெண்டியின் துவாரத்திற்குள் சுக்கிரன் வண்டாக மாறி அடைத்துக் கொண்டான். வாமனர் ஒரு தருப்பையால் கெண்டியின் துவாரத்தைக் குத்த சுக்கிரன் கண் இழந்தான். இழந்த கண் பார்வையினை மீண்டும் பெற சுக்கிராச்சாரியார் இத்தலத்துக்கு வந்தார். சிவபெருமானைக் குருந்த மரத்தடியில் பூசனைசெய்து மீண்டும் கண்ணொளியினைப் பெற்றார். 'வெள்ளி' எனப்படும் சுக்கிரன் வழிபட்டதால் வெள்ளீசுவரர் எனத் திருநாமம் பெற்றார். வெளிப்பிரகாரத்தின் வட கிழக்குப் பகுதியில் லிங்கத் திருவுருவை வழிபட்ட கோலத்தில் சுக்கிரன் காட்சி தருகிறார். இது தலபுராண வரலாறு.

அமுர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய திருமயிலைத் தலபுராணத்தில் ''சுக்கிரன் பூசித்த சருக்கம்'', நாதமுனி முதலியார் இயற்றிய திருமயிலைத் தலபுராணத்தில் ''வெள்ளீசர் படலம்'' ஆகியவற்றில் சுக்கிரன் வழிபட்ட வரலாறு விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

சித்திபுத்தியுடன் விநாயகரும், முத்துக்குமார சுவாமி என்ற பெயருடன் முருகனும் சந்நிதி கொண்டிருக்கின்றனர். அம்பிகையின் திரு நாமம் 'காமாட்சியம்பிகை' என்பதாகும் நால்வர், சேக்கிழார், அருணகிரிநாதர், வீரபாகு தேவர், பைரவர், சூரியன், அண்ணாமலையார் காசிவிசுவநாதர், ஆகியமூர்த்தங்கள் சுற்றுப் பிரகாரங்களில் இடம் பெற்றிருக்கின்றன. வெளிப்பிரகாரத்தின் கிழக்குப் பகுதியில் நவக்கிரக சந்நிதியும் சனி பகவானின் தனி சந்நிதியும் இடம் பெறுகின்றன. சனீச்வரனுக்கு எதிர் புறமுள்ள தூணில் ஆஞ்சநேயரும் காட்சி தருகிறார். ஆறுமுகன் எழுந்தருளியிருக்கும் மண்டபத்தில் மற்ற உற்சவ மூர்த்திகளும் இடம் பெற்றுள்ளனர்.

1982 ஆம் ஆண்டு வெள்ளீசுவரர் அர்த்தஜாமப் பள்ளியறை கண்ணாடி மாளிகையாக மாற்றப்பட்டிருக்கிறது. அலங்கார விளக்குகளுடன் அங்கு இறைவன் ஆயிரக்கணக்கில் பிரதிபலித்துக் கண்கொள்ளாக் காட்சி தருகிறார். இது அனைவரும் அவசியம் காண வேண்டிய அரிய காட்சி ஆகும்.

ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் 'பிரம்மோற்சவம்' சிறப்பாக நடைபெறுகிறது. அதிகார நந்தி, ரிஷபவாகனம், திருத்தேர், பிட்சாடனர், திருக்கல்யாணம் ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. எட்டம் திருநாள் சுக்கிரனுக்கு கண்ணளிக்கும் விழாவாக அமைகிறது. அன்று ஈசன், பிரம்ம விஷ்ணுக்களுடன் வீதி புறப்பாட்டில் காட்சி தருகிறார். பிரமனுடனும், கருட வாகனத்தில் திருமாலுடனும், சிவபெருமான் மும்மூர்த்திகளாகக் காட்சி தருவது தனிச்சிறப்பாகும்.

கார்த்திகை மாத சோம வாரங்களில் வெள்ளீசுவரப் பெருமானுக்கு நூற்றெட்டு சங்கு அபிஷேகம் நடைபெறுகிறது. விசாகந்தோறும் ஆறுமுகனுக்கு சிறப்பு வழிபாடுகள் உண்டு. அவ்வாறே திருவாதிரை நட்சத்திரம் தோறும் நடராஜருக்கு தமிழில் 'போற்றி அர்ச்சனை' வழிபாடு நடைபெறுகிறது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் அருள்மிகு காமாட்சி அம்மனுக்கு வைர நெக்லஸ் அணிவிப்பதைப் பார்ப்பதற்கும் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் துர்க்கைக்கு இராகுகால அர்ச்சனை செய்வதற்கும், மாதம் இருமுறை வரும் பிரதோஷ விழாவிற்கும் பக்தர்கள் திரளாக வருகின்றார்கள்.

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர் பெருமானுக்கு ஆண்டுதோறும் ஆவணித் திங்களில் சிறப்பான விழா இவ்வாலயத்தில் மட்டுமே கொண்டாடப்படும் விழாவாகும். இவ்விழா 1969 இல் தொடங்கப்பட்டது.

இக்கோயிலின் தல விருட்சம் குருந்தை மரம்.

(d) அருள்மிகு திருக்காரணீச்சுவரர் திருக்கோயில்

சென்னை, சைதாப்பேட்டையைச் சேர்ந்தது திருக்காரணி என்னும் பகுதி. அதில் அருள்மிகு சொர்ணாம்பிகை என்னும் பொற்கொடியம்மை உடனுறை திருக்காரணீச்சுவரப் பெருமான் திருக்கோயில் உள்ளது. இக்கோயில் சைதாப் பேட்டை இரயில் நிலையத்திற்கு அருகாமையில் இருக்கிறது.

இக்கோயில் ஆதொண்டர் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டு செங்குந்த மரபினரின் பராமரிப்பில் இருந்து வருகிறது. அஃது ஏறத்தாழ ஐநூறு ஆண்டுப் பழமை உடையதாகத் தெரிகிறது.

திருக்காரணிப் பகுதியில் திருக்காரணிச்சுவரர் திருக்கோயிலைச் சார்ந்த

திருக்கோயில் பரிபாலனத்தைச் செங்குந்தர் வசம் ஒப்படைப்பதெனத் தீர்மானித்து, தொண்டை நாட்டில் செங்குந்தர் எந்தெந்த ஊரில் வசிக்கின்றனர் என ஆராய்ந்து அவர்களுள் சைவத் தொண்டிலும், கல்வியிலும் சிறந்த சான்றோரை வரவழைத்து வீதிகளமைத்து வீடுகளமைத்துக் குடியமர்த்தி நிர்வாகத்தை ஒப்படைத்தார்.

செவிவழிச் செய்தி

மூலவ மூர்த்தியான நாகேசுவரப் பெருமான் பற்றிய செவிவழிச் செய்தி ஒன்று உண்டு.

ஒருமுறை சிவலிங்கத்தின் தலைப் பகுதியில் சிறிது உடைபட்டுப் போயிருந்தது. அதைக் கண்ணுற்ற பெரியவர்கள் பலர் மூளியாகிவிட்ட மூர்த்தியை மூலஸ்தானத்தில் வைப்பது முறையல்ல என்று சொல்ல, அன்றைய ஆலயப் பொறுப்பாளர்கள் மூலவ மூர்த்தியை அகற்ற வேண்டிய சூழ்நிலைக்கு ஆளானார்கள்.

ஆகவே ஆலயத்தின் மற்றொரு பகுதியில் வைக்கப்பட்டிருந்த அருணாசலேசுவரரைக் கொண்டுவந்து மூலஸ்தானத்தில் வைத்துவிட்டு அங்கிருந்த சுவாமியை சூரிய புட்கரணி திருக்குளத்தில் போட்டுவிட்டனர்.

அன்றைய தினமே அவர்கள் யாவரும் அதிர்ச்சியடையத்தக்க சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. தெளிந்திருந்த திருக்குளத்தின் தண்ணீர் சிறிதுசிறிதாகச் செந்நிறமடையத் தொடங்கியது. வெகு விரைவில் திருக்குளம் முழுவதும் ரத்தச் சிவப்பாகியது. அதைக்கண்ட யாவரும் வேதனையடைந்தனர். இதன் விளைவு என்னவாகுமோ எனநடுங்கினர்.

அன்றைய இரவு ஆலயப் பணிகளில் ஈடுபாடு கொண்டு அங்கேயே வாழ்ந்திருந்த சிவனடியார் ஒருவரின் கனவில் நாகேசுவரர் தோன்றினார். அதில் அவர் உணர்த்தியபடி மூலவ மூர்த்தியைப் பக்தியோடு எடுத்துச் சென்று பழைய இடத்தில் பிரதிஷ்டை செய்தனர். திருக்குளமும் தெளிந்த நீராகியது.

அத்தோடு நீண்டகாலமாக நாகேசுவரப் பெருமானை நாகங்கள் வந்து வணங்கிவிட்டுச் செல்வதாகச் சொல்லப் படுகிறது. மாசி மாதத்தில் 18. 19, 20 21, 22 ஆகிய நாட்களில் சூரிய ஒளிக் கதிர்கள், முன்னர் சூரியன் நாகேசுவரரை வழிபட்டு திருக்குளத்தில் மூழ்கி சாப நிவர்த்தி பெற்றதற்கு அடையாளமாக மூலவர் மீது தவழ்கின்றன என்பது இத் தலத்தின் தனிச் சிறப்பாகும்.

திருவிழாக்கள்

சித்திரை மாதத்தில் சித்திரைப் பௌர்ணமியின் போது சுவாமிக்கும் அம்மனுக்கும் திருமணம் நடத்தும் பத்தாவது நாளாகக் கொண்டு, பத்து நாட்கள் பிரமோற்சவம் நாகேசுவரருக்கு நடத்தப்படுகிறது. வைகாசி மாதத்தில் திருக்கோயில் மூலவரைப் பிரதிஷ்டை செய்த சேக்கிழார் பெருமானுடைய பூச நட்சத்திர விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

ஆனி மாதம் ஸ்ரீநடராஜப் பெருமானுக்குத் திருமஞ்சன விழா நடைபெறுகிறது. ஆடிமாதம் திருக்கோயிலுக்குச் சொந்தமான ஸ்ரீ வேம்புலியம்மனுக்குப் பத்துநாள் உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

அத்துடன் இத் திருக்கோயிலுக்குச் சொந்தமான பொன்னியம்மனுக்குப் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை கோயில் திருப்பணி செய்து, கும்பாபிஷேகம் நடத்தி மூன்று நாட்கள் வைபோகமான திருவிழா மாமாங்க உற்சவமாக நடைபெற்று வருகிறது.

(c) திருமயிலை அருள்மிகு வெள்ளீசுவரர் ஆலயம்

அருள்மிகு வெள்ளீஸ்வரர் ஆலயம் மயிலாப்பூர் தெற்கு மாடவீதியின் நடுப் பகுதியில் தெற்கு நோக்கிய வாயிலுடன் அமைந்துள்ளது.

பிரதான மூர்த்தியான அருள்மிகு வெள்ளீசுவரர் கிழக்கு நோக்கிய சந்நிதியில் லிங்கத் திருவுருவில் அமர்ந்துள்ளார். திருமறைக்காடு எனப்படும் வேதாரண்ய சிவாலயத்தில் அணையும் தருவாயிலிருந்த விளக்கின் திரியினைத் தூண்டியதன் பலனாக ஒரு எலி மாவலி மன்னனாகப் பிறந்தது. அவ்விளக்கிலிருந்த எண்ணெயைப் பருகுவதற்காகவே அவ்வெலி வந்தது. எனினும் சிவகைங்கர்யம் அறியாது செய்ததால் எலி பெரும் பயன் அடைந்தது.

திருமால் வாமனராக வந்து மாவலி மன்னனை மூன்றடி மண் கேட்க அதற்கிணங்கி மாவலி மன்னன் வாமனருக்கு

(b) திருநாகேசுவரம் (குன்றத்தூர்) அருள்மிகு நாகேசுவர சுவாமி திருக் கோயில்

தமிழகத்தின் தலைநகரான சென்னைக்கு 16 கல் தொலைவில் குன்றத்தூர் (திருநாகேசுவரம்) அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருப்பெயர் நாகேசுவரர் என்பதாகும். இங்கு அமைந்திருக்கும் ஆலயம் இறைவன் திருவுருவம் அமைந்து அதைச்சுற்றி எழுப்பப்பட்டதாகும். அமைத்தவரோ பெருமைக்குரிய மகான் மட்டுமல்லர். பெரும் புலவரும், இறைவனால் ஆட்கொள்ளப் பட்டவருமான சேக்கிழார் பெருமான் ஆவார்.

இப்படிப்பட்ட சிறப்புக்குரிய இத் திருக்கோயில் ஊரின் மத்தியில் மூன்று ஏக்கர் பரப்பளவில் எழுப்பப்பட்டுள்ளது. திருக்குளமும் பூந்தோட்டமும் இதன்கண் அமைந்துள்ளன. திருக்கோயில் 300 × 300 சதுர அடிகள் கொண்டதாக விளங்குகிறது.

திருக்குளத்தின் பெயர் சூரிய புட்கரணி, தலவிருட்சம் சண்பகமரம். நாகத்தின் கீழ் லிங்கவடிவமாகத் திருநாகேசுவரர் அமர்ந்திருக்கிறார். அருகில் போக சக்தி அம்மன் நின்ற நிலையில் வரம் கொடுக்கும் வடிவில் அமைந்திருக்கிறார். காமாட்சியம்மன் தனியிடம் பெற்று நின்று பிரசித்தி பெற்றிருக்கிறார்.

மற்றும், விநாயகர், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர், சண்டீசுவரர், வீரபாகு ஆகிய மூர்த்திகளோடு சேக்கிழார், சமயகுரவர் நால்வரின் திருவுருவங்களும் ஆலயத்தில் அமைந்துள்ளன.

மேற்கண்ட மூலவ மூர்த்திகளுக்கான உற்சவ மூர்த்திகளும் அமைந்துள்ளன. அத்துடன் சிவபெருமான் உற்சவமூர்த்தியாக வரும்போது சோமாஸ்கந்தராகவும் சந்திரசேகரராகவும், நடராஜராகவும், பிட்சாடனராகவும் தனித்தனி வடிவம் பெறுகிறார்.

இந்தத் திருக்கோயிலில் இதன் பழமையையும் சிறப்பையும் தெளிவாக விளக்கும் வகையில் 45 கல்வெட்டுகள் உள்ளன. மூன்றாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1178-1218) மூன்றாம் இராசேந்திர சோழன் (கி.பி. 1246-1271) முதலிய பல மன்னர்களின் ஐந்து நூற்றாண்டுகால கல்வெட்டுகள் இதில் காணப்படுகின்றன.

இவ்வளவு சிறப்புகள் பெற்ற இத் திருக்கோயிலின் மூலவரை நாகேசுவரர் என்ற பெயரில் சேக்கிழார் பெருமான் ஏன் அமைத்தார் என்பது சுவை மிகுந்த வரலாறாகும்.

சேக்கிழார் தொண்டைநாட்டின் இருபத்து நான்கு கோட்டங்களில் புலியூர் கோட்டமென வழங்கிய நம் குன்றத்தூரில் வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் பிறந்தவர்.

சோழப் பேரரசை ஆண்டுவந்த இரண்டாம் குலோத்துங்கன் சேக்கிழாரை தனது அரசவையின் முதலமைச்சராக்கினான். சேக்கிழார் பெருமான் தாம் அமைச்சராகப் பணிபுரிந்த நேரத்தில் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருநாகேசுவரத்திற்குச் சென்று அங்கிருந்த நாகேசுவரப் பெருமானை வழிபட்டு வந்தார். நாக அரசன் ஆதிசேடன் பூசித்ததால் அத்தலத்தின் இறைவன் 'நாகேசுவரர்' என்று பெயர் பெற்றார்.

அங்குள்ள குளத்தில் சூரியன் மூழ்கித் தனது சாபம் நீங்கப் பெற்றதால் குளத்திற்குச் ''சூரிய புட்கரணி' என்று பெயர் ஏற்பட்டது.

அர்த்த நாரீசுவர வடிவம் வேண்டி அன்னை பார்வதி அங்கு சண்பக மரத்தின் கீழிருந்து தவம் புரிந்ததால் ''சண்பக மரம்'' தல விருட்சமாயிற்று. அத்தலம் அவரது ஆன்மார்த்த தலமாக விளங்கியதோடு அவருக்கு இறைவரது திருவடி ஞானமும் கிடைக்கப்பெற்ற தலமாகும். அதனால் சேக்கிழார் தமது குன்றத்தூரிலும் தாம் வழிபடும் தெய்வமான நாகேசுவரரைத் தொடர்ந்து வழிபட வேண்டும் என்ற பேரார்வத்துடன் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து ''நாகேசுவரர்'' என்று பெயரிட்டார்.

சூரியன் வழிபட்டதை நினைவு கூர்ந்து இங்குள்ள திருக்குளத்திற்கு அங்குள்ளதேபோல் சூரிய புட்கரணி என்று பெயரிட்டார். அன்னைக்கு நிழல்தந்த சண்பக மரத்தையே இங்கு தலவிருட்சமாக அமைத்தார்.

இவ்விதம் சேக்கிழார் பெருமான் திருக்கோயில் அமைத்து, அதற்கு வட திருநாகேசுவரம் என்று பெயரிட்டு, அங்கு பூசைகள் நடக்க ஏற்பாடுகள் செய்வித்தார்.

9. புது விருந்தை வீட்டினுள் அழையாமலிருத்தல் கேவலம்; வந்த விருந்தை வெளியேற்றுவது அதைவிட மோசம்.

10. கணவனுக்கு வேண்டியது அறிவு; மனைவிக்கு வேண்டியது அடக்கம்.

11. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்.

12. தந்தையில்லாத குழந்தை பாதி அநாதை; தாயில்லாத குழந்தை முழு அநாதை.

13. சரியானது எது என்று உணர்ந்த பிறகும் அதைச் செய்யாமல் இருப்பது தான் பெரும் கோழைத்தனம்.

14. மற்றவர்களுடைய துயரத்தைக் கண்டு இரக்கப்படுங்கள். ஆனால் உங்களுடைய சொந்தக் கஷ்டங்களை உங்களிடமே வைத்திருங்கள்.

15. ஒரு மனிதன் எத்தகையவன் என்பதை அறிய வேண்டுமானால் அவனுக்கு அதிகாரத்தைக் கொடுத்துப் பாருங்கள்.

16. செல்வத்தை மறைக்கலாம்; வறுமையை மறைக்க முடியாது.

17. எட்டிமரம் பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?

18. ஒழுக்கம் என்பது ஒரு மரம். புகழ் என்பது அதன் நிழல். நிழலைப் பற்றியே நாம் அதிகம் நினைக்கிறோம். ஏனோ மரத்தை மறந்து விடுகிறோம்!

19. துன்பத்தில் பங்குகொள்கின்றவர்கள் தான் மற்றவர்களது மனத்தில் என்றென்றும் நிலைத்த இடத்தைப் பெறுவார்கள்.

20. மிகைப்பட பேசுதல் பொய் கூறுவதற்குச் சமம். பொய்யினால் உண்மை மறைக்கப்படுகிறது. மிகையினால் உண்மை பலவீனம் அடைகிறது.

21. அறிவிலும் ஒழுக்கத்திலும் மேம்பட்டவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பது நமது வாழ்வை எளிதாக்கிக் கொள்ளும் ஒரு வழியாகும்.

22. வேண்டியவர்கள் என்பதற்காக அநீதியை நீதி என்றோ நீதியை அநீதி என்றோ வாதிடாமையே நடுவுநிலைமையாகும்.

23. பெருமைகளைத் தேடி ஓட வேண்டாம்; அவை தாமாகவே உன்னைத் தேடி வரும்.

24. வசதியுள்ளவர்கள் எளிமையோடு இருக்கும்போது தான் எளிமைக்கே மரியாதை.

25. சிக்கனமில்லாமல் எவரும் செல்வரானதில்லை; சிக்கனத்தால் ஏழையானவருமில்லை.

26. யாரையும் கண்ட பொழுதே முகத்தால் விரும்பி, இனிமைப் பார்வை பார்த்து, மனம் இசைந்து வரும் இனிய சொற்களைப் பேசுதலே அறம்.

27. வீட்டிலும் சரி, வெளியிலும் சரி, எப்போதும் இனிய சொற்களைப் பேசுவது ஒரு நல்ல விரதம்.

28. இன்ப துன்ப உணர்ச்சிகளையும் கோப தாபங்களையும், விருப்பு வெறுப்புக்களையும் கட்டுப்படுத்தி வாழ வேண்டும்.

29. மனிதனை மாசுபடுத்துவது புறப் பொருள்கள் அல்ல, அவன் இதயத்தினில் எழும் கெட்ட எண்ணங்கள் தாம்.

30. பணிவு, அடக்கம், பண்பாடு, இவற்றை விதைப்பவன் சிறந்த நட்பு என்னும் பயிரைப் பலனாகப் பெறுகிறான்.

31. முதலில் வேலைக்காரனாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். எஜமானன் ஆகும் தகுதி தானுகவே வரும்.

32. உங்களைத் தூக்கிப் பேசும் பொழுது அடக்கமாய் இருங்கள். உங்களை வாழ்த்திப் பேசும் போது அதைவிட அடக்கமாக இருங்கள்.

33. புத்திசாலி சிரித்து வாழ்கிறான். முட்டாள் பிறர் சிரிக்க வாழ்கிறான்.

34. தான்தான் சிறந்த அறிவாளி என்று எண்ணுபவன் முட்டாள் மட்டுமில்லை: ஆபத்தானவனும் கூட.

35. எவ்வளவு காலம் நாம் வாழ்ந்தோம் என்பது முக்கியமில்லை. எவ்வளவு நேர்மையாக வாழ்ந்தோம் என்பது முக்கியம்.

36. பொன்னுக்குச் சோதனை நெருப்பு:
பெண்ணுக்குச் சோதனை பொன்:
மனிதனுக்குச் சோதனை பெண்;

37. எல்லோரையும் பிணைத்து நிற்பது அன்பு என்ற உணர்வுதான். இந்த அன்புணர்வு இல்லையெனில் உலக வாழ்வு இல்லை.

38. பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல், இந்த நான்கு அழுக்குகளும் போகும்படி உள்ளத்தைத் தூய்மை செய்து காத்துக் கொள்ள வேண்டும்.

39. பிறர் செய்த நன்றியை மறப்பது மிகவும் கொடிய பாவம். அந்தப் பாவத்திற்கு பிராயச்சித்தமே கிடையாது.

40. பணம் இருந்தால் உன்னையே உனக்குத் தெரியாது; பணம் இல்லா விட்டால் ஒருவருக்கும் உன்னைத் தெரியாது.

41. முட்டாளோடு விவாதம் பண்ணாதீர்கள்; முடிவில் பார்வையாளர்களுக்கு யார் முட்டாள் என்பது புலப்படாமல் போய்விடும்.

42. பரிதாபமும் அனுதாபமும் ஏற்படச் செய்தோ, அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொண்டோ தான் நமக்கு ஆக வேண்டிய வேலையைச் சாதித்துக் கொள்ளவேண்டும்.

43. மனைவியின் அன்பினாலும் குழந்தையின் மயக்கும் புன்னகையாலும் தான் ஒருவன் தன் துன்ப நிலையை மறந்திருக்க முடியும்.

44. இரக்கமற்ற தன்மையைக் காட்டிலும் மனிதனுக்கு இழிவானது எதுவுமில்லை.

45. விறகில் தீயினன் போலும், பாலில் படுநெய் போலும் மறைந்து நிற்கின்றான் இறைவன்.

46. பிறர் உன்னிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று நீ ஆசைப் படுகிறாயோ, அப்படியே நீ பிறரிடம் நடந்து கொள்.

47. தாழ்ந்தவர்களை உயர்த்த எண்ணுவது நல்லது. உயர்ந்தவர்களை தாழ்த்த எண்ணுவது தீது.

48. உன் நண்பனைப் பற்றிப் பெருமையாகப் பேசு, உன் பகைவனைப் பற்றி ஒன்றும் சொல்லாதே.

49. மிகக் கடினமான மூன்று:
ரகசியத்தைக் காப்பது.
நமக்கு இழைக்கப்பட்ட தீங்கை மறப்பது.
ஓய்வு நேரத்தை நல்ல விதமாகப் பயன் படுத்தல்.

50. சிக்கனத்தைக் கடைப்பிடிக்காதவன் சிக்கலில் மாட்டிக் கொள்வான்.

51. துன்பம் செய்தவனைத் தண்டித்தல் நீயும் அவனுக்குத் துன்பம் செய்தல் அல்ல: அவன் வெட்கப்படும் படி அவனுக்கு நல்ல இனிய உதவியைச் செய்துவிடு.

52. நாம் உண்பதற்கு முன் இரப்பவர்க்கு ஈந்து விட்டுப் பின் உண்பது சிறப்பு.

53. மற்றவர் துன்ப துயரங்களை அறிந்து உதவி செய்யும் தன்மையே ஒப்புரவு என்ற ஒழுக்கமாகும்.

54. நமக்கு துன்பம் செய்தவரை உடனே தண்டித்து விட்டால் அந்த ஒரு நாள் தான் நமக்கு இன்பம்; மன்னித்து விட்டாலோ, நமக்கு உலகம் உள்ளளவும் புகழ்தான்.

55. வேறு எதை அடக்காவிட்டாலும், தன் நாவை அடக்கிக் கொள்ளுக. இல்லையெனில் சொற்குற்றம் உண்டாகித் துன்பம் அனுபவிக்க நேரிடும்.

56. முயன்று முயன்று பொருளைச் சேர்ப்பதின் பயன் தகுதியுடைய பிறருக்கு நல்ல உதவிகளைச் செய்வதுதான்.

57. நம்மிடத்தில் நம்மைப்பற்றி நல்லன சொல்வதையோ, பிறரைப் பற்றி கெடுதல் சொல்வதையோ அவற்றில் பாதியைக் கூட நம்பாதிருப் போமாக.

58. சிலரை எல்லாக் காலமும் ஏமாற்றலாம். எல்லோரையும் சில காலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது.

59. தன்னைவிட மூத்தவர்களுக்கு மரியாதை தருவதும், வயது குறைந்தவர்களிடம் பரிவு காட்டுவதும், மற்றவர்கள் தொடர்ந்து தவறிழைத்தால் சுட்டிக்காட்டி திருத்திட முயல்வதும் பண்பாட்டின் வழி.

60. மனதார அறிந்தே தீமை செய்தல் மாபாதகமாகும்.

61. நயம் படப் பேசு. கடுஞ் சொற்களைத் தவிர்க்கின்ற பண்பட்ட நிலையே நயம்படப் பேசுதல் ஆகும்.

62. பொறாமை என்பது பிறரது உயர்வுகளைக் கண்டு பொறுக்க முடியாத தன்மை. இது தவிர்க்கப்பட வேண்டும்.

63. பணிவுள்ள இதயம் எல்லோருடைய அன்பையும் பெறுகின்றது.

64. மகிழ்ச்சியாக இருக்க இரண்டு வழிகள் உண்டு. நமது விருப்பங்களைக் குறைத்துக் கொள்ளலாம் அல்லது நமது வருமானத்தினை அதிகரித்துக் கொள்ளலாம்.

65. தன்னைத்தானே உயர்த்திப் பேசுபவன் கீழ்மகனே.

66. தியாகப் பண்பு, நேரிய பேச்சு, தன்னைப் போல மற்றவர் உயர்வதிலும் மகிழ்ச்சி, பெருந்தன்மை, குற்றங்கண்ட வழி திருத்தும் திட்பம், மன்னிக்கும் மனப்பான்மை முதலியன உயர்ந்த குணங்கள்.

160. மௌனம் சிறந்த ஓர் பண்பாகும். அது தவறுகளை மறைக்கும், இரகசியங்களைப் பாதுகாக்கும், தகராறுகளை நீக்கும், பாவத்தைத் தடுக்கும்.

161. வாழ்வில் இடர்களையும் சோதனைகளையும் வேதனைகளையும் புன்முறுவலோடு வரவேற்று வாழ்பவனே வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்.

162. பெரியவர்களிடம் பணிந்து பழக வேண்டும். நண்பர்களிடம் துணிந்து பழக வேண்டும். மற்றவர்களிடம் கனிந்து பழக வேண்டும்.

163. ஆசையே இல்லாத மனிதனும் வாழ முடியாது. ஆசை மட்டுமே உள்ள மனிதனும் வாழ முடியாது. ஆசையும் இருக்க வேண்டும்; அது அளவோடும் இருக்க வேண்டும்.

164. எந்தக் காரியத்தையும் திடமனத்துடன் திட்டமிட்டும் செய்ய வேண்டும். முடிவு நன்றாகவே அமையும்.

165. நாம் தேவைகளைக் குறைத்துக் கொண்டால் சுகம் பெறலாம். தேவைகளைக் கூட்டிக் கொண்டால் வேதனைதான்.

166. இரை தேடு; இறைவனைத் தேடு.

கவிராயர்

அண்மையில் தமிழ் நாட்டில் பெருங்கவிராயர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரின் பேச்சாற்றல் - சொல்லாற்றலினைப் பற்றி வியந்து கூறுவதுண்டு. அவரை ஆதரித்த குறுநில மன்னரிடம் அவர் நீண்ட நாட்கள் தங்கியிருந்தார். ஓய்வு கிடைத்த போதெல்லாம் மன்னர் கவிஞரை அருகில் வைத்துக் கொண்டு உரையாடி மகிழ்வதுண்டு.

ஒரு நாள் கவிஞரிடம் பேசிக் கொண்டிருந்தபோது மன்னர் கவிஞரைப் பார்த்து இன்று சமையல் எப்படி? சாப்பாடு நன்றாக இருந்ததா? என்று கேட்டார். அன்றைய தினம் செய்த உணவு உண்மையிலேயே நன்றாக இல்லைதான். ஆதலால் மன்னர் கேள்விக்குப் பதிலளிக்கையில் கவிஞர் இன்று சாப்பாட்டில் உப்புமில்லை; புளியுமில்லை என்று கூறி விட்டார். மன்னருக்குச் சமையற்காரன் மேல் கடுங் கோபம் வந்துவிட்டது. உடனே சமையற்காரனுக்குச் சொல்லியனுப்பினார். சமையற்காரன் அஞ்சி நடுங்கிக் கொண்டு வந்தான். மன்னர் கவிஞர் கூறியதைக் குறிப்பிட்டு, ''இனி இப்படிப்பட்ட தவறு செய்தால் உனக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும்'' என்று கண்டித்து அனுப்பி விட்டார். சமையற்காரன் குலை நடுங்கிப் போனான். தனியாகக் கவிஞரைச் சந்தித்துத் தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டிக் கொண்டான். சமையலில் முன்னேற்றம் இருந்ததோ என்னவோ அவனுக்குத் தெரியாது.

மறுநாள் மன்னர் கவிஞரைச் சந்தித்தவுடன் முதற்கேள்வியாக உணவைப் பற்றிக் கேட்டார். ''இன்று எப்படிச் சாப்பாடு'' என்று கேட்டார். உடனே கவிஞர் இன்று தேவாமிர்தமாக இருந்தது என்று கூறினார். மன்னருக்கு இதைக் கேட்டதும் பேரானந்தம் உண்டாகி விட்டது. கவிஞரை நன்கு மகிழ வைத்து விட்டோம் என்று பெருமிதம் கொண்டார். பின்னர்க் கவிஞரைப் பார்த்து ''நேற்று சமையலில் உப்புமில்லை, புளியுமில்லை என்றீர்கள், இன்று தேவாமிர்தமாகச் சமையல் செய்து விட்டான் என்றீர்களே. அவ்வளவு விரைவில் இவ்வாறு அருமையாகச் செய்ய எப்படி மாறி விட்டான்?'' என்று வியந்து கேட்டார். உடனே கவிஞர் தேவாமிர்தத்தில் உப்பும் புளியும் இருக்காதே என்று கூறினார். மன்னனுக்கு அடங்காச் சிரிப்பு வந்து கவிஞரின் நகைச் சுவை பேச்சு முறையினை மிகவும் சுவைத்துச் சிந்தித்து ஆவன செய்தான். இவ்வாறு கருத்தாழமிக்க செய்திகளை நகைச்சுவையுடன் கூறுதல் நல்ல புலமைத் திறன் மிக்க அறிஞர்களுக்கே கூடும் என்பது உலகியல் உண்மையாகும்.

நன்றி: **திருக்குறளில் நகைச்சுவை**

140. ஆகாத நட்பால் ஆபத்தே ஏற்படும். ஆகவே நல்லவர்களுடன் தான் நட்புக் கொள்ள வேண்டும்.

141. எல்லோரும் தம்மை விட்டு வேறு எதையோ சீர்திருத்த முயல் கிறார்கள்.

142. செலவைக் குறைத்து வரவைப் பெருக்கு.

143. அறிவைப் பெருக்கி, ஆணவத்தைக் குறை.

144. முயற்சி செய்கிறவரையில் எவருக்கும் தம் திறமை தெரியாது.

145. தியாகம் இல்லாமல் வெற்றி இல்லை.

146. வளமான காலத்தில் நண்பர்கள் நம்மைத் தேடுகிறார்கள். வறுமைக் காலத்தில் நண்பர்களை நாம் தேடுகிறோம்.

147. வீரன் ஒருமுறைதான் சாவான். கோழை பலமுறை சாவான் என்பார் கள்: ஒரு திருத்தம்; வீரன் சாவதே இல்லை, கோழை வாழ்வதே இல்லை.

148. இனிப்புப் பண்டங்கள் உடலைக் கெடுக்கின்றன. புகழ் சிறந்தவர் களையும் கெடுத்து விடுகின்றது.

149. பகைவர்களின் இன் சொல்லைக் காட்டிலும் அன்பர்களின் கடுஞ்சொல் நல்லது.

150. அளவோடு சாப்பிடுங்கள். அழகாக இருக்கலாம். குறைவாகச் சாப்பி டுங்கள். ஆயுளோடு இருக்கலாம். சத்துள்ள உணவைச் சாப்பிடுங்கள் ஆரோக்கியமாக இருக்கலாம்.

151. பிடிவாதம் ஒருவனின் வாழ்வை அவனின் முன்னேற்றத்தை முட மாக்கிவிடும் வாதமாகும்.

152. விடா முயற்சியே ஒருவனை வானளாவ உயர்த்திச் செல்லும் ஏணி யாகும்.

153. உடனடிச் சிகிச்சையே நோய்க்குச் சிறந்த மருந்து.

154. வீட்டில் தாயும் தந்தையும் என்ன பேசிக் கொள்கிறார்களோ, அதைத் தான் குழந்தை பேசும். ஆகவே, நாம் நல்லவற்றையே பேச வேண்டும்.

155. மகிழ்ச்சி, மிதமான உணவு, போதிய ஓய்வு ஆகியவை வைத்தியரை வீட்டுக்குள் விடமாட்டா.

156. தண்டிப்பதைவிடத் தயவு காட்டுவது அதிக வல்லமையுள்ளது.

157. ஒரு பணக்காரன் தன் செல்வத்தை எப்படி உபயோகிக்கிறான் என்று தெரியும் வரை நாம் அவனைப் புகழக் கூடாது.

158. நட்புக் கொள்வதில் நிதானமாகச் செல்லவும்; ஆனால் நட்புக் கொண்ட பின் உறுதியாகவும் நிலையாகவும் நிற்கவும்.

159. பழிவாங்குவதால் ஒரு மனிதன் தன் எதிரிக்கு நிகராகி விடுகிறான்; ஆனால் செய்யப் பெற்ற தீங்கை மறந்து விட்டால், நீ மேலான வனாவாய்.

121. கருத்து வேறுபாடு உள்ளவர்களிடம் விவாதித்து அவர்களைப் பண்படுத்த வேண்டுமேயல்லாது அவர்களைப் புண்படுத்தக் கூடாது.

122. மனிதன் வாழ எதிர்காலத்தின் மீது நம்பிக்கை, இடைவிடா உழைப்பு, தன்னம்பிக்கை, இறை நம்பிக்கை தேவை.

123. பிறர் துயரைத் தன் துயர்போல் நினைத்து அதற்காக உளம் வருந்துகின்றவன் தான் உண்மையான இரக்கமுள்ள மனிதன்.

124. நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே;

125. நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்று.

126. குற்றத்தை மன்னித்து விடலாம். ஆனால் துரோகத்தை மன்னிக்க முடியாது.

127. மற்றவர்களுக்கு எவனொருவன் வழிகாட்டியாக இருக்க விரும்புகிறானோ அவன் எளிய வாழ்க்கையையே கடைப்பிடிக்க வேண்டும்.

128. இரக்கம் மட்டும் இருந்தால் பயன் என்ன? எண்ணியபடி உதவி செய்ய வேண்டுமென்ற உறுதி இல்லாதபோது இரக்கம் பயன்படுவதே இல்லை.

129. பேராசைக்காரன் பாதுகாப்பை நாடுகிறான். ஆசையை அகற்றியவனுக்குப் பாதுகாப்பு ஏதும் தேவை இல்லை.

130. துன்பத்தில் பிரார்த்திக்கும் நீங்கள் இன்பத்திலும் பிரார்த்தியுங்கள்.

131. வெற்றி தோல்வி முக்கியமானதல்ல; எடுத்துக் கொண்ட காரியத்தின் நோக்கமே முக்கியம்.

132. நம்மிடம் இல்லாததை எண்ணி ஏங்கிக் கொண்டு இருப்பதைவிட, நம்மிடம் இருப்பதை எண்ணிப் பூரிப்படைய வேண்டும்.

133. பணிவதனால் ஒன்றும் நமக்கு இழிவு வந்து விடாது. அது நமது பெருமையையே புலப்படுத்தும்.

134. இனிய சொற்களைச் சொல்லி தவறு செய்வோரைத் திருத்து.

135. தன் திறமையைத் தானே புகழ்ந்து பேசக் கூடாது. 'இவர் வல்லவர்' என்று பிறர் போற்ற வேண்டும்.

136. எந்த தவற்றை நீ எங்கே கண்டாலும் அதை முதலில் உன்னிடம் திருத்திக் கொள்.

137. நிறை கண்டால் போற்று; குறை கண்டால் ஒன்றும் கூறாதே.

138. இன்பம் செல்வத்தில் இல்லை. கவலை வறுமையிலும் இல்லை. துன்பம் அவாவினாலும் இன்பம் சிந்தையின் செம்மையினாலும் விளைகின்றன.

139. சந்தேகத்தைப் போல விரைவில் வளரும் நச்சு மரம் வேறு இல்லை.

103. இன்சொல் கூறுதல் எளிதே. ஆனால் தீய சொல் கூறாதிருக்க மௌனம் ஒன்றே வேண்டும்.

104. மனநிம்மதியுடன் வாழ வேண்டுமானால் பாசம் பற்று இல்லாமல் எது நடந்தாலும் அதுவும் ஒரு நன்மைக்கே என்று இருக்க வேண்டும்.

105. நன்மை செய்தவருக்கு நன்மை செய்யாதிருப்பது மனித குணத்திற்கு மாறுபாடு. நன்மை செய்தவருக்கு தீமை செய்வது பேய்க்குணம்.

106. ஒரு மனிதனின் கெட்ட குணங்களை வெறுத்துவிடு. ஆனால் அம் மனிதனை வெறுக்காதே.

107. உயர்ந்த லட்சியத்திற்காக இடையறாது உழைப்பதில் தான் ஒருவன் உயிர் வாழ்வதன் பெருமை முழுவதும் அடங்கி இருக்கிறது.

108. பிறருடைய குற்றங்களைக் காண முயல்பவன் அரை மனிதன். தன் குற்றங்களை எண்ணித்திருந்துபவனே முழு மனிதன்.

109. நீண்ட நாள் வாழ வேண்டும் என்று நினைப்பது எல்லோரின் ஆசை. ஆனால் நன்றாக வாழ வேண்டும் என்று நினைப்பவர் சிலரே.

110. பிறர் ரகசியங்களைத் தெரிந்து கொள்வதில் செவிடனாகவும், பிறர் மனைவியை நோக்கும் போது குருடனாகவும் கோள் சொல்வதில் ஊமையாக இருப்பவனே அறத்தின் உருவம்.

111. எந்தப் பொருள் மீதும் அதிகமான ஆசை வைத்தால் அந்தப் பொருளினால் துன்பம் வரும்.

112. உன் திறமையாலோ, சாமர்த்தியத்தாலோ, தந்திரத்தாலோ நீ வெற்றி அடைந்ததாக நினைத்தால் அது தப்பு; எல்லாம் அவன் செயலே.

113. மற்றவருடைய துயரத்தைக் கண்டு இரக்கப்படுங்கள். ஆனால் உங்களுடைய சொந்தக் கஷ்டங்களை உங்களிடமே வைத்திருங்கள்.

114. நல்ல சிந்தனை, உயர்ந்த எண்ணங்கள், அன்பு, பொறுமை, நேர்மை, பணிவு, ஈகை, இவைகள் உன் வாழ்க்கையை உயர்த்தும்.

115. பணம் சம்பாதிப்பது கடினம். அதைப் பத்திரமாகக் காப்பாற்றுவது மிகக் கடினம். ஆனால் நல்ல வழியில் செலவழிப்பதே மிகமிகக் கடினம்.

116. கல்வி, கேள்வி, செல்வம், குலம், பட்டம், பதவி, பல இருப்பினும் அடக்கம் என்ற ஒன்று இல்லாதவன் சிறப்படையான்.

117. நம்முடைய வருவாயில் ஒரு சிறிய பாகமாவது ஏழைகளுக்கென்று ஒதுக்கிவைத்து அதனை அவர்களுக்கு அன்புடன் தந்து மறுமைக்கு மாறா நலனைத் தேடிக் கொள்ள வேண்டும்.

118. ஏழைகளது துன்பங்களைப் போக்குவதற்காகச் செய்கின்ற தொண்டிலே தான் கடவுளைக் காண முடியும்.

119. நோயில்லாதவன் இளைஞன். கடனில்லாதவன் பணக்காரன்.

120. அதிகமாகச் செய்வதைக் காட்டிலும் செய்வதைத் திருந்தச் செய்வதே சிறப்பு.

85. உடம்பு இன்றி நம்மால் எந்தச் செயலையும் செய்ய முடியாது. அதனால் தான் ''உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே'' என்கிறார் திருமூலர்.

86. நோக்கமில்லாமல், ஊக்கமில்லை; ஊக்கமில்லாமல் முயற்சியில்லை. முயற்சியில்லாமல் உழைப்பில்லை; உழைப்பில்லாமல் வெற்றியில்லை.

87. நம்முடைய எதிர்காலம் மற்றவர்கள் கையில் இல்லை. நம்கையில்தான் உள்ளது. எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள வேண்டியது நாமேதான்.

88. ஒரு சமயத்தில் ஒரு வேலை, 'ஒன்றே செய்க நன்றே செய்க' என்ற பழமொழிக்கு ஏற்ப செயல்படுவது நல்லது.

89. நேற்று என்பது கனவு, நாளை என்பது கற்பனை. இன்று என்பது வாழ்வுக்கு வழி அமைப்பது.

90. மாசற்ற உள்ளமும், மறுவற்ற அறிவும், பண்பட்ட குணமும் பகுத்துணரும் சக்தியும் பெற்றால் வெற்றி பெற்றே ஆக வேண்டும்.

91. சந்தேகம் என்பது உனக்குப் பெரிய பகைவன். மனிதன் அமைதியற்ற நிலைக்குச் சந்தேகமே காரணம்.

92. பணத்தை கெட்ட வழிகளில் இழப்பது குற்றமாகும். ஆனால் அதைவிடக் குற்றமானது கெட்ட வழிகளில் பணம் தேடுவது.

93. தவறுகளை ஒத்துக் கொள்ளும் தைரியமும் அவைகளை விரைவில் திருத்திக் கொள்ளும் பலமும் தான் வெற்றி பெறுவதற்கான சிறந்த குண அதிசயமாகும்.

94. பழையதை மறத்தல், நிகழ்வதை கவனமாக நடத்தல், வரப்போவதை நன்கு சிந்தித்தல்-இம்மூன்றும் இன்ப வாழ்விற்கு தேவை.

95. நல்லவற்றை கூட்டிக்கொள்; தீயவற்றைக் கழித்துக் கொள்; அறிவைப் பெருக்கிக் கொள்; நேரத்தை வகுத்துக் கொள்.

96. அறிவுள்ள மனிதர்களோடு வாதாடிப் பார்க்கலாம். பண்புள்ளவர்களோடு உறவாடலாம். ஆனால் அறிவற்றவரோடும் பண்பற்றவரோடும் பேசிப் பயனில்லை.

97. கீழ்படிந்து நடப்பது என்ற நற்குணத்தை வளர்த்துக் கொள். ஆனால் உன் சொந்த நம்பிக்கையை மட்டும் கைவிடாதே.

98. பெண்ணின் வடிவழகைவிட, குண அழகே மிகவும் கவர்ச்சிகரமானது.

99. எவன் தானம் செய்கிறானோ அவனுக்கு தன்னாலேயே செல்வம் பெருகும்.

100. ஆயிரம் வீண்வார்த்தைகளைவிட கேட்பவர்களுக்கு இதம் அளிக்கும் ஒரு நல்ல வார்த்தை மேலானது.

101. மணிக் கணக்கில் போதனை செய்வதிலும், ஒரு கணப் பொழுது உதவி புரிந்தாலே நலம்.

102. விரும்புவதைப் பெறமுடியாது. ஆகையால் பெற முடிவதை விரும்புவோமாக.

67. வஞ்சகம், பொறாமை, புறங்கூறுதல், உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுதல், இச்சகம் முதலியவை கீழ்மைக் குணங்கள். இவற்றை அகற்றி வாழ மனிதன் முயலுதல் வேண்டும்.

68. மிகக் கொடியவனிடத்தும் நல்லது இருக்கிறது. மிக நல்லவனிடத்தும் தீமை இருக்கிறது. எனவே யாரும் மற்றவரிடத்தில் குற்றம் பார்க்கக் கூடாது.

69. மனிதனய் வாழு! பிறரை மனிதராய் நடத்து.

70. நண்பர்களை ரகசியமாகக் கண்டிக்க வேண்டும்; பகிரங்கமாகப் பாராட்ட வேண்டும்.

71. அற்பத்தனம் இல்லாமல் கண்ணியமாயிருங்கள்; வெறும் வேடங்கள் இல்லாமல் நேர்மையாய் இருங்கள்: வெளிப்பகட்டு இல்லாமல் அறிவுடன் திகழுங்கள்.

72. மற்ற மக்களுக்கு நன்மை செய்வதே ஒருவன் சமுதாயத்திற்குச் செலுத்த வேண்டிய கடன்.

73. கணவன் குறிப்பறிந்து நடக்கும் மனைவியும், மனைவி குறிப்பறிந்து நடக்கும் கணவனுமே வாழ்வில் வெற்றி பெற்றவர்கள்.

74. ஆசையுள்ளம் படைத்தவன் விலங்கு: அன்பு உள்ளம் படைத்தவன் மனிதன்; அருள் உள்ளம் படைத்தவன் தேவன்.

75. ஒழுக்கமுள்ள மனிதன் பெருந்தன்மையும் மரியாதையும் உள்ள சொற்களைப் பேசுவான். மறந்தும் கடுஞ்சொல் கூறமாட்டான்.

76. உண்ணும் உணவுக்கு ஏற்பவே மனிதனின் இயல்பும் அமைகிறது. எனவே மனித சமுதாயத்தின் பண்பை உருவாக்குவதில் உணவுக்கு முக்கியப் பங்கு உண்டு.

77. கடந்து போன விஷயங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் காலத்தை மேன் மேலும் வீணாக்காதீர்கள்.

78. உங்களைப் பற்றி நீங்கள் எவ்வளவு அதிகமாகப் பேசுகிறீர்களோ அவ்வளவு அதிகமாகப் பொய் சொல்ல நேரும்.

79. வாய் என்னும் கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் பயங்கரமான மிருகம் தான் நாக்கு. அந்தக் கூண்டைத் தேவையில்லாமல் திறக்காதீர்கள்.

80. சிறு புண்ணையும், ஏழை உறவினரையும் ஒரு போதும் அலட்சியம் செய்யக்கூடாது.

81. ஒருவன் செய்யத்தகாத செயல்களைச் செய்வதனால் கெடுவான்; செய்யத்தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதனாலும் கெடுவான்.

82. அச்சம் தவிர். அதனால் நம் முன்னேற்றம் தடைப் படுகிறது. அறிவு வளர்ச்சி குன்றுகிறது. சிந்தனையும் செயலும் ஒடுங்குகிறது.

83. உடம்பை வருத்தாமல், உழைக்காமல் உயர்ந்து விட முடியாது. உழைப்புதான் உயர்வு.

84. வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் குறிக்கோளும் விடா முயற்சியும் தவிர வேறு குறுக்கு வழிகள் இல்லை.

எங்களது இனிய நல்வாழ்த்துக்கள் :

M/s. எஸ். பெரியண்ண வாத்தியார்

தங்க நகை வியாபாரம்

14, ஈஸ்வரன் கோயில் தெரு
திருப்பூர் 638604

தொலைபேசி : வீடு 23588

கடை 20088
25588

With the best compliments from :

M/s. S. Perianna Vathiar

Jewellers

14, Eswaran Koil Street,

TIRUPUR - 638604

இதயங் கனிந்த வாழ்த்துக்கள்

எவரெஸ்ட் வின்னிங் ஏஜென்ஸீஸ்

மற்றும்

காமதேனு வாடகை நூல் நிலையம்

8, கபாலீச்சுபரர் கோயில் கிழக்கு குளக்கரைத் தெரு திருமயிலை, சென்னை-600 004.

அனைத்து மாநில பரிசுச் சீட்டுகளும் கிடைக்கும்.

மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்

குட்டி நியுஸ் மார்ட்

15, தெற்கு மாட வீதி,
திருமயிலை,
சென்னை-6000 04,

WITH THE BEST COMPLIMENTS FROM:

Dr. S. B. UMAPATHY, M.S., M.Ch. (Urology)

CONSULTANT SURGEON AND UROLOGIST

Rcsidence :
80, Raghava Reddi Colony,
Jaffarkhanpet,
Madras 600 095
Phone : 423314

Consultati on at : 5 p.m. to 7 p.m.
J. K. NURSING HOME,
2-3, Krishna Iyer Street,
Nungambakkam,
Madras-600 034.
Phone : 73082

With the best compliments from :

Phone: 432897

Dr. D. KUMARASWAMY, B.Sc., M.B., B.S.,

Res : **"DHANALAKSHMI ILLAM"**
No. 94, Chinna Street,
Kunrathur, Madras-600 069.

குரூப் எண்.	மாதச் சந்தா. ரூ.	மொத்த மாதங்கள் & அங்கத்தினர்கள்.	மொத்த தொகை ரூ.
VPC	250	20	5,000
"	200	25	5,000
"	300	25	7,750
"	500	20	10,000
"	400	25	10,000
"	1000	20	20,000
"	1000	25	25,000

ஔவையார்

முவுலகை யுங்கடந்து மூதண்டப் பித்தி
கையை
மேவியதற் கப்பாலு மின்னியதே— பூவி
லென்றும்
மங்காத நூல்வேண்டி மாண்கூத்தற் கிட்ட
சிரச்
சிங்கா தனத்தலைவர் சீர்

கம்பர்

கந்தழியென் றான்றோர்கள் கண்டு நிதம்
பரவும்
எந்தை முருக னிளையவராம்—சந்ததியில்
வந்துமகிழ் செங்குந்தர் வாய்மைதனை
யென்சொல்கேன்
செந்திருமாற் செல்வர்களே தேர்ந்து.

புகழேந்தி

விண்முகத்தோர் பூமாரி வீசியது மோர்
வியப்போ
மண்முகத்தே செங்குந்தர் மாய்சிரங்கள்—
எண்முகத்தும்
சிந்தியதத் தம்முடலைச் சேர்ந்தொட்டிக்
கொண்டொலித்து
வந்தவித மெண்ணவருங் கால்

அம்பிகாபதி

குந்தர் பெருமிதத்தைக் கூறுவதென்
பார்த்திபர்காள்
சந்தத் தமிழ்க்கடலார் தாம்போற்ற—
விந்தையுடன்
தலைதந்தார் பாடலுக்குத் தாமென்றும்
பூவிலுயர்
கலைதந்தார் மாக்களுக்குக் காண்.

சோழன்

ஏதென் றெடுத்துரைக்கே னென்னாசான்
றன் கவியைப்
போது ளிருந்துவளர் பொன்மாதே—
யீதலவா
சாகாத கல்வியென்று சான்றோர்கள்
சாற்றிவைத்த
ஏகாந்த சொல்லாகு மெண்.

பாண்டியன்

அன்றுங் கவிநலத்தை யாய்ந்தறிந்தேன்
பாண்டியிலே
இன்றுங் கவிநலத்தை யீங்கறிந்தேன்—
என்றுந்தான்
கூத்தற் கெதிருண்டோ கூறு மவனிதனிற்
பார்த்திபரே காண்மின் படித்து.

சேரன்

விண்கண்ட தேவரெலாம் வீற்றிருந்தா
ரீங்கென்று
கண்கண்ட மாமுனிவர் காட்டினார்—
பண்கொண்ட
கூத்தன் கவிக்குக் குவிந்ததலை யாச
னத்தைப்
பார்த்திடவே நன்றாய்ப் பதிந்து.

அஞ்சனாக்ஷி

வாழிசக்ர வர்த்திப்பேர் வாய்ந்தவொட்டக்
கூத்தன்புவி
ஏழினொடு மேழுமதன் மேலுநிலை—
சூழச்செய்
ஈட்டி யெழுபதெனு மிந்நூற்கொப் பின்
மைகண்டீர்
நாட்டிலுயர் வாணர்களே நன்கு.

சைவாசாரியார்

வாழியொட்டக் கூத்தன் வகைவந்தார்
தாம்வாழி
வாழி மன்ன னெந்நாளும் வையகத்தில்—
வாழியவே
கொலைகளவு கட்காமங் கோள்விலகி
மாக்கள்
உலைவில்லா வின்ப முகந்து.

களிப்பொருபது முற்றியது

பிள்ளைத்தமிழ்

இது ஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் செய்தது. ஆண்பாற் பிள்ளைக் கவியாகப் பத்துப் பருவங்களையுடையது. வீரவாகுத் தேவர் முதலிய ஒன்பதின்மர், சுப்பிரமணியக் கடவுள் ஆகிய இவர்கள் மரபில் வந்தவர் செங்குந்தர் என்னும் செய்தியைத் தெரிவிக்கின்றது. இதனை, 'மயில் வாகனத்தோன் துணையாக வந்தோர் தாலோ தாலேலோ என்னும் அடியான் அறியலாம். அன்றியும், 'சங்குந்து வயல் மேவு செங்குந்த வளநாடர் சப்பாணி கொட்டி யருளே' எனக் கூறப்படுவதால் செங்குந்த நாடு என்று ஒரு நாடு இருந்ததென்பதும், செங்குந்தர் அந்நாட்டிற் குரிய சிற்றரசராயிருந்தனர் என்பதும் தெரியும்.

காப்பு

வேற்றொலி வெண்டுறை

மன்னுதிருக் காஞ்சிநகர் வாழுஞ்செங்
குந்தர்மிசைப்
பன்னும்பிள்ளைத்தமிழைப் பாடவே—
மின்னிற்
குழலிமைந்தன் புழைநெடுங்கைக் குஞ்சரச்
செம் பொன்னவிர்க்கும்
கழலிலென்றன் சென்னிவைப்பன் காண்.

ஔவையார்

மூவுலகை யுங்கடந்து மூதண்டப் பித்திகையை
மேவியதற் கப்பாலு மின்னியதே— பூவிலென்றும்
மங்காத நூல்வேண்டி மாண்கூத்தற் கிட்டசிரச்
சிங்கா தனத்தலைவர் சீர்

கம்பர்

கந்தழியென் றான்றோர்கள் கண்டு நிதம் பரவும்
எந்தை முருக னிளையவராம்—சந்ததியில்
வந்துமகிழ் செங்குந்தர் வாய்மைதனையென்சொல்கேன்
செந்திருமாற் செல்வர்களே தேர்ந்து.

புகழேந்தி

விண்முகத்தோர் பூமாரி வீசியது மோர்வியப்போ
மண்முகத்தே செங்குந்தர் மாய்சிரங்கள்—எண்முகத்தும்
சிந்தியதத் தம்முடலைச் சேர்ந்தொட்டிக் கொண்டொலித்து
வந்தவித மெண்ணவருங் கால்

அம்பிகாபதி

குந்தர் பெருமிதத்தைக் கூறுவதென் பார்த்திபர்காள்
சந்தத் தமிழ்க்கடலார் தாம்போற்ற—விந்தையுடன்
தலைதந்தார் பாடலுக்குத் தாமென்றும் பூவிலுயர்
கலைதந்தார் மாக்களுக்குக் காண்.

சோழன்

ஏதென் றெடுத்துரைக்கே னென்னாசான் றன் கவியைப்
போது ளிருந்துவளர் பொன்மாதே—யீதலவா
சாகாத கல்வியென்று சான்றோர்கள் சாற்றிவைத்த
ஏகாந்த சொல்லாகு மெண்.

பாண்டியன்

அன்றுங் கவிநலத்தை யாய்ந்தறிந்தேன் பாண்டியிலே
இன்றுங் கவிநலத்தை யீங்கறிந்தேன்—என்றுந்தான்
கூத்தற் கெதிருண்டோ கூறு மவனிதனிற்
பார்த்திபரே காண்மின் படித்து.

சேரன்

விண்கண்ட தேவரெலாம் வீற்றிருந்தாரீங்கென்று
கண்கண்ட மாமுனிவர் காட்டினார்—பண்கொண்ட
கூத்தன் கவிக்குக் குவிந்ததலை யாசனத்தைப்
பார்த்திடவே நன்றாய்ப் பதிந்து.

அஞ்சனாக்ஷி

வாழிசக்ர வர்த்திப்பேர் வாய்ந்தவொட்டக் கூத்தன்புவி
ஏழினொடு மேழுமதன் மேலுநிலை—சூழச்செய்
ஈட்டி யெழுபதெனு மிந்நூற்கொப் பின்மைகண்டீர்
நாட்டிலுயர் வாணர்களே நன்கு.

சைவாசாரியார்

வாழியொட்டக் கூத்தன் வகைவந்தார் தாம்வாழி
வாழி மன்ன னெந்நாளும் வையகத்தில்—வாழியவே
கொலைகளவு கட்காமங் கோள்விலகி மாக்கள்
உலைவில்லா வின்ப முகந்து.

களிப்பொருபது முற்றியது

பிள்ளைத்தமிழ்

இது ஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் செய்தது. ஆண்பாற் பிள்ளைக் கவியாகப் பத்துப் பருவங்களையுடையது. வீரவாகுத் தேவர் முதலிய ஒன்பதின்மர், சுப்பிரமணியக் கடவுள் ஆகிய இவர்கள் மரபில் வந்தவர் செங்குந்தர் என்னும் செய்தியைத் தெரிவிக்கின்றது. இதனை, 'மயில் வாகனத்தோன் துணையாக வந்தோர் தாலோ தாலேலோ என்னும் அடியான் அறியலாம். அன்றியும், 'சங்குந்து வயல் மேவு செங்குந்த வளநாடர் சப்பாணி கொட்டி யருளே' எனக் கூறப்படுவதால் செங்குந்த நாடு என்று ஒரு நாடு இருந்ததென்பதும், செங்குந்தர் அந்நாட்டிற்குரிய சிற்றரசராயிருந்தனர் என்பதும் தெரியும்.

காப்பு

வேற்றொலி வெண்டுறை

மன்னுதிருக் காஞ்சிநகர் வாழுஞ்செங் குந்தர்மிசைப்
பன்னும்பிள்ளைத்தமிழைப் பாடவே—மின்னிற்
குழலிமைந்தன் புழைநெடுங்கைக் குஞ்சரச் செம் பொன்னவிர்க்கும்
கழலிலென்றன் சென்னிவைப்பன் காண்.

பிதா மகன் பகைஞன்

ஒருவனேடொருத்தி யொன்றென்று
ரைத்திடுமுலகமெல்லாம்
தருபவ னாகி யன்று தாமரைக் கிழவோன்
றன்னைப்
பெரும்பகல் சிறையில் வைத்த பீடுசேர்
முருகன் பின்னே
வருங்குல ராவி கொள்ள வைத்தருள்
வாணித் தாயே

தெய்வயானை மணாளன்

தேவரும் போற்ற மேனாட் டெய்வத
யானைத் தோளை
மேவியே விந்தி ரற்கு வேண்டிய வரங்க
ளீந்த
தேவர்க டேவ னான செய்யவேட் கனுச
ரீந்த
தாவருந் தலைக்கு ளாவி தந்தருள் வாணித்
தாயே

வள்ளி மணாளன்

தெள்ளிய சீர்த்தி கொண்ட சிவமுனி
வரனாற் கண்ட
வள்ளியைத் தொண்டை நாட்டு வரை
தனில் வதுவை செய்த
எள்ளிலை வடிவேற் கைய னிடத்தவ
ரெனக்குத் தந்த
தள்ளருந் தலைக்கு ளாவி தந்தருள்
வாணித் தாயே

வரையாது கொடுப்போன்

வேண்டிய போக மெல்லாம் விருப்புட
னுலகுக் காக்கும்
ஆண்டியாம் பழனி மேய யாண்டிதன்
வழியில் வந்த
காண்டகு குந்த ரின்னே காட்டிய தலைக
ளெல்லாம்
ஈண்டவர் பெற்று வாழ விழைந்தருள்
வாணித் தாயே

ஞான சத்திதரன்

மோனமா முனிவர் தேற முப்பொருள்
கையாற் காட்டி
ஞானமாஞ் சத்தி தன்னை நற்கரத்
தமைத்தே யெங்கள்
கானமான் குறத்தி மாதைக் கடிமண
விழவிற் கண்ட
வானவே ளனுசர்க் காவி வழங்கருள்
வாணித் தாயே

தேவதேவன்

முந்தொரு பகலிற் றேவர் முனைப்பினை
யொழிப்பான் புக்குச்
சந்திர சூட னாகித் தனிப்பெரு வெளியில்
வந்தோர்
மந்திரத் துரும்பை நாட்டி வலிகெடச்
செய்த வெங்கள்
கந்தனுக் கிளையர்க் காவி கண்டருள்
வாணித் தாயே

சாமிநாதன்

பிஞ்ஞகன் வேண்டி நிற்கப் பிரணவப்
பொருளைக் கூறிக்
கஞ்சனைத் தளையி னீக்கிக் காணரும்
கோலங் கொண்ட
மஞ்ஞையி லிவர்ந்து கந்த மாதனத் திருந்
தான் பின்னர்
உஞ்சிட வாவி சேர வுவந்தருள் வாணித்
தாயே

குந்தர் குணமாட்சி

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

நிலைதந்தார் புவியினுக்கு யாவருக்கு
மபிமான நிலைக்கத் தந்தார்
கலைதந்தார் வணிகருக்குச் சீவனஞ்செய்
திடவென்றே கையில் யாண்டும்
விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்த
ரென்கவிக்கு விலையா கத்தான்
தலைதந்தா ரெனக்கொட்டக் கூத்த
னெனும்
பெயரினையுந் தாந்தந் தாரே.

எழுப்பெழுபது முற்றும் கிடைக்கவில்லை.

களிப்பொருபது

இது கூத்தர் நடத்திய தெய்வச் செயலைக் கண்ட அசரீரி, அவ்வை முதலியோர் களிப்புற்றுக் கூறிய பத்துச் செய்யுளை யுடையது. இதில் கம்பர், புகழேந்தி, அம்பிகாபதி, சேரன், சோழன் பாண்டியன், அஞ்சனாட்சி, சைவாசாரியார் பெயர்களுங் காணப்படுகின்றன. இந்நூலைத் தொகுத்தவர் குலோத்துங்க சோழன் என்ப.

அசரீரி

இந்தக்கைக் கோள ரிசைக்கெண் கணன்
படைத்த
வெந்தக்கைக் கோளரிணை யாவாரே—
யந்திப்
பிறையணிகைக் கோளனுருப் பெற்றவன்
பால் வைகும்
நிறையணிகைக் கோளரே நேர்.

VII. வண்ணைக் களஞ்சியம்

ஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்கள் பதிப்பித்த செங்குந்த பிரபந்தத் திரட்டிலிருந்து சில பகுதிகள்

எழுப்பெழுபது

இது சிரச் சிங்காதனத்தின் பொருட்டு வெட்டப்பட்ட தலைகள் உயிர்பெற்றெழும்படி கூத்தர் நாமகளை வேண்டிச் செய்ததாகும். எழுபது செய்யுட்களில் பதின்மூன்றே கிடைத்துள்ளன. ஒவ்வொரு செய்யுளிலும் முருகக் கடவுள் வீறு செவ்வையாகச் சொல்லப்படுகிறது. அறுபட்ட தலைகள் உறையூரினின்றும் பறந்தோடி ஆங்காங்கே விழுந்து கிடந்த உடலோடு சேர்ந்து ஒட்டிக் கொண்டு உயிர் பெற்றன என்று கூறப்படுகிறது. இதனால் கூத்தர் ஒட்டக் கூத்தர் எனப் பெயர் பெற்றனர் என்னும் வரலாறு வழங்குகிறது.

காப்பு

நேரிசைவெண்பா

தங்கச் சிலையேட்டிற் றந்தவெழுத் தாணி கொடு
துங்கப் பெருநூலைத் தூய்மையுடன் — சங்கையற
வேதமுனி சொல்ல விளக்கினான் பாதமலர்
போதமெனப் போற்றுவாம் புக்கு.

நினைத்த வடிவினன்

அறுசீர்விருத்தம்

பலபல மதங்க டோறும் பற்பல வடிவ மாகி
அலகிலா விளையாட்டென்று மாடிடு முருக வேட்கு
நலமுறு மனுச ரான நங்குல முதலி தங்கள்
தலைதனை யுடலிற் கூட்டித் தந்தருள் வாணித் தாயே

ஆதியந்தமிலான்

தோற்றமு மீறு மற்ற தோமிலா வுருவங் கொண்டு
மாற்றலர் சூர னாதி மன்னரை மதித்துக் காய்ந்த
நாற்றிசை போற்று மெங்க ணாமவேற் குமரன் பின்னே
சாற்றருங் குலர்க்கு ளாவி தந்தருள் வாணித் தாயே

வேதப் பொருளான்

உரைசெயும் வேத கோடி யுட்பொரு ளாகி நின்ற
பரசிவ னிவனே யென்று பன்முறை யேத்த நிற்கும்
ஒருபொரு ளான கந்த னுடன்வரு மரபா ரின்று
தருதலை யாவி கொள்ளத் தந்தருள் வாணித் தாயே.

விச்சுவ ரூபன்

பண்டொரு நாளில் மேரு பருப்பத முடியி னின்றே
அண்டங்க ளெல்லாந் தம்மி லடக்கியே காட்சி தந்த
முண்டக முளரித் தாளான் முருகவேட் டுணைவர் தந்த
தண்டலை யாவி சேரத் தந்தருள் வாணித் தாயே

With the best compliments from

M/s. Southern Alloy Foundries Private Ltd.

(Mfrs of quality SG Iron & Grey Iron Castings

1-B, J Y L Towers

117, Nelson Manickam Road,
Aminjikarai, Madras-600 029.

Phone : 429055
421855

Grams : YESGIRON
Telex : 41-7420 SAF

காப்புப் பருவம்

திருமால்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சீர்மேவு தெண்டிரைப் பாலாழி மீதினிற்
சேடசய னத்தின்மிசையே
செங்கண்டுயின்றுபதி னாலுலோ கத்தையுஞ்
சீர்பெற வளர்க்குமுகிலைத்
தார்மேவு பச்சைப் பசுந்துழாய் மாலை புனை
சங்கேந்து செங்கையரசைச்
சததளக் கோவிலுறை திருமலைக் கிரியில் வளர்
சக்ரமா லைத்துதிப்பாம்
தேர்மேவு திருவீதி யேகம்பர் கச்சியுறை
தேவிகா மாட்சியுமையாள்
செய்யசெந் தாமரைப் பாதச் சிலம்பில்வரு
தீரவீ ரியர்கடம்மைக்
கார்மேவு கைத்தல வசந்தத் தியாகரைக்
கந்தவேளின் றுணைவரைக்
கனமான செங்குந்த முதலிமாரைத்தினங்
காத்துரட் சித்தருளவே.

நடராஜர்

வடிகொண்ட வெண்சுதை பணிந்தகோ புரசிகர
மாடமா ளிகைசிறந்த
வளமருவு தில்லைச் சிதம்பர மகாதேவ
வள்ளலைத் தெள்ளுநறவக்
கடிகொண்ட கொன்றையந் தார்முடிப் பரமனைக்
கமலமல ரடிசிவப்பக்
கனகசபை நடனமிடு சிவகாமி நண்பனைக்
கண்குளிர நின்றுதொழுவாம்
அடிகொண்ட செந்தமிழ்க் கவிஞர்கள் சகாயரை
யடைந்தோரை யிகழாமலே
யன்னதா னஞ்சொர்ண தானநல் கும்பெரிய
வருள்தங்கு சிந்தையோரைத்
துடிகொண்ட புகழ்மருவு செங்குந்த வீரரைச்
சுரிகைநா ராயணர்தமைத்
தோகைமயி லேறிநட மாடிவரு கந்தவேள்
துணைவரைக் காக்கவென்றே

அண்ணாமலைநாதர்

மிக்கநற வக்கொன்றை தும்பைகூ விள
மறுகு விரிபுனற் குழவிமதியம்
மேவுகோ டீரப்ப ராபரனை யிறையவனை
வேளைவென் றிடுகண்ணனைத்
தக்கதவ மிக்கவுண் ணாமுலைத் திருமருவு
சங்கரனை யண்ணாமலைச்
சம்புவி னடிக்கமல நம்பிநம் பித்தினந்
தாழ்வுகொடு முடியில்வைப்பாம்.
உக்கிரமிகு வரதுங்க வல்லானை வென்ற வரை
யுண்மைநெறி வண்மைமாறா
வுள்ளம் படைத்தவரை யெள்ளாமல் வள்ளலடி
யோதித் துதிக்குமவரை
இக்கனைய மொழிமாதர் மதனர்செங் குந்தர்தமை
யிலகுமென் மீசையுடைய
எழில்கொண்ட செஞ்சயரை வீரநா ராயணரை
யீண்டுரட் சித்தருளவே.

தியாகராஜர்

ஐம்புலப் பற்றொழித் துட்கரண வாதனை
யடக்கிக் கடக்கவரிதா
மந்தர சுழுத்திதுரி யாதீத வெளியிலே
யானந்த நித்திரைசெயும்
தம்பமிகு மறிவுடைய ரிதையநீள் செய்ய செந்
தாமரைக் கோயில்புக்க
தையல்கம லாலயத் தேவியா ரூரிற்
றனிக்கடவு ளைப்பணி குவாம்.
வெம்புபகை யாகவரு சூரசங் காரஞ்செய்
வெற்றிசேர் செங்குந்தரை
மேவுமிகு விருதுடைய வீராதி வீரியரை
வேளனைய வடிவாளரை
நம்பினர்கள் தம்பமென நின்றருள் தியாகரை
நரேந்திரர் மதிக்கவந்த
நாடறிய வேவிலங் கினுநா விலங்காத
நல்லோர்க ளைக்காக்கவே.

சொக்கநாதர்

திரைமருவு கடலுலக மெல்லா மதிக்கவே
சேணமரர் கொண்டாடவே
செய்யசெந் தாமரைப் பாதஞ் சிவந்திடத்
தித்திமித் திமிதியெனவே
வரைமருவு குமரிகவு மாரிமீ னாட்சிமா
மாதங்கி பங்கினுடனே
மாமதுரை யறுபத்து நாலுதிரு விளையாடல்
மகிழ்சொக்க ரைப்பணிகுவாம்
உரைமருவு செந்தமி ழிலக்கிய விலக்கண
முணர்ந்துகரை கண்டோர்களை
ஒடியா டும்புரவி நகுலப்பிர தாபரை
யுத்தமக் குணசுத்தரை
விரைமருவு செங்கடப் பணியும்பு யாசலரை
வெல்சமய முதலியர்தமை
மிக்கான செங்குந்த வீரநா ராயணரை
வேண்டிரட் சித்தருளவே

பிரசமொழி யுறுகச்சி பெண்ணரசி யுட
னின்று
பெருமைகொடு நடனஞ்செயும்
பேடைமயில் வானரம் பையரிளைப்
பாறவே
பிரியமோ டிளநீர்தர
இரவிரத சாரதி செழுங்கமல கரமது
மிளைப்பாற நற்றுகில்களால்
ஏந்துகொடி வீசியவ னும்பரி நடத்திட
விருக்குந் திருக்காஞ்சியார்

தருவனைய கரசுமுகர் வரகுமரி தருபாலர்
சப்பாணி கொட்டியருளே
சங்குந்து வயல்மேவு செங்குந்த வள
நாடர்
சப்பாணி கொட்டியருளே

பகலவ னுதிக்குமொளி கண்டுவிண் டொரு
கோடி
பங்கய முறுக்கவிழவே
பச்சைப் பசுந்தே னதிற்பெருக் கோடியே
பன்னுசெந் நெற்பணைதொறும்
அகல்கட லெனப்பெருகி யோடவரு
கேநிற்கு
மன்னப்பெ ரும்பெடையெலாம்
அழகுபெறு சங்கினைக் குழவியென
வேயணைத்
தணிகொள்கிற கால்மூடவும்
புகலரிய கடைசியர்கள் கண்களைக் கண்டு
தண்
புனல்வளர்ந் திடுகயலெலாம்
பொருகெண்டை யாமெனவு மொரு
கோடி திரியுமப்
புதுமைகண் டதிசயித்துச்
சகமதிக் குங்கச்சி யம்பதிச் செங்குந்தர்
சப்பாணி கொட்டியருளே
சங்குந்து வயல்மேவு செங்குந்த வள
நாடர்
சப்பாணி கொட்டியருளே

வடமறுத் துத்தனது நிழலினைக் கறுவியே
வட்டமிட் டுப்பொருதுவன்
வானப் பிறைக்கோடு கொண்டுதிண்
டாடநெடு
மாமலை களைத்துளைத்தும்
இடர்முகிற் றிரளைப் பெருந்துதிக் கை
யினா
லெட்டிப் பிடித்ததிர்க்கும்
இடிப்பெருங் குரல்முழக் [கத்தினைப்
பிளிறியே
யிடிசத்த மதிலடக்கிப்

படவரும் பகையசுரர் சேனையும் பொடிபடப்
படியடிப் படமிதித்துப்
படர்குருதி வெள்ளப் பெருக்கெடுத்
தோடவே
பதறிவெண் கண்சிவக்கும்
தடமும் மதக்களிற் றுலவிவரு விதரணிகர்
சப்பாணி கொட்டியருளே
சங்குந்து வயல்மேவு செங்குந்த வள
நாடர்
சப்பாணி கொட்டியருளே.

மிக்கவே தியர்பரவு சீகாழி யம்பதியில்
வேதியன் புதல்வனாகி
வேதாக மம்புரா ணங்கற்றுணர்ந்துதவும்
விஞ்சையர் மதிக்குமதுரைச்
சொக்கநா தன்முனஞ் சமணரெண் ணாயிரந்
தொகுதிகூட் டிப்பகைஞராய்ச்
சுந்தர சவுந்தரிய பாண்டியன் சபை
தனிற்
சொற்றமிழ்க் கவிதைபாடித்
திக்குள்ள பேரெள்ள வைகையாற் றெதி
ரேடு
செலவிடுத் தமணைவென்ற
செந்தமிழ்ச் சம்பந்த வடிவமா கிய
குமரர்
சேடசய னத்தில்வளருஞ்
சக்கரபா ணிக்குரிசில் மருகருக் கிளைய
வர்கள்
சப்பாணி கொட்டியருளே
சங்குந்து வயல்மேவு செங்குந்த வள
நாடர்
சப்பாணி கொட்டியருளே

முருகுவிரி செங்காவி மலர்களைக் களை
களையு
மோகனக் கடைசியரெலாம்
முதிரவிளை செந்நெல்வயல் வாய்
தொறுங் கூடியே
முத்துமணி களைவாரியே
பருகுமது விலைதனக் கனுதின மளக்
குமவர்
பரவியிடு குரவையோசை
படர்கடற் றிரையொலி யடங்கலு மடங்
கவிரி
பங்கயப் பொய்கையெல்லாம்

வேறு

செங்கம லாலய மங்கை யுலாவிய
தேரூர் சீர்வீதி
செண்பக மேவிய விண்படர் சோலைகள்
சேர்பூ வார்பானல்
குங்கும மாமுலை தங்கிய மாதர்கள்
கூர்வேல் சேர்பார்வை
கொண்டவர் நாடுதல் கண்டடர் சேல்பல
கூடா தேயோடும்
பொங்கிய நீர்மடு வெங்கணு மேவிய
பூநீ ரேபாயும்
பொன்கன மாமணி தண்டிரை யாலெறி
பூமா தேசேருஞ்
சங்கரி பூசைசெய் கம்பைநல் லாறினர்
தாலோ தாலேலோ
தரணியுண் மால்திரு மருக சமேதர்
தாலோ தாலேலோ.

துதிசெயு நாவலர் விதிமுறை பாடல்கொள்
தூயோர் மாயாதார்
துகளறு நீபமென் மலரணி தோளினர்
தோலா மேலாளர்
கதிதரு தாரணை முதிர்சிவ யோகியர்
கார்போ லீவோர்கள்
கனபெரு வாழ்வின ரனகனை நேர்பவர்
காணா மாணாளர்
மதனவ சீகர ரிதமுறு வாசகர்
மாறா வீறாளர்
வலியகை வேலவ ரிலகுச கோதரர்
மாதவ ரானோர்கள்
சததள மாதுறை நிதிதிகழ் மார்பினர்
தாலோ தாலேலோ
தரணியுண் மால்திரு மருக சமேதர்
தாலோ தாலேலோ

புகலுறு வாய்மைகள் தவறுசெய் யாதவர்
போரே றானோர்கள்
புகர்முக வானையி னுதையமதானவர்
பூமே லாள்மார்பர்
நகைமுக மேவிய சுமுகனை நேர்பவர்
நாணா மாணாளர்
நமனைவெல் தாளினர் தமைமற
வாதவர்
நாகார் நாடாள்வோர்
சுகமொழி மாதர்கள் வெகுமயல் கூர்பவர்
சூர்மா வேரோடே
சுருள்பட வேல்விடு முருக சகோதரர்
தோலா மாவீரர்
சகலக லாதிபர் முககம லாலயர்
தாலோ தாலேலோ
தரணியுண் மால்திரு மருக சமேதர்
தாலோ தாலேலோ

மருமலர் நீபமொய் திருமணி மார்பினர்
மாறே கூறாதார்
வலதமிழ் வாணர்கள் புகழது மேவிய
மாவீ ரியதீரர்
திருவளர் வேதியர் கலிகெட நீடிய
தீரா வீறாளர்
சிவகண பூசைகள் மனதய வொடுசெய்
சீமா னார்மார்பர்
விருதர சாள்பவர் சமுகவ சீகரர்
வேள்போ லேரூபர்
விகடவொன் னார்முடி மகுடம தேறிய
மாமே லூர்தீரர்
தரும தயாபரர் குருவடி நேசிகர்
தாலோ தாலேலோ
தரணியுண் மால்திரு மருக சமேதர்
தாலோ தாலேலோ.

தாலப்பருவ முற்றிற்று.

சப்பாணிப் பருவம்

செங்கடம் பணிகுடுமி யுச்சிக்கு நாசிச்
செழுங்குவளை யிருவிழிக்கும்
சீர்கொண்ட மெய்க்குநெய்க் காப்பிட்டு
வளரத்
திருத்தாள்கை நீவிவிட்டுக்
குங்குமப் புனலாடி மிருகமத புனலொடுங்
கோதிலா வளகமாட்டிக்
கூறரிய பட்டாடை யாலுடல் புலர்த்திக்
குலாவிமடி மீதிருத்திப்
புங்கநீ றிட்டுத் தரைக்காப்பு மிட்டினிய
புழுகுசவ் வாதுமிட்டுப்
போதவெண் சங்கில்நெய் பால்விட்டு
ஊன்புகொடு
பூரிக்க வேபுகட்டிச்
சங்கரி யெடுத்துமுத் தாடவளர் கெம்பீரர்
சப்பாணி கொட்டியருளே
சங்குந்து வயல்மேவு செங்குந்த வளநாடர்
சப்பாணி கொட்டிருளே

விரைமடல்கள் செறிகின்ற தென்னைவன
மொருகோடி
மேல்வளர்ந் தேகிவிண்ணின்
மேவியட ருந்தருப் பூமலர் சொரிந்து
மணம்
வீசுகொ லு வேந்தன்மகிழும்

தாலப்பருவம்

பொருநீர் வயலில் வரிவாளை பூக
மடலிற் குதித்தேறிப்
பொற்பார் பழுக்காய் குலையூடே பூமி
மிசையிற் பலகோடிச்
சொரிமா ரிகள்போ லுதிர்படுத்துந் துள்ளி
முகிலைப் பொள்ளெனவே
துதைத்துக் கிழித்து விளையாடிச் சுரர் பொன்
னுலகி லனைவோரும்
வெருவாய் மருளப் பாய்ந்துபின்னும் வேரி
மலர்கற் பகமுழக்கி
மீண்டுங் கழனிப் புனல்மூழ்கி மேவும்
புகழ்சேர் கச்சிநகர்
வருமா மதவே ளெனச்சிறந்த வல்லோர்
தாலோ தாலேலோ
வணங்கா முடிவல் லானைவென்ற வல்லோர்
தாலோ தாலேலோ.

சிந்துந் திரைநீ ரோடைதொறுந் திரளுங்
கருமே திகள்கோடி
திமிதி யெனச்சென் றடைபோதிற் சிறுகன்
றெனவே வரிவாளை
முந்தி முடுகி மடிதடவி முலைப்பால்
குடிக்கி லம்முலைப்பால்
மோதுங் கடல்போற் பெருகிநறு முளரி
வயலிற் கால்பாயக்
கொந்து மலர்செண் பகவனத்திற் குலாவிப்
பலமா மரத்தேறிக்
கொம்பிற் கனியை கவர்ந்திளநீர்க் குலைக
ளுதிரப் பாய்ந்தேறி
மந்தி குதிக்குந் திருக்காஞ்சி வாழ்வோர்
தாலோ தாலேலோ
வணங்கா முடிவல் லானை வென்ற வல்லோர்
தாலோ தாலேலோ

கானக் குயில்சேர் மொழிமாதர் கனக
மணிமா மேடையின் மேல்
கதிர்சூழ் மணிக்கோ புரமுடிமேல் காரா
ரரசர் செச்சைகள்மேல்
மீனத் திரள்போல் முத்துமணி மிளிரும்
புரிசைத் தலையதின்மேல்
விளங்கும் பளிங்கு மண்டபமேல் வீதித்
திருத்தே ருச்சியின்மேல்
தானத் தருமச் சாலைகள்மேல் தங்கு
மறையோர் மாளிகைமேல்
சங்கத் தமிழோர் மாமனைமேல் தரிக்குந்
துகிற்பூங் கொடிகள்சென்று
வானத் தளவும் வளர்காஞ்சி வாழ்வோர்
தாலோ தாலேலோ
மயில்வா கனத்தோன் றுணையாக வந்தோர்
தாலோ தாலேலோ

வீசுந் திரைத்தெண்ணீர்க்கமலம் விரிக்குங்
கடல்சேர் புதுப்பூவும்
விரைசேர் செந்தா மரைப்பூவு மிகுத்த
வனச்செண் பகப்பூவும்
தேசு வளர்குங் குமப்பூவுஞ் செழிக்குங்
குடமல் லிகைப்பூவும்
தேனார் சாதி மருப்பூவுஞ் செறிமட்
டவிழ்முல் லையின் பூவும்
காசு மடற்கே தகைப்பூவும் கழுநீர்ப்
பூவும் பலபூவும்
கைக்கொண் டேந்திச் சிறியதென்றல் கனக
மணிமா ளிகைதோறும்
வாசம் பரப்புந் திருக்காஞ்சி வாழ்வோர்
தாலோ தாலேலோ
மயில்வா கனத்தோன் றுணையாக வந்தோர்
தாலோ தாலேலோ.

உளமா தவனப் பெருவகைபோ லொற் றைத்
திகிரித் திருத்தேர்மேல்
ஒட்டி நடத்தி வரும்போதி லோங்கு
திருமே னியின் வெயர்வின்
களங்கு தெளியத் துகிலேந்திக் கையால்
வீசுந் துகிற்கொடிகள்
கமுகு பழுக்காய்க் குலையேந்திக் காணப்
புதிய தெங்கிளநீர்
கொளுதற் கமர ரெதிரேந்திக் கொடுப்பத்
திருப்பூ வணங்களெலாம்
கொய்யு மலர்கள் தினந்தினமுங் குலவிச்
சொரியும் புவியிலிந்த
வளம்பெற் றுயருங் கச்சிநகர் வாழ்வோர்
தாலோ தாலேலோ
மயில்வா கனத்தோன் றுணையாக வந்தோர்
தாலோ தாலேலோ.

பாறான வேல்தொட்ட முருகனைப்
பரமனைப்
பங்கயன் முதற்றேவரைப்
பல்காலும் வலம்வந்து திரிவதும் பணி
வதும்
பல்லுயிர்க் கிதமுறுவதும்
நீறான கருணையும் பெற்றுமிக் கானவர்
கள்
செங்கீரை யாடியருளே
சேவலங் கொடியாளர்மேவிடுந் தய
வாளர்
செங்கீரை யாடியருளே

வேறு

கந்தர மேடையி லுந்தலு மாம்மயில்
கண்டே நின்றாடும்
கஞ்சமு லாவிய நீள்வயல் மேவு
கரும்பொ டிரும்பானல்
கொந்தலர் வாழையு மாவொடு பாகல்
கொளுங்கனி யின்றேறல்
கொண்டு மலர்த்திரி வண்டுகள் பாடிக்
கொம்பா ருஞ்சோலை
அந்தர மேவிய வும்பர்க ளூர்புக
வண்டர்கள் கொண்டாட
அம்புய மேலன நின்று குலாவி
யசைந்தா டுஞ்சீரார்
செந்திரு மேவிய தொண்டைநன் னாடர்கள்
செங்கோ செங்கீரை
சேவக வேலவ னார்துணை யானவர்
செங்கோ செங்கீரை

உச்சித நாவல ரிச்சைகொள் நீள்பொரு
ளிந்தா வென்றேதான்
ஒப்பொடு நீடிய கைத்தல மேன்மைய
ரொண்கா வின்சீரார்
அச்சமில் மேவலர் கைச்சிலை வாளொடு
மங்கை திண்டாட
அக்கண மேபொரு மிக்கவல் லாண்மைய
ரன்பார் நண்பாளர்
வச்சிர மாமணி யுச்சித தோளினர்
வம்பா ரும்போதார்
மைக்கண்மின் னார்தொழு மிக்கவில்
வேளென
வந்தோ ரந்தாதார்
செச்சைகள் மேவிய கச்சிவ ரோதயர்
செங்கோ செங்கீரை
சேவக வேலவ னார்துணை யானவர்
செங்கோ செங்கீரை

அயிலைப் பொருவிழி மயிலொப் பனையவ
ரன்பா மின்பூறல்
அதனைப் பருகிய மதனொப் பெனவரு
மஞ்சா வெஞ்சூரர்
எயில்முப் புரமெரி நகையிற் கினியவ
ரென்றே கொண்டாட
எழில்பெற் றிடுபல திறமைத் தயிரிய
ரஞ்சா நெஞ்சாளர்
பயில்வித் தைகள்பல முயல்வித் தகர்மலர்
பண்பா ருந்தாதார்
பழகிப் புனைபுய மழகுற் றவருமை
பங்கார் நண்பானோர்
செயல்பெற் றுயரிய கயிலைக் குரியவர்
செங்கோ செங்கீரை
சேவக வேலவ னார்துணை யானவர்
செங்கோ செங்கீரை
மாலா கியமட மானார் விரகினர்
மற்புய சற்காரர்
வார்ரா நீபமொய் தாரார் மார்பினர்
வச்சிர மணித்தோளர்
மேலா மறிவினர் நாலா கலைவலர்
வித்துவ சனர்க்கானோர்
வீறாய் மருவலர் மார்பா ணியர்நெடு
மிக்கவ னப்பானோர்
பாலா கியகுண மேகூ ரறிவினர்
பத்தி மிகுத்தோர்கள்
பார்மே லரசெதிர் தோலா விருதினர்
பற்குண னொப்பானோர்
சேலார் வயன்மலி பிரமா புரியவர்
செங்கோ செங்கீரை
சேவக வேலவ னார்துணை யானவர்
செங்கோ செங்கீரை

பாடக மேவிய தாளா னாட்டிய
பைம்புய மலையாட
பங்கய மாமுக வெங்கதிர் வேர்வது
பனிமுத் தெனவாட
நாடக மாடிய தாளணி கிண்கிணி
நற்குர லிசையாட
நறுமலர் நீபமொய் தெரியல்பொன்
மார்பினி
னறவு பொழிந்தாட
நீடிய குழையணி குண்டல மணியதி
னிகழ்கதி ரொளியாட
நிலைபெறு மழகிய மணிதிக ழரைஞா
ணிலவொளி யெனவாட
ஆடக மாமலை யேநிக ரானவ
ராடுக செங்கீரை
யாவரு மாமென நாவிலங் காதவ
ராடுக செங்கீரை

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

செங்கீரைப்பருவம்

புங்கமிகு தருமனதி கெஞ்சியோ டத்தங்கு
புனிதைச் சினம்பிறக்கப்
பூவுழக் கியவண்டு கானொதுங் கிட
நின்ற
புள்ளினந் தள்ளியோடச்
சங்கினஞ் சூழ்பழன மள்ளர்தள் ளாடத்
தயங்கிடைக் கடைசியர்குழாம்
தங்கள்செங் கைநெறித் தென்செய்
வோ மென்னத்
தனித்தனி கடாக்கள்வெருள
அங்கணவர் தங்களிட வாலைவா யுட்புகுத
வம்புயங் கொய்யுமின்னார்
அஞ்சியோ டக்கமல மிஞ்சியோ டக்
கங்கை
யனையகம் பாநதியினில்
செங்கயல்க ளுகள்கச்சி மங்கையுமை வர
புத்திரர்
செங்கீரை யாடியருளே
சேவலங் கொடியாளர் மேவிடுந் தய
வாளர்
செங்கீரை யாடியருளே.

இந்திரன் முதற்றேவர் யாவருங் கயிலை
மலை
யிறைவன் முன் னின்றுசூரன்
இகலிற் படும்பா டனைத்தையு
மொழிந்திடநம்
மீசனா ருளமிரங்கித்
தந்திடு நுதற்கண்ணி னழலெழுப் புஞ்
சுடர்
தனைக்கண்டு பார்வதியுளம்
தனிலஞ்சி யோடவள் பாதச் சிலம்
பிணைகள்
தாக்கநவ மணிகள்சிதறப்
பைந்தொடி மடந்தையர்க ளொன்பதின்ம
ராகியே
பரமனைக் கண்டவுடனே
பரிவுகொடு கெர்ப்பமாய் வீரவா குவி
னுடன்
பண்பாக வந்துதோன்றிச்
செந்திரு விளங்கவே வந்தலட் சம்வீரர்
செங்கீரை யாடியருளே
சேவலங் கொடியாளர் மேவிடுந் தய
வாளர்
செங்கீரை யாடியருளே.

பாரமா கியநெடுங் கிரவுஞ்ச கிரியிலே
பயில்தாரு காசூரனைப்
பங்கப் படுத்தியவ னைச்சயங்
கொண்டபின்
பார்தொழு மயேந்த்ரபுரியில்
கோரமா கியவேம கூடத்தி னிற்சென்று
குழுவினொடு பாதவீரன்
கொக்கரித் தங்கணசை யாதகம்
பந்தனைக்
கொட்டமிட் டுப்பிடுங்கி
ஆரவா ரத்துடன் மீளவந் தக்கணத்
தடர்பூத படைகூட்டியே
அறுமுகக் கடவுள்முன் னேறுமவர்
சேனைக
ளடங்கலு மடங்கவென்றே
தீரனா கியசூர சங்கார வீரியர்கள்
செங்கீரை யாடியருளே
சேவலங் கொடியாளர் மேவிடுந் தய
வாளர்
செங்கீரை யாடியருளே.

முழுமதித் திருமுகக் கலைவாணி கேள்வனு
முராரிநெடு மாமாயனும்
முட்டவெட் டுத்திக்கி லுண்டான பால
ரொடு
முனிவோர்க ளோரெழுவரும்
பழுதிலா தித்தர்பன் னிருவருஞ் சோமனும்
பகர்கருட காந்தருவரும்
பங்கய முதற்றெய்வ மங்கையர்க
ளனைவரும்
பன்னுகன் னியரெழுவரும்
தொழுதகை மாறாது சூரனுக் கிவ்வகைத்
தொழில்புரிந் தறமெலிந்தே
துக்கப் பெருங்கடலில் மூழ்கிவெகு
காலஞ்
சுழன்றுழன் றயர்வோருடன்
செழுந்தருவி னீழல்வாழ் தேவர்சிறை
மீட்டோர்கள்
செங்கீரை யாடியருளே.
சேவலங் கொடியாளர் மேவிடுந் தய
வாளர்
செங்கீரை யாடியருளே

வீறான செல்வமுங் கல்வியுங் கேள்வியு
மிக்கபொறை யுந்தருமமும்
விதரணிக வாண்மையும் பெருமையுஞ்
சீலமும்
மேவலரை மிகவெல்வதும்
பேறான காரியஞ் செய்வதும் மாதவப்
பெரியோரை நேசிப்பதும்
பேருலகி னாலுகவி வாணர்புகழ்
கொள்வதும்
பிரியாத மனவலிமையும்

புங்கமிகு தருமனதி கெஞ்சியோ டத்தங்கு
புனிதைச் சினம்பிறக்கப்
பூவுழக் கியவண்டு கானொடுங் கிட நின்ற
புள்ளினந் தள்ளியோடச்
சங்கினஞ் சூழ்பழன மள்ளர்தள் ளாடத்
தயங்கிடைக் கடைசியர்குழாம்
தங்கள்செங் கைநெறித் தென்செய் வோ மென்னத்
தனித்தனி கடாக்கள்வெருள
அங்கணவர் தங்களிட வாலைவா யுட்புகுத
வம்புயங் கொய்யுமின்னார்
அஞ்சியோ டக்கமல மிஞ்சியோ டக் கங்கை
யனையகம் பாநதியினில்
செங்கயல்க ளுகள்கச்சி மங்கையுமை வர புத்திரர்
செங்கீரை யாடியருளே
சேவலங் கொடியாளர் மேவிடுந் தய வாளர்
செங்கீரை யாடியருளே.

இந்திரன் முதற்றேவர் யாவருங் கயிலை மலை
யிறைவன் முன் னின்றுசூரன்
இகலிற் படும்பா டனைத்தையு மொழிந்திடநம்
மீசனா ருளமிரங்கித்
தந்திடு நுதற்கண்ணி னழலெழுப் புஞ் சுடர்
தனைக்கண்டு பார்வதியுளம்
தனிலஞ்சி யோடவள் பாதச் சிலம் பிணைகள்
தாக்கநவ மணிகள்சிதறப்
பைந்தொடி மடந்தையர்க ளொன்பதின்ம ராகியே
பரமனைக் கண்டவுடனே
பரிவுகொடு கெர்ப்பமாய் வீரவா குவி னுடன்
பண்பாக வந்துதோன்றிச்
செந்திரு விளங்கவே வந்தலட் சம்வீரர்
செங்கீரை யாடியருளே
சேவலங் கொடியாளர் மேவிடுந் தய வாளர்
செங்கீரை யாடியருளே.

பாரமா கியநெடுங் கிரவுஞ்ச கிரியிலே
பயில்தாரு காசூரனைப்
பங்கப் படுத்தியவ னைச்சயங் கொண்டபின்
பார்தொழு மயேந்த்ரபுரியில்
கோரமா கியவேம கூடத்தி னிற்சென்று
குழுவினொடு பாதவீரன்
கொக்கரித் தங்கணசை யாதகம் பந்தனைக்
கொட்டமிட் டுப்பிடுங்கி
ஆரவா ரத்துடன் மீளவந் தக்கணத்
தடர்பூத படைகூட்டியே
அறுமுகக் கடவுள்முன் னேறுமவர் சேனைக
ளடங்கலு மடங்கவென்றே
தீரனா கியசூர சங்கார வீரியர்கள்
செங்கீரை யாடியருளே
சேவலங் கொடியாளர் மேவிடுந் தய வாளர்
செங்கீரை யாடியருளே.

முழுமதித் திருமுகக் கலைவாணி கேள்வனு
முராரிநெடு மாமாயனும்
முட்டவெட் டுத்திக்கி லுண்டான பால ரொடு
முனிவோர்க ளோரெழுவரும்
பழுதிலா தித்தர்பன் னிருவருஞ் சோமனும்
பகர்கருட காந்தருவரும்
பங்கய முதற்றெய்வ மங்கையர்க ளனைவரும்
பன்னுகன் னியரெழுவரும்
தொழுதகை மாறாது சூரனுக் கிவ்வகைத்
தொழில்புரிந் தறமெலிந்தே
துக்கப் பெருங்கடலில் மூழ்கிவெகு காலஞ்
சுழன்றுழன் றயர்வோருடன்
செழுந்தருவி னீழல்வாழ் தேவர்சிறை மீட்டோர்கள்
செங்கீரை யாடியருளே.
சேவலங் கொடியாளர் மேவிடுந் தய வாளர்
செங்கீரை யாடியருளே

வீறான செல்வமுங் கல்வியுங் கேள்வியு
மிக்கபொறை யுந்தருமமும்
விதரணிக வாண்மையும் பெருமையுஞ் சீலமும்
மேவலரை மிகவெல்வதும்
பேறான காரியஞ் செய்வதும் மாதவப்
பெரியோரை நேசிப்பதும்
பேருலகி னாலுகவி வாணர்புகழ் கொள்வதும்
பிரியாத மனவலிமையும்

திருவேகம்பநாதர்

முத்திக்கு வித்தைச் செழுங்கருணை வள்ளலை
முழங்குசங் கேந்துகுரவன்
முன்னமொரு காலத் தறிந்திடா நின்ற தோர்
முதல்வனைக் கரசூலனைப்
பத்திக்கு வித்தான காமாட்சி யம்மையுமை பாகமகலா திருக்கும்
பரமனே கம்பநா தன்றனது விரைமலர்ப் பாதநா மஞ்சலிப்பாம்
தத்திக் குலாவுமயில் வாகனக் குமரவேள் தம்பிலட்சத் தொன்பரைத்
தாமரைக் கண்ணனைத் தாமரைப் போதனைத்
தாமரைத் தாளாளரோ
டெத்திக்கு ளுண்டான பாலர்முனி வோர் தம்மை
யிரவுபக லுந்துதிக்கும்
இனியபுகழ் சேர்கின்ற செங்குந்த முதலியர்க
ளெல்லோரை யுங்காக்கவே.

காமாட்சியம்மையார்

ஆரண நான்முகன் மாலவ னிச்சைக்கோர் வேட்கையைத் தருவாட்கையள்
ஆதி மகேசுவரர் பாதபது மத்தினோர்க் ககமெய்க்க வருள்தேக்குவாள்
காரண காரிய நாதர்பக் கத்திற்சேர் காட்சியைத் தருசூட்சியாள்
காவெனு மாவடி மாதவக் கச்சி காமாட்சியைத் தொழுதேத்துவாம்
பூரண மாமுலை மாதரிச் சிக்கவே பூட்டுமால் விளையாட்டினோர்
போதக மாகிய ஞானவுற் பத்திக்கோர் போக்குசித மெய்வாக்கினார்
தாரணி நீபமொய் மார்பர்சுத் தத்தோர் தரற்குநல் லறமீக்கொள்வோர்
தாருகா சுரனைவன் மார்பிடைக் குத்திப் போர்
தாக்குவீ ரர்க்காக்கவே.

விகடசக்கர விநாயகர்

பூமேவு நறவம் புனைந்தகோ டீரப் புராந்தகன் றருபாலனைப்
பொன்னனைப் பொன்னவள் முராரிதிரு மருகனைப்
புங்கவன் கங்கைமகனைக்
காமேவு சேணாடர் தொழுதெய்வ மும் மதக்
கரிமுகனை மறைமுழங்குங்
கச்சியம் பதிவிகட சக்கர விநாயகன் கமலபா தந்துதிப்பாம்

மாமேவு புனிதத் திருக்கம்பை யாற்றினில் வருந்தித் தவஞ்செய்கையால்
வந்தருளி யேகம்பர் பாகங் கொடுக்கின்ற வல்லியபி ராமிகுமரி
தேமேவு பாலுடைய காமாட்சி பாதத் திருச்சிலம் பதிலுதிக்குஞ்
செங்குந்தர் பிள்ளைத் தமிழ்க்கவி தழைக்கத்
தினந்தினங் காத்தருளவே.

முருகக் கடவுள்

செஞ்சடைப் பரமனுக் கருள்ஞான மருள் செயுஞ்
சிவஞான குருநாதனைச்
சேவற் பதாகைச் செழுங்கருணை வள்ளலைத்
தெய்வயா னைக்கரசனை
அஞ்சுகக் குறவள்ளி யம்மைமண வாளனை யடுத்தசுரை வென்றகுகனை
ஆதிவே தாவையுஞ் சிறைகொண்ட சரவணத்
தறுமுகனை யஞ்சலிப்பாம்
பஞ்சவண்ண விருதுபுலிக் கொடிம லாரியும் பார்புகழ வேபடைத்த
பாக்கியசம் பன்னரைத் தேக்குதிறல் வீரரைப்
பரமங்கை யவள்பங்கனும்
கஞ்சமலர் வேதனுங் கண்ணன்விண் ணாடருங்
கண்டுகொண் டாடவந்த
கச்சியம் பதியில்வரு வீரசெங் குந்தரைக் காத்துரட் சித்தருளவே.

முப்பத்துமுக்கோடிதேவர்

தாரணி மதிக்கவே முப்பத் திரண்டறஞ் சகலவுயி ருந்தழைக்கச்
சங்கர னளந்துதரு மிருநாழி நெற் கொண்டு
தவிராம லேவளர்த்த
சீரணி பயோதரி கவுமாரி மகமாயி தேவிபா தச்சிலம்பிற்
செம்மையுட னேவந்து பூமிதனை யாளுமோர்
செங்குந்த ரைப்புரக்க
காரனைய திருமேனி மாயா விநோதனுங் கஞ்சா சனக்கடவுளும்
கரிமுகக் கணபதியு முருகநற் றேவனுங் கன்னிமா ரோரெழுவரும்
மூரல்விரி செய்யசெவ் வாய்க்கலை மடந்தையும்
முளரியா லயமங்கையும்
மோதுமலர் சூழ்கற்ப காடவியில் முப்பத்து
முக்கோடி தேவர்களுமே.

வீறாடு மொன்னலர்கள் மகுடம் பிளக்கவே
வெட்டும் பரிக்குநகுலர்
மென்மீசை யுடையவர்க ளபிமான பூடணர்கள்
வீரசூ ரனைவென்றவர்

மாறாடு பாவகோ டிகளெலா மோடிட
வழங்கிடும் பிச்சையுடையார்
மாகாளி கையைப் பிடித்தவர்கள் முசுகுந்தன்
மல்லாரி யைப்பறித்தோர்

தாறாடு, கதலியும் பாகலுஞ் சூதமுஞ்
தண்கனி சுமந்துநிற்கும்
தண்டலையில் விண்டமுவு வாளைபாய்ந் தக்கனிச்
சாறுபாய்ந் தோடுவெள்ளம்

சேறாடு கழனிசூழ் கச்சிநக ருக்கதிபர்
சிறுபறை முழக்கியருளே
செங்கடப் பந்தொடைத் துங்கவெற் பனையபுயர்
சிறுபறை முழக்கியருளே.

தம்பமெனு மகமேரு வில்லுடைய மகதேவர்
தம்புதல்வ ரம்புயமலர்த்
தையன்முலை மீதிலே துயில்புரியு நெடியமால்
தயவுபுரி திருமருகர்பூம்

கொம்புடைய மதயானை மேலுதய மதரூபர்
குருவின்மொழி தவிராதவர்
கோலமிகு சிவபூசை மேலதிக தயவாளர்
குலபுரவி நகுலனனையார்

அம்புவி மதிக்கவரு வீரசெங் குந்தர்பே
ரபிமான பூடணமுளோர்
ஆதிகயி லாயகிரி நாதரருள் பெற்றவர்க
ளகிலம் புரக்குநிபுணர்

செம்பவள மடமாதர் கும்பவிள முலைநேயர்
சிறுபறை முழக்கியருளே
செங்கடப் பந்தொடைத் துங்கவெற் பனையபுயர்
சிறுபறை முழக்கி:பருளே.

பூவகைத் தளிர்களொரு கோடிதண் டலைதொறும்
பொருவிலிசை பலமுழக்கப்
புண்டரீ கக்கழனி வாய்தொறுங் கடைசியர்கள்
புகல்குரவை யொலிமுழக்க

மாதவத் துமையரிய தவமுயலு மருகிலும்
வருகம்பை யலைமுழக்க
வாசமல ரோடைதொறு முக்கோடி சங்கினம்
வளமைகொளு மொலிமுழக்கப்

பாவகத் தவமுனிவர் பூசைவே ளைக்கினிய
பன்மணித் தொனிமுழக்கப்
பன்னாளு மிந்தவகை மாறாமுழக்கமே
பயில்கச்சி யம்பதியினோர்

சேவகக் கந்தன் சகோதரப் பிரபுடீகர்
சிறுபறை முழக்கியருளே
செங்கடப் பந்தொடைத் துங்கவெற் பனையபுயர்
சிறுபறை முழக்கியருளே.

புகழ்பெற்ற சூரன்மா மரமதா யுருவுகொடு
புக்குநிற் குங்கடலிடைப்
போந்துவடி வேல்விட் டெறிந்துமுடி சிதறிடப்
பொருதுவரு முருகர்துணைவர்

நகைமுத்த மனையசெந் திருமகளை யகலாத
நாகரிக மாலின்மருகர்
நாடறிய வேபட்ட மானமுங் காத்தவனை
ரட்சித்த கருணையுடையார்

தொகைபெற்ற வறுபத்து நாலுகலை கற்றவர்கள்
சொல்வாண ருக்கினியவர்
துட்டவல் லானுடைய பட்டங் குலைத்தவர்கள்
சுரிகைமல் லாரியுடையார்

செகமெச்சு பஞ்சவண விருதுடைய மகராசர்
சிறுபறை முழக்கியருளே
செங்கடப் பந்தொடைத் துங்கவெற் பனையபுயர்
சிறுபறை முழக்கியருளே.

சாரச மிகுந்தமறை யாவையுந் தருகின்ற
தாமரைத் தவிசனுமவன்
தந்தையா கியதிரு முகுந்தனோ டேயினித்
தக்கதிக் குப்பாலரும்
மூரிவெற் பனையவெள் ளானையும் முப்பத்து
முக்கோடி தேவர்பலரும்
முடியடியு மறியாத சிவனுடைய சீர்பாத
முறைமையிற் றாங்குமரவோர்
காரைநிக ரானகுழன் மடமாதர் நடமாடு
கனகமய மேடைதோறும்
கங்குல்பக லென்னவே யொளிவிளக் கஞ்செயக்
கதிரொளிப் பிரபையெனவே
ஆரமுத் தணிகச்சி மாநகர்க் கிறைவருட
னம்புலீ யாடவாவே.
ஆதிசெங்குந்தர் சிவ சோதிதன்
மைந்தருடனம் புலீயாடவாவே

வேறு

கம்பலை புரிவிரி கடலே ழுங்குல
கனகிரி யோரேழும்
கருணை பெறுந்தவ ரெழுவரு மருடரு
கன்னிய ரெழுவோரும்
தம்பம தாகிய குலகிரி யெட்டுந்
தருமிகு திசையெட்டும்
தந்திக ளெட்டுட னாகம தெட்டுந்
தகுபா லகரெட்டும்
செம்பது மாலய மலர்மா துந்தமிழ்
செப்பிய கலைமாதும்
திசைமுகன் முதலிய விண்ணோ ருந்தொழு
தேவி பராபரையாள்
அம்பிகை தந்திடு மைந்தரோ டாடுற
வம்புலி வருவாயே
அறுமுக வேலவர் துணைவரோ டாடுற
வம்புலி வருவாயே.

உலவிய திரைவிரி பாலா ழியில்வள
ருகரபணா டவிமேல்
உம்பர் தொழுஞ்சல சத்திரு மகளுட
னுறவிழி துயில்கூரும்
கலவியில் மருவிடு பொழுதொரு மதகரி
கஞ்சமென் மலர்கொய்யக்
கண்டொரு முதலை பிடித்திட வெருவிக்
கரிகோ மூலமென

உலகொடு வானுல கறியக் கதறிய
வொருகுர லதிரவிடுத்
துள்ளந் துள்ளித் தள்ளா டிக்கொண்
டுயிர்போ மெனவஞ்சி
அலறிய போதே யருள்மால் மருகரோ
டம்புலி வருவாயே
அறுமுக வேலவர் துணைவரோ டாடுற
வம்புலி வருவாயே.

முரச மலாடங் கொங்கு தெலுங்கு
முடுகிய கருநாடம்
மோதிய முனையிடு மொட்டிய மீழ
முதிர்குகு ரந்துளுவம்
உரைசெறி சிங்களம் வங்கா ளம்புக
ழுயர்கரு மலையாளம்
ஓதிய வங்கங் கலியா ணந்திரு
வுயர்சோ ழங்குடகம்
கருதிய மகதம ராடஞ் சிந்தொடு
கமலஞ் செறிசினம்
கவினுறு மைம்பத் தறுதே சத்துள
கதிர்முடி யுடையமகா
அரசர் மதித்திடு மன்னவ ரிவருட
னாடுக வம்புலியே
அறுமுக வேலவர் துணைவரோ டின்புற
வாடுக வம்புலியே.

அம்புலிப் பருவம் முற்றிற்று.

சிறுபறைப் பருவம்

சந்திரக் கவிவாண ரிசைமுழக் கப்பெருகு
சதுர்வேத மறைமுழக்கத்
தண்காவின் மலரளிகள் குமுறொலி முழக்கிடத்
தந்திவீ ணைகள் முழக்கப்
பந்திமத கரிகள்குர லொலிமுழக் கத்திருப்
பரதமட வார்முழக்கப்
பன்னுசுர மண்டல முழக்கமு முரசமும்
பரிவுகொடு மெதிர்முழக்கத்
திந்திதிமி யெனவாடு பரியின்மே லரசருந்
திறையிடுந் தொனிமுழக்கத்
திகழுமுலை மடமாத ராலத்தி யேந்தியவர்
திருமொழிகள் பலமுழக்கச்
செந்திருப் புயவீர வாகுதே வத்தலைவர்
சிறுபறை முழக்கியருளே
செங்கடப் பந்தொடைத் துங்கவெற் பனையபுயர்
சிறுபறை முழக்கியருளே.

மாலோன் மருகர் கந்தன்சோதரர்
வரிசை யாளர் வருகவே
வல்லா னுயிர்கொல் லாதவீர
வாகுத் தலைவர் வருகவே

வருகைப் பருவம் முற்றிற்று.

அம்புலிப் பருவம்

விண்ணிலுடு மங்கையர்க் கரசுநீ யிவர்கள் புவி
மேன்மங்கை யர்க்கரசராம்
விரவுமா காயவிரு ணீயொழிப் பாயி வர்கள்
மிடியர்கலி யிருளொழிப்பார்
மண்ணுலகி னிற்பயிர்க் கினியைநீ யிவர் கள்பல
வான்பயிர்க் கினிமையர்களாம்
மாமதி யெனும்பெருமை யுடையைநீ யிவர்புத்தி
மதியெனும் பெருமையுடையார்
தண்ணொளி பரப்புவாய் நீயிவர்கள் மடவார்கள்
தண்ணொளி பரப்பியருள்வார்
தண்குமுத நண்பனீயி வர்கள்மட வார் கள்வாய்த்
தண்குமுத நண்பராவார்
அண்ணலா கியவுனக் கிவர்களொப் பாவர்கா
ணம்புலீ யாடவாவே
ஆதிசெங் குந்தர்சிவ சோதிதன் மைந் தருட
னம்புலீ யாடவாவே.

போதரவ தாயுனது கலைகள் பதினாற லாற்
புகலில்வே றிலையிவர்க்குப்
பூரணம தானகலை யறுபத்து நாலுண்டு
பொய்யில்லை மெய்யுண்மைகாண்
சீதமிகு முனதெழி லிராக்கால மல்லாது
செய்யும் பகற்போதிலைச்
செப்புமிவர் கீர்த்திப்பிர காசமெண் டிக்கினுந்
திகழிரவு பகலுமுளதாம்
ஏதமில் லாமலே யிவர்களுட னின்னைநிக ரிடினுநீ நிகரில்லையால்
எங்கள்பெரு மான்முடிக் காபரண மா மென்ன
வெண்ணியே மிகவுநண்ணி
ஆதரவ தாயுன்னை வரவழைத் தாரிவர்க ளம்புலீ யாடவாவே
ஆதிசெங் குந்தர்சிவ சோதிதன் மைந் தருட
னம்புலீ யாடவாவே.

அம்பரம துனதிடத் தரவினால் மிகவுநீ
யல்லல்பட்டயர்வதெல்லாம்
அம்பிகை யிடத்துநம் பெருமா னுடன் சொல்லி
யவ்வா தனைப்போக்குவார்
உம்பர்வந் துனதுடலி லமுதகலை யைப் பறித்
துண்ணநீ மெலிவதெல்லாம்
ஓங்குமயில் வாகனத் தண்ண லுட னேசொல்லி
யும்பரனு காமற்செய்வார்
நம்பிநீ யுறைகின்ற தானமுந் தானமல
நாடியிவர் பாலடைந்தால்
நமதம்மை யுமையெனுந் தாயுடன் சொல்லியே
நற்கதியி லீடேற்றுவார்
அம்புவியி லிவர்களைச் சேருநற் றுணை யுனக்
கம்புலீ யாடவாவே
ஆதிசெங் குந்தர்சிவ சோதிதன் மைந் தருட
னம்புலீ யாடவாவே.

மிசையான தேவருட னீயுமச் சூரனால்
வெஞ்சிறைப் படுமந்நாள்
வீரமயில் வாகனன் றுணைவராய் வந்துன்னை
விடுவித்த தறிகிலாயோ
திசைநான் முகன்றனது மைந்தன்செய் வேள்வியிற்
சிக்கிவிண் ணவரோடிடச்
சிவனான வீரமா வீரனடி யாலுனைத்
தேய்த்துவிட் டதையறியையோ
பசியாம லெந்நாளு முப்பத்தி ரண்டறம்
பாலிக்கு மம்மையுமையாள்
பாதச் சிலம்பிற் பிறந்தா ரழைத்தாற்
பயப்படே லிவர் முனிந்தால்
அசையாத வெண்டிக்கி லொருத்திக்கு மிலையுனக்
கம்புலீ யாடவாவே.
ஆதிசெங் குந்தர்சிவ சோதிதன் மைந் தருட
னம்புலீ யாடவாவே.

இட்டார் பெரியோ ரெனக்கேட்டிங் கிரவும்
பகலு மருள்புரியும்
ஈகை யுடைய பெரியோர்க ளேமக்
களபம் பரிமளிக்கும்
மட்டார் கடப்பப் புயவீர வாகுத்
தலைவர் வருகவே
வளஞ்சேர ரருணா புரியில்வந்தோர்
வருக
வருக வருகவே.

சத்தம் பயிலு மழைமுகிலுந் தழைக்குஞ்
சீதக் கமுகினமும்
தந்தி மருப்பு மலைவேயுஞ் சசியும்
பனித்தண் டாமரையும்
கத்துங் கடல்வா யிப்பிகளுங் கரும்பும்
கனிப்பொற் றிருப்புயமும்
கன்னி மடவார் பொன்கழுத்துங் கருஞ்சு
கரத்தி னிருமருப்பும்
சுத்தம் பயிலும் பசுத்தந்தந் தோயுந்
தூய சங்கினமும்
துகடீர் குரண்ட மணிச்சிரசுந் துள்ளும்
புனல்சேர் மீன்றலையும்
முத்தஞ் சொரியுந் திருக்காஞ்சி மூதூர்க்
கிறையோர் வருகவே
முனைசேர் பஞ்ச வணவிருதுமுடிக்குந்
திறலோர் வருகவே.

செச்சை மணிமா மேடையினுந் தேரோ
டியநற் றெருத்தோறும்
செந்நெற் பசும்பூங் கழனியினுந்
தீட்டுஞ்
சுதைமா ளிகைமீதும்
பச்சென் றொளிரு மரகதமும் பரிகை
மேடைக் கொடிகளிலும்
பால்போ லெரிக்குந் தரளமணிப்
பணிக்கோ
புரத்தின் முடிமிசையும்
உச்சந் திகழ்வெண் மதிதிகழ மோங்கும்
பளிங்கு மாடத்தும்
உம்பர் தொழுமா லயந்தோறு மொண்
பூங்
கமல மாதிருந்து
மெச்சு புகழ்சேர் கச்சிநகர் விளக்குந்
திறலோர் வருகவே
வெண்மா மதிநற் குடைநிழற்றும்
வேள்மைத்
துனமார் வருகவே.

வேறு

திலத நுதலி லெழுதியழகு
சேர்க்க வருக வருகவே
செவ்வாய்க் கனிமுத் தாடமடியிற்
சேர்த்தணைத்திட வருகவே
முலைகொ டுத்துடல் புழுதிதுடைத்து
முத்தா டிக்கொள வருகவே
முழங்குஞ் சிலம்புங் கலீன்கலீனென
முன்னே யோடி வருகவே
நிலவெனு மிளநகை யுலாவி
நில்லா தோடி வருகவே
நித்திலச் சுட்டிபொன் கதிர்பரப்பிட
நிறைபொன் னணிய வருகவே
மலை மடந்தை சுதர்கரமுகில்
மன்னர் வருக வருகவே
வல்லா னுயிர்கொல் லாதவீர
வாகுத் தலைவர் வருகவே.

விதரண மிகுநிபுண செங்குந்த
வீரர் வருக வருகவே
விண்ணோர் சிறையை விடுவித்தவரை
மேன்மை செய்தவர் வருகவே
சதுரு பாய தருமநெறிகொள்
சத்யரிச் சந்த்ரர் வருகவே
தாதவிழ் பூமலர் நீபமாலிகை
தரிக்கு மன்னவர் வருகவே
அதிரு மொன்னலர் பணிபதாம்புய
ராடுந் தாளவர் வருகவே
அட்டதிக் கெங்கணும் புகழ்படைத்திடு
மதுலர் வருக வருகவே

மதுரை நகரி லரசுபுரியு
மன்னர் வருக வருகவே
வல்லா னுயிர்கொல் லாதவீர
வாகுந் தலைவர் வருகவே
சேலார் விழிகளெனச் சொல்மாதர்கள்
தேடுந் திண்புயர் வருகவே
சிரச்சிங் காதனங் கவிக்குதவிய
தீர வீரியர் வருகவே
நாலா கலைகற் றுலகிற்பரந்த
நல்லோர் வருக வருகவே
நம்பினபே ரைத்தம்ப மெனவைத்து
நடத்து நாதர் வருகவே
சூலா யுதனைச் செயித்தவானவர்
துணையடிக் கன்பர் வருகவே
சுருதி நிலைமை மனத்தினிறுவு
தூய ரேயர் வருகவே

வேறு

பத்தி கொடுக்குந் தமிழ்நூலைப் படித்துப் படரும் பேரறிவைப்
பால்போற் கருதிப் பலகாலும் பழகப் பழகப் பரிந்தோடச்
சித்தி கொடுக்குந் தவத்தோரைச் சேர்ந்து மவர்கள் திருவாக்கைச்
செம்மைப் பொருளா மெனக்கருதித் திரியுங் கரணத் தினையடக்கி
அத்து விதத்தி லொருமைகொண்டங் கசைவற் றிருக்கு மொருபொருளை
அணுகிப் பெருகு மானந்த வருள்சேர் கடலி னமிழ்கின்ற
முத்தி கொடுக்குந் திருக்காஞ்சி முதல்வோர் முத்தந் தருகவே
மோதுங் கரவல் லானைவென்றோர் முத்தந் தருக முத்தமே.

மன்னுங் கிரிகை யோர்தமக்கு மாசற் றுயர்ந்த தவத்தோர்க்கும்
மணக்கு மறைவே தியர்தமக்கும் வாரி யுடுத்த புவியோர்க்கும்
பன்னுந் தமிழைப் படித்தோர்க்கும் பசித்த வர்க்கும் பகையோர்க்கும்
பாரிற் கடன்பட் டடைந்தவர்க்கும் பகருஞ் சமய வாதியர்க்கும்
மின்னுங் கிரீட வரசருக்கும் வேண்டித் தமைவந் தடைந்தோர்க்கும்
வேளை யெரித்த முக்கண்ணன் முதலாந் தேவர் பூசனைக்கும்
முன்னின் றருளுங் கனகமழை முகிலோர் முத்தந் தருகவே
மோதுங் கரவல் லானைவென்றோர் முத்தந் தருக முத்தமே.

முத்தப்பருவ முற்றிற்று.

வருகைப் பருவம்

குளமே வியசெந் திலதமின்னார் குவளைக் களைகள் பலகளைந்து
குரவை யிடும்பூங் கழனிதொறுங் குதித்து மடைதோய் கயல்வெருள
இளமே திகள்வந் தொருகோடி யிறங்கிப் படிய வருவாளை
எழுந்து குதித்துக் கமுகவனத் திலகு மடலின் றிரள் கிழித்துத்
தளமே வியசெங் கழனிவயற் றலைக டோறும் விளையாடித்
தத்திக் கயல்முக் கனிகளெல்லாந்தானே யுழக்கித் திரும்பிவரும்
வளமே வியதென் கச்சிநகர் வந்தோர் வருக வருகவே
மாகாளி யைக்கால் விலங்குதைத்தோர் வருக வருக வருகவே.

நலமா கியமல் லிகைவனத்தில் நறும்பூ வருந்திச் சுரும்பினங்கள்
நயந்து விதஞ்சேரி ரிசைபாட நத்துங் கவிகள் தாளமொத்தக்
குலமா மயில்க ளொருகோடிக் குலவி நடன மதுபுரியக்
கோக னகச்செந் திருவிருந்து கூத்துப் பார்க்கு முத்துவனம்
பலமா மணிகள் கொடை கொடுப்பப் பசும்பூ வனங்கள் மலர்சொரியப்
பாரா ளரசர் கண்டுமெச்சும் பான்மை தவிராப் புகழ்மேவும்
மலைமா துமையாள் தவஞ்செய்கச்சி வாழ்வோர் வருக வருகவே
வளச்செங் குந்த குலத்தில் வந்தோர் வருக வருக வருகவே.

நட்டா ரிரவோர் மறையோர்க்கு நாட்டுந் தமிழ்நன் னாவலர்க்கும்
நம்பி மிருநீர் தம்பமென நாடி யடைந்தோர் தங்களுக்கும்
பட்டார் கொடிசே ரிடையார்க்கும் பான்மை யுடைய தவத்தோர்க்கும்
பசித்தோர் தமக்கும் பாருலகிற் பலரு மதிக்கப் பான்மையுடன்

முத்தப் பருவம்

விம்முங் கடலிற் பணிலமுத்தும் விரவுங்
கரைசே ரிப்பிமுத்தும்
மேகத் துதிக்கு மணிமுத்தும் வேயி
னிடத்து விளைமுத்தும்

கொம்மை முலையார் களத்தின்முத்துங்
குளிர்மா
மதியந் தருமுத்தும்
கோக னகத்தின் மலரின்முத்துங்
குரண்டத்
தலையின் விளைமுத்தும்

செம்மை திகழுங் கரும்பின்முத்துஞ் சீதப்
பனிசூழ் செந்நெல்முத்தும்
சிறக்கும் பவள மனையவுங்கள் செவ்வாய்
முத்துக் கிணையாமோ

மும்மண் டலமும் புகழவந்தோர் முத்தந
தருக முத்தமே
மொழிநா விலகா முதலியர்கள் முத்தந்
தருக முத்தமே.

படிக்கும் புலவோர் தங்களுக்கும் பழமா
மறையோர் தங்களுக்கும்
பாரி லுயர்ந்த தவத்தினர்க்கும் பசியால்
மெலியும் வறிஞோர்க்கும்

வடித்த புகழ்சே ரரசருக்கு மலரோன்
முதலாந் தேவருக்கும்
மகிமைக் குருவா சிரியருக்கும் வளர்சங்
கீதவிஞ் சையர்க்கும்

கொடிப்பொன் னிடையார் தங்களுக்குங்
குலையா
நிலைமை யுடையார்க்கும்
கொண்ட வறுமை குலைந்தோடக்
குளிர்பொன்
கொடுத்தே யவர்விரதம்

முடிக்குந் திறமை யுடையார்கள் முத்தந்
தருக முத்தமே
மொழிநா விலகா முதலியர்கள் முத்தந்
தருக முத்தமே.

கடிகொள் கமலப் பசுந்தேனுங் காமர்
குமுதச் செழுந்தேனும்
கனமூன் றியகொம் பிற்றேனுங் கருதுங்
கொடிமல் லிகைத்தேனும்

வடிகொண் மலர்ச்செண் பகத்தேனும்வாசப்
பசுந்தா ழையின்றேனும்
வண்டுகூடி யுழக்குபுன்னை மலரிற்
சொரியும் பசுந்தேனும்

மடல்விண் டலர்முல் லையிற்றேனும்
வாய்த்த
மலர்ச்சா தியின்றேனும்
வழிந்து திரண்டு பெருக்காறாய் வயல்க
டோறும் பாய்ந்துதிரை

முடுகுந் திருக்கச் சியிலரசர் முத்தங்
தருக முத்தமே
மொழிநா விலகா முதலியர்கள் முத்தந்
தருக முத்தமே.

தொல்லை மருவார் போர்களத்திற்றுதிக்கை
வலிய மால்யானை
சுரத நடனப் பரித்திரள்கள் சூழு
மிரதங் காலாள்கள்

வில்லும் வாகைக் கணைத்திரளும் வீசுந்
திரள்வாள் வல்லையமும்
வெடியுந் துடிப்பீ ரங்கிகளு மிக்க
முனைக்கட் டாரிகளும்

ஒல்லை யுடன்கை விட்டயர வுடல்கால்
தலைமூ ளைகள்சிதறி
ஓடி யுதிரம் பெருகவெல்லு முயர்வீ
ரியர்கை ரகுராமர்

முல்லை நகைச்செங் கனிவாயர் முத்தந்
தருக முத்தமே
மொழிநா விலகா முதலியர்கள் முத்தந்
தருக முத்தமே.

இந்துங் கதிருந் திசைமாறி யெழினுங்
கடனீர் சுவறிடினும்
ஈட்ட வளர்ந்த மகமேரு விடிந்து
பெயர்ந்து விழுந்திடினும்

வந்து பொழியு மழைமாரி மறுத்துத்
துளிகள் வறண்டிடினும்
வானத் தமரர்க் கரியதெய்வ மறைமா
மொழிபொய் வழங்கிடினும்

சந்த மிகுந்த திருமாலின் றனது கமலக்
கரத்தில் வைத்துத்
தரிக்குங் கணைகள் தவறிடினுஞ் சாற்று
மொழிகள் தப்பாது

முந்து புகழ்க்கச் சியிலரசர் முத்தந்
தருக முத்தமே
மொழிநா விலகா முதலியர்கள் முத்தந்
தருக முத்தமே.

திரிதரும் பவளமென மின்னுகா லன்னங்கள்
சேவலொடு கூடிமருவும்
சிறகா லணைத்துவெண் பணிலங்கஎைத்தனது
சிறுகுழவி யெனவளர்க்கும்
தருதிரு வணாமலையில் வருசைவ முதலியர்கள்
சப்பாணி கொட்டியருளே
சங்குந்து வயல்மேவு செங்குந்த வளநாடர்
சப்பாணி கொட்டியருளே.

தீதொன்று நினையாத சிந்தையது பெற்றோர்கள்
செங்கடப் பந்தாரினோர்
சேவலங் கொடியினோர் நாவிலங் காதவர்கள்
செஞ்சவர மதுபடைத்தோர்
மூதண்ட மளவுமர சாளுமச் சூரன்முன்
முடுகுமுத் தண்டமொழிய
மூவிரு முகத்தவன் றுணையாக வந்தவர்கள்
முச்சக மதிக்குமறிவோர்
தாதொன்று மலரளக பாரமங் கையர்கள் வேள்
தன்னைநிக ரானவடிவோர்
தறுகட் புலித்தண்டை மல்லாரி சேகண்டி
சகலவிரு தும்படைத்தோர்
கோதண்ட மான்மருக ராய்வந்த ரணசூரர்
கொட்டியருள் சப்பாணியே
குருபூசை சிவபூசை மறவாத தயவாளர்
கொட்டியருள் சப்பாணியே

நூபுர முழங்குதிரு வடியரம் பையரெலா
நுண்ணிடை யசைந்துமெலிய
நுவலரிய கற்பகா டவிமலர் சொரிந்தொரு
நொடிப்பொழுது மகலாமலே
மூபுர மெரித்தநகை யேகம்ப வாணர்தம்
முழுவழகு திகழநின்ற
முடுகுதூ லப்பெரிய சிவலிங்க மென்னவே
முத்திநெறி யைக்குறித்து
மாபுரங் கொண்ட திரு மேனிமா லயனுமவ்
வானவர் குழாத்தினுடனே
வந்துவந் தனுதின மருச்சனை புரிந்துநல்
வரமுதவு கெனவழுத்தும்
கோபுரம் வானளவும் வளர்கச்சி நகரதிபர்
கொட்டியருள் சப்பாணியே
குருபூசை சிவபூசை மறவாத தயவாளர்
கொட்டியருள் சப்பாணியே.

செந்திரு மடந்தையுறை மார்பர்சோழேந்திரன்
சீர்கொண்ட சமுகமதனிற்
சென்றுவிடை கொண்டுகண் டோர்கள் கொண்டாடவே
தீரவீ ரியமதாக
வந்துமக மாயிதிரி சூலிமா காளிமுன்
வலியவர மதுவினவியே
வாங்கிக்கொண் டப்பொழுது வீரதத்துவமுடன்
வலியதூண் மிசையேறியே
தந்திரவல் லானுடைய புரிசையுட் சென்றவன்
றலையறுக் கும்பொழுதினில்
தையலவன் மனைவிமங் கிலியமுத வென்னவே
தந்துபொற் றலைகொணர்ந்தோர்
கொந்தலர் கடம்பணி புயாசலர் மகிபாலர்
கொட்டியருள் சப்பாணியே
கோதற்ற செங்குந்தர் வீரநா ராயணர்கள்
கொட்டியருள் சப்பாணியே.

வேறு

வள்ர்தா ழிசையுலாநன் னெறிசேர் பரணிகோவை
குற்றமில் நற்றூது
வகைசேர்மடல் கள்சார மியல்சேர் கவிதைமா
லையின்னிசை யிற்கூறும்
ஒளிசே ரகவலாசு கவியோ டினியபாவை
கற்றவர் சொற்றபாடல்
உடனேபுனைசெய்தானை நவமாமணிபொன்னுடை
பொற்பணி நற்சீர்மை
வளமார் கடையநீடு விரலா ழிகள்மதாணி
முத்தணி நட்போடே
வகையாயு தவுவோர்கள் நயவாசக நன்மேலர்
சற்குண மிக்கோர்கள்
குளிர்சேர் கயிலைகாவ லுடையோர் பரிவினோர்கள்
கொட்டுக சப்பாணி
குருபூசையு மெய்ஞ்ஞான சிவபூசையுமுள்ளோர்கள்
கொட்டுக சப்பாணி.
சப்பாணிப் பருவ முற்றிற்று.

இலக்கவீரர்

உமையி னுருவொளிச் சத்திக ளஞ்ஞான் றுமாபதிதன்
இமையு மருள்கொடு சூளுத லும்முவ ளேய்சினத்தால்
சமையும் வியர்விற் கரவாளி னோடுஞ் சனித்துக்கந்த
சிமைய முறுமிலக் கத்தோர்செங் குந்த சிலாக்கியரே.

ஆயிரத்துத் தொள்ளாயிரவர்

பாடா ருமிலக் கத்தொன் பதின்மர் பயந்தளித்த
ஒரா யிரத்துத்தொள் ளாயி வரர்கண்மற் றூழிமுதல்
பேரா னிறைந்த பெரியோ ரெனப்பல்ப்ர பந்தம் பெற்ற
சீராள ரோடவர் சேல்வர்செங் குந்த சிலாக்கியரே.

திருக்கச்சி யாளவந்த வள்ளலார் மடாலயச் சைவாசாரியர்.

அன்றா ளுடைப்பிள்ளை கண்டோங்கும் பாளய மாகிக்கச்சி
நின்றாடு மூருட் சமயாதி தீக்கை நிறுவி முத்தி
குன்றா வகையிற் றந்தாளவ ரும்வள்ள லார்குழுவிற்
சென்றா டுரிமையர் யாருஞ்செஞ் குந்த சிலாக்கியரே.

திருவாலங்காடு கார்க்கோடக மடாலயச் சைவாசாரியர்

முக்கண னெண்டோண் முதல்வனோர் தாளண்ட முட்டவிட்டங்
கொக்கநின் றாடு மமரியை வென்ற வுலப் பினலம்
புக்குறு மால வனத்திற்கார்க் கோடன் புரிமடத்தெண்
டிக்கும் மெச்சக்கலை தேர்ந்தோர்செங் குந்த சிலாக்கியரே.

திருவழுவூர் வேதநாயக மடாலயச் சைவாசாரியர்

பூசல்வெண் ணீறும் புலம்பனல் மாபெரும் புகனரகென்
றேசி யிகலால் வழுவுவித் தோநிறை முன்னிலமை
பேசியேகி னான்மறை யோதக் காட்டி வேதப் பெருக்கின்
றேசுறு நாயக ரென்போர்செங் குந்த சிலாக்கியரே.

மெய்கண்ட சிவாசாரியர்

முந்தடன் மொய்ம்ப னருந்தவ மாற்று முசுமுகனை
நிந்தைசெ யூழ்முறை நிற்ப வுலகி னிரீச் சுரர்கோள்
உந்த மகதி முனியர் னாரிடத் தோதவுவை
சிந்தச் சுவேதத் துதித்தோர்செங் குந்த சிலாக்கியரே.

கிளைநாட்டு மடாலயச் சைவாசாரியர்

பண்டெம தனைப் பரனா ரிடம்பெறப் பண்ணுறுநற்
றொண்டி னிலைமைக் கிடுமெல்லை நான் கையுஞ் சூழுமொன்பா
னென்டனி நாட்டு ளுறைகைக் கோளருக்கிருந் தீக்கைசெயும்
திண்டியை யொப்பவர் யாருஞ்செங் குந்த சிலாக்கியரே.

திருக்கச்சிமாவடித் தேவசிங்காசனாதிபதிகள்

காவல ராகிப்பன் னாட்டுளு மேழ்விவ காரமெலாம்
சேவகத் தோடினி தாய்ந்து நடுநிலை தேர்ந்துரைப்பான்
மாவடிக் கீழண்டர் சூழமும் மண்டல மன்னவரால்
தேவசிங் காதனம் பெற்றோர்செங் குந்த சிலாக்கியரே.

திருவாரூர் முதலிய சத்தவிடங்கத் தாபகர்

பாரளந் தோனன்று பூசித் திடர்கெடப் பண்ணவர்கோக்
கார வளித்துள வண்ணலை வேண்டி யவனியுளோர்
பூரண வாழ்வுற வாரூர்மு னாமெழு பூம் பதிக்கண்
சீருறத் தாபித்த மேலோர்செங் குந்த சிலாக்கியரே.

நாடு

நீதமிசைக் குங்குயிலே கேடில்செங் குந்த மன்னர்
நாதமொடு வாழ்தருநன் னாடுரையாய் - நீதமெனும்
பூணாரும் பல்கலைதேர் புண்ணியருங் கொண்டாடு
சேணுடுஞ் சோணாடுந்தேர்.

நகர்

ஆடுந் தொழின்மயிலே யங்கையிற்செங் குந்தமன்னர்
நாடும் புனித நகர்கூறாய் - பாடுபுரி
மந்தன் செருக்ககற்றி மாட்சியொடு காட்சிதரும்
கந்தனப யன்பதிகவ் காண்,

மாலை

போதேறித் தேனுகரும் புள்ளேசெங்குந்த
மன்னர் தாதேறித் தேன்யிலிற்றுந் தார்
மிழற்று — யேதும் இரத்தல் செயா
தியார்க்கு மிருமை நல நல்கும்.
அரத்தமுநல் லாத்தியுமே யாம்.

குதிரை

தாலக் கிழங்கிற் றழைவாய்க் குருகேசெங்
கோலக்கை வேலூர் கொக்கிசையாய் - ஞாலமிசை
மைச்சிரவர்க் கெட்டாத வானவர்கோ னூர்தருமுச்
சைச்சிரவங் கோரமெனச் சாற்று

யானை

அன்பிற் பிரிவரிய வன்றிலே செங்குந்தர்
இன்புற்றிவரு மிபமோதாய் - வன்புற்றெண்
காவதப்போ ரேனுங் கடிப்பொழுதிற் றேய்க்குறுமை
ராவதமா றார்சரமு மாம்.

முரசு

கேதஞ் சிறிதுமிலாக் கேகயமே செங்குந்த
நாதர் முரசு நனிவிளம்பா - யோதமெலாம்
சீதமொடு கூடித் திகழுங்கா லோங்கொலிகொள்
வேதமொடு வென்றியுமாம் விள்.

கொடி

நங்கையர்வேய்த் தோள்பழகு நாகணவா யேகுந்த
வங்கையர்தங் கேதனநீ யாய்ந்தறையாய் - துங்கமிகு
காவலொடு வைகித்தங் காவலர்மெய் காக்குமெழிற்
சேவலொடு வேங்கையுமாந் தேர்.

செங்கோல்

தீதீ லருங்கற்பிற் றிகழ்புறவே செங்குந்தர்
நீதிதரு செங்கோ னிலைபுகலாய் - கோதில் பல
வானவரை மானவரை வாழ்விப்பா னெங்குமொன்றே
யானதனிச் செங்கோ லறி.

தசாங்க முற்றியது.

செங்குந்தசிலாக்கியர் மாலை

காப்பு

நேரிசைவெண்பா

கமலன் முதலாக் கழறுபெருந் தேவர்
மும்மலமொழி யத்தி முகனே - யமலனருட்
சீரார்செங் குந்த சிலாக்கியர்மாலை சொலநீ
நேராயென் னாவுவந்து நில்.

சண்முகக் கடவுள்

பொன்னுல கோரவுண் போர்க்குடைந்துற்ற பொழுதமலன்
முன்னுறு மாறு முக்கண் பொறிதர முற்றிவெஞ்சூர்
மன்னுறு மாயேந் திரிபுரி நண்ணியம் மாற்றலனைத்
தின்னுறும் வேல்கொண்ட செவ்வேள் செங் குந்தசிலாக்கியரே.

நவவீரர்

அரனவுண் மாள வுகுத்த வனற்பொறிக் கஞ்சுமுமை
வரமுறு தாட்சிலம் பின்மணி யொன்பதுண் மன்னியெழும்
உருவொளிச் சத்திகண் மாட்டுதித் தீட்டியுவளருளச்
செருமுகங் காணவ வீரர்செங் குந்த சிலாக்கியரே.

தவ்வாது மயிலேறி விண்ணோர்கள் சூழவே
தாட்சிலம் பொலிமுழக்கத்
தகுதிதிகு திகுதியென நடனமுடனேவந்து
தயவுபுரி கருணைமேவச்
செவ்வேள் திருத்தம்பி மார்கச்சி நகரதிபர் சிறுதே ருருட்டியருளே
தேவியுமை பாதச் சிலம்பில்வரு வீரியர்கள்
சிறுதே ருருட்டியருளே.

கொங்குலா வியசோலை மேவிய வயோத்தியிற்
கொண்டதச ரதனெனுமகா
கொற்றவன் சேயெனத் தோன்றிவிசுவாமித்திரர்
கூடவே கித்தாடகை
துங்கமா கச்சயங் கொண்டுமிதி லாபுரித்
துரைசனகன் மகளைவேட்டுத்
தோலா திருக்கு மயோத்தியில் வந்தபின்
தொல்லைவன் வாசமெய்திப்
பங்கமி லிராவணன் றலைகளீ ரைந்தையும்
பறிகொடுத் தோடவென்று
பரிவுகொடு வீடணர் பட்டமுங் கட்டிப்
பரித்தரா மாவதாரச்
செங்கண்மால் மருகரென வந்தசெங் குந்தர்கள்
சிறுதே ருருட்டியருளே
தேவியுமை பாதச் சிலம்பில்வரு வீரியர்கள்
சிறுதே ருருட்டியருளே.

சிறுதேர்ப்பருவம் முற்றிற்று.

அரங்கேற்றியகாலமுதலியன

பன்னிருசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்

அருள்பெறு சகாத்தமதொ ராயிரத் தறுநூற்றொ
டைம்பஃது மேழுக்குமேல்
அச்சுதனன் னாளினிற் கதிர்வார மதுதன்னி
லதிசயக் கச்சியதிபர்
பெருமைபெறு மாயிரத் தொள்ளா யிரத்தவர்
பிரபந்தத் தமிழ்க்கேட்டிடும்
பேசரிய வல்லானை வென்றசெங் குந்தர்தம்
பெருமையாங் கண்ணின்மணியோர்
தருமதுணை யானபேர் தாட்டிக முள்ளபேர்
தருவைநிக ரானபெரியோர்
தந்தபொன் னாடைகரி பரிவாக னத்தோடு
தங்கப் பதக்கமுதலா
வருபொரு ளிராசியாய் வரையாம வீந்தபேர்
வளர்பஞ்ச வண்ணவிருதோர்
வளமையா நவவீர வுயர்சிங்க மானபேர்
வனபுலிக் கொடிவாழியே

வாழ்த்து

அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

மாதவ முடைய தேவி மலரடிச் சிலம்புதித்த
தீதிலா வீர வாகு முதலிய தீரர் தந்த
பூதர மென்ன வோங்கு புயமுடைக் குந்தர் வாழ்க
நீதிசேர் புகழி னோங்கு நெடுந்தொண்டை நாடும் வாழ்க.

பிள்ளைத் தமிழ் முற்றியது

தசாங்கம்

காப்பு

நீசாங்க வீட்டியர் - தசாங்க முரைசெய
கசாங்க னடியிணை - வசாங்க மாமரோ

மலை

பொன்னவிரும் பைங்கூரற் பூவையே செங்குந்த
மன்ன ருறையு மலைபகரா - யின்னலற
வந்தவரை யாதரித்தும் வாழ்வித்து மோங்கிவளர்
கந்தவரை நேரிவரை காண்.

யாறு

செம்பொற் சிறையனமே செல்வச்செங் குந்தமன்னர்
அம்பொன் கொழித்திடுநல் லாறியம்பா - யெம்பரையைத்
தங்கையெனக் கொண்டுவிணைத் தாங்கி மணைப் போற்றுசிவ
கங்கையுமொண் காவிரியுங் காண்.

பந்தாடு முலைமாதர் தழுவுதிண் புய
மிசைப்
படர்தீப மாலையாடப்
பங்கய முகத்தினிற் றரளவெயர் வாடப்
பசும்பொனரை ஞாணுமாடச்
செந்தா மரைப்பொய்கை சூழ்தொண்டை
வளநாடர்
சிறுதே ருருட்டியருளே
தேவியுமை பாதச் சிலம்பில்வரு
வீரியர்கள்
சிறுதே ருருட்டியருளே.

பைம்பொன்னா லிலையுதர வெண்டாள
நகைமாதர்
பணிமலர்க் கூந்தலிருளைப்
படர்முகி லினங்கவர வந்துதண் டலை
தொறும்
படியும்வா ணுதலினழகை
நம்பிவா னினிலவு பின்சென்று கவரவே
நறியமே டையிலூரவும்
நாகரிக மயிலினஞ் சாயல்கண் டிவர்கள்
பின்
னாடியா டித்திரிதர
அம்புயஞ் சூழ்புனல் குடைந்தாடி மீளிலவ
ராளுநடை கண்டுபழக
அன்னங்க ளொருகோடி சேவலொடு
பின்செல்ல
வரியபல் வளமேவிடும்
செம்பொன்னா லயமேவு கச்சியம் பதிய
திபர்
சிறுதே ருருட்டியருளே
தேவியுமை பாதச் சிலம்பில்வரு
வீரியர்கள்
சிறுதே ருருட்டியருளே.

மேவிவளர் பூகத்தின் முத்தத்தை யுங்
கன்னல்
விளைகின்ற முத்தத்தையும்
விரியும் புனற்சங்கு முத்தத்தை யுங்
கழனி
விளைநெல்லின் முத்தத்தையும்
தாவுயெழு கின்றவேய் முத்தத்தை யுங்
கலைத்
தண்ணிலா முத்தத்தையும்
தாமரைப் பூவில்வளர் முத்தத்தை
யுங்கார்க
டந்தமணி முத்தத்தையும்
பூவையர்கள் கந்தர முத்தத்தை யுங்கரிப்
பொற்கொம்பின் முத்தத்தையும்
புகழ்கின்ற வயல்மாதர் மதுவுக் களக்
கின்ற
புதுமைசேர் கச்சிநகரில்
தேவர்தொழு கருமாறி பாய்கின்ற திறல்
வீரர்
சிறுதே ருருட்டியருளே
தேவியுமை பாதச் சிலம்பில்வரு
வீரியர்கள்
சிறுதே ருருட்டியருளே.

அசைதருஞ் செண்பக வனங்கோடி
வேலியா
யதனடுவில் விளைகழனியில்
அடர்கமுகு வனமெலா முத்தங்கள்
சொரியவே
யதனடுவி லொருகோடிநீள்
பசியமட லேந்தியொரு பொன்னுருவ
மாகியப்
பண்பாளை யிளநீர்தரும்
பரிவுடைய தென்னைவன மெதிர்நின்று
தொழுகின்ற
பான்மையு மதன்றிமற்றும்
ஒசியுமிடை மாதரொடு கொடிபோல
மேடைமே
லுலவிநகை நிலவொளியினால்
உம்பரை மயக்கிடும் புதுமையும்
புதுமையா
யுள்ளத்தி லறியுமமரர்
திசைதொறும் பூமாரி பொழிகச்சி நகரதிபர்
சிறுதே ருருட்டியருளே
தேவியுமை பாதச் சிலம்பில்வரு
வீரியர்கள்
சிறுதே ருருட்டியருளே.

அவ்வான விந்திரனொடு முப்பத்து முக்
கோடி
யமரருந் தொழுதிறைஞ்சும்
அழகிய திருப்பரங் குன்றுசீ ரலைவாய்
பொன்
னாவினன் குடியேரகம்
வெவ்வாதை யணுகாத பலமலைகள்
மதயானை
மேவுதென் சோலைமலையும்
மேதினியி லாறுதல மகலாது குடி
கொண்டு
மெய்யடி யரைப்புரக்கத்

நிறக்குங் கமலக் கரையிடத்தில்
நெடிதாய் வளைத்த வண்டலத்தில்
நிரைத்த தரள மலர்ப்பதத்தில்
நேர்பட் டிடிலொன் னார்பணிந்து
மறுக்கொண் டிருக்கு மறுவேயிம்
மறுவா மெனவெண் ணியநினைவோர்
வார்கோ கனக முலைத்தாயார்
வருந்தி யழைத்து மடியிருத்தி
வெறிக்கொண் டிருக்குந் திலதநுதல்
வியர்வே திருபொற் பதப்புழுதி
மிகுதி யிதுவே தெனவுரைத்தால்
மெய்வா சகமென் விளம்புவிர்காள்
சிறக்கும் புகழைப் படைத்தோர்கள்
சிறியோஞ் சிற்றில் சிதையேலே
சேணாட் டமரர் சிறைவிடுத்தோர்
சிறியோஞ் சிற்றில் சிதையேலே.

நேச மிகுந்த சோழேந்திர
னிறைந்த கொலுவில் வரிசைபெற்றோர்
நெடிய வலிவல் லான்மனைவி
நினைவின் படிமங் கலமளித்தோர்
ஓசை மிகுந்த கடலுலகி
லொட்டக் கூத்தன் தமிழ்கேட்டோர்
உதவி புரியென் றடைந்தோருக்
குயருங் கருணை யருள்புரிவோர்
வீசுங் கரவொன் னலரவுணர்
வெற்றிக் கொடியைப் பறித்துவந்து
வேலா யுதர்கண் மனங்களிக்க
மிக்கபுகழை நாட்டும் வல்லோர்
தேசம் புகழக் கீர்த்திபெற்றோர்
சிறியோஞ் சிற்றில் சிதையேலே
சேணாட் டமரர் சிறைவிடுத்தோர்
சிறியோஞ் சிற்றில் சிதையேலே.

சிற்றிற்பருவம் முற்றிற்று

சிறுதேர்ப் பருவம்

காரேறு கிரவுஞ்ச மலையுருள நினையாத
கசடரசு ரேசருருளக்
கண்டுதுதி செய்கின்ற தண்டமிழ்ப் புலவோர்கள்
கலியகன் றோடியுருளத்
தாரேறு குழல்மா தரைப்புணர்ந் தவர்கள் மேற்
றங்குமய லேகியுருளத்
தர்க்கமிடு துட்டவல் லான்முடியு முருள் படச்
சதகோடி வரையுமுருள
வாரேறு கனகமுலை மாகாளி தன்னுடைய
வலியுருள முசுகுந்தனாம்
மன்னவன் பலமுருள வலைவீசு கூற்றுவன்
வஞ்சநெஞ் சகமுருளவே
சீரேறு கஞ்சமலர் வஞ்சியுறை மணிமார்பர்
சிறுதே ருருட்டியருளே
தேவியுமை பாதச் சிலம்பில்வரு வீரியர்கள்
சிறுதே ருருட்டியருளே.

வில்வச் சடாடவிச் சிவனுறையு மாரூரும்
வெண்காடு பஞ்சநதியும்
விரைமருவு தண்டலைத் திருவிடைமருதூரு
மிக்கபுகழ் சேர்தில்லையும்
மல்வைத்த முலைபங்க ருறைகின்ற சீகாழி
மாநகரு ஞானமேவும்
வளமிக்க செங்கோடு சாய்க்காடு வொற்றியூர்
வானளவு மருணகிரியும்
சொல்வைத்த காளத்தி காசிரா மேசுரந்
தொழுதிருத் தணிமலையுடன்
சோதிதிகழ் கயிலாய கிரியுமா கச்சியுந்
தொகுசத்த புரியிதுவெலாம்
செல்வப் பெருங்காணி கொண்டசெங் குந்தர்கள்
சிறுதே ருருட்டியருளே
தேவியுமை பாதச் சிலம்பில்வரு வீரியர்கள்
சிறுதே ருருட்டியருளே.

கொந்தார் மலர்ப்பொன் னடியிலணி நூபுரங்
குமுறுமொலி மிகவுமாடக்
குளிருமலர் முன்கையின் முகுதாரி யாடக்
குதம்பையுங் காதிலாட
நந்தா விளக்கெனத் துப்பின் பதக்கமொடு
நவமணியு மார்பிலாட
நலமுலவு நெற்றியிற் சுட்டியாடக்கையின்
நவரத்தின பணிகளாடப்

காரார் சோலைக் கரையிடத்திற்
கமலஞ் சிறந்த நறுநிலத்தில்
கனவண் டரள வண்டல்செய்து
கருதிக் கருதி விளையாடி

நேராய் மலர்பூங் குழல்முடிக்க
நிறைந்த மதியொன் றறியாது
நிற்கு மடப்பே தையருமது
நிகர்வின் முகத்தை யறியோமால்

ஆராய் புலவர் கவியலவே
யடல்சேர் வல்லான் றலையலவே
அஞ்சாச் சூரன் புரமலவே
யழகா ரடிகள் வருந்தாதோ

சேரா வரசர் முடியலவே
சிறியோஞ் சிற்றில் சிதையேலே
சேணாட் டமரர் சிறைவிடுத்தோர்
சிறியோஞ் சிற்றில் சிதையேலே.

காண்டற் கரிய மணவாளர்
கருத்தைத் திருத்தும் விழியாலே
காட்டி மயக்கி வரவழைக்கக்
கருத்தொன் றறியாப் பேதை
யுர்கள்

வேண்டற் குரிய சிற்றில்முற்றும்
வேண்டா தழிப்ப துங்களுக்கு
விருப்போ கருப்ப நீர்பயில்சொன்
மெய்த்தாய் மார்கள் பத்தியுடன்

பூண்டற் கரிய பணிதிருத்திப்
புகழ்ந்து விளையா டெனவிடுத்
தால்
பொன்னார் சிலம்பு கலின்கலினப்
போந்து விளையா டாமலொன்
னார்

தீண்டச் சிவந்த மலர்த்தாளாற்
சிறியோஞ் சிற்றில் சிதையேலே
சேணாட் டமரர் சிறைவிடுத்தோர்
சிறியோஞ் சிற்றில் சிதையேலே.

மேவுந் திசையிற் கிரிகளெட்டும்
விளங்கு மணித்தா ளெனநிறுவி
மிளிர்சேர் சக்கிர வாளநெடு
வெற்பைச் சுவரா யொப்பமிட்டுத்

தாவும் வெளியா காயமெனத்
தனிவீ டாக்கி மணிவிளக்காய்ச்
சசியோ டிரவி தனையேற்றித்
தகைசே ரண்ட மடுக்கடுக்கிப்

பூவின் மகளுங் கலைமகளும்
புகலுஞ் சசியு மரம்பையரும்
பொருந்தி யிழைக்கு மணிச்சிற்றில்
புதுச்சோ றாக்கி யறம்வளர்க்கும்

தேவி யுமையாள் சிலம்பில் வந்தோர்
சிறியோஞ் சிற்றில் சிதையேலே
சேணாட் டமரர் சிறைவிடுத்தோர்
சிறியோஞ் சிற்றில் சிதையேலே.

பெருவா ரிதியிற் படவரவம்
பிறங்கு திருப்பள் ளியிற்கமலப்
பீடத் திருந்து விளையாடும்
பெரிய புகழ்சேர் திருமாதோ

டோருவா திரவும் பகலுமிருந்
தொண்பொற் கமல விழிகடுயின்
றுலகி லுளபல் லுயிர்களுக்கு
முண்ணும் படிக ளளவாகப்

பரிவா யளந்து காத்தருளப்
படைக்கு மயனை மன்மதனைப்
பால ரிவர்க ளெனக்கருதிப்
பாரே ழையுமுண் டுமிழ்ந்தருளும்

திருமால் மருக ருமதடியார்
சிறியோஞ் சிற்றில் சிதையேலே
சேணாட் டமரர் சிறைவிடுத்தோர்
சிறியோஞ் சிற்றில் சிதையேலே.

பருவ முதிர்செங் கரும்பின்முத்தும்
பங்கே ருகத்தின் விளைமுத்தும்
பால்போ லெறிக்கு நிலாமுத்தும்
பசும்பூங் கமுகு தருமுத்தும்

அரிசி யெனவே கழுவியெடு
தரித்துப் பணில நீர்பரப்பி
அடுப்பா யிளநீர்க் காய்கூட்டி
யமுதப் பசுந்தே னீர்தேக்கி

விரிசந் தனக்கட் டையைப்பிளந்தே
விறகா யடுக்கிச் செம்மணியை
வீசிப் புகையா தெரிமூட்டி
வெண்சோ றாக்கி யமுதருந்தித்

தெருவில் விளையா டும்பேதைச்
சிறியோஞ் சிற்றில் சிதையேலே
சேணாட் டமரர் சிறைவிடுத்தோர்
சிறியோஞ் !சிற்றில் சிதையேலே.

பரிவுடைய முப்பத்து முக்கோடி தேவரும் படர்முடித் தேராகவும்
பரிதிமதி யிருவருந் தருமுருளை யாகவும் பகருமறை வடமாகவும்
விரிகமல மலரயன் னூர்பாக னாகவும் மேருகிரி சிலையாகவும்
மிக்கவா சுகிநெடிய நாணாகவுங் கருணை மேவுமால் கணையாகவும்
தருமனத் தக்கினிக் கிடுசமித் தாகவுஞ் சமர்செய நினைக்குமந்தாள்
தக்கவிவர் மனவலிமை கண்டுதே ரடியிடத் தான்முரிந் திட்நகைத்தே
திரிபுர மெரித்ததொரு பரமசிவ னருள் மைந்தர் சிறுபறை முழக்கியருளே
செங்கடப்பந் தொடைத் துங்கவெற் பனையபுயர் சிறுபறை முழக்கியருளே.

அச்சமா யோடிவந் தபயமென் றவர் தம்மை யாதரிக் கின்றபெரியோர்
அஞ்சாத பகைவரிட நெஞ்சாணி யாகவே யடல்செய்படை கொண்ட பெரியோர்
வச்சிரபா ணிக்கடவுள் மெச்சவே சூரரை வதைத்துதவி செய்தபெரியோர்
வானவர்கள் சஞ்சலந் தீர்த்தருளி வானுலகம் வாழ்விக்க வந்தபெரியோர்
உச்சமா மதியமுங் கதிரவனு மாறாடி யோங்குதென் றிசைவடதிசைக்
குதயமாய் வருகினு மொல்காத மெய் வசன முற்றுரைக் கின்றபெரியோர்
செச்சைமா லிகைமேவு கச்சிநகர் வீரர்கள் சிறுபறை முழக்கியருளே
செங்கடப் பந்தொடைத் துங்கவெற் பனையபுயர் சிறுபறை முழக்கியருளே.

சிறுபறைப்பருவம் முற்றிற்று.

கோமேவு வதனக் குறச்சிறுமி யுறைகின்ற குளிர்தினைப் புனவனத்தில்
கோல்பிடித் துச்சிமயிர் மேல்வெளுத் துக்கிழக் கோலமுட னேகியவள்முன்
நாமேவு மிதமுரைத் தினியதினை மாவுண்டு நாவுலரு தென்மயக்கி
நற்புனச் சுனைவழியி லற்புத மணம் புரியு நற்றிணிகை முருகர்துணைவர்
பாமேவு மதுரவிசை பாடிச் சுரும்பினம் பைந்தேனி னமுதநுகரப்
பசுமுகை முறுக்கவிழ்ந் தலர்விரிந் தொழுகுமவிர் பண்புபுனை மல்லிகைப்பூந்
தேமேவு தண்டருத் தொண்டைவள நாடதிபர் சிறுபறை முழக்கியருளே
செங்கடப் பந்தொடைத் துங்கவெற் பனையபுயர் சிறுபறை முழக்கியருளே

சிற்றிற் பருவம்

பூவிற் சிறந்த திருமாதும் புகல்நால் வேதக் கலைமாதும்
பொன்னாட் டுயர்ந்த சசிமாதும் போற்று முமையாள் திருச்சிலம்பில்
மேவிப் பிறந்து காலனுடன் பெரும்போர் விளைத்த விறலோர்கள்
விளங்கு முகத்தில் மென்மீசை மிகவே படைத்த பெரியோர்கள்
நாவிற் சொலினா விலங்காத நல்லோர் வல்லான் மனைக்கன்று
நன்மங் கிலியங் கொடுத்தருளி நாட்டிற் புகழைப் படைத்தோர்கள்
சேவற் கொடிநல் விருதுடையோர் சிறியோஞ் சிற்றில் சிதையேலே
சேணாட் டமரர் சிறைவிடுத்தோர் சிறியோஞ் சிற்றில் சிதையேலே.

சிவாலய குகாலய தருமகர்த்தத்துவ பரி
பாலன ஆட்சியோர்
சோணாட்டு ளுந்தொண்டை மானாட்டுளு
மஞ்சு ராதியரால்
பேணாநின் றோங்குமெம் பிஞ்ஞகன்
கந்தன் பிறங்கிநிற்கும்
மாணார் நிலைய பரிபா லனத்தொழின்
மன்னவென்றும்
சோணாடர் போற்றிடச் செய்வோர்செங்
குந்த சிலாக்கியரே.

தில்லைக்கொடி யேற்றுவித்தோர்

தம்புக ழோங்நூ றோய்ப்பா குணுமிறை
தன்கூபரத்
தும்ப ரமுதி னொழுகு மதையு ணுமா
பதியால்
அம்பல வன்றுச மேற்றுமா திக்கமொ
டார் கொடிப்பா
செம்பிய னேத்திடப் பெற்றோர் செங்
குந்த சிலாக்கியரே

திருமூலதேவர்

ஒப்புயர் வற்ற சிவாகம மேழ்நான்கி
னுண்மையெலாம்
எப்புவ னத்தும் விளங்கவா மேக்கி யிறந்
தவுட
லிற்புகுந் தாண்டுக்கொன் றாகவே மூவா
யிர மனுவைச்
செப்புறு ஞானக் கதிரோர்செங் குந்த
சிலாக்கியரே.

காரித்தேசிகர்

ஆரண மோது மபிடேகர் தம்மி லவ
தரித்துப்
பூரண நற்றமிழ்க் கோவைகள் பாடிப்
புரவலர்பால்
ஏரண வப்பொருள் கூறிப்பொன் பெற்
றிறை யின்பணிகள்
சீரண வச்செய் திறலோர்செங் குந்த
சிலாக்கியரே.

நரசிங்கமுனையரையர்

ஒருநூறு பொன்னை யுலப்பிலி நாட்சைவ
வுத்தமர்க்குத்
தருநூறி லன்புக் கெதிர்தூர்த்த வேடன்
றனித்துறலும்
இருநூறு பொன்றந் திகலும் புறமத
ரேவிடும்பல்
செருநூறும் வாழ்க்கை சிவண்வோர்செங்
குந்த சிலாக்கியரே.

இடங்கழிப்பெருமான்

தன்னர சிற்சைவ மாணெறி வைதிகஞ்
சார்நெறிகள்
மன்னுறு நாளி லரன்றொண்டர்க் குண்டி
வழங்கலற்ற
வின்னலொ டேநெற் களவாடு வோன்மு
னினையவரே.
தின்ன நிதியும் விடுத்தோர்செங் குந்த
சிலாக்கியரே.

முனையவள்ளல்

பொருந்தலர் போர்க்குடைந் திட்டோர்க்
கெந்நாளும் புகலிடமாய்
இருந்தவர்க்கா டெய்தச் சென்றமர்வென்
றதி லெய்திடும்பொன்
விருந்த ரருந்தவர்க் காக்குத லன்றி
விமலனிடம்
திருந்து பணிக்கு மளிப்போர்செங் குந்த
சிலாக்கியரே.

பெருமிழலைப் பெருந்தகை

கருக்கலை நேர்குழற் சங்கிலி கேள்வனைக்
காதலித்த
பெருக்கம தாற்சித்தி யாவையும் பெற்ற
வன் பிஞ்ஞகன்பால்
இருக்கை பெறலறிந் தாற்றாது யோகி
லிணங்கிமுன்னர்
திருக்கயி லைப்பதி மேயோர்செங் குந்த
சிலாக்கியரே.

மெய்ப்பொருண் மூர்த்தி

பன்முறை யாயோ தனத்தெய்த்த
மேலவன் பட்டிமையால்
கொன்முறை யாய்ந்தரன் சின்னங் குலவுறு
கோலமுடன்
சொன்முறை நூல்கர வாண்மறைந் தெய்
தச்சோர் வின்றியுயிர்
சென்முறை செல்ல விடுத்தோர்செங் குந்த
சிலாக்கியரே.

சத்தியண்ணல்

அண்டார் புரத்தைச் சிரித்தெரித் தானை யவன் பொறியைத்
தொண்டா தரிக்கு மவனடி யாரைத் துணிந்திகழ்நாத்
தண்டாயஞ் சிக்கியொள் வாளாற் றறி படத் தக்கணமே.
செண்டா யுதனிற்செய் தீரர்சேங் குந்த சிலாக்கியரே.

செருத்துணைக்குக்குரிசில்

பாராளு மன்னவன் றேவிமுக் கண்ணற் காம் பைம்மலரென்
றோரா ளேடுத்துமோந் தேகலுங் கூந்த லீர்த் தொண்ணசியால்
வாராருங் கோண மறிந்தவள் கேள்வன் கை வாங்கிவிட்ட
சீரார்சொன் மாலை யுடையோர்செங் குந்த சிலாக்கியரே.

கோட்புலிச் செம்மல்

வேயைவெல் தோளிபங் கன்றொண்டர்க் கென்று விசித்தநெற்றீ
நோயையாற் றாதினத் தோருணக் கண்டுள நொந்துதந்தை
தாயை மனையைத் தமரை யவர்முலைத் தண்சுதையுண்
சேயை யசிகொடு மாய்த்தோர்செங் குந்த சிலாக்கியரே.

கூற்றுவத் தலைவர்

ஏர்சான்ற செம்பியர்க் கல்லா விடேமுடி யென்னத்தில்லை
ஊர்சான்ற வந்தண ரோதவு மாகுல முற்றரன்றாள்
ஏர்சான்ற மாமுடி யாகுற வேண்டி நெடுங்கனவில்
சீர்சான்ற வாதுபெற் றாண்டோர்செங் குந்த சிலாக்கியரே.

எறிபத்தநாயனார்

என்று மலர்பறித் தேறூர்திக் கார மியற் றுந் தொண்டர்
நின்றல றச்சிந்துந் தும்பியொ டைவர் நெடுமழுவால்
பொன்ற விடுத்திறை மெய்யன்புக் கின்னு யிர் போக்கவெண்ணிச்
சென்ற வுயிரைமீள் வித்தோர்செங் குந்த சிலாக்கியரே.

கணம்புற்றாபதர்

தொகைபெறும் பல்பொருளாற்சிவன் கோயிலிற்றூய்விளக்கிட்
டகமகிழ் காலின்மை யெய்திக் கணம்பு லறுத்துவிற்று
மிகைகெட லின்றி யதையே யெரித்து மிக்கின்மையால்
சிகையெரித் திட்டசெயலோர்செங் குந்த சிலாக்கியரே.

தண்டியடிகள்

முகைத்த பொழுதே பெறுங்குரு டேகிக் கண் முன்றெரிய
விகைத்த கயத்தொண் டினிதின் முற்றிப் புக வீறிலொட்டாற்
பகைத்த வமணர் குருடாகி யேந்தற் பணிப்பின்வர்
திகைத்து நிலைவிடச் செய்தோர்செங் குந்த சிலாக்கியரே

ஒட்டக்கூத்தர்

மங்காத கீர்த்தி மறைநெறி யாறை மனு முறைகள்
பொங்காநிற் பக்கவிச் சக்கரவர்த் திப் பெயர் பூண்டுதிறை
தொங்கா தவைதரச் சத்தியச் செங்கோல் சுமந்துசிரச்
சிங்கா தனத்திவர்ந் தாள்வோர்செங் குந்த சிலாக்கியரே.

குகனேரியப்பநாவலர்

பிறப்பிலி யீன்ற பிரான்காதை யையவன் பேரருளால்
துறப்பவ ருந்திப் பக்கச்சி யப்பன்முன் சொற்றவறு
திறப்பகு திக்கப் புறத்தோர் பகுதியைத் தீஞ்சுவைகள்
சிறப்ப வுரைத்த திறலோர்செங் குந்த சிலாக்கியரே.

காங்கேயர்

மடம்பெறு மாந்தர் மருடீர மண்டல மாண்புருடன்
இடம்பெற வோங்கு முரிச்சொ னிகண்டை யினிதுரைத்துக்
குடம்பெறு மாமுனி யொப்பத் தமிழைக் குவலயத்தில்
திடம்பெற வைத்த திறலோர்செங் குந்த சிலாக்கியரே.

பொய்யாமொழிப் புலவர்

உரமசைத் தார்கவி சூழ்புவி யாளு முசி தன் முன்னாள்
கரமசைத் தார்ப்பப் புனலமிழ் சங்கக் கவின்பலகை
வரமசைத் தும்பர் வயங்கவு மற்றதில் வாழ்புலவர்
சிரமசைத் தொன்றவும் வைத்தோர்செங் குந்த சிலாக்கியரே.

பகழிக்கூத்தர்

புதைந்தோட மயேந் திரமன்று செற்ற புனிதன்வினை
வதைந்தோட யார்க்கும்பிள்ளைத் தமிழ் ழோதென வாய்மலர்ந்தே
பதைந்தோடப் பாவலர் பாடும்வேப் பத்தவர் பாடுகுன்றிச்
சிதைந்தோடச் செய்திற லோர்செங் குந்த சிலாக்கியரே.

இரட்டைப்புலவர்

அத்தை மகன்குரு டம்மான் மகன்முட மாகிக்கீழ்மேல்
ஒத்துறைந் தேகூறு பாடோ டணிகொ ளுலப்பில்கவி.
முத்தரி லோதியே கம்ப ருலாமுன் மொழிந் தெவரும்
சித்த முவப்பத் திரிவோர்செங் குந்த சிலாக்கியரே.

படிக்காசுப் புலவர்

புகழ்பூத் திடுந்தில்லை மேலோனையம் மையைப் போற்றியெங்கும்
இகழ்பூத் திடாதபொற் காசைப் பஞ் சாக்கரத் தின்படிமேல்
நிகழ்பூத்தல் பெற்றுப்புள் வேளூர்க் கலம் பக நீட்டியறாத்
திகழ்பூத்து நின்ற செயலோர்செங் குந்த சிலாக்கியரே.

கச்சியப்ப முனிவர்

மேனாள் வழுவூர் மறைநாத ருட்பஞ்சம் வீட்டிப்பின் னோன்
மானாரை வேட்கு மவர்பா லுதித்துக் கைம் மாமுகவன்
ஆனாத காதை யகிலத் தவர்தொழ வாய்ந்துரைத்த
தேனார் கிளவிப் புலவோர்செங் குந்த சிலாக்கியரே.

சிதம்பர சுவாமிகள்

அங்கயற் கண்ணி யருள் வாங்கிச் சாதன மாகிய நான்
கெங்கு முலவுறச் சாந்தலிங் கன்மொழிக் கின்னுரையும்
பங்கமில் கண்ணுடை வள்ளன் மொழிக் குறை யும்பகர்ந்த
சிங்குவை யுற்ற திறமோர்செங் குந்த சிலாக்கியரே.

பிறசை அருணாசல சுவாமிகள்

எட்டு மிரண்டு மெண்ணீரா று தத்துவத்
தேதயங்கி
ஒட்டியு மொட்டா வொருபொரு ளைச்
சுட்டி யோர்வையெலாம்
வெட்டி விளக்குநல் வேதாந்த சாகை
விரித்திடும்வா
கிட்ட வுரைமுனாட் செய்தோர்செங்
குந்த சிலாக்கியரே.

வாழ்த்து

ஆவாழி வாழி யந்தண ருறுமறை யாத
ரிக்கும்
கோவாழி வாழிசெங் குந்த சிலாக்கியர்க்
கூறிடுமம்
பாவாழி வாழி யதுபகர் வோரும் பான்
மைமிகும்
கூவாழி வாழிய வாழிய ரோவிசை
கூர்தரவே

செங்குந்தசிலாக்கியர்மாலை முற்றியது.

விருந்து

'விருந்திருக்க உண்ணான் வேளாளன்' என்றொரு பழமொழியுண்டு. இது மிகச் சிறந்த கருத்தினைக் கொண்டதாகும். வேளாளன் என்று குறிப்பாகக் கூறியதன் நோக்கம் எல்லோருக்கும் தெரிந்ததேயாகும். வேளாண்மைத் தொழில் செய்பவன் வீட்டில் எப்போதும் உணவுப் பொருள் இருந்து கொண்டே இருக்கும் என்பதும் ஒரு கருத்து. வேளாண்மைத் தொழில் செய்பவனுக்கு எப்போதும் பஞ்சமில்லை. என் பதும் அத்தொழில் செய்பவன் மிகத் தாராளமான எண்ணங்கொண்டவனாக இருப்பான் என்பதும் கண்கூடான மெய்யுரையாகும். ஆகவேதான் இப்பழமொழி வந்தது. விருந் தினர்களை உபசரிப்பதில் மிகவும் பெருமை கொண்டவனாக இருப்பான் என்பதும், விருந்தினர்கள் வீட்டிற்கு வந்தால் அவர்கள் உண்ட பிறகே தான் உண்ணுவான் என்பதும் 'தோன்ற விருந்திருக்க உண்ணான் வேளாளன்' என்று கூறினார். இவ்வரிய பழக்கம் நற்குடியிற் பிறந்த நற்பண்பாளர்களுக்குத்தான் இன்றியமையாதது என்பதன்று. மனிதத் தன்மை பெற்ற அனைவர்க்குமே ஏற்ற கருத்தாகும். இதற்கும் மேலான சிறந்த குணத்தினைத்தான் 'ஈகை' என்று கூறுவர்.

விருந்தினர்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும்போது பழமொழிகளின் உரை நயத்தைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தனர். 'விருந்திருக்க உண்ணான் வேளாளன்' என்ற பழமொழிக்கு அர்த்தம் என்னவென்று நண்பர் கேட்டார். அதற்கு மற்ற நண்பர் உரை சொன்னாராம். விருந்தினர் வீட்டில் வந்து பசித்திருக்க, வேளாளன் உண்ணான். அஃதாவது, அவ்விருந்தினர் எழுந்து போகும்வரை சாப்பிட மாட்டான் என்பதுதான் பொருள். என்று சொன்னாராம். 'இருக்க' என்றால் விருந்தினர் வீட்டில இருக்க 'உண்ணான்' வீட்டில் இருப்பவனே உண்ணமாட்டானாம். வந்தவர் போன பிறகு தான் உண்ணுவானாம். இங்ஙனம் எண்ணுகின்றவர்களை மக்கள் என்னும் கணக்கில் வைக்காமல் மாக்கள் என்னும் பட்டியலில்தான் சேர்த்தல் வேண்டும்.

நன்றி: திருக்குறளில் நகைச் சுவை.

வாழ்வு

உலகில் வாழ்வதனால் என்ன பயன்? என்ற கேள்வியினைக் கேட்டு அதற்குப் பதில் கூறு முகத்தான் ஆசிரியர் வள்ளுவனார் குறட்பா தருகின்றார். பயனுள்ள வாழ்க் கையாக வாழ்தல் வேண்டும். அந்த நோக்கமின்றி வாழ்தல் மனித வாழ்க்கையாகாது. பயன் கொண்டு வாழ்கின்ற வாழ்வினைக் குறிக்க வேண்டியே அரிய குறட்பாவினை ஆசிரியர் தந்தார்.

ஈதல் இசைபட வாழ்தல்; அது அல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

இசைபட அஃதாவது, புகழுடன் வாழ்வதற்குக் கல்வி, ஆண்மை இன்னும் இவை போன்ற குணங்கள் செல்வங்கள் காரணமாக இருப்பவை என்று பேசப்பட்டாலும் மக்கள் உயிர்க் குப் பயன் என்பது ஈகைதான் என்ற உயரிய தன்மை இங்குநன்கு தெளிவாக்கப்பட்டது. ஊதியம் என்பது 'இலாபம்' என்ற கருத்தில் கருதப்படவேண்டியது என்றாலும், மக்கள் வாழ்க்கையினைக் குறித்துப் பேசும் பொழுது அதனைப் 'பயன்' என்றே அமைத் தார். உலகில் உயிர் வாழும் மக்கள் பிறவியல்லாமல் ஏனைய பிற பிறவிகளுக்கெல் லாம் ஈதலும், இசைபட வாழ்தலும் முடியாதாகையால், மக்கட் பிறவிக்கு மட்டும் சிறப் பாக அமைந்துள்ளது இப்பண்பாடு என்பதை நன்றாக எடுத்துக்காட்ட வேண்டித்தான் மக்கள் உயிர்க்கு என்று தெளிவு படக் காட்டினார்.

இன்பமாக இருக்கும்போது ஈகைக் குணம் சிலருக்கு எதிர்பாராத முறையில் வந்து விடுதல் உண்டு. துன்பக் கவலையில் இருக்கும்போது அங்ஙனம் வாராமல் இருந்து விடுதல் இயற்கையென்று கூட நாம் கூறலாம். இன்பமாக இருக்கும்போதும் எள்ளளவும் ஈகைக் குணம் என்பதே தோன்றாத பிறவிகள் இருந்தால் அவைகளை நாம் என்னவென்று கூறுவது?

நன்றி: திருக்குறளில் நகைச் சுவை.

(276 ஆம் பக்கம் தொடர்ச்சி)

நமது கோயில்கள்

(g) ஆலந்தூர் அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில்

சென்ற 19 வது நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் பரங்கிமலை என வழங்கி வந்த இந்த மலைப் பகுதியை ஆங்கிலேயர் தங்களது ஒரு பகுதி சேனைகளுக்கு இருப்பிடமாக வைத்திருந்தனர். அப்போது காளஹஸ்தி பகுதியில் வாழ்ந்து வந்த 10 குடும்பங்கள் அங்கு நிர்வாகம் செய்யப்பட்டு வந்த முகமதியர்களின் தொல்லை பொறுக்க மாட்டாமல் இரவோடு இரவாக தெற்கு நோக்கி வந்து இங்கு தங்கினார்கள். அப்போது இராணுவத்தில் தமிழர்பட்டாளம் ஏற்படுத்தியிருந்தார்கள்.

அதில் மேற்படி குடும்பத்தைச் சேர்ந்த ஆட்கள் சிப்பாய்களாக சேர்ந்துகொண்டு அதன் மூலம் தமது வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். இவர்கள் குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் யாவரும் திருக்காளத்தியப்பனைக் குல தெய்வமாகக் கொண்ட செங்குந்த மரபினைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தாங்கள் தினசரி வழிபடுவதற்கு தங்களுக்கென ஒரு கோயில் இல்லாதிருப்பதை உணர்ந்து எப்படியாவது ஒரு விநாயகர் கோயிலையாவது நமக்கென ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்து இந்தக் கருத்தினை அக்காலத்தில் பரங்கிமலை கண்டோன்மென்ட் ஆட்சியாளராக இருந்த ஆங்கிலேய கர்னல் துரையிடம் எடுத்துரைத்து தாங்கள் நிரந்தரமாக இல்லங்கள் அமைத்துக் கொண்டு வாழ்ந்து வருவதற்காகவும், கடவுளை வழிபடுவதற்காகவும் மேற்படி கன்டோன்மெண்ட் பகுதியில் ஒரு இடம் ஒதுக்கித் தருமாறு வேண்டிக் கொண்டனர். இந்த முறையீட்டினை கேட்டறிந்த கர்னல் துரை மேற்படி பரங்கிமலை கன்டோன்மெண்ட் எல்லைக்குள் அடங்கிய ஒரு பகுதியினை ஒதுக்கிக் கொடுத்தார். இந்தப் பகுதியில் ஆலமரங்கள் காடுபோல் வளர்ந்திருந்தமையால் ஆலங்காடு என்று பொருள்பட ஆலந்தூர் (தூர்-காடு) என்று இப்பகுதிக்கு பெயரிட்டு இதில் மேற்படி குடும்பங்கள் நிரந்தரமாக இல்லங்களை அமைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தத் தொடங்கினர். இவர்கள் வசித்து வந்த பேட்டைக்கு கற்பகவல்லியம்மன் பேட்டை என்றும் இவர்கள் வழங்கி வந்தனர். இந்த இடத்தில் சில தெருக்கள் ஏற்படுத்தி ஒரு தெருவின் தென் கோடியில் ஒரு விநாயகர் ஆலயம் மிகவும் எளிய முறையில் அமைத்தனர். அதில் விநாயகர் மூலவரை ஸ்தாபித்து அவருக்கு கற்பக விநாயகர் என பெயரிட்டு வழிபட்டு வணங்கி வந்தனர். இந்த ஆலயத்தில் விளக்கேற்றுதல், பூசைகள் யாவும் செங்குந்தர்களால் செய்யப்பட்டு வந்தன. மேற்படி காரியங்களுக்கு வேண்டிய செலவுகளை சரிக்கட்ட இந்த மரபினர்கள் ஒன்று கூடி ஸ்ரீ கற்பக விநாயகர் பக்த ஜன சபையார் என்ற குழுவை அமைத்துக் கொண்டு அதன் அங்கத்தினர்களிடம் மாத சந்தா வசூல் செய்தனர். நாளாவட்டத்தில் மேற்படி 10 குடும்பங்கள் 40 குடும்பங்களாகி எல்லோரும் முயற்சி செய்து கோயிலுக்கென்று அரசினரால் ஒதுக்கப்பட்ட நிலத்தில் சுற்று மதில்கள், உள் பிராகாரம், மேல்தளம் விமானம் இவைகளை கட்டுவித்து விநாயகர் உற்சவ மூர்த்தியை ஏற்படுத்தி சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் கும்பாபிஷேகம் செய்து அதிலிருந்து விஷேச பூஜைகள், விழாக்கள், முதலியவற்றை செய்து வந்தார்கள். 1928 ஆம் வருடம் சைவ சமயக் குறவர்கள் நால்வர் விக்கிரகம் ஏற்படுத்தி ஆலயத்தை பழுதுபார்த்து அஷ்டபந்தன குடமுழுக்கு விமரிசையாக செய்யப்பட்டது. ஆரம்ப கால முதல் இது பரியந்தம் இந்த கோயில் நிர்வாகம் செங்குந்தர்களால் ஏற்படுத்தப்பட்ட கற்பக விநாயகர் பக்தஜன சபையாரால் நடத்தப்பட்டு வருகிறது. 1961 ஆம் வருடம் பல ஆஸ்திக பெரு மக்களின் பேருதவியைக் கொண்டு ஸ்ரீ முருகப் பெருமானையும், நவக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்தனர். 1987 ல் ஸ்ரீ துர்க்கா தேவி ஸ்ரீ, 'ஐயப்பா முதலிய தேவதைகளை பிரதிஷ்டை செய்து ஆலயம் முழுதும் பழுதுபார்த்து உள்பிரகாரம் தரை, பக்க சுவர் முதலியவை கரும் பளிங்கு கற்களால் அமைத்து 8-7-87 அன்று அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

———

Er. திரு. N. தணிகாசல முதலியார் - திருமதி இராஜாமணி அம்மாள் அறக்கட்டளை



டாக்டர் N. T. சணமுகம்

திருமயிலை தென்கூர் செல்வ விநாயகர் கோயில் தெரு 37 ஆம் எண்ணுள்ள வீட்டில் வசிக்கும் Er. திரு என். தணிகாசல முதலியார். பி.ஈ. திருமதி, இராஜாமணி அம்மாள் தம்பதிகளுக்கு நற்றவப் பயனால் இரண்டாவது குமாரனாகப் பிறந்தவர் டாக்டர். என்.டி. சண்முகம் MS., FA. CS. ஆவார். திரு என்.டி. சண்முகம் கடந்த 20 ஆண்டுகாளாக அமெரிக்காவில் மருத்துவப் பணியில் தன் முழு கவனத்தையும் செலுத்தி வருகிறார். அவர் மனமுவந்து திருமயிலை செங்குந்தர் நற்பணி மன்றத்திற்கு ரூ. 15000 (ரூபாய் பதினைந்தாயிரம்) 20-2-1988 அன்று கல்வி உதவித்தொகையாகக் கொடுத்து, அந்தத் தொகையை தமிழ்நாடு டிரான்ஸ்போர்ட் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பொரேஷனில் நிரந்தர வைப்பு நிதியாக முதலீடு செய்யும் படிக் கேட்டுக்கொண்டார். அவர் விருப்பப்படி 22-2-1988 அன்று மேற்படி கார்ப்பரேஷனில் ரூ.15000- நிரந்தர வைப்பு நிதியாக வைக்கப்பட்டது.

இந்த வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியை ஆண்டுதோறும் நற்பணி மன்றம் நடத்தும் விழாவின்போது கீழ்க்கண்டவாறு உதவிதொகையாக கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

(அ) உதவித் தொகையை செங்குந்தர் (கைக் கோளர்) சமூகத்தைச் சேர்ந்த ஏழை மக்களுக்குக் கொடுக்க வேண்டும்.

(ஆ) ஒரு மாணவனோ, மாணவியோ, பிளஸ் 2 தேர்வில் வெற்றி பெற்று தொழில் கல்லூரியில் B.E. M.B.B.S B. Sc. (AG)B.Tech படிப்பவராக இருக்க வேண்டும். அவருக்கு ரூ.1200 கல்வி உதவித் தொகையாகக்கொடுக்க வேண்டும்.

(இ) வேறொரு மாணவனோ, மாணவியோ எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் வெற்றி பெற்று Polytechnic இல் படிப்பவராக இருக்க வேண்டும். அவருக்கும் ரூ 800 கல்வி உதவித் தொகையாகக் கொடுக்கவேண்டும்

(ஈ) மீதி வட்டிப் பணத்தை நற்பணி மன்றத்தின் செலவுகளுக்கு வைத்துக் கொள்ளலாம்.

கல்வி உதவித் தொகை யார் யாருக்கு கொடுக்க வேண்டும் என்று கீழ்க்கண்ட மூவர் குழு நிர்ணயிக்கும். அவர்கள் சொல்லுகிற நபர்களுக்கு தான் மன்றம் உதவித் தொகையை கொடுக்க வேண்டும்.

(1) திரு என். டி. சிவசங்கரன், பி.ஈ. (த/பெ. திரு. என். தணிகாசல முதலியார்)

(2) டாக்டர். என்.டி. சண்முகம், M.S.,F.A.C.S. த/பெ. திரு. என். தணிகாசல முதலியார்)

(3) திரு ஏ.வி. இராமநாதன், எம்.ஏ. (த/பெ. திரு எ. வெங்கடாசல முதலியார்)

மூன்று நபர்களில் இருவர் திரு.என். தணிகாசல முதலியார் குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும். மூன்றாவது நபர் மன்றத்தின் ஆயுள் உறுப்பினராக இருக்க வேண்டும்.

திருமயிலை செங்குந்தர் நற்பணி மன்றம் Er. திரு. தணிகாசல முதலியார் திருமதி இராஜாமணி அம்மாள், Dr. N.T. சண்முகம், ஆகிய மூவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

நகர மக்களுக்குப் பெரிதும் பயன் தரும் குளமாக இது விளங்குகிறது. தெருவில் தம் சொந்தச் செலவில் பிள்ளையார் கோயில் கட்டி நித்யபூஜையும் நடத்திவரச் செய்துள்ளார்.

‘‘அன்பர் பணி செய்ய எனை
ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்து
எய்தும் பராபரமே’’.

என்றார் தாயுமானவர்.

நகரில் உள்ள சாதாரண ஏழையிலிருந்து பெரும் செல்வந்தர் மற்றும் பெருமக்கள் பலருக்கும் நம் நடராஜ செங்குந்தர் பண உதவி லேவாதேவி மூலம் செய்துள்ளார். மிகக் குறைந்த வட்டி மட்டுமே வாங்கியிருக்கிறார்.

‘கதவின் வழியாக அநியாயமாக வரும் செல்வம், ஜன்னல்களின் வழியாக வெளியே செல்கிறது’’ என்பது பழைய எகிப்திய பழமொழி. இதை நம் பெரியவர் உணர்ந்ததாலோ என்னவோ, லேவாதேவி மூலம் அதிகம் பொருள் ஈட்டுவதில் அவர் நாட்டம் கொள்ளவே இல்லை.

மகாத்மா காந்தி அடிகளின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு 50 ஆண்டுகளுக்கு முன்னரே தீண்டாமை ஒழிப்பில் ஈடுபட்டார் நம் பெரியவர். அரிசனங்கள் வாழும் சேரிப்பகுதியில் தம் சொந்த மனைகளை எல்லாம் விட்டுக் கொடுத்துள்ளார். அங்கு பலபுதிய தெருக்களை அமைத்துக் கொடுத்துள்ளார்.

பெரும் சண்டை சச்சரவுகள், வழக்கு வியாச்சியங்கள் இவற்றை எல்லாம் அவர் மிக எளிதில் தீர்த்து வைத்து விடுவார். ஒரு பெரிய தீர்க்கதரிசிக்கு உள்ள முன் யோசனை, சமயோசித அறிவு எல்லாம் இவரிடம் உண்டு.

இன்று அவர் அமரர் ஆகிவிட்டாலும் சிறந்த பண்பும், ‘‘செல்வர்க்கு அழகு செழுங்கிளைத் தாங்குதல்’’ என்ற நெறிக்கு இணங்க திரு. ஆர். என். சந்தான ராஜகோபாலன் என்ற அருமையான புதல்வரைத் தமது வாரிசாக விட்டுச் சென்றுள்ளார்.

‘‘மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி
இவன்தந்தை என்னோற்றான் கொல்
எனுஞ்சொல்’’

என்ற குறட்பாவின் பொருளுக்கு இலக்கியமாகத் திகழ்ந்து, இன்று தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கல்விச் சங்கத்தின் தலைவராக இருந்து தந்தை வழியில் அரும்பணி ஆற்றி வருகிறார் திரு. ஆர். என். சந்தான ராஜகோபாலன் அவர்கள்.

ஒட்டக்கூத்தர் பரம்பரையில் வந்த செங்குந்தர் குலத்தின் வீரம்மிக்க பெருமகனார் வரிசையில் அமரர் பி.ஆர். ஆர். எம். நடராஜ செங்குந்தர் அவர்களுக்கு என்றும் அழியாத இடம் உண்டு.

 (159 ஆம் பக்கம் தொடர்ச்சி)

தியாகச் செம்மல்

21. அருள்திரு பெரி. ராம. நடராஜ செங்குந்தர்

(1887 — 1974)

மன்னார்குடி விசுவநாதன்

அஞ்சாமை, அறிவு, நுட்பம், பிறர்க்குதவும் பெருந்தன்மை, தம்மின் வலியாருடன் மோதி வெற்றி பெறுதல், தம்மின் எளியாரை இகழாதிருத்தல், சான்றாண்மை, சமயோசிதம், வீரம் ஆகிய உயர் தனிப் பண்புகளின் மொத்த உருவமாகத் திகழ்ந்தவர்தான் மன்னைப் பெரியவர் அமரர் பெரி. ராம. நடராஜ செங்குந்தர் ஆவார்.

அமரர் நடராஜ செங்குந்தர் அவர்கள் 28-12-1887ல் மன்னார்குடியில் இராமலிங்க செங்குந்தர் - வினாயகத்தம்மாள் தம்பதியரின் மூன்றாவது மகனாய்ப் பிறந்தார்.

அக்கால வழக்கப்படி இவர் தம் பதினாறாம் வயதில் திருமணம் செய்து கொண்டார். சில ஆண்டுகளில் மனைவியை இழந்தார். எனினும் மறுமணம் செய்து கொள்வதில் நாட்டம் கொள்ளாமல் நாட்டு மருந்துகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு நாட்டு வைத்தியராகவே ஆகிவிட்டார்.

பின்னர் இவரது தமையனார் திரு. பழநியாண்டி செங்குந்தர் அவர்களின் வற்புறுத்தல் காரணமாக இரண்டாவது முறை திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

அக்காலத்தில் தஞ்சை மாவட்ட காங்கிரஸ் இயக்கத்தில் முக்கிய புள்ளியாக விளங்கிய, காலஞ்சென்ற குன்னியூர் கே.எஸ். சாம்பசிவ அய்யரின் தந்தையாருடன் நட்புக்கொண்ட நடராஜ செங்குந்தர், பின்னர் காங்கிரஸ் இயக்கத்தில் முனைப்புடன் ஈடுபட்டு உழைக்கலானார்.

மன்னை நகர்மன்ற உறுப்பினராக 30 ஆண்டுக்காலமும், நகர்மன்ற தலைவராக 7 ஆண்டுக்காலமும், பொறுப்பு வகித்து பல அரும்பணிகள் ஆற்றியுள்ளார்.

ஆரூர் வள்ளல் தி.நா. சபாபதி செங்குந்தர் அவர்களுடன் தொடர்புகொண்டு அவரது அறிவுரைப்படி தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கல்விச் சங்கம் 5-6-1944 இல் கூறை நாட்டில் தோற்றுவித்து, இச் சங்கத்தின் முதல் தலைவராகப் பொறுப்பேற்று வெற்றி. கரமாக நடத்தி வந்தார் நமது நடராஜ செங்குந்தர்.

''செய்வன திருந்தச் செய்'' என்ற சொற்றொடருக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். தொண்டு என்பது வீட்டுத் தொண்டிலிருந்து துவங்க வேண்டும் என்பார் தமிழ்த் தென்றல் திரு.வி.க.

அதுபோல, தான் சார்ந்த செங்குந்தர் சமூகம் கல்வி மற்றும் உத்தியோக வாய்ப்பு போன்ற துறைகளில் நல்வாய்ப்பு பெற வேண்டும் என்ற பெருவிழைவோடு உழைத்த நமது மன்னைப் பெரியவர், உள்ளூரில் இருக்கும் செங்குந்த பெருமக்களின் நாட்டாண்மைக் குழு தலைவராக இருந்து சீரிய பணிகள் ஆற்றியுள்ளார்.

தம்முடைய ஊரில் நம்மவருக்குச் சொந்தமான, குளம், தோட்டம் முதலானவை வேறு ஒரு கோயிலுக்குச் சொந்தமானது என்று சிலர் உரிமை பாராட்டினார்கள். அப்போது நம்குலப் பெரியவரான நடராஜ செங்குந்தர் அவர்கள் தம் சொந்த பொருட் செலவில் பெருமுயற்சி மேற்கொண்டு சென்னை உயர் நீதி மன்றம் வரை சென்று வழக்காடி உரிமையை நிலை நாட்டி நம்மவர்க்காக உழைத்திருக்கிறார்.

300 ஆண்டுகளுக்கு முன் சித்தி அடைந்த மகான் சூட்டுக்கோல் இராமலிங்கரின் சமாதியைப் புதுப்பித்து அக் கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தினார். அங்குள்ள குளம் மற்றும் மலர் தோட்டத்தை சீர்திருத்தியும் சிறப்புச் செய்தார்.

செங்குந்தர் குலத்துக்குச் சொந்தமான அப்ளாச்சாரி குளத்தை ஆழப்படுத்தி, 40 அடி அகலப்படுத்தி, படித்துறைகள் கட்டி, கரைகளில் தென்னை பயிரிட்டு மிக்க பொலிவுறச் செய்தார்.

செங்குந்தர் பேரவை

திருநாகேச்சரம் - குன்றத்தூர்
சென்னை 600 069
செங்கை மாவட்டம்

மலர் சிறப்புற அமைய எங்களது நல்வாழ்த்துக்கள்

பேரவை பொறுப்பாளர்கள்

காப்பாளர் : திரு. T. K. M. தேவராஜ செங்குந்தர்

புரவலர்கள் : திரு. D. நாகப்ப செங்குந்தர்
திரு. K. குப்புசாமி செங்குந்தர்

தலைவர் : திரு. M. R. ஜீவரத்தினம் செங்குந்தர்

துணை தலைவர் : தி. M. குப்புசாமி செங்குந்தர்

செயலாளர் : திரு. K. ராமமூர்த்தி செங்குந்தர்

துணை செயலாளர் : திரு. M. அன்பரசு செங்குந்தர்

பொருளாளர் : M. செழியன் செங்குந்தர்

ஸ்ரீ ராஜராஜ சோழன் மியூச்சுவல் பெனிபிட் பண்ட் லிமிடெட்

29, போஸ்ட் ஆபீஸ் தெரு, சென்னை-600 001.

ஸ்தாபிதம் : 1981 போன் : 20364

மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற நிதி

சேமிப்புக்கு மிகச் சிறந்த நிறுவனம்

காரணங்கள்

- உங்கள் டெபாசிட்டுகள் நகைகடன்களில் மட்டுமே ஈடுபடுத்தப்படுகின்றன.
- நகைக்கடன்கள் பிரதிமாதமும் 80% வரை திரும்பி வருகின்றன.
- பல தலைமுறைகளின் வியாபார அனுபவத்தைப் பெற்றிருக்கும் நிர்வாகிகள்
- மற்ற நிதிகளுக்கு இல்லாத பெரிய செலுத்தப்பட்ட மூலதனம். (Paid up Share Capital)

MAHADEVI CUMULATIVE DEPOSIT SCHEME

MATURITY VALUE AT THE END OF EACH PERIOD

(For accounts opened from 29-10-1985)

Deposit Amount	12 Months	24 Months	36 Months	60 Months	84 Months	120 Months	180 Months
Rs.	Rs.	Rs.	Rs.	Rs.	Rs.	Rs.	Rs.
1,000	1,150	1,335	1,575	2,160	2,940	4,665	10,075
2,000	2,300	2,670	3,150	4,320	5,880	9,330	20,150
3,000	3,450	4.005	4,725	6,480	8,820	13,995	30,225
4,000	4,600	5,340	6,300	8,640	11,760	18,660	40,300
5,000	5,750	6,675	7,875	10,800	14,700	23,325	50,375
10,000	11,500	13,350	15,750	21,600	29,400	46,650	1,00750

Rs. 1000/- AND MULTIPLES ACCEPTED

கவனிக்கவும் :—

ஒரு வருஷ டிபாசிட்டுக்கே 15% வட்டி கொடுக்கிறோம்.

M. S. ரெங்கையா, B. A.,
பிரஸிடெண்ட்

R. பிச்சை B.A.B.L.,
செக்ரடரி

(17-ஆம் பக்கம் தொடர்ச்சி)

சங்கம் நடத்திய ஆண்டு விழாக்களின் விவரங்கள்

பதினைந்தாம் ஆண்டு விழா

இடம்	:	சென்னை பூந்தமல்லியை அடுத்துள்ள சர்வ மங்களா திருமண மண்டபம்
நாள்	:	10—1—1988 (ஞாயிற்றுக்கிழமை)
தலைவர்	:	திரு. எஸ்.டி. பொன்னுசாமி செங்குந்தர் சங்கத்தலைவர்
இறை வணக்கம்	:	திருமதி ஜானகி சாமிநாதன்
வரவேற்றுரை	:	திரு. பொ.க. சாமிநாதன், பி.காம்.
ஆண்டு அறிக்கை வாசித்தவர்	:	திரு. சரவண பழனிவேலு
வரவு செலவு வாசித்தவர்	:	திரு. ஏ.வி. இராமநாதன், எம்.ஏ.
வாழ்த்துரை வழங்கியவர்கள்	:	திரு. எஸ். தியாகராஜன், பி.ஈ. திரு. தி. ரா மாசிலாமணி திரு. தி. ரா. செல்வராஜன், எம்.ஏ. எம். லிட். திரு. புலவர் மி. ச. நடேசன் திரு, ஆ. தமிழவேள், எம்.ஏ., பி.எட். திரு. P. கிருஷ்ண மூர்த்தி.
பரிசுகள் வழங்கியவர்	:	திரு. எம்.எஸ். தேவராஜ செங்குந்தர்
நன்றியுரை	:	திரு. எம்.பி. பாண்டுரங்கன், எல்.ஈ.ஈ.

இலக்கிய விருந்தாக 'நம் சமூக மக்களிடம் ''தமிழ் உணர்வு வளர்ந்துள்ளதா?' தளர்ந்துள்ளதா?'' என்ற பொருள்பற்றிய பட்டி மன்றம் புலவர் மி.ச. நடேசன் தலைமையில் நடைபெற்றது. 'வளர்ந்துள்ளது' என்ற கட்சியில் திரு.தி. ரா. செல்வ ராசன், எம்.ஏ. எம்.லிட். புலவர் திரு தி. தே. ஆறுமுகம், எம்.ஏ, பி.எட்,. செல்வி ம. தேவசேனா (பி.ஏ.) புலவர் தி.பொ. சண்முக சுந்தரம், எம்.ஏ., பி.எட். ஆகி யோருர், 'தளர்ந்துள்ளது' என்ற கட்சியில் புலவர் ப.கி. பொன்னுசாமி, எம்.ஏ., பி.எட்., புலவர் திரு. ஆ. தமிழவேள், எம்.ஏ., பி.எட்., திரு. ப.ரா. சண்முகம், எம்.காம் ஆகியோரும், நோக்கர்கள் சார்பில், திரு டி. எம். மோகன் அவர்களும் பேசினார்கள்.

———

செங்குந்தம் வெல்க

செங்குந்தர் பேரவை, திருமழிசை-602107

செங்கை மாவட்டம்

மலர் சிறந்த முறையில் வெளிவர எங்களது நல்வாழ்த்துக்கள்

காப்பாளர்
திருமழிசை நாட்டார்
திரு டி.எஸ்.சம்பந்த செங்குந்தர்

புரவலர்கள்
திரு.எம்.எஸ்.தேவராஜி செங்குந்தர்
திரு. எம். ஆறுமுக செங்குந்தர்
திரு. வே.மணி வேதாசலம் செங்குந்தர்
திரு. டி.கே. சச்சிதானந்த செங்குந்தர்

தலைவர்
திரு. டி.எஸ். சண்முகம்

துணைத்தலைவர்கள்
திரு. டி.டி. இராமமூர்த்தி, பி.எஸ்.ஸி
திரு. டி.டி. சுந்தரம்

செயலாளர்
திரு ந.சம்பத், பி.எஸ்ஸி., பி.டி.

உதவி செயலாளர்கள்
திரு டி.கே. ஆறுமுகம்
திரு டி.டி. சிவமணி, பி.எஸ்.ஸி,.

பொருளாளர்
திரு டி.ஏ. பன்னீர் செல்வம் B.A.,

இணை பொருளாளர்
திரு. டி.வி. கருணாகரன், B.Sc.,

ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்
திரு. எம். வீரபத்ரன்
திரு. டி.கே. ஜகதீசன்
Dr. டி.கே. தேவராஜன் M.B.B.S.
திரு. டி.கே. சேகர், பி.எஸ்.ஸி

தணிக்கை குழு உறுப்பினர்கள்
திரு டி.எஸ். சேகர், பி.எஸ்.ஸி(C.A.)
திரு. டி. மாசிலாமணி

முன்னாள் செயலாளர்.
திரு. எம். ஜீவானந்தம், எம்.ஏ.

நம் செங்குந்தகுலப் பெருமக்களில் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும், நகரமன்றத் தலைவர்களாகவும் இருந்தவர்களின், இருக்கின்றவர்களின் பெயர்ப்பட்டியல்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் (எம்.பி.):

1. புலவர் கா. கோவிந்தன், எம்.ஏ. செய்யாறு.
2. திரு. எஸ்.முருகையன், திருவண்ணாமலை.
3. திரு. டி. பட்டுசாமி, திருவண்ணாமலை.
4. பி.ஏ. சாமிநாதன், புஞ்சை புளியம்பட்டி.
5. திரு. எஸ்.கே. சம்பந்தம், குறிஞ்சிபாடி

சட்டமன்ற உறுப்பினர்கள் (எம்.எல்.ஏ.)

1. திரு. ஏ.கே. துரைசாமி முதலியார். குடியாத்தம்.
2. புலவர் கா. கோவிந்தன், எம்.ஏ. செய்யாறு (சபாநாயகராகவும் இருந்திருக்கிறார்).
3. திரு. கா. அ. சண்முக முதலியார், திருப்பத்தூர்.
4. திரு. எஸ்.ஜே. ராமசாமி, தக்கோலம்.
5. திரு. ஏ.ஜே. அருணாசல முதலியார். குடியாத்தம் (எம்.எல்.சி. ஆகவும் இருந்திருக்கிறார்)
6. திரு. எஸ்.பி. மணவாளன், திருப்பத்தூர்.
7. திரு. இ.எஸ். தியாகராஜ முதலியார், திருத்தணி
8. திரு. பி. வெங்கட சுப்பிரமணியம், காஞ்சிபுரம்
9. திரு. கந்தசாமி முதலியார், சேலம்.
10. திரு. ஏ. மாரியப்ப முதலியார் சேலம் டவுன்.
11. திரு. காஞ்சி மணிமொழியார், சென்னை
12. திரு. எம். சுந்தரம் ரிஷிவந்தியம்.
13. திரு. எஸ். சிவராஜ், ரிஷிவந்தியம்
14. திரு. எஸ். முருகையன், திருவண்ணாமலை
15. திரு. தேவராஜ முதலியார், திருவண்ணாமலை (எம்.எல்.சி)
16. திரு. சங்கரசுப்பைய முதலியார் பி.ஏ., பி.எல். திருநெல்வேலி.

நகர மன்றத் தலைவர்கள் :

1. திரு. எஸ். முருகையன், திருவண்ணாமலை
2. திரு. டி. பட்டு சாமி, திருவண்ணாமலை
3. திரு. முத்துக் குமாரசாமிமுதலியார், திருவண்ணாமலை.
4. திரு. இராமசாமி முதலியார், செய்யாறு.
5. திரு. பீமராஜ முதலியார், குடியாத்தம்
6. திரு. கெங்காதர முதலியார், குடியாத்தம்
7. திரு. சாமிநாத முதலியார், குடியாத்தம்
8. திரு. டி. ஆதிமூல முதலியார், குடியாத்தம்
9. திரு. எம். சாமிநாத முதலியார், காஞ்சிபுரம்.
10. திரு. ஜம்புலிங்க முதலியார், கடலூர்
11. வள்ளல் சபாபதி முதலியார். திருவாரூர்.
12. திரு. எம்.ஜி. அமிர்தலிங்க முதலியார், குடியாத்தம்
13. திரு. மணி முதலியார், குடியாத்தம்.
14. திரு. சங்கர சுப்பைய முதலியார், பி.ஏ.பி.எல்., திருநெல்வேலி.
15. திரு. ஏ. பழனிசாமி, பி.காம்., சங்கரன்கோயில்.

தொகுப்பு

ம.மு. தணிகைமலை
துணைப் பொதுச் செயலாளர்
தென்னிந்திய செங்குந்த மகாசனசங்கம்
சென்னை—1.

திருவல்லிக்கேணி செங்குந்தர் சங்கம்

செங்குந்த கோட்டம்

நெ. 2, தங்கவேல் வைத்தியர் தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

எங்களது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

தலைவர் :
தணிகை சுந்தரேசன்

❋

உப தலைவர் :
N. சம்பந்தன்

❋

செயலாளர் :
S. கருணாகரன்

❋

உதவி செயலாளர் :
D. குமரேசன்

❋

பொருளாளர் :
M. சட்டநாதன், B.Sc.,

❋

நிர்வாக உறுப்பினர்கள் :
M. சுந்தரமூர்த்தி
P. K. பாலசுப்பிரமணியம்
A. பானுமூர்த்தி, B.Com., D.A.M.
J. செல்வம்
S. குமார்
A. சுந்தரமூர்த்தி
M. சந்திரசேகரன்
S. ராஜேந்திரன், B.Com.

Phone : 847991

வாசுஸ் காபி

79, மல்லன் பொன்னப்ப முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

மணத்திலும் சுவையிலும் சிறந்தது : வாசுஸ் காபி

திருமணம் மற்றும் சுபகாரியங்களுக்கு காபித்தூள் தேவைப்படுவோர் எங்களது தொலைபேசியில் தெரிவித்தால் போதும். உங்கள் இடம் தேடி குறித்த நேரத்தில் சப்ளை செய்கிறோம்.

வாசுஸ் காபி நிறுவனம்
திருவல்லிக்கேணி

திருவாளர் T. தணிகாசல செங்குந்தர்

55, தேவராஜ முதலி தெரு,
திருவல்லிக்கேணி சென்னை-5



முன்னாள் அறங்காவலர்
திருவல்லிக்கேணி செங்குந்த கோட்டம்
அருள்மிகு கற்பக விநாயகர்
சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்
இப்போது ஷை தேவஸ்தான திருப்பணிக் கமிட்டி குழுத்தலைவர்

இவர் கடன் பணிசெய்து கிடப்பதே.